


# இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல்

## பாகம் -2

# THE REVELATION OF JESUS CHRIST

## PART-2

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## சகோ. பிரான்ஹாமின் தலைக்கு மேல் காணப்படும் அக்கினி ஸ்தம்பம்





ஜெபிப்பீர்களா? (சபையார் ஆமென்'' என்று கூறுகிறார்கள் - ஆசி). ஆமென். ஆமென்.

கிறிஸ்துவுக்கென பிரதிஷ்டை செய்யப்பட விரும்புகிறான். அவனை அவனது தாய் கொண்டு வருகிறாள். முன்னே வாரும், சகோதரனே.

254. கிருபையுள்ள கர்த்தாவே, இன்று காலையிலே, பிரதிஷ்டை செய்வதற்காக இக்குழந்தையை உம்மிடம் நாங்கள் கொண்டு வருகிறோம். இயேசுவை கல்லறையினின்றும் உயிரோடெழுப்பிய அவ்வல்லமையானது இச்சிறுவனை உயிர்ப்பிக்க வேண்டுமென அவன் மேல் கைகளை வைத்து நாங்கள் வேண்டுகிறோம். தேவனே ஆராக்கியத்தோடும் பெலத்தோடும் அவன் வாழட்டும். உமது மகிமைக்காகவே இவன் வாழட்டும் கர்த்தாவே. இக்குழந்தைக்கு உதவி செய்யும்படி நீர் எவ்வாறு ஏற்கனவே அதை அமைத் திருக்கிறீர் என்பதற்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். இச்சிறுவனோடு நீர் தொடர்ந்து இருந்தருளும். அவனுடைய பெற்றோரோடும் அவனுக்குரிய பிரியமானவர்களோடும் இருந்தருளும். கர்த்தரில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாகவே நடக்கிறது என்று நாங்கள் போதிக்கப்பட்டதை அறிந்திருக்கிறோம். சில வேளைகளிலே, இந்த காரியங்க ளெல்லாம் எப்படியாய் மக்களை உம்மிடமாய் கிட்டிச் சேரும்படி செய்கிறது! நாங்கள் கோருகிற ஆசீர்வாதங்களை நீர் அளிக்க வேண்டுமென்று நான் வேண்டுகிறேன். இப்பொழுது, பிதாவே, உமது வார்த்தைக்கு கீழ்படியும்படியாக, இச்சிறுவனை உம்மிடம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் சமர்ப்பிக்கிறோம். நீர் தாமே இந்தச் சிறுவனின் ஆவி, ஆத்துமா, சரீரம் யாவற்றையும் ஏற்றுக் கொண்டு, உமது மகிமைக்காக அவனை உபயோகித்தருளுவீராக. ஆமென்.

255. தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக, சகோதரியே. சிறுவனாகிய ஸ்காட்டே, உன்னை தேவன் ஆசீர்வதிப்பாராக. நாம் அதற்காக கர்த்தருக்கு எவ்வளவாய் நன்றி செலுத்துகிறோம்.

256. இப்பொழுது - யார் ஞானஸ்நானம் பெறப்போகிறீர்கள்? அங்கே ஒரு கூட்டம் மக்கள் ஞானஸ்நானம் பெறும்படி உள்ளனர் என்று நான் நம்புகிறேன். நாம் அதற்காக ஆயத்தம் செய்கையில், நாம் என்ன செய்யலாம் என்பதை பற்றி நான் கூறுகிறேன். நாம் தானே பாடுவோமாக. சகோதரன் நெவில் அதைச் செய்யட்டும். அது சரியானது என்பதை அறிவேன். அப்படி செய்யுங்கள், ஐயா. சகோதரன் நெவில் அவர்களே.

257. நீங்கள் கர்த்தரை நேசிப்பதினால், ஆமென் என்று சொல்லுங்கள் (சபையோர் ஆமென் என்கிறார்கள் -ஆசி). எனக்காக நீங்கள்

## மேக ஸ்தம்பம்



## சகோ. பிரான்ஹாமின் தலைக்கு மேல் காணப்படும் அக்கினி ஸ்தம்பம்

சகோதரன் பிரான்ஹாமின் தலைக்கு மேலே காணப்படுகிற அக்கினி ஸ்தம்பத்தோடு கூடிய புகைப்படமானது அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள டெக்ஸாஸ் மாகாணத்தில் ஹவுஸ்டன் என்னும் இடத்தில் 1950ம் ஆண்டு ஜனவரி மாதம் எடுக்கப்பட்டது. சகோதரன் தலைக்கு மேலே காணப்பட்ட அந்த அதிசயமான ஒளியானது நெகடிவ்விலும் (Negative) காணப்பட்டபடியால், அப்படம் ஹவுஸ்டனிலுள்ள 'டக்ளஸ்' ஸ்டுடியோவிலிருந்து FBI என்ற போலீஸ் துப்பறியும் இலாகாவில், 'சந்தேகமான தஸ்தாவேஜுக்களின் பரிசோதகரான டாக்டர் ஜார்ஜ் ஜே. லேஸி என்பவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. மைக்ராஸ்கோப் என்னும் கருவியின் உதவியினால் அப்படத்தின் இரு பக்கங்கள் முழுவதும் தெளிவாக ஆராயப்பட்டது. இப்படத்தை ஆராய்ந்த ஜார்ஜ் ஜே. லேஸி நெகடிவ் முற்றிலுமாகத் தத்ரூபமானது என்று கூறினார். அவர் மேலும், 'பரிசோதனைக்காக கொடுக்கப்பட்ட நெகடிவ்வானது தொடப்பட்டாததும் இரு முறையோ அல்லது அநேக முறையோ (Double or composite exposed) படம் எடுக்கப்படாமல் ஒரே முறை எடுக்கப்பட்டதுமாயிருக்கிறது என்று நான் உறுதியான நம்பிக்கையுடையவனாயிருக்கிறேன். தலைக்கு மேலே வெறுமையான இடத்தில் காணப்படும் ஒளியானது, ஒரு ஒளி நெகடிவ்வில் நேரடியாக விழுந்திருப்பதால் உண்டானதாகும்' என்றும் கூறினார் (ஜனவரி 29,1950).

தேவனுடைய மனுஷனின் சாட்சியை விசுவாசிக்கக் கூடாதவர்கள், விஞ்ஞானத்தால் நிரூபிக்கப்பட்ட இதைக் கண்டாகிலும் விசுவாசிக்கலாம். இவவிதமாக தெய்வீக நிரூபணமும், உறுதிப்படுத்தலும் ஒப்பற்ற விதத்தில் உள்ளபடியால், மனுஷருடைய எல்லா வாதங்களும், மறுப்புகளும் ஒன்றுமில்லாமல் போயிற்று. 'நான் அபிஷேகம் பண்ணினவர்களை நீங்கள் தொடாமலும், என்னுடைய தீர்க்கதரிசிகளுக்குத் தீங்கு செய்யாமலும் இருங்கள் என்றார்' (சங். 105:15).



நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் இவ்வெளிய பெண்மணியையும் ஆசீர்வதியும்.

251. இக்காலையில் இந்த மகத்தான கூட்டத்திற்குப் பிறகு, பிதாவே, எங்கள் ஊடாக உமது பரிசுத்த ஆவி செறிவூட்டியிருப் பதை உணர்ந்தவர்களாய், உமது வார்த்தையானது எங்களுக்குள் ஆழமாய்ப் போய் பதிந்து, மக்களுடைய இருதயங்களுக்குள்ளாக வேர் கொண்டிருப்பதை உணருகிறோம். கர்த்தாவே, அவர்கள் அதை ஒருபோதும் மறக்கவே மாட்டார்கள். இவற்றை அவர்கள் கேட்கின்ற போதெல்லாம், அம்முத்திரைகள் திறக்கப்படுதலைக் குறித்து எண்ணிக் கொண்டிருப்பார்கள். இப்பொழுது, கர்த்தாவே, அம்முத்திரைகள் என்னவாயிருந்தன என்பதை நாங்கள் அறியும் படி எங்களுக்கு உதவி செய்தருளும், அதினால் ஒவ்வொருவரும் தங்கள் சிந்தையில் அதை புரியாத புதிராக எண்ணமாட்டார்கள். ஆனால் அது 'கர்த்தர் உரைக்கிறதாவது'' என்பதிலிருந்து அது தேவனுடைய முத்திரையாகும் என்று எண்ணிக் கொள்வார்கள். தேவன் திறந்து கொடுத்த முத்திரை அது.

252. நீர் தாமே சுகவீனரையும் பெலவீனரையும் குணமாக்கிட வேண்டு மென்று நாங்கள் வேண்டுகிறோம். அதைக் தாரும் கர்த்தாவே. உமது ஆவி பிரசன்னமாயுள்ளது. கட்டிடத்தின் பின் பகுதியில் உள்ள ஒரு பாவியை நீர் இரட்சிக்க முடியுமென்றால், அங்கேயுள்ள ஒரு வியாதிப்பட்ட நபரையும்கூட நீர் குணமாக்கிட முடியும். அதை நீர் அளித்திட வேண்டுமென, கர்ததாவே, நான் ஜெபிக்கிறேன். இங்கே இன்று வர இயலாமற்போய், தங்களுக்காக இங்கே ஜெபக் கைக்குட்டைகளை வைத்துள்ளவர்களை நீர் குணமாக்கியருளும். இவை யாவற்றையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வின் நாமத்தினால் உம்மிடம் ஒப்படைக்கிறோம். ஆமென்.

253. இங்கே ஒரு சிறு குழந்தையை பிரதிஷ்டைக்காக அவர்கள் கொண்டு வந்துள்ளனர். குழந்தையோடு இங்கே இருக்கிற இந்த ஸ்திரீ தானா? இவ்வேளையில் இங்கே கொண்டு வந்தால், அச்சிறுவனை பிரதிஷ்டை செய்ய நாங்கள் மகிழ்ச்சியுள்ளவர்களாயிருக்கி றோம். இல்லை, சிறு குழந்தையாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. இங்கே வாருங்கள். மூப்பர்களில் சிலர் இவ்வேளையில் முன்வருவீர்களாயின், இங்கே என்னோடு வந்து நின்று கொள்ளுங்கள். என்ன வயது? இரண்டரை வயதா? அவனது பெயர் என்ன? ஸ்காட் ஃபோர்ட்! சிறுவனாகிய ஸ்காட் ஃபோர்ட் - நான்கரை வயதுள்ளவன் - இன்று காலையில் தங்களது கர்த்தரும் இரட்ச கருமாகிய இயேசு

பெற்றுக்கொள்கிறோம் என்பது ஒரு பொருட்டல்ல. அவை யாவும் வாடிப்போகுமே. ஆனால் அதுவோ வாடிப் போகாது.

247. தேவனே, கரங்களை உயர்த்தியவர்களிடம் ஒரு வேளை நான் இப்புவியில் அவர்களோடு பேச முடியாது போகலாம். நான் அறியேன். என்னால் முடியும் என்று நான் நம்புகிறேன். ஆனால் என்னால் இயலாமற்போய்விட்டாலும், அப்பொழுது, கர்த்தாவே நான் அவர்களை அங்கே அப்பாதையில் சந்திப்பேனாக. அவர்கள் ஒரு வேளை இவ்வாறு கூறக்கூடும்; 'சகோதரன் பிரன்ஹாம் அவர் களே, இந்த மகத்தான காரியம் நிகழும் முன்னதாக எங்களை இப்பூமியில் நினைத்துக் கொள்ளுங்கள். ஒரு நாள் காலையில் நீங்கள் ஒரு மண்பாண்டத்தினுள் வைக்கப்பட்டிருந்த முத்திரைகள் திறக்கப் படுதலைக் குறித்து பிரசங்கித்தீர்கள். அந்த வேளையில் தான், அவர் என்னுடைய மண்ணான பாத்திரத்தினுள் வந்தார். அன்று காலையில் கரத்தை உயர்த்தியது நான் தான். ஓ , நான் அங்கே இருக்க முடிந் ததற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்'' என்று.

248. நானுங்கூட, "சகோதரனே சகோதரியே, நானுங்கூட அங்கே இருந்தேன் என்பதற்காக மிகவும் மகிழ்ச்சியாயிருக்கிறேன். யுகாயுகமாக நாம் ஒருமித்து ஐக்கியங் கொள்ளு வோம்'' என்று அப்பொழுது கூறுவேன்.

249. பிதாவே, அவர்களை ஆசீர்வதியும், அவர்கள் உம்முடைய வர்கள். என் பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்'' ''பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும். 'நீர் எனக்குத் தந்தவர்களில் ஒருவனையும் நான் இழந்து போகவில்லை' என்று நீர் கூறினீர். எனவே, பிதாவே நாங்கள் அதற்காக நன்றியுள்ளவர்களாய் இருக்கிறோம். அவர்கள் தாமே இப்போது முன் வந்து, அவர்களுடைய இரட்சிப்பின் அச்சாரத்தைப் பெற்றுக்கொள்ள வார்களாக. ஒரு சபையை அவர்கள் சேர்ந்து கொள்ளுதல் அல்ல. அது ஒரு புதிய பிறப்பு ஆகும். அதுதானே அவர் அவர்களை ஏற்றுக் கொள்ளுதல் ஆகும். அதுதானே அவர் அவர்களை ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுதல் ஆகும். பிதாவே, அவர்களை உம்முடைய கரத்தினிலே, இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஒப்படைக்கிறோம். ஆமென்.

250. கர்த்தராகிய இயேசுவே, இந்தக் கைகுட்டைகளுக்காக நான் ஜெபிக்கிறேன்; இங்கே இருக்கிற தேவையுள்ளவர்களையெல்லாம் நீர் ஆசீர்வதிக்கும்படி வேண்டுகிறேன். கர்த்தாவே, இந்த சக்கர

The picture with the pillar of fire above the head of Bro.Branham was taken in Houston, Texas: USA., in January 1950. Becuase of the mysterious light above Bro. Branham's head in the negative the film was sent from the Douglas Studio in Houston to Dr. George J. Lacy, 'Investigator of Questioned Documents' for the FBI. A microscopic examination and study was made of the entire sufrace of both sides of the film George J. Lacy pronounced the negative to be absolutely genuine. 'I AM OF THE DEFINITE OPINION THAT THE NEGATIVE SUBMITTED FOR EXAMINATION WAS NOT RETOUCHED NOR WAS IT A COMPOSITE OR DOUBLE EXPOSED NEGATIVE. THE LIGHT STREAK APPEARING ABOVE THE HEAD IN A HALO POSITION WAS CAUSED BY LIGHT STRIKING THE NEGATIVE'. (January 29, 1950).

Those who cannot believe the testimony of the man of God can now take the evidence of science. Where divine vindication and approval has come in such a unique manner. All man made arguments and objection have come to naught. TOUCH NOT MINE ANOINTED, AND DO MY PROPHETS NO HARM' (Ps. 105 : 15)

## மேக ஸ்தம்பம்

1963ம் ஆண்டு பெப்ருவரி 28ம் தேதி சூரியன் அஸ்தமிக்கும் நேரத்திற்கு சற்று முன்பாக, இந்த மேகத்திலிருந்து கர்த்தர் சகோதரன் பிரான்ஹாமோடு பேசினார். இதை ஏற்கனவே 1962ம் ஆண்டு டிசம்பர் 22ம் தேதியன்று ஒரு தரிசனத்தின் மூலமாக தேவன் அவருக்குத் தெரியப்படுத்தினார்.

இந்தப் படம் கிறிஸ்துவானவர் மேகத்திலே பரத்துக்கு ஏறிப் போன காட்சியை (அப் 1:0 நமக்கு நினைவூட்டுகிறது. அவர் எப்படி ஏறிப்போனாரோ அப்படியே மறுபடியும் வருவார். (அப் 1:11). இந்தப் படமானது வெகு தூரத்திலிருந்து எடுக்கப்பட்ட போதிலும் இதில் கர்த்தருடைய முகம் மிகவும் தெளிவாய்க் காணப்படுகிறது.

1963ம் ஆண்டு ஏப்ரல் 19ம் தேதி வெளியான 'சயின்ஸ் மேகஸின்' (Science Magazine) என்ற ஆங்கில வெளியீடு இந்த நிகழ்ச்சியைக் குறித்த செய்தியைத் பிரசுரித்ததுமன்றி, இந்தப் படத்தையும் அதன் முன் பக்கத்தில் வெளியிட்டுள்ளது. உலகமுழுவதும் அதிகமாக விற்பனையாகும் 'லைப் மேகஸினிலும்' (Life Magazine) 1963, மே 17ந் தேதி வெளியான

இதழில் இந்த மேகத்தின் படமும் அதனோடு சில தகவல்களும் வெளியாயிற்று. இந்த அதிசயமான மேகத்தின் நிகழ்ச்சியை விவரிக்க விஞ்ஞானிகளாலும் இயலவில்லை. நீல வானத்தில் மிகவும் அதிகமான உயரத்தில் மேகங்களை உண்டாக்கத்தக்கதான ஈரமில்லாத இடத்தில் இந்த மேகமானது தோன்றிற்று. தம்முடைய தீர்க்கதரிசியின் ஊழியத்தை உறுதிப்படுத்தத்தக்கதாய் சர்வ வல்லவர் கொடுத்த அடையாளம் எவ்வளவு பெரியதாயிருக்கிறது! கர்த்தர் பேசினார், யார் செவிகொடாதிருப்பான்?

On the 28th Feb. 1963, Just before sunset, the Lord spoke to Bro. Branham out of this cloud, even as God had made it known to him before in a vision on Dec. 22, 1962. The picture reminds us of the ascension of Christ, who was taken up in a cloud (Acts 1:9) and will return in like manner. (Acts 1:11). Although this picture was taken from a great distance, the face of the Lord is clearly visible.

The April 19th, 1963 issue of ‘Science Magazine’ published an article about this phenomenon and also carried the picture on its front page. According to the largest weekly publication of the world, ‘Life Magazine’, which brought the photo of this cloud along with a report on May 17, 1963, the phenomenon of this mysterious cloud cannot be explained by scientists. The cloud, appearing

on a blue sky, hung at such an high altitude in which no moisture exists to form a cloud. What a vindication of rhe Almighty to confirm the commission of His prophet! The Lord God hath spoken, who can but hear?



நேசிக்கிறேன். அவர்கள் இதை கேட்கும்படி நான் விரும்புகிறேன், கர்த்தாவே. அவர்கள் நங்கூரமிடப்பட்டிருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். கடந்த சில ஆண்டுகளாக செய்யப்பட்ட இக் காரியங்களெல்லாம் ஏதோ தற்செயலாக நடந்ததாக அல்லாமல், அவைகள் அறிய வேண்டுமென நான் விரும்புகிறேன், கர்த்தாவே. இவ்விஷயங்களையெல்லாம் நீர் தான் திறந்து கொடுத்துக் கொண்டு இருக்கிறீர். ஓ, தேவனே, நாங்கள் யாவரும் எங்களுக்கு நேர் முன்பாக மகத்தான யூபிலி ஒன்று உள்ளது என்பதை உணருகிறோம்.

245. தங்களுடைய கரங்களை உயர்த்தினவர்களுக்காக நான் ஜெபிக் கிறேன். அவர்கள், தாம் தவறாக இருப்பதை உணருகிறார்கள், கர்த்தாவே . அவர்களில் அநேகர் எண்ணுகின்றனர்.... ஒரு வேளை அவர்கள் எப்பொழுதாவது யாரிடமிருந்தாவது கொஞ்சம் பணத்தை சுதந்தரித்துக் கொண்டிருந்திருப்பார்கள். ஆனால் அது என்ன செய்தது? அது எங்கே சென்றது என்பதை அவர்கள் அறி யார்கள். ஒரு சிறிதளவு மீதமாயிருக்கிறது. ஏனெனில் அது ஒரு அழிந்து போகும் சுதந்தரமாகும். அவர்கள் வேறு யாருக்காவது அதை விட்டு விட்டுச் செல்வார்களானால், அது மீண்டும் அழிந்து தான் போகும்.

246. ஆனால் நாமோ அழியாததொரு சுதந்தரத்தையே பெற்றுள் ளோம்; அதுதான் இரட்சிப்பு, மீட்பு -ஏதேன் தோட்டத்திற்கு போகுதல். அதைப்பற்றி எண்ணிப் பாருங்கள். கர்த்தாவே, யார் தான் ஆதாம், ஏவாளைப் போல் இருக்கும்படி அங்கே திரும்பிப் போய் வாழ விரும்ப மாட்டார்கள்? அங்கே அன்றன்றைக்குள்ள எங்களது ஆகாரம் அளிக்கப்படுகிறது. பரம பிதாவானவர் பாதை முழுவதும் எங்களோடு எப்பொழுதும் பேசிக்கொண்டே யிருப்பார். அந்த மகத்தான ஒளி எங்கள் முன் நடந்து செல்வதை நாங்கள் காண்போம். சிங்கமும் ஓநாயும் ஒருமித்து மேயும். எருது வைக்கோலைத் தின்னும், சிங்கமும் அதனோடு சேர்ந்து மேயும். இப்பொழுதோ, அவைகள் ஒன்றையொன்று தின்று கொள்ளுகின்றன, அல்லது சிங்கம், காளையெருதை தின்கிறது; ஓநாய் காளை யெருதை தின்கின்றது, எதெல்லாம் கிடைக்கிறதோ அதை யெல்லாம் அது தின்கின்றது. ஆனால் அந்நாட்களிலோ, அவ்விதமாக இருக்கவே இருக்காது. பெரிய அழகான பறவைகள் பறந்து செல்லும். அங்கே வருத்தமில்லை, விலங்குகளை வேட்டையாடுபவர் அங்கே இருப்பதில்லை. நமது பாதையெல்லாம் நாம் அங்கே நமது பிள்ளைகளையும், நமக்கு பிரியமானவர்களையும் காண்போம். ஓ , தேவனே, என்னே ஒரு நாள் அது! என்னே ஒரு நாள்! இவ்வுலகில் நாம் எதைப்

சிறிதே வயதில் மூத்தவர். நான் கூறினேன்: 'சாம், அது வரும் பொழுது, இந்த முப்பதாண்டுகள் முழுவதிலும், நான் யாரை நேசித்து, யாருக்காக இத்தனை காலம் உழைத்தேனோ, அந்த இயேசு கிறிஸ்துவை மக்கள் விசுவாசிக்கச் செய்வதில் தான் என்னையே நான் அர்ப்பணித்துள்ளேன். அவர் வருகையில் அது எனக்கு ஒன்றும் வித்தியாசமாயிருக்காது. நான் பரம வீட்டிற்குப் போய்விடுவேன்'' என்றேன்.

242. அதற்கு அவர், "பில்லி, மற்றவர்களுக்கு நான் ஏதாவது செய்வதில் தான் எனது மகத்தானதை நான் பெற்றுக் கொள்ளுகிறேன்.'' என்றார்.

"அதுவே உண்மையான வாழ்க்கை'' என்றேன் நான்

243. நண்பரே, உங்களுக்கு இவ்வுலகில் ஒரு சுதந்தரம் உண்டாயிருக்குமானால், அது அழிந்து போய்விடும் சுதந்தரமாகும். ஆனால் நாமோ, வாடிப்போகாத சுதந்தரத்தையே பெற்றுக்கொள்கிறோம். கெட்ட குமாரன் தனது சுதந்தரத்தை விட்டு அகன்று போனான். அவன் அதில் ஒரு பாகத்தை மட்டும் தன்னோடு எடுத்துச் சென்றான். அவன் திரும்பி வந்தபொழுது அவனது சுதந்தரம் மாத்திரமே கெட்டுப்போனது. ஆனால் நீங்கள் உங்களுடையதை விட்டு சுதந்தரத்தையே பெற்றுக்கொள்கிறோம். நீங்கள் அதைப் பெற்றுக் கொள்ள விரும்பவில்லையா? பாவிகளாயிருக்கிற சுமார் பதினைந்து பேர்கள் தங்களுடைய சுதந்தரத்தை பெற விரும்பியவர்களாய் தங்கள் கரத்தை இக்காலையில் இங்கே உயர்த்தியுள்ளனர். நாம் ஜெபம் பண்ணுவதற்கு முன்னால் இன்னும் ஒருவர் கூட உண்டா ? ஆம்.

இப்பொழுது மிகவும் மெதுவாக.

நான் அவரை நேசிக்கிறேன் (நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று உணர்ந்தால் இதுவே அதற்குரிய தருணம்; எனவே தீர்மானித்துக் கொள்வீர்).

ஏனெனில் அவரே என்னில் முந்தி நேசம் கொண்டு, கல்வாரி மரத்தில் எனது இரட்சிப்பை கிரயத்திற்கு கொண்டார்.

244. (நான் அவரை நேசிக்கிறேன் என்ற பாடலை சகோ. பிரான் ஹாம் தாழ்ந்த குரலில் பாடுகிறார்-ஆசி) பரம பிதாவே எங்களை அமைதிப்படுத்தும் இவ்வேளையில், இன்று காலையிலே நாங்கள் இக்கூட்டத்தினரை உம்மிடம் பெலவீனமான நிலையில் கொண்டு வருகிறோம். கர்த்தாவே. இந்த செய்தியை நான் இம் மக்களுக்கு கொண்டு வர முயலுகிறேன், ஏனெனில் நான் அவர்களை

## பத்து கன்னிகைகளும்,

## இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் யூதர்களும்

### Jeffersonville, Indiana, USA

### 60-12-11M

1.காலை வணக்கம். இக்காலையில் மீண்டும் இருப்பதற்கு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். வெளியே மோசமான கால நிலை காணப்படுகிறது. ஆனால் ஓ, உள்ளேயோ, மிகவும் அருமையாக இருக்கிறது. உள்ளேயிருந்து கொண்டு, வெளியே பார்ப்பதும், (அவ்வாறில்லையா?) வெளியே இருந்து கொண்டு உள்ளே பார்ப்பதும் நன்றாக இருக்கிறது. கடந்த இரவில் நல்ல ஓய்வு கிடைத்தது, அதனால் இக்காலையில் நன்றாக இருக்கிறது. நமக்கு கடந்த இரவில் அருமையான வேளை உண்டாயிருந்ததல்லவா? அற்புதமான வேளையது! அதை நான் போற்றுகிறேன்.

ஷ்ரிவ் போர்ட்டில் நடைபெற்ற கூட்டத்தைப் போலவே நமக்குண்டாயிருந்த நேற்றிரவுக் கூட்டமும் இருந்தது. ஏறத்தாழ ஷ்ரிவ்போர்ட்டில் ஏற்பட்ட ஆவியின் அசைவு தொடர்ந்து இப்பொழுதும் இக்கூட்டத்திலும் ஏற்பட்டதாக இருந்தது. எனவே அவருடைய தயவு, இரக்கம் இவைகளுக்காக நாம் தேவனுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். நீங்களும் கூட உங்கள் ஆவியை அவரிடம் ஒத்துழைப்போடு சமர்ப்பித்து இருந்தீர்கள்: அதினால் அவரும் நம்மை நடத்தவும் வழிகாட்டவும் முடிந்தது, அதற்காக உங்களுக்கும் நன்றி.

2.நீங்கள் பேசுவதைக் கேட்டு கோபமடையும் கூட்டம் உங்கள் முன் இருந்தால், அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் ஒன்றையும் வெளிப்படுத்தமாட்டார். உங்களோடு மனதொருமித்து கிரியை செய்யும் ஒரு கூட்டம் உங்களுக்கு இருக்க வேண்டும். ''அவர்கள் ஓரிடத்தில் ஒருமனப்பட்டு கூடி வந்தார்கள். அப்பொழுது வானத்திலிருந்து சடுதியாய் ஒரு முழக்கம் உண்டாயிற்று என்று பார்க்கிறோம். பார்த்தீர்களா? ஆனால் உங்களுக்கு கிடைத்திருப்பது... நான் எவ்வளவு அதிகமாய் ஜெபித்தாலும் சரி, நான் ஒருவேளை அபிஷேகம் என்மேல் தங்கினவனாய் இங்கே உள்ளே நடந்து வருகையில், அந்த கசப்புணர்வு மக்களிடையே காணப்பட்டால், அப்பொழுது அவையொன்றும் கிரியை செய்யாது. அவ்வித உணர்வு

அவரை உடனே துக்கப்படுத்துகிறது. அவர் ஒன்றையும் வெளிப்படுத்த மாட்டார்.

ஆனால் அபிஷேகத்துடன் இங்கே உள்ளே நடந்து வருகையில்; அபிஷேகத்தின் கீழாக சபையினரும் இருப்பதை நீங்கள் உணருகையில், அப்பொழுது தான் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்ய ஆரம்பிக்கிறார். அப்பொழுது அவர் அசைவாடி நமக்கென மகத்தான காரியங்களைச் செய்கிறார். பாருங்கள்?

3.மேய்ப்பன் அவர்களிடம் நான் இன்னும் பேசவில்லை.... ''நம்பிடுவாய்'' என்ற பாடலைக் கேட்டதும் நான் உள்ளே வந்து விட்டேன். அவர் இன்று காலைக்காக என்ன தீர்மானித்திருக்கிறார் என்பதைக் குறித்து அவரிடம் பேசவில்லை. இப்பொழுது சகோதரன் நெவில் அவர்களே! என்னவென்று நான் உங்களுக்குச் சொல்லுவேன். நான் இந்த சிறிய பாடவகுப்பை ஆரம்பித்து, 11 மணி வரைக்கிலும் நான் தொடர்ந்து பேசுகிறேன். அதன் பிறகு நீங்கள் ஆராதனையை மீண்டும் எடுத்து நடத்தி,பிரசங்கிக்க ஆரம்பித்து விடுங்கள். என்ன சரிதானே? அது எப்படியிருக்கும்?

(சகோதரன் நெவில் அவர்கள்,'ஆம், அபிஷேகத்தின் கீழாக நடத்தப்படுகையில், அதை தடை செய்யாமல், நீங்கள் தொடர்ந்து பிரசங்கித்துக் கொண்டே இருங்கள்'' என்று கூறுகிறார் -சகோதரன் பிரன்ஹாம் அவர்கள்,

“அபிஷேகமானது பின்னால் இங்கேயும் இருக்கிறது என்று நான் விசுவாசிக்கிறேன். அபிஷேகமானது இங்கும் வருகிறது. அவர் ஒரு... ஆசி).

4.சகோதரன் நெவில் அவர்கள் எப்பொழுதும்... இதற்கு முன் இங்கு வந்திராத புதியவர்களுக்கு அவரைக்குறித்து நான் கூற விரும்புகிறேன். அவரது முகத்திற்கு முன்பாக முகஸ்துதியாக எதுவும் நான் சொல்லவில்லை. அவர் ஒரு மிகவும் கிருபை பெற்றவர்ரான மனிதர். எப்பொழுதும் அப்படித்தான் இருந்திருக்கிறார். அவர் வேதவாக்கியத்தை வாசித்து, அதை ஜீவித்துக் காண்பிப்பவராக காணப்படுகிறார். அவர் எப்பொழுதும் கிறிஸ்துவுக்குள்ளாக 'கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்' என்னப்பட்டவராக இருக்கிறார். அவர் எப்பொழுதும் பிறரை கனம்பண்ணுகிற அவ்விஷயத்தில் முந்திக்கொள்ளுபவர். நான் அவரை அறிந்த நாள் முதலாய் அவர் அப்படிப்பட்டவராகவே இருந்து வந்திருக்கிறார். அவர் இக்கூடாரத்தில் வந்த நாள் முதலாய் அல்ல,



செய்தனர். எத்தனை பேர்கள் வேதாகம வழியிலே வருவீர்கள்? 'விசுவாசித்தவர்கள் யாவரும் ஞானஸ்நானம் பெற்றனர். இதற்கு முன் செய்யாதவர்கள் எத்தனை பேர்கள் விசுவாசிக்க முன் வருகிறீர்கள்? நீங்கள் உங்களின் வழிகளிலே தவறாயிருந்தோம்'' என்று பகிரங்கமாக அறிக்கையிட்டு இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ள முன்வரு வீர்களா? உங்கள் தலைகள் வணங்கிய வண்ணமாக நீங்கள் உங்கள் கரங்களை உயர்த்துவீர்களா?

237. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. பின்னால் கையை உயர்த்திய உங்களை தேவன் ஆசீர்வதிப்பாராக. அங்கே பின்னால் - உங்களை தேவன் ஆசீர்வ திப்பாராக. அங்கே அதோ அங்கே பின்னால் இருக்கிற அம்மனிதர் - தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. இப்பொழுது, ஞாபகத்தில் கொள்ளுங்கள் - இங்கே அல்ல, உங்கள் இருதயத்திலே தேவனிடமாக நீங்கள் பகிரங்கமாக அறிக்கையிட்டு, "கர்த்தாவே, நாங்கள் கடைசி காலத்தில் இருக்கிறோம் என்பதை நான் அறிகி றேன். நான் முடிவுக்கு வந்துவிட்டேன்'' என்று கூறுங்கள்.

238. அன்றொரு நாளிலே, நான் இந்நகரத்திலுள்ள என் நண்பரி டம் பேசிக்கொண்டிருந்தேன். அது டாக்டர் சாம் அடெயர் அவர்கள் தான். நாங்கள் அலுவலகத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தோம். ''சாம், எனக்கு கொஞ்சம் வாய்வுத் தொந்தரவு உண்டாயிருக் கிறது'' என்றேன்.

"அது வாய்வு என்று நீங்கள் எவ்வாறு அறிவீர்கள்? உங்கள் இருதயத்தைச் சுற்றியா அவ்வாறு உள்ளது?'' என்று அவர் கேட்டார்.

"ஆம்'' என்று நான் கூறினேன்

239. அதற்கு அவர், "அது ஒரு வேளை இருதயத்திலுள்ள இரத்த உறைவாக இருக்கலாம். அது ஒரு வேளை இருதயக்கோளாறாக இருக்கலாம்'' என்றார்.

240. "அது அங்கே உள்ளது என்று எவ்வாறு நீர் அறிவீர்'' என்றார். "நான் உங்களை சோதிக்கட்டும்'' என்று கூறினார்.

அவர் என்னைப் பரிசோதித்துவிட்டு, "இல்லை, உம்மிடம் ஒரு கோளாறும் இல்லை' என்று கூறினார்.

241. ''சாம், அது வரும் பொழுதெல்லாம்.... ''என்று நான் கூறினேன். நான் ஐம்பத்திரண்டு வயதுள்ளவனாக இருக்கிறேன்,'' சாம் என்னைவிட

233. ஆனால் அவர்கள் உத்தமமாக, தாங்கள் சரியாகத்தான் இருக்கிறோம் என்று எண்ணினர். அந்தவிதமாக ஆவிகளில் ஒன்று உங்களை பிடித்துக்கொள்ளுமானால், அதினால், நீங்கள் முழுமை யாக அதை விசுவாசித்துவிடுவீர்கள். நான் அதைப்பற்றி அக்கறை கொள்ளவில்லை. அதன் வித்தியாசத்தை சொல்லுவதற்கு ஒருவரும் இல்லை. வார்த்தை என்னதான் சொன்னபோதிலும், அந்த ஆவி உங்களைப் பீடித்துக் கொள்ளுவதினால், நீங்கள் அதை விசுவாசிப்பதில்லை. நீங்கள் அப்படியே இருந்து கொள்ளுங்கள். "நீங்கள் அந்தவிதமாக இருந்து கொள்ள விரும்பினால், அப்படியே இருந்து கொள்ளுங்கள். நான் எனக்கென்று உள்ள வழியில் சென்று கொள்ளுவேன்.'' பாருங்கள் நீங்கள் தவறான ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறீர்கள் என்பதை காட்டுகிறது.

234. தேவ ஆவியானவர் எப்பொழுதும்... நல்லது நீங்கள் கேட்கிறீர்கள். "உங்களைப் பற்றி என்ன சகோதரன் பிரன்ஹாம் அவர்களே?''

235. நான் எவரையும் கேட்பேன்... எவரும் எது சரி, அல்லது தவறு என்பதை எனக்குக் காண்பிப்பதற்கு நான் ஆயத்தமாயிருக்கிறேன். ஆனால் அது திருவசனத்தின்படி இருக்க வேண்டும். அவர்களால் கூறமுடியாது .... எதைக் கூறினாலும் அது வார்த்தை யிலிருந்து தான் வரவேண்டும். அது ஒரு முத்திரையாக இருக்குமானால், அது தன்னைப் பற்றி ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரையிலும் அறிக்கையிடும். எனவே அங்கே தான் முத்திரைகள் உள்ளன. நீங்கள் அவரை நேசிக்கவில்லையா?

நான் அவரை நேசிக்கிறேன், நான் அவரை நேசிக்கிறேன், ஏனெனில் அவர் என்னை முந்தி நேசித்தார், என் இரட்சிப்பை கல்வாரி மரத்தில் கிரயத்திற்குக் கொண்டார்.

நாம் தலைகளை வணங்குவோமாக.

236. (சகோதரன் பிரன்ஹாம் "நான் அவரை நேசிக்கிறேன்'' என்ற பாடலை தாழ்ந்த குரலில் பாடுகிறார் - ஆசி) இங்கேயுள்ள எத்தனை பேர்கள் அவரை உங்களது இரட்சகராக அறியாமலிருக்கிறீர்கள்? அவரை உங்கள் இருதயத்தினுள் வரும்படி அழைக் விரும்புகிறீர்களா? நான் பீடத்தண்டையில் போவதை நான் விசுவாசிக்கிறேன். நான் உண்மையிலேயே அதை விசுவாசிக்கிறேன். அது நல்லது. ஆனால் வேதாகமத்தில் அவர்கள் ஒரு போதும் பீடத்தண்டையில் இரட்சிக்கப்படுவதற்காக செல்ல வில்லை. அவர்கள் அதை தங்கள் இருதயத்தில் விசுவாசித்து அதை ஏற்றுக்கொள்ள மாத்திரமே



அநேக ஆண்டுகளுக்கு முன்பாக நான் அவரை அறிந்த காலம் முதற்கொண்டே அவர் அவ்விதமாகத்தான் இருந்து வந்திருக்கிறார்.

முதன் முதலாக நான் அவரை சந்தித்து அவரை அறிந்து கொள்ள சென்ற பொழுது உள்ளதை நான் நினைவு கூருகிறேன். அவர் ஹோவர்ட் பார்க் என்ற இடத்திலுள்ள மெதோடிஸ்ட் சபையில் பிரசங்கிப்பதைக் கேட்க சென்றிருந்தேன். அது அநேக ஆண்டுகளுக்கு முன்பாக நடந்தது. அது இருபது அல்லது அதற்கு மேலாக உள்ள வருடங்களுக்கு முன்பாக என்று கருதுகிறேன். அப்பொழுதிலிருந்து அவரை எனக்குத் தெரியும்.

அவர் ஒரு வேலையும் செய்து வந்தார். அவர் ஹென்றிவில் என்ற ஊரிலிருந்து வந்தவர். அங்கே அவர் வனங்கள் சம்மந்தமான பணியில் ஈடுபட்டிருந்தார். அவர் தன் பிழைப்புக்காக அவ்வேலையை செய்துகொண்டே பிரசங்கமும் செய்து வந்தார். நானும் சமீபகாலம் வரையிலும் அவ்வாறு வேலைசெய்து வந்திருக்கிறேன். அதே விதமாகத்தான் அவரும் இருந்தார். அதன் பிறகு, நாங்கள் இருவரும் தேவனுடைய ஊழியத்தைத் தவிர வேறு எந்த வேலையும் செய்ய முடியாத அளவுக்கு இருந்த கட்டத்தை ஆரம்பித்தோம். எனவே நான், எங்களிருவருடைய புதிய எஜமானனுக்காக மகிழ்ச்சி கொள்ளுகிறோம். சகோதரன் நெவில் அவர்களே! நீங்களும் அவ்வாறு இருக்கிறீர்களல்லவா? ஆம் ஐயா! நான் நிச்சயமாக இவ்வேலையை விரும்புகிறேன். ஆம் ஐயா. நான் அவரைக் குறித்து மிகவும் திருப்தியடைந்திருக்கிறேன்.

5.இப்பொழுது சிறுவர்க்கான ஞாயிறு பள்ளி வகுப்பை அவர்கள் நடத்தப்போவதில்லை என்று நான் நம்புகிறேன். ஏனெனில் அவர்களுக்கென இருந்த அந்த அறையில் தடுப்புகளெல்லாம் பிரித்து அகற்றப்பட்டதால் அவர்களுக்கு இடமில்லாமற் போய்விட்டது, அதனால் சபையினர் கூடி வர இடங்கொள்ளுமளவுக்கு இடம் கிடைத்துள்ளது.

6.இன்றிரவில் நாம் அந்த முடிவான மகத்தான காலமாகிய லவோதிக்கேயாவைப் பற்றிப் பார்க்கப்போகிறோம். நேற்றிரவில் நாம் பிலதெல்பியாவின் காலத்தை எடுத்துக் கொண்டு, லவோதிக்கேயா சபையின் காலத்தின் துவக்கத்திற்குள் வந்து, இருசபைக் காலத்திற்கும் நடுவில் இருக்கும் அந்த இடைப்பட்ட காலத்தைக் குறித்தும் பார்த்தோம் (the lapover). அதன் பிறகு, ''திறந்த வாசல்'' 'கொஞ்சம் பெலன்'' ''என் வார்த்தையைக் காத்துக் கொண்டாய்', ''என்

நாமத்தைப் பற்றிக் கொண்டிருந்தாய் என்பவைகளைப் பற்றிய இவ்விரு சபைக் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய மகத்தான இரகசியங்களை தேவன் நமக்கு வெளிப்படுத்த ஆரம்பித்தார். அச்சிறு சிறு காரியங்களையெல்லாம் தேவன் எவ்வாறு நமக்கு மிக அற்புதமாகமெய்ப்பித்துக் காண்பித்தார் என்பதைப் பார்க்கையில், நாம் அதற்காக மிக மிக நன்றியுள்ளவர்களா யிருக்கிறோம்.

7.நம் மத்தியில் புதிதாக விஜயம் செய்துள்ள வியாதியுள்ள மக்கள் யாராகிலும் இருப்பின், ஒரு காரியத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள், அதாவது வியாதியஸ்தருக்காக அடுத்த ஞாயிற்றுக்கிழமையன்று நாம் ஜெபம் வைத்திருக்கிறோம். அது கர்த்தருக்கு சித்தமானால் நடக்கும். நான் அதை 'கர்த்தருக்கு சித்தமானால்' என்று எப்பொழுதும் குறிப்பிடுவதை கவனியுங்கள். ''கர்த்தருக்கு சித்தமானால்" என்று கூறவேண்டும் என்று வேதம் கூறுகிறது. இது வரைக்கிலும் நமக்கு திடட்வட்டமாகத் தெரியவில்லை. நான் இங்கிருப்பேனா, அல்லது சபையானது இங்கு இருக்குமா, நாம் யாவரும் இங்கு இருப்போமா என்றும், மற்றுமுள்ள விஷயங்களையும் அவர் எனக்கு சொல்லவில்லை. அப்படியானால், அது அவருக்கு சித்தமாயிருக்குமானால், நாம் இங்கு இருப்போம், பாருங்கள். அவருக்கு சித்தமில்லையெனில், அப்பொழுது நிச்சயமாக நாம் இருக்கமாட்டோம்.

8.வானொலியின் மூலமாக சகோ. நெவில் அவர்களும், மற்றும் இங்கிருக்கிற இந்த சகோதரன் மற்றும் வானொலி ஒலிபரப்புச் செய்கிற ஏனையோரும் அதைப்பற்றி தொடர்ந்து அறிவித்துக் கொண்டேயிருப்பார்கள்.

ஞாயிற்றுக்கிழமை காலையில் ஜெபிப்பதற்காக பெருங்கூட்டமான மக்கள் வருவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். எனவே ஞாயிறுகாலையில் முடிந்த அளவு முன் கூட்டியே வந்துவிடுங்கள். நாங்களும் வந்துவிட விரும்புகிறோம். நல்லது, நாம் பார்க்கலாம். ஒருவேளை இது போல் பெருங்கூட்டமாக வந்துவிட்டால், அச்சமயங்களில், ஜெப அட்டைகள் கொடுத்து ஒழுங்கு செய்வதுதான் சரியாக இருக்கும், ஏனெனில் அவர்கள் ஒருவரையொருவர் நெருக்கிக் கொண்டு மக்கள் திரண்டு விடுவர். ஆகவே அதை ஒழுங்குபடுத்திச் செய்தால் அப்பொழுது ஒவ்வொருவராக வந்து ஜெபித்துக் கொண்டு போகலாம். அது மக்கள் மத்தியில் குழப்பத்தை நீக்கிவிடும்.



ஆவிகளோடு தொடர்பு கொள்ளலாம் என்னும் நம்பிக்கை கொண்ட ஒரு கோட்பாடு இது.

231. இங்கே ப்ராடெஸ்டெண்ட்டுகள் அப்போஸ்தல விசுவாசப் பிரமாணம் என்று அவர்கள் கூறுகிற ஒன்றைக் கொண்டு வருகிறார்கள். 'நான் வானத்தையும் பூமியையும் படைத்த சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன். பரிசுத்த ரோமன் கத்தோலிக்க சபையையும் விசுவாசிக்கிறேன். பரிசுத்தவான்களின் பரிந்து பேசுதலையும் அவர்களுடைய ஐக்கியத்தையும் விசுவாசிக்கிறேன்'' என்று கூறுகிறார்கள். பிராடெஸ் டெண்டுகள் தேவனுடைய சத்திய பிரமாணத்தின் கீழாக, தாம் பரிசுத்தவான்களின் ஐக்கியத்தை விசுவாசிப்பதாகக் கூறுகின்றனர். அது மரித்த ஆவிகளோடு தொடர்பு கொள்ளும் ஒரு கள்ள உபதேசமாகும். பார்த்தீர்களா? அது எப்படியிருந்தாலும் அவர்கள் தொடர்ந்து அதையே செய்கிறார்கள், ஏனெனில் அவர்களுடைய சபை அவ்வாறு கூறியுள்ளது. ஓ, தேவனே, நான் என்ன அறிந்துள்ளேன் என்பதை அறிய மகிழ்வடைகிறேன். நான் என்ன அறிந்துள்ளேன் என்பதை அறிய நான் எத்தனையாய் மகிழ்வெய்துகிறேன். தங்கள் தேவனை விட்டு வெகு தூரமாய் அந்தகாரத்தினுள் தங்களை தாங்களே முத்திரையிட்டுக் கொள்வதை அவர்கள் உணரவில்லை. நீங்கள் அவர்களுக்கு அதைக் கூறி உணர்த்துவிக்க முடியாது, ஏனெனில், அவர்களால் முழுமையாக அதை காண முடியாதிருக்கிறது.

232. நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். இதை ஒருவரும் கூற வேண்டியதில்லை. என்னை இயேசு கிறிஸ்து என்று தவறாக எண்ணிக் கொண்டிருந்ததைப் பற்றி குற்றமுள்ள நெஞ்சத்தோடு இருந்த பதினைந்து அல்லது இருபது பேர்கள் இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் எவ்வாறு அத்தகைய காரியத்தை செய்ய முடியும்? ''அது ஒரு ஆவி'' என்று தேவன் என்னிடம் கூறியபோது, அது என்னவென்று நான் கண்டு கொண்டேன். அம்மனிதர்கள் ஒவ்வொரு வார்த்தையினாலும் என்னை நம்பினார்கள். "நான் உங்களுக்கு கூறினால், நீங்கள் எப்படியாய் என்னை அப்பொழுது விசுவாசிப்பீர்கள்?" என்று நான் கேட்டேன். பிறகு நாங்கள் வார்த்தையைக் கொண்டு அணுகிய பொழுது அவர்கள் கண்டுணர ஆரம்பித்தார்கள். ''நல்லது, நிச்சயமாகவே நாங்கள் உங்களை விசுவாசிக்கவில்லை, அல்லது நீங்கள் கூறியதற்கு நாங்கள் செவிகொடுத்திருப்போம்' என்று கூறினார்கள்.

228. பிதாவாகிய தேவனே அவருடைய பிதா என்று எண்ணியிருந்தேன். நான் ஞானஸ்நானத்தினிமித்தம் இதை இவ்வாறு கூறுகிறேன் பிதாவாகிய தேவனே அவருடைய தகப்பன் என்று நான் எண்ணியிருந்தேன். ஒன்று பரிசுத்த ஆவியானவரும் பிதாவாகிய தேவனும் ஒருவர் தான் என்பதாக இருக்க வேண்டும், அல்லது இயேசுவுக்கு இரு பிதாக்கள் இருக்கவேண்டும். அப்படியிருந்தால் தவறாகப் பிறந்த பிள்ளை என்று இருக்கும். அப்படியெல்லாம் இருந் தால், நமக்கு எப்படிப்பட்ட தேவன் இருக்கிறார்? பாருங்கள்?

தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தாராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது.

அவன்: இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; (அவர்கள் அவரை இயேசு என்றழைப் பார்கள்) அவருக்கு இம்மானுவேல் என்ற பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிரு க்கிறார் என்று அர்த்தமாம்.

மத்.1:22-23

229. இப்பொழுது, அவர் முத்திரையை பின்னாக இழுத்து திறந்தார். அதினால் மத்தேயு 1ம் அதிகாரத்திற்கு வரையிலும் பின்னால் திரும்பிப் போய் பார்த்தார், அது இயேசு கிறிஸ்துதான் என்பதாக இருக்கிறதை காணலாம். அதைதான் பெந்தெகொஸ்தே நாளிலே சரியாக பேதுரு கூறினான். அதைத்தான் ஏனையோர்களும் கூறினார்கள்.

230. நிச்சயமாகவே, இந்த ரோமர்கள் வந்து, "ஓ, இல்லை, நமக்கு மூன்று தேவர்கள் இருந்தாக வேண்டும். நமக்கு... உள்ளனர்'' என்று இப்பொழுது அவர்களுக்கு பத்தாயிரக்கணக்கில் இருக் கிறது. அங்கே மரியாள்களும், பரிசுத்த சிசிலியாக்களும், பரிசுத்த மார்கள், பரிசுத்த இன்னின்னார் என்றெல்லாம் இருக்கின்றது. மெக்சிகோ நகரத்தில் மட்டும் ஐந்நூறு சொச்சம் பேர்கள் அவர்கள் வழிபாட்டுக்கென உள்ளனர். அங்கே சில காலத்திற்கு முன்னர் ஒரு ஸ்திரீயானவள் தனது காதலர்களில் சிலரால் கொல்லப் பட்டாள். அவள் பேரில் அவர்கள் சண்டையிட்டுக் கொண்டு, முடிவில் அவர்கள் அவளைக் கொன்றுவிட்டனர். எனவே, அவளை இப்பொழுது ஒரு பரிசுத்தவாட்டியாக ஆக்கிவிட்டனர். மக்கள் அவளிடம் பாவ அறிக்கை செய்கின்றனர். அவ்வாறேல்லாம் நடைபெறுகின்றன. மரித்த



அப்பொழுது, உங்கள் அட்டையானது வரிசைப்படி அழைக்கப்படுகிற வரையிலும் நீங்கள் எழுந்திருக்க வேண்டியது அவசியமில்லை. நீங்கள் வியாதிப்பட்டு, உடல் நிலை மோசமாக இருந்து கொண்டிருந்தால், நீங்கள் எங்கே உட்கார்ந்திருக்கிறீர்களோ, அங்கேயே இருக்கலாம், வீணாக நீண்ட வரிசையில் நிற்க வேண்டியதில்லை. உங்களுடைய அட்டையானது அழைக்கப்படும் போது, மேலே வந்து ஜெபித்துக் கொண்டு நீங்கள் திரும்பிச் செல்லலாம். பிறகு அதேபோல், அடுத்தவர் தன் முறைப்படி வருவார். இவ்வாறான முறையை நான் அனைவருக்கும் கடைப்பிடிக்க விரும்புகிறேன்.

நான் வழக்கமாக, ஒரு சில பேர்களை முன்னுக்கு அழைப்பதுண்டு, அவர்கள் காத்துக் கொண்டிருக்கையில், யாராவது உடல் நிலை பாதிப்பால் கஷ்டமாக உணருகையில் அவர்கள் அமருவதற்காக ஆசனங்களை வாலிபர்களைக் கொண்டு போடச் செய்வதுண்டு. அதைவிட அவர்கள் இருக்குமிடத்தில் தத்தமது ஆசனங்களிலேயே அமர்ந்திருக்கச் செய்து, அவர்களுடைய எண்ணானது அழைக்கப்படுகையில் வந்து ஜெபித்துக் கொண்டு போகலாம். அது வரையில் அவர்கள் ஆசனங்களிலேயே காத்திருக்கலாம்.

9.வேதத்தின் மகத்தான போதகங்களில் ஒன்றான தெய்வீக சுகமளித்தலை நான் விசுவாசிக்கிறேன். தெய்வீக சுகமளித்தல் என்பது, தெய்வீக சுகமளித்தலைப் பெறுவதை விட அதிகம் அர்த்த முள்ளதாய் உள்ளது. தெய்வீக சுகமளித்தல், மீண்டும் வரப்போகிற ஒரு தேவன் உண்டு என்று கூறுகிறது. தெய்வீக சுகமளித்தல் எதைக் குறித்து பேசுகிறது? அது நமது உயிர்த்தெழுதலின் அச்சாரமாகும். தெய்வீக சுகமளித்தல் என்ற ஒன்று இல்லாவிடில், அப்பொழுது உயிர்த்தெழுதல் என்ற ஒன்றும் இருக்காது.

இப்பொழுதும் நம்மை ஞானஸ்நானம் செய்விக்க பரிசுத்த ஆவி என்ற ஒன்றும் இருக்காவிடில், அப்பொழுது வரப்போகிற உலகில் நித்திய ஜீவன் என்ற ஒன்றும் இருக்காது. "நமது மீட்பின் அச்சாரமாயிருக்கிறது இது என்று வேதம் பரிசுத்த ஆவியைக் குறித்து கூறுகிறது. அச்சாரம் என்றால் என்ன என்று உங்களுக்கு தெரியுமா? அது முன் பணமாக இருக்கிறது, பாருங்கள். நீங்கள் போய் ஒரு பண்ணையை விலைக்கு வாங்கினீர்களென்றால், அதற்கு விலைக்கிரயமாக பத்தாயிரம் டாலர்கள் வேண்டுமென்று சொன்னால், நீங்கள் அதற்கான முன்பணமாக இரண்டாயிரம் டாலர்களை செலுத்தினால், அதை அவர்கள் அச்சாரம் என்றழைக்கிறார்கள். இந்த பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமானது வரப்போவதின் அச்சாரமாக இருப்பின், ஓ,

முழுக்கிரயமும் செலுத்தப்படும் போது அது என்னவாயிருக்கும்? அது மகிமை பொருந்தினதாயிருக்கும்!

10.இப்பொழுது இன்று காலையில், கர்த்தருக்கு சித்தமானால், சபைக்காலங்களுக்கு இடையில் உள்ள அந்த சில காரியங்களை நாம் இணைக்கப்போகிறோம். அங்கே ஏதோ நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர் மீதியாயிருக்கிறவர்கள், நித்திரை செய்யும் கன்னியர், புத்தியுள்ள கன்னியர், பரிசுத்த ஆவியினால் முத்திரையிடப்படுதல், மிருகத்தின் அடையாளம் போடப்படுதல் ஆகிய இந்தக் காரியங்களைப் பற்றி பார்க்கலாம். இது காலத்தின் முடிவாக இருக்கிறது, அனைத்துக் காரியங்களும் இங்கே இந்த ஒரே இடத்தில்தான் வந்து விழுகிறது. எனவே நாம் குளிர்காலத்திற்கு முன்பாக மீதமுள்ளவைகளையும் பார்த்து முடித்து வெளிப்படுத்தின விசேஷப் புத்தகத்தை முடித்தாக வேண்டும். அது எவ்வாறு ஒன்றாக இணைகிறது என்பதைப் பாருங்கள்.

11.திரு வுட் அவர்களே, நாகரிகமானது அதேவிதமாக பயணம் செய்தது என்பதை நீங்கள் கவனித்தீர்களா? மனிதனானவன் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக பூமியில் தோன்றியது முதற்கொண்டு இருந்ததுபோலவே, தொடர்ந்து ஆறு புலன்களை அல்லது ஐம்புலன்களைக் கொண்டவனாய் தான் இருக்கிறான். ஆனால் இந்த கடைசியில் சிறிது காலத்திற்குள், அதாவது கடந்த நூறு ஆண்டுகளில்... என்னே! அவன் மாட்டு வண்டியில் மெதுவாக வந்து கொண்டிருந்தவன். கடந்த நூறு ஆண்டுகாலத்தில், அவன் மாட்டு வண்டியிலிருந்து மணிக்கு இரண்டாயிரம் மைல்கள் வேகத்தில் பறக்கும் ராக்கெட் காலத்திற்குள் வந்து விட்டான். மாட்டு வண்டி யுகத்திலிருந்து ராக்கெட் யுகத்திற்குள் மிக வேகமாக வந்துவிட்டான். பாருங்கள், இக்காரியம் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பாகத்தான், ஏன், கடந்த ஐம்பது ஆண்டுகாலத் திற்குள்தான் இதெல்லாம் நடக்க ஆரம்பித்தது.

12.யூடிக்காபைக் என்ற இடத்தில், நான் ஒரு சிறுவனாக இருந்த பொழுது, அங்கே எல்மெர் ஃப்ராங்க் என்ற மனிதன் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு வழக்கறிஞர். அவர் அந்த சாலையில் குடியிருந்த லஷர் என்ற பெயருள்ள வாலிபமான பெண்ணை மணந்து கொண்டார். அப்பெண்ணின் தந்தையிடம், என் தந்தை பணியாற்றினார்.

அவர்களிடத்தில் ஒரு மோட்டார் வாகனம் இருந்தது. அதில் ஒரு க்ராங்கும் இருந்தது. (க்ராங்க் என்றால், வாகனத்தின் சக்கரத்தை சுழலச் செய்வதற்காக உள்ள வளைவு திருகு என்னப்படும் பாகமாகும்



தான் உண்டு என்பதைக் காண்பிக்கிறது. ஒரேயொரு தேவனைத் தவிர வேறு யாரும் இருந்ததில்லை. பார்த்தீர்களா அவரது நாமம்...

226. மத்தேயு 28:19-ல் கூறப்பட்டுள்ளதைப் போல் "நீங்கள் புறப்பட்டு போய், சகல ஜாதிகளுக்கும் போதித்து, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து ..." பிதா என்பது ஒரு பெயர் அல்ல, குமாரன் என்பதும் ஒரு நாமமல்ல; பரிசுத்த ஆவி என்பதும் ஒரு நாமமல்ல. அப்படியெனில் நீங்கள் அவர்களுக்கு எவ்வாறு ஞானஸ்நானங் கொடுக்கப்போகிறீர்கள்? அவைகள் நாமமல்ல என்றால் அவைகளில் ஒன்றில் எந்த நாமத்தின் பேரில் ஞானஸ்நானங் கொடுக்கப் போகிறீர்கள்? அப்படியாயின் நீங்கள் எந்தவொரு நாமமும் இல்லாத ஞானஸ்நானத்தையே கொடுப்பீர்கள். அது மீண்டும் தீர்க்கதரிசிகளின் வேதக்கலா சாலையாக ஆகிவிடுகிறது, பாருங்கள்.

227. பின்பு அவர் மீண்டும் இங்கே இடத்திற்கு வருகிறார். நீங்கள் அவ்வசனத்தை எடுத்துக்கொண்டால். அவர் மத்தேயு 1ம் அதிகாரத்திற்கு திரும்பி வந்து என்ன செய்வார்? அவர்தாமே அதை பின்னுக்கு இழுத்து இந்த இடத்திற்கு அதைக்கொண்டு வருகிறார்.

"இயேசு கிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது: (இங்கே மூன்று தேவர்களல்ல என்பதைக் கவனியுங்கள்) அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப் பட்டிருக்கையில், அவர்கள் கூடி வருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது (பரிசுத்த ஆவியினால் கர்ப்பவதியானாள்" என்று கூறப்பட்டுள்ளது. "பிதாவாகிய தேவனால் கர்ப்பவதியானாள்" என்று கூறப்படவில்லை. ஹு).

அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து. அவளை அவமானப்படுத்த மனதில்லாமல், இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான்.

அவன் இப்படிச் சிந்தித்துக்கொண்டிருக்கையில், கர்த்தரு டைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு: தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியா யிருக்கிறது (பிதாவாகிய தேவனாலா?) பரிசுத்த ஆவியினால் உண்டானது.

மத்.1:18-20

அழிக்கப்பட்டு போவானா என்பதைப் பற்றி நீ எப்பொழுதும் உனக்குள் வியந்து கொண்டி ருந்ததுண்டு. விஷயம் இவ்வாறு உள்ளது. நித்தியமான நரகம் என்று ஒன்று கிடையாது. அவ்விதமாகத்தான் அது உள்ளது. அது நித்தியமானதாக இருக்கமுடியாது. ஏனெனில் ''ஆதி முதற் கொண்டு நரகமானது நான் இருந்து வருகிறது போல சேர்ந்தார்ப் போல் அப்பொழுதிலிருந்து இருக்கவில்லை. துன்மார்க்கரை தண்டிக்கவே நான் அதைச் சிருஷ்டித்தேன். நீ எதைக் குறித்து கலவரமடைந்து இருக்கிறாய்? ஆபிரகாமின் வித்தும், மற்றும் இன்ன பிற காரியங்களைக் குறித்தும். பாருங்கள்.'' என்று கூறுகிறார். அது அதனுடைய சுருக்கம் மாத்திரமே. ஆனால் தேவன் அதை திறந்து கொடுக்கும் பொழுதோ, அம்முத்திரைகளை திறக்கும் பொழுது, படிப்படியாக அது திறக்கப்படுகையில், நீங்கள் அதைப் பெற்றுக் கொள்ளும் பொழுது, அப்பொழுது, நீங்கள் இந்தப் புத்தகத்தை விட்டு அகலவே முடியாது. அம்முத்திரைகள்....

222. ''ஓ, முத்திரை வேறு அர்த்தம் கொண்டது, சகோதரன் பிரன்ஹாமே'' என்று நீங்கள் கூறுகிறீர்கள்.

223. ஒரு நிமிடம் பொறுங்கள். அது இதனோடு சரியாக ஒத்திருக்க வேண்டும். ஏனெனில் முத்திரைகள் வேதத்தை வெளிப்படுத்தும் படி தனது பின்புறத்தில் முத்தரையிடப்பட்டிருந்தது. அது என்ன? அது என்ன? எரேமியாவைப் போலுள்ளது. இன்னின்ன காரியம் நடந்தது என்று நீங்கள் கூறுகிறீர்கள். இதை இழுங்கள், இங்கே தான் அது உள்ளது. அதைக் கிழியுங்கள். இங்கே பின்னால் திரும்பிப் பாருங்கள், அங்கே என்ன சம்பவித்தது என்பதை பற்றி அங்கே நீங்கள் வாசிக்கலாம். அது சரி இதோ இங்கே அடுத்ததை திறவுங்கள்; இங்கே பாருங்கள், அதுதான் சம்பவித்தது. அதே காரியத்தைத் தான் அது உடையதாய் இப்புத்தகம் கொண்டதாய் இருக்கிறது. அதன் பின்புறத்தில் உள்ளது.

224. "நல்லது, என்னால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. சிலர் பிதா குமாரன் பரிசுத்த ஆவி' என்றும், வேறு சிலர் இயேசுவின் நாமம் என்றும் கூறுகிறார்கள், யாவும் இதைப் போலதான் இருக்கிறது'' என்று நீங்கள் கூறுகிறீர்கள்.

225. அது இத்தனை ஆண்டுகளாக மறைக்கப்பட்டிருந்தது. ஆனால் இங்கே இப்பொழுது அது வந்திருக்கிறது; அப்புத்தகச் சுருள் பின்னோக்கி திறக்கப்பட்ட, ஆதியோடந்தமாக ஒரேயோரு தேவன்



- மொழி பெயர்ப்பாளர்). நீங்கள் அந்த க்ராங்கை, வாகனத்தின் பக்கவாட்டில் சென்று இயக்கிவிட வேண்டும். அவ்விதமானதொரு அமைப்புள்ள வாகனம் அது. அதற்கு ஒரேயொருகியர் தான் உண்டு. அவ்வாகனத்திற்கு ரப்பரினால் ஆன பெரிய ஒலிப்பான் (ஹார்ன்) பொருத்தப்பட்டிருக்கும். அதைக் கொண்டு தான் அந்த வண்டி போகையில் ஹார்னை ஒலிக்கச் செய்ய வேண்டும். அந்த வண்டி பயங்கர வேகமாகிய மணிக்கு பத்தொன்பது மைல்கள் வேகத்தில் போகும் என்று கூறினார்கள்.

என் தந்தை சாக்குகளில் மணலை அடைத்து அவ்வண்டியில் வைத்துக் கொண்டு வந்து, அது அவர்கள் கூறுகிறபடி மணிக்கு பத்தொன்பது மைல்கள் வேகத்தில் உண்மையிலேயே ஓடிக்கூடியது தானா என்று பார்ப்பதற்காக ஓட்டிச் சென்றார். ஆனால் அந்த சாலைகளை நீங்கள் பார்க்க வேண்டும், உ, ஊ : அந்த வாகனம் இந்த வழியாக மணிக்கு பத்துமைலும், மேலும் கீழுமாக இருந்த இந்த வழியில் ஒன்பது மைல்கள் வேகத்திலும் சென்றது. பாருங்கள்? இப்படியாக இரண்டையும் கூட்டினால், மணிக்கு பத்தொன்பது மைல்கள் கிடைக்கிறது.

13.நாங்கள் யாவரும் சிறுவர்களாக இருக்கையில், அப்பொழுது பிள்ளைகள் நாங்கள் ஐந்து பேர்கள். என் தாயார் எங்களை குளிப்பாட்டி விடுவார்கள். நாங்கள் வேலியருகில் நின்று, அந்த வண்டி வருவதை பார்க்க ஆவலோடு காத்திருப்போம். அநேக மைல்களுக்கப்பால் அது வந்து கொண்டிருக்கையிலேயே அதன் பெரிய உறுமல் சப்தமானது கேட்கத் துவங்கி விடும். அது பெரிய முழக்கத்தோடு வரும். அந்த வண்டி வரும் போது அதன் சப்தத்தை கேட்கும் யாவரும் நின்று, தங்கள் குதிரை வண்டிகளை சாலையை விட்டு அகற்றி, குதிரைகளைப் பிடித்துக் கொள்வார்கள். அவ்வாகனமோ சாலையில் வரும் போது பயங்கரமாயிருக்கும்.

அது நான் ஏழு வயதாயிருக்கும் போது என்று எண்ணுகிறேன். அது சுமார் 1914ம் ஆண்டில் அவ்வாறிருந்தது. அப்போது இருந்த நிலைமைக்கு, அது முதற்கொண்டு இக்காலம் வரையிலும் எவ்வளவு பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று பாருங்கள். இது கடந்த நாற்பதாண்டு காலமாக ஏற்பட்டவை தான் என்பதைப் பாருங்கள். இன்றைக்கு இங்கு உள்ள இந்தக் காரியங்களை யெல்லாம் உண்டாக்க, மனிதனுக்கு ஆறாயிரம் ஆண்டுகள் பிடித்திருக்கிறது. ஏனெனில் வேதமானது, அந்த விதமாக மனிதன் செய்வான் என்பதை

முன்னுரைத்திருக்கிறது. கடைசி நாட்களில் அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள். அறிவும் பெருகிப்போம்.''

14.நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே நாகூம் தீர்க்கதரிசியானவன், இங்கு சிக்காகோவிலுள்ள வாகனப் போக்குவரத்துக்கான விரைவு நெடுஞ்சாலைகளைக் கண்டு எழுதியுள்ளதை நீங்கள் எப்பொழுதாவது சிந்தித்துப் பார்த்ததுண்டா? அவன் கூறினான்: ''அவைகள் அகலமான வீதிகளில் கடகடவென்றோடி, (தமிழ் வேதாகமத்தில் 'வீதிகளில் என்று மட்டும் கூறப்பட்டுள்ளது. ஆங்கில வேதாகமத்திலோ அகலமான சாலைகளில் என்று கூறப்பட்டுள்ளது - மொழிபெயர்ப்பாளர்) இடது சாரி வலது சாரி வரும். ''நான் பழங்காலத்துப் பாணியிலுள்ள ஆஸ்லோ மற்றும் இதர நாடுகளுக்குச் சென்றிருக்கிறேன். அந்த நாடுகளில் தெருக்கள் நடந்து செல்லக்கூட இடமில்லாத வகையில் அமைந்திருக்கும். ஒரு பெரிய இரதமானது அவர்களுடைய நகரத்தில் ஓடுவதற்கு மட்டுமே வசதியாக தெருவானது அமைந்திருக்கும். இங்கிருந்து அந்தச் சுவர்வரைக்கிலுள்ள தூரம் தான் தெருவானது அமைந்திருக்கும். அதாவது ஒரு இரதம் ஓடுவதற்கு மட்டுமே போதுமான அகலம் உள்ள தெருவாக அது இருக்கும்.

நல்லது, ஆனால் நாகூம் கண்டு சொன்னது என்னவெனில், ''அகலமான வீதிகள்' என்று தான். அவைகள் மின்னல்களைப் போல் வேகமாய்ப் பறக்கும்'' (நாகூம் 2:4) என்றான். 'அவைகள் தீவட்டிகளைப் போல் விளங்கி' (நாகூம் 2:4) என்று நாகூம் கூறுகிறான். அவ்வண்டிகளிலுள்ள விளக்குகளைப் பற்றியே அவன் அவ்வாறு கூறுகிறான். "அவைகள் ஒன்றுக்கெதிராக ஒன்று ஓடிவரும்' என்று கூறினான். விபத்துக்கள் அவைகள். அந்த தீர்க்கதரிசி தன் காலத்திற்கு அப்பால் எதிர்வரும் காலத்தினுள், நான்காயிரம் ஆண்டுகளுக்கு அப்பால் இவைகள் வருவதை பார்த்தான். அதைப்பற்றி எண்ணிப்பாருங்கள். அது ஆவிக்குரிய தூண்டுதலை கொடுப்பதாக இருக்கிறது.

15.ஆனால் நாமோ கடைசி காலத்திற்குள் இருக்கிறோம். நண்பர்களே! அதேவிதமாக வேத வாக்கியமும் இருக்கிறது. சரியாக இந்தக் கடைசி காலத்திலே அதில் சொல்லப் பட்டவைகளெல்லாம் சம்பவித்துக் கொண்டு வருகின்றன. இன்று காலையில் கூட நான், தேவன் நமக்கு உதவி செய்வாரெனில், இவற்றில் சில காரியங்களை, நம்மால் முடிந்த அளவுக்கு, ஒன்று சேர்த்து இணைத்துப் பார்க்கலாம் என்று எண்ணினேன்.



அவர்கள் ஆலயத்தை சுட்டெரித்த போது.... அதன்பிறகு, இஸ்ரவேலருக்கு இன்னும் மூன்றரை வருடங்கள் மீதியாயுள்ளன.

218. கிறிஸ்துவானவர் வந்து, சரியாக மூன்றரை ஆண்டுகள் பிரசங்கித்து தீர்க்கதரிசனம் உரைத்தார், அன்றாட பலியும் ஒழிக்கப்பட்டு, யாவும் பரிபூரணமாக நிறைவேறியது. ஆலயம் இருந்த அதே இடத்தில், உமர் பள்ளிவாசல் அங்கே கட்டப்பட்டு இன்னும் அங்கே அது நின்றுகொண்டிருக்கிறது. புறஜாதிகளின் காலம் முடிவடையும் வரைக்கிலும் அவர்கள் எருசலேமின் மதில்களை மிதிப்பார்கள். அப்பொழுது தெரிந்து கொள்ளப்பட்ட மணவாட்டியாகிய சபையானது உயர எடுத்து கொள்ளப்படும்.

219. இரு தீர்க்கதரிசிகளாகிய எலியாவும் மோசேயும் மீதியுள்ள மூன்றரை வருட காலத்திற்காக, இஸ்ரவேலரிடம் திரும்பி விடுவார்கள். அதை உங்கள் மத்தியில் அளிக்கும் பொழுது, அது மிகவும் அழகான காரியமாக இருக்கும்.

220. உங்கள் முழு இருதயத்தோடும் நீங்கள் அவரை நேசிக்கிறீர் களா? அந்த ஏழு முத்திரைகளால் முத்திரையிடப்பட்ட புத்தகமானது என்ன என்பதை இப்பொழுது நீங்கள் புரிந்து கொண்டீரகளா? அதை நாம் இப்பொழுது ஒரு புத்தகச் சுருளில் பெற்றிருக்கிறோம். நீங்கள் சற்று ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். இக்கடைசி நாட்களிலே.... அது ஒரு மண்பாண்டத்தில் வைக்கப்பட்டிருந்தது. இப்பொழுது நீங்கள் அதைப் புரிந்து கொண்டீர் களா? யார் அந்த மண்ணான பாத்திரமாயிருந்தது? இயேசு கிறிஸ்து தான் அது. ஒரு மனிதனும் அதைப் பெற்றிருக்கவில்லை. அவர் மூலமாகத் தான் அது சாத்தியமாயிற்று. அது திருவசனத்தில் எழுதப்படக்கூட இல்லை. அது வேத வாக்கியத்தில் எழுதப்பட்டிருந்திருக்குமானால், நீங்கள் கண்டு கொள்ள இயலாதபடி அது மறைக்கப்பட்டுள்ளது. அது அப்படித்தான். எனவே அவரில் தான் அது வெளிப்படுத்தப்படுகிறது. அது அந்த மண்ணான பாத்திரத்தினுள் வைக்கப்பட்டது. அதனால் அது கெட்டுப் போகவோ, துருப்பிடிக்கவோ இயலாததாகியது.

221. பின்பு, அவர் வந்து முத்திரையொன்றை தனது சபைக்குத் திறந்து கொடுத்து, இவ்வாறு கூறுகிறார்: "பாருங்கள், நான் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறேன்.'' பார்த்தீர் களா? பார்த்தீர்களா? "ஒரு ஈனப் பாவியானவன் நித்திய காலமாக எரிந்து கொண்டிருப்பானா, அல்லது மில்லியன் (ஒரு மில்லியன் என்பது 10 இலட்சமாகும் - மொழிபெயர்ப்பாளர்) ஆண்டுகள் எரிந்து விட்டு பிறகு முற்றிலுமாக

214. யோவான் அப்பொழுது, தன்னில் தானே ஒரு உண்மையான பெந்தெகொஸ்தே அனுபவத்தை பெற்றிருந்திருக்கவேண்டும். 'வானத்திலுள்ள சிருஷ்டிகள் யாவும், பூமியிலுள்ள சிருஷ்டிகள் யாவும், பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும் சமுத்திரத்திலுள்ள சிருஷ்டிகள் யாவும்: ஆமென், சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திர மும் கனமும் மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக என்று நான் சொல்வதைக் கேட்டார்கள்'' என்று கூறுகிறான்.

215. ஆராதனையின் வேளை. ஆமென். அவர்கள் அதை எவ்வாறு செய்தார்கள்? இதோ இங்கே அவருடைய வசனம் உள்ளது. அவர்கள் யாவரும் அதைக் கேட்டார்கள்.

"அதற்கு நான்கு ஜீவன்களும் ஆமென் என்று சொல்லின (யோவானே, நீ செய்வது சரி. உன்னால் கூடுமான வரைக்கும் உரத்த சத்தத்தோடு அவரைத் துதிப்பாயாக ) இருபத்து நான்கு மூப்பர்களும் வணக்கமாய் விழுந்து சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுது கொண்டார்கள்.

வெளி.5:15

216. என்னே ஒரு அழகான விவரிப்பு இது. எனக்கு நேரமில்லை. இங்கே அதைப்பற்றிய பின்னணியான விவரக் குறிப்பு எழுதி வைத்திருக்கிறேன். ஆனால் நமது அடுத்த கூட்டத்தில் அதைப் பற்றி நாம் எடுத்துக்கொள்ளலாம். நான் எனது விடுமுறை நாட்கள் முடிந்து இங்கே திரும்ப வரும் போதோ அல்லது பிறிதொரு சமயத்திலோ ஒரு வேளை நான் இந்த தானியேலின் எழுபது வாரங்கள்' பற்றி எடுத்துக்கொண்டு இங்கே இதனோடே அதை இணைத்து, பெந்தெகொஸ்தே யூபிலிக்கு அது எங்கே எடுத்துச் செல்லுகிறது என்பதை காண்பித்து, பிறகு இந்த ஏழு முத்திரைகள் இடமாக திரும்ப வந்து, நாம் போய்விடுவதற்கு முன்பாக அவற்றைக் திறந்து, அது முடிவு நேரத்தில் இருப்பதைக் காண்பிக்கலாம்.

217. ஆட்டுக்குட்டியானவராகிய மேசியா, அதிபதி வந்திட வேண்டும்; அவருடைய ஜனங்களின் மேல் எழுபது வாரங்கள் செல்லும் என்று தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. ஏழின் பாதியிலே மூன்றரையாவது வருடத்திலே அதிபதியானவர் வெட்டப்படுவார். அன்றாட பலி நீக்கப்படும். பாழக்குகிற அவருவருப்பாகிய முஸ்லிம்களுடைய உமர் பள்ளிவாசல் ஆலய நிலங்களிலே இன்று நின்று கொண்டிருக்கிறது;



பின்பு, இன்றிரவில் அந்த மகத்தான கடைசி காலத்தில், அதாவது லவோதிக்கேயா சபையின் காலத்தில், அது எவ்வாறு தன்னுடைய செய்தியை பெற்றுக் கொண்டது என்றும், அதன் பிறகு, அது எவ்வாறு அதை விட்டு விலகி, தனக்குக் கொடுக்கப்பட்ட செய்தியை அலட்சியம் செய்து, நேராக அது அனலுமின்றி குளிருமன்றி வெதுவெதுப்பான நிலைமைக்குள் சென்று, அதினால் தேவனுடைய வாயிலிருந்து வாந்தி பண்ணிப் போடும்படியான நிலைமைக்கு வந்தது என்பதைப் பற்றியும் பார்ப்போம். பாருங்கள், வேறு விதமாக கூறினால், அந்த சபையைப் பற்றி எண்ணிப் பார்த்தாலே தேவனுக்கு வயிற்றை உமட்டிக் கொண்டு வருகிற அளவுக்கு அது அவ்வளவு மோசமான நிலையில் இருக்கிறது. ''என் வாயினின்று வாந்தி பண்ணிப் போடுவேன்'' என்று அவர் கூறினார்.

16.இப்பொழுது இன்று காலையில் நான் குறிப்பிட்டுக் காட்டும் படி சில வேத வாக்கியங்களை இங்கே எழுதி வைத்திருக்கிறேன். அதற்கு முன்பு, ஜெபத்திற்காக நாம் சற்று நேரம் எழுந்து நிற்பது நமக்கு அப்படியொன்றும் கடினமாக இராது என்று நான் கருதுகிறேன்.

எங்கள் இரக்கமுள்ள பரம பிதாவே, நாங்கள் மீண்டும் இந்த ஓய்வு நாளில் கூடி வருகையில், வெளியிலே, மழையானது தூற ஆரம்பித்து, மிகவும் கடுமையான குளிர்காற்று அடித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் நாங்களோ இன்றைக்கு எங்கள் தலைகளுக்கு மேல் ஒரு கூரை இருப்பதற்காகவும், எங்களுக்குகூடி வர ஒரு சிறிய இடமிருப்பதற்காகவும், எமது மனச்சாட்சி எவ்வாறு ஆராதிக்க வேண்டும் என்று கூறும் எந்தவொரு வழியிலும் கூடி வந்து தேவனை ஆராதிப்பதற்கு வசதியான ஒரு தேசம் இன்னும் எங்களுக்கு இருப்பதற்காகவும், மகிழ்ச்சி அடைகிறோம். பிறகு, உம்முடைய வார்த்தையிலே, இந்நிலைமை நீண்ட காலத்திற்கு நீடித்திருக்காது என்பதைக் காண்கிறோம்.

எனவே பிதாவே, இதிலிருந்து நாங்கள் பெற்றுக் கொள்வதற்கென்றே வைக்கப்பட்டுள்ள மிகச் சிறந்தவற்றை நாங்கள் பெற்றுக் கொள்ளத்தக்கதாக எங்களை விசேஷித்த வண்ணமாக அபிஷேகியும் என்று ஜெபிக்கிறோம். எங்களால் கிரியை செய்ய முடியாத வரப் போகிற அந்த வேளைகளுக்காக நாங்கள் ஆயத்தமாக இருந்திட எங்களுக்கு உதவி செய்யும். இன்னும் எவ்வளவு காலம் இருக்கும் என்பதை நாங்கள் அறியோம். அது ஒருவேளை வாரக்கணக்கில் இருக்கக்கூடும், மாதங்கள் கணக்கில் இருக்கக்கூடும், அல்லது வருடக்கணக்கில் இருக்கக்கூடும், நாங்கள் அறியோம். ஆனால்

வரப்போகும் என்றாவது ஒரு நாளில் இவ்வாறு செய்ய இயலாமற்போகும்.

எனவே, பிதாவே, நீர் எங்களை உமது தெய்வீக வழி நடத்துதலின் கீழாக வைத்து, எங்கள் சிந்தைகள் உம்மைக் குறித்தே இருக்கும்படி செய்து, எங்கள் இருதயத்தின் தியானம் உமது சமுகத்தில் ப்ரிதியாக இருக்கும் படி செய்தருளும் என்று ஜெபிக்கிறோம். ஓ கர்த்தாவே. எங்களுடைய பாவங்களை மன்னியும். நாங்கள் பாவம் செய்து, உம்முடைய வழியை விட்டு விலகினோம் என்று நாங்கள் பாவ அறிக்கை செய்து, பாவ மன்னிப்பைக் கேட்கிறோம். நாங்கள் உம்முடையவர்கள் என்று அழைக்கப்பட சற்றேனும் தகுதியுடையவர்களல்ல, கூலிக்கு அமர்த்திக் கொள்ளப்பட்ட உம்முடைய வேலைக்காரர்களாக மட்டுமாவது எங்களை வைத்துக் கொள்ளும், கர்த்தாவே. நாங்கள் செய்ய வேண்டுமென நீர் எங்கள் மேல் சுமத்தும் எந்தவொரு வேலையையும் செய்ய நாங்கள் விருப்பமுள்ளவர்களா யிருப்போம். அதை நாங்கள் செய்ய விருப்பமுள்ளவர்களா யிருக்கிறோம், எங்களை மட்டும் உம்முடைய இராஜ்யத்திற்குள் ஏற்றுக்கொள்ளும், கர்த்தாவே. அதினால் நாங்கள், இவ் வுலகை எதிர் நோக்கியுள்ள இந்தப் பெரிய பயங்கரமான வேளையில் கிரியை செய்ய எங்களுக்கு இயலுமே, கர்த்தாவே.

உம்முடைய பிரசன்னத்தினாலே இப்பொழுது எங்களை ஆசீர்வதியும், உம்முடைய பரிசுத்த ஆவியைக் கொண்டு எங்களுக்குப் போதித்தருளும்; இங்கு ஒருமித்துக் கூடி வந்துள்ள எங்கள் மூலமாக மகிமைப்பட்டருளும். இயேசுவின் நாமத்தினாலே கேட்கிறோம். ஆமென்.

17.முதலாவதாக இங்கு வந்துள்ள எனது நண்பர்கள் ஒவ்வொருவரையும் நான் அடையாளம் கண்டு கொள்ள விரும்புகிறேன். அவர்கள் யார் யார் வந்திருக்கிறார்கள் என்பதை நான் இன்று காலை முதற்கொண்டே சுற்று முற்றும் நோட்டம் விட்டுக் கொண்டேயிருக்கிறேன். இரவு நேரத்தில் நண்பர்கள் யார் யார் வந்திருக்கிறார்கள் என்பதை கண்டு கொள்வது சற்று சிரமமான விஷயம் தான். ஏனெனில் நம்முடைய ஒளியமைப்பில், பின்னால் தொங்கிக் கொண்டிருக்கிற விளக்குகள் நிமித்தமாக மக்களை அடையாளங் கண்டுகொள்வது கடினமாய் இருக்கிறது. இந்த பிரசங்க பீடத்திலிருந்து கொண்டு, இரவு நேரத்திலும் சரி, பகல் நேரத்திலும் சரி, மக்களை சரியாக பார்த்து அடையாளங் கண்டுகொள்வது கடினமாயுள்ளது. தேசத்தின் பல்வேறு பாகங்களிலிருந்து வந்திருக்கிற நமது நண்பர்கள் பலரை நான்



... பாத்திரராயிருக்கிறீர்... என்று புதிய பாட்டைப் பாடினார்கள்...'

212. இது என்ன ஒரு தொழுகையாயிருக்கிறது என்பதை கேளுங் கள். மூப்பர்கள், ஜீவன்கள், யாவும் அவருக்கு முன்பாக வணக்கமாக விழுந்தனர். அவர் தமது திட்டத்தை நிறைவேற்றி முடித்தபோது, அது தொழுது கொள்ளுவதற்கான வேளையா யிருக்கிறது.

"தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் (ஆங்கிலத்தில் "ஏடுக்கவும் என்றுள்ளது'') அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப் பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக் கென்று உம்முடைய இரத்தத்தினால் மீட்டுக் கொண்டு,

எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களு மாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்று புதிய பாட்டை பாடினார்கள் (அங்கே அந்த மீட்கப்பட்ட ஆத்துமாக்கள் ஆர்ப்பரிக்கின்றார்கள் என்பதைக் கேளுங்கள்).

பின்னும் நான் பார்த்த போது, சிங்காசனத்தையும் ஜீவன் களையும் மூப்பர்களையும் சூழ்ந்திருந்த அநேக தூதர்களுடைய சத்தத்தைக் கேட்டேன் : அவர்களுடைய இலக்கம் பதினாயிரம் பதினாயிரமாகவும் ஆயிரமாயிரமாகவுமிருந்தது (பரலோகத் திலுள்ளயாவும் இந்த ஆட்டுக்குட்டியானவரை தொழுது கொள்ளுகின்றன)

அவர்களும் மகா சத்தமிட்டு: அடிக்கப்பட்ட ஆட்டுக் குட்டியானவர் (அல்லேலூயா அல்லேலூயா!) வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார் என்று சொன்னார்கள்.

வெளி.5:9-12

213. கவனியுங்கள் சர்வ சிருஷ்டியும்'' யோவான் என்ன செய்தான் என்பதை கவனியுங்கள்.

அப்பொழுது, வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழுருக்கிற சிருஷ்டிகள் யாவும், சமுத்திரத்திலுள்ள வைகளும், அவற்றுள்ளடங்கி வஸ்துக்கள் யாவும்: சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக் கேட்டேன் (யோவான்). வெளி.5:13

தேவன் என்பதையும் குறித்து நாம் புரிந்துகொள்ள ஆரம்பித்தோம். அவர் தேவனே மாம்சத்தில் வெளிப்பட்டவர் என்பதை அறிந்து கொண்டோம். அவர் யார் என்பதைப் பற்றிய வெளிப்பாடு - இதெல்லாம் அத்தூதன், நிலத்தின் மேல் ஒரு பாதத்தையும் சமுத்திரத்தின் மேல் ஒரு பாதத்தையும் வைத்து, ''இனிகாலம் செல்லாது'' என்று ஆணையிட்டுக் கூறுகிறதற்கு முன்பாக முடிவடைய வேண்டும். நாம் இப்பொழுது அதனுடைய முன் முற்றத்தில் வந்து விட்டோம். பாருங்கள்?

209. அவைகளில் கடைசியானது வெளிப்படுத்தின விசேஷம் 10ம் அதிகாரமாகும். ஒருபாதம் நிலத்தின் மேலும், ஒரு பாதம் சமுத்திரத்தின் மேலும் - நேரம் கடந்து விட்டது - மீட்பு முடிவடைந்துவிட்டது - இப்பொழுது அவர் சிங்கமாக வருகிறார்அப்பொழுது அவர் ஆட்டுக்குட்டியாக இருந்தார். இப்பொழுதோ அவர் யூதா கோத்திரத்து சிங்கமாக வருகிறார்.

210. இப்பொழுது அக்காரியத்தை நீங்கள் பெற்றுக் கொள்ளத்தக்கதாக இங்கே மீதியுள்ள வசனத்தையும் விரைவாக வாசிப் பேனாக, 8ம் வசனம் :

"அந்தப் புஸ்தகத்தை அவர் வாங்கினபோது, அந்த நான்கு ஜீவன்களும், இருபத்து நான்கு மூப்பர்களும் தங்கள் தங்கள் சுரமண்டலங்களையும், பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூபவர்க்கத்தால் நிறைந்த பொற்கலசங்களையும் பிடித்துக் கொண்டு, ஆட்டுக்குட்டி யானவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து,

வெளி.5:8

211. இப்பொழுது, இந்த வேளையில் தான் யாவும் தொழுது கொள்ளவேண்டும். எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். இப்பொழுது இதை நாம் இழந்து போக வேண்டாம். மிகவும் கவனமாக கேளுங்கள். சபைக்காலத்திற்குரிய அனைத்து இரகசியங்களும் முடிவடையும் பொழுது மீட்பின் திட்டங்களைப் பற்றிய அனைத்து இரசகியங்களும் அவ்வேழு முத்திரைகளும் திறக்கப்பட்ட பிறகு.... இதற்குப் பிறகு, உடனடியாக பரலோகத்திலும் பூலோகத்திலும் உள்ள யாவும் தேவனைத் தொழுது கொள்ள வேண்டிய வேளையாக அது இருக்கிறது. இப்பொழுது என்ன நடக்கிறது என்பதைக் கவனியுங்கள். சற்று ஒரு நிமிட நேரம் அதைப் பற்றிக் கூர்ந்து கேளுங்கள்.



பார்க்கிறேன். இன்றைக்கு பகல் வேளையில் இன்னின்னார் வந்துள்ளனர் என்று அடையாளங் கண்டுகொள்வது, இரவு நேரத்தை விட சுலபமாக இருக்கிறது. அவர்கள் ஒவ்வொருவர் பெயரையும் குறிப்பிட்டு சொல்ல இயலாதபடி, அவர்கள் அநேகராய் இருக்கின்றனர் ஆனால் உங்களையெல்லாம் நான் பாராட்டுகிறேன் என்பதை நீங்கள் அறிந்திருக்க விரும்புகிறேன்.

வேத வாக்கியங்களின்படி, நான் இந்த கடிந்து கொள்ளுதலை யெல்லாம் செய்து சத்தியத்தை கொண்டு வர வேண்டியுள்ளது. நான் அவ்வாறு செய்ய வேண்டுமென சுயமாக விரும்பி அப்படிச் செய்யவில்லை. ஆனால் எவ்வாறு செய்ய வேண்டுமென தேவன் எழுதிவைத்திருக்கிறாரோ, அதைச் செய்தாக வேண்டும். அதைச் செய்ய வேண்டுவது தான் முக்கியமாயிருக்கிறது. அப்படியிருந்த பிறகும், பல்வேறு ஸ்தாபனங்களைச் சேர்ந்த என்னுடைய சகோதரர்கள் அநேகர், இன்னமும் கூட என்னுடன் கூட அமர்ந்திருக்கிறதை நான் காண்கையில், இவர்களை நான் மிக மிக அதிகமாக பாராட்டுகிறேன். தேவன் தாமே உங்களை ஆசீர்வதித்து, உங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்பதே என்னுடைய ஜெபமாயிருக்கிறது.

18.இப்பொழுது...(சகோதரன் ஸ்ட்ரிக்கர், 'சகோதரன் பிரன்ஹாமே, என்று அழைக்கிறார் - ஆசி.). ஆம் சகோதரனே. (இங்குள்ள அனைத்து மக்கள் சார்பாகவும் நான் பேசிட சபையின் அனுமதி எனக்கு இருக்குமென்றால், நாங்கள் அனைவரும் உங்களை பாராட்டுகிறோம் என்பதை நீங்கள் அறிந்திட வேண்டுமென நாங்கள் விரும்புகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்''). நன்றி, சகோதரன் ஸ்ட்ரிக்கர் அவர்களே. (''நாங்கள் உம்மை நேசிக்கிறோம்''). நன்றி, சகோதரன் ஸ்ட்ரிக்கர் அவர்களே. ('நீங்கள் கடந்து செல்ல வேண்டியதாயுள்ளவைகளுக்காக தேவையான கிருபை உங்களுக்குக் கிடைக்க நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம். நாங்களும் அச்சமயங்களில் உங்கள் பட்சமாக நிற்கக்கூடும் படியும் ஜெபிக்கிறோம் . உங்களுக்கு நன்றி, சகோ.ஸ்டிரிக்கர் அவர்களே. (சபையார் ஆமென் என்று கூறுகிறார்கள் - ஆசி). சபையே உங்களுக்கு நன்றி. இதைக் கூறும் நீங்கள் அருமையானவர்களாய் இருக்கிறீர்கள். நான் அதை வெகுவாக மெச்சுகிறேன்.

19.நேற்றிரவில் யாரோ ஒருவர் சொல்லிக் கொண்டிருந்தார். அது சகோ. ஃப்ரெட் என்று நினைக்கிறேன். அவர் என்னை அழைத்து, நேற்றிரவு கூட்டம் முடிந்து வீடு திரும்பப் போகையில், தன்னிடம் ஒரு சகோதரன்

தான் கண்டதாக கூறின தரிசனம் அல்லது சொப்பனம் பற்றி என்னிடம் எடுத்துரைத்தார். அதில், நான் பூமியின் வளைவான பகுதியில் நிற்பதாகவும், என் பின்னால் கருமேகம் சுருண்டு நிற்பதாகவும் காணப்பட்டுள்ளது. அவன் என்னைத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறான் என்பதை நான் அறிவேன். ஆனால் அது... தேவன் கிரியை செய்து முடிக்கிற வரையிலும் அவனால் ஒன்றும் செய்ய இயலாது. அதன்பிறகு, அப்பொழுது நான் போய்விடுவதற்கு நேரமாகியிருக்கிறது. எனவே ஆனால், நான் - இதன் காரியம் என்னவெனில், ''பெரிய ஆளாக'' நான் இருக்க விரும்பியதே கிடையாது. அவ்விதம் ஆகிட நான் விரும்பியதில்லை. ஆனால் நான் "ஜீவனின் சங்கீதத்தைப் பற்றித்தான் எண்ணுகிறேன்.

மகத்தான மனிதர்களின் ஜீவியங்கள் நமக்கு நினைவுபடுத்துகின்றன

(பவுல் என்ன செய்தார், ஐரேனியஸ் என்ன செய்தார், லூத்தர் என்ன செய்தார், வெஸ்லி என்ன செய்தார், அல்லது பரிசுத்த மார்ட்டின் என்ன செய்தார் என்பதைப் பாருங்கள்).

மகத்தான மனிதர்களின் ஜீவியங்கள் யாவும் நமக்கு நினைவுபடுத்துகின்றன.அதினால் நாம் நம்முடைய ஜீவியங்களையும் உன்னதமானதாக ஆக்க முடியும் உலகைவிட்டுப் பிரிந்து செல்லுகையில் நமக்குப் பின்னால் காலத்தின் மணற்பரப்பில் அடிச்சுவடுகளை விட்டுவிட்டு செல்கிறோம்.

அடிச்சுவடுகள், ஒருவேளை இன்னொன்றாக இருக்கும், வாழ்க்கையாகிய இருண்ட சமுத்திரத்தில் பயணம் செய்கையில்,(நான் போய்விட்ட பின்பு, பாருங்கள் போய்விட்ட பிறகு) கைவிடப்பட்ட நிலையில், விசுவாசக் கப்பல் சேதமடைந்த நிலையில் உள்ள எந்தவொரு சகோதரனே (இப்புத்தகங்களில் ஒன்றை எடுத்துப் படியுங்கள்) அதில் கண்டுணர்ந்து, மீண்டும் இதயத்தை திடப்படுத்திக் கொள்ளுங்கள். (அதுதான் காரியம்) நாம் நம் தலைகளை உயர்த்தி, அப்பொழுது கிரியை செய்வோம் எந்தவித போராட்டத்திற்கும் ஆயத்தமான இருதயத்தோடு இருப்போம்.

(நான் அதை விரும்புகிறேன், நீங்கள் விரும்புகிறீர்களா?) வாய்பேசாத, ஓட்டிவிடப்படும் நிலையில் உள்ள கால்நடைகளைப் போல் இருக்க வேண்டாம் (வார்த்தையண்டை ஓட்டிவிடப்பட வேண்டும்)

ஆனால் யுத்தத்தின் நாயகனாக இருந்திடுங்கள்

(நான் அதை விரும்புகிறேன்).



204. ஏழு முத்திரைகளும், ஏழு ஆவிகள், ஏழு தூதர்கள், ஏழு கொம்புகள், ஏழு சபைகள். ஏழு ஏழு என்று ஐந்து ஏழுகள் உள்ளன என்று பாருங்கள். ஏழு என்பது பரிபூரணத்தைக் குறிக்கும். ஐந்து என்பது "கிருபையைக் குறிக்கும். தேவன் ஏழு சபைக் காலங் களுக்கும் அளிக்கப்படும் தேவனுடைய கிருபை அவருடைய ஏழு மனித செய்தியாளர்கள் - தூதர்கள்தான் அவ்வேழு தேவனுடைய ஆவிகளாகும். மீட்புக்குரிய திட்டத்தைக் கொண்ட ஏழு முத்திரைகள் - நாம் இப்பொழுது அதைத்தான் பார்க்கிறோம். ஏழு கொம்புகள் ஏழு காலங்களைக் குறிக்கும்.

205. கொம்பு என்றால் " ஒரு இராஜ்யத்தை''க் குறிக்கும். தானியேலில் அம்மிருகத்தின் வருகிற அக்கிரீடத்தைக் கொம்பின் மேல் குறித்து உங்களுக்கு ஞாபகமிருக்கும். கொம்பு என்றால் ஒரு இராஜ்யத்தைக் குறிக்கும், அல்லது ''ஏழு காலங்கள்'' சிலர் நித்திரையடைந்தார்கள் என்று இயேசு கூறியது உங்களுக்கு ஞாபகத்திலிருக்கட்டும். சிலர் முதலாம் ஜாமத்திலும், சிலர் அதற்கடுத்த ஜாமத்திலும், இப்படியாக அடுத்தடுத்து வருகிற ஜாமங்களில் அதற்குரிய ஜாமங்களில் வாழ்ந்தவர்கள் நித்திரையடைந்தார்கள். கடைசியாக ஏழாம் ஜாமம், அந்த ஏழாம் ஜாமத்தில் மணவாளன் வருகிறார், அப்பொழுது யாவரும் விழித்தெழுகிறார்கள். அதை நினைவில் கொண்டிருக்கிறீர்களா?

206. ஆகவே, ஏழு காலங்கள் தான் அவ்வேழு கொம்புகள் ஆகும். ஏழு சபைகள் அல்லது, விசுவாசிகளைக் கொண்ட சரீரத்தின் ஏழு காலங்கள் ஆகும். ஓ, அது மிகவும் பரிபூரணமாக இருக்கிறது. எரேமியா... அப்புத்தகம் ''காலங்கள் - எவ்வாறு அது மீட்கப்பட்டது. எங்ஙனம்? (ஒலிநாடாவில் காலியிடம் - ஆசி) இங்கே .....

207. இம்முத்திரைகளில் ஏழாவதும், கடைசியுமான முத்திரை - அவைகள் திறக்கப்படுகையில், அதைப்பற்றி, வெளிப்படுத்தின விசேஷம் 10ம் அதிகாரத்தில் காணப்படுகிறது. அங்கே ஒரு பலமுள்ள தூதன் இறங்கி வந்து - அது கிறிஸ்து தான் - ஒரு பாதத்தை பூமியின் மேலும், ஒரு பாதத்தை சமுத்திரத்தின் மேலும் வைத்து, தன் கரத்தை உயர்த்தி, "நாள் முடிவடைந்தது, நேரம் கடந்து சென்றுவிட்டது. எல்லாம் முடிவடைந்தது, இனி காலம் செல்லாது'' என்று கூறுகிறார்.

208. அது முழக்கமிடப்படுகையில், அவ்வேளையில் தேவ இரகசியம் முடிவடையும் என்று கூறினார். தேவன் யார், அவர் எவ்வாறு தம்மை பிரத்தியட்சப்படுத்தினார் என்பதெல்லாம் தெரியும். அம்முத்திரை திறக்கப்படுகையில், அவர் எவ்வாறு தேவ குமாரனாகவும், அவரே

எண்ணிக் கொண்டிருக்கிறாள் என்பது அப்படியே சரியாக கூறப்பட்டதோ, அது இதுவரையிலும் ஏற் படவில்லை, அது சரிதான், அது அந்நாளில் தான் ஏற்பட்டுள்ளது. ஆபிரகாமின் விசுவாசம் - கர்த்தாராகிய இயேசுவின் நாமத்தைக் குறித்த விஷயம்.

201. இன்னும் ஒரு விநாடியில் நான் இன்னும் பேசவிரும்பும் ஐந்து காரியங்கள் என்னிடம் உள்ளது. அதை எவ்வளவு விரைவாக பேச முடியுமோ அவ்வளவு விரைவாக பேசிடுவேன். பாருங்கள். ஏழு... ஏழு முத்திரைகள் உள்ளன. தேவனுடைய மீட்பின் திட்டத்தில் ஐந்து ஏழுகள் உள்ளன. ஐந்து என்ற எண் ''கிருபையின்'' எண்ணாகும். எத்தனை பேருக்கு அது தெரியும்? இயேசு (J-e-s-u-s) (F-a-i-th) விசுவாசம் (ஆங்கிலத்தில் இயேசுவுக்கு (Jesus) விசுவாசத் திற்கு (Faith) ஐந்து எழுத்துக்கள் உள்ளன- மொழி பெயர்ப்பாளர்) ஐந்து என்ற எண் கிருபையைக் குறிக்கும். ஆறு என்ற எண் மனிதனின் நாளைக் குறிக்கும் - ஏழு என்ற எண் அவனது மீட்பின் நாளுக்குரிய எண்ணாகும்.

202. இப்பொழுது கவனிக்கவும். அங்கே ஏழு முத்திரைகள் இதில் உள்ளன, அல்லது இந்த மகத்தான மீட்பின் திட்டத்தில் ஏழு திட்டங்கள் உள்ளன. அங்கே ஏழு என்ன உள்ளது? மீட்புக் குரிய ஏழு முத்திரைகள், தேவனுடைய ஏழு ஆவிகள்.... நாம் அதை பார்க்கிறோம், ஏழு ஆவிகள் என்று வசனம் கூறுகிறது. இங்கே வெளிப்படுத்தின விசேஷம் 5ம் அதிகாரத்தில் 6ம் வசனம் துவங்கி என்ன கூறப்பட்டுள்ளது என்பதை சற்று ஒரு நிமிடம் நேரம் நான் வாசிக்கட்டும். அது 6ம் வசனம் என்று நான் நம்பு கிறேன்.

''அப்பொழுது, இதோ, அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன் களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியில் நிற்கக் கண்டேன்; அது ஏழு கொம்புகளையும் ஏழு கண்களையும் உடையதா யிருந்தது. அந்தக் கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளேயாம்.

வெளி.5:6

203. அந்த ஏழு ஆவிகள் என்ன? அந்த ஏழு செய்தியாளர்கள் தான். அங்கே பரிசுத்த கொலம்பா, ஐரேனியஸ், ஜான் வெஸ்லி, மார்டின் லூத்தர் ஆகியோர் உண்டு. ஏழு மனித தூதர்களாகிய ஏழு செய்தியாளர்கள்தான் அவ்வேழு ஆவிகளாம்.



20,எனது சிறிய சகோதரனாகிய ஜார்ஜ் அவனுக்கு பிடித்தமான பாடலைப் பாடுவான். அப்பாடலை அவனது அடக்க ஆராதனையிலும் பாடப் பெற்றிருந்தான். நானும் அவனும் உட்கார்ந்து பாடுவோம். நான் 'ஜீவனின் சங்கீதம் என்ற பாடலையும், அவன் உட்கார்ந்து, மரணத்தை கடத்தல்' என்ற பாடலையும் பாடுவான். பாருங்கள்? நீங்கள் அப்பாடலை கேட்டிருக்கிறீர்கள்.

சூரிய அஸ்தமனத்தின் வேளையில் மாலை நேர நட்சத்திரம்

தோன்றுகையில், எனக்கென தெளிவான அழைப்பு வந்திடுமே

அம்மரண வேளையில் துக்கங்கொண்டாடுதல் இருக்க வேண்டாம்,

அப்பொழுது நான் கடலுக்குள் போகப் புறப்பட்டு

விடுவேன் (இதை நீங்கள் அநேக தடவைகளில் கேட்டிருக்கிறீர்கள்.)

நேரம் தூரம் இவைகளால் புறம்பே

இருப்பவைகளெல்லாம் அசையும், வெள்ளங்கள் என்னை தூரத்தில் கொண்டு செல்லும், மரணத்தை நான் கடக்கையில்,

எனது மாலுமியை முகமுகமாய் கண்டிடுவேன் என நான் நம்புகிறேன்.

(என் தம்பி அதைக் கடந்திருப்பான் என்று நிச்சயமாயிருக்கிறேன்)

அவன் பாடி முடித்த பின்பு நான் பாடும் பாடல் இதோ:

என் பின்னால் பிரிவுகள் ஏற்பட்டுள்ளன காலத்தின் மணற்பரப்பில் கால் அடிச்சுவடுகள் பதிந்தன, அதினால் மற்றவர்கள் அதைக் கண்டு, அப்பாதையில் தொடர்ந்து வரலாம், இதை மனதில் பதித்து, தொடர்ந்து செல்லுங்கள்.

ஏனெனில், ஒரு மகத்தான நாளில் இயேசு வருவார். இன்று காலையில் அதைப்பற்றித் தான் நாம் படிக்கப் போகிறோம். அப்பொழுது எல்லாம் முடிந்துவிட்டிருக்கும்.

21.நான் மெய்யான சபை மற்றும் கள்ளச்சபை என்பதைப் பற்றி பேச விரும்புகிறேன். நான் இதைப்பற்றி இன்று காலையில் சிந்திக்கையில், இந்த சபைக் காலங்களின் செய்தியில் இதைப்பற்றி பேச இயலாமற்போனால், ஒருவேளை கர்த்தருக்கு சித்தமானால், சீக்கிரத்தில் ஒரு சிறிய தொடர் கூட்டங்கள் ஏற்பாடு செய்து, ஆதியாகமம் தொடங்கி வேதாகமம் முழுவதிலும் வெளிப்படுத்தின விசேஷம் வரையிலும் தீவிரமாக கடந்து சென்று, அதைப்பற்றி

படிக்கலாம் என்று எண்ணினேன். அவ்விரண்டு சபைகளும் என்ன செய்யப் போகின்றன என்பதைப் பற்றி பார்க்கலாம்.

பின்பு, ஒருவேளை, என்றாவது ஒரு நாளில், நாம் சபைக் கட்டிடத்தை கட்டி விட்டோமென்றால், அப்பொழுது, இன்னும் கூடுதலாக மக்கள் அமருவதற்கு இடம் உண்டாயிருக்கும். எவ்வளவு பேர்கள் வந்துவிட்டுப் போகிறார்கள் என்பதை அறிந்தால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். மக்கள் ஏராளமாய் வருகிறார்கள், நமக்கு போதுமான இடம் இல்லாமல் இருக்கிறது.

ஒருவேளை கோடை காலத்தில், மிகவும் உஷ்ணமாக இருக்கும் போது, அப்பொழுது, அந்த உயர்நிலைப் பள்ளியின் அரங்கத்தை எடுத்துக் கொண்டு, அதிலே கூட்டங்களை ஒழுங்கு செய்து கொண்டு, வெளிப்படுத்தின விசேஷப் புத்தகத்தையும், இன்னும் வேறு எதையாவதையோ, அல்லது தானியேலின் புத்தகம் மற்றும் வெளிப்படுத்தின விசேஷப் புத்தகம் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு, அவைகளை ஒன்றாக இணைத்து, நாம் படிக்கலாம்.

22.இப்பொழுது, நாம் யூதர்களைப் பற்றி பார்க்கப் போகிறதில்லை. யூதர்கள்.... நான் ஏற்கனவே கூறிய வண்ணமாக, கி.பி.1500ல் இருண்ட காலங்களில், கத்தோலிக்க மார்க்கத்தின் குருக்களாட்சியானது, சபையையும், அரசையும் ஒன்றாக இணைத்து விட்டு, அது அவர்களது “ஆயிரவருட அரசாட்சிக்கு பிந்தினகாலம்'' ஆக இருந்தது. அவர்கள், கிறிஸ்துவைப் போல் ஒருவர், கிறிஸ்துவுக்குப் பதிலாளாக, ஒரு சிங்காசனத்தில் அமர வேண்டியவராக சபையானது ஏற்றுக்கொண்டு விட்டபடியினால், தாங்கள் சரியாக ஆயிரம் ஆண்டுக்கால அரசாட்சியின் காலத்தில் இருப்பதாக எண்ணிக்கொண்டனர். சபையும் அரசாங்கமும் ஒன்றாக இணைந்து, யாவும் நன்றாக ஆகிவிட்டபடியினால், அதுவே, “மகத்தான ஆயிரம் ஆண்டுக்கால அரசாட்சி நடந்து கொண்டிருக்கிறது'' என்று நம்பினர். அவர்கள் இன்னமும் அவ்வாறு தான் விசுவாசிக்கிறார்கள்.

ஆனால் அது ஒரு பிழையான காரியமாகும். ஏனெனில், கிறிஸ்துவின் வருகை ஏற்படாமல், ஆயிரமாண்டு கால அரசாட்சி ஆரம்பிக்காது. கிறிஸ்து ஆயிரம் ஆண்டுக்கால அரசாட்சியை கொண்டு வருகிறார், அவரே செழிப்பின் குமாரனாயிருக்கிறார். அவர் வரும் பொழுது, சபையானது மேலே எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும்.

நாம் அடுத்தபடியாக எதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்? சபையின் எடுத்துக் கொள்ளப்படுதலுக்காகத் தான்.



முடியாமல் ஆகிவிட்டது. ஆனால் அவர் அதை ஒரு மண்பாண்டத்திற்குள் வைத்து அவர் தாமே தன்னுடைய சொந்த குமாரனாகிய கிறிஸ்து இயேசுவை சிருஷ்டித்தார். இந்தக் கடைசி நாளிலே இப்பொழுது அவர் முத்திரைகளை திறந்து தமது சபைக்கு அவைகளை காண்பித்துக் கொண்டிருக்கிறார். அது கெட்டுப்போகவோ, அல்லது துருப்பிடிக்கவோ கூடாதபடி அதை அவர் ஒரு மண்பாண்டத்தினுள் வைத்தார். அல்லேலூயா! ஓ நான் ஒரு உருளும் பரிசுத்தன் என்று நீங்கள் எண்ணுவீர்கள் என்று நான் அறிவேன். ஒரு வேளை நான் அப்படி இருக்கக்கூடும். ஆனால் அது அங்கேதான் இருக்கிறது. அதுதானே மண்ணுக்குரிய ஒரு பாத்திரத்தினுள் சுற்றி வைக்கப்பட்டு, பூமியினின்று அது மீட்கப்பட்டு ஈஸ்டர் காலையிலே உயிரோடு எழும்பி வந்தது; அங்கே மரணத்தின் முத்திரைகள் அவரை அதற்கு மேல் பிடித்து வைத்திருக்க இயலாமற்போயிற்று. அவர்தாமே முத்திரைகளை உடைத்து, உயிர்த்தெழுந்து, தான் உயிரோடிருக்கிறதை இந்தக் கடைசி நாட்களில் நிரூபித்து விட்டார். அவர் தமது சபையிலே இருக்கிறார். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். இவ்விஷயம் வேதாகமக் கல்லூரிகளுக்கும், ஸ்தாபனங்களுக்கும் மறைக்கப்பட்டுள்ளது.

199. இந்தக் கடைசி நாட்களில், தமது ஜனங்களின் மத்தியில் தன்னுடைய சொந்த பிரசன்னத்தினால், அதை அவர் வெளிப் படுத்திக் கொண்டிருக்கிறார். லௌகீக காரியங்களை தங்களைவிட்டு அகற்றிக் கொள்ளத்தக்கவர்களை அவர் தெரிந்து கொண்டு, அவர்களை விட்டு, அவனைவிட்டு , ஸ்தாபன தன்மையை அகற்றி விடுகிறார், இதனால் அவர் அவர்கள் மூலமாக பேச முடியும்; இம்முத்திரைகளை அவர் செய்தது போல வெளிப்படுத்தவும், திறக்கவும் முடியும். அல்லேலூயா! ஓ, நீங்கள் அவரை நேசிக்கவில்லையா? என்னே, என்னே, என்னே!

200. நமது இரட்சிப்பின் திட்டமானது இயேசு கிறிஸ்துவிலே இப்பொழுதும் அது வெளிப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. அவர் எவ்வாறு தன்னை இந்தக் கடைசி நாட்களில் வெளிப் படுத்தினார்? முத்திரையை திறந்து கொடுப்பதின் மூலமாகத்தான். ஏன் எவரும்... ஆபிரகாமின் வித்தைக் குறித்த விஷயத்தை உங்கள் ஜீவியத்திலும் நீங்கள் இதற்கு முன் கேள்விப்பட்டதில்லை. அவர் கள் எவ்வாறு நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தமாகுதல், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் ஆகியவற்றின் வழியாக சென்றனர் என்று பார்த்தோம். எவ்வாறு அத்தூதன் கடைசி நாட்களில் வந்து, தன் முதுகு சபையோருக்கு நேராக இருக்க, சாராள் தன் இருதயத்தில் எதை

வரலாற்றில் நாம் பின்னால் திரும்பிச் சென்று, எப்பொழுது அது சம்பவித்தது என்பதை நிரூபித்து, அதைப்பற்றி வேதத்திலிருந்து எடுத்துக் காண்பித்து, அது எப்பொழுது சம்பவிக்கும் என்று வேதம் கூறியதோ அதன்படியே சரியாக எப்பொழுது அது சம்பவித்தது, தேதியுட்பட யாவற்றையும் விவரித்து போதிப்பேன். அவரிடத் திலிருந்து நான் அதைப் பற்றிபெற்றுக் கொண்டுள்ளேன். ஆமென், அங்கே அம்முத்திரைகள் உள்ளன.

197. எரேமியா அப்புத்தகத்தை எழுதிய போது, அது முத்திரையிடப்பட்டது. அந்த முத்திரையிடப்பட்ட அப்புத்தகத்தை வாசிக் கிற நீங்கள் யாவரும் ஒரு நல்ல காரியத்தைக் குறித்து கவனிக்க வேண்டுமென நான் விரும்புகிறேன். அவனும் சிறையிருப்பில் போய் விடப் போவதாக இருந்தது. அவன் அதைப் பற்றி தீர்க்கதரிசனம் உரைத்திருந்தான். நீங்கள் அதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். அவன் தானே அதை, தான் அதைப்பற்றி தீர்க்கதரிசனத்தில் உரைத்ததினால் மாத்திரமே அறிந்திருந்தான். நான் கூறுவதை நீங்கள் கவனித்துக் கொண்டே வருகிறீர்களா? தீர்க்கதரிசனத்தினால் அவன் அறிந்திருந்தான். தேவன் அளித்த வெளிப்பாட்டின் மூலமாக எழுபது ஆண்டு கால சிறையிருப்பில் அவர்கள் அத்தேசத்தை விட்டு கொண்டு போகப்படுவார்கள் என்பதை அவன் அறிந்திருந்தான். அவன் அதைப் பற்றி தீர்க்க தரிசனம் உரைத்ததை நீங்கள் ஞாபகத்தில் வைத்திருக்கிறீர்களா? அவர்கள் சிறையிருப்பில் எழுபது ஆண்டு காலம் இருந்தார்கள். எனவே முத்திரையிடப்பட்ட தனது சுதந்தரத்தைப் பற்றி கிரயப் பத்திரமானது பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருக்க வேண்டும் என அவன் விரும்பினான். ஏனெனில் அவனுக்கு ஒரு ... அவன் தன் பெரிய தகப்பனாரின் மகனுடைய சுதந்திரத்தை சுதந்தரித்துக் கொண்டான். எனவே அவன் அதைப்பற்றி சட்டபூர்வமான எல்லாம் எழுதப்பட்டிருக்கப் பெற்றிருந்தான். எனவே அப் பத்திரம் துருப்பிடிக்காமலும், கெட்டுப் போகமலும் இருக்க அவன் என்ன செய்தான்? அவன் அதை ஒரு மண்பாண்டத்தில் வைத்தான். எழுபது ஆண்டுகள் முடியும் வரையிலும் அது கெட்டுப் போகவே, அல்லது துருப்பிடிக்கவோ செய்யாதபடி இருக்க அவ்வாறு செய்தான்.

198. தேவனுக்கு மகிமை உண்டாவதாக! நீங்கள் அதை புரிந்து கொள்வீர்கள் என்று நான் விரும்புகிறேன். தேவன் என்ன செய்தார் என்பதை கண்டு கொண்டீர்களா? அவர் அதை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் ஒருபோதும் வெளிப்படுத்தவில்லை. அதனால், அவர்கள் இதுவரையிலும் அதைப் பற்றி மேன்மை பாராட்டிக்கொள்ள



23.சபையின் எடுத்துக் கொள்ளப்படுதலையும், வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பையும் ஒன்றாகப் போட்டு குழப்பிக் கொள்ள வேண்டாம். ஏனெனில், சபை எடுத்துக் கொள்ளப்படும் பொழுது நியாயத்தீர்ப்பு இல்லை, பாருங்கள். நியாயத்தீர்ப்பை நீங்கள் இங்கேயே சந்தித்துவிட்டீர்கள். அதுதான் சரி. கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் நியாயத்தீர்ப்பினின்று நீங்கலாயிருக்கிறார்கள். இயேசு கூறினார்: "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பின வரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்''

நாம் எவ்வாறு அதைப் பெறுகிறோம்? நாம் கிறிஸ்துவுக்குள் வந்து, ஒரு சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்படுகிறோம். 1. கொரிந்தியர் 12ம் அதிகாரம் "ஒரு சரீரம்' என்று கூறுகிறது. இயேசு கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக நாம் ஞானஸ்நானம் பண்ணப்படுகிறோம். தேவன் அச்சரீரத்தை ஏற்கனவே நியாயந்தீர்த்திருக்கிறார். கிறிஸ்துவின் அனுமதியின் மூலமாகவும், அவருடைய கிருபையின் மூலமாகவும், அவர் தமக்குள் நம்மை கொண்டு வருகிறார். 1 கொரிந்தியர் 12ம்அதிகாரம் (13ம் வசனம்). ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு நியாயத்தீர்ப்பினின்று விடுவிக்கப்பட்டிருக் கிறோம். ஏனெனில் அவர் அந்த நியாயத்தீர்ப்பை தாமே ஏற்றுக் கொண்டு விட்டார். ஓ, இதற்காக நீங்கள் அவருக்கு நன்றியுள்ளவர்களாய் இருக்கவில்லையா? அவர் நமக்காக நியாயத்தீர்ப்பை தன் மேல் எடுத்துக்கொண்டார். இனி நியாயத்தீர்ப்பே இல்லை.

ஆனால் அது, அவருக்குள் வர மறுக்கிறவர்களுக்கு உண்டு, அச்சரீரத்திற்குள், அந்த இரகசியமான சரீரத்திற்குள் வர மறுப்பவர்களுக்கு உண்டு. நாம் எவ்வாறு அதற்குள் பிரவேசிக்கிறோம்? வெறுமனே கைகளை குலுக்கிக்கொள் வதினாலா? இல்லை. கடிதத்தின் வாயிலாகவா? இல்லை. ஏதாவது ஒரு வகை தண்ணீர் ஞானஸ்நானத்தினாலா? இல்லை. ''ஒரே ஆவியினாலே'', பரிசுத்த ஆவியினாலே, நாம் யாவரும் அந்த சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம்.

24.இன்று காலையில் நாம் அதைப்பற்றி கூர்மையாகப் பார்க்கப் போகிறோம் என்பதை நினைவில்கொள்ளுங்கள். ஒன்று நீங்கள் அச்சரீரத்திற்குள்ளாக இருக்க வேண்டும். அல்லது அதற்கு புறம்பே இருக்க வேண்டும். இரண்டுக்கும் நடுவில் இருக்கும் ஒருஏற்பாடு

இல்லை. கிறிஸ்தவர்களிலே, ரொம்ப நல்ல கிறிஸ்தவர்கள் என்று ஒரு வகுப்பார் கிடையாது. ஒன்று நீங்கள் கிறிஸ்தவர், அல்லது கிறிஸ்தவர் அல்ல என்ற நிலை தான் உண்டு. கறுப்பு - வெள்ளை பறவை என்ற ஒன்றோ, குடித்து - தெளிவாக உள்ள மனிதன் என்றோ இருக்க முடியாது. அவ்விதமானதொன்று உங்களுக்கு இருக்க முடியாது. ஒன்று நீங்கள் கிறிஸ்தவராக இருக்க வேண்டும், அல்லது கிறிஸ்தவர் அல்ல என்ற நிலை இருக்க வேண்டும். ஒன்று நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்க வேண்டும், அல்லது கிறிஸ்துவுக்கு புறம்பேயிருக்க வேண்டும்.

25.இப்பொழுது இவைகள் ஒரு போதனை (teaching) போல் தோன்றலாம். நான் ஒரு போதகன் (teacher) என்ற நிலையிலிருந்து வெகுதூரத்தில் இருக்கிறவன். ஆனால் போதித்தல் என்பது கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு விசேஷித்த வரமாயிருக்கிறது, அது வெட்டுகிறது. முதலாவதாக அப்போஸ்தலர்கள், அதன் பிறகு தீர்க்கதரிசிகள், பின்பு போதகர்கள், மற்றும் சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள், சரீரமாகிய சபையில் ஐந்து ஊழியவரங்கள் இவைகள். அவற்றில் போதித்தல் என்பது ஆவியின் வரங்களில் லொன்றாகும். நான் படித்து ஆராய்ந்து, சரியெனக் காண்கிற தெதுவோ அதை மக்களுக்கு கொண்டுவர வேண்டிய தாயுள்ளது. வேத வாக்கியங்களைப் படித்து அவைகளை ஒன்று சேர்த்து நான் கொண்டுவர வேண்டியுள்ளது. ஆனால், கிறிஸ்துவுக்குள்ளாக மட்டுமே, கிறிஸ்துவின் சரீரம் அடையாளங் கண்டு கொள்ளப்பட வேண்டும்.

26.இப்பொழுது, வெளிப்படுத்தின விசேஷத்தின் முதல் மூன்று அதிகாரங்கள் சபையைக் குறித்துப் பேசுகின்றன. புறஜாதியினர், யூதர், எத்தியோப்பியர், ஆப்பிரிக்கர்கள், ஆகிய ஒவ்வொரு இனமக்களும், புறஜாதிகளாக இந்த ஒருசரீரத்தை உருவாக்குகின்றனர். அவர்கள் கறுப்பராக, வெள்ளையராக, பழுப்பு நிறத்தவராக, மற்றும் அனைத்து நிறத்தவராக, பல்வேறு நிற மலர்களால் ஆன மலர்ச் செண்டைப்போலுள்ளனர். அது அவ்வாறு தான் உள்ளது. அதை தேவன் தன்னுடைய பலிபீடத்தில் படைக்கிறார். அவர்கள் அனைத்து ஜாதிகள், கோத்திரங்கள், பாஷைக்காரரில் இருந்து வந்தவர்கள்.

ஆனால் இப்பொழுது, நீங்கள் 3ம் அதிகாரத்தை தாண்டி விட்டால் (சபைக்காலங்கள் இவற்றில் அடங்கியுள்ளன). தேவன் திரும்பி வந்து, யூதர்களை சேர்த்துக்கொள்கிறார். அந்தக் காலத்தில் சபையானது இனிமேல் காணப்படவேயில்லை. அது யூதர்களின் காலம். தேவன் யூதர்களோடு, ஒவ்வொரு தனி நபர்களாக காரியமாற்றுவதில்லை.



என்று ஒன்று இருந்திருக்கிறது என்பதாகிவிடும். ஓ! அவ்வாறாக இருக்கவே முடியாது.

193. ஆகவே, இவ்விஷயங்கள் தாமாகவே திறக்கப்படுகையில் அது பின்னால் திரும்பிச் சென்று புத்தகத்தை திறக்கிறது. ஆகவே இப்பொழுது அது முழு வேதாகமத்தில் சரியானதொரு சித் திரத்தை நமக்கு அளிக்கிறது. முத்திரைகளானது, ஞானிகள், கல்வி மான்களுக்கு வேதம் மறைவாக இருக்கும்படி செய்துவிடுகிறது. தேவன் பரிசுத்த ஆவியினாலே இவ்வாறாக அவைகளை திறந்து கொடுத்து, வேதாகமம் முழுவதிலும் இருந்து அவைகளை வெளிப்படுத்துகிறார். தேவனுக்கு மகிமையுண்டாவதாக!

194. சகோதரனே, இவ்விஷயமானது எனது ஆவிக்குரிய அறுசுவை உணவு உண்ணும் தன்மையை தட்டியெழுப்பிவிடுகிறது என்று நான் உங்களுக்கு கூறுகிறேன். இப்பொழுது இங்கே பாருங்கள். அது இவ்வாறு உள்ளது ..... நான் கூறுவதை நீங்கள் புரிந்து கொண்டீர்களா? பாருங்கள், இங்கே ஒரு முத்திரை இருக்கிறது. நீங்கள் கவனித்து இங்கே படித்தால், எரேமியாவின் புத்தகத்திற்கு சென்று அவன் எவ்வாறு முத்திரையிட்டான் என்பதை அங்கே காணுங்கள்.

195. அங்கே அப்புத்தகம் உள்ளது, அங்கே எழுதப்பட்டு இருக்கிறது. முதலாம் வெளிப்படுத்துதலுக்காக உள்ள சரியான நேரத்தில், அவர் இந்த முத்திரையை திறக்கிறார். நாம் முத்திரைகளைப் பற்றி பார்க்கப் போகையில், முதலாம் முத்திரையானது என்ன என்பதை நீங்கள் கவனியுங்கள். பிறகு, இரண்டாம் முத்திரைக்கான வேளையில் அடுத்த முத்திரையை அவர் உடைக்கிறார். நாம் எங்கே இருக்கிறோம் என்பதை நீங்கள் அறிவீர்களா? நாம் இப்பொழுதே ஏறத்தாழ ஏழாம் முத்திரையின் வேளையில் இருக்கிறோம். ஏழாம் ... அந்த வேளையிலே...

196. முதலாம் முத்திரையானது திறக்கப்பட்ட பொழுது, முதலாம் எக்காளமானது முழங்கி, முதலாம் வாதையானது விழுந்தது. ஆறாம் முத்திரை திறக்கப்பட்ட பொழுது, ஆறாம் எக்காளம் முழங்கி, ஆறாம் வாதையும் விழுந்தது. நீங்கள் பார்த்தவைகளி லெல்லாம் மிகவும் அழகான விஷயமாக இது இருக்கிறது என்பதை கவனியுங்கள். நான் இதைப்பற்றி போதிக்கப் போகையில், நான் அதற்கென பெரிய கரும்பலகை ஒன்றைக் கொண்டு வந்து, அதன் மூலமாக இவைகளைக் குறித்து போதிக்கப் போகிறேன். அதற்கென ஏராளமான நேரத்தை நாம் ஒவ்வொரு முத்திரையின் பேரிலும் எடுத்துக்கொண்டு,

முத்திரையிட்டு வைத்தான். நீங்கள் கண்டுள்ள எல்லாவற்றிலும் மிகவும் தலைசிறந்த விஷயமாக இது இருக்கிறது.

190. இந்த துண்டுக் காகிதத்தை கொண்டு நான் உங்களுக்கு இதை விளக்கப் போகிறேன். என்னால் அதை சரியாக செய்ய முடியுமோ, முடியாதோ, எனக்கு தெரியாது. இந்த விதமாகத்தான் அது முத்திரையிடப்பட்டிருந்தது. அவன் ஒவ்வொன்றையும் இவ்விதமாகத் தான் செய்து முத்திரையிட்டிருந்தான். முத்திரைகள் ஒவ்வொன்றி லும் என்ன சம்பவித்தது என்று அவனுடைய சுதந்திரத்தைப் பற்றி எழுதுகையில் குறிக்கப்பட்டிருந்தது, என்ன சம்பவித்தது, அவனுக்கு முன்பாக யாரெல்லாம் இருந்தார்கள், மரித்தார்கள் என்பதைப் பற்றியும், எவ்வாறு அவன் தன் வரிசையில் அதை சுதந்தரிக்க உரிமை பெற்றான் என்பதைப் பற்றியெல்லாம் எழுதப் பட்டது. அது யாவும் அந்த விதமாகத்தான் முத்திரையிடப் பட்டிருந்தது.

191. இப்பொழுது தேவனும் அந்த விதமாகத்தான் தனது ஏழு முத்திரைகளால் முத்திரையிடப்பட்ட புத்தகத்தை கொண்டிருந்தார். அவர் அதை உடைத்த பொழுது, ஆதியோடந்தமான அனைத் தையும் பற்றிய வெளிப்படுத்தல் அங்கே வந்து புத்தகத்தின் பின்பக்கம் வரையிலும் போகிறது. எனவேதான் நீங்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தைப் பற்றிய வெளிப்பாட்டை எடுத்துக் கொண்டு, அதை ஆதியாகமம் முதற்கொண்டு, வெளிப்படுத்தின விசேஷம் வரையிலும் எங்கும் இருக்கக் கண்டு, "பிதா குமாரன் பரிசுத்த ஆவி" என்ற ஒன்று இல்லவே இல்லை என்பதை நிரூபிக்க லாம். அது வேதம் முழுவதிலும் காணப்பட்டு, அதை வெளிப் படுத்துகிறது.

192. "நித்தியமானதொரு நரகம் உண்டு' என்று சொல்லப்படுகிறதைப் பற்றி எடுத்துக் கொள்வோம். அதைப் பற்றி வேதம் பூராவிலும் ஆராய்ந்து பார்க்கையில், நித்தியமான நரகம் ஒன்று உண்டு என்கிற விஷயமே அங்கே இருக்கவில்லை. ஏனெனில் ஆதியில் தேவன், பிசாசுக்காகவும் அவனுடைய தூதர்களுக்காகவுமே நரகமானது, அவர்களுடைய எதிர்கால தண்டனைக்காக சிருஷ்டிக்கப்பட்டது என்று கூறியுள்ளார். நரகம் நித்தியமானது என்றாகிவிட்டால் அது எவ்வாறு சிருஷ்டிக்கப்படமுடியும்? சிருஷ்டிப்பு என்ற வார்த்தையானது... ''நித்தியம் என்ற வார்த் தைக்கு , " துவக்கம் இல்லாததும், முடிவடையாததுமான'' என்று பொருளாகும். நரகம், நித்திய நரகம் என்பதாக இருந்தால், தேவன் நித்தியமாக இருக்கிறே அதே வேளையில் நரகமும் இருந்து கொண்டுதான் இருக்கிறது என்றும், பாவம் என்று ஒன்று இருப்ப தற்கு முன்பாகவே அப்பொழுது நரகம்



அவர் இஸ்ரவேலரோடு, எப்பொழுதும் ஒரு ஒட்டுமொத்த ஜாதியாகத்தான் பார்த்து காரியமாற்றுகிறார்.

27.அன்றொரு நாள், அதைப்பற்றி ஒருவருக்கு கேள்வியுண்டாயிற்று. ''கலப்படமான மார்க்கம்'' என்ற தலைப்பில் நான் பிரசங்கித்த போது (உரைக்கப்பட்ட வார்த்தை வால்யூம் 2, எண்.13- ஆசி.) நான் குறிப்பிட்ட ஒன்றின் பேரில் எனக்கு ஏராளமான கடிதங்கள் வந்துள்ளன. வேதமானது முறை தவறிப்பிறந்த குழந்தை, அதாவது வேசிப்பிள்ளை, கர்த்தருடைய சபையில் பத்து தலை முறைகளுக்கு பிரவேசிக்கலாகாது என்று கூறப்பட்டுள்ளதைக் குறித்து நான் அச்செய்தியில் குறிப்பிட்டிருந்தேன். பத்து தலை முறையென்றால், 400 ஆண்டுக்காலமாகும்; அவ்வளவு காலத்திற்கு முறைதவறிப் பிறந்த குழந்தையும் அதன் தலைமுறையினரும்,

கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது. கலப்படமாய் பிறத்தல் அவ்வளவு மோசமான விளைவை உண்டாக்குகிறது. ஒரு குழந்தையானது, அதன் தாய், தன் புருஷனோடு சேராமல் அந்நிய புருஷனோடு சேர்வதினால் உண்டாகிப் பிறந்ததாய் இருக்குமானால், அதுவே கலப்படமாய்ப் பிறந்த குழந்தையாகும். அக்குழந்தை தன் தகப்பனாயிருக்க வேண்டியவருக்குப் பிறக்காமல், தன் தாய் அந்நிய புருஷனோடு சேர்ந்ததினால் பிறந்ததாயிருக்கும். பாருங்கள்?அது தேவனுக்கு முன்பாக மிகுந்த தீமையானதாக இருந்தது. தேவனுக்கு முன்பாக சரியான வித்து மீண்டும் தோன்றிட பத்து தலைமுறைக்காலம் கடந்து செல்லவேண்டியுள்ளது.

ஆனால் அது இந்தக்காலத்திற்கு பொருந்து வதாயிருக்காது. இப்பொழுது உங்களுக்கு புதிய பிறப்பு உண்டாயிருக்கிறது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் அவர்களுக்கு ஒரே பிறப்புதான் உண்டாயிருந்தது. அதுவும் இனச் சேர்க்கையினால் பிறப்பிக்கப் பட்டவையாயிருந்தது. இப்பொழுது நமக்கு புதிய பிறப்பு உண்டாயிருக்கிறது. அது ஆவிக்குரியதாயுள்ளது, அது தானே தெரிந்தெடுக்கப் பட்டவர்களை பிறப்பிக்கிறது. நாம் கிறிஸ்து இயேசுவிலே, தேவனுடைய ஆவியினால் மறுபடியும் பிறந்த புதிய சிருஷ்டிகளாயிருக்கிறோம். புதிய சிருஷ்டிகள்! இந்த சிருஷ்டி என்ற வார்த்தையை இங்கேயுள்ள நல்ல கல்விமான்களாயிருக்கிறவர்கள் புரிந்து கொள்வீர்கள். நீங்கள் அதைப்பற்றி கவனிக்க வில்லையெனில், அதைப் பற்றிப் பாருங்கள். சிருஷ்டி என்ற வார்த்தை கிரேக்க மொழியில் 'ஒரு புதிய சிருஷ்டி' என்ற வார்த்தையிலிருந்து வருகிறது.

ஓ, நீங்கள் இவ்வுலகில் இனச்சேர்க்கையினால் பிறந்து மாம்சத்தில் இருக்கையிலேயே, விண்ணுக்குரிய பிரகாரமாக ஒரு புதிய சிருஷ்டியாகவும் பிறந்தவர்களாயிருக்கிறீர்கள். ஒரு புதிய மனிதனை சிருஷ்டிக்கும் தேவனுடைய புதிய படைப்பாக அது இருக்கிறது. புதிய சிருஷ்டி என்பது ஒரு பிறப்பாகும். மாம்சத்தில் பிறப்பதற்கு பிறப்பு எப்படி அவசியமோ, அவ்வாறே, ஆவிக்குரிய பிறப்பும் இருக்க வேண்டும். மாம்சத்தின் பிறப்பைப் போலவே, ஆவிக்குரிய பிறப்பும் அவசியமாயிருக்கிறது.

28.விவாகம் செய்து கொள்ளும் ஒரு இளம் தம்பதிகள், மணந்து கொண்டு ஒருவேளை இப்படிக் கூறலாம்: "எங்களுடைய முதல் மகனுக்கு 'யோவான்' என்று பெயரிட்டு அழைக்கப் போகிறோம்" என்று அவன் பிறக்கவேயில்லையென்றால், யோவான் என்பவன் அங்கே இல்லவேயில்லை

அதேவிதமாகத் தான்... நீங்கள் ஒரு வேளை... பரலோகத்தைப் பற்றி உங்களுக்கு பல்வேறு புராண கட்டுக் கதையின்படியான அநேக கருத்துக்கள் இருக்கக்கூடும். அது எவ்வளவு பெரிதாக இருந்தாலும், நீங்கள் மறுபடியும் பிறக்காவிடில், நீங்கள் அங்கே இருக்க மாட்டீர்கள். அதுதான் சரி, பாருங்கள். அந்த விதமாகத்தான் அது இருக்க வேண்டும். ஏனெனில், அது பிறப்பின் வழியாகத் தான் சாத்தியமாகும். தேவன் தமது பிரமாணங்களை விதித்துள்ளார். எனவே யாவும் அவருடைய பிரமாணங்களின்படி தான் நடைபெற வேண்டும்.

29.இப்பொழுது, இவர்களில், யூதர்களில் மீதியாயிப்பவர்கள் இரட்சிக்கப்பட வேண்டும். நாம் முதலில் அவர்களைப் பற்றி எடுத்துக் கொள்ளப் போகிறோம். ஏனெனில் அது வைக்கப்பட்டுள்ள இடம்... எப்பொழுதும் அங்கே மூன்று விதமான மக்கள் எல்லாக் காலத்திலும் தொடர்ந்து இருந்து கொண்டேயிருக்கிறார்கள். அதை மனதில் பதித்து வைத்திருங்கள். அவையாவன: விசுவாசி, விசுவாசியாக நடித்துக்காட்டுபவன், அவிசுவாசி. அந்த விதமான மூன்று வகுப்பார். நமக்கு தருணம் அளிக்கும் பொருட்டு தள்ளிவிடப் பட்ட யூதன் இருக்கிறான், அனலுமின்றி, குளிருமின்றி வெதுவெதுப்பாயுள்ள சபை உள்ளது, மற்றும் ஆவியால் நிரப்பப்பெற்றுள்ள சபையும் உள்ளது.

30.ஒரு சமயம், சார்லி பொஹேனென் என்பவர், நான் பணிபுரிந்த பப்ளிக் சர்வீஸ் கம்பெனியின் தென் மாவட்டங்களின் தலைவராக அல்லது, கண் காணிப்பாளராக இருந்து வந்தார். நான் ஒரு வாலிபனாக இருந்த அக்காலத்தில், வேதவாக்கியங்களைப் படித்துக்



எரேமியாவின் புத்தகத்தில் புத்தகச் சுருள் என்பது என்ன என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும்படி நான் அதை எடுத்துக்கொள்வேன். எப்படியும் நாம் அப்புத்தகச் சுருளைக் குறித்துப் பார்ப்போம். புத்தகச் சுருளைக் குறித்துப் கூறுவதற்கு எனக்கு இன்னும் பத்து நிமிடங்கள் பிடிக்கும். இப்புத்தகமானது முத்திரையிடப்பட்டிருந்தது என்பதை நீங்கள் நினைவில் வைத்திருக்கிறீர்கள். வேதாகம நாட்களில் ஒரு புத்தகம் என்னப்படுவது இக்காலத்தில் உள்ளதைப் போல நான்கு மூலைகள் கொண்ட ஒன்றல்ல. இவ்வாறாக அது இருக்கும். அது புத்தகம் என அழைக்கப்பட்டது. அது ஒரு புத்தகச் சுருள் ஆகும். அதை எத்தனை பேர் அறிவீர்கள்? நிச்சயமாகவே அது ஒரு புத்தகச் சுருளாக இருந்தது.

187. இப்பொழுது இப்புத்தகமானது ஏழு முத்திரைகளால் முத்திரையிடப்பட்டிருந்தது. அது வேதாகமமாக இருந்தது. அது ஏழு முத்திரைகளால் முத்திரையிடப்பட்டிருந்தது. அது எவ்வாறு செய்யப்பட்டிருந்தது என்பதை கவனியுங்கள்.

188. எரேமியா தீர்க்கதரிசனம் உரைத்தபொழுது அவன், தானுங் கூட சிறைப்பிடித்துச் செல்லப்படப்போவதாக கூறினான். எரேமியா 32ம் அதிகாரம். அவனுங்கூட பாபிலோனுக்கு சிறைப் பிடிக்கப்பட்டு போவதற்கு இருந்தான்; அவர்கள் சிறையிருப்பில் எழுபது ஆண்டுகள் இருப்பதற்கு என்று இருந்தார்கள். அதைப் பற்றி அவன் தீர்க்கதரிசனம் உரைத்தான். வேதத்தை வாசித்திருக்கிறவர்களாகிய நீங்கள் அதைப்பற்றி அநேக சமயங்களில் படித்திருக்கிறீர்கள். அவன் அங்கே எழுபது ஆண்டுக்காலம் இருக்கும்படி கொண்டு போகப்பட இருந்தான். எரேமியா தன் பெரிய தகப்பன் மகனாகிய அனாமயேலுக்கு மிக நெருங்கின இனத் தானாக இருந்தான். அவன் மரித்துப் போய்விட்டான். அவன் தன் சுதந்திரத்தின் உரிமை பற்றிய தஸ்தாவேஜுகளை சத்துருவானவன் எடுத்துக்கொண்டு விடுவான் என்றும், ஆனால், தேவன் தன் ஜனங்களை கைவிடமாட்டார் என்றும், கைப்பற்றி கொண்டு விடுவான் என்றும், அறிந்திருந்தான். எனவே அவர்கள் திரும்பி வரும்பொழுது, அந்த சுதந்திரத்தின் பேரில் சட்டப்பபடியான சொந்தக்காரனாக அதை பெற்றுக்கொள்ள முடியும் என்று கருதி அவன் இந்தக் காரியத்தைச் செய்தான். அவன் எல்லாவற்றையும் அதில் எழுதி வைத்துவிட்டான்.

189. எத்தனை பேர்கள் அதை படித்திருக்கிறீர்கள்? நல்லது, நீங்கள் அதைப் பற்றி படித்திருக்கிறீர்கள். இந்த புத்தகச் சுருள்கள் முத்தியிரையிடப்பட்ட விதமாகவே அவன் அதை எழுதி எடுத்து

மக்களுடைய கண்களுக்கு மறை வாக முத்திரையிடப்பட்டிருக்கின்றன என்பதை உங்களுக்கு நிரூபித்திடுவோம். தேவன் என்னுடைய துணையு மானவராக இருப்பதினால் அவர்களால் அதைப்பற்றி வேதத்தின் மூலமாக காண முடியவில்லை என்பதையும், இந்த வேளை வரையிலும், 'பிதா குமாரன் பரிசுத்த ஆவி'' என்பதைத் தவிர வேறோன்றையும் பார்க்க முடியவில்லை என்பதையும் நிரூபிக்க முடியும். இந்த வேளை வரையிலும் அவர்களால் நித்திய நரகம் என்று ஒன்று இல்லை என்பதை காண முடியவில்லை. உண்மையான விசுவாசிக்கு நித்திய பாதுகாப்பு என்பதைப் பற்றி அவர்களால் காண முடியவில்லை.

183. அதைப் பற்றி எப்பொழுதும் பரியாசமானது இருந்து வந்திருக்கிறது. அது அவர்கள் உண்டாக்குகிற விளங்காத சத்தமாயிருக் கிறது. அக்காரணத்தினால் தான் மக்கள்... அவர்கள், 'அந்த ப்ரெஸ்பிடேரியன்களைப் பாருங்களேன், அவர்கள் புகைக்கின்றனர், மது அருந்துகின்றனர். இன்ன பிற காரியங்களை யெல்லாம் அவர்கள் செய்து விட்டு தங்களுக்கு நித்திய பாதுகாப்பு இருக்கிறது என்று கூறுகின்றனர்'' என்று கூறுகிறார்கள். அதெல்லாம் சரிதான். ஆனால் இவ்வாறு இவர்கள் கூறுவது உண்மையான எக்காளத்தை இல்லா மல் ஆக்குவதற்காக உள்ள முயற்சிதான்.

184. இந்த முத்திரையானது திறக்கப்படுகையில், எக்காளமானது முழங்கி அதினால் நீங்கள் வேதத்தில் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரையிலும், முன்னும் பின்னும் ஒருங்கிணைப்பாக, காரியமானது இசைவாக இருக்கிறதா இல்லையா என்று நாம் பார்ப்போமாக. அப்பொழுது, இக்காரியங்கள் வெளிப்படுத்தப் பட்டுக் கொண்டிருக்கிறது, ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரையிலும்,

185. இப்பொழுது, ஓ, சகோதரனே, நான் நினைத்தேன்..... அடுத்த தடவை நான் இங்கே திரும்பி வருகிற வரையிலும் நான் இதோடு இங்கே நிறுத்திக் கொள்ளுகிறேன், இன்னும் இங்கே ஆறு பக்கக் குறிப்புகள் உள்ளன; இல்லை, ஞானஸ்நான ஆராதனை நடக்கவிருக்கிறது. யூபிலி வருஷத்தைக் குறித்து உள்ள இன்னும் இரண்டு சிறு காரியங்களைக் குறித்து நான் படித்துக் காண்பிப்பேனாக.

186. நீங்கள் யாவரும் வேதவாக்கியங்களை குறித்துக் கொள்ளுகிறீர்களா? எரேமியா 32ம் அதிகாரம் 6ம் வசனத்தில் தொடங்கி... நீங்கள் வாசிக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.



கொண்டிருந்தேன். அப்பொழுது அவர் என்னை அழைத்து, 'பில்லி, பத்மு தீவில் இருந்த யோவான் கொஞ்சம் சிவப்பு மிளகாய் தின்று விட்டு கெட்ட சொப்பனம் கண்டிருக்க வேண்டும்.'' என்றார்.

''மிஸ்டர் பொஹேனென் அவர்களே, நீங்கள் அவ்வாறு சொல்லியிருக்கக் கூடாது' என்றேன். அவர் எனது மேலதிகாரியாக, மேற்பார்வையாளராக இருந்தார்.

''நல்லது, உலகில் யார் தான் அதைப் புரிந்து கொள்ள முடிகிறது?'' என்றார்.

''அது புரிந்து கொள்ளப்பட்டுள்ளது, பரிசுத்த ஆவியானவர் அதை வெளிப்படுத்த ஆயத்தமாயிருக்கும் போது, அது புரிந்து கொள்ளப்படும்'' என்று நான் பதிலளித்தேன். அது தான் சரி.

அவர் கூறினார்: "ஓ, என்னே ! நான் அதைப் படிக்க முயலுகிறேன். எனது மேய்ப்பரும் அதை படிக்க முயலுகிறார். ஆனால் அதின் பேரில் நாங்கள் மோசமானதொரு குழப்பத்துக்கு தான் வரவேண்டியுள்ளது என்றார். அவர் மேலும், சீனாய் மலையின் மேல் மணவாட்டி நிற்க நாம் காண்கிறோம். அதன் பிறகு, மணவாட்டிக்கெதிராக வலுசர்ப்பமானது தன் வாயிலிருந்து வெள்ளத்தை அனுப்புகிறது. மீதியாயிருக்கிற ஸ்திரீயின் வித்தோடு அது யுத்தம் பண்ணப்போகிறது. பின்பு மணவாட்டி பரலோகத்திலும் இருக்கிறாள். ஒரே வேளையில் மூன்று காரியங்கள் நடை பெறுகின்றன'' என்று கூறினார்.

''அது ஆவிக்குரிய பிரகாரமான அறிவு இல்லாதிருப்பதினால் தான்'' என்று பதிலளித்தேன்.

"நல்லது, அவர்கள் ஒரே வேளையில் மூன்று இடங்களிலும் காணப்படுகிறார்களே என்று கூறினார்.

நான் அதற்கு, ''ஆம் ஐயா, ஆனால் அவ்விதமாக அவர்கள் அங்கே இடம் பெற்றிருக்கவில்லை. பாருங்கள், நீங்கள் அந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரை மணவாட்டி என்று அழைத்தீர்கள். ஆனால் அவர்கள் மணவாட்டியல்ல, அவர்கள் யூதர்களாவர். வலுசர்ப்பமானது எவர்களுக்கெதிராக யுத்தம் பண்ணும்படி தன் வாயிலிருந்து வெள்ளத்தை ஊற்றினதோ, அவர்கள் தான் மீதியாயிருக்கிற , மீதியாக வைக்கப்பட்டுள்ள ஸ்திரீயின் வித்தானவர்கள். அவர்கள் கற்பனைகளைக் கைக் கொள்ளுகிறவர்களும், இயேசுவின் சாட்சியை உடையவர்களுமாவர். மணவாட்டியோ மகிமையில் இருக்கிறாள்" என்று பதிலளித்தேன். கவனித்தீர்களா?

வெளிப்படுத்தின விசேஷம் 14ம் அதிகாரத்திலுள்ள இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்கள் சீனாய் மலையின் மேல் நிற்கிறார்கள். அது சரியாக அப்படியே உண்மையாயிருக்கிறது. தங்கள் பிதாவின் நாமத்தை தங்கள் நெற்றியில் கொண்டவர்களாக அவர்கள் இருந்தார்கள். அது சரிதான் அவர்கள் யூதர்கள் யூதர்களில் மீதியாயிருப்பவர்கள்.

31.அதன் பிறகு, இங்கே வலுசர்ப்பமானது வருகிறது. அது ரோம் குருக்களாட்சியாகும். அப்பொழுது ஏற்கனவே சபையானது எடுத்துக் கொள்ளப்பட்டு, மகிமையில், அங்கே மூன்றரை ஆண்டுகள் கலியாண விருந்தில் இருக்கிறது. அதன் பிறகு வலுசர்ப்பம் வருகிறது. வலுசர்ப்பம் எப்பொழுதும் ரோமாபுரியையே குறிக்கிறது. அது சிவப்பான வலுசர்ப்பமாகும்.

அது அது தான் என்பதை உங்களுக்கு உறுதிப்படுத்தும்படி, வெளிப்படுத்தின விசேஷம் 12ம் அதிகாரத்தில், வலுசர்ப்பமானது ஸ்திரீயின் மேல் கோபமடைந்திருந்தது. அந்த ஸ்திரீயானவள் சகல ஜாதிகளையும் இருப்புக் கோலால் அரசாளும் ஆண்பிள்ளையை பெற்றெடுக்கவிருந்தாள். வலுசர்ப்பமானது தன் வாயிலிருந்து வெள்ளத்தை ஊற்றிவிட்டு, ஸ்திரீயின் வித்தாயிருக்கிற மீதியாயிருக்கிறவர்களோடு யுத்தம் பண்ணப்போனது. ஆனால் இந்த சிவப்பான வலுசர்ப்பமானது,

முதலில் இந்த ஸ்திரீக்கு முன்பாக நின்றது. ஸ்திரீயானவள் இந்தக் குழந்தையை பெற்று எடுத்தவுடனேயே, அக்குழந்தையை பட்சிக்கும்படி அது ஆயத்தமாக நின்றது. இஸ்ரவேல் என்ற ஸ்திரீயாகிய இஸ்ரவேல் சபைக்கு முன்பாக அவள் பெற்றெடுக்கப் போகும் குழந்தையாகிய இயேசுவை பட்சிக்கும்படி நின்றது யார்? ரோமாபுரிதான் அது, ஏரோது இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளையெல்லாம் கொன்று போடும்படி உத்தரவு பிறப்பித்தான்.

அதன்படி அத்தேசம் முழுவதிலும் எபிரெயக் குழந்தைகளை யெல்லாம் வெட்டிக்கொலை செய்தார்கள். அவ்வாறே இயேசுவுக்கு முன்னடையாளமாயிருந்த மோசேயையும் பிடித்துக் கொலை செய்ய பார்வோன் முயன்றான். அவன் குழந்தைகளையும் கொன்றான். ஆனால் மோசேயை அவனால் பிடிக்க முடியவில்லை. ஓ - ஓ - ஓ, தேவன் அவர்களை எவ்வாறு மறைப்பது என்பதை அறிவார்!



இறங்கி வந்து, அதினால் சபையானது தனது இரட்சிப்பின் அச்சாரத்தைப் பெற்றுக்கொண்டது.

179. இப்பொழுது, சகோதரனே, இப்பொழுது நான் சொல்லப் போவது, உமது உணர்வுகளைப் புண்படுத்துவதற்காக அல்ல. உமக்கு ஸ்தாபனமானது சரியென்று இருந்து, நீர் ஸ்தாபன ரீதியாக கத்தோலிக்கராகவோ, பாப்டிஸ்ட்டாகவோ, இருப்பீராயின், நீர் இழந்து போகப்படுவீர். நமது இரட்சிப்பின் அச்சாரமானது ஒரு சபையில் சேருதல் என்பதாக அல்ல. ஒரு ஸ்தாபனத்தை சேர்ந்தவனாக இருப்பது, நமது இரட்சண்யத்தின் அச்சாரம் அல்ல. நமது இரட்சண்யத்தின் அச்சாரம் என்பது, எந்தவொரு ஸ்தாபனத்தையும் சேராமல், பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானத்தைப் பெறுதலே ஆகும். ஆமென்.

180. அந்த ஐம்பதாவது நாள் முடிந்தபிறகு, அதற்கப்பால் அதை வைத்திருக்க அவர்களால் முடியாது. ஏனெனில், அந்நாள் தான் யூபிலி ஆகும். அந்நாளில் தான் யாவும் அதன் ஆதி நிலைக்கு திரும்பிச் சென்றது. தேவனுடைய வல்லமையானது அந்த ஐம்ப தாவது நாளிலே, யூபிலி ஆண்டிலே, யாவும் அதன் ஆதி நிலைக்கு திரும்பிச் சென்றபோது, திரும்பக் கொடுக்கப்பட்டது.

181. இன்னொரு யூபிலி ஆண்டு வரப்போகிறது. அதை நாம் கிட்டத்தட்ட இந்த வேளையில் பெற்றிருக்கிறோம். நீங்கள் கவனித் தீர்களானால், பெந்தெகொஸ்தேயானது கிட்டத்தட்ட ஐம்பது ஆண்டுக்காலமாக விழுந்து கொண்டிருக்கிறது என்பதை அறியலாம். ஏறத்தாழ அந்த வேளையில் தான் அது இருக்கிறது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பாக பெந்தெகொஸ்தேயானது விழ ஆரம்பித்தது. இப்பொழுது என்ன சம்பவித்துக் கொண்டிருக்கிறது? சபையானது இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதலாகிய ஏழு முத்திரைகளால் முத்திரையிடப்பட்டுள்ள புத்தகத்தை பெற்றுக்கொண்டிருக்கிறது. அவர்களில் பத்தில் ஒரு பங்கினர் கூட அதைப்பெற்றுக் கொள்ள முடியாது.

182. ஆனால் நீங்கள் யூபிலி வருஷத்தை காண ஆரம்பிக்கும் பொழுது, அங்கே நாம் வெற்றுப் பகட்டு ஆரவாரம் செய்யவோ, நமக்கு சிரமமோ இல்லை, ஆனால் நாம் ஏற்கெனவே கிறிஸ்துவிலே பாதுகாக்கப்பட்டிருக்கிறோம். ஞானஸ்நானத்தில் நமக்கு ஏற் கெனவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமம் கிடைத்திருக்கிறது. இந்த ஏழு முத்திரைகளில் நாம் எடுத்துக்காண்பிக்கப்போகிற இம்மகத்தான இரகசியங்கள் யாவும் நாம் பெற்றிருக்கிறோம். இம்முத்திரைகள் தான்

இறங்கி வந்து (அல்லேலூயா!) அது ஸ்தாபன மல்ல என்பதைக் காண்பித்தார். அதுதானே பரிசுத்த ஆவியின் நிறைவாகும் என்று காண்பித்தார். அதுதானே தமது சபைக்கு அளிக்கப்பட்ட அச்சாரமான பணம் என்றும், அது ஸ்தாபனத்தால் கட்டுப்படுத்தப்படாது என்றும், அதுதானே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் அச்சாரமான பணமாக, தேவனுடைய வல்லமையோடும், அன்போடும் உள்ளதாக இருக்கிறது என்றும் காண்பித்தார். ஆமென்! ஓ, அது உங்களுக்கு ஒரு காரியத்தைச் செய்யவில்லையா? சட்டப்படியான சுதந்தரவாளி. அது யாருடைய கைகளில் இருந்தது? தேவனுடைய கரங்களில் இருந்தது.

176. அவன் அதை ஐம்பது நாட்களுக்கு வைத்திருக்க முடியாது என்பதைப் பாருங்கள். அதைப்பற்றி நீங்கள் லேவியராகமத்தில் வாசிக்கிறீர்கள். லேவியராகமத்தில் உள்ள பிரமாணங்களில் வாசிக்கிறீர்கள். ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு சுதந்தரமானது அதனுடைய மூல சொந்தக்காரனிடத்தில் அது திரும்பிச் சென்றிட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. நாம் யாவரும் அதை அறிவோம். ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு காணி யாட்சியின் ஆதி சொந்தகாரனிடத்தில் அது திரும்பிப் போக போக வேண்டும் என்பதைப் பற்றி நீங்கள் அநேக சமயங்களில் படித்திருக்கிறீர்கள்.

177. இந்த ஐம்பது நாள் - வருடங்களுக்குப் பிறகு, ஒரு வருடமானது .... ஒருநாள் ஒரு வருடத்திற்கு சமம். அவர்கள் இந்த இனத்தான் மீட்பரைப் பிடித்து பண்டிகையன்று கொன்ற பொழுது, அந்த நாள் முதற்கொண்டு, சர்ச்சை உண்டாயிருந்தது. அவர் இனத்தான் மீட்பர் என்று சபையானது அது வரையிலும் நம்பி வந்தது. "அவரே மீட்பர்'' என்று நம்பியது. அதன்பிறகு அது என்ன செய்தது? எதிராளியானவன் அவரைக் கொன்று போட்டு விட்டு, அவர்கள் அவரது சரீரத்தை எங்கோ ஒளித்து வைத்து விட்டார்கள் என்று கூறினான். பிறகு என்ன நடந்தது? என்ன சம்பிவித்தது?'' என்று மக்கள் மனதில் ஐயங்கள் எழும்பியது.

178. இப்பொழுது ஐம்பதாவது நாளிலே, இனி முதற் கொண்டு அது சர்ச்சைக்குரிய விஷயமாக இருக்கவேயில்லை என்பதை நீங்கள் பாருங்கள். அப்பொழுது தேவன்.... அவர்கள் பழைய வைதீகமான, குளிர்ந்து போன சபையோடு ஒத்துப் போய்விட மனதா யிருந்தனர். தேவன் பரிசுத்த ஆவியை திரும்ப அனுப்பினார். அப்பொழுது, அது சுதந்திரத்தில் உட்கார்ந்து ஆக்ரமித்துக் கொண்டிருந்தவர் களையெல்லாம் துரத்தியடித்துவிட்டு, அதை தன் கைவசப்படுத்திக்கொண்டது. பரிசுத்த ஆவியின் வல்லமையானது



32.நீங்கள் மறைக்கப்பட்டருக்கிற படியினால் மகிழ்ச்சியடை யவில்லையா? ஓ! மறைந்து கொள்வதற்கான ஒரு ஸ்தலம் உண்டு.

வேதம் கூறுகிறது: ''நீங்களும் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாக எண்ணிக் கொள்ளுங்கள். கிறிஸ்துவுக்குள் உங்கள் ஜீவன் மறைந்திருக்கிறது, பரிசுத்த ஆவியினால் நீங்கள் முத்திரையிடப் பட்டிருக்கிறீர்கள்'' என்று. நீங்கள் கிறிஸ்துவுக்குள் மறைந்திருக்கிறீர்கள். நீங்கள் உங்களை மரித்தவர்களாக எண்ணிக் கொள்ளுங்கள். பிசாசு தேடினாலும் உங்களை கண்டுபிடிக்க அவனால் முடியாது. பாருங்கள்? உங்களுடைய ஜீவியங்கள் கிறிஸ்துவுக்குள் மறைக்கப்பட்டு இருக்கின்றன. கிறிஸ்துவின் மூலமாக தேவனுக்குள் அது மறைந்திருக்கிறது. மேலும் அது பரிசுத்த ஆவியினால் முத்திரையிடப்பட்டும் உள்ளது.

33.இப்பொழுது, இந்த மீதியாயிருப்பவர்களான இவர்கள், நித்திரை செய்யும் கன்னியராவர், இவர்களோடு யுத்தம் பண்ணும்படி தான் வலுவர்ப்பமானது தன் வாயிலிருந்து வெள்ளத்தை அவர்களுக்கு பின்னாக ஊற்றிவிட்டான். இவர்கள் ஸ்திரீயின் வித்தாகிய மீதியாயிருக்கிறவர்கள் ஆவர். மீதியாயிருக்கிறவர்கள் என்பவர் யார்? இங்கே தான் நீங்கள் இந்த சாயல்களை ஒன்று சேர்த்துப் பார்க்க வேண்டும்.

மாம்சத்தின்படியான ஒரு சபையானது இருக்கிறது. அதை நான் இங்கே வரைந்து இன்னும் கொஞ்சம் தெளிவாக்கிட விரும்புகிறேன். இப்பொழுது சகோதரன் நெவில் அவர்களே உங்களுடைய நேரத்தில் கொஞ்சம் நான் எடுத்துக் கொண்டால் அதற்காக என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும். (சகோதரன் நெவில் அவர்கள், ''ஆமென், எனக்கென நேரம் எதுவும் இல்லை ''என்று கூறுகிறார்-ஆசி).

34.அங்கே யார் இருக்கிறார்கள்? அவிசுவாசி. அவர்களை நான் இங்கே யு.பி. என்று எழுதுகிறேன். (கரும்பலகையில் அவிசுவாசிக்கு ஆங்கில வார்த்தையான unbeliever ஐ UB என்று சுருக்கமாக சகோ. பிரான்ஹாம் அவர்கள் குறிப்பிடுகிறார் மொழிபெயர்ப்பாளர்). அது பாவியைக் குறிக்கிறது. அடுத்து, இங்கே இன்னொன்று இருக்கிறது, அது தான் சடங்காச்சாரமான மார்க்கத்தை குறிக்கிறது. அதை நான் "எஃப்ஓ" (FO) என்று குறிப்பிடுகிறேன். அது சடங்காச்சார சபையைக் குறிக்கும். அடுத்து மூன்றாவதாக இரட்சிக்கப்பட்ட சபை இருக்கிறது. அதை "எஸ்ஏ'' (SA) என்று குறிப்பிடுகிறேன். அது இரட்சிக்கப்பட்ட சபையாகும். இவையாவற்றையும் எப்பொழுதும் மனதில் பதித்திருங்கள்.

இப்பொழுது இந்த இரட்சிக்கப்பட்ட சபையில் இருசாரார் இருக்கின்றனர். இந்த சபையில் இங்கேயும் இருகிறார்கள். அது கிறிஸ்துவினால், உவமையாக சொல்லப்பட்டது. ஒரு பிரிவார் நித்திரை செய்யும் கன்னியர், இன்னொரு சாரார் தங்கள் விளக்கில் எண்ணெயை உடையவர்களாக இருக்கிறார்கள். இப்பொழுது நீங்கள் யாவரும்... எத்தனை பேர்கள் அந்த உவமையை நினைவில் வைத்திருக்கிறீர்கள்? இன்னும் ஒரு நிமிட நேரத்தில் அதைப் பார்க்கப் போகிறோம்.

35.அதைப் பார்ப்பதற்கு முன்பாக, நாம் வெளிப்படுத்தின விசேஷம் 7-ம் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ள இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்களைப்பற்றி பார்ப்போம். அதனால் நாம் அதை தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். இதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் குறிப்பெடுத்துக் கொள்ளுகிறவர்கள், வெளிப்படுத்தின விசேஷம் 7ம் அதிகாரத்தைக் குறித்துக் கொள்ளுங்கள். நமக்கிருக்கிற நேரத்தை நாம் இதை விளக்குவதற்கென்று எடுத்துக் கொள்வோம். (நீங்கள் ஞானஸ்நானம் கொடுக்கப் போவதில்லையே... ஆராதனை முடிவிலா, நல்லது ) எனது கைக்கடிகாரத்தை நான் இங்கே வைத்திருந்து, நேரத்தை கவனித்து, உரிய நேரத்தில் முடித்து வெளியேறுவோம். ஏறக்குறைய சுமார் 2 மணி நேரம் நமக்கு இருக்கிறது. கர்த்தர் தாமே நமக்கு இப்பாடத்தை கற்றுத்தருவாராக.

“இவைகளுக்குப் பின்பு...”

36.இப்பொழுதும் நாம்... 6ம் அதிகாரம் வெள்ளைக் குதிரையைப் பற்றிப் பேசுகிறது. அது பூமி முழுவதிலும், ஜெயிக்கிறவராகவும் ஜெயிக்கப் போகிறவராகவும் புறப்பட்டுச் செல்கிற பரிசுத்த ஆவியானவர் ஆவார். பின்பு, மங்கின நிறமுள்ள குதிரை வருகிறது. அதை மரணம், பாதாளம் இவை பின் தொடர்ந்தது. இவ்விதமாக ஒவ்வொரு குதிரைகளிலும் ஏறியிருக்கிறவர்கள் கடந்து சென்றார்கள்.

''இவைகளுக்குப் பின்பு என்றால், இந்த பெரிய அழிவிற்குப் பிறகு என்பதாகும். முதலாவதாக பரிசுத்த ஆவியானவர், ஜெயிக்கிறவராகவும், ஜெயிக்கப் போகிறவராகவும் பூமி முழுவதிலும் கடந்து செல்கிறார். அதன் பிறகு வருவது, மிகப் பெரிய பஞ்சகாலத்தில் உள்ளதாகும். “ஒரு பணத்துக்கு ஒருபடி கோதுமையென்றும், ஒரு பணத்துக்கு மூன்றுபடி வாற்கோதுமை யென்றும், எண்ணெயையும்



முடியாது. ஐம்பது ஆண்டுகளுக்கு பிறகு, அதாவது யூபிலி ஆண்டாகிய ஐம்பதாவது வரும்பொழுது, அனைத்தும் அவை தாம் முன்பிருந்த ஆதி நிலைக்கு திரும்பிப் போய்விடும். அடிமைகள் யாவரும் தங்களுடைய ஆதி சுயாதீன நிலைக்கு திரும்பிப் போயினர். ஒரு மனிதன் வயலில் மண்ணை வெட்டிக் கொத்திக் கொண்டிருக்கையில், அவன் எக்காளம் ஊதுகிற சத்தத்தை கேட்கையில், அவன் மண்வெட்டியை எறிந்து விட்டு, ''நான் இனிமுதற்கொண்டு ஒரு அடிமையல்ல, நான் என் வீட்டிற்கு என் குடும்பத்தினிடம் திரும்பிச் செல்லுகிறேன்'' என்று கூறுவான். யாவும் திரும்ப அளிக்கப்பட்டன. ஒரு மனிதன் இன்னொருவன் நிலத்தில் அத்துமீறி பிரவேசித்து வசித்து வந்தால், அவன் அங்கிருந்து அகன்றிட வேண்டும். அவன் அவ்விடத்தை காலி செய்தாக வேண்டும். ஏன்? ஏனெனில் சட்டப்படியாக உரிமைக்காரன் திரும்ப வருகிறான். எனவே இவன் விட்டுக் கொடுத்தாக வேண்டும்.

172. அல்லேலூயா! இந்நாட்களில் ஒன்றில், இவ்வுலகின் இராஜ்ஜியங்கள் வீழ்ந்துவிடும், இந்நாட்களில் ஒன்றில், இதன் சட்டப்படியான சொந்தக்காரர்கள் வந்திடுவார்கள். ஆமென்.

173. அது சச்சரவுக்குரியதாக இருந்த ஒரு வேளை உண்டாயிருந்தது. நாற்பதாவது நாள் வரையிலும், அதாவது பரிசுத்த ஸ்தலத்தின் சுத்திகரித்தலின் முதலாம் நாள் தொடக்கம், அல்லது கிறிஸ்து கல்வாரிக்குச் சென்ற நாள் தொடக்கம், கிறிஸ்து பரத்துக்கு ஏறுகிறவரையிலும் நாற்பது நாட்கள் உண்டாயிருந்தது. சாத்தானின் குழுவினர் அதைக் கைவசப்படுத்திக் கொள்வார்களோ என்ற விவாதம் உண்டாயிருந்தது. அவர்கள் அவர் மரித்தோரிலிருந்து எழும்பவில்லை என்று கூறினர். இவ்விதமான ஒரு செய்தியை அறிவிக்கச் செய்தனர்; அதாவது “அவருடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து அவரைக் களவாய்க் கொண்டு போய் விட்டார்கள்'' என்று கூறினார்கள். நீங்கள் அதைப் பற்றி வேதத்தில் வாசித்திருக்கிறீர்கள். ''அவருடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து அவரை களவாய்க் கொண்டு போய்விட்டார்கள்'' என்று சொன்னார்கள். இவ்வாறு கூறும்படி போர்ச்சேவகர்களுக்கு அவர்கள் பணம் கொடுத்தார்கள். ஆனால் அது அப்பொழுது கேள்விக்குரியதாக இருந்தது.

174. "நல்லது, உண்மையிலேயே அது ஸ்தாபனத்திற்கு சொந்தமாக ஆகிறது. யாவும் அதற்கே சொந்தம் ஆகிவிடும்'' என்று கூறினார்கள்.

175. ஆனால் ஐம்பதாவது நாளிலே, அது பெந்தெகொஸ்தே என்னும் நாளாகும். சட்டப்படியான உரிமைக்காரனானவர் அவர்கள் மத்தியில்

பெற்றார். அதை நமக்கு திரும்ப அளிக்க வேண்டும், அதன் பிறகு, அவர் இருந்தபடியே இருப்பதற்கு திரும்பிப் போகிறார்.

168. பிறகு, அவர் தேவ குமாரன் என்ற ரீதியில் எல்லாவற்றை யும் அவர் சுதந்தரித்துக் கொள்ளுகிறார். ஆபிரகாமின் குமாரன் என்ற முறையில் அவரே ராஜரீக ஆஸ்தியுரிமைக்கு வாரிசாக இருக் கிறார். மனுஷகுமாரன் என்ற வகையில், அவர் பூமிக்கு உரிமைக் காரனாக இருக்கிறார். தேவகுமாரன் என்ற அளவில் அவர் வானத்திலும் பூமியிலும் உள்ள எல்லாவற்றின் பேரிலும் உரிமையுடையவராக இருக்கிறார். ஓ! அவரே நமது மீட்பர், நமது இனத் தான் மீட்பர் அவர்.

169. இப்பொழுது கவனியுங்கள். இது எனக்கு மிகவும் நன்றாக இருக்கிறது. இதன்பேரில் தான் எனக்கு நல்ல போஷிப்பு உண்டாயிருக்கிறது. இப்பொழுது உங்களது இருதயங்கள் சில நிமிட நேரம் தேவனுக்கென்று இளகியதாக இருக்கட்டும். இதற்கு செவிகொடுங்கள்.

170. சாத்தானானவன் சட்டவிரோதமாக அத்துமீறி பிறருடைய சுதந்திரத்தில் பிரவேசித்து அதை கைப்பற்றிக் கொள்பவன். அவன் இதை சட்டப்படியாக உரிமை கொண்டிருக்கவில்லை. அவன் அதை சொந்தமாகக் கொண்டிருந்தானா அல்லது வேறு எவருமோ சொந்தமாகக் கொண்டிருந்தார்களோ என்பதைப் பற்றி, கடந்த இரண்டாயிம் ஆண்டுக்காலமாக அவன் சச்சரவு செய்து கொண்டிருந்தான். ஆனால் கிறிஸ்துவோ இனத்தான் மீட்பராக வந்து, அதை நமக்கு திரும்ப மீட்டுத் தந்தார். ஆனால் சாத்தான் அதை இப்பொழுதும் கையில் வசப்படுத்தி வைத்துக் கொண்டிருக்கிறான். ஆனால் சில காலம் கழித்து, இந்த பெரிய சண்டையானது முடிவடைந்த பிறகு, அவன் அக்கினிக் கடலிலே தள்ளப் படுவான் என்பதை நீங்கள் அறிவீர்களாக. அவனும் அவனைத் தொழுது கொள்ளுபவர்களும் முழுவதும் அழித்தொழிக்கப் படுவார்கள். ஆனால் இரட்சிப்பை சுதந்தரித்துக் கொண்ட வர்களோ கிறிஸ்துவோடு வருவார்கள். இப்பொழுதோ சாத்தான் சட்டவிரோதமாக அத்து மீறி நமது சுதந்தரத்தில் நுழைந்து அதை கையகப்படுத்திக் கொண்டுள்ளவனாயிருக்கிறான்.

171. பழைய ஏற்பாட்டில் ஒரு மனிதன் தன் சுதந்தரத்தை இழந்து விட்டால், அச்சுதந்திரத்தில் பிரவேசிக்கிற ஒருவன் ஐம்பது ஆண்டுகள் வரையிலும் உள்ள காலத்திற்கு மேல், அவன் தன் வசம் அதன் உரிமைக்காரனிடமிருந்து பிடுங்கி, நிரந்தரமாக வைத்துக்கொள்ள



திராட்ச இரசத்தையும் சேதப்படுத்தாதே'' என்றும் கூறப்படுகிறது. அதைத் தொடர்ந்து அவர் இந்த முத்திரைகளைத் திறக்கிறார்.

37.இவைகளுக்குப் பின்பு, பூமி நான்கு திசைகளிலும் நான்கு தூதர்கள் நின்று, பூமியின் மேலாவது, சமுத்திரத்தின் மேலாவது, ஒரு மரத்தின் மேலாவது, காற்று அடியாதபடிக்கு, பூமியின் நான்கு காற்றுகளையும் பிடித்திருக்கக் கண்டேன்.

ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக் கோலையுடைய வேறொரு தூதன் சூரியன் உதிக்குந்திசையிலிருந்து ஏறிவரக் கண்டேன்; அவன், பூமியையும் சமுத்திரத்தையும் சேதப்படுத்துகிறதற்கு அதிகாரம் பெற்ற அந்த நான்கு தூதரையும் நோக்கி:

நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைபோட்டுத் தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டான்.

வெளி.7:1-3

இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள், ஊழியக்காரர்கள் என்னப்பட்டவர்கள் எப்பொழுதும் தேவனுடைய ஊழியக்காரர்களாக யூதர்கள் இருக்கிறார்கள். ஆபிரகாம் அவருடைய ஊழியக்காரனாக இருந்தான். புறஜாதியார் ஊழியக்காரர் அல்ல. அவர்கள் மணவாட்டியாக இருக்கிறார்கள். அவர்கள் குமாரனாக இருக்கிறார்கள். சபையானது குமாரனாக இருக்கிறது. யூதர்கள் ஊழியக்காரர்களாக இருக்கிறார்கள். ஓ, உங்களால் இயலுமென்றால்... நமக்கு போதுமான நேரம் இருக்குமெனில் இவ்விதமான வார்த்தைகளை அலசி ஆராய்ந்து பார்க்க முடியும். அநேக தடவைகளில் எனது அறையில் நான் அவ்வாறு ஒத்து வாக்கியங்களை எடுத்துக் கொண்டு அலசி ஆராய்ந்து பார்த்து, அதை ஒழுங்குபடுத்துவதுண்டு,

யூதர்கள் ஊழியக்காரராயிருக்கின்றனர். நான் இங்கு நின்று கொண்டு, இருக்கிற நேரத்தை யெல்லாம், "ஒரு ஊழியக்காரன்'' என்கிற விஷயத்தைப்பற்றி எடுத்துக் கொள்வேனென்றால், மற்ற விஷயங்களை நான் தொட முடியாது. எனவே, நான் சொன்னதை நினைவில் கொண்டு, அதை வேதம் பூராவும் தொடர்ந்து தேடிப் பாருங்கள். அப்பொழுது, யூதன் தேவனுடைய ஊழியக்காரனாயிருக்கிறான் என்பதை நீங்கள் காணுவீர்கள்.

38.எசேக்கியேல் 4ம் அதிகாரத்தை நாம் திரும்பிச் சென்று பார்ப்போமானால், அங்கே என்னே ஒரு அழகான ஒத்ததான ஒரு காரியத்தை நாம் காண்கிறோம்! அவ்வசனத்தில், ''இவ்விதமான காரியம் இதற்கு முன் சம்பவித்ததுண்டோ ?'' என்று கேட்கிறார். எசேக்கியேல் உயரமான சுவற்றைப் பார்க்கிறான். அங்கே அவன் அந்நகரத்தில் செய்யப்பட்ட அருவருப்புக்களை யெல்லாம் கண்டான். அங்கே நான்கு புருஷர் சங்கரிக்கும் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு புறப்பட்டனர். அவர்கள் எருசலேம் நகர முழுவதிலும் சென்று, யாவரையும் சங்கரிக்கும்படி புறப்பட்டு வந்தனர்.

அவர்கள் சங்கரிக்கும்படி போகப்புறப்படும் முன்னர், அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டார்கள். ஏனெனில், தன் அரையிலே கணக்கனுடைய மைக்கூட்டை வைத்திருந்து வெண்மையான ஆடை தரித்த ஒருவன் வந்தான். எத்தனை பேர்கள் அதை வாசித்திருக்கிறீர்கள்? எசேக்கியேல் 4ம் அதிகாரம் அந்தப் புருஷன், தன் அரையிலே கணக்கனுடைய மைக்கூட்டை வைத்திருந்தான், வெண்மையான ஆடை அணிந்திருந்தான்.

கர்த்தர் அவனை நோக்கி, ''முதலாவது நீ தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைபோடும் முன்னர், நகரத்தினுள் போய் எவரையும் நீ சங்காரம் செய்ய வேண்டாம்'' என்று கூறினார். அவன் புறப்பட்டுப் போய், சிறு குழந்தைகளிடமும் கூறி, உரியவர்களையெல்லாம் முத்திரையிட்டான்.

39.அதன் பிறகு, சங்கரிக்கும் ஆயுதங்களை வைத்திருந்த நான்கு பேர்களும், புறப்பட்டு வந்து உள்ளே சென்று, ஈவு இரக்கமின்றி யாவரையும் முழுவதுமாக வெட்டிச் சாய்த்துக் கொண்டே போனார்கள். அவர்கள் புருஷர், ஸ்திரீகள் சிறு பிள்ளைகள் ஆகியோரில், கணக்கனுடைய மைக்கூட்டை வைத்திருந்த புருஷன் எவர்களையெல்லாம் முத்திரையிட்டாரோ, அவர்களைத் தவிர மற்ற யாவரையும் வெட்டிக் கொன்று போட்டனர். அந்த மகத்தான...இச்சம்பவமானது, புவியில் வந்த நம்முடைய கர்த்தரின் நாட்களுக்குப் பிறகு நடந்தவையாகும். அவைகளைப் பற்றி கர்த்தரும் மத்தேயு 24ம் அதிகாரத்தில் முன்கூட்டியே எச்சரித்திருந்தார். எப்படியெனில், "எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருப்பதை நீங்கள் காணும் போது வீட்டின் மேல் இருக்கிறவன் இறங்காதிருக்கக்கடவன், வயலில் இருக்கிறவன் வீட்டில் போய் தனது அங்கியை எடுத்துக் கொள்ள திரும்பிப் போகாதிருக்கக்கடவன், ஆனால் யூதேயாவில் இருக்கிறவர்கள்...'' ஜோசிபஸ் என்பவர் அதைப் பற்றி எழுதியுள்ளார்,



163. சாத்தான் அச்சுதந்திரத்தை இப்பொழுது தன் கையில் வைத்திருக்கிறான், அவன் அதன் மேல் எவ்வித உரிமையுமின்றி, அத்துமீறி கையகப்படுதிக்கொண்டுள்ளான். அவன் முடிவா... அவன் அதை உடனடியாக விட்டுவிட விரும்பவில்லை. அதைப் பற்றி வேதவாக்கியங்களில் இன்னும் கொஞ்சம் நேரத்தில் நாம் பார்ப்போம். நான் இன்னொரு அதிகாரத்தைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். அவன் அதை திரும்பக் கொடுத்துவிட விரும்பவேயில்லை, அதற்காக அவன் சண்டையிட வேண்டியதாய் இருக்கிறது. ஆனால் இறுதியாக, பலப்பரீட்சைக்கு கொண்டு வரப் படுகையில் அவன் அக்கினிக் கடலில் தள்ளப்படுகிறான்.

164. இயேசு- சுவிசேஷங்களில் இயேசு என்ற நாமம், நான்கு பட்டங்களோடு குமாரனாக காணப்படுகிறது. அதை நீங்கள் அறிவீர்களா? இயேசுவுக்கு நான்கு பட்டங்களைக் கொண்ட குமாரன் சுவிசேஷங்களில் உண்டாயிருக்கின்றன. அவைகளில் ஒன்று, தாவீதின் குமாரன்,'' இன்னொன்று, 'ஆபிரகாமின் குமாரன்,'' - இன்னொன்று, ''மனுஷகுமாரன்'' நான்காவதாக ''தேவகுமாரன்'' என்பவைகளாகும்.

165. இப்பொழுது கவனியுங்கள். நமது இனத்தான் மீட்பர் இயேசு கிறிஸ்துவாகும் பொழுது, அவர் தாவீதின் குமாரனாக ஆகிறார் - அந்நிலையில் அவர் சிங்காசனத்தின் வாரிசாக ஆகிறார். - மகிமை! தாவீதின் குமாரனாக இருப்பதின் மூலமாக அவர் சிங் காசனத்திற்கு வாரிசாகிறார். தேவன் முன்பு "தாவீதுக்கு ஒரு சந்ததி இல்லாமல் போவதில்லை'' என்று கூறியிருக்கிறார். கிறிஸ்து தாவீதின் குமாரனாயிருக்கிறார். அவர் நமது இனத்தான் மீட்பராக ஆகி நம்மோடு அரசாள்வதற்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணி, காத்துக் கொண்டிருக்கிறார். தாவீதின் குமாரன் சிங்காசனத்தின் உரிமைக்காரராயிருக்கிறார்.

166. ஆபிரகாமின் குமாரன் என்ற முறையில், ராஜரீக ஆஸ்தி யுரிமைக்கு உரிமைக்காரனாயிருக்கிறார். ஆமென். அது சரிதானே? ராஜரீக ஆஸ்தியுரிமைக்கு அவர் உரிமைக்காரனாயிருக்கிறார். ஆமென். பாலஸ்தீனாவும் அதிலுள்ள யாவும் "ஆபிரகாமின் வித்துக்கு உரியதாகும். அவர் ஆபிரகாமின் குமாரனாவார்.

167. மனுஷகுமாரன் என்ற அளவிலே மனுஷகுமாரன் என்ன செய்தார்? மனுஷன் எதை இழந்தான்? அவன் பூமியை இழந்தான். ஆகவே மனுஷகுமாரன் என்ற முறையில், அவர் பூமியின் எல்லா வற்றின் மேலும் உரிமைக்காரனாயிருக்கிறார். இவையெல்லாம் அவர்

எப்பொழுது கிறிஸ்து பலியிடப்பட்டார்? 1900 ஆண்டுகளுக்கு முன்பாகவா? இல்லை, ஐயா. உலகத் தோற்றத்திற்கு முன்னரே, "உலகத் தோற்றத்திற்கு முன்னர் அடிக்கப்பட்டிருக்கிற ஆட்டுக்குட்டியானவர்.''

160. அது என்ன செய்கிறது என்பதைப் பாருங்கள்? இம்முத்திரைகள் திறக்கப்படும் பொழுது, மீட்பின் திட்டத்தை அவை வெளிப்படுத்துகின்றன. எவ்வாறு அவர் அதை செய்தார். என்பதைப் பற்றியும், இப்பொழுது யாவும் முடிவடைந்து விட்டது. முடி வடையும் கட்டத்தில் வந்துவிட்டது. எனவே நாம் முடிவு காலத்தில் இருக்கிறோம். எனவே தான் இக்காரியங்களெல்லாம் வெளிப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

161. இப்பொழுது நமது இனத்தானிடம் மீட்புக்குரிய ஏழு முத்திரைகளால் முத்திரையிடப்பட்டுள்ள புத்தகமானது அதன் மூல சொந்தக்காரரால் ஒப்படைக்கப்படுகிறது. ஆதாமின் மூலமாக நாம் ஏதேன் தோட்டத்தில் அதை இழந்தபொழுது, அது திரும்பவும் அதன் மூல சொந்தக்காரரரிடமே திரும்பிச் சென்றது. ஆனால், பிறர் நிலத்தின் உரிமையில் அத்துமீறி வரம்பு மீறி பிரவேசிக்கிறவனான, உரிமையின்றி பிறர் நிலத்தில், ஆக்கிரமித்து பிரவேசித்து கையகப்படுத்திக்கொள்கிறவனான, சாத்தான் அங்கே இருந்தான். அவன் வந்தான். அவன் தானே உரிமையின்றி அடுத்தவர் உரிமையில் தலையிடுகிறவன். இப்பூமி அவனுக்கு சொந்தமாயிருக்கவில்லை. தேவனுக்கு சொந்தமாயிருக்கிறது. ஆனால் அவனோ அத்துமீறி அடுத்தவர் நிலத்தின் உரிமையில் பிரவேசிக்கிறவன், அத்துமீறி அடுத்தவர் நிலத்தை எடுத்துக் கொள்கிறவன். மனிதனே, அவனைப் பற்றி இப்பொழுதே நான் ஒரு காரியத்தை கூற முடியும். ஆனால் நான் அவ்வாறு சொல்லா திருப்பேனாக. இந்த ஏழு முத்திரைகளால் முத்திரையிடப்பட்ட புத்தகம் தான் நமது மீட்புக்குரிய உரிமைச் சாசனமா? அதுவே நமது உரிமைச் சாசனமாயிருக்கிறது. முத்திரைகளைப் பற்றி நாம் பார்க்கும் வரையிலும் பொறுத்திருங்கள்

162. அவர் முத்திரைகளை உடைத்து, வெளிப்படுத்தி, தமது சுதந்திரத்தை அவருடைய ஜனங்களாகிய நமக்கு அளிக்கிறார். அவர் இனத்தான் மீட்பராக ஆனதின் மூலமாக தாம் சுதந்தரித்துக் கொண்ட அச்சுதந்திரத்தை நமக்கு இலவசமாக தருகிறார். அவை யாவும் அவருக்கு சொந்தமாயிருந்தது. அவரே அதை மீட்டார். ஆனால் அதை தாமே வைத்துக் கொள்வதற்குப் பதிலாக அதை திரும்ப தமது மக்களுக்கே அளித்துவிடுகிறார். அதுதான் நம்மேல் அவர் வைத்திருக்கிற அன்பாகும். ஓ!



அவர்கள் எவ்வாறு ஓடிப்போனார்கள் என்பதை யெல்லாம் விவரிக்கிறார். கர்த்தராகிய இயேசுவின் வார்த்தைகளை நம்பினவர்கள் மாத்திரமே தப்பித்துக் கொண்டனர்.

சைன்யமானது சூழ்ந்து கொண்டதை அவர்கள் கண்டபோது, அவர்களை அந்த படை தங்களை வளைத்து போட்டது என்று கண்டபோது... தீத்து. . . அதாவது கி.பி 96 ல், தீத்து எருசலேம் மதிலை சுற்று போட்டதை கன்டபோது, அவர்கள் உள்ளே சிக்கிக் கொண்டார்கள். அவர்கள் மரப்பட்டைகளையும், நிலத்தின் புல்லையும் புசித்தனர். உண்மையாகவே ஒருவர் இன்னொருவருடைய குழந்தைகளை வேவித்து புசித்தனர். அவர்கள் முற்றுகையினால் யூதர்களை பட்டினிபோட்டு அவர்கள் செயலற்றுப்போகச் செய்து,

அவ்வேளையில் உள்ளே நுழைந்து, அவர்கள் இரத்தமானது ஒரு ஓடையைப் போல் வாசல் வழியாக வழிந்தோடும் அளவுக்கு அவர்களை சங்கரித்தனர். அவர்கள் ஆலயத்தை சுட்டெரித்தனர். மதில்களை இடித்து கீழே தள்ளினர், அவ்வாறு இன்று வரையிலும் அது உள்ளது.

40.தேவாலயம் இருந்த அதே இடத்தில் ஓமர் பள்ளி வாசலானது கட்டப்பட்டது.

இயேசுவும் அதைப்பற்றி மத்தேயு 24ம் அதிகாரத்தில் பேசியிருக்கிறார்.

''மேலும் பாழாக்குகிற அருவருப்பைக் குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே, வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன், நீங்கள் அதை பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக்காணும்போது.

இங்கே இதை மேற்கோளாகக் குறிப்பிடுகிறார் (வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் என்றார்). பார்த்தீர்களா? இந்த அருவருப்பை நீங்கள் காண்கையில், ஓமர் பள்ளிவாசல் அங்கு அருவருப்பாக, முன்பு ஒருகாலத்தில் பரிசுத்த ஸ்தலமாக இருந்த இடத்தில்...

இன்றைக்கும் தேவாலயம் ஸ்தாபிக்கப்பட்டிருந்த அதே இடத்தில் அந்த முஸ்லிம் பள்ளி வாசலானது அமைக்கப்பட்டுள்ளது. இயேசு கூறியவாறும், தானியேல் கூறியவாறும் முகம்மதியர்களின் அந்த பள்ளி வாசலானது அங்கே நின்று கொண்டிருக்கிறது. இயேசுவும் அவ்வாறு நடக்கும் என்பதை உறுதிப்படுத்தினார்.

41.அந்த தீர்க்கதரிசிகளும், தேவனும் அந்த காரியங்களை முன்னுரைத்திருப்பதைக் கவனியுங்கள்,

சகோதரரே, அது உங்களை, நாம் கடைசி காலத்தில் இருக்கிறோம் என்பதை அறியச் செய்து, நம் கழுத்தின் பின்புற முடியை குத்திட்டு நிற்கச் செய்தல் வேண்டும். நாம் முடிவு காலத்தில் இருக்கிறோம். வேறு ஒன்றும் நடக்கும்படி ஒன்றும் மீதியாக இல்லை. இவ்வாறு நடக்கும் என்று அவர் கூறிய பிரகாரமாகவே இவையாவும் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. அது நம்மை தைரியமூட்டி, நம்மை ஆயத்தப்படுத்த வேண்டும். இவை யாவும் சம்பவிப்பதை நீங்கள் காணும் போது'' என்று கூறி இயேசு நம்மை எச்சரித்திருக்கிறார். ''உங்கள் மீட்பு சமீபமாயிருக்கிறபடியால் நீங்கள் நிமிர்ந்து பார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்'' என்று நாம் பேசிக் கொண்டிருக்கிறோமே, அதைப் போலத்தான் இது உள்ளது.

உலகம் முழுவதையும் நாம் ஆதாயப்படுத்தினாலும் அதினால் நமக்கு என்ன பயன்? எப்படியும் அதை இழந்து விடத்தான் போகிறோம். அந்த விதமாக அதை நாம் நமக்கு ஆதாயப்படுத்திக் கொள்ள முடியாது. ஒரேயொரு விதமான ஆதாயப்படுத்திக் கொள்ளுதல் தான் உண்டு, அது கிறிஸ்துவின் மூலமாகத் தான். கிறிஸ்துவை எடுத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது நீங்கள் வெல்லக் கூடியவர்களாக இருப்பீர்கள்.

இவ்வுலகை விட்டு நீங்கள் கடந்து செல்ல வேண்டியவர்களாக இருக்கிறீர்கள், இந்த ஆராதனை முடிவதற்கு முன்னர் ஒரு வேளை நீங்கள் கடந்த சென்று விடக்கூடும். இன்று சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னர் ஒரு வேளை நீங்கள் கடந்து சென்று விடக்கூடும். சூரியன் நாளை காலை உதயமாவதற்கு முன்னர் ஒரு வேளை நீங்கள் இவ்வுலகை விட்டுப் போய்விடக்கூடும், அடுத்த ஞாயிற்றுக் கிழமைக்கு முன்பாக ஒரு வேளை நீங்கள் போய்விடக் கூடும். நாம் யாவரும் கூட ஒரு வேளைபோய் விடக்கூடும். நாம் எப்பொழுது இவ்வுலகைவிட்டு கடந்து செல்லப் போகிறோம் என்பதை அறியோம். ஆனால் நீங்கள் இங்கிருக்க முடியாது, இதை விட்டுப்போய் விடத்தான் வேண்டும்.

எனவே அதை ஏற்றுக் கொள்வதை தள்ளிப் போட்டுக் கொண்டே போவது மதியீனமான தொன்றல்லவா? மரணத்தோடு நீங்கள் நெருங்கி, மரணத்தோடு சரசமாடிக் கொண்டிருக்கிறீர்கள்.

42.அது பழங்காலத்திய, பனிக்கட்டியின் மீது வழுக்கி யோடுவதற்காக மரத்தினாலான ஒருவகை வண்டியில் ஏறிக் கொண்டு போவது போல் உள்ளது. அதில் ஏறிக் கொண்டு சுற்றிலும் சறுக்கிக் கொண்டே வரும்



வாயிலாக ஞானஸ்நானத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின நாமத்தை அவர் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். நித்திய நரகம் என்று ஒன்றில்லை என்பதை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். அவ்வாறு இருக்கவே முடியாது. அவ்வாறு ஒன்று இருப்பதாகக் கூறுவதான வேதவாக்கியம் எதுவும் வேதாகமத்தில் கிடையவே கிடையாது.

156. பாதாளம் என்று ஒன்றுண்டு; அக்கினிக் கடல் என்று ஒன்றும் உண்டு. அங்கே தான் துன்மார்க்கர் தண்டிக்கப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் இறுதியாக அக்கினியால் பட்சிக்கப்படுகின்றனர். ஒரு வேளை ஆயிரம் மில்லியன் வருடங்கள் இருக்கலாம். ஆனால் அவர்கள் இறுதியாக பட்சிக்கப்படுவார்கள். ஏன், உங்களுக்கு சாதாரண அறிவே அதைப் பற்றிக் காண்பிக்குமே. பார்த்தீர்களா? நீங்கள் எப்படி நித்தியத்தைப் பெற்றிருக்க முடியும்? நித்திய ஜீவனை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள், இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை உங்களில் எத்தனை பேர் அறிந்திருக்கிறீர்கள்? நல்லது, நீங்கள் நித்தியமாக எரிந்து கொண்டிருப்பீர்களானால், அதைப் பற்றி நீங்கள் கண்டுகொள்ள உங்களுக்கு நித்திய ஜீவனைப் பெற்றிருக்க வேண்டாமா? எனவே பாருங்கள், அது அர்த்தமற்றதாக இருக்கிறது.

157. ''பாதுகாப்பு'' எவர்களை முன்னறிந்தாரோ, அவர்களை அழைத்துமிருக்கிறார். எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார். எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார். எபேசியர் 1ம் அதிகாரத்தில் "தேவன் உலகத் தோற்றத்திற்கு முன்னர் இயேசு கிறிஸ்து மூலமாக தமக்கு சுவிகார புத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார்''.

158. "கடைசி நாட்களில் மார்க்க சத்துருவாயிருக்கிற எதிராளியான வன் மக்கள் மத்தியில் நுழைந்து, ஸ்தாபனங்களையும் இன்ன பிறவற்றையும், இன்று உள்ளது போல கொள்கைகளையும் உண்டாயிருக்கும் படி செய்து கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்ட வர்களையும் வஞ்சிக்கப் பார்த்து, உலகத்தோற்றத்திற்கு முன்னரே ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புத்தகத்தில் பெரெழுதப்படாத வர்களையெல்லாம் வஞ்சிப்பான்'' என்று யோவான் இங்கு நமக்கு வெளிப்படுத்தின விசேஷப் புத்தகத்தில் எடுத்துரைக்கிறான்.

159. எப்பொழுது உங்களுடைய பெயர் ஆட்டுக்குட்டியான வரின் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டது? உலகத்தோற்றத்திற்கு முன்னரே,

அது கூறுகிறபடியே செய். நான் உனக்குச் சொல்லத் தெரிந்ததெல்லாம் அவ்வளவுதான்'' என்று கூறு வதுண்டு. அவ்வளவுதான் எனக்குத் தெரிந்தது.

151. 'தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்'' என்ற வசனத்தை அவள் கூறுவாள்.

"எத்தனை பேர் விசுவாசிக்கிறார்கள் அதை? அடுத்த வசனத்தை வாசி என் பிரியமே" என்று நான் கூறுவேன்.

152. 'விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் நித்திய ஜீவனை அடையும்படிக்கு தம்முடைய ஒரே பேறான குமாரனைத் தந்தருளினார்''

153. ''எத்தனை பேர் விசுவாசிக்கிறார்கள் அதை? அது என்ன கூறுகிறது என்பதைக் கேட்டாயா?'' என்று நான் கூறுவேன். நானே அதை வாசிக்கத் தெரியாமல் இருந்தேன்.

154. எனவே, பாருங்கள், எந்த ஒரு பள்ளிக் கூடத்திலிருந்தும் ஓடிப்போக எனக்கு வழியில்லை. ஆனால் நான் சென்ற அந்தப் பள்ளியை நான் நேசிக்கிறேன். அங்கு தனிமையிலே, எங்கோ ஒரு சிறு மலைக்குகையிலே, தேவனிடமாய் எனது கரங்கள் உயர்த் தப்பட்ட நிலையிலே, இரவும் பகலுமாக இருந்தபொழுது, பரிசுத்த ஆவியானவர் தனது இனிமையில் இறங்கி வந்து தம்மைத்தாமே எனக்கு வெளிப்படுத்தித் தந்து, "இது இவ்வாறு இருக்கிறது, அது இவ்வாறு இருக்கிறது'' என்று கூறினார். எந்த ஒரு மனிதனும் எந்தவிதமானதொரு சிருஷ்டியும் எந்த ஒரு சமயத்திலும், அதின் மேல் கையை வைக்கவே இயலாமல் இருந்திருக்கிறது. தேசத்திலே ஊடுருவிப் பாய்ந்து சென்று, மட்டு மீறிய உணர்ச்சி வசப்பட்ட மூட மத வைராக்கியத்தைப் பொருத்த அளவில், தேவன் அதைவிட்டு இதை அகற்றி, மிகவும் உயர்வாகவும் சுத்தமாகவும் இருக்கும்படி இதை வைத்து, உலகத்தைச் சுற்றி சுற்றி உலா வரும் படி செய்தார். அல்லேலூயா! நாம் கடைசி காலத்தில் இருக்கிறோம், சகோதரனே, நாம் இங்கே கடைசி காலத்தில் இருக்கிறோம். ''சாயங்காலத்திலே வெளிச்சம் உண்டாகும்'' சரியாக அதைத்தான் அவர் கூறினார்.

155. இப்பொழுது இது தானே வெளிப்படுத்துதலின் புத்தகமாயிருக்கிறது. தேவன் தம்மைத் தாமே வெளிப்படுத்திக் கொண் டிருக்கிறார். இப்பொழுது இந்த மகத்தான இரகசியங்களின்



பொழுது, அவர்களையும் அறியாமல் திடீரென ஒரு சரிவில் வழுக்கிக் கொண்டே போய் விடுவார்கள், மரணத்திற்கு மிகவும் சமீபமாக வருவார்கள். அவ்விதமாக தான் நீங்களும் சுற்றிலும் சறுக்கிக் கொண்டே வந்து வழுக்கி விழப் பார்க்கிறீர்கள். எந்த நிமிடத்தில் ஏதோ ஒன்று உங்களை கவிழ்த்து நீங்கள் இல்லாமற் போகும்படி செய்யப் பார்க்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். இருதயம் நின்று விடுதல், மோட்டார் வாகன விபத்து, மற்றும் வேறெந்த ஒன்றும் எந்த நேரமும் நேரிட்டு, நீங்கள் மரிக்க நேரிடலாம். அப்பொழுது நீங்கள் போய்ச் சேரவேண்டிய உங்களுடைய நித்திய போக்கிடம் சரியாக உங்களுக்கு முன்பாக உள்ளது. அதைப்பற்றி யோசித்துப் பாரும், நண்பரே.

43."பாழாக்கும் அருவருப்பை நீங்கள் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும் போது, இயேசு புவியில் வந்து விட்டுப் போனதற்குப் பிறகு, தீத்து வந்திட்ட நாட்களிலே, அங்கே தன் அரையில் கணக்கனுடைய மைக்கூட்டை வைத்துக் கொண்டு வந்த அந்த நபர் பரிசுத்த ஆவியானவர் தாமே. அவர் எருசலேம் முழுவதிலும் உருவக்கடந்து போய், உரிய மக்கள் மேல் அடையாளத்தைப் போட்டார். சபை உறுப்பினரே, ஒரு காரியத்தை நீர் கவனிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறதாக கூறிக் கொள்ளுகிறீர்கள் அல்லவா? ''நகரத்திலெங்கும் அதற்குள்ளே செய்யப்படுகிற சகல அருவருப்புகளினிமித்தமும் பெருமூச்சு விட்டழுகிற மனுஷரின் நெற்றிகளில் தவிர வேறு எவர் மேலும் அடையாளத்தைப் போடாதே' என்று அவருக்குச் சொல்லப்பட்டது.

இப்பொழுது உலகத்தைப் பற்றியும் அவர்களுடைய நிலையைப் பற்றியும் பாரமடைந்திருக்கிற நிலையில் உள்ளவர்கள் எங்கேயிருக்கிறார்கள்? நல்லது, ''நான் மெதோடிஸ்ட், நான் பாப்டிஸ்ட், ப்ரெஸ்பிடேரியன். அது என்ன வித்தியாசத்தை ஏற்படுத்திவிடப் போகிறது?'' என்று கூறுகிறார்கள்.

இழந்து போகப்பட்டவர்கள் மேல் தொடர்ந்து இருக்கும் பாரமல்ல அது. அது இனிமையாகும். உங்கள் ஆத்துமாவில் எந்தவொன்றும் எழும்பி உங்களுக்குள் கசப்பை போட்டு விட இடம் கொடாதிருங்கள். உங்களை ஒருவர் எவ்வளவு மோசமாக நடத்தியிருந்தாலும் சரி, அதைப் பொருட்படுத்த வேண்டாம். ஒரு போதும் கசப்பு வேண்டாம். உங்களுடைய ஆத்துமாவில் கசப்பானது நங்கூரமிட்டு விடும் குற்ற உணர்வு உடையவர்களாக ஆகாதிருங்கள். அதுதானே பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்தி, உங்களை விட்டு நீங்கச் செய்து விடும். நிச்சயமாக அதுதான் நடக்கும்.

44.இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக நான் இங்கே ஒரு தவறான காரியத்தைப் பேசிவிட்டிருந்தேன். வழக்குரைஞர்கள் என்னை அழைத்திருந்தனர். என் மனைவி அங்கே அமர்ந்திருக்கிறாள்.... ஏதோ என் தலையே பிரிந்து வந்ததைப் போல் நான் உணர்ந்தேன். நான் திரும்பிப் போய்விட்டேன். அவர்கள் தொலைபேசியின் மூலமாக இன்று மதியம் அங்கு வரும்படி அவரிடம் சொல்லுங்கள்" என்று என் மனைவியிடம் கூறினார்கள்.

மேடா என்னிடம் கூறினாள் ''வழக்குரைஞர்கள் பேசினார்கள்'' என்றாள்.

நான் வாசலை விட்டு வெளியே நழுவிக் கொண்டே, "நான் இங்கே இல்லை என்று கூறிவிடு' என்று அவளிடம் சொன்னேன்.

''பில்'' என்று அவள் கூறினாள்.

இப்பொழுது நான் இங்கே இல்லை என்று கூறிவிடு என்றேன் நான். அப்படிச் சொல்லிவிட்டு நான் வெளியே போய் விட்டேன்.

பிறகுநான் வெளியே போய்விட்டு, மனதில் மிகவும் துக்கமடைந்தவனாய் வீடு திரும்பினேன். அவள் வழக்குரைஞரிடம் நான் சொன்னதை கூறிவிட்டாள். அக்காரியம் அவளை மிகவும் புண்படுத்தியிருந்ததை நான் கண்டேன். வியாதியுற்றிருந்த ஒரு சிறு குழந்தைக்காக ஜெபிக்கும்படி ஒரு மனிதன் வந்திருந்தார். நான் அதற்காக ஜெபிக்கப் போனேன். அக்குழந்தையின் மேல் நான் என் கையை வைத்து ஜெபிக்க ஆரம்பித்த பொழுது, ஏதோ ஒன்று என்னிடம், ''நீ ஒரு மாய்மாலக்காரன், நீ என்ன செய்தாய் என்று நீ அறிவாய்'' என்றது.

நான் அம்மனிதனிடம், ''ஐயா, நான் உமது குழந்தைக்காக ஜெபிக்க அருகதையற்றவன். என்னில் உள்ள பரிசுத்த ஆவியானவர் துக்கமடைந்துள்ளார். நான் குழந்தையின் மேல் என் கைகளை வைத்து ஜெபிக்க எனக்கு தேவையில்லை. நான் என்னை சரி பண்ணிக் கொண்டு வருமளவும் காத்திருங்கள்" என்றேன்.

நான் எனது வழக்குரைஞரிடம் போய், நான் தவறு செய்தேன்'' என்று கூறினேன். 'நீங்கள் வெளியே போய்விட்டிருந்தீர்கள் என்று நான் நினைத்தேன்" என்றார்.

'இல்லை, தவறான ஒன்றை உங்களிடம் சொல்லும்படி நான் என் மனைவியை ஆக்கிவிட்டேன். நான் அதற்காக வருந்துகிறேன். நான்



எபிரெயர் கூறுகிறது. அது உண்மையாயிருக்கிறது. நீங்கள் வழிவிலகிப் போய், லௌகீகமாக ஜீவிப்பீர்களானால், நீங்கள் ஒரு கிறிஸ்தவராயிருக்க முடியாது, நீங்கள் பரிசுத்த ஆவியையும் பெற்றிருக்க முடியாது. உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் நீங்கள் அன்பு கூர்ந்தால் தேவனுடைய அன்பு உங்களில் இல்லை. அப்படியிருந்தால், நீங்கள் எங்கிருந்தோ வரும் ஒரு பொய்யான சத்தத்திற்கு செவிகொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். பிசாசு உங்களை செருக்கடையச் செய்து விட்டான். ஆனால் நீங்கள் உங்களுடைய வாழ்க்கையை தேவனுடைய வார்த்தையைக் கொண்டு ஆராய்ந்தால், அப்பொழுது அது வேதாகமத்தின் படியே சரியாக ஜீவிக்கிறீர்கள் என்று காண்பித்தால், நீங்கள் நித்திய பாதுகாப்பைப் பெற்றிருக்கிறீர்கள்.

149. நீங்கள் எதைக் குறித்தும் பயப்படத் தேவையில்லை. தேவன் எதை வாக்குரைத்தாரோ அதை நிறைவேற்றுவார். அதைப் பற்றி நான் எந்த ஒரு நபருக்கும் சவால் விடுகிறேன். நீங்கள் வார்த்தையை நம்பி எடுத்துக் கொண்டு அதனோடு நடவுங்கள். அப்பொழுது உங்களுக்கு என்ன சம்பவிக்கிறது என்பதை கவனியுங் கள். சகோதரனே அது ஒவ்வொன்றும் அப்படியே நிறைவேறும். தேவன் அவ்வாறு கூறியுள்ளார். தேவன் வாக்குரைத்த ஒவ்வொன்றும் நிச்சயமாக நிறைவேறும்.

150. எனது ஊழியம் ஆரம்பித்த நாள் முதல், கடந்த பதினைந்து ஆண்டுகளாக உலகம் முழுவதிலும் சுற்றி சுற்றி பார்த்ததில், ஒரு தடவை கூட அது தவறியதில்லை என்று நான் உங்களுக்கு ஏற்கனவே கூறியிருக்கிறேன். ஏன்? ஏனெனில், அடிப்படையாகவே, நான் தேவனுடைய வாக்குத்தத்தத்தின் பேரில்தான் நிற்கிறேன். அது சத்தியமாயிருக்கிறது என்று நான் அறிந்தேயுள்ளேன். இது ஏதோ எனது பெரிய ஞானத்தினால் உண்டானது என்று நான் கூற முயலும்படி செய்ய வேண்டாம். இருதயத்தின் இரகசியங்களை வெளிப்படுதினவர்தான் வேத வாக்கியத்திலிருந்து இதை எனக்குக் காண்பித்தார். ஏனெனில், என்னால் முடியாது..... நான் பிரசங்கிக்க ஆரம்பித்தபொழுது, எனது சிநேகிதி தான் உட்கார்ந்து எனக்காக வேதத்தை வாசித்துக் காண்பிக்க வேண்டிய தாயிருந்தது. அதிகம் கல்வி இல்லாததினால், வேத வாக்கியத்தை என்னால் வாசிக்கக் கூட இயலாதிருந்தது. சகோதரி வில்சன் அவர் களே! ஹோப் தான் என்னருகில் உட்கார்ந்து எனக்காக வேதத்தை வாசித்துக் காண்பிப்பாள் என்பதை நீங்கள் நிச்சயமாக நினைவில் வைத்திருக்க வேண்டும். அப்பொழுது நான், ''அது என்ன கூறுகிறது என்பதை கேள்,

கொண்டிருக்கிறார். எனக்கு இவைகளைப் பற்றி தெரியாது. ஆனால் இதுவே அந்த வேளையாயிருக்கிறது, அது இங்கே இருக்கிறது. கர்த்தருக்குச் சித்தமானால், நாம் இந்த ஏழு ஆவிகள், பிறகு ஏழு கொம்புகள் இவைகளைப் பற்றி பார்க்கையில், அது எங்கே இருந்து கொண்டிருக்கிறது என்பதைப் பற்றி நீங்கள் காண்பீர்கள். இந்த வெளிப்படுத்துதல்கள் வரவேண்டியதாய் இருக்கிற வேளையாக இது இருக்கிறது. இப்புஸ்தகம் வெளிப்படுத்துதல்களின் புத்தகமாக இருக்கிறது. அது இயேசு கிறிஸ்துவைப் பற்றி வெளிப்படுத்துகிறதாயிருக்கிறது. அவர், தாம் யார் என்பதைப் பற்றி, முதல் அதிகாரத்திலேயே வெளிப்படுத்துகிறார் என்பதை நாம் கண்டோம். இப்பொழுது அவர் ஏழு முத்திரைகளில் இருக்கிறார், அவர், தாம் பூமியை எவ்வாறு மீட்டுக் கொண்டார் என்பதை அதன் மூலம் வெளிப்படுத்துகிறார்.

147. வெளிப்படுத்துதல்களில் ஒன்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தைப் பற்றியது. மற்ற விஷயம் என்னவெனில், மக்களிலிருந்து நித்தியம், நித்திய மீட்பு, விசுவாசத்தினால் நீதிமானாகுதல், பரிசுத்தமாகுதல், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் ஆகியவைகளைப் பற்றி மக்கள் கொண்டிருந்த பயத்தை நீக்கியதாகும். மேலும் என்ன? நாம் நித்தியமாக பாதுகாக்கப்பட்டுள்ளோம் என்பதைப்பற்றி, மக்களிடத்திலிருந்து எல்லா சந்தேகத்தை அகற்றியதாகும். உங்களுடைய இரட்சிப்பிற்குரிய அச்சாரத்தை நீங்கள் பெற்றிருந் தால், உங்களுடைய மீட்பின் நாள் வரையிலுமாக இருக்கும்படி தேவன் உங்களை முத்திரையிட்டிருக்கிறார். எபேசியர் 4:30 இவ்வாறு கூறுகிறது:

'... நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப் படுத்தாதிருங்கள்."

எபே. 4:30

148. அவ்வாறிருக்க நீங்கள் பின்மாற்றம் அடைவது எங்ஙனம்? நீங்கள் ஒருவேளை பின்மாற்றம் அடையலாம். ஆனால் நீங்கள் இழக்கப்பட்டுப் போவது இயலாது. நீங்கள் அவ்விதமான நிலையில் நிலைத்திருப்பீர்களாயின், நீங்கள் ஆரம்பத்திலேயே அதைப் பெறவில்லை என்பதைத்தான் அது காண்பிக்கிறது. ஆனால் நீங்கள் ஒரு தேவபிள்ளையாக இருப்பீர்களாயின், 'ஆராதனை செய்கிறவர் ஒருதரம் சுத்தமாக்கப்பட்ட பின்பு, இன்னும் பாவங்கள் உண்டென்று உணர்த்தும் மனச்சாட்சி அவர்களுக்கு இல்லாதிருப்பதினால்'' என்று



அதை வேண்டுமென்றே செய்யவில்லை. என்னை அதற்காக மன்னிப்பீர்களா?' என்று நான் அவரிடம் கேட்டேன். அந்த விஷயத்தில் என்னை மன்னிக்கும்படி என் மனைவியையும் கேட்டேன்.

45.அதற்குப் பிறகு க்ரீன்ஸ் மில் என்ற இடத்திற்கு நான் சென்றேன். அது ஒரு ஜூலை மாதத்தில் நடந்தது. அந்த சமயத்தில் அங்கே காட்டில் மிகவும் நிசப்தமாக இருக்கும். நான் குகையில் அந்த மதியம் முழுவதும் ஜெபித்துக் கொண்டேயிருந்தேன். நான் குகையை விட்டு வெளியே போய், பாறையின் மேல் போய் நின்றேன். என்னால், மலைகளுக்கு அப்பாலும் பார்க்க முடிந்தது. மிகவும் அழகான காட்சியாயிருந்தது; இலைகள் மற்றும் யாவும் அசையாமல் அமைதியாக இருந்தது. அப்பொழுது மாலை சுமார் 5 மணி இருக்கும், அல்லது 6 இருக்கும். அது கோடை காலமாயிருந்தது, ஒன்றும் அசையவில்லை, மிகவும் அமைதியாயிருந்தது. மிகவும் உஷ்ணமானபகலாக அன்று இருந்தது.

''பரம பிதாவே, ஒருசமயம் நீர் மோசேயை பாறையின் மேல் நிறுத்தி அவனுக்கு முன்பாக கடந்து சென்றீர். நான் செய்த பொல்லாங்கை நீர் மன்னித்தருளுவீரானால், நீர் மீண்டும் ஒரு தடவை எனக்கு முன்பாக கடந்து சென்று நான் உம்மை காணும்படி செய்வீரா?'' என்று கேட்டேன்.

அப்பொழுது எனது இடது பக்கத்தில் உள்ள மலையின் பக்கமாக சிறு சுழற்காற்று உண்டாகி, இலைகளை நன்கு அசையச் செய்து என்பக்கமாக அது தாழ இறங்கி வந்து வீசி, காட்டுக்குள் கடந்து சென்றது. அதைக் கண்டு நான் ஒரு குழந்தையைப் போல் கதறினேன்.

நான் வீட்டுக்குத் திரும்பிச் சென்று, “என் பாவம் இப்பொழுது எனக்கு மன்னிக்கப்பட்டது என்று அறிவேன்'' என்று கூறினேன், பாருங்கள்?

எப்பொழுதும் கசப்பான வேர் உங்களை விட்டு அகன்று போகும்படி பாருங்கள். உங்களுக்கு யார் என்ன சொன்னாலும் அதைப்பற்றி பொருட்படுத்த வேண்டாம். தேவன் அங்கே இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். அப்பொழுது, அது பொல்லாங்கு யாவையும் உங்களைவிட்டு அகன்றிருக்கும்படி செய்யும்.

46.கிறிஸ்துவின் எச்சரிக்கையைப் பெற்றிருந்த கிறிஸ்தவர் களின் காரியமானது, இன்று காலையில் நாம் பேசிக் கொண்டிருக்கிற காரியத்திற்கு சாயலாயிருக்கிறதை கவனியுங்கள். இயேசுவின் இந்த எச்சரிக்கையைப் பெற்றிருந்த இந்த கிறிஸ்தவர்கள், அவர் சொன்னபடி அழிவானது ஏற்படப்போகிறதை அறிந்திருந்தபடியினால்,

உரிய சமயத்தில், ஆபத்து வருவதற்கு முன்கூட்டியே எருசலேம் பட்டணத்தைவிட்டு வெளியேறிவிட்டார்கள்.

இப்பொழுது சபை அங்கத்தினர்களை கவனியுங்கள். இவர்களுக்கு அந்நாட்களில் இருந்தவர்கள் முன்னடையா ளமாயிருந்தார்கள். அக்காலத்தில் மக்கள் சபையைச் சேர்ந்து கொண்டு, சபைக்குப்போனார்கள். அவர்கள், ''ஓ, படைகளானது சூழ்ந்து கொண்டு வருகிறது. எனவே நாம் இப்பொழுது கர்த்தருடைய வீட்டிற்குள் சென்று ஜெபம் செய்வோம்'' என்று கூறினார்கள். ஆனால் அவர்கள் பிந்திவிட்டனர். அது ஒரு இம்மியளவு கூட பலனளிக்கவில்லை. பாருங்கள்.

47.ஆனால் இந்த சீஷர்களோ இயேசு முன்னுரைத்த எச்சரிப்பை அறிந்திருந்து, அதன்படி சம்பவிக்கப்போவதை கவனித்துக் கொண்டேயிருந்தார்கள். அவர்கள் அதனால் தப்பித்துக்கொண்டு விட்டனர். வரலாற்றாளர்கள் இயேசுவின் சீஷர்கள் எவ்வாறு எருசலேமின் அழிவிலிருந்து தப்பித்தக் கொண்டனர் என்பதைக் குறிப்பிடுகையில்,''அந்த நரமாம்சத்தை தின்ற, அதாவது இயேசு என்றழைக்கப்பட்ட வருடைய சரீரத்தை தின்றவர்கள்; அவர்களை இயேசு குணமாக்குவதுண்டு (பாருங்கள், சீஷர்கள் இராப்போஜனம் எடுத்ததை, வரலாற்றாளர்கள் இவ்வாறு குறிப்பிட்டிருக்கி றார்கள். அவர்களுக்கு அது என்னவென்று தெரியாது, அவர்கள் மாம்ச சுபாவமுள்ள மனிதர்தானே, விசுவாசியல்ல, வெறும் வரலாற்றாளர்கள் தான் அவர்கள்) அவர்கள் பூமியின் மேல் வந்த அழிவின்று தப்பினார்கள்'' என்று எழுதியுள்ளார்கள்.

48.அவர்கள் தப்பித்த பிறகு, எருசலேம் முழுவதும் அழிக்கப் பட்டதைப் பாருங்கள். இப்பொழுது அது இங்கே பரிபூரணமாக முன் மாதிரியாக இருக்கிறது. அது வெளிப்படுத்தின விசேஷம் 7ம் அதிகாரம். இப்பொழுது கவனியுங்கள். உலகத்திற்குள்ளாக, தீத்து எருசலேமை முற்றுகையிட்ட காலம் தொடங்கி, 1914ம் ஆண்டு வரையிலும் உள்ள இடைப்பட்ட காலத்தில் எப்பொழுதாவது முழு உலகமும் ஒரு பெரிய யுத்தத்தை செய்து கொண்டதாக வரலாற்றில் ஒரு சமயத்தை நானும் காணவே முடியவில்லை.

இப்பொழுது கவனமாக கேளுங்கள். இந்த இடத்தில் தான் திருவாளர்ருத்தர் ஃபோர்ட் அவர்கள் தவறான முடிவுக்கு வந்திருக்கிறார். நிச்சயமாக இங்கே தான். இப்பொழுது கவனியுங்கள்.



மாபெரும் ஊழியக்காரர்கள் சங்கத்தைச் சேர்ந்த முன்னூறும் சொச்சம் பிரசங்கிமார்களுக்கு முன்பாக நின்று, அதைக் குறித்து நிரூபித்தேன். அதைக் கேட்ட அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி ஆரவாரித்தனர். அவர்களில் எழுபது பேர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினால் ஞானஸ்நானம் எடுக்க வருகிறார்கள்.

144. சர்ப்பத்தின் வித்து ஆதியாகமத்திலிருந்து இருக்கிறது. சர்ப்ப மானது தனக்கு வித்தை உடையதாக இருக்கவில்லையெனில், அப்பொழுது கிறிஸ்துவும் பிறக்கவில்லை. ஏனெனில் அவர் சர்ப்பத்தை நோக்கி, "உன் வித்துக்கும் ஸ்திரீயின் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன்'' என்று கூறினார். சர்ப்பத்தின் வித்தைப் பற்றிய விஷயம் கட்டுக்கதையாக இருக்குமெனில், அப்பொழுது, கிறிஸ்துவும் ஒரு புராணமாக கட்டுக் கதையாக ஆகிவிடும்; அதைப் போலவே சபையைக் குறித்த காரியமும் ஒரு கட்டுக்கதையாக இருக்கும். அவை யாவும் அவ்வாறே இருக்கிறது. நீங்கள் அதைப் பிரிக்கவே முடியாது. சர்ப்பதிற்கும் ஒரு வித்து உண்டாயிருந்தது; அந்த விஷயம் தான் அவர்களை உண்மை யிலேயே தடுமாற வைக்கிறது. அதை அவர்களால் ஏன் புரிந்து கொள்ள முடியவில்லை? ஏனெனில் அவர்களுக்கு அதைப் பற்றிய வெளிப்பாடு இருக்கவில்லை.

145. அவர்கள் ஏன் என்னிடம் இதைப் பற்றி விவாதிக்க வரக் கூடாது? பிரசங்கபீடமானது எப்பொழுதும் திறந்தேயிருக்கிறது, யாரையும் சந்திக்க நான் ஆயத்தமாயுள்ளேன். அவர்களோடு நான் தர்க்கிக்க மாட்டேன். ஆனால் நான் நிச்சயமாக அவர்களோடு அதைப் பற்றி விவாதிப்பேன். ஆனால் அந்த அசோசியேஷன் முன்பாக அவர்கள் கேட்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். உங்களில் சிலர், எங்கே அது தவறாயிருக்கிறது என்பதை என்னிடம் சொல்லுங்களேன். ஒரு மூலையில் நின்று கொண்டு, என்னைப் பற்றி, அவ்வுபதேசத்தைப் பற்றி, பேச வேண்டாம். என் முன்பாக நேருக்கு நேர் வந்து கேட்கட்டும். நாம் உண்மையாக அதைப் பற்றி பேசுவோம். நாம் இங்கே வந்து, யார் தவறு, யார் சரியாக இருக்கிறார்கள் என்பதைப் பற்றிக் காண்போமாக. ஆனால் அவர்களோ அதை சமாளிக்க மாட்டார்கள். வெளிப்படையாக கூறுவோமானால், என்ன நேரிடுமென்று அவர்களுக்கு தெரியும். பாருங்கள்?

146. ஏனெனில், அது நான் அல்ல, ஆனால் அது பரிசுத்த ஆவியாயிருக்கிறது. நீங்கள் காண்கிற அதே கர்த்தருடைய தூதன், இந்த காரியங்களெல்லாம் இந்நாட்களில் நடைபெறுகிறபொழுது, இந்நாட்களைப்பற்றி என்ன, கர்த்தருடைய தூதன் இங்கே நின்று

எவ்வாறு நாம் மீட்கப்பட்டோம்? கடந்த சில ஆண்டுகளாக என்ன நடந்தது என்பதை இங்கே சற்று கவனியுங்கள். இயேசுவின் நாமத்தைப் பற்றிய வெளிப்படுத்துதல்; தண்ணீர் ஞானஸ்நானம், நித்தியமான நரகம் என்று ஒன்றும் இல்லை என்பதைப் பற்றிய வெளிப்படுத்துதல், அது இதற்கு முன்னதாக அறியப்படவே இல்லை. உங்களுக்கு பிரியமானவர்கள் நித்திய காலமாய் நரகத்தில் இருப்பார்கள் என்று எண்ணப்பட்டது. பாருங்கள்?

140. நீங்கள் இரட்சிக்கப்பட்டால் ஒழிய, நீங்கள் நித்திய ஜீவனை உடையவர்களாய் இருக்கவே முடியாது. நீங்கள் நித்திய ஜீவனைப் பெற்றிருக்கிறீர்கள் என்றால், அப்பொழுது, நீங்கள் நித்திய காலமாக நரகத்தில் சுட்டெரிக்கப்பட முடியாது. இவ்வுலக வாழ்க்கையோடு, உங்கள் பாவங்களுக்காக நீங்கள் தண்டிக்கப்படுவீர்கள். ஆனால் நரகத்தில் நீங்கள் நித்திய ஜீவனை உடையவர்களாய் இருக்கமுடியாது. நீங்கள் நித்திய ஜீவனைப் பெற்றிருக்கிறீர்கள் என்றால், சதாகாலமும் நீங்கள் அக்கினியால் சுட்டெரிக் கப்படவே முடியாது, ஏனெனில் ஒரே ஒரு வகையான நித்திய ஜீவன்தான் உண்டு. சபையானது அதைப் புரிந்து கொண்டிருக்கிறது என்று நிச்சயமுடையவனாக நான் இருக்கிறேன்.

141. அது என்ன? மற்ற விஷயங்கள் என்ன? மீட்பின் திட்டம். பரிசுத்த ஆவியினால் சமீபத்தில் நமக்குக் கொடுக்கப்பட்ட காரியம் தான் என்ன என்பதைப் பாருங்கள். ஆபிரகாமின் வித்து என்பது - அதைப் பற்றி வெளிப்படுத்துதல் என்ன அர்த்தத்தைக் கூறுகிறது?

142. சர்ப்பத்தின் வித்து. இந்த வெளிப்படுத்தின விசேஷப் புத்த கத்தை பாருங்கள். நாம் அதை பார்க்கையில், அது எவ்வாறு திறந்து கொடுக்கப்படுகிறது என்பதைக் கவனியுங்கள். அது மிகவும் சரியான முறையில் சத்தியமாயிருக்கிறது என்பதை நான் தானே உங்க ளுக்கு வேத வாக்கியங்களைக் கொண்டு நிரூபித்துக் காண்பித் தேன். நான் ஆதியாகமத்திற்கு மிகவும் பின்னோக்கிப் போய், அந்த முத்திரையானது திறக்கப்பட்ட பொழுது, அது வேதாக மத்தில் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்துதல் வரையிலும் எவ்வாறு எங்கும் காணப்படுகிறது எனபதை எடுத்துக் காண்பிப்பேன்.

143. ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரை யிலும், ஒருவரும் "பிதா குமாரன் பரிசுத்த ஆவியின்'' நாமத்தினால் ஞானஸ்நானம் பண்ணப்படவில்லை. அது பொய்யான ஞானஸ்நானமாயிருக்கிறது. அன்றொரு நாளிலே நான் சிக்காகோ



இவைகளுக்குப் பின்பு, பூமியின் நான்கு திசைகளிலும் நான்கு தூதர்கள் நின்று, (இவ்விதமாக அந்நால்வரும் பூமியின் நான்கு மூலைகளில் நின்று கொண்டிருக்கிறார்கள்) பூமியின் மேலாவது, சமுத்திரத்தின் மேலாவது, ஒரு மரத்தின் மேலாவது, காற்று அடியாதபடிக்கு,(வேதத்தில் காற்றுகள் என்பது “போர், சண்டை ' என்ற அர்த்தத்தை கொடுக்கிறது என்றும், பிசாசானவன் ஆகாயத்தின் அதிகாரப்பிரபு என்பதையும் எவரும் அறிந்திருப்பர்)

பூமியின் நான்கு காற்றுகளையும் பிடித்திருக்கக் கண்டேன். பூமியின் மேலாவது, சமுத்திரத்தின் மேலாவது, ஒரு மரத்தின் மேலாவது, காற்று அடியாதபடிக்கு,ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக் கோலையுடைய வேறொரு தூதன் சூரியன் உதிக்குத் திசையிலிருந்து (அத்திசையிலிருந்து இயேசுவும் வருவார்) ஏறி வரக்கண்டேன்;

அவன், பூமியையும் சமுத்திரத்தையும் சேதப்படுத்துகிறதற்கு அதிகாரம் பெற்ற அந்த நான்கு தூதரையும் நோக்கி: நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரை போட்டுத் தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப் படுத்தாதிருங்கள் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டான். வெளி.7:1-3

நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைபோட்டுத் தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத் தாதிருங்கள் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டான்.

49.தேவனுக்கு நேரம் என்பது கிடையாது, அவர் நித்தியமான வராயிருக்கிறார். நாம் காலக்கணக்குப் பார்க்கிறோம். நமக்குத் தெரிந்ததெல்லாம், அங்குலங்கள், சதுரங்கள், இத்தனை கல் தொலைவு என்பன போன்றவை தான். ஆனால் தேவனோ நாட்களின் துவக்கமும் முடிவுமில்லாத, நித்தியமான வராயிருக்கிறார், பாருங்கள், அவர் நித்தியமான வராயிருக்கிறார்.

1914ம் ஆண்டில் முழு உலகமும் ஜெர்மனியை நோக்கி ஒரு உலக யுத்தத்திற்காக அணி வகுத்துச் சென்றது. ஆம், முழு உலகமும் ஒரு உலக யுத்தத்திற்காக புறப்பட்டன. அங்கே ஒரு வினோதமான காரியம் நடந்ததை நீங்கள் கவனித்தீர்களா? எனது நல் நண்பராகிய இங்கே அமர்ந்திருக்கிற சகோ. வுட் அவர்களின் தந்தையே, நீங்கள் இதை தெளிவாக புரிந்து கொள்ள விரும்புகிறேன். பாருங்கள், அவர்கள்.... அவர் யேகோவா சாட்சிகளிலிருந்து மனந்திரும்பியவர் ஆவார்.

50.ஆகவே, அவர்கள் யாவரும் யுத்தத்திற்கு புறப்பட்டுச் சென்றார்கள். அது 1914ம் ஆண்டு என்று நன்கு நினைவிலிருக்கும். அவர்களுக்கு இது நாள் வரையிலும், யார் அந்த யுத்தத்தை நிறுத்தியது என்பது தெரியாது என்பது வினோதமாக இல்லையா? (''உலக யுத்தத்தின் வீழ்ச்சி'' என்ற புத்தகத்தின் இரண்டாவது வால்யூமில், 44ம் பக்கத்தில் அதைப் பற்றி படிக்கலாம். அப்புத்தகத்தின் தொகுதிகள் யாவும் என்னிடம் உள்ளன). கெய்சர்வில் ஹெம், தான் அதற்காக உத்தரவு ஒன்றையும் பிறப்பிக்கவில்லை என்று கூறினார். ஆனால் திடீரென யுத்தமானது நின்று போனது, ஒருவருக்கும் ஏன் நின்று போனது என்பது தெரியாது. அவர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். திடீரென முன்னணியில் வந்து, அவர்களிடம் கூறினார்கள். "எல்லாம் முடிந்தது, யுத்தம் நின்றது என்று. அவர்கள் ஏற்கனவே சமாதான உடன்படிக்கையில், என்ன நடக்கிறதென்று அறியாமல் கையொப்பம் இட்டிருந்தனர்.

அவைகள் யாவையும் குறித்து பேச வேண்டுமானால், ஒன்றிரண்டு நாட்கள் பிடிக்கக் கூடும். அவர்கள் அறிந்திருக்க வில்லை. ஆனால் நாம் அதிலுள்ள முக்கியமான பகுதிகளை மட்டும் எடுத்துக் கொண்டு பார்ப்போம். தேவன் தன்னுடைய வார்த்தையை நிறைவேற்றுவதற்காக, அவரே இதைச் செய்தார். அந்த தூதன் அதை நிறுத்தினான். அத்தூதர்கள் சங்கரிக்கும் ஆயுதங்களை தங்கள் கைகளில் பிடித்துக் கொண்டு சென்றார்கள், ஏன்? முழு உலகையும் அழிப்பதற்காக இன்னொரு தூதன் கூறினார், ''சற்றுப்பொறுங்கள், அதைச் செய்யாதீர்கள், ஏனெனில்,நாம் நமது தேவனுடைய ஊழியக்காரருடைய நெற்றிகளில் முத்திரை போட்டாக வேண்டும்'' என்று.

51.சரியாக, பெந்தெகொஸ்தே எழுப்புதல் உண்டான சமயம் அது. 1906ல் அது துவங்கியது. யுத்தம் 1914ல் துவங்கியது. உங்களில் எத்தனை பேர்கள் அதை அறிவீர்கள்? அந்த பழைய நாட்களை நினைவில் வைத்துள்ள பழங்காலத்து பெந்தெகொஸ்தேக் காரர்கள் யாராகிலும் இங்கே உண்டா? நிச்சயமாக.

அக்காலங்களில், பரிசுத்த ஆவியானவர் மக்கள் மேல் விழ ஆரம்பித்த போது, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்று, அந்நிய பாஷைகளில் பேசி, வியாதியஸ்தருக்காக ஜெபித்தார்கள். அதன் துவக்கமாக அக்காலம் இருந்தது. அல்லது இரு காலங்களுக்கும் இடைப்பட்ட காலமாக அது இருந்தது. அவ்வாறு அது பிறந்த பொழுது, உண்மையான சபையானதும் ஏற்பட்டது.



அவர் என்ன செய்தார்? சிங்காசனத்தண்டைக்கு நடந்து சென்றார். அங்கு தானே தேவ ஆவியானவர் வீற்றிருந்தார்; சிங்காசனத்தில் வீற்றிருந்தவருடைய வலது கரத்திலிருந்த புத்தகத்தை எடுத்தார். அப்பொழுது மூப்பர்கள் யாவரும் வணக்கமாய் விழுந்து, "நீர் அடிக்கப்பட்டபடியினால் பாத்திரராயிருக்கிறீர்'' என்று கூறினார்கள். அப்பொழுது அவர் மீட்பராக ஆகிவிட்டார். சபைக் காலங்களில் உள்ள பரிந்து பேசுகிற புத்தகத்தின் வேளையானது முடிவடைந்து விட்டது. அப்புத்தகத்தை, அவர் மீட்பின் புத்தகத்தை கையில் எடுத்தது முதல்.

136. அவர் அதை எவ்வாறு செய்தார் என்பதைப் பற்றிய வெளிப்படுத்துதலானது அந்த ஏழு முத்திரைகளில் காணப்படப் போகிறது. சபைக்காலங்களைப் பற்றி விவரிக்கிற வெளிப்படுத்தின விசேஷப் புத்தகத்தின் முதல் மூன்று அதிகாரங்களில் பரிந்து பேசுகிற ஊழியத்தின் வேலையானது செய்து நிறைவேற்றப்பட்டதுமே, அக்கிரியையானது முடிவடைந்து விடுகிறது. ஆனால் இப்பொழுது மீட்பானது வெளிப்படுத்தப்பட வேண்டும். அது என்ன? இப்பொழுது, இப்புத்தகத்தை கையில் எடுத்தபொழுது.... இப்பொழுது உங்களுடைய ஆழ்ந்த சிந்தனையைத் தரித்தவர் களாயிருங்கள். ஏனெனில், இந்த ஏழு இராத்திரிகள் நமக்கு கிடைக்குமென்றால், நீங்கள் அதை இப்பொழுதே பெற்றுக் கொள்ளப்போகிறீர்கள்.

137. நீங்கள் அதைப் புரிந்துகொள்ளவில்லையெனில், உங்களுடைய கரத்தை உயர்த்தி, "நான் புரிந்து கொள்ளவில்லை'' என்று கூறுங்கள். ஏனில், நீங்கள் நிச்சயமுடையவர்களாய் இருக்க வேண்டுமென நான் விரும்புகிறேன்.

138. இப்பொழுது "மீட்பு" என்பதைப் பற்றி கவனியுங்கள். சபைக்கு அவர் செய்யும் பரிந்து பேசுதலை" அவர் செய்து நிறைவேற்றி முடித்த பிறகு, அவர் தன்னை இனத்தான் மீட்பராக வெளிப்படுத்துகிறார். அதை நீங்கள் இப்பொழுது புரிந்து கொண்டீர்களா? அவர் அதை எவ்வாறு செய்தார் என்பதைப்பற்றி சபைக்கு வெளிப்படுத்தப் போகிறார். அதன்பிறகு, இந்த வெளிப்படுத்தலானது ஏற்கனவே ஆரம்பித்துவிடது என்றால், அப்பொழுது, நாம் தானே சாலையின் முடிவில் இருக்கிறோம் என்பதை அது நிரூபிக்கிறது. ஆமென்! இது சரியாக இருக்கிறதா இல்லையா என்பதை, வேத வாக்கியங்களை நாம் ஆராய்கையில் கண்டு கொள்ளுங்கள்.

139. என்ன வெளிப்படுத்தப்பட்டு வருகிறது என்பதை நாம் காண்கிறோம். மீட்பைப் பற்றிய வெளிப்படுத்துதல்தான் என்ன?

அவர்கள் எண்ணுகின்றனர். ஒருவேளை யோவான் பாத்திரவானாக இல்லை. அங்கே ஒருவரும் பாத்திரவான் அல்ல. ஆனால் அவன் அழுததன் காரணம் அதுவல்ல.

132. அவன் சந்தோஷத்தினால்தான் அழுதான் என்பதாக நான் நம்புகிறேன். ஏனெனில் இந்தப் புத்தகத்தில் மீட்பினுடைய முழுத்திட்டமும் எழுதப்பட்டிருந்தது என்பதை அவன் கண்டான். அங்கே ஒருவரும் பாத்திரவானாய் காணப்படவில்லை என்பதற்காக அவன் அழவில்லை. ஏனெனில் ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராய் அங்கே நின்றிருந்தார். எனவே அவன் அழுது, "ஓ தேவனுக்கு மகிமை'' என்று கூறினான். அவன் ஆரவாரிக்கிறதை நீங்களே நேரடியாக கேளுங்கள். இப்பொழுது சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவருடைய வலது கரத்திலிருந்து ஆட்டுக்குட்டியானவர் அப்புத்தகத்தை எடுத்தார் என்பதினால் அவன் மகிழ்ச்சியுள்ளவனாய் இருந்தபடியினால், அவன் ஆனந்தக் கண்ணீர் வடித்தான் என்பதாக நாம் பார்க்கிறோம்.

133. பலமுள்ள தூதன் பாத்திரவான் யார்?'' என்று சத்தமிட்டு கூறிய பொழுது அவன் தானே ஒரு இனத்தான் மீட்பர் வருவதை விளம்பரப்படுத்தினான். அவன் அவ்வாறு அறிவித்த பிறகு உடனே 'இப்புத்தகத்தை எடுக்க பாத்திரவான் யார்?'' என்று அவன் கூறினான். அப்பொழுது யோவான் அழுதான். அப்பொழுது என்ன நடந்தது? அங்கே புத்தகம் இருந்ததை அவன் கண்டான். அது அங்கே இருந்தது. ஆனால் யார் அதை எடுக்க பாத்திரவான்?

134. நல்லது. அங்கே காபிரியேல் நின்றான். நிச்சயமாக அவன் தகுதியுள்ளவன்தான். ஆனால் பாருங்கள், அவன் ஒரு மனிதன் அல்ல. ஒரு தூதன் அவன். அங்கே மிகாவேலும் நின்றிருந்தான். அவனுங்கூட தகுதியுள்ளவன்தான். ஆனால் அவன் ஒரு மனிதன் அல்ல. அவனோ ஒரு தூதன். எனவே, நம்மைப் போல் பூமிக்குரிய மனிதன்தான் அதற்குத் தேவையாயிருந்தது? அதன்பிறகு, அவன் அங்கே உலகத் தோற்றத்திற்கு முன்னர் அடிக்கப்பட்டிருக்கிற ஆட்டுக்குட்டியானவர் வருவதைப் பார்த்தான். அவர் உலகத் தோற்றத்திற்கு முன்னரே அடிக்கப்பட்டவராயிருந்தார். அப் பொழுது யோவான் அழுதான். ஆமென். ஏனெனில் அது அங்கே இருந்தது, அவன் முழுக் காரியத்தையும் பார்த்தான், கவனித் தீர்களா?

135. அவன் அங்கே ''யார் பாத்திரவான்'' என்று சப்தமிட்டு அறிவித்தபொழுது, இனத்தான் மீட்பர் வருவதைப் பற்றி பிரகடனம் செய்தான். இதோ அவர் இங்கே ஒரு ஆட்டுக்குட்டி யானவராக நின்றார்.



அதன்பின்பு, பெந்தெகொஸ்தேயினர் அசெம்ப்ளீஸ் ஆஃப் காட், சர்ச்ஆஃப் காட் ஆகிய ஸ்தாபனங்களை உண்டாக்கிக் கொண்டனர். இவ்வாறு அவர்கள் தங்களுடைய ஸ்தாபன கொள்கைகளுக்குள் சென்று, வழி தவறினர். இப்பொழுது இருக்கிறது போலவே அப்பொழுதும் இருந்தனர். எனவே அது .... நாம் காலத்தின் கடைசியில் இருக்கிறோம் என்பதை நீங்கள் பாருங்கள். யாவும் முடிவுக் கட்டத்தை நோக்கி இறங்கி வருகிறது, யாவும் சரியாக இந்தக் கடைசிக் கட்டத்திற்குள் ஓடிவருகின்றது.

52.இப்பொழுது, இந்த நான்கு... நீங்கள் கவனித்து பாருங்கள், போர் சரியாக பதினோராம் மாதமாகிய நவம்பரில் 11ம் தேதி, பகல் 11ம் மணி வேளையில் நின்று விட்டது. அது சரியாக வருடத்தில் 11ம் மாதம், மாதத்தில் 11ம் நாள், நாளின் 11ம் மணிவேளையாக இருந்தது. அதைக் குறித்து இயேசு என்ன சொன்னார்? முதலாம் மணி வேளையில் ஒருவன் திராட்சைத் தோட்டத்திற்கு வேலைக்குச் சென்றான். அவனுக்கு 1பணம் கூலியாக கிடைத்தது. கடைசியாக சிலர் வேலைக்குச் சென்றார்கள். அவர்கள் தான் பதினோராம் மணி வேளையில் சென்றவர்கள். அது சரியாக இருக்கிறதல்லவா?

அங்கே அவர்கள் இருக்கிறார்கள், அவர்கள் பதினோராம் மணி வேளையில் உள்ளவர்கள். அவர்கள் பிந்தினோர் ஆவர். இப்பொழுது அவர்கள் வருவதற்கு உரிய வேளையாகி விட்டது. அவர்கள் யூதர்கள் மத்தியிலிருந்து உள்ளவர்கள். இப்பொழுது ஒன்று சேர்ந்து ஒரு தேசமாக உருவாகி விட்டார்கள். அவர்கள் உலகம் முழுவதிலும், ஈரான் முதற்கொண்டு பல்வேறு தேசங்களிலும் சிதறடிக்கப்பட்டு விட்டார்கள். அங்கே அவர்கள் இருந்த பொழுது, இயேசு பூமியில் இருந்தார் என்பதனை அறியாதிருந்தார்கள்; ஒரு புதிய ஏற்பாடு உண்டு என்பதையோ, அல்லது வேறு எதையுமோ அறியாதிருந்தார்கள்.

53.இப்பொழுது நீங்கள் லைஃப் என்ற பத்திரிக்கையில் அவர்கள் தங்கள் சுய தேசத்திற்குத் திரும்பி வந்து கொண்டிருப்பதைக் குறித்த படங்கள் பிரசுரித்துள்ளதைப் பார்க்கலாம்.

''அத்தி மரம் துளிர் விடுவதை நீங்கள் காணும் போது'' என்று இயேசு கூற வில்லையா? யூதர்கள் எப்பொழுதும் அத்தி மரத்தினால் உவமையாக சொல்லப் படுகிறார்கள். ''இவைகளெல்லாம் சம்பவிக்கு முன்னே, இந்த சந்ததி ஒழிந்து போகாது'' என்று இயேசு கூறினார். இப்பொழுது அவர்கள் ஏற்கனவே தங்கள் தேசத்திற்கு திரும்பி வந்து விட்டார்கள். அவர்கள் ஏற்கனவே ஒரு தேசமாக ஆகி, தங்கள் சொந்த

நாணயத்தையும், சொந்தக் கொடியையும் உடையவர்களாக இருக்கின்றனர். அத்தேசம் ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு நாடாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அவள் தன் நாட்டில் குடியேறிவிட்டாள். அவள் ஆயத்தமாக இருக்கிறாள்.

இப்பொழுது எதற்காக ஆயத்தமாயிருக்கின்றனர்? அவர்களிலுள்ள இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்கள் ஆகிய இஸ்ரவேலர் முத்திரையிடப் படுவதற்காகவே. இன்னும் ஒரு நிமிடத்தில் நாம் அதைப் பற்றிப் பார்ப்போம். நான் உண்மையான யூதர்களைப் பற்றி தான் இங்கே குறிப்பிடுகின்றேன். அவர்கள் யூதர்கள், வால் ஸ்ட்ரீட்டிலுள்ள எப்பொழுதும் ஏமாற்றி திருடும் கூட்டமாகிய யூதர்களை நான் குறிப்பிடவில்லை. அங்கே தேவனுடைய கட்டளைகளை கைக்கொள்ளும் மிகவும் உண்மையான யூதர்களைப் பற்றித் தான் நான் குறிப்பிடுகிறேன். (அமெரிக்காவில் நியூயார்க் நகரிலுள்ள வால் ஸ்ட்ரீட் என்ற இடம் தான் அமெரிக்காவின் பங்குச் சந்தையாகும். உலகின் பெரிய பங்குச் சந்தையுங் கூட. இங்கு யூதர்கள் ஆகிய வர்த்தகளின் ஆதிக்கம் தான் அதிகம் - மொழிபெயர்ப்பாளர்)

54.இப்பொழுது உண்மையான யூதர்கள் மீண்டும் பாலஸ்தீனாவில் கூடி வந்து கொண்டு இருக்கிறார்கள். தீர்க்கதரிசி என்ன உரைத்தானோ, அதே விதமாக, இஸ்மவேலும், ஈசாக்கும் ஒருவர் கழுத்தை ஒருவர் நெறிக்கும் படியான அளவுக்கு அருகருகில் எப்பொழுதும் சண்டையிட்டுக் கொண்டவர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். கடைசி நாட்களில் இவ்வாறு அவர்கள் அங்கே இருப்பார்கள் என்று முன்னுரைக்கப்பட்டுள்ள படி, அவர்கள் அவ்வாறே அங்கே வாசம் பண்ணுகிறார்கள். இஸ்மவேல் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாசம் பண்ணுகிறானென்றால், ஈசாக்கு அதற்கடுத்த தெருவில் இருக்கிற அளவுக்கு மிகவும் அருகருகே அவர்கள் வாசம் பண்ணுகிறார்கள். முகம்மதியர்களும், யூதர்களும்மான அவர்கள், ஒருவருக்கொருவர் எவருக்கும் சொந்தமில்லாத இடத்திற்காக சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

55.இப்பொழுது, நாம் பெற்றிருக்கிற இந்த செய்தியோடு அந்தக் காரியம் தொடர்புடையதாக இருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றிப் பார்ப்போம். இஸ்ரவேல் என்ற ஒரு நாடு ஏற்படுவதைப் பற்றி கைச்சாற்றிடப்படும் அதே வேளையில், அதேமணி நேரத்தில், அதே நாளில், அதேமாதத்தில் நான் இந்தியானாவிலுள்ள க்ரீன் மில் என்னுமிடத்தில் இருந்தேன். அப்பொழுது அந்த தூதன் அங்கே எனக்கு தரிசனமாகி, இந்த செய்தியோடு என்னை ஊழியக்களத்திற்கு



தான் அவைகள் போதிக்கப்பட முடியாதபடி இருந்தன. அவைகள் மனுபுத்திரருக்கு வெளிப்படுத்தப்படாமல் இருந்தது. வேதம் அவ்வாறு கூறுகிறது. இந்த நாள் வருகிற வரையிலும், அதற்கு முன்னால் மனுபுத்திரருக்கு அவைகள் திறந்து கொடுக்கப்படமாட்டாது என்று வேதம் கூறுவதை நான் உங்களுக்கு இங்கே வேத வாக்கியங்களிலிருந்து காண்பிக்க முடியும். அம்மகத்தான ஆசீர்வதிக்கப்பட்ட காரியங்களோடு நாம் முடிவுக்கு வந்துள்ளோம்.

129. 6-ம் வசனம்... அல்ல து 5-ம் வசனத்தின் பகுதி. 5-ம் வசனத்தில் மூப்பன் "இதோ ஆட்டுக்குட்டி" என்று கூறினான். ஆனால் அவன் சுற்றுமுற்றும் பார்த்தபொழுது, ஒரு சிங்கத்தை அவன் கண்டான். அது ஆட்டுக்குட்டி என்பதற்குப் பதிலாக ஒரு சிங்கமாக இருந்தது. ஆனால் அப்பொழுது என்னவாயிருந்தது? அவரது மத்தியஸ்த வேலையானது செய்யப்பட்டது. சபைக் காலத்தின் முடிவில் அவர் தமது மத்தியஸ்தரின் ஊழியத்தை விட்டு வெளியேறி, யூதா கோத்திரத்துச் சிங்கமாக ஆகப் போகிறார். அவரது மத்தியஸ்த ஊழியமானது முடிவடைந்துவிட்டது. அவர் நியாயாதிபதியாகிய சிங்கமாக ஆகப் போகிறார். அவரது மத்தியஸ்த ஊழியமானது முடிவடைந்துவிட்டது. அவர் நியாயாதிபதியாகிய சிங்கமாக ஆகப் போகிறார். கரத்திலிருந்து அப்புத்தகத்தை அவர் எடுத்துக் கொண்டு விடும் பொழுது அவ்வாறு ஆகிறார்.

130. இப்பொழுது இதை நீங்கள் மறந்து விட வேண்டாம், நினைவில் கொள்ளுங்கள். ஒரு மனிதன் மீட்பதற்காக போகும் பொழுது, அவன் மனிதர்களை நகரத்தின் ஒலிமுக வாசலுக்கு அழைத்துச் செல்கிறான், அவர்கள் மூப்பர்களாயிருத்தல் வேண்டும், அங்கே தானே அவன், தான் அங்கே போய் நிற்பதன் நோக்கத்தைப் பற்றி அறிவிக்கிறான். அவன் ஒலிமுகவாசலுக்குச் சென்றபொழுது அதைத்தான் அவன் செய்தான். அங்கே சென்ற பொழுது அவன் கூறினான். "நான் இங்கே ஒரு இனத்தான் மீட்பன் என்ற ரீதியில் இச்சுதந்திரத்தை உரிமை கோர வந்துள்ளேன். இதைப் பற்றி நகரத்தின் மூப்பர்களுக்கு முன்பாக தெரியப்படுத்தவே நான் இங்கே இருக்கிறேன்" என்றான். பாருங்கள்?

131. யோவான் அழுதபொழுது... இப்பொழுது கடந்த வாரத்தில் நான் ஒருவர் கூறினதைக் கூறினேன். "ஒருவரும் பாத்திரவானாய் காணப்படவில்லை என்பதற்காக அவன் அழுதான்'' என்று அவர்கள் கூறினார்கள். அது அவ்வாறு இல்லை. பரிசுத்த ஆவியின் அசைவின் கீழாக உள்ள ஒரு மனிதன் அதற்காக அழமாட்டான். அவன் பாத்திரவானாய் இல்லை என்பதற்காக அவன் அழுதான் என்பதாக

கொண்டிருந்தாள்! இனி அவளுக்கு பாடுபடுதல் இல்லை. இனி அவளுக்கு கலக்கமில்லை.

125. நான் மெதோடிஸ்டாக ஆக வேண்டுமோ? பாப்டிஸ்ட் சபையில் நான் சேர்ந்து கொள்ள வேண்டுமோ? ப்ரெஸ்பிடேரியனாக நான் ஆக வேண்டுமோ? இல்லை, ஐயா, பரிசுத்த ஆவியைப் பெற்று இளைப்பாறுக. நாம் ஆயிர வருட அரசாட்சியின் நாளுக்காக காத்திருக்கிறோம். அப்போது துதிக்கப்படும் நமது கர்த்தர் வந்து, காத்து நிற்கும் தம் மணவாட்டியை எடுத்துச் செல்வார். ஓ, பூமியானது இனிமையான விடுதலையின் நாளுக்காக ஏங்கித் தவித்துக் கதறுகிறது. (அவை யாவும்; இயற்கையானது ஏங்கித் தவிக்கிறது. அத்தி இலைகள் உட்பட யாவும் ஆசீர்வதிக்கப்பட்ட விடுதலையை அளிக்கும் அந்நாளுக்காக ஏங்கித்தவித்து, காத்துக் கொண்டிருக்கிறது)

அப்போது நமது இனத்தான் மீட்பர் திரும்பி வந்து தமது மணவாட்டியை எடுத்துக் கொள்வார்.

126. இப்பொழுது அவள் இளைப்பாறிக் கொண்டிருக்கிறாள், பரிசுத்தமாகுதல் என்பதின் கீழா? இல்லை. நீதிமானாகுதல் என்பதின் கீழாகவா? இல்லை. ஆனால் நீதிமானாகுதல், பரிசுத்தமாகுதல் என்னும் இவ்விரண்டிற்கும் கீழாகவும், அதோடு இளைப்பாறுதலுக்குள்ளும் இருந்து கொண்டிருக்கிறாள்.

127. இப்பொழுது ஏசாயா 28-ம் அதிகாரம் 18-ம் வசனம் கூறுகிறது :

"...கற்பனையின் மேல் கற்பனையும், பிரமாணத்தின் மேல் பிரமாண மும்.... இங்கே கொஞ்சமும், அங்கே கொஞ்சமுமாம் என்கிறார்கள். நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்.

பரியாச உதடுகளினாலும் அந்நிய பாஷையினாலும் இந்த ஜனத்தோடே பேசுவார். இதுவே... இளைப்பாறுதல்.

(ஏசாயா 28:10,12).

இதுவே ஓய்வு ஆகும். இதனுள் தான் சபையானது காத்திருக்கும்படியாக போகிறது.

128. பாருங்கள், நாம் எவ்வாறு நீதிமானாகுதல், பரிசுத்தமாகுதல் என்பதற்குள்ளாக பிரவேசித்து வந்து, இப்பொழுது பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்திற்குள் வந்து, இளைப்பாறிக் கொண்டிருக்கிறோம். காத்திருக்கிறோம் என்று. அது இப்பொழுது என்னவாயிருக்கிறது? இப்பொழுது நாம் இந்த வெளிப்படுத்துதல்களுக்குள் வரும் போது



அனுப்பினார். அங்கே அவர் அந்த நதிக்கரையில் என்னை சந்தித்து என்ன நடக்கும் என்று கூறிய பிறகு, அதற்கு பதினோரு ஆண்டுகள் கழித்து, இஸ்ரவேல் தேசமாக உருவாவதற்கான தீர்மானம் கைச்சாற்றிடப்பட்ட அதே நேரத்தில் அவர் எனக்கு தமது உத்தரவைக் கொடுத்தார்.அது யாவும் ஒன்றோடொன்று சம்மந்தப்பட்டுள்ளது.

56.பாருங்கள், கர்த்தருடைய தூதனானவர் இப்பொழுது பூமியில் இருந்து கொண்டு, எங்கும் சுற்றித்திரிந்து, கர்த்தருடைய வருகைக்காக யாவற்றையும் ஆயத்தப்படுத்தக் கொண்டிருக்கிறார்.

அதே தூதர்கள் தான் சோதோமுக்குள் சென்று, அவர்களுடைய பாவங்களின் கூக்குரல், கேட்டதன்படியே இருப்பதைப் போய் கண்டார்கள். ''எங்களிடத்தில் வந்து எட்டின அதின் கூக்குரலின்படியே அவர்கள் செய்திருக்கிறார்களோ இல்லையோ என்று பார்த்து அறிய இறங்கி வந்திருக்கிறாம்'' என்றார்கள். நீங்கள் அதை ஞாபகத்தில் வைத்திருக்கிறீர்களா? ஒரு தூதன் அங்கே போனான்.

(ஒரு தூதனானவர் தெரிந்து கொள்ளப்பட்ட ஆபிரகாமோடு தங்கிவிட்டார்). சோதோம் அப்பால் இருந்தது. இரு தூதர்கள் அங்கே சென்று அவர்களுக்கு பிரசங்கித்து, அச்சிறு குழுவாகிய உறங்கும் கன்னியரை வெளியே கொண்டு வந்தனர். பாருங்கள்? சரி. (ஆனால் ஒரு தூதனானவர் ஆபிரகாமோடு தங்கி விட்டார்).

இந்த தூதர்களோ சோதோமில் பிரசங்கித்தார்கள். நவீன பில்லிகிரகாம் மற்றும் உள்ளோரும் அவர்களை வெளியே இழுத்தனர்.

57.ஆனால் ஆபிரகாமோடு தங்கிவிட்ட இந்த தூதனானவரோ, தன்னுடைய முதுகு கூடாரத்தின் பக்கமாக திரும்பியிருக்கும்படி நின்று கொண்டிருந்தார். ''ஆபிரகாமே, உன் மனைவியாகிய சாராள் எங்கே?'' என்று கேட்டார். அவள் விவாகமானவள் என்பதும், அவன் விவாகமானவன் என்பதும் அத்தூதனுக்கு எப்படித் தெரியும்? அவனுக்கு மனைவி ஒருத்தி இருக்கிறாள் என்பது அவருக்கு எப்படித் தெரியும்? அவளது பெயர் என்ன என்றும் அவளுடைய பெயர் சாராள் என்பதும் எப்படி அவருக்குத் தெரியும்?

அவருக்குப் பின்புறமாய் அவள் கூடாரத்தில் இருந்தாள்.

'நல்லது, நான் உனக்கு ஒரு வாக்குத்தத்தம் செய்தேன்" என்றார் அவர். ''நான்'' அவர் யாரென்று நீங்கள் கண்டுகொள்ள வில்லையா? ''ஒரு உற்பவ காலத்திட்டத்தில் நிச்சயமாய் உன்னிடத்திற்கு திரும்ப

வருவேன். அப்பொழுது உன் மனைவியாகிய சாராள் இந்த குழந்தையை பெற்றிருப்பாள்'' என்றார்.

அவருக்குப்பின்னாக கூடாரத்தின் வாசலில் நின்றிருந்த சாராள் அதைக் கேட்டபோது நகைத்தாள்.

தூதனானவரின் முதுகுப் புறமானது சாராள் இருந்த கூடாரத்திற்கு எதிராக இருக்கும்படி இருக்க, அவர், ''சாராள் ஏன் நகைத்தாள்?'' என்றார்.

தெரிந்து கொள்ளப்பட்ட சபைக்கு அவர் கொடுத்த அடையாளத்தைப் பார்த்தீர்களா? சோதோமில்அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அடையாளத்தைப் பார்த்தீர்களா? மீண்டும் அங்கே மூன்றுவிதமான பிரிவினர் இருக்கிறார்கள். நாம் மீண்டும் அவர்களை பார்க்கிறோம். நாம் பெற்றிருக்கிறோம்.

58.இந்த பெரிய ஊழியக்காரர்கள் எல்லாம், அந்த உலகையெல்லாம் வளைய வந்து கொண்டிருக்கிறார்கள். பில்லிகிரகாம் பரிசுத்த ஆவியைப்பெற்ற பிறகு, இதற்குள்ளாக வர முடியவில்லை. அவருடைய ஊழியகளம் அங்கே தான் இருக்கிறது. அவர் அதை கண்டு கொண்டுள்ளார். தேவனும் அவரை அங்கே தான் வைத்திருக்கிறார். பாருங்கள்? அறிவினால் நிறைந்த அந்த பிரசங்கத்தைக் கொண்டு, இங்கே உள்ளதை அவர் கேட்டிருந்தும் கூட, அவர் சோதோமுக்குள் இருக்கும் உறங்கும் கன்னியருக்கு கிருபை கிடைத்து அவர்களை காப்பாற்றிட முயற்சிக்கிறார். பாருங்கள்? ஆனால் இங்கோ , ஆபிரகாமும் அவனது வகுப்பினரும் இருக்கிறார்கள்.

“சோதோமின் நாட்களில் நடந்தது போல மனுஷகுமாரன் வரும் நாட்களிலும் நடக்கும்'' என்று இயேசு கூறினார். பாருங்கள், அத்தூதர்கள் இப்பூமியில் இருந்து கொண்டு அதே காரியத்தைச் செய்து கொண்டிருப்பார்கள்.

அதனால் தான் பில்லிகிரகாம் பாப்டிஸ்ட்டுகள் மற்றும் இன்ன பிற சபைகளுக்குள்ளும் சென்று கொண்டிருக்கிறார். அவ்விதமாகத் தான் அவர் செய்தாக வேண்டும். ஜேக் ஷில்லர் மற்றும் ஏனைய பெரிய மனிதர்களைப் பாருங்கள் அவர்கள் எழுப்புதல் பிரசங்கிகள் ஆவர். அவர்கள் மக்களை சுண்டி இழுக்கிறார்கள். எனவே அவர்கள் அப்படித்தான் இருந்தாக வேண்டும். அவர்கள் அங்கே அற்புதங்கள் ஒன்றும் செய்யவில்லை. ஒரு சில காரியங்களை, அதாவது மக்களை குருடாக்குவதைச் செய்தார்கள். அனால் சுவிசேஷத்தைப்



என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன்."

யோவான் 14:1-2.

121. போவாஸ் போய் என்ன செய்தான் என்பதைப் பாருங்கள். போவாஸ் ஒலிமுக வாசலில் போய் நின்று, அங்கே மூப்பர்களை அழைத்து, தன் பாதரட்சையைக் கழற்றி, "நான் இன்று நகோமியையும், அவளது சுதந்திரம் அனைத்தையும் மீட்டுக் கொண்டேன் என்று அறியப்படட்டும்'' என்றான். அவற்றோடு மோவாபிய ஸ்திரீயையும்கூட மீட்டுக் கொண்டான்.

122. இயேசு வந்தபொழுது, யாரை மீட்பதற்காக அவர் வந்தார்? இஸ்ரவேலை. இஸ்ரவேலை எடுத்துக் கொள்வதற்காக வந்த அவர் என்ன செய்தார்? அவரோ புறஜாதி மணவாட்டியை எடுத்துக் கொண்டார். அவ்வாறுதான் அவர் செய்தார். இஸ்ரவேலை அவர் எடுத்துக் கொண்ட பொழுது அவர் அப்படிச் செய்தார். அவர் தமக்குச் சொந்தமான ஜனத்தண்டை சென்றார். அவர் அவ்வாறு தான் செய்ய வேண்டியிருந்தது. அவர் செய்ய வேண்டியதாயிருந்த முதலாவதாக கரியம் தான் என்ன? தமக்குச் சொந்தமானதை மீட்டுக் கொள்ள வேண்டும். இஸ்ரவேல் சபையாகிய அந்த ஸ்திரீக்கு புறஜாதி சபை ஒரு சகோதரியாக இருந்தாள். நிச்சயமாக. இவளைப் பெற்றுக் கொள்வதற்காக அவர் இஸ்ரவேலை மீட்டுக் கொள்ள வேண்டியதாயிருந்தது. ரூத்தை தன் மணவாட்டியாக அவன் பெற்றுக் கொள்வதற்காக, அவன் நகோமியை மீட்டுக் கொள்ள வேண்டியதாயிருந்தது.

123. இப்பொழுது அவன் என்ன செய்தான்? அவளை எடுத்துக் கொள்வதற்கு முன்பாக... ஓ மகிமை! வ்யூ! அவன் என்ன செய்தான்? தன் பண்ணைக்கு அவன் சென்று எல்லாவற்றிற்கும் வர்ணம் பூசியிருப்பான், மற்றும் புதிய தரை விரிப்புகளை அவன் போட்டிருப்பான் என்று நினைக்கிறேன். அவன் ஒரு புதிய வீட்டையும் கூட கட்டியிருக்கக்கூடும் என்று நான் அனுமானிக்கிறேன். நமது விஷயத்தில் அது ஒரு புதிய வீடாக இருக்கிறது. அவன் எல்லாவற்றையும் ஆயத்தம் செய்து, அவன் திருமணத்திற் கான மலர்ச்செண்டுடன் திரும்பி வந்தான். ஆமென்!

124. ரூத் என்ன செய்து கொண்டிருந்தாள்? வேறு எதுவும் செய்யவில்லை, அவள் இளைப்பாறிக் கொண்டிருந்தாள்! காத்துக்

நாம்தானே மரணத்திலிருந்து ஜீவனுக்குள் கடந்து சென்று, இயற்கையோடு சேர்ந்து நாமும் அழியாத ஜீவனைப் பெறும் வேளைக்காக ஏங்கித் தவித்து காத்துக் கொண்டிருக்கிறவர்களாய் காணப்படுகிறோம். நமது சரீரங்கள் மீட்கப்பட்டு, அழியாமையின் பூரணத்தை நாம் பெறுவோம். யாவும் மீட்கப்பட்டு விட்டன. நாம் அந்த வாயிலிலிருந்து அவர் திரும்ப வருவதற்காக நாம் காத்துக் கொண்டிருக்கிறோம். ஆமென்.

118. அதன்பிறகு என்ன? ரூத்துக்கு பலன் அளிக்கப்பட்டது. அதைப்போல நமக்கு பலன் அளிக்கப்படும். அந்தக் காரியத்தைத் தான் ஏழு முத்திரைகளால் முத்திரையிடப்பட்டுள்ள புத்தகம் நமக்கு திறந்து கொடுக்கப்போகிறது. இவைகளெல்லாம் என்னவாயிருக்கிறது? அவைகள் திருவசனத்தில் எழுதப்பெறவில்லை. அவைகள் பரிசுத்த ஆவியால் வெளிப்படுத்தப்பட வேண்டும். ஆனால் நீங்கள் கவனித்தீர்களானால் உண்மையாகவே, அவை யாவுமே வேத வாக்கியங்கள் பூராவிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் ஜனங்களுக்கு அவைகள் மறைக்கப்பட்டுள்ளன. சற்று நேரம் கழித்து அந்த சுருளைப் பற்றிப் பார்க்கையில், அது எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் காண்பீர்கள். அப்பொழுது அக்காரியங்கள் எவ்வாறு திறக்கப்படும் என்பதையும் அறிந்து கொள்வீர்கள்.

119. ஆம், இப்பொழுது இளைப்பாறிக்கொண்டிருத்தல். நீதிமானாக்கப்படுதல் என்ற நிலையின் கீழாக ரூத் இருந்தாள். அதை உங்களால் காண முடிகிறதா, அப்படியெனில் 'ஆமென்'' என்று கூறுங்கள். (சபையார் 'ஆமென்'' என்று கூறுகிறார்கள்-ஆசி). பரிசுத்தமாக்கப்படுதல் என்ற நிலையின் கீழாக ரூத் நற்கிரியைகளைச் செய்து பாடுபடுகிறாள். ரூத் இளைப்பாறுகிறாள், கிரியையை செய்து முடித்துவிட்டு போவாஸ் திரும்ப வருவதற்காக அவள் காத்துக்கொண்டிருக்கிறாள்.

120. நமது போவாஸ் கல்வாரியிலே கிரியை செய்து முடித்து விட்டார். ஆனால் அவர் தமது பரம வாசஸ்தலத்துக்கு நம்மை அழைத்துச் செல்லும் முன்னர், அவர் முதலாவதாக நமக்கு ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ண தம் பரம வீட்டுக்குப் போயிருக்கிறார்: (யோவான் 14ல்) மகிமை!

''உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்.



பிரசங்கித்தல் அவர்களை குருடாக்கிப் போட்டிருக்கிறது, பாருங்கள். வேதம் அவ்வாறு கூறுகிறது. ஆனால் இங்கே நின்றிருந்த இவரோ, ஆபிரகாமுக்கும், அவனுடைய கூட்டத்தாராகிய தெரிந்து கொள்ளப்பட்ட சபைக்கும் இவ்வடையாளங்களை, இயற்கைக்கு மேம்பட்ட அடையாளங்களை செய்தார்.

59.1914ல் உலகம் யுத்தத்திற்கு சென்றது. அது முதற்கொண்டு அவர்கள் சமாதானமா யிருக்கவில்லை. தொடர்ச்சியாக அவர்கள் சண்டையிட்டுக் கொண்டே யிருக்கிறார்கள். இன்னமும் அவர்கள் அதே காரியத்தைத் தான் செய்து கொண்டிருக்கிறார்கள்? அத்தூதர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் பிடித்துக் கொண்டிருந்தார்கள்'' ஓ தேவனே, இரக்கமாயிரும்! நான் தரிசனத்தில் கண்ட அம்மகத்தானதை அவர்கள் தடுத்து நிறுத்திக் கொண்டிருக்கிறார்கள். (முழுவதும் அழிவுக்குள்ளாகின்றது). அது வந்து அழிக்கிறவரையிலும், அவர்கள் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ளாதபடிக்கும், இஸ்ரவேல் தன் சொந்த நாட்டிற்குத் திரும்பிச் சென்று ஒருமித்து கூடுகிற வரையிலும், செய்தியானது இஸ்ரவேலுக்குச் சென்று, பரிசுத்த ஆவியாகிய முத்திரையினால் அவர்கள் முத்திரையிடப்படுகிற வரையிலும், அணுகுண்டுகளையும், யுத்தங்களையும் அத்தூதர்கள் தடுத்து நிறுத்தி பிடித்து வைத்திருக்கிறார்கள்.

பாருங்கள், புறஜாதியார் மத்தியிலிருந்து அவரது நாமத்திற் கென ஒரு கூட்டம் மக்கள் பிரித்தெடுக்கப்பட்ட பிறகு; இந்த காலத்தில் தான் அவர்கள் அழைக்கப்படுகிறார்கள். அதன் பிறகு, இஸ்ரவேல் மட்டுமே, மூன்று வருடங்கள் ஆறு மாதங்கள் அளவுக்கு செய்தியை பெறுகிறது. தானியேல் அவ்வாறு உரைத்தான். அவர்கள் அவ்வாறு செய்வார்கள், அங்கே அது இருக்கும் என்றும் உரைத்திட்டான். அங்கே 70 வாரங்கள் இருந்தது.

ஏழு ஆண்டுகள் யூதர்களுக்கான இரட்சிப்புக்காக விடப்பட்டுள்ளது என்று கூறப்பட்டிருந்தது. அந்த எழுபதாவது வாரத்தின் நடுவிலே அதிபதியாகிய மேசியா, அவர் தான் கிறிஸ்து, வந்திடுவார், அவர் அப்பொழுது சங்கரிக்கப்படுவார் என்று தானியேல் கூறினான். இயேசு மூன்றரையாண்டுகள் பிரசங்கத்தார். அதன்பிறகு அவர் சங்கரிக்கப்பட்டார். அன்றாட பலி அத்தோடு நிறுத்தப்பட்டது. அதை தானியேல் கூறியுள்ளான். சரி.

60.அதன்பிறகு, ஒரு இடைப்பட்ட காலமானது புறஜாதியாருக்கு கொடுக்கப்பட்டது. அவர்கள் இந்த காலத்திற்குள் வருகிறார்கள். பிறகு,

யூதர்களுக்கு இன்னும் மூன்றரை ஆண்டுகள் மீதியாக விடப்பட்டுள்ளது. வெளிப்படுத்தின விசேஷம் 11ம் அதிகாரத்தை நாம் எடுத்துக் கொண்டால், நாம் அங்கே சரியாக முடிவு காலத்தைக் குறித்து தெளிவாகப் பார்க்கலாம்.

(சபையானது வெளிப்படுத்தின விசேஷம் 19ம் அதிகாரம் வரையிலும் தோன்றவேயில்லை. அந்த முடிவின் கட்டத்தில் மோசேயும், எலியாவும் மீண்டும் தோன்றி, யூதர்களுக்கு பிரசங்கிக்கின்றனர். அந்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்ட இரு மனிதர்களோ, அல்லது சாட்சாத் அவர்கள் இருவருமோ வருவார்கள். அவர்கள் இருவரும் மரிக்கவில்லை. ஆகவே, அவர்கள் அவர்களை கொன்று விட, அவர்களது சரீரங்கள் சோதோம் என்னப்பட்ட தெருவில் கிடக்கும். அங்கே நமது கர்த்தரும் சிலுவையில் அறையப்பட்டார். அது எருசலேமாகும். மூன்று நாட்களுக்குப் பிறகு, ஜீவன், அதாவது ஜீவ ஆவியானது அவர்களுக்குள் வந்து, அவர்கள் உயிரோடெழும்பி, மேலே எடுத்துக் கொள்ளப் பட்டார்கள். அப்பொழுது மூன்றிலொரு பங்கு பூமியானது வெடித்துச் சிதறியது. அவர்கள் யூதர்கள் மத்தியில் அற்புத அடையாளங்களைச் செய்கிறார்கள்.

61.இதோ இங்கே இந்த யூதர்கள் இருக்கிறார்கள். இவர்க எண்டைக்குத் தான் அவர்கள் இருவரும் பிரசங்கிக்க வருகிறார்கள். அந்த யூதர்கள் தங்கள் நாட்டிற்கு திரும்பி வருகிற வரையிலும், உலகத்தினால், அவர்களால் ஒருவரையொருவர் குண்டுவீசி அழித்து, அழிவைக் கொண்டு வர இயலாது; இங்கேயிருக்கிற வேதாகமம் அவ்வாறு கூறுகிறது: அவன் அந்த நான்கு தூதர்களையும் கண்டான்.

அவர்கள் என்ன பெறப்போகிறார்கள் என்பதைக் கவனியுங்கள். அவர்கள் பெற்றது போலவே, யூதர்களும் பரிசுத்த ஆவியைப்பெற்றாக வேண்டியதிருக் கிறது. வேதாகமத்தைப் படிக்கிற நாம் யாவரும், கணக்கனுடைய மைக்கூட்டை வைத்திருந்த மனிதன் பரிசுத்த ஆவியானவர் தான் என்பதை உணர்ந்திருக்கிறோம். நல்லது, இங்கே அதே தூதன் தான் பரிசுத்த ஆவியோடு, அதாவது ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக் கோலோடு'' மீண்டும் வருகிறார். எபேசியர் 4:30ல், பரிசுத்த ஆவியினால், மீட்கப்படும் நாள் வரையிலும் முத்திரையிடப்பட்டிருக்கிறதைப் பற்றி கூறப்பட்டுள்ளது. அந்த யூதர்கள் யாவரும் தங்கள் சுய தேசத்திற்கு திரும்பிப்போகிற வரையிலும் அவர்களால் ஒன்றும் செய்ய இயலாது. சில வாரங்களுக்கு முன்புதான். அவர்கள் யாவற்றையும் ஒன்று சேர்த்து அவர்களை



வேண்டியதாயிருந்தது. அவர்கள் இன்னின்னதைச் செய்ய வேண்டுமென்றிருந்தது. அவர்கள் அசைத்தார்கள். மற்றும் எல்லா விதமானவற்றையும் செய்தார்கள். இப்பொழுது சபையானது, உண்மையான சபையானது என்ன செய்து கொண்டிருக்கிறது? அதுதானே இளைப்பாறிக் கொண்டிருக்கிறது. இளைப்பாறுதல் என்றால் என்ன? இதோ அதன் அர்த்தம் : இளைப்பாறுதல் என்பது, “பரிசுத்த ஆவி'யாகும். ஓய்வு நாள் அது. (ஏழாம் நாள் ஓய்வு சபைக்காரர்கள் ஏழாம் நாள் தான் இளைப்பாறுதல் என்று நமக்குக் கூற முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்). எபிரெயர் நிருபம் 4-ம் அதிகாரத்தில், "ஏனெனில் அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன், தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்தது போல, தானும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப் பான்.'' என்று கூறப்பட்டுள்ளது. எனவே, இளைப்பாறுதல் என்பது பரிசுத்த ஆவியாகும்.

116. ரூத் இளைப்பாறிக்கொண்டிருந்தபொழுது அது தானே, சபையானது தேவனுடைய வாக்குத்தத்தங்களின் பேரில் சார்ந்து இளைப்பாறிக்கொண்டிருக்கிற முன்னடையாளமாயிருக்கிறது. நாம் நமது இரட்சிப்பின் அச்சாரத்தை இப்பொழுது பெற்றவர்களாயிருக்கிறோம். நாம் அந்த அச்சாரத்தை பெற்றவர்களாயிருக்கிறோம். (ஆமென்). அதை நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம். கிறிஸ்து நம்மை ஏற்றுக் கொண்டும் இருக்கிறார். அதைவிட்டு இப்பொழுது நாம் விலகிச்செல்ல வழியே இல்லை. நாம் அங்கே இருக்கிறோம். ஆமென். அவர் இனத்தான் மீட்பரின் வேலையை செய்கிற வரையிலும் நாம் காத்திருக்க வேண்டியது தான் நாம் செய்ய வேண்டியதெல்லாம். இப்பொழுதே நாம் அதன் அச்சாரத்தைப் பெற்றிருந்து, அவர் திரும்பி வருகிறதான வேளைக்காக நாம் காத்துக் கொண்டிருக்கிறோம்.

அதன் பிறகு ரூத்துக்கு நேரிட்ட அடுத்த காரியம் என்ன? ரூத்துக்கு பலன் அளிக்கப்பட்டது.

117. அதைத்தான் சபையும் செய்தது. லூத்தரின் கீழாக சபை நீதிமானாக்கப்படுதலில் பிரவேசித்தது. பிறகு, வெஸ்லியின் கீழாக பரிசுத்தமாகுதல் என்ற கட்டத்தை சபை எட்டியது. இக்கடைசி நாட்களில் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்ற கட்டத்திற்குள் சபை பிரவேசித்தது. இப்பொழுதோ, நமது சுதந்திரத்தின் அச்சாரத்தைப் பெற்றவர்களாய் இளைப்பாறிக்கொண்டிருக்கிறோம். அதன் மூலமாக நமக்கு ஒரு காரியம் சம்பவித்துள்ளது என்று அறிந்தவர்களாய்,

வயல்வெளியில் சென்று பணிவிடைக்காரிகளின் பின்னால் சென்று, அன்றன்று உள்ள ஜீவனத்திற்கு தேவையான உணவுக்கான தானியத்தைப் பொறுக்கினாள். அப்படித்தானே அவள் செய்தாள்? அவள் என்ன செய்து கொண்டிருந் தாள்? போவாஸின் கண்களில் தனக்கு தயவு கிடைக்க நற்கிரியைகள் மூலம் இரட்சிப்பை அடைதல் என்ற கட்டத்தை நிறை வேற்றினாள்.

113. அதேவிதமாகத்தான் சபையும் செய்தது. லூத்தரன்கள் அதை விசுவாசத்தைக்கொண்டு விசுவாசித்து, தேசத்தினுள் பிரவேசித் தார்கள். ஆனால் மெதோடிஸ்டுகளோ பரிசுத்தமாகுதலைப் போதித்தார்கள்; அதுதானே நற்கிரியைகளின் மூலம் இரட்சிப்பை அடைதல் என்ற நிலையைப் பற்றியதாகும். ''நீங்கள் இன்னதைச் செய்ய வேண்டும். நான் அதை விட்டுவிட வேண்டும். நான் என் முடியை நீளமாக வளர்க்க வேண்டும்'' என்று ஸ்திரீகள் கூறினார்கள். அதற்கு மேல் அவர்கள் எதுவும் செய்யவில்லை. ஆனால் அவர்கள் தங்கள் முடியை நீளமாக வளர்த்தல் போன்றவைகளையெல்லாம் கடைப்பிடித்தார்கள். தங்கள் முகங்களில் வர்ணங்களைப் பூசுதலையெல்லாம் அவர்கள் விட்டுவிட வேண்டியதிருந்தது. மற்றவர்கள் செய்ததைப் போல, அவர்கள் குட்டைப் பாவாடைகளை அணியவில்லை. தங்கள் ஆடைகளை அவர்கள் தவறாக அணியவில்லை. அவர்கள் எதாவது நற்கிரியைகளைச் செய்ய வேண்டியதாயிருந்தது. பார்த்தீர்களா? அதைத்தான் ரூத்தும் செய்தாள். அவள் நீதிமானாகுதல், பரிசுத்தமாகுதல் என்ற கட்டங்களை அடைந்தாள்.

114. இப்பொழுது, இறுதியாக அவளுக்கு போவாஸின் கண்களில் தயவு கிடைத்தபொழுது, என்ன நடந்தது? பிறகு, நகோமி அவளிடம் கூறுகிறாள் : "போவாஸ் இனத்தான் மீட்பனின் கிரியையை செய்யும் வரையிலும் இங்கேதானே நீ காத்திரு. ஏனெ னில் அவன் ஒருவன் தான் அதைச் செய்ய முடியும். அவனே நமது அடுத்த இனத்தான் மீட்பனாயிருக்கிறான். எனவே நீ இங்கே தானே காத்திரு. இனி முதற்கொண்டு நீ வயல்வெளிகளில் போக வேண்டாம். இன்னின்னதை செய்யாதே. இனத்தான் மீட்பனின் கிரியையானது நிறைவேறுகிற வரையிலும் நீ காத்திரு'' என்று கூறினான். அவளும் அதன்படியே இளைப்பாறிக் கொண்டிருந்தாள். ஆமென்.

115. சரியாக அதேவிதமாகத்தான் சபையும் பெந்தெகொஸ்தே என்ற இறுதிக் கட்டத்தில் வந்து சேர்ந்திருக்கிறது. பார்த்தீர்களா? பெந்தெகொஸ்தேயின் துவக்க கட்டத்தில் அவர்கள் கிரியை செய்ய



வகைப்படுத்தி, ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு உறுப்பினராக ஆனார்கள்.

அது ஆயத்தமாக இருக்கிறது. நாம் முடிவுக்கட்டத்திற்கு வந்திருக்கிறோம். யாவும் முத்திரையிடப்பட்டு விட்டது இப்பொழுது.

62.அவர்கள் யூதர்கள் தான் என்பதை இப்பொழுது நிரூபிக்கப் படுவதை கவனியுங்கள். நான் இப்பொழுது இந்த வசனத்தை எடுத்துக் கொள்ளப் போகிறேன்.

நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரை போட்டுத் தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டான்.

வெளி.7:3

இந்த வெளிப்பாடு சரியானது தான் என்பதை நிரூபிப்பதற்காக, நான்காம் வசனத்தை கவனியுங்கள்:

முத்திரை போடப்பட்டவர்களின் தொகையைச் சொல்லக் கேட்டேன்; இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரை போடப்பட்டவர்கள் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்.

வெளி.7:4

“இஸ்ரவேலர்” அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? அவர்கள் இப்பொழுது தான் கூடி வந்திருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் முத்திரையிடப்படும் நாளுக்காக ஆயத்தமாகக் காத்துக் கொண்டு இருக்கிறார்கள். ''யூதா கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீராயிரம்; ரூபன் கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீராயிரம்; காத் கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீராயிரம்; ஆசேர் கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீராயிரம்; நப்தலி கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீராயிரம்; இவ்வாறு சிமியோன் முதல் பென்யமீன் கோத்திரம் முடிய உள்ள 12 கோத்திரங்களும் முத்திரை போடப்பட்டதைக் குறித்து சொல்லப்பட்டுள்ளது. 12000-ஐ 12ஆல் பெருக்கினால் வருவது இலட்சத்து நாற்பத்து நாலாயிரம். அவர்கள் தான் அது.

63.14ம் அதிகாரத்தில் இப்பொழுது பார்ப்பீர்களானால் ஒரு க்ஷணம் கவனியுங்கள்.

பின்பு, நான் பார்த்த போது, இதோ, சீயோன் மலையின் மேல் ஆட்டுக் குட்டியானவரையும், அவரோடே கூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரையும் நிற்கக் கண்டேன்"

வெளி.14:1

''சீனாய்மலை'' இங்கே ஆட்டுக்குட்டியானவர் எடுத்துக் கொள்ளப்படுதலை முடித்துவிட்டு திரும்பி வந்திருக்கிறார். அவர் திரும்பி வந்தபோது, அன்றிரவில் நாம் பார்த்தவிதமாக, யோசேப்பு புறஜாதிகள் யாவரையும் தன்னை விட்டு அப்புறமாக அனுப்பிவிட்டு, தன் சகோதரருக்கு முன்பாக நின்று, ''நான் தான் யோசேப்பு உங்கள் சகோதரன்'' என்றான். அவர்கள் திகைப்படைந்தார்கள். சபைக்கால் செய்தியில் நாம் கேட்டிருக்கிறதை நினைவில் கொள்ளுங்கள். அவர் எப்பொழுது திரும்பி வருவார்? அவருடைய கரங்களை குத்தியவர்கள் கூட பார்த்து, அவரிடம், 'உம் கைகளில் இருக்கிற இந்த வடுக்கள் ஏதென்று கேட்பார்கள் என்று பார்த்தோம்.

''என் சிநேகிதரின் வீட்டில் காயப்பட்டதினால் உண்டானவைகள்'' என்று அவர் கூறினார். அவர்கள் புலம்பினார்கள். ஒவ்வொரு குடும்பமும் தனித்தனியே அழுது அழுது புலம்பினார்கள். ஏனெனில் அவர்கள், இந்த பொல்லாங்கை செய்தோமே என்று குத்தப்பட்டார்கள். அவர்களுடைய மேசியா தேவனேயாவார்.

யோசேப்பு தன் சகோதரிடம், 'நீங்கள் ஒருவருக்கொருவர் கோபப்பட வேண்டாம். ஜீவனை உயிரோடே காக்கும்படி தேவனே இதைச் செய்தார்" என்று சொன்னது போல் தேவனும் யூதர்களிடம் அவ்வாறே கூறுவார்.

புறஜாதியாருக்கு ஒரு வாய்ப்புக் கிடைக்கும்படி, தேவன் யூதரின் கண்களைக் குருடாக்கினார் என்று வேதம் கூறுகிறது. நாம் தானே அதைப் பெறும்படி, அவரது நாமத்திற்கென ஒரு ஜனத்தை தெரிந்தெடுக்க, புறஜாதிகளிலிருந்து அவரது மணவாட்டியை பிரித்தெடுக்க, தேவன் இவ்வாறு செய்தார். ஓ, அது அழகாக இருக்கிறது. அவ்வாறில்லையா?

நிச்சயமாக அவ்வாறே உள்ளது.

64.அங்கே தான் உங்களுடைய இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்கள் உள்ளனர். மணவாட்டி இதற்குப் பிறகு தான் வருகிறாள் என்பதையும், இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்கள்



தீர்மானம் எடுக்க வேண்டியதாயிருந்தது. அதுதான் சரியானது. நீங்கள் அந்தத் தீர்மானத்தை எடுத்தபொழுது நீங்கள விட்டு விலகின உங்களுடைய சொந்த ஜனங்கள் உங்களை பரிகசிக்கப்போகிறார்கள் என்று உங்களுக்குத் தெரியும். அப்படித் தானே? இதெல்லாம் தானாகவே அப்படியே நடக்கும். ஆகவே துவக்கத்திலேயே அதை நீங்கள் எதிர்பார்க்கத்தான் வேண்டும். ஏனெனில் அவ்விதமாகத்தான் அது இருக்கிறது.

108. ரூத்துக்கும் அதேவிதமான காரியம்தான் உண்டாயிருந்தது. ஒரு கூட்டம் உணர்ச்சியார்வம் அளவுக்கதிகமாக உள்ளவர்கள் என்று கூறப்பட்ட இஸ்ரவேலரின் தேசத்தினுள், மோவாபிய தேசத்தை விட்டுப் புறப்பட்டு பிரவேசிக்க இருந்தபொழுது, மோவாபியர்கள் அவளிடம் என்ன கூறியிருப்பார்கள்? பாருங்கள், அவள் ஒரு தீர்மானம் எடுக்க வேண்டியவளாய் இருந்தாள். நீங்கள்கூட தீர்மானிக்க வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள். இறுதியாக அவள் தீர்மானம் செய்தபொழுது, அவள் ஒரு புதிய தேசத்தினுள் பிரவேசித்தாள்.

109. இப்பொழுது, அது நீதிமானாகுதல் என்ற நிலையாகும். அது சரிதானே? இப்பொழுது இந்த சபையைக் கவனியுங்கள். ஓ, அது பரிபூரணமாயுள்ளது.

110. ''ஆபிரகாமின் வித்து'' என்ற தலைப்பில் நான் பிரசங்கித்ததை எத்தனை பேர் கேட்டீர்கள்? நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தமாகுதல், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் ஆகியவை பற்றி பார்த்தோம். இப்பொழுது கூறப்படுவது சரியா இல்லையா என்பதைப் பாருங்கள்.

111. ரூத் தனது தீர்மானத்தை செய்தது, புறஜாதி சபைக்கு முன்னடையாளமாயுள்ளது. அவள் தீர்மானித்துவிட்டு, தேசத்தினுள் கடந்து சென்றாள். இப்பொழுது, அநேக சமயங்களில், மெதோடிஸ்டுகளும் பாப்டிஸ்டுகளுமாகிய நாம், நாம் செய்ய வேண்டிய தெல்லாம் அம்மட்டோடு போதும் என்று எண்ணுகிறோம். அவள் இப்பொழுது தான் ஆரம்பித்திருக்கிறாள். அவள் இன்னும் சேர வேண்டிய இடம் எதற்கும் போய் சேர்ந்திடக்கூட இல்லை. அவள் இப்பொழுதுதான் அத்தேசத்தினுள் பிரவேசித்திருக்கிறாள்.

112. இப்பொழுது, அடுத்ததாக அவள் செய்ய வேண்டியதாக இருந்தது என்னவெனில், அவள் தன் தீர்மானத்தின் பேரில் கிரியை செய்ய வேண்டியது என்பதாகும். நீங்கள் செய்ததைப் போலவே, அவளும் "தன் இரட்சிப்பு நிறைவேறப் பயத்தோடும், நடுக்கத் தோடும் பிரயாசயப்பட வேண்டியது" இருந்தது. தன் மேல் ஆடை களைப் போட்டுக்கொண்டு,

கொண்டிருக்க வேண்டியிருந்தது. (waiting) அதன்பிறகு, அடுத்த கட்டம், ரூத்துக்கு பலன் அளிக்கப்படுவது என்பதாகும் (rewarded).

இப்பொழுது கவனியுங்கள், ரூத் பூரணமாக தீர்மானிக்கிறாள்.

104. ஓ, யாராவது "வேதமானது தேவ ஆவியால் ஏவப்பட்டு எழுதப்படவில்லை'' என்று கூறினால், அவர்களில் ஏதோ தவறு உள்ளது. அதின் ஒவ்வொரு வார்த்தையும் தேவ ஆவியால் ஏவப்பட்டு எழுதப்பட்டதாகும். ஒரு பலகையில் இசைப்புக்கூர் எவ்வாறு கச்சிதமாக பொருத்தப்பட்டுள்ளதோ, அதைப் போல் வேத வாக்கியமானது ஒன்றோடொன்று சரியாக பொருந்துகிறது. ஒரு வினாடியின் 10 இலட்சத்தில் ஒரு பங்கு சரியாக இயங்கும்படி பெரிய சக்கரத்தில் பொருத்தப்பட்ட தடைக்கட்டை எவ்வாறு உள்ளதோ, அதைப் போல சரியாக ஒன்றோடொன்று இசைந்து போகிறது.

105. இப்பொழுது ரூத் 'தீர்மானித்தல்' என்பதைக் கவனியுங்கள். அத்தேசத்தினுள் தான் போகப் போகிறோமோ இல்லையா என்பதைப் பற்றி அவள் ஒரு தீர்மானம் எடுக்க வேண்டியதாயிருந் தது. அதற்காக அவள் ஒரு தீர்மானம் எடுக்க வேண்டியதாய் இருந்தது. அவ்விதமாகத்தான் ஒவ்வொரு விசுவாசியும் செய்ய வேண்டியதாக இருக்கிறது. நீங்கள் உங்களுடைய பழைய ஆவிகளை விட்டு விலக வேண்டும்; உங்களுடைய பழைய ஜீவி யத்தை விட்டு விலக வேண்டும். உங்களுடைய உலகப் பிரகார மான பழைய காரியங்களை விட்டுவிட வேண்டும்.

106. சகோதரன் ராய், சகோதரி ராபர்சன் உடல் நலமின்றி உள்ளார் களா? ஓ, அவர்கள் சுகவீனமுற்றார்களோ என்று கருதினேன். அப்படி அவர்கள் சுகவீனமுற்றிருந்தால், அவர்களை இங்கே கொண்டு வர வேண்டும் என்று கூற வேண்டுமென்றிருந்தேன்.

107. அவர்கள் தங்களுடைய பழைய குற்றம் நிறைந்த ஜீவியத்தை விட்டுவிட, நீங்கள் இதற்கு முன் கண்டிராத, அறிந் திராத ஒரு தேசத்தினுள், ஒரு புதிய மக்களோடு சேர்ந்து பிர வேசித்திட வேண்டும். நீங்கள கிறிஸ்தவராக ஆனபொழுது, இதைத்தான் செய்தீர்களா? நீங்கள் இரவு விடுதிகளையும், சூதாட்ட விடுதிகளையும் விட்டு விலகினீர்கள். வலிப்பு வந்தவர்களைப் போல் தோன்றிய , தங்கள் தலைகளை குலுக்கி அசைத்து கத்தி, மேலும் கீழும் குதிக்கிற, உங்களுக்கு பைத்தியக்காரக் கட்டம் என்பது போல் தோன்றுகிற ஒரு கூட்டம் மக்களுக்குள் நீங்கள் வர வேண்டி யதாயிருந்தது. ஆகவே, நீங்கள் அதற்குள் போவதா வேண்டாமா என்பதைப் பற்றி ஒரு



மணவாட்டியல்ல என்பதை காண்பிக்கவும், தொடர்ந்து வாசித்துக் கொண்டே போவோம். 7ம் அதிகாரம் 8ம் வசனத்திலிருந்து வாசிப்போம்.

9ம் வசனத்திலிருந்து வாசிப்போம். ஏனெனில் 8ம் வசனத்தில் பென்யமீன் கோத்திரத்தார் 12000 பேர் முத்திரையிடப் பட்டதைக் குறித்து கூறப்பட்டுள்ளது.

இவைகளுக்குப் பின்பு, நான் பார்த்த போது, இதோ, சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும், ஜனங்களிலும் பாஷைக் காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக் கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், (இங்கே தான் மணவாட்டி வருகிறாள்) வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக் குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக் கண்டேன்.

அவர்கள் மகா சத்தமிட்டு, இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள்.

தூதர்கள் யாவரும் சிங்காசனத்தையும் மூப்பர்களையும் நான்கு ஜீவன்களையும் சூழ நின்று, சிங்காசனத்திற்கு முன்பாக முகங்குப்புற விழுந்து, தேவனைத் தொழுது கொண்டு,

ஆமென், எங்கள் தேவனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக; ஆமென் என்றார்கள்.

அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள் என்று கேட்டான்.

அதற்கு நான்: ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள், இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக் குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்.

ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்.'' (பார்த்தீர்களா?)

வெளி.7:9-15.

65.உங்கள் மனைவி என்ன செய்கிறாள்? அவள் உங்களுக்கு வீட்டில் பணிவிடை செய்கிறாள். நீங்கள் அமர்ந்திருக்க அவள் உங்களுக்கு உணவு பரிமாறுகிறாள், உங்கள் ஆடைகளை ஆயத்தம் செய்து கொடுக்கிறாள். அவள் இரவும் பகலும் வீட்டில் பணியாற்றுகிறாள். மணவாட்டியாயிருக்கிற இவள், புறஜாதிகளின் ஜாதிகளிமிருந்து வந்தவர்களாவர்; இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக, அவரோடு இரவும் பகலும் இருந்து கொண்டிருக்கின்றனர்.

கடந்த இரவிலே, நாம் அதின் பேரில் என்ன பேசினோம் என்பதை யாவரும் நினைவில் வைத்திருக்கிறீர்களா?

''சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார்.

இவர்கள் இனி பசியடையவதுமில்லை; இனி தாகமடைவதுமில்லை; வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள் மேல்படுவதுமில்லை.

சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியான வரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜிவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன் தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார் என்றான்.

வெளி. 7:15-17

66.இப்பொழுது, அங்கே உங்களுடைய இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேராகிய இஸ்ரவேலர் கர்த்தருடைய வருகைக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். புறஜாதிகளின் நிறைவு உண்டாகிறவரையிலும் அவர்கள் உள்ளே போக முடியாது. புறஜாதிகள் காலம் முடிவடைந்தாக வேண்டும்.

இப்பொழுது நான் ஒரு சிறிய என் சொந்த விஷயத்தை குறிப்பிடுவேன், அதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என நம்புகிறேன். ஸ்வீடனின் தலைநகராம் ஸ்டாக்ஹோமில் உள்ள பிலதெல்பியா சபைகளின் பொதுக் கண்காணிப்பாளர் லேவி பெத்ரஸ் என்பவர் இந்த யூதர்களுக்கு பத்து இலட்சம் பைபிள்களை, அதாவது சிறிய அளவில் உள்ள புதிய ஏற்பாடு புத்தகங்களை அனுப்பிக் கொடுத்தார். அதில் ஒரு பிரதி அவரிடமிருந்து எனக்கு ஒரு ஞாபகச்சின்னமாக அனுப்பப்பட்டிருந்தது. அவர்களுடைய மொழியானது எப்படிப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். யூதர்கள் பின்னால் இருந்து முன்னாக வாசித்துக் கொண்டு வருகிறவர்கள். அவர்கள் பாஷை அப்படி.



சுவாதீனத்தை இழந்துவிட்டீர்கள் என்றெல்லாம் கூறுகிறார்கள். ஆகவே, அதை ஜீரணிக்க கடினமா யுள்ளது. ஆனால் அவரது மகிமையைப் பற்றி நீங்கள் சாட்சி கூறும் பொழுது, அப்பொழுது அது உங்கள் உதடுகளில் மதுரமாய்க் காணப்படுகிறது. அவ்வளவுதான். பார்த்தீர்களா? ஒரு கூட்டத்தில் நீங்கள் எழும்பி நின்று, "தேவனுக்கு மகிமை, அல்லே...'' என்று நீங்கள் கூறும் பொழுது, ஓ, அந்த பெரிய சுற்றி வளைப்புக்குள்ளாக நீங்கள் கடந்து செல்லும் பொழுது, அது கடினமாயுள்ளது, ஆனால் அதை விட்டு நீங்கள் நீங்கியிருக்கும் பொழுது, நீங்கள் அதைப் பற்றிசாட்சி கூற முடியும். அப்பொழுது அது உங்கள் உதடுகளில் மதுரமாயுள்ளது. அது தான் இந்த மீட்பின் புத்தகம் ஆகும்.

102. இப்பொழுது இந்த 5ம் வசனத்தின் பேரில் இன்னும் ஒரு விளக்கம் அளித்துவிட்டு, பிறகு 6ம் வசனத் திலிருந்து ஆரம்பிப்போமாக. மீட்பின் திட்டத்தில், தேவன் எவ்வாறு அதை முன்கூட்டியே காண்பித்துள்ளார் என்பதை நீங்கள் கவனிக்கும்படி நான் விரும்புகிறேன். ரூத், போவாஸ் ஆகி யோரிலே, அதை தேவன் பூரணமாக அமைத்துத் தந்திருக்கிறார். அதில் தான் நாம் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று முடித்தோம். அங்கிருந்தே நாம் மீண்டும் இன்றைக்கு தொடங்க, அதாவது ரூத், போவாஸில் இருந்து தொடங்க நான் விரும்புகிறேன்.

103. ரூத், போவாஸிலே நான்கு சந்திப்புக்களாகிய நான்கு நிலைகள் உள்ளன. முதலாவதாக ரூத் தீர்மானிக்கிறாள் (deciding). அதைப் பற்றிய செய்தியை நான் பிரசங்கிக்க எத்தனை பேர் கேட்டிருக்கிறீர்கள்? உங்கள் கரங்களை நாங்கள் பார்க்கட்டும். (உரைக்கப்பட்ட வார்த்தை புத்தகம் வால்யூம் 6, எண்.8-ஆசி). நீங்கள் அனைவருமே அதைக் கேட்டிருக்கிறீர்கள் என்று நான் கருதுகிறேன். அதை நான் ஒலிநாடாக்களில் பெற்றிருக்கிறேன். நகோமியோடு அந்த தேசத்தினுள் தான் போகப் போகிறோமோ, இல்லையோ என்பதைப் பற்றி, ரூத் முதலாவதாக தீர்மானிக்க வேண்டியிருந்தது. அவள் ஒரு தீர்மானம் பண்ண வேண்டி யிருந்தது. பிறகு அவள் அத்தேசத்தினுள் போய் சேர்ந்த பிறகு, அடுத்ததாக அவள் செய்ய வேண்டியது போவாஸ் வயலில் போய் பணிசெய்ய வேண்டியது (Serving) என்ற காரியமாகும். அங்கேதானே அவள், வெறுங் காலோடு, அறுக்கிறவர்களின் பிறகே தானியம் பொறுக்கி பணி புரிய வேண்டியிருந்தது. அதன்பிறகு, போவாஸ் கண்களில் அவளுக்கு கிருபை கிடைத்ததின் பின்னால் மோவாபியளான ரூத்தை மீட்டுக் கொள்வதற்காக, நகோமி இழந்த எல்லாவற்றையும் மீட்டுக் கொள்வதற்காக நெருங்கின இனத்தானின் மீட்பனின் வேலையை அவன் செய்யும் வரைக்கிலும் அவள் காத்துக்

97. நாம் என்ன செய்கிறோம்? நாம் ஒரு மரத்தை வெட்டி வீழ்த்த வேண்டு மென்று விரும்பினால், அதற்கென ஒரு கோடாரியை கையில் எடுத்து, அதை வெட்டி வீழ்த்துகிறோம். ஆனால் அந்நாளிலே நாம் அவ்வாறு செய்ய மாட்டோம். ஆமென்!

98. சர்வ சிருஷ்டியும் தனது ஆண்டவனுக்காக (எஜமானனுக்காக) காத்துக்கொண்டிருக்கின்றன. அவ்வெஜமானன் யாரென்றால், தேவனுடைய புத்திரரேயாவர். அவர்களுக்குத்தான் இப்பூமி கையளிக்கப்பட்டது. தேவன் நிச்சயமாக தனது வானங்களையுடையவராய் இருப்பார். ஆனால் இப்பூமி மனிதனுக்கே கையளிக்கப்பட்டது. நாம் இழந்து போனதை நமக்கு திரும்ப மீட்டுத் தருவதற்காகவே, நெருங்கின இனத்தான் மீட்பர் வருகிறார். எவ்வளவு அழகாயுள்ளது! என்னே ! நான் எண்ணுகிறேன் ..... 'ஒரு ஆட்டுக்குட்டி மீட்பர்.''

99. அந்த கிரியையானது செய்து முடிக்கப்பட்டவுடன் நாம் மீண்டும் எல்லாவற்றையும் பெற்றுக்கொள்வோம். அவைகள் என்னவிதமானவை? நமக்கு எல்லாவிதமான வல்லமையும் உண்டாயிருக்கும். நமக்கு நித்திய ஜீவன் உண்டாயிருக்கிறது. நமக்கு நித்திய ஆரோக்கியம் உண்டாயிருக்கும். நமக்கு நித்திய இளமை உண்டாயிருக்கும். நமக்கு நித்திய வல்லமை உண்டா யிருக்கும் ஓ, நித்தியமானவரோடு நாம் நித்தியமானவர்களாக இருக்கிறோம். அதன்பிறகு, அவ்வேளை வருவதற்காக நாம் யாவரும் காத்துக்கொண்டிருக்கிறோம். ஏங்கித் தவித்து காத்துக் கொண்டிருக்கிறோம்.

100. இந்த ஏழு மடங்கான ஏழு மீட்பின் திட்டம் அடங்கிய புத்தகம் நமக்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது, அதைத்தான் இப்புத்தகம் தன்னகத்தே கொண்டுள்ளது. நாம் இப்பொழுது இந்த பலமுள்ள தூதன் ஒன்றை அறிவிப்பதும், யோவான் புசிக்க வேண்டியதாயிருந்த ஒரு சிறு புஸ்தகத்தை தன் கையில் உடைய வனாய் இருப்பதுமான காட்சியையுடைய 10ம் அதிகாரத்திற்கு போகப்போகிறோம். யோவான் அதைப் புசித்தபொழுது, அது அவன் வயிற்றுக்குள்போய், கசப்பாக இருந்தது. ஆனால் அவன் உதடுகளில் அது மதுரமாயிருந்தது.

101. அதை நீங்கள் ஜீரணிக்கும் பொழுது அப்பொழுது அது கசப்பாக இருக்கிறது, எல்லோரும் உங்களுக்கு எதிராக எழும்பி, "நீங்கள் ஒரு உருளும் பரிசுத்தர்'' என்றும், "நீங்கள் இப்படிப் பட்டவர், அப்படிப்பட்டவர்'' என்றெல்லாம் எதிராக கூறு கின்றனர். நீங்கள் புத்தி



அவர்கள் இப்புத்தகங்களை வாசித்து, "நல்லது, இந்த இயேசு தான் மேசியாவெனில், அவர் மரித்து, அவரது ஆவியானது ஆவியின் ரூபத்தில் வந்திருக்கிறது எனில், அவர் தீர்க்கதரிசிக்குரிய அடையாளத்தைச் செய்து காண்பிப்பதை நாங்கள் பார்க்கட்டும், அப்பொழுது நாங்கள் அவரை விசுவாசிப்போம்'' என்று கூறினார்களாம்.

என்னே ஒரு பரிபூரணமான அமைப்பு இது நான், ''ஆண்டவரே, இதோ இப்பொழுதே வேளை வந்திருகிறது. இது தான் சமயம், இங்கே அது வந்திருக்கிறது'' என்றேன். எனவே, நானும், பில்லியும், லாய்ஸம் விமானத்தில் பயணமானோம்.

67.நான் இந்தியாவுக்குள் சென்றேன், அங்கிருந்து நான் திரும்பப் பிரயாணமாகையில், ''அங்கே இறங்கி யூதர்களுக்கு செய்தியைப் பிரசங்கிப்பேன். 'இதோ இங்கே சத்தியம் இருக்கிறது' என்று அவர்களுக்கு எடுத்துக் காண்பிப்பேன்" என்று கூறினேன்.

யூதர்கள் எப்பொழுதும் தங்களுடைய தீர்க்கதரிசிகளை விசுவாசிப்பவர்கள். நாம் யாவரும் அதை அறிவோம். ஏனெனில் மேசியா ஒரு தீர்க்கதரிசியாக இருப்பார் என்று தேவன் அவர்களுக்கு உரைத்திருக்கிறார். அவர்கள் தங்களுடைய தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கிறார்கள். ''உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால், கர்த்தராகிய நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி என்று தேவன் கூறினார். அந்த தீர்க்கதரிசி சொல்லும் காரியம் நிறைவேறினால், அப்பொழுது அவனுக்கு செவிகொடுக்க வேண்டும், ஏனிெனல் நான் அவனோடிருக்கிறேன். ஆனால் அவன் கூறிய வார்த்தை நிறைவேறாமற் போனால், அந்த தீர்க்கதரிசியை நம்ப வேண்டாம். ஏனெனில் நான் அவனோடு இருக்கவில்லை. ஆனால் அவன் கூறியது நிறைவேறினால், அப்பொழுது அவனுக்கு செவிகொடுங்கள். ஏனெனில் நானே அவனோடிருக்கிறேன்'' என்று கூறியுள்ளார். யூதர்கள் அதை அறிவார்கள்.

68."ஓ என்னே ! அது அற்புதமானதாய் இருக்காதா? நான் அவர்களில் நான்காயிரம் அல்லது ஐந்தாயிரம் பேர்களை வரவழைத்து, அங்கே நிற்கச் செய்திடுவேன், அவர்கள் வேதாகமத்தை வாசிக்கிறவர்களாக இருக்க வேண்டாம். இது மேசியாவானால், அவர் தீர்க்கதரிசியின் அடையாளத்தை செய்து காண்பிக்கட்டும் என்று எனக்குள் எண்ணினேன்.

எனது கையில் டிக்கெட் ஆயத்தமாக இருந்தது. அராபிய விமானக் கம்பெனியின் விமானத்தில் பயணம் செய்வதற்கு பயணம் செய்பவர்களை விமானத்திற்கு வரும்படி அழைத்து முடிக்க இன்னும் முப்பது நிமிடங்கள் இருந்தன. எனவே நான் எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் நின்றிருந்தேன். அப்பொழுது நான் எனக்குள், ஓ தேவனுக்கு ஸ்தோத்திரம், இன்னும் இரண்டு மணிநேரம். அப்பொழுது யூதர்கள் முழு நிச்சயத்தோடே பெந்தெகொஸ்தேயில் அவர்கள் பெற்றுக் கொண்டதைப்போல் இவர்களும் பெற்றுக் கொண்டதைப்போல் இவர்களும் பெற்றக்கொள்ளப் போகிறார்கள்'' என்று எண்ணி னேன்:

மேலும், நான் எனக்குள், 'நீங்கள் போய் ஒரு கூட்டம் ஜனங்களை அழைத்து வந்து, அவர் இன்னமும் மேசியா தானோ என்பதை காணும்படி செய்யுங்கள் என்பேன்" என்று எண்ணினேன். 'உங்களுடைய முற்பிதாக்கள் எந்த அடிப்டையில் இந்த மேசியாவை புறக்கணித்தார்களோ, அதே அடிப்படையில் நீங்கள் அவரை ஏற்றுக் கொள்ளுங்கள். உங்கள் கரங்களை உயர்த்திடுங்கள்; இப்பொழுது நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வீர்கள்'' என்று சொல்லுவேன் என்று நினைத்தேன்.

அப்பொழுது உலகில் அவர்கள் உள்ள பகுதியில் போய் அவர்கள் சுவிசேஷத்தை பரவச்செய்வார்கள். இந்த செய்தியை அவர்கள் ஏற்றுக் கொள்ளும் பொழுது, தலைவர்களைப் பிடியுங்கள். அவர்களின் நாடித்துடிப்பாய் இருக்கின்ற தலைவர்களைத் தொடுங்கள். அவர்கள் இதை துவக்கட்டும்'' என்று சொல்லுவேன் என்று நான் மேலும் நினைத்தேன்.

69.அப்பொழுது எனக்குள் ஏதோ ஒன்று, ''இப்பொழுது போகாதே, வேளையானது இன்னமும் வரவில்லை'' என்று கூறியது. பார்த்தீர்களா, புறஜாதிகளின் நாளானது இன்னமும் முடிவடையவில்லை, பாருங்கள்.

"ஓ, இது என்னுடைய எண்ணம் தான்' என்று அப்பொழுது தான் சிந்தித்தேன். நான் மீண்டும் புறப்பட்டேன், அப்பொழுது, என்னால் தாங்க முடியாத அளவுக்கு எனக்குள் ஒரு மோசமான நிலை ஏற்பட்டது. நான் விமானம் நிறுத்திவைக்கும் ஷெட்டின் பின்பக்கமாகச் சென்று தலை வணங்கி, 'பிதாவே, நீர் தான் என்னோடு பேசிக் கொண்டிருக்கிறீரா?'' என்று ஜெபித்தேன்.

"இப்பொழுது இஸ்ரவேலுக்குப் போகாதே, வேளையானது இன்னும் வரவில்லை'' என்று அவர் கூறினார்.



அங்கே இல்லை. புலம்பலும் அலறுதலுமில்லை. நமக்கு நித்தியமான ஜீவன் உண்டாயிருந்தது. நமக்கு பூமி முழுவதின் மேலான ஆட்சியதிகாரம் உண்டாயிருந்தது. பூமியின் மேல் நாம் ஒரு தேவனாக இருந்து நடந்து வந்தோம். இங்கே ஒருமரம் சரியான இடத்தில் நின்று கொண்டிருக்கவில்லை என்று காணப்பட்டால், அப்பொழுது அதைப் பார்த்து, "நீ பிடுங்கப்பட்டு, இன்ன இடத்தில் நடப்பட்டிருப்பாயாக'' என்று நாம் கூறுவோம். அப் பொழுது அது அவ்விதமாகவே சம்பவித்துவிடும் என்பதாக இருந்தது. காற்றுகள் அடித்துக்கொண்டு இருந்ததென்றால், அது நமக்கு தேவையில்லையென்றால், "இரையாதே, அமைதலயாயிரு'' என்று கூறிவிட்டால், அது அவ்வாறே சம்பவிக்கும் என்பதாக இருந்தது. அவர் என்ன செய்வதற்காக வந்தார்? அவை யாவற்றையும் நமக்கு திரும்ப மீட்டுத் தருவதற்காகத்தான். (ஓ , - ஓ, என்னே !) அவை யாவற்றையும் நாம் திரும்பப் பெறுவதற்காகத்தான்.

94. எதை எதிர்பார்த்து இயற்கையானது ஏங்கித் தவிக்கிறது? தேவ புத்திரர் பிரத்தியட்சமாவதற்காகத்தான். தேவனுடைய புத்திரர் தோன்றுவதாற்காகத்தான்.

95. இப்பொழுது நம்முடைய இரட்சிப்பின் அச்சாரத்தை நாம் நம்மிலே உடையவர்களாய் இருக்கிறோம். எனவே , நாம் புற்று நோயினால் மரித்துக் கொண்டிருக்கிற நமது சகோதரனை எடுத்து, அச்சிறிய மீட்பின் சுவாசத்தைக் கொண்டு, ஒரு விசுவாசமான ஜெபத்தை அவனுக்காக ஏறெடுத்தால், அது அவன் மேலுள்ள நோயின் இருளை அகற்றி, அவனை ஆரோக்கியமுள்ள மனிதனாக ஆக்கிவிடும். அப்படியிருக்க, நமது பூரண சுதந்திரம் வரும் பொழுது அது என்ன செய்யும்? ஆமென்.

96. இயற்கைகூட அதை அறிந்திருக்கிறது. இயற்கை ஏங்கித் தவிக்கிறது. அதனோடு சேர்ந்து நாமுங்கூட ஏங்கித் தவிக்கிறோம். இயற்கையானது தேவ புத்திரர் வெளிப்படுவதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. ஏனெனில், இயற்கை தனது எஜமானனோடு சேர்ந்து சபிக்கப்பட்டது. அதின் ஆண்டவன் (எல்லாவற்றிலும் உயர்ந்த நிலையில் உள்ளவன்) சபிக்கப்பட்ட பொழுது, அப்பொழுது தன் ஆண்ட வேனாடு இயற்கையும் வீழ்ந்தது. ஆனால் நெருங்கின இனத்தான் மீட்பர் வருகிறபொழுது, (அல்லேலூயா!) இயற்கையின் மேல் ஆண்டவனாயிருக்கிற மனிதனை மீண்டும் மீட்டுக் கொண்டார். இப்பொழுது சர்வ சிருஷ்டியும், தன் ஆண்டவனாகிய மனிதனுக்காக காத்துக்கொண்டிருக்கிறது.

இரகசியமான முறையில் திடுதிப் பென்று ஒருவர், ஒரு ஆட்டுக்குட்டியானவர் தோன்றினார்.

90. இப்பொழுது, அது, ஒரு மாம்சப்பிரகாரமான ஆட்டுக் குட்டி யல்ல என்பதை காண்பித்தது. ஏனெனில், அது சிங்காசனத்தில் வீற்றிருந்தவருடைய வலது கரத்திலிருந்து புத்தகத்தை எடுத்தது, சாதாரண ஒரு ஆட்டுக்குட்டி அவ்வாறு செய்ய முடியாது. அவர் ஒரு ஆட்டுக்குட்டியானவராக, கிறிஸ்துவாக இருந்தார். அதாவது, அவரது தன்மைகளிலே அவர் ஒரு ஆட்டுக்குட்டியைப் போல சாந்தமும் அமைதியுமாக இருந்தார்.

91. இப்பொழுது கவனியுங்கள், அவர் ஒரு ஆட்டுக்குட்டி மீட்பர், முதலில் உள்ளதைப் போலவே அவர் ஒரு ஆட்டுக்குட்டி மீட்பராக இருக்கிறார். தேவன் ஒருபொழுதும் மாற முடியாது. ஏதேன் தோட்டத்திலே முதலாவதான மீட்பர் ஒரு ஆட்டுக் குட்டியே. தேவன் அங்கே ஒரு ஆட்டுக்குட்டியைத்தான் பலியாக செலுத்தினார். வெளிப்படுத்தின விசேஷத்திலே இங்கே அது மீண்டும் ஒரு ஆட்டுக்குட்டியாகவே காணப்படுகிறது. எதை மீட்பதற்காக? விழுந்து போன மானிட வர்க்கத்தினரின் நிலையையும், விழுந்து போன சுதந்திரத்தையும் மீட்பதற்காகவே. ஆதி நிலைமைக்கு நம்மை மீண்டும் மீட்டுக் கொண்டு போவதற்காகவே ஒரு ஆட்டுக்குட்டியானவர் திரும்ப வருகிறார். நம்மை மீட்டுக் கொள்வதற்காக.

92. எதை மீட்பதற்காக? என்னத்திற்காக நம்மை அவர் மீட்டுக் கொள்ளப் போகிறார்? எந்த ஒன்றாவது மீட்கப்பட்டிருக்கிறது என்றால், அது இழந்து போகப்பட்டிருக்கிறது என்று அர்த்தமாகும். அதுதானே இழந்து போகப்பட்டு, திரும்ப அது கொண்டு வரப்பட்டுள்ளது என்பதுதான் மீட்கப்படுதல் என்பதாம். இவ்வாட்டுக் குட்டியானவர் எதை நமக்கு திரும்ப அளித்துள்ளார்? ஆதியில் நாம் கொண்டிருந்த அனைத்தையும்தான்.

93. நாம் ஆதியில் என்னத்தைக் கொண்டிருந்தோம்? நித்திய ஜீவனை. நாம்தான் உலகத்தின் உரிமைக்காரரர்கள் ஆக இருந்தோம். நமக்கு ஜீவன் உண்டாயிருந்தது. நாம் மரிக்க வேண்டியதாயிருக்கவில்லை. நாம் வியாதிப்பட்டவர்களாய் இருக்க வேண்டியிருக்கவில்லை. நாம் முதிர்வயதையடைய வேண்டியவர்களாய் இருக்க வில்லை. நமக்கு களைப்புறுதல்கள், சோர்வுகள் இருக்கவில்லை. அங்கே சவ அடக்கங்கள் இல்லை. கல்லறைகள் அங்கே இல்லை. ஒரு தீமையும் இல்லை. மரணம் இல்லை. நரைமுடி இல்லை. தளர்ந்த தோள்கள்



உடனே நான் உள்ளே போய், எனது டிக்கெட்டை மாற்றிக் கொண்டு, வேறு வழியாக போக பாதையை மாற்றினேன். வேளையானது இன்னமும் வரவில்லை என்பதை பாருங்கள். ஆனால் இந்நாட்களில் ஒன்றில் செய்தியானது இஸ்ரவேலுக்குப் போகும். தேவன் அவர்களிடமாக மோசேயையும் எலியாவையும், வெளிப் படுத்தின விசேஷம் 11ம் அதிகாரத்தில் கூறியுள்ளபடி அனுப்பிடுவார். அவர்கள் அற்புத அடையாளங்களைச் செய்து காட்டுவார்கள்; அது யேகோவாவின் அடையாளமாகும். அப்பொழுது புறஜாதிகளின் காலமானது முடிவடைந்திருக்கும். புறஜாதி சபையை விட்டு கிருபையானது அகன்று விட்டிருக்கும்; பெந்தெகொஸ்தே யுகமானது முடிவடைந்திருக்கும். ஸ்தாபனங்கள் தொடர்ந்து இருந்து கொண்டேயிருக்கும். ஏனெனில் அவர்கள் உறங்கும் கன்னியரோடு எழும்பி வருகிறார்கள்; நாம் சிறிது நேரத்திற்குள் அந்த விஷயத்திற்குள் செல்லுவோம். ஆனால் அவர்கள் அந்த பிரிவில் தான் வருவார்கள்.

70.ஆனால் அவர்கள் அதைச் செய்யும் பொழுது, யூதர்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெறுவார்கள்; அவர்களுக்கு ஒரு எழுப்புதலுண்டாகி, அது மழை பெய்யாது வானத்தை அடைக்கும் காரியத்தைச் செய்யும். அவர்கள் எல்லாவிதமான அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்வார்கள். இறுதியாக ரோமானிய குருக்களாட்சியானது...

கத்தோலிக்க சபையானது யூதர்களோடு செய்து கொண்டிருந்த உடன்படிக்கையை முறித்துக் கொண்டு விடுவார்கள். அப்பொழுது அங்கே... அவர்கள் தங்களுக்கிடையே செய்து கொண்ட ஒப்பந்தமானது. அவர் அங்கே செல்லுவார். தேவன் ஆதி நாட்களில் இஸ்ரவேலுக்காக யுத்தம் செய்தது போல, நின்று அவர்களுக்காக யுத்தம் பண்ணுவார். அவர்கள் முடிவில்,

அந்த இரு தீர்க்கதரிசிகளையும் கொன்று விடுவார்கள். அவர்கள் தெருவில்கிடப்பார்கள். அவர்கள் மேல் துப்புவார்கள். சிலவாரங்களுக்கு முன்பாக, அங்கே அந்த பெந்தெகொஸ்தே ஊழியக்காரரையும் அவரது மனைவி மற்றும் பிள்ளைகளையும் கொன்று போட்டது போல் நடக்கும். அப்பிள்ளைகளின் சிறிய வயிறு மிகவும் பெரிதாக உப்பிப்போயிற்று. மக்கள் அப்பிரேதங்களின் பக்கமாக நடந்து சென்று, அவர்கள் மேல் துப்பி, அவர்களது உடல்கள் அடக்கம் பண்ணப்படாமல், அப்படியே மூன்று அல்லது நான்கு நாளாக வெயிலில் கிடந்தன. அதே காரியத்தையே அவர்கள் செய்வார்கள்.

வேதம் அவ்வாறு கூறுகிறது. அங்கே சரியாக இதே காரியத்தை அவர்கள் செய்வார்கள்.

அவர்கள் அவர்களைக் கொலை செய்யும் பொழுது, மூன்று நாட்கள் அவர்கள் பிரேதங்கள் வீதிகளில் கிடக்கும் பொழுது, ஜீவ ஆவி இரு தீர்க்கதரிசிகளுக்குள் பிரவேசித்து அவர்கள் எழுந்து நின்று, மகிமைக்குள் ஏறிச்செல்வார்கள். பிறகு, ஏறக்குறைய அதே வேளையில் தான் வெடி வெடிக்க ஆரம்பிக்கிறது. அதுதான் கடைசி நேரம். அப்பொழுது தான் அவள் முடிந்துபோவாள்.

71.ஆனால் அது சம்பவிப்பதற்கு முன்பாக, புறஜாதிகள், தெரிந்து கொள்ளப்பட்ட மணவாட்டி... அங்கே உங்களில் சிலர், இக்காலைகளில் ஒன்றில் மேசையருகே அமர்ந்திருப்பீர்கள். அதில் ஒருவர் எடுத்துக் கொள்ளப்படுவார், இன்னொருவர் கைவிடப்படுவார். முடிவாக நீங்கள் அதிசயப்படுவீர்கள், 'இது என்ன விஷயம் என்று. ஒரு மோட்டார் வாகனத்தை உங்கள் மனைவியோடோ அல்லது உங்கள் கணவனோடோ பேசிக்கொண்டே ஓட்டிக்கொண்டே சென்று கொண்டிருக்கக் கூடும், நீங்கள் கேட்பதற்கு அவர்கள் பதிலளிக்க மாட்டார்கள், ஏனெனில் அவர்கள் திடீரென அங்கு இருக்கமாட்டார்கள்.

கல்லறைக்கு ஓடிச் செல்வீர்கள், சில கல்லறைகள் திறந்திருக்கும், வேறு சில இன்னமும் அப்படி மூடியே கிடக்கும். ''மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை''. அப்படியே ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். அது அப்பொழுது முடிவடைந்திருக்கும்.

72.அது ஒரு இரகசிய வருகையாக இருக்கும், அது எப்பொழுது சம்பவிக்கப் போகிறது என்பதை ஒருவரும் அறியமாட்டார்கள். நாம் ஆயத்தமாகவும் விழிப்புடனும் இருக்கும்படி கட்டளையிடப் பட்டிருக்கிறாம். எந்த மணிவேளை என்பதை நாம் அறியோம். ஆனால் அது என்னவாயிருந்தாலும் சரி, கடந்த காலத்தில் மரித்தவர்களுக்கு நாம் முந்திக் கொள்வதில்லை. இயேசு தோன்றியதுமே, முழு ஜாமமும் விழித்தெழுகிறது. மரித்தவர்களோ, உயிரோடிருக்கிறவர்களோ, யாராயிருந்தாலும் சரி.

முதலில், நாம் அவரை சந்திப்பதில்லை. நாம் ஒருவரையொருவர் முதலில் சந்திப்போம். வேதம் கூறுகிறது எபேசியர் 5-தாம் அதிகாரம்,"கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்த வர்களுக்கு முந்திக் கொள்வதில்லை. தங்களுடைய சாட்சிகளை தங்களுடய இரத்தத்தினால் முத்திரையிட்ட அந்த



ஆவதற்காக, அவர் இரட்சகராக ஆவதற்காக, மனிதன் கெட்டுப் போக வேண்டியது அவசியமாயிற்று. விழுந்து போவது என்பது மனிதனில் காணப்பட்டது. ஆனால் மனிதனை மீண்டும் மீட்டுக்கொள்ள வேண்டும் என்ற தன்மை தேவனில் இருந்தது. அக்காரணத்தினால் தான் நமக்கு இரவு வேளையானது உண்டாயிருக்க வேண்டியிருக்கிறது, எதற்கென்றால் பகற்காலத்தை நாம் விரும்பி நாடுவதற்காக, பூரண ஆரோக்கியத்தை நாம் மகிழ்வுடன் அனுபவிக்க வேண்டி நாம் வியாதிப்பட வேண்டியுள்ளது. இன்ப மும், துன்பமும் எல்லாம் தேவையாயிருக்கிறது. இப்பொழுது, நமது நெருங்கின இனத்தான் மீட்பர்...

88. இப்பொழுது நீங்கள் இங்கே கவனிக்க வேண்டுமென நான் விரும்புகிறேன். நான் 5ம் அதிகாரத்தைப் பார்த்துக் கொண்டிருக் கிறேன், அவன் உற்றுப் பார்த்தபொழுது, ''பயப்படாதே'' என்று கூறப்பட்டது. இந்த 5ம் வசனத்தில், 'பயப்படாதே'' என்று கூறப்படுகிறது. அங்கே எப்பொழுதும்.. பாருங்கள்... எந்தவொரு காரியத்தைக் குறித்தும் கலவரமடைய வேண்டாம்.

"அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: நீ அழவேண்டாம்; இதோ, யூதா கோத்திரத்துச் சிங்கமும், தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார் என்றான்.

அப்பொழுது, இதோ, அடிக்கப்பட்டவண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர் களுக்கும் மத்தியிலே நிற்கக் கண்டேன்...'

வெளி. 5:5-6.

89. "ஒரு ஆட்டுக்குட்டி.'' இதற்கு முன்னால் யோவான் ஏன் அந்த ஆட்டுக்குட்டியைக் காணவில்லை? அந்த ஆட்டுக்குட்டி யானவர் பிதாவின் சிங்காசனத்தில், வாயிற் காவலர்களைத் தாண்டி, உள்ளே வீற்றிருந்தார். யோவானால் உள்ளாகப் பார்க்க முடிய வில்லை. அவன் அந்நான்கு ஜீவன்களை மாத்திரமே, அந்நான்கு கேருபீன்களை மாத்திரமே, அவைகள் அப்பரிசுத்த ஸ்தலத்தை காவல் செய்து கொண்டிருக்கிறதை மாத்திரமே காண முடிந்தது. ஞாயிற்றுக்கிழமை பாடத்திலும் ஏனைய பாடங்களிலும் நாம் அதைப் பற்றி பார்த்தோம். அதற்கு அப்பால் என்ன இருந்தது என்பதை அவனால் காண முடியவில்லை என்பதைக் கண்டோம். அங்கேதானே திடீரென மிகவும்

சேற்றிலிருந்தும் பாவத்தின் பழைய குழியிலிருந்தும் தூக்கியெடுத்து, என்னை சீயோன் மலையின் உச்சியிலே நட்டு, பிரியமுள்ள தேவனுடைய பரிசுத்தவான்களின் பழத்தோட்டங்களில் என்னை நட்டார். இப்பொழுது பிரியமுள்ள அந்த இராஜ்ஜியத்தின் பிரஜையாக நாம் இருக்கிறோம். கிறிஸ்து இயேசுவிலே சகோதர சகோதரிகளாக இருக்கிறோம். நமது சிந்தைகளிலிருந்த எல்லாவிதமான அசுத்தங்களும் அருவருப்புகளும் அகன்றன. நமது சரீரங்கள் சுத்தமான தண்ணீ ரினால் சுத்திகரிக்கப்பட்டு, நமது இருதயங்கள் கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தினால் தெளிக்கப் பட்டுள்ளன. பரிசுத்த ஆவியானவர் தமது இனிய காற்றினால் நம்மில் வாசம் பண்ணிக் கொண்டிருந்து, நமது கிரியைகள் வழியாக நாள் முழுவதும் வீசிக் கொண்டிருக்கிறார். நமது கிளைகள் வழியாக வீசிக் கொண்டிருந்து, நம்மை அப்படியும் இப்படியுமாக அசையச் செய்து, அதினால் அவரில் நன்கு வேர்கொள்ளும் படி செய்து, ஆழமாக வேரூன்றி வளரச் செய்கிறார். அது அற்புத மாக இருக்கவில்லையா? "நமது இரட்சிப்பின் அச்சாரம்'.

86. இவ்வதிகாரம் நாம் இழந்து போன சுதந்திரத்தைப் பற்றி வெளிப்படுத்துகிறது. நமது இழந்து போகப்பட்ட சுதந்திரமானது, நமது கிருபையுள்ள, விலையேறப் பெற்ற, நெருங்கின இனத்தானாகிய மீட்பரினால் திரும்ப உரிமை கோரப்பட்டுள்ளது. தேவன் எவ்வாறு கீழிறங்கி வந்தார்! அவர் தேவன் என்னப்படுவதில் இருந்து, மனிதனாக தனது பாத்திரத்தை மாற்றிக் கொண்டார். அவர் மானிடராக, நெருங்கின இனத்தான் மீட்பராக ஆவதற்காக இவ்வாறு செய்தார். எதற்கெனில் ஒரு இயற்கை உலகை, மீண்டும் மானிடருக்கு மீட்டுத் தருவதற்காக இவ்வாறு ஆனார். ஆமென்! இயற்கைக்கு அப்பாற்பட்ட அந்த தேவன் நெருங்கின இனத்தான் மீட்பராக ஆவதற்காக எவ்வாறு அவர் மாம்சத்திற்குரிய தோற்றத்தை எடுத்துக் கொண்டார்! ஏனெனில் அவர் தமது சொந்த பிரமாணங்களை தாமே மீற முடியாதவராக இருக்கிறார். அவர் நெருங்கின இனத்தான் மீட்பராகத்தான் ஆக வேண்டியிருந்தது, ஏனெனில் அதுவே உரிய வழியாயிருந்தது. அதுவே அவரது திட்டங்களாகும். அவ்விதமாகத்தான் அதை அவர் செய்தார்.

87. மனிதன் விழுந்து விடுவான் என்பதை தேவன் முன்னமே அறிந்திருந்தார். ஆயினும் அவரால் அவனை விழவைக்க முடியாது. எவரும் கெட்டுப்போவதை அவர் விரும்பவேயில்லை. ஆனால் மனிதன் கெட்டுப் போவான் என்பதை அவர் அறிந்தேயிருந்தார். ஆனால் எல்லா மனிதருக்கும் தேவனுடைய தன்மைகள் மகத்தான விதமாக பிரத்தியட்சமாக்கப்பட வேண்டும் என்பதற்காக, அவர் மீட்பராக



விலையேறப் பெற்ற மக்கள். ''நித்திரையடைந்த வர்களை நாம் முந்திக் கொள்வதில்லை. ஏனெனில்.... எக்காளம் தொனிக்கும்

அப்பொழுது ஒன்று சம்பவிக்கும். சுவிசேஷத்தின் ஏதோ ஒன்று தொனிக்கும். அது தானே அவருடைய வருகையை அறிவித்தலாகும். ''கிறிதுவுக்குள் மரித்தவர்கள் முதலாவது உயிரோடு எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் காத்திருக்கும் நாமும் மருரூபமடைவோம். ஒரு க்ஷணத்தில் ஒரு இமைப்பொழுதில், நாம் மறுரூபமடைவோம், சுருக்கங்கள் மறைந்து போகும். நரைமயிர் நீங்கிவிடும், ஒருமாற்றம் ஏற்படுவதை நாம் நன்கு உணருவோம். நாம் நின்று கொண்டிருக்கையில், நமக்குப் பிரியமானவர்களை முதலில் நாம் சந்திப்போம்.

''அதோ அங்கே அம்மா இருக்கிறார்கள், அப்பா இருக்கிறார்கள், அதோ அங்கே என்று பிரிய சிநேகிதன் இருக்கிறான். ஓ, அல்லேலூயா, நாம் ஆயத்தமாக இருக்கிறோம்'' என்று சொல்லுவோம். மரித்துயிர்த்து அவர்களோடு கூட நாம் ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, கர்த்தரை சந்திப்போம் என்று வேதவாக்கியம் கூறுகிறது. இதுவே வருகையின் ஒழுங்காகும்.

73.ஓ, எனக்கு வயது சென்ற தந்தையை காண்பது எவ்வளவு நன்றாயிருக்கும்! ஓ, என்னே! விசுவாசத்தோடு மண்ணுக்குள் சென்ற நமக்கு மிகவும் பிரியமானவர்களை சந்திப்பது எவ்வளவு அருமையாயிருக்கும் தேவனுடைய இனிமையைப் பாருங்கள். அவரை முதலில் நாம் சந்திப்போமானால், 'அம்மா அங்கே இருக்கிறார்களா, அம்மா கடைசியாக அதை அடைந்தார்களா? அவர்களுக்கு மிகவும் உறுதியாக பிரசங்கித்தோம், நாம் முயற்சி செய்தோம்; அவர்கள் இங்கு இருக்கிறார்களா? ஜா அங்கிள் இங்கு இருக்கிறார்களா? சகோதரன் இன்னார் இங்கு இருக்கிறாரா?'' என்றெல்லாம் நாம் கேட்போம் என்று அவர் அறிந்தே இருக்கிறார். ''கர்த்தாவே, நாங்கள் உம்மை நேசிக்கிறோம், உம்மை நேசிக்கிறோம், ஆனால்...'' என்று கேட்போம். முதலாவதாக நாம் ஒருவரையொருவர் சந்திக்கப் போகிறோம். ஓ, ஓ, ஓ . அவர்கள் அங்கு இருக்கிறார்களா என்று நாம் வியக்கத் தேவையில்லை. நாம் யாவரும் அங்கே இருக்கிறோம்.

அவர்கள், "ஆமென், மகிமையும், ஞானமும், கனமும், வல்லமையும், பெலனும் உண்டாவதாக" என்று கூறியது ஆச்சரியமல்ல. இருபத்து நான்கு மூப்பர்கள் தங்கள் கிரீடங்களை கழற்றி விட்டு, தரையிலே

வணக்கமாய் விழுந்து, அவர்கள் யாவரும் தரையிலே விழுந்து கிடந்து, அவரைத் தொழுது கொண்டனர்.

74.இந்நாட்களில் ஒன்றில் நாம் பூமிக்கு அப்பால், பூமியின் வளையத்திற்கு அப்பால், எங்கோ ஆகாயத்தில் நிற்போம். அப்பொழுது நாம் இன்னமும் பரலோகத்தில் போய் விடமாட்டோம்; நாம் அவரை ஆகாயத்தில் சந்திப்போம்.

ரெபெக்காள் விரைவாக தீர்மானித்தாள். தான் ஈசாக்கை சந்திக்க எலியேசருடன் ஒட்டகத்தின் மேலேறி செல்வோம் என்று அவள் தீர்மானித்த பொழுது, தனக்கு கணவனாக ஆகப்போகிற ஈசாக்கின் முகத்தை அவள் இதற்கு முன் பார்த்ததேயில்லை. ஆயினும் தேவன் அவளை அவனிடம் நடத்திக் கொண்டு இருந்தார். மாலையின் குளிர்ச்சியான வேளையில், ஈசாக்கு வயல்வெளிகளில் போவதற்காக போய்க் கொண்டிருந்தான். அது மாலை வேளையாயிருந்தது என்பதை நினைவில் கொள்ளுங்கள். அப்பொழுது ரெபெக்காள் ஒட்டகத்தின் மேலேறிவந்து கொண்டிருக்கிறாள்.

எலியேசர் அவளிடம், ''இதோ அவர் வருகிறார்'' என்று கூறினான். அப்பொழுது ரெபெக்காள் ஒட்டகத்தை விட்டிறங்கி, தன் முகத்தின் மேல் இருந்த முக்காட்டை இழுத்துவிட்டுக் கொண்டாள். அவள் இதற்கு முன் அவனைப் பார்த்ததே கிடையாது. அறிந்திருக்கவில்லை.... அவன் தான் அவளுடைய கணவன் என்று, அவனை இதற்கு முன்பார்த்ததே கிடையாது. அவள் அவனை விசுவாசத்தினால் சந்திக்க போவதாக இருந்தாள். (அவர் எப்படி தோற்ற மளிப்பார் என்பதை நான் அறியேன், ஆனால், ஓ, அவரை நான் சந்திக்கும் பொழுது!) அவனை அங்கே வெளிகளில் அவள் சந்தித்த பொழுது, அது கண்டதும் காதலாக மலர்ந்தது. அவனும் அவளை இதற்கு முன்பு கண்டதில்லை. அவன் கண்டபோது, அது கண்டதும் காதலாக மலர்ந்தது. இங்கே இவர்கள் ஒருவரையொருவர் வெளிகளிலே சந்திக்க வருகிறார்கள். அவன் அவளைத் தன் தந்தையின் இராஜ்யத்தினுள் கொண்டு வந்து அவளை விவாகம் செய்து கொண்டாள்.

75.அதேவிதமாகத் தான், கர்த்தர் கீழே இறங்கி வருகிற வழியிலே, அவரை மத்திய ஆகாயத்திலே, சபையானது ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு சந்திக்கும். ஓ, அது எப்பேர்ப்பட்ட உறவாக இருக்கும், கண்டதும் காதலாகத் தான் இருக்கும். நாம் பூமியின் வளையங்களிலே நின்று கொண்டிருக்கும் பொழுது, அந்த மீட்பின் பாடல்களைப் பாடும் போது, அது எப்படியாயிருக்கும்! ஓ, என்னே எப்படியாய், நாம் நமக்கு



அது உள்ளது. நமது முழு மீட்பையும் பெற்றுக் கொள்வதற்காக, ஏற்கனவே நாம் ஒரு பகுதியளவுக்கு மீட்கப்பட்டிருக்கிறோம்.

83. நான் அன்றொரு ஞாயிறன்று கூறியதைப் போல... இந்த கீழ்மட்டமான வழியில், பாவியானவன், சேற்றிலும் தூசிபடிந்த நிலையிலும் கடந்து அவர்கள் சுத்தமாக இருக்கக்கூடும். நான்கு மணிநேரத்திற்கு ஒருமுறை குளிக்கக்கூடும். மிகச் சிறந்த ஆடை களைக்கூட அவர்கள் அணியக்கூடும். அவர்கள் மிகவும் நேர்த்தி யான கல்வியறிவு மிக்கவர்களாகக்கூட இருக்கக்கூடும். ஆனால் தங்கள் ஆத்துமாவிலோ அவர்கள் நரகத்திலுள்ள அருவருப் பானதும், ஆபாசமானதும் அசுத்தமானதுமான சுவர்களைப் போல் இருப்பார்கள்.

84. ஆனால் ஒரு கிறிஸ்தவனோ, அந்த விதமான நிலைக்கு மேலாக செல்கிறவனாய் இருப்பான். ஏனெனில், இங்கே உள்ளே, தன்னில்தானே நமது சுதந்திரத்தின் அச்சாரத்தைப் பெற்றவனாய் இருக்கிறான். அவன்தானே இந்த அசுத்தத்திலிருந்தும் அருவருப்பிலிருந்தும் தூக்கியெடுக்கப்பட்டு, உன்னதமான நிலையில் செல்கிறவனாய் இருக்கிறான். ஓ, நான் அதை விரும்புகிறேன். பவுல் ரேடெர் என்பவர் இவ்விதமான உள்ள நிலையைப் பற்றி கூறு கையில், ''நான் அம்மேலான இடத்தில் பயணம் செய்கிறேன், நான் பயணம் செய்கிறேன்'' என்று கூறுகிறார். அங்கேதான் அந்த நிலை உள்ளது. இயேசு என்னுடையவர், அது ஆசிமிகும் உறுதியாகும் தெய்வீக மகிமையின் என்னே ஒரு முன்ருசி அது (ஊற்றண்டையில் நான் அதை ருசிபார்க்க அனுமதிக்கப்பட்டேன்) இரட்சிப்பின் வாரிசு, தேவன் கிரயத்திற்குக் கொண்டதால் அவர்தம் ஆவியால் பிறந்தேன்,

இரத்தத்தால் கழுவப்பட்டேன். இதுவே என் கதை, இதுவே என் பாடல் எந்நாளும் இரட்சகரைத் துதிப்பேன் இதுவே என் கதை, இதுவே என் பாடல், நாள் முழுதும் என் இரட்சகரைத் துதிப்பேன்

85. இருள் பிரதேசங்களிலிருந்தும், அசுத்தத்திலிருந்தும் தூக்கியெடுக்கப்பட்டோம். மகிமையின் முன் ருசியைக் கண்டோம். நமது அனைத்து சுதந்திரத்தின் அச்சாரத்தை நாம் இப்பொழுது உடையவர்களாக இருக்கிறோம். ஏனெனில் தேவன் நம்மை ஏற்கனவே பூமிக்குரிய காரியங்களிலே நாம் கொண்டிருந்த நமது வேர்களை பிடுங்கியெறிந்து, நம்மை உன்னதமான பிரதேசங்களிலே நட்டார். என்னை அவர் தூக்கியெடுத்து, என்னை லௌகீக காரியங்களிலிருந்து பிரித்தெடுத்து, என்னை மருரூபப்படுத்தினார். எனது வேர்களைப் பிடுங்கியெறிந்து, கிளைகளையும் எடுத்து, என்னை உளையான

காணப்படுகிறார். அவர் அங்கே ஏழு சபைக் காலங்களுக்காக ஆயத்தம் பண்ணிக் கொண்டிருக்கிறார்.

80. இப்பொழுதும் அவர், மீட்புக்குரிய ஏழு முத்திரைகளைத் திறப்பதற்காக ஆயத்தம் பண்ணிக்கொண்டிருக்கிறார். அதற்காகத் தான் 5ம் அதிகாரம் இருக்கிறது. அக்காரணத்தினால்தான் அதை நான் வாசித்து, அதிலிருந்து எடுத்து அதன் பேரில் பேசி, வேத வாக்கியத்தின் ஏனைய பாகங்களை எடுத்துக் கூறினேன். ஏனெனில், அது ஒவ்வொரு வசனவாரியாக இல்லை. ஆனால் ஏதோ ஒன்று சம்பவிப்பதற்காக ஆயத்தப்படுத்துவதாக அது காணப்படுகிறது. நீங்கள் அந்த ஆயத்தத்தைப் பெற்றுக்கொள்வீர்களானால், அப் பொழுது, அதைப் பெற்றுக் கொள்ளவும் ஆயத்தமாய் இருப் பீர்கள். எனவேதான் அது விசுவாசத்தினால் என்பதாக இருக்கிறது. இப்பொழுது இம்முத்திரைகள்...

81. இங்கே நான் சில வேத வாக்கியங்களையும், சில வியாக்கியானங்களையும் எழுதி வைத்திருக்கிறேன். இப்பொழுது, எபேசி யர் 1:13-14ல் நீங்கள் அதை எழுதிக்கொள்ள விரும்பினால், "இப்பொழுது நாம் இந்த அச்சாரத்தைப் பெற்றவர்களாய் இருக் கிறோம். பரிசுத்த ஆவியே நமது சுதந்திரத்தின் அச்சாரமாயிருக்கிறது'' என்பதைப் பற்றி அது கூறுகிறது. அதாவது, அச்சாரம் என்பது, கிறிஸ்துவுக்குள் நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளோம் என்பதற்கான உறுதியாக இருக்கிறது. அதாவது முன் பணமாக இருக்கிறது. நமக்கு நித்திய ஜீவன் உள்ளது என்பதற்கான ஆசீர் வதிக்கப்பட்ட நம்பிக்கையையும் காப்பீட்டையும் கொடுப்பதாக அது உள்ளது. அவர் நமக்காக கிரயத்துக்குக் கொண்ட அனைத்துக்கும் நாம் சுதந்திரவாளிகள் என்பதையும் அது காட்டுகிறது. ஓ, என்னே! உங்களால் அதைக் காண முடிகிறதா?

82. ஓ நீங்கள் பரிசுத்த ஆவியினால் முத்திரையிடப்பட்டிருக்கும் போது (நான் தொடர்ந்து அதைக் குறித்து குறிப்பிட்டுக் கொண்டேயிருக்கிறேன். ஏனெனில் நீங்கள் அதை இழந்து விடக்கூடாதே என்று நான் விரும்புகிறேன்) எதையெல்லாம் நமக்குப் பெற்றுத் தர கிறிஸ்து மரித்தாரோ அவையெல்லாம் நமக்குச் சொந்தமான தாக உள்ளது என்பதை அங்கீகரித்துக் காண்பிக்கும் தேவனுடைய முத்திரையாக அது இருக்கிறது. "இப்பொழுது நான் உங்களை ஏற்றுக் கொண்டு விட்டேன். இம் முத்திரையை நான் உங்களுக்குக் கொடுப்பேன். அதற்காகத்தான் அந்த வேளைக்காக நீங்கள் காத்துக் கொண்டிருக்கிறீர்கள்' என்பதாக தேவன் கூறுகிறதாக



அவர் அளித்த நம்மை மீட்கும் கிருபையைக் குறித்து, அவரைப் பாடித் துதிப்போம். பூமியின் வட்டத்தை, தலை வணங்கியவாறு, தூதர்கள் சுற்றி சூழ்ந்து கொண்டிருக்கையில், நாம் என்ன பேசிக் கொண்டிருக்கிறோம் என்பதைப் பற்றி அறியாமலிருப்பார்கள்.

அத்தூதர்கள் இழக்கப்படவில்லை. இரட்சிக்கப்படுவது என்றால் என்ன என்பதை அத்தூதர்கள் அறியமாட்டார்கள். நாம் தான் இழக்கப்பட்டோம். நாம் தான் அவ்வாறிருந்தோம். அப்பொழுது, எவ்வளவு பயங்கரமான காரியம் நமக்கு முன்பாக இருந்தது என்பதை நாம் உணர்ந்து கொள்வோம், அவரோ நம்மை சகல கோத்திரங்களிலும், பாஷைக் காரரிலும், ஜாதிகளிலும் இருந்து தம்முடைய இரத்தத்தினாலே மீட்டார். ஓ, அது எப்பேர்ப்பட்ட மகிழ்ச்சி கொண்டாடுதலான நாளாயிருக்கும்!

76.நான் அப்பாடலை விரும்புகிறேன்.

ஆகாயத்தில் ஆனந்த சந்திப்பொன்றுண்டு.

இனிமையாய், இனிமையாய்,

ஈற்றிலே நான் வான்வெளிக்கப்பால் உள்ள வீட்டிலே உன்னை சந்தித்து வாழ்த்துவேன்.

அழிவுள்ளோர் காதுகளில் கேட்டிராத பேரின்ப கீதம் பாடுவோம்.

அது மகிமையாயிருக்கும், நான் அறிவிக்கிறேன்,

தேவனுடைய சொந்தக் குமாரன் நடத்திச் செல்லுவார் ஆகாயத்தில் நாம் அவரை சந்திக்கையில்.

முட்செடியருகே நின்ற மோசேயையும் வீர தாவீதையும் அவன் கவணையும்

சொப்பனம் காணும் யோசேப்பையும் குறித்து அறிந்துள்ளீர். தானியேலும் சிங்கக்கெபியையும் பற்றி எப்போதும் பாடுகிறோம்.

ஓ, இன்னும் இவ்விதமான அநேகர் வேதத்திலுண்டு.

அவர்கள் யாவரையும் காண நான் வாஞ்சிக்கிறேன் என்று அறிவிக்கிறேன் (அது சரிதான்)

அவர்களை சந்திப்பது எவ்வளவாய் ஆனந்தமாயிருக்கும்

அது ஆகாயத்தில் சந்திக்கும் போது நடக்கும்

(அந்நாளுக்காக காத்திருக்கிறேன்!)

77. அதோ அங்கே உங்களுடைய இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்கள் வருகிறார்கள். அவர்கள் பிறகு சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்வார்கள். புறஜாதிகள் மேல் ஒளியானது வீசிக் கொண்டிருக்கையில், அதே வேளையில் அவர்கள் ஏற்றுக் கொள்ள இயலாது. யூதர்கள் அதை மறுதலித்து மறைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது, ஒளியானது. புறஜாதியார் எடுக்கப்பட்ட பிறகு, ஆவியானவர்அவர்களுக்கு சாட்சி கொடுக்கும்படி இருவர் மேல் வருகிறார். அப்பொழுது யூதர்கள் ஏற்றுக் கொள்ளுகிறார்கள். அவர்கள் தான் அந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்களாவர். அவர்கள் காணாமற் போன இஸ்ரவேல் வீட்டார். அவர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளுவார்கள். அப்பொழுது மணவாட்டியானவள் ஏற்கனவே எடுக்கப்பட்டிருப்பாள்.

78.அங்கே பத்து கன்னியர் காணப்படுகிறார்கள். நாம் மத்தேயு எழுதின சுவிசேஷம் 21ம் அதிகாரத்தை இப்பொழுதே எடுத்துக் கொள்வோம். பாருங்கள், நமக்கு இன்னும் நிறைய நேரம் இருக்கிறது. ஓ, நான் வேதாகமத்தை நேசிக்கிறேன்.

எனது இளைப்பாறுதலை நான் பரலோகத்தில் எடுக்கையில்,

அது என்னே ஒரு அருமையான பயணமாயிருக்கும்!

அங்கே பரலோக இசைக்குழு இசைக்கும் பாடல் இசையை நான் கேட்பேன்

எனது இரட்சகரின் முகத்தை நான் காண்பேன்.

நித்திய பசுமை மரத்தின் கீழ் நதியின் கரையில் அமர்ந்து,

எனது இளைப்பாறுதலை பரலோகத்தில் கழிக்க நான்

வாஞ்சிக்கிறேன்,

நீயும் உனதிளைப்பாறுதலை கழிக்க என்னுடன் வாராயோ?

79.இப்பொழுது, மத்தேயு எழுதின சுவிசேஷம் 25ம் அதிகாரம் என்று நம்புகிறேன். நான் 21ம் அதிகாரம் என்று கூறினேனல்லவா? நான் இங்கே 21ம் அதிகாரம் என்று குறித்து வைத்துள்ளேன். ஆனால் அது தவறு. அது 25ம் அதிகாரம் தான். நான் இக்காலையில் சற்று விரைவாகச் செல்ல வேண்டும். நான் களைப்பாக தாமதித்து எழுந்தேன். எனவே நான் அவசரம் அவசரமாக சில



அச்சுகமளித்தல் சரியாக எங்கே இருந்து கொண்டிருக் கிறது என்பதைப் பற்றி உங்களுக்கு கூறியிருக்கிறார் என்னும் திட நம்பிக்கை உங்களுக்கு உண்டு. நீங்கள் ஏற்கனவே அதைப் பெற்று விட்டதாக உங்களுக்கு நம்பிக்கை உண்டாயிருக்கிறது. ஏனெனில் உங்களுடைய மீட்பின் அச்சாரமாயிருக்கிற உங்களுடைய விசுவாசமே அது.

78. அதாவது, நீங்கள் உங்கள் வியாதியிலிருந்து மீட்கப்பட வேண்டுமென முயன்று கொண்டிருக்கையில், அப்பொழுது அதற் கென நீங்கள் கொண்டுள்ள விசுவாசம் உங்களுடைய சுகமளித்தலின் அச்சாரமாயுள்ளது. உங்கள் உள்ளத்தில் ஏதோ ஒன்று, "உன்னைக் குணமாக்குகிற கர்த்தர் நானே'' என்று கூறுகிறதென்றால், அதுவே உங்களுக்கு போதுமானதாக, நன்மையானதாக இருக்கிறது. அதுவே உங்களுக்கு தேவையானதாக இருக்கிறது. என்னே! அந்நிலையில், என்ன நேரிட்டாலும் சரி, நீங்கள் மகிழ்ச்சி யடைய ஆரம்பிக்கலாம். உங்களுக்கு அது கிடைக்கவில்லை யெனில், உங்கள் நிலைமை இன்னும் மோசமடைந்து கொண்டிருக்கிறதென்றால், நீங்கள் குணமடைந்துவிட்டால் எவ்வாறு மகிழ்ச்சியாயிருப்பீர்களோ, அந்த அளவுக்கு நீங்கள் மகிழ்ச்சியா யிருக்கலாம். ஏனெனில் அவ்வியாதி குணமடைந்துவிட்டது என்பதற்கான ஒரு உறுதியை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். அதை இப்பொழுது எத்தனை பேர்கள் புரிந்து கொண்டீர்கள். உங்கள் கரங்களை நாங்கள் பார்க்கட்டும். அது "காணக்கூடாதவைகளின் நிச்சயமாயிருக்கிறது.''

79. இந்த 5ம் அதிகாரத்தின் துவக்கத்தில் நாம் காண்கிற தென்னவெனில், 5ம் அதிகாரமானது வெளிப்படுத்தின விசேஷத் தின் 3ம் அதிகாரத்தில் உள்ள சபைக்காலத்தின் கடைசி பாகத்தினை இணைக்கும் வரை முடிச்சு போல உள்ளது. 4ம் அதிகாரம் எதற்காக யோவான் பரலோகத்திற்கு எடுக்கப்பட்டான் என்பதைத் தெரியப் படுத்துகிறது. 5ம் அதிகாரமானது எதற்காக ஆயத்தப்படுத்துகிற தென்றால் ..... சபைக் காலங்களினூடே கடந்து சென்ற பிறகு யோவான் 4ம் அதிகாரத்தில் உயர எடுத்துக் கொள்ளப்படுகிறான். 5ம் அதிகாரமானது, ஏழு முத்திரைகள் திறக்கப்படுதலுக்கான காட்சியை அவன் அமைப்பதாகக் காணப்படுகிறது. எவ்வாறு அவன் வெளிப்படுத்தின விசேஷம் முதலாம் அதிகாரத்தில் ஏழு சபைக் காலங்களுக்கு வழியைத் திறந்து வைத்தானோ அதற் கொப்பாய் இதுவும் இருக்கிறது. அங்கே அவர் ஏழு குத்துவிளக்கு களின் மத்தியில் நிற்பவராய், பதுமராகத்துக்கும் வச்சிரக் கல்லுக்கும் ஒப்பாய்

பிரவேசிக்க வகை, வழியில்லாத படி காக்கப்பட்டிருக்கிறது. அதினால் உங்களுக்கு பரிபூரண நம்பிக்கையானது உண்டாயிருக்கிறது; நீங்கள் எங்கே நின்றுகொண்டிருக்கிறீர்கள் என்பதைப் பாருங்கள்.

75. அதேவிதமாகத்தான் இங்கே சக்கர நாற்காலியில் அமர்ந்திருக்கிற இந்த சகோதரிக்கும், அல்லது இங்கே வியாதிப்பட்டு, பெலவீனப்பட்டு இருக்கிற ஏனையோர்க்கும் காரியமானது உள்ளது. ''உங்களை குணமாக்குவது தேவனுடைய நற்பிரியமாயிருக்கிறது'' என்பதாக உங்களுக்கு பரிபூரண அறிவு உண்டா யிருக்கக்கூடுமானால், அப்பொழுது உங்களை வியாதிப்பட்டவர்களாக தொடர்ந்து வைத்திருக்கக்கூடிய அளவுக்கு போதுமான பிசாசுகள் இருக்கிறதில்லை. காரியமானது அப்படித்தான் உள்ளது. உங்களைக் குணமாக்குவது தேவனுடைய நற்பிரியம் என்பதைப் பற்றி நீங்கள் அறிந்து கொள்ளும் போது, அவர் அதை உங்களுக்காக செய்து முடித்திருக்கிறார் என்று அறிந்து கொள்ளும் போது, அப்பொழுதுதான், ஒரு குறிப்பிட்ட காரியத்தை எவ்வாறு செய்வது என்பதைப் பற்றி புரிந்து கொள்ளுகிறீர்கள்.

76. அது இவ்வாறு உள்ளது. என் முழு இருதயத்தோடும் நான் உங்களிடம் கூறுவேனென்றால்... நீங்கள் பசியாயிருந்து, சாவுக் கேதுவாக பட்டினி கிடந்து இருந்தீர்களானால், அந்நிலையில் உங் களுக்கு என்னைப் பற்றி, ஒரு உண்மையான நபர் என்பதாக மிகுந்த நம்பிக்கை இருக்குமானால், ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு ஆயிரம் டாலர் கிடப்பதாக உங்களுக்கு நான் கூறி, அதை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பதையும், எந்த சாலை வழியாக, சரியாக எந்த இடத்திற்கு நீங்கள் செல்லவேண்டும் என்பதையும் நான் கூறுவேனென்றால், அப்பொழுது, அப்பணம் எந்த இடத்தில் கிடக்கிறது என்பதை சரியாக அறிந்து கொள்ளுவீர்கள். நான் சொன்னதை நீங்கள் விசுவாசித்திருந்தால், பணமே உங்கள் கையில் கிடைத்துவிட்டது போல் நீங்கள் மகிழ்ந்து களிகூர்ந்து கொண்டிருப்பீர்கள்.

77. எனவே நீங்கள் பெற்றுக்கொள்ளும் முன்னரே..... சுகம் அடைந்ததாக உணர்ந்துகொள்ளும் முன்னரே, 'அதைப் பெற்றுக் கொண்டேன்'' என்று கூறி, நீங்கள் உங்கள் சுகத்தைக் குறித்து மகிழ்ச்சி கொண்டிருக்கமுடியும், ஏனெனில் நீங்கள் அதைப் பெறு வதைப்பற்றி உறுதியான நம்பிக்கையுடையவர்களாய் இருப்ப தினால்; ஏனெனில், அதை உங்களுக்கு வாக்குத்தத்தம் செய்த அந்த மகத்தான ஒருவர் பேரில் உங்களுக்கு நம்பிக்கை உண்டாயிருக் கிறதல்லவா? பார்த்தீர்களா? அவர் பொய்யுரைக்க இயலாது என்றும்,



வேதவாக்கியங்களை குறித்து வைத்துக் கொண்டதில், 25க்குப் பதிலாக, 21ம் அதிகாரம் என்று குறித்து வைத்துவிட்டேன்.

அப்பொழுது பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு, மணவாளனுக்கு எதிர்கொண்டு போகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும்.

இப்பொழுது அவர்களில் ஐந்து பேர் புத்தியுள்ளவர்களும், ஐந்து பேர் புத்தியில்லாதவர்களுமாயிருந்தார்கள்.

புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக் கொண்டு போனார்கள். எண்ணெயையோ கூடக் கொண்டு போகவில்லை.

புத்தியுள்ளவர்கள் தங்கள் தீவட்டிகளோடுங் கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டு போனார்கள்.

மணவாளன் வரத்தாமதித்த போது, (அது சபைக் காலங்களிலே) அவர்கள் எல்லாரும் நித்திரை மயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள்.

80.காலம் முழுவதிலும், அவர்கள் யாவரும் மரித்தனர், நித்திரை மயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள். அவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பாருங்கள். தாங்கள் மரித்ததாக அவர்கள் கூறவில்லை. ஆனால் அவர்கள் "நித்திரை மயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள்''. பார்த்தீர்களா?

நடுராத்திரியிலே: இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டு போகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று.

அப்பொழுது அந்தக் கன்னிகைள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள்.

புத்தியில்லாதவர்கள் புத்தியுள்ளவர்களை நோக்கி: உங்கள் எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்சங் கொடுங்கள், எங்கள் தீவட்டிகள் அணைந்து போகிறதே என்றார்கள்.

புத்தியுள்ளவர்கள் பிரதியுத்தரமாக: அப்படியல்ல, எங்களுக்கும் உங்களுக்கும் போதாமலிராதபடி, நீங்கள் விற்கிறவர்களிடத்திற்குப் போய் உங்களுக்காக வாங்கிக் கொள்ளுங்கள் என்றார்கள்.

அப்படியே அவர்கள் வாங்கப்போன போது மணவாளன் வந்து விட்டார்; ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடே கூடக் கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள்; கதவும் அடைக்கப்பட்டது.

பின்பு, மற்றக் கன்னிகைகளும் வந்து: ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறக்க வேண்டும் என்றார்கள். (இப்பொழுது, அவர்கள் அவிசுவாசிகள் அல்லவென்பதைப் பாருங்கள். அவர்கள் நல்லவர்கள் தான்)

அதற்கு அவர்: உங்களை அறியேன் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்.

81.இப்பொழுது இந்த ஐந்து புத்தியுள்ள கன்னியர். வேதத்தில் எண்ணெயானது பரிசுத்த ஆவியைக் குறிக்கிறது. நாம் யாவரும் அதை அறிவோம். எனவே தான் நாம் வியாதியஸ்தரை எண்ணெய் பூசி ஜெபிக்கிறோம். எனவே புத்தியுள்ளவர்கள் தங்கள் விளக்குகளில் எண்ணெயை உடையவர்களாக இருந்தார்கள். அது பரிசுத்த ஆவியாகும். எனவே அவர்கள் கலியாண விருந்துக்குள் பிரவேசிக்கத் தக்கதாக ஆயத்தமாயிருந்தார்கள். நான் எசேக்கியேல் 9ம் அதிகாரத்திற்கு திரும்பிச் சென்று உங்களுக்கு காண்பிக்க முடியும். ஆனால் நான் இங்கே சுமார் பதினைந்தும் அதற்கு மேலுமாக வேதவாக்கியங்களை குறித்து வைத்துள்ளேன். எனவே எண்ணெயானது. இந்த வாரத்தில் நடந்த வகுப்பில், எண்ணெயானது ''பரிசுத்த ஆவியைக் குறிக்கும் என்பதை ஏற்கனவே பார்த்து விட்டோம் என்று நம்புகிறேன். நாம் யாவரும் அதை அறிவோம்.

82.இப்பொழுது கவனியுங்கள். அவர்கள் இருசாராருமே கன்னியர் தான்.

இதை நான் இப்பொழுது எடுத்துக் கொள்கிறேன். இங்கே நாம் இந்த இரு சாராரையும் பற்றிப் பார்த்துவிடுவோம். இது ஒரு கன்னிகை, அது ஒரு கன்னிகை இது புத்தியுள்ள கன்னிகை, அது புத்தியில்லாத கன்னிகை, ஆனால் இருவருமே கன்னியர் தாம். கன்னிகை என்ற அந்த வார்த்தையை நீங்கள் எடுத்துக் கொண்டு அதன் அர்த்தத்தை நீங்கள் ஆராய்ந்தால், "பரிசுத்தமாக, சுத்தமான, சுத்திகரிக்கப்பட்ட'' என்ற அர்த்தங்களை தருகிறது. 'பரிசுத்தமாக்கப்பட்ட' என்ற வார்த்தை, "பரிசுத்தவானாக்கப்பட்ட' என்பதிலிருந்து வருகிறது, அது ''சுத்தமான'' என்ற வார்த்தையிலிருந்து வருகிறது. எபிரெய வார்த்தையைப் போல..... கிரேக்க மொழியில், "பரிசுத்தமாக்கப்பட்ட' என்பது, ''சுத்தமான'' என்று அர்த்தமாகிறது. எபிரெய பாஷையில்



கொடுத்துக்கொண்டிருக்கிற வண்ணமாக சபையில் சொல்ல இயலுமென்றால், எவ்வளவாய் ஒரு நல்ல தொரு வேளை நமக்கு உண்டாயிருக்கும்'' என்று எண்ணினேன். ஆனால், ஜெபத்தில் நீங்கள் இருக்கையில் உங்களுக்கு கிடைக்கிற வண்ணமாக அதை உரைக்க எப்படியோ உங்களுக்கு இயலாமற் போய்விடுகிறது.

73. ஆனால் இப்பொழுது, முதல் வசனங்களை நாம் திரும்பவும் ஆரம்பிப்பதற்கு முன்பாக, நாம் கண்டோம்..... கடந்த ஞாயிறன்று நாம் எங்கே விட்டோமோ அதை நாம் திருப்பிப் பார்போமாக. நாம் எபேசியர் 1:12, 13-ல், நமது இரட்சிப்பின் அச்சாரத்தைப் பெற்றிருக்கிறோம் என்று பவுல் கூறியதைக் கண்டோம். நமது மீட்பின் அச்சாரம். நமது மீட்பிற்கு அச்சாரமாயிருப்பது பரிசுத்த ஆவியேயாகும். இது .... அடுத்த சில வாரங்களுக்கான போதித்தலானது மீட்பைப் பற்றிய அடிப்படையைக் கொண்டதாக இருக்கும். மீட்பின் பேரில்தான். நீதிமான் ஆக்குதலின் பேரில் அல்ல. இல்லை. அது மீட்பை அடிப்படையாகக் கொண்டதாகும். பரிந்து பேசுகிற மத்தியஸ்த ஊழியத்தைப் பற்றியதாக அது இருக்காது. ஆனால் அவ்வுபதேசங்கள் மீட்கப்பட்டவர்களைப் பற்றியதாகவே இருக்கும். இழந்துபோகப்பட்ட அல்லது பறி கொடுத்துவிட்ட ஒரு சுதந்திரம். அது மீண்டும் நமக்கு மீட்டு கொடுக்கப்பட்டது. அது எவ்வாறு நிறைவேற்றப்பட்டது என்பதைப் பற்றியும், ஓர் உலகம் என்பது ஏற்படும் முன்னரே தேவன் அதை எவ்வாறு திட்டமிட்டார் என்பதைப் பற்றியும், அதினால் சபையானது எவ்வாறு பத்திரமாக நங்கூரமிட்டு இருக்கிறது என்பதைப் பற்றியும் நாம் பார்க்கலாம்.

74. நாம் எவ்வாறு நின்றுகொண்டிருக்கிறோம் என்பதைப்பற்றி நாம் அறிய வேண்டியதான வேளைக்கு வந்திருக்கிறோம் என்று நான் எண்ணுகிறேன். நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதின் பேரில் அதற்கான விசுவாசம் உங்களுக்கு இருந்தாலொழிய நீங்கள் அதை எவ்வாறு செய்யமுடியும்? உங்களுக்கு விசுவாசம் இருந்தாகவேண்டும். இங்கேயுள்ள இந்த சபைக்கு அந்த நோக்கத்தின் பேரில்தான் நான் இதைச் செய்துகொண்டு இருக்கிறேன். அதாவது விசுவாசிகள், தாங்கள் எதற்காக நின்று கொண்டிருக்கிறார்களோ, அதற்கான விசுவாசத்தையும் நம்பிக் கையும் அவர்களுக்கு அளிப்பதுதான் அந்நோக்கம். ஏனெனில் அது கர்த்தருடைய வார்த்தையாயிருக்கிறது. அது வேத வாக்கியத்தின் மூலமாக இருக்கிற வரையிலும், ஆதியாகமம் முதல் வெளிப் படுத்தின விசேஷம் வரையிலும் இறையாண்மை முன்னும் பின்னும், மேலும் கீழும் வைக்கப்பட்டு, பிசாசு அங்கே எவ்வகையிலாகிலும் உள்ளே

சந்தர்ப்பம் அளிக்கிறது போல, என்றாவது ஒரு நாளிலே, இக் கூடாரத்தில், ஏழு முத்திரைகளின் பேரில் செய்தியளிக்க ஏழு நாட்கள் கூட்டங்கள் நடத்தப்படும். (இப்புத்தக மானது வில்லியம் பிரன்ஹாம் சுவிசேஷ சங்கத்தால் வினியோ கிக்கப்படுகிறது - ஆசி). நாம் ஏழு சபைக்காலங்களைப் பற்றிய செய்தியைப் பெற்றிருக்கிறோம். இனிமேல் நாம் தேவனுடைய ஏழு இரகசியமான முத்திரைகளைப் பற்றிய செய்திகளை ஏழு இரவுகளில் எடுத்துக்கொண்டு, அதாவது ஒவ்வொரு இரவிலும் ஒவ்வொரு முத்திரையாக திறக்கப்பட்டு, இப்படியாக ஏழு இரவுகளில் ஏழு முத்திரைகளையும் பார்ப்போம். கர்த்தர் அதை எப்பொழுது நமக்கு தந்தருளுவார் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அவர் அதைச் செய்வாராயின், இன்று காலையில் அதற்கான அடிப்படையை நான் போடுவேன்.

70. இவ்வசனங்களின் கடைசி வசனத்தை நாம் எடுத்துக் கொண்டு... திருவசனத்தின் பாகமாக, தானியேலின் எழுபது வாரங்கள்' என்ற செய்தியை கொண்டு வருவோம். (இப்புத்தகம் 'உரைக்கப்பட்ட வார்த்தை பதிப்பகத்தாரால் வினியோகிக்கப்படுகிறது - ஆசி). கடைசி மூன்று வாரங்கள், அவற்றை , கடைசி முத்திரைகளுக்கு மக்களைக் கொண்டு வருகிற பெந்தெகொஸ்தே யூபிலியோடு இணைப்போம். அதன்பிறகு ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகளை உடைப்பதற்காக ஆயத்தமாக அமர்ந்திருப்போம்.

71. முத்திரைகள் இரகசியமானவை என்பதை நினைவில் கொள்ளுங்கள். புத்தகமானது முத்திரையிடப்பட்டிருந்தது; அது அதன் புறம்பேயும் இருந்தது, ஏழு முத்திரைகள் அதற்கு இருந்தது, அது அப்புத்தகத்தில் கூட வெளிப்படுத்தப்படவில்லை. இந்தக் காரியங்கள் வேதாகமத்தில் எழுதப்படவும் கூட இல்லை. ஆனால் அதைக்குறித்து யாரேனும் ஒரு வியாக்கியானம் அளித்தால், அது வேதத்தின் ஏனைய பகுதிகளோடும் ஒத்து இருக்கவேண்டும். ஓ, நீங்கள் நிச்சயமாகவே அதிலிருந்து ஒரு ஆசீர்வாதத்தைப்பெறப் போகிறீர்கள் என்பதைப் பற்றி நான் நிச்சயமுள்ளவனாக இருக் கிறேன். நிச்சயமாகவே நீங்கள் அதைப் பெறுவீர்கள் என்று நான் நம்புகிறேன்.

72. இன்று காலையில் இங்கே சரியான நேரத்திற்கு நான் வருவதற்கு எனது கோட்டைப் போட்டுக்கொள்ளக்கூட எனக்கு இயலவில்லை. ஏனெனில், நான் அங்கே உட்கார்ந்து கொண்டிருந்த பொழுது, படித்துக்கொண்டிருக்கையில், பரிசுத்த ஆவியானவர் என்னில் தமது தயவால், மேலும் மேலும் நிரப்பிக்கொண்டே யிருந்தார். நான் அதைக் கண்ட பொழுது, 'நீர் எனக்கு இப்பொழுது இங்கே



''பரிசுத்தமாக்கு" என்று அர்த்தமாகிறது. பாருங்கள்? நமக்கு சுத்தமான'' என்று இருக்கிறது.

நாம் மூன்று வார்த்தைகளை எடுத்துக் கொள்கிறோம், மூன்றுக்குமே ஒரே அர்த்தம் தான் உண்டு. ஆனால் அது வேறுபட்ட வார்த்தைகளாக கூறப்பட்டுள்ளது. 'சுத்தமுள்ள, பரிசுத்தமான, பரிசுத்தமாக்கப்பட்ட'' ஆகிய மூன்று வார்த்தைகளையும் போல். மூன்றுமே ஒரே வார்த்தை தான்.

83.நாய் என்ற (Dog) வார்த்தையைக் குறித்து சொன்னால் ஆங்கிலத்தில் நான் அதை Dog என்று கூறுவேன். ஜெர்மானிய பாஷையில் அது 'ஹண்ட்' (Hund) என்று உள்ளது. அது சரிதானே? சகோதரன் நார்மன் அவர்களே, ஸ்பானிஷ் பாஷையில் நாய்க்கு, ''அஜோ' (Aj0). "அஜோ, ஹண்ட், நாய்'' என்றும் நாயைத் தான் குறிக்கிறது. எனவே அது ஒரு சொல் தோற்றம் தான்.

எனவே "சுத்தமான'' என்பதற்குரிய சொல் கிரேக்க மொழியில் ''பரிசுத்தமாக்கப்பட்ட'' என்ற அர்த்தத்திலும், எபிரெய பாஷையில், ''பரிசுத்தமான" என்ற அர்த்தத்திலும் உள்ளன. 'பரிசுத்தமான, சுத்தமான, பரிசுத்தமாக்கு' ஆகிய இவையாவும் ஒரே வார்த்தை தான். எனவே இது அசுத்தமான, அழுக்கடைந்த சபை அல்ல. அது பரிசுத்தமாக்கப்பட்ட, சுத்தமான சபையாகும். பத்து கன்னியர் மணவாளனை சந்திக்கப் புறப்பட்டுப் போனார்கள். அதன்அர்த்தம் என்ன?

இந்த சபைகள் யாவும்.... இங்கே இந்த ரோமன் சபையில் அல்ல. ஆனால் ஏனைய ஸ்தாபனங்களில், நிக்கொலாய் மதஸ்தரில் பாப்டிஸ்ட்டுகள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து பிரசங்கிக்கிறார்கள். ப்ரெஸ்பி டேரியன்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து பிரசங்கிக்கிறார்கள். நசரேய சபைக்காரர்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து பிரசங்கிக்கிறார்கள். யாத்திரை பரிசுத்தம் சபையார் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து பிரசங்கிக்கிறார்கள். அது சரிதானே?அவர்கள் யாவருமே மணவாளனை சந்திக்கப் புறப்பட்டார்கள்.

84.அவர்கள் ஒவ்வொரு வரும் மணவாளனை சந்திக்கும்படி போய்க் கொண்டிருந்தார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

தேவன் அதை கனம் பண்ணியிருந்தால், அப்பொழுது அவர்களையும் அவர் எடுத்துக் கொள்ள வேண்டியதிருக்கும். சபைக் காலங்களின்

செய்தியில் அதே விஷயத்தை தேவன் நம்மோடு அன்று இரவில் பிலேயாமின் உவமையைக் குறித்து, அதாவது "பிலேயாமின் உபதேசம்' என்பதைப் பற்றி பேசியதை நினைவில் வைத்திருக்கிறீர்களா? இங்கே பிலேயாம் நின்று கொண்டிருக்கிறான். அது அருமையான, மகத்தான, பெரிய ஸ்தாபிக்கப்பட்ட தேசமாயிருந்தது. அவர்கள் தேவனில் விசுவாசம் கொண்டவர் களாயிருந்தார்கள். ஏனெனில் பாலாக் வந்தபோது என்ன செய்தான் என்பதைப் பாருங்கள். அல்ல, பிலேயாம் வந்த போது, என்ன செய்தான் என்று பாருங்கள். பிலேயாம், இஸ்ரவேலர் வணங்கிய அதே தேவனுக்கு, யேகோவாவுக்கு, அதேவிதமான பலிகளைச் செலுத்தினான்.

அவன் ஏழு பலிபீடங்களை உண்டாக்கினான். ஏழு என்ற எண் தேவனுடைய பூர்த்தியான, முழுமையான எண்ணாக இருக்கிறது.

85.'அவர் ஆறு நாட்கள் கிரியை செய்தார், ஏழாம் நாள் ஓய்ந்திருந்தார். ''ஏழு என்பது பூர்த்தியடைந்ததைக் குறிக்கிறது, பாருங்கள். இவ்வுலகில் அவர் ஆறு நாட்கள் வேலை செய்தார். முதல் இரண்டாயிரம் ஆண்டுகள் ஆனபோது, உலகமானது தண்ணீரால் அழிக்கப்பட்டது. இரண்டாவது இரண்டாயிரமாண்டில் கிறிஸ்து வருகிறார்; இப்பொழுது இது மூன்றாவதான இரண்டாயிரம் ஆண்டுக்காலம் நடந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு இரண்டாயிரம் ஆண்டுகளின் முடிவில் முக்கியமான ஒன்று சம்பவித்திடுகிறது; அப்பொழுது உலகமானது மீண்டும் ஒரு தடவை அசைக்கப்படுகிறது.

ஆறாயிரம் ஆண்டுக் காலத்தில் அவர் உலகை கட்டினார். ஆறாயிரம் ஆண்டுக்காலம் சபையானது உலகுக்கு எதிராக பாடுபடுகிறது; அதன்பிறகு ஏழாயிரமாண்டு தான், ஆயிரவருட அரசாட்சிக்காலமாகிய ஆயிரமாண்டுக் காலமாகும். அதை இப்பொழுது புரிந்து கொண்டீர்களா?

இப்பொழுது சபைக்குங்கூட ஏழு சபைக்காலங்கள் உண்டாயிருக்கிறது. தேவன் .... அதுதான் சபைக் காலங்களின் முழுமையான பூர்த்தியான எண்ணாக இருக்கிறது. அவையாவும் ஏழாக இருக்கிறது. ஏழு என்ற எண் தேவனுடைய பூர்த்தியான முழுமையான எண்ணாக இருக்கிறது. ஏழு சபைக்காலங்கள், சிருஷ்டிப்பின் ஏழாயிரம் ஆண்டுக்காலங்கள், யாவும் ஏழு என்ற எண்ணில் தான் அமைந்துள்ளன.

86.அங்கே கன்னிகைகள் அவரைச் சந்திக்கும்படி புறப்பட்டுச் சென்றார்கள். ஆனால் புத்தியில்லாத கன்னியரிடம், அவர்கள்



இருந்தோம் என்றும், தங்களுடைய இருதயத்தின் விருப்பங்கள் அனுக்கிரகக்கப்பட்டவர்களாய் கடந்து செல்லுகிறோம் என்று திருப்தியடைந்தவர்களாய் செல்ல கிருபை செய்தருளும். அந்த எண்ணிக்கையில் என்னையும் சேர்த்துக்கொள்ள நினைத்தருளும், கர்த்தாவே. இவை யாவற்றையும் இயேசுவின் நாமத்தினால் கேட்கிறேன். ஆமென்.

66. இப்பொழுது நாம், நம்முடைய கிருபை பொருந்திய புத்தகத்தில் திறந்து, முத்திரைகளை ஆட்டுக்குட்டியானவர் தாமே திறப்பதற்காக எதிர்பார்த்துக்கொண்டு, அல்லது அப்புத்தகத்தை நமக்கு திறந்து கொடுக்க வேண்டுமென எதிர்பார்த்து இருப்போ மாக. இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல் என்ற இப்புத்தகத்தில் நாம் 5ம் அதிகாரத்தை திறந்து எடுத்துக்கொள்வோமாக.

67. இப்பொழுது இந்த மின்காந்த ஒலி நாடாக்கள் வாயிலாக இச்செய்தியை உலகம் பூராவிலும் பல்வேறு பாகங்களிலுமிருந்து கேட்டுக்கொண்டிருக்கிற எனது நண்பர்களுக்கு நான் கூறிக் கொள்ளுவது என்னவெனில், இச்செய்தியை அளிப்பதற்கென நான் உபதேசங்களை தெரிவித்தாக வேண்டும். எந்த ஒரு மனிதனுக்கும் உபதேசம் ஏதும் இல்லையெனில், அவனுக்கு என்று ஒரு ஊழியமே இல்லை. எனவே, உங்களுடைய சபையார் இச் செய்திகளை கேட்கக்கூடாது என்று நீங்கள் நினைத்தால், அப்பொழுது, இச்செய்தியடங்கிய ஒலிநாடாவை அவர்களிடமிருந்து விலக்கி வைத்துக்கொள்ளுங்கள். நான் எனது சொந்த கருத்தையும், எனது சொந்த எண்ணங்களையும், தேவனுடைய வார்த்தையின் பேரில் உள்ள எனது சொந்த வெளிப்படுத்துதல்களையுமே நான் எடுத்துக் கூறிக்கொண்டிருக்கிறேன்.

68. சில மாதங்களுக்கு முன்பாக அல்லது சில நாட்களுக்கு முன்பாக, நாம் மூன்றாம் அதிகாரத்திலிருந்து நான்காம் அதிகாரம் வரையிலும் திருப்பிப் பார்த்தோம். கடந்த ஞாயிறன்று மீண்டும் நான்காம் அதிகாரத்தை திருப்பிப் பார்த்து, 5ம் அதிகாரத்திற்கு வந்தோம். இன்றைக்கு இப்பொழுது, 5ம் அதிகாரத்தை திருப்பிப் பார்க்கப்போகிறோம், அதினால் நாம் வரப்போகும் 6ம் அதிகாரத்திற்கு ஒரு அஸ்திவாரமிட்டது போல் செய்துவிடுவோம்.

69. எதிர்காலத்திற்காக திருவசனத்தின் பேரில் ஒரு கிரமத்தை ஏற்படுத்திட வேண்டும் என்பது எனது இன்றைய நோக்கமாயிருக் கிறது. அது எப்பொழுது என்று எனக்குத் தெரியாது, ஆனால் கர்த்தர்

என்பதாய் விசுவாசித்துக்கொண்டு, இன்று பூமி யின் மேல் உள்ள சபை அதுதான் என்று விசுவாசித்தவர்களாய், போராடிக்கொண்டு இருக்கிறோம்; எனவே நாம் பயபக்தியுடன் தேவனை கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினால் அணுகுகிறோம்.

63. நாங்கள் தாழ்மையாக வருகையில், எங்களுடைய சிந்தை களை விட்டும், எங்களுடைய இருதயங்களைவிட்டும், அனைத்து லௌகீக காரியங்களையும், வாழ்வின் அனைத்து கஷ்ட துன்பங்களையும் அகற்றிடவேண்டுமென உம்மிடம் வேண்டுகிறோம். ஓ தேவனே, நீர் எங்களை ஆராதனைக்குரிய சரியான நிலையில் வைத்தருளும், அதினால் நாங்கள் உம்மை, உமது வார்த்தையை கேட்பதின்மூலம், தொழுதுகொள்ளச் செய்தருளும்.

64. இப்பொழுதும், இன்று காலையில் உள்ள எங்களது பாடத்தில் யோவான் மிகவும் அழுதான் என்பதைக் கண்டோம்; ஏனெனில் அப்புத்தகத்தை கையிலெடுக்க ஒரு மனிதனும் அங்கு பாத்திரவானாகக் காணப்படவில்லை. அதைப்போல நாங்களும் கர்த்தாவே, எங்கள் இருதயங்களில் அழமுடியும். ஏனெனில் அப்புத்தகத்தை திறக்க ஒருவனும் பாத்திரவானாக இல்லாததினாலே. ஆனால் யோவானுடைய அழுகையோசிறிது நேரம்தான் நீடித்தது. சீக்கிரமாகவே அவன் ஆற்றித்தேற்றப்பட்டு, ஆட்டுக் குட்டியானவர் வந்து புத்தகத்தை கையில் எடுத்தார். ஓ, தேவ ஆட்டுக்குட்டியானவரே, இன்று காலையில் வந்து அப்புத்தகத்தை எடுத்து, அதை எங்களுக்கு திறந்துதாரும், கர்த்தாவே, நாங்கள் உமக்குக் காத்திருக்கிறோம். நாங்கள் எங்கள் தகுதியின்மையோடு உமக்காக காத்திருக்கிறோம். உம்முடைய பிரசன்னத்தினாலும், உமது வார்த்தையினாலும் எங்களை திருப்தியாக்கியருளும்.

65. ஓ, தேவ ஆட்டுக்குட்டியானவரே, அநேக கரங்கள் உம்மிடத் தில் உயர்த்தப்பட்டது. அவர்கள் ஒவ்வொருவருடைய இருத யத்தை நீர் அறிந்திருக்கிறீர். ஏனெனில், நீர் அவர்களது விருப்பங் களை அறிந்திருக்கிறீர். நீர் என்றென்றும் இருப்பது போல இன்றைக் கும் அதேபோன்ற தேவனாகவேயிருக்கிறீர். நீர் எப்பொழுதும் மாறாதவராயிருப்பீர். ஏனெனில் நீர் பூரணராயும், எல்லையற்ற பரம்பொருளாகவும், நீர் மாறமுடியாதவராகவும் இருக்கிறீர். நீர் எங்களை திருப்தியாக்கியருளும் என்று இக்காலையில் கேட்கிறோம். கர்த்தாவே, ஒவ்வொருவருடைய வேண்டுகோளையும் அனுகிரக்கத்தருளும், அதினால் அவர்கள் யாவரும் இக்கட்டிடத்தை விட்டு கடந்து செல்லும்போது, தாங்கள் தேவனுடைய பிரசன்னத்தில்



விளக்குகளில் எண்ணெய் இல்லை, ஆனால் அவர்கள் மற்ற யாவையும் உடையவர்களாக இருந்தார்கள்; அவர்கள் சுத்தமானவர்களாக இருந்தார்கள். அவர்கள் கிறிஸ்துவிலே விசுவாசங் கொண்டவர்களா யிருந்தார்கள். தங்கள் ஸ்தாபனங்கள் அவர்களை பிரசங்கிக்க அனுமதித்த வார்த்தையை அவர்கள் பிரசங்கித்தார்கள். இரண்டாம் வருகையைப் பற்றியும், பாவ நிவாரண பலியைக் குறித்தும் அவர்கள் பிரசங்கித்தார்கள். அவர்கள் விசுவாசிக்கிறார்கள்.

ஒரு நல்ல பாப்டிஸ்ட் வேதபண்டிதர் ஒருவரோடு எப்பொழுதாவது நீங்கள் விவாதிக்க நேர்ந்தால், நீங்கள் அவரோடு பேசும் விஷயத்தைக் குறித்து சரியானபடி அறிந்து வைத்திருங்கள். நிச்சயம் நீங்கள் அப்படி செய்துதான் ஆகவேண்டும்.

87.இப்பொழுதே மத்தேயு 24:24-ஐப் படித்துப் பாருங்கள்; அப்பொழுது அது மிகவும் நெருக்கமாக உள்ளதை நீங்கள் காணலாம். கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக, இக்கடைசி நாட்களில் இரு ஆவிகளுமே மிகவும் நெருக்கமாக ஒத்துக்காணப்படும் என்று இயேசு கூறியுள்ளார். அது மிகவும் ஒத்திருப்பது போல் இருக்கும். அது பெந்தெகொஸ்தேயினரையும் கூட சுழன்றிடச் செய்துவிடும். நிச்சயமாக. மத்தேயு 24-24-ஐ யாராவது எடுத்துவிட்டீர்களா? எனக்கு அங்கே கிடைக்கவில்லை. சகோதரி உங்களுக்கு கிடைத்துவிட்டதா? அல்லது வேறு யாருக்கும் கிடைத்ததா? மத்தேயு 24, கிடைத்ததா? பென்? நல்லது, படியுங்கள். (ஒரு சகோதரி பின்வரும் வசனத்தை வாசிக்கிறார்கள் - ஆசி.)

“ஏனெனில் கள்ளக்கிறிஸ்தவர்கள் எழும்புவார்கள்...'' கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத் தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்”. 'கள்ளக் கிறிஸ்துக்கள் கள்ளத் தீர்க்கதரிசிகள்'.

அங்கே தான் விஷயம் இருக்கிறது. என்ன எழும்பப் போகிறது? 'நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவன் என்று கூறிக் கொண்டு கள்ளக் கிறிஸ்துக்களும், கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்புவார்கள். ''நான் இன்னார், இன்னார் என்று கள்ளத் தீர்க்கதரிசிகள் கூறிக் கொள்வார்கள். கூடுமானால்,தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் கூட ஏறக்குறைய வஞ்சிக்கப் பார்ப்பார்கள்.

அதிலிருந்து நீங்கள் காப்பாற்றப்பட ஒரேயொரு வழி தான் உண்டு. நீங்கள் உலகத்தோற்றத்திற்கு முன்னால் தெரிந்து

கொள்ளப்பட்டிருந்தால் தான் இயலும். அது முன்னறிவினால் நீங்கள் தெரிந்து கொள்ளப்படுதலினால் உண்டாவதாகும்; உங்களது பெயர் அப்பொழுது புத்தகத்தில் எழுதப்பட்டிருத்தலினால் அது உண்டாகிறது. "பெரிய அடையாளங்கள்''.

88.அங்கே இரு சபைகளைக் குறித்துப் பாருங்கள். இதைக் குறித்து மக்கள் கண்டுணரச் செய்ய என்னால் கூடுமானால்.... என் ஆத்துமாவில் அவ்விஷயம் கொழுந்து விட்டு எரிகிறது. இச்சபைகள் உண்மையான சபையைப் போலவே, சுத்தம் உள்ளதாகவும், பரிசுத்தமானதாகவும் உள்ளன. இவர்கள் யாவரும் கன்னியர் என்றால், அவர்களும் கன்னியர் தான். அதேபோலவே சுத்தமாயிருக்கின்றன. இருசாராருக் கிடையேயுள்ள ஒரேயொரு வேறுபாடு என்னவெனில், இவர்களுக்கு விளக்கில் எண்ணெய் ஆகிய பரிசுத்த ஆவி உள்ளது. பரிசுத்த ஆவியானது அங்கே இருக்குமெனில், அது பெந்தெகொஸ்தே நாளில் உண்டான அதேவிதமான அக்கினியைத் தான் இங்கேயும் உண்டாக்குகின்றது.

ஆனால் அவர்களுக்கோ தங்கள் விளக்கில் அக்கினியோ, எண்ணெயோ இல்லை. அவர்களுக்கு சபைச் சடங்காச்சாரம் தான் உள்ளது. முடிந்த அளவுக்கு சபையானது பார்க்க சம்பிரதாயங்களைக் கொண்டதாகத் தான் இருக்கிறது. அருமையான வைப்வங்கள் அவர்களுக்கு உண்டு. (அதற்கெதிராக ஒன்றுமில்லை). சமயாசார கோட்பாடுகள் அங்கே உண்டு; அது உங்களது மனச்சாட்சியைக் கூட அசைத்திடுகிறது. தூதர்களைப் போல் பாடல்கள் பாடுதல் இதெல்லாம் அவர்களிடம் உண்டாயிருக்கின்றன. அவர்கள்... உங்களால் அவர்களுடைய ஜீவியத்தின் மேல் குற்றஞ்சொல்ல முடியாது. ஆயினும் அது தவறாயிருக்கிறது. அவர்களுடைய காரியங்கள் வார்த்தையின் ஒரு பாகமாக இருக்கிறதேயல்லாமல், முழுமையான வார்த்தையாக அது இல்லை. அவ்விதமான ஒரு கூட்டத்தினர் தான் எடுத்துக் கொள்ளப்படுதலில் கைவிடப்படுகிறார்கள். பார்த்தீர்களா? அவர்கள்....

89.இப்பொழுது கவனியுங்கள். இங்கே மோவாப் வருகிறது. நான் அதன் விஷயத்தை இப்பொழுது எடுத்துக் கொள்கிறேன். அதினால் நீங்கள் தெளிவாக புரிந்து கொள்ள இயலும். இதோ இங்கே மோவாப் ஒரு பெரிய ஸ்தாபனமாக இருக்கிறது. அதை நான் இங்கே ஸ்தாபனத்திற்கு சாயலாக உதாரணமாக வரைகிறேன். ஸ்தாபனமில்லாத சபைக்கு அடையாளமாக இஸ்ரவேலை இங்கு வரைகிறேன். இதோ இங்கே மோவாபிடம் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்த, ஆறு மற்றும் ஏழு பலிபீடங்கள் உள்ளன. இஸ்ரவேலும்,



செய்யக்கூடாது. நீங்கள் நேரான வழியில் வரவேண்டும். வார்த்தையோடு சரியாக நிலைத்திருங்கள். அப்பொழுது நீங்கள் பெறுவீர்கள். வார்த்தையோடு சரியாக நிலைத்திருங்கள். எனவே அவ்விதமாக அவர் இருந்த படியினால் தேவன் அவரை ஆசீர்வதித்து, அவருக்கு ஒரு பெரிய காரியத்தைச் செய்தார். ஆம்,

60. நல்லது, இப்பொழுது நாம் ஜெபத்திற்காக தலைகளை வணங்குவோம். ஜெபத்தில் எத்தனை பேர்கள் தங்களை நினைத்துக் கொள்ளும்படி விரும்புகிறீர்கள்? இங்கே சக்கர நாற்காலியில் வீற்றிருக்கும் ஒரு மாது தன்னை நினைத்துக்கொள்ளும்படி நிச்சயமாகவே விரும்புவார் என்று நான் நம்புகிறேன். இதோ இங்கே ஒரு சகோதரி, இந்த ஸ்தலம் முழுவதிலும்... இப்பொழுது நாம் யாவற்றையும் ஒதுக்கிவைத்துவிட்டு, ஆராதனைக்குள் பிரவேசிப்போம். அதற்காகவே நாம் இங்கே இருக்கிறோம், அடுத்த முப்பத் தைந்து, நாற்பது நிமிடங்களுக்கு ஆராதனை வேளை.

61. இப்பொழுதும் கர்த்தாவே , எங்களை நாங்கள் உமக்கு முன்பாக அமைதிப்படுத்திக்கொள்ளுகையில், எங்களது மகத்தான யோசுவா, பரிசுத்த ஆவியானவராகிய எங்களது இந்நாளுக்குரிய தெய்வீக தலைவர் எங்களுக்கு முன்பாக இருப்பதை உணர்ந்து கொள்ளுகிறோம். மோசேக்கு முன்பாக யோசுவா ஜனங்களை அமைதிப்படுத்தி, "நாம் அந்த தேசத்தை எடுத்துக்கொள்ள நம்மால் கூடும்'' என்று கூறினதைப்போல் ... ஏனெனில் அவன் அந்த அமலேக்கியர்களையும் எமோரியர்களையும் நோக்கிப் பார்க்காமல், தேவனால் அளிக்கப்பட்ட தெய்வீக வாக்குத்தத்தத்தையே நோக்கிப் பார்த்தான்.

62. இந்த குழப்பமான இந்நாளில், உலகம் இருக்கிற இந்த நிலையில், இன்றுள்ள இவ்வழகான ஒய்வுநாள் காலையில் உமக்கு முன்பாக நாங்கள் எங்களை அமைதிப்படுத்திக்கொள்கிறோம்; எல்லாவிதமான போலிகளின் மத்தியிலும், மாம்சப் பிரகாரமான பாவனைகளின் மத்தியிலும், எல்லா பொல்லாங்கு, தவறாக வழி நடத்தப்பட்ட ஆவிகளின் நடுவிலும் நாங்கள் எவ்வளவாய் தேவனுடைய வார்த்தையை நோக்கிப்பார்த்து, நாங்கள் முற்றிலும் ஜெயங்கொள்கிறவர்களாயிருக்கிறோம் என்று கூறுகிறோம்! தேவன் தனக்கு கறை திரையற்ற சபை ஒன்று உண்டாயிருக்கும் என்று கூறினார்; ஒரு நாளிலே நாம் அச்சபையை காண்போம் என்பதை நாம் அறிவோம். அதன் உறுப்பினர்கள் என்ற முறையில், நாம் இந்த மகத்தான மறுபடியும் பிறந்த தேவனுடைய சபையின் உறுப்பினர்கள்

கோரினார். அக்காரியம் ஒரு அருமையான விஷயம் என்று நான் எண்ணுகிறேன்.'' (இவ்வாறு சகோதரன் பென் ப்ரையாண்ட் கூறினார் - மொழிபெயர்ப்பாளர்) "ஆமென்'' (அச்சகோதரனுடைய இச்செயல் புகழத்தக்கதான ஒரு செயலாகும்.'') ஆம், ஐயா. ('அச்சகோதரன் தன்னை மன்னித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். ஏனெனில் அவர் இவ்வுப தேசத்தை என்னிடம் கொண்டுவர முயற்சி செய்தார். நான் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இக்காலையில் தன்னை மன்னித்துக் கொள்ளும்படி அவர் கேட்டார். இயேசுவின் நாமத்தினால் நானும் அவரை மன்னித்துவிட்டேன்'') (இவ்வாறு பென் ப்ரையாண்ட். சகோதரன் பிரன்ஹாமிடம் கூறுகிறார் - மொழிபெயர்ப்பாளர்). ஆமென். நன்றி. உமக்கு, சகோதரன் பென் ப்ரையாண்ட். இப்பொழுது அது சரியாக இருக்கிறது. சகோதரன் பென் அவர்களே, நீங்கள் அதைக் கூறியதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். பாருங்கள், அம்மனிதர்கள், எங்கும் சென்று தவறை திருத்திக் கொள்ளுதலைச் செய்து வருகிறார்கள். அப்படிப்பட்ட செயல்தான் உண்மை யான கிறிஸ்தவமாகும். அதுதான் கிறிஸ்தவம் செயல்படுகிற ஒன்றாக இருக்கிறது. நீங்கள் தவறாயிருந்தால், போய் நீங்கள் தவறாயிருக்கிறீர்கள் என்பதை எழுந்து நின்று, "நான் தவறாயிருக் கிறேன், என்னை மன்னிக்க வேண்டும்'' என்று கேளுங்கள்.

59. தன் தவறை எந்த ஒரு நபரும் பின்னுக்கு ஒளித்து வைத்தால், அப்பொழுது அவரிடத்தில் ஏதோ பிழை இருக்கிறது. எதையோ அவர் மறைக்கிறார். அப்படி செய்யக்கூடாது. ஐயா, இங்கே அந்த எளிய டாக்டரைப்போல்... பேச முடியாது... அதைப்பற்றி நான் அவர்மேல் சொல்லவில்லை... ஆனால் எப்படியாயினும், அவர் ஒரு சிறிய காரியத்தைச் செய்ய வேண்டுமென்றிருந்தார். நான் அவரிடம், 'ஓ இல்லை, டாக்டர் அவர்களே, நீங்கள் தேவனுக்கு பரிதானம் கொடுக்கமுடியாது'' என்று கூறினேன். "அதை ஒளிவு மறைவின்றி இங்கே சமர்ப்பித்திட வேண்டும். அவ்விதமாக அது போகும்படி விட்டு விடவேண்டும்'' என்று கூறினேன். நிச்சயமாகவே எந்தவித ஒரு தவறையும் செய்ய முயற்சிக்க அம்மனிதன் முழுவதும் அறியாமையுள்ளவராக இருந்தார். ஒரு துண்டு நிலத்தை பெற்றுக்கொள்வதற்கு அது ஒரு நல்ல வழியாக இருக்கும் என்று அவர் எண்ணினார். அவர் தீயவழியில் அதைச் செய்ய எண்ணவில்லை. அதை சரியான முறையில் செய்யவே விரும்பினார். ஆனால் அவர் விரும்பினார்.... அவர் கூறினார்...... இங்கிருக்கிற இந்த நபரை தன் செல்வாக்கிற்கு உட்படுத்த யாரை யாவது அதற்காக பிடித்துக்கொள்ள ஒரு வழியை அறிந்திருந்தார். நீங்கள் அந்தவிதமான வழியில் அதைச்



ஒன்று, இரண்டு, மூன்று நான்கு, ஐந்து, ஆறு, ஏழு பலிபீடங்கள் உண்டாக்கினார்கள். அது சரி.

மோவாப் தான் உண்டாக்கின ஏழு பலிபீடங்களின் மேலும், ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு மற்றும் ஏழு காளைகளை செலுத்தினது. இஸ்ரவேலும் தனது ஏழு பலிபீடங்களின் மேல், ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு மற்றும் ஏழு காளைச் செலுத்தினது. ''ஒரு சமயம் உண்டாயிருக்கும், அப்பொழுது மனிதனாகிய ஒருவர், கிறிஸ்து, பூமியின் மேல் வருவார்; அவரே சர்வ லோகத்தின் பாவங்களையும் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக் குட்டியாயிருப்பார்; எனவே நாங்கள் ஏழு செலுத்தியுள்ளோம்'' என்று மோவாப் கூறினது. (என்ன?)" பலிபீடத்தின் மேல் ஆட்டுக்குட்டிகள்'.

இஸ்ரவேலும் கூறியது, அது மிகவும் சரிதான், பலிபீடத்தின் மேல் ஏழு ஆட்டுக் குட்டிகள்' பாருங்கள்?

90.இப்பொழுதும், ஆதியிலேயே கூட, காயீன் ஒரு பலிபீடத்தை உண்டாக்கி, அதின்மேல் பலி செலுத்தி, தொழுது கொண்டு, ஆபேல் செய்த யாவற்றையும் இவனும் செய்தான்; ஆனால் தேவனைப் பற்றிய வெளிப்பாடு இல்லாமல் தான் அவையாவையும் காயீன் செய்தான். ஓ, அதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்! ஆனால் தேவனுடைய சபையோ, வெளிப்படுத்துதலின் மேல் கட்டப்பட்டுள்ளது. இயேசு அவ்வாறு தான் கூறினார். இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்'' என்றார். இயேசு கிறிஸ்துவின் உன்னத தெய்வீகத் தன்மையைப் பற்றிய சத்தியம் ஆவிக்குரிய பிரகாரமாக வெளிப்படுத்தலின் மேல்... ''இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்.''

இப்பொழுதும், தேவன் உங்களுடைய சடங்காச்சாரங்கள், கோட்பாடுகள், இவைகளைத் தான் மதிக்கிறார் எனில், அவைகளைச் செய்கிறவர்கள், மெதோடிஸ்ட்டுகள், பாப்டிஸ்டுகள், பெந்தெகொஸ்தேயினர் மற்றும் இன்ன பிற சபையினர் தான்; அவர்கள் உங்களிடம் அதைத்தான் செய்யும்படி எதிர்பார்க்கிறாரென்றால், அத்தோடு இரண்டாம் வருகையைக் குறித்து பிரசங்கித்தும் மற்றும் இன்னபிற காரியங்களையும் பிரசங்கித்து, (அது நிச்சயமாக வேதபூர்வமானது தான்); பாப்டிஸ்ட்டுகளும், ப்ரெஸ்பி டேரியன்களும் இவைகளைச் செய்கிறார்கள்; அப்பொழுது, இருசாராரையுமே எடுத்துக் கொள்ள

அவர் கடமைப் பட்டவராயிருக்கிறார்; ஏனெனில் அவர் அதைத் தான் எதிர்பார்க்கிறார் என்று ஆகிவிடும்.

ஆனால், பார்தீர்களா, தூங்கிக் கொண்டிருக்கிற கன்னிகை வெளிபாடு இல்லாமல் இருக்கிறாள்; புத்தியுள்ள கன்னிகையோ அப்படி அல்ல. அவர்களோ ஒரு ஸ்தாபன மாகவும் மிகப் பெரிய ஜாதியாகவும் இருப்பார்கள்.

91.அன்றொரு இரவில் நாம் வாசித்த போது, வார்த்தை கூறியது, அவர்கள் ஒரு ஸ்தாபனமாக இருக்கமாட்டார்கள் என்று. அவர்கள் தேசத்தில் அலைந்து திரிகிறவர்களா யிருப்பார்கள், கூடாரங்களில் குடியிருப்பார்கள், தரித்திரராயும், தாழ்மையோடும் இருப்பார்கள். ஆனால் அவர்களை நீங்கள் சபிக்க முயற்சிக்க வேண்டாம். ஏனெனில் நான் அவர்களோடிருக்கிறேன்'' என்று கூறியுள்ளார்.

இப்பொழுது கவனியுங்கள். இவர்கள் விசுவாசித்த அதே முறைமையை அவர்களும் விசுவாசித்து, அதே தேவனை இவர்களும் தொழுது கொண்டார்கள். பாருங்கள்? ஆனால் அவர்களோடு, அற்புத அடையாளங்கள் பின் தொடரவில்லை. ஆனால் இஸ்ரவேலரோடு, வெண்கல சர்ப்பம், அடிக்கப்பட்ட கன்மலை, இராஜாவின் ஜெய கெம்பீரம், தெய்வீக சுகமளித்தல், தீர்க்கதரிசிகள் இவைகள்யாவும் உண்டு. அவர்களிடமோ இவைகள் இல்லை, அவர்களிடம் வெறும் சடங்காச்சாரம் தான் உண்டு, எண்ணெயாகிய ஆசீர்வாதமின்றி இருந்தார்கள்.

92.இதேவிதமாகத் தான் நித்திரை செய்யும் புத்தியில்லாத கன்னிகைகளோடும், புத்தியுள்ள கன்னிகைகளோடும் இருந்தது. அவர்கள் பரிசுத்தமாக்கப்பட்ட ஜனங்களாயிருந்தார்கள். ஆனால் இவர்களிடம் எண்ணெய் எனவே இவர்கள் ''நாங்களும் உங்களைப் போலவே நல்லவர்களாகத் தான் இருக்கிறோம்'' என்றார்கள். அதைப் பொறுத்த மட்டில், நம்மில் நல்லவர்கள் எவருமே கிடையாது. “ஏன், நீங்கள் ஒரு கூட்டம் உருளும் பரிசுத்தராயிருக்கிறீர்கள்'' என்கிறார்கள்.

நல்லது, அது சரிதான். நம்மில் நல்லவர்கள் எவருமே இல்லை; நாமெல்லாரும் பாவஞ் செய்து தேவமகிமை யற்றவர்களானோம். ஆனால் அதை நீங்கள் அறிந்து கொள்வதற் குரிய ஒரே வழி, சபையை சேர்ந்து கொள்ளுவதினால் அல்ல, நல்லவிதமாக ஜீவிக்க முயற்சி செய்வதினால் அல்ல. ஆனால் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதினால் மட்டுமே. நான் எப்படி ஜீவிக்கிறேனோ அதன்படியல்ல; அவர் என்னவாயிருக்கிறார் என்பதைப் பொறுத்ததே அது. நான்



57. ஆனால் இப்பொழுதோ, நீங்கள் ஒருபோதும் வார்த்தையை விட்டு வேறுபட்டு நிற்கவேண்டாம். இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். தேவனுக்கு முன்பாக நான் உங்களுக்கு கட்டளையிட்டுச் சொல்கிறதாவது: வார்த்தையோடு நிலைத்திருங்கள். அதிலிருந்து ஒருபொழுதும் வேறுபட்டுப் போகாதீர்கள். அவ்வித மான காரியங்கள் மக்கள் மத்தியில் எழும்பும்போது, போலியானதொன்று தோன்றும் பொழுதெல்லாம், அது அசலானது அங்கே இருக்கத்தான் செய்கிறது என்பதை எடுத்துக்கூறுகிறது. ஒரு கள்ள டாலர் நோட்டு இருந்தால், நிச்சயமாக ஒரு நல்ல டாலர் நோட்டும் அங்கே இருந்தது என்றும், அதைப் பார்த்துத் தான் இப்போலி உருவாக்கப்பட்டுள்ளது என்பதையும் அது எடுத்துக்காட்டுகிறது. ஒரு மாய்மாலக்காரனானவன் அந்நிய பாஷையில் பேசுவதை நீங்கள் கேட்கும் பொழுது, அவனும் பரிசுத்த ஆவியைப் பெற்றுள்ளான் என்று நீங்கள் கூறிட முடியாது; ஆனால் அவன் அந்நியபாஷை வரத்தைப் பெற்றுள்ள ஒரு அசலானவனையே பார்த்து, அதேபோல் பாவனை செய்கிறான் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். அவ்விதமான காரியங்களை நீங்கள் காணும் பொழுது, அது கள்ளத்தனமானது என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள், அவைகள் உண்மையைப்போல் உருவகப்படுத்தப்பட்டவையாகும். தேவன் நன்மையான எல்லாக் காரியங்களின் மூலகாரணர் ஆவார், ஆனால் சாத்தானோ அந்த வரங்களை பாவனை செய்பவன் ஆவான். நல்லது, நான் இதைப் பேசிக்கொண்டே போனால், நம்முடைய பாடத்தை எடுத்துக் கொள்ளவே இயலாது போய்விடும், அப்படித்தானே?

58. (சகோதரன் பென் ப்ரையாண்ட் என்பவர், 'சகோதரன் பிரன்ஹாமே, தயவு செய்து ஒரு நிமிடம் தாருங்கள், என்னை மன்னித்துக்கொள்ளுங்கள்'' - என்று கூறுகிறார் - ஆசி.) சரி சகோ தரனே. (''கடந்த ஞாயிறன்று நான் இங்கே வந்திருக்கவில்லை. நீங்கள் எதைக்குறித்துக் கூறிக்கொண்டிருந்தீர்களோ, அதைப் பற்றிய செய்தி சில மாதங்களுக்கு முன்பாக வந்து விழுந்தது. அதைப்பற்றி நானும் உண்மையிலேயே சிறிது கலக்கமடைந்தவனாக இருந்தேன். நான் அதைப்பற்றி உங்களிடமும் சகோதரன் நெவில் அவர்களிடமும் வந்து கூறிடவேண்டும் என்று எண்ணினேன். ஆனால் நானும் என் மனைவியும் அவ்விஷயத்தை ஜெபத்தில் வைத்திருக்கிறோம் என்று அறிந்துள்ளீர் என்று நான் உணர்ந்தேன். இன்று காலையில் நான் கூடாரத்திற்கு வந்தபோது, என்ன நடந்தது என்று எனக்குத் தெரியவில்லை. நமது விலையேறப் பெற்ற சகோதரர்களில் ஒருவர் என்னிடம் இக்காலையில் வந்து தன்னை மன்னித்துக்கொள்ளுமாறு

நோக்கத்தோடுதான் கூறப்படுகிறது. அவ்விதமான போலியானது என்ன செய்கிறது? அது உண்மையான எக்காளத்தைக்கூட ....

55. கனடா தேசத்திற்கு நான் சென்றிருந்தபொழுது, நான் ஏற்கனவே கூறியிருந்த அந்த மனிதனை அவர்கள் பிடித்தார்கள். இங்கேயிருக்கிற கூட்டத்தைப் போல் பத்து மடங்கு அதிகமுள்ள மக்கள் கூடியிருந்த நார்வே நாட்டு மக்கள் கூட்டத்தில் அவர் எழுந்துநின்று, "கர்த்தர் எனக்கு கூறுவது என்னவென்றால், இங்கே 'ஜான்' அல்லது ஒருவேளை "ஜோஹான்னஸ்'' அல்லது 'ஜோஹன்னா' என்ற பெயரில் ஒரு நபர் இருக்கிறார், அவர் இங்கேயே இருக்கிறார் என்று நான் நம்புகிறேன்.'' அவர் மேலும், "இல்லை. அவர் இங்கு எங்கேயோதான் இருக்கிறார் என்று நான் நம்புகிறேன்.'' அவர் சீட்டுப் போட்டுப் பார்த்துச் சொல்வது போல் கூறினார். நார்வேஜிய நாட்டில், அங்கே தொண்ணூற்று எட்டு சதவிகிதமான மக்களுக்கு, பீடர்சன், கார்ல்சன், ஜான், ஜோஹன்னஸ் என்ற பெயர்கள் வழங்குவதுண்டு. ஆகவே இந்தப் பெயருள்ள நபர் நிச்சயம் யாராவது ஒருவர் அங்கேயிருக்கத்தான் செய்வார். பிறகு அவர் மேலும் கூறினார், "கர்த்தர் இங்கு யாரோ ஒருவருக்கு முதுகு வலி இருப்பதாகக் கூறுகிறார், நான் என் னுடைய முதுகு வலிப்பதாக உணருகிறேன்'' என்றார். திருவச னத்தில் வளர்க்கப்பட்டவர்கள் எவரும் இந்தவிதமான காரியமானது மனோதத்துவ ரீதியில் அமைந்துள்ளது என்பதை நன்கு அறிவார்கள். நிச்சயமாக அது அப்படித்தான் உள்ளது.

56. ஆனால் பாருங்கள் என்ன நடந்தது? பிறகு அம்மனிதன் எஃப்.பி.ஐ (FBI) போலீஸினால் கைது செய்யப்பட்டு, அங்கே ராயல் மௌண்டட் போலீசுக்கு அனுப்பப்பட்டு, அவர்கள் அம்மனிதனை பிடித்துக்கொண்டார்கள். அப்பொழுது ஊழியக்காரர்களின் சங்கத்தினர் என்னிடத்தில் வந்து, "அம்மனிதன் ஒரு ஆண் புணர்ச்சிக்காரன்'' என்றார்கள். அவர்கள், ''சகோதரன் பிரன்ஹாம்கூட அதேவிதமான ஆளாகத்தான் இருக்கவேண்டும், அப்படிப்பட்ட வழியாகத்தான் எல்லாம் நடக்கிறது'' என்று அவர்கள் கூறுகிறார்கள். அது என்ன செய்துகொண்டிருக்கிறது? உண்மையான எக்காளத்திற்கும் ஒரு விளங்காத சத்தத்தை கொடுக்கத்தக்கதாகத்தான் இப்படியெல்லாம் நடக்கிறது. பார்த்தீர்களா? சரியாக அப்படித்தான் நடக்கிறது. அதேவிதமாகத்தான் எப்பொழு தும் நடைபெற்று வருகிறது. அதாவது உண்மையான காரியங்களுக்கு ஒரு விளங்காத சத்தத்தைக் கொடுக்கும்படியாகத்தான். அவ்விதமாக செய்வது சாத்தானுடைய வேலையாகும்.



என்னவாயிருக்கிறேன் என்பதைப் பற்றியது அல்ல அது, அவர் என்னவாய் இருக்கிறார் என்பதாகத் தான் இருக்கிறது. அவருடைய கிருபையினால் நான் அவராக, தேவனுடைய குமாரனாக ஆகும்படி, அவர் என்னைப் போல் ஆனார். அதை நீங்கள் கண்டு கொண்டீர்களா?

93.இங்கே, ஒரு நித்திரை செய்யும், புத்தியில்லாத கன்னிகை இருக்கிறாள்; இங்கே தன் விளக்கில் எண்ணெயை உடையவளாக ஒரு புத்தியுள்ள கன்னிகையும் இருக்கிறாள். இப்பொழுது திடீரென ஒரு சப்தம் உண்டாயிற்று; "இதோ மணவாளன் வந்துவிட்டார், அவரைச் சந்திக்க எதிர் கொண்டு போங்கள்'' என்று. அதைக் கேட்ட அவர்கள் விழித் தெழுந்தார்கள். ஆனால் அவர்கள் இருசாராரும் விழித்தெழுந்தார்கள். ஆனால் அவர்கள் இருசாராரும் விழித்தெழுந்த போது, இந்த ஒரு கூட்டம் உள்ளே பிரவேசிக்க முடிந்தது, ஏனெனில், இவர்கள் தங்கள் விளக்குகளில் எண்ணெயை உடையவர்களாக இருந்தார்கள். அதுதான் வித்தியாசத்தை உண்டு பண்ணினது. இன்னொரு பிரிவினரால் உள்ளே பிரவேசிக்க முடியவில்லை, ஏனெனில் அவர்களது விளக்கில் எண்ணெய் இருக்கவில்லை; அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளும்படி வேண்டுதல் செய்ய திரும்பிப் போனார்கள். ஆனால் அவர்கள் அதற்காகப் போயிருக்கையில், யாவும் முடிவுற்றது.

ஸ்தாபனங்கள், ''நல்லது, ஒருவேளை நாங்கள் தவறாயிருக்கக் கூடும். ஒருவேளை பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்திற்காக நாங்கள் அவரிடம் திரும்பிப் போவது நல்லதாக இருக்கக்கூடும் என்று கூறுகின்றனர். அதைத்தான் அவர்கள் இப்பொழுது செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர். அதை நீங்கள் கவனித்தீர்களா?ப்ரெஸ்பிடேரியன்கள்... ஒரு நிமிடம் ஒலி நாடாவில் பதிவு செய்வதை நிறுத்தி வைத்துக் கொள்ளுங்கள். நான் அவருடைய பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை. (ஒலி நாடாவில் காலியிடம் - ஆசி.).... மணவாளன் வருகிறார். அவர்கள் இப்பொழுது, எண்ணெயை விலைக்கு வாங்க முயற்சித்துக் கொண்டிருக்கிற பொழுது, அவருடைய வருகையானது எவ்வளவு சமீபமாயிருக்கிறது? சரி, ஜீன் உங்களுடைய ஒலிப்பதிவை ஆரம்பித்திடுங்கள். இப்பொழுது புரிந்து கொண்டீர்களா?'

அவர்கள் எண்ணெய் வாங்க சென்ற பொழுது''. அவர்கள் இப்பொழுது அதை வாங்க முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அனைத்து சபைகளும் எழுப்புதலை அடைய முயற்சித்துக்

கொண்டிருக்கிறார்கள், அதற்காகத் திரும்பிப் போக முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள்.

94.இப்பொழுது, டாக்டர் பில்லிகிரகாம் அவர்கள் கூட, ''நம்பிக்கையின் தூதன்' என்ற சிக்காகோவிலிருந்து வரும் பத்திரிக்கையில் (Herald of Faith) எழுதியிருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள், அதில் அவர், ''பெந்தெகொஸ்தே அசைவை நாம் அவமதிக்கக்கூடாது என்று எழுதியிருக்கிறார். “நாம் அவர்களை அலட்சியப்படுத்திவிட முடியாது, ஏனெனில் மற்றெல்லா சபைகளையும் ஒன்று சேர்த்து ஒரு வருடத்தில், அவர்கள் யாவரும் செய்திட்ட ஆத்தும ஆதாயத்தைவிட பெந்தெகொஸ்தேயினர் அதிகமாக ஆதாயப் படுத்தியிருக்கிறார்கள்'' என்று எழுதியுள்ளார். அது சரியாக, அக்கினி பற்றியெறிதலும், அது அசைத்தலும், ஒன்று திரட்டுதலும், வலையை வீசியெறிந்து, இழுத்தலுமாயிருக்கிறது.

நீங்கள் ஒரு வலையை கடலில் வீசியெறிகையில்.... இயேசு சொன்னார், 'தேவனுடைய இராஜ்யம் ஒரு மனிதன் சென்று கடலில் வலையை வீசி, அதை அவன் கரைக்கு இழுத்த பொழுது, அதில் அவனுக்கு ஆமைகளும், பாம்புகளும், தவளைகளும், சர்ப்பங்களும், இன்னபிறவும் கிடைத்தன. ஆனால் அவனுக்கு சில மீனும் கிடைத்தன'' என்று. பெந்தெகொஸ்தே செய்தி அதைத்தான் செய்து வருகிறது. அது பூமி முழுவதிலும் தீவிரமாய் பரவுகிறது. அதை வீசியெறிந்து கரைக்கு இழுக்கும் பொழுது, நாம் ஆமைகளையும் க்ராஃபிஷ் எனப்படும் ஒருவகை நண்டுகளையும், க்ராடாட்ஸ் என்ற வகை நண்டுகளையும், தவளைக் குஞ்சுகளையும், நீர் நாய்களையும், நீரில் குதித்தெழும்பும் ஒருவகை நீர்ப் பறவைகளையும், மற்றும் உள்ளவைகளையும் நாம் அந்த வலையில் பெற்றுக் கொள்ளுகிறோம். ஆனால் அது என்ன? அங்கே சில மீன்களும் இருக்கின்றன. அவை தான் எஜமானனுக்கு சொந்தமானவைகள்.

இவ்வொலி நாடா செய்தியைக் கேட்கும், பிரமாணத்தை மிகவும் கடுமையாக ஆசரிப்பதில் விசுவாசங் கொண்டிருக்கிற சகோதரரில் சிலரே, அதை எரித்து விடவிரும்புவீர்களோ? அவர்கள் எப்பொழுது மீன்களாக மாறினார்கள்? வலையானது அவர்கள் மேல் சென்ற பொழுதோ? இல்லை, அவர்கள் துவக்கத்திலேயே மீனாக இருந்தனர், அது சரிதான். உலகத்தோற்றத்திற்கு முன்னரே அவர்கள் தெரிந்தெடுக்கப் பட்டவர்கள். மற்றவைகளோ எஜமானின் உபயோகத்திற்குள் வராதவைகளாகும்.



50. இவ்விதமான காரியம் அங்கே எழும்பி வந்தபொழுது... கூட்டத்தில் நமக்கு அப்படிப்பட்ட ஜனங்கள் இருக்கிறார்கள்...... இங்கேயே ஒருவர்... கனடா தேசத்தில் ஒரு கூட்டத்தில் எனக்கு முன்பாகவே ஒருவர் கடந்து சென்றார். உளவுத் துறை ஏஜெண்டு கள் அம்மனிதனை ஆண்புணர்ச்சிக்காரர் என்ற குற்றத்தின் பேரில் அவரைப் பிடித்தார்கள். அந்நபர் என்னிடம், ''தேவன் எனக்கு இருதயத்தை பகுத்தறியும் வரத்தைக் கொடுத்திருக்கிறார்'' என்றார். 'அல்லேலூயா, இங்கே யோவான் என்ற பெயருள்ள ஒருவர் இருப்பதாக இப்பொழுது கர்த்தர் என்னிடம் கூறினார்'' என்றார்.

51. ஒரு இளம் பெண் ஒருநாள் காலையில் அங்கே திரும்பி வந்தாள், அவளை உங்களுக்கு ஞாபகமிருக்கும். அவள் அங்கே வந்து, "கர்த்தர் எனக்கும் அதே வரத்தைக் கொடுத்திருக்கிறார்'' என்று கூறினாள்.

"நல்லது'' என்று நான் கூறினேன்.

"அதை நான் நிரூபிக்க எனக்கு ஒரு தருணம் இருந்தால் நலமாயிருக்கும்” என்று அவள் கூறினாள்.

"அதோ அங்கே மேடை உள்ளது'' என்று நான் கூறினேன்.

52. அப்பொழுது என்ன நடந்தது என்பதை நீங்கள் கண்டீர்கள். அது முழுக்க முழுக்க மனோவசியத்தினால் நடைபெற்றதாயிருந்தது. ஆனால் சகோதரி ஸ்நைட் மேலே வந்தபொழுது, அச்சகோதரிக்கு கீல்வாத நோய் உள்ளதாகக் கூறப்பட்டது. அதுவே அது என்ன என்பதைக் காண்பித்துவிட்டது. அப்பொழுது சகோதரி ஸ்நைடர்....

53. அப்பொழுது நான், "அதுவல்ல அப்பெண்மணிக்கு உள்ள கோளாறு என்றேன். 'அவள் கீழேவிழுந்து இடுப்புமுறிந்து போய்விட்டது'' என்று நான் கூறினேன். அவள் அங்கே நின்று கொண்டுகூட இருக்கவில்லை. அதை சகோதரி ஸ்நைடர் நன்றாக கேட்கவில்லை.... அவள் கூறினாள், அவளுக்கு என்ன இருந்தது என்பதை. அது அவளது வயிற்றில் உண்டாயிருந்த கட்டி போன்ற ஒன்றாகும் என்று நான் நம்புகிறேன். அல்லது அதைப்போன்ற ஒரு கோளாறு ஆகும். ''அந்தவிதமான துன்பம் தான் அவளுக்கு இருந்தது, அதைப்பற்றித்தான் உட்கார்ந்து சகோதரர்களிடம் எப்பொழுது சொல்லிக்கொண்டிருப்பாள்'' என்றேன் நான்.

54. ஆனால், அது வெறும் மாம்சப் பிரகாரமான ஒரு போலிதான் என்பதைக் குறித்து சபைக்கு காண்பிக்க வேண்டுமென்ற

வரத்தோடு வரப்போவதில்லை. இனி மீதமுள்ள என் வாழ்நாளில், அப்படிச் செய்ய நான் விரும்பவில்லை. வெளிநாடுகளிலுள்ள ஊழியக் களங்களில் மட்டுமே இருக்கும். ஒரு வரம் என்ற முறை யில், ஒரு தீர்க்கதரிசன வரம் என்ற முறையில், அது அங்கே தான் இருக்கும். ஆனால் நானோ அதை என்னோடு மாத்திரம் வைத்துக் கொண்டு வேலை செய்வேன். ஏனெனில், இந்நாளில் அது தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருப்பதற்கு நாம் மிகவும் தாமதமாக இருந்து கொண்டிருக்கிறோம். நாம் முடிவு காலத்திற்கு மிகவும் சமீபமாயிருக்கிறோம். ஆனால் வெளி நாடுகளிலுள்ள ஊழியக்களங்களில் ஏதோ ஒன்றிரண்டு தடவைகள் மாத்திரம் மேடையில் இருக்கும், சகோதரனே, அவைகளுக்குரிய நாள் கடந்துவிட்டது.

48. அந்த மகத்தான வார்த்தை மாம்சீகமாகப் பாவனை செய்வதை நாம் பார்க்கிறோம். ஓ, என்னே ! அது பரிதாபமானதாயிருக்கிறது. பாருங்கள், நான்...

49. இங்கே பெந்தெகொஸ்தேயினர் எத்தனை பேர்கள் உள்ளனர்? நீங்கள் உங்கள் கரத்தை உயர்த்துங்கள். நல்லது. பாருங்கள், பெந்தெகொஸ்தேயினரே, சில ஆண்டுகளுக்கு முன்பாக, தேவன் உண்மையாகவே உங்கள் மேல் இறங்கினார், அதினால் நீங்கள் அந்நிய பாஷைகளில் பேசத் தொடங்கினீர்கள். அது சரி. ஆனால் பிசாசானவன் என்ன செய்தான்? அவன்தானே சுற்றிவந்து, அவனும் அதைப்போலவே மாம்சீகமாக பாவனை செய்தான். சரியில்லாத ஒன்றை அவன் உருவாக்கி, மக்களை அதற்குள் விழச் செய்து, அவர்கள் அந்நிய பாஷைகளில் பேசி, ஏதோ சில வார்த்தைகளை அவர்கள் பேசச் செய்து, அவர்களும் அந்நிய பாஷைகளில் பேசுவதாகக் காண்பித்தான். பிறன் மனைவியோடு வாழக்கூடிய சில நபர்கள்கூட, மற்றும் இன்னபிற பாவங்களைச் செய்கிற வர்கள்கூட, அவர்களில் சிலர் மது அருந்துபவர்களாகவும், சிகரெட் பிடிக்கிறவர்களாகவும் இருந்தார்கள், அப்படியிருந்தும் கூட, அவர்களும் அன்னிய பாஷைகளில் பேசிக்கொண்டிருக்கிறார்கள். எதற்காக அவன் அதைச் செய்தான்? உண்மையான எக்காளமும்கூட ஒரு விளங்காத சத்தத்தை மக்களுக்கு கொடுக்கட்டுமே என்றுதான்.

"எவன் யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணுவான்?'' என்று வேதம் கூறுகிறது. பார்த்தீர்களா?



95.அதுதான் உங்களுடைய தவளை. வலையிலிருந்து ஒரு பழைய தவளையை நீங்கள் வெளியே எடுத்துகரையில் எறிந்துவிட்டால், அது “வாப் வாப்''என்று சத்தமிட்டுக் கொண்டே, தண்ணீருக்குள் மீண்டும் திரும்பிவிடும். அங்கே அந்த வயதான நண்டு உட்கார்ந்து கொண்டு, ”ஆ, அந்தக் கூட்டம், ஒரு உருளும் பரிசுத்தரின் கூட்டம் அது'' என்று சொல்லும். அதுவும் மீண்டும் தண்ணீருக்குள் திரும்பிச் சென்று விடுகிறது. ஆ, ஆ, ஆ, ஓ இல்லை முடியாது'' என்று சொல்லி விட்டு, திரும்பவும் அது சேற்றினுள் விரைவாக தப்பி ஓடிவிடுகிறது.

வலையில் அகப்பட்ட அந்த வயதான பாம்பும் சிறிது நேரம் சீறிவிட்டு, ''அற்புதங்களின் காலம் முடிவடைந்து விட்டன, டாக்டர் பண்டிதர் இன்னார் இன்னார் என்னிடம் கூறினார், ஆகவே என்னை நீங்கள் முட்டாளாக்க முடியாது' என்று கூறிவிட்டு, அது மீண்டும் தண்ணீருக்குள் திரும்பிச் சென்று விடுகிறது, பாருங்கள். பாம்பு பாம்பாகத் தான் ஆரம்பத்திலிருந்தே இருந்து வருகிறது. தவளை தவளையாகத் தான் ஆரம்பித்தது.

அந்தவிதமான மக்களைப் பற்றி பவுலுங்கூட குறிப்பிடுகையில், ''அவர்கள் நம்முடையவர்களாக இல்லாதபடியினால் நம்மை விட்டுப் பிரிந்து போனார்கள்'' என்று கூறுகிறான். ஊ! சரிதான்.

அது புத்தியில்லாத கன்னிகையாகும்.

96.'அவள் கொஞ்சம் எண்ணெய் வாங்கப்போயிருந்த பொழுது அதைத்தான் அவர்கள் இப்பொழுது செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த பெரிய சுவிசேஷ சபைகள்யாவும், இம்மகத்தான காரியங்களை கண்டு கொள்ள விரும்பி, வேதத்திற்குத் திரும்பிப்போய், ''எங்களுக்கு பெந்தெகொஸ்தே ஆசீர்வாதம் தேவை'' என்று வேண்டுகின்றனர்.

நல்லது, அவர்கள் என்னவிதமான ஆராதனையைப் பெற்றுக் கொள்ளப் போகிறார்கள் என்பதை நீங்கள் நன்கு கற்பனை செய்து பார்க்கலாம். அவர்கள் அதைப் பெறப் போகிறதில்லை; அவர்கள் அங்கு சென்று தங்கள் மேல் பூசப்பட்ட அழகு சாதனங்களை யெல்லாம் கெடுத்துக் கொள்ளப் போகிறதில்லை. ஓ இல்லை. அவர்கள் தங்களுடைய சங்கங்களையும் ஸ்திரீகள் ஐக்கிய சங்கங்களையும் விட்டுவிடப் போவதில்லை. ஏசாவைப்போல், ஒருகையால் உலகைப்பற்றிப் பிடித்துக் கொண்டு, இன்னொரு கையால் தேவனையும் பிடித்துக் கொள்ள முயலுகிறார்கள். அப்படி நீங்கள் செய்ய முடியாது. மாறு கண் உடைய கிறிஸ்தவராக இருக்க முடியாது: தேவனையும் நோக்கிக்

கொண்டு, உலகையும் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. உங்கள் முழு பார்வையும் கல்வாரியின் மேல் தான் மையம் கொண்டிருக்க வேண்டும். அங்கே தான் நிலைத்திருங்கள்.

97.அவர்கள் அங்கே திரும்பிப் போய் வாங்க முயன்று கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு சமீபமாயிருக்கிறோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். எண்ணெயை வாங்க அவர்கள் போன அதே வேளையில் தான் மணவாளன் வந்துவிட்டார். ஓ! சகோதரன் ஸ்ட்ரிக்கர் அவர்களே, நாம் சமீபமாக அங்கே இருக்கிறோம். நாம் நமது பரம் வீட்டுக்கு சமீபமாக வந்து விட்டோம். இக்காலைகளில் ஒன்றில் கர்த்தரின் எக்காளம் தொனிக்கும், இனி காலம் செல்லாது, காலைப் பொழுது நித்தியத்தில் பிரகாசமாயும், அழகாகவும் விடியும், அப்பொழுது இரட்சிக்கப்பட்ட அவருடையவர்கள் ஆகாயத்திற் கப்பால் உள்ள தங்கள் வீட்டில் ஒன்று கூடுவர். அது எப்பேர்பட்ட நேரமாயிருக்கப் போகிறது!

98.ஆம், நித்திரை செய்யும் கன்னியர்... இந்த நித்திரை செய்யும் கன்னியருக்கு என்ன நேரிடும் என்பதை அறிந்திட நீங்கள் விரும்புகிறீர்கள். அப்படித் தானே? ஒரு காரியத்தைப் பற்றி நான் விளக்கிட விரும்புகிறேன். இந்த சபைகளுக்கு என்ன நேரிடப்போகிறது? ஒரு பகுதி தூரம் மட்டுமே கிறிஸ்துவோடு வந்துவிட்டு, கிறிஸ்துவோடு முழுத்தூரமும் கூடப்போகாத இம்மக்களுக்கு என்ன நேரிடப் போகிறது?

இப்பொழுதும் ரோமருக்கு எழுதின நிருபத்தில், அது 2:22 என்று நான் நம்புகிறேன். வேதம் கூறியது, பவுல் கூறினான், (ரோமர் 8:9 - மொழிபெயர்ப்பாளர்)

''தேவனுடைய ஆவி உங்களில் இராவிடில், நீங்கள் தேவனுடையவர்கள் அல்ல'' தேவனுடையவர்களாக நீங்கள் இருப்பதற்கு, தேவனுடைய ஆவியையுடையவர்களாக இருத்தல் வேண்டும். நிச்சயமாக அப்படித்தான். ஆவியைப் பெற்றிராவிடில் ஸ்தாபனத்திற்கு சொந்தமானவர்களாகத் தான் நீங்கள் இருப்பீர்கள்.

99.அது சரி, ஐயா, "மகா உபத்திரவ காலம் - அவர்கள் அதன் வழியாக கடந்து செல்ல வேண்டியதிருக்கிறது. இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள். இப்பொழுது, நான் இனி மீதியாயிருக்கிற விஷயத்தை எடுத்துக் கொள்ளுகிறேன். இப்பொழுது அவர்கள் புறம்பான இருளிலே தள்ளப்பட்டார்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்.



ஒப்புரவாகிவிடுவான். அப்படித்தான் நடக்கும். திருவசனமே சீர்திருத்துகிறதற்கான மார்க்கமாயுள்ளது. அச்சகோதரர்கள் தேவனுக்கு நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும். எதற் கென்றால்.....

43. பாருங்கள், கடைசி நாட்களில் "கள்ளக் கிறிஸ்துக்கள் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிப் பார்கள்'' என்று வேதம் கூறுகிறது. ஆனால் அது சாத்தியமான தல்ல. இல்லை, ஐயா, தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் முன்குறிக்கப் பட்டவர்களாவர். எனவே அவர்கள் வஞ்சிக்கப்படமாட்டார்கள் என்பதை நீங்கள் பாருங்கள்.

44. எனவே, உடனடியாக அச்சகோதரர்கள் அடுத்த நாளிலே வீட்டுக்கு வந்தார்கள். இன்னமும் அவர்கள் அக்கொள்கையைப் பிடித்துக்கொண்டுதான் இருந்தார்கள். அவர்கள் என்னிடம் அவர்களுடைய வேதவசனங்களை கொடுத்தார்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் வேதவாக்கியத்தின் மூலமாக அவர்கள் கூறிய யாவற்றையுமே கடிந்துகொண்டார். எனவே அவர்கள் அப்பொழுது அதைக் கண்டனர் அவர்கள் தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள். தேவனுடைய சமுகத்தில், அவர்கள் நடந்து வெளியே சென்றனர். அவ்விதமான மக்களுக்காக அது என்னை நன்றியுள்ளவனாக ஆக்குகிறது. ஆம், ஐயா. அப்படிப்பட்ட வர்கள்தான் உண்மையான மனிதர்களாவர்.

45. தவறாயிருக்கிற ஒரு மனிதன், தான் தவறு என்று நிரூபிக்கப்படும் பொழுது, அதை உணர்ந்து தான் ஒரு கிறிஸ்தவனாக இருக்கவேண்டுமென்று விரும்புவதை நீங்கள் கண்டால், அவன் அப்பொழுது, முன்னே சென்று நான் தவறாயிருக்கிறேன்'' என்று அறிக்கையிடுகிறான். அதுதான் உண்மையான கிறிஸ்தவன்.

46. ஆனால் அந்த நபர், மிகவும் கோபமடைந்து, இங்குமங்கும் ஓடித்திரிந்து, ஒரு பக்கமாகப் போய், "அதிலே ஒன்றும் தவறு இல்லை'' என்று கூறினால், சகோதரனே, அவரை கவனியுங்கள்; அவர் அந்த க்ஷணமே ஆக்கினைத் தீர்ப்படைந்து வெளியேறி விட்டார், ஏனெனில் அவர் நம்முடையவரல்ல என்பதினால். ஆனால் எப்பொழுதும் மேய்ப்பனே, வார்த்தைக்கு வாருங்கள், அது எல்லா சமயத்திலும் அதை சரி செய்யும். ஆனால் நீங்கள் வார்த்தையோடு நிலைத்திருக்கவேண்டும்.

47. இக்காரணத்தினால்தான், இனி முதற்கொண்டு நான் அமெரிக்காவில், இருதயத்தின் யோசனைகளை பகுத்தறியும்

அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப் போலவும் இருப்பானாக'' என்று.

39. சபையினால் அவர்கள் பாதுகாக்கப்படுகிற வரையிலும், சாத்தானால் அவர்களை நெருங்கமுடியாது. ஆனால் சபையானது சபையின் பாதுகாப்பினின்றும், கிறிஸ்துவின் இரத்தத்தின் பாதுகாப்பினின்றும் அவர்களை விடுவித்துவிடுமென்றால், அப்பொழுது சாத்தான் அவர்களிடத்தில் போய் கிரியை செய்வான். அது அவர்களை மீண்டும் ஒப்புரவாதலுக்குள் கொண்டு வரும். பார்த்தீர்களா? நீங்கள் அதைப் புரிந்து கொண்டீர்களா, அப்படித்தானே பாஸ்டர் அவர்களே? ஆம், ஐயா.

40. எனவே ஒப்புரவாகவும், தேவனிடத்தில் வரவும், பிறகு தேவனுடைய வழியில் போகவும் வேண்டும்; இதைத்தான் செய்ய எப்பொழுதும் ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

41. இது நமக்கு எதை நிரூபிக்கிறது? நம்மில் இரண்டு மூன்று சகோதரர்கள், நான் எவ்வாறு கடந்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளாக இந்த தவறான காரியத்துக்கெதிராக போராடிக் கொண்டிருந்தேன் என்பதை அறிவார்கள். ஆம், அப்படித்தான். ஆனால், நான் அம்மனிதர்களைப் பற்றி இப்படியாக சிந்திக்க வேண்டிய கட்டம் வந்தது; அதாவது, நான் அவர்களை நேசித்தும் கூட, முடிவாக அவர்களால் அத்தவறை விட்டு விலக முடியாது என்பதை அறிந்து கொண்டேன். நான் சாட்சிகளை என்னோடு அழைத்துக்கொண்டு அவர்களிடம் சென்றேன். ஆனால் அதுவும் கிரியை செய்யவில்லை. நான் அதை சபையினிடம் கொண்டு வரவேண்டியதாயிற்று. கடந்த ஞாயிற்றுக் கிழமையன்று, மேடையிலிருந்து நான் இவ்வாறு கூறவேண்டியதாயிற்று: "இனிமேல் நான் அதை என் காதுகளால் கேட்க விரும்பவில்லை. நான் அதிலிருந்து என்னை விடுவித்துக்கொண்டு தேவனிடம் அதை ஒப்படைக்கிறேன். நான் அதை ஒப்படைக்கிறேன்'' என்று கூறினேன்.

42. உடனே அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதைக் காண்பித்தது... வேத வசனத்தின் மூலமாக அவர்கள் திருத்திக் கொள்ளுதலுக்கு வரும்பொழுது, வேத வசன பூர்வமான திருத்திக் கொள்ளதலுக்கு ஒரு மனிதன் நிற்க முடியவில்லையெனில், அவன் கோபமடைந்து, பதற்றமடைந்து பேசினால், அது அவன் தேவனோடு சரியாக இல்லை என்பதை காண்பிக்கிறது. ஆனால் ஒரு அசலான தேவனுடைய பரிசுத்தவானோ வார்த்தையின் மூலமாக தேவனோடு



அதுதான் மகா உபத்திரவ காலமாகும். அவ்வாறில்லையா? மகா உபத்திரவ காலம்.

இந்த உபத்திரவ காலத்திற்குப் பிறகு, அந்த ஜனங்கள்.... மீதியாயிருக்கிறவர்களைப் பற்றி நான் மீண்டும் எடுத்துக் கொள்ளட்டும். இப்பொழுது பாருங்கள் இங்கே ஒரு துண்டு துணி இருக்கிறது. பெண்ணானவள் அதை இவ்வாறு விரித்து வைத்து, அதிலிருந்து தனக்கு ஒரு ஆடையை தயாரிக்கப்போகிறாள். அவளிடத்தில் ஒரு குறிப்பிட்ட அளவுள்ள துணிதான் இருக்கிறது.

அத்துணியின் ஒவ்வொரு பகுதியும் ஒரேவிதமான துணியாகத் தான் உள்ளது. அது சரிதானே? இருசாராருமே கன்னியர் தான். அது சரி. அவர்களுக்கு கிறிஸ்துவில் விசுவாசம் இருந்தது. தேவபக்தியின் வேஷம் உண்டாயிருந்தது, அவர்கள் ஆலயத்திற்கு சென்று வந்தார்கள்; நல்ல காரியங்களை, தர்மங்களையெல்லாம் செய்து வந்தவர்களாகத் தான் இருந்தார்கள். அவர்களுடைய கிரியைகளுக்கெதிராக குறையொன்றும் சொல்லக் கூடியதாக இல்லை. ''உன் கிரியைகளை நான் அறிந்திருக்கிறேன்'' என்று கர்த்தர் கூறினார். ஒவ்வொரு காலத்திலும் அதைக் குறித்து அவர் கூறினார், "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன். ஆனாலும் உன்னிடத்தில் குறையுண்டு'' என்றார். பாருங்கள்?

100.அந்த ஸ்திரீயானவள்.... அவள் தன் மனதில், எந்தவிதமாக அவ்வாடையைத் தயாரிக்க விரும்புகிறாளோ அதற்கான மாதிரியைப் பற்றி திட்டமிட்டுக் கொள்ளுகிறாள்; அந்த மாதிரியின்படி எவ்வாறு அத்துணியை வெட்ட வேண்டும் என்பதைப் பற்றியும் அவள் சிந்திக்கிறாள்; தான் வெட்டப் போவது என்னவாயிருக்கும் என்பதையும் முன்கூட்டியே அறிந்திருக்கிறாள். அது சரிதானே? அவள் அம்மாதிரியில் போதுமான சிறந்த பகுதி எதுவென்று எண்ணுகிறாளோ அதை அவள் எடுத்துக் கொள்ளுகிறாள். அது சரிதானே? ஏனெனில் அத்துணி முழுவதும் ஒரேவிதமான துணியாகத் தான் உள்ளது. ஆனால், அவள் விரும்புகிற வண்ணமாக அத்துணியை பிரித்து, கத்தரிக்கோலை எடுத்து, அதை வெட்டியெடுத்துக் கொள்ளுகிறாள்.

அத்துணியிலிருந்து வெட்டியெடுக்கப்பட்டுப் போக மீதியாக இருப்பதுதான் ''மீதியானது'' என்று கூறப்படும் (Remnant) சரி. இந்த மாதிரியானது என்னவாயிருக்கிறது, அது எவ்வாறு அறிந்து

கொள்ளப்பட்டது. எதிலிருந்து வெட்டியெடுக்க வேண்டும் என்று அந்த பெண்மணி தெரிந்து கொண்டாளோ, அதிலிருந்து.

101.ஆதி முதல் அந்தம் வரையிலும் முன்னறிவினாலே அறிந்திருந்த தேவனானவர். உலகத்தோற்றத்திற்கு முன்னரே, எங்கிருந்து வெட்டியெடுக்க வேண்டும் என்பதை தெரிந்து வைத்திருந்தார். ஏசாவுக்கும், யாக்கோபுக்கும் உள்ள வேறுபாட்டை அவர் அறிந்தேயிருந்தார். பாவிக்கும், பரிசுத்தவானுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தையும் அறிந்தேயிருந்தார்.

ஒவ்வொரு இருதயத்தின் நோக்கத்தையும் அவர் அறிந்தேயிருந்தார், எனவே, அவர் நம்மை உலகத்தின் தோற்றத்திற்கு முன்னரே தெரிந்து கொண்டு, நமது பெயர்களை ஆட்டுக் குட்டியானவருடைய ஜீவ புத்தகத்தில் வரைந்தார்; அடிக்கப்படப்போகிற ஆட்டுக்குட்டியாக அவ்வாட்டுக்குட்டி இருந்தது; (அவர் அடிக்கப்படப் போவதற்கு முன்னரே, நமது பெயர்களை எழுதினார்). கிறிஸ்துவானவர் உலகத் தோற்றத்திற்கு முன்னரே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் என்று வேதம் கூறுகிறது. அடிக்கப்படுவதற் கென்று அவர் ஆதியில் தெரிந்து கொள்ளப்பட்ட பொழுது, அவர் யாருக்காக அடிக்கப்பட வேண்டுமோ, அதற்குரிய ஜனங்களாக நாம் தெரிந்து கொள்ளப்பட்டோம். அதை காண்கிறீர்களா?

102.யாவரும் கன்னிகைகள் தான். இதோ இங்கே அந்த சிறிய மீதியாயிருக்கிறவர்கள் இருக்கிறார்கள். ஆனால் வெட்டப் படும்வதில் விழும் கழிவுத்துண்டுகள் அல்ல இவர்கள். ஓ, இல்லை. அப்பெண்மணி அதை பத்திரமாக எடுத்துவைத்து வைக்கிறாள், அதை அவள் வேறு எதற்காவது உபயோகிக்க முடியும். பாருங்கள்? ஆனால் சபைக்காலத்தில் இங்கே அது உபயோகப்படப் போகிறதில்லை, அங்கே வெட்டியெடுக்கப் பட்ட சபைதான் உபயோகிக்கப்படும். மீதியாயிருக்கிற அவர்கள் உபத்திரவ காலத்தினூடே செல்லுகிறபடியினால், அவர்கள் நியாயத்தீர்ப்பில் நிற்க வேண்டியுள்ளது. அதை இப்பொழுது புரிந்து கொண்டீர்களா?

இங்கே சபையானது பரம் வீட்டிற்கு போகின்றது. இதோ இங்கே மீதமாக விடப்பட்டிருக்கிற மீதியாயிருக்கிறவர்கள் இருக்கிறார்கள். இங்கே தான் சீயோன் மலையின் மேல் நிற்கிற யூதர்களாகிய இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்கள் இருக்கிறார்கள். அது மூன்றுவிதமான மணவாட்டிகள் அல்ல. அது தானே மணவாட்டி, அடுத்து மீதியாயிருக்கிறவர்கள்; இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்



"நல்லது. அவர்கள் எனக்கு அதைச் செய்தார்கள்'' என்று நீங்கள் கூறுகிறீர்கள்.

36. "ஒரு சகோதரனுக்கெதிராக நீங்கள் ஒரு தவறு அல்லது பிழை செய்ததைப் பற்றி அல்ல. "ஒரு சகோதரன் உங்களுக்கெதிராக எதையாவது கொண்டிருந்தால்.'' அப்பொழுது அந்நபரிடம் சென்று அவரோடு ஒப்புரவாகுங்கள். அவரைப்பற்றி ஒரு விசித்திரமான உணர்வு ஒன்று ஏற்பட்டதாகவும், ஒருவருக்கொருவர் நண்பர்களாக ஆக விரும்புகிறதாகவும் கூறி, ஜெபித்து, பீடத்தண்டையில் போய் உங்கள் நடுவிலிருந்து தேவையற்றதை அகற்றிப் போடுங்கள்.

37. இப்பூமியில் உங்களை இல்லாமல் ஆக்கிப்போடுகிற வரையிலும் சாத்தான் உங்களை விடாமல் குத்திக்கொண்டேயிருப்பான். அதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு சதா குத்து விழுந்து கொண்டேயிருக்குமேயல்லாது, உங்களை சும்மா விடுவது என்பது ஒரு நேரமும் இல்லை. ஏனெனில் நீங்கள் ஒரு யுத்தத்தில் இருந்துகொண்டிருக்கிறீர்கள். பிக்னிக்' போவதற்காகவா கிறிஸ்து விடம் வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டீர்கள்? நல்லது, நீங்கள் நிச்சயமாகவே ஆச்சரியப்படப் போகிறீர்கள். ஏனெனில் அது ஒரு இடைவிடாது நடக்கிற சண்டையாகும். நான் இந்த போராட்டத்தில் கடந்த முப்பத்தியோரு ஆண்டுகளாக இருந்து வருகிறேன். நான் ஒவ்வொரு அங்குலத்தையும் போராடித்தான் வந்திருக்கிறேன். ஆம் அப்படித்தான். இஸ்ரவேல் ஒவ்வொரு அங்குல பிரதேசத்தையும் யுத்தம் பண்ணித்தான் பிடித்தது. பாலஸ்தீனா அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் அதை சுதந்தரித்துக்கொள்ள அவர்கள் ஒவ்வொரு அங்குலத்தையும் யுத்தம் செய்துதான் பிடித்தார்கள்.

38. இப்பொழுது இதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். சபையில் ஏதாவது எழும்புமென்றால், அப்பொழுது மேய்ப்பரானவர்..... உங்கள் மேய்ப்பரை அழைத்துக்கொண்டுபோய் அந்நபரிடம் பேச நீங்கள் விரும்பினால், அப்படிச் செய்யுங்கள், அதற்கும் அந்நபர் செவிகொடுக்கவில்லையெனில் அப்பொழுது சபைக்கு முன்பாக அவ்விஷயத்தைக் கொண்டுவந்து அதை சபைக்கு முன்பாக எடுத்துக்கூறுங்கள். ஒப்புரவாவதற்கு போதிய அவகாசத்தை அந்நபருக்குக் கொடுங்கள்; ஒருவேளை ஒரு ஞாயிற்றுக் கிழமையிலிருந்து அடுத்த ஞாயிறு முடிய என்று வைத்துக் கொள்ளலாம். சபைக்கும் அவர்கள் செவிகொடுக்கவில்லையென்றால், அப்பொழுது வேதம் கூறுகிறது. ''அவன் உனக்கு

33. சபையில் சரியில்லாத காரியம் ஒன்று எழும்பு மென்றால், அது சரியானதல்ல என்று அறிந்திருக்கிற குறிப்பிட்ட நபர் அத் தவறை செய்யும் நபரிடம் போகக்கடவர். அவர் போய் எடுத்துக் கூறியும், சரி பண்ணிக்கொள்ளவில்லையென்றால், அதற்கடுத்ததாக செய்யவேண்டிய காரியம் என்னவென்றால், அவர் ஒரு சாட்சியை அல்லது இருசாட்சிகளை அழைத்துக்கொண்டு அந்நபரிடம் போகக்கடவர்கள். அப்படியாகப்போய், தவறு இருக்கும் நபரிடம் எடுத்துக்கூறி ஒப்புரவாகவோ, அல்லது தவறை திருத்திக்கொள்ளவோ செய்யும்படி செய்யக்கடவர்கள். இப்பொழுது கவனமாக கேளுங்கள். இப்பொழுது இது ஒலிப்பதிவு செய்யப்படுகிறது. அதுவும் கிரியை செய்யாவிடில்......

34. எப்பொழுதாவது உங்களுக்குள் ஏதாவது ஒரு சிறிய இஸம்' ஏதாவது ஒரு கொள்கை அல்லது கோட்பாடு அல்லது வேறு ஏதாவது ஒன்று அல்லது ஏதாவது ஒரு சிறிய தீய உணர்வுகளோ எழும்ப அனுமதிக்காதீர்கள். இப்பொழுதே அப்படிப்பட்ட எந்தவொன்றும் உங்களை விட்டு அகன்றுபோட்டும்! அதனால் உங்களுடைய சிறிய ... திராட்சைத் தோட்டங்களை கெடுப்பது எப்பொழுதும் சிறு நரிகள்தான் என்பதை அறிவீர்கள். எனவே அவைகளை உங்கள் பாதையை விட்டு அகற்றிப் போடுங்கள். எவருக்கெதிராகவும் ஏதாவது ஒரு விசித்திரமான சிறு உணர்வுகள் உங்களுக்குள் தோன்றினால், அக்குறிப்பிட்ட நபரிடம் போய் ''நான் தவறாயிருக்கிறேன். உங்களைப்பற்றி நான் தவறாக எண்ணுகிறேன். நான் சரியாகும் படியாக அதன் பேரில் ஜெபிக்க உதவி செய்யுங்கள்'' என்று கூறுங்கள். ஏனெனில் நமது மத்தியில் சுத்தமான கலப்பிடமில்லாத பரிசுத்த ஆவியானவர் நிலை கொள்வதைத் தவிர வேறு எதையும் நாம் விரும்பவில்லை. அதைத்தான் நாம் விரும்புகிறோம். அப்பொழுது வரங்களும் மற்ற இன்னபிற காரியங்களும் நமது மத்தியில் சரியாக கிரியை செய்திடும், யாவும் சரியாக வரும்.

35. ஒரு முழுமையான சபையாக நீங்கள் பெற்றுக்கொள்ள இயலும் பொழுது, ஏன் ஒரு அரைகுறையான சபையை நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்? ஆகாயங்கள் பூராவிலும் அசலானவைகளை நீங்கள் பெற்றிருக்கையில், நீங்கள் ஏன் பதிலிகளைப் பெற்றவர்களாயிருக்க வேண்டும்? அப்படிப்பட்டது நமக்குத் தேவையில்லை. சபை அங்கத்தினர்களாகிய உங்களுக்குள் ஒருவருக்கொருவர் ஏதாவது சிறுசிறு வினோதமான எதிரான எண்ணங்கள் எழும்புமென்றால், நீங்கள் அந்நபரிடம் செல்லுங்கள்.



பேர்கள். சரியாக அதுதான். யோவான் அங்கே பரிசுத்த ஆவியின் உணவைத் தவிர வேறு எதையும் புசித்துக் கொண்டிருக்கவில்லை. எனவே அவன் சரியான நிலையில் தான் இருந்தான். அவனிடத்தில் எந்தவித பழுதும் காணப்படவில்லை என்று நான் கருதுகிறேன். பாருங்கள்? அவர்கள் அதோ அங்கே இருக்கிறார்கள்.

103.காலத்தின் இறுதியிலே, "பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள்'' என்று வேதம் கூறுவதை எத்தனை பேர்கள் அறிந்திருக்கிறார்கள்? பவுல் அவ்வாறு கூறினான். நாம் இப்பொழுது தானியேலின் புத்தகத்தை எடுத்துக் கொண்டு, அங்கே வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பைப் பற்றி பார்ப்போம். வெளிப்படுத்தின விசேஷத்திலிருந்தும் அந்தக் காட்சியை நாம் எடுத்துக் கொள்ள முடியும். ஆனால் நான் தானியேலின் புத்தகத்திலிருந்து எடுத்துக்கொள்ள விரும்புகிறேன். அது அதே காரியம் தான். தானியேல் 7ம் அதிகாரம், அங்கே நாம் அந்த மகத்தான வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பைப் பற்றி எடுத்துக் கொள்வோம்.

தானியேலின் புத்தகம் 7ம் அதிகாரம் 8ம் வசனத்திலிருந்து துவக்குவோம்:

''அந்தக் கொம்புகளை நான் கவனித்திருக்கையில், இதோ, அவைகளுக்கு இடையிலே வெறோரு சின்ன கொம்பு எழும்பிற்று; அதற்கு முன்பாக முந்தின கொம்புகளில் மூன்று பிடுங்கப்பட்டது; (அங்கே நாம் ரோமாபுரியைக் காண்கிறோம்)... இதோ, அந்தக் கொம்பிலே மனுஷக் கண்களுக்கு ஒப்பான கண்களும்

(இப்பொழுது கவனியுங்கள், இந்த கொம்பு கிரீடத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை. அது ஒரு தந்திரமான காரியமாகும். ஏனைய கொம்புகள் மிருகங்களுக்கு இரையாகின. இந்தக் கொம்பு ஒரு தந்திரமான மனிதனாகும். அஞ்ஞான மார்க்கத்திற்குப் பதிலாக அது போப் ஆகும். அதை நீங்கள் பாருங்கள்)

பெருமையானவைகளைப் பேசும் வாயும் இருந்தது.

104.[இப்பொழுது 9ம் வசனத்தைக் கவனியுங்கள்]

"நான் பார்த்துக் கொண்டிருக்கையில், சிங்காசனங்கள் வைக்கப்பட்டது;

அது எப்போது என்றால் புறஜாதிகளுடைய இராஜ்யங்கள் முடிவுபெற்ற பின். அப்படி தான் இந்த தீர்க்கதரிசி பேசுகிறார். அவர் முன்னுரைத்த

ஒவ்வொரு காரியங்களும் இந்த கடைசி காரியம் மட்டுமாக கட்சிதமாக நடைப் பெற்றிருக்கிறதை நினைவில் கொண்டிருங்கள். இவைகளை நாம் வரலாற்றை பார்கும் போது அறிந்துக் கொள்கிறோம்.

சிங்காசனங்கள் வைக்கப்பட்டது; நீண்ட ஆயுசுள்ளவர் வீற்றிருந்தார்; அவருடைய வஸ்திரம் உறைந்த மழையைப் போலவும், அவருடைய சிரசின் மயிர் வெண்மையாகவும், பஞ்சைப்போலத் துப்புரவாகவும் இருந்தது... (அன்றிரவில் நாம் பார்த்த அத்தரிசனத்தில் அது யார் என்று பார்த்தோம்? அது இயேசு தான்). அவருடைய சிரசின்மயிர் வெண்மையாகவும் பஞ்சைப் போலத் துப்புரவாகவும் இருந்தது; அவருடைய சிங்காசனம் அக்கினி ஜூவாலையும், அதின் சக்கரங்கள் எரிகிற நெருப்புமாயிருந்தது.

"அக்கினி அவர் சந்ததியிலிருந்து புறப்பட்டு ஓடினது; ஆயிரமாயிரம் பேர் அவரைச் சேவித்தார்கள். (இதோ அவரோடு திரும்பி வருகிற சபையை அங்கே காண்கிறோம்)... கோடா கோடி பேர் அவருக்கு முன்பாக நின்றார்கள்.... (மணவாட்டி அவருடன் வருகிறாள், மற்றும் உலகில் மீதியுள்ளவர்களுமே)... நியாய சங்கம் உட்கார்ந்தது; புஸ்தகங்கள் திறக்கப்பட்டது.

அப்பொழுது நான் பார்த்தேன்; நான் பார்த்துக் கொண்டிருக்கையில், அந்தக் கொம்பு பெருமையான பேச்சுகளைப் பேசினதினிமித்தம் அந்த மிருகம் கொலை செய்யப்பட்டது; அதின் உடல் அழிக்கப்பட்டு, எரிகிற அக்கினிக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டது.

மற்ற மிருகங்களுடைய ஆளுகையோவென்றால், அவைகளை விட்டு நீக்கப்பட்டது; ஆனாலும் அவைகளுக்குக் காலமும் சமயமும் ஆகுமட்டும் அவைகள் உயிரோடே இருக்கும்படி கட்டளையிடப்பட்டது.

105.நியாயசங்கமானது அமர்ந்தது, புத்தகங்கள் திறக்கப்பட்டன. அப்பொழுது தான் மணவாட்டி திரும்பி வந்து நியாயத்தீர்ப்பில் அமர்ந்திடுகிறாள். தெரிந்து கொள்ளப்பட்ட சபையானது. அந்த மூன்றரையாண்டுகளுக்குப் பிறகு, எடுத்துக் கொள்ளப்பட்ட சபையானது திரும்பி வருகிறது. அதற்குப் பிறகு... வெளிப்படுத்தின விசேஷத்தில் அதைப்பற்றி கூறுகிறது. "மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை'' உங்களில் எத்தனை பேர்கள் அதை வாசித்துள்ளீர்கள்? இயேசு மணவாட்டியோடு திருப்பி வருகிறார். மணவாட்டியோடு.



செய்யாமல் இருக்கவேண்டும்? அது சரிதானே சகோதரன் நெவில் அவர்களே? அது மிகவும் சரிதான்.

28. டாக் அவர்கள் என்னிடம், அவர்களை நினைத்துக்கொள்ளும் படி உங்களிடம் கூறும்படி கூறினார். அவர்கள் போதுமான அளவு நிதி கிடைத்ததும் சபைக் கட்டிடத்தை கட்டுவதற்காக திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றனர்; அதற்காக நீங்கள் கொடுத்துள்ள வாக்குறுதிகள்.....

29. அவர்கள் என்னிடம் ஏதோ கூறினார்கள். அது குழந்தைகளின் பிரதிஷ்டை பற்றியது என்று எண்ணுகிறேன். அதுதான் அது. இவ்வாராதனை முடிவின்போது அதை உடனே வைத்துக்கொள்ளுவோம்.

30. இந்தத் துணிகளின் பேரில் ஜெபிக்க வேண்டுமா? நல்லது, ஐயா. அதையும் சேர்த்து பிறகு செய்துவிடுவோம்.

31. இப்பொழுது வார்த்தையை நாம் அணுகும் முன்னர்.... வார்த்தையைக் கேட்பது எத்தனை பேருக்கு இன்பமாயுள்ளது? அது மலையின்மேல் வாசம் பண்ணுவதுபோல் உள்ளது. கடந்த ஞாயிறு அளிக்கப்பட்ட செய்தியிலிருந்து, தேவனுடைய வழியில் ஒன்றைச் செய்வது என்றால் என்ன என்பதைப்பற்றி நீங்கள் பார்க்க முடிந்தது. அவ்விலையேறப்பெற்ற சகோதரர்கள் நடுவில் அந்த ஒரு குறிப்பிட்ட ஆவிதான் அவர்களை அலைக்கழித்தது என்பதை நான் கண்டபோது, லௌகீக மனிதனுக்கு அதை எடுத்துப் போடுவதற்கு வழியே இல்லை. எனவே நம்மால் செய்ய முடிந்த தெல்லாம், அதைக் குறித்து பிரதிஷ்டை செய்து கொண்டு, கர்த்தரிடத்தில் அதை சமர்ப்பிப்பது என்பதுதான். சில மணி நேரங்களில் அவையாவும் முடிவுக்கு வந்துவிட்டது.

32. நான் வெளியிடங்களுக்குச் செல்லப்போகின்றேன். இங்கே உங்களோடு கர்த்தருடைய பணியில் மேய்ப்பன் அவர்கள் உதவியாயிருந்து வருகிறார். ''... தேவனுக்கும்.... தெரிந்துகொள் ளப்பட்ட தூதருக்கும் முன்பாக, உறுதியாய்க் கட்டளையிடு கிறேன்,'' என்று பவுல் கூறியவண்ணமாக கூறுகிறேன். சபையில் யாராவது ஒழுங்கைவிட்டு விலகிவிட்டால், என்ன செய்ய வேண்டுமென்பதற்கான ஒரு பரிபூரண உதாரணம் உள்ளது என்று இங்குள்ள இச்சபைக்கு கூறுகிறேன்.

குதிரையை பிடித்துக் கொல்வதைப்போல் இருக்கிறது. என்னால் அக்காட்சியைக் காணமுடியவில்லை. "எனவே நான் அவளை இல்லாமற்போகச் செய்வேன்'' என்று கவிதை கூறுகிறது. இல்லை, அவ்வாறு செய்யக்கூடாது. பிரிட்டி ஷாரின் பீரங்கிக் குண்டுகள் அக்கப்பலை தாக்கியபோது, அதன் பக்கவாட்டில் உள்ள கருவாலி மரப்பலகைகளை துளைத்துக் கொண்டு சென்றது. அக்கப்பலை எடுத்து நீங்கள் மூழ்கடிப்பதை என்னால் காண சகிக்காது.

புயலின் தேவதைகளிடம் அதை ஒப்படையுங்கள். மின்னல், கடுங்காற்றிடம் அதை கொடுத்துவிடுங்கள்.

(நான் இக்கவிதையை விரும்புகிறேன்).

25. அதன்பிறகு நாங்கள் மேற்கொண்டு வந்து ..... திருவாளர் கென்னடி அவர்கள் எங்களை அழைக்கவில்லை. ஆனால் நாங்கள் அங்கே இருக்கையில் அவருடைய வெள்ளை மாளிகையைக் காண விரும்புகிறோம். அவர்கள்... நான் அவ்விடத்திற்கு அநேக சமயங்கள் போயிருக்கிறேன். ஆனால் பிள்ளைகள் அதைக்காண விரும்புகிறார்கள். கர்த்தருக்கு சித்தமானால் அதன்பிறகு நாங்கள் வீடு திரும்பிவிடுவோம். எனவே எங்களுக்காக ஜெபியுங்கள்.

26. எங்களிடமுள்ள எங்கள் அன்பானவர்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம். இங்கு எங்களிடமுள்ள அவர்கள் தங்கள் ஓய்விற்காக அநேக இடங்களுக்குச் சென்றுள்ளனர். அவர்களில் சிலர் இன்று காலை கென்டக்கி, டென்னசி மற்றும் வேறு இடங்களுக்கு சென்றுள்ளனர். ஆகவே நாங்கள் அவர்களுக்காக ஜெபிக்கிறோம்.

27. இப்பொழுது, நான் ஒரு காரியத்தைக் குறித்து ஒரு அறி விப்பைச் செய்ய வேண்டுமென்று இருந்தேன். ஓ! ஆம், இந்த ஆராதனைக்குப் பிறகு உடனே ஞானஸ்நான ஆராதனை உள்ளது. பிறகு, குழந்தைகளின் பிரதிஷ்டையும் உள்ளது என்று நான் நம்புகிறேன். சகோதரன் குழந்தைகள் பிரதிஷ்டை இருக்கிறது என்று என்னிடம் கூறினார். அநேக காரியங்கள் நாம் செய்தாக வேண்டியிருக்கிறது.... என்ன சொல்லுகிறீர்கள். (யாரோ ஒருவர் சகோதரன் பிரான்ஹாம் அவர்களிடம் மாலை ஆராதனையைப்பற்றி கேட்கிறார் - ஆசி). நல்லது. இரண்டு ஆராதனைகளையுமே நான் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. நான் ஒன்றையும், மற்ற ஆரா தனையை சகோதரன் நெவில் அவர்களும் எடுத்துக்கொள்வார். என்னால் இயலாது... நாங்கள் இருவருமே இங்கேயிருக்கையில், ஏன் ஒருவர் மட்டும் கிரியை



106.யாவும் மூன்று என்ற எண்ணில் காணப்படுகின்றன என்று நான் கூறியதை நினைவில் கொள்ளுங்கள். அவருடைய வருகை மூன்று முறைகள்; முதல் தடவை அவர் தனது மணவாட்டியை மீட்க வந்தார்; இரண்டாவது தடவை அவர் தன் மணவாட்டியை எடுத்துக் கொண்டு போக வருகிறார்; அது ஒரு காதல் விவகாரமாயுள்ளது, அவர் தானே இரகசியமாக வந்து அவளை இரவு நேரத்தில் திருடிக் கொண்டு, உலகை விட்டு எடுத்துக் கொண்டு போய் விடுகிறார். அவரை நாம் ஆகாயத்தில் சந்திப்போம். அது கர்த்தருடைய இரகசிய வருகையாயிருக்கிறது. இரண்டாவது தடவை அவர் வருவது, தன் மணவாட்டியை பெற்றுக் கொள்ளத் தான். முதலாவது தடவை, அவர் அவளை மீட்டுக் கொள்ள வந்தார். இரண்டாவது தடவை அவளைப் பெற்றுக் கொள்ள வருகிறார்; இராஜாவும் இராணியும் வருகிறார்கள்.

107.அவர் இங்கே தேசங்களின் மேல் நியாயத்தீர்ப்புக்கென வருகிறார்.

''உங்களில் ஒருவனுக்கு வேறொருவனோடே வழக்குண்டானால் நீதிமன்றத்திற்கு போகத் துணிகிறதென்ன? அற்ப வழக்குகளை தீர்க்க நீங்கள் அபாத்திரரா? பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா? என்று பவுல் கூறினான். இங்கே நியாயத்தீர்ப்பானது கிறிஸ்துவினிடமும், அவருடையவர்களிடமும் ஒப்புக் கொடுக்கப் பட்டிருக்கிறது. அவர்கள் தான் கூண்டிலேற்றி விசாரிக்கிற வழக்கறிஞர் ஆவர். அவரோ சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார்.

வழக்கறிஞராக மணவாட்டி இருக்கிறாள். இங்கே இவைகள் வருகின்றன. புத்தகங்கள் திறக்கப்பட்டன, ஜீவ புத்தகம் என்ற மற்றொரு புத்தகமும் திறக்கப்பட்டது. முதல் புத்தகம், புறம்பே தள்ளப்பட்ட பாவியைப் பற்றிய புத்தகமாகும். சரி. அவன் துவக்கத்திலேயே ஆக்கினைக்குள்ளாக்கப் பட்டவனாய் இருக்கிறான். அவர்கள் தான் வெள்ளாடுகள். அவனுக்கு ஒரு வாய்ப்பும் இல்லை; அவனது துவக்கமே பாவியாகத் தான் இருக்கிறது. எனவே அவன் புறம்பே தள்ளப்படுகிறான்.

108.செம்மறியாடுகள் நியாயத்தீர்ப்பில் நிற்கின்றன. அவர்கள் நியாயந்தீர்க்கப்பட வேண்டும்; பரிசுத்தவான்கள் அவர்களை நியாயந்தீர்க்க வேண்டும்.

தேவன் அநீதியுள்ளவரல்ல. ஒரு அஞ்ஞானி தூர தேசத்திலிருக்கையில், நாம் இங்கே அமெரிக்காவில் எட்டு, பத்து மில்லியன் டாலர்கள் மதிப்பில் ஆலயங்களை எழுப்பிக் கொண்டு, அந்த அஞ்ஞானிக்கு தேவ

செய்தியை எடுத்துச் செல்லாமலிருந்தால், தேவன் நம்மை அதற்காக பொறுப் பாளியாக்கி, அவர்களையோ தப்புவிக்க வைத்துவிடுவார். நிச்சயமாக! தேவன் அநீதியுள்ளவரல்ல. இங்குள்ள நீங்கள் இதை இதற்கு முன்பு கண்டிருக்காவிடில், நீங்கள் பொறுப் பாளியல்ல; செய்தியை மக்களிடம் எடுத்துச் செல்வதற்கு நாங்கள் பொறுப்புள்ளவர்களாயிருக்கிறோம். நீங்களோ அதற்கு நீங்கள் செவிகொடுப்பீர்களா, அல்லது மாட்டீர்களா என்பதற்கு பொறுப்புள்ளவர்களாயிருக்கிறீர்கள்.

109.கோவில்களைக் கட்டி கும்பிடுகிற அஞ்ஞானிகள் எழும்புவார்கள்; அவர்களுக்கு அதைவிட மேலாக ஒன்றும் தெரியாது. தேவனைப் பற்றி அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. தேவன் அநீதியுள்ளவரல்ல. அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்காவிடில், அவர்களை தேவன் ஆக்கினைக்குள்ளாக்க மாட்டார். அவர்களுக்கு ஒரு இடத்தை ஒதுக்குவார்.

எனவே சபையில் ஒவ்வொரு சபைக் காலத்திலும், எபேசு சபைக்காலம் முதற் கொண்டு, இங்கே இந்த சபைக்காலம் வரையிலும், செய்தியானது, கிறிஸ்துவின் உண்மையான செய்தியானது, அது ஆதியில் இருந்ததைப் போலவே, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம், வல்லமை, உயிர்த்தெழுதல், அந்நிய பாஷைகளில் பேசுதல், சுகமளிக்கும் வரங்கள், இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம், மற்றும் அவர் போதித்த இன்னபிற காரியங்களோடு பெற்றிருக்கும் மணவாட்டியில் உள்ள ஒவ்வொருவரும், வழக்குரைஞராக நிற்பார்கள்.

110.இதோ இங்கே ஒருவருடைய வழக்கு எடுத்துக் கொள்ளப் படுகிறது. ''இன்னின்ன இடத்தில் உனக்கு ஒரு கூட்டம் உண்டாயிருந்தது. நீ அவரிடம் கூறினாயா?'' என்று கேட்கப்படுகிறது.

இப்பொழுது வழக்குரைஞர் கூறுகிறார். ''ஆம், நான் அவருக்குச் சொன்னேன்'' என்று.

அது புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. அதை மறுக்கமுடியாது. நம்முடைய எண்ணங்கள் கூட அங்கே பதிவு செய்யப்பட்டுள்ளது. அதை நீங்கள் மறுதலிக்க முடியாது.

'ஆம் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று நான் அவனுக்குக் கூறினேன்” என்று பதிலளிக்கிறார்.

''ஜெஃபர்சன்வில்லில் உள்ள கூடாரத்தில் தானே''



22. பாருங்கள், இப்பொழுது மக்கள் வியாதிப்பட்டவர்களாயும், துன்பப்பட்டவர்களாயும் இருக்கும் போது, அதற்கென ஜெபித்துக்கொள்ளும்படியாக வரும்போது, நான் அச்சமயத்தில் ஒருவேளை ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கையில், அக்காரியத்தைப்பற்றி அக்கறை எடுத்துக் கொள்வதற்கென தேவன் ஒரு வழியை ஆயத்தம் பண்ணி வைத்திருக்கத்தான் செய்கிறார். அது மகத்தானதாக இல்லையா? அப்படித் தான் இருக்கவேண்டும். அதற்காக நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கவில்லையா? தேவன் ஒருபோதும் தனக்கென ஒரு சாட்சியை வைக்காமல் விட்டுவிடுவதில்லை. அதற்காக நாம் மிகவும் நன்றி யுள்ளவர்களாயிருக்கிறோம்.

23. அடுத்தவாரம், கர்த்தருக்கு சித்தமானால், பள்ளி விடுமுறையினிமித்தம் பள்ளியைவிட்டு இப்பொழுது வீட்டுக்கு வந்திருக்கும் எனது பெண்பிள்ளைகளை அழைத்துக்கொண்டு போகப் போகிறேன். நீங்கள் எங்களுக்காக ஜெபிக்கும்படியாக நான் வேண்டிக்கொள்கிறேன். உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் எனது மூத்த மகன், பால் ரிவிர் (Paul Revere) என்பவர் தனது நடுநிசிப் பயணத்தைச் செய்த இடத்தை பார்க்க விரும்பினான். அங்கேதான் அவர் சபையைவிட்டு கிளம்பினார். அது நியூ இங்கிலாந்து என்ற இடத் தில் உள்ளது. நாங்கள் போய் அதைப் பார்க்க விரும்புகிறோம். (பால் ரிவிர் என்பவர் அமெரிக்கா நாட்டு தேசத் தியாகியாவார். அவர் ஏப்ரல் 18, 1775-ல் பிரிட்டிஷ் துருப்புக்கள் படையெடுத்து வருகிறார்கள் என்பதைக் குறித்து குடியேற்றக்காரர்களை எச்சரிக்க இப்பயணத்தை மேற்கொண்டார் - மொழி பெயர்ப்பாளர்).

24. பிறகு, நான் எப்பொழுதும் "ஓல்ட் அயர்ன்சைட்ஸ்'' - ஐப் பார்க்க விரும்பினேன். (“ஓல்ட் அயர்ன்சைட்ஸ்' (old Ironsides) என்பது அமெரிக்காவில் 1812 ம் ஆண்டில் நடந்த யுத்தத்தில் நடந்த யுத்தத்தில் தீவிரமாக சண்டையிட்ட பீரங்கிகள் பொருத்தப்பட்ட ஒருவகைப் போர்க்கப்பல்களின் தொகுதி - மொழிபெயர்ப்பாளர்) "ஓல்ட் அயர்ன்சைட்ஸ்-ஐப் பற்றிய கவிதையை எத்தனை பேர் கேட்டிருக்கிறீர்கள்? கிறிஸ்தவத்திற்கு வெளியே நான் அறிந்த வற்றுள் எல்லாம் எனக்கு மிகவும் விருப்பமானது அதுதான். அதுவே எனது சிறந்த ஒன்றாகும். நான் அதைப் படிக்க ஆரம்பித்த உடன், எனக்கு துக்கத்தினால் தொண்டை அடைத்துக்கொள்கிறது. நான் உட்கார்ந்து, பிறகு சுற்றி நடந்து திரும்பிப்போகிறேன். அதை எவ்வாறு உங்களால் மூழ்கடிக்க முடியும்... அது எப்படியிருக்கிறது என்றால், உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் பிழைப்பை உண்டுபண்ணுகிற ஒரு

18.. 'ஆமென்'' என்று அவள் கூறினாள். அவளுடைய கணவர் அங்கே உட்கார்ந்து கொண்டிருந்தார். "தேவன் அதை நிறுத்தி விடுவார் என்ற விசுவாசத்தில் தான் நான் இப்பொழுது போய்க் கொண்டிருக்கிறேன்'' என்று அப்பெண்மணி கூறினாள்.

19. நான் அவளுக்காக ஜெபித்தேன். அதன்பிறகு அவர்கள் சோதனைக்காக மாதிரிகளை எடுத்து சோதித்துப் பார்த்துவிட்டு திரும்பிவந்து, "இப்பொழுது 'நெகட்டிவ்'' (அதாவது வியாதியின் அறிகுறிகள் ஒன்றும் இல்லை என்று அர்த்தம் - மொழி பெயர்ப்பாளர்) என்று கூறிவிட்டார்கள். ஆனால் அவர்கள் யாவரும் அது புற்றுநோய் என்று கூறிவிட்டிருந்தார்கள்.

20. எனவே நண்பர்களே, காரியம் என்னவெனில், அவர் தேவனாயிருக்கிறார். அவர் ஜெபத்திற்கு பதிலளிக்கிறார். இந்த சிறிய எளிய கூடாரத்தில் அவர் நம்மை வந்து சந்திக்கிறார் என்பதற்காக நாம் மிகவும் மகிழ்ச்சியுள்ளவர்களாயிருக்கிறோம். பார்ப்பதற்கு அவ்வளவாக அதில் ஒன்றும் அதிகம் இல்லை; மழை, பனி இவற்றிலிருந்து நம்மைக் காத்துக்கொள்ள நம் தலைக்குமேல் ஒரு கூரை இருக்கவேண்டுமே என்பதற்காகத்தான் அநேக ஆண்டுகளுக்கு முன்பாக, பழைய பலகைகளை ஒன்றாகச் சேர்த்து கூரையை அமைத்துக்கொண்டோம். ஆனால் இந்த முயற்சியினால், அநேகர் இன்றைக்கு ஜீவித்துக்கொண்டிருக்கிறார்கள், அதற்காக நாம் மிகவும் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்.

21. நமது தர்மகர்த்தாக்களுக்காக நாம் நன்றியுள்ளவர் களாயிருக்கிறோம். நமது உதவிக்காரர்களுக்காக நாம் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். நமது சபையாருக்காக நாம் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். நமது மேய்ப்பனுக்காக நாம் நன்றியுள்ளவர்களா யிருக்கிறோம். சபையில் தேவன் அளித்துள்ள ஒவ்வொரு வரத்திற்காகவும் நாம் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். இம்மனிதர்களுக்கு தேவன்தானே, அவர்கள் ஒருபொழுதும் தவறான பக்கத் தில் சாய்ந்துவிடாதபடியும், சாலையின் நடுபாதையில் வார்த்தை யோடு நிலைத்து இருப்பதற்காகவும் விவேகத்தை அளிக்கும்படி ஜெபிக்கிறோம். ஒருபோதும் எந்தவகையிலும் உங்களை உயர்த்திக் கொள்ளவேண்டாம்; எப்பொழுதாவது நீங்கள் அவ்வாறு செய்தால், நீங்கள் அங்கேயே முடிவடைந்து விடுவீர்கள். வார்த்தையோடு தாழ்மையோடு நிலைத்திருங்கள்.



'ஆம் ஐயா, நான் அதை அறிவேன்" என்று பதில் வருகிறது.

''ஆம், இங்கே இப்புத்தகத்தில், அவர்கள் அதைச் செய்ய வேண்டும் என்பதைப் பற்றி நீ கூறியவைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பின்பு, அவர் வேத வாக்கியங்களை யெல்லாம் ஆராய்ந்து, அது சரிதான் என்பதை கண்டு கொண்டார். ஆயினும் அதற்குக் கீழ்ப்படியவில்லை''

'அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் உங்களை நான் அறியேன்'' என்பார். அங்கே தான் அவர் வெள்ளாடுகளை செம்மறியாடுகளை விட்டு பிரிக்கிறார். செம்மறியாடுகளை தனது வலது பக்கமாகவும், வெள்ளாடுகளை தனது இடது பக்கமாகவும் நிறுத்துகிறார். அங்கே நீங்கள் அந்த மூன்று விதமான மக்களையும் காணலாம்.

111.ஆனால் மணவாட்டியாகிய இந்த வகுப்பினர் ஒருபோதும் அந்த வகுப்பினராக இருக்க முடியாது. அப்பொழுது மணவாட்டியானவள், அவரோடு ஆலயத்தில் இருக்கிறாள். ஏனையோர், பாடுபட்டு, தங்களுடைய மகிமையை இராஜ்யத்தினுள் கொண்டு வருகிறார்கள். மணவாட்டியோ மணவாளனோடு தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறாள். மற்றவர்களுக்கோ, இவர்களைப் போல் அவர்கள் புறம்பே தள்ளப்படுவதுமில்லை, அவர்கள் பணிவிடை செய்வார்கள். ஏனெனில் செம்மறியாடுகளாகிய அவர்களை அவர் வெள்ளாடுகளினின்றும் வேறு பிரித்தார். ஆனால் அவர்...ஆனால் வெள்ளாட்டுக்கோ அதைப்பற்றிய அறிவு இல்லை; அதைப்பற்றி அது அக்கறை கொள்ளவில்லை. அவன் ஒரு வெள்ளாடாக இருக்கிறான், வெள்ளாடு என்ற நிலையைப் பற்றி திருப்தி கொண்டிருக்கிறான். எனவே ஒரு வெள்ளாடாக அவன் மரிக்கிறான். அதுவே அவன் முடிவாகும். அவ்வளவு தான்.

ஆனால் செம்மறியாடோ, அவனுக்கு இருக்குமென்றால்... தேவன் அதை பிடித்துக் கொள்வாரானால்... நான் தேவனைப் பற்றி ஒன்றும் கேள்விப்பட்டிராத தேவனற்ற அந்த அஞ்ஞானிகளோடு நின்று கொண்டு இருந்தேன். எனவே நீங்கள் அந்த மக்களுக்கு இந்த சுவிசேஷத்தை பிரசங்கித்தால்...

112.நான் அங்கே நின்றாக வேண்டும். சமீபத்தில் தேவன் எனக்கு கொடுத்த அந்த மகத்தான ஸ்தலத்திற்கு என்னை எடுத்துச் செல்லுதலில், நான் காண்கையில், நான் அந்த ஜனங்களோடு நிற்க வேண்டியிருந்தது. நான் அவர்களுக்காக பொறுப்புள்ளவனாக இருப்பேன்.

இலட்சக்கணக்கான மக்கள் அங்கே நின்று கொண்டிருந்தார்கள். 'அவர்கள் யாவரும் பிரான்ஹாம் குடும்பத்தைச் சேர்ந்தவர்களா?'' என்று நான் கேட்டேன்.

''இல்லை, அவர்கள் உன் ஊழியத்தில் ஆதாயப்படுத்தப்பட்டவர்கள்'' என்று பதில் வந்தது.

''நான் இயேசுவைக் காண வேண்டும்'' என்று நான் கேட்டேன்.

'இல்லை, இன்னமும் சமயம் வரவில்லை. அவர் வருவதற்கு முன்பாக ஒரு சமயம் உண்டாயிருக்கும் ஆனால் அவர் முதலில் உன்னிடம் வந்து, நீ பிரசங்கித்த வார்த்தையின்படியே நியாயந்தீர்க்கப்படுவாய். அவர்கள் அதன் பேரில் தான் இளைப்பாறிக் கொண்டு இருக்கிறார்கள்" என்று அவர் கூறினார்.

''எல்லோரும் அங்கே நின்றாக வேண்டுமோ? பவுலுங் கூட அங்கே நின்றாக வேண்டுமோ?என்று நான் கேட்டேன்.

"ஆம், பவுல் தான் யாருக்கு பிரசங்கித் தானோ அவர்களோடுங் கூட அவன் நின்றாக வேண்டும்'' என்று அவர் கூறினார்.

"பவுல் பிரசங்கித்த அதே செய்தியைத் தான் நானும் பிரசங்கித்தேன்" என்றேன்.

தங்கள் கரங்களையுயர்த்தி, "அதன் பேரில் தான் நாங்களும் இளைப்பாறிக் கொண்டிருக்கிறோம்'' என்றார்கள்.

அங்கே தானே அது சரியாக இருக்கிறது. ஆம்,

மேலும் கூறப்பட்டது: ''பின்பு நாம் யாவரும் ஒன்று சேர்ந்து புசிக்கவும் குடிக்கவும் கூடியதான ஒருசரீரத்தை அடைய பூமிக்குத் திரும்பிப் போவோம். பின்பு, முடிவில்லாத யுகாயுகமாய் ஒன்று சேர்ந்து வாழ்வோம்' என்று. அதுவே கர்த்தருடைய வருகையாயிருக்கிறது. அது சரி தான். இன்னும் ஒரு நிமிடம்.

இப்பொழுது... இன்னும் கொஞ்சம் நேரத்தில் முடித்தாக வேண்டும். ஏனெனில் நேரமாகிவிட்டது. நம்முடைய சகோதரன் ஞானஸ்நான ஆராதனைக்கோ அல்லது அவர் உபயோகிப்பதற்காகவேறெந்த காரியத்திற்குமான நேரமாக இது இருக்கிறது.

113. நல்லது, இந்த சபையின் காலத்தில், ஓ, இங்கே மிகவும் அருமையான காரியம் ஒன்றிருக்கிறது. நான் இதை மிகவும் விரும்புகிறேன். இச்சபைக் காலங்களில் ஏறத்தாழ ஒன்றையொன்று



அவளுக்கு தொண்டையில் புற்றுநோய் உள்ளது'' என்று அவர்கள் கூறினார்கள்.

14. எனவே நாங்கள்..... அவளை மருத்துவமனைக்கு அவர்கள் அழைத்துச் சென்றனர். நான் நமது நல்ல பாஸ்டர் நெவில் அவர்களை சந்திக்கிற வரையிலும் அப்பெண்மணி மருத்துவனையில் தான் இருக்கிறாள் என்கிற விஷயம் எனக்கு தெரியவே தெரியாது. அவர் அப்பெண்மணி மருத்துவமனையில்தான் இருக்கிறாள் என்று கூறினார். எனவே நான் மருத்துவமனைக்கு சென்று கொண்டிருந் தேன். எனவே நான் அவளை சந்திக்க சென்றேன். அவளுடைய கணவர் அங்கே உட்கார்ந்திருந்தார். நான்கு அல்லது ஐந்து மருத்துவர்கள் சோதனைகளெல்லாம் செய்து பார்த்துவிட்டு தலையை அசைத்துக் கொண்டே "நிச்சயமாக அது புற்றுநோய்தான், தொற்று நச்சுத்தன்மையையுடைய புற்றுநோய்'' என்று கூறினார்கள்.

15. எனவே, அங்கேயுள்ள உள்ளுறை மருத்துவர் (மருத்துவ மனையிலேயே தங்கி பணியாற்றும் மருத்துவர் - மொழிபெயர்ப்பாளர்), வந்து மாதிரிகளை எடுத்துப் பார்த்துவிட்டு, "சந்தேகத்துக் கிடமின்றி அது புற்றுநோய்தான்'' என்று கூறினார்.

16. நான் அச்சகோதரியிடம், ''ஆனால் சகோதரியே, தேவன் உன்னை ஒரு தடவை புற்றுநோயிலிருந்து குணமாக்கியிருந்தாரென்றால், அது என்ன வேண்டுமென்றாலும் இருந்து விட்டுப் போகட்டும். ஒருவேளை அம்மனிதர்கள் சரியாக இருக்கலாம். அவர்கள் அத்துறையில் நன்கு பயிற்சி பெற்று, அது புற்றுநோயா, புற்றுநோயைப் போன்றதா, அல்லது வேறு ஒன்றோ என்பதைப் பற்றிகூற, அவர்கள் பயிற்சி பெற்றவர்களாவர். அந்த நோக்கத்திற்காகவே நன்கு பயிற்சி பெற்றவர்கள் அவர்கள். அது புற்று நோயைப் போன்று காணப்படுகிறது, எனவே அவர்கள் அதைப் புற்றுநோய் என்கின்றனர். ஒருவேளை அப்படியே இருக்கலாம்'' என்று நான் கூறினேன்.

17. ஆனால் அச்சகோதரியோ அது புற்றுநோய் என்பதை விசுவாசிக்க விரும்பவில்லை. எனவே, நான் அவளிடம், "உன் தொண்டையில் ஏற்பட்ட இரத்தக் கசிவை, தேவன் ஜெபத்தை கேட்டு அன்றொரு நாளிலே உன்னை குணமாக்கக்கூடுமானால் இப்பொழுதும் தேவன் ஜெபத்திற்கு பதிலளித்து, உன்னுடைய வாயினுள் இருக்கும் அவ்வீக்கங்களை அகற்றிட முடியுமே. அது என்ன வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும். இங்கேயே இப்பொழுது தேவனால் அதை நீக்க முடியாதா என்ன?" என்று கூறினேன்.

இக்காலையில் இருக்கிறார் என்று நான் நினைக்கவில்லை. அவர் ஒருவேளை இங்கேயிருக்கக்கூடும். சகோதரன் ரூபர்ட் ஹிக்கின்பாதம் அவர்கள் நமது முந்நாள் தர்மகர்த்தாக்களில் ஒருவராவார். அவர் ஒரு அருமையான சகோதரன், அவர் இங்கேயிருக்கிறாரா? ஆகவே அவர்களிருவரும் அந்த ஸ்திரீக்காக ஜெபிக்கும்படி சென்றார்கள். அவர்கள் அவளுக்காக ஜெபித்தபொழுது, அவள் அதுவரையிலும் இரத்தக் குழாயிலிருந்து இரத்தப் பெருக்கு ஏற்பட்டு கசிந்து கொண்டிருந்த தான நிலையில் இருந்தாள். எவ்வளவு காலம் அது இருந்தது என்று எனக்கு தெரியாது. நாட்கள் கணக்கில், அதாவது இரண்டு அல்லது மூன்று தினங்களாக... இரத்தத்தை துப்பிக் கொண்டேயிருந்தாள். சகோதரன் நெவில் அவர்கள் அவளுக்காக ஜெபித்தார். அதன் பிறகு அவள் ஒரு சொட்டு இரத்தம்கூட துப்பவில்லை. அது உண்மை .

12. அதன்பிறகு அப்பெண்மணிக்கு இரு சதை வளர்ச்சி ஏற்பட்டது ..... வாயின் உள்ளே மேல்பாகத்தில் சதை வீக்கம் போன்ற ஒன்று இருந்தது. கொப்புளங்கள் போன்றவைகள் அல்லது அது என்னவாக இருக்குமோ- அது வாயின் உள், மேல்பாகத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. தசை வளர்ச்சியினால் ஏற்படும் வீக்கங்கள் போல்காணப்பட்டது. அவைகளிலிருந்து எந்த ஒரு நிவாரணமும் அவளுக்கு கிடைக்கவில்லை. ஹிக்கரி கொட்டை யைப் போல் (வட அமெரிக்காவில் காணப்படும் வாதுமைக் கொட்டையைப் போன்ற ஒருவகை கொட்டை- மொழிபெயர்ப்பாளர்) அதில் பாதியளவு அது இருந்தது என்று அச்சகோதரி கூறினாள். அந்நோய் அவளுடைய வாயில் கணிசமான அளவுக்கு சில நாட்களாக இருந்தது. சகோதரன் ஹிக்கின்பாதம் அவர்கள்... அவருடைய ஜெர்மானியப் பெயரை என்னால் சரியாக உச்சரிக்க முடியவில்லை சகோதரன் ரூபர்ட் அவர்களே, என்னை அதற்காக மன்னித்துக் கொள்ளுங்கள். ஆனால் எப்படியும் ... நான் .... இப்பொழுது நான் இங்கே தவறாகக் கூறக்கூடும். இல்லை. அவர் அந்நிய பாஷைகளில் பேசும் வரத்தையும், அதை வியாக்கியானம் செய்யும் வரத்தையும் உடையவராயிருக்கிறார். இந்த குறிப்பிட்ட சமயத்தில் அந்த சகோதரன் அப்பெண்மணியின் வாயின் மேல் கைகளை வைத்து ஜெபித்தார். அந்த பெண்மணி கூறியதாவது. ''சகோதரன் பிரன்ஹாமே, நேற்றல்ல, நேற்றிரவோ அல்ல, உடனடியாக அவ்வீக்கங்கள் வாயின் மேல் பகுதியிலிருந்து நீங்கிப் போயிற்று.'' உடனடியாக.

13. பிறகு மருத்துவர்கள் வந்து அவளுடைய தொண்டையை சோதித்து விட்டு, 'அவள் மருத்துவமனைக்கு சென்றேயாக வேண்டும். ஏனெனில்



ஒத்தது போல் கிரியை செய்து வந்த இருவித்தியாசமான ஆவிகள் இங்கே இந்தக் காலம் வரையிலும் இருந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் ஒன்று ஸ்தாபனமாகும். இன்னொன்று பரிசுத்த ஆவியாகும். கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக அது அசலுக்கு மிகவும் நெருக்கமாக அதை ஒத்து காணப்படும் என்று இயேசுவுங் கூட எச்சரித்தார். இவ்விரண்டு ஆவிகளும் எதிர்வரும் நியாயத்தீர்ப்புக்கென ஜனங்களை ஆயத்தப்படுத்தி வருகின்றன.

சாத்தான் தன் ஜனங்களுக்கு, கிறிஸ்துவைக் காட்டிலும் கூடுதலான ஜனங்களை உடையவனாக இருப்பான் என்று வாக்களித்தான். அவன் அதைப் பெற்றிருக்கிறான்; இப்பொழுது இதை மிகவும் கவனமாகக் கவனித்துப் பாருங்கள். மக்களை அடையாளப்படுத்தும் படி, அது உண்மையானதை விட அதிகமாக இருக்கிறது.

114.அநேகர் ஏவாளைப் போல் இருக்கிறார்கள். வஞ்சிக்கப்படத்தக்கதாக ஏவாள் நீண்ட நேரம் நின்றுவிட்டாள். அவள் அவ்வாறு நின்றிருக்காவிடில், வஞ்சிக்கப்படுதலே இருந்திருக்காது. ஆனால் ஏவாளோ நின்றுவிட்டாள். அவள் அவ்வாறு நின்றுவிட்ட போது, அங்கே தான் அவள் வஞ்சிக்கப்பட்டாள். தொடர்ந்து நிலை நிற்பதற்குப் பதிலாக இப்பொழுது நான் கூறுவதை கவனமாகக் கேட்கிறீர்களா? கவனியுங்கள்.

ஏவாள் வஞ்சிக்கப்பட்ட தன் காரணம் என்னவெனில்... அதை நாம் சேர்ந்து சொல்லுவோம். அப்பொழுது நீங்கள் அதைப் புரிந்து கொண்டு விட்டீர்கள் என்று அறிந்து கொள்வேன். (சகோதரன் பிரன்ஹாமும் சபையாரும் சேர்ந்து இவ்வாறு கூறுகிறார்கள்: ''ஏவாள் வஞ்சிக்கப்பட்டதன் காரணம் என்னவெனில்: அவள் ஒருபோதும் முழுமையாக தேவனுடைய வார்த்தையை கைக் கொள்ளவில்லை - ஆசி). சாத்தான் தேவனுடைய வார்த்தையை அவளிடம் மேற்கோள் காட்டினான். ஆனால் அவன் எல்லா சத்தியத்தையும் அவளிடம் கூறவில்லை. அவனுடைய ஸ்தாபனமும் அவ்வாறு தான் செய்து வருகிறது. பார்த்தீர்களா? அவள் வார்த்தையின் ஒரு பகுதியை மட்டும் எடுத்துக் கொள்ளத் தக்கதாக அந்த அதிக அளவு நேரம் அங்கே நின்றுவிட்டாள். அவள் வார்த்தையை முழுமையாக எடுத்துக் கொள்ளவில்லை.

115.நித்திரை செய்யும் புத்தியில்லாத கன்னியரைப் பொறுத்த மட்டிலும், காரியமானது இவ்வாறு தான் உள்ளது. அவர்கள்

வார்த்தையை முழுமையாக எடுத்துக் கொள்ளாமல், ஒரு பகுதியை மட்டுமே எடுத்துக்கொள்ளத் தக்கதாக, நீண்ட நேரம் தங்கிவிட்டார்கள். வஞ்சிக்கப்பட்ட சபையானது, வார்த்தையின் முழுமையையும் ஏற்றுக் கொள்ளாமல், வார்த்தையின் பாகத்தை மட்டும் எடுத்துக் கொள்ளத்தக்கதாகத் தான் நீண்ட நேரம் தங்கிவிட்டார்கள். அவர்கள் உண்மையும், உத்தமுமாயிருந்த போதிலும், இவ்வாறு ஆகியது. ஏவாள் வஞ்சிக்கப்பட்டாள். "அவள் வஞ்சிக்கப்பட்டாள்'' என்று வேதம் கூறுகிறது. ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை. ஆதாம் தான் தவறு செய்வதை நன்கு அறிந்தேயிருந்தான். ஆனால் அவன் மனைவியோ, தான் செய்கிறதை செய்து விட்ட, விலக்கப்பட்ட அதைச் செய்யுமாறு அவனையும் தூண்டினாள். ஏன், அவன் ஒரு மனிதனாயிருந்தான். அவனுக்கு அது அவ்வாறு இருந்தது. அவன்தான் தவறிழைப்பதை அறிந்திருந்தான். ஆனால் ஏவாள், தான் சரியானதைச் செய்வதாக எண்ணினாள்.

116.ஓ, உங்களால் காண முடியவில்லையா? எனவே தான் பவுல், ஒரு ஸ்திரீயானவள் ஒருபொழுதும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கக் கூடாது என்று கூறினான் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லையா? ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டாள். ''உபதேசம் பண்ணவும், அதிகாரம் செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை. அவள் அமைதலாயிருக்க வேண்டும்''. ''என்னத்தினாலெனில், முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான், பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள். மேலும் ஆதாம் வஞ்சிக்கப்பட வில்லை. ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள்.

மேலும் பவுல் கூறினான், ''அப்படியிருந்தும், (அவள் இழந்து போகப்பட மாட்டாள்). தெளிந்த புத்தியோடு விசுவாசத்திலும், அன்பிலும், பரிசுத்தத்திலும் நிலை கொண்டிருந்தால், பிள்ளைப் பேற்றினாலே (அவளுக்கு ஒரு கணவன் இருந்தால்) இரட்சிக்கப்படுவாள்.'' ''ஆனால் ஒருபொழுதும் ஸ்திரீயானவளை உபதேசம் பண்ணவோ, அதிகாரம் செலுத்தவோ அனுமதிக்காதீர்கள். அப்படிச் செய்யக்கூடாது'' என்று பவுல் கூறினான். கர்த்தருடைய சிந்தை எனக்கு உண்டாயிருக்கிறது என்று நான் எண்ணுகிறேன்'' என்று அவன் கூறினான்.

117."ஏன், தீர்க்கதரிசிகள், அங்கே, நாங்கள் பிரசங்கித்தாக வேண்டும் என்று தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறார்களே' என்று அவர்கள் கூறுகிறார்கள்.



அப்பால் போய்விடுவேனோ என்று கூட அஞ்சு கிறேன்; ஆனால் இப்பொழுது நான் கூறுவதை தவறாக அர்த்தம் கொண்டு விடாதீர்கள், நான் என்ன கூறுகிறேன் என்பதை சரியாக அறிந்து கொள்ளுங்கள். நான் கர்த்தரைவிட்டு விலகிப் போய் விடுவேன் என்று கூறவில்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அந்த அசாதாரணமான, இயற்கைக்கு அப்பாற்பட்ட அக்காரியங் களை பகுத்தறிதல் போன்றவைகளை இனிமேல் நான் விளக்கி விவரித்துக் கூறிட விரும்பவில்லை.

9. இந்த நேரத்தில் கர்த்தர் இப்பொழுது நமக்கு கிருபையுள்ளவராக இருந்திருக்கிறார். தீர்க்கதரிசன வார்த்தையையுடைய சகோதரன் நெவில் அவர்களை அவர் எழுப்பியிருக்கிறார். அவருக்கு சகோதரன் ஹிக்கின்பாதம்ஸ் மற்றும் ஏனைய அநேக சகோதரர்கள், இங்கே முற்றிலும் ஆவிக்குரிய வரங்களைப் பெற்றவர்களாய் சபை யில் அற்புதங்களை செய்கிறவர்களாக இருக்கும்படி இருக்கிறது.

10. நான் ஒரு சாட்சியை உங்களுக்குக் கொடுப்பேனாக. ஓபல் வீவர் என்றொரு சகோதரி இருந்தாள். அவள் இன்று காலையில் இங்கே சபையில் நம்மோடு இருக்கிறாளா இல்லையா என்பது எனக்குத் தெரியவில்லை. சகோதரி ஓபல் இங்கே இருக்கிறாயா? என்னால் அவளை பார்க்க முடியவில்லை. நல்லது, அநேக ஆண்டு களுக்கு முன்பாக, அவள் புற்றுநோயால் மரித்துக் கொண்டிருந்தாள். அப்புற்றுநோய் அப்பெண்மணியின் பெண்மைக்குரிய சுரப்பிகளில் இருந்து வந்தது, பிறகு அது அப்பெண்மணியின் சிறு நீரகத்திற்கு பரவிச் சென்று அவர்கள் அப்பெண்மணி உயிர் வாழ ஒரே ஒரு இரவுதான் உண்டு என்று கூறியிருந்தார்கள். அவள் மிகவும் மோசமான நிலைக்கு போய்விட்டாள். நான் சென்று அவளுக்காக ஜெபித்தேன். அப்பொழுது ஒரு தரிசனம் வந்தது, அவள் முற்றிலும் குணமடைந்தாள். அது பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பாக நடந்த காரியமாகும். அதிலிருந்து அநேக ஆண்டுகளாக அவள் நம் மத்தியில் வந்து போய்க் கொண்டு இருக்கிறாள்.

11. அன்றொரு நாளிலே அவளுக்கு ஒரு வியாதியேற்பட்டது. அவளுக்கு தொண்டை அழற்சி ஏற்பட்டது. தொண்டையிலிருந்து நிறைய இரத்தக்கசிவு ஏற்பட்டது. உடனடியாக அவள் மருத்து வரைப் போய் பார்க்க வேண்டுமென்று கூறப்பட்டது. அது நடந்தது, நான் கனடா தேசத்தில் இருந்தபோது ஆகும். அந்தப் பெண்மணி சகோதரன் நெவில் அவர்களைப் போய் பார்த்தாள். சகோதரன் நெவில் சகோதரன் ஹிக்கின்பாதம் அவர்களை அழைத்துச் சென்றார். சகோதரன் இங்கே

4. அதிலிருந்து நான் என்னையே விடுவித்துக்கொண்டு விட்ட பொழுது, கர்த்தரே அதைப் பார்த்துக் கொள்ளட்டும் என்று அதை அவர் கையில் ஒப்படைத்த பிறகு, அது உடனடியாக, அதாவது இருபத்து நான்கு மணி நேரத்திற்குள், அதெல்லாம் முடிவடைந்து விட்டது. அக்காரியமானது என்னை சற்று உணர்ச்சி வசப்படுத்தி, நிலைகுலையச் செய்துவிட்டது. ஆனால் சிறிது நேரத்திற்குப்பிறகு நான் அதிலிருந்த விடுபட்டுவிடுவேன். நிச்சயமாகவே அது என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஆனால் இப்பொழுது நான் நன்றாகவும், அருமையாகவும் இருப்பதாக உணருகிறேன்.

5. இவ்வாரத்தில் நமக்கு மகத்தான வெற்றிகள் கிட்டியுள்ளது. நான் ஒரு காரியத்தைப் பற்றி அறிவிக்க விரும்புகிறேன்.

6. கர்த்தர் எனக்கு கூறியதற்கு நான் செவி கொடுத்திருந்தால், அது இவ்வாறு நடந்திருக்காது. நான்கு ஆண்டுகளுக்கு முன்பு அவர் என்னிடம் கூறினார். இங்கே சபையார் நடுவில் எங்கோ ஓரிடத்தில் இப்பொழுது என் மனைவி அமர்ந்திருக்கிறாள். சற்று நேரத்திற்கு முன்பு வரையிலும் இங்கே மேடையில் அமர்ந்திருந்த என் மகனுங்கூட, இன்னும் ஏனைய அநேகருங்கூட, நான் மீண்டும் மீண்டும் இவ்வாறு கூறியதைக் கேட்டிருக்கிறார்கள். "இதுதான் கடைசி தடவை, இருதயத்தை பகுத்தறிந்து கூறும் ஊழியத்தை நான் செய்வதின் கடைசி தடவை இதுதான்'' என்று. நான் மிகவும்..... நான் தேவனிடத்திற்கு மிகவும் நெருங்கி ஜீவிக்க முயன்று வந்திருக்கிறேன். அவ்வாறு செய்வதில், அது ஏதோ ஒன்றை வெளிக் கொணர்கிறது. அதனால், என்ன சிந்திப்பது என்றே அறியாமல் இருக்கக்கூடிய அளவுக்கு, மக்கள் வேறு விதமாக தவறான கருத்தைக் கொண்டிருக்கக்கூடிய அளவுக்கு, அவர்களுக்கு ஏதோ ஒன்று நேரிட்டு விடுகிறது.

7. பிறகு, வரி பற்றிய அந்த வழக்கில், கர்த்தர் எனக்கு கூறிய வற்றிற்கு நான் செவி கொடுத்திருந்தால், அதைப் பற்றிய எந்தவொரு வார்த்தையும் அங்கே ஏற்பட்டிருக்காது. அது எப்பொழுது நான் செய்வதாக அங்கே இருக்கிறது... நான் அவருக்கு கீழ்ப்படி யாமல் போகும் பொழுது, அப்பொழுது தான் நான் தொல்லையில் எப்பொழுதும் மாட்டிக்கொள்ளுகிறேன். நான் அவருக்கு கவனமாக செவிகொடுத்து, அவரோடு நடந்திருந்தால்!

8. ஊழியமானது சில வேளைகளில் மிகவும் இயற்கைக்கு அப்பாற்பட்டு தெய்வீகமாக இருக்கிறது. அதனால் நான் தடத்தை விட்டு சற்று



''தேவவசனம் உங்களிடத்திலிருந்தா புறப்பட்டது? அது உங்களிடத்துக்கு மாத்திரமா வந்தது? ஒருவன் தன்னைத் தீர்க்கதரிசியென்றாவது, ஆவியைப் பெற்றவனென்றாவது எண்ணினால், நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகளென்று அவன் ஒத்துக் கொள்ளக்கடவன்'' என்று பவுல் கூறினான். அது சரிதான். பவுல்தான் கூறுகிற காரியம் என்ன வென்று நன்கு அறிந்திருந்தான். ஆனால் அவன் கூறினான், "ஒருவன் அறியாதவனாயிருந்தால் அறியாதவனாயிருக் கட்டும்'' என்று. அவ்வளவு தான். அவன் செவிகொடுக்க மனமில்லாதவனாயின், அவனைப் போகவிடுங்கள். அவன் சரியாக அந்த அருவி அரித்த படுகுழியில் போய் விழுவதற்குப் போய்க் கொண்டிருக்கிறான். அவன் அதற்கு நேராகப் போகட்டும்.

ஆனால் அங்கே, அந்த இருவிதமான ஆவிகள் உள்ளன.

118.காரணம்.... காவல்துறை படையில் அவர்கள் அங்கே பெண்களை சேர்த்து வீதிகளில் நிறுத்தி வைத்திருக்கிறார்களே, அதைப் போல். அந்த தாய்மார்களை வீதிகளிலே அவ்வாறு நிறுத்தியிருப்பது அமெரிக்க கொடிக்கே மிகுந்த இழுக்காகும். ஆயிரக்கணக்கான புருஷர்களுக்கோ வேலையில்லாமல் இருக்கிறது. ஏன், இது ஒரு ஸ்திரீயின் தேசமாயிருக்கிறது. ஒரு பெண்ணானவள் ஆதிக்கத்துக்கு வருவாள். அது ஸ்திரீயை வழிபடும் தேசம். அது கத்தோலிக்க மகதத்தின் கோட்பாடுபற்றியதின் ஆவியாயிருந்தது. ஒரு ஸ்திரீயை கடவுளாக வழிபட வைத்துள்ளது. இங்கே அது .... அது அங்கே அமர்ந்திருந்து கொண்டிருக்கிறது. அது உருவாகி வருவதை நீங்கள் காணவில்லையா?

ஒரு உண்மையான, இனிமையான மனைவியை ஒரு மனிதனுக்கு தேவன் கொடுப்பாரெனில், அதைவிட மேலான தொன்று மனிதனுக்கு தேவன் கொடுக்கத்தக்கது வேறு ஒன்றும் இருக்க முடியாது. ஆனால் அவளோ அதை தாண்டி எதையும் பெற்றுக் கொள்வாள் எனில், அப்பொழுது அவள் இழந்து போகப்படுவாள். அது அப்படித்தான் இருக்கிறது. தேவன் ஒருபோதும் பெண்கள் இந்த மாதிரி இடங்களில் வேலை செய்யவும், இம்மாதிரியான காரியங்களைச் செய்யவும் சித்தங் கொள்ளவில்லை.

இந்த பெண்மணிகள் பிள்ளைகளைப் பெற்று அவர்களை வளர்க்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் யாவரும், ஒவ்வொருவரும் சிறு சிறு பிரசங்கிகள் ஆவார்கள். அவர்களுக்கென

சொந்தமாக மேய்க்கத்தக்க மந்தையானது அவர்கள் இல்லங்கள் தோறும் உள்ளன. அதுதான் அவர்களின் பிள்ளைகளை மேய்த்தலாகும். அவர்களை வளர்த்து ஆளாக்க வேண்டும். அதுதான் சரி.

119.ஆக, இரு வித்தியாசமான ஆவிகள், ஏறத்தாழ ஒன்றையொன்று ஒத்திருக்குமாப் போல் உள்ளன. ஏவாள் வார்த்தையை ஒத்திருந்த சாத்தான் சொன்னவைகளை நம்பினாள். சாத்தான் கூறினான், “தேவன் கூறியுள்ளார்” என்று.

''ஊள - ஊள''

“தேவன் கூறியுள்ளார்''

''ஊ ஊ அதுசரி தான்''

''தேவன் கூறினார்“

''ஊ ஊ“

“தேவன் கூறினார்,

நாம், 'பிதா குமாரன் பரிசுத்த ஆவியின்' நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றால், அதற்காக தேவன் நம்மை ஆக்கினைக்குள்ளாக்கமாட்டார். அப்படி ஞானஸ்நானம் பெறுதல் நன்றாக இருக்கவில்லையா?' என்று கூறுகிறார்கள்.

நீங்கள் அசுத்தமான மாய்மாலக்காரன் ஆவீர் ஆம் ஐயா. தேவன் ஒருபோதும் அதைக் கூறவில்லை. எந்த வகையிலும், அவ்வகையான ஒரு காரியம் இல்லை. அது மரித்ததாய் இருக்கிறது. அவ்விதமான காரியம் ஒன்றும் இல்லை. ''பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமம்'' என்று ஒரு நாமம் எங்கேயிருக்கிறது என்பதை எனக்கு கூறுங்கள் பார்க்கலாம். அவ்விதமான ஒரு நாமம் இல்லவேயில்லை. அப்படிப்பட்டது மரித்ததாயிருக்கிறது. நல்லது, அது “மரித்துப் போன” சர்தையின் காலத்தில் தோன்றினது. அப்படிப்பட்ட தொன்று இல்லை.

''உயிரோடிருக்கிறவன் என்ற பெயர் உனக்கு இருக்கிறது. நீ ஒரு கிறிஸ்தவ சபை என்று உன்னை அழைத்துக் கொள்கிறாய். ஆயினும் நீ மரித்ததாகத் தான் இருக்கிறாய், அது சரிதான்.

120.”பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமம் என்ற நாமம் ஒன்று இல்லை.

## வெளிப்படுத்தின விசேஷம்

## ஐந்தாம் அதிகாரம் - 2

## REVELATION CHAPTER-5, PART- 2

## 61-06-18

## பிரான்ஹாம் கூடாரம்,இந்தியானா,அமெரிக்கா

1.மீண்டும் இக்கூடாரத்தில் இக்காலை வேளையில் வந்து, நற்செய்தியை அறிவித்திட முடிந்துள்ளது; இந்த வகையில் கர்த்தராகிய தேவன் நமக்கு எவ்வளவு நல்லவராய் இருந்திருக்கிறார்

2. கடந்த ஞாயிறன்று அத்தரிசனமானது இங்கு கூறப்பட்ட பொழுது, உங்களில் அநேகர் இங்கேயிருந்தீர்கள். அச்சர்ப்பமானது அதன் நடுப்பாகத்தில் சுட்டுக் கொல்லப்பட்டதைப் பற்றியதாகும் அத்தரிசனம். இப்பிரசங்க பீடத்திலிருந்து அத்தரிசனமானது விவரிக்கப்பட்டதன் பிறகு, அதிலிருந்து இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் அது வார்த்தைக்கு வார்த்தை அப்படியே நிறைவேறியது. கர்த்தர் என்ன செய்தாரோ அது மகிமையானதாக இருந்தது. என் வாழ்க்கை முழுவதிலும் நான் ஒருபோதும் அத் தரிசனங்கள் ஒன்றும் தவறாகப் போனதை நான் கண்டதேயில்லை. நான் இப்பொழுது ஐம்பத்திரண்டு வயதுடையவனாக இருக்கிறேன். பூரணமாக, வார்த்தைக்கு வார்த்தை அப்படியே அது நிறைவேறியுள்ளது. இப்பொழுது நான் மிகவும் நன்றாக உணருகிறேன்.

3. நான் அக்குற்றச்சாட்டைப் பற்றியெல்லாம் பேசிக்கொண் டிருந்தேன். அல்ல, அது ஒரு குற்றச்சாட்டு அல்ல. அது உத்தம இருதயமுள்ள, தேவபயமுள்ள மனிதரிடமிருந்து கிளம்பிய தாகும். அவர்களுக்கு எனது ஊழியமானது சற்று கூடுதலான அளவுக்கு இயற்கைக்கு மேம்பட்ட தெய்வீகமானதாக தோன்றி, அதனால் அவர்கள் நான் தான் கர்த்தராகிய இயேசு என்று எண்ண ஆரம்பித்து, அதின் பேரில் ஒரு உபதேசத்தையே ஸ்தாபிக்க ஆரம்பித்து விட்டார்கள். ஆனால் அதெல்லாம் உடனடியாக நிறுத்தப்பட்டுவிட்டது. அதற்காக கர்த்தருக்கு நன்றி கூறுகிறேன்.

செய்தருளும். இயேசுவின் நாமத்தினாலே நான் ஜெபிக்கிறேன். ஆமென்.



“ஓ நல்லது, அது மற்றதைப் போலவே நன்றாக இல்லையா?'' என்கிறார்கள்.

அது நல்லதாக இருக்காது. பவுல் அது சரியாக இருக்காது என்று கூறினான். ''நீங்கள் விசுவாசிகள் ஆனதிலிருந்து, பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா?'' என்று கேட்டான்.

''அப்படிப்பட்ட தொன்று உண்டென்று நாங்கள் கேள்விப்பட வேயில்லை'' என்றார்கள்.

''நீங்கள் எவ்வாறு ஞானஸ்நானம் பெற்றீர்கள்?'' என்று கேட்டான். ''வாருங்கள், வந்து மறுபடியும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்' என்று பவுல் கூறினான். ''இதைத் தவிர வேறு எதையும் ஒரு தூதன் பரலோகத்திலிருந்து வந்து கூறினால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்” என்று பவுல் கூறியுள்ளான்.

அதுவே சத்தியமாயிருக்கிறது! இதை நான் கூறுவதற்கு மட்டுமே பொறுப்புள்ள வனாயிருக்கிறேன். அதை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள். இந்த ஒலிநாடாக்களின் வாயிலாக நான் உங்களுக்கு மட்டும் கூக்குரலிடவில்லை; ஏனெனில், அவைகள் எவ்விடமும் போவதை நான் அறிந்திருக்கிறேன். அதற்காகத் தான் அவைகள் உள்ளன.

121.ஏவாள் வஞ்சிக்கப்பட்டாள். அவள் வார்த்தையின் ஒரு பாகத்தை மட்டும் எடுத்துக் கொண்டாள். மோவாப் வஞ்சிக்கப்பட்டது. நித்திரை செய்த புத்தியில்லாத கன்னியர் வஞ்சிக்கப்பட்டனர். சபையானது வஞ்சிக்கப்பட்டது. ஸ்தாபனங்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கின்றன, பாருங்கள்.

வார்த்தையோடு நிலைத்திருங்கள். அது ஒன்றே வழி. அதோடு சரியாக நிலைத்திருங்கள். வார்த்தையின் எந்தவொரு பாகத்தைவிட்டும் அகன்று விடாதீர்கள். அதோடு நிலைத்திருங்கள். தேவன் என்ன செய்ய வேண்டுமென்று கூறினாரோ, அதில் சரியாகச் செல்லுங்கள். யார் என்ன சொன்ன போதிலும், அதைப் பற்றி கவலைப்படாமல், தேவன் வகுத்துள்ள கோட்டில் நில்லுங்கள்.

122.நித்திரை செய்த புத்தியில்லாத கன்னியர் தங்களுடைய ஸ்தானத்தை இழந்தனர். அதை நாம் அறிவோம். அவள் நியாயத்தீர்ப்பில் எழும்பிவருவாள். அவள் சத்தியத்தை எப்பொழுதாவது கேட்டிருந்தால் அவள் ஆக்கினைக்குள்ளாக்

கப்பட்டிருக்கிறாள். அது சரிதான். இயேசுவை எங்கே நீங்கள் விட்டுவிட்டீர்களோ, அவ்விடத்தைத் தவிர வேறு எங்கும் அவரைக் காணமுடியாது. யூதாஸ் எழும்பி வரக்கூடும்...

நினைவில் கொள்ளுங்கள். ''நித்திரை செய்த புத்தியில்லாத கன்னியர், அவர்கள் பிசாசினால் ஊக்குவிக்கப்பட்டிருக்கக் கூடுமோ?'' என நீங்கள் கேட்கிறீர்கள். நிச்சயமாக அப்படித்தான். "பரிசுத்தமாக வாழ்கிறார்கள்'' என்று கூறலாம். ஆம் ஐயா, யூதாஸும் அவ்வாறே இருந்தான். அவன் இரட்சிக்கப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்டு, தெய்வீக சுகமளித்தலை பிரசங்கித்து, பிசாசுகளைத் துரத்தினவனாக இருந்தான். ஏனையோர் இருந்ததைப் போலவே அவனும் ஏறத்தாழ அவ்வாறே காணப்பட்டான். ஆனால் பெந்தெகொஸ்தே வந்த பொழுதோ, அவன் தன்னுடைய நிறத்தை காண்பித்தான். அவன் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளவேயில்லை. அவன் தன் குதிகாலைத் தூக்கி, கர்த்தராகிய இயேசுவை மறுதலித்தான்.

சபைகளும் அதையே செய்தன. பெந்தெகொஸ்தே ஆசீர்வாதத்தைப் பெறும் வேளை வந்த போது, அவர்கள் அதிலிருந்து விலகிப்போனார்கள். ஓ, இவைகளைப் படித்துக் கொண்டிருக்கும் வகுப்பே, இதை நீங்கள் காணவில்லையா?

123.ஓ, இப்பொழுது இன்றிரவில் அந்த மகத்தான தலைக்கல், ஆனால் இன்னும் ஒரு க்ஷணம், இங்கே நமக்கு இன்னும் சற்று நேரம் உள்ளது என்று எண்ணுகிறேன். வேறு ஒரு காரியத்தையும் நான் உங்களுக்கு காண்பிக்க விரும்புகிறேன்.

மிருகத்தின் முத்திரை, நாம் வெளிப்படுத்தின விசேஷம் 13ம் அதிகாரத்தை ஒரு நிமிடம் எடுத்துக் கொள்வோம். வெளிப்படுத்தின விசேஷம் 13:15, அவன் என்ன செய்யப் போகிறான் என்பதை அங்கே வாசியுங்கள். வெளி. 13:15.

''...சொரூபத்திற்கு ஆவியைக் கொடுக்கும்படி அதற்குச் சத்துவங்கொடுக்கப்பட்டது''

(அது என்னவெனில், 'ப்ராடெஸ்டெண்ட் சபைகளுக்கு. ப்ராடெஸ்டெண்ட் சபைகளுக்குக் கொடுக்கப்பட்டது''.

அவனுக்கு வல்லமை இருந்தது. ஏனெனில் அவர்கள் ஒரு சொரூபத்தை உண்டாக்கினார்கள். ப்ராடெஸ்டெண்ட் சபைகள் உண்டாக்கின. சபைகளின் ஆலோசனை சங்கம் மூலமாக, ப்ராடெஸ்டெண்ட்



உமது மன்னிப்பை அருளும். கர்த்தாவே, அது வியாதியாயிருந்தால், அவர்களது சரீரங்களை குணமாக்கும், அவர்கள் நலம் பெறட்டும், கூட்டத்தில் பரிசுத்த ஆவியின் அபிஷேகமானது இருந்து கொண்டிருக்கையிலேயே, இப்பொழுது சபையார் மேல் இருக்கையிலே, அதைச் செய்தருளும். நாங்கள் இங்கிருந்து கடந்து செல்லுகையில், "நமது இருதயங்கள் நமக்குள் கொழுந்துவிட்டு எரியவில்லையா?' என்று கூறிக்கொண்டு போகத்தக்கதாக, ஒவ்வொருவரையும் தெய்வீக பிரசன்னத்தினாலே ஆசீர்வதிக்கும்படி பரலோகத்தின் மகத்தான தேவனானவர் அபிஷேகிப்பாராக. அதைத் தாரும், கர்த்தாவே.

182. இப்பொழுது நான் பெலவீனமாகவும் என் குரல் கம்மிய தாகவும் இருக்கிறேன். எனது சொந்த பெலத்துக்காகவும் நான் ஜெபிக்கிறேன். எனக்கு நீர் உதவி செய்வீரா? என்னை நீர் பெலப்படுத்துவீரா? கர்த்தாவே, அங்கேயுள்ள அந்தக் காயத்தை ஆற்று வீராக. அங்கேயும் மற்றுமுள்ள ஒவ்வொரு காயத்தின் மேலும், தேவனுடைய பரிசுத்தமான எண்ணெயானது பூசப்பட உதவி செய்தருளும். கர்த்தாவே, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு இடத்திலும். உமது கனம், உமது மகிமைக்காக நாங்கள் ஜீவிக்க விரும்புகிறோம், கர்த்தாவே, அதைத்தாரும். வியாதியஸ்தரையும் பெலவீனப்பட்டவரையும் குணமாக்கும். கர்த்தாவே, உமக்கே நீர் மகிமையை எடுத்துக்கொள்ளும்; ஏனெனில் நாங்கள், இனிமேல் இம்மாதிரியான கூட்டங்கள் எங்களுக்கு கிடைக்காமல் போகும் என்று உணருகிறோம். அவைகளெல்லாம் போய் விடும். அவைகளெல்லாம் கடந்து போனவையாக ஆகிவிடும்.

183. இப்பொழுதும் பிதாவே, ஆசீர்வதியும், இவையாவும் நாங்கள் ஒருமித்து, இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மூலம் கேட்கிறோம்.

184. மேலும் பிதாவே, கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் எடுக்கப்போகிறவர்களையும் நீர் நினைவுகூர வேண்டு மென கேட்கிறோம். அவர்களுக்கு மகத்தான மகிமையான கனமுள்ள பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் தர வேண்டுகிறோம். பிதாவே, அதைத்தாரும். அவை யாவையும் நாங்கள் இப்பொழுது உம்மிடம் ஒப்புவிக்கிறோம்.

185. பிதாவே, இவை யாவற்றோடுங்கூட, என்னையும் சமர்ப்பிக்கிறேன். என்னை மறந்துவிடாதேயும், கர்த்தாவே. இப்பொழுது எனக்கு உதவி

கொள்ளாமல், உமது நாமத்தைக் கூப்பிடும் ஒவ்வொருவருக் காகவும் நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறோம். இத்தேசத்திற்கு அப்பாலிருந்து இங்கு வந்துள்ள எனது நண்பர்களுக்காகவும் ஜெபிக்கிறேன். அவர்கள் ஒரு நொடிப்பொழுது அறிவிப்பில் கூட, அழைப்பிற்கிணங்கி வந்துவிடுகின்றனர். பிதாவே, நான் இதற்காக உமக்கு நன்றி கூறுகிறேன்.

178. இயேசுவானவர் வரவேண்டிய நாளை தீவிரப்படுத்தும். அந்நாளிலே நாங்கள் யாவரும் கூட்டிச் சேர்க்கப்படுவோம்; அந்நாளில் இனிமேல் பகலுமில்லை, இரவுமில்லை; இனிமேல் நேரம் என்று ஒன்று இருக்காது, ஆனால் அது நித்தியத்திற்குள் போய் கலந்துவிடும், அப்பொழுதுதானே அங்கே நாம் யாவரும் என்றென்றும் ஒன்றாக சேர்ந்து இருப்போம். கர்த்தாவே, அதை அளித்தருளும்.

179. கர்த்தாவே, இங்குள்ளவர்களில் யாராவது உம்மை தங்கள் இரட்சகராக அறிந்துகொள்ளாதிருப்பார்களென்றால், அவர்கள் இந்த ஆட்டுக்குட்டியானவரோடு அறிமுகத்தைப் பெற்றுக்கொள் ளட்டும். அவரே இவ்வேழு முத்திரைகளுக்குள்ள இரகசியப் புத்தகத்தை தன் கையில் வைத்திருக்கிறார். தேவனே, நாங்கள் அவரோடு பரிச்சயம் கொள்ள உதவி செய்யும். அதனால், அவ்வேழு முத்திரைகளும் திறக்கப்படுவதை நாங்கள் காண்கையில், தேவன் எதைப்பற்றி எங்களோடு பேசிக்கொண்டிருக்கிறார் என்பதை நாங்கள் கண்டுகொள்ள முடியுமே. தேவனுடைய மகிமைக்காக இதை அவரது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் கேட்கிறோம்.

நமது தலைகள் வணங்கியிருக்கிற நிலையில்:

180. இங்கு யாராவது, ''சகோ. பிரன்ஹாம் அவர்களே, நீங்கள் ஜெபிக்கையில் என்னை நினைத்துக் கொள்ளுங்கள், நான் ஜெபத்தில் நினைக்கப்பட விரும்புகிறேன்'' என்று கேட்கிறீர்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. உங்களை, உங்களை.... ஆம், தேவன் உங்களுக்கு நல்லவராக இருப் பாராக. ஆம், அங்கே இரண்டு டஜன் கரங்கள் உயர்த்தப் பட்டிருக்கலாம், இன்னும் அதிகமான கரங்கள் உயர்த்தப் பட்டுள்ளன.

181. ஓ கர்த்தாவே, அவர்களுடைய கரங்களை நீர் காண்கிறீர். அவர்களுடைய வாஞ்சைகளை நீர் அறிவீர். அவர்களுடைய இருதயத்தில் இருப்பதை நீர் அறிவீர். நான் அறியமாட்டேன். உமது இரக்கத்தையும் தயவையும் அவர்களுக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று நான் வேண்டுகிறேன். என்னவாயினும், அவர்களுக்கு



ஐக்கியம் யாவும் இணைக்கப்படுவதற்கான ஒரு ஸ்தானத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது.

உலகிலுள்ள சபைகள்யாவுக்குமான ஒருங்கிணைப்பான அந்த மகத்தான கட்டிடத்தைப் பற்றி எத்தனை பேர்கள் படித்து அறிந்திருக்கிறீர்கள்? நிச்சயமாக. பாருங்கள்? ஐக்கிய நாடுகள் சபையைப் போலவே அதுவும் அங்கே எழும்பியுள்ளது. அவர்கள் யாவரும், அசெம்பிஸ் ஆஃப் காட்சபையினரும் கூட, அங்கே இணைந்து விட்டனர். அவர்கள் அங்கே கூடிவிட்டார்கள். அவர்கள் இங்கே இருக்கிறார்கள், பாருங்கள். நோய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது'' என்று சொல்லப் பட்டதின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது. மீண்டும் அதே காரியத்தை நிச்சயமாகவே செய்கிறார்கள். ஏறத்தாழ தங்களுடைய சுவிசேஷ ஊழிய நிலையையே மறுதலிக்கிறவர்களா யிருக்கிறார்கள். இஸ்ரவேலர் ஏனைய ஜாதிகளுக்கு இராஜாக்கள் இருந்ததைப் பார்த்து, ''எங்களுக்கு ஒரு இராஜாவை ஏற்படுத்தும்'' என்று கேட்டது போல், உலகத்தாரைப் போல் ஆகவிரும்பி, தாங்கள் பெரிதாக ஆகவேண்டும் என்று விரும்புகின்றனர். பாருங்கள்?

124.“மேலும் அம்மிருகத்தின் சொரூபம் பேசத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்தை வணங்காத யாவரையும் கொலை செய்யத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியைக் கொடுக்கும்படி அதற்குச் சத்துவங்கொடுக்கப்பட்டது''.

வெளி.13:15

மிருகத்தினுடைய சொரூபம்: அதாவது “ப்ராடெஸ்டெண்ட் ஸ்தாபனங்கள்” கத்தோலிக்கம் அல்ல. இது அமெரிக்காவில் உள்ளது, இதைத்தான் அவர் குறிப்பிடுகிறார். பாருங்கள். ஏனெனில், வெளிப்படுத்தின விசேஷம் 13-ஆம் அதிகாரம் அமெரிக்காவைப் பற்றினதாகும். பூமியிலிருந்து எழும்பி வருகிற மிருகம்...

பாருங்கள். ஏனைய மிருகங்கள் யாவும் தண்ணீரிலிருந்து எழும்பி வருகின்றன. அதன் அர்த்தம் என்னவெனில், ''திரள் கூட்டமான ஜனங்கள்” என்பதாகும். ஆனால் இங்கேயுள்ள இந்த மிருகமோ, ஒரு ஆட்டுக்குட்டியை போல் ஜனங்களே இல்லாத பூமியிலிருந்து எழும்பி வருகிறது; அதற்கு இரு கொம்புகள் உண்டாயிருக்கிறது, அது ஒரு சர்ப்பத்தைப் போல் பேசினது. அவர்கள் அம்மிருகத்திற்கு ஒரு சொரூபத்தை உண்டுபண்ணினார்கள், அது ஐரோப்பாவில் உண்டாயிருந்தது. அதற்கு இங்கே ஒரு சொரூபத்தை உண்டு

பண்ணினார்கள். சபைகள் யாவையும் ஒன்றாக இணைத்து, அவ்வாறு இந்த ப்ராடெஸ்டெண்ட் ஐக்கியத்தை உருவாக்கி, பின்பு, ஏனைய அனைத்து சபைகளையும் நிர்ப்பந்தித்து ஒன்று சேரச் செய்வார்கள். அப்படி சேராவிட்டால், மிருகத்தின் சொரூபத்தை அவர்கள் பெற்றிருக்காமல், விற்கவோ, வாங்கவோ முடியாதபடி செய்துவிடுவார்கள்.

125.இங்கே என்ன சம்பவிக்கிறது என்பதைக் கவனியுங்கள்:

அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள், இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலதுகைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கும்,

அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக் கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவுங் கூடாதபடிக்கும் செய்தது.

இதிலே ஞானம் விளங்கும்; அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப் பார்க்கக்கடவன்; அது மனுஷனுடைய இலக்கமாயிருக்கிறது, அதினுடைய இலக்கம் அறுநூற்றறு பத்தாறு.

(இது யார் என்று நாம் அறிவோம்; அதுதான் ரோமச் சபையின் பரம்பரை குருக்களாட்சியின் போப் ஆகும்). (வெளி.13:16-18). நான் அங்கே போயிருந்த பொழுது நானே அவருடைய ஸ்தலத்தில், அவருடைய சிம்மாசனத்தை அது இருக்கிற வண்ணமாக கண்டேன். இங்கே கத்தோலிக்க காலத்தின் துவக்கத்தில், 3-ம் போனிபேஸ்-ஐ முதல் போப்பாக அவர்கள் ஏற்படுத்தி அமரவைத்த போது இருந்தபடியே அச்சிம்மாசனம் அங்கே உள்ளது. அதன்மேல், அங்கே "வைகாரியஸ் ஃபிலியைடியை (Vicarius Filii Dei) என்று எழுதப்பட்டிருந்தது. அதன் அர்த்தம் என்னவெனில், ''தேவகுமாரனுடைய வைகார்" டிஐ'' ''டிஐடி'' (Dei, Deity என்றால் தேவன் என்று அர்த்தம்.-மொழி பெயர்ப்பாளர்). பாருங்கள்.

"தேவகுமாரனுக்கு பதிலி' அதாவது, தேவகுமாரனைப் போல் உள்ளவர், பூமியில் அவருக்குப் பதிலாக அமர்ந்திருக்கிறார் என்று அர்த்தம் கொள்ளும் பெயராகும். வேதாகமத்தைக் கூட மாற்ற சர்வ வல்லமை படைத்தவர், விரும்பும் எதையும் மாற்றிவிட அதிகாரம் படைத்தவர். எனவே, "மரியே வாழ்க'' என்று கூறும்படி கூறினார். போப் என்ன சொன்னார்? "நமக்கு 'மரியே வாழ்க' என்று ஏற்படுத்திக் கொள்வோம்''



கன்மலையே, உமது இரக்கத்தினுள்ளாக எங்களை மறைத்துக் கொள்ளும். எங்களை இப்பாதையில் சுமந்து சென்று, ஜீவ ஊற்றுக் கள் அண்டையில் கொண்டு போய்விடும்; அதனால் எங்களது இருதயங்கள் முழுவதும் மகிழ்ச்சியினால் நிறைந்து காணப்படும். போகும் பாதையெல்லாம் எங்கள் இதயங்களில் உமக்கு துதிகளை தொனித்துக்கொண்டே போவோம்.

174. நாங்கள் இன்று காலையில், வார்த்தையில் பரிசுத்த ஆவியின் சந்திப்பு எங்களுக்கு உண்டானதாற்காக, நன்றி செலுத்துகிறோம். அவர் வந்து வார்த்தையை எங்களுக்கு மிகவும் உண்மையுள்ளதாக ஆக்கித் தந்தார். எங்களுடைய தவறுதல்களையெல்லாம், எங்களுக்கு மன்னியும்; நாங்கள் செய்த அல்லது பேசிய தவறானவைகளையெல்லாம் எங்களுக்கு மன்னியும். அதற்காக எங்களையும் மன்னியும். பிதாவாகிய தேவனே, நாங்கள் சிறந்த கிறிஸ்தவர்களாக இருக்கத்தக்கதாக எங்களுக்கு உதவி செய்யும். தேவனே, உமது இரக்கங்கள் எங்கள் மேல் இருக்கவேண்டும் என்று ஜெபிக்கிறோம்.

175. கர்த்தாவே, உமக்கு அது சித்தமாயிருக்குமானால், நாங்கள் சீக்கிரத்தில் இங்கே திரும்பி வந்து, இந்த ஏழு முத்திரைகளை எடுத்துக்கொண்டு, இவ்வதிகாரங்களை முடிக்க உதவி செய்யும். அந்த வேளைக்காக நாங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். கர்த்தாவே, அதைப் பார்க்கும்படி நீர் எங்களை அனுமதிக்கும் பொழுது, பிதாவே, இங்கேதானே இந்த எளிய சபையில் அதை நாங்கள் பார்க்கும் பொழுது, தேவனுடைய இம்மகத்தான காரியங்களை நாங்கள் புரிந்து கொள்ளத்தக்கதாக எங்களுக்கு அதை அருளிச் செய்யும். நாங்கள் பாத்திரரர் என்பதினால் அல்ல, அதற் காக எங்கள் பசியுள்ள இருதயங்கள் விசுவாசித்துக்கொண்டிருக் கின்றனவே. நீர் அதை அருளுவீர் என்று ஜெபிக்கிறோம்.

176. தேவனால் அனுப்பப்பட்ட எங்களது உத்தமமான மேய்ப்பன், எங்கள் சகோதரன் நெவில் அவர்களுக்காக ஜெபிக்கிறோம். நீர் அவருக்கு உதவி செய்யும், அவரை ஆசீர்வதிக்கவும் வேண்டுகிறோம். அவருக்காகவும், அவரது இனிய எளிய மனைவிக்காகவும், அவரது சிறு குழந்தைகளுக்காகவும் ஜெபிக்கிறோம்.

177. இச்சபையின் தர்மகர்த்தாக்களுக்காகவும், உதவிக்காரர்களுக் காகவும், இச்சபைக்கு வரும் ஒவ்வொருவருக்காகவும் நாங்கள் ஜெபிக்கிறோம். எங்களுக்காக மாத்திரம் நாங்கள் வேண்டிக்

நாட்களை நினைவுகூர்ந்து அதைக் குறித்து அனுபவித்து மகிழும்படி கெட்ட நாட்கள் இருந்தாகவேண்டும். நல்ல ஆரோக் கியத்தை அனுபவித்து மகிழ, உங்களுக்கு சிறிது சுகவீனம் ஏற்பட்டாக வேண்டும். மலையுச்சியைக் கண்டு மகிழ்வதற்காக உங்களுக்கு பள்ளத்தாக்குகள் இருக்கவேண்டும். ஆகவே இனி வரப்போகும் நாட்களில் ஒன்றில் எல்லாமே மலையுச்சியாகவும், எல்லாமே நல்லாரோக்கியமாகவும், எல்லாமே தெய்வீகமயமாகவும், எல்லாமே மகிழ்ச்சியாகவும் இருக்கும் அப்பொழுது முடிவில் லாத சந்தோஷமாக இருக்கும். ஆனால் அந்தவேளை வரும் வரையிலும், நமக்கு சாதகமான காரியங்களும், பாதகமான காரியங் களும் இருக்கத்தான் வேண்டும்.

170. இதை இப்பொழுது நீங்கள் ஒவ்வொருவரும் புரிந்து கொண்டிருப்பீர்களாயின், "ஆமென்' என்று கூறுங்கள். (சபையார் ''ஆமென்'' என்று கூறுகிறார்கள் - ஆசி).

171. இந்தக் குறிப்பிட்ட பெண், தான் செல்லுமிடம் எங்கும், தான் தேவனை கண்டுகொள்ள முயலுவதாக சொல்லிக்கொண்டிருந்தாள். அவள் என்னென்ன சபைகள் இருந்தனவோ அவைகளுக்கு ஒவ்வொன்றாக சென்று பார்த்தாள். ஆனால் அவளால் கண்டு கொள்ளவே முடியவில்லை. ஒருநாள் அவள் சாலை வழியாக நடந்து செல்லுகையில், அப்பொழுது அங்கே ஒரு முதிர் வயதான மனிதன் தனது முதுகின் மேல் ஒரு பெரிய ஆலயத்தை சுமந்து கொண்டு சென்றதைப் பார்த்தாள். அவன் அவ்வாறு சுமந்து கொண்டு சாலையில் நடந்து சென்றான். அவள் அவனைப் பார்த்து, "ஒ நல்ல மனிதனே, அது மிகவும் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் நீர் இவ்வளவு பெரிய ஒன்றை உம் முதுகின் மேல் சுமந்து செல்லுகிறீர். அது உம்மை நசுக்கிவிடுமே'' என்றாள்.

172. அதற்கு அம்மனிதன், "இல்லை, அது என்னை நசுக்கிப்போடாது. சபை கட்டப்பட்டிருக்கிற கன்மலை நானே' என்று கூறினார். அது அவர்தான். நாம் ஜெபம் பண்ணுவோம்.

173. ஓ நித்திய கன்மலையே, அக்கன்மலையில் இளைப்பாறிக் கொண்டிருக்கிறோம் என்பதை அறிந்தவர்களாக, ஒரு ஆலயத்தின் மேல் பயணம் செய்து கொண்டு போவதற்காக, நான் மிகவும் மகிழ்ச்சியுள்ளவனாயிருக்கிறேன். அவர் அந்தக் கன்மலை என்று கூறினார். அது காகிதமே அன்றி வேறில்லை எனலாம். அதனோடு அந்தக் கன்மலை தீவிரமாக முன்னேறிச் செல்லுகையில், அழகான மணிகள் உள்ளுக்குள்ளிருந்து ஒலிக்க ஆரம்பித்தன. ஓ நித்திய



என்றார். அத்துடன் அது முடிவு பெறுகிறது. ஊ ஊ . நாம் இன்னின்னதைச் செய்வோம் என்று போய் சொன்னால், அது தான் அதிகார பூர்வமானது என்கிறார்கள்.

"தேவனுடைய குமாரனுக்கு பதிலாக அவருடைய ஸ்தானத்தை வகிக்கிறவர்' என்று கூறுகிறார்கள்.

சமீபத்தில் அவர்கள் ஒரு புதிய கொள்கையை வெளியிட்டார்கள்; அதாவது: "மரியாள் அடக்கம் பண்ணப் படவில்லை, அவள் உயிர்த்தெழுந்தாள்'' என்று போப் கூறினார். மரியாளுடைய கல்லறை இன்னமும் இருக்கத் தான் செய்கிறது; அவளை எங்கே அடக்கம் செய்தார்களோ, அவ்விடத்தை அடையாளம் பண்ணிவைத்திருக்கிறார்கள்.

ஆனால் போப் சொல்லிவிட்டதால், அது உண்மை என்கிறார்கள். பாருங்கள். ஏனெனில், போப் பிழையற்றவராக இருக்கிறார், அவர் தேவனுடைய குமாரனுக்கு பதிலாக உள்ளார், அவர் சொல்வது சரிதான் என்று நம்புகின்றனர்.

126.எவராவது, இந்த மிருகமானது யாரைக் குறிக்கிறது, இந்தவல்லமை எங்கிருந்து வருகிறது என்பதை அறிய விரும்பினால், வேதம் கூறுகிறது, ஞானமுள்ளவன் எண்களை கணக்குப் பார்க்கக்கடவன் என்று. ஆம், பரிசுத்த ஆவியின் வரங்களில் ஒன்று ஞானமாகும். பாருங்கள்? "ஞானமுள்ளவன் மனுஷனுடைய இலக்கத்தை கணக்குப்பார்க்கக்கடவன்'' என்று கூறப்பட்டுள்ளது. மிருகமானவனின் இலக்கமானது அறுநூற்று அறுபத்தாறு ஆகும். நீங்கள் அந்த பெயரை எடுத்துக் கொண்டு,அதை அகரவரிசையில் ஒவ்வொரு எழுத்தாக எடுத்து, அவைகளுக்குச் சரியான ரோம் இலக்கத்தை எடுத்துப் பார்த்தால், அதைக்கூட்டுகையில் அறுநூற்று அறுபத்தாறு தான் வருகிறது. அது சரிதான்.

127."நாம் அந்த மிருகத்திற்கு ஒரு சொரூபத்தை உண்டாக்குவோம்'' என்பார்கள். இந்த தேசத்தில் அவர்கள் ஒரு சொரூபத்தை உண்டாக்கினார்கள். அது தான் , ஸ்தாபனங்களின் ஒருமித்து கூட்டு சேர்ந்த சபையின் சமஷ்டியாகும். நிக்கொலாய் மதஸ்தினர் ஒன்று சேர்ந்து, தங்களைஸ்தாபனமாக ஆக்கிக் கொண்டுவிட்டார்கள். இறுதியாக அவர்கள் இந்த சகோதரத்துவ ஐக்கியத்தை இணைத்து, கத்தோலிக்கராக ஆகாமல், ஆனால் சகோதர ஐக்கியத்தில் ஒன்றிணைந்து, கம்யூனிசத்தை ஒழித்துக்கட்டமுயலுவார்கள்.

வேதம் கூறுகிறபடி, தேவனுடைய ஜனங்களுக்கு அவர்கள் இழைத்த கொடுமைகளுக்காக அவர்களைப் பழிவாங்கவே கம்யூனிசத்தை தேவன் எழுப்பினார். அது மிகவும் சரியாக இருக்கிறது. அவர்கள் சிந்திய இரத்தத்தினிமித்தம் பழிவாங்க அவர்கள் ஒரு மணி நேரமளவும் அந்த மிருகத்திற்கு அதிகாரம் அளித்தனர்.

அந்த வாட்டிகன் நகரைஅணுகுண்டோ அல்லது மற்ற எதுவுமோதாக்கு கையில், ரோமகுருக்களாட்சி இனி இல்லாமற் போய்விடும். ''உலகில் கொல்லப்பட்ட ஒவ்வொரு இரத்த சாட்சியின் இரத்தமும் அவளில் காணப்பட்டது' என்று வேதம் கூறுகிறது. அவள் அங்கே இருக்கிறாள். இங்கே அதற்குரிய சொரூபம் உள்ளது, அதுவே, சபைகளின் மகாசம்மேளனம் ஆகும்.

கதவுகளை நாம் அடைத்து விடுவதற்காக வேளையானது அதிக தூரத்தில் இல்லை, அல்லதுஸ்தாபனத்தின் அடையாளத்தை எடுத்துக் கொள்ள வேண்டியதாகி விடும். நாம் வாசல்களை அடைத்து விடுவோம். அது சரிதான். அதை விட நாம் நன்கு அறிவோம்.

128.இப்பொழுது, இன்னும் அடுத்த சில நிமிடங்களில் நாம் இங்கிருந்து கடந்து செல்லும் முன்னர், காரியத்தின் கடைத் தொகையை கவனிக்க நான் விரும்புகிறேன். இப்பொழுது, தேவனுடைய முத்திரையானது பரிசுத்த ஆவியாகும். நீங்கள் யாவரும் அதை அறிவீர்களல்லவா? நல்லது, பரிசுத்த ஆவியே தேவனுடைய முத்திரை என்று நாம் யாவரும் அறிவோம்.

வெளிப்படுத்தின விசேஷம் 9ம் அதிகாரம் 1 முதல் 4 முடிய உள்ள வசனங்களில், அவர்கள் யாவருடைய நெற்றிகளில் முத்திரையைப் பெற்றிருந்தார்கள் என்பதைக் காண்கிறோம். 1கொரிந்தியர் 1:22ல் பவுல் கூறுகிறான், அவர் நம்மை முத்திரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார். ''எபேசியர் 4:30ல் பவுல், "பரிசுத்த ஆவியை துக்கப் படுத்தாதிருங்கள் என்று கூறியுள்ளான். அந்த தூதனானவர் வந்து அவ்வாறு அவர்களுடைய நெற்றியில் முத்திரையிடுகிறார்.

அவர் வந்து உங்கள் நெற்றிகளில் ஒரு பொட்டு போன்ற ஒன்றை இடுவார் என்ற அர்த்தமல்ல. உங்களுடைய நெற்றி உங்களுக்குக் கிடைக்கும் வெளிப்படுத்துதலாகும், பாருங்கள். உங்களுடைய கரமானது, அதைக் குறித்து நீங்கள் கிரியை செய்வதைக் குறிக்கிறது. பாருங்கள், அது ஒரு ஆவிக்குரிய அடையாளமாகும். அவர் ஒரு பெரிய



விசுவாசிக்கிறீர்கள். அக்காரணத்தினால்தான் அவர் அதைச் செய்தார். ஒவ்வொருவரும் அதைப் புரிந்து கொண்டீர்களா?

166. இப்பொழுது தேவன் இங்கே ஒரு சிங்காசனத்தில் வீற்றிருப்பாரெனில்....... "ஏன்? இங்கே.... அதோ அங்கே தேவன் வீற்றிருக்கிறார். குறிப்பிட்ட இன்ன ஸ்தலத்தில் அவர் வாசம் பண்ணுகிறார். நாம் அங்கே போகலாம்'' என்று கூறப்பட்டால்.... அப்பொழுது "அன்புள்ள ஐயா, தேவனே, நீங்கள் அதை செய்வீர்களா?'' என்று அவரிடம் கேட்டால்.

167. "ஆம், நான் அதைச் செய்வேன்'' (சகோ. பிரன்ஹாம் முழக்கமிட்டுக் கூறுகிறார் - ஆசி). அவர் அப்படிச் சொன்னவுடன் அப்படியே நடக்கும். நல்லது, அது தேவனல்லவா, ஆகவே அப்படித்தான் நடக்கும். நாம் அதைக் காணமுடியும். அப்படியெல்லாம் இருந்துவிட்டால், விசுவாசம் என்பது தேவையேயிருக்காது. விசுவாசமானது வீணானதாக ஆகிவிடும். காரியம் நடக்கும் என்பதைப் பற்றி எதிர்மறையான எண்ணங்கள் இல்லா மல் நிச்சயமான நிலை நிலவும்போது விசுவாசம் தேவைப்படாது.

168. இவ்வுலகில் உள்ள ஒவ்வொரு நபரும் கிறிஸ்தவராக இருந்துவிட்டால் எப்படியிருக்கும்? உலகில் உள்ள ஒவ்வொருவரும் ஆவியினால் நிரப்பப்பட்ட கிறிஸ்தவராக இருந்துவிட்டால் எப்படியிருக்கும்? அப்படியெல்லாம் ஆகிவிட்டால், விசுவாசம் என்பதே இனிமேல் தேவைப்படாது. நாம் இரட்சிக்கப்பட்டதே விசுவாசத்தினால்தான். நாம் விசுவாசத்தை செயல்படுத்தத்தக்க தாக, யாராவது அதனுடன் இணங்காமல் இருக்க வேண்டும். இப்பொழுது அதை நீங்கள் புரிந்து கொண்டீர்களா? மாற்றுக் கருத்தும் எதிர் நிலையான காரியங்களும் உங்களுக்கு இருக்க வேண்டும். ஒரு நல்ல பெண்மணியை சுட்டிக்காட்டுவதற்கு ஏற்ற தாக, அதற்கு எதிராக கெட்ட பெண்மணி ஒருத்தியும் இருக்க வேண்டும். சத்தியமானது உறுதி செய்யப்பட்டதாக இருக்கும் படியும், அது நல்லதாக பிரகாசிக்கச் செய்யவும், பொய் என்ற ஒன்று இருந்தாக வேண்டும். அனைத்துமே சத்தியமாக இருந்து விட்டால், அப்பொழுது சத்தியமானது மிகவும் சாதாரணமானதாக இருந்துவிடும். ஆனால் ராஜரீகமானதாகவும், உண்மையுள்ளதாகவும் சத்தியம், விசுவாசம் ஆகியவைகள் உள்ளன. அப்படித்தான் உள்ளது.

169. எனவே ஆதரவாகவும் எதிராகவும் உள்ள காரியங்கள் இருக்கத்தான் வேண்டும். அவ்விதமாகத்தான் அது இருக்கிறது. நல்ல

பின்பக்கத்தில் உள்ளவற்றைப் பற்றி ஒருவராலும் ஒன்றும் கூறமுடியாது. அவரால் மட்டுமே அவர் ஒருவரால் மட்டுமே, அதைச் செய்ய முடியும். இந்த ஏழு இரகசியங்களையும் வெளிப்படுத்திட அவர் ஒருவரால் மாத்திரமே முடியும். இங்கே கவனியுங்கள், இங்கே ஒவ்வொரு விஷயமும் மீட்பினைப் பற்றியே உள்ளதாகும். எப்படி சபையானது மீட்கப்பட்டது, யாரெல்லாம் மீட்டுக்கொள்ளப்படுவார்கள் என்பதைப் பற்றியதாகும்.

162. ஓ, நாம் அவரை முழு இருதயத்தோடும் நேசிப்போமாக, நம்மால் இயன்றவரை யாவையும் செய்வோம்.

163. சகோதரன் நெவில் அவர்களிடம் இந்த ஆராதனையை நான் திரும்ப ஒப்படைப்பதற்கு முன்னதாக .... ஒரு குறிப்பிட்ட எழுத் தாளர் ஒரு கதையை எழுதிக்கொண்டிருந்தார். வெளிப்படுத்துதலை நீங்கள் அனுபவித்து இரசித்தீர்களா? நான் அதை நேசிக்கிறேன். இதில் மூன்று வசனங்களை இன்று காலையில் எடுத்துக் கொண்டோம். ஆனால் நாம் அதை மீண்டும் எடுத்துக்கொள்ளுவோம்.

164. தேவனைக் கண்டு கொள்ள முயன்றுகொண்டிருந்த ஒரு இளம் பெண்ணைப் பற்றிய கதையை ஒரு எழுத்தாளர் எழுதிக்கொண்டிருந்தார்.

165. அநேக வேளைகளில் நாம் தேவனை தேடுகிறோம். அவருக்காக பார்த்துக்கொண்டிருக்கிறோம், தேவன் எங்கும் நிறைந்து இருப்பவராக இருப்பின், உங்களுக்கு அதற்காக ஒரு பெரிய .... நல்லது, அவருக்கு ஒரு பெரிய சிங்காசனம் இருக்குமென்றால், அதிலே அவர் எங்கோ ஓரிடத்திலே அமர்ந்து கொண்டிருப்பாராகில், ஒவ்வொருவரும் அப்பொழுது தேவனில் விசுவாசங்கொள்ளுவார்கள். இங்கே ஓரிடத்தில் ஒரு பெரிய சிங்காசனத்தில் அவர் உட்கார்ந்து கொண்டிருப்பாராகில், ''அவர் இங்கேதான் இருக் கிறார். இதுதான் தேவன், நீங்கள் அவரிடத்தில் செல்லுங்கள், அவரால் இதை இப்படி மாற்றமுடியும்'' என்று சொன்னால் (சகோ. பிரன்ஹாம் தனது விரல்களை சுண்டுகிறார் - ஆசி) அப்பொழுது அவரை விசுவாசிப்பார்கள். அப்பொழுது விசுவாசம் வீணாகிப் போய்விடும். அப்பொழுது விசுவாசமே நமக்குத் தேவைப்படாது. அவ்விதமான நிலைதான் ஏற்படும். ஆயிர வருட அரசாட்சியில்தான் அப்படியிருக்கும். ஆனால் இப்பொழுதோ, அவர் அழைத்துக் கொண்டிருக்கிறார்; இரகசியமாகவும் இருளா கவும் அது காணப்படுகிறது. அதை எவ்வாறு செய்வது என்பதை நீங்கள் அறியா திருக்கிறீர்கள். ஆனால் விசுவாசத்தினால் நீங்கள் அதை



முத்திரையை எடுத்து அவ்வாறு உங்களைக் குத்துகிறதில்லை. ஓ, இல்லை.

129.சில ஆண்டுகளுக்கு முன்பாக என்.ஆர்.ஏ. என்றவொரு நிறுவனம் ஏற்பட்டபோது அதுதான் அந்த காரியம் என்று அவர்கள் கூறினர். அதைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டாம். அதுவல்லஅது, ஏற்கனவே அது வந்துவிட்டது. ரொம்ப காலத்திற்கு முன்பாகவே அது ஆரம்பித்துவிட்டதாக வேதம் கூறுகிறது. இப்பொழுது அது முடிவடையப் போகிறது.

ஆனால் அவர் முத்திரையிடப்பட்டவர்களை அடையாளமிட்டார். பாருங்கள்? முதலாம் முத்திரையானது எவ்வாறு காணப்பட்டது, அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தனர். அவர்களது கிரியைகள் கிறிஸ்துவின் கிரியைகளாயிருந்தன. அவர்கள் வியாதியஸ்தர்கள் மேல் கைகளை வைத்தார்கள், அவர்கள் குணமடைந்தனர். அவர்கள் எல்லாவிதமான அற்புத அடையாளங்களையும் அதிசயங்களையும் செய்தனர். அவர்களுடைய நெற்றிகளில், அவர்தேவனுடைய குமாரன் என்ற வெளிப்பாடு முத்திரையாக இடப்பட்டிருந்தது. அவர்கள் அவரோடுகிரியை செய்து கொண்டிருந்தனர். கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மை. அதுவே அதற்குரிய அடையாளமாயிருக்கிறது.

130.நீங்கள் கூறுகின்றீர்கள், "அவர் மூன்றாம், அல்லது இரண்டாவது ஆள்'' என்று. உங்களுக்கு இன்னும் முத்திரை கிடைக்க வில்லை. எனவே அதை விட்டுவிடுங்கள். பாருங்கள், வேதாகமத்தில் அவ்விதமான ஒன்று இல்லையாதலால், அதன் தாள்களில் இருந்து நீங்கள் முடிவடைந்து போய்விட்டீர்கள்.

''நல்லது, நாங்கள் ஆசீர்வதிக்கிறோம். நாங்கள் பரிசுத்த திரித்துவத்தில் விசுவாசங் கொண்டிருக்கிறோம்'' என்று கூறுகிறீர்கள். நீங்கள் இப்பொழுது காகிதத்திலேயே இல்லை, பாருங்கள். ஏனெனில், வேதத்தில் திரித்துவம் என்ற ஒன்று குறிப்பிடப்படவே இல்லை. வேதத்தில் திரித்துவம் என்ற வார்த்தையை கண்டு பிடித்துக் கொண்டு வாருங்கள் பார்க்கலாம்.

131.(ஒலிநாடாவில் காலியிடம் - ஆசி... குமாரனுக்குள், குமாரத்துவம் என்று அழைக்கப்படுகிறது. அவர் இப்பொழுது பரிசுத்த ஆவியாக உங்களில் வாசம் பண்ணுகிறார்; அதுவே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமாக உள்ளது. அதே தேவன் தான் அவர். பரிசுத்த ஆவியானவரே இயேசு கிறிஸ்துவின் பிதாவாக இருக்கிறார்.

'இன்னும் கொஞ்ச காலத்தில் உலகம் என்னைக் காணாது'' என்று இயேசு கூறினார். ''நான் தேவனிடத்திலிருந்து புறப்பட்டு வந்தேன், மறுபடியும் தேவனிடத்திற்கு திரும்பிப் போகிறேன்'' என்று இயேசு கூறினார். மீண்டும் பரிசுத்த ஆவியானவராக. "நான் உங்களோடு இருப்பேன், உங்களில் முடிவு வரைக்கிலும், முடிவு காலம் வரையிலும் இருப்பேன். காலம் முழுவதிலும், முடிவு பரியந்தமும், உங்களுக்குள் இருப்பேன்" என்றார். ''நான் செய்த கிரியைகளை நீங்களும் செய்வீர்கள்.

நான் செய்த கிரியைகள் யாவும் எல்லா காலங்களிலும் விளங்கும், அதுவே விசுவாசிக்குரிய அடையாளமாக காலமெல்லாம் இருக்கும். நீங்கள் போய் பிரசங்கித்தது, கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுங்கள், அப்பொழுது அவர்கள் என்னுடைய ஆவியினால் நிரப்பப் பட்டிருப்பார்கள், அவர்கள் விசுவாசிகளா யிருப்பார்களானால், உலகத் தின்முடிவு பரியந்தமும் இந்த அடையாளங்கள் அவர்களைப் பின் தொடரும்.'' அவர் மகிமையில் ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார். ஒருநாளில் அவர் திரும்பவருவார் என்று நாமெல்லாரும் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதுவே தேவனுடைய முத்திரையாக உள்ளது, நாம் அதை அறிவோம்.

132.இதை நினைவில் கொள்ளுங்கள். அங்கே இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் யூதர்கள் மட்டுமே முத்திரையிடப்படுகின்றனர். அவர்கள் மீதியாக இருக்கப் போகும் யூதர் கூட்டமாகும். ஆனால் இந்த புறஜாதி மணவாட்டியில், அவர்கள் ஆயிரம் பதினாயிரம் பேர்களானவர்கள் ஆவர்; அவர்கள் முத்திரை யிடப்பட்டவர்கள். ஏனெனில் அவர்கள் காலங்கள் தோறும் இரத்த சாட்சிகளாக இருந்தார்கள், ஒவ்வொரு காலங்களிலும் அவர்கள் இவ்வாறு இருந்து வந்தார்கள். அவர்கள் நியாயத்தீர்ப்பு நாளில் எழும்புவார்கள்.

நியாயத்தீர்ப்பின் வெண்கலம் போன்ற பாதங்கள் அந்நாளில் நிற்கையில், என்ன நடக்குமென்று நினைக்கிறீர்கள்? அந்த இரத்த சாட்சிகளும் அங்கே நிற்பார்கள்; அப்பொழுது ரோமர்கள் அங்கே நிற்பார்கள்அவர்களின் முன்பாக, இந்த இரத்த சாட்சிகளை மரத்தில் தூக்கி எரித்தும், சிங்கத்தின் குகைகளில் தூக்கி எறிந்ததுமான நிக்கொலாய் மதஸ்தினரே இவர்கள், அந்த இரத்த சாட்சிகள் இவர்களுக்கெதிராக வழக்கை எடுத்துக் கூறி அவர்கள் மேல் குற்றஞ் சாட்டும் வழக்குரைஞர்களாக அல்லது ஜூரிகளாக அமர்ந்திருப்பார்கள். அப்பொழுது பரம நீதிபதியானவர், இந்த ஜூரிகளிடம்,



காண்பிக்கும்படி இவைகளைப் பற்றி பாடம் உங்களுக்கு எடுக்கலாம் என்று விரும்புகிறேன்.

157. இங்கேதானே அனைத்து காரியங்களும் ஒன்றாக இணைகின்றன. ஆம், ஐயா, அவர் பாத்திரராக இருத்தல் வேண்டும். எனவே இயேசு பாத்திரராக இருக்கிறார். அவருடைய வருகையிலே மீட்பின் ஆசீர்வாதங்கள் அனைத்தையும் பூரணமாக நாம் அனுபவிப் போம். சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரிப்பார்கள். மனிதர்களும், ஸ்திரீகளும் மீண்டும் தேவனுடைய குமாரரும் குமாரத்திகளுமாய் இருப்பார்கள். ஆயிர வருட அரசாட்சியின் துவக்கம் ஆரம்பிக்கும். என்னே ஒரு அழகான காரியம் இது!

158. பலமுள்ள தூதன் மிகுந்த சப்தமிட்டு "யார் பாத்திரவான், யாரால் இதை செய்ய இயலும்? என்று கூறினான்.

159. அப்பொழுது மூப்பர்களில் ஒருவன், "-நீ அழவேண்டாம். யூதா கோத்திரத்து சிங்கம் பாத்திரராயிருக்கிறார். அவர் ஜெயங் கொண்டிருக்கிறார்'' என்றான்.

160. அவர் வந்து புத்தகத்தை வாங்கி, புத்தகத்தை திறந்து, அதின் முத்திரைகளை உடைத்தார். அவைகளுக்கு என்ன நேரிட்டது என்று அவர் ஒருபோதும் கூறவில்லை. நாம் அந்த ஏழு முத்திரைகளைப் பற்றி, அது வேதம் முழுவதிலும் திறக்கப்படுவதைப் பார்க்கையில், என்ன நேரிடுகிறது என்பதை கவனியுங்கள். நாம் கவனித்துக் கொண்டிருக்கிற இந்த ஏழு முத்திரைகளால் முத்திரையிடப்பட்ட புத்தகத்தில்தான், தேவனுடைய மீட்புக் குரிய அனைத்து ஆசீர்வாதங்களின் இரகசியமும் அடங்கியிருக் கிறது. அவர் ஆட்டுக்குட்டியானவராயிருக்கிறார் என்பதை நினை வில் கொள்ளுங்கள். அவர்தான் அதை மீட்டுக்கொண்டிருக்கிறார். அப்புத்தகத்தில் பின்புறத்தில் முத்திரையிடப்பட்டுள்ளது. உள்ளே எழுதப்படவில்லை. அது வெளிப்பக்கத்தில் முத்திரையிடப் பட்டுள்ளது. உள்ளாக எழுதப்பட்டிருக்கவில்லை. அப்புத்தகத்தை திறக்க வேண்டுமானால், அதற்குக்கூட அவர் ஒருவரால் மாத்திரமே இயலும்; அல்லது அப்புத்தகத்தை வெளிப்படுத்தவோ, அல்லது முத்திரைகளை வெளிப்படுத்தவோ, அவர் ஒருவரால் மாத்திரமே செய்ய முடியும்.

161. எனவே, இந்த ஒரு விஷயத்தின் பேரில் அவர்கள் குழப்பமடைந்து, அவர்கள் சச்சரவு செய்திடும்படி செய்யும்; அது என்ன என்பதைப் பற்றி அவர்கள் சச்சரவு செய்யக்கூடும். ஆனால் அவர் மாத்திரமே தெய்வீக வியாக்கியானத்தை அதற்கு அளிக்கமுடியும். ஆனால் அதின்

தெரிந்திருக்கட்டும்; நான் நகோமிக்கு இருந்த யாவற்றையும் என் சகோதரனாகிய எலிமெலேக்கு இழந்த யாவையும், நான் அடுத்த நெருங்கின இனத்தானாவேன் என்பதால், என்னைத் தவிர அதை மீட்பதற்கு வேறு யாரும் இல்லாதபடியால், நான் மீட்டுக்கொள்ள வந்திருக்கிறேன். அதை மீட்க என்னைவிட இன்னும் நெருங்கின இனத்தான் வேறு யாரும் இருந்தால், இங்கே அவன் முன்னே வரட்டும், அது தெரியப்படுத்தப்படட்டும்'' என்று கூறினான். அப்பொழுது யாவரும் பேசாமல் வாய் மூடியிருந்தனர். எனவே, அவன் சாட்சியாக தன் பாதரட்சையை கழற்றிப் போட்டுவிட்டான். 'என் சகோதரன் எலிமெலேக்குக்கு இருந்த யாவையும் நான் மீட்டுக்கொண்டேன்'' ஏன், அவன் நெருங்கின இனத்தானாக இருந்தான். அவன் நெருங்கின இனத்தானாகிய மீட்பன். ஓ எத்தனை அழகாக இது இருக்கிறது! அது அத்தனை அற்புதமான வரலாறு ஆகும்.

154. அப்பொழுது இந்தக் காரியம் எல்லாம் நடக்கின்ற வேளையில் ரூத் இளைப்பாறி, எப்படி இது முடிவு பெறப்போகிறதோ என்று எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்தாள். எவரும் அதற்கெதிராக ஒரு சாட்சியத்தை வைக்கமுடியாத நிலையில் போவாஸ் திரும்பி வருகிறான். அவன் திரும்பி வந்து அந்த அழகிய மோவாபிய பெண்ணாகிய ரூத்தை விவாகம் செய்துகொண்டு, இந்த சுதந்தரத்தில் வாசம் பண்ணினான். என்னே ஒரு அழகான வரலாறு இது!

155. ரூத்தில் மூன்று கட்டங்கள் உள்ளன. ரூத் தீர்மானித்தல்; தனது சொந்ததேசத்திற்கு திரும்பிப் போவதா இல்லையா என்பதைப் பற்றி அவள் தீர்மானம் எடுக்கிறாள். சபையும் அதைப்போலத்தான் இருக்கிறது. ரூத் பணிவிடை செய்தல்; தானியம் பொறுக்கச் செல்லும்போது, அவள் பணிவிடை செய்கிறவளாயிருக்கிறாள்! ரூத் இளைப்பாறுதல்; இப்பொழுது இதற்கெல்லாம் அடுத்ததாக ரூத்திற்கு பலன் அளிக்கப்படுதல் நடைபெறுகிறது. சபைக்கு பலன் அளிக்கப்படுவதைப்போல்.

156. நமக்கு நேரம் இல்லாதபடியால் நம்மால் இதற்கு மேல் செல்லமுடியாது. ஏனெனில் நமக்கு ஞானஸ்நான ஆராதனை உள்ளது. இப்பொழுது நேரம் பதினொன்றேகால் ஆகிவிட்டது. கர்த்தருக்கு சித்தமானால், அடுத்த ஞாயிற்றுக்கிழமையோ அல்லது பிறிதொரு ஞாயிறு ஆராதனையிலோ, இதைக் குறித்து இன்னும் பார்ப்போம். இந்த ஏழு கொம்புகளைப் பற்றியும், ஏழு கண்கள், அந்த ஏழு முத்திரைகள், ஏழு ஊழியங்கள், சபையின் ஏழு தூதர்கள், ஏழு நட்சத்திரங்கள், ஏழு.... ஆகியவற்றைப் பற்றி உங்களுக்குக்



'நீங்கள் அவர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தீர்களா?'' என்று கேட்பார்.

''நான் என் ஜீவனை ஒரு சிங்கத்தின் வாயில் விடும் போது, அப்பொழுது என் ஜீவனை இவர்களுக்காக நான் முத்திரையிட்டேன்'' என்பார்கள்.

ஓ, சகோதரனே! “என்னை விட்டு அகன்று போங்கள் என்று இயேசு கூறியதைப் பற்றி பேசுகிறீர்களே, நரகமானது அவர்களுக்கு நலமாயிருக்கும். அதுதான் சரி.

133.''உறுதியாக பற்றிக்கொள். தாங்களைத் தாங்களே நிக்கொலாய் மதஸ்தினர் என்றும், ஆவியினால் நிரப்பப்பட்டவர்கள் என்றும் அழைத்துக்கொள்ளுகிறார்கள், ஆனால் அவர்கள் அப்படியல்ல என்பதை நான் அறிந்திருக்கிறேன்'' பார்த்தீர்களா? ஓ, என்னே ஒருவேளை வருகிறதாயிருக்கிறது, என்னே ஒரு பயங்கரமான வேளையது. தேவன் பழிவாங்குவார் “நான் பழிவாங்குவேன்'' என்று கர்த்தர் கூறுகிறார். 'நான் பதில் செய்வேன்” என்கிறார்.

ஒவ்வொரு பொல்லாங்கான கிரியைக்கும் நீதியான தீர்ப்பு உண்டு. உங்கள் வாழ்க்கையில் நீங்கள் செய்திருக்கிற ஒவ்வொரு கிரியையும், அல்லது உங்கள் சிந்தனையும், உங்களுக்கெதிராக அங்கே அந்த மகத்தான காந்த ஒலிநாடாவில் பதிவு செய்யப்பட்டிருக்கும். உங்கள் சிந்தையில் தோன்றிய ஒவ்வொரு பொல்லாத எண்ணமும் அங்கே காணப்படும்.

பிள்ளைகளே, மனந்திரும்புங்கள்! அதிலிருந்து விடுபட ஒரேயொரு வழி மட்டுமே உண்டு, கிறிஸ்துவுக்குள் வாருங்கள். அவருடைய வாழ்வில்பட்ட அவ்வினிய ஐங்காயத்தினுள் நீங்கள் பிரவேசிக்கையில், அவர் சரீரத்திலுள்ள அவ்வைந்து விலையேறப்பெற்ற காயங்களுக்குள் நீங்கள் பிரவேசித்து, அங்கே காயத்தில் ஓடும் இரத்தத்தை நீங்கள் காண்கையில், அங்கே மறைந்து கொண்டு, 'பிளவுண்டு இருக்கும் கன்மலையே, நான் நல்லவனல்ல, என்னை உள்ளே மறைத்துக்கொள்ளும், பிளவுண்ட கன்மலையே' என்று கேளுங்கள். விலையேறப் பெற்ற பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தை உணருங்கள். உங்கள் சுயத்திற்கு மரித்து, கிறிஸ்துவின் சரீரத்தினுள் பிரவேசித்து, எழும்பி, உங்களைச் சுற்றியுள்ள புதிய உலகிற்குள் விழித்திடுங்கள். நீங்கள் முன்பு சிநேகித்திருந்த பாவங்கள் உங்கள் பின்னாகப் போய்விட்டன.

ஓ, வருங்காலமோ, நிகழ்காலமோ அல்லது வேறு எந்த ஒன்றுமே உங்களை அதிலிருந்து பிரித்திடாது. உங்களுடைய மீட்பின் நாள் பரியந்தமும், நீங்கள் பரிசுத்த ஆவியினால் முத்திரையிடப்பட்டுள்ளீர்கள். அவர் யார் என்பதைப்பற்றிய வெளிப்பாடு உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. மரணத்தி னின்று நீங்கலாகி ஜீவனுக்குள் பிரவேசித்திருக்கிறீர்கள் என்பதை உங்கள் இருதயத்தில் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

134.அப்பொழுது உங்கள் கரத்தின் கிரியைகளை கவனித்து பாருங்கள்.

இனிமேல் நீங்கள் திருடுவதில்லை, இனிமேல் நீங்கள் தீமை செய்வதில்லை. உங்கள் கரங்கள் எல்லா இரத்தப்பழிகளுக்கும் நீங்கலாயிருக்கின்றன. அப்பொழுது நீங்கள் எழும்பி நின்று, சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, எது சரியோ அதையே பேசி, எது சரியோ அதன்படி ஜீவித்து, எது சரியோ அதையே செய்கின்றீர்கள். பரிசுத்த ஆவியானவரும் உங்களோடிருந்து, ஒவ்வொரு நாளும் அற்புத அடையாளங் களைக் காண்பிக்கிறார்; ''நீ என்னுடைய ஆசீர்வதிக்கப்பட்ட பிள்ளை, நான் உன்னோடு இருக்கிறேன், இப்பொழுதே நான் உன்னோடு இருக்கிறேன்,

நீ எங்கிருந்தாலும் சரி, நான் உன்னோடு இருக்கிறேன். இருண்ட வேளைகள் வழியாகவும் எவ்விடத்தும் நான் உன்னோடு செல்லுவேன்" என்று தேவன் உங்களோடு பேசித் தெரியப்படுத்துகிறார், ஓ, என்னே ஓர் நங்கூரம்!

இளைப்பாறும் துறைமுகத்தில் நான் என் ஆத்துமாவை நங்கூரமிட்டேன்

இனி கொந்தளிக்கும் கடலலைகள் மேல் பயணமில்லை,

ஓ, ஆழ் கடலில் புயல் கொந்தளித்தாலும்,

நான் என் இயேசுவில் பத்திரமாயுள்ளேன்.

135.ஏன் மரணம் கூட ரீங்காரமிட்டுக் கொண்டு, இந்நாட்களில் ஒன்றில் உங்களைச் சுற்றிவந்து, ஒரு வண்டைப்போல் உங்கள் தலையைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டே வரக்கூடும். அப்பொழுது நீங்கள் மரணத்தை நோக்கி, ''ஓ மரணமே, உன் கூர் எங்கே?'' என்று கேட்கலாம்.

பின்னால் அமர்ந்திருக்கிற எனது சிறிய மகள் சாராள் அன்றொரு நாளில் எழுதியிருந்ததைப்போல்: அதாவது அவள் பிரசங்கத்தை குறிப்பெடுத்துக் கொண்டிருந்தாள். அவளும், சகோதரன் காலின்ஸ்



வானத்திலாவது, பூமியிலாவது, பூமியின் கீழாவது, ஒருவனும் அந்தப் புஸ்தகத்தைத் திறக்கவும், அதைப் பார்க்கவும் கூடா திருந்தது.

ஒருவனும் அந்தப் புஸ்தகத்தைத் திறந்து வாசிக்கவும் அதைப் பார்க்கவும் பாத்திரவானாகக் காணப்படாததினால் நான் மிகவும் அழுதேன்.

அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: நீ அழ வேண்டாம்; இதோ, யூதா கோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் ஏழு முத்திரை களையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார் என்றான். (இவரைக் குறித்துதான் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம்)

வெளி.5:3-5

152. எவ்வாறு ரூத், எவ்வாறு ... நகோமியும் போவாசும் எவ்வாறு ஒரு பரிபூரண எடுத்துக்காட்டாக இருக்கின்றனர் என்பதை கவனியுங்கள். பஞ்சம் ஏற்பட்ட நாட்களில் எவ்வாறு நகோமியான வள் சபையை விட்டு, தேசத்தைவிட்டு விலகிச் சென்று, மோவாபிய தேசத்தினுள் சென்று, அங்கே வாசம் பண்ணவும், அங்கே சஞ்சரிக்கவும் சென்றாள் என்பதை கவனியுங்கள். அவள் தனக்குள்ளதையெல்லாம் இழந்துவிட்டாள். அவள் புறப்பட்டுப் போன பிறகு அவர்கள் மோவாபிய தேசத்தில் இருக்கையில், அவளுடைய கணவன் எலிமெலேக்கு இறந்துவிட்டான். எனவே அவனது சுதந்திரமானது இப்பொழுது வேறு ஒருவனுக்கு போய்விடும். அவர்கள் திரும்பி வந்தபொழுது, அவள் திரும்பி வந்தபொழுது, அவள் தன்னோடு அழகான இளம் மோவாபிய விதவையை அழைத்துக்கொண்டு வந்தாள். போவாஸ் அந்த விதவையைக் கண்டபோது, அவள் மேல் காதல் கொண்டான். அவன்தானே கிறிஸ்துவுக்கு முன்னடையாளமாக இருக்கிறான். அவன் அவளை நேசித்தான். எனவே அவன் அவளை தன் மனைவியாக்கிக் கொள்ள வேண்டுமெனில், அவன் தன் சகோதரன் எலிமெலேக்கு இழந்தவற்றையெல்லாம் மீட்டுக்கொள்ள வேண்டும்.

153. எனவே, அவன் தன்னைவிட நெருங்கின இனத்தானாகிய தன்னுடைய இன்னொரு சகோதரனை அழைத்து, அவன் மீட்டுக் கொள்ளுகிறானா என்று கேட்டான். அவனால் செய்ய இயலாது போய்விட்டது. எனவே அவன் ஒலிமுகவாசலுக்கு தேவனுடைய பிரமாணங்களின் பூரணமான மாதிரியாக இருக்கும்படி போனான். அவன் ஒலிமுக வாசலுக்கு சென்று, அங்கே அவன் பாதரட்சையைக் கழற்றிப்போட்டு, "இந்த நாளிலே, இக்காரியம் உங்களுக் கெல்லாம்

நாம் அதை இப்பொழுது காண்கிறோம்; அதைப்பற்றி வேத வாக்கியத்தின் மூலமாக காண விரும்பினீர்களானால், 1 பேதுரு 1:18 முதல் 20 முடிய உள்ள வசனங்களில் அது குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வேதவாக்கியங்களை குறித்துக்கொள்ளலாம். அவர் பாத்திரராக இருந்தாக வேண்டும். அவர் அவ்வாறே இருந்தார். ஏனெனில் அவர் தாமே மனித ரூபத்தை தன்னில் எடுத்துக்கொண்டார். அவர் மனிதனாக ஆனார். தேவன்தாமே நமக்கு நெருங்கின இனத்தானாக ஆனார். யேகோவா தேவனானவர் மாம்சமாகி, நம் மத்தியிலே பாத்திர வானாக வாசம் பண்ணினார் என்கிற அந்த அழகான பாகத்தை அங்கே வேதத்தில் நாம் காண்கிறோம். ஆமென்.

149. 'அவர் ஜெயங்கொண்டிருக்கிறார்''. தேவன் மாம்ச சரீரத்தை எடுத்துக்கொண்டார். அவர் பூமிக்கு வந்தார். ஒரு சிறிய குழந்தையாக பிறந்து வளர்ந்து நம் மத்தியில் நடந்து திரிந்தார். அவர் தமது பரிசுத்த இரத்தத்தின் மூலமாக ஜெயங்கொண்டார்.

150. பழைய ஏற்பாட்டில் ஒரு மனிதன் தனக்கு சொந்தமானதைப் பற்றி எவ்வாறு அறிவிக்க வேண்டும், அதற்காக அவன் என்ன செய்தான்? ஒரு மூப்பரை அழைத்து, பத்து மூப்பர்களை.... ஊர் வாசலுக்குப் போய், தான் என்ன செய்து கொண்டிருக்கிறான் என்பதைப் பற்றி அறிமுகம் செய்து கொண்டு, தான் இழந்து போனதை மீட்கப் போவதாகவும், தான் யார் என்பதைப் பற்றியும் எடுத்துக்காண்பித்து, அவன் ஒரு சாட்சியை அதற்காக முன்வைக்க வேண்டும். இங்கே அதைப்பற்றின அழகானதொரு சரித்திரத்தை நான் குறித்து வைத்துள்ளேன்; அதைப்பற்றி நான் ஒரு குறிப்பு வைத்துள்ளேன்; நான் அதைப்பற்றி இன்று காலையில் சிந்திக்கையில் பரவசமடைந்தேன். எனவே அதைப்பற்றி குறிப்பிட மறக்கமாட்டேன். சமீபத்தில்தான் நாம் அதைப்பற்றி - ரூத்தும் நெருங்கின இனத்தானாகிய போவாசைப் பற்றியும் கவனித்தோம். இந்த இளைப்பாறுதலின் மூன்று கட்டங்களைப் பற்றி நீங்கள் கண்டுணர வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

151. அதேவிதமாக சபையின் இளைப்பாறுதலைப் பற்றிய விஷயமும் இருக்கிறதை நீங்கள் கவனிக்க வேண்டுமென நான் விரும்பு கிறேன். இப்பொழுது கவனியுங்கள். "இனத்தான் மீட்பர்'' என்ற செய்தியில் (உரைக்கப்பட்ட வார்த்தை வால்யூம் 6, எண் : 8- ஆசி) நாம் யாவரும் அதைப்பற்றி விரிவாகப் பார்த்தோம். தேவன் மீட்பராகும்படி மாம்சமானார். அவரைத்தான் இங்கே 5ம் அதிகாரத் தில் நாம் காண்கிறோம். (வெளி.5ம் அதிகாரம்). அது இவ்வாறு கூறுகிறது.



அவர்களின் மகளும், நான் என்ன சொன்னேனோ, அதின் பேரில் குறிப்பெடுத்திருந்தனர். நானும், சாராளின் தாயும் அவள் எழுதினவைகளை வாசித்துக் கொண்டிருந்தோம். ''வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம்'' (Book of Revelation) என்பதற்கு பதிலாக 'புரட்சிகளின் புத்தகம்'' (Book of Revolutions) என்று எழுதிவிட்டாள். ஆமென், அவள் கூறினாள்.

முடிவில் நான் மரணத்தைப்பற்றிக் கூறிய அச்சிறு கதையை நீங்கள் அறிவீர்கள். அறிவீர்கள். மரணத்திற்குக் கொடுக்கு இல்லை என்று கூறியதைக் கேட்டிருக்கிறீர்கள். அக்கதை கூறப்பட்டபோது நீங்கள் இங்கே இருந்தீர்களா? ஒரு காலத்தில் மரணத்திற்குக் கொடுக்கு இருந்தது, ஆனால்....

136.மனுஷகுமாரனா இல்லையா என்பதைப் பற்றி சாத்தான் அதிகம் நிச்சயமில்லாதவனாக இருந்தான். இயேசுவண்டை சாத்தான் வந்து கூறியதை பாருங்கள். நல்லது உம்மால் அற்புதம் செய்யக்கூடுமானால், நீர் ஓர் அற்புதம் நடப்பிக்கிற நபராக இருப்பீரேயானால், நீர் தேவனுடைய குமாரனே யானால், நீர் ஒரு அற்புதம் நடப்பிப்பதை நான் காணட்டும்; இப்பொழுது நீர் பசியாயிருக்கிறீர்; நாற்பது நாட்களாக ஒன்றுமே நீர் புசிக்கவில்லை; நீர் ஏன் அந்தக் கல்லை அப்பமாக்கி, உட்கார்ந்து அதைப் புசிக்கக்கூடாது? நீர் அதை செய்வதை நான் பார்க்கட்டும். அப்பொழுது நீரே தேவனுடைய குமாரன் என்பதை நான் விசுவாசிப்பேன்'' என்று கூறினான்.

இயேசு அதற்குப் பிரதியுத்தரமாக: ''மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல,... ஒவ்வொரு வார்த்தை யினாலும் பிழைப்பான்' என்று கூறினார்.

ஓ, என்னே! அங்கே சாத்தான், தான் மோசேயை சந்திக்கவில்லை என்பதை அறிந்து கொண்டான், அல்லவா? மோசே கற்பனைகள் எழுதிய கற்பலகையை கீழேபோட்டு உடைத்தெறிந்தான். ஆனால் சாத்தான், தான் மோசேயை விடப்பெரியவரை சந்தித்தாக அறிந்தான்.

137.பின்பு, சாத்தான், இயேசுவை உயரத்திலே எடுத்துச் சென்று, ''இவ்வுலக இராஜ்யங்களையெல்லாம் பாரும், அதோ அங்கே அமெரிக்கா இருக்கிறது, அங்கே க்ரேட் பிரிட்டன், அங்கே அந்த இராஜ்யங்களெலாம் வரவிருக்கும் ஆண்டுகளில் வரப்போ கின்றன. அவைகள் யாவும் எனக்கு சொந்தமாயுள்ளன நீர் அதை அறிவீர்.' (அவன்தான் அவர்களை ஆளுகிறான்)

'அவைகள் எனக்குச் சொந்தமானவை; நான் அவர்களை ஆட்டுவிக்கிறேன், நானே அவர்களை யுத்தத்திற்கு அனுப்புகிறேன். அவர்களுக்கு என்ன செய்ய நான் விரும்புகிறேனோ அதை நான் செய்கிறேன், அவர்கள் என்னுடையவர்கள், நீர் என்னைத் தொழுது கொண்டால், அந்த இராஜ்யங்களை உமக்குத் தருவேன்'' என்றான். (மத். 4:8-9).

அப்பொழுது இயேசு, ''அப்பாலே போ சாத்தானே'' என்றார். எப்படியும் முடிவில், தான் அனைத்துக்கும் சுதந்தரவாளியாகி விடத்தான் போகிறோம் என்பதை அவர் அறிந்திருந்த படியினால், ''அப்பாலே போ சாத்தானே'' என்றார்.

138.இறுதியாக அவர்கள் ஒரு நாளில் அவரைப் பிடித்தபொழுது, அவர்கள் ஒரு துணியை எடுத்து அதைக் கொண்டு அவரது முகத்தை மூடினார்கள். அவர்கள் அவரது தலையைச்சுற்றி கட்டி விட்டிருந்தது, ஒரு பழைய அழுக்கான துணியாகத்தான் இருந்திருக்கவேண்டும் என்று நான் கற்பனை செய்து பார்க்கிறேன். அவரோ அங்கே காயமுற்றவராய், இரத்தம் சிந்தினவராக காட்சியளித்தார். அதிகாலையில் கடுங்குளிர் காற்று வீசிக்கொண்டிருந்தது. அவர்கள் அவரை ஏற்கனவே சாட்டையால் அடித்தார்கள், அவரது தோள்கள் வழியாக இரத்தமானது பீறிட்டு ஓடியது,

அவர் மேல் சுற்றி எதையோ அவர்கள் எறிந்தார்கள். இரத்தமானது அவரது முதுகில் அப்படியே பசையைப்போல் ஒட்டிக்கொண்டிருந்தது; அவர் சிரசின்மேல் முட்கிரீடத்தை அழுத்தி அணிவித்தார்கள். அவரது முகத்தின் மேல் இரத்தமும், போர்ச்சேவகர் அவரது முகத்தில் துப்பிய எச்சிலுடன் நிறைந்தவராக அங்கே உட்கார்ந்திருந்தார். அது ஒரு கோரமான காட்சியாக இருக்கவில்லையா? (ஓ தேவனே)

''நான் அப்பொழுது அங்கே இருந்திருப்பேனென்றால், அது விஷயத்தில் ஏதாவது செய்திருப்பேன்' என்று நீங்கள் இப்பொழுது கூறலாம். நல்லது, நீங்கள் ஏன் இப்பொழுது அந்த விஷயத்தில் ஏதாவது செய்யக்கூடாது? ஏனெனில் நீங்கள் இருந்தால், இப்பொழுது நீங்கள் அதைக் குறித்து என்ன செய்கிறீர்களோ, அதையே தான் அக்காலத்தில் இருந்திருந் தாலும் செய்திருப்பீர்கள்.

139.அங்கே அவர் பரிகசிக்கப்பட்டு, முகத்தில் காறித் துப்பப்பட்டவராக உட்கார்ந்து கொண்டிருந்தார். அவரது சீஷன் அங்கே நின்றிருந்தது, "ஓ என்னே! இப்படியும் நடக்கக்கூடுமோ? அந்த மாமனிதர் கல்லறையிலிருந்து மரித்தவனை உயிரோடு எழுப்ப முடிந்தது.



143. எனவே அந்த வேளையில்தானே, ஒரு மூப்பர், அல்லது ஒரு பலமுள்ள தூதன் முன்வந்து, "நீ அழ வேண்டாம். இதோ, யூதா கோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேருமானவர்.... ஜெயங் கொண்டிருக்கிறார்'' என்றான். ஆமென். "ஜெயங் கொண்டிருக்கிறார்''. அதாவது 'அப்புத்தகத்தை எடுக்க பாத்திரவானாயிருக்கிறார்''. ஆமென்.

144. யோவான் இதுவரைக்கிலும் அவரை அங்கே காணவில்லை. ஏன்? அவர்தானே அங்கே ஒரு ஆசனத்தில், ஒரு சிங்காசனத்தில், தேவனுடைய சிங்காசனத்தில் அமர்ந்திருந்தார். அவர்தானே பரிசுத்த ஸ்தலத்தினுள் இருந்தார். அவரை அது வரையிலும் யோவான் காணவேயில்லை. எனவே யோவான் ஒரு சிங்கம் அங்கே தோன்ற வேண்டுமென எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் அவன் ஒரு ஆட்டுக்குட்டியையே கண்டான்.

145. அப்படித்தான் சகோதரர்களே. சாந்தகுணத்தின் மூலமாக இனிமையான குணத்தினால், பரிசுத்த ஆவியினாலே அங்கே நாம் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம். ஒரு மகத்தான வல்லமையுள்ள அறிவு படைத்த பெரும்புள்ளியால் இயலாது. ஆனால் தன்னைத்தான் தாழ்த்தக்கூடிய ஒரு மனிதனால்தான் ஜெயங்கொள்ள முடியும். கடுமையாக நடத்தப்பட்டும், இன்னும் கிறிஸ்துவின் ஊழியக்காரனாக இருக்கக்கூடியவனே ஜெயங் கொள்ளுகிறவனாயிருப்பான்.

146. "புஸ்தகத்தைத் திறக்கவும், அதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார்.'' என்று அவன் கூறினான்.

147. சிறிது காலத்திற்குப் பிறகு, இன்று அல்ல, நாம் அந்த ஏழு முத்திரைகளில் என்ன அடங்கியிருக்கிறது, அவைகள் என்ன செய்தன என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

148. நாம் இப்பொழுது ''மீட்பு'' என்பதைப் பற்றி சிறிது பார்ப்போம். இந்த நபர் மீட்பை செய்வதற்கு முன்பாக முதலாவதாக அதற்கென பாத்திரவானாகக் காணப்படவேண்டும். சரியான நபராக அவர் இருந்தாக வேண்டும். எனவே, இந்த காரியமானது இயேசு கிறிஸ்துவானவர், கன்னிப்பிறப்பினால் பிறந்ததின் மூலமாக நிறைவேற்றப்பட்டது. ஏனெனில் அவர் தேவனாயிருந்தார். மனிதனாக வந்த அவர் தேவனேயாவார். அவர் மாம்சத்தில் தோன்றிய தேவனாவார். அவர் பாத்திரராயிருக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவின் பாவமில்லாத பரிசுத்தமான இரத்தமே அவரை பாத்திரராக ஆக்கியது.

138. ஓ, அல்லேலூயா! கிறிஸ்தவர்களாகிய நீங்கள் இதன் அர்த்தத்தைக் கண்டுகொள்ளுகிறீர்கள் என்று நம்புகிறேன். நாம் பூமிக்கு உப்பாயிருக்கிறோம். தேவன் இதை தனது புத்திரருக்கு அளித்தார். அவர் நமக்கு இயற்கை அனைத்தின் மேலும், மிருக ஜீவன் அனைத்தின்மேலும், அதிகார வரம்பை அளித்தார். ஆனால் நமது தந்தையாகிய ஆதாமோ அவ்வுரிமையை சாத்தானிடம் பறிகொடுத்துவிட்டான். ஆனால் அது எங்கே வீழ்ந்துவிட்டது? சரியான உரிமைக்காரனிடத்தில்தான். அதாவது பூமியை உண்டாக்கிய தேவனுடைய கரத்தில்தான். ஆமென்!

139. அதை மீட்டுக்கொள்வதற்கு ஒரு மனிதனும் பாத்திரவானாகக் காணவில்லை என்று யோவான் கண்ட பொழுது அவன் "மிகவும் அழுதான்'' என்று யோவான் கூறியது ஆச்சரியமில்லை. அதைச் செய்வதற்கு ஒரு மனிதன் பாத்திரவானாகக் காணப்பட வேண்டும். "ஒருவனும் அந்தப் புஸ்தகத்தை திறந்து வாசிக்கவும் அதைப் பார்க்கவும் பாத்திரவானாகக் காணப்படாததினால் நான் மிகவும் அழுதேன்'' என்று யோவான் கூறினான். அவன், "வானத்திலாவது, பூமியிலாவது, பூமியின் கீழாவது,'' அல்லது வேறெங்குமுள்ள எந்த ஒருவனாவது என்று கூறுகிறான்.

140. "ஒரு மனிதனும் பாத்திரவானாகக் காணப்படவில்லை. அவன் ஒருபோதும் தூதர்களை கனவீனப்படுத்தவில்லை. இப்பூமியானது தூதர்களுக்கு கையளிக்கப்படவில்லை. அது மனிதனுக்குரிய சுதந்தரமாகும். காபிரியேல் நிச்சயமாக பாத்திரவான்தான். வேறு ஒருவனும் பாத்திரவான்தான். மிகாவேல் ஒருவேளை பாத்திர வானாக இருக்கக்கூடும். ஆனால் அங்கே ஒரு மனிதனும் பாத்திரவானாகக் காணப்படவில்லை என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. பார்த்தீர்களா? யோவான் மிகவும் சத்தமிட்டு அழுதான்.

141. யாரோ ஒருவர் கூறினார். ஏனெனில் யோவான் தன்னையே பாத்திரவானாகக் காணவில்லை என்ற காரணத்தால் அழுதான்'' என்று. அந்தவிதமாக அல்ல.

142. இம்மனிதன் (யோவான் - மொழிபெயர்ப்பாளர்) பரிசுத்தாவி யின் ஆதிக்கத்தின் கீழாக இருந்தான். எனவே அவன் அந்த விதமான தவறு இழைக்கவே முடியாது. ஆனால் அவன் .... அவன் தன்னை மாத்திரமே பாத்திரவானாகக் காணவில்லை என்பதாக அல்ல. யாரையுமே அவன் பாத்திரவானாகக் காணவில்லை.



இப்பொழுது அவரது நிலையைப் பாருங்கள்" என்று கூறினான். ஆனால் அவனோ, வேதவாக்கியங்களின்படிதான் அக்காரியம் நடந்துகொண்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்ளத் தவறினான்.

ஆகவே அவரது முகத்தில் எச்சிலும், இரத்தமும் நிறைந்தவராகக் காணப்பட்டார். ஒரு துணியைக் கொண்டு அவரது கண்களை மறைத்து கட்டி, "இதோ இந்த மனிதன் இருதயத்தை பகுத்தறியும் ஆவிக்குரிய வரம் கொண்டவர் என்று அவர்கள் என்னிடம் கூறினார்கள். அவர் ஒரு தீர்க்கதரிசி என்றார்கள். மக்களிடம் அவரால் கூற முடிந்தது, கிணற்றண்டையில் நின்றிருந்த அந்த ஸ்திரீயின் பாவங்களைக் கூறிவிட்டார். சீமோனிடம் அவனது தந்தையின் பெயரை கூறினார். அவனது பெயர் யோனா என்பதையும் கூறினார், மற்றும் யாவற்றையும் சங்கதிகளையும் கூறி விட்டார். இப்பொழுது அவ்வாறு அவரால் கூற முடிகிறதா என்பதை நாம் இப்பொழுது பார்க்கலாம்'' என்றார்கள். அவர்கள், "அவருக்கு ஒரு சிறிய சோதனை கொடுப்போம்'' என்றார்கள். அது அந்த மக்களில் பிசாசு அவ்வாறு கிரியை செய்து கொண்டிருந்ததாகும்.

அவரது கண்களைத் துணியால் கட்டி, ஒரு குச்சியினால் அவரது தலையில் அடித்து, 'நீ தீர்க்கதரிசியானால், உன்னை அடித்தது யார் என்பதைச் சொல்'' என்றார்கள். அவர் தன் வாயைத்திறக்கக் கூட இல்லை. அவர் பேசாமல் அமர்ந்திருந்தார்.

சாத்தான் கூறினான் "அது தேவனாயிருக்க முடியாது என்று அறிவாயாக''என்று. அதைத்தான் பழைய ஸ்தாபனமானது இன்று கூறுகிறது, ''அந்த உருளும் பரிசுத்தர் கூட்டமானது தேவனுடையதாக இருக்க முடியாது'' என்று. ஆனால் அவர்கள் அறியமாட்டார்கள். அவர்களுக்குத் தெரியாது. பாருங்கள்?" அக்காரியங்களையெல்லாம் தேவன் செய்ய வில்லை. அவர்கள் மனோவசியத்தால் கிரியை செய் கிறவர்கள். அவர்கள் குறிசொல்லுகிறவர்கள் என்கிறார்கள். அவர்கள் அது என்னவென்று அறிந்துகொள்ள வில்லை, அவ்வளவு தான்.

140.எனவே அவர்கள் அவர் மேல் அங்கியை அணிவித்து மலையின் மேல் ஏறத்தொடங்கினார்கள். அவர் மனிதனாக இவ்வுலகில் இருக்கையில், அவருக்காக மரியாளும், மார்த்தாளும், முழுவதும் தையலேயில்லாமல் தயாரித்தளித்திருந்த அந்த ஒரே அங்கியைத்தான் அணிந்து கொண்டிருந்தார் என்று நான் ஊகிக்கிறேன். அவருக்கிருந்த ஆடையெல்லாம் அதுதான். அதை அவரது முதுகின் மேல் போட்டார்கள்.

அவர் மலையின் மேல் ஏறிச்செல்லுகையில், அவரது அங்கியின் மேல் சிறு இரத்தக்கறைகள் காணப்பட்டன. அவரோ, அந்த பழைய சிலுவையை இழுத்துக்கொண்டே தள்ளாடிக்கொண்டே சுமந்து சென்றார். அவரது அந்த பலவீனமான சரீரத்தோடு அவர் போகையில் அவர்கள் அவரை சாட்டையால் அடித்துக்கொண்டேயிருந்தார்கள், மற்றும் இவ்வாறான அனைத்து பாடுகளையும் அவர் சகித்துக்கொண்டே சென்றார். அந்த பழைய சிலுவை அவரது தோளில் அவரை அழுத்திக் கொண்டிருக்க, அவர் தள்ளாடியவாறே தொடர்ந்து சென்றார்.

அந்தச் சிறு சிறு கறைகள் வர வர பெரிதாகி, பெரிதாகி, கடைசியில் ஒரு பெரிய புள்ளியாக கறையாக அவரது அங்கியில் ஆகியது. பழைய சாத்தானானவன், மரணம் என்னும் விஷக் கொடுக்கை உடைய ஒருதேனீயின் ரூபத்தில், அவரண்டை வந்து, ''ஹ ஹ ஹா அவரா? தேவன் அவ்வாறு செய்யமாட்டார், அவர் வெறும் ஒரு மனிதன் தான், அவர் நடிக்கிறார்" என்றான். அவன் இன்னமும் அவ்வாறே நினைக்கிறான். ''அவர் அவ்வாறு நடிப்பாக செய்கிறார் அவர் தேவனாயிருந்தால், அவன் அவரை கொடுக்கால் கொட்டினால், அவர் மரிக்க முடியாது. எனவே நான் அவரை கொடுக்கால் கொட்டி என்ன நடக்கிறது என்று பார்க்கப்போகிறேன். அவரை சோதித்துப் பார்ப்பேன்" என்றான்.

141.எனவே, அவன் இயேசுவை சிலுவையில் அறையச் செய்த பொழுது, அவர் உடலில் தனது கொடுக்கை வைத்துக்கொட்டி னான், ஆனால் சாத்தான் தன் கொடுக்கை வைத்துக்கொட்டிய பொழுது, அவனது கொடுக்கை அவன் இழந்துவிட்டான். அவர் மனிதனை விட மேலானவர். அந்தத் தடவை அவன் தேவனைக் கொட்டிவிட்டான். அக்காரணத்தினால்தான், பவுல் எழுதுகையில், ''ஓ மரணமே...'' என்றான்.

ஒரு தேனீ ஆழமாக ஒன்றினுள் கொட்டிவிட்டால், அதன் பிறகு இனிமேல் அதனால் கொட்டவே முடியாது என்று அறியுங்கள். அந்த விஷத் தேனியாகிய சாத்தான் ரீங்காரமிடுவான், ஓசையெழுப்புவான், எல்லாம் செய்வான், ஆனால் அவனால் இப்பொழுது கொட்டமுடியாது, ஏனெனில், அவன் ஏற்கனவே தனது கொடுக்கை இழந்துவிட்டான், அவனிடம் கொடுக்கு இல்லை.

பவுலின் தலையை வெட்ட அதற்கென ஒரு இடத்தை அவர்கள் கட்டிக்கொண்டிருக்கையில், பவுலைச் சுற்றி அந்த விஷத்தேனீ



133. என் மகன் பில்லி நான் இழந்து விட்ட, விற்றுவிட்ட ஆஸ்தியை திரும்ப விலைக்கு வாங்கிட விரும்புகிறான் என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது எனது ஆஸ்தியை விலைக்கு வாங்கியிருந்த அந்த அந்நியரோ அல்லது சகோதரன் நெவில் அவர்களோ அல்லது வேறு யாரோ, யார் அதை, அவ்வாஸ்திக்குரிய உரிமை சாசனத்தை தன் கையில் வைத்திருக்கிறார்களோ..... இப்பொழுது எனது நெருங்கின இனத்தான் எனது இரத்த சம்மந்தமான உறவினனாக இருந்தால், வந்து கேட்டால், அப்பொழுது ஆஸ்தியை விலைக்கு வாங்கினவன் அதற்குமேல் அவன் தன் கையில் வைத்துக்கொள்ள முடியாது. இல்லை, ஐயா. அவன் அதை திரும்ப கொடுத்துவிட வேண்டும். ஆம், ஐயா. அதற்குரிய கிரயமானது செலுத்தப்பட்டுவிட்டதென்றால், அந்த சொத்துக்கு அவன் இருபத்தையாயிரம் டாலர்கள் செலுத்தி விட்டால், அதைத் திரும்பக் கொடுத்துவிட வேண்டும்.

134. நல்லது, அப்பொழுது, சகோதரன் டோனி வந்து, ''சகோ. நெவில் அவர்களே, நான் சகோதரன் பிரன்ஹாம் அவர்களின் ஆஸ்தியை விலைக்கு வாங்கிக்கொள்ளுகிறேன்'' என்று கூறினால், அவர் அதை வாங்க முடியாது.

சகோதரன் நெவில் கூறுவார்: "இல்லை, ஐயா. நான் அதை விற்க விரும்பவில்லை'' "நல்லது, அதற்கு கிரயமாக என்ன விலை கொடுத்தீர்கள்?''

"இருபத்தையாயிரம் டாலர்கள்''

135. "நல்லது, நான் உங்களுக்கு முப்பத்தையாயிரம் டாலர்கள் கிரயமாக கொடுக்கிறேன். அல்லது இவ்வளவு தொகை கொடுக்கிறேன்'' என்று அவர் கூறினால்,

136. "உங்களுக்கு என்ன தேவையிருந்தாலும் சரி, அதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை; நான் அதை விற்க விரும்பவில்லை; நான் அதை வைத்துக்கொள்ள விரும்புகிறேன்'' என்று கூறுவார்.

137. ஆனால் பில்லிபால் அங்கே வந்து, என்னுடைய தந்தையின் ஆஸ்தி எனக்கு வேண்டும். இதோ இங்கே இருபத்தையாயிரம் டாலர்கள் உள்ளன'' என்று கேட்டால், அப்பொழுது அவர் அதை விட்டுவிடவேண்டும். அதுதான் சரி; ஏனெனில் அதுதான் அங்கே சட்டமாயிருந்தது.

மீட்டுக்கொள்ள வேண்டும் பொழுது... தேவன் இஸ்ரவேலுக்கு தேசத்தை பங்கிட்டு, யோசுவாவின் மூலம் அதைச் செய்து கொடுத்தபொழுது, ஒவ் வொரு கோத்திரத்துக்கும் ஒவ்வொரு நபருக்கும் ஒரு பிரதேசம் பகிர்ந்தளிக்கப்பட்டது. அங்கே அவர்களது பிள்ளைகள் தங்களுடைய சுதந்தரத்தை சுதந்தரித்துக்கொண்டார்கள்.

131. இப்பொழுது இந்த மனிதன் ஏழையாகி தனது உடைமை எதையாவதை எந்த ஒருவரிடமாவது இழந்துவிட்டால், அதை அவனது நெருங்கின இனத்தான் ஒருவன்தான் மீட்டுக்கொள்ள முடியும். அது ஒன்றே மீட்டுக்கொள்வதற்குரிய வழியாகும். ஆனால் முடிவில் அது திரும்பி வந்து விட வேண்டும். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மாத்திரமே அதை அவன் தன் வசத்தில் வைத்திருக்கமுடியும். அது முடிவாக மூல உரிமைக்காரனிடத்தில் தான் திரும்பி வரவேண்டும். அது அதனுடைய மூல உரிமைக்காரனிடத்தில் திரும்பிப் போயாக வேண்டும். அவன் யூதா கோத் திரத்திலிருந்து வந்தவனாயிருந்தால் ..... அவன் அங்கே இருந்தால், அச்சுதந்திரம் அவனது தந்தைக்கு அளிக்கப்பட்டிருந்தால், அவருக்குப் பிறகு அது அவனுடையதாகும், அல்லது ஏதாவது ஒரு நெருங்கின இனத்தான் தான் அதை எடுத்துக்கொள்ள முடியும். ஆனால் வேறு யாராவது அதை சட்டப் பிரகாரமாக உடைமையாக்கிக் கொண்டிருக்கமுடியாது. அச்சுதந்திரத்தின் உடைமை யுரிமை சாசனத்தை அவர்கள் தங்கள் வசத்தில் வைத்திருக்கக் கூடும். அந்த பத்திரத்தை அவர்கள் அதன் பேரிலுள்ள கடன் செலுத்தித் தீர்க்கப்படுகிற வரையிலும் தங்கள் வசத்தில் வைத் திருக்கலாம். ஆனால் உரிய மனிதன் வரும்பொழுது, அந்த நபர்...

132. உதாரணமாக நான் ஒரு சொத்தை சொந்தமாகக் கொண்டிருக்கிறேன் என்று வைத்துக்கொள்வோம். நான் அதை இன்னொரு கோத்திரமாகிய யூதா கோத்திரத்தைச் சேர்ந்த சகோ. நெவில் அவர்களுக்கு விற்றுவிட்டேன், அல்லது ஒரு அன்னியனுக்கு விற்று விட்டேன் என்று வைத்துக்கொள்வோம். நான் விற்றதின் மூலமாக அவர் அதை உரிய பிரகாரமாக சொந்தங்கொண்டவராக ஆகி விட்டார். அவர் அதில் பிரவேசித்து, அதில் விவசாயம் செய்து, அதன் விளைபொருட்களை எடுத்துக்கொள்ள முடியும். அவர்தான் உரிமைப்பத்திரத்தை உடையவராய் இருக்கிறார். ஆனால் அவர் அதை தனது சொந்தமாகக் கொண்டிருக்கமுடியாது. இஸ்ரவேலில் இவ்வாறு பிரமாணம் இருந்தது. நீங்கள் அதைப்பற்றி லேவியராகமம் 25ம் அதிகாரத்தில் வாசித்துப்பாருங்கள்; அப்பொழுது, அவர்கள் அதை சொந்தங்கொண்டாட முடியாது; அந்த சொத்தை வைத்துக்கொள்ள மாத்திரமே முடியும்.



ரீங்காரமிட்டது, அப்பொழுது அவன், ''ஓ மரணமே, உன் கூர் எங்கே?'' என்றான்.

கல்லறை கூறியது, "பவுலே நான் உன்னை என்னிடம் சேர்த்துக்கொள்வேன், நான் உன்னை புழுதியில் புரட்டிப் போடுவேன்' என்று. நான் பவுலை சிரச்சேதம் செய்து, குழியில் வீசியெறிந்த இடத்திற்குச் சென்று இருக்கிறேன். கல்லறை கூறியது, "நான் உனது சரீரத்தை அழியச்செய்து, அழுகிப் போகச்செய்வேன்'' என்று.

"ஓ பாதாளமே, உன் ஜெயம் எங்கே'' என்று பவுல் கூறினான். பாருங்கள்? ''கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்''. மரணம் தனது கூரை அவனிடத்தில் இழந்தது. "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாக கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார். ஆமென். ''விரும்பினால் இப்பொழுதே தலையை வெட்டிக்கொள்'' என்றான். அதுதான் உண்மையான கிறிஸ்தவ ஆவியாகும். அதுவே காரியம், சகோதரனே.

142.உங்களுக்கு அறிந்துகொள்ள சந்தர்ப்பம் ஏற்பட்டால், மிருகத்தின் முத்திரை எங்ஙனம் பெற்றுக்கொள்ளப்படுகிறது என்பதை அறியுங்கள். நான் இதைப்பற்றிக் கூற விரும்புகிறேன். ஏனெனில், அதைப்பற்றிக் கூறிவிட்டு முடித்துவிடலாம் என்று நான் எண்ணினேன். எவ்வாறு மிருகத்தின் முத்திரையானது பெறப்படுகிறது? அதை நீங்கள் அறிந்துகொள்ள விரும்புகிறீர்களா? அதன் விளைவுகள் என்ன? மிருகத்தின் முத்திரையானது என்னவாயிருக்கிறது?

எது தேவனுடைய முத்திரையாயிருக்கிறது என்பதை நாம் அறிவோம்.

தேவனுடைய முத்திரையானது என்ன? நல்லது, எபேசியர் 4:30ஐ எடுத்துக்கொள்வோம். அதைப்பற்றி அங்கே நீங்களே படித்துத் தெரிந்து கொள்ளலாம். உங்களில் யாராவது வெளிப்படுத்தின விசேஷம் 9:1-4ஐ எடுக்கலாம். இன்னொரு வசனம் 2 கொரிந்தியர் 1:2. அதைப்பற்றி பல இடங்களில் உள்ளது. அவைகளில் சிலவற்றை நான் குறித்து வைத்துள்ளேன். ஆனால் நாம் எபேசியர் 4:30ஐ எடுத்துக் கொண்டு, அங்கே நீங்கள் தேவனுடைய முத்திரையானது என்னவென்று கண்டுகொள்ளலாம். வேறுபல வசனங்களிலும் இதைப்பற்றிக் காணலாம். முத்திரை என்ற வார்த்தையை நீங்கள்

எடுத்துக்கொண்டு, உங்களது ஒத்தவாக்கிய அகராதியில் ஆராய்ந்து பார்த்துக் கொள்ளலாம்.

எபேசியர் 4:30 - இதைக் கவனியுங்கள்.

"அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்."

143.தேவனுடைய முத்திரையானது என்ன? அது பரிசுத்த ஆவியாகும். அது சரி. "தேவனுடைய ஆவியைப் பெற்றிராதவன் என்னுடையவனல்ல என்று தேவன் கூறியுள்ளார் நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தால், நீங்கள் தேவனுடைய பாகமாக இருக்கிறீர்கள். ஏனெனில் நீங்கள் அவருடையவர்களாக இருக்கிறீர்கள். அவர் உங்களை முத்திரையிட்டு, உங்களில் இருக்கிறார், உங்களில் கிரியை செய்துகொண்டு இருக்கிறார். அவர் செய்த அடையாளங்களை நீங்களும் செய்கிறீர்கள். வேதத்தைக் கற்கும் வகுப்பில் இங்கு உள்ளோரே, நீங்கள் ஒவ்வொருவரும் இதைப் புரிந்து கொண்டுவிட்டீர்களா? தேவனுடையவர்களாக ஆவதற்கு பரிசுத்த ஆவியே தேவைப்படுகிறது. பரிசுத்த ஆவிதான் தேவை.

அவ்வாறு நீங்கள் பரிசுத்த ஆவியையுடையவர்களாக இருப்பின், இயேசு செய்த அதே கிரியைகளை நீங்களும் செய்கிறீர்கள். பார்த்தீர்களா? உங்களுடைய அன்பானது.... அவர்கள் உமது முகத்தில் காரி உமிழ்ந்து, உம்மைச் சுற்றி நின்று அடித்தபோது, உம்மில் கசப்பின் வேர் எதுவுமே இல்லை. அவர் அவர்களை உற்று நோக்கி விட்டு, ''பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே'' என்றார். அவர்கள் அறிந்திருக்கவில்லை என்பதைப் பாருங்கள்.

144.அதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? அவரது இரத்தத்தை சிந்த வேண்டுமென்று, அவரது சொந்தப் பிள்ளைகளே கூக்குரலிட்டுக் கொண்டிருந்தனர். வானங்களையும், பூமியையும் சிருஷ்டித்தவர், பூமியிலிருந்து அவர் முளைத்தெழும்பச் செய்த மரத்தினால் உண்டாக்கப்பட்ட சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்தார்;

அவரது சொந்தப் பிள்ளைகள் (பிதாக்களே, உங்கள் பிள்ளைகளைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள், உங்கள் சொந்தப் பிள்ளைகள்). அவருக்கெதிராகக் கூக்குரலிட்டு, ''அவனை அகற்றும், கள்ளனாகிய அந்தப் பரபாஸை விடுதலையாக்கும்'' என்றார்கள். ஓ, நான் அந்த



இழந்துவிட்டான், பறிகொடுத்துவிட்டான். இயேசு மத்தேயு சுவிசேஷம் 5ம் அதிகாரத்தில், 'சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் பூமியை சுதந்தரித்துக்கொள்வார்கள்'' என்று கூறினார். பார்த்தீர்களா? இப்பொழுது நாம் அதை உடையவர்களாயிருக்கவில்லை.

127. அவ்வுரிமை ஆதாமுக்கோ, அல்லது அவனது சந்ததியில் எவருக்குமோ இருக்கவில்லை. ஆதாமின் சந்ததியினருங்கூட எல்லாவற்றையும் முழுவதுமாக இழந்துவிட்டனர். அது ஆதாமின் சந்ததியினருக்கு இல்லை. நாம் எவ்வளவுதான் இவ்வுலகை அழகுபடுத்த முயன்று, எவ்வளவு பெரிய அழகான வீடுகளையும் இன்னபிறவற்றையும் கட்டினாலும், பூமியானது இன்னமும் ஆதாமின் சந்ததிக்கு கிட்டவில்லை. இல்லை, ஐயா, ஏனெனில் சாத்தான் இப்பூமியை முழுவதுமாக தன் வசப்படுத்திக்கொண்டு விட்டான். அப்படித்தான் நடந்தது. ஏனெனில் ஆதாம் அதை பறி கொடுத்துவிட்டான்.

128. ஓ, என்னே! இன்னும் அநேக காரியங்களைக் கூறலாம். இப்பொழுது அதற்காக நான் உங்களுடைய அதிகமான நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. இதற்குப்பிறகு ஞானஸ்நானம் கொடுக்கவேண்டியுள்ளது.

129. அவன் தன் வசப்படுத்திக்கொண்டுள்ளான்; ஆனால் உரிய பிரகாரமாக அவன் அதை தனக்குச் சொந்தமாக்கிக்கொண்டிருக்கவில்லை. சட்டப்படியான உரிமைக்காரன் அதை பறிகொடுத்த போது, சாத்தான் அதை தனதாக்கிக்கொண்டுவிட்டான். அதை மீட்டுக்கொள்வதற்கு ஒரேயொரு வழி மாத்திரமே உண்டு. நெருங் கின இனத்தானாகிய அந்த ஒருவர் மூலம் மாத்திரமே அதை செய்ய முடியும். அவர்தான் உரிய பிரகாரமாக அதை மீட்டுத் தரமுடியும். இப்பொழுது, இயேசுகிறிஸ்துவின் கன்னிப் பிறப்பிலே இதை நாம் உடையவர்களாயிருக்கிறோம்.

130. இப்பொழுது நான் இங்கே ஒரு காரியத்தைக் கூற விரும்பு கிறேன். நாம் முதலாவதாக வேதத்தின் பின்னால் திருப்பிப் பார்க்க விரும்புவது, பழைய ஏற்பாட்டில், லேவியராகமம் 25:23,24 வசனங்களில் மீட்பின் பிரமாணத்தை நீங்கள் காணலாம். அதை நான் இங்கே குறித்து வைத்துள்ளேன். வசனத்தை குறித்துக் கொள்ளுகிறவர்கள் அதை குறித்துக் கொள்ளுங்கள். எந்த வொன்றையும் ஒரு மனிதன்

எதையும் அவன் செய்து கொள்ளலாம். அவன் பூமியிலுள்ளவைகளுக்கு பெயரிட்டு அழைத்தான். செய்ய விரும்பிய எதையும் செய்தான். அவன் உண்மையிலேயே ஒரு தேவபுத்திரனாக இருந்தான்.

124. இப்பொழுது, ஆதாம் வீழ்ச்சியடைந்தபோது, அவன் தனது உடைமையுரிமைப் பத்திரத்தின் உரிமை இழக்கப்பெற்றான். அதை அவன் சாத்தானிடத்தில் பறி கொடுத்தான். சாத்தான் அந்த உடைமையுரிமைப் பத்திரத்தை எடுத்துக்கொண்டான். ஆதாம் மிகவும் அசதியுள்ளவனாயிருந்தான். அவன் தனது உரிமையை மீட்டுக்கொள்ளவில்லை. ஏனெனில் அவன் தனது உரிமையை மீட்டுக்கொள்ள இயலாதவனாயிருந்தான். ஆனால் சாத்தானானவன், உரிய நியதியின்படி, அதின்மேல் உரிமையுடையவனாக இராமல், அதை கைப்பற்றிக் கொண்டவனாக இருக்கிறான். அவன்தானே இப்பூமியின் தேவனாக இருக்கிறான். அதை நீங்கள் புரிந்து கொண்டீர்களா? சாத்தான் அதை எடுத்துக்கொண்டவனாக, தன் கைகளில் பற்றிக்கொண்டவனாக இருக்கிறான். மரணம் அவன் கரத்தில் இருக்கிறது; இப்பூமியானது அவனது கரத்தில் உள்ளது. உலகம் அவனுக்குச் சொந்தமாயிருக்கிறது. ஒவ்வொரு தேசமும் அவனுக்கு சொந்தமாக இருக்கிறது. அவன் அதை ஆளுகிறான். அவன் முழு உலகையும் அதிலுள்ள ஒவ்வொன்றையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறான். சாத்தான் அவ்வாறு செய்திருக்கிறான்.

125. ஆனால் தேவனுக்கு நன்றி; நாமோ இவ்வுலகுக்கு சொந்தமானவர்கள் அல்ல. பார்த்தீர்களா? நாம்.... நான் சபையைச் சொல்ல வில்லை. அவன் சபையை தன் ஆதிக்கத்திற்குள் வைத்திருக்கவில்லை. அவன் உலகை மாத்திரமே தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறான். அவர்கள் அவனுடையவர்கள் என்றும், அவன் இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் என்றும் அவர் கூறியிருக்கிறார். இயேசு அவன் அவ்வாறு இருந்தான் என்றும், அவன் அவ்வாறு இருக்கிறான் என்றும் கூறியிருக்கிறார். அவன் இந்தப் பூமியின் தேவன் என்றும், அவனே ஜனங்களின் கண்களைக் குருடாக்கினான் என்றும் கூறியிருக்கிறார். அவரோ பரலோகத்தின் தேவனானவர். அவன்தானே பூமியை உரிய பிரகாரம் தனதுடைமை யாக்கிக் கொண்டிருக்கவில்லை. அவனுடைய உடைமையாக அது இல்லை. ஆனால் ஆதாம் அதைப் பறிகொடுத்துவிட்டான்.

126. ஆதாம் அதனுடைய, இதற்குரிய நித்திய ஜீவனுக்குரிய அனைத்து உரிமைகள், பூமியை சுதந்தரித்துக் கொள்வதற்கு உரிய உடைமையுரிமை சாசனத்தை, அதன் பேரில் உள்ள உரிமையை



பரபாஸாயிருந்தேன். மரிக்கிறதற்கு பாத்திரவானாயிருந்தவன் நான், அவரோ என்னுடைய ஸ்தானத்தை எடுத்துக்கொண்டார். சிறையில் அந்த பரபாஸ் என்பவன் இருந்த பொழுது, அங்கே அந்த நூற்றுக்கதிபதி மிகுந்த ஓசையோடு நடந்து வந்து கதவைத் திறந்தபொழுது, பரபாஸ் எவ்வாறு சிந்தித்துக் கொண்டிருந்திருப்பான்? 'இன்னும் சிறிது நேரத்தில் நான் மரித்துப்போய்விடுவேன், நான் ஒரு கொலைக்காரன், நான் ஒரு திருடன். இன்று என்னை அவர்கள் கொன்றுவிடப் போகிறார்கள். அவர்கள் அவ்வாறு செய்வார்கள் என்பதை அறிவேன். இன்று பஸ்கா தினமாகும், எனவே நான் உண்மையிலேயே நான் இன்று மரிப்பேன் என்று அறிவேன்'' என்று பரபாஸ் தனக்குள் சொல்லிக் கொண்டிருந்தான். முந்தின இரவு முழுவதும் நடுங்கினவனாக காணப்பட்டான். நிம்மதியற்ற எந்தவொரு பாவியையும் போல அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தான்.

முதலாவதாக, அங்கே அந்த காவலாளி வருகிறான். அப்பொழுது பரபாஸ், "ஓ, ஓ, இதோ இவன் வந்துவிட்டான், நான் போய்விடவேண்டும்'' என்றான். அப்பொழுது சாவியைப் போட்டுக்ளிக் என்று காவலாளி கதவைத்திறந்தான்.

காவலாளி அட்டென்ஷனில் நின்று, "பரபாஸே,வெளியே வா" என்று அழைத்தான்.

''ஊ ஊ ,ஆம், நான் போகவேண்டும் என்பதை அறிவேன். நான் போய்க்கொண்டிருக்கிறேன்'' என்றான் பரபாஸ்.

'நீ போகலாம், உனக்கு விருப்பமானபடி செய்து கொள்ளலாம்'' என்றான் காவலாளி.

''என்ன?'' என்றான் பரபாஸ்.

'நீ விடுதலையாயிருக்கிறாய், நீ வெளியே போகலாம், நீ போய் உனக்கு விருப்பமானபடி செய்துகொள்'' என்றான்.

''நான் விடுதலையாகிவிட்டேனா? நீரல்லவா எனக்கு மரண தண்டனை அளித்தீர்'' என்றான். தேவன் அனைத்து பாவிகளையும் மரணாக்கினைக்குள்ளாக்குகிறார். ''நீர் எனக்கு மரண தண்டனை விதித்துள்ளீரே, அப்படியிருக்க நான் எப்படி விடுதலையாகிபோக முடியும்?'' என்று பரபாஸ் கேட்டான்.

''இங்கேவா பரபாஸ், அதோ அங்கே அவர் அந்த மலையின் மேல் ஏறிச்செல்வதைப் பார், சிலுவை கல்லின் மேல் மோதும் போது

உண்டாகும் சத்தத்தைக் கேள். அவருடைய கைகளில் அவர்கள் ஆணியறைவதனால் உண்டாகும் சத்தத்தைக் கவனி, அங்கே கதறுகிற அவரை நோக்கு, அவர் முகத்தில் உப்பான கண்ணீரும், இரத்தமும் கலந்து காணப்படுகிறதை பார். பரபாஸே, உனது ஸ்தானத்தை அவர் எடுத்துக்கொண்டார். அவர் உனக்காக மரித்தார்"

''நான் விடுதலையாவதற்காக அவர் மரித்தார்" என்றா கூறுகிறீர்கள்"

''ஆம்''

"ஓ நல்லது, நான் மறுபடியும் கொலை செய்ய ஆரம்பிப்பேன்.

''ஓ, என்னே ஒரு நன்றியற்றவன் நீ, நீ மரிப்பதற்கு பாத்திரமானவன்.

145.மகிமையின் அதிபதி மரித்த அவ்வற்புத சிலுவையை நான் காண்கையில், என்னுடைய பெருமையெல்லாம் வீண் நஷ்டம் தான். ஓ, என்னே கவிஞன் இவ்வாறு பாடியது ஒன்றும் ஆச்சரியம் அல்ல.

அவர் உயிரோடிருந்து என்னை நேசித்தார், மரித்து என்னை இரட்சித்தார்,

அடக்கம் பண்ணப்பட்டு, அவர் என் பாவங்களை சுமந்து தொலைவில் அகற்றினார்,

உயிர்த்து, இலவசமாக என்னை என்றென் றைக்குமாக நீதிமானாக்குகிறார்,

ஓர் நாளில் அவர் வருவார், ஓ அது மகிமையான நாளாயிருக்கும்.

146.அவர் எனக்காக செய்ததை நான் காண்கையில், அவரை நான் எவ்வாறு புறக்கணிக்க முடியும்? நான் எங்ஙனம் அதைச் செய்வேன்? பூமியில் எனக்குள்ள நபர் யாவரையும் இழந்துவிட நான் விரும்புவேன். ஸ்தாபனங்களால் நான் உதைத்து எறியப்படவும், யாவற்றாலும் உதைத்து எறியப்படவும் ஆயத்தமாயிருப்பேன். நான் அங்கே நோக்கிப் பார்க்கையில், நான் மரணாக்கினைக்குள்ளாக்கப் பட்டிருக்கையில், அவரோ என்னுடைய ஸ்தானத்தை எடுத்துக்கொண்டுவிட்டார். நிச்சயமாக, கர்த்தாவே, யாற்றையும் வீண் நஷ்டமென்று நான் எண்ணுகிறேன். ஓ, நான் சிலுவையை தழுவிக்கொள்ளட்டும். கர்த்தாவே.

கன்மலைகள் இரண்டாகப் பிளந்தன, ஆகாயங்கள்

இருண்டன, இரட்சகர் தலையை சாய்த்து மரித்தார்,



உயர்த்தப்பட்டிருக்கிறோம். எனவே நாம் யாவரையும் நேசிக்கிறோம். தேவன் நம்மை நேசிக்கிறார், அதை நாம் அறிந்திருக்கிறோம். நாம் நமது ஜீவியங்களை கண்காணித்துப் பார்த்து, அது பரிசுத்த ஆவியாயிருக்கிறது என்பதைக் காண்கிறோம். ஏனெனில், நாம் இனிமேல் இவ்வுலகத்தின் காரியங்களுக்காக கவலைப் படுகிறதில்லை. நீங்கள் அவ்வாறுதான் இருக்கிறீர்கள். நீங்கள் இவ்வுலகையும் இவ்வுலகத்தின் காரியங்களையும் நேசிக்கிற வரையிலும் தேவனுடைய அன்பு உங்களிடத்தில் இன்னமும் இருக்கவில்லை. கவனித்தீர்களா? ஆனால் நீங்கள் அதற்கு மேலாக உயர்ந்து இருக்கும் பொழுது, அப்பொழுது நீங்கள் உங்களுடைய சுதந்திரத்தை உடையவர்களாய் இருக்கிறீர்கள் என்பதை அறிகிறீர் கள். அப்பொழுது நீங்கள் உங்களுடைய பூரண மீட்பை நோக்கிச் செல்லும் பாதையில் சரியாக இருந்துகொண்டிருக்கிறீர்கள்.

121. நாம் முதலாவதாக இயேசுவைக் காணவேண்டும், அது வரைக்கிலும் அது வராது என்பதைப் பாருங்கள். அவர் வரும் பொழுது நாம் அவருடைய சரீரத்தைப் போன்றதொரு சரீரத்தைப் பெற்றுக்கொள்வோம். நாம் அவரைப்போல் ஆகிவிடுவோம்.

122. நாம் இங்கே ஒன்றை இழந்துவிட்டோம், ஏனெனில் வேதமும் அவ்வாறுதான் கூறுகிறது; இங்கேயுள்ள இப்புத்தகத்தில் .... அது நம்மை மீட்டிருக்கிறது .. எதிலிருந்து நாம் மீட்கப்பட்டுள்ளோம்? நாம் எதையோ ஒன்றை இழந்துவிட்டிருக்க வேண்டும். நீங்கள் மீட்கப்படுவதற்கு முன்னால், நம்மை மீண்டும் மீட்டுக்கொண்ட ஏதோ ஒன்று இருக்க வேண்டும். நாம் பெற்றிருந்த எல்லா சுதந்திரமும் மீண்டும் மீட்டுத் தரப்பட்டுள்ளது. ஒரு சமயத்தில் நாம் ஏதோ ஒன்றைப் பெற்றிருந்திருக்கவேண்டும். இப்பொழுது நாம் அதை உடையவர்களாயிருக்கவில்லை. ஆனால் இந்த ஆட்டுக்குட்டியானவர் மீட்பதற்காக வந்தார். பார்த்தீர்களா? ஏதோ ஒன்று நாம் பெற்றிருந்தோம். அதை இழந்துவிட்டோம்.

123. இப்பொழுது கவனியுங்கள். நாம் எதை இழந்தோம்? ஆதாம் நித்திய ஜீவனை உடையவனாயிருப்பதற்கு அவனுக்கு அருளப் பட்டது. அவன் ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்கிறபொழுது அவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. ஆதாம் பூமியைச் சுதந்திரித்துக் கொண்டான் என்பதை மீண்டும் நாம் இங்கே பார்க்கிறோம். அவன் இப்பூமியின்மேல் ஒரு குட்டி தேவனைப்போல் (amateur god) இருந்தான். இப்பூமியானது அவனுடையதாயிருந்தது. யாவும் அவனுடைய கரத்தில் அளிக்கப்பட்டிருந்தது. அவன் அதனிடத்தில் செய்ய விரும்பிய

போவோமென்றால், நாம் அவருடைய பிரதேசத்தை விட்டு நீங்கினவர்களாக இருப்போம்.

117. ஆகவே பகட்டாக பளபளப்பாக மினுங்க வேண்டாம். கொழுந்துவிட்டு பிரகாசியுங்கள். நீங்களாகவே கொழுந்து விட்டு பிரகாசிக்க முடியாது. அது உங்கள் மூலமாக கொழுந்து விட்டு எரிந்து பிரகாசிக்க நீங்கள் அதை அனுமதிக்க வேண்டும்.

118. சிறிய மினுக்கட்டான் பூச்சி, தான் பிரகாசிக்க விரும்புவதினால் அது பிரகாசம் விடுகிறதில்லை; அது பிரகாசிக்கிறபடியினாலே, அதிலே பிரகாசம் உண்டாகும்படி ஏதோ ஒன்றுள்ளது. அது அதனிடத்திலேயே இருக்கிறது. அதுவே அதைச் செய்கிறது. அதனுள் ஏதோ ஒன்று இருந்துகொண்டு அவ்வாறு பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

119. நல்லது, பரிசுத்த ஆவியைப் பொருத்தமட்டிலும் காரியம் அவ்வாறுதான் உள்ளது. நாம் வினோதமாக நடக்கவேண்டும் என்று நடக்க வேண்டியதில்லை; வித்தியாசமானவர்களாக இருக்க வேண்டுமே என்பதற்காக அப்படி இருக்கவேண்டியதில்லை. அதற்கு மிஞ்சி இருக்கவேண்டியதில்லை; நீங்களாக எதையும் செய்ய முயற்சி செய்து இறுக்கமாக இராமல், உங்களுடைய சொந்த கிரியைகளை நீங்கள் செய்யாமல், தேவபக்தியுள்ள ஜீவியத்தைச் செய்து, உங்கள் மூலமாக தேவன் ஜீவிக்க அனுமதி யுங்கள். அதுதானே சுவிசேஷத்திற்காக கொழுந்துவிட்டுப் பிரகா சித்திடும். அது பகட்டாக மேனாமினுக்கியாக இருக்காது. மேனா மினுக்கியாக இருந்தால், அதைக்கண்டு குரங்குகள் தான் குதிக்கும். வெற்றுப் பகட்டாக மினுங்குபவைகளைக் கண்டு அவைகள் எப்பொழுதும் குதிக்கும். ஆனால் உண்மையான ஒளிப் பிரகாசமோ, பரிசுத்த ஆவியின் மென்மையானதான தூய மென்னிறைவுடைய ஒளியின் இனிமையானதாகவும் இருக்கும்.

120. இப்பொழுது நாம் அந்த உயிர்த்தெழுதலுக்காகவே காத்துக் கொண்டிருக்கிறோம். நல்லது, இப்பொழுது நீங்கள் அதைப்புரிந்து கொண்டீர்களா? ''அச்சாரம்'' என்பதற்கு அர்த்தமாக நான் கூறுபவைகளை நீங்கள் புரிந்து கொண்டு விட்டீர்களென்றால் ''ஆமென்'' என்று கூறுங்கள். (சபையார் 'ஆமென்'' என்று கூறுகிறார்கள். - ஆசி). மீட்பு..... நாம் மரணத்தைவிட்டு ஜீவனுக்குட்பட்டிருக்கிறோம் என்று அறிகிறோம். ஏனெனில் நாம் உயர்த்தப்பட்டிருக்கிறோம். நாம் நமக்குள் உயர்த்தப்படவில்லை; ஆனால் லௌகீக காரியங்களைவிட்டு



அப்பொழுது திரைச்சீலை கிழிந்து வழியை வெளிப்படுத்தியது

பரலோகத்தின் மகிழ்ச்சிக்கும், முடிவற்ற நாளுக்கும்.

147.ஓ, இயேசுவே, நான் உம்மண்டையில் நெருங்கி தங்கியிருக்கட்டும். உமது பக்கத்திலிருந்து என்னை அகற்றிவிடாதேயும், இரத்தம் வடியும் உமது ஐங்காயங்களை நான் காணட்டும்.

ஓ பரலோகத்தின் அதிபதியே எப்படியாக அவர் எனக்காக மரித்தார் நான் பிழைக்கும்படியாக அவர் மரித்தார். ஆக்கினைக்குட் படுத்தப்பட்ட ஒருவன்... பாவ சங்கிலியால் நரகத்தின் சிறையில் வைக்கப்பட்டிருந்த, ஆக்கினைக்குட் படுத்தப்பட்ட, குற்றமுள்ளவனாக, என்றென்றும் அழிந்து போயிருக்கும்படியாக இருந்தேன். ஒருவர் என்னுடைய ஸ்தானத்தை எடுத்துக்கொண்டார். அதன்பிறகு அவர்கள்....

இங்கே நான் 18 அல்லது 20 வயதினனாக இருக்கையில், ஒரு நாளிலே பரிசுத்த ஆவியானவர். நான், ''நான் யார், நான் எங்கிருந்து வந்தேன், எங்கே போகிறேன்?'' என்று கூறினேன்.

அவர் கூறினார், ''அவர் உனது ஸ்தானத்தை எடுத்துக் கொண்டார். நீ அங்கே போய்க் கொண்டிருந்தாய். அவர் உன் ஸ்தானத்தை எடுத்துக்கொண்டார். அவர் அங்கே இருக்கிறார் என்று.

"ஓ தேவ ஆட்டுக்குட்டியே, ஓ தேவ ஆட்டுக்குட்டியே, நான் வருகிறேன், நான் வருகிறேன். வெறுங்கையனாக நான் வருகிறேன், உமக்குக் கொடுக்க என்னிடத்தில் ஒன்றுமில்லை. உம்முடைய சிலுவையை நான் பற்றிக்கொள்கிறேன். கர்த்தாவே, என்னி டம் இருப்பதெல்லாம் அது மாத்திரமே'' என்று நான் கூறினேன்.

அவர் என்னை உள்ளே எடுத்துக்கொண்டார். கெட்ட குமாரனை அவனது தந்தை உடுத்துவித்தது போல், என்னையும் உடுத்துவித்தார். புத்தாடையை எனக்கு உடுத்துவித்தார். அது என்னுடைய ஆடையல்ல, அது அவருடைய நீதியாகிய வஸ்திரமே, அதைக்கொண்டு என்னை உடுத்துவித்தார். ஒரு விவாக மோதிரத்தை, அந்நாளில் நான் மணவாட்டியோடு இருக்கத்தக்கதாக, என் விரலில் அணிவித்தார். இப்பொழுது கொழுத்த கன்று அடிக்கப்பட்டிருக்கிறது. நாம் இப்பொழுது களிகூர்ந்து கொண்டிருக்கிறோம், ஏனெனில், நான் முன்பு மரித்திருந்தேன், இப்பொழுதோ உயிர்த்துவிட்டேன். காணாமற்போனேன், இப்பொழுதோ கண்டுபிடிக்கப்பட்டேன்.

ஆச்சரியமான கிருபை, அதன் சப்தம் இனிமையானது,

அது பாவியான என்னையும் இரட்சித்தது (பரபாஸை விடமோசமான நான்)

நான் காணாமற்போனேன், இப்பொழுதோ கண்டு பிடிக்கப்பட்டேன்.

நான் குருடனாயிருந்தேன், இப்பொழுதோ காண்கிறேன்.

பயந்திருக்க எனக்குப் கற்பித்தது கிருபையே

அச்சம் யாவும் தீர்த்ததுவும் கிருபையே

நான் முதலில் விசுவாசித்த வேளையிலே கிருபையானது எத்தனையாய் விலையேறப் பெற்றதாய் காணப்பட்டது!

பதினாயிரம் ஆண்டுக்காலங்களாக நாம் அங்கே இருக்கிற வேளையில், சூரியனைப் போல் பிரகாசமாயிருந்த . (இனி நட்சத்திரங்களே இல்லை, ஆனால் சூரியன் தான்)

நாம் ஆதியில் ஆரம்பித்ததை விட, அவரைத் துதித்துப் பாடிட நமக்கு நீண்டகாலம் உண்டாயிருக்கும்

(நாம் அப்பொழுது நித்தியத்தில் இருக்கிறோம்).

ஓ, நான் எவ்வளவாய் இயேசுவை நேசிக்கிறேன். ஏனெனில் அவர் என்னில் முந்தி அன்புகூர்ந்தார். ஓ எவ்வளவு அற்புதமானது!

148.இப்பொழுது என்னோடு கூட யாத்திராகமம் 21ம் அதிகாரத்திற்குத் திருப்புங்கள். அவருடைய ஆவியைக் குறித்த ஆலோசனைகள் இப்பொழுது. எவ்வாறு முத்திரையைப் பெறுவது என்பதைப் பற்றி இப்பொழுது பேசப்போகிறோம். நான் உங்களுக்கு அதைக் குறித்து காண்பித்து, அதன் விளைவுகளைப் பற்றிக்கூறிக் கொண்டிருந்தேன். அதோ அங்கே அது இருக்கிறது. எவ்வாறு மிருகத்தின் முத்திரையை நீங்கள் பெற்றுக்கொள்கிறீர்கள்? அங்கே உங்களுடைய முடிவு எவ்வாறு உள்ளது என்பதை நான் காண்பிப்பேன். இப்பொழுது, மிருகத்தின் முத்திரை... யாத்திராகமம் 21ம் அதிகாரம். அதைக் குறித்து பழைய ஏற்பாட்டிலிருந்து நாம் எடுத்துக்கொள்வோம். அதனால் நீங்கள் அதைக்குறித்து கண்டுகொள்ள முடியும். நாம் யாவரும் அறிந்திருக்கிறபடி புதிய ஏற்பாட்டிலும் ஏராளமான வேதவாக்கியங்கள் உள்ளன, அவைகளை நான் இங்கே எழுதி வைத்திருக்கிறேன். இப்பொழுது நாம் வாசிப்போம்.



கட்டிடம் இருக்க வேண்டும். நமக்கு மற்றவர்களுடையதை விட சிறப்பான சீட்டாட்டம் இருக்கவேண்டும், நமக்கு சிறந்த இன்னது வேண்டும். இன்னது வேண்டும்'' என்றெல்லாம் கூறுகிறீர்கள். ஏன் இப்படி? எங்ஙனம் நீங்கள் அதை உலகின் கவர்ச்சியோடும் பகட்டு மினுமினுப்போடும் ஒப்பிட்டுப் பேசமுடியும்? நாம் அவ்வாறு இல்லை. சுவிசேஷமானது பகட்டு மினுமினுப்பு (glisten) உள்ளதல்ல. அது செந்தழலாகப் பிரகாசிக்கும் ஒன்றாகும் (glow). பகட்டொளிக்கும், செந்தழலாகப் பிரகாசிப்பதற்கும் வித்தியாசம் உண்டு. கவனித்தீர்களா?

114. நாம் சுற்றிக்கொண்டே போகிறோம்; நான் ஏற்கனவே கூறிய வண்ணமாக ஒரு பிணத்தை ஒரு சவக்கிடங்கிலிருந்து இன்னொரு சவக்கிடங்கிற்கு மாற்றுவது போல்; ஒரு சபையை விட்டு இன் னொரு சபைக்கு உறுப்பினராவது, அப்படி மாற்றிக்கொண்டே போவதாகிய அவ்விதமான காரியத்தை செய்கிறோம். அவ்வாறு செய்வதினால் நமக்கு என்ன பயன்? நாம் அதை பகட்டாக ஆக்கிட முயற்சிக்கிறோம். கட்டிடங்களுக்கு ஊசி போன்ற கோபுரங்களை உண்டாக்கிக்கொண்டு, பெரிய அருமையான கட்டிடங்களை அமைத்துக் கொள்கிறோம். மெதோடிஸ்ட்டுகளுடையதைவிட மேலான ஒன்று வேண்டும். நாம் கத்தோலிக்கரோடு இந்த விஷயத்தில்தான் போட்டிபோட்டுக்கொண்டு இருந்து கொண்டிருக்கிறோம். நம்முடைய சபைகளில் சீட்டாட்டங்கள் உள்ளன; பார்ட்டிகள் நடத்துகிறோம், இரவு விருந்துகள், களியாட்டங்கள், இன்ன பிறவும் நமக்கு சபைகளில் ஏராளம் உள்ளன.

115. இந்த சபையானது ஒருபோதும் உலகோடு ஒப்பிட முடியாது. நீங்கள் உங்கள் சபையின் செயல்பாட்டை மேசோனிக் லாட்ஜோடு எப்படி ஒப்பிடமுடியும்? (ஃப்ரீமேசன் என்னப்படும் ஒரு சர்வதேச இரகசிய ஸ்தாபனத்தின் சபை கூடுமிடமே மேசோனிக் லாட்ஜ் என்னப்படுவதாகும். இந்த ஸ்தாபனம் பிசாசையே நேரடியாக தொழுகை செய்பவர்கள் ஆவர் - மொழிபெயர்ப்பாளர்). அது அவர்களுடைய நிலைக்களம். அவர்களுடைய நிலையில் போய் நீங்கள் நிற்க முயலவேண்டாம்.

116. அவர்கள் பெற்றிராத ஒன்றை நாம் பெற்றிருக்கிறோம். நாம் இயேசுவை உடையவர்களாயிருக்கிறோம். அவர்களுக்கு அந்த ஒன்று வேண்டுமெனில் அவர்கள் இங்கே வரட்டும். கிறிஸ்துவில் நிலைத்திருங்கள். நாம் இயேசுவை உடையவர்களாயிருக்கிறோம். அவர்கள் எடுத்துக்கொள்ளமாட்டார்கள். இங்கே வராதவரையிலும் அவர்களால் இயேசுவைப் பெற்றுக்கொள்ள முடியாது. நாம் அங்கே

விட்டுக் கடந்து ஜீவனுக்குள் பிரவேசித் திருக்கிறோம் என்று அறிந்திருக்கிறோம். ஆமென்.

110. இங்கே நான் அதைக்குறித்து விளக்கிக் காண்பித்தவிதமாக அது இருக்கிறது. இதோ இங்கேதான் ஒரு சாதாரண பாவியானவன் ஓடிச்சென்று, தாழ்விடத்துக்குப் போய் விழுகிறான். இங்கோ இந்த கிறிஸ்தவன் அதைவிட மேலான நிலைக்குப் போய் அந்த விஷயங்களிலிருந்தும் மேலாக உயர்த்தப்படுகிறான். அதுவே அவனது இரட்சிப்பின் அச்சாரமாயிருக்கிறது.

111. தரிசனங்கள் உங்களுக்கு என்ன செய்கிறது என்பதை நீங்கள் அறிந்து கொள்வதற்காக. தேவன் எனக்கு நியாயாதிபதியாக இருக் கிறார். எனவே உதவி செய்திடுக. நான் வேறொரு தரிசனத்தைப் பெற விரும்பவில்லை. அப்படி பெற்றுக்கொண்டால் அதை என்னோடு வைத்துக்கொள்ளுவேன். ஏனெனில் அது என்ன செய்கிறது என்பதை நான் காண்கிறேன். மக்கள் அந்தவிதமான ஊழியத்திற்கு ஆயத்தமாயிருக்கவில்லை. எனவே நான் அதை அப்படியே விட்டுவிட்டு, திரும்பி இங்கு வந்துவிடவேண்டும். நான் மீண்டும் ஊழியக் களத்திற்கு எப்பொழுதாவது திரும்பி வருவேனென்றால், நான் ஒரு சுவிசேஷகனாகவே இருப்பேன். ஆனால் இங்கே பாருங்கள். இங்கே இந்த இடத்தில், இங்கே திரும்பி வருதலில், இங்கே மேலே வருகையில், நீங்கள் இங்கே பரம வாசஸ்தலங்களுக்குப் போகிறீர்கள். நீங்கள் அங்கே உன்னதமான ஸ்தலங்களில் வாசம் பண்ணுகிறீர்கள். மனிதனின் சிந்தையில்கூட தோன்றக்கூடாத, அந்தவிதமான காரியங்களுக்கும் அப்பாற்பட்டதான எந்த ஒன்றுக்கும் மேம்பட்டு நீங்கள் போய் விடுகிறீர்கள். அப்பொழுது நீங்கள் அங்கே அந்த ஸ்தலங்களில் போய்விடுகிறீர்கள்.

112. ஆனால் நீங்கள் பாருங்கள். நாம் பரிசுத்த ஆவியினாலே, நம்முடைய சுதந்திரத்தின் அச்சாரத்தை உடையவர்களா யிருக்கிறோம். ஏனெனில் நாம்தானே இவ்வுலகத்தின் காரியங்களி லிருந்து உயர்த்தப்பட்டிருக்கிறோம். நாம் உலகத்தோடுதான் சென்றுகொண்டிருகக்கிறோம்; ஆனால் நாம் உலகத்திலும் உயர்ந்து காணப்படுகிறோம். ஓ, சகோதரன் நெவில் அவர்களே, தேவன் இரக்கமாயிருந்து ஜீவனுள்ள தேவனுடைய சபைக்கு அருளுவாராக.

113. ஒரு சபையைக் குறித்து, ஒரு அழகான சபையைக் குறித்து நாம் எண்ணப்போகையில், நாம் அதை உலகின் காரியங்களோடு ஒப்பிட்டுவிடுகிறோம். ''நமக்கு அவர்களுக்கு இருப்பதைவிட சிறந்த



“மேலும், நீ அவர்களுக்கு அறிவிக்க வேண்டிய பிரமாணங்களாவன:

எபிரெயரில் ஒரு அடிமையைக் கொண்டாயானால்... (எபிரெயன் என்னப்பட்டவன் ஒரு விசுவாசி என்பதை இப்பொழுது நீங்கள் நினைவில் கொள்ளுங்கள்)... அவன் ஆறு வருஷம் சேவித்து, ஏழாம் வருஷத்திலே ஒன்றும் கொடாமல் விடுதலை பெற்றுப் போகக்கடவன்.

ஒன்றிக்காரனாய் வந்திருந்தானானால், ஒன்றிக்காரனாய்ப் போகக்கடவன்; விவாகம் பண்ணினவனாய் வந்திருந்தானானால், அவன் பெண் ஜாதி அவனோடேகூடப் போகக்கடவள்.

அவன் எஜமான் அவனுக்கு ஒரு பெண்ணை விவாகம் செய்து கொடுத்தும், அவள் அவனுக்கு ஆண்பிள்ளைகளை யாவது பெண்பிள்ளைகளையாவது பெற்றும் இருந்தால், அந்தப் பெண்ணும் அவள் பிள்ளைகளும் அவன் எஜமானைச் சேரக்கடவர்கள்; அவன் மாத்திரம் ஒன்றியாய்ப் போகக்கடவன்.“

யாத்.21:1-4

149.என்னுடைய நேரமானது முடிந்துவிட்டது என்று நான் அறிவேன். சகோதரன் நெவில் அவர்களே, என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். சகோதரனே, இதை நான் ஆழமாகப் பதிக்க வேண்டும்.

இங்கு கவனியுங்கள். உங்களுடைய தாய் என்னவாக இருக்கிறார்கள் என்பதோ உங்கள் தந்தை என்னவாக இருக்கிறார் என்பதோ காரியமல்ல. நீங்கள் தான் உங்களுடைய மனைவி அல்ல, பாருங்கள், உங்கள் மனைவிக்கும் இதற்கும் சம்மந்தமல்ல. அவனது மனைவியும் பிள்ளைகளும் காரணமல்ல. அது அந்த நபரைப் பொறுத்ததுதான். உங்களது தாயார் ஒரு பரிசுத்தவாட்டி யாயிருந்திருக்கலாம், உங்களது தந்தை ஒரு பரிசுத்தவானாக இருந்திருக்கக்கூடும்; அதைப்போலவே, ஏசாவின் தாய், தந்தையும் இருந்தார்கள். அவன் நிலையற்றவனாக இருந்தான். பாருங்கள்? ஆனால் அவன், தனிப்பட்ட நபரான உங்களைப் பொறுத்ததுதான் அது.

'என் தந்தை ஒரு பிரசங்கியார்'' என்று கூறலாம்.

அதற்கும் உனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை.

“என் தாயார் ஒரு தேவபக்தியுள்ள பெண்மணி'' எனலாம். 'ஓ, அவள் பரலோகத்தில் இருக்கிறாள்” என்றும் கூறலாம்.

அது சரியாக இருக்கலாம். ஆனால் உன்னைக் குறித்து என்ன? உன்னைப் பொறுத்துதான் உள்ளது.

150.''அந்த அடிமை...

இங்கேதான் அவன்... இப்பொழுது இந்த மிருகத்தின் முத்திரையைக் குறித்து கவனியுங்கள். கிரமமாக நான் ஏற்கனவே கூறியவைகளை மீண்டும் கூற எனக்கு நேரமேயில்லை, ஏனெனில் இன்னும் 20 நிமிடங்களே தான் உள்ளது. ஆனால் நான் உங்களுக்கு இதைக்கூற விரும்புகிறேன்.

ஒவ்வொரு ஏழாம் வருஷம் என்று கூறப்பட்ட ஒரு வேளையானது அக்காலத்தில் கூறப்பட்டுள்ளது. ஆறு ஆண்டுகள்... ஏழாம் ஆண்டில்... இங்கே அமர்ந்திருக்கிற வேதமாணாக்கர்கள், ஊழியக்காரர்கள் இது உண்மை என்று அறிவர்... ஏழாம் ஆண்டுகளில் யாவும் ஓய்ந்திருந்தது. அது யூபிலி வருஷம் என்று அழைக்கப்பட்டது. ஏழாம் ஆண்டில் ஒன்றும் பயிரிடப்படவில்லை. தேசமானது ஓய்ந்திருந்தது. யாவும் அவர்கள் தானியங்களை பொறுக்கமட்டுமே செய்தார்கள். யாவும் ஏழாம் ஆண்டில் ஓய்ந்திருந்தன.

ஏழாம் ஆண்டில், அங்கே ஒரு ஆசாரியனானவன் ஒரு எக்காளம் ஊதுவான். ஒரு மனிதன் அடிமையாக இருந்தானென்றால், அவனது கடன்கள் எவ்வளவா யிருந்தாலும், எனக்கு கவலையில்லை. அவன் விடுதலையாயிருக்கிறான்.

151.இப்பொழுது, அதுதானே சுவிசேஷ எக்காளத்திற்கு முன்னடையாளமாக இருக்கிறது.

இத்தனை ஆண்டுகளாக ஒருவேளை நீங்கள் சாத்தானின் சங்கிலியால் கட்டுண்டு , மது அருந்துதல், புகைத்தல், சூதாடுதல், மற்றும் பாவம், அசுத்தமான காரியங்களிலும் ஈடுபட்டு, அதினால் அவனுக்கு ஊழியம் செய்திருப்பீர்கள். ஆனால் சுவிசேஷ எக்காளம் ஊதப்படுகையில், நீங்கள் கேட்கும்பொழுது, நீங்கள் அடிமையாயிருப்பவைகளினின்றும் விடுதலையாகிச் செல்லலாம் என்பதுதான் அதற்கு அடையாளமாக இருக்கிறது. நீங்கள் விடுபட்டு போகலாம்.

'விசுவாசம் கேள்வியினால் வரும். இப்பொழுது நீங்கள் பூரண சுவிசேஷத்தைக் கேட்டிருக்கிறீர்கள். அப்பொழுது, நீங்கள் இனிமேல் கட்டுண்டவர்களாக இருக்கத் தேவையில்லை. இப்பொழுது, நீங்கள் உட்கார்ந்து, 'ஓ, நான் அதன் சப்தத்தைக் கேட்டேன். ஆனால் நான் அதற்குச் செவிகொடுக்கவில்லை” என்று கூறக்கூடும். பாருங்கள்?



107. நாம் இப்பொழுது அச்சாரத்தை உடையவர்களாயிருக்கிறோம். நமது ஆவி முழு சுவிகாரத்தை அடைவதற்காக ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கின்றது. நாம் பரிசுத்த ஆவியைப் பெறும் பொழுது, அது நமது முழு சுவிகாரத்தின் அல்லது முழு இரட்சிப்பின் அச்சாரமாயுள்ளது. ஓ, இது எத்தனை அழகாயிருக்கிறது. நான் அதை மிகவும் நேசிக்கிறேன்.

108. நாம் சுவிகாரத்தின் முழுமையை அடைவதற்காக காத்துக் கொண்டிருக்கிறோம். எப்பொழுது இது நடைபெறும்? முதலாம் உயிர்த்தெழுதலின்போது. அப்பொழுது அற்பமான சிருஷ்டிகளாயிருக்கிற சரீரங்கள் மறுரூபப்பட்டு, அவருடைய மகிமையான சரீரத்திற்கொப்பானதொரு சரீரத்தை நாம் பெறுவோம். அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைக் காண்போம்; நாம் அவரைப் போல் இருப்போம். அவர் தோன்றும் பொழுது அவருடைய சாயலாகவே நாமும் காணப்படுவோம். அவருடைய சரீரத்தைப்போலவே நாம் மகிமையான, மகிமைப்படுத்தப்பட்டதொரு, சரீரத்தை பெற்றுக்கொள்வோம். அப்பொழுது எல்லா சோதனைகளும், வாழ்க்கையின் போராட்டங்கள் யாவும் ஒரு சிறு பனித்துளியைப்போல மறைந்துபோய், இனி ஒருக்காலும் காணப்படாதபடி போய்விடும்.

109. பூமிக்குரிய இக்கூடாரங்களிலிருந்து கொண்டு நாம் தவித்துக் கொண்டிருக்கிறோம். நாம் நமது இரட்சிப்பின் பரிபூரணம் பூரணமாக வருவதற்காக காத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் மண்ணிலான இக்கூடாரங்களில் நாம் ஒன்றைப் பெற்றுள்ளோம்; நாம் அந்த அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளதாக அது நம்மிடம் கூறுகிறது. ஆமென். நான் கூறுவதை புரிந்து கொண்டீர்களா? சகோதரன் டோ அவர்களே, அந்த சிறிய அச்சாரம்தான் அதை உடமையாக்கியிருக்கிறது. அதுதான் அந்த அச்சாரம். நாம் முன்பு இவ்வுலகின் காரியங்களை நேசித்தபொழுது, நாம் பாவம் செய்தபொழுது, இவ்வுலகத்திற்கொத்த காரியங்களை நாம் செய்து கொண்டிருந்தபொழுது, தேவனுக்காக நாம் அக்கறைகொள்ளாமல் இருந்தபொழுது, நாம் அவரை விட்டுவிலகி அந்நியராகக் காணப்பட்டு, இவ்வுலகில் தேவனற்று, கிறிஸ்து அற்றவர்களாகக் காணப்பட்டோம். இப்பொழுது தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியை அனுப்பி, அதன்மூலமாக நாம் அக்காரியங்களைவிட்டு தூக்கியெடுக்கப்பட்டு உயர்த்தப் பட்டிருக்கிறோம். இப்பொழுது நாம் அந்த அச்சாரத்தை உடையவர்களாய் இருக்கிறோம். அதன் மூலமாக நாம் மரணத்தை

தெறிந்துவிடுவதால் அவைகள் ஜீவனுக்காக போராடுகின்றன. மரங்களைப் பாருங்கள். தேவனுக்கு மகிமையாக கீதங்கள் பாடும் அவைகள் தங்களை கிளைகளை பற்றிக்கொள்ள எவ்வளவாய் போராடுகின்றன என்பதைப் பாருங்கள். பார்த்தீர்களா? அனைத்தும் - இயற்கை அனைத்தும் - அனைத்து மிருகங்களும், அனைத்து பறவை களும், ஜீவனுக்காகப் போராடுகின்றன. பறவைகள் தங்கள் எதிரியிடமிருந்து தப்பித்துக்கொள்ள அவைகள் எவ்வளவு விரைவாக விலகி பறந்தோடுகின்றன என்பதைப் பாருங்கள். எல்லாம் தவிக் கின்றன. 'நாமும்கூட'' என்று பவுல் கூறினான். அவைகளோடு நாமுங்கூட ஏங்கித் தவிக்கிறோம்; ஏனெனில் நாம் நமது சரீர மீட்பைப் பெற்றுக்கொள்ள காத்துக்கொண்டிருக்கிறோம்.

105. ஆனால் இப்பொழுது, அவைகள் கடந்த இத்தனை ஆண்டுகள் முதற்கொண்டு, இதுவரையிலும் இருந்து வந்திருக்கின்றன. நமது சுதந்திரத்தின் அச்சாரத்தை நாம் இப்பொழுது பெற்றவர்களாய் இருக்கிறோம். ஓ, என்னே! நாம் எதை உடையவர்களாயிருக்கிறோம்? தேவன் ஜீவிக்கிறார் என்பதற்கான அத்தாட்சியை நாம் உடையவர்களாயிருக்கிறோம். தேவன் நம்மோடு இருக்கிறார் என்பதற்கான அத்தாட்சியை உடையவர்களாயிருக்கிறோம். தேவன் நம்மை கைவிடவில்லை என்பதற்கும், நாம் அவருடை யவர்கள் என்பதற்கும், அவர் நம்முடையவர் என்பதற்கான அத்தாட்சியை உடையவர்களாயிருக்கிறோம். ஏனெனில், "அப்பா, பிதாவே'' என்று கூப்பிடுகிற பரிசுத்த ஆவியானவரை நமது சரீரங்களில் கூடாரமிட்டு கொண்டிருக்கிறோம். அதை எந்த வொன்றும் நம்மிலிருந்து எடுத்துப் போட முடியாது. நாம் கிறிஸ்துவுக்குள்ளாக நங்கூரமிட்டிருக்கிறோம்.

106. இப்பொழுது மரங்கள் அதை பெற்றிருக்கவில்லை; இயற்கை அதை உடையதாயிருக்கவில்லை, ஆனால் இருந்தபோதிலும், நாமுங்கூட, இன்னமும் அவைகளோடு சேர்ந்து தவித்துக்கொண்டு தானிருக்கிறோம்; ஏனெனில் நாம் இன்னமும் நமது சுவிகாரத்தின் பரிபூரணத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. ஆனால் நாம் நமது சுவிகாரத்தின் அச்சாரத்தைப் பெற்றுக்கொண்டுள்ளோம். அதினால் நாம் இவ்வுலகத்தின் காரியங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, இப்பொழுது தேவனுடைய குமாரரும் குமாரத்திகளுமாக ஆகி யிருக்கிறோம். ஆகவே நாம் என்னவிதமான ஜனங்களாக இருக்க வேண்டும்? ஓ, என்னே, நாம் அதைக்குறித்து சிந்திக்கையில்! அதைக்குறித்து எண்ணிப்பாருங்கள்.



நல்லது. அப்படியாயின், அது உங்களுக்காக உள்ளது அல்ல. அது செவிகொடுக்கிறவர் எவரோ அவருக்குரியது. அது சரி, உங்களால் செவிகொடுக்க முடிந்தால் மட்டுமே.

152.அவர் இங்கு என்ன கூறியிருக்கிறார் என்பதை இப்பொழுது கவனியுங்கள். இதைப்பற்றி நிரூபிக்கப்படத்தக்கதாக, இப்பொழுது கூர்ந்து கவனித்து, அடுத்த இரண்டு அல்லது மூன்று நிமிடங்களுக்கு உங்கள் சிந்தையை காத்து கவனியுங்கள்.

''அந்த வேலைக்காரன்: (இவன் விடுதலை செய்யப்படுவதற்காக உள்ள மனிதன்) என் எஜமானையும் என் பெண் ஜாதியையும் என் பிள்ளைகளையும் நேசிக்கிறேன்....

(அல்லது, ''நான் நடனமாடச் செல்ல விரும்புகிறேன். யாருக்காகவும் நாட்டியமாடப் போவதை நான் விட்டுக் கொடுக்கமாட்டேன். நான் இதையோ அதையோ, யாருக்காகவும் விட்டுவிடமாட்டேன், எனது மனைவியானாலும் சரி என் பிள்ளைகளானாலும் சரி, அல்லது நான் நேசிக்கிற இவ்வுலகின் காரியங்களையானாலும் சரி''). ''இப்பொழுது, இங்கே நோக்குங்கள், சகோதரன் பிரன்ஹாம் அவர்களே, நான் உங்களுக்குச் சொல்லப்போவது என்னவெனில்: நான் அதை விட்டுவிட வேண்டுமென்று நீங்கள் கூறுகிறீர்களா?' என்று கேட்பீர்கள்.

நீங்கள் ஒன்றையும் நிறுத்த வேண்டாம். நீங்கள் உள்ளே வாருங்கள். அது தானாகவே நின்றுவிடும்.

ஆனால் நீங்களோ, ''நல்லது, நான் அதைச் செய்யமாட்டேன். நான் அதைச் செய்யவேண்டியதில்லை. நான் சபையைச் சேர்ந்தவனாக இருக்கிறேன். உங்களையும் இன்னும் வேறு யாரையும் விட நல்லவனாகத்தான் இருக்கிறேன்'' என்று கூறு கிறீர்கள்.

அப்படியே வைத்துக் கொள்ளுங்கள், சகோதரனே, உங்களுக்கு சரி என்றால், அப்படியே வைத்துக்கொள்ளுங்கள். சத்தியத்திற்கு செவிகொடுங்கள்.

''இங்கே கூறப்படுவதை கவனியுங்கள். பிதா குமாரன் பரிசுத்த ஆவி ...?

'' நல்லது. நீங்கள் அவ்வாறே வைத்துக்கொள்ள விரும்பினால், தொடர்ந்து அதில் செல்லுங்கள். எக்காளமானது என்னத்தை ஒலித்துக் கூறியது என்பதைக் கேட்டிருக்கிறீர்கள். அது என்ன ஸ்வரத்தை இசைத்தது என்பதை கேட்டீர்கள். வேதம் கூறியது... (ஓ தேவனே!) அதை நோக்குங்கள் அடுத்த மணி நேரத்திற்குரிய செய்திக்கு இது ஒரு

பொருளாக அமையலாம் அல்லவா? ''எக்காளமானது விளங்காத சத்தமிட்டால்”

உங்களுடைய ஸ்தாபனங்கள் 'பிதா, குமாரன், பரிசுத்த ஆவி''என்று கூறினால், அது எக்காளத்தைப் போல் சப்தமிடவில்லை.

''எக்காளமும் விளங்காத சத்தமிட்டால் எவன் யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணுவான்?”

153. ''...வேலைக்காரன் என் எஜமானையும் நேசிக்கிறேன் என்று மனப்பூர்வமாய்ச் சொல்வானானால்...''

“என்னை இவ்விதச் செயல்களைச் செய்யும்படி செய்யச் செய்யும் பிசாசை நான் நேசிக்கிறேன், அதெல்லாம் சரிதான். நீங்கள் குறுகின எண்ணம் கொண்டவர்களாக இருக்கிறீர்கள். நீங்கள் மிகவும் குறுகின புத்தியுள்ளவர்கள். இந்த பெரிய காரியங்களெல்லாம் நமக்கு இருந்தாக வேண்டும். நான் அவைகளை நேசிக்கிறேன். இந்த உலகுக்கு உரிய அக்காரியங்கள் அவைகள். எங்களுக்கு நடனங்கள் உள்ளன. எங்கள் சபையில் சீட்டு விளையாட்டு உள்ளது. அதைப்போன்ற வேறு காரியங்களும் உள்ளது. இவைகளினால் எங்களுக்கு நல்ல நேரம் உள்ளது. அங்கே உங்களுக்கு இருக்கிறவைகளைவிட நல்ல காரியங்கள் எங்களுக்கு உள்ளது' என்று கூறுகிறீர்கள்.

சரி, அப்படியே வைத்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு அது சரி.

''...நான் விடுதலை பெற்றுப்போக மனதில்லை...'' நீங்கள் கூறுகிற அந்த ஆவிக்குரிய சுயாதீனத்திற்குள் செல்ல நான் விரும்பவில்லை என்று கூறுகிறீர்கள்.

“அவன் எஜமான் (அது பிசாசாகும்) அவனை நியாயாதிபதிகளிடத்தில் அழைத்துக் கொண்டுபோய், அவனைக் கதவின் அருகேயாவது...

(ஊ! அது என்ன? யார் அந்த கதவு? (சபை யார், “இயேசு கிறிஸ்து என்று கூறுகின்றார் -ஆசி.) ''உனக்கு முன்பாக ஒரு வாசலை நான் வைப்பேன்''. எப்பொழுது மிருகத்தின் முத்திரை வந்தது? திறந்தவாசலை வைத்திருக்கிற இக்காலத்தில் தான் இது மிருகமானது தன் முத்திரையை இடுதலின் இறுதிக்கட்டமாகும்.)...

அவனைக் கதவின் அருகேயாவது கதவு நிலையின் அருகேயாவது சேரப்பண்ணி... (அது கல்வாரியைக் குறிக்கிறது. அங்கே எஜமான் அவன் காதைக் கம்பியினாலே குத்தக்கடவன்; பின்பு அவன் என்றைக்கும் அவனிடத்திலே சேவித்துக் கொண்டிருக்கக்கடவன்.”



102. இப்பொழுது நாம் தொடர்ந்து பார்க்கையில், கவனிப்போம். அது முடிவுபெற்ற ஒன்றாக இருக்கிறது என்று நாம் அறிகிறோம். ஆட்டுக்குட்டியானவரோடு நாம் முன்குறிக்கப்பட்டிருக்கிறோம். பரிசுத்த ஆவியானவரே நமது முத்திரையாக இருக்கிறார். அச்சாரம் என்பதற்கு "இன்னும் அதிகம் வரவேண்டியுள்ளது'' என்று அர்த்தமாகும். இப்பொழுது அச்சாரத்தை மட்டும் நாம் பெற்றுள் ளோம். அச்சாரம் என்பது "ஒன்றைக் கிரயத்திற்குக் கொள்ளுகை யில், கிரயத் தொகையின் ஒரு பாகத்தை மட்டும் ரொக்கமாக முன்பணமாக செலுத்துவதாகும்". ஆகவே இந்த முன்பணமானது, கிரயத்திற்குக் கொள்ளப்பட்ட பொருளை கிரயம் வாங்குபவருக்கு உடமையாக்கிக்கொடுத்து, (ஓ இது எவ்வளவு அழகாக இருக்கிறது!) அதைப் பாதுகாத்து, யாரும் தொடமுடியாதபடி நங்கூர மிட்டுத் தருகிறது. அது நமது சுவீகாரத்தின் அச்சாரமாயிருக்கிறது. ஆமென், பரிசுத்த ஆவி இப்பொழுது நமது இருதயங்களில் முத்திரையிடப்பட்ட தேவனுடைய அச்சாரமாயிருக்கிறது; நமது பயணத்தின் முடிவில் புத்திர சுவிசாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அது நமக்காக காத்துக்கொண்டிருக்கிறது, நாம் தேவனுடைய குமாரரும் குமாரத்திகளுமாக ஆவதற்காக.

103. நாம் விரைவாக இன்னொரு வேத வாக்கியத்தை எடுத்துக் கொள்வோம். நான் பிறிதொரு பக்கத்தில் அதை குறித்து வைத் துள்ளேன். ரோமர் 8:22, அது அழகாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன். இதைக்குறித்து நான் நேற்று ஆராய்ந்து கொண்டிருக் கையில், சில வேத வாக்கியங்களை குறித்து வைத்துள்ளேன்; அவற்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

''ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வசிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப் படுகிறது.

அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப்பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்.”

ரோமர் 8:22,23

104. ஓ, நீங்கள் அதை கவனித்தீர்களா? ''சர்வ சிருஷ்டியும் தவிக்கின்றன.'' பவுல் இவ்வாறு கூறினான். யாவும் தவிக்கின்றது. மரங்களைப் பாருங்கள், அவைகள் எவ்வாறு தவிக்கின்றன என்று. மலர்களைப் பாருங்கள்; அவைகள் ஜீவனுக்காக போராடிக் கொண்டிருக்கின்றன. அவைகளை உறை பனியானது கிழித்

பெற்றுக்கொண்டுவிட்டதாகக் கூறுகிறீர்களே? வேதம் கூறுகிறது, "நீங்கள் விசுவாசித்தபிறகு, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் முத்திரையிடப்பட்டீர்கள்'' என்று கவனியுங்கள்.

''அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்."

எபே. 1:14

100. இப்பொழுது முத்திரை என்பது "ஏற்கனவே தேவனிடத்தில் முடிந்துவிட்ட ஒரு காரியமாக, ஏற்கனவே தீர்க்கப்பட்ட விஷய மாக' இருக்கிறது என்று நாம் கண்டோம். ஆதிமுதற்கொண்டே ஒவ்வொரு விசுவாசியும் இந்த வாக்குத்தத்தத்தோடு முத்திரை யிடப்பட்டிருக்கிறார்கள்! ஏனெனில் உலகத்தோற்றத்திற்கு முன்னரே நாம் புத்திர சுவிகாரமடையும்படி முன்குறிக்கப் பட்டுள்ளோம். உலகம் என்ற ஒன்று உண்டாவதற்கு முன்னரே! உறுதியோடும், நிச்சயத்தோடும் நம்மை இளைப்பாறச் செய்யும் ஒரு நம்பிக்கையாக இது இருக்கிறது; அது நமது ஆத்தும நங்கூரமாயிருக்கிறது; அதனால் நாம் அங்கும் இங்கும் அடிபட்டு அலைகிறவர்களாயிராமல் இருக்கச் செய்து, கிறிஸ்துவுக்குள் நம்மை நங்கூரமிட்டுள்ளதாக, நிச்சயமான நம்பிக்கையாக இருக்கிறது! "இயேசு கிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகாரப் புத்திரராகும்படி உலகத்தோற்றத்திற்கு முன்னரே நம்மை குறித் திருக்கிறார்." ஓ, என்னே அற்புதமாக இது இருக்கிறது! தேவனிடத் தில் "நிறைவேற்றப்பட்ட கிரியையாக '' அது இருக்கிறது என்பதை நான் நேசிக்கிறேன்.

101. இப்பொழுது நான் உங்களுக்கு இன்னொரு வேதவாக்கியத்தை இங்கே குறிப்பிடுவேனாக. "எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார். எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்'' தேவன் ஆதி முதற்கொண்டே தனது மகத்தான முடிவில்லாத சிந்தையில் தனது சபையை முன்கூட்டியே பார்த்து, காலத்தின் முடிவிலே நித்திய ஜீவனை அவர்களுக்கு அளிப்பதற்காக, இயேசு கிறிஸ்துவின் மூலமாய் புத்திர சுவிகாரம் அடைவதற்காக சபையை முன் குறித்தார். என்னே ஒரு அழகான காரியமாக இது இருக்கிறது! சகோதரன் நெவில் அவர்களே! நான் மிகவும் பரவசமடைந் துள்ளேன். எனவே... இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக சுவிகாரம் கொடுத்தார்.



''சகோதரன் பிரன்ஹாமே, நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

நீங்கள் சுவிசேஷ சத்தியமானது தொனிக்கக் கேட்டும், அதில் நடக்க நீங்கள் மறுத்துவிட்டால், அப்பொழுது தேவன் தாமே உங்கள் காதை, இனி ஒருபோதும் அதைக் கேட்கக் கூடாதபடி அடையாளப்படுத்திவிடுகிறார். அதனால், நீங்கள் ஜீவனுக்கும் மரணத்திற்கும் இடையே உள்ள கோட்டை தாண்டி விடுகிறீர்கள். அப்பொழுது நீங்கள் உங்கள் ஸ்தாபன சங்கத்தோடு மீதமுள்ள உங்கள் வாழ்நாள் முழுவதும் என்றென்றுமாக சென்று விடுகிறீர்கள். (பிள்ளைகளே, ஒளியில் நடவுங்கள், அதுதான் சரியானது) நீங்கள் அந்த எஜமானை என்றென்றுமாக சேவிப்பீர்கள்.

154.உங்களுக்கு விருப்பமில்லை... பாருங்கள், எக்காளமானது முழங்கியது. அதினால் அவன் விடுதலை பெற்றுப்போக முடியும், அது தேவனுடைய கிருபையாயிருக்கிறது. அதுதானே யூபிலி வருடமாயிருக்கிறது. பூர்த்தியடைந்ததாக இருக்கிறது. பாவத்தின் நாளானது முடிவடைந்து விட்டது, சகோதரனே. பாவத்திற்கு ஊழியம் செய்யும் ஒவ்வொருவருக்கும் நான் கூறுகிறேன்; (அவர்கள் ஒலிநாடாவில் கேட்கிறவர்களாயினும் சரி, பார்க்கத்தக்கதாக அமர்ந்திருக்கும் சபையாரானாலும் சரி) பாவத்திற்கு ஊழியம் செய்யும் ஒவ்வொரு வருக்கும் கூறுகிறேன், பாவத்தின் நாளானது முடிவடைந்துவிட்டது. இயேசு மரித்தார், எனவே நீங்கள் இனி பாவத்திற்கு ஊழியம் செய்ய வேண்டியதில்லை. மதக்கோட்பாடுகளுக்கும், ஸ்தாபனங்களுக்கும் முன்பாக நீங்கள் இனி தலைவணங்கத் தேவையில்லை.

'குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்காகவே விடுதலையாவீர்கள். நீங்கள் விடுதலையாகிச் செல்ல விரும்பினால், குமாரனுக்குள் விடுதலையாகிச் செல்ல விரும்பினால், எல்லாவற்றினின்றும் உங்களை விடுவித்துக் கொண்டு அவரை சேவியுங்கள். வாருங்கள்.

ஆனால் நீங்கள் அவ்வாறு செய்யவிரும்பாவிடில், அப்பொழுது உங்களுடைய மத ஸ்தாபனமானது. உங்களுடைய எஜமானானவன், அல்லது நீங்கள் யாரை சேவித்துக் கொண்டிருக்கிறீர்களோ அவன், இனிமேல் ஒருபோதும் சுவிசேஷ எக்காளத்தைக் கேட்கவே கூடாதபடி, உங்களுடைய காதைக்குத்தி அடையாளப்படுத்திவிடுவான். தேவன் எப்பொழுதாவது உங்களிடம் பேசி, ''வா, இதுவே தருணம் என்று அழைத்தால், அப்பொழுது, நீங்கள் அவர் பேசுவதைப் புறக்கணித்தால்,

சத்தியத்திற்கு செவிகொடுக்க முடியாதபடி கடினமடைந்தவராக இருக்கும்படி, அவனுடைய அடையாளத்தை நீங்கள் பெற்றுக் கொண்டுவிடுவீர்கள். அதுதான் பிசாசின் முத்தியையாகும். அதுவே மிருகத்தின் முத்திரை யாகும். அதைப் பார்த்தீர்களா?

மிருகத்தின் முத்திரையானது என்ன செய்கிறது? உங்களை மீண்டும் ரோமானியக் கொள்கையில், மத ஸ்தாபனக் கோட்பாட்டில் வைத்துவிடுகிறது. இனி உங்களால் வெளியே வந்து சுதந்திரமடைய முடியாது. அதைத்தான் சதா சேவிக்கிறவர்களாயிருப்பீர்கள். அங்கேதான் மிருகத்தின் முத்திரையானது இருக்கிறது. அது கடினமான விஷயமாகத்தான் இருக்கிறது. நண்பர்களே, அது வெட்டுகிறது. ஆனால் அதுதான்... நான் அதற்கு பொறுப்பாளியல்ல... வேதம் என்ன கூறுகிறதோ அதையே நான் கூறுகிறேன்.

155.இப்பொழுது, 'நீ விடுதலையாயிருக்கிறாய்'' என்று முழங்ககுகிற நற்செய்தியாகிய சுவிசேஷ எக்காளம் முழங்குவதைக் கேட்பதற்கு முன்னடையாளமாக, நிழலாக, பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள விஷயம் இது. இனி நீ கட்டுண்டு கிடக்கத் தேவையில்லை, நீ முழுவதுமாக கிறிஸ்து இயேசுவுக்குள் விடுதலையா யிருக்கிறாய், இனிபாவங்கள் ஏதுமில்லை. நீங்கள் இனிச் செய்வதில்லை என்று உங்களுக்குத் தெரிவிக்கிறது.

நீங்கள் இவ்வுலகை நேசித்தால், வேதம் உங்களுக்குக் கூறுகிறது. ''நீங்கள் உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூர்ந்தால், தேவனுடைய அன்பு உங்களிடத்தில் இல்லை''. அது உண்மை. உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூர்ந்தால், தேவனுடைய அன்பு உங்களிடத்தில் இல்லை.

அப்படியென்றால், மார்க்கத்தின் பெயரால் இன்று உலகில் நடந்து கொண்டிருக்கிற பெரிய காரியங் களைப்பற்றி என்ன? அவைகள் உலகத்தின் காரியங்கள் ஆகும். பன்றி அடைக்கும் பட்டியில் உள்ள பன்றி தன் உணவை ஆவலுடன் விழுங்குவது போல், மக்களும் உலகத்திற்குரிய இக்காரியங்களை ஆவலுடன் விழுங்குகிறார்கள். “ஓ, இது அருமையா யிருக்கிறது. அதைப்பற்றி ஒன்றும் தவறில்லை'' என்று கூறுகிறார்கள். பார்த்தீர்களா? அவர்கள் முத்திரையிடப்பட்டு, அடையாளப்படுத்தப்பட்டுள் ளார்கள்.

156.யூதர்களில் மீதியானவர்கள் என்பது யார் என்பதைப் பற்றியும், இலட்சத்து நாற்பத்து நாராயிரம் பேர் யார் என்பதைப் பற்றியும் புரிந்து கொண்டீர்களா? அவர்கள் எங்கே அமர்ந்திருந்து,



ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்."

எபே. 1:2,3

97. இப்பொழுது அதைப்பற்றி எண்ணிப்பாருங்கள்! கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக நாம் ஒன்றாக கூடிவருகையில், விசுவாசி களாக, தெரிந்து கொள்ளப்பட்ட சபையாக, வேறு பிரிக்கப்பட்ட வர்களாக கூடி வருகையில், அவர் நம்மை உன்னதத்தின் எல்லா கிருபையாலும், ஆசீர்வாதங்களினாலும் ஆசீர்வதித்திருக்கிறார். அவர் நம்மை தமது பரிசுத்த ஆவியினாலே முத்திரையிட்டு, எதிர்காலத்தில் நிகழப்போகும் அனைத்து காரியங்களைக் குறித்தும் இப்பொழுது நமக்கு வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறார். இப் பொழுது நாம் ஏழு முத்திரைகள் வரைக்கிலும் வந்துவிட்டோம்.

"தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்ற மில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத் தோற்றத் துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே, ...தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகார புத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார்."

எபே. 1:4,6

98. இது என்னே ஒரு ஆழகான கருத்தாக இருக்கிறது! இன்னும் ஒரு நிமிடம் தொடர்ந்து வாசிப்போம். இங்கே விசேஷமாக 12,13, 14ம் வசனங்களை வாசிக்க நான் விரும்புகிறேன்.

"மேலும் கிறிஸ்துவின் மேல் முன்னே நம்பிக்கையாயிருந்த நாங்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும் படிக்கு....

நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள். (ஆங்கில வேதாகமத்தில் "நீங்கள் விசுவாசித்தபிறகு'' என்று எழுதப்பட்டுள்ளது. தமிழில் "விசுவாசிகளான போது'' என்று குறிப்பிடப் பட்டுள்ளது - மொழிபெயர்ப்பாளர்).

எபே 1:11,13

99. 'நீங்கள் விசுவாசித்தபிறகு. 'ஓ, எனது பாப்டிஸ்ட் சகோதரனே, அது அவ்வாறு இல்லை என்று எவ்வாறு நீ சொல்ல முடியும்? நீங்கள் விசுவாசித்த பொழுது பரிசுத்த ஆவியைப்

ஒன்றைக் குறிக்கிறது. அது ஏற்கனவே சோதிக்கப்பட்டு, நிரூபிக்கப்பட்டு அதன்பிறகு முத்திரையிடப்பட்டுள்ளது. நம் முடைய இரட்சிப்பின் அச்சாரமானது பரிசுத்த ஆவியினாலே நம்மில் இப்பொழுது முத்திரையிடப்பட்டுள்ளது. அதுவே நம்முடைய இரட்சிப்பின் அச்சாரமாயுள்ளது.

94. நாம் ஒரு வேதவாக்கியத்தை சற்று நோக்குவோமாக. நான் இங்கே அநேக வேத வாக்கியங்களைக் குறித்து வைத்துள்ளேன். அவற்றுள் ஒன்றை இப்பொழுது நாம் பார்ப்போம். அவை யாவற்றையும் இங்கே நாம் பார்க்க நமக்கு நேரமில்லை. ஆனால் நாம் எபேசியர் நிருபத்திற்கு ஒரு க்ஷணம் திரும்பிச் செல்வோம். எபேசியர் முதலாம் அதிகாரத்தில் இதைப்பற்றி வாசித்து, அதன் உண்மையான அர்த்தத்தை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

''தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுல், எபேசுவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கு எழுதுகிறதாவது;

எபே.1:1.

95. இந்நிருபமானது யோவானால் எபேசுவிலுள்ளவர்களுக்கு என்று முகவரியிட்டு அனுப்பப்பட்டது; அதாவது எபேசுவிலுள்ள கிறிஸ்துவுக்குள்ளாக விசுவாசிகளாயிருக்கிறவர்களுக்கு என்று முகவரியிட்டு எழுதுகிறான் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவர்கள் பவுலினால் பிரசங்கிக்கப்பட்டு, சுவிசேஷத்தினால் வளர்க்கப்பட்டு போஷிப்பிக்கப்பட்டு வந்தவர்கள்.

'... கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளாயிருக்கிறவர்களுக்கு...'' இவர்கள் ஏற்கனவே கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கிறவர் கள் ஆவர்.

96. நாம் எவ்வாறு கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கிறோம்? "எல்லோரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு அதுதான் கிறிஸ்துவின் சரீரமாகும்.

"நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவ னுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே



காத்துக்கொண்டிருக் கிறார்கள்? இதே மணி வேளையில் தான். புத்தியில்லாத கன்னியர் எண்ணெயை எடுத்துக் கொள்ளமாட்டார்கள் என்பதையும், அவர்கள் தாமே எழும்பி, நியாயத்தீர்ப்பு நாளில் நல்லவைகளும், பொல்லாங்கானவைகளும் பிரிக்கப்படும் நாளில் பிரிக்கப்படுவார்கள் என்பதை உங்களால் காண முடிந்ததா? எண்ணெயைப் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் என்பதை புத்தியில்லாத கன்னிகை அறிந்து, இப்பொழுது நடப்பதைப் போல, அதைத் தேடிச்சென்ற அதே நேரத்தில் மணவாளன் வந்துவிட்டார் என்பதைப் புரிந்துகொண்டீர்களா?

அப்படியாயின் நாம் முடிவுக்கு எவ்வளவு சமீபமாயிருக்கிறோம்? இப்பொழுதே! நமக்கு இன்னும் குறுகிய நேரந்தான் இருக்கிறது. இன்னும் எவ்வளவு நேரம் நீடிக்கும் என்பது எனக்குத் தெரியாது. எப்பொழுது என்று என்னால் கூற முடியாது. எனக்குத் தெரியாது. ஒருவேளை இன்னொரு வருடம் பிடிக்கலாம். அது ஒரு வேளை இன்னொரு பத்து வருடங்கள் ஆகலாம். அல்லது நாற்பது ஆண்டுகள் ஆகக்கூடும். அல்லது நாற்பது நிமிடங்கள் மட்டுமேகூட ஆகலாம். எனக்குத் தெரியாது. என்னால் கூற முடியாது. ஆனால்அது சமீபமாக இருக்கிறதென்று மட்டும் எனக்குத் தெரியும். அது மிகவும் சமீபமாயுள்ளது. கர்த்தருடைய ஆவியானவர்...

157.ஒரு சமயமானது வரப்போகிறது, அப்பொழுது முதலாவதாக சபையானது குளிர்ந்து போகிற நிலைக்குப்போக ஆரம்பிக்கும். கடந்த சில ஆண்டுகளில் சபையானது அவ்வாறு குளிர்ந்து போகிற நிலையை அடைய ஆரம்பித்ததை எத்தனை பேர்கள் கவனித்திருக்கிறீர்கள்? நிச்சயமாக. அது எதற்குள் போகப்போகிறது? லவோதிக்கேயா. இன்றிரவில் அதிலிருந்து நாம் அந்த சபைக் காலத்திற்குரிய தூதன் இன்னார் என்பதை கண்டுபிடித்து பார்த்து, அவனுடைய செய்தியையும் நாம் கண்டுகொண்டு, அது எப்படி இருக்கும் என்பதையும், லவோதிக்கேயா சபைக்காலத்தின் முடிவில் அவள் நித்தியத்திற்குள் போய் முடிவடைந்து அதற்குள் பரந்து நிற்கிறபொழுது எப்படியிருக்கும் என்பதையெல்லாம் நாம் காணலாம்.

158.ஓ, நான் அவரை நேசிக்கிறேன். நீங்கள் நேசிக்கவில்லையா? ஆம், ஐயா.

ஓ, தேவனுடைய முத்தியையானது என்னவாயிருக்கிறது? பரிசுத்த ஆவி. மிருகத்தின் முத்திரையானது என்னவாயிருக்கிறது? பரிசுத்த ஆவியை புறக்கணித்தலேயாகும். அந்த இரு பிரிவினர், அவர்கள் ஒருவர்

காண்கின்றனர்... நல்லது, அவர்கள் ... பூமியில் எத்தனை பேர் அதைப் பெற்றுக் கொள்ளாமலிருந்தனர்?" முத்தரிக்கப்படாதவர் யாவருமே மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக் கொண்டனர்.'' எத்தனை பேர்கள் தேவனுடைய முத்திரையைப் பெற்றுக்கொள்ளவில்லையோ, அவர்கள் யாவரும் மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக்கொண்டனர்.

தேவனுடைய முத்திரையானது பரிசுத்த ஆவியாகும். வேதம் அவ்வாறு கூறியுள்ளது. அதைக் குறித்து வேதத்தில் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு இடத்திலும், அது தேவனுடைய அடையாளம், தேவனுடைய முத்திரை என்று கூறுகிறது. அம்முத்திரையை பெற்றிராதவர்கள் யாவரும், அதை புறக்கணித்தவர்கள் ஆவர். அதை அவர்கள் எவ்வாறு புறக்கணித்துள்ளனர்? அதற்கு செவிகொடுக்க மறுப்பதின் மூலமே. அப்படித்தானே?

159.விசுவாசத்தை நீங்கள் எவ்வாறு பெற்றுக் கொள்ளுகிறீர்கள்? ''செவிகொடுத்தலின் மூலமாக.'' அது எங்கே அடையாளப்படுத்தப்பட்டது? கையிலா? இல்லை. தலையிலா? இல்லை. அது காதிலே தான் அடையாளம் போடப்பட்டது. "செவிகொடுத்தலாகும். அது என்ன செய்தது? அதைக் கேட்கவே மருளுகின் றனர்.

இனி மேல் வேண்டாம்' என்று நீங்கள் கூறுகிறீர்கள். இனி நான் அதைப்பற்றி கேட்கமாட்டேன், அதனோடு எந்த சம்மந்தமும் எனக்கு வேண்டாம். அதனோடு எனக்கு இனி ஒன்றும் இல்லை'' என்று கூறுகிறீர்கள்.

அது அவர்களைப் போலவே இருக்கிறது.... சகோதரன் நெவில் அவர்களே, இதை இப்பொழுது நான் விட்டுவிட்டு.... "ஒரு தடவை பிரகாசிக்கப்பட்டவர்கள் மறுதலித்துப்போனால் அவர்களை புதுப்பிப்பது கூடாது காரியம் என்கிற விஷயத்தைப் பற்றி உங்களுக்கு நான் கூறவிருந்தேன். அவர்களால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு இயலாது. அதுதானே எல்லைக் கோட்டில் நிற்கும் விசுவாசிகள்.

''ஏனெனில், ஒரு தரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரம ஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையையும்



சுவிசேஷங்கள் அதை எங்கே காக்கின்றனவோ, அதே இடத்தில் அதைக் காத்திடவேண்டும்.

91. இப்பொழுது நாம் அங்கே, அவைகள் பழைய ஏற்பாட்டில் தேவனுடைய கிருபாசனத்தைக் காத்து வந்தன என்று கண்டோம்; இங்கே மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகியோர். கிருபா சனமானது காக்கப்படத்தானே, யூதா கோத்திரத்து சிங்கமானவர் தன் ஜீவனையே அதற்கெனக் கொடுத்து, தன் சொந்த இரத்தமானது அதின்மேல் தெளிக்கப்படச் செய்தார். அந்த மகத்தான ஜெயங் கொண்டவரான அவர் இன்றைக்கு அங்கே நின்றுகொண்டிருக் கிறார். அவர் ஒருநாளில் கிழக்கில் இருந்து இறங்கி வந்திடுவார். நாம் அவரைக் காண்போம்.

92. ஞானஸ்நான ஆராதனை இருப்பதினால், நாம் விரைவாக முடிக்கலாம். ஏழு முத்திரைகளின் புத்தகமானது என்ன? ஓ அது என்ன மகத்தான காரியமாயிருக்கிறது! அதைப் பற்றி இங்கே அது என்ன கூறுகிறது என்பதை கவனித்தீர்களா? புத்தகத்தின் புறம்பே ஏழு முத்திரைகள் உள்ளதாக அது இருந்தது. அதில் ஏதோ இருக்கிறது, தேவன்தாமே நமக்கு இப்பொழுது உதவி செய்து, நமக்கு தைரியத்தை அளிப்பாராக. சீக்கிரத்திலோ அல்லது தாமதித்தோ, அதைப்பற்றி நான் உங்களுக்கு பிரசங்கிப்பேன். பாருங்கள், இது வார்த்தையில் எழுதப்படவில்லை. வார்த்தையின் பின்னால் அது முத்திரையிடப்பட்டுள்ளது. அப்புத்தகமானது இந்த ஏழு முத்திரைகளால் முத்திரையிடப்பட்டுள்ளது. அப்புஸ்தகத் தின் முழு இரகசியமும் இந்த ஏழு முத்திரைகளுக்குள் முத்திரையிடப்பட்டுள்ளது. வெளிப்படுத்தின விசேஷப் புஸ்தகத்தில் மிக மகத்தான அதிகாரங்களுள் ஒன்றாக இது இருக்கிறது. பாருங்கள்:

"அன்றியும், உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்த ஒரு புஸ்தகத்தை (உள்ளாக - அதைப் பற்றித்தான் இன்று காலையில் நாம் படித்துக் கொண்டிருந்தோம்) (வேதாகமத்திற்கு வெளியே... அதைப்பற்றி வேதாகமமே ஒன்றும் கூறவில்லை. அது ஏழு முத்திரைகளால் முத்திரையிடப்பட்ட ... தேவனுடைய இரகசியங்கள்) சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருடைய வலது கரத்தில் கண்டேன்."

வெளி. 5:1

93. அது என்ன? இப்பொழுது கவனியுங்கள். ஒரு முத்திரை என்னப்படுவது செய்து, நிறைவேற்றப்பட்ட, பூர்த்தியாக்கப்பட்ட

87. "நீங்கள் ஏன் இங்கே கூடி வந்திருக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன். இப்பொழுது சகோதரன் ஹிக்ஸ் அவர்களே, கிறிஸ்தவ வியாபாரக் குழுவின் தலைவராகிய சகோதரன் கார்ல்சன் அவர்களே, நேற்றைக்கு முந்தின நாளன்று, பரிசுத்த ஆவியானவர் என்னிடம், இங்கு என்ன நடக்கும், எவ்வாறு இருக்கும் என்று கூறியவைகளையெல்லாம் நான் உங்களிடம் கூறினேனே, சரியாக அதேவிதமாக இங்கே யாவும் நடக்கவில்லையா? நீங்கள் பதிவு பண்ணியிருக்கிற அறை உங்களுக்குக் கிடைக்காது, நாம் மற்றொரு அறையாகிய இங்கேதான் கூட முடியும் என்று கூறினேனே, பார்த்தீர்களா?'' என்று நான் கூறினேன். அன்றைக்கு காலையில் அவ்வாறுதான் அவர்களுக்கு கிடைத்தது. நான் மேலும் கூறினேன். "இன்னின்ன இடத்தில் இன்னார் இன்னவிதமாக அமர்ந்திருப் பார்கள் என்று பரிசுத்த ஆவியானவர் கூறிய வண்ணமாக சரியாக அவ்வாறே இங்கு ஒவ்வொருவரும் அமர்ந்திருக்கிறார்கள். நீங்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் உள்ள ஞானஸ்நானத்தைக் குறித்து என்னை மடக்கி விடவேண்டும் என்ற எண்ணத்துடன்தான் இங்கே கூடி வந்திருக்கிறீர்கள்” என்று கூறினேன்.

88. அப்பொழுது நாங்கள்.... பரிசுத்த ஆவியானவர் அந்த திரித்துவ ஊழியக்காரர்கள் மத்தியில், தேவனுடைய வசனத்தை எடுத்து, அதை வெளிப்படுத்தி வியாக்கியானித்துக் கொடுத்தார். அப் பொழுது அவர்கள் மேசைக்கு கீழாக தங்கள் கரங்களை நீட்டி ஒருவரோடொருவர் கைகுலுக்கிக்கொண்டார்கள். அவர்கள் கன்னங்களில் கண்ணீர் வடிந்தது. அவர்களில் எழுபத்திரண்டு பேர்கள் என்னிடத்தில் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெறுவதற்காக இக்கூடாரத்திற்கு வரவிருக்கிறார்கள் என்பதாக நான் அறிய வருகிறேன்.

89. கிருபாசனமானது காவல் பண்ணப்பட்டிருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் அதைக் காவல் செய்கிறார். சரியாக அதேவிதமாக நாம் அதைக் காத்திடவேண்டும். அந்த தேவனுடைய வார்த்தை யானது... அந்த மகத்தான செய்தியாளர்களாகிய மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகியோர் புதிய ஏற்பாட்டின் ஒவ்வொரு நடபடிகளையும் பின்பலமாக ஆதரித்து நிற்கின்றனர்.

90. இன்று காலைச் செய்தியில் கூட நான் சரியாக அதைத்தான் கூறினேன். அதை நாம் அங்கே சரியாக அப்படியே காத்திடுவோமாக. சுவிசேஷத்தினால் அதைக் காத்திட வேண்டும். பாருங்கள்?



இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால் ...

எபி.6:4-6 “....தன்னைப் பரிசுத்தஞ் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்த மென்றெண்ணினபடியால்...”

'...மனந்திரும்புகிறதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாது காரியம்”

பாருங்கள். ஆனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒருவன் இவ்வாறு செய்வது என்பது முற்றிலும் இயலாதகாரியமாகும். அவன் அவ்வாறு செய்ய முடியாது. ஏனெனில், அவன் என்ன செய்வான்? பாருங்கள்? ''உடன்படிக்கையின் இரத்தத்தை நம்பி'. ஒருவன் தெரிந்துகொள்ளப்பட்டவனாயிருந்தால், அந்தக் கூட்டத்தில் ஒருவனாக இருந்தால், அவனால் அவ்வாறு மறுதலிக்க முடியாது. அவ்வாறு செய்வது என்பது அவனுக்கு இயலாத காரியமாகும்.

160.இப்பொழுது, இதை நாம் எடுத்துக்கொண்டு இங்கே வந்திருக்கிறோம். “எப்படியெனில், தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து... முள்செடிகளையும் முள் பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும்... இருக்கிறது; சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு.” கோதுமை மணியோபரம் வீட்டுக்கு களஞ்சியத்தில் சேர்க்க எடுத்துச்செல்லவிருக்கிறது) ஆனால் இந்த ஜீவனை அளிக்கும் மழையானது களை, கோதுமை ஆகிய இரண்டின் மேலுமே பெய்கிறது. அவையிரண்டுமே மழை வருவதைக் குறித்து மகிழ்ந்து களிகூர்ந்து, அது வருவதைப்பற்றி ஒரேவிதமாகத்தான் எண்ணு கின்றன. ஆனால் அவைகளுடைய கனிகளினால் நீங்கள் அவைகளை அறிவீர்கள். அவைகள் களையின் கனிகளையா அல்லது கோதுமை மணியின் கனிகளைக் கொண்டவையா என்பதை அவற்றின் கனியைக் கொண்டு அறிந்துகொள்ளுகிறீர்கள். இப்பொழுது கோதுமையைக் குறித்து...

161.இப்பொழுது, அதைப்பற்றி அறிந்துகொள்வது எவ்வாறெனில்... இந்த எல்லைக்கோடு விசுவாசியைக் குறித்து உங்களுக்கு காண்பிக்கும்படியாக நீங்கள் அதைப் புரிந்துகொள்வதற்காக நான் இந்த புத்தியில் லாத கன்னிகையை உங்களுக்கு காண்பிக்கிறேன். இஸ்ரவேலரின் மத்தியில், இந்த எல்லைக்கோடு விசுவாசியிலே, அவர்கள் காதேஸ் பர்னேயாவுக்கு வருகையில் என்ன நேரிடுகிறது என்பதைக் கவனியுங்கள். நான் அதைப்பற்றி ஆதியாகமத் திலிருந்து

யாத்திராகமம் முடிய முன்னும் பின்னும் எடுத்து, இந்த வகுப்பு அதைக் காணத்தவறக்கூடாது என்பதற்காக நான் உங்களுக்கு முன்னடையாளத் தைக் காண்பித்தேன்.

162.யாத்திராகமத்தில் இந்த ஜனங்கள் காதேஸ் பர்னேயாவுக்கு வருகையில்... காதேஸ் பர்னேயா தான் அந்தக்காலத்தில் உலகுக்கே நியாயாசனமாக இருந்தது. அங்கே தான் இஸ்ரவேல் தன்னுடைய நியாயாசனத்தைப் பெற்றது. அந்த மலையில் அவர்கள் பத்துக்கட்டளைகளைப் பெற்றுக்கொள்ள வருகிறவரையிலும், அவர்கள் 11 நாட்கள் பிரயாணம் செய்தார்கள். அங்கே தான் அவர்கள் நியாயத்தீர்ப்பை சந்தித்தார்கள். ''அவர்கள் கடலோரமாக 11 நாட்கள் பிரயாணம் செய்தார்கள்'' என்று வேதம் கூறுகிறது. 11 நாட்கள் பிரயாணம்செய்து, அவர்கள் காதேஸசக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே அவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டார்கள்.

இன்னும் நான்கு நாட்களில் தேவன் அவர்களைக் கானானுக்குள் கொண்டு சென்றுவிடப் போகிறதற்கு இருந்தபோது, அவர்கள் மீண்டும் வனாந்தரத்தில் வந்த வழியே திரும்பிப்போய் வனாந்திரத்தில் அலைந்து திரியும்படி ஆனார்கள். அவர்கள் கட்டளைகளைப் பெற்றார்கள். மீண்டும் திரும்பிப்போனார்கள். அப்புறம் என்ன நேரிட்டது?

அவர்கள் மீண்டும் இங்கே வந்து அங்கிருந்து 11 நாட்கள் பிரயாணத்தில், காதேஸ் பரனேயாவில் தங்களுடைய நியாயத்தீர்ப்பண்டையில் அவர்கள் வந்து சேர்ந்தார்கள்.

163.என்ன நேரிட்டது? ஒவ்வொரு கோத்திரத்திலும் ஒவ்வொருவனாக மோசே தெரிந்துகொண்டு, ''நீங்கள் போய் தேசத்தை வேவு பார்த்து, அது எப்படிப்பட்ட தேசம் என்பதைக் கண்டு வாருங்கள்'' என்று கூறினான். அவர்கள் யாவரும் அங்கு சென்று அதை நோக்கினார்கள். அவர்களில் இருவர் போய் ஒரு பெரிய திராட்சைக் குலையை எடுத்துக்கொண்டார்கள். இது இருவர் சுமக்கவேண்டிய அளவுக்கு பெரிய குலையாக இருந்தது.

அத்தேசம் எத்தகைய தேசம் என்பதை போய் கண்டறிந்து திரும்பி வந்த பிறகு அவர்கள் என்ன செய்தார்கள்? அங்கே அவர்கள் எமோரியர் மற்றும் இன்னபிற மக்களைக் கண்டார்கள். அவர்களைப்பற்றி இஸ்ரவேலர், ''அவர்கள் இராட்சதர்கள்'' என்று கூறினார்கள். அவர்கள் காயீனின் புத்திரராவர். அங்கே முடிவாக அத்தேசத்தை அடைந்து அங்கு இருந்தார்கள்.



ஒரே நாமத்தினால் விளங்குகிறார். இது அவ்வாசலை பிழைக்கு எதிராக காவல் செய்கிறது.

81. சில நாட்களுக்கு முன்பாக சிக்காகோ நகரில் சிக்காகோ ஊழியக்காரர்கள் சங்கத்தில், மகா சிக்காகோவில் .... நான் அறிவேன்..... அன்று இரவில் பரிசுத்த ஆவியானவர் என்னை எழுப்பி, "ஜன்னலின் அருகே போய் நில்'' என்று பணித்தார். அங்கே என்னிடம் அவர், "அங்கே ஒரு ஊழியக்காரர்கள் குழு உள்ளது. அவர்கள் உனக்கு காலை சிற்றுண்டிக்காக ஆயத்தம் செய்துகொண்டிருக்கிறார்கள். கவனமாயிரு , அவர்கள் இவ்வுப தேசத்தின் பேரில் உன்மேல் தாக்குதல் தொடுப்பார்கள்'' என்று கூறினார்.

82. "நன்றி உமக்கு, கர்த்தாவே'' என்று நான் கூறினேன். எங்கு அது நடத்தப்படவுள்ளது என்பதை எனக்கு அவர் காண்பித்தார்.

83. பிறகு, நான் சென்று, அது எவ்வாறு இருக்கப்போகிறது என்பதைப் பற்றி சில ஊழியக்காரர்களிடம் முன்னதாகவே உரைத்தேன். அவர்கள் சகோதரன் கார்ல்சன், சகோதரன் டாமி ஹிக்ஸ் ஆகியோராகும். நான் அவர்களிடம் “நீங்கள் வேண்டுமென கேட்டிருக்கும் அறை உங்களுக்குக் கிடைக்காது. அது வேறு ஒரு அறை யாக இருக்கப்போகிறது. நாம் வேறு ஒரு இடத்தில்தான் கூடப் போகிறோம்" என்று கூறினேன். டாக்டர் மீட் அவர்கள் எவ்வாறு அமர்ந்திருக்கப்போகிறார் என்பதையும், எவ்வாறு ஒரு கறுப்பு நிற மனிதன் உள்ளே வந்து இன்னவிதமாய் உட்காரப்போகிறார் என்பதையும், மற்றும் அங்கு நடக்கப்போகிற எல்லாவற்றையும் குறித்து நான் அவர்களிடம் முன்னதாகவே உரைத்தேன்.

84. அன்று காலையில் என் மகன் என்னிடம், "அப்பா, நீங்கள் தர்க்கம் செய்யும் அக்கூட்டத்திற்குப் போகப் போகிறீர்களா?'' என்று கேட்டான்.

85. நான் அதற்கு மறுமொழியாக, "நான் அங்கே தர்க்கம் செய்யப் போகவில்லை; அங்கே நான் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தோடும், கிருபாசனத்தை காவல் செய்யும் திருவசனத்தோடும், அவரும் அங்கே இருக்கிறபடியாலும், போகப்போகிறேன்'' என்றேன்.

86. எனவே நாங்கள் அங்கே போய்ச் சேர்ந்தபொழுது, அவர்கள் என்னிடம் எந்தவொன்றையும் கேள்வி கேட்பதற்கு அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் முன்னர், பரிசுத்த ஆவியானவர் என்னிடம், "அதைக் கூறுவதற்கு இதுவே தக்க தருணம்'' என்று கூறினார்.

பெற்றுக்கொள்ளுங்கள்'' என்று கூறியதை ஆதரிப்பதைக் குறித்து நாம் கண்டோமே, அதைப்போலத்தான்.

78. இன்றைக்கு ஞானஸ்நானம் பெறுவதற்கு, அவர்கள் "பிதா குமாரன் பரிசுத்த ஆவியின்'' நாமத்தினால் என்பதை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஆதரவான வேத வசனம் ஏதும் கிடையாது. அதற்கு எந்த ஆதாரமும் கிடையாது. அதை காவல் செய்ய ஏதும் இல்லை. நீங்கள் "மத்தேயு அவ்வாறு கூறியிருக் கிறான்'' என்று கூறலாம். மத்தேயு, மத்தேயு 28 ஐக் காவல் செய்தான். மத்தேயு 1:18ல் அவன் கூறுகிறான்.

"இயேசு கிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது: அவ ருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப் பட்டிருக்கை யில், அவர்கள் கூடி வருமுன்னே அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது.

அவன் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து, அவளை அவமானப்படுத்த மனதில்லாமல், இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான்.

அவன் இப்படிச் சிந்தித்துக் கொண்டிருக்கையிலே, கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு : தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக் கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது."

மத்.1:18-20

79. எனவே, பரிசுத்த ஆவியானவரும், பிதாவாகிய தேவனும் ஒரே ஆள்தான். அல்லது இயேசுவுக்கு இரு தகப்பன்கள் உண்டு என்று ஆகிவிடுமே. எனவே கவனியுங்கள்.

'அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக…" "தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது."

மத். 1:21,22

80. "இம்மானுவேல் என்று பேரிடுவார்கள்..... இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்'' அது என்னவெனில் அவரே தேவன்; பிதா, குமாரன், பரிசுத்த ஆவி, இயேசு கிறிஸ்து என்னும்



அவன் கூறினான். ''அவர்கள் இராட்சதர்கள்'' அத்தேசத்தை எடுத்துக்கொள்ளமுடியாது. அவர்களு டைய தேசம் முழுமையும் பெரிய மதில் சூழ்ந்த பட்டணங்கள் ஆகும். அவர்கள் கண்களுக்கு நாங்கள் வெட்டுக்கிளிகளைப்போல் இருந்தோம்''.

164.அவர்கள் என்ன செய்துவிட்டார்கள்? அவர்கள் முழுமையாக அத்தேசத்தை பார்வையிட்டு விட்டார்கள். அத்தேசத்தின் கனியைக்கூட அவர்கள் ருசிபார்த்துவிட்டார்கள். பாருங்கள், காலேபும் யோசுவாவும் கூட அங்கே போய் அத்தேசத்தின் நிலையை விளக்கும் அத்தாட்சியைத் தங்கள் தோள்களின் மேல் சுமந்து கொண்டு வந்திருந்தனர்.

காலேபும் யோசுவாவும், ''நாம் அத்தேசத்தைக் கைப்பற்றிட நமக்கு இயலும் என்று கூறினார்கள். பார்த்தீர்களா? ஏன்? ஏனெனில் காலேபும் யோசுவாவும் வார்த்தையை உற்று நோக்கினவர்களாகவே இருந்தார்கள். தேவன் கூறினார், ''இத்தேசம் உங்களுடையது. தேசம் முழுவதிலும் எமோரியரும், ஏவியரும், மற்றும் பல்வேறு ஜாதியினரும் ஆகியோரால் நிறைந்துள்ளது. ஆனால் தேசமோ உங்களுடையது. உங்கள் பாதம்மிதிக்கும் ஒவ்வொரு இடமும் உங்களுக்குச் சொந்தமானதாகும். நான் அதை உங்களுக்குக் கொடுப்பேன். அது உங்களுடையது. ஆகவே அதை நோக்கி நடந்து கொண்டேயிருங்கள்'' என்று கூறினார்.

ஆனால் அவர்களோ, "ஓ இல்லை, அவ்விதமாக நாங்கள் ஒரு எழுப்புதலைக் கொண்டிருக்கமுடியாது. ஏன் தெரியுமா? ஆர்ச் பிஷப் அல்லது பிஷப்போ அல்லது ப்ரெஸ்பிடரோ, அல்லது வேறு யாருமோ வந்து எங்களையெல்லாம் வெளியே துரத்தி விடுவாரே'' என்றனர். ஹ முன்னே செல்லுங்கள், நாம் அதை அடைவோம்.

165.இப்பொழுது, இந்த இருவரும் திரும்பி வந்து, ''அத்தேசத்தை நாம் கைப்பற்றிட நம்மால் இயலும். ஏனெனில் தேவன் அவ்வாறு கூறியுள்ளார். எனவே நாம் போய் அத்தேசத்தை எடுத்துக்கொள்வோம்'' என்றார்கள்.

ஆனால் பாருங்கள், இந்த எல்லைக்கோடு விசுவாசிகளோ, தேசத்தின் கனியை ருசி பார்க்க தூரத்திலிருந்து வந்தவர்கள், அவர்கள், ''அது மிகவும் ருசியாக இருக்கிறது. ஆனால், ஓ, நம்மால் அத்தேசத்தை கைப்பற்ற முடியாது'' என்றார்கள்.

இப்பொழுது அது என்ன? இன்றைக்கு விசுவாசி இருக்கிறான். இந்த ஆளை கவனியுங்கள். தேவன் அவனுக்கு ஒரு அழைப்பைக் கொடுக்கிறார். ஊள ஊ. அது சரி. இப்பொழுது முதலில் அவன் இரட்சிக்கப்படுகிறான். அவனுடைய தாய் துணிகளைத் துவைத்து பிழைப்பை நடத்தி, அதைக்கொண்டு அவனை ஒரு கல்லூரிக்கு, பிரசங்கிப்பது எப்படி என்பதற்குரிய கல்வியைக் கற்கும்படி அனுப்பி வைக்கிறாள்.

அவன் இன்னமும் சிந்திக்கிறான்... பெண்கள் ஒழுக்கக்கேடாக உடையுடுத்திடுவதை அவன் காண்கையில், அது அவனை வெகுவாக மனமுடையச் செய்கிறது. சிகரெட்டுகளின் புகையை முகருகையில் புகைபிடிப்பதை தவிர்க்க அவனால் இயலாமற் போகிறது. அது தவறானது என்பதை அவன் அறிவான். அவன் அதைச் செய்ய விரும்புகிறதில்லை. எனவே அவன், "கர்த்தாவே, என்னை பரிசுத்தமாக்கும், அந்தக் காரியத்தை என்னைவிட்டு அகற்றிப்போடும்'' என்று வேண்டும்கிறான்.

தேவன் அவனிடம், ''நல்லது, நான் அதை உனக்காகசெய்வேன், மகனே, அவை யாவற்றையும் நீ உன்னை விட்டு அகற்றிப்போடு'' என்பார்.

166.ஒரு இரவில் அவன் ஒரு சிறு கூட்டத்திற்குச் சென்று, அங்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் குறித்து பேசப்படுவதைக் கேட்கிறான்.

அவன் முதல் அடியாகிய நீதிமானாக்குதலை அடைந்து விட்டான், இரண்டாவது கட்டமாகிய பரிசுத்தமாகுதலையும் அடைந்தான். இப்பொழுது பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாகி விட்டான். பாருங்கள்: ஒன்று, இரண்டு,மூன்று. அவன் ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாகிவிட்டான்.

அவன் அங்கே போய்ச் சேருகையில், வேதாகமத்தை நன்கு படிக்கிறான். ''அவர்கள் அவ்வாறுதான் செய்தார்கள். அது சரிதான். ஞானஸ்நானமானது இயேசுவின் நாமத்தில் தான் கொடுக்கப்படவேண்டும். அவர்களும் அப்படித்தான் செய்தார்கள். அது சரிதான். நான் வேதம் முழுவதிலும் படிக்கிறேன். அவர் சரியாக வார்த்தையில் தான் இருக்கிறார்'' என்ற கூறுகிறான். ''பிஷப், நீங்கள் இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?'' என்று கேட்கிறான்.

"அந்த அபத்தமெல்லாம் வேண்டாம்'' என்கிறார்.

"ஓ அப்படியா?'' என்கிறான். 'அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள். அந்நிய பாஷைகளில் பேசினார்களே, அவர்கள் இதைச்



வாக்குரைக்கப்பட்டது. கிறிஸ்துவே யூதா கோத்திரத்து சிங்கமாயிருக் கிறார். அந்த கோத்திரத்திலிருந்துதான் தாவீதும் தோன்றினான்.

75. அவர்கள் கிருபாசனத்தின் காவல்காரர்கள் என்பதைப் பற்றிப் பார்த்தோம். அவர்கள் கிருபாசனத்தை காவல் புரிந்தார்கள். ஒன்றும் அதண்டையில் நெருங்கமுடியாது. எதுவும் கிருபா சனத்தை அணுகவேண்டுமெனில், சுற்றிப் பாளயமிறங்கியிருக்கும் கோத்திரங்களைத் தாண்டிச் செல்லாமல் அணுகமுடியாது. எவரா வது அங்கே பாளயத்தினுள் பிரவேசித்து அக்கிருபாசனத்தைக் கைப்பற்றவேண்டும் என்று எண்ணினால் அதற்கு முன்பாக அங்கே தன் ஜீவனைக் கொடுக்க ஆயத்தமாயிருக்கும் ஒவ்வொரு இஸ்ரவேலனைக் கொன்று, அவன் மரித்தபின்தான் அவ்வாறு செய்ய இயலும். அவ்வாறுதான் பழைய ஏற்பாட்டு நியமமானது இருந்தது என்று இப்பொழுது நாம் பார்க்கிறோம்.

76. புதிய ஏற்பாட்டு நியமத்திலும் அதே காரியத்தையே நாம் காண்கிறோம். அதாவது இதிலும் கிருபாசனமானது காவல் செய்யப்பட்டு இருக்கிறது என்பதை நாம் காண்கிறோம். ஓ, நீங்கள் அதைப் புரிந்து கொண்டீர்கள் என்று நான் நம்புகிறேன். இன்னமும் கிருபாசனமானது காவல் செய்யப்பட்டுத்தான் இருக்கிறது. அதற்கு இன்னமும் காவல் செய்கிறவர்கள் உள்ளனர். அக்காவலர் கள் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகியோர் என்றும், அவர்கள் அப்போஸ்தலர் நடபடிகளை காத்துக்கொண்டிருக்கின்ற னர் என்றும் நாம் பார்த்தோம். அது பரிசுத்த ஆவியானவர் அப் போஸ்தலர் மத்தியில் செய்த நடபடிகளாகும்; அதுதானே புதிய ஏற்பாட்டின் அப்போஸ்தலர் நடபடிகளின் புத்தகமாயிருக்கிறது. சுவிசேஷங்களை எழுதிய மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய இந்நான்கு பேர்களும், அது பரிசுத்த ஆவியானவராகிய தேவனாயிருக்கிறார் என்பதை எடுத்துக்காட்டும்படி, இன்று கிருபாசனத்தை காவல் செய்துகொண்டிருக்கின்றனர். மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகியோர் எழுதிய ஒவ்வொரு திரு வசனமும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் உண்மையான சுவிசேஷத்தை பலமாக ஆதரித்தும், பரிசுத்த ஆவியானவரின் நடபடிகளை ஆதரித்தும் இருந்து கொண்டிருக்கின்றன.

77. நாம் அதைத் தாண்டிச் செல்வோமென்றால், அப்பொழுது அது அதுவல்ல. ஆனால் அது உண்மையான செய்தியை ஆதரித்து நிற்கிறது. அப்போஸ்தலர் நடபடிகள் 2:38-ல் "நீங்கள் மனந் திரும்பி ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம்

எவ்வாறு இஸ்ரவேலர் நான்கு திசைகளிலும் பாளயமிறங்கி யிருந்தார்கள் என்பதை விளக்க அவர்கள் அவ்வுடன்படிக்கைப் பெட்டியை மத்தியில் அமைத்தார்கள். ஒவ்வொரு திசையிலும் இஸ்ரவேலின் மூன்று மூன்று கோத்திரங்கள் வீதம் நாற்றிசை களிலும் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்கள் பாளய மிறங்கியிருந்தனர்.

70. அவர்களில் ஒருவன் ரூபன் கோத்திரம்; அவன் எப்பொழுதும் தெற்கில் தான் பாளயமிறங்கியிருப்பான். அவன் மனித முகக் கொடியைக் கொண்டவனாயிருந்தான். எப்பிராயீம் மேற்கில் இருந்தான், அவனோடு சேர்த்து அங்கே மூன்று கோத்திரங்கள் காளைமுகக் கொடியோடு பாளயமிறங்கியிருந்தது. வடக்கில் தாண் கோத்திரம், அதற்கு கழுகுச் சின்னம் இருந்தது. இப்பொழுது கவனியுங்கள். உங்களுக்கு அவையெல்லாம் ஞாபகமிருக்கிறதா? நீங்கள் யாவரும் அவற்றை நன்கு நினைவில் வைத்திருக்கிறீர்களா? எவ்வாறு கழுகு, காளை, மனிதன், சிங்கம் ஆகியவைகளை வரைந் திருந்தோம் என்பதை நினைவில் வைத்திருக்கிறீர்கள்.

71. யூதா கோத்திரம் கிழக்கு வாசலை காவல் புரிந்தது என்பதை நீங்கள் கவனியுங்கள். கிறிஸ்துவே யூதா கோத்திரத்து சிங்கமானவர். அவர் கிழக்கத்திய ஆகாயங்களின் வழியாக கீழே இறங்கி அவ்வாசலுக்குள் பிரவேசிப்பார். அவர் யூதா கோத்திரத் திலிருந்து கிழக்கு வாசலிலிருந்து வருகிறார். அவரே யூதா கோத்திரத்து சிங்கமானவர்.

72. இன்று காலையில் வருகின்ற செய்தியில் கூட அவர் இன்னமும் ''யூதா கோத்திரத்து சிங்கமும், தாவீதின் வேரும், தாவீதின் ஆரம்பமுமாக இருக்கிறார்'' என்று அறிவிக்கப்படுவதைக் காண்கிறோம். தாவீது நித்தியகாலமாக இராஜாவாயிருந்தான்; கிறிஸ்து தாவீதின் சிங்காசனத்தில் ஆயிர வருட அரசாட்சியில் அமருகிறார். அவர்தாமே நித்திய இராஜாவாக இருக்கிறார். ''ஒரு புருஷன் தாவீதுக்கு இல்லாமற்போவதில்லை". அல்லேலூயா! தாவீதுக்கு ஒரு புருஷன் இல்லாமற்போவதில்லை என்று தேவன் வாக்குத்தத்தம் செய்தார்.

73. நீங்கள் கேட்கக்கூடும்: "இன்றைக்கு எங்கே அந்த யூத நியாயாதிபதிகள்?' என்று.

74. இப்பொழுதும் தாவீதுக்கு அவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்ற வித்து அல்லது சந்ததி மாம்சத்தின்படி இருக்கிறார். ''தாவீதுக்கு இல்லாமற்போவதில்லை' என்று முன்பு ஒருமுறை



செய்தார்கள், அவர்கள் பிணியாளிகளை சொஸ்தமாக்கினார்கள். ஓ ஆம். சரியாக அவ்வாறு தான்.'' என்று கூறுகிறான். அவர்கள் இவ்வாறு தேசத்தின் எல்லையில் இருந்து கொண்டு அந்த நல்ல தேசத்தை நோக்கிப் பார்க்கிறார்கள்.

“ஓ, நான் இதைப்போய் என் சபைக்கு போதித்து விட்டால்.... ஓ, நான் ஒரு ப்ரெஸ்பிடேரியன், மெதோடிஸ்ட், பாப்டிஸ்ட். ஓ. பிஷப் என்னை வெளியே தள்ளிவிடுவார், நாங்கள் அதைச் செய்ய முடியாது. அவ்விதமானதொரு கூட்டத்தை எங்கள் சபையில் நடத்திட முடியாது. ஒவ்வொருவரும் சபையிலிருந்து வெளிநடப்பு செய்துவிடுவார்கள்” என்று கூறுகிறார்கள்.

167.ஒரு தடவை ஒருவன் இதனால் பிரகாசிக்கப்பட்டும், பரம் ஈவை ருசிபார்த்தும், அவன் தெரிந்துகொண்ட அந்த பாதையிலிருந்து அவன் விழுந்துபோனால், அவனைப் புதுப்பிப்பது கூடாத காரியம். ஏனெனில் அவன் தேவனுக்கு விரோதமாக பாவஞ்செய்துவிட்டான்.

பாவமானது என்ன? அவிசுவாசம் தான். அவன் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்துவிட்டான். அவன் தன்னை சுத்திகரித்த உடன்படிக்கையை, அது ஏதோ பரிசுத்தமில்லாத ஒன்றாக கருதிவிட்டான். அவனை அங்கே கொண்டுவந்த கிருபையின் கிரியைகளை அலட்சியம் செய்துவிட்டான். அங்கே அவனுக்கென இனிமேல் பலியே இல்லை. ஆனால் பயப்படத்தக்க விதமான சத்துருவைப் பட்சிக்கும் தேவ கோபாக்கினையானது காத்துக்கொண்டிருக் கிறது.

''பழிவாங்குதல் எனக்கே உரியது'' என்று கர்த்தர் கூறுகிறார். “தேவனுடைய வார்த்தையானது இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும் கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவு களையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. ஒளியை நீங்கள் காண்கையில் அதிலே நடவுங்கள்! நடவுங்கள்! நீங்கள் எங்கே போய்க் கொண்டிருக்கிறீர்கள் என்பதை அறிவீர்கள். ஆயினும் தொடர்ந்து நடந்து செல்லுங்கள். கல்வாரியை நோக்கி நடவுங்கள், கல்வாரியின் மேல் அர்த்தமுள்ள பார்வையை பதித்திடுங்கள், நடவுங்கள். நடந்திடுங்கள்.

168.ஓ தேவனே, ஒரு நாளில் சபையானது... ஏனோக்கு சபைக்கு முன்னடையாளமாயிருக்கிறான். ஐந்நூறு ஆண்டுகள் அவன்

தேவனுக்கு முன்பாக நடந்தான். தேவன் கூறியயாவற்றையும் செய்தவனாக இருந்தான் என்ற சாட்சியோடு அவன் ஒளியில் நடந்தவனாக இருந்தான். அவன் தேவனைப் பிரியப்படுத்தினான். கர்த்தர் என்ன கூறினாரோ அவற்றை ஏனோக்கு செய்தான். அவன் ஒரு முன்னடையாளமானவன் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

பேழையோ யூதர்களுக்கு முன்னடையாளமாக இருக்கிறது. இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேராகிய யூதர்களுக்கு முன்னடையாளமாக பேழை இருக்கிறது. நோவாவும் அவனுடைய குடும்பத்தினரு மாகிய பேழையிலுள்ளவர்கள் ஜலப்பிரளயத்தின் வழியாக கடந்து சென்றார்கள். ஆனால் ஏனோக்கோ ஜலப்பிரளயத்திற்கு முன்னால், பரமவீட்டினை அடைந்தான். அதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே, ஏனோக்கு தொடர்ந்து ஒளியில் நடந்து சென்றான். ஆகவே அவ்வாறு அவன் நடந்து செல்லுகையில், ஒருநாள் அவனது பாதங்கள் பூமியை விட்டு மேலே கிளம்பிவிட்டதாக உணர்ந்தான். அவன் தொடர்ந்து நடந்துசென்று மரியாமலேயே மகிமைக்குள் நடந்து சென்றுவிட்டான், அப்படித்தான் நடந்தது. தேவன் அவனை எடுத்துக்கொண்டார், ஏனெனில், ''அவன் தேவனுடைய ஒளியில் நடந்தான்' என்ற சாட்சியோடு ஒளியில் நடந்தவனாயிருந்தான். அவன் ஒளியில் நடந்து கொண்டேயிருந்தான். நடவுங்கள். நடந்திடுங்கள்.

169.சபையே, நாம் நடந்து செல்வதற்குரிய பாதரட்சைகளை அணிந்து கொள்வோம்.

ஒளியில் நடவுங்கள், திவ்விய ஒளியதுவே

அதினின்று இரக்கத்தின் பிரகாசமான பனித்துளிகள் வநததுவே

நம்மைச் சுற்றிலும் இரவும் பகலும் அது பிரகாசிக்கிறது,

இயேசு உலகத்தின் ஒளியாயிருக்கிறார்.

இப்பொழுது நாம் அதைப் பாடுவோம்:

நாம் ஒளியில் நடப்போம், அது திவ்விய ஒளியாம்

அதினின்று இரக்கத்தின் பிரகாசமான ஒளி வீசுகிறது

இரவும் பகலும் நம்மைச்சுற்றிலும் பிரகாசிக்கிறது,

இயேசு உலகத்தின் ஒளியாயிருக்கிறார்.

ஒளியின் பரிசுத்தரே,



66. ஓ, ஒருவராலும் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு முன்பாக நிற்கமுடியாது. நாம் எதிர்நோக்கக்கூடிய ஒரே காரியம் என்ன வெனில், நியாயத்தீர்ப்பு அல்ல, இரக்கமேயாகும். நீதியையல்ல. அவரது நியாயத்தீர்ப்பை நாம் நெருங்க முடியாது. ஏனெனில், அவரது நியாயத்தின்படி, அவர் தனது வார்த்தையை காத்துக் கொண்டாக வேண்டும். 'நீ புசிக்கிற நாளிலே சாகவே சாவாய்'' என்று அவர் கூறின தமது வார்த்தையை காத்துக்கொண்டாரே. யாருக்கு நியாயத்தீர்ப்பு வேண்டும்? எனக்கு நியாயத்தீர்ப்பு வேண்டாம். நான் இரக்கத்திற்காகவே கூப்பிடுகிறேன். ஓ தேவனுடைய இரக்கமானது... கிருபாசனமானது தெளிக்கப் பட்டுள்ளது.

67. ஆனால் பரிசுத்த ஸ்தலத்தை சுத்தம் செய்தல் நடக்கிற வேளை ஒன்று இருக்கிறது. அப்பொழுது அவ்வசனத்தில் இரத்தம் இல்லா திருக்கிறதினால், அது நியாயத்தீர்ப்பு ஆசனமாக ஆகிவிடுகிறது.

68. இப்பொழுது, நாம் அந்த வேளையை நெருங்கிக்கொண்டிருக் கிறோம். இந்தக் காலத்தில், பரிசுத்த ஸ்தலமானது கழுவி சுத்தி கரிக்கப்பட்டு பூமியின் மேல் நியாயத்தீர்ப்பானது வரப்போகும் ஒரு வேளையை நாம் அணுகிக் கொண்டிருக்கிறோம். பாருங்கள்? இரத்தமானது அங்கே இருக்கிறவரையிலும், தேவனால் பூமியை அழிக்க முடியாது. இரத்தமானது அங்கே இருக்கிறவரையிலும், தேவனுக்கு முன்பாக ஒருவரும் பாவியல்ல. யாவரும் சரியாக இருக்கிறார்கள். ஏனெனில் ஒவ்வொருவருக்காகவும் பாவப் பிரயாச்சித்தமானது அங்கே இருக்கிறது. ஆனால் நீங்கள் உங்களுக்காக உள்ள பாவப்பிராயச்சித்தத்தை ஏற்றுக்கொண்டு அவருடைய சமுகத்திற்குள் போகாவிடில், அப்பொழுது நீங்கள் பாவியாக இருக்கிறீர்கள். நீங்கள் இரக்கத்திற்கு அப்பாற்பட்ட நிலையில் இருக்கிறீர்கள். அப்பொழுது நீங்களே உங்களை நியாயந்தீர்த்துக்கொள்ளுகிறீர்கள். ஆனால் இப்பொழுது இரக்க மானது அங்கே இருக்கிறபொழுது... ஆனால் பரிசுத்த ஸ்தலத்தை கழுவி சுத்திகரிக்கும்; வேளையானது வருகிறபோது கிருபாசனத்தை விட்டு இரத்தமானது நீங்கிப்போகிறது. அப்பொழுது தேவ னுடைய கோபமானது பூமியின்மேல் விழுகிறது. ஓ, என்னே! தேவனே, நாங்கள் அந்நாளில் தேவனுடைய இரக்கங்கள் அற்ற வர்களாக காணப்படாதபடி இருக்க எங்கள்மேல் இரக்கமாயிரும்.

69. இப்பொழுது நாம் அங்கே காண்கிறோம்... இங்கே அதை நான் ஆவிக்குரிய பிரகாரமாக விளக்கிக் கூறுவேன்; அதை நான் உங்களுக்கு என் கையினால் வரைந்து விளக்கிக் காண்பிப்பேன்;

62. இப்பொழுது இதில் மிகவும் மேம்பட்ட ஒரு விஷயம் உள்ளது. (அவர்கள் எனது கரும்பலகையை எடுத்து கீழே வைத்து விட்டார்கள் என்று கருதுகிறேன்). இந்த மிக முக்கியமான விஷயத்தை நாம் பார்ப்பதற்கு முன்பாக நான் அந்த விஷயத்தின் பேரில் வலியுறுத்தி ஒன்றைக் கூறவிரும்புகிறேன். ஓ, இது மகிமை பொருந்தினதாக இருக்கிறது. அது அற்புதுமானது, அற்புதமான அதிகாரம்.

63. இதற்குப்பிறகு, அடுத்துள்ள அதிகாரமானது முத்திரைகள் திறக்கப்படுதலோடு ஆரம்பிக்கிறது. ஓ, என்னே ! அதன்பிறகு, நாம் இம்முத்திரைகள் எப்பொழுது திறக்கப்பட்டன, அவைகளிலுள்ள இரகசியங்கள்தான் என்ன என்பதைப் பற்றி பார்க்க, வேதாக மத்தில் பல்வேறு பகுதிகளை நாம் பார்க்க வேண்டும். ஓ, அவைகள் மகிமை பொருந்தினவைகளும், வளமையானதாகவும் இருக் கிறது, அவைகளில் ஆவிக்குரிய வைட்டமின்கள் அடங்கியுள்ளன.

64. நான்காம் அதிகாரத்தின் இறுதிப் பாகத்தில் காணப்படும் அந்த ஜீவன்களைப் பற்றிய மிகவும் தலைசிறந்த விஷயத்தைக் குறித்து உள்ள விஷயத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். யோவான் இவைகள் உடன்படிக்கைப் பெட்டியைக் காவல் பண்ணுகிறதைப் பார்த்தான். இஸ்ரவேலர் தங்களுடைய யாத்திரையின் போது எவ்வாறு பாளயமிறங்கினார்களோ, அதே விதமாக இவைகள் வைக்கப்பட்டிருந்தன என்பதைப்பற்றி நாம் பார்த்ததை நீங்கள் நினைவில் வைத்திருக்கிறீர்கள். இந்த ஜீவன்கள் தூதர்கள் அல்ல என்பதாக நாம் கண்டோம். அவைகள் மனிதனும் அல்ல என்றும் கண்டோம். அவைகள் கேருபீன்கள் ஆகும். பழைய ஏற்பாட்டில் அவைகள் உடன்படிக்கைப் பெட்டியோடு இருப்பதாகக் கண்டோம். அவைகளை நாம் புதிய ஏற்பாட்டிலும் காண்கிறோம். அவைகளை மீண்டும் கர்த்தருடைய வருகையின் போதும் இருக்கக்காண்கிறோம். கேருபீன்கள் கிருபாசனத்தைக் காவல் செய்துகொண்டிருக்கின்றன.

65. எந்தவொரு நபரும் தனக்கென பாவப்பிராயச்சித்தம் ஒன்று இல்லாமல் கிருபாசனத்தை கிட்டிச் சேரமுடியாது. ஒரே வழி அப்பரிசுத்த ஸ்தலத்திற்கு... அங்கே இரத்தம் தெளிக்கப்பட்ட பொழுதுதான், அது கிருபாசனமாக ஆகிறது. ஆனால் இரத்தமானது அதிலிருந்து எடுபட்டுப்போனபிறகு, அது நியாயத்தீர்ப்பு ஆசனமாக ஆகிவிடுகிறது.



இயேசுவே உலகின் ஒளியென்று

பிரசித்தம் செய்வீர்

அப்பொழுது பரலோகத்தின் மணிகள்

இயேசு உலகின் ஒளியென முழங்கிடுமே

நாம் அச்சுந்தர ஒளியில் நடப்போம்

அங்கிருந்து பிரகாசமாயுள்ள இரக்கத்தின்

பனித்துளிகள் சிந்திடுமே

அது நம்மைச் சுற்றி இரவும் பகலும் பிரகாசித்திடும்

இயேசுவே உலகின் ஒளியாயுள்ளார்.

170.சற்று நேரம் நாம் நம் தலைகளை வணங்குவோம். இங்கு யாருக்காவது பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும் அனுபவத்தைப் பெற வேண்டுமென வாஞ்சையுள்ளவர்கள் இருப்பார்களாயின். ''சகோதரன் பிரன்ஹாம் அவர்களே, என்னை நினைவுகூருங்கள், சபையே, என்னை நினைவு கூருங்கள். நான் ஒளியில் நடக்க விரும்புகிறேன். என்னில் கசப்பான வேர் எதுவும் இருக்கலாகாது , என்னில் கசப்பான வேர் எதுவும் இருக்கலாகாது, இனிமை என்னில் வேண்டும், நான் தேவனுடைய ஊழியக்காரனாகவே இருக்கவிரும்புகிறேன்'' என்று கூறுங்கள். "கர்த்தாவே என்னை நினைவுகூரும்'' என்று கரத்தை உயர்த்திக்கூறுங்கள்.

ஆம், இருபது அல்லது அதற்கும் மேலான கரங்கள் உயர்த்தப்பட்டுள்ளன.

நாம் மெதுவாக ஒன்று சேர்ந்து பாடுகையில், தலைகளை வணங்கிய வண்ணமாகவே இருங்கள்:

ஓ, இயேசுவே உலகின் ஒளியாயிருக்கிறார்

நாம் இவ்வொளியில் நடப்போம், அது சுந்தர ஒளியாம்

பிரகாசமாயுள்ள இரக்கத்தின் பனித்துளிகளி னின்று அது வருகிறது

இரவும் பகலும் நம்மைச் சுற்றி பிரகாசிக்கிறது.

இயேசுவே உலகின் ஒளியாயிருக்கிறார்.

ஒளியின் பரிசுத்தரே,

இயேசுவே உலகின் ஒளியென்று

பிரசித்தம் செய்வீர்

அப்பொழுது பரலோகத்தின் மணிகள்

இயேசு உலகின் ஒளியென முழங்கிடுமே

அது நம்மைச் சுற்றி இரவும் பகலும் பிரகாசித்திடும்

இயேசுவே உலகின் ஒளியாயுள்ளார்.

நாம் அச்சுந்தர ஒளியில் நடப்போம்

அங்கிருந்து பிரகாசமாயுள்ள இரக்கத்தின் பனித்

துளிகள் சிந்திடுமே

நம்மைச் சுற்றிலும் இரவும் பகலும் பிரகாசிக்கிறது

இயேசுவே உலகத்தின் ஒளியாம்.

171.(சகோதரன் பிரன்ஹாம் அவர்கள் மேற்கண்ட பாடலை தனக்குள் மெதுவாக பாடுகிறார் - ஆசி). ஆண்டவரே, இந்த ஜனங்கள் சுவிசேஷ ஒளியில் நடக்க விரும்பி இப்பாடலை தங்களுக்குள் மெதுவாக இசைத்துக் கொண்டிருக்கையில், அவர்களின் விலையேறப்பெற்ற இருதயங்களை உம் கரத்தில் எடுத்துக்கொள்ளும், கர்த்தாவே . அவர்கள் உம்முடை யவர்கள் ஆக இருக்கிறார்கள். அவர்களை சுத்தி கரியும், எல்லா தீமையையும், அவிசுவாசத்தையும் அவர்களை விட்டு அகற்றியருளும். உலகின் ஒளியாயிருக்கிற இயேசு அவர்களுக்குள் வரட்டும்.

இங்கே கைக்குட்டைகள் வைக்கப் பட்டுள்ளன. கர்த்தாவே, இவைகள் பிணியா ளிகளுக்காகவும், துன்பப்படுபவர்களுக்காகவும் வைக்கப்பட்டுள்ளன. கர்த்தராகிய இயேசுவே, அவர்களண்டைக்கு வந்து அவர்களை குணமாக்கும், அதினால் அவர்கள் ஒளியில் நடக்க முடியுமே, அனுக்கிரகித்தருளும், கர்த்தாவே.

எங்களுக்கு கொடுக்கப்பட்ட போதனைக்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம் எங்களோடு இருந்து, எம்மைக்காத்து, மணிக்கணக்கில் இங்கே அமர்ந்திருக்கச் செய்ததற்காக நன்றி செலுத்துகி றோம். மக்கள் இந்த உஷ்ணமான



கர்த்தரோடு, இரத்தத்தில் மகிமையாக கழுவப்பட்டவளாய், திரும்பி வருகிறாள்.

57. இப்பொழுது யோவான் எங்கிருக்கிறான் என்பதைக் குறித்து, பேசப்பட்ட கடைசி செய்தியிலிருந்து பின்னணியை நாம் கவனிப் போம். நான் அதைக்குறித்து பிரசங்கித்தவைகளின் விஷயங்களை நேற்றைய தினத்தில் பரிசீலித்துக் கொண்டிருந்தேன். யோவான் பரலோகத்திற்குள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அக்காரியங்களைக் கண்டான். அவர் எனக்கு ஒரு வெளிப்படுத்துதலை அதன்பேரில் கொடுத்திருந்திருக்கிறார் என்பதை நான் அங்கே கவனித்தேன். அது.... ஆண்டவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, அநேகர் அவரோடிருந்தனர். சிலர் அவரிடம், "உமது மார்பில், சாய்ந்து கொண்டு இருக்கும் இம்மனிதனுக்கு (யோவானுக்கு) என்ன நேரிடும்?'' என்று கேட்டனர்.

58. அதற்கு இயேசு, "நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்ன?'' என்று கூறினார். எனவே அவர் ஒருபோதும்....

59. அப்பொழுது, அங்கே ஒரு போதகம் புறப்பட்டுச் சென்றது. இவ்வாறு ஒரு போதகம் புறப்படுவது எவ்வளவு சுலபமாக இருக்கிறது என்பதைப் பாருங்கள். இயேசு வருவதைக் காணுகிற வரையிலும், அல்லது இரண்டாம் வருகை வரையிலும், யோவான் மரிப்பதில்லை'' என்ற போதகம் அப்பொழுது அதிலிருந்து புறப்பட்டது. அதிலிருந்து ஒரு போதகம் புறப்பட்டது என்று வேதம் கூறுகிறது.

60. ஆனாலும் இயேசு அந்தவிதமாகக் கூறவேயில்லை. ''நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்ன?'' என்றுதான் கூறினார்.

61. அவன் பரலோகத்திற்குள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அப்பொழுதிலிருந்து கர்த்தருடைய வருகை பரியந்தமும் நடப் பவைகளை அவன் கண்டான். அவன் எதிர்காலத்தில் உள்ளவைகளை காண்கையில், அக்காலத்தில் ஜீவித்திருந்தவனைப்போல் இருந்து, அவைகள் சம்பவிக்கக் கண்டான். யோவான் நீண்ட காலம் உயிரோடிருக்கவில்லை.... அவன் தொண்ணூறும் சொச்சம் ஆண்டுகள் மட்டும் உயிர் வாழ்ந்து, பத்மு தீவுக்கு நாடு கடத்தப்பட்டதிலிருந்து திரும்பி வந்து, இயற்கையான மரணத்தை எய்தினான். அவ்வாறு மரித்த ஒரே அப்போஸ்தலன் இவன்தான்.

"அன்றியும், உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்த ஒரு புஸ்தகத்தைச் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய வலது கரத்திலே கண்டேன்.

புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரவான் யார் என்று மிகுந்த சத்தமிட்டுக் கூறுகிற பலமுள்ள ஒரு தூதனையுங்கண்டேன்.

வானத்திலாவது, பூமியிலாவது, பூமியின் கீழாவது, ஒருவனும் அந்தப் புஸ்தகத்தைத் திறக்கவும், அதைப் பார்க்கவும் கூடாதிருந்தது.

ஒருவனும் அந்தப் புஸ்தகத்தைத் திறந்து வாசிக்கவும் அதைப் பார்க்கவும் பாத்திரவானாகக் காணப்படாததினால் நான் மிகவும் அழுதேன்.

அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: நீ அழ வேண்டாம்; இதோ, யூதோ கோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் ஏழு முத்திரை களையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார் என்றான்.

அப்பொழுது, இதோ, அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியிலே நிற்கக்கண்டேன்; அது ஏழு கொம்புகளையும் ஏழு கண்களையும் உடையதாயிருந்தது. அந்தக் கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளேயாம்.

அந்த ஆட்டுக்குட்டியானவர் வந்து, சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தவருடைய வலது கரத்திலிருந்து புஸ்தகத்தை வாங்கினார்."

வெளி. 5:1-7. இவைகள் முதல் ஏழு வசனங்களாகும்.

56. வெளிப்படுத்தின விசேஷத்தின் மூன்றாம் அதிகாரத்தில், சபைக்காலங்கள் முடிவடைகிறதை நாம் காண்கிறோம். அது வெதுவெதுப்பான சபைக்காலமாகிய லவோதிக்கேயா சபைக் காலத்தோடு முடிவடைகிறது. அதன்பிறகு, உடனடியாக யோவான் ஆவிக்குள்ளாக பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப் படுகிறதை நாம் காண்கிறோம். அவன் இருந்தவைகளையும் இருக்கிறவைகளையும் வரப்போகிறவைகளையும் பார்த்தான். வெளிப்படுத்தின விசேஷத்தின் மூன்றாம் அதிகாரத்திற்குப் பிறகு 19-ம் அதிகாரம் வரைக்கிலும் சபையை நாம் காண்பதில்லை. அதன்பிறகு அவள் தன்



அறையில் அமர்ந்து காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எதிர்பார்ப் போடும் ஆச்சரியத்தோடும் காத்துக்கொண்டிருக்கி றார்கள். ஏனெனில், வசனமானது வாசிக்கப்படு கையில், தாங்கள் கடைசிக்காலத்தில் இருப்பதை உணர்ந்திருக்கிறார்கள். உலகில் களியாட்டம் தான் மிச்சமாக உள்ளது. இந்நாட்களில் ஒன்றில், இந்த வேஷமான, போலியானவைகளெல்லாம் ஒழிந்து போம்.

தெய்வீக பிரசன்னத்தில் இருக்கும் ஒவ்வொரு நபரையும் நீர் இரட்சிக்க வேண்டுமென, தேவனே, நான் வேண்டுகிறேன். அவர்களை உமது ஆவியால் இரட்சித்தருளும். பரிசுத்த ஆவியானவர் தாமே அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து, அவர்கள் ஆவியின் கனியாகிய நீடிய பொறுமை, தயவு, சமாதானம், பொறுமை, சாந்தகுணம்,விசுவாசம் ஆகியவைகளை பரிசுத்த ஆவிக்குள் பெற்றுக் கொள்ளும்படி தாரும், கர்த்தாவே .

இப்பொழுது உம்முடைய சேவைக்காக அவர்களை நான் உம்மிடம் ஒப்படைப்பேன். இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் வேண்டுகிறேன். ஆமென்.

172.நாம் ஒளியில் நடப்போம்

(நாம் பாடும் பொழுது நம்முடைய கரங்களை உயர்த்திடுவோமாக) அது சுந்தர ஒளியாம்,

பிரகாசமான இரக்கத்தின்பனித்துளிகளினின்று அது சிந்துகிறது,

நம்மைச் சுற்றி இரவும் பகலும் பிரகாசிக்கிறது,

ஓ, இயேசுவே உலகின் ஒளியாயிருக்கிறார்.

நான் அவரை நேசிக்கிறேன் நான் அவரை நேசிக்கிறேன்

ஏனெனில் அவர் என்னில் முந்தி நேசம் கொண்டு

என் இரட்சிப்பை கல்வாரி சிலுவையில் கிரயத்திற்கு வாங்கினதால்.

173.ஓ, அவர் அற்புதமானவராக இருக்கவில்லையா? நாம் இப்பொழுது பத்து அல்லது பதினைந்து நிமிட நேரத்திற்கு அல்லது எவ்வளவு நேரமோ அவ்வளவு நேரத்திற்கு ஞானஸ்நான ஆராதனையை நடத்து வோம். இங்கே ஒரு இளம்பெண் ஞானஸ்நானம் செய்யப்படுவதற்காக இருக்கிறாள், அது சரிதானே? ('அநேகர் இருக்கின்றனர்'' என்று சகோதரன் நெவில் கூறுகிறார் - ஆசி). மாலையில் உள்ள ஞானஸ்நான ஆராதனையில் ஞானஸ்நானம் எடுக்க வர இயலாமல் இருந்து,

காலையில் உள்ள ஞானஸ்நான ஆராதனையில் ஞானஸ்நானம் எடுக்க விரும்புகிறவர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள்? ஒன்று, இரண்டு, மூன்று, இவர்கள் இன்று மதியம் அல்லது மாலை ஆராதனைக்கு முன்பாக, இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் எடுக்க வர இயலாமல் இருக்கிறார்கள். பிள்ளைகளே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

தேவன் உங்களுக்கு முன்பாக திறந்த வாசலை வைத்திருக்கிறதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் உள்ளே பிரவேசிக்க இப்பொழுது ஆயத்தமாக இருக்கிறீர்கள்; நீங்கள் கல்லறைக்குள் போய், பழையவைகளெல்லாம் உங்களுக்கு மரித்ததாக ஆகி, அடக்கம்பண்ணப்படுவதற்காக இருக்கிறீர்கள். இப்பொழுது இதை மனதில் வையுங்கள், அதாவது, நீங்கள் எடுக்கும் ஞானஸ்நானம் ஆனது, உங்களுடைய உள்ளத்தில் என்ன நேரிட்டிருக்கிறதோ அதை வெளியே காட்டுவதாகத்தான் அமைந்துள்ளது.

நாம் அச்சுந்தர ஒளியில் நடந்திடுவோம் (ஆயத்தமாகி விடுவோம்)

அங்கிருந்து பிரகாசமாயுள்ள இரக்கத்தின் பனித்துளிகள் சிந்துகின்றன,

நம்மைச் சுற்றிலும் இரவும் பகலும் பிரகாசிக்கிறது

ஓ இயேசுவே, உலகின் ஒளியாயிருக்கிறார்.

174.ஓ, இந்த மகத்தான ஐக்கியம்! நீங்கள் அதைப்பற்றி நல்லதாக உணரவில்லையா? ஓ, நான் மிகவும் நன்றாக இருப்பதாக உணருகிறேன், சவுக்காரத்தைக் கையாண்டு, பழங்காலத்து அழுக்குத் தேய்க்கும் ப்ரஷ் கொண்டு தேய்த்து, அழுக்கை யெல்லாம் அகற்றிடும் ஒரு இடத்தில் இருந்து சுத்தம் செய்யப்பட்டு வந்தது போல் நான் உணருகிறேன். என் சகோதரன் கூறினார், ஒருவேளை இன்று காலையில் ஞானஸ்நானம் எடுக்கவிரும்புகிறவர்கள் அனைவம் எடுக்கக்கூடும் என்று. எனவே ஆயத்தமாகுங்கள். ஞானஸ்நானத்திற்கென்றே உள்ள பிரத்தியேக ஆடைகள் இன்றிரவில் ஈரமாக ஆகிவிடும். அதைப்பற்றி பரவாயில்லை. நீங்கள் அவ்வாறு காலையில் ஞானஸ்நானம் எடுக்க விரும்பினால் செய்யுங்கள். இன்று காலையில் ஞானஸ்நானம் எடுக்க விரும்பினால் அப்படியே செய்யுங்கள். நாம் இதோடு முடித்துக்கொண்டு கடந்து செல்லவேண்டு மென எண்ணுகிறேன், அப்படித்தானே சகோதரன் நெவில் அவர்களே? நல்லது, ஐயா. எத்தனை பேர்கள் இப்பொழுது தங்கியிருந்து,



நிறுத்தியிருந்தோம். இப்பொழுது, நாம் கடந்த காலத்தின் விஷயங்களை மறந்துவிட்டு, திருவசனத்தை அணுகுவோமாக.

52. பிதாவாகிய தேவனே, நாங்கள் பதற்றமுடையவர்களாக இருப்பதினால் நீர் எங்களுக்கு உதவி செய்தருளும். ஆனால் நாங்கள் திருவசனத்தை அணுகும் பொழுது, பின்னானவைகளை மறந்து, பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக முன்னானவைகளை நாடுகிறோம். அப்பரம அழைப்பானது கிறிஸ்துவுக்கு ஊழியக் காரனாக இருப்பதற்குரிய ஊழியமாயிருக்கிறது. கர்த்தாவே, பரிசுத்த ஆவியின் விலையேறப்பெற்ற அபிஷேகத்தைப் பெற நாங்கள் வாஞ்சித்தும், அதற்காக காத்துக்கொண்டிருக்கிறோம். எனவே இன்று காலையில் எங்களுக்கு வார்த்தையை அளித்து, பசியுள்ள எங்கள் ஆத்துமாக்களை, மீறுதல்களையும் மன்னித்து, எங்களை உம்முடைய ஊழியக்காரராக போஷித்தருளும். கர்த்தாவே, நீர் எங்கள் மத்தியில் வந்து, எங்கள் பாவங்களையும் மீறுதல்களையும் மன்னித்து எங்களை உம்முடைய ஊழியக்காரராக இருக்கச் செய்தருளும். இயேசுவின் நாமத்தினால் கேட்கிறோம். ஆமென்.

53. நாங்கள் சபைக்காலங்களைக் குறித்துப் படித்தோம். கடைசியான ஏழு சபைக் காலங்களைக் குறித்துப் படித்தோம். அதன்பிறகு, இப்பொழுது, இங்கே சிலர்..... இச்சபைக்காலங்களைக் குறித்து புத்தகம் ஒன்றை எழுதப்போகிறார்கள். அதன்பிறகு, நாங்கள் வெளிப்படுத்துதலின் புத்தகத்தின் நான்காம் அதிகாரத்திற்கு வருகிறோம். இது என்ன புத்தகம்? இயேசு கிறிஸ்துவைப் பற்றின வெளிப்படுத்துதல் ஆகும். வெளிப்படுத்துதல் என்பது லத்தீன் மொழியில் அப்போகேலிப்ஸ்'' (Apocalypse) என்று வழங்கப் படுகிறது; அதன் அர்த்தம் என்ன வெனில், "மூடியிருக்கிற மூடலை அகற்றி வெளிப்படுத்துவது, காண்பிப்பது, வெளியே தெரியப் படுத்துவது'' என்பதாகும். இருந்தவரும் இருக்கிறவரும், வரப் போகிறவரும், தாவீதின் வேரும் சந்ததியுமாகிய இயேசுகிறிஸ்து வைப் பற்றிய வெளிப்படுத்துதலை வெளிக்கொணர்வதாகும்.

54. இப்பொழுது இந்நான்காம் அதிகாரத்தில் யோவானானவன், சபைக்காலங்களை அவன் கண்ட பிறகு, பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறான் என்று நாம் கண்டோம். சிறிது இதன் பின்னணியைப் பார்த்துவிட்டு பிறகு நாம்...

55. 5ம் அதிகாரத்தின் சில வசனங்களை நாம் வாசித்துவிட்டு, பிறகு, இதன் பின்னணிச் சூழலைப் பற்றி பார்க்கத் துவங்குவோம்.

48. இப்பொழுது எங்களை ஆசீர்வதித்து எங்களுக்கு இன்றைக்கு மகத்தான ஆராதனையைத் தந்தருளும். ஏனெனில் நாங்கள் இதற்காக மாத்திரம் இங்கு கூடிவந்திருக்காமல், அதை உலகுக்கு முன்பாக பகிரங்கமாக தெளிவுபடுத்தவும் கூடிவந்திருக்கிறோம். அதனால் அவர்கள், நான் உம்மை நேசித்து விசுவாசித்து உமக்காக நின்றேன், இன்னமும் நிற்க விரும்புகிறேன் என்பதை அறிந்து கொள்வார்களாக. அடியேன் போய்விட வேண்டுமென்றால் நான் உம்மை விசுவாசித்து உம்மில் நம்பிக்கை கொண்டிருந்ததைப் பற்றிய உண்மையான சாட்சியோடும், சுத்த இருதயத்தோடும் நான் போய்விடட்டும், கர்த்தாவே. அதை அளித்தருளும்; வரப்போகும் காலங்கள் நெடுகிலும் நான் உம்மைத் துதிப்பேன்; நாங்கள் உமக்கு மகிமை செலுத்துவோம். இயேசு கிறிஸ்துவின் மூலமாக, ஆமென்.

49. இப்பொழுது நாம் வேதாகமத்தில் .... வேத வசனங்களுக்குத் திரும்புவோம். சகோதரன் நெவில் அவர்கள் பொருட்படுத்த வில்லையெனில், இன்னும் சில நிமிட நேரம் தொடர்ந்திடலாம் என்று நான் இன்று காலையில் எண்ணினேன்.

50. உங்களில் இனி ஒரு தடவைகூட எவருக்குள்ளும் இக்காரியம் பேசப்பட்டு அது என் காதில் வந்து விழவேண்டாம். ஜெபித்து, அதைத் தள்ளிவிட்டு, அதைப்பற்றி பேசாதிருங்கள். நான் ஐம்பத்திரண்டு வயதுடையவனாய் இருக்கிறேன். ஆனால் ஒருவேளை தேவன் என்னை உயிரோடு இன்னும் வைத்திருப்பாரெனில், இன்னும் கொஞ்ச காலம் மாத்திரமே என் ஜீவன் இருக்கும். நான் என்னுடைய நேரத்தின் ஒவ்வொரு துளியையும் கிறிஸ்துவுக்கென்றே செலவழிக்க விரும்புகிறேன். ஆகவே, நான் ஊழியத்தை விட்டு விலகிச் செல்கிறேன். ஏனெனில் நான் அவ்வாறு செய்யும்படியான கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன். இது உங்களுக்கு ஞாபகமிருக்கட்டும்.

51. இப்பொழுது வெளிப்படுத்தின விசேஷப் புத்தகத்தில் அன்றைய தினத்தில் நான்காம் அதிகாரத்தோடு நிறுத்தியிருந்தோம். வெளிப்படுத்தின விசேஷப் புத்தகம் நான்காம் அதிகாரம், அவ்வதிகாரத்தின் கடைசிப் பாகத்தோடு நிறுத்தியிருந்தோம் என்று நான் நம்புகிறேன். நல்லது, எத்தனை பேர் வெளிப்படுத்தின விசேஷத்தை விரும்புகிறீர்கள்? அற்புதம் நாம் 5-ம் அதிகாரத்தில் நிறுத்தியிருந்தோம் என்று நான் எண்ணுகிறேன். அப்படித்தானே? நாம் நான்காம் அதிகாரத்தில் ஜீவன்களைப் பற்றிய விஷயத்தோடு



ஞானஸ்நானம் கொடுக்கப்படுவதை காண விரும்புகிறீர்கள்? ஒருவேளை இதை நீங்கள் இதுவரையிலும் பார்த்திரா விடில், சில நிமிடங்கள் தங்கித்தரித்து, அதைக் கண்டுவிட்டுப்போங்கள்.

அப்படித் தங்கியிருந்து அதைக்கண்டுபோக முடியாவிடில் பரவாயில்லை, ஆனால் இரவு ஆராதனைக்கு கடந்து செல்வோமாக. அங்கே பெரிய கண்ணாடி இருக்கிறது, அதன் வழியாக ஞானஸ் நானத்திற்காக தண்ணீருக்குள் செல்லும் ஒவ்வொருவரையும் நீங்கள் கண்டுகொள்ளலாம். அதின் தாக்கம் உங்களுக்கு ஏற்படும். நான் நிச்சயமாக இருக்கிறேன். ஞானஸ்நானத்தில் நாம் கர்த்தரோடு அடக்கம்பண்ணப்படுகிறோம். ஆமென். அவர் மரித்தது போல் நாமும் அவருடைய மரணத்திற்குள்ளாக அடக்கம்பண்ணப்படுகிறோம். புதிதான ஜீவனுள்ள வர்களாய் நடக்கும்படி, அவருடைய உயிர்த் தெழுதலுக்குள்ளாக நாம் எழும்புகிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

175.இன்றிரவில் உள்ள பாடம் எதைப்பற்றியது என்று எத்தனை பேர் அறிவீர்கள்? அதுதான் லவோதிக்கேயா ஆகும். சபைக் காலங்களின் உச்சக்கட்டமானதும் கடைசியானதுமாகும். நல்லது, நாம் ஞானஸ்நான ஆராதனைக்குள் செல்வோம். டெட்டி, நீங்கள் ஒருவேளை நீங்கள் ஞானஸ்நானம் எடுக்க விரும்புகிறீர்களா? (ஒலி நாடாவில் காலி இடம் - ஆசி... ஏற்கனவே ஞானஸ்நானம் எடுத்தாகிவிட்டதா? இப்பொழுது சிக்காகோவுக்குப் போக வேண்டிய சிலர் உள்ளனர்.

ஜெபம்பண்ணுவோம். கர்த்தராகிய இயேசுவே, அவர்கள் ஆராதனை முழுவதிலும் அமர்ந்திருந்து செவிகொடுத்திருக்கிறார்கள். சிக்காகோவுக்கு அவர்கள் புறப்படுகையில், நாங்கள் அவர்களை இப்பொழுது உம்மிடம் அர்ப்பணிக்கிறோம், கர்த்தாவே. அவர்களோடு கூடப்போம், கர்த்தாவே. அவர்கள் ஒவ்வொருவரும் இந்த அற்புது ஒளியை தங்களோடு எடுத்துச்சென்று, அதை அவர்கள் போகும் ஒவ்வொரு இடத்திலும் சிக்காகோ நகரம் முழுவதிலும் பரவச் செய்யட்டும், கர்த்தாவே. அவர்களோடு நீர் இருந்தருளும். மீண்டும் நாங்கள் சந்திக்கிறவரையிலும் அவர்களுடைய ஆவிகள் உம்மில் நங்கூரமிட்டிருக்கட்டும். இயேசுவின் நாமத்தில் கேட்கிறேன். ஆமென்.

176.(சகோ. நெவில் தீர்க்கதரிசனம் உரைக்கிறார் - ஆசி)

“என் ஜனங்களே, இந்த காலைவேளையில் மற்றொருவிசை இதை கூற விரும்புகிறேன். என் ஊழியகாரனே, நீ என்னுடைய வார்த்தையை கொடுத்துக்கொண்டிருப்பதை நான் ஏற்றுக்கொண்டேன். உன்னை

நான் பின்தொடர்ந்து, உன்னொடு தனிமையாய் பேசுவேன். உன்னுடைய பிரயானத்திட்டங்களை உனக்கு காட்டுவேன். நான் உன்னுடனே கூட இருந்து உன்னை ஆசீர்வதிப்பேன்.;

என் ஜனங்களே, இந்த காலைவேளையிலே நான் கூறுவது என்னவென்றால், நான் சர்வவல்லமையுள்ள தேவன். இந்த காலைவேளையிலே நான் உங்களிடத்தில் வரும்படிக்கு இந்த பாத்திரத்தை உபயோகப்படுத்தினேன். இதோ, நீங்கள் என்னுடைய ஆவியை தள்ளிவிட்டு போகவேண்டாம் என்று கூறுகிறேன். உங்களிடத்தில் பேசுகிற சத்தத்தை கைவிட வேண்டாம். நான் உங்களுடனே கூட இருக்கிறேன். உங்களுடைய சித்தம் என்னுடையதாய் இருக்கட்டும்.

உங்களுடைய சொந்த வழியை விட்டு, உங்களுடைய என்னங்களை விட்டு விலகி என்னை விசுவாசியுங்கள், நான் உங்களுடனே இருக்கிறேன். என்னிடத்தில் வந்து, ஞானஸ்தானத்தில் என்னை பின்பற்றுவீர்களானால், அப்போழுது நான் உங்களை ஆசீர்வதித்து உங்களை பாதுகாப்பேன். நான் உங்களை இன்பத்தின் முழுமைக்கு கொண்டுவருவேன். ஆம், நான் பேசினேன். இதை நிறைவேற்றாமல் இருப்பேனோ?" என்று கர்த்தர் உரைக்கிறார்.

நாம் நம்முடைய கரங்களை உயர்த்தி, ''கர்த்தராகிய இயேசுவே, உமக்கு நன்றி, உமது நாமத்திற்கு ஸ்தோத்திரம்' என்று கூறுவோம். கர்த்தாவே, உமக்கு நன்றி நாங்கள் அங்கீகரிக்கிறோம்.

கர்த்தாவே, வேதத்தில் ஒரு மனிதன் மேல் ஆவியானவர் இறங்கி, தேவனுடைய இரகசியம் யாவற்றையும் கூறி, என்ன நடக்கப்போகிறது என்பதை எடுத்துரைத்தார். பிதாவே, நீர் மாறாத தேவன் என்பதை நாங்கள் அறிவோம். இங்கே இருக்கிற இந்த தாழ்மையான மேய்ப்பனின் மேல் இன்று காலையில் இறங்கினீர். கர்த்தாவே, ஒரு காலத்தில் இவர் நிக்கொலாய் மதஸ்தரின் சபையில் இருந்தார். ஆனால் நீர் அவரை அசைத்தபொழுது, அவர் ஒளியைக் கண்டு, அதிலிருந்து வெளியே வந்துவிட்டார்.

அவரோடு நீர் பேசத்தக்கதாக அவருடைய இருதயம் உமக்கென்று திறந்ததாய் இருக்கிறது. அவர், தான் என்ன கூறப்போகிறோம் என்பதையே அறியாதவராயிருந்த பொழுது, அவர் எழும்பி நின்று, எங்களுக்கென தீர்க்கதரி சனத்தின் குரலாக இருக்கும்படி, தன் மூலமாக பரிசுத்த ஆவியானவர் அசைவாட இடம் கொடுத்தார்.



நான் என்ன செய்தேன்? நீர் என்னிடத்திலும் யாவரிடத் திலும் இரக்கமாயிருக்க வேண்டுமென நான் ஜெபிக்கிறேன். அந்த விலையேறப்பெற்ற மக்கள், தாங்கள் செய்திருக்கிற நெறிபிறண்ட அச்செயலைக் குறித்து, தங்களுக்குள் உணர்வடையட்டும். கர்த்தாவே, அவர்களது இச்செயல் தங்கள் சகோதரனின் இருத யத்தையும், தங்கள் சகோதரனை மாத்திரமல்ல, நமது இரட்சகராகிய நமது பரம பிதாவின் உள்ளத்தையும் உடைத்ததே. நீர் எங்கள் பிழைகளை எங்களுக்கு மன்னித்தருளும். கர்த்தாவே. கிறிஸ்துவின் பரிசுத்த இரத்தம் எங்கள் ஜீவன்களை ஒன்று சேர்க்கட்டும். கர்த்தாவே, எங்கள் இருதயங்களை கிறிஸ்தவ அன்பிலும், ஐக்கியத்திலும் இணைக்கிற அந்த அன்பின் கட்டு ஆசீர்வதிக்கப்படுவதாக.

46. தேவனே, சத்துருவானவன் அக்கள்ளப் போதகத்தை எடுத்துக் கொண்டு, எங்களது சகோதர சகோதரிகளையும் அணுகியிருக்கிறானே, அவன் இனிமேலும் நிலைத்திருக்காதபடி சாவுக்கேதுவான காயத்தைப் பெற்றுக்கொள்ளட்டும். அது அப்படியே மரித்துப் போகட்டும், கர்த்தாவே, பிதாவே, நீர் அதைச் செய்யும்பொழுது, நான் ஊழியக் களத்திற்கு மீண்டும் திரும்பி வருவேன். ஆனால் அதுவரைக்கிலும், கர்த்தாவே, இருதயம் நொறுங்கின நிலையில் உள்ள உம்முடைய ஊழியக்காரனாக நான் காத்துக்கொண்டிருப்பேன். என்னால் எதுவும் செய்யக்கூடியதான நிலையையும் அது தாண்டிப்போய்விட்டது. அதைத் தடுப்பதற்கு என்னால் எதுவும் செய்ய முடியும் என்ற நிலையை அது தாண்டிப் போவதற்கு முன் அதை நிறுத்துவதற்காக நான் கண்ணீரோடும், கதறுதலோடும் புத்தி சொல்லி இணங்க வைக்க நான் மிகவும் கடினமாக முயற்சி செய்தேன்; நீர் என் இருதயத்தை அறிவீர், கர்த்தாவே. ஆனால் அது வரம்பு மீறிப் போய்விட்டது. என்னால் இப்பொழுது எதுவும் செய்ய முடியாத நிலை வந்துவிட்டது. எனவே, பிதாவே, அதை நான் உம்முடைய கரத்தில், அநேக ஆண்டுகளாக நான் பிரசங்கித்து வந்த இந்த பிரசங்க பீடத்திலிருந்து ஒப்புக்கொடுக்கிறேன். அதை உம்முடைய கரத்தில் ஒப்புக்கொடுக்கிறேன்.

47. இப்பொழுதும் பிதாவே, நீர் உம்முடைய சொந்த தெய்வீக வழியில் கவனித்துக்கொள்ளும். அது முற்றிலும் ஒழிந்து போன பிறகு, ஓய்ந்து போனபிறகு, அப்பொழுது உம்முடைய ஊழியக் காரன் ஆகிய நான் ஊழியத்திற்கு திரும்புவேன். அதுவரைக்கிலும் நீர் பேசுவதைக் கேட்கும்படி காத்திருப்பேன், கர்த்தாவே.

அழிவுக்கேதுவாகக் காயப்பட்டிருக்கிறது. எனவே அது செத்துவிடும்'' என்று நான் கூறினேன்.

42. சகோதரன். நெவிலையும் என்னையும் கொண்டுள்ள எனது சபையின் அங்கத்தினர்கள் அநேகரை, இந்தக் கேள்வியோடு இங்கு வந்து என்னை அணுகுகிறவர்களை, நான் கேட்கிறேன். சகோதர சகோதரிகளே, நான் உங்களுக்கு முன்பாக கிறிஸ்துவுக்கு உண்மையாக ஊழியக்காரனாக நடந்து கொள்ளும்படி முயற்சி செய்ததில்லையா? நான் உங்களுடைய சகோதரனாக இருக்க முயற்சி செய்ததில்லையா?

43. எங்கெல்லாம் இப்போதகம் இருக்கிறதோ, அங்கே அதுதானே விலையேறப்பெற்ற மக்கள் மேல் இருக்கும் ஒரு ஆவியாக இருக்கிறது. அநேகர் இதைப்பற்றி என்னிடம் கேட்டிருக்கின்றனர். ஆனால் அது ஒரு ஆவியாக இருக்கிறது. ஆனால் இன்றைக்கு அப்போதகம் சாவுக்கேதுவான காயத்தைப் பெற்றுக்கொள்கிறது. அது விரைவில் மரித்துவிடும்; எனவே நான் ஊழியத்திற்கு திரும்பி வந்துவிட முடியும் என்று நான் நம்புகிறேன். அதுவரையிலும் நீங்கள் ஒவ்வொருவரும் எனக்காக ஜெபிக்கும்படி நான் கேட்டுக் கொள்வேன். நான் என்ன செய்வேன் என்பது எனக்குத் தெரியாது. எனது வீடு விற்பனைக்கு உள்ளது. என்னால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நான் இங்கு தங்கியிருப்பேனென்றால், எனக்கு முழுவதுமாக பைத்தியமே பிடித்து விடும். எனக்காக ஜெபிக்கும்படி உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

44. நீங்கள் என்னை விசுவாசிப்பீர்களாயின், இது உங்களுக்கு ஞாபகமிருக்கட்டும்; நீங்கள் என்னை கிறிஸ்துவின் ஊழியக்காரன் என்று விசுவாசிப்பீர்களாயின், அப்பொழுது ஒரு காரியம் உங்களுக்கு ஞாபகமிருக்கட்டும்; அதென்னவெனில், 'அப் போதகம் சத்தியத்திற்கு விரோதமான நெறி பிறண்டதாக இருக் கிறது. அது பொய்யானதாக இருக்கிறது. கர்த்தர் உரைக்கிறதென்னவென்றால் அது முறைகேடானதாக இருக்ககிறது; அப்படிப்பட்டதோடு எந்தவித சம்மந்தமும் வைத்துக்கொள்ளாதீர்கள். நான் உங்களுடைய சகோதரன்.

நாம் தலைகளை வணங்குவோமாக.

45. பரலோகப் பிதாவே, என் மாம்சமானது நடுங்குகிறது; என் கைகள் பிசைகின்றன; எனது பாதவிரல்கள் என் காலணிகளுக்குள் இழுக்கப்படுகின்றன. ஒ தேவனே, இரக்கமாயிரும்; இது எனக்கு நேரிட



பிதாவே, உமக்கு நன்றி. என்னுடைய பயணத் திட்டங்களுக்காக நான் உம்மை நோக்கிப்பார்க்கிறேன். ஆமென்.

177.(ஒரு சகோதரி அந்நிய பாஷையில் பேசுகிறார். இன்னொரு சகோதரி அதற்குரிய வியாக்கியானத்தைத் தருகிறார் - ஆசி). நீங்கள் விசுவாசிக்கிறவர் தேவன் நானே. பயப்படாதேயுங்கள். இதோ நான் உங்களுக்கு சொல்லுகிறேன், நான் சீக்கிறமாய் வரப்போகிறேன். ஆம், என்னுடைய ஆவி சியோனிலே என் மக்கள் மேல் இருக்கிறது. நான் அவர்கள் நடுவே கடந்து போவேன். அதை நோக்கிப்பார்த்து விசுவாசியுங்கள் அப்பொழுது அதை பெறுவீர்கள். தீர்கதரிசியின் நாட்களில் நான் பேசினது போல உங்களுடனே இதை பேசுகிறேன். அல்பாவும் ஒமேகாவும் துவக்கமும் முடிவும், முதல்வரும் கடைசியானவரு மானவரை அனுப்புகிறேன். உங்களுக்கு முன்பாக திறந்த வாசலை வைத்து அங்கே நின்றுக்கொண்டிருக்கிறேன். நீங்கள் அதற்குள் பிரவேசிப்பீர்களானால் அதை பெற்றுக் கொள்வீர்கள். இதோ நான் உங்களுக்கு சொல்லுகிறது என்னவென்றால், என்னை ஏற்றுக்கொள்ளுங்கள், ஏனெனில் நான் அல்பாவும் ஒமெகாவும் துவக்கமும் முடிவுமாயிருக்கிறேன்.")

ஆமென். நீங்கள் அதை பெற்றுக்கொண்டீர்களா? அது என்னவென்று பார்த்தீர்களா? அந்நிய பாஷையில் பேசின அந்த பெண்மணியின் தொனியையும், அதே தொனியில் அந்த சகோதரியின் வியாக்கியானத்தையும் கவனித்தீர்களா? அவர்களிருவரும் வெவ்றுே பெண்கள். அவர்கள் ஒருவரையொருவர் அறிந்து கூட இருக்கமாட்டார்கள் என்று எண்ணுகிறேன். அவர்கள் ஒருவரையொருவர் அறிந்திருக்கவில்லை. அந்த சப்தத்தில் உள்ள தொனியை கவனியுங்கள், அங்கே பரிசுத்த ஆவியானர் இருக்கிறார். இங்கே ஜனங்களின் மத்தியில் கிறிஸ்து இருக்கிறார் என்பதை நீங்கள் உணரவில்லையா? அவ்வாறுதான் உள்ளது.

178.சகோதரன் பேட் அவர்களே, நீங்கள் ஏதோ வாசிக்க விரும்புகிறீர்களா? வாசியுங்கள். (சகோதரன் பேட் வெளிப்படுத்தின விசேஷம் 22:16ல் இருந்து, 'சபைகளில் இவைகளை உங்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்படி இயேசுவாகிய நான் என் தூதனை அனுப்பினேன்' என்ற வசனத்தை வாசிக்கிறார் - ஆசி).

ஆமென். தெய்வீக வழிநடத்துதல், அது ஆவிக்குரியதாயிருக்கிறது. சபையின் மக்களுக்குள்ளாக ஆவியானவர் அசைவாடுவதைப் பாருங்கள். அவர்களுக்குள் உலாவி , பேசுகிறார்.

ஓ, அவர் அற்புதமானவராக இல்லையா? நண்பர்களே, அதைப்பற்றி நாம் எண்ணுகையில், அது வேதத்தில் சொல்லப்பட்டுள்ள அதே காரியம்தான். அது இன்றைக்கு இங்கே இருக்கிறது. அதைப்பற்றி இனிமேல் ஆச்சரியப்படத் தேவையில்லை. என்னுடைய விலையேறப்பெற்ற மக்களே, ஓ, வாருங்கள், அவரை ஏற்றுக்கொள்ளுங்கள், வந்து ஏற்றுக்கொள்ளுங்கள்.

டெட்டி, நாங்கள் ஞானஸ்நானத்திற்காக ஆயத்தப்படுகையில்.... தேவன் உங்களின் இருதயங்களை ஆயத்தமாக்கும்படி வேண்டுகிறேன். "அவர் எங்கே வழிநடத்திச் செல்லுகிறாரோ, நான் அதில் பின் செல்லுவேன்''(பாடல்)

நீங்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்தானத்தை எடுத்துக்கொள்ளும்படி ஜீவிக்கின்ற தேவனாலே மற்றும் அவருடைய வார்த்தையின் புத்திமதியோடு உங்களுக்கு கட்டளையிடுகிறேன். நான் ஏன் இதை செய்கிறேன் என்றால், நினைவில் கொள்ளுங்கள், வேதம் நாம் அவ்வன்னமே செய்யும்படி நம்மை வளியுறுத்துகிறது. பவுலும் வளியுறுத்துகிறார். இதை தவிர வேறொரு காரியத்தை தூதன் போதித்திருப்பானானால், அவன் சபிக்கப்பட்டவன். இதோ அவன் சொன்னபடியாக நானும் என்னுடைய வாழ்கையின் முடிவிலே இதை சொல்லவிரும்புகிறேன், "தேவனுடைய முழு ஆலோசனையை உங்களுக்கு அளிப்பதில் நான் தவறினதில்லை" ஏனென்றால் எந்த மனிதனுடைய இரத்தமும் நம்மேல் இல்லை என்று அறிந்திருக்கிறேன். ஓ, நீங்கள் அவரை நேசிக்கவில்லையா? ஓ, நான் அவரை நேசிக்கிறேன். நல்லது. நாம் நம்முடைய களைந்துபோகும்போது பாடுகிற பாடலை பாடலாம். அந்த நேரமட்டுமாக

இயேசுவின் நாமத்தை எடுத்து செல்

வேதனையும் துயரத்தையும் ஏற்றுக்கொண்ட பிள்ளையின் நாமம்

சந்தோஷமும் சொகரியமும் கொடுக்கும் நாமம்

எங்குபோனாலும் இதை கொண்டுசெல்

விலையேற பெற்ற அந்த நாமம், எவ்வளவு இனிமையானது

பூமியில் நம்பிக்கையும் பரலோகத்தின் சந்தோஷமும் நிறைந்த நாமம்

விலையேற பெற்ற அந்த நாமம், எவ்வளவு இனிமையானது

பூமியில் நம்பிக்கையும் பரலோகத்தின் சந்தோஷமும் நிறைந்த நாமம்



37. எட்டு அல்லது பத்து நாட்களுக்கு நான் மனமுறிவடைந் தவனாக குழப்பமான சூழ்நிலையில் இருந்தேன். நான் சிந்தை தடுமாறுகிறேனோ என்று எண்ணினேன். நான் ஒவ்வொரு வரிடமும், என்னைவிட்டு நீங்கியிருக்கும்படியாகவும், என்னைத் தனியே விட்டு விடும்படியும் கூறினேன். ஏனெனில் நான் தடுமாற்றமான சூழ்நிலையில், பதற்றமுள்ளவனாக, நிலைகுலைந்து, சுக்குநூறாக இதயம் கிழிந்த நிலையில் இருந்தேன்.

38. இதையெல்லாம் கூறுவது என்னுடைய சத்துருவாயிருந்தால் அதைப்பற்றி பரவாயில்லை; நான் அதைப்பற்றி கேள்விப்பட்ட மாத்திரத்தில் அதைக்குறித்து நகைத்து என் வேலையை செய்து கொண்டே இருந்திருப்பேன். ஆனால், இதையெல்லாம் கூறுவது விலையேறப்பெற்ற சகோதரனோ, விலையேறப்பெற்ற சகோதரி யாகவோ இருக்கும் போது, அதுவே என்னை புண்படுத்துகிறது. "கர்த்தாவே, இவ்விஷயம் என்னால் தாங்கவொண்ணாத காரியமாகும். நான் இதை உம்முடைய கரத்தில் கொடுத்துவிட்டு, ஊழியத்தைவிட்டு வெளியேறி விடுவதைத் தவிர எனக்கு வேறு எதுவும் தெரியவில்லை'' என்று கூறினேன்.

39. சில நாட்களுக்கு முன் ஓர் இரவில், கர்த்தரிடத்திலிருந்து இதைப்பற்றி நிச்சயமாய் அறிந்துகொள்வதற்கான ஒரு தரிசனம் உண்டாயிற்று. கருப்பும் மஞ்சள் நிறமுமான அழகான குட்டி சர்ப்பம் ஒன்று என்னைப் பின்தொடர்ந்து வந்துகொண்டே என் காலில் கடித்தது. ஆனால் எனது இரத்தம் உயர்தரமானதாக இருந்த படியால், அதின் விஷம் எனக்கு சேதம் ஒன்றும் விளைவிக்கவில்லை. நான் குனிந்து சர்ப்பம் கடித்த இடத்தைப் பார்த்தேன். நான் விரைவாக திரும்பி துப்பாக்கியை எடுத்து அந்த சர்ப்பத்தை சுட்டேன். அதனுடைய உடலின் நடுப்பாகத்தில் அதற்கு காயம் பட்டது.

40. ஒரு சகோதரன் கூறினார். நான் என்னுடைய துப்பாக்கியினால் அதன் தலையைச் சுட்டுவிடத் திரும்பினபோது, ஒரு சகோதரன் கூறினார், "அப்படிச் செய்யாதீர்கள், உங்கள் பக்கத்தில் கிடக்கும் அந்த கம்பை எடுத்துக்கொள்ளுங்கள்'' என்றார். அந்தக் கம்பை எடுக்கத் திரும்பியபோது, அது தடுமாறிக்கொண்டே வளைந்து வளைந்து ஒரு சிறு நீர் நிறைந்த குட்டையினுள் போய்விட்டது.

41. ''நல்லது, அது இனிமேல் அதிகம் சேதத்தை விளைவிக்க முடியாது; ஏனெனில் அந்த சகோதரர் (அந்த சகோதரர்கள்) உணர்வடைகிறதாக காரியம் நடக்கும் என்று நான் விசுவாசிக்கிறேன். அந்த சர்ப்பம்

33. அநேக சமயங்களில் மக்கள் என்னை தீர்க்கதரிசி என்று அழைக்கும் போது, அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. ஏனெனில், ஆங்கில மொழிபெயர்ப்பு புதிய ஏற்பாட்டில், ''தீர்க்கதரிசி'' என்றால் ஒரு பிரசங்கி'' என்றும், "தீர்க்கதரிசனம் உரைப்பவன்'' என்றும், ''வார்த்தையை முன்னுரைப்பவன்'' என்றும் பொருள்படும். அப்படி அழைத்தபொழுது நான் ஓடிப் போய்விடவில்லை. ஏனெனில் அதையெல்லாம் நாம் சகித்துக் கொள்ளலாம். ஆனால் 'அபிஷேகம் பண்ணப்பட்ட கிறிஸ்து'' என்று அழைக்கப்படும் நிலைக்கு வரும்பொழுது, அது என்னால் தாங்கிக்கொள்ள முடியாத காரியமாக இருக்கிறது. எனவே என்னால் அதை சகித்துக்கொள்ள முடியவில்லை.

34. கனடா தேசத்தில் நடந்த கூட்டத்திற்குப் பிறகு, புறப்பட்டுச் செல்லும் போது, அங்கிருந்து தொலைதூரத்தில் வசிக்கும் எஸ்கிமோக்கள் அல்லது இந்தியர்கள் மத்தியிலும் அவ்விஷயம் பரவியிருக்கக் கண்டேன்.

35. ஆகவே அது என்னை முழுவதுமாக மனமுறிவடையச் செய்துவிட்டது. வேட்டைக்குச் செல்ல நீண்ட காலமாகவே நான் திட்டமிட்டிருந்தேன். ஆனால் அதை நான் மேற்கொள்ள இயலாமற்போயிற்று. ஏனெனில் நான் வேட்டைகால விபத்து ஒன்று நேரிட்டு விடுமோ என்று அஞ்சினேன். நான் என்ன கூறுகிறேன் என்பதை நீங்கள் புரிந்து கொண்டீர்களென்றால், இது உங்களுக்குப் புரியும். நான் இப்பொழுது இங்கே நடுக்கத்தோடு நின்றுகொண்டிருப்பதைவிட மிகவும் நடுக்கமுள்ளவனாக அப்பொழுது இருந்தேன். முப்பத்தொன்று ஆண்டுக்கால ஊழியமானது பிசாசின் சாக்கடைக் குழாயில் ஆழத்தில் விழுந்து விட்டதே என்பதை எண்ணுகையில், என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. நான் போய்விட்ட பின்பு, அவர்கள் என்னைப் பற்றிக் கூறியது யாவும் முற்றிலும் சரியாகிவிட்டது என்பார்கள். ஜனங்கள் மேல் எனக்கு இருந்த செல்வாக்கெல்லாம் போய், அது ஒரு அந்திக்கிறிஸ்துவின் காரியம் என்பதாக ஆகிவிடும். ஆகவே என்னால் அதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

36. நான் இந்தக் காட்டிலேதானே என் துப்பாக்கியின் மீதோ அல்லது வேறெதின் மீதோ விழுந்து இறந்துவிடுவதே நல்லது என்று எண்ணினேன். பிறகு நான் வளர்த்து ஆளாக்கப்பட வேண்டிய என்னுடைய சிறிய மகன் ஜோசப்பைக் குறித்து எண்ணிப்பார்த்தேன். அதற்குமேல் நான் வேட்டையாடும் நிலையில் இல்லை; எனவே நான் காட்டைவிட்டுப் புறப்பட்டு வீட்டுக்குத் திரும்பினேன்.



அந்த இயேசுவின் நாமத்திற்கு தலை வணங்குவோம்

அவருடைய பாதத்தில் சாஷ்டாங்கமாய் பணிவோம்

நம்முடைய பயனம் முடிவடைந்த பின்னர்

அவரை ராஜாக்களுக்கு எல்லாம் ராஜாவாய் பரலோகத்தில் முடிசூட்டுவோம்

## லவோதிக்கேயா சபையின் காலம்

## THE LAODICEAN CHURCH AGE

## பிரான்ஹாம் கூடாரம்,இந்தியானா, அமெரிக்கா

## 60-12-11E

1. அவர் அதை ஒருபோதும் முடிக்கவில்லை. “என்னுடைய திருமணத்திற்கு நான் பிந்திவிட்டேன். நான் சிறிது காலந்தாழ்ந்து பிறந்தேன். திருமணத்திற்கும் எனக்கு நேரம் பிந்தி விட்டது. என்னுடைய அடக்கத்திற்கும் நான் பிந்திவிட எனக்கு இயலு மென்றால்!'' என்று கூறினேன். அந்த ஒன்று தான் மிகவும் காலந்தாழ்ந்து நடைபெற வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

2. நான் புறப்பட முடியாமல் இருக்கும்படி வீட்டில் அநேக தொலைபேசி அழைப்புகள் எனக்கு உண்டாயிருந்தன. என் மனைவியும் மற்றவர்களும் வீட்டை விட்டு சீக்கிரமாகவே புறப் பட்டு விட்ட பிறகு, உடனேயே, எனக்கு அநேக வேலைகள் உண்டாயிருந்தன. பின்பு அநேக இடங்களிலிருந்து மக்கள் ஜெபித்துக்கொள்ள வந்தனர். இப்பொழுது தான் நான் உள்ளே நுழைகிறேன். ஒரு சகோதரனுக்கு கர்த்தரிடத்திலிருந்து வெளிப்படுத்துதல் உண்டாயிற்று. வியாதிப்பட்ட நிலையில் அங்கே பின்னால் நின்று கொண்டிருக்கிற சகோதரியே, நான் என்ன கூறுகிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். இடைவெளியே இல்லாமல் தொடர்ந்து செயலாற்றிக் கொண்டேயிருக்க வேண்டிய நிலையில் இருக்கிறேன். ஜார்ஜியாவிலிருந்தும், மற்றும் கனடா தேசத்தி லிருந்தும், மற்றும் சுற்றியுள்ள பல்வேறு இடங்களிலிருந்தும் வந்திருக்கிற என் நண்பர்களுடன் நான் கைகளிலிருந்தும் வந்திருக் கிற என் நண்பர்களுடன் நான் கைகுலுக்கக் கூட என்னால் இயலாமல் இருக்கிறது. உங்களோடு கைகுலுக்கிட இயலாமற் போனதற்காக நான் மிகவும் வருந்துகிறேன்.

3. நிற்க, இன்றிரவில் சகோதரன் ஃப்ரெட் சோத்மன் அவர்கள் எங்கேயிருக்கிறார்? ஃப்ரெட் அவர்களே, நீங்கள் கனடாவிலிருந்து என்னை தொலைபேசியில் கூப்பிட்ட அந்த வேளை உங்களுக்கு ஞாபகத்தில் இருக்கிறதா? நீங்கள் அப்பொழுது அங்கிருந்து வந்து கொண்டிருந்தீர்கள். நீங்கள் மோட்டார் வாகனத்தில் வர வேண்டாம்



இயேசுகிறிஸ்து என்று தான் விசுவாசம் கொண்டுள்ளதாகக் கூறி, என்னிடம் தனது பாவங்களையும் தவறுகளையும் அறிக்கைவிட வந்திருந்தார்.

29. நான் அந்த கோட்பாட்டினை விசுவாசிக்கிறேனா என்று கேள்வி கேட்டு, வீட்டில் எனக்குக் கடிதங்கள் வந்துள்ளன; சிகாகோ மற்றும் பல்வேறு இடங்களிலிருந்தும் தொலைபேசியின் மூலமும் அதைக் குறித்து என்னிடம் கேட்டனர்.

30. நான் கிறிஸ்து என்று கூறுகிறதான எல்லாவிதமான கடிதங்களும், தொலைபேசி அழைப்பு மூலம் கூறுவதும் கடந்த சில நாட்களில் எனக்கு வந்துள்ளன. சகோதரரே, அது பிசாசினுடைய பயங்கரமான, வெட்கக்கேடான, தேவபக்தியற்ற ஒரு பொய்யாகும். பார்த்தீர்களா? நான் உங்களுடைய சகோதரன் என்பதை உணருங்கள். அவ்விதமாகக் கூறுவது, கிறிஸ்துவை நேசிக்கிற எந்த ஒருவனையும் ஊழியத்தைவிட்டு ஓடிப்போகச் செய்துவிடும்.

31. ஒரு வருடத்திற்கு முன்பாக நான் முதன்முறையாக இதைக் குறித்துக் கேள்விப்பட்டபொழுது, சமீபத்தில் நான் ஆண்டவரிடம் சென்று கேட்டேன். நான் ஆண்டவரை அணுகியபொழுது, அவர் எனக்கு வேத வாக்கியங்களைச் சுட்டிக்காட்டி, அநேக ஆண்டு காலமாக யூதர்களுக்கு ஒரு தீர்க்கதரிசியும் வராதிருந்தபொழுது, அவர்களுக்கு யோவான் பிரசங்கித்துக்கொண்டு வந்தபொழுது, அவனைக் குறித்து அவர்கள் தங்கள் இருதயத்தில் ஆச்சரியப்பட்டு; யோவான் ஒருவேளை மேசியாவாக இருக்கக்கூடும் என்று தங்கள் மனதில் எண்ணியதைக் குறித்த விஷயத்தைக் குறிப்பிட்டார். எனவே அப்பொழுது நான் .... அவர்கள் யோவானிடம் போய் அவன் கிறிஸ்துதானா என்று கேட்டபொழுது, அவன் கிறிஸ்து அல்ல என்று அறிக்கையிட்டான். அதை நீங்கள் லூக்கா 3ம் அதிகாரம் 15ம் வசனத்தில் காணலாம். ஆகவே, அதன்பிறகு அது ஓய்ந்துவிட்டது. ஆகவே நானும் அதை அப்படியே விட்டு விட்டேன்.

32. ஆனால் அது இந்த அளவுக்கு நீடித்துக்கொண்டே இருக்கும் போது, அதற்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டும் என்று நான் அப்பொழுது அறிந்துகொண்டேன். சபைக்கும் உலகுக்கும் இதுவே எனது கடைசி செய்தியாக இருக்குமானால், எனக்கு ஏற்பட்ட தரிசனமும், நதிக்கரையில் கர்த்தருடைய தூதன் தோன்றி கூறியவைகள் யாவும் சத்தியமாயிருக்கின்றன.

பட்டத்தை சூட்டிவிடும். நான் அவரை ஒரு அந்தி கிறிஸ்துவாக சந்தித்து அவரை விட்டு அகற்றப்படுவதற்கு முன்னர், ஊழியத்தைவிட்டு விலகி ஓடிப்போனவனாகவே சந்திக்க விரும்புகிறேன்.

26. சில ஆண்டுகளுக்கு முன்பாக அதைப்பற்றி என் காதுகளில் விழுந்தது. நான் அதை ஒரு தமாஷ் என்று எண்ணினேன். ஒரு சமயம் மீன் பிடிக்கச் சென்றிருந்தபொழுது, இரண்டு அல்லது மூன்று சகோதரர்களை நான் சந்தித்தேன். அவர்களில் ஒருவரைக்கூட நான் இன்று காலைக் கூட்டத்தில் காணவில்லை. அவர்கள் இந்த விஷயத்தைப் பற்றி பேசுவதற்காக என்னை அணுகி, 'சகோதரன் பிரன்ஹாம் அவர்களே, நீர் அபிஷேகிக்கப்பட்ட மேசியாவாகிய கிறிஸ்துதானே?" என்று கேட்டார்கள்.

27. அவ்விரு சகோதரர்களுடைய கழுத்தையும் கட்டிக்கொண்டு, அவர்கள் எல்லோரிடமும், "சகோதரர்களே, என்னால் முடிந்த அளவு கிறிஸ்துவின் உண்மையான ஊழியக்காரனாக இருக்கவே முயன்றிருக்கிறேன். நீங்கள் அவ்விதமான காரியங்களைக் கூறு வதை நான் விரும்பவே மாட்டேன். அவ்வாறு என்னைப்பற்றி எப்பொழுதாவது சொல்லப்படுமென்றால், அப்பொழுது நான் ஒரு தெளிவான மனச்சாட்சியோடு ஊழியக் களத்தைவிட்டு விலகி விடுவேன். அவ்வாறு ஊழியக்களத்தை விட்டு என்னை நீங்கள் போகச்செய்துவிடும் காலத்தில், நான் ஊழியத்தில் இருந்திருந்தால், என்னால் ஆத்தும ஆதாயம் செய்யப்பட்டிருக்க வேண்டிய ஆத்துமாக்கள் ஒவ்வொருவருக்கும் நீங்களே பொறுப்பாளிகளாய் இருப்பீர்கள்; என்னை ஊழியக் களத்தை விட்டு விலகிச் செல்லும் படியான நிலைக்கு தள்ளினதற்கும் நீங்கள் பொறுப்பாளிகளாவீர்கள்'' என்று கூறினேன். அத்தோடு அது முடிந்து போய் விடும் என்று நான் எண்ணினேன்.

28. அதற்குப்பிறகும், இன்னும் சில தடவைகளிலும் நான் அதே விஷயத்தைப்பற்றிக் கேள்விப்பட்டேன். ஆனால் அது இவ்வாறில்லை. அன்றொருநாள் கனடா தேசத்தில் ஒரு சகோதரன் என்னிடம் ஒரு சிறிய டிக்கெட்டை தன் சட்டைப் பையிலிருந்து எடுத்துக்காண்பித்தார். அதில் "வில்லியம் பிரன்ஹாம் எங்கள் கர்த்தர்'' என்று எழுதப்பட்டிருந்தது; வில்லியம் பிரன்ஹாமின் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுப்பதாகவும் தெரியவந்தது. அது ஒரு சத்துருவாக இருந்திருந்தால், அது என் சத்துருவாக இருந் திருந்தால், நான் அதை ஒரு நகைப்புக்கிடமானதாக எடுத்துக் கொண்டிருப்பேன். ஆனால் விலையேறப்பெற்ற பிரியமுள்ள சகோதரன் ஒருவர், என்னை



என்று உங்களுக்கு கூறினேன் அல்லவா? ஆனாலும் நீங்கள் அப்படிதான் வந்தீர்கள். அவருடைய மோட்டார் வாகனம் நொறுங்கிச் சேதமடைந்து, அவருடைய மனைவி ஏறக்குறைய கொல்லப்படக்கூடிய அளவுக்கு ஆகி விட்டது. குடும்பத்தினரும் கூட, அவரது மூக்கு உடைந்து விட்டது. இதினால் அவர்கள் யாவரும் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார்கள்.

4. சற்று நேரத்திற்கு முன்னால் மத்தியானத்தில் நான் கிளம்பிக் கொண்டிருக்கையில், இங்கு நின்று கொண்டிருக்கும் சகோதரன் பென் அவர்கள் என்னண்டையில் வந்தார். ரோஸல்லாவும் அங்கே வந்து, “நான் வீட்டுக்குப் போகிறேன்'' என்றாள்.

'' ரோஸல்லா என்றேன் நான்

“என்ன விஷயம் சகோ. பிரன்ஹாம் அவர்களே'' என்றாள் அவள்.

''நான் அதைப் பற்றி விசித்திரமாக உணருகிறேன்'' என்றேன் பாருங்கள்?

''ஏதாவது சம்பவிக்கப் போகிறதா?'' என்றாள் அவள்.

“எனக்குத் தெரியாது, ஒன்று என்னை எச்சரித்தது போல் நான் உணருகிறேன்'' என்றேன்.

5. சில நிமிடங்களுக்கு முன்பாக அவள் என்னை அழைத்து, தான் ஒரு விபத்தில் சிக்கியதாகத் தெரிவித்தாள். ஒருவரும் காயப் படவில்லை. ஆனால் அது தேவனுடைய கரமாக இருந்தது. வடக்கே எங்கும் பனியாயிருக்கிறது. எனவே அதில் அவள் சறுக்கி விழுந்து விட்டாள். இண்டியானா போலீஸ் என்ற இடத்தில் தான் அவளது வாகனம் பனியில் பாதையை விட்டுவேகமாக சறுக்கிச் சென்றது. " ஓ ஆண்டவரே எனக்கு உதவி செய்யும்'' என்று அவள் அந்த சமயத்தில் கதறினாள். அப்பொழுது வாகனமானது மீண்டும் இந்தப் பக்கமாக சறுக்கிக் கொண்டே வந்து சாலையில் சரியான பாதைக்குள் வந்து, மீண்டும் சரியாக ஓட ஆரம்பித்தது. அவள் சாலையில் சரியானபடி வாகனம் போவதைப் பார்த்தபொழுது, “என்னே என்னே, அந்த ஆபத்திலிருந்து தப்பித்ததைக் குறித்து நான் எவ்வளவாய் நன்றியுள்ளவளாய் இருக்கிறேன்'' என்று கூறினாள். ஏனெனில் ஏனைய வாகனங்கள் பறந்து வருவது போல் அதே பாதையில் வந்து கொண்டிருந்தன. எனவே அவள் சாலைக்கு அப்பால் சென்று வாகனத்தை நிறுத்தினாள். ஒரு கோப்பை காபி வாங்கி அருந்துவதற்காகத் தான் அவள் நிறுத்தினாள் என்று நம்புகிறேன்.

அவ்வாறு தனது வாகனத்தை நிறுத்திவிட்டு அதை விட்டு வெளியே வருவதற்கு முன்னர் பின்னால் வந்த வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக அவளது வாகனத்தில் மோதியது. இவ்வாறு ஒன்றன்பின் ஒன்றாக வந்து மோதிய வாகனங்கள் யாவும் அங்கே அடுக்கடுக்காக குவிந்து போய்விட்டன. அவள் சிறிது அதிர்ச்சியடைந்தது மாத்திரமே தவிர மற்றபடி வேறு கெடுதல் ஏதும் ஏற்பட வில்லை. அவள் கர்த்தருக்கு நன்றி தெரிவிக்க விரும்பி, என்னை தொலைபேசியில் அழைத்து, தான் சேதம் ஏதும் அடையாமல் தப்பித்தற்கு சபையானது நன்றி தெரிவித்துக் கொள்ளவும், மேலும் தான் பத்திரமாக வீடு போய்ச் சேர தோடர்ந்து வேண்டிக் கொள்ளும்படியும் கேட்டுக் கொண்டாள். அவள் இப்பொழுது தான் வாகன ஓட்டுவதற்குரிய உரிமம் பெற்றுள்ள ஒரு புதிய காரோட்டியாவாள். எனவே நான் நன்றியுள்ளவனாயிருக்கிறேன்.

6. ஆனால் கர்த்தருடைய எச்சரிக்கைகளை கவனத்தில் எடுத்துக் கொள்வது எப்பொழுதும் பயனளிக்கிறதாக இருக்கிறது. “நல்லது, எனக்கு ஒரு நாள் வேலை போய்விடும்'' என்றாள். ஒரு நாள் வேலை யானது என்ன? வாகனத்தின் சேதமடைந்த பின்பகுதியை சீர் செய் வதற்கு ஆகும் செலவை விட அது ஒன்றும் அதிகம் நஷ்டத்தை ஏற்படுத்தப் போகிறதில்லை. எனவே கர்த்தரோடு தங்கியிருப்பது எவ்வளவோ மேலானது ஆகும். அது சரியானது தானே - அவர் நமக்கு ஏதாவது சொல்வாரானால், அதிலே நாம் நிலைத்திருப்பது நமக்கு நல்லது ஆகும். ஏனெனில் அவர் எப்பொழுதும் சரியான வராக இருக்கிறார். அவர் அவ்வாறு இருக்கவில்லையா? எப்பொழு தும் அவர் சொல்வது சரியாகத் தானிருக்கும்.

7. இந்த வாரமானது அற்புதமான வாரமாக இருந்திருக்கிறது. இந்த அற்புதமான வாரத்தைப் பற்றி தேவனிடத்திலும் உங்களிடத்திலும் எவ்வாறு எனது உணர்ச்சிகளை வெளிப்படுத்துவது என்பது எனக்குத் தெரியவில்லை. என் வாழ்க்கையில் நான் பிரசங்கித்த நாட்களிலேயே, இந்த எட்டு நாட்கள் தான் மிகவும் மகிழ்ச்சியான நாட்ளாக இருக்கின்றன. அது உண்மையானது. கர்த்தருடைய காரியங்கள் அநேகமானவைகளை நான் கற்றுக் கொண்டுள்ளேன். அவருடைய ஈவு இரக்கங்களைப் பற்றி அறிந்து கொண்டேன். அவர் என்னவெல்லாம் நமக்கு செய்திருக்கிறார் என்பதைப் பற்றியும் சபையில் தேவ ஆவியானவர் மீண்டும் கிரியை செய்வதையும் நான் அறிந்து கொண்டேன். மீண்டும் சபையில் ஆவியின் வரங்கள் கிரியை செய்வதை காண்பதற்கு மகிழ்ச்சியாயிருக்கிறேன்.



22. நமது கர்த்தர் என்னை எங்கே வழி நடத்துவார் என்பதைப் பற்றி எனக்கே தெரியாது. அது என் கட்டுப்பாட்டில் இல்லை; அல்லது நான் செய்ய வேண்டுவதைக் குறித்து அவர் என்ன வெல்லாம் சித்தங்கொண்டிருக்கிறாரோ எனக்குத் தெரியாது. ஆனால் வாழ்க்கைப் பாதையில் நான் வந்து சேரவேண்டிய இறுதிக் கட்டத்தைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். என் வாழ்க்கைப் பாதை நெடுகிலும் நான் அநேக பிழைகளை செய்திருக்கிறேன். அதற்காக நான் என் உளப்பூர்வமாக வருந்துகிறேன். ஒரு நபர் பிழைபட நடக்க விரும்பாமல் இருந்தாலுங்கூட, பிழைபட இருப்பதுவும், மனுஷ பெலவீனமும் அவ்வாறு காரியங்களை செய்யவோ அல்லது பேசவோ ஆக்கிவிடுகிறது என்று நான் கருதுகிறேன். மனுஷீக பெலவீனங்களால் நமக்கு அவ்வாறான வேளைகள் ஏற்பட்டுவிடுகிறது.

23. என்னுடைய இருதயத்தில் ஏதாவது ஒரு விருப்பம் இருக்கிற தென்றால், எனது இந்த வாழ்க்கைப் பயணத்தின் இறுதியில், "நல்லது உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே'' என்று நமது கர்த்தராகிய இயேசுவின் வார்த்தைகளை நான் கேட்க வேண்டு மென்பதுதான். "என்னிடத்தில் வா'' என்று கூறும்பொழுது, நானும் அங்கே நின்றிருக்க வேண்டுமென்று நான் வாஞ்சிக்கிறேன் என்று நான் அநேக தடவைகள் கூறியிருக்கிறேன். ஆனால் அதைவிட "நன்றாகச் செய்தாய்'' என்று அச்சப்தம் என்னிடம் கூறுவதையே நான் கேட்க விரும்புகிறேன்.

24. நான் எப்பொழுதும் விரும்பியிருக்கிற காரியம் யாதொன்றும் எனக்கு இருக்குமென்றால், என் இருதயத்தின் வாஞ்சைகள் என்னவெனில், என்னுடைய ஆண்டவரும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுக்கு உண்மையான ஊழியக்காரனாக இருக்க வேண்டுமென்பதேயாகும். என்னுடைய சாட்சி சுத்தமான தாகவும், தெளிவானதாகவும் உடையவனாக நான் நிற்க வேண்டுமென்பதையே நான் விரும்புகிறேன். என்னிடம் எத்தனையோ பிழைகள் இருந்தன; ஆயினும் நான் அவரை என் முழு இருதயத்தோடும் நேசிக்கிறேன்.

25. நான் ஊழியத்தைவிட்டு விலகுகிறேன் என்று கூறும்படி நிர்ப்பந்தப்படுத்தப்பட்டுள்ளேன். ஏனெனில், ஜனங்கள் மத்தியில் ஒரு காரியம் எழும்பியுள்ளது. அதுவே நான் அவ்வாறு கூறும்படி செய்திருக்கிறது. அதென்னவெனில், நான் ''ஊழியக்காரன்'' அல்லது "ஒரு சகோதரன்'' என்று அழைக்கப்படும் அடைப்புக் குறியிலிருந்து எடுக்கப்பட்டு, "இயேசு கிறிஸ்து'' என்று அழைக் கப்படுகிறேன். அவ்விதமாக என்னை அழைப்பது எனக்கு அந்தி கிறிஸ்து என்ற

செய்து நிறைவேற்றியிருக்கிறோம் என்பதும், என்ன நேரிட்டது என்பதும் தனக்குள், "நீ ஏதாவது சாதித்தாயா?'' என்ற கேள்வி எழும்பும் என்றும் நான் கருதுகிறேன். நான் சற்று முன்பு கூறியவண்ணமாக, மற்றவர்களுக்காக நீங்கள் என்ன செய்தீர்களோ அதுவே கணக்கிலெடுத்துக் கொள்ளப்படும்.

20. எனது வாழ்க்கைப் பாதையின் முடிவை நான் போய் சேரும் பொழுது, அங்கே என்ன இருக்குமோ என்று நான் அடிக்கடி அறிய விரும்பியதுண்டு. அவ்வேளை எப்பொழுது நேரிடும் என்பதை நாம் அறியோம்; நம்மில் எவரும் அறியோம். ஆகவே, வாழ்க் கையில் இதுவரை நான் நடந்து வந்திருக்கும் கடந்த கால பாதையை திரும்பிப் பார்த்து, அப்பாதையில் நான் வெவ்வேறு குன்றுகளையும், முட்புதர் நிறைந்த பாதைகளையும், பாறைகளையும், கஷ்டமான இடங்களையும், மிருதுவான பயணங்களையும் என் வாழ்வில் கடந்து வந்ததைப் பற்றியும், அவ்விதமான வேளைகளில் நான் என்ன செய்தேன் என்பதையும் பற்றி சிந்தித்துக்கொண்டிருந் தேன். அவையாவும் இந்நாட்களில் ஒன்றில் நான் கடந்து சென்று விடும் வேளையில் தெளிவாகத் தெரியவரும். நம் ஒவ்வொருவரிலும் அவ்வாறுதான் சம்பவிக்கும். ஒவ்வொரு வருக்கும் அவ்வேளை வரும்பொழுது, அது தெளிவாகத்தெரிய வரும் என்பதைப் பற்றி நாம் யாவரும் நிச்சயமுள்ளவர்களாய் இருப்போம்.

21. நான் ஒரு குறிப்பிட்ட காரியத்தைப் பற்றிக் கூறத் தூண்டு கிறதாகவோ, நடத்துகிறதாகவோ இருக்கிறது. ஆனால் அதைக் கூறுவதைவிட ஓடிப் போய்விடலாம் என்று நான் விரும்புகிறேன். ஒரு காரியத்தைக் குறித்துக் கூறும்படி அது என்னை நடத்துகிறது. அதைப்பற்றிக் கூறுவது என் இருதயத்தின் அடித்தளத்தையே நொறுக்குகிறது. ஆனால் நான் என்ன கூறுகிறேனோ, அதைக்கூற வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டுள்ளது. இது ஒலிநாடாவில் பதிவு செய்யப்படுகிறதென்றும், அதனால் உலகம் அதைக் கேட்கும் என்பதையும் நான் உணர்ந்தேயிருக்கிறேன். ஆனால் நான் ஒரு காரணத்திற்காக ஊழியத்தை விட்டு விலகிட்டேன். நான் அக்காரணத்தினால் ஊழியத்தை விட்டு விலக வேண்டிய நிலை ஏற்பட்டது குறித்து வருந்துகிறேன். நான் எனது அலுவலகத்தை மூடுகிறேன் என்பதைப் பற்றியும், ஊழியக்களத்தைவிட்டு விலகு வதைக் குறித்தும் ஒருவேளை உங்களில் அநேகர் கேள்விப் பட்டிருப்பீர்கள்.



8. இப்பொழுது ஒரு தடவை நீங்கள் வெளியே போயிருக்கும் சமயம், யாராவது ஒருவர் உள்ளே நுழைந்து சபையை அசுசிப் படுத்துகிறதைப் செய்வது போல் தோன்றுகிறது. அவர்கள் எதை யாவது செய்ய ஆரம்பித்துவிடுகிறார்கள். வரங்களை நீங்கள் கனவீனப்படுத்தினால், தேவன் உங்களை கனவீனப்படுத்துவார். பாருங்கள்? அவர்களை நீங்கள் சீர்படுத்திட வேண்டும். நாம் அது எவ்விதமாக இருக்கவேண்டுமென்று விரும்புகிறோமென்றால், அது அதனுடைய ஒழுங்கின்படி இருக்கவேண்டும். இவர்கள் அந்நிய பாஷைகளில் பேசுகிற விதத்திலும் அந்த ஒழுங்கு இருக்க வேண்டும். வெறுமனே வேத வாக்கியங்களை மேற்கோள் காட்டுதல் மட்டும் போதாது; ஆனால் என்ன நடக்கப் போகிறதோ அதைப் பற்றி முன்னுரைத்தல் இருக்க வேண்டும். நீங்கள் அதனுடன் தொடர்ந்து உண்மையான பயபக்தியோடு இருப்பீர்களாயின், அது ஆரம்பிக்கும்... ஒரு சபையில் யாராவது ஒருவர் ஒழுங்கான வழியை விட்டு விலகிச் சென்றால், பரிசுத்த ஆவியானவர் வெளிப்படையாக யார் அதைச் செய்கிறவர்கள் என்பதை உரைத்து விடுவார். அப்பொழுது சம்மந்தப்பட்டவர்கள் கடிந்துரைக்கப் பட்டு, குத்தப்பட்டு, பீடத்தண்டை சென்று அறிக்கையிடுவார்கள். அதற்காகத்தான் வரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

9. இங்கே இருக்கிற நமது பாஸ்ட்டராகிய சகோதரன் நெவில் அவர்களை பார்க்கையில், அவர் ஒரு காலத்தில் சங்கோஜப்படுகிற, பின் தங்கியிருக்கிற ஒரு வாலிபனாக இருந்தார்- பெந்தெகொஸ் தேயைப் பொறுத்த மட்டில், அவர் அதை பிடித்துக் கொள்ளவே மாட்டாரோ என்பது போல் தோன்றியது. ஆனால் அவர் எழுந்து நின்று, பாஷைகளை வியாக்கியானம் செய்து தீர்க்கதரிசனம் சொல்லுவதைப் பார்க்கையில், அவர் நீண்ட அனுபவத்திற்குள்ளாக வந்துவிட்டார் என்றே நான் உங்களுக்குக் கூறுவேன். நாம் நமது பாஸ்ட்டருக்காக ஜெபிக்ககடவோம்.

10. சபையில் வரங்கள் வர ஆரம்பிக்கின்றன. இங்கே இன்னொரு எளிய தாழ்மையான சகோதரனொருவர், இங்கு எங்கோ தான் இருக்க வேண்டும். அவர் எப்பொழுதும் இங்கே இருக்கிறார். சகோதரன் ஹிக்கின்பாதம் என்ற அந்த சகோதரன்தான் அவர், அவர் சபையின் தர்மகர்த்தாக்களில் ஒருவராக முன்பு இருந்தார். அவர் ஒரு எளிய, தாழ்மையான விலையேறப்பெற்ற, தெய்வ மனிதனாவார். அவர் அந்நிய பாஷைகளில் பேசும் வரத்தைப் பெற்றிருக்கிறதைப் பார்க்கையில், சகோதரன் ஹிக்கின்பாதம் இவ்வா றெல்லாம் செய்வார் என்று யார் எண்ணிப் பார்த்திருக்க முடியும்அவருங்கூட

மிகவும் சங்கோஜப்படுகிற, தன்னை மறைத்துக் கொள்ளுகிற ஒரு எளிமையான சகோதரனாவார். யாருக்கும் தெரியாமல் இருக்க விரும்புகிறவர் அவர். அவர் ரொம்பவும் பேசமாட்டார், எப்பொழுதும் பின்னாலேயே மறைந்திருப்பார். ஆனால் பாருங்கள், தேவனோ அவ்விதமான ஒரு மனிதனை எடுத்து உபயோகிக்க முடியும், ஏனெனில், அவர் தன்னை முன்னுக்குத் தள்ளிக் கொண்டு, ஏதாவது செய்ய விரும்புவதில்லை. அவர் அவ்வாறு செய்ய விரும்பியிருந்திருப்பாரானால், அவர் பெருமையுள்ளவராய் இருந்திருப்பார். ஆனால், அவரோ அப்படிச் செய்ய விரும்பாமல் இருக்கிற வரையிலும், அவ்விதமாக தேவன் அவரை ஒருவேளை உபயோகிக்க முடியும்.

11. ஜூனி இங்கே இருக்கிறாரா? அவர் அந்த கம்பத்திற்குப் பின்னால் இருக்கிறார் என்று கருதுகிறேன்.

12. அநேகர் அந்நிய பாஷைகளில் பேசுவதை நான் கேட்டிருக் கிறேன் என்பதைப் பற்றி நான் கூறுவேன். அவையெல்லாம் தேவனிடத்திலிருந்தே வருகிறது என்று நான் எண்ணுகிறேன். ஏனெனில், யாருக்காவது, எங்காவது, ஏதாவது அர்த்தம் இல்லா மல் எதையாவது நீங்கள் தொனிக்கச் செய்ய முடியாது. "எத் தனையோ விதமான பாஷைகள் உண்டாயிருக்கிறது. அவை களில் ஒன்றும் அர்த்தமில்லாததல்ல'' என்று வேதத்தில் கூறப் பட்டுள்ளது. அப்படியென்றால், ஒவ்வொரு பாஷைக்கும் ஒரு அர்த்தமுண்டு என்று அர்த்தமாகிறது. ஏதோ ஒரு அர்த்தம் இல்லாமல் நீங்கள் எதையும் உரைக்க முடியாது. நான் ஆப்பிரிக்காவுக்குப் போகிற வரையிலும் அதைப்பற்றி நான், இது எவ்வாறு இருக்கும் என்று வியந்து கொண்டிருந்ததுண்டு. அங்கே நான் அந்த அநேக விதமான பாஷைகளை, சப்தங்களைக் கேட்டு, அது யாரோ ஒருவருடைய பேச்சு என்பதை கண்டுக் கொண்டேன். சில வேளைகளில் அது ஒரு தூதனின் பேச்சாகவும் இருக்கிறது.

13. ஆனால் ஜூனி ஜேக்சன் அவர்கள் ஒரு சங்கோஜமுள்ள, பின்னாலேயே இருந்து வந்த மிகவும் மென்மையான நகர் புறத்து பிரசங்கியாக, எலிசபெத் இண்டியானாவில், மெதோடிஸ்ட் சபை யில் இருந்து வந்தார். அப்பிரதேசம், நாட்டைவிட்டே மிகவும் தூரத்தில் உள்ள அடர்ந்த காட்டுப் பகுதியின் பக்கமாக இருந்தது. அமைதியாக இருப்பார், ஒன்றும் அதிகம் பேசமாட்டார். பின்னா லேயே ஒளிந்து கொண்டிருப்பார். சில வேளைகளில் நான் அவரைப் பார்த்து, அசைத்துக் கைகுலக்கி, "ஏதாவது சொல்லுங் கள் ஜூனி, என்னைப்



எனது இருதயத்தை ஆயத்தமாக்கி வைத்துள்ளேன். எனவே அவர் எப்பொழுது வருவார் என்பதைப் பற்றி பிரச்சினையில்லை'' என்று கூறினேன்.

அவர், "அது உண்மைதான்'' என்று பதிலளித்தார். "எனக்கு இருக்கும் மிகப்பெரிய புளகாங்கித உணர்வு எதுவென்றால், இத்தனை காலமும் மற்றவர்களுக்காக நான் ஜீவித்துக் கொண்டிருப்பதுதான்'' என்று நான் கூறினேன்.

17. ''அதுதான் சரியான வாழ்க்கையாயிருக்கிறது, அதுவே வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக ஆக்குகிறது. வாழ்க்கையானது நீங்கள் உங்களுக்கென்று என்ன செய்துகொள்ள முடிந்தது அல்லது நிறைவேற்றிக் கொண்டதோ அல்ல, மற்றவர்களுக்காக நீங்கள் என்ன செய்ய இயலக்கூடியதாக உள்ளது என்பதுதான்'' என்றார் அவர்.

18. ஆகவே, அப்படி வாழ்வதுதான், நீங்கள் உண்மையாக வாழ்கிறீர்கள் என்று இருக்கிறது. நம்மில் யாராவது ஒருபோதும் அவ்விதம் பிறருக்காக வாழ்ந்திராமல் இருப்பது நேரிட்டிருந்தால், பிறருக்காக வாழ முயற்சி செய்யுங்கள். அதற்கு ஒரு முயற்சி செய்யுங்கள்; அப்படி செய்யும் பொழுது, நீங்கள் வாழும் வாழ்க்கையிலிருந்து, உங்களுக்கு என்ன பெற்றுக்கொள்ளலாம் என்பதற்காக, நீங்கள் உங்களுக்காக வாழாமல் யாருக்காவது உங்கள் வாழ்க்கையின் மூலம் பயன்தரத்தக்க அளவுக்கு ஜீவியுங்கள், அதன்மூலம் வாழ்க்கையானது எவ்வளவு இன்னும் அர்த்தமுள்ளதாக இருக்கிறது என்பதை நீங்கள் காணுங்கள். பிறருக்காக வாழ்வதன் மூலம் ஐசுவரியங்களைவிட அல்லது நீங்கள் சிந்திக்கும் எந்தவொன்றையும் விட மேலாக நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவதை காண்பீர்கள். வாழ்க்கையானது பாரம் மிகுந்ததாயிருக்கிறது.... எனவே நீங்கள் பிறருக்காக ஜீவித்தால் வாழ்க்கையின் பாரம் இலகுவாக்கப்படும். நீங்கள் பிறருக்காக ஜீவிப்பதைச் செய்ய உங்களால் கூடும். பிறருக்காக நீங்கள் ஏதாவது பயனுள்ள காரியத்தைச் செய்தாலொழிய, அதினால் கிடைக்கும் சந்தோஷத்தை நீங்கள் அறிய மாட்டீர்கள்.

19. கர்த்தருக்கென்று நான் செய்துவரும் ஊழியத்தில் விரைவில் அது முப்பத்தொன்று ஆண்டுகளை எட்டப்போகிறது, அதைப்பற்றி நான் எண்ணிப் பார்க்கும்படி நேரிடுகிறது. எந்தவொரு மனிதனும் தனது பணியின் கடைசிக் கட்டத்தை எட்டவேண்டியிருக்கும் பொழுது, அவன் தனது இறுதியான மணி நேரத்தை வந்தெட்டுகையில், அவன் நடந்து வந்த பாதையை பின்னால் திரும்பிப் பார்த்து, வாழ்க்கையில் என்ன

விதைத்தார். அவர் மலர்களை மிகவும் நேசித்தார். எனவே அவர் சுற்றிலும் மலர் விதைகளை தூவினார். அவர் மறைந்துவிட்ட போதிலும் அவரது மலர்கள் இன்னமும் ஜீவிக்கின்றன. நாம் இறுதி விடை பெறுகையில் காலமெனும் மணற்பரப்பில் கால் தடங்களை பின்னால் விட்டுச் செல்கிறோம் வாழ்க்கையின் பயபக்திக்குரிய பெரும்பாதையில் பயணம் செய்கையில் அங்கே பதிந்துள்ள கால் தடமானது இன்னொருவருடையதாகும், நம்பிக்கையிழந்த கெட்டுப்போன ஒரு சகோதரன் அதைக் காண்கையில், புத்துயிர் பெற அது உதவுமே.

11. அவ்விதமான ஒரு காரியத்தைத்தான் நாமும் காண விரும்பு கிறோம். நாம் செய்திருக்கிற ஒரு காரியமானது மற்றவர்களுக்கு நலம் பயக்கக்கூடியதாக இருப்பதை நாம் காணவேண்டுமென விரும்புகிறோம்.

12. இந்நகரத்திலுள்ள என்னுடைய உத்தம நண்பராகிய மருத்து வரான சாம் அடேயர் அவர்களோடு சில நாட்களுக்கு முன்பாக உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தேன். அவர் என்னிடம், "எப்படியிருக்கிறீர், பில்?'' என்று கேட்டார்.

13. ''நான் மிகவும் நலமாக உள்ளேன், டாக்டர் அவர்களே'' என்றேன். ''நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்?'' என்று பரிசோதனை செய்தேன்'' என்றார்.

14. "ஏராளமான நோயாளிகள் வருகிறார்கள். நான் இன்று மதியம் பதினைந்து பேர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்தேன்'' என்றார்.

15. நான் மறுமொழியாக, "நல்லது, வெறும் மருத்துவ பரிசோதனைகளும், அவற்றில் ஏதும் கெடுதல்கள் ஒன்றும் இல்லாமல் இருக்கிற வரையிலும் அது நல்லதுதான்'' என்று நான் கூறினேன். மேலும் நான் நாங்கள் சிறு பையன்களாக இருந்த முற்காலத்தைக் குறித்து பேச்சையெடுத்தோம். நான், ''நல்லது, டாக்டர் அவர்களே, நான் இன்னும் எவ்வளவு காலம் இங்கே இருக்கப் போகிறேன் என்பது எனக்குத் தெரியாது. நாம் இருவரும் நமது ஐம்பதாவது வயதை எட்டிவிட்டோம்'' என்று கூறினேன்.

"அது உண்மைதான் பில்'' என்றார் அவர்.

16. "ஆனால் இத்தனை ஆண்டுகளும், சுமார் முப்பத்தொன்று வருட ஊழிய காலம் முழுவதிலும் நான் அவர் வரக்கூடிய அவ் வேளைக்காக



பார்த்துக்கொண்டே அங்கே அப்படியே அமர்ந்திருப்பதை விட்டு விடுங்கள்'' என்று கூற வேண்டும்போல் தோன்றினதுண்டு.

14. நாங்கள் காட்டில் வெட்டப்பட்ட அடி மரத்தில் உட்கார்ந்து கொள்வோம். அவர் உட்கார்ந்து கொண்டு "நல்லது, ... நான் கருதுகிறேன்... எல்லாம் சரிதான்.'' என்பார்.

15. ''ஓ ஜூனி, உங்களுக்குப் பதில் நானே பேசிவிடலாம் போல நான் உணருகிறேன். ஏனெனில் நீங்கள் என்னிடம் மிக மெதுவாகப் பேசுகிறீர்கள்'' என்று அவரிடம் கூறுவதுண்டு. தேவனோ அவருக்கு அந்நிய பாஷைகளில் பேசும் வரத்தை அளித்துள்ளார். என் வாழ்க்கையில் இதை விட மிகத் தெளிவான பாஷையை ஒருபோதும் கேட்டதேயில்லை, பாருங்கள்?

16. சபையில் அவரைக் கவனித்துப் பாருங்கள் மற்ற பெண் மணியைப் பற்றி அறிந்திராத இந்த ஒரு பெண்மணி பேசியதைப் பாருங்கள்? அவர்கள் ஒருவரையொருவர் இன்னார் என்று அறிந்திருக்கவில்லை ஆனால் அவர்களிருவரும் ஒரேவிதமான தொனியில் பேசியதைப் பாருங்கள். அது வியாக்கியானம் செய்யப்பட்ட பொழுது, சரியாக அப்படியே இருந்ததை பார்த்தோம். அதே விஷயம் தான் வியாக்கியானம் செய்யப்பட்டது. செய்தியானது பூரணமாக இருந்தது சபைக்கு. அது எவ்வாறு இருக்கிறது என்பதைப் பாருங்கள். நாம் இதற்காக தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும் நீங்கள் உங்கள் நெஞ்சை நிமிர்த்திக் கொள்ள வேண் டாம். நீங்கள் அவ்வாறு செய்தால், நீங்கள் உங்களை மட்டம் தட்டிக் கொண்டு விடுவீர்கள். அப்பொழுது பிசாசு உங்களை பற்றிக் கொள்வான். எனவே தாழ்மையோடு இருங்கள். ''ஓ கர்த்தாவே, நான் பின்னாலேயே இருக்கட்டும். வேளைக்கு முன்பாக நான் என்னை உயர்த்திக் கொள்ளாதபடி செய்யும்'' என்று அவரிடம் கூறுங்கள்.

17. அவர் ஒருபோதும் சரியான வழியை விட்டு விலகிச் செல்ல மாட்டார். சில சமயம், நீங்கள் அப்படிச் செய்தால், அப்பொழுது இங்கிருக்கிற மேய்ப்பன் அதைப் பற்றி உங்களுக்கு சுட்டிக் காட்டு வார். பாருங்கள், நாம் பிரசங்கம் நிகழ்த்திக் கொண்டிருக்கையில், அப்போது வரங்கள் குறுக்கிடக் கூடாது. வழக்கமாக, சபையில் வரங்கள் நல்ல விதமாக கிரியை செய்து கொண்டிருக்குமானால், மற்ற ஆராதனைக்கு முன்பாக, நமக்கு இன்னும் கூடுதலான கூட்ட வேளையை நாம் உடையவர்களாக அப்போது இருப்போம். அந்த விஷயத்தில் கர்த்தர் உங்களோடு கிரியை செய்வராக, ஏனெனில்,

செய்தி அளிக்கும் வேளையில் அது குறுக்கிடாமல் இருக்கத்தக்கதாக அப்படியிருக்கட்டும். நாம் சபை கூடி வந்திருக்கையில், கொஞ்ச நேரம் நீங்கள் அமைதலாயிருத்தல் வேண்டும். ஆனால் தேவன் கொடுக்கத்தக்க செய்தியை வைத்திருப்பாராயின், எங்காவது அதை அவர் கொண்டு வருவார். அவர் கிரியை செய்ய விடுங்கள். ஆனால் அது வேத போதனையின்படியே தான் இருக்கும். ஒரு வேளை சகோதரன் நெவில் அவர்கள் அந்தக் காரியங்களைப் பற்றி போதிப்பார். நாம் அதின்படி செய்ய முயலுவோம். நான் அவருக்கு இந்த விஷயத்தில் உதவி செய்ய முயலுவேன். நாங்கள் இருவரும் சேர்ந்து, அது எவ்வாறு உபயோகிக்கப்பட வேண்டும் என்கிற விஷயத்தை உங்களுக்கு தெளிவாகக் காண்பிப்போம்.

18. என்னுடைய போலந்து நாட்டு சகோதரனே, நீங்கள் நன்றாக இருக்கிறதாக உணருகிறீர்களா? அது அருமையாயிருக்கிறது. ஓ, கர்த்தர் எப்படியாய் அவரை ஆசீர்வதித்திருக்கிறார்! எட்டு ஆண்டு களுக்கு முன்பாக நடைபெறப் போகிற ஒரு காரியத்தைப் பற்றி அவருக்கு கூறினேன். அவர் ஒரு கண்டிப்பான திரித்துவவாதி, அவர் மிகவும் குழம்பிப் போயிருந்தார். அன்றொரு நாளில் கர்த்தர், "ஒரு மனிதன் வருகிறார், கறுமையான முடியையுடையவரும், பழுப்பு நிற கண்களை உடையவரும் கனத்த தேகமுள்ளவருமானவராக அவர் இருப்பார். அவரை அனுப்பிவிடாதே, நான் தான் அந்த மனிதனை உன்னிடம் அனுப்புகிறேன்'' என்று கூறினார். அவர் எங்கே குழம்பியிருந்தாரோ அதைக் குறித்ததான வேதவசனத்தை நான் எடுத்து, ஒரு சிறு துண்டுக் காகிதத்தில் அதை எழுதி, அங்கே வைத்தேன். சிறிது நேரம் கழித்து, அவர் அங்கே வந்தார்.

"இங்கே ஒரு மனிதர் உங்களை காண வந்திருக்கிறார்'' என்று என் மனைவி கூறினாள்''

''அவர் தான் அந்த மனிதர், அவரை உள்ளே கொண்டு வா'' என்று கூறினேன்''

19. பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினாலே அவருக்குச் சொல்லப்பட்டதை பற்றி என்னிடம் அவர் கூறினார். எவ்விதமாக அவர் விசுவாசித்திருந்தார் என்பதையும் பற்றியும், தன் ஜனங் களின் மத்தியில் செய்தியை பற்றிக் கொண்டிருந்ததைப் பற்றியும் அவர் கூறினார். அவர் குறை கூறப்பட்ட போதிலும், செய்தியோடு உறுதியாக நிலைத்து இருந்திருக்கிறார். சிறிது காலத்திற்கு முன்பாக, ஒரு கூட்டத்தில் நான் அவர், அவரது பெயரைச் சொல்லி அழைத்தேன். நான்



அறிய வந்துள்ளேன். அதற்காக நாம் மிகவும் மகிழ்ச்சியுள்ளவர்களாயிருக்கிறோம். நான் எனது நல்ல சிநேகிதர் சகோ. எல்மெர் கேப்ஹார்ட் அவர்கள் அங்கே அமர்ந்திருக்கக் காண்கிறேன். விசுவாசத்திற்குள்ளாக அவர் சற்று முன்பு ஞானஸ்நானப்படுத்தப்பட்டார் என்பதைப் பற்றி அறிய வந்தேன். அதற்காக நான் நிச்சயமாக நன்றியுள்ளவனாயிருக்கிறேன். அக் காரியமானது, கெண்டக்கியிலுள்ள வேட்டைக்குச் செல்லும் எங்களது குழாம், தேவையை மட்டும் வேட்டையாடி எடுத்துக் கொள்வது என்ற நிலைமைக்கு எங்களை இப்பொழுது ஆயத்த மாக்கியுள்ளது, அல்லவா?

8. எனக்கு நினைவிருக்கிறது; ரோட்னி அவர்கள் பின்னால் உள்ள அறையில் இன்னமும் இருப்பாரெனில், நான் பேசுவதை கேட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை நான் அறிகிறேன்; சார்லி என் முன்பாக உட்கார்ந்து கொண்டிருக்கிறார்; நாங்கள் வேட்டைக்கு சேர்ந்து செல்வது வழக்கம். அவ்வாலிபர்களெல்லாம் நல்லது, அவைகள் அணில்கள்'' என்று விருப்பத்தோடு கூறி கூடுமானால் தேவைக்கு மேலதிகமாக வேட்டையாடி எடுக்க விரும்புவார்கள். ஆனால் அது சரியல்ல என்று கூறி அவர்களோடு பேசுவது வழக்கம். எனவே, இப்பொழுது அந்த குழுவையும் அடுத்த தேசத்திற்கு எடுத்துச் சென்று அங்கே அவர்களை சீர்படுத்த வேண்டும் என்று நான் கருதுகிறேன். அது நன்றாக இருக்கும்.

9. எனவே, நான் சில வேளைகளில், ஒவ்வொரு ஊழியக்காரனும் செய்வது போல், நாம் நடந்து வந்த பாதையை பின்னால் திரும்பிப் பார்த்து, நாம் விதைத்து வந்த வித்தைக் குறித்து என்ன ஆயிற்று என்று பார்க்கிறோம்.

10. ஜானி ஆப்பிள்சீட் என்பவரைக் குறித்து உங்களில் அநேகருக்கு நல்ல பரிச்சயம் உண்டு . (கி.பி.1775 முதல் 1845 முடிய வாழ்ந்த ஓர் அமெரிக்கர். இவர் அமெரிக்காவின் மத்திய மேற்குப் பகுதி முழுவதும் ஆப்பிள் மரங்களை நட்டவர் - மொழிபெயர்ப்பாளர்). ஏன் ஸ்வீடனில்கூட இதேபோல் காரியத்தைச் செய்த ஒரு மனிதன் இருந்திருக்கிறார். அவர் அத்தேசம் எங்கிலும் மலர் விதைகளை விதைத்தவர் என்று கருதப்படுகிறார். அவர் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்ததினால்தான் ஸ்வீடன் முழுவதும் இப்பொழுது பலவிதமான அழகான மலர்கள் பூத்துக் குலுங்கிக் கொண்டு இருக்கின்றன என்று அவர்கள் கூறுகிறார்கள். விதைகள் வளரத்தக்க நிலம் எங்கேயெல்லாம் இருந்ததோ, அங்கெல்லாம் அவர் அவைகளை

உஷ்ணமாயிருக்கப் போகும் இடங்களுக்கு நாம் போய்விடாமல் அவைகளை தவிர்ப்பதற்காகவே, நாம் இங்கே ஆராதனைகளை வைத்துக்கொள்ள முயலுகிறோம். அவ்விடங்களுக்கு நாம் சென்று விடாமல் அவைகளை கடந்து செல்வதற்காகவே நாம் இங்கே கூடி வந்திருக்கிறோம். அதைச் செய்ய சாத்தியமாக்கித் தருவது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் மாத்திரமே.

4. சபையானது எவ்வாறு முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறது என்றும், கர்த்தரோடு எவ்வாறு போய்க்கொண்டிருக்கிறது என்றும், எவ்வாறு தேவன் ஆவிக்குரிய வரங்களினால் உங்களோடு இடைப்பட்டுக் கொண்டிருக்கிறார் என்றும் கூறுகிறதான நல்ல அறிக்கையை நான் கேட்க முடிந்ததற்காக நான் மிகவும் மகிழ்ச்சி யுள்ளவனாயிருக்கிறேன். உங்களோடு தேவன் இடைப்படுவதற்கு ஏற்றபடி இருக்கும் உங்களது உத்தம இருதயத்திற்காக நான் தேவனுக்கு நன்றியுள்ளவனாயிருக்கிறேன். அவர் உங்களை அந்த நேரான குறுகிய பாதையில் வலது இடது புறம் சாயாமல், நடுப் பாதையிலேயே நிலைத்திருக்கும்படி காப்பார் என்று நம்பிக் கொண்டிருக்கிறேன்.

5. சற்று நேரத்திற்கு முன்னதாக ''பரலோகத்தில் கண்ணீர் இல்லை'' என்ற பாடலை சகோதரன் கால்வினும் அவரது மகளும் பாடினார்கள் என்று நான் நம்புகிறேன். அவர்களுக்கு நான் நன்றி கூற விரும்புகிறேன். அது மிகவும் அழகாக இருந்தது. அதை நான் நிச்சயமாக பாராட்டுகிறேன்.

6. சகோ. நெவிலும் நானும் அநேக ஆண்டுகளாக ஒருவரை யொருவர் அறிந்திருக்கிறோம் என்று சகோ. நெவில் அவர்கள் கூறிய வண்ணமாக, நான் சகோ. கால்வினைக் குறித்தும் கூற முடியும். நாங்கள் ஒருவரையொருவர் அநேக ஆண்டுகளாக அறிந் திருக்கிறோம். அப்பழைய சுவிசேஷப் பாடல்களை அவர் பாடக் கேட்கவும், தனது பிள்ளைகளை கர்த்தருடைய வழியில் வளர்த்து வருவதும் எனது இருதயத்தை மிகவும் ஊக்கப்படுத்துவதா யிருக்கிறது. தேவனை நேசிக்கவும், அவருக்காக அக்கறை கொள்ளவுமாக இருக்கிற மக்கள் தேவனுக்கு இன்னமும் இருப்பதை அறிய வருவது என்னை மகிழ்ச்சிக்குள்ளாக்குகிறது. அதற்காக நாம் நன்றியுள்ளவர்களாய் இருக்கிறோம்.

7. இப்பொழுது நான் இங்கு திரும்பி வந்தது முதற்கொண்டு, அநேகர் விசுவாசத்தின்படி ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள் என்பதை நான்



அந்தப் பெயரை எவ்வாறு உச்சரித்தேன் என்பது எனக்கே தெரியாது. நான் அந்தப் பெயரை அக்கூட்டத்தில், ஒவ்வொரு அட்சாராமாக பிரித்துக் கூறினதாகக் கூறினார். அவர் தன்னுடைய கரத்தில் ஒரு குழந்தையை சுமந்து கொண்டிருந்ததாகவும், அதற்கு முகத்தில் வடுக்களால் நிறைந்ததாக இருந்ததாகவும், அது முழுவதும் குணமடைந்ததாகவும் கூறினார். கர்த்தர் எவ்வாறு...

20. 'நல்லது, இப்பொழுது உங்களுக்குத் தேவையானது என்னவெனில், நீங்கள் சபைக்குப் போய், இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற வேண்டும்'' என்று நான் கூறினேன்.

21. நான் மலையுச்சியிலே சற்று நேரத்திற்கு முன்பாக அவரைச் சந்தித்தேன், ஏனெனில் அவர் இறங்கி வந்து இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றார். இப்பொழுது அவர் முழு வதும் திருப்தியடைந்தவராக, நல்லபடியாக ஆகி வீடு திரும்பிக் கொண்டிக்கிறார். அவர் வரவிருக்கும் நாட்களில் ஒன்றில், போலந் திலும், ஜெர்மனியிலும் இன்னும் அங்குள்ள ஏனைய இடங்களிலும் எனக்கு மொழிபெயர்ப்பாளாராக இருப்பார் என்று நான் நம்பு கிறேன். கர்த்தர் உம்மை ஆசீர்வதிப்பாராக. என் சகோதரனே.

22. அநேக பெரிய காரியங்களை நம்முடைய கர்த்தர் செய்கிறார். அவருடைய இரக்கத்தை நாம் காண்கையில், அவர் கிழக்கு மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய திசைகளிலெல்லாம் இருந்து தன் அருமையான பிள்ளைகளை வழி நடத்திக்கொண்டிருக்கிறார். அவர்களை ஒன்றாக சேர்த்து, வெளியே பிரித்தெடுத்து, அசைத்துக் கொண்டிருக்கிறார். எவ்வளவோ காரியங்களை நாம் கூறலாம்.

23. இப்பொழுது, அடுத்த ஞாயிறு இரவு மறந்து விட வேண்டாம். கர்த்தருக்கு சித்தமானால், அடுத்த ஞாயிறு இரவில் நமக்கு... அடுத்த ஞாயிறு காலையில் இரு வேளை சுகமளித்தல் ஆராதனை இருக்கும். நான் இவ்வாறு கூறுவதள்கான காரணம் என்னவெனில். ஒரு ஞாயிறு காலையில் அளவுக்கதிமாக நபர்கள் இருந்தால். நான் அப்பொழுது ஞாயிறு இரவில் அதை வைத்துக் கொள்ளலாமல்லவா? அதனால்தான். ஆனால் ஞாயிறு காலையிலேயே நான் எல்லோருக்கும் ஜெபித்து அனுப்பிவிட முடிந்தால். அதுவும் நல்லது தான்.

24. புதன் இரவு வாரத்தின் நடுவில் நடத்தப்படும் ஜெபக் கூட்ட மாகும். இங்கே அருகாமையில் இல்லங்களை உடையவர்கள், இங்கே கூடி வந்து அந்த ஜெபக்கூட்டத்தில் கலந்து கொள்ளுங்கள். அதை நீங்கள் விட்டு விட வேண்டாம், அதில் தொடர்ந்து கலந்து கொள்ளுங்கள்.

ஜெபியுங்கள், நெருக்கமாக தேவனைத் தேடுங்கள். உங்கள் மத்தியில் மதவெறி நுழைந்துவிட இடம் கொடுத்து விடாதீர்கள். ஒரு பொய்யை ஏற்றுக் கொள்ளக் கூடாதபடிக்கு உண்மையானது மிதமிஞ்சி உள்ளது. எனவே தவறான பாதையில் போய் விடாதீர்கள். அங்கே நிலைத்திருங்கள்.

25. ஒரு பழக்கப்பட்ட "ஆமென்'' சப்தத்தை நான் கேட்டேன். அதை நான் அநேக ஆண்டுகளாக கேட்டுப் பழக்கமானதாகும். அது சகோதரன் ரஸ்ஸல் க்ரீச் தான். அன்றொரு இரவில் பேட்டி தான் அந்நிய பாஷையில் பேசியது என்று என்னிடம் கூறினார்கள். பெட்டி எங்கேயிருக்கிறாய்? இங்கே இருக்கிறாயா, இனிமை யானவளே? ஆம், நான் அவளை பார்த்தால், அவளை அடையாளங் கண்டு கொள்ளகூட இயலாது. நான் அவளை என் கரங்களில் குழந்தையாயிருக்கையில் சுமந்து, இதே இடத்தில் கர்த்தருக்கென பிரதிஷ்டை செய்தேன். மேடா கூறினாள். ''அவள் இப்பொழுது ஒரு அழகான இளம் வாலிபப் பெண்ணாக பரிசுத்த ஆவியின் வல்லமையை தன் மேல் பெற்றுக் கொண்டவளாக இருக்கிறாள்'' என்று. ரஸ்ஸல் அவர்களே, நீங்கள் ஒரு ஐசுவரியவான். ஆம் நீங்கள் அப்படித்தான்.

26. சகோதரி க்ரீச் எங்கேயிருக்கிறார்கள்? நான் அவர்களைப் பார்க்கவேயில்லை. இங்கே எங்காவது இருக்கிறார்களா? ஓ, அங்கே இருக்கிறார்கள். ஓ, சகோதரி க்ரீச் அவர்களே, அவ்விதமாக ஒரு பிள்ளையை தேவன் உங்களுக்குக் கொடுத்தற்காக நான் எவ்வள வாய் நன்றியுள்ளவனாய் இருக்கிறேன் தெரியுமா? நீங்கள் அதை உணரவில்லை, எவ்வளவு நன்றியோடு இருக்கிறேன் என்பதை. இளம் வாலிபப் பருவத்திலே, பெண்களெல்லாம், நகைத்துக் கொண்டும் சிரித்துக்கொண்டும், வாத்து மாதிரி சிகை அலங்காரம் செய்து கொண்டுள்ள பையன்களோடு வெளியே சென்று, அபத்தமான காரியங்களை செய்து கொண்டும், இன்னும் இன்னபிற காரியங்களை செய்து கொண்டும் இருக்கிற பிராயம் அது. ஆனால் இந்த சிறு பெண்ணோ பரிசுத்த ஆவியின் வல்லமையால் நிறையப் பெற்று, அந்நிய பாஷையில் பேசிக் கொண்டிருக்கிறாள்.

27. பெந்தெகொஸ்தே பிரசங்கிகளே, எத்தனை பேர்கள் நீங்கள், உங்களுடைய வாலிபமான பெண்கள் ராக் ரோல் பார்ட்டிகளுக்கு போகிறவர்களாக இருக்கிறார்கள் என்பதைக் கண்டு, உங்களுடைய முழு ஜீவியத்தை ஒப்புக் கொடுப்பீர்கள்?

## வெளிப்படுத்தின விசேஷம்

## ஐந்தாம் அதிகாரம் -1

## தலை நசுக்கப்பட்ட சர்ப்பம்

**REVELATION CHAPTER FIVE - 1**

**THE BRUISED SERPENT**

**61-06-11**

**பிரான்ஹாம் கூடாரம் இந்தியானா, அமெரிக்கா**

1.நன்றி சகோதரன் நெவில் அவர்களே, எனது சகோதரனே, கர்த்தர் உம்மை ஆசீர்வதிப்பாராக.

2. காலை வணக்கம், சிநேகிதரே. இக்காலையில் மீண்டும் கூடாரத்தில் வரவும், கர்த்தருடைய வார்த்தையின் பேரில் இவ்வைக் கியத்தைப் பெற்றிருக்கவும், நமது காலை ஆராதனைக்காக இந் நேரத்தை ஒதுக்கிக்கொள்ளவும் முடிந்தது, சிலாக்கியமானது அல்லது மகத்தான சிலாக்கியமானதாகும் என்று நான் நிச்சயம் கூறத்தான் வேண்டும். ஒருசமயம் இவ்வாறு கூறப்பட்டது என்று நான் நம்புகிறேன்; அதாவது 'கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்.''- எனக்கு நல்ல விலையேறப் பெற்ற நண்பரான சகோதரன் நெவில் அவர்களோடு மீண்டும் இருக்கும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றதற்காக.

3. அங்கே சற்று குளிர்ச்சியாக அல்லது சற்று உஷ்ணமாக உள்ளது என்று நினைக்கிறேன். உங்கள் கைகளினால் இவ்விதமாக உபயோகித்துக் கொள்ளக்கூடிய சில விசிறிகள் நம்மிடத்தில் இருக்கின்றன என்று நான் நினைக்கிறேன். உங்களிடத்தில் மோட்டார் இருந்தால், விசிறிகள் உண்டு, அதை ஓடச் செய்வதற்காக. இங்கே இன்னமும் அவைகள் உள்ளன என்று நான் நினைக்கிறேன். சிலர் பாட்டுப் புத்தகங்களையும் இன்னும் வேறு சிலவற்றையும் காற்று வீசிக் கொள்ள உபயோகிக்கிறதை நான் காண்கிறேன். எதிர்காலத்தில்

386. (ஒலி நாடாவில் காலியிடம் - ஆசி)..... உங்களை குணமாக்குவார், உங்களை குணமாக்குகிறவராக அவரை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா? உங்களால் இயலுமென்றால் ...... (ஒலி நாடாவில் காலியிடம் - ஆசி.) குணமாக்குகிறவர்.... பவுல் ஒரு சமயம் கூறினான் .... (ஒலி நாடாவில் காலியிடம் - ஆசி.).

387. கர்த்தாவே, இப்பொழுதும் தேவனாகிய கர்த்தாவே, இந்நாளில் இது வரையிலும் மிகவும் கவனமாக செவிகொடுத்தவர்களான இங்கு கூடி வந்திருக்கிற மக்கள்மேல் உமது இரக்கங் களும், தயவும் தங்கியிருப்பதாக.

388. சாத்தானே, நான் உன்னை இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அறைகூவல் விடுத்து, இந்த மக்களை விட்டு வெளியேறும்படி கட்டளையிடுகிறேன். சுவிசேஷத்தைக் கேட்ட இவர்கள் இங்கே தங்கியிருக்கிறார்கள். இம்மக்களை கட்டி வைத்திருக்கிற பிசாசின் வல்லமையானது இவர்களை விட்டு அகலட்டும்.



28. அதை மதிப்பிடுங்கள், சகோதரனே, நீங்கள் அங்கே இண்டர் ஸ்டேட்டில் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை அறிவேன். நானுங்கூட என் பிள்ளைகளை வளர்ப்பதற்கு அநேக நாட்கள் பாடுபட்டிருக்கிறேன். ஆனால் நினைவில் கொள்ளுங்கள், தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். அவர் பிரதிபலன் அளிக்கிறவர், ''நான் திரும்பக் கொடுப்பேன்'' என்று அப்படித்தான் கூறுகிறார்.

29. பெட்டி, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக. நான் உன்னைப் பார்த்தால் என்னால் நீ யார் என்று அறிந்து கொண்டிருக்க முடியாது என்று கருதுகிறேன். ஆனால் அந்த நேர்ப்பாதையை விட்டு விலகாதே, எனக்கு இனிமையானவளே, ஒரு எலுமிச்சையாக இருப்பதை பொன்னிற ஆப்பிள் பழம் போல் ஏமாற்றிக் காட்டு வதைப் போல், பிசாசு உனக்குள் எதையாவது போட்டு விடுவதை அனுமதித்து விடாதே. அதை அப்படியே போட்டுவிட்டு விலகி விடு. உன் கண்களை சிலுவையின் மேல், கிறிஸ்துவின் மேல் வைத்து விடு. வேளையானது சமீபித்துவிட்டபடியினால், முன்னேறிச் சென்று கொண்டேயிரு. பார்?

30. தேவனுடைய ஆசீர்வாதங்களைக் குறித்து இன்னும் எத்தனையோ புத்திமதிகளை நான் சொல்லிக்கொண்டே போகலாம். அநேகரை நான் சந்திக்கவே இயலாமற் போய்விட்டது. இந்த வாரம் முழுவதிலும் ஐம்பது பேர்களுக்குக் கூட நான் ஜெபிக்க வில்லை வருவோரும், போவார்களும், அவசர அழைப்புகளும் இருந்தபோதிலும், நான் முழுவதும் படித்து ஆராய்ந்து கொண்டேயிருந்தேன். ஆனால் இப்பொழுது, அடுத்த ஞாயிறன்று, கர்த்தருக்கு சித்தமானால், அடுத்த ஞாயிறு காலையில் ஜனங்களுக் காக ஜெபித்து, கர்த்தர்தாமே இறங்கி வந்து, நமக்கு மகத்தான வல்லமையை அருளி, நமக்கு தம்மை பிரத்தியட்சமாக்கி தரும்படி கேட்கப் போகிறோம்.

31. இந்த சபை காலத்தைக் குறித்து ஆரம்பிக்கிறதை நான் விரும்பவில்லை. ஏனெனில், அவற்றின் இறுதியானது இதுதான் என்பதை அறிந்திருக்கிறேன். இப்பொழுது, இச்சபைக் கால மானது, ஏழு சபைக் காலங்களின் முடிவாக அது இருக்கப் போகிறது. நீங்கள் அதிலுள்ள இன்பத்தை அனுபவித்தீர்களா? (சபையார் ''ஆமென்'' என்று பதிலளிக்கிறார்கள் -ஆசி). இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள், நான் ஆரம்பத்தில் கூறியது போலவே இதை முடிவிலும் கூறுகிறேன். நான் கூறினவைகளில் அநேகவற்றோடு நீங்கள் ஒத்துக் கொள்ளாமலிருக்கும் காரியம் அநேகம் இருக்கலாம். ஆனால் அவைகளை எனக்கெதிராகக் கொள்ளவேண்டாம். எப்படியிருந்த போதிலும் என்னை நேசியுங்கள். ஏனெனில், நீங்கள் என்ன

செய்தாலும், என்ன கூறினாலும் அது ஒரு வித்தியாசத்தையும் எனக்கு உண்டாக்காது, அதை நான் பொருட்படுத்தமாட்டேன். நான் உங்களைப் பற்றி ஒரே விதமாகத் தான் கருதுவேன். இன்னும் கூடுதலாக ஏதாவது இருக்குமானால் உங்களைப் பற்றி நான் இன்னும் கூடுதலாக சிந்தித்துக் கொள்வேன். நான் உங்களை நேசிக்கிறேன் என்பதை தேவன் அறிவார். இயேசு கிறிஸ்துவின் நாமத்தைப் பற்றி கூப்பிடும் எந்தவொரு மனிதனையும் நான் நேசிக்காமல் இருந்ததில்லை. பாருங்கள்?

32. நாம் ஒருவருக்கொருவர் கருத்து வேறுபாடு கொண்டிருந்த போதிலும், உங்களுக்கெதிராக எந்தவிதமான கசப்போ, மாறுபாடோ கொண்டிருக்கவில்லை. ஒரு மேசையில் நாம் அமர்ந்திருக்கையில், நம்மில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான 'பை' (ஒரு வகை 'கேக்' - மொழிபெயர்ப்பாளர்) சாப்பிடுகிறவர்களாக இருப்போம். அதேபோல்தான் இங்குள்ள காரியமும். ஒருவரோடு ஒருவர் ஐக்கியங்கொள்ளுகிறது என்பதில், நாம் ஒருவரையொரு வர் நேசிக்கிறவர்களாயிருக்கிறோம். அப்படி நாம் செய்யாவிடில் நாம் அதைச் செய்தாக வேண்டும். நாம் அதை செய்கிறவரையிலும், தேவனுக்குள்ளாக நாம் அதிக தூரம் செல்ல முடியாது.

33. ஒரு விஷயத்தைப் மறந்து விட வேண்டாம். மறந்து விடவேண்டாம். வரங்களில் எல்லாம் மிகப்பெரிய வரமானது என்னவெனில், அது அன்புதான். "நான் மனுஷர் பாஷைகளைப் பேசினாலும் தூதர் பாஷைகளைப் பேசினாலும், என் சரீரத்தை சுட் டெரிக்கக் கொடுத்தாலும், சகல அறிவையும் நான் உடையவனாயிருந்தாலும், நான் ஒன்றுமில்லை... நிறைவானது... அன்பு... வரும் பொழுது ..." அனைத்து ஆவிக்குரிய வரங்களும், அன்போடு இசைந்ததாயில்லாவிடில், அது ஒன்றுமில்லை. வேறு எதுவும் ஒழிந்துபோம். ஆனால் அன்போ நிலைத்திருக்கும். அது 1 கொரிந் திரியர் 13 ம் அதிகாரத்தில் உள்ளது.

34. இப்பொழுது இன்றிரவில் இந்த மகத்தான சபைக் காலத்திற்குள் பிரவேசிக்கிறோம். ஓ, என்னே! இன்றிரவில், ஒன்பது மணி கழித்து கால்மணி நேரம் வரை ஒரு வேளை நமக்கு ஆகலாம். இங்கிருக்கிற ஒவ்வொருவரையும் உட்கார வைக்க போதுமான இடவசதி இல்லை, அதற்காக நிச்சயமாக நான் வருந்துகிறேன். ஆனால் ஒரு நாளில் நமக்கு இடம் கிடைக்கும்.



கண்டுபிடித்தேன். அது யாரோ ஒருவர்மேல் உள்ளது என்று எண்ணினேன்.

383. நீங்கள் ஒன்றையே பார்க்கிறீர்கள், ஆனால் நானோ இரண் டைப் பார்க்கிறேன். அதில் ஒன்று மாம்சத்திற்குரியது, இன் னொன்று தெய்வீகமும் இயற்கைக்கு அப்பாற்றப்பட்டதுமாகும். இங்கே வெளியே ஒரு மனிதன் அவ்வரிசையில் உட்கார்ந்து அவ் வொளியை நோக்கிக்கொண்டு அமர்ந்திருக்கிறார், அவ்வொளி அவர்மேல் இடித்தது. அவர் செய்மோர், இண்டியானாவிலிருந்து வந்திருக்கிறார். அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. ஐயா, நீர் விசுவாசிப்பீரெனில், தேவன் உம்மை அந்த மாரடைப்பு நோயி லிருந்து குணமாக்குவார். ஆமென். இப்பொழுதே விசுவாசிப்பீர்.

384. உம்முடைய முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறீரா? அது தேவனால் உண்டானது என்பதை நிரூபிக்கும்படி வானத்தையும் பூமியையும் உண்டாக்கின தேவனாகிய கர்த்தர் நான் ஒன்றைச் செய்ய என்னை அனுமதிப்பாரெனில், அப்பொழுது நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் அதை விசுவாசிப்பீர்களா? உங்களுடைய தேகநிலை, நீங்கள் தற்போது மாதவிடாய் நிற்கப்போகிறதினால் ஏற்பட்டுள்ள மனதில் ஒரு படபடப்போடு காணப்படுகிறீர்கள். தேவன் உங்களை குணமாக்குவார் என்று விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் இந்தப் பகுதியில் உள்ளவர்களல்ல.

385. (ஒலிநாடாவில் காலியிடம் - ஆசி). உங்களுக்கு ஏற்பட்டுள்ள தொந்தரவு என்னவெனில் .... அவர் உங்களை குணமாக்குவாரென விசுவாசிக்கிறீர்களா? (ஒலி நாடாவில் காலியிடம் - ஆசி). உங்களை குணமாக்கிட முடியும். ஏனெனில் குணமாகிட நீங்கள் விரும்புகிறதினால் அல்ல, உங்கள் மகன்தான் விரும்பு கிறான். அவன் விர்ஜீனியாவில் இருக்கிறான். அவனுக்கு என்ன தொந்தரவு உள்ளது என்பதைப்பற்றி என்னால் உங்களுக்கு தேவனுடைய உதவியினால் கூற இயலும் என்பதை விசுவாசிக் கிறீர்களா? அவனுக்கு குடல் புண் நோய் உள்ளது. அது சரிதான். அவனிடத்தில் இன்னொரு கெடுதல் உள்ளது; அவன் இரட்சிக்கப்படவில்லை. அவனுக்காக நீங்கள் ஜெபித்துக் கொண்டு இருக்கிறீர்கள். இப்பொழுதும் திருமதி பேகர் அவர்களே, நீங்கள் சொமர்செட் ஊருக்கு திரும்பிச் செல்லுங்கள், உங்கள் முழு இருதயத்தோடும், இயேசு கிறிஸ்து அவனை குணமாக்குவார் என்பதை விசுவாசியுங்கள்.

மகிழ்கிறேன். அல்லேலூயா அவர்களுள் ஒருவன், அவர்களுள் ஒருவன், நானும் அவர்களுள் ஒருவன் என்று கூறிட எனக்கு சந்தோஷமே.

379. (ஒலி நாடாவில் காலியிடம் - ஆசி). அநேக மக்களை அது வஞ்சிக்கிறது. தெருக்களில் இருக்கிற அநேகம் மக்கள் ஆலயத் திற்கு செல்கின்றனர்; சபைகளைச் சேர்ந்து கொண்டவர்களாய் இருக்கின்றனர், ஆதியில் ஏவாள் வஞ்சிக்கப்பட்டதைப்போலவே அவர்களும் வஞ்சிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு அவ்வாறு நேரிட்டுள்ளதைப் பற்றி அவர்களுக்கே தெரியவில்லை.

380. ஓ, வந்து ஜீவ விருட்சத்தினை எடுத்துக்கொள்ளுங்கள்; கேருபீன்களை எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக.. கேருபீன்கள் என்று சொல்வதற்குப் பதிலாக வேறு ஒன்றைக் கூற நான் விரும்பினேன். இக்கேருபீன்கள் இச்சிங்காசனத்தை காவல் புரிந்துவருகின்றன. அவைகள் இங்கே வெளியே நின்று சிங்காசனத்தை காவல் புரிந்து மக்களை விரட்டிவிடுவதற்கு பதிலாக, அவர்களை நாடி வாசல் வழியாக மீண்டும் ஜீவவிருட்சத்தினிடத்திற்கு கொண்டுவர முயற்சிக்கின்றது. அதன் மூலமாக மக்கள் ஜீவவிருட்சத்தை எடுத்துக்கொள்ள வேண்டு மென்பதற்காக. இயேசு கூறினார்: ''வானத்திலிருந்து தேவனிடமிருந்து வந்த ஜீவ அப்பம் நானே. என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவேன்''. ஓ நான் மிகவும் மகிழ்ச்சி யாயிருக்கிறேன்.

381. வியாதிப்பட்டவர்கள் எத்தனை பேர்கள் இவ்வறையில் உள்ளனர்? நாங்கள் உங்கள் கரங்களை காணட்டும், உங்கள் கரத்தை உயர்த்திக் காட்டுங்கள். எத்தனை பேரிடம் ஜெப அட்டைகள் உள்ளன? பில்லி அட்டைகள் கொடுத்தானா? பில்லி எங்கேயிருக் கிறான்? அவன் ஜெப அட்டைகளைக் கொடுத்தானா? (ஒலி நாடாவில் காலியிடம் - ஆசி.) யாரிடம் உள்ளது? (ஒலி நாடாவில் காலியிடம் - ஆசி.)

382. இப்பொழுது இதை இவ்விதமாகப் பாருங்கள். மகிமைக்கு கீழாக வருகையில் இருக்கிற வண்ணமாக அது உள்ளது. அவர்கள் எடுத்துக்கொண்டனர்..... அது இங்கேயிருக்கிற ஒளியாகும். நீங்கள் இங்கே முன்னேறிச் செல்லுகிறீர்கள். இப்பொழுது பாருங்கள். அது அங்கே நீங்கள் பார்க்கிற ஒளியின் பிரதிபலிப்பேயாகும். அது ஒளியல்ல. இங்கேதான் ஒளியானது தொங்கிக்கொண்டிருக்கிறது. இதோ இந்த பெண்மணியின்மேல் அது உள்ளது. நான் அதைக்



35. இப்பொழுது நீங்கள் எனக்கு ஒரு சாதகம் செய்ய வேண்டுகிறேன். என்னுடைய நிலையை நீங்கள் பார்க்கிறீர்கள், ஒரு நாளில் எனக்கு அது எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தப் போகிறது என்பதை நீங்கள் காண்கிறீர்கள், நேரமானது சமீபித்து விட்டது பாருங்கள்? இப்பொழுது இதை நீங்கள் செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன். அதாவது நீங்கள் எனக்காக எப்பொழுதும் ஜெபியுங்கள். நான் எவ்வளவு உத்தமமாயிருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு உத்தமமாய் இருந்திருக்கிறேன் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நான் இன்னும் சிறு பிள்ளை இல்லை. நான் ஐம்பத்து ஒன்று வயதுடையவனாக இருக்கிறேன். தேவன் என்னை அழைத்தால் ஒழிய நானாக போக முடியாது. நான் எந்த விதமாகப் போக வேண்டுமென்று அவர் விரும்புகிறாரோ அந்த வழியாகத் தான் நான் போவேன், பாருங்கள்? அவ்விதமாகத்தான் அது இருக் கும். ஆனால் என்னவானாலும், நான் உத்தமமாயிருந்து சத்தியத்தை உங்களுக்கு சொல்லியாக வேண்டும். எனவே, சில சமயங்களில் அது ஒரு தனிமையான நடைப் பயணமாக இருக்கிறது என்பதை அறிவேன். ஆனால் அவர் என்னோடு இருக்கிற வரையிலும், அது என்ன வித்தியாசத்தை உண்டாக்கிவிடப்போகிறது?

36. இந்த மகத்தான சபைக் காலத்திற்குள் நாம் பிரவேசிக்கும் முன்னர், சற்று நேரம் மீண்டும் நாம் ஜெபத்திற்காக எழுந்து நிற்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன். பாருங்கள்? அவ்வாறு எழுந்து நின்று சற்று நீட்டிக் கொள்வதினால், சௌகரியமாக இருக்கும். ஆராதனையின் முடிவில்... எத்தனை பேர்கள் தேவனுக்கு முன்பாக ஜெபத்தில் நினைத்துக் கொள்ளப்பட வேண்டுமென விரும்புகிறீர்கள்? அப்படி விரும்புகிறவர்கள், 'ஓ கர்த்தாவே, காலத்தின் முடிவில் உள்ள என்னை நினைந்தருளும், எல்லா ஜீவனும் முடிவுறுகிறபொழுது, அப்பொழுது என்னை நினைத்தருளும்" என்று தேவனை நோக்கி கரங்களை உயர்த்தி வேண்டிக் கொள்ளுங்கள்.

37. எங்கள் பரம பிதாவே, கடந்த வார முழுவதிலும், எங்கள் மத்தியில் நிலவியிருந்த ஜீவனுள்ள தேவனின் பிரசன்னத்திற் காகவும், உம்மிடத்திலிருந்து நாங்கள் கற்றுக்கொண்டவைகளுக் காகவும், காலங்கள்தோறும் எவ்வாறு உம்மையே எங்களுக்கு வெளிப்படுத்தினீர் என்பதற்காகவும், உம்முடைய வார்த்தையை எவ்வளவாய் நீர் எங்களுக்கு தெளிவாக்கிக் கொடுத்தீர் என்பதற்காகவும் நாங்கள் உமக்கு எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள் வதற்கு எங்களுக்கு நாவுகள் போதாது. நாங்கள் எவ்வளவாய் உமக்காக காத்திருந்தோம் என்பதையும், எங்களின் அன்பை நாங்கள் எவ்வாறு தெரிவிக்க முயற்சித்தோம் என்பதையும்அதைச் சரியாகச்

செய்ய எங்களால் இயலாமற் போயிற்று - அழிவுக்கேதுவான நாவுகளால் அதைச் செய்யமுடியாது. எங்களை நீர் இரட்சித்ததற்காகவும், உமக்கென்று ஒரு பசியை எங்களில் தந்ததற்காகவும் நன்றி செலுத்துகிறோம். "நீதியின் மேல் பசியுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்று வேதத்தில் எழுதப்பட்டுள்ளது. நீதியின் மேல் பசியாயிருப்பதே ஒரு ஆசீர்வாதமான காரியமாகும். அதன்பிறகு நீர் அந்த பெரிய வார்த்தையை உரைத்தீர்: "அவர்கள் திருப்தியடைவார்கள்." இப்பொழுது கர்த்தாவே, நாங்கள் அதை விசுவாசிக்கிறோம். எங்களுடைய குறைகளை எங்களுக்கு மன்னியும்.

38. லவோதிக்கேயா என்ற பெயருள்ள இந்தக் கடைசி சபைக் காலத்திற்குரிய செய்திக்குள் நாங்கள் பிரவேசிக்கையில், வேத வாக்கியங்களையும், வரலாற்றையும் நாங்கள் பார்க்கையில், அது மிகவும் சரியாக இசைவாக இருக்கிறது. எனவே பிதாவே, இக்கடைசி காலத்தைக் குறித்து உம்முடைய தீர்க்கதரிசன வார்த்தைகளில் உள்ளதை நாங்கள் அறிவோம். அது ஏனைய ஆறு காலங் களைப் போலவே இருக்குமென்பது தான் அது. பிதாவே, இன்றிரவில் இப்பொழுது, பரிசுத்த ஆவியானவர் எங்களிடமாய் வந்திட அனுமதித்து, நாங்கள் மேற்கொண்டு உமக்காக காத்திருக்கையில், ஆசீர்வதிக்கச் செய்வீர் என்று வேண்டுகிறேன். இயேசுவின் நாமத்தில் கேட்கிறேன். ஆமென். நீங்கள் அமரலாம்.

39. கர்த்தருக்கு சித்தமானால், இச்செய்திப் புஸ்தகமானது நம்மால் முடிந்த அளவு விரைவாக... சகோதரன் லியோ இந்த ஒலிநாடாவிலிருந்து, சுருக்கெழுத்தில் அவைகளை எழுதிக் கொண்டிருக்கிறார், அதிலிருந்து தட்டச்சு செய்ய அதுபோகும், பிறகு புஸ்தக வடிவில் அது கிடைக்கும்.

40. அப்படியே, ரோசெல்லா தனது புத்தகத்தை ஆயத்தப் படுத்திவிடுவாள். "ஒரு குடிகாரி இரட்சிக்கப்பட்டாள்" என்பது தான் அப்புஸ்தகத்தின் தலைப்பு. அவளுடைய கதையை நீங்கள் யாவரும் அறிவீர்கள். மேலும், பரிசுத்த ஆவியானவர் அவளை ஒரு கூட்டத்தில் எவ்வாறு அழைத்தார் என்பதையும் அறிவீர்கள். மதுப் பழக்கத்திற்கு அடிமையானவர்களை திருத்தும் நான்கு பெரிய நிறுவனங்களும், சிக்காகோவில் உள்ள மருத்துவமனைகளும் அவளை மீட்க முடியாது என்று கைவிட்டுவிட்டார்கள். கர்த்தராகிய இயேசுவோ, ஒரே க்ஷணத்தில், அவளைவிட்டு அவை யாவற் றையும் அகற்றிப்போட்டுவிட்டார். அவள் சிறைச்சாலையிலிருந்து மற்றும் ஏனைய இடங்களுக்கும் சென்று, எவ்வாறு தேவன் மதுப் பழக்கத்திற்கு



வந்தது அன்று அவர் அவர்களுக்கு என்ன செய்தாரோ, அதையே உமக்கும் செய்வார் இன்றும், நானும் அவர்களுள் ஒருவன் என்று கூறிட நான்

மகிழ்கிறேன்.

378. நான் அதைப் பாடுவேனாக :

அவர்கள் யாவரும் மேல் வீட்டறையில் கூடி அவர் நாமத்தினால் ஜெபித்தனர் பரிசுத்த ஆவியால் அபிஷேகிக்கப்பட்டனர் அவர் பணிக்கென அதிகாரம் பெற்றனர்

(இன்றைக்கு நமக்கும் அதுவே தேவை) அன்று அவர்களுக்கு செய்ததையே இன்று உனக்கும் செய்திடுவார் நானும் அவர்களுள் ஒருவன் என்று கூறிட சந்தோஷமே.

இவர்கள் கல்லாதவராயிருப்பினும்

(பேதுரு, யாக்கோபு, யோவான் இவர்களைப் போல்) இவ்வுலக கீர்த்தியும் அவர்களுக்கு இல்லை ஆனால் அவர்கள் இயேசுவின் நாமத்தினால்

அபிஷேகிக்கப்பட்டு, தங்களுடைய பெந்தெகொஸ்தே ஆசியைப்

பெற்றனர் அவர் வல்லமை இன்றும் மாறாதது என்று எவ்விடத்திலும் அவர்கள் கூறி வருகின்றனர்

(அன்று இருந்தது போலவே அப்படியே உள்ளது) நானும் அவர்களுள் ஒருவன் என்று கூறிட

சந்தோஷமே நானும் அவர்களுள் ஒருவன், நானும் அவர்களுள்

ஒருவன், நானும் அவர்களுள் ஒருவன் என்று கூறிட

சந்தோஷமே அவர்களுள் ஒருவன், அவர்களுள் ஒருவன், நான் மிகவும் மகிழ்கிறேன் நானும் அவர்களுள் ஒருவன் அவர்களுள் ஒருவன், நான் மிகவும் மகிழ்கிறேன் நானும் அவர்களுள் ஒருவன் என்று கூறிடவே, ஓ சகோதரரே, வாரீர், இவ்வாசியை தேடுவீர், அது உமது இருதயத்தை பாவத்தை நீக்கி கழுவிடுமே, மகிழ்ச்சியின் மணியோசை நீர் கேட்கச் செய்திடுமே உமது ஆத்துமாவை அக்கினிப் பிழம்பாக்குமே, ஓ அது இப்பொழுது என் இதயத்தில் கொழுந்துவிட்டு எரிகிறதே நானும் அவர்களுள் ஒருவன் என்று கூறிட மிகவும்

வழியாக..... யோனாவின் அடையாளம். "யோனா மீனின் வயிற்றில் மூன்று இரவும் பகலும் இருந்தான். அதேவிதமாக மனுஷகுமாரனும் பூமியின் வயிற்றில் மூன்று நான் இரவும் பகலும் இருக்கவேண்டும்". அது என்ன? அதுவே உயிர்த்தெழுதலின் அடையாளமாகும். பொல்லாத விபச்சார சந்ததியின் மத்தியில் உயிர்த்தெழுதலின் அடையாள மானது நிகழ்த்தப்படும், அது அப்போஸ்தல நடபடிகளின் புத்தகத்தில் நடந்தது. இயேசுவானவர் மரித்தோலிருந்து உயிரோடு எழும்பி பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோரிடமும் ஏனைய அப்போஸ்தலர் களிடமும் வந்தார். அவர்களே இந்த நடபடிகளின் புத்தகத்தை நிகழ்த்தினார்கள் (அது அப்போஸ்தலர்களின் நடபடிகள் அல்ல). அதுதானே பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களில் செய்வித்த நடபடிகளாகும்.

376. இன்றைக்கும் அது ஒரு மனிதன் அல்ல. அது பரிசுத்த ஆவியானவர் மனிதன் அல்லது மனிதர்கள் மூலம் செய்யும் கிரியையாகும். அது மனிதன் அல்ல. மனிதன் வெறும் ஒரு பாத்திரம் மாத்திரமே. ஆனால் பரிசுத்த ஆவியானவரோ அப்பாத் திரத்தில் இருக்கும் எண்ணெயாக இருக்கிறார். பாருங்கள்?

377. அவர்கள் என்ன செய்தனர் என்பதைப் பாருங்கள்; இயேசு வினாலே அவர்கள் செய்த அடையாளங்களைப் பாருங்கள். பேதுருவும் யோவானும் படிப்பறியாதவர்களும் பேதமையுள்ள வர்களுமாய் இருந்தனர். ஆனால் அவர்கள் இயேசுவோடிருந்த வர்கள் என்று மற்றவர்கள் அறியத்தக்கதாக, இயேசு செய்த கிரியைகளை தாங்களும் செய்தனர். ஆகவே வேதாகமத்தில் உள்ள இந்நான்கு புத்தகங்களும், இந்நான்கு சுவிசேஷப் புத்தகங்களும், பெந்தெகொஸ்தே ஆசீர்வாதங்களை அவர்கள் என்ன கூறினார் களோ, அவற்றை அப்படியே ஆதரித்து நிற்கத்தக்கதாக, அதை காத்து நின்றனர். எனவே இப்பொழுது, இன்றைக்கு, அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகமானது நான்கு சுவிசேஷப் புத்தகங்களோடு சேர்ந்து, இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்தி நிரூபிக்கத்தக்கதாக இருக்கிறது. நீங்கள் அவரை நேசிக்கிறீர்களா?

அவர்கள் மேல்வீட்டறையில் கூடிவந்து அவர் நாமத்தில் ஜெபித்தனர். பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டனர், அவர் பணி செய்திட வல்லமை அவர்கள் மேல்



அடிமையானவர்களை விடுவிக்க முடியும் என்பதைப் பற்றி சாட்சி கூறிக்கொண்டிருக்கிறாள். அவளுடைய சாட்சியினால், அநேகர் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்தப்பட்டிருக்கிறனர்.

41. முதலாம் சபைக்காலம் அது என்னவென்று நீங்கள் கூறக் கூடுமா? அது எபேசு. இரண்டாவது? சிமிர்னா, மூன்றாவது? பெர்கமு. நான்காவது? தியத்தீரா. ஐந்தாவது? சர்தை. ஆறாவது? பிலதெல்பியா. ஏழாவது: லவோதிக்கேயா

42. முதலாம் சபைக் காலமானது கி.பி.55ம் ஆண்டு முதல் 170 முடிய இருந்தது. அது எபேசுவாகும். சிமிர்னா கி.பி.170 முதல் கி.பி.312 முடிய. பெர்கமு கி.பி.312 முதல் 606 முடிய. தியத்தீரா 606 முதல் கி.பி. 1520 முடிய சர்தை 1520 முதல் 1750 முடிய. பிலதெல்பியா 1750 முதல் 1906 முடிய அப்பொழுதுதானே, லவோதிக்கேயாவின் காலம் ஆரம்பித்தது. ஆறாம் சபைக் காலமானது ஏழாம் சபைக் காலத்திற்குள் நீண்டு போயிருந்தது. நேற்று இரவில் நாம் அந்த காலத்தைக் குறித்துத்தான் பார்த்தோம். இப்பொழுது, இன்றிரவில், நாம் லவோதிக்கேயா சபைக் காலமாகிய முடிவுக் காலத்தைக் குறித்து காண்போம்.

43. கி.பி. 1906 லவோதிக்கேயா சபைக் காலமானது ஆரம்பித்தது என்று நாம் விசுவாசிக்கிறோம். நான் முன்னுரைக்கிறேன். இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள் ஒலிநாடாவில் செய்தி யைக் கேட்கிறவர்களே! முன்னுரைக்கிறேன் என்ற வார்த்தையைக் கவனியுங்கள். அவ்வாறு நிச்சயம் நடக்கும் என்று நான் உரைக்கவில்லை; 1977 வாக்கில் அது முடியும் என்று நான் அனுமானித்து முன்னுரைக் கிறேன். 'ப்ரெடிக்ட்' (Predict) அப்பொழுது சபையானது முற்றிலும் விசுவாசத்துரோகத்திற்குள் போய் விடும். தேவனுடைய வாயினின்றும் அவள் வாந்தி பண்ணிப் போடப்பட்டிருப்பாள் என்றும் முன்னுரைக்கிறேன். கிறிஸ்துவின் இரண்டாம் வருகை அல்லது எடுத்துக் கொள்ளப்படுதல் எந்த வேளையிலும் வரலாம். அவ்விஷயத்தில் நான் ஒரு ஆண்டு தவறவிட்டிருக்கக்கூடும். அல்லது ஒரு வேளை இருபதாண்டுகள் தவறவிட்டிருப்பேன் அல்லது நான் அது நடப்பதைப் பற்றி நூறு ஆண்டுகள் கணக்குத் தவறுதலாக சொல்லிவிடக்கூடும். அது எங்கே எப்பொழுது நடக்கும் என்பதை நான் அறியேன். அவர் எனக்குக் காண்பித்த ஒரு தரிசனத்தின் அடிப்படையிலும், காலமானது முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறதின் அடிப்படையிலும், அது 33 க்கும் 77க்கும் இடையில் இருக்கலாம் என்று அனுமானத்தின் பேரில் முன்னுரைக்கிறேன். இந்த மகத்தான தேசமானது, ஒரு யுத்தத் திற்குச்

சென்று அதினால் அது தூள் தூளாக நொறுக்கிவிடும். அது மிகவும் சமீபமாக இருக்கிறது பயங்கரமான விதமாக சமீபமாயிருக்கிறது. நான் அனுமானத்தின் பேரில் தான் முன்னுரைக் கிறேன். எனவே நான் தவறாக இருக்கக்கூடும். புரிந்து கொண்டுள்ள ஒவ்வொருவரும் "ஆமென்'' என்று கூறுங்கள். (சபையார் "ஆமென்'' என்று கூறுகிறார்கள் - ஆசி). பாருங்கள்.

44. ஆனால் கர்த்தர் 1933 ஆண்டில், பெரிய வல்லமை படைத்தை ஒரு ஸ்திரீயைக் குறித்து எனக்கு தரிசனத்தில் காண்பித்தார். அது எழுதி வைக்கப்பட்டுள்ளது. எவ்வாறு ரூஸ்வெல்ட் உலகம் யுத்தத்திற்கு செல்லும்படி செய்துவிடுவார் என்பதைப் பற்றியும் சொல்லப்பட்டது. எவ்வாறு முஸோலினி எத்தியோப்பியா தேசத்தின் மேல் தனது முதலாவது படையெடுப்பை எடுப்பான் என்பதும் அத்தேசத்தை அவன் கைப்பற்றுவான் என்பதும், ஆனால் அவன் அவமானகரமான முடிவை எய்துவான் என்பதும் தரிசனத்தில் காண்பிக்கப்பட்டது. அதன் பிறகு, எவ்வாறு நாஜிக்கொள்கை, பாசிசக் கொள்கை, கம்யூனிசக் கொள்கை என்ற மூன்று விதமான 'இஸம்கள் தோன்றும் என்பதும், இவையெல்லாம் கம்யூனிசத்தில் போய் முடிவடையும் என்பதும் காண்பிக்கப்பட்டது. அக்காலத் தில் எத்தனைபேர்கள் நான் பின்வரும் காரியத்தை நீங்கள் நின்று கொண்டு சப்தமாகக் கூறும்படி செய்ததை நினைவில் வைத்திருக்கிறீர்கள்? "ருஷ்யாவைக் கவனி, வடதிசை இராஜாவாகிய ருஷ்யாவைக் கவனி, வடதிசை இராஜாவாகிய ருஷ்யாவைக் கவனி, வட திசை இராஜாவாகிய ருஷ்யாவைக் கவனி'' என்று மீண்டும் மீண்டும் உங்களை கூற வைத்தேன். எத்தனை பேர்கள் நான் இவ்வாக்கியங்களை கைகளை அசைத்து மீண்டும் மீண்டும் திரும்பத் திரும்ப கூறியதைக் கேட்டிருந்தீர்கள். முன் காலத்தவர்கள், சபையின் ஆரம்பக் காலத்தில் இருந்தவர்கள், அதை அறிவார்கள். அவன் என்ன செய்வான் என்பதும், எல்லா 'இஸம்களும்' முடிந்து ருஷ்யாவில் போய் குவிந்துவிடும் என்று உரைக்கப்பட்டது.

45. "இந்த தேசம் ஜெர்மனியோடு யுத்தத்திற்குச் செல்லும்'' என்று பிறகு நான் கூறினேன். ''ஜெர்மனியானது அதன் எல்லையில் காங்க்ரீட் மதிலினால் அரணாக்கப்படும்'' என்றும் கூறினேன். அதுதான் மேகினோட் லைன் என்ற சுவராகும் அது கட்டப் படுவதற்கு பதினொன்று ஆண்டுகளுக்கு முன்பே முன்னுரைக்கப் பட்டது. ''அமெரிக்கர்கள் அந்த சுவரண்டை மிக மோசமான தோற் கடிப்பை அடைவார்கள்'' என்றும் கூறினேன். இங்கேயுள்ள சில சகோதரர்கள் அங்கே அந்த காங்க்ரீட் சுவரண்டை இருந்திருக்கிறார்கள். சகோதரன் ராய் ராபர்சன் அவர்களும் மற்றும் ஏனையோரும் தான் அங்கே



373. இன்னும் ஒரு வசனம், அதன்பிறகு முடிப்போம். லூக்கா 11:29-31. இதற்குப் பிறகு முடித்துவிடுவோம். ஓ நான் இதை நேசிக்கிறேன்.

"ஜனங்கள் திரளாய்க் கூடி வந்திருகிறபொழுது..."

374. அது லூக்கா 11:29 என்பது சரிதானே? அதைப்பற்றிப் பார்ப் போம். ஆம். இதுதான் உரிய வசனம் என்று நான் கருதுகிறேன்.

''ஜனங்கள் திரளாய்க் கூடி வந்திருக்கிறபொழுது அவர்: இந்தச் சந்ததியார் பொல்லாதவர்களாயிருக்கிறார்கள், அடையாளத்தைத் தேடுகிறார்கள்; ஆனாலும் யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை.

யோனா நினிவே பட்டணத்தாருக்கு அடையாளமாயிருந்தது போல மனுஷகுமாரனும் இந்தச் சந்ததிக்கு அடையாள மாயிருப்பார்.

தென்தேசத்து ராஜஸ்திரீ சாலொமோனுடைய ஞானத்தைக் கேட்கப் பூமியின் எல்லைகளிலிருந்து வந்தாள்; இதோ, சாலொமோனிலும் பெரியவர் இங்கே இருக்கிறார்; ஆதலால் நியாயத் தீர்ப்பு நாளிலே அந்த ராஜஸ்திரீ இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று, இவர்கள் மேல் குற்றஞ்சுமத்துவாள்.

யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள்; இதோ. யோனாவிலும் பெரியவர் இங்கே இருக்கிறார்; ஆதலால் நியாயத்தீர்ப்பு நாளிலே நினிவே பட்டணத்தார் இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று, இவர்கள் மேல் குற்றஞ்சுமத்துவார்கள்."

லூக். 11:29-32

375. இப்பொழுது நான் என்ன கூறுகிறேன்? முடிக்கிற வேளையில், மீதமுள்ளவைகளை நான் பேசாமல் விட்டுவிட வேண்டியதாயிருக்கிறது. ஆனால், முடிவாக, நான் இதைக் கூறவிரும்புகிறேன், நான் உங்களை ஏற்கனவே நீண்ட நேரம் காக்க வைத்துவிட்டேன். அவர் இங்கே என்ன கூறுகிறார்? "ஒருநாள் வரும், அப்பொழுது பொல்லாததும், விபச்சாரமுமான ஒரு சந்ததியானது ஒரு அடையாளத்தைத் தேடும்''. (இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள்). இதுதானே பொல்லாத, விபச்சார சந்ததியார் ஆவர். 'அந்த சந்ததியார் ஒரு அடையாளத்தைப் பெறுவார்கள்.'' என்று அவர் கூறினார். என்னவிதமான அடையாளம்? வேதாகமத்தில் ஏனைய பகுதியின்

தங்கிவிடுவேன். அப்படிப்பட்ட நிலையில்தான் நான் சமாதானத் தைக் காண்கிறேன். வீட்டுக்கு வீடு போகாதிருங்கள்.

"ஒரு பட்டணத்தில் நீங்கள் பிரவேசிக்கிறபொழுது, ஜனங்கள் உங்களை ஏற்றுக்கொண்டால் அவர்கள் உங்கள் முன் வைக்கிறவைகளை நீங்கள் புசித்து, அவ்விடத்திலுள்ள பிணியாளிகளைச் சொஸ்தமாக்கி: தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குச் சமீபமாய் வந்திருக்கிறது என்று அவர்களுக்குச் சொல்லுங்கள்".

லூக். 10:8-9

371. அடுத்துள்ள வசனங்களை நான் வாசிப்பேனாக.

யாதொரு பட்டணத்தில் நீங்கள் பிரவேசிக்கிறபொழுது, ஜனங்கள் உங்களை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அதின் வீதிகளிலே நீங்கள் போய்:

எங்களில் ஒட்டின் உங்கள் பட்டணத்தின் தூசியையும் உங்க ளுக்கு விரோதமாய்த் துடைத்துப்போடுகிறோம்; ஆயினும் தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குச் சமீபமாய் வந்திருக்கிற தென்பதை அறிந்துகொள்வீர்களாக என்று சொல்லுங்கள்.

அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப் பார்க்கிலும் அந்த நாளிலே சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்."

லூக். 10:10-12

372. ஓ, சகோதரனே! அந்த ஆசீர்வதிக்கப்பட்ட வாக்குறுதி. அவர்கள் உங்களை ஏற்றுக்கொள்ளாவிடில், நீங்கள் அவர்களிடம், "நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளாவிடில், என் பாதரட்சைகளில் ஒட்டியுள்ள தூசியை நான் உதறிவிடுகிறேன், நான் வெளியேறு கிறேன்'' என்று கூறுங்கள். அதாவது, "நான் உங்களிடமிருந்து ஒன்றும் எடுத்துக்கொள்ளவில்லை, நான் ஏதாவது புசித்தால் அதற்குரிய பணத்தைச் செலுத்தி விடுவேன்'' என்று கூறிவிட்டுச் செல்லுங்கள். ''மெய்யாகவே'' என்று ஆண்டவர் கூறினார். அவர்கள் சென்ற நகரங்கள் ஒவ்வொன்றிலும் அவர்களை ஏற்றுக் கொள்ளாததால், இன்றைக்கு அந்நகரங்கள் மூழ்கிப்போய் விட்டன. அவர்களை ஏற்றுக்கொண்ட நகரங்கள் ஒவ்வொன்றும் இன்றும் நிலைத்து நிற்கின்றன.



இருந்தார்கள். என்ன நடைபெற்றது என்பதை அவர்களிடம் கேட்டறிந்து கொள்ளுங்கள். அவ்வாறு தான் அமெரிக்கர்களுக்கும் நடந்தது. ஆனால் முடிவாக நாம் ஜெயிப்போம், நமக்கும் ஜெர்மனிக்கும் இடையே நடைபெறும் யுத்தத்தில் ஜெயிப்பதில் நாமும் ஒருவராக இருப்போம்'' என்று கூறினேன்.

46. 'அந்தக் காலத்திற்கு பின்னர் விஞ்ஞானமானது மிகவும் முன்னேறிப்போய்விடும்'' என்று உரைத்தேன். அவ்வாறே அது நடந்தது, அவர்கள் அணுகுண்டையும் இன்னபிறவற்றையும் செய்தார்கள். அவர்களுடைய முன்னேற்றத்தின் கட்டத்தில் அவர்கள் முட்டை வடிவ மோட்டார் வாகனங்களைச் செய்வார்கள்'' என்று உரைத்தேன். 1933இல் இருந்து அந்த பழைய காலத்து பெரிய மோட்டார் வாகனம், மடக்கிக் கொள்ளும் வசதி யோடு துணியினால் மேல் மூடி உள்ளதாக இருந்தது. அதை நீங்கள் நினைவில் வைத்திருக்கிறீர்களா? அதன் பெரிய பின்பகுதியை கீழே இழுத்துக் கொள்ளலாம். பின்னால் உபரி டயர் வைக்கப்பட்டிருக்கும். இப்பொழுது உள்ள வாகனங்களைப் பாருங்கள். அவைகள் ஒரு முட்டை வடிவத்தில் இப்பொழுது வடிவமைக் கப்பட்டுள்ளன. இறுதியாக அவர்கள் ஒரு மோட்டார் வாகனத்தைக் கண்டு பிடிப்பார்கள், அதற்கு ஸ்டியரிங் வீலும் இருக்காது. ஒரு குடும்பத்தினர் கண்ணாடியினாலான மேல் மூடியையுடைய தான அந்த அருமையான மோட்டார் வாகனத்தில் ஒரு பெரிய அழகாக காட்சியளிக்கும் சாலைகளில் பயணம் செய்து கொண்டிருப் பதைப் பார்த்தேன். அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்த பொழுது அவ்வாகனமானது யாராலும் ஓட்டிச் செல்லப்படாமல், தானாகவே இயங்கி அது சாலைகளின் வளைவுகளிலும் மற்றும் எவ்விடங்களிலும் சென்று கொண்டிருந்தது'' என்று நான் கூறினேன். இப்பொழுது அவர்கள் அந்த மோட்டார் வாகனத்தை செய்திருக்கிறார்கள். ஏற்கெனவே அதைக் கண்டு பிடித்துவிட்டார்கள். அவர்களிடம் இப்பொழுது அவ்வா கனம் இருக்கிறது. விஞ்ஞானமானது அந்நாளில் முன்னேறி விடும்'' என்று நான் அப்பொழுது கூறினேன்.

47. நான் மேலும் கூறினேன்: 'அவர்கள் பெண்களுக்கு வாக்குரிமையை வழங்கிடுவதை நான் பார்த்தேன்'' என்றேன். அவ்வாறே அவர்கள் பெண்கள் வாக்களிப்பதற்கும் அனுமதித்தும் விட்டார்கள். ''அவ்வாறு வாக்களிப்பதின் மூலம் அவர்கள் இந்நாட்களில் ஒன்றில் தவறான மனிதனை தேர்ந்தெடுப்பார்கள்'' என்று கூறினேன். கடந்த தேர்தலில் நீங்கள் அதைச் செய்திருக்கிறீர்கள். பெண்களின் வாக்குகள்தான் கென்னடியைத் தேர்ந் தெடுத்தது. நாம் அறிவோம். அங்கே அவர்கள்

ஆதயத்தப்படுத்தியிருந்த சூழ்ச்சியான இயந்திரங்கள், மற்றும் சில காரியங்களுக்கும் நடுவில் சில ஏற்பாடுகள் மூலமாக அதை சாதித்தார்கள். பெடரல் பீரோ ஆப் இன்வெஸ்டிகேஷன் அதை கண்டுபிடித்து அம்பலப் படுத்தியது. ஏன் அதைக் குறித்து ஏதும் செய்யமாட்டேனென்கிறார்கள்? ஏன் அதைக் குறித்து ஒன்றும் சொல்லமாட்டேனென்கிறார்கள்? தங்கள் வேலையை இழந்து விடுவோமா என்று அச்சத்தினால்தான். முழுவதும் அழுகிப்போன அரசியலின் கூட்டம் அது. அவ்வளவு தான் அது நிச்சயமாக!

48. தயவு செய்து இதைக் கூறுவதற்கு மன்னித்துக் கொள்ளுங்கள். இத்தேசத்திற்கு இரட்சிப்பே இல்லை. எந்த தேசத்திற்கும் இரட்சிப்பே இல்லை. இரட்சிப்பு இயேசு கிறிஸ்துவில் மட்டுமே உள்ளது. அவரில் மட்டும் உள்ளது. அது சரிதான்; நான் அமெரிக்காவுக்காக நன்றியுள்ளவனாயிருக்கிறேன்; உலகின் வேறு எந்த நாட்டில் வாழ்வதைவிட இத்தேசத்தில் வாழ்வதையே நான் விரும்புகிறேன். ஏனெனில், கனடாவிற்கு வெளியே... கனடாவும், அமெரிக்காவும் இரட்டையர்கள். நாம் அதை அறிவோம், இரு வரும் அண்டை நாடுகள், அற்புதமான நாடு இது. வேறு எங்கும் வாழ்வதை விட இங்கு தான் நான் வாழ விரும்புகிறேன். ஏனெனில் இது எனது தாய் நாடு. நான் ஒரு அமெரிக்கனாயிருப் பதற்காக மகிழ்ச்சியுள்ளவனாயிருக்கிறேன். அதற்காக நான் நன்றியுள்ளவனாயிருக்கிறேன். ஆனால் நான் உங்களுக்கு கூறுவ தென்னவெனில், இத்தேசமானது அதற்கு சமமான எழுப்புதலை அவசியம் பெற்று இருக்கவேண்டும். ஆனால் அது அதைப் பெற்றுக் கொள்ளாது. இல்லை, ஐயா, அவள் மீண்டும் எழும்பப் போகிறதில்லை. இல்லை அவள் முடிந்து போய்விட்டாள். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக சிக்காகோவில் நான் கூறியது உங்களுக்கு நினைவிலிருக்கும். அது ஒலிநாடாவில் பதிவு செய்யப் பட்டுள்ளது. ஜீன், உன்னிடத்தில் அது இருக்கிறது. “ஒன்று இந்த ஆண்டில் அவர்கள் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும், தவறினால், அவர்கள் தொடர்ந்து அதை புறக்கணித்தே விடுவார்கள்'' என்று நான் கூறினேன். அதைத் தான் அவர்கள் செய்து இருக்கிறார்கள். பாருங் கள் அவள் தன்னுடைய முடிவை எய்துகிற வரையிலும் அதையே தான் அவர்கள் செய்வார்கள்.

49. ஆனால் வல்லமை வாய்ந்த ஒரு ஸ்திரீ தோன்றுவாள். இப்பொழுது நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். இது ஒலிநாடாவிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒரு வல்லமை பொருந்திய ஸ்திரீ வருவாள், அவள் ஒரு வேளை ஜனாதிபதியாக இருக்கக் கூடும். அல்லது கத்தோலிக்க சபைக்கு எடுத்துக் காட்டாக அவள். இருக்கக் கூடும், அப்படியிருக்கும் என்று நான் கருதுகிறேன்; அவள் ஒரு நாளில் இந்நாட்டை தன்



புறப்பட்டுப்போங்கள்; ஆட்டுக்குட்டிகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறது போல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன்.

பணப்பையையும் சாமான் பையையும் பாதரட்சைகளையும் கொண்டுபோக வேண்டாம்; (பாருங்கள், எந்தவொரு ஸ்தாபனத்தின் பெயராலும் நீங்கள் செல்லவேண்டாம். நான் அனுப்புகிறபடி நீங்கள் செல்லுங்கள். இந்த எழுப்புதலுக்காக உங்களுக்கு நூறாயிரம் டாலர்கள் கொடுக்கப்படும் என்ற வாக்குறுதி அளிக்கப்பட்டால் அதன்பேரில் செல்ல வேண்டாம். கொடுக்கப்படா விடில் நீங்கள் போகமாட்டீர்களே. உங்கள் கூட்டங்களை ஏற்படுத்துங்கள்; அவர் கூறினார், ''நான் உங்களை அனுப்பிடும் இடத்திற்கே செல்லுங்கள்'').

"பணப்பையையும் சாமான் பையையும் பாதரட்சைகளையும் கொண்டு போக வேண்டாம்; வழியிலே ஒருவரையும் வினவவும் வேண்டாம். (வழியில் நின்று, ''நான் போய் அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதைப் பார்ப்பேன். இவர்கள்கூட வருகிறார்கள்.'' என்றெல்லாம் சொல்ல வேண்டாம். நான் அனுப்புகிற இடத்திற்கு போங்கள். யாரைப்பற்றியும் நீங்கள் பொருட்படுத்த வேண்டாம்,'' என்று கூறினார்).

ஒரு வீட்டில் பிரவேசிக்கிறபோது : இந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாவதாக வென்று முதலாவது சொல்லுங்கள்.

சமாதான பாத்திரன் அங்கே இருந்தால், நீங்கள் கூறின சமாதானம் அவனிடத்தில் தங்கும்; இல்லாதிருந்தால் அது உங்களிடத்திற்குத் திரும்பி வரும்.

அந்த வீட்டிலேதானே நீங்கள் தங்கியிருந்து, அவர்கள் கொடுக்கிறவைகளைப் புசித்து, குடியுங்கள்; (இறைச்சி புசிப்பதில்லை என்ற கொள்கையைப் பற்றியெல்லாம் என்ன - கொடுப்பதைப் புசியுங்கள் என்றாரே )

வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான். வீட்டுக்கு வீடு போகாதிருங்கள்.'' (இன்றைக்கு ஜோன்ஸ் வீட்டுக்கும், நாளைக்கு இன்னொரு வீட்டுக்கும், இன்னொரு வீட்டுக்கு அதற்கடுத்த நாளும் விருந்துக்குப் போகுதல் நடக்கிறது. நீங்கள் அங்கேயே தங்கியிருங்கள்)

லூக். 10:3-7

370. அவ்வாறுதான் கூட்டத்திற்குச் செல்லுகையில் செய்வேன். நான் விடுதியில் தங்கிவிடுவேன். கடைசி வரையிலும் அங்கேயே

இவைகள் யாவும் இயேசுவே பேசியவைகளாகும். ஏதோ ஒன்று அல்ல, ஆனால் இயேசு என்ன பேசினாரோ அவைகள்தான் அவை ஒவ்வொன்றும்.

காலையிலே அவர்.... (அவர் பெத்தானியாவுக்கு வந்தார்) திரும்பி வருகையில், அவருக்குப் பசியுண்டாயிற்று. அப்பொழுது வழியருகே ஒரு அத்திமரத்தைக் கண்டு...

மத். 21:18-19

367. மத்தேயு 21ல், அவர் அம்மரத்தை சபிக்கையில் உள்ள சம்பவத்தைக் குறிக்கும் வசனமாகும் இது. மாற்கு 11:21,22.

"பேதுரு நினைவுகூர்ந்து, அவரை நோக்கி: ரபீ, இதோ நீர் சபித்த அத்திரமரம் பட்டுப்போயிற்று என்றான்.

இயேசு அவர்களை நோக்கி: தேவனிடத்தில் விசுவாச முள்ளவர்களா யிருங்கள் (பார்த்தீர்களா?)

எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே (அது அகத்தில் உள்ள விஷயமாகும்) ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்.

மாற். 11:21-23

368. தெற்கு வாசலானது காளையினால் காக்கப்படுகிறது. வடக்கு வாசலானது சிங்கத்தால் காக்கப்படுகிறது. வடக்கு வாசல்... நான் கிழக்கு வாசலைத்தான் சிங்கம் காக்கிறது என்று கூறுகிறேன். வடக்கு வாசல் அல்ல. வடக்கு வாசலானது பறக்கும் கழுகினால் காவல் செய்யப்படுகிறது. யோவான் அந்த சுவிசேஷகன். பிறகு இப்பக்கத்திலுள்ள வைத்தியனாகிய லூக்காதான் அந்த மனிதன்.

369. இப்பொழுது நாம் லூக்கா என்ன சொல்லுகிறான் என்பதைப் பற்றிப் பார்ப்போம். லூக்காவை எடுத்துக்கொள்ளுங்கள். லூக்கா 10:1 முதல் 12. அதுதானே கட்டளையாயிருக்கிறது அது என்ன வென்பதை நீங்கள் யாவரும் அறிவீர்கள். லூக்கா 10ம் அதிகாரம் 1 முதல் 12 முடிய. நாம் அதை எடுத்துக்கொண்டு வாசிக்கலாம். ஆனால் நமக்கோ அதைச் செய்ய நேரம் போதவில்லை. எனவே, நான், 'புறப்பட்டுப் போங்கள்...'' என்று துவங்குகிற 3ம் வசனத்தை எடுத்துக்கொள்ளுகிறேன்.



கையிலெடுத்துக்கொண்டு, இந்த தேசத்தை ஆட்சி செய்வாள். இந்நாடு ஸ்திரீயின் தேசமாக இருக்கிறது. கொடியானது ஒரு ஸ்திரீயினால் உண்டாக்கப்பட்ட தாகும். அதில் பதின்மூன்று நட்சத்திரங்கள் உள்ளன. பதின்மூன்று கோடுகள் கொடியில் உள்ளன. பதிமூன்று காலனிகள் உள்ளன. எல்லாம் பதின்மூன்று, பதின்மூன்று, பதின்மூன்று என்று யாவற்றிலும் அவ்வாறே காணப்படுகிறது. அவளது வெள்ளி டாலர் நாணயத்திலும் பதின்மூன்று நட்சத்திரங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. யாவும் பதின்மூன்று என்றே காணப்படுகிறது. இத்தேசத் தின் என் பதின்மூன்றாகும். அது வெளிப்படுத்தின விசேஷத்தின் பதின்மூன்றாம் அதிகாரத்திலும் காணப்படுகிறது. முற்றிலும் பதின்மூன்று தான் யாவும், "ஸ்திரீ, ஸ்திரீ, ஸ்திரீ, ஸ்திரீ, ஸ்திரீ'' என்றே இருக்கின்றது. அவள் அனைத்து அலுவலகங்களையும் கைப்பற்றியிருக்கிறாள். ஹாலிவுட்டையும் அவள் தன் கையில் எடுத்துக்கொண்டு விட்டாள். தேசத்தையும் மேற்கொண்டு விட்டாள். அலுவலகங்கள் அவளால் மேற்கொள்ளப்பட்டிருக் கின்றன. அங்கிருக்கின்ற யாவற்றையும் தன் அதிகாரத்தில் கொண்டு வந்திருக்கிறாள். மனிதனோடு அவள் சரி சமமான உரிமை களை பெற்றுவிட்டாள், ஆண்களோடு வாக்களிக்கும் உரிமையும் கிடைத்துள்ளது. அவள் மனிதனைப் போலவே சபிக்கிறாள். ஆணைப் போலவே மது அருந்துகிறாள். இன்னும் என்னவெல்லாமோ செய்கிறான். ஒரு ஸ்திரீயை தொழுது கொள்வதற்காக கத்தோலிக்க சபையானது பயன்படுத்தும் ஒரு சரியான வஞ்சகமான கண்ணியாகும். எப்படியாயினும் அவர்கள் ஏற்கெனவே ஒரு ஸ்திரீயைத் தொழுது கொண்டுதானிருக்கிறார்கள்.

50. ஒரு ஒழுக்கக் கேடான பெண்மணியானவள், சாத்தான் வசத்தில் இருக்கும் வேறெந்த ஒன்றைக் காட்டிலும் மிகவும் வலுவான கண்ணியாகும். மது அருந்தும் கடைகளைவிட அவள் மோசமானவள். நாட்டிலுள்ள மது அருந்தும் கடைகளைவிட அவள் அதிகமான ஆத்துமாக்களை நரகத்திற்கு அனுப்பிட முடியும். அது சரிதான்.

51. "குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாள்'' என்று பூமியிலேயே மிகவும் ஞானமுள்ள மனுஷன் கூறினான். ஒரு நல்ல ஸ்திரீயை ஒரு மனிதன் கனம் பண்ணவேண்டும். ஆனால் பொல்லாத ஸ்திரீயோ அவனது இரத்தத்தில் தண்ணீராக இருக்கிறாள். அவனது இரத்தம் என்றால், அவனது ஜீவனையே குறிக்கும். ஒரு மனிதனுக்கு ஏதாவது மிக நல்லதை ஒரு துணைக்குப் பதிலாக கொடுக்கக்கூடியது ஒன்று தேவ னுக்கு இருக்கிறதெனில், அதை அவர் கொடுத்திடுவார். ஆனால் ஒரு ஸ்திரீதான் தேவன் ஒரு மனிதனுக்கு

சிறந்த துணையாகக் கொடுக்க முடியும். ஆனால் அவர்கள் மாறுபடும் பொழுது...

52. ஏதேன் தோட்டத்தில் பெண்ணைத்தான் சாத்தான் தனது கருவியாக இருக்கும்படி தெரிந்துகொண்டான். அவன் மனிதனை எடுக்கவில்லை, ஸ்திரீயையே எடுத்துக் கொண்டான். அவன் ஏன் ஆதாமிடம் போய் அவனுக்கு தனது பாசத்தை காண்பிக்கவில்லை? அவன் ஸ்திரீயினிடத்தில் வந்து அவளிடத்தில் தான் தனது அக்கறையுள்ள பாசத்தைக் காட்டுகிறான், ஏனெனில் அவளைத்தான் அவன் தெரிந்து கொண்டான். தேவன் மனிதனை எடுத்துக் கொண்டார். சாத்தானோ மனுஷியை எடுத்துக்கொண்டான்.

53. முன் நடந்ததையும் முடிவில் நடப்பதையும் பாருங்கள். ஆதியில் பாபிலோனானது ஸ்தாபிக்கப்பட்டபொழுது, ஒரு ஸ்திரீதான் அங்கே இருந்தாள். ஹிஸ்லோப் எழுதிய "இரு பாபிலோன்கள்'' என்ற புத்தகத்தில் பாருங்கள். இப்பொழுது இருக்கிற இந்தக் காலமானது வந்தபொழுது, அது புறஜாதி காலமாக முடிவடைகிறது. பாபிலோன் அவ்வாறு ஆரம்பித்தது, முடிவடையும் பொழுதும், ஸ்திரீ தொழுகையில் (மரியாள் வணக்கம்) தான் முடிவடைகிறது. எப்பேர்ப்பட்ட நாளில் நாம் ஜீவிக்கிறோம்!

54. இப்பொழுது லவோதிக்கேயாவின் காலம், அவ் வார்த்தைக்கு, ''வெது வெதுப்பான'' என்றும் அர்த்தமாம். அது சகல நன்மைகளும் தன்னிடத்தே பெருகப் பெற்றதாகவும் தனக்கு ஒரு குறைவுமில்லையெனவும் அவள் எண்ணுகிறாள். ஆனால் வேதமோ, அவள் நிர்பாக்கியமுள்ளவள், பரிதபிக்கப்படத்தக்கவள், தரித்திரமான நிலையை குருடான, நிர்வாணமான நிலையிலிருப்பதாக'' கூறுகிறது.

55. இந்த சபைக்காலத்தில் ஜெயங்கொள்ளகிறவர்களுக்கு அளிக்கப்படும் பலனானது, “கர்த்தருடைய சிங்காசனத்தில் உட்காருவது'' ஆகும்.

56. இந்த சபைக் காலத்தின் நட்சத்திரம், அல்லது செய்தியாளன் யார் என்பது தெரியவில்லை.

57. இப்பொழுது முதலாம் சபைக்காலத்தின் தூதன் யார்? பவுல் எபேசு. சிமிர்னாவுக்கு யார்? ஐரேனியஸ், பெர்கமுவுக்கு? பரிசுத்த மார்ட்டின் ஆவார்.தியத்தீரா சபைக்கு? அது கொலம்பாவாகும். சர்தைக்கு? லூத்தர். பிலதெல்பியா? வெஸ்லி. இந்த லவோதிக்கேயாவுக்கு, அது யாரென்று இன்னமும் நமக்குத் தெரியாது. அது யார் என்பது



விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: (ஆங்கிலத்தில் விசுவாசிகளைப் பின் தொடரும் அடையாளங்களாவன' என்றுள்ளது) (இவ்வசனம் ஆங்கிலத்தில் "And" என்ற இணையிடைச் சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது. இணையிடைச் சொல் என்பது வார்த்தைகளையும் தொடர்களையும், வாசகங்களையும் ஒன்றுடனொன்று இணைக்கும் சொல் ஆகும் - மொழி பெயர்ப்பாளர்). ("And" என்ற இணையிடைச் சொல்லானது மீதமுள்ள வாக்கியங்களையும் ஒன்றாக இணைக்கிறதாக இருக்கிறது).

மாற். 16:16-17

365. மெதோடிஸ்ட்டுகள் என்ன கூறுகின்றனர் என்பதைப்பற்றி நாம் இப்பொழுது பார்ப்போம். "நீங்கள் சத்தமிட்டு, நல்ல வாழ்க்கையை நடத்தினால் போதும்'' என்கிறார்கள். பாப்டிஸ்ட்டு களோ, "வெறும் விசுவாசத்தை மட்டும் உடையவர்களாயிருந்து, ஞானஸ்நானம் பெற்றால் அதுவே போதுமானது'' என்று கூறு கின்றனர். எபிஸ்கோப்பேலியன்களோ, "எபிஸ்கோப்பேலியன் களைப் போல் நிமிர்ந்து நில்லுங்கள் பாடல் பாடப்படும் போது மட்டும் தலைவணங்குங்கள், அதுவே போதுமானது'' என்று கூறுகின்றனர். கத்தோலிக்கரோ, '' 'மரியே நீ வாழ்க' என்று கூறுங் கள், அது போதுமானது'' என்கின்றனர். பெந்தெகொஸ்தே யினரோ, "எங்கள் ஸ்தாபனத்தை சேர்ந்து கொள்ளுங்கள், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்'' என்கின்றனர்.

“விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள். (பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அல்ல அது) என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்;

சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார் (ஆமென்! ஓ சகோதரனே).

மாற். 16:17-18

366. மத்தேயு 11ம் அதிகாரத்தை எடுத்துக்கொள்ளுங்கள், நாம் இப்பொழுது முடிப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறோம். மத்தேயு 20, 21 ஆகியவற்றை நான் எடுத்துக்கொண்டுள்ளேன். இயேசு பேசுகிறார்.

இச்சுவிசேஷம் கூறுகிறதே, அதற்குப் பிறகு உள்ள வசனத்திலிருந்து நாம் வாசிக்க ஆரம்பிக்கலாம். நாம் 14ம் வசனத்தை எடுத்துக்கொள்வோம்.

"அதன்பின்பு பதினொருவரும் போஜனபந்தியிலிருக்கையில் அவர்களுக்கு அவர் தரிசனமாகி, உயிர்த்தெழுந்திருந்த தம்மைக் கண்டவர்களை அவர்கள் நம்பாமற் போனதினி மித்தம் அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்தும் இருதய கடினத்தைக் குறித்தும் அவர்களைக் கடிந்துகொண்டார்."

மாற். 16:14

363. தங்களுக்கு செய்தியை அளித்த மக்களை அவர்கள் விசுவாசிக்கவில்லை. இன்றைக்கும் அவ்வாறுதான் நடக்கிறது. பரிசுத்த ஆவியைக் குறித்து சாட்சியை உடையவர்கள் கூறுவதைக் கேட்கும் மக்கள், 'அபத்தம், அவர்கள் உருளும் பரிசுத்தர் கூட்டத்தினர்'' என்று கூறுகின்றனர். அவரை அவருடைய உயிர்த்தெழுதலின்படி அறிந்திருக்கிற மக்களை அவர்கள் நம்பாத தினிமித்தமாக, அவர் அவர்களை கடிந்துகொண்டார்.

"பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்''

மாற். 16:15

364. என்ன? இவைகளைப் பிரசங்கிக்க வேண்டுமென அவர் களுக்கு சொல்லப்பட்டது. ஒரேயொரு சுவிசேஷம்தான் உண்டு, அதற்கு நான்கு காவலர்கள் உண்டு. "சர்வ சிருஷ்டிக்கும் சுவி சேஷத்தைப் பிரசங்கியுங்கள்'' என்று கூறப்பட்டது. அவர் இந்த நான்கு காவலர் களிடமும், மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய நால்வரிடமுமே, 'சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்'' என்று கூறினார் என்பதை நினைவில் வையுங்கள்.

"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான்.'' (இங்கே கூறப்படும் இந்த ஞானஸ்நானத்தினுள் நீங்கள் பிரவேசிக்கவேண்டும்)

"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.'' (ஓ , சகோதரனே, தயவு செய்து விசுவாசியுங்கள்.)



ஒருவேளை இக்காலம் முடிவடைகிற வரையிலும் தெரியாமலே இருக்கக்கூடும்.

58. ஆனால், இந்த தூதன் எப்படியிருப்பான் என்று நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்பதைப் பற்றி ஒரு மேற்கோளை உங்களுக்குக் கொடுக்க விரும்புகிறேன். அப்படிச் செய்வது சரியாயிருக்குமா? (சபையார், ''ஆம்! ஆமென்!'' என்று கூறுகிறார்கள்- ஆசி). அதில் நமக்கு ஒரு சிறிது நேரம் இருக்கிறது. நான் அதைப்பற்றி என்ன எண்ணுகிறேன் என்பதைப் பற்றி ஒரு சிறு குறிப்பு ஒன்றை வரைந்துள்ளேன்.

59. லவோதிக்கேயா சபையின் தூதனானவன், அதை முடிக்க வருவான். அவன் தானே காலத்தின் முடிவிலே இருப்பான், அதாவது ஏனைய தூதர்களைப் போல, வேதாகமத்தைப் போல, சபைக்காலத்தின் துவக்கத்திலே அவன் வருவதில்லை, முடிவில் தான் வருவான். ஏனெனில், அவர்கள் செய்தவைகளுக்காக அவர்களை கடிந்து கொள்ளவே அவன் வருகிறான். "லவோதிக் கேயா சபை யின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்.''

60. ''சிமிர்னா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்.'' கவனியுங்கள். அந்தந்தக் காலத்தின் முடிவில் அதனதற்குரிய தூதனானவன் வருகிறான். பவுல் அச்சபைக் காலத்தின் முடிவில் வந்தான். இவ்வாறு வரிசையாக ஒவ்வொரு தூதனும் அந்தந்த சபைக்காலத்தின் முடிவில் வந்தார்கள். ஒரு சபைக்காலம் முடிவடைகையில், அது அடுத்த சபைக் காலத்திற்குள் சிறிது நீண்டிருந்து, முடிவடைந்தது. காலத்தின் முடிவு அதுதான் அவ்வாறு சிறிது அடுத்த சபைக்காலத்திற்குள்ளும் நீண்டு போயிருக்கிறது. அது என்னவாயிருந்தது என்பதைப்பற்றி தூதனுக்கு உரைக்கப்படுகிறது. நாம் படிக்கட்டுகளில் ஏறிப்போகையில் எப்படியிருக்குமோ அவ்வாறு இவ்வேழு சபைக் காலங்களும், ஒவ்வொன்றும் முடிவடைகையில், அது அடுத்த சபைக்காலத்திற்குள்ளும் நீண்டு இருந்து அதிலும் காணப்படுகிறது.

61. இந்நாளில் வருகின்ற இந்த தூதனானவன்... இங்கே சிலவற்றை நான் எழுதி வைத்துள்ளேன், அதை நான் வாசிக்க விரும்புகிறேன். ஆனால் இந்த சபைக்காலத்தின் இறுதிப்பாகத்தில் அவன் அறியப்படுவான். ஏனெனில் நாம் அதற்கு மிகவும் சமீபமாயிருக்கிறபடியால், அந்த வெளிச்சத்தின் காலத்திற்கு நாம் சமீபமாயிருக்கிறபடியால், அவன் ஒரு வேளை இப்பொழுது பூமியிலிருக்கக்கூடும். அவனைத் தெரியாது

பாருங்கள். அவன் தானே வல்லமையான தீர்க்கதரிசியாக இருப்பான். சபை உலகத்தினால் அவன் புறக்கணிக்கப்படுவான், அவர்கள் தங்கள் பாவங்களில் தொடர்ந்து நீடித்துக் கொண்டே போகிறபடியினால் தேவன் அவர்களை தனது வாயினின்று வாந்தி பண்ணிப் போடுவதினி மித்தம் இப்படியாகும். தேவனுடைய பிரசன்னத்தை விட்டு வாந்தி பண்ணிப்போடப்படுவார்கள்.

62. அத்தூதன் எலியாவைப் போல் இருப்பான் என்று நான் விசுவாசிக்கிறேன். அதற்கான காரணங்களை நான் எடுத்தியம்பப் போகிறேன். இப்பொழுது, நாம் மல்கியாவின் புஸ்தகத்திற்கு சற்று திருப்புவோம். அத்தூதன் எலியா தீர்க்கதரிசியின் ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டிருப்பான் என்று நான் எண்ணுகிறேன் என்பதற்கான காரணத்தை உங்களுக்கு எடுத்துரைக்கப்போகி றேன். இப்பொழுது நீங்கள் உங்களுடைய கிருபையின் தலைப் பாகையை அணிந்து கொள்ளுங்கள். மல்கியா 4ம் அதிகாரம். இப்பொழுது நான் வாசிக்கையில், உங்கள் வேதத்திலிருந்து கவனியுங்கள். அடுத்த சில நிமிடங்களில் இந்த சபைக்காலத்திற்குள் போகும் முன், இப்பொழுது மிகவும் கவனமாக பரிசீலனை செய்திடுங்கள்.

“இதோ, சூளையைப்போல் எரிகிற நாள் வரும்; அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ்செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்; வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற் போகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

மல்.4:1

63. அவர் என்ன கூறுகிறார்? வரப்போகிற நாளைப்பற்றி அவர் பேசுகிறார். அதை நீங்கள் ஒத்துக்கொள்ளுகிறீர்களா? கர்த்தருடைய வருகையின் நாள் அது.

“ஆனால்... உங்கள் மேல் ...

64. இப்பொழுது கவனியுங்கள். அவர் இஸ்ரவேலரோடு பேசுகிறார். அவர் என்ன கூறுகிறார்? "இதோ சூளையைப்போல எரிகிற நாள் வரும்.''

“ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள் மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும்; நீங்கள் வெளியே புறப்பட்டுப்போய் கொழுத்த கன்றுகளைப்போல வளருவீர்கள்.



357. ஓ, சகோதரனே, அங்கே இருக்கிற அவ்வாசலில் அக்கழு கானது உட்கார்ந்திருக்கிறது; ஏனெனில் அது சுவிசேஷப் பணி யாயிருக்கிறது. கழுகைப்போல் பறந்து செல்லுகிறது. விரைந்து பறந்து, தீர்க்கதரிசியின் தேசத்திற்குள் சென்று, இருந்ததைப் பற்றியும், இருக்கிறதைப் பற்றியும், வரப்போகிறதைப் பற்றியும் கூறுகிறது. பாருங்கள்? அங்கே அமர்ந்திருந்து, ''நான் செய்கிற கிரியைகளை'' என்பதை காக்கிறதாயிருக்கிறது. அக்கழுகைக் கவனித்துப் பாருங்கள்.

358. இதோ இங்கே சிங்கம், ஊழியக்காரன் இருக்கிறது. இயேசு அவர்களுக்கு அதிகாரத்தையளித்தார். அவர் அதைப் பாதுகாக்கிறார். அவர் அப்போஸ்தலர் 2:38ஐப் பாதுகாக்கிறார். அங்கே அந்த சிங்கத்தை வைத்திருக்கிறார்.

359. இதோ இங்கே இக்கழுகோடு, சுவிசேஷத்தின் விரைவான தன்மை காணப்பட்டு, "நான் செய்கிற கிரியைகளை செய்வீர்கள்'' என்று கூறுகிறது. அதனோடு உலக முழுவதும் பறந்து செல்லு கிறது. குஷ்டரோகியை சுத்தம் செய்வதற்காக புறாவின் தலையைக் கிள்ளி அதன் இரத்தத்தை அதன் ஜோடியான புறாவின்மேல் தெளித்து, அது கீழே சிந்தும் போது, அது 'கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்'' என்று கதறுகிறதே, அதைப்போல் உள்ளது.

360. என்னிடம் இன்னொரு வசனம் உள்ளது . யோவான் 15:7. நாம் 15ம் அதிகாரத்தின் 7ம் வசனத்தை எடுத்துக்கொள்வோமாக.

“நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், (வேதக்கல்லூரியின் வார்த்தை அல்ல) நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப் படும்."

யோவான் 15:7

361. அவ்வாறுதானே அது இருக்கிறது? அப்பொழுது அச்சுவிசேஷமானது இங்கே காவல் செய்கிறது. இந்த பெந்தெகொஸ்தேயின் ஆசீர்வாதத்தை யோவானும் அவனது சுவிசேஷமும் காவல் செய்கின்றனர்; மத்தேயுவும், அவனது சுவிசேஷமும் காவல் செய்கின்றனர்.

362. இப்பொழுது நாம் அடுத்த சுவிசேஷமாகிய மாற்குவை எடுத்துக்கொள்வோம். மாற்கு 16ம் அதிகாரம். மாற்கு இந்த பெந்தெகொஸ்தே ஆசீர்வாதத்தை காக்கிறானா என்பதைப் பார்ப்போம். மாற்கு 16ம் அதிகாரம். உயிர்த்தெழுதலைப் பற்றி

வரப்போகிற யாவற்றையும், அவைகள் உள்ளபடியே எழுதி, அவைகள் எவ்வாறு நேரிடப் போகின்றன என்பதைப் பற்றியும் கூறி எழுதிவைத்துள்ளனர். உடனே அவைகள் அதைச்சுற்றி புறவரிச் சட்டமாக தங்களை அமைத்துக்கொண்டன, அவ்வாறு அது வருகிறது. ஆமென்! மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகியோர், பெந்தெகொஸ்தே ஆசீர்வாதமாகிய சிங்காசனத்தை, பிரதான ஆலயத்தை காப்பதான காவலாளராக, புறவரிச் சட்டமாக இருக்கின்றனர்.

355. பெந்தெகொஸ்தே ஸ்தாபனத்தை நான் குறிப்பிடவில்லை, சகோதரனே, சகோதரியே. பெந்தெகொஸ்தே ஸ்தாபனங்கள் முற்றிலும் புறம்பான நிலையில் மிகவும் தூரமாக, மற்றெந்த சபைகளை விடவும் வெளியே காணப்படுகிறது. லூத்தரன்கள் எவ்வாறிருந்தனரோ, அதைவிட மிகவும் தொலைவில் பெந்தெகொஸ்தே ஸ்தாபனங்கள் காணப்படுகின்றன. லூத்தரன்கள் பெந்தெகொஸ்தேயினரைவிட சற்று மேலான நிலையில் தங்களை வைத்து இருந்தனர்; அதைப்போலவே காணப்படுகிறது. அது மிகவும் சரியாக இருக்கிறது, ஜீன்! ஏனெனில், இப்பொழுது.... லூத்தரின் காலத்திலுள்ள லூத்தரன் சபைக்கு வெளியே இயேசு நின்றிருந்து, உள்ளே பிரவேசிப்பதற்கு முயன்றுகொண்டு இருப்ப தாக நான் காணவில்லை. ஏனெனில் முதலில் அவர் அதன் உள்ளேயே இருக்கவில்லை. அவர் பெந்தெகொஸ்தே சபைக்குள் இருந்தபோது, வெளியே தள்ளப்பட்டார்.

இப்பொழுது மத்தேயு 10:1

356. இப்பொழுது நாம் யோவான் சுவிசேஷம் 14:12-ஐ எடுத்துக் கொண்டு அங்கே யோவான் பெந்தெகொஸ்தேயின் விலையேறப் பெற்ற காரியங்களை காவல் செய்கிறானா, அதை ஆதரிக்கிறானா என்பதைப் பற்றிப் பார்ப்போம். யோவான் சுவிசேஷம் 14ம் அதிகாரம் 12ம் வசனத்தில் இயேசு பேசுகிறார்;

"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லு கிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்."

யோவான் 14:12



துன்மார்க்கரை மிதிப்பீர்கள்; நான் இதைச்செய்யும் நாளிலே அவர்கள் உங்கள் உள்ளங்கால்களின் கீழ் சாம்பலாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (அவர் பூமியை அக்கினியால் சுட்டெரிக்கும் நாளில், அவர்களுடைய சாம்பலை மிதிப்போம். அது நிச்சயமாக ஆயிர வருஷ அரசாட்சியின் காலமாகும்.)

ஓரேபிலே இஸ்ரவேலரெல்லாருக்காவும் என் தாசனாகிய மோசேக்கு நான் கற்பித்த நியாயப்பிரமாணமாகிய கட்டளைகளையும் நியாயங்களையும் நினையுங்கள்.

இதோ கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்.

நான் வந்து பூமியைச் சங்காரத்தால் அடிக்காதபடிக்கு, அவன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத் திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்.''

மல்.4:2-6)

இது பழைய ஏற்பாட்டின் முடிவாக இருக்கிறது.

65. இயேசு கூறினார்... மத்தேயு 17:10ல் இதைப்பற்றிப் பேசுகிறார். வரவேண்டிய எலியாவை அனைத்து யூதர்களும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். மத்தேயு 17:10ல் இயேசு அதைப்பற்றி என்ன கூறினார் என்பதை இப்பொழுது கவனியுங் கள். மத்தேயு 17ம் அதிகாரம் 9ம் வசனத்திலிருந்து ஆரம்பிப்போம்.

"அவர்கள் மலையிலிருந்து இறங்குகிற போது, இயேசு அவர்களை நோக்கி: மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும் வரைக்கும் இந்தத் தரிசனத்தை ஒருவருக்கும் சொல்ல வேண்டாம் என்று கட்டளையிட்டார். (பார்த்தீர்களா? "இதை யாருக்கும் சொல்ல வேண்டாம், நீங்கள் அறிவீர்கள், அதை உங்களோடு வைத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறினார்.)

அப்பொழுது, அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: அப்படி யானால் எலியா முந்தி வரவேண்டும் என்று வேதபாரகர் சொல்லுகிறார்களே, அதெப்படியென்று கேட்டார்கள். (''நீதியின் சூரியனாகிய கிறிஸ்து வருமுன்னர் எலியா ஏன் முந்தி வர வேண்டும்? ஏன் அவர்கள் இதைக் கூறுகிறார்கள்? இதோ நீர் ஏற்கெனவே வந்து விட்டீர், ஆயினும்

வேதபாரகர் எலியா முந்தி வரவேண்டுமென்கிறார்களே'' என்று கேட்டார்கள்)

மத்.17:9-10 இப்பொழுது கவனியுங்கள்

“இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: எலியா மெய்யாகவே முந்தி வருவான் (தமிழ் வேதாகமத்தில் “எலியா முந்தி வந்து'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது - ஆங்கில வேதாகமத்தில் 'எலியா மெய்யாகவே முந்தி வருவான் என்று எதிர்காலத்தில் நடக்க விருக்கும் ஒன்றைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது- "அவன் எல்லாவற்றையும் சீர்படுத்துவான்; ஆனாலும், அந்த எலியா வந்தாயிற்று என்று உங்களுக்கு சொல்லுகிறேன்” (ஆங்கில வேதாகமத்தில், "That Elias" (அதாவது "அந்த எலியா'' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழிலோ வெறுமனே “எலியா'' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. மொழி பெயர்ப்பாளர்) அவனை அறியாமல் தங்கள் இஷ்டப்படி அவனுக்குச் செய்தார்கள்; இவ்விதமாக மனுஷகுமாரனும் அவர்களால் பாடுபடுவார் என்றார். (அந்த எலியா யாரென்று அவர் கூறவில்லை என்பதைப் பாருங்கள்.)

அவர் யோவான் ஸ்நானனைக் குறித்துத் தங்களுக்குச் சொன்னார் என்று சீஷர்கள் அப்பொழுது அறிந்து கொண்டார்கள்.

மத் 17:11-13

66. இப்பொழுது கவனியுங்கள். நான் மீண்டும் மல்கியா 4ம் அதிகாரத்திற்கு போகப்போகிறேன். அவர் இங்கே, 'கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்'' என்று கூறியிருக்கிறதை இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள். இப்பொழுது 5ம் வசனம்.

"இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்'' (...பெரிதும் பயங்கரமு மான நாள் என்று சகோ. பிரன்ஹாம் கூற, “கர்த்தருடைய'' என்று கூறாமல் விட்டதை சபையார் பதிலுக்குக் கூறுகிறார்கள் - ஆசி)

மல். 4:5

67. ''கர்த்தருடைய நாளில்'' என்பதை நாம் எங்கே காண்கிறோம்? காலத்தின் முடிவிலே! அப்பொழுது உலகமானது சுட்டெரிக்கப்படும்.



351. அநேக போதகர்கள் தங்கள் சபைகளில் ஸ்திரீகள் ஆபாச ஆடை அணிவது, செயல்கள்... மற்றும் சீட்டாட்டங்கள், பாங்கோ விளையாட்டுகள், நடனங்கள் மற்றும் சுப் விருந்துகள் ஆகிய இந்த ஆசுத்த ஆவிகள் சபைகளில் தங்கும்படி விட்டுவிடுகின்றனர்.

... ஆசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும், சகல நோய்களையும் நீக்கவும்...

352. அக்காவலன் அந்த வாசலில் அமர்ந்திருப்பதைப் பார்த்தீர் களா? எழுதப்பட்டுள்ள அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தை சுவிசேஷம் காவல் செய்கிறது.

353. நான் சமீபத்தில் ஒரு பெரிய போதகர் கூறுவதைக் கேட்டேன். அவர் ஒரு பெரிய மனிதர், மேன்மைமிக்கவர். நான் அவரை சந்தித்து, அவரோடு கை குலுக்கியிருக்கிறேன். அவர், ''ஆனால் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகம் சபைக்கான வடிவம் கொடுக்கும் ஒருபுறச் சட்டம் மாத்திரமே'' (frame work), என்று கூறினார். ஹூ! அதாவது, உள்ள இருக்கவேண்டிய அப்போஸ்தலர் நடபடிகளை வெளியே உள்ள புறச்சட்டம் என்று அவர் கூறி விட்டார். ஆனால் சுவிசேஷங்கள் அப்போஸ்தலர் நடபடிகளை சுற்றி வெளியே இருந்து பாதுகாத்துக்கொண்டு அதினுடைய வடிவத்தை அமைத்துக்கொடுக்கும் புறச்சட்டமாக இருக்கிறது. அப்போஸ் தலர் நடபடிகளோ உள்ளே அமைந்திருக்கிறது. இச்சுவிசேஷங்களோ வடிவம் கொடுக்கும் புறச்சட்டமாக இருந்து, அது ஒருங்கிணைந்து இருக்க, அதை பாதுகாக்கிறதாயிருக்கிறது. இதைப்பற்றி மனிதனுடைய சிந்தையானது எவ்வாறு சிந்திக்க முடியும் என்பதைப் பாருங்கள். தேவன் அதைப்பற்றி காண்பித்திருக்காவிடில், நானுங்கூட அவ்வாறுதான் சிந்தித்திருப்பேன். பாருங்கள்?

354. பெந்தெகொஸ்தே, சுவிசேஷத்தின் புறவரிச் சட்டம் அல்ல (Frame work), பெந்தெகொஸ்தேயை தாங்குவதற்காக நான்கு சுவிசேஷங்கள் தான் அதின் புறவரிச் சட்டம் உள்ளது. அவர் களுக்கு இந்த புறவரிச்சட்டம் கிடைத்தபிறகு, பெந்தெகொஸ்தே வந்தது. அது சரிதானே? நடபடிகள் புத்தகமா, அல்லது அப்போஸ் தலர்களின் சுவிசேஷங்கள் முதலில் எழுதப்பட்டதா? அப்போஸ் தலர்களின் சுவிசேஷங்கள்தான். இயேசு நடந்து திரிந்து கிரியைகளைச் செய்து, என்ன வரப்போகிறது என்பதைப்பற்றி முன்னுரைத்துக் கொண்டிருந்தார். மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய நான்கு காவலர்களும் வருகின்றனர், அவர்கள் வந்து தாங்கள் கண்ட

ஐந்து, பத்து நிமிடங்களில் முடித்துவிடுவோம். அப்போஸ்தலர் நடபடிகளை மத்தேயு காக்கிறானா என்பதைப்பற்றி நாம் பார்ப்போமாக.

348. தேவன் தன்னுடைய வார்த்தையைச் சுற்றிச்சூழ ஒரு காவலனைப் போடவில்லை என்று நினைத்தீர்களா? இதோ இங்கே காளை, சிங்கம், மனிதன், கழுகு ஆகியவை உள்ளன. அவைகள் இன்னமும் இங்கே பூமியில் அவ்வாசல்களில் இருந்து கொண்டிருக்கவில்லையா? அவர்கள்தான் நான்கு சுவிசேஷங் களாகும். பாருங்கள்? அவைகள் போன எத்திசையிலும் நேராகச் சென்றன. ஒன்றுக்கொன்று முரண்பட்டிருக்கவில்லை. அவைகள் ஒன்றோடொன்று சேர்ந்தே நின்றன. பாருங்கள்? அவைகளில் ஒன்று மனிதனுடைய விவேகத்தோடும், இன்னொன்று கழுகின் வேகமாக செயல்படுகிற தன்மையோடும் போகின்றன. இன்னொன்று ஒரு மேய்ப்பனாக இருக்கிறது. ஒன்று சுவிசேஷகனாய் இருக்கிறது. ஒன்று சுவிசேஷகனைப்போல் பறந்து கொண்டே யிருக்கிறது ...... இன்னொன்று மேய்ப்பனாக இருக்கிறது. இன்னொன்று கட்டுறுதி வாய்ந்ததாக இருக்கிறது. இன்னொன்று கூர்மதி வாய்ந்ததாக இருக்கிறது. பாருங்கள், அவைகள் ஒவ்வொரு திசையிலும் காவல் செய்தன. தேவன் இந்த பரிசுத்த ஆவி சுவிசேஷத்தை காவல் செய்கிறார். அதை விசுவாசியுங்கள், சகோதரரே.

349. இப்பொழுதும் நாம் மத்தேயு 10:1ஐ எடுத்துக்கொள்வோம்.

"அப்பொழுது, அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களையும் தம்மிடத்தில் வரவழைத்து, .... அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.

மத். 10:1

அவர்கள் மேல்வீட்டறையில் கூடி அவரது நாமத்தில் ஜெபித்தனர் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டனர் அதினால் ஊழியத்திற்கான அதிகாரம் வந்தது. அன்று அவர்களுக்கு என்ன செய்தாரோ இன்று அவர் உனக்கும் அதை செய்வார் நானும் அவர்களுள் ஒருவன் என்பதால் நான் மகிழ்கிறேன்

350. ஓ, குழந்தைகளை சற்று ஒரு நிமிடம் சமாதானப்படுத்துங்கள். சற்று மிகவும் கவனமாகக் கேளுங்கள்.

"... அசுத்த ஆவிகளைத் துரத்த... அதிகாரங்கொடுத்தார்"

மத். 10:1



அவர் வெண்மையான தலைப்பாகையை உடையவராய், மார்பருகே பொற்கச்சை உடுத்தினவராய் இருந்ததைக் குறித்து நாம் படித்தோம் என்பதை நீங்கள் நினைவில் வைத்திருக்கிறீர்களா? அதை நினைவில் வைத்திருக்கிறீர்களா? கர்த் தருடைய நாள் என்பது ஒரு ஓய்வு நாள் அல்ல என்பதையும், அல்லது ஒரு ஞாயிற்றுக்கிழமையும் அல்லவென்பதையும் நாம் வேதத்திலிருந்து நிரூபித்தோம். அது சரிதானே? அந்த நாளில் தான் அவர் நியாயாதிபதியாக வருகிறார். 'பூமியை சாபத்தால் அடிப்பார்'' (தமிழில் ''சங்காரத்தால் அடிப்பார்'' என்று குறிப் பிடப்பட்டுள்ளது - மொழிபெயர்ப்பாளர்). அது சரிதானே?

கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்.

மல்.4:5

68. இவ்வசனத்தில் எலியாவின் இரட்டை வருகையைக் குறித்துப் பாருங்கள். இப்பொழுது நீங்கள் கவனிபீர்களானால், அனைத்து வேத வாக்கியங்களுமே கூட்டு அர்த்தமுள்ளதாக இருக்கிறது. அதை “ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, கற்றுக்கொள்ளகூடிய பாலகருக்கு வெளிப்படுத்தினீர்''.

69. இப்பொழுது நாம் மத்தேயு சுவிசேஷம் 2ம் அதிகாரத்திற்கு சற்று செல்லுவோம். இந்தப் பக்கத்திற்கு சற்று பின்னால், மத்தேயு 2ம் அதிகாரம். மத்தேயு 2ம் அதிகாரம் என்று கூறியதற்குப் பதில் லூக்கா 2ம் அதிகாரம் என்று நான் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்று நம்புகிறேன். அதை நான் இங்கே எழுதி வைத்திருக்கிறேன், ஆனால் சில நிமிடங்களுக்கு முன்னால் நான் சற்று துரிதப்படுத்திக் கொண்டிருந்தேன். அறையில் நான் இருக்கையில் பரிசுத்த ஆவியானவர் என் மேல் இருந்தார். நான் ஒரு மகத்தான வேளையை உடையவனாய் இருந்தேன். எனவே நான் 2ம் அதிகாரம் என்றேன். அதுதானா என்பதை நாம் பார்ப்போம். இப்பொழுது ஒரு நிமிடம் நான் இதைப் படிக்கிறேன். மத்தேயு 2ம் அதிகாரம் ... நான் தேடு வது அதுவல்ல, அப்படித்தானே? சற்று ஒரு நிமிடம் பொறுங்கள்... சற்று நேரத்தில் அதை எடுத்துவிடுவேன்... எனக்கு சற்று நேரம் எடுத்துக்கொள்கிறேன். ஏனெனில் வேத வாக்கியத்துக்கு இரு விஷயங்களைப் பற்றிக் கூறும் கூட்டு அர்த்தம் உண்டு என்பதை நீங்கள் கண்டு நிச்சயமடைந்து கொள்ளவேண்டுமென்று நான் விரும்புகிறேன். 'அன்னாள் துதி செலுத்துதல்' 'நாசரேத்துக்கு திரும்புதல்; 'பஸ்கா பண்டிகை' 'யோவானின் ஊழியம்' இப்பொழுது,

நான் லூக்காவைத் தான் குறிப்பிட்டேனோ என்பதை பார்க்கட்டும். நான் எங்கோ அதைப் பற்றி வாசித்தேனே... லூக்கா வுக்குப் பதிலாக நான் மாற்கு என்று குறிப்பிட்டுவிட்டேன். ஒரு வேளை மாற்காகவும் இருக்கலாம். இவ்வாறு நான் மாற்றிக் குறிப்பிட்டதுகூட அது கர்த்தருடைய கிரியைதான் என்பதை காணத்தக்கதாக, நீங்கள் இந்த வேத வாக்கியத்தை எடுத்துக் கொள்ளவேண்டுமென நான் விரும்புகிறேன். அவரே இவ்வித மாக கிரியை செய்கிறார். நான் எந்த வசனத்தைத் தேடுகிறேன் என்பதை நான் உங்களுக்குக் கூறுவேன். ''எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன்'' என்று அவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும். யாரிடமாவது ஓரக் குறிப்புகளையுடைய வேதாகமம் இருக்கிறதா? இருந்தால் விரைவாக அவ்வசனத்தை எடுத்துக்கொண்டுவிட இயலுமே. எகிப்திலிருந்த என் குமாரனை வரவழைத்தேன்'' என்ற வசனம். ஒரு க்ஷணம் ...

70. (ஒரு சகோதரன், ''லூக்கா 1:17'' என்று கூறுகிறார்.) நன்றி சகோதரனே. அது சரிதான் லூக்கா 1ம் அதிகாரம். மாற்கு... லூக்கா 1:17 - இரண்டாம் அதிகாரத்திற்குப் பதிலாக ... 14ம் வசனத்தை எடுத்துக் கொள்ள விரும்புகிறேன், அங்கே தான் .... அதுதானே சகோதரனே, அது மிகவும் சரியாக இருக்கிறது. லூக்கா 1:17. நீங்கள் இப்பொழுது அதைக் குறித்து வைத்துக் கொள்ளலாம். இப்பொழுது அது என்ன? அதுதானே கர்த்தருடைய ஆசீர்வாதங்களிலிருந்து, ஆம் ஆசீர்வதிக்கப்பட்டதாகும்.

உனக்குச் சந்தோஷமும் மகிழ்ச்சியும் உண்டாகும். அவன் பிறப்பினிமித்தம் அநேகர் சந்தோஷப்படுவார்கள்.

அவன் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனாயிருப்பான், திராட்ச ரசமும் மதுவும் குடியான், தன் தாயின் வயிற்றிலிருக்கும் போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான்.

லூக்.1:14-15

71. வருகின்ற இம்மனிதன் அவனது பிறப்பின் முதற் கொண்டே மது அருந்துதல் மற்றும் பாவ சம்மந்தமான எந்த காரியத்தையும் செய்யாதிருக்கும்படி போதிக்கப்பட்டிருப்பான். அதை நீங்கள் புரிந்து கொண்டீர்களா?

... தன் தாயின் வயிற்றிலிருக்கும் போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான்.

அவன் இஸ்ரவேல் சந்ததியாரில் அநேகரை அவர்கள் தேவனாகிய கர்த்தரிடத்திற்குத் திருப்புவான்



341. அவன் அதைக் காக்கிறானா? 'பிதா, குமாரன், பரிசுத்த ஆவி.'' அந்த ஒரே நாமத்திற்குரிய மூன்று பட்டங்களாகிய பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்பது. எனவே அதை காத்திட அந்த காவலன் அங்கே நிற்கிறான். அதை நீங்கள் புரிந்து கொண்டீர்களா? ஓ, என்னே! இப்பொழுது எத்தனை பேர்கள் இதை அறிகிறீர்கள்? இதோ, இங்கே அந்தக் காவலன் இருக்கிறான்.

342. இரட்சிப்புக்காக உள்ள வேறு பல காரியங்களும் உள்ளன, அதைப்பற்றி நிறையக்குறிப்பு என்னிடம் உள்ளது. ஆனால் இப்பொழுது இன்னும் ஒரு நிமிட நேரத்தில் நாம் ஒரு ஜெப வரிசையை ஒழுங்கு செய்யப்போகிறோம். அது சுமார் பத்து நிமிடங்களுக்கு இருக்கும். இன்னும் ஒரு நிமிடத்தில் நாம் அக்காரியத்தைச் செய்ய முயற்சிப்போம். இங்கே நான் குறித்து வைத்துள்ள சில வேதவாக்கியங்களை நாம் எடுத்துக் கொள்வோ மாக. இதோ அவைகள்.

343. தெய்வீக சுகமளித்தல் என்ற விஷயத்தை மத்தேயு காவல் செய்கிறானா என்பதைப் பற்றி நாம் எடுத்துக்கொண்டு இப் பொழுது பார்ப்போம். உங்களுடைய எழுதுகோல்களை எடுத்துக் கொள்ளுங்கள், நீங்கள் அதை குறித்துக்கொள்ள விரும்பினால். மத்தேயு அதைக் காவல் செய்கிறானா என்பதைப் பார்ப்போம். நாம் இப்பொழுது மத்தேயு எழுதின சுவிசேஷம் 10ம் அதிகாரத்தில் 1ம் வசனத்தை எடுத்துக்கொள்வோமாக.

344. யோவான் அப்படி செய்தானா என்பதைப் பற்றி இரண் டொரு வசனங்களை எடுத்துக்கொண்டு பார்ப்போமாக. யோவான் 14:12, 15:7.

345. தேவனுடைய சிங்காசனத்தைச் சூழ்ந்து நின்று இவர்கள் தெய்வீக சுகமளித்தல் என்பதை காக்கிறார்களா என்பதைப் பற்றி நாம் பார்ப்போம். மாற்கு 16ம் அதிகாரம்;  மாற்கு 11:21-22.

346. லூக்கா 10:1 முதல் 12 லூக்கா 11:29 முதல் 31 முடிய . நாம் வேகமாக சில வசனங்களை வாசித்து, அவர்கள் தெய்வீக சுகமளித்தலுக்கான உரிமையைக் காக்கிறார்களா என்பதைப் பற்றி பார்ப் போம். அவர்கள் இயேசுவின் நாமத்தினால் ஞானஸ்நானத்தைப் பற்றிய வாசலையும் இதேபோல்தான் காத்து வருகின்றனர். அவை கள் ஒவ்வொன்றையும் எடுத்துக்கொண்டு பார்க்கலாம்.

347. நாம் இப்பொழுது மத்தேயு 10:1-க்கு திரும்புவோம். நாம் இதை பார்த்துவிட்டு, கர்த்தருக்கு சித்தமானால், அதிக பட்சம் இன்னும் சுமார்

"நிச்சயமாக, நான் முழுமையானதொரு காவலன்தான்'' என்று மத்தேயு கூறுவான்.

338. இப்பொழுது மத்தேயு 1:18-ஐ எடுத்துக்கொண்டு அது என்ன கூறுகிறது என்று பாருங்கள். இதை காக்கிறதா என்பதைப் பாருங்கள். அப்போஸ்தலர் 2:38-ஐ மத்தேயு 1:18 காக்கிறதா என்று பாருங்கள். “இயேசு கிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது....”

மத். 1:18

339. "இங்கே பிதாவாகிய தேவன் இருக்கிறார், இங்கே குமாரனா கிய தேவன் இருக்கிறார், இங்கே பரிசுத்த ஆவியாகிய தேவன் இருக்கிறார்'' என்று கூற அவர்கள் முற்படுகிறார்கள்.

இயேசு கிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது: அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப் பட்டிருக்கையில், அவர்கள் கூடிவருமுன்னே அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது."

மத். 1:18

340. எந்த ஒன்று? அவர்கள் இருவரையுமே ஒருவர் என்று இது காண்பிக்கிறது.

"அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து, அவளை அவமானப்படுத்த மனதில்லாமல், இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான்.

....கர்த்தருடைய தூதன்...(அவனிடத்தில் இறங்கி வந்து) தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே, அவளிடத்தில் உற்பத்தி யாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. (பார்த்தீர் களா?)

அவள் ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக;... தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது.

அவள் : இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; (ஏசாயா 9:6) ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்... அவருக்கு (இம்மானுவேல் - என்று சபையார் கூறுகிறார்கள் - ஆசி.) இம்மானுவேல் என்று பேரிடுவார்கள்.

மத். 1:19-23



பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும் கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தை கர்த்தருக்கு ஆயத்தப் படுத்தும்படியாக அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான் என்றான்.

லூக்கா .1:15-17

72. இப்பொழுது, அவனைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைக்கப் பட்டிருந்தது. அந்த நபர் யோவான். அது சரிதானே? அந்நாளில் வரவேண்டியவனாக இருந்த எலியா யோவான்தான்.

73. வேத வாக்கியமானது சில வேளைகளில் இரண்டு காரியங்களை அர்த்தப்படுத்துகிறது என்பதையும் நாம் அறிவோம். மத்தேயு வில், “எகிப்திலிருந்து என் குமாரனை வரவழைத்தேன்'' என்பதா கக் கூறியிருக்கிற வசனத்திற்கு, நாம் ஒரு அர்த்தத்தைக் கூறுவோம். நல்லது, அதைத்தான் நான் தேடிக்கொண்டு இருந்தேன். ''எகிப் திலிருந்து என்னுடைய குமாரனை வரழைத்தேன்.'' “குமாரன்'' என்ற வார்த்தைக்கு ஒத்து வாக்கியத்தை நீங்கள் தேடிக் கொண்டே போனால், அது ஓசியாவுக்குப் போகும். அங்கே அவ்வசனம் அவருடைய குமாரனாகிய இயேசுவைப்பற்றி குறிப்பிடுவதாக இருக்கவில்லை. அங்கே அது இஸ்ரவேலைக் குறிக்கிறதாக இருக் கும். ஆனால் அவ்வசனத்திற்கு கூட்டு அர்த்தம் உண்டு. ஆனால் அதற்கு இதைவிட மேலான அர்த்தம் உண்டாயிருக்கிறது. அவர் இஸ்ரவேலை வரவழைத்தார் என்று சொன்னால் அது இஸ்ரவேலை விட பெரியவராகிய இயேசு வின் வருகையைக் குறிக்கிற தாகத்தான் இருக்கிறது. சரி.

74. அவருடைய முதலாம் வருகையானது, கர்த்தருடைய நாளில் ஏற்படவில்லை என்பதையும் நாம் காண்கிறோம். அது சரிதானே? இப்பொழுது மல்கியாவுக்குத் திரும்புவோம். முதலில் “கர்த்தருடைய நாளிலே வருதல்' என்பதை பற்றி நாம் தெளிவுபடுத்து வோம். இப்பொழுது அவருடைய இரு வருகைகள் கூட்டாக ஒரே வசனத்தில் குறிப்பிடப் பட்டுள்ளதை கவனியுங்கள். அதில் அவருடைய முதல் வருகையும், இரண்டாம் வருகையையும் ஒரு சேர குறிப்பிடப்பட்டுள்ளது. உங்களுடைய ஆவிக்குரிய புரிந்து கொள்ளுதல் ஆயத்தமாக உள்ளதா? இப்பொழுது 6ம் வசனம் ...

".... அவர்... "...கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்." (அது சரிதானே?)

மல். 4:5

75. அதுதானே யோவான் அல்ல என்பதை உணருகிறோம், ஏனெனில், அவன் வந்த நாள் கர்த்தருடைய பயங்கரமான நாளல்ல (அப்படித்தானே?) அல்லாமலும், அப்பொழுது ஆண்டவர் பூமியை சுட்டெரிக்கவில்லை. எனவே அது ஒரு முன் காட்சியாகத் தான் அர்த்தப்படுத்திட வேண்டும். அல்லது யோவானின் ... அல்லது எலியாவின் இன்னொரு எதிர்வரும் வருகையைக் குறிப்பதாகத்தான் இருக்கவேண்டும். அது சரிதானே? ஏனெனில், அவர் கூறினார். "நான் எலியாவை அனுப்புவேன், முழு பூமியைச் சுட்டெரிப்பேன். அதை நான் சுத்தம் செய்வேன். அப்பொழுது நீங்கள் வெளியே புறப்பட்டுப் போய், அவர்களுடைய சாம்பலின் மேல் நடப்பீர்கள்'' என்று. அது ஆயிர வருட ஆரசாட்சி என்பதை நாம் அறிவோம். அணுகுண்டு அதை தூள் தூளாக சிதறிப்போகப் பண்ணின பிறகு, அது சரி செய்யப்படும். அங்கே அப்பொழுது இப்பூமியில் ஒரு பெரிய நாள் உண்டாயிருக்கும். இயேசுவோடு கூட சபையானது ஓராயிரம் ஆண்டுக் காலம் ஆட்சி செய்வாள். அது சரிதானே? 'ஆனால் எல்லாம் வெடித்துப் போகவிருக்கும் கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்பு வேன்.'' அது சரிதானே? எனவே, அது அவ்விடத்தில் யோவான் ஸ்நானன் வருவதைப் பற்றிக் கூறவில்லை. ஏனெனில் கர்த்தருடைய பயங்கரமான நாள் அப்பொழுது வரவில்லை. அது இரண்டாயிரம் ஆண்டுகள் கழித்துத் தான் வருகிறது. அது சரிதானே?

76. இப்பொழுது நீங்கள் சரியானபடி ஆவிக்குரியவர்களாக இருப்பின், அடுத்த வசனத்தைக் கவனியுங்கள். இப்பொழுது, இதுதானே காதல் கடிதமாக இருக்கிறது. வாக்கியங்களுக்கிடையில் நீங்கள் கூர்ந்து கவனித்து வாசிக்கவேண்டும், அப்பொழுது அது சரியாக உங்களுக்குக் காணப்படும். நான் என்ன கூறிகிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். "இயேசு தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தினார், ஏனெனில், அதை அவர் ஞானிகளுக்கும் கல்வி மான்களுக்கும் மறைத்து (அவர்கள் கண்களுக்கு) பாலகருக்கு வெளிப்படுத்தினதால்'' என்று அவ்வேத வாக்கியத்தைக் குறித்து நான் எவ்வாறு கூறினேன் என்பதை நினைவில் கொள்ளுங்கள். என் மனைவி எனக்கு ஒரு கடிதம் எழுதுவதைப் பற்றிய ஒரு உவமையை நான் அடிக்கடி



நேரம் இருக்கிறது. பாருங்கள்? ('நாள் முழுவதையும் எடுத்துக்கொள்ளுங்கள்'' என்று ஒரு சகோதரன் கூறுகிறார் - ஆ).

333. இப்பொழுது இதைக் கவனியுங்கள். மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான், அது என்னவாயிருக்கிறது? நான்கு சுவிசேஷங்களைப் பற்றிய பூமிக்குரிய எண்ணாக இது இருக்கிறது - நான்கு என்ற எண். நல்லது, கவனிக்கவும்.

334. மத்தேயு 28:19 - மத்தேயு 28ம் அதிகாரம் - மத்தேயு 28:19ம் வசனம். இதைத்தான் திரித்துவ சகோதரரே, நீங்கள் எடுத்துக் கொள்கிறீர்கள். மத்தேயுவின் அந்த அதிகாரத்தின் இறுதியான பாகத்தில் "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதி களையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து " என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் பெந்தெகொஸ்தே நாளில் இங்கே வந்து பேதுரு கூறினான், ''மனந்திரும்பி இயேசுவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெறுங்கள்'' என்று.

335. அங்கே ஏதோ பிழை உள்ளது. ''மத்தேயுவே, நீர்தான் அந்த கிழக்கு வாசலிலுள்ள காவலரா?''

336. அவ்வாசல் எவ்வாறுள்ளது? அந்த வாசல் யார்? இயேசுதான். இயேசு, ''வாசலானது தண்ணீர் வழியாயிருக்கிறது'' என்று கூறினார். (ஆங்கில மொழி வேதத்தில் மத்தேயு 7:14ல், "ஜீவனுக்குப் போகிற வாசல் தண்ணீர் வழியாயிருக்கிறது'' என்று கூறப்பட்டுள்ளது. தமிழில் ''ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும்...'' என்று கூறப்பட்டுள்ளது. அதற்கு ஆங்கிலத்தில் உபயோகிக்கப்பட்டுள்ள வார்த்தை "Strait" என்பதாகும். அதற்கு "குறுகிய தண்ணீர் வழிப்பாதை'' என்று அர்த்தமாகும் - மொழிபெயர்ப்பாளர்). "Strait" என்றால் ''தண்ணீ ர்'' என்று அர்த்த மாகும். ஆகவே, ''தண்ணீரே வாசலாயிருக்கிறது.'' எவ்வாறு நீங்கள் உள்ளே பிரவேசிக்கிறீர்கள்? "நீங்கள் ஒவ்வொருவரும் மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்.'' இதுதான் பூட்டியிருக்கிற வாசல் கதவுகளை திறந்துவிடுகிறது. ஏய்! வ்யூ!

337. "ஓ, ஆனால், சகோதரன் பிரன்ஹாம் அவர்களே, மத்தேயு 28:19 உங்களுக்கு உள்ளதே, அதைப்பற்றி என்ன?'' என்று கேட் கலாம். அது மிகவும் சரியாக இருக்கிறது. ''ஆனால் மத்தேயுவே, நீ அதற்குரிய காவலரா?'' என்று கேட்டால்,

கத்தினேன். சார்லி, காட்டில் நான் சில சமயம் செய்வதைப்போல. சகோதரி நெல்லி அவர்களே, நான் இவ்வாறு நடந்துகொண்டால், உங்கள் வீட்டைவிட்டே என்னை விரட்டி விடுவீர்கள் என்று நான் அனுமானிக்கிறேன். ஓ, எனக்கு ஒரு மகிமையான வேளை உண்டாயிருந்தது. அது என்னவென்பதைப் பற்றி கர்த்தர் எனக்குக் கொடுத்ததை கவனியுங்கள்.

330. பெந்தெகொஸ்தேக்குப் பிறகு என்ன புத்தகம் எழுதப்பட்டது? பரிசுத்த ஆவியானவரின் நடபடிகள். நடபடிகள். அப்படித்தானே? நடபடிகள் புத்தகம் எதனோடு துவங்குகிறது? முதலாவதாக இரட்சிப்பிற்குள் பிரவேசிப்பது ... அப்போஸ்தலர் 2:38, கடைசியானது இது. 'அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப் பட்டு..... வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்.'' அங்கே பேதுரு எழுந்து நின்று அவர்களுக்கு ஒரு பிரசங்கத்தை நிகழ்த்தினான். அவர்கள் "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டார்கள். "நாங்கள் எப்படி இந்த அனுபவத்தைப் பெறுவது?'' என்றார்கள். அப்போஸ்தலர் நடபடிகள் 2:38ல் பேதுரு கூறினான், ''நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்'' என்று.

331. தேவன் அந்த கிருபாசனத்தைக் காவல் செய்ய தனக்கென சில காவலர்களை கொண்டிருக்கிறார் என்பதை இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள். கிருபாசனத்தைக் காப்பவர்கள் யார்? கிழக்கில் மத்தேயு - லூக்கா , மாற்கு, யோவான் ஆகியோர். அவர்கள் எழுதிய நான்கு சுவிசேஷப் புத்தகங்களும் வரப்போகிற நடபடிகளின் புத்தகத்தை ஊர்ஜிதப்படுத்துகின்றன. நீங்கள் எந்த வகையில் பார்த்தாலும், அவைகள்தான் அதை காக்கிறவையாக இருக்கின்றன.

332. நமக்கு நேரம் போதுமானதாக இல்லை, எனவே ஒரேயொரு விஷயத்தைப் பற்றி மட்டும் எடுத்துக்கொள்வோம். நான் இங்கே இருபது அல்லது அதற்கு மேல் வசனங்களைக் குறித்து வைத் துள்ளேன். ஆனால் இரட்சிப்புக்காக, நாம் இங்கே ஒரேயொரு விஷயத்தை இந்தப் பொருளின் பேரில் எடுத்துக்கொள்வோம். நாம் வியாதியஸ்தருக்காக ஜெபிக்கப்போகிறோமா? இல்லை? இப்பொழுது ஒருமணி ஆகிவிட்டது, எனவே, வியாதியஸ்தருக்காக ஜெபிக்கவேண்டும் என்று நீங்களெல்லாம் விரும்பினால் ஒழிய நாம் அதை வைத்துக் கொள்ளப்போவதில்லை. ஆம், இப்பொழுது எனக்கு ஏராளனமான



கூறியிருக்கிறேன். அதைப் போலுள்ளது. கடிதத்தில் அவள் என்ன கூறுகிறாள் என்பதை நான் காணமுடிகிறது, ஆனால் நான் அவள் என்ன அர்த்தப்படுத்துகிறாள் என்பதை அறிய வாக்கி யங்களுக்குள்ளாக உய்த்து ஆராய்ந்து படிப்பேன், ஏனெனில் நான் அவளை நேசிக்கிறபடியினாலும், அவளது சுபாவத்தை அறிந்தபடியினாலும் அப்படிச் செய்வேன். அதுபோல நீங்கள் தேவனுடைய சுபாவத்தை அறிந்திருக்க வேண்டும். மேலும் அவரை நேசிக்கவேண்டும். அப்பொழுது வேத வாக்கியங்கள் உங்களுக்கு திறந்து கொடுக்கப்படும். அவர் அதை வெளிப்படுத்துகிறார்.

77. இப்பொழுது அடுத்த வசனத்தைக் கவனியுங்கள்

"...அவன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத் திற்கும், (இப்பொழுது கவனியுங்கள்) பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்.'' (பார்த்தீர்களா?)

மல்.4:6

78. யோவான் ஸ்நானன் எலியாவாக வந்தபொழுது, அவன் அப்பொழுது, அவனுடைய செய்தியை ஏற்றுக்கொண்ட பிதாக்களாகிய இஸ்ரவேலரின் இருதயங்களை பிள்ளைகளின் இருதயத்திற்குத் திருப்பினான். ஆனால் எலியா இத்தடவை வரும் பொழுதோ, அவன் தானே சபையாரின் இருதயங்களை பெந்தெ கொஸ்தே பிதாக்களிடத்திற்கு திருப்பப்போகிறான். அங்கே அது நிலையெதிர்மாறாக இருப்பதைப் பாருங்கள். உங்களுக்குப் புரிகிறதா? இப்பொழுது படியுங்கள்.

79. இப்பொழுது கவனமாகக் கேளுங்கள். '..... அவன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்குத் திருப்புவான்...''

80. அந்த பழைய வைதீக ஆசாரியன் அவர்களுக்குக் கூறுவான், ''என் தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டு பண்ண வல்லவராயிருக்கிறார்... உங்களுக்குள்ளே சொல்ல நினையாதிருங்கள்'' என்று. அவன் வந்து, இந்த வயது சென்ற கடினமான வைதீக ஆசாரிய இருதயத்தை எடுத்து, அவர்களுடைய இருதயத்தை இங்கே இந்தப் பிள்ளைகள் கொண்டிருக்கும் விசுவாசத்திற்குத் திருப்பப் போகிறான் என்று இருந்தது. "இப்பொழுது, இங்கே ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டு, வர விருக்கும் மேசியாவுக்காக காத்துக் கொண்டிருக்கிறவர்களே, யார் உங்களை எச்சரித்தது? விரியன் பாம்புக் குட்டிகளே, வரும் கோபத்திற்கு

தப்பித்துக் கொள்ள உங்களுக்கு வகை காட்டினவன் யார்?'' என்று கூவினான். ஓ, என்னே ! இப்பொழுது பாருங்கள்.'' அவன் தானே பிதாக்களின் இருதயங்களை பிள்ளைகளிடத்திற்குத் திருப்பினான் ...''

81. அடுத்தது, பிள்ளைகளின் இருதயங்களை பிதாக்களிடம் திருப்புவது.'' இப்பொழுது இந்த மகத்தான எலியாவானவன் இந்தக் கடைசிக் காலத்தில் வருகையில், அவன் வந்து, பெந்தெகொஸ்தே செய்தியை எடுத்துக்கொண்டும், பிள்ளைகளை பிதாக்களின் விசுவாசத்திற்கு நேராகத் திருப்புவான், ஏனெனில், அவர்கள் ஆதியில் இருந்த அதே விசுவாசத்தை கைக்கொள்ளாமற் போய்விட்டபடியால், அவர்களை அவன் கடிந்து கொள்ளுவான். ஆமென்! அது எலியாதான் என்பதை நாம் நன்கு உணர்ந்திருக்கிறோம் என்பதை நான் நம்புகிறேன். நாம் அவ்வாறு செய்யவில்லையா? இப்பொழுது நாம் அதை அறிவோம்.

82. கர்த்தருடைய பயங்கரமான நாள் யோவான் வந்தபொழுது வரவில்லை. "அப்படியெனில், இம்மனிதன் வெறும் பிரசங்கியாகத் தான் இருப்பானோ?" என்று நான் அடிக்கடி வியந்ததுண்டு. எலியா எல்லா அற்புதங்களையும் செய்தான். அதிகம் பிரசங்கிக்க வில்லை. ஆனால் எலியாவின் ஆவி யோவான் மேல் இருந்த பொழுது, அதுதானே பிரசங்கிப்பதையெல்லாம் செய்தது, ஆனால் அற்புதங்களைச் செய்யவில்லை. ஏன்? இயேசு அவனைத் தொடர்ந்து வரவிருந்தார். அவரே அற்புதங்களை செய்யவிருந்தார். ''... நீதியின் சூரியன் உதிக்கும்... அதின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும்'' என்று அவன் கூறினான். எனவே, யோவானுக்கு அற்புதங்களைச் செய்ய வேண்டியதாக இருக்கவில்லை. அவன் கிறிஸ்துவின் வருகையைக் குறித்து அறிவிப்புச் செய்பவனாக மட்டுமே இருந்தான். அவர்கள் ....

83. இந்த யோவான் .... அல்லது வரவேண்டிய இந்த எலியாவானவன் தவறாகப் புரிந்துகொள்ளப்படுவான் என்பதை நீங்கள் நினைவில் கொள்ளுங்கள். அவன் தான் மேசியா என்று மக்கள் நினைக்குமளவுக்கு அவன் கர்த்தருக்கு முன்பாக அத்தகைய மகத்தான வல்லமை பொருந்திய மனிதனாக இருப்பான்.

84. ஏனெனில் அவனது மிகவும் சிறந்த நண்பர்கள் அவனிடம், ''நீர்தான் மேசியா'' என்று கூறினார்கள்.

85. அவனோ, ''எனக்குப் பின் ஒருவர் வருகிறார், அவரது பாதரட்சையின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரனல்ல'' என்று கூறினான்.



சகோதரனே, எந்தவொன்றும் கிருபாசனத்தைத் தொடவில்லை, அணுகவேண்டிய முறையில் அல்லாமல்.

327. கிருபாசனத்தை எதுவும் அணுக வேண்டுமானால், அது இரத்தத்தின் மூலமாகத்தான். ஆரோன் வருடத்திற்கொருமுறை அங்கே இரத்தத்தோடு பிரவேசித்தான். இப்பொழுது அதை நீங்கள் புரிந்து கொண்டீர்களா? இப்பொழுது கவனியுங்கள். இந்த ஒவ்வொரு மூன்று கோத்திரங்களின் தலைவர்கள் ஒவ்வொருவரும் கிருபாசனத்தை காவல் காத்துக்கொண்டிருந்தார்கள்; அதாவது பழைய ஏற்பாட்டின் கிருபாசனத்தை, இதை நீங்கள் யாவரும் குறித்துக்கொண்டீர்களா? இதோ இங்கே புத்தம் புதிய விஷயம் ஒன்றுள்ளது, சகோதரனே! இதைக் கவனித்துக் கேளுங்கள், பிறகு நாம் போகலாம். அவர்கள் பழைய ஏற்பாட்டிலுள்ள காவலாளிகள் என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள். எத்தனை பேர்கள் அதை வேதத்தில் வாசித்திருக்கிறீர்கள்? அது சரிதான் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவர்கள் பழைய ஏற்பாட்டின் காவலர்கள் என்பதைப் பாருங்கள்.

328. இப்பொழுது நாம் வேறு ஒரு யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மகிமை! ஓ, நான் இந்தக் காலத்தை நேசிக்கிறேன். நீங்கள் நேசிக்கவில்லையா? இப்பொழுது இக்காலத்தில் தேவனுக்கு காக்கப்படும்படியான ஒரு கிருபாசனம் உள்ளது. நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? இக்கிருபாசனம் எங்கே காணப்படுகிறது? மனிதனின் இருதயத்தில், அது மனிதனின் இருதயத்திற்குள் எப்பொழுது வந்தது? பெந்தெ கொஸ்தே என்னும் நாளில், தேவனாக இருக்கிற பரிசுத்த ஆவியானவர் மானிட இருதயங்களில் பிரவேசித்தபொழுது வந்தது. அப்படித்தானே? இதை நாம் இங்கே குறித்துக்கொண்டு, நீங்கள் விரும்பினால் வரைந்து கொள்ள ஆயத்தமாவோம். பெந்தெகொஸ்தே, இதை நான் இங்கே குறிக்கிறேன். இதுதான் கிருபாசனம், பரிசுத்த ஆவியானவர். இங்கே குறியுங்கள்... அது என்னவென்று நான் உங்களுக்குக் கூறுவேன். அதை அது மிகவும் பொருத்தமானதாக ஆக்கும். இங்கே 'புறா'' என்று நாம் குறித்துக்கொள்வோம், அது ஒரு பறவை - அதன் அர்த்தம் என்னவெனில்..... இன்று கிருபாசனத்தை காவல் செய்ய தேவனுக்கு காவலாளிகள் உண்டு. ஆம், இப்பொழுது இது எவ்வளவு அழகாக வரையப்பட்டுள்ளது!

329. அன்றொரு நாள் நான் உட்கார்ந்திருக்கையில், இதைப்பற்றி கண்டபொழுது, மேலும் கீழும் குதித்து, எனது இருக்கையைச் சுற்றி சுற்றி ஓடிவந்து, ''மகிமை! மகிமை! மகிமை! மகிமை! மகிமை!'' என்று

322. இப்பொழுது இங்கே இருக்கிற தாணுக்குரியது கழுகு ஆகும். ரூபனுக்கு மனுஷ முகக்கொடி இருந்தது. எப்பிராயீமுக்கு காளை முகங்கொண்ட கொடியிருந்தது. அந்த சித்திரத்தை நீங்கள் பெற்றுக்கொண்டீர்களா? எப்பிராயீம்... வேதாகமத்தில் கூறப் பட்டுள்ளபடி அவர்கள் அவ்வாறுதான் பாளயமிறங்கியிருந்தார்கள்.

323. நீங்கள் கவனிப்பீர்களானால், தாண் மூன்று கோத்திரங்களுக் கும், யூதா மூன்று கோத்திரங்களுக்கும், ரூபன் மூன்று கோத்திரங்களுக்கும் எப்பிராயீம் மூன்று கோத்திரங்களுக்கும் முறையே தலைவராயிருந்தார்கள். மூன்றை நான்கால் பெருக்கினால் பன்னிரண்டு ஆகும். ஆக பன்னிரண்டு இஸ்ரவேலின் கோத்திரங்கள். ஒவ்வொருவரும் தத்தமது கொடியோடு இருந்தனர். யூதாவின் கொடியானது சிங்கக்கொடியாகும். ரூபனின் கொடி காளை முகங் கொண்டதாகும். தாணுக்கு கழுகு முகங்கொண்ட கொடியிருந்தது.

324. இங்கே யோவான் என்ன கூறுகிறான் என்பதைப் பாருங்கள். பரலோகத்திலும் இவ்வாறே இருக்கிறதா என்பதைப் பற்றி இப்பொழுது நாம் வாசித்து தெரிந்து கொள்வோமாக.

“முதலாம் ஜீவன் சிங்கத்திற்கொப்பாகவும்.... (யூதா...) இரண்டாம் ஜீவன் காளைக்கொப்பாகவும், (அது இளங்காளை யாகும்) மூன்றாம் ஜீவன் மனுஷமுகம் போன்ற முகமுள்ளதாகவும், நான்காம் ஜீவன் பறக்கிற கழுகுக்கு ஒப்பாகவுமிருந்தன."

வெளி. 4:7

325. அதேவிதமாகத்தான் இஸ்ரவேலின் கோத்திரங்கள் சூழப் பாளயமிறங்கியிருந்தார்கள். உடன்படிக்கைப் பெட்டிக்குரிய உரிமையை பூமியில் காவல் காக்கிறவர்களாயிருந்தார்கள். அல்லேலூயா! அதை நீங்கள் கண்டுகொள்ளவில்லையா?

326. இங்கே கிருபாசனம். கிருபாசனம். அக்கோத்திரங்களைத் தாண்டி வேறு எதுவும் அங்கே எந்த இடத்திலும் ஊடுருவி வந்து விடமுடியாது. எதைத்தாண்டி வரவேண்டும்? சிங்கத்தை தாண்டி - மனுஷனைத் தாண்டி, மனுஷனுடைய விவேகம் - கடுமையாக உழைக்கும் மிருகமாகிய காளையைத் தாண்டி, விரைவாக இயங்குகிற கழுகைத் தாண்டி வரவேண்டும். பார்த்தீர்களா? வானம், பூமி, இதற்கு இடைப்பட்ட பிரதேசத்தில், எங்கும் சுற்றிச் சூழ அவர்கள் காவலராயிருக்கிறார்கள். அதற்கு மேலே அக்கினி ஸ்தம்பம் இருந்தது.



86. ஏனெனில் அவர்கள் ஒரு மேசியாவைக் காண்பதற்காக எதிர்பார்ப்போடு இருந்தார்கள். மேசியா வரப்போகிறார் என்று அவர்கள் எண்ணினர். இந்த மகத்தான விசேஷித்த நிகழ்ச்சி அவர்கள் நடுவில் தோன்றியபொழுது, “இவரே அந்த மேசியா'' என்றார்கள்.

87. ''நான் அவரல்ல, அவர் எனக்குப்பின் வருகிறார்'' என்று யோவான் கூறினான்.

88. ஓ, என்னே! நீங்கள் அதைப் புரிந்து கொண்டீர்களா? எனவே அவனுடைய நெருங்கிய நண்பர்கள் அவனே தான் மேசியா என்று எண்ணுவார்கள்.

89. இதைப் போலவே, நடக்கிற இன்னொரு விஷயத்தையும் இங்கே கவனியுங்கள். அவன் தானே கர்த்தருடைய வருகைக்கு சற்று முன்பாக வருவான். யோவானின் நாட்களில் பூமியானது பற்றியெரியவில்லை, எனவே அது எதிர்காலத்தில் நடைபெற வேண்டிய ஒரு நிகழ்ச்சியாகும். எலியா முதலில் வருகையில், அவன் பிரசங்கம் மாத்திரமே செய்தான். இரண்டாவது தடவை யாக அவன் வரும்பொழுதோ, அவன் பிரசங்கித்தலையும், இயேசு வாக்குரைத்த அடையாளங்களையும் ஆக இவ்விரண்டையுமே செய்யக் கூடியவனாக இருப்பான். வரவிருக்கிற இந்த தீர்க்கதரிசியின் இயல்பைக் குறித்து இப்பொழுது பார்ப்போமாக.

90. இந்த கடைசி சபைக் காலத்திற்குரிய இந்த தூதனானவனைப் பற்றி, பழைய ஏற்பாட்டிலிருந்தே முன்னுரைக்கப்பட்டுள்ளது. ஏனையோர்களைப் பற்றி முன்னுரைக்கப்படவில்லை. பவுல், ஐரேனியஸ் போன்றோர்களைப் பற்றி குறிப்பிட்டு முன்னுரைக்கப் படவில்லை. ஆனால் இந்த கடைசி காலமானது, உலகத்தின் முடிவாக இருப்பதால், அது அத்தகைய பயங்கரமான வேளையாக இருக்கும், அதுதானே நம் முன்னாலேயே இருந்துகொண்டிருக்கிறது, எனவே இந்த காலத்தின் தூதனானவன் வேதவாக்கியத்தின் முன் காலத்திலேயே முன்னுரைக்கப்பட்டுள்ளான். இந்த தொன் மையான வேத வாக்கியத்தில் முன்னுரைக்கப்பட்டுள்ளது, காலத்தின் முடிவில் வருவது மகத்தான விதமாக அபிஷேகம் பண்ணப்பட்ட எலியா தான்.

91. இப்பொழுது கவனியுங்கள். என்னவிதமான இயல்புடையவனாக எலியா இருப்பான்? முதலாவதாக, அவன் தானே தேவ னுடைய வார்த்தைக்கு உண்மையுள்ள வல்லமையான தீர்க்கதரிசியாக இருப்பான். ஏனெனில், எலியா உண்மையுள்ளவனா யிருந்தான். யோவானும் உண்மையுள்ளவனாயிருந்தான். அது சரிதான். அவன்

அற்புத அடையாளங்களை செய்வித்து, பிள்ளைகளுடைய இருதயங்களை பெந்தெகொஸ்தே பிதாக்களுடைய விசுவாசத்திற்கு திருப்புவான். இவனும் எலியாவைப் போல், ஸ்தாபனத்தை வெறுப்பவனாக இருப்பான். அவன் அவ்வாறு தான் இருப்பான். அவனுடைய ஊழியத்தின் வேளையானது நமக்கு ஆரம்பித்துவிட்டது என்று நான் எண்ணுகிறேன். அவன் வர வேண்டிய வேளையானது வந்துவிட்டது. அவன் ஸ்தாபனங்களை வெறுப்பான். எலியா அவைகளை வெறுத்தான், அதைப் போலவே யோவானும் ஸ்தாபனங்களை வெறுத்தான்.

92. யோவான் கூறினான், 'ஆபிரகாம் உங்களுக்குத் தகப்பன் என்று நினையாதிருங்கள். விரியன் பாம்புகளாகிய பரிசேயரே, சதுசேயரே வேறு விதமாகக் கூறினால், ''புல்லில் உள்ள பாம்புகளே, தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டு பண்ண வல்லவராயிருக்கிறார்'' என்றான்.

93. ''அவர்கள் யாவரும் வழிதப்பிப்போய் விட்டார்கள், அவர்கள் ஒவ்வொருவரும் நான் ஒருவன் மாத்திரம் மீந்திருக்கிறேன்'' என்று எலியா கூறினான். ஓ, என்னே !

94. அவனுங்கூட நவநாகரிகப் பெண்களை வெறுப்பவன். எலியா அவ்வாறு செய்தான், யேசபேலை எலியா வெறுத்தான். அது சரிதானே? யோவான் ஏரோதியாளை வெறுத்தான். அந்த இரு தீர்க்கதரிசிகளிலுமே ஒரே ஆவியானவர் தான் இருந்தார். அவர்கள் மதஸ்தாபன உலகை, சபை உலகத்தை, வெறுத்தனர், அவர்கள் இருவருமே, நவநாகரிக பொல்லாங்கான ஸ்திரீகளை வெறுத்தனர். அவர்கள்... அந்த காரியத்திற்கெதிராக அவர்கள் ஆவியில் இருந்த ஒன்று கூக்குரலிட்டது. யேசபேல் எலியாவின் தலையை வாங்க அவனைத் துரத்திக்கொண்டிருந்தாள். அதே போல் யோவானையும் கொல்ல ஏரோதியாள் திட்டம் தீட்டினாள். அவர்கள் இருவருமே அவ்வாறு இருந்தார்கள்.

95. இந்த தீர்க்கதரிசியானவன் வனாந்திரத்தை நேசிக்கிறவனாக இருப்பான். எலியாவைப் போல. அவனும் வனாந்திரத்தில் தனிமையில் வாழ்ந்தான். யோவானுங்கூட வனாந்திரத்தில் மட்டுமே வாழ்ந்தான். அது எலியாவாகத்தான் இருக்கும் என்று நாம் அறிகிறோம்.

96. இந்த தீர்க்கதரிசியானவன் உண்மையான தேவ வசனத் தோடு நிலைத்திருப்பான். ஆம், இவன் முழு வார்த்தையோடு நிலைத் திருப்பான். எதற்காக? எபேசு சபையில் இருந்த அவ்விசுவாசமானது



வைக்கப்படவில்லை. ஏன்? உங்களு டைய டாலர் நோட்டில் அதை நீங்கள் கவனித்தீர்களா? அதை எடுத்து பாருங்கள், இதில் தலைக்கல் இல்லாமல் இருக்கிறது. ஏன்? அதற்கு தலைக்கல் ஒருபோதும் வைக்கப்படவில்லை. கிறிஸ்துவே புறக்கணிக்கப்பட்ட தலைக்கல்லாயிருக்கிறார். அவர் புறக்கணிக்கப் பட்ட தலைகல்லாயிருக்கிறார். அவர் சீக்கிரத்தில் வரப்போகிறார். லூத்தரின் காலத்தில் அந்த சபையைக் கவனியுங்கள். அடிப்பாகத்தில் இருக்கிற சபையைப் பாருங்கள். அது மேலே மேலே வரவர, அது சிறுபான்மையினராக, ஆகிக்கொண்டே வந்து, பிறகு பெந்தெகொஸ்தேயின் காலத்தில் கொண்டு வந்துவிடுகிறது, அதன்பிறகு, தலைக்கல் வருவதற்கு ஏற்ற வகையில் ஒவ்வொரு கல்லும் சரியாக பொருத்தப்படுகிறது; அந்தத்தலைக்கல் வரும் போது, அது நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிற இயேசுவைக் கொண்டு வரும் சபையாக அது இருக்கும். அது எவ்விதத்திலும் பூரணமானதாக இருக்கிறது. இப்பொழுது அவர் யூதா கோத்திரத்து சிங்கமாயிருக்கிறார்.

320. வேதத்தை வாசித்திருக்கிற எவரும் தாண் கோத்திரத்தின் எண் என்ன என்பதை அறிவீர்கள். தாணின் கொடி என்ன என்பதை அறிவீர்கள் என்பதை பற்றித்தான் நான் இங்கே குறிப்பிட்டேன். அவனுடைய கொடி கழுகு ஆகும். அதுதான் சரி. அவன் ஒரு கழுகு. வேதத்தை யாராகிலும் படித்திருந்தால், அவன் ஒரு கழுகு என்பது தெரியும்.

321. ரூபனுக்குரியது மனுஷ முகமுள்ள கொடியாகும். அவன் தான் மூத்த குமாரன், பிள்ளைகளெல்லாரிலும் அவன்தான் மிகவும் துன்மார்க்கனாயிருந்தான். அவ்வாறு ஆதியாகமம் 49ம் அதிகாரத் தில் யாக்கோபு கூறவில்லையா? ''ரூபனே, நீ என் சேஷ்ட புத்திரன், நீ என் சத்துவமும் என் முதற்பெலனுமானவன்... தண்ணீரைப் போல் தளும்பினவனே, உன் தகப்பனுடைய மஞ்சத்தின் மேல் ஏறினாய், நீ அதைத் தீட்டுப்படுத்தினாய்...''. ரூபன் தன் தந்தையின் மறுமனையாட்டியோடு வாழ்ந்தான். அதுதான் மனித இனத்திற்கே உரித்தான ஒழுக்கக்கேடான செய்கையாகும். மிருகங்கள் அவ்விதமான ஒழுக்கக்கேடுகளைப் பெற்றிருக்கவில்லை. சிங்கமோ அல்லது வேறு எந்த மிருகமும் இவ்வாறு செய்யாது. ஆனால் மனிதன் அவ்வாறு செய்வான்; பிற மனிதனின் மனைவியோடு ஒழுக்கக்கேடாக நடந்து கொள்வான். அதேவிதமாகத் தான் அவன் செய்வான். யாவும் பூர்த்தியாயிருக்கிறது.

இருபத்து நான்கு மூப்பர்களும் சிங்காசனத்தில் வீற்றிருக்கிற வருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுதுகொண்டு, தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்கு முன்பாக வைத்து:

கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையை யும் பெற்றுக்கொள்ளுகிறவதற்குப் பாத்திரராயிருக்கிறீர்; நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளு மாயிருக்கிறது என்றார்கள்.

வெளி. 4:7-11

317. இப்பொழுது கவனியுங்கள். கிழக்குப் பாகத்தில் என்னவிதமான முகத்தை அவன் கண்டான்? அதை நீங்கள் கவனித்தீர்களா? அதுதானே சிங்கம் போன்ற முகத்தை, சிங்கமுகம் பொறித்த கொடியிருந்தது. அதுதான் யூதாவின் கொடியாகும். ஏனெனில் அவர்.... இயேசு அதிலிருந்துதான் வருகிறார். அது உண்மை . அவர் யூதா கோத்திரத்து சிங்கமானவர்.

318. எத்தனை பேர்கள், வானத்தின் 12 ராசிகளை பார்த்திருக் கிறீர்கள்? அது என்ன என்பதை உங்களில் அநேகர் அறிந்திருக்கிறீர்கள், அவைகள் நட்சத்திரங்களாகும். அதுவே தேவனுடைய முதலாவதான வேதாகமமாகும். 12 வான இராசிகளில் முதலா வதான எண்ணாக இருக்கிறது எது? எதிலிருந்து ஆரம்பிக்கிறது? முதல் உருவம் எது? முதலாவது கன்னி இராசியாகும். அது சரி தானே? கடைசியானது என்ன? சிங்கம் - சிம்ம இராசி. கிறிஸ்துவின் முதலாவது வருகையும், இரண்டாவது வருகையும் அவற்றிலெல்லாம் காணலாம். அவர்கள் இனக்கலப்பு செய்யப்பட்ட நண்டை உடையவர்களாயிருக்கிறார்கள். அதுவே இனக்கலப்பின் காலம், இனக்கலப்பு செய்யப்பட்ட மீன்களும் உள்ளன. அதுவே கடக இராசியின் காலமாக இருக்கிறது, அதன் வழியாகத்தான் நாம் ஜீவித்து வந்திருக்கிறோம். இது கான்சரின் காலமாக இருக்கிறது.

319. ஏனோக்கு தன் காலத்தில் அந்த பெரிய கூர்நுனிக் கோபு ரத்தை (Pyramid) கட்டிய போது, ஒவ்வொரு கல்லும் அதில் இருந்தது. அவைகளை அவர்கள் அளந்து, சரியாக என்ன நடக்கும் என்பதை, நடக்கப் போகும் யுத்தங்களைப் பற்றியெல்லாம் எடுத்துக்கூற முடிந்தது. அந்த கூர்நுனிக்கோபுரம் தலைக்கல் ஒன்றைத் தவிர மற்ற எல்லாவற்றிலும் பூர்த்தியாக இருந்தது. அதற்கு தலைக்கல் மட்டும்



இத்தனை காலமும் இழந்து போய்விட்டிருந்தது, அதை திரும்ப பெற்றளிப்பதற்காகத்தான். தனக்கு முன்பாக 'திறந்த வாசலைப் பெற்றிருந்து, அதை நிராகரித்து விட்டிருக்கிற சபைக்கு அதைத் திரும்ப அளிப்பதற்காக இந்த எலியா வருவான்.

97. இவன் ஒரு கல்விமானாக இருக்க மாட்டான். திஸ்பியனாகிய எலியாவும் கல்விமான் அல்ல. யோவான் ஸ்நானனும்கூட கல்விமான் அல்ல. லூக்கா 1:67ல் வேதம் கூறுகிறது, "அவன்... அந்தப் பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பலங்கொண்டு, இஸ்ர வேலுக்குத் தன்னைக் காண்பிக்கும் நாள் வரைக்கும் வனாந்தரங் களிலே இருந்தான்''. யோவானைப் பற்றி லூக்கா 1:67 முதல் 80 முடிய உள்ள வசனங்களில் கூறப்பட்டுள்ளது. குறித்துக் கொள்ள விரும்பினால் நீங்கள் அதைக் குறித்துக் கொள்ளலாம்.

98. இந்த தீர்க்தரிசியுங்கூட துக்கமான மனநிலை (moody) உள்ளவனாக இருப்பான். எலியா ஒரு பெரிய கூட்டம் நடத்திய பிறகு, யாரும் அவனோடு ஒத்துப் போக முடியவில்லை. மெய் மறந்த நிலையில் ஆவிக்குள்ளாகுதல்கள் எலியாவுக்கு இருந்தது. அவன் புறப்பட்டுச்சென்று, வானத்திலிருந்து அக்கினியை வரவழைத்து, பாகாலின் பலிபீடங்களை சுட்டெரித்து, மகத்தான காரியங்களைச் செய்தபொழுது, அவன் தானே வனாந்திரத்திற்கு ஓடிப்போய், "கர்த்தாவே, நான் பிதாக்களைவிட நல்லவனல்ல, நான் சாகட்டும்'' என்று கூறினான். அப்படித் தானே அவன் கூறினான்? (மேலும் யோவானும்...) எலியா ஒரு சூரைச்செடியின் கீழ் உட்கார்ந்து கொண்டு விட்டான். அவன் ஒரு பெரிய எழுப்புதலுக்குப் பிறகு, இப்பொழுது சாகவேண்டுமென்று விரும்புகிறான்.

99. அவர்கள் யோவானை சிறையிலிட்டபொழுது, (இந்த அவருக்கத்தக்க ஸ்திரீயோ) அவன் அங்கே அமர்ந்து, துயருற்ற மனோபாவத்துடன் இருக்க ஆரம்பித்தான். பெம்பர் என்பவரோ வேறு யாரோ "யோவானின் கழுகுக் கண்கள் சிறையிலிருந்துகொண்டு தூரத்தில் நடப்பவைகளை படம்பிடித்தது'' என்று கூறினார் என்று நினைக்கிறேன். அவன் தன்னுடைய சீஷர்களில் சிலரை அனுப்பினான்.

100. "இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி'' என்று அவனே அறிக்கையிட்டுமிருந்தான். அக்கினிஸ்தம்பம் அவருக்குமேல் ஒரு புறாவைப் போல தொங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்தான். அது இறங்கி வந்து அவர்மேல் தங்கினதை அவன்

கண்டான். அவை யாவையும் அவன் கண்னாரக் கண்டிருந்தான், “இதோ தேவாட்டுக்குட்டி'' என்று கூறினான். ''உம்மால் நான் ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருக்க நீர் என்னிடத்தில் வரலாமா'' என்று யோவான் கூறினான்.

101. "இப்பொழுது இடங்கொடு'' என்று இயேசு கூறினார்.

102. ஆனால் அவர்கள் அவனை சிறையிலடைத்தபொழுது, வெகு விரைவில் அவன் சோர்வடைந்த நிலையில் ஆகிவிட்டான். அவனைப் புரிந்து கொள்வதே கடினமாக இருந்தது. அவனை அவர்கள் சிறையில் அடைத்தபொழுது, அவரிடம் போய், உண்மையிலேயே வரவேண்டியவர் அவர்தானா அல்லது வேறொருவர் வரக் காத்திருக்க வேண்டுமா என்று கேட்டு வாருங்கள்'' என்றான். எலியா செய்ததைப் போலவே அவனும் அப்படியே செய்தான்.

103. அவன் தானே ஒரு வகையான மனச் சோர்வுள்ள ஒரு நபராக இருந்தான். அவனுக்காக நாம் பரிதாபப்படுகிறோம். ஏனெனில் அத்தகைய ஒரு மனோநிலை எத்தகையது என்பதை நாம் அறிவோம்.

104. இப்பொழுது, சபையானது அவன் தோன்றுகையில்.... இந்த விஷயத்தை நான் இத்தோடு விட்டுவிடுவது நல்லது. அவன் தோன்றுகையில் சபையானது... தேவன் நமக்கு அனுப்பவிருக்கிற வல்லமை பொருந்திய இந்த எலியாவானவன் தன்னை அறியப் படுத்தும்பொழுது, எலியா செய்தது போல இவன் தன்னை யாரென்று தெரியப்படுத்துகையில், சபையானது விடுதலையாக்கப்பட ஆயத்தமாக இருந்தது, அஞ்ஞான மார்க்கத்தின் கரங்களிலிருந்து அது விடுவிக்கப்பட்டது. அப்படித்தானே நடந்தது? "யார் மெய்யான தேவன் என்பதை நாங்கள் நிரூபிப்போம்'' என்று கூறிக்கொண்டு அவன் வந்தபொழுது, எலியா சபையை விடுதலை செய்தான். யோவான் இயேசுவைக் கண்டபொழுது, 'அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்'' என்று கூறினானே, அதைப் போலவே, அவ்வாறு யோவான் செய்ததைப் போலவே, கர்த்தருடைய வருகைக்கு சற்று முன்பு யோவான் பிரசங்கிக்கவும், தன்னை யாரென்று தெரியப்படுத்தவும் செய்தான். சரியாக முடிவில் பிரத்தியட்சமாகுதல் உண்டாயிற்று.

105. இந்த சபையின் காலத்தில் வரவேண்டியவன் தான் அந்த எலியா என்பதை நாம் கண்டு கொண்டோம். அது எலியாதான் என்பதை நிரூபிக்கும்படி. எலியா தனது தீர்க்கதரிசனத்தை உரைத்த பிறகு.. எலியா மரிக்க வேண்டியதாயிருக்கவில்லை. அவன் மறுரூபப்படுத்தப் பட்டு, பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டான். அவன் தானே



கொடியோடு, பாளயமிறங்கியிருக்கும் மூன்று கோத்திரங்களும் யூதாதான் தலைமையாக இருப்பான். மூன்று கோத்திரங்களும், தங்கள் கொடியாக யூதாவின் கொடியோடு இருந்தார்கள். உங்களுக்கு நினைவில் இருக்கும்.... சிசில் டிமில் தயாரித்த பத்துக்கட்டளைகள் திரைப்படத்தை எத்தனை பேர் பார்த்திருக்கிறீர்கள்? கிழக்குத் திசையில் யூதா கோத்திரம் இருந்ததாக நீங்கள் இங்கே வேதவாக்கியத்தில் வாசித்திருக்கிறீர்கள்.

313. மேற்குத் திசையில் இங்கே, அதையும் குறித்துக் கொள்ளுங்கள். நீங்கள் அதைக் குறித்து யாத்திராகமத்தில் வாசிக்கலாம். மேற்கில் எப்பிராயீம் இருந்தான். மேற்கில் மூன்று கோத்திரத்தார் தங்கள் கொடியோடு இருந்தனர்.

314. தெற்கில் ரூபன் கோத்திரத்தார் - அங்கே மூன்று கோத்திரத் தார் தங்கள் கொடியோடு இருந்தனர்.

315. வடக்கில் தான் கோத்திரம். தங்கள் கொடியோடு மூன்று கோத்திரங்கள் அங்கே இருந்தன.

316. அவ்விதமாகத்தான் அவர்கள் பாளயமிறங்கியிருந்தார்கள். இதை நாம் சரியாகப் புரிந்து கொள்வதற்காக, வேதவாக்கியங்களிலிருந்து இதைப்பற்றி சற்று வாசிப்போமாக. நான் 7ம் வசனத்திலிருந்து ஆரம்பிப்பேன்.

முதலாம் ஜீவன் சிங்கத்திற்கொப்பாகவும், இரண்டாம் ஜீவன் காளைக் கொப்பாகவும், மூன்றாம் ஜீவன் மனுஷ முகம் போன்ற முகமுள்ளதாகவும், நான்காம் ஜீவன் பறக்கிற கழுகுக்கு ஒப்பாகவு மிருந்தன.

அந்த நான்கு ஜீவன்களிலும் ஒவ்வொன்றும் அவ்வாறு சிறகு களுள்ளவைகளும், சுற்றிலும் உள்ளேயும் கண்களால் நிறைந்த வைகளுமாயிருந்தன. அவைகள் : இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று இரவும் பகலும் ஓய்வில் லாமல் சொல்லிக்கொண்டிருந்தன.

மேலும், சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்து, சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறவருக்கு அந்த ஜீவன்கள், மகிமையையும் கனத்தையும் ஸ்தோத்திரத்தையும் செலுத்தும் போது,

மிருகங்கள் அல்ல என்றும் எத்தனை பேர் அறிவீர்கள்? அவைகள் உன்னதமானதொரு நிலையில் உள்ளவைகளாகும்.

310. இப்பொழுது ஒரு தேவதூதன் என்னப்பட்டவன் மனி தனைவிட மேலான நிலையில் உள்ளவனா, அல்லது தாழ்ந்த நிலையில் உள்ளவனா? நல்லது, ஐயா. ஒரு தேவ புத்திரன் மேலானவனா அல்லது ஒரு தேவதூதனா? தேவபுத்திரன்தான் மேலானவன். தனக்கு முன் நின்று ஒரு காரியத்திற்காக வேண்டுதல் செய்யும் தூதனுக்கு தேவன் சிறப்பாக செவிகொடுப்பாரா, அல்லது உங்களில் ஒருவர் செய்யும் வேண்டுதலுக்கு சிறப்பாகச் செவி கொடுப்பாரா? உங்களுக்குதான்! ஏனெனில், நீங்கள் அவருடைய குமாரரும் குமாரத்திகளுமாய் இருக்கிறபடியால். தேவதூதர்கள் பணிவிடைக்காரரர்கள். அவர்கள் பணிவிடைக்காரர், நீங்களோ, அவருடைய குமாரரும் குமாரத்திகளுமாய் இருக்கிறீர்கள். ஆகவே, உங்களுக்கு என்ன அதிகாரம் உள்ளது என்பதைப்பற்றி பாருங்கள். இதுதான் நீங்கள் அதை உபயோகிக்க வேண்டிய இடமாக இருக்கிறது.

311. இது அழகாக இருக்கிறது, இங்கே நீங்கள் இதை கவனிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். ஓ! சில விஷயங்களை கூறாமல் நான் விட்டுவிட்டு, இந்த விஷயத்திற்கு வருகிறேன். இப்பொழுது உங்களுடைய எழுதுகோல்களை எடுத்துக்கொள்ளுங்கள், உண்மை யிலேயே நீங்கள் இந்த ஒன்றை வரைந்து எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் விரும்பினேன். (சகோ. பிரன்ஹாம் கரும் பலகையில் ஒன்றை வரைகிறார் - ஆசி.). நாம் அதை சற்று சிறிய தாக வரைவது நலமாயிருக்கும். இதை மிகவும் கவனமாக கவனியுங்கள், இஸ்ரவேலர் தங்களது யாத்திரையில், அவர்கள் பாளய மிறங்கியபோது, ஒவ்வொரு திசையிலும் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு. (நான் தவறாகக் குறிப்பிட்டுவிட்டேன்). ஒவ்வொரு திசையிலும் ஒன்று, இரண்டு, மூன்று, ஒன்று, இரண்டு, மூன்று, ஒன்று, இரண்டு, மூன்று, ஒன்று, இரண்டு, மூன்று என்று நாற்திசையிலும் திசைக்கு மூன்று கோத்திரம் வீதம் கிருபாசனத்தைச் சூழ்ந்து பாளயமிறங்கியிருந்தார்கள். நீங்கள் யாவரும் அதை அறிவீர்கள். நீங்கள் இப்பொழுது இதைப் பார்த்திருக்கிறீர்கள், அதைக் குறித்து பழைய ஏற்பாட்டில் வாசியுங்கள்.

312. இதோ இங்கே கிழக்குத் திசை. நான் அதை இவ்வரை படத்தில் குறித்து விடுகிறேன், அப்பொழுது நீங்கள் நிச்சயமாக அதை குறித்துக்கொள்ள முடியும். கிழக்கு-கிழக்குத் திசையில் எப்பொழுதும் யூதாதான் இருப்பான். இதுதான் வாசல். யூதா கோத்திரம். தங்கள்



வரப்போகும் எலியாவின் காலத்தின் முடிவில் எடுத்துக் கொள்ளப்படும் சபைக்கு முன்னடையாளமாயிருக்கிறான். அவனது காலத்தின் முடிவில், சபையானது மரணத்தின் நிழல்களுக்குள் போகாமல், எடுத்துக் கொள்ளப்படுதலில் போய்விடும். அதுவே எடுத்துக் கொள்ளப்படுதலாகும். அந்த மகத்தான எலியாவானவன், வரவேண்டிய அந்த மகத்தான அவன், இந்த கடைசிநாளுக்கென தீர்க்கதரிசனமாக உரைக்கப் பட்ட அபிஷேகம் பண்ணப்பட்ட எலியாவாக இருப்பான் என்று நான் விசுவாசிக்கிறேன். ஆமென்! அவன் அப்படிப்பட்டவனாயிருப்பான் என்று நான் விசுவாசிக்கிறேன். கடைசி நாட்களில், புறக்கணிக்கப்பட்ட, அவமதிக்கப்பட்ட மக்களடங்கிய இச்சபையானது அந்த நிலைமைக்குள் போகும். ஏற்கனவே அப்படிப்பட்ட நிலையில் உள்ளது, அந்த சபைக்கு அவன் ஒரு தூதனாக, செய்தி யாளனாக இருப்பான். வேதாகமத்தில் எலியா வருவானென்று வாக்குத்தத்தம் கூறப்பட்டுள்ளது என்று நான் எண்ணுகிறேன். அதை நாம் புரிந்துகொள்ள முடியும் என்று நான் எண்ணுகிறேன், அந்த எலியா, இந்த நாளில் வரவேண்டுமென வேதத்தில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவன் ஆவான். அதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

106. இப்பொழுது நாம் லவோதிக்கேயாவுக்குத் திரும்புவோம். லவோதிக்கேயாவைப் பற்றி நமது கர்த்தர் நமக்கு இன்றிரவில் என்ன கூறவிருக்கிறார் என்பதை நாம் பார்ப்போமாக. அது ஒரு லவோதிக்கேயா, நல்லது. முதலில் சபைக்கு வாழ்த்துதல் கூறப்பட்டுள்ளது.

'... கர்த்தருடைய தூதனுக்கு...

107. வெளிப்படுத்தின விசேஷம் 3ம் அதிகாரம் 14ம் வசனம் :

கர்த்தருடைய தூதனுக்கு...

".... லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது என்னவெனில்: உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும், தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென் என்பவர் சொல்லுகிறதாவது."

வெளி. 3:14.

108. ஓ, என்னே! நமக்கு யாவும்... அதன் பேரில் சிந்திக்க நமக்கு முழு இரவும் எடுத்துக் கொண்டால், அதைக் குறித்து கர்த்தர் எவ்வளவாய் நமக்கு வெளிப்படுத்துவார்! கவனியுங்கள்.

109. "ஆமென்'' என்பது "இறுதியாகும்.'' கடந்து சென்ற காலமெல்லாம் அவர் வெவ்வேறு வகையில் தோற்றமளித்திருக்கிறார், ஆனால் இங்கே இந்த கடைசி சபைக் காலத்திலோ, "நான் முடிவாக இருக்கிறேன், அதுவே முடிவு'' என்று கூறுகிறார்.

110. அவரே முந்தினவர் என்பதை இப்பொழுது காண்பிக்கத்தக்க தாக.... அவரே "தேவனுடைய சிருஷ்டிக்கு முந்தின பேறுமானவர்'', ஓ! அதை நீங்கள் கிரகித்துக் கொண்டீர்களா? பாருங் கள்? தேவன் ஒரு ஆவியாயிருப்பாரானால், அவர் எப்படி சிருஷ் டிக்கப்பட முடியும்? அவர் எவ்வாறு அப்படியிருக்க முடியும்? அவர் நித்தியமானவராக இருக்கிறார்! அவர் ஒரு போதும் சிருஷ்டிக்கப்படவில்லை, அவர் ஒருபோதும் சிருஷ்டிக்கப்படமாட்டார். ஏனெனில் அவர் ஆதியில் தேவனாயிருந்தார். ஆனால் "தேவ னுடைய சிருஷ்டிக்கு ஆதியுமானவர்'' என்று கூறப்பட்டவர், இயேசு கிறிஸ்து ஆவார்: இயேசு கிறிஸ்து தோன்றப்பண்ணப்பட்ட பொழுது, தேவன் அவரில் வாசம் பண்ணியபொழுது, அவ்வாறு அவர் அழைக்கப்பட்டார். அவர் தேவனுடைய சிருஷ்டி யானவர், ஓ, என்னே! ''முந்தினவரும், பிந்தினவருமானவர்; ஆமென்; தேவனுடைய சிருஷ்டியில் முதலாமவர் அவர்'' என் பதைப் பாருங்கள். தேவன் தாமே தனக்கென ஒரு சரீரத்தை சிருஷ்டித்தபொழுது, அவர் தாழ இறங்கி வந்து அதில் வாசம் பண்ணினார். அவர் தேவனுடைய சிருஷ்டிக்கு முதன்மையானதாக இருந்தது. பாருங்கள்? ஓ, அவர் அற்புதமானவராக இல்லையா?

111. ''நான் சர்வ வல்லமையுள்ளவர், நான் இருந்தவரும், இருப்பவரும் வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ளவர்'' என்று எபேசு சபைக்கு மூன்று தடவைகள் தெரிவித்து, தனது தெய்வீகத் தன்மையை அவர் இங்கே காண்பித்ததை, முதலில் நாம் கண்டோம். அது சரிதானே? கடைசியாக லவோதிக்கேயாவில் அவர் வந்து, "நான் தான் ஆமென் என்பவர், அங்கே ஆதியில் நான் முதலாமவராக இருந்தேன். இங்கே பிந்தினவராகவும் இருக்கிறேன். நானே தேவனுடைய சிருஷ்டியில் முதன்மையானவர், நமக்கிருக்கும் சபைக்காலங்களின் வழியாக, நானே தேவனா யிருக்கிறேன் என்பதை நீங்கள் கற்றுக் கொள்வீர்கள், மனித ரூபத்தில் படைக்கப்பட்ட தேவன் நானே, நானே தேவனுடைய சிருஷ்டிப்பில் ஆதியாக இருக்கிறேன்'' என்று கூறுகிறார். ஆமென்.

112. இவ்வாறு கூறுவது ஒரு ப்ரெஸ்பிடேரியனை கூக்குரலிடச் செய்யும், அதைக் குறித்து எண்ணிப்பாருங்கள்! 'தேவனுடைய சிருஷ்டியின் ஆதியானவர்," இப்பொழுது நான்... "தேவனுடைய சிருஷ்டி'' எனக் கூறப்பட்டுள்ளதை நான் எவ்வளவாய் விரும்பு கிறேன். தேவன்



கூறுகிறான். இதை அவன் தன் வாயில் சுருட்டை வைத்துக் கொண்டே சொல்லுவதில்லை. 'பரிசுத்தர், பரிசுத்தர்'' என்று கூறுகையில், தன் சட்டை காலரை உயர்த்தியபடி அல்ல, இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த அலங்காரத்தில் அலங்கரிக்கப்பட்ட வண்ணமாக சொல்லிக்கொண்டே உள்ளே பிரவேசிக்கிறான். "நீர் எவ்வளவு அற்புதமானவர்!" ஓ!

308. இப்பொழுது "கிருபாசனம்'. கிருபாசனமானது இருதயத் தில் உள்ளது. அங்கே அவரது ஷெகினா மகிமையானது அவரது பிள்ளைகளில் யாவரிலும் மானிட இருதயத்தினுள் பிரகாசித்துக் கொண்டே யிருக்கிறது. இங்கே மனுஷ இதயம் இருக்கிறது. அது கிருபாசனம் தானே? அதனுள் நீங்கள் அந்தப் பல்வேறு அமைப்புக்கள் வழியாக உள்ளே பிரவேசிக்கிறீர்களா? சுய விருப்பம் - சுய விருப்பத்தின் வழியாக அதனுள் பிரவேசிக்கிறீர் கள். அங்கிருந்து என்ன புறப்பட்டு வருகிறது? ஷெகினா மகிமை தான். ஷெகினா மகிமை என்பது என்ன? அது தேவனுடைய பிரசன்னமாக இருக்கிறது. அந்நிலையில் ஒரு மனிதனோ, அல்லது பெண்மணியோ நடந்து செல்லுகையில், அவன் ஷெகினா மகிமையை பிரதி பலித்துக்கொண்டே செல்லுகிறான். அவன் சூதாட்ட சாலைகளுக்குச் செல்லுவதில்லை. அவ்வாறெல்லாம் நடந்து கொண்டு, தேவனுடைய வார்த்தையை மறுதலித்துக் கொண்டு அவன் இருப்பதில்லை. மக்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதைப்பற்றி அவன் பொருட்படுத்தாமல், அவன் இருதய மானது ஒரே காரியத்தில் நிலைத்திருக்கிறது. அதுவே தேவன் ஆகும். அவன் தேவனால் உண்மையாக அழைக்கப்பட்டிருந்தால், அப்பொழுது அவர் தம்மையே அந்நபர் மூலமாக ஷெகினா மகிமையைக் கொண்டு பிரதிபலித்துக் காண்பிக்கிறார்; கடந்த காலத்தில் அவர் செய்த அதே கிரியைகளை மீண்டும் செய்கிறார், அதன் மூலமாக அதே சுவிசேஷத்தை பிரத்தியட்சமாக்கிக் காண்பிக்கிறார், அதே வார்த்தையை பிரசங்கிக்கும்படி செய்கிறார், அப்பொழுது இருந்தது போலவே அதே அளவில் அதே வார்த் தையை பிரத்தியட்சமாக்குகிறார்; உண்மையான பெந்தெகொஸ்தே நாளில் எந்த அளவில் இருந்ததோ, அதே அளவில் மீண்டும் இருக்கும்படி செய்கிறார்.

309. 'கிருபாசனம்'' - எசேக்கியேலும் யோவானும் ஆகிய இருவருமே ஒரே காரியத்தையே கண்டனர். இப்பொழுது கவனியுங்கள். நாம் இன்னும் சிறிது நேரத்தில் முடிக்கப்போகிறோம். இப்பொழுது, இங்கேதான் ஒரு விஷயத்தை நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டுமென நான் விரும்புகிறேன். ஓ, தயவு செய்து அதை காணத்தவற வேண்டாம். அந்தக் கேருபீன்கள் ஜீவனுள்ள சிருஷ்டிகள்தான் என்றும், அவை

பங்குபெற முடியாது, அதன் சமுகத்தினுள் நீங்கள் வரவேண்டுமானால், நீங்கள் முன்கூட்டியே ஆயத்தப்பட்டிருக்க வேண்டும்.

306. ஆரோனை முன்னடையாளமாகப் பாருங்கள். அந்நாட்களில் சபையார் எந்தவிதத்திலும் கிட்ட நெருங்கிச் சேரக்கூட முடியாது. ஆனால் ஆரோன் உள்ளே பிரவேசித்தபொழுது .... எத்தனை தடவை கள் அவன் உள்ளே பிரவேசித்தான்? வருடத்திற்கொருமுறைதான். அவ்வாறு அவன் உள்ளே பிரவேசிக்கும் போது, விசேஷித்த கரங் களால் விசித்திரமாக உருவாக்கப்பட்ட ஆடைகளை அணிந்தவ னாய், அவன் உள்ளே பிரவேசிக்கவேண்டும். அந்தவிதமாகத்தான் அவன் உடையுடுத்தியிருக்கவேண்டும். அவன் ஆடையில் மாதுளை யும், மணியும் பொன்னால் செய்யப்பட்டிருந்து தொங்கிக்கொண் டிருந்தன; அவைகள் அவன் உள்ளே நடந்து சென்றபோது, ''கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்'' என்று இசைத்துக்கொண் டேயிருந்தன. அவன் அவ்வாறு இரத்தத்தோடு கிருபாசனத்தை நெருங்கிக் கொண்டிருந்தான்.

307. சாரோனின் ரோஜாவிலிருந்து செய்யப்பட்ட குறிப்பிட்ட பரிமளவர்க்கத்தினால், பரிமளவர்க்கமிடப்பட்ட ஒரு குறிப்பிட்ட எண்ணெயினால், ஆசாரியன் அபிஷேகிக்கப்பட்டிருக்கவேண்டும். இயேசு சாரோனின் ரோஜா ஆவார். கவனியுங்கள். ரோஜா மல ரானது தன்னில் வாசனையைக் கொண்டிருக்கும் ஒரு அழகான பொருளாகும். ஆனால் அம்மலரிலிருந்து வாசனைத் திரவியமானது வெளிவரும் முன்னர், ரோஜா மலரானது நசுக்கிப் பிழியப்பட வேண்டும். அப்பொழுதுதான் அவ்வாசனைத் திரவியமானது வெளிப்படும். அவ்வாறு நசுக்கப்பட்டு, வாசனைத் திரவியமானது பிழிந்தெடுக்கப்படுகிறது. இயேசுவானவர் தன்னுடைய ஜீவியத் தில், இதுவரையில் வாழ்ந்த எந்தவொரு ஜீவியத்தைவிட மிகவும் அழகான ஜீவியத்தை உடையவராயிருந்தார். ஆனால் அவர் அப்படியே நிலைத்திருக்க முடியவில்லை. ஏனெனில், அவர் தன்னுடைய சபையை, அது தன்னுடைய பரிசுத்தத்தை அணுகுவதற்காக, அபிஷேகிக்க வேண்டியதாயிருந்தது. எனவே அவரது ஜீவனானது பிழிந்தெடுக்கப்பட்டது. அவர்மேல் இருந்த அதே பரிசுத்த ஆவி சபையின் மேல் பொழிந்தருளப்பட்டது. அதனால் அவரை அது நேற்றும் இன்றும் என்றும் மாறாதவரா யிருக்கிறார் என்பதாகவும், வாசனை மிகுந்த சாரோனின் ரோஜாவாகவும் ஆக்குகிறது. இந்த மகா பரிசுத்த ஸ்தலத்தினுள் பிரவேசிக்கும் நபர் எவரும் அதே பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்படவேண்டும். அந்நபர் அவ்வாறு உள்ளே பிரவேசிக்கையில், ''பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்'' என்று



சிஷ்டிக்கப்பட்ட பொழுது, தேவன் இயேசு கிறிஸ்துவிலே மாம்சத்தில் வந்து நம் மத்தியில் வாசம் செய்த பொழுது, "தேவனுடைய சிருஷ்டி'' என்று கூறப்பட்டார்.

113. இப்பொழுது அடுத்த வசனமானது; அவர் மற்ற சபைகளை புகழ்ந்துரைத்தார். ஆனால் இந்த சபையை அவர் புகழ்ந் துரைப்பதாக இல்லை. ஆனால் அதற்கெதிராக ஒரு குற்றச் சாட்டை அவர் தெரி வித்தார். புகழ்ந்துரைத்தல் அல்ல. இந்த சபையைப் பற்றி, இந்த லவோதிக்கேயா சபையைப் பற்றி, அவர் ஒரு புகழ்ச்சியையும் தெரிவிக்கவில்லை. அவர்களுக்கு இத்தனை அளவு ஒளியிருந்தும் கூட அவர்கள் அதிலிருந்து பின்வாங்கினர், ஆகவே அவர்கள் புகழப்பட அவசியம் ஒன்றுமில்லை, உ, ஊ. அவர்களுக்கு ஒரு கடிந்து கொள்ளுதல் தேவையாயிருந்தது. அதை அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். இந்த சபைக்கெதிராக அவர் புகார் ஒன்று தான் தெரிவித்தாரேயல்லாமல், ஒரு புகழ்ச்சியையல்ல.

114. "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிருமல்ல அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். (அதாவது வெதுப்பாக இருக்க வேண்டாம் என்று கூறுகிறார்).

இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிற படியினால் உன்னை என் வாயினின்று வாந்தி பண்ணிப் போடுவேன். (ஊ).

வெளி. 3:15-16

115. அது புகழ்ச்சியுரையா? இருப்பவையெல்லாவற்றிலும் மிகவும் மோசமான கூட்டமாகிய இந்த தேவபக்தியற்ற லவோதிக் கேயா காலத்திற்கு அது ஒரு கடிந்துரைத்தல். ஏனையோரெல்லாம், எல்லாவிதமான வேதனைகளுக்கும் உட்பட்டு இருந்தனர், அவர் களுக்கு ஒன்றும் இருக்கவில்லை, அவர்கள் வறியராயிருந்தனர், ஆட்டுத் தோலையும் வெள்ளாட்டுத் தோலையும் போர்த்திக் கொண்டு ஆதரவற்றவராய் திரிந்தனர், வாளால் அறுப்புண்டனர், தீக்கிரையாக்கப்பட்டனர், சிங்கங்களுக்கு இரையாக்கப்பட்டனர், மற்றும் இன்னபிற காரியங்களுக்குள் உட்படுத்தப்பட்டனர்; ஆயினும் அவர்கள் விசுவாசத்தைக் காத்துக் கொண்டனர். ஆனால் இந்த லவோதிக்கேயா கூட்டமோ "ஐசுவரியவானும், ஒன்றும் குறையுமில்லையென்றும்'' என்ற நிலையில் காணப்பட்டு, ஒரு வேசியாக அது இருந்தது. அவ்வாறு தான் இருந்தது.

116. இப்பொழுது நமக்கு மகத்தான, பெரியதொரு பாடம் இங்கே உள்ளது. அதை அறிந்துகொள்ள கர்த்தர் நமக்கு உதவி செய்வார் என்று நான் நம்புகிரேன். அவர் கூறினார்:

"... நீ குளிருமல்ல அனலுமல்ல..."

வெளி. 3:15

117. பாலைப் போலுள்ளது அது என்பதைப் பாருங்கள். ஒரு குளிர்ந்த நிலையில் உள்ள பாலானது நல்லதாக இருக்கிறது. அப்படித்தானே? சூடான பாலும் உங்களுக்கு நன்மை பயக்கும். ஆனால் வெதுவெதுபான பாலோ உங்களை வாந்தியெடுக்கப் பண்ணும்.

118. சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பாக நதியில் நான் வசித்து வருகையில், நான் ஒரு இரவில் வியாதிப்பட்டேன். நான் அப்பொழுது, ஒரு சிறிய படகு வீட்டில் வசித்து வந்தேன். நான் வியாதிப்பட்டேன். என்னுடைய மைத்துனர் வந்து என்னை டாக்டர் ஐஸ்லர் என்பவரிடம் அழைத்துச் சென்றார். அவர் என்னிடம், "என்ன விஷயம்?" என்று கேட்டார்.

119. "எனக்கு வயிற்றில் குமட்டல் ஏற்பட்டுள்ளது" என்று நான் கூறினேன்.

120. "நீ ஒரு கோப்பை வெதுவெதுப்பான பாலைக் குடித்தாயா?" என்று கேட்டார். ஓ, சகோதரனே! வெதுவெதுப்பான பாலானது என்னை சுகவீனமுறச் செய்தது. எனவே நான் அதை முழுவதும் வெளியேற்றி சுத்தம் செய்துகொண்டேன்.

121. தேவன் கூறினார்.

"... நீ அனலாய் இருக்க விரும்புகிறேன், பழுக்க பழுக்க சிவந்துபோயிருக்கும் நிலையை அடையும் அளவுக்கு அனலாய் இருக்க வேண்டும், அல்லது உறைதல் நிலையில் இருக்க வேண்டும், ஏதாவது ஒரு நிலையில் இருக்க வேண்டும். நீ வெதுவெதுப் பாய் இருக்க வேண்டாம், ஏனெனில் உனது அந்தவிதமான நிலை என்னை வேதனைப்படுத்தும்."

122. இந்த சபைக்காலமானது தேவனுக்கு அவ்வாறான காரியத்தையே செய்தது. அது வாந்தி பண்ணிப் போடச் செய்யும் அளவுக்கு, அவரை வியாதிப்படுத்துகிறதாயிருக்கிறது. பாருங்கள்? "ஒன்று, பழுக்க சிவந்த அனலான நிலையில் இருக்க வேண்டும், அல்லது குளிர்ந்துபோன நிலையில் இருக்க வேண்டும். ஆனால் வெதுவெதுப்பாய்



300. நான் இன்னொரு விஷயத்தை இங்கே படம் வரைந்து காட்ட விரும்புகிறேன். உங்களுடைய பீன்ஸ் கருகிவிடாது என்று நான் நம்புகிறேன். அது அழியப்போவதுதான், ஆகவே அவைகள் கருகட்டும், ஆனால் இங்கே மெய்யான காரியத்தைப் பற்றி நாம் எண்ணிப் பார்ப்போமாக,

301. மோசே பூலோகத்திலிருந்து பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கருத்தை இங்கே நிரூபிக்க விரும்புகிறேன். நான் என்ன செய்ய முயன்றுகொண்டிருக்கிறேன் என்பதை நீங்கள் அறியவில்லையா? அவன் தேவனுடைய பிரசன்னத்திற்குள் சென்றான். தேவனுடைய சமுகத்தைவிட்டு அவன் கீழே இறங்கி வந்தபோது, தேவன் மோசேயிடம் கூறினார்: "பரலோகத்தில் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே எல்லாவற்றையும் செய்." அப்படித்தானே?

302. அப்பொழுது அவன் அதைச் செய்தபொழுது, அவன் உடன்படிக்கைப் பெட்டியைச் செய்தபோது, அதன் மேல் பெட்டியை காவல் செய்ய இரு கேருபீன்களையும் வைத்தான். அது என்ன வென்று பாருங்கள்? அது ஆலயமாயிருக்கிறது .... அது பலிபீடமா யிருந்தது ... சிங்காசனத்தைக் காவல் செய்பவைகளாய் இருக்கிறது, அவ்விரண்டு கேருபீன்களும், "வெண்கலத்தில் அவைகளைச் செய்வித்து, அதன் செட்டைகள், இவ்வண்ணமாக தொடும்படி செய்வாயாக" என்று அவனிடம் அவர் கூறினார். ஏனெனில், அதேவித மாகத்தான் மோசே பரலோகத்தில் கண்டான்.

303. அதேவிதமாகத்தான் யோவானும் பரலோகத்தில் இந்த நான்கு கேருபீன்களையும் கண்டான். பரலோகத்திலுள்ள சிங்காசனத்தின் உடன்படிக்கைப் பெட்டியின் நான்கு பக்கங்களிலும் அவைகளை அவன் கண்டான். அவைகள் உடன்படிக்கைப் பெட்டி யின் காவலர்கள் ஆவர். இந்தக் கேருபீன்கள் கிருபாசனத்தின் மீதில் காவலர்களாய் உள்ளனர்.

304. நீங்கள் அவ்வேதவாக்கியத்தை வாசிக்க விரும்பினால், யாத் 25; 10-22.

305. அவைகள் கிருபாசனத்தின் மீதில் காவல் செய்கின்றன. ஷெகினா மகிமையானது எங்கே இருந்தது? கிருபாசனத்தின் மீதில். அது சரிதானே? அவைகள் ஷெகினா மகிமையைக் காவல் செய்கின்றன. வ்யூ! செவிகொடுங்கள், சிநேகிதரே! இதிலிருந்து என்ன தெரிகிற தென்றால், எந்தவொரு கயவரும் அங்கே உள்ளே நுழைந்து அதில்

கர்த்தாவே, நான் பாவி' என்று கூறினேன். அப்பொழுது அவர் தமது பரிசுத்த ஆவியால் என்னை நிரப்பினார்'' என்று கூறினார்.

297. ''எட்டு வெவ்வேறு மொழிகள் என்னால் பேச இயலும்,'' என்று அவர் மேலும் கூறினார். ஏனெனில் அவர் ஒரு இராஜ்ய வாதியாவார். அவர் ஜனாதிபதிக்கு ராஜீய பிரதிநிதியாக இருக்கிறார். உட்ரோ வில்சன் முதற்கொண்டு நமது ஜனாதிபதிகள் ஒவ்வொரு வருக்கும் அவர் ராஜீய பிரதிநிதியாக இருந்து வந்திருக்கிறார். அவர் ஒரு அயலுறவுத்துறை ராஜீய பிரதிநிதியாக இருப்பதால், எந்த அந்நிய நாட்டு பாஷையையும் பேச அவரால் இயலும். "உலகில் உள்ள அறியப்பட்ட எழுதப்படும் எந்த பாஷையையும் நான் கிட்டத்தட்ட அறிந்தவனாய் இருக்கிறேன். ஆனால் அவருடைய மகிமையினால் நான் மிகவும் நிறையப் பெற்றிருந்தேன், நான் அவரைத் துதிக்க, எனக்குத் தெரிந்த அந்த பாஷைகளில் எந்தவொன்றையும் என்னால் உபயோகிக்க முடியவில்லை, எனவே கர்த்தர், அவரைத் துதிப்பதற்காக புத்தம் புதிய பாஷையை பரலோகத்திலிருந்து எனக்குத் தந்தருளினார்'' என்று அவர் மேலும் கூறினார்.

ஓ! ஓ! பார்த்தீர்களா?

298. இந்த வாயிலை அவைகள் காவல் காத்துக்கொண்டிருந்தன. காயீனும் ஆபேலும் இந்த இடத்திற்கு ஆராதிப்பதற்காக வந்தனர். இந்தக் கேருபீன்கள் காவல் காத்துக்கொண்டிருந்த இது பலிபீடமாகத்தான் இருக்கவேண்டும். அது சரிதானே?

299. இன்னொரு காரியம், இங்கே இன்னொரு அத்தாட்சி உள்ளது. காயீன் .... இப்பொழுது வேதாகமத்தை கவனியுங்கள். வேதத்தில் அப்பகுதிக்கு நீங்கள் திருப்பவேண்டும் என்று நான் விரும்பு வேன். ஆனால் அது இருக்கட்டும், அதை நீங்கள் ஆதியாகமத்தில் பார்க்கலாம். கவனியுங்கள். காயீன் புறப்பட்டு வெளியே போனான். ஏதேன் தோட்டத்திலுள்ள வாசலைவிட்டு கர்த்தருடைய சமுகத்தினின்று அகன்று சென்றுவிட்டான். ஆகவே, கர்த்தருடைய பிரசன்னம் வாசலண்டையிலுள்ள அந்த பீடத்தண்டையில்தான் இருந்திருக்கவேண்டும். மகிமை! ஓ! அதுதான், அவருடைய பலி பீடம் தான், தேவன் வாசம் பண்ணும் இடம். காயீன் இந்த இடத் திலிருந்து, கர்த்தருடைய சமுகத்தைவிட்டு அகன்று போனான். அதை நீங்கள் குறித்துக்கொள்ளுகிறீர்களா? ஆதியாகமம் 4:16நீங்கள் குறித்துக்கொள்ள விரும்பினால் அதைக் குறித்துக்கொள் ளுங்கள். நீங்கள் இவை யாவையும் எழுதிக்கொண்டீர்களா?



இருக்கக்கூடாது. வெதுவெதுபான நிலையானது என்னை வாந்திப் பண்ணிப் போடச் செய்துவிடும்''.

123. ஜான் வெஸ்லியின் காலத்தில் ஆங்கலிக்கன் சபையில் காணப்பட்ட குளிர்ந்துபோன நிலையானது, அவரை அச்சபையை விட்டு அகன்று வேறு இடத்தில் போய் கூட்டங்கள் நடத்தும்படி அவரை விரட்டியது, ஏனெனில் அது மிகவும் குளிர்ந்து போன நிலையில் காணப்பட்டது.

124. மெதோடிஸ்ட் சபையில் காணப்பட்ட குளிர்ந்து போன நிலையானது, வில்லியம் பூத் அவர்களை பழுக்க சிவந்த அனலுள்ள இரட்சண்ய சபைக்காரராக ஆக்கியது. பாருங்கள். “நீ மனந் திரும்பி வராவிட்டால், நான் விளக்குத் தண்டை உன்னைவிட்டு அகற்றி விடுவேன், அதை வெளியே அகற்றிவிட்டு, அதை வேறு யாருக்காவது கொடுத்து விடுவேன்'' என்று தேவன் கூறினார். எனவே, மெதோடிஸ்ட் சபையானது ஜான் வெஸ்லியின் பரிசுத்த மாகுதலைப் பற்றிய செய்தியை ஏற்றுக்கொள்ள விரும்பாத பொழுது, வில்லியம் அவர்கள், இரட்சணிய சேனை சபையை உண்டாக்கிக் கொண்டு வந்தார். அது உண்மை . ஏன்? அவர்கள் ஸ்தாபனமாக ஆனார்கள். அவ்வாறு தான் நடந்தது. அதன் பேரில் ஒரு ஸ்தாபனத்தை உருவாக்கிக் கொண்டார்கள். “நான் அதை வெறுக்கிறேன்'' என்று தேவன் கூறினார்.

125. எனவே, அங்கே வில்லியம் பூத் அவர்கள் அத்தருணத்தில் தோன்றி, அச்செய்தியை எடுத்துக்கொண்டு இரட்சண்ய சபையை உருவாக்கினார். அதன் பிறகு அவர் என்ன செய்தார்? அவரும் அதையே செய்து, திரும்பி வந்து, மீண்டும் ஸ்தாபனத்தை உண் டாக்கினார். அவருக்குப்பிறகு, கேம்ப்பெல்லைட்டுகள் வந்தனர், அவர்கள் சில காலம் நிலைத்திருந்தனர். அதன் பிறகு ஜான் ஸ்மித் என்பவர் பாப்டிஸ்ட் சபையை உருவாக்கினார், அவருக்குப் பிறகு, நசரேய சபைக்காரர்கள் எழும்பினர்; நசரேய சபைக்காரர்களுக்குப் பிறகு, பெந்தெகொஸ்தே வந்தது.

126. நசரேய சபையினர் என்ன செய்தனர்? அதேவிதமாக அவர்களும் ஸ்தாபனத்தை உண்டாக்கிக் கொண்டனர்.

127. அவ்வேளையில் என்ன வந்தது? இரு சிறு கிளைகள், தேவ சபையும் (Churh of God) ஏனைய சபையும் அதிலிருந்து முளைத் தெழும்பியது. அவர்கள் என்ன செய்தார்கள்? ஸ்தாபித்துக் கொண்டனர், அது அவ்வாறு போகும்படி அவர் விட்டுவிட்டார்.

128. பின்மாரி ஆசீர்வாதத்தோடு பெந்தெகொஸ்தேயினர் அத் தருணத்தில் எழும்பினர். அவர்கள் செய்தது என்ன? அவர்களும் ஸ்தாபனமாக ஆயினர், தேவன் அவர்களை அப்படியே போக விட்டுவிட்டார்.

129. இப்பொழுது நாம் முடிவுக் கட்டத்திற்கு போகப் போகி றோம். இன்னும் சில நிமிடங்களில், சரியான பலத்த காரியம் ஒன்றைக் காணப் போகிறோம். சரி.

130. ஒன்று நீங்கள் சிவப்பாக பழுத்துப் போயுள்ள அனலுள்ள நிலையில் இருக்க வேண்டும் என்றோ, அல்லது குளிர்ந்துபோன நிலையிலோ இருக்க வேண்டும் என்றோ தான் விரும்புகிறார். நீங்கள் வெதுவெதுப்பாயிருக்க வேண்டாம். நீங்கள் பெற்றிராத ஒன்றை பெற்றுவிட்டதாக நடிக்க வேண்டாம். ஒன்று நீங்கள் தேவனுக்காக நெருப்பாய் இருங்கள், அல்லது ஸ்தாபனத்திற்குள் திரும்பிப் போய் விடுங்கள். வெது வெதுப்பாயிருக்க வேண்டாம்.

131. அதேவிதமாகத் தான் இப்பொழுதும் உள்ளது. அதே காரியம் தான் இங்குள்ள இந்த சபைகளிலும் நேரிட்டிருக்கிறது. நீங்கள் அனலாயாவது குளிராயாவது இருக்க வேண்டுமென்று தான் அவர் விரும்புகிறார். அவர் வெது வெதுப்பாயிருப்பதை விரும்பவில்லை. அப்படிப்பட்டதான நிலைக்குள் தான் பெந்தெ கொஸ்தேயும் போய்விட்டது. அது வெதுவெதுப்பாயிருக்கிறது. அவர்கள் பியானோவையும், ஒரு சில ட்ரம்களையும் வைத்துக் கொண்டு சிறிது வாசிக்கிறார்கள். போதுமான அளவுக்கு சப்தம் போட்டு, “கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அல்லேலூயா'' என்று கத்துகிறார்கள். உ, ஊ அப்பொழுது இசையானது குறைகின்றது. ஊ, ஊ, ஊ'' அவ்வளவு தான். அவ்வாறான காரியம் தேவனுடைய வயிற்றை, வாந்தி பண்ணிப்போடும் அளவுக்கு கலக்குகிறது பாருங்கள் ? உ, ஊ. சரி.

132. பழுக்க, பழுக்க சிவந்த அளவுக்கு உள்ள அனலான எழுப்புதலைப் போலுள்ளதொன்று அங்கே அவர்களுக்குள் காணப்பட வில்லை, ஆனால் அவர்களுக்குள் ஏராளமான அளவுக்கு இந்த சபையில், செயற்கையான ஒரு காரியம்தான் காணப்படுகிறது. ஏனெனில், அவர்கள் ஐசுவரியவான்களாக இருந்து, அவர்கள் ஒன்று சேர்ந்து, பெரிய கூட்டங்களை நடத்துகிறார்கள். இந்த சபையின் காலத்தில் ஒரு நல்லவேளை அவர்களுக்கு இருக்கத்தான் செய்தது. அதேல்லாம் உண்மைதான். ஆனால் அவை யாவும் இப்பொழுது,



வழியாக பிரவேசிக்க வேண்டுமானால், இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக மாத்திரமே. இதை நீங்கள் கண்டு கொண்டீர்களா?

294. இப்பொழுது கவனியுங்கள். இதோ இங்கே காயீன் இருக் கிறான், இதோ இங்கே ஆபேல் இருக்கிறான். இந்த இரு வாலிபர்களும் இந்த வாசலண்டையிலே தொழுதுகொள்வதற்காக வரு கின்றனர். எனவே அது தேவனுடைய பீடமாகத்தான் இருக்க வேண்டும், அப்படித்தானே? இந்த ஒரே பலிபீடத்திற்கு முன்பாக, பதிலியான ஒரு பலிபீடத்தை, வேறொரு பலிபீடத்தை அவர்கள் கட்டினர். மனிதனுடைய இருதயத்தில் தான் தேவனுடைய உண்மையான பலிபீடம் உள்ளது. பிறகு, அங்கே இன்னொரு பலிபீடமுள்ளது. அது பரிசுத்த ஸ்தலத்திலுள்ள மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு அடையாளமாகத் திகழ்கிறது.

295. ஓ! ஓ! நான் இப்பொழுது அன்னிய பாஷையில் பேச வேண்டும் என உணருகிறேன். ஓ மகிமை! அது பரிபூரணமாயிருக்க நீங்கள் காணவில்லையா? சற்றுக் கவனியுங்கள். நான் அதைக்கூறியதின் காரணம் என்னவெனில், என்னுடைய உணர்ச்சி களை வெளிப்படுத்த, எனது சொந்த ஆங்கில பேச்சு வழக்கில் அதை தெரியப்படுத்த, என்னிடம் போதுமான வார்த்தைகள் இல்லை. எப்படியாவது அதை வெளிப்படுத்தவேண்டும்.

296. சகோ. ரோ என்பவர் ஜனாதிபதிக்கு இராஜிய பிரதிநிதியாக இருக்கிறார். நான்கு அல்லது ஐந்து ஜனாதிபதிகளுக்கு அவர் ராஜ்ய பிரதிநிதியாக இருந்திருக்கிறார். அவர் இவ்வாறு கூறினார்: "ஓ சகோ. பிரன்ஹாம் அவர்களே, நான் ஓர் இரவில் கூட்டத்திற்கு வந்தேன். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. நான் வெளியே நின்றுகொண்டிருந்தேன். நான் கர்த்தரை என் ஆயுள் முழுவதும் நேசித்திருக்கிறேன். நான் ஒரு எபிஸ்கோ பேலியன் சபையைச் சேர்ந்தவனாயிருந்தேன். நான் கர்த்தரை அறிந்திருக்கிறேன் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். அந்த இரவுக் கூட்டத்தில் நான் என்ன செய்வது என்பதை அறியாமல் திகைத்துக் கொண்டிருந்தேன். திருவசனமானது உரைக்கப்பட்டு வர ஆரம்பித்ததை நான் செவிமடுத்துக்கொண்டிருந்தேன். நான் எக்காரணத்தை முன்னிட்டும் உள்ளே போகமாட்டேன் என்று இருந்தேன். நான் கூடாரத்திற்கு வெளியே மேலும் கீழும், முன்னும் பின்னும் நடந்து கொண்டிருந்தேன். கதவண்டையில் வருவதற்கு நான் காத்திருக்க முடியாமல், அங்கே நான் அதன் கீழே தவழ்ந்து பீடத்தண்டை சென்று, கீழே விழுந்து,

அல்லது பெந்தெகொஸ்தே வேதக் கலாசாலையிலிருந்தோ வந்திட முடியாது. அது இங்கிருந்து வரும் ஒளியைத்தான் பிரதிபலிக்கிறது.

291. யோவான் கண்ட இக்கேருபீன்கள், ஜீவவிருட்சத்துக்கு போகும் வழியைக் காவல் செய்வதில் அக்கறையுள்ளவைகளாய் இருக்கின்றன என்பதைக் கவனியுங்கள்; எனவே அவைகள் மானிடரில் அக்கறையுள்ளவைகளாகத்தான் இருக்க வேண்டும். ஆதியாகமத்தை திரும்பவும் எடுத்துக்கொண்டு அதிலிருந்து படியுங்கள். அவைகள் ஜீவவிருட்சத்துக்கு போகும் வழியை காவல் காத்து நின்றன. அதுதான் ஜீவனுக்குப் போகும் வழியாகும். அவ்வழி எவ்வாறு உள்ளது? இயேசு கூறினார்: "நானே வழி. வானத்திருந்து தேவனிடமிருந்து வந்த அப்பம் நானே, ஒருவன் இந்த அப்பத்தைப் புசித்தால், அவன் என்றென்றும் ஜீவிப்பான்'' இப்பொழுது, ஜீவவிருட்சத்துக்கு திரும்பிப்போவதற்கு ஒரு வழி உண்டாயிருக்கிறது. அதை நீங்கள் கண்டுகொண்டீர்களா?

292. இப்பொழுது இங்கே நான் உங்களுக்கு இது ஒரு பலிபீடமாக இருக்கிறது என்பதை காண்பித்து, அதை நிச்சயப்படுத்த விரும்புகிறேன். இதுதானே ஏதேன் தோட்டத்தின் வாயிலில் வைக்கப்பட்டிருந்த பலிபீடமாக இருந்திருக்க வேண்டும். அது எப்படி என்பதை நான் உங்களுக்கு கூறுவேன். காயீன், ஆபேல் ஆகிய இருவரும் தொழுது கொள்வதற்காக இங்கேதான் வந்தார்கள் என்பது உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? பலிபீட மானது எடுத்து ஏதேன் தோட்டத்தின் வாயிலில் வைக்கப்பட்டது என்பதையும், ஏதேனுக்குள் திரும்பவும் செல்வதற்கு உரிய ஒரே வழியாக இந்த பலிபீடமே உள்ளது என்பதை இது எடுத்துக் காட்டுகிறது. ஏதேனுக்கு பலிபீடத்தின் வழியாகத்தான் செல்ல வேண்டும் என்பதை திரும்பவும் இங்கே பார்க்கிறோம். இந்த பலிபீடமானது இரத்தத்தால் மூடப்படாத வரையிலும், எவரும் உள்ளே பிரவேசிக்கக்கூடாதபடி, அவைகள் போகும் வழியை அவைகள் காத்துக்கொண்டு, அதைக் காவல் செய்ய வேண்டும்.

293. (ஓ தேவனே, மக்களால் அதைக் காண முடியாதா?) இரத்தம் இல்லாமல் வேறெவ்விதத்திலும் உள்ளே நுழைய முடியாது என்பதைப் பார்த்தீர்களா? அங்கே ஒரு பரிகாரம், அதாவது பிராயச் சித்தம் இருந்தாக வேண்டும். இந்த நியாயத்தீர்ப்பு ஆசனமானது கிருபாசனமாக ஆகிடவேண்டும். அதின் மேலிருந்து இரத்தம் நீக்கப்பட்டதுமே, அந்த நியாயத்ததீர்ப்பின் நாளிலே, மீண்டும் அம்மரத்தை பாதுகாக்க தேவனுடைய கோபாக்கினை அங்கே நின்றுகொண்டிருக்கும். ஏதேன் தோட்டத்திற்குள் மீண்டும் இந்த வாசல்



செயற்கைத்தனமாக ஆகிவிட்டது. அங்கே பரிசுத்த ஆவியின் அனல் இருக்கவேயில்லை.

133. இங்கே அவர் என்ன கூறுகிறார் என்பதைப் பாருங்கள்!

"உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிருமல்ல அனலு மல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும்.

இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப் பாயிருக்கிற படியினால் உன்னை என் வாயினின்று வாந்திப் பண்ணிப் போடுவேன்.''

வெளி.3:15-16

134. இங்கே அவர், நீ அனலாயாவது அல்லது குளிராயாவது இருந்துவிட நான் விரும்புகிறேன். ஆனால் நீயோ அவ்வாறு இல்லாதபடியினால், உன்னை என் வாயின்று வாந்திப் பண்ணிப் போட்டு, உன்னை நீக்கி விட விரும்புகிறேன்'' என்று கூறுகிறார்.

135. அவர்களிடம் எராளமான பணம் இருக்கிறது. மகத்தான கட்டிடங்கள் அவர்களுக்கு உண்டு. மாபெரும் காரியங்கள் அவர் களுக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தன, ஆனால் அவர்களுக்கோ பரிசுத்த ஆவியின் அனலானது இருக்கவில்லை. அவர்களிடம் அதிகார இயந்திரம் உள்ளது. ஓ, என்னே ! அவர்களுக்கு ஒருங் கிணைந்த சபை உண்டு. இது வரையில் அவர்கள் பெற்றிராத மிகப் பெரிய கட்டிடங்கள் அவர்களுக்கு உண்டு. ஆனால் பரிசுத்த ஆவி இல்லை. தேவன் சபைக்கு பரிசுத்த ஆவியைத் தான் அனுப்பினார்.

இப்பொழுது 16ம் வசனத்தில் நாம் தொடர்ந்து கவனிக்கையில்.

136. அவர்களுக்கு எல்லாவிதமான சங்கங்கள் உண்டு. 'ஓ, எங்களுக்கு அதற்குரிய மகத்தான ஆளுகை உண்டு; முதிர்வயதான பெண்மணிகள் உதவி சங்கம், எங்களுக்கு உண்டு, வாலிபருக்கான சீட்டாட்டம் உண்டு, வெள்ளி இரவில், பங்கோ எனப்படும் ஒரு வகையான சூதாட்டம் உண்டு; ஞாயிறு மதியம் கூடைப் பந்தாட்டம் உண்டு, தளக்கட்டுப் பந்தாட்டம் (Baseball) உண்டு; ஆண்கள் அரட்டையடிப்பதற்கு என்றே ஒரு சங்கம் என்றெல்லாம் எங்களுக்கு இவ்வாறு எல்லாவிதமான காரியங்களும் உண்டு'' என்று கூறுகிறார்கள்.

137. சபைக்கு சங்கங்களும், க்ளப்புகளும், கூட்டங்களும், இன்னும் இன்னபிற காரியங்களுக்கும் ஏராளமாக நிறைந்து காணப்படுகிறது.

ஆனால் பரிசுத்த ஆவியின் அனல் அவளிடம் காணப்படவில்லை. உங்களுக்கு பெரிய ஆட்சி முறை உள்ளது. ஆனால் உங்களுக்கோ அனலுண்டாக்க ஒன்றுமே இல்லை. ஆனால் உலகுக்குத்தான் அனலுண்டாக்குகிறீர்கள். ஆனால் தேவனுக்கு அல்ல, எனவே தான் அவர்கள் வெது வெதுப்பாயிருக்கிறார்கள்.

138. நிச்சயமாகவே உங்களிடம் ஏற்கெனவே உங்களிடம் இருந்ததை விட இப்பொழுது கூடுதலாக அங்கத்தினர்கள் பெருகி யிருக்கிறார்கள். 1944ம் ஆண்டில் இருந்ததைவிட இன்னும் ஒரு மில்லியன் மக்கள் கூடுதலாக எங்களுடன் சேர்ந்திருக்கிறார்கள் என்று பாப்டிஸ்டுகள் கூறினர். ஆனால் நீங்கள் பெற்றிருப்பது தான் என்ன? ஒரு பெரிய இயந்திரமே!

139. அவ்வாறு பெருமையாகக் கூறினதை நான் கேட்ட அதே சபையில், ஆராதனை நடந்து கொண்டிருக்கையில், நடுவில் பதினைந்து நிமிடங்கள் இடைவேளை விட்டு அப்பொழுது சபையின் மேய்ப்பர் மற்றும் உதவிக்காரர்களும், மற்றோரும் வெளியே போய் சிகரெட் புகைத்துவிட்டு வருவதற்கு ஒரு தருணம் அளிக்கின்றனர். பார்த்தீர்களா? வேதமானது அக்காரியத்தை தெளிவாகக் கண்டனம் செய்கிறது என்பதைக் கவனியுங்கள். ''உன் சரீரத்தை அசுத்தப்படுத்தினால்...'.

140. மருத்துவர்கள் புகைப்பதைக் குறித்து அது முழுவதும் புற்று நோயினால் நிறைந்திருக்கிறது என்று கண்டனம் செய்கின்றனர். அப்படியிருந்தும், வானொலியிலோ ''சிந்திக்கும் மனிதனின் வடிகட்டி'' என்று புகைபிடிப்பதைத் தூண்டும் விளம்பரத்தைச் செய்கிறார்கள்.

141. பில்லி கிரகாம் அவர்கள், ''ஒரு மனிதன் அவ்விதமாக சிந்திக்கத் தொடங்கினால் அவன் முட்டாள்'' என்று கூறியது போல் அக்காரியம் உள்ளது.

142. ''சிந்திக்கும் மனிதனின் வடிகட்டி'' என்கிறார்கள். சிந்திக்கும் மனிதன் ஒருக்காலும் புகைக்கவே மாட்டான். அதைப் பற்றி மறு சிந்தனை கொள்ளுங்கள். தற்போதுள்ள நவீன பெண் களின் ஆடைகளை அணிந்து கொள்தவற்கு ஏதுவாக, பெண்கள் புகை பிடித்தால், அவர்கள் மெலிந்து போவார்கள் என்றும் கூறுகிறான். அவ்விதம் விளம்பரம் செய்வது சிகரெட் விற்பனையை அதிகரிக்கிறது. இப்பொழுது ஆண்களைவிட பெண்கள் தான் அதிகமாக சிகரெட் புகைக்கிறார்கள். ஒரு ஆண் ஒரு சிகரெட் புகைத்தால், அந்த நேரத்தில் ஒரு பெண் மூன்று சிகரெட்டுகள் புகைத்து விடுகிறாள், ஏனெனில்



ஆதி. 3:22-24 இந்த கேருபீன்கள் வீசிக்கொண்டிருக்கிற சுடரொளிப் பட்டயத்தை ஏதேன் தோட்டத்து வாயிலில் பெற்றவைகளாய் இருந்தன. எதற்கென்றால், ஜீவவிருட்சத்துக்கு போகும் வழியைக் காவல் செய்யும்படியாகத்தான். (ஏனெனில் மனிதன் அம்மரத்தை கையை நீட்டிப் பறித்து புசித்துவிட்டால் என்றென்றைக்கும் உயிரோடிருந்துவிடுவான்.)

289. இக்கேருபீன்கள் முதலில் குறிப்பிடப்பட்ட இடத்தில், ஏதேன் தோட்டத்தின் கிழக்கே உள்ள வாயிலில் வைக்கப் பட்டிருந்தன; அவைகள் நான்கு புறத்திலும் சென்றன. நான் அதை இதிலிருப்பதைவிட சற்று வித்தியாசமாக வரைந்து காண் பித்திருக்க வேண்டும்; தேவனுடைய மாதிரிகளை நான் சரியான விதமாக அதேவிதமாக வரைந்திட முடியாதுதான், ஆனால் நான் கூறுவதின் அர்த்தம் என்னவென்பதை அறிந்து கொள்வதற்காகத்தான் நான் இதை உங்களுக்கு வரைந்து காண்பித்திருக்கிறேன். அதோ அங்கே ஏதேன் தோட்டம் உள்ளது. இதோ இதுதான் ஏதேன் தோட்டத்திற்குள் பிரவேசிப்பதற்கான திறந்து மூடும் அமைப்புள்ள வாயிற்கதவு ஆகும். இந்த வாயிற் கதவில் தான் கேருபீன்கள் உள்ளன. கேருபீன்கள்! "ஒரு கேருபீன்' என்று அங்கே குறிப்பிடப்படவில்லை. "கேருபீன்கள்'' என்றே குறிப் பிடப்பட்டுள்ளன. கேருபீன்கள் எதை காவல் காப்பதற்காக அங்கே வைக்கப்பட்டிருந்தன? ஜீவவிருட்சத்தை காவல் செய்ய . ஜீவ விருட்சத்துக்கு போகும் வழியை காவல் செய்யத்தான் அவைகள் அங்கே வைக்கப்பட்டிருந்தன. அந்த வழி'' யார் அந்த வழியாக இருக்கிறார்? இயேசு. அது எங்கிருந்து கொண்டு பிரதிபலிக்கிறது? இதோ இங்கே பரிசுத்த ஸ்தலம் உள்ளது. இங்கேதான் கேருபீன்கள் உள்ளன.

290. இப்பொழுது கவனியுங்கள். இவைகள் யாவையும் குறித்துக் கொள்ளுங்கள். இதோ இங்கே மகா பரிசுத்த ஸ்தலம் உள்ளது, இதுதான் மகா பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம். அடுத்தது, பரிசுத்த ஸ்தலம்; இதோ இங்கே இருப்பது கடல் தொட்டி, இங்கே இருப்பது விளக்காகும், இங்கிருந்துவரும் ஒளியை ஏழு குத்து விளக்குகள் பெற்று இங்கேயும், இங்கேயும், இங்கேயும், இங்கே யும், இங்கேயும், இங்கேயும், இங்கேயும் இருந்து பிரதிபலிக்கின்றன. பார்த்தீர்களா? அவைகள் எதை பிரதிபலிக்கின்றன? அவைகள் தேவனுடைய அக்கினியைப் பெற்று அதை பிரதிபலித்துக்கொண்டே, ஜீவவிருட்சத்துக்கு போகும் வழியை காவல் செய்துகொண்டிருக்கின்றன. அவ்வொளியானது, இந்த இடத்தி லிருந்து, அதாவது ப்ரெஸ்பிடேரியன் வேதக் கல்லூரியிலிருந்தோ,

கமம் கூறுகிறது என்பதைப் பற்றி நான் உங்களுக்கு இப்பொழுது காண்பிப்பேன். இப்பொழுது இதைக் கவனியுங்கள்:

"பின்பு... கர்த்தர்: இதோ, மனுஷன் (ஆண்டவர் இதோ மனுஷன் நம்மில் ஒருவரைபோல் ஆனான்'' என்றுதான் சொன்னாரேயல்லாமல், "இதோ மனுஷி நம்மில் ஒருவரைப் போல் ஆனாள்'' என்று கூறவில்லை). நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான் (மனுஷி அப்படியாகவில்லை, அவள் வஞ்சிக்கப்பட்டாளே. அதை நீங்கள் கவனித்தீர்களா?)

288. பவுல் கூறினான், ''உபதேசம் பண்ண வும், புருஷன்மேல் அதிகாரஞ்செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை..... என்னத்தினாலெனில், முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான். பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள். மேலும் ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள். எனவே அவள் தேவனில் ஒருத்தியாக ஆகவில்லை. அவளுக்கு நன்மைக்கும் தீமைக்கும் உள்ள வேறுபாடே தெரியாது. அவள் வஞ்சிக்கப்பட்டாள். அதை நீங்கள் புரிந்துகொண்டீர்களா? புரிந்து கொண்டீர்களென்றால், "ஆமென்'' என்று சொல்லுங்கள். (சபையார் "ஆமென்'' என்று கூறுகிறார்கள் - ஆசி.)

"பின்பு தேவனாகிய கர்த்தர்: இதோ மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான்; இப்பொழுதும் அவன் தன் கையை நீட்டி ஜீவ விருட்சத்தின் கனியையும் புசித்து, என்றைக்கும் உயிரோடிராதபடிக்குச் செய்யவேண்டும் என்று,

அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார்.

அவர் மனுஷனைத்துரத்திவிட்டு, ஜீவவிருட்சத்திற்குப்போம் வழியைக் காவல் செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேருபீன்களையும் வீசிக்கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத் தையும் வைத்தார். (அங்கே நான்கு ஜீவன்களைப் பார்த்தீர்களா? கிழக்கு, வடக்கு, மேற்கு, தெற்கு ஆகிய நான்கு வழிகள் நீங்கள் செல்லத்தக்கதாக உள்ளன) (தமிழ் வேதாகமத்தில் "வீசிக்கொண்டிருக்கிற சுடரொளிப் பட்டயம்'' என்று மட்டுமே குறிப்பிடப் பட்டுள்ளது - ஆனால் ஆங்கில வேதாகமத்திலோ, "எத்திசையிலும் திரும்பி இருக்கிற சுடரொளிப் பட்டயம்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.)



அவள் மெலிய விரும்புகிறாள். ஆனால் புகைப்பது, காசநோய், புற்று நோய் முதலியவற்றை உண்டாக்கி அவர்களை மெலியச் செய்கிறது என்பதை அவர்கள் உணருவதில்லை. அவளுக்குள் ஒரு குழந்தை வடிவத்தில் அது உள்ளே வந்து அவ்வாறு ஆக்கி, அவளை முற்றிலும் தின்று போட்டு, கொன்று விடுகிறது. அதிலிருந்து தீமையைத் தவிர வேறு எதுவும் வர முடியாது. அதுதான் சரி. அது ஒரு சிந்திக்கும் மனிதனின் வடிகட்டி என்னப்படுகிறது. ஓ, என்னே !

143. “இல்லை, இல்லை, இல்லை எங்களுக்கு உண்டு... சகோ. பிரன்ஹாமே நான் அதை எதிர்க்கிறேன். எங்களுக்கு மகத்தான கூட்டங்கள் நடைபெறுகின்றன. பில்லி கிரகாம் தேசம் முழுவதிலும் எதைப் பெற்றுள்ளார் என்பதை பாருங்கள்'' என்றெல்லாம் கூறுகிறார்கள். ஓ, நிச்சயமாக ஒரு பெரிய ஆட்சிமுறை தான் பணத்துக்கு அமர்த்திக் கொள்ளப்பட்ட சுவிசேஷர்கள், ஊதியம் கொடுத்து அமர்த்தப்பட்டுள்ள பாடல் குழு தலைவர்கள் அவர் களுக்கு உண்டு.

144. ஆம், அவர்கள் தங்களுடைய சுவிசேஷகர்களை பணத்துக்கு அமர்த்திக்கொள்கின்றனர். “நல்லது, நான் வந்து அந்த எழுப்புதல் கூட்டத்தை நடத்தினால் எனக்கு எவ்வளவு பணம் தருவீர்கள். நல்லது, இத்தனை ஆயிரம் டாலர்களை எனக்கு தராவிடில் நான் வரவேமாட்டேன். அப்படித்தான். பாடலை நடத்துவதற்கு யாரை நீங்கள் அமர்த்திக்கொள்ளப்போகிறீர்கள்? நல்லது, நீங்கள் போய் இன்னாரை அமர்த்திக் கொள்ளுங்கள். அவர் ஒரு பெரிய தனிக் குரலிசைஞர் (Soloist) அவரையே நீங்கள் அமர்த்திக் கொள்ளுங் கள். அவரே தனிப்பட்ட விதத்தில் எனக்குச் சேரும் கூட்டத்தில் பாதியளவு கவர்ந்திழுப்பார்'' என்று கூறுகிறார்கள்.

145. கூலிக்கு அமர்த்திக் கொள்ளப்படும் பாடகர்கள்! கூலிக்கு அமர்த்திக் கொள்ளப்படும் சுவிசேஷகர்கள்! ஆத்தும ஆதாயம் செய்வதென்பது ஒரு வியாபாரம் என்ற அளவுக்கு இப்பொழுது ஆகிவிட்டது. ஆத்தும ஆதாயம் என்பது சபையின் வியாபாரம் அல்ல, அது சபையில் காணப்படும் பரிசுத்த ஆவியின் வல்லமை யால் நடப்பதாகும். ஆத்தும ஆதாயம் என்பது தேவனுடைய கிரியையாகும். அதைப் பணத்தைக்கொண்டு விலைக்கு வாங்காதே. இல்லை ஐயா! இல்லை. ஆகவே அவைகள் யாவும் கிரியைகள், கிரியைகள், கிரியைகள் என்பதாகத்தான் இருக்கிறது. கூலிக்கு அமர்த்திக்கொள்ளப்பட்ட சுவிசேஷர்கள், கூலிக்கு அமர்த்திக் கொள்ளப்பட்ட பாடல் குழு தலைவர்கள், கூலிக்கு பாடும் பாடல்

குழுவினர் என்று இவ்வாறெல்லாம் உள்ளன. அவ்விதமான கிரியைகளையெல்லாம் தேவன் விரும்பவில்லை. தேவனுக்கு அவை தேவையில்லை. பரிசுத்த ஆவியானவர் உங்களில் கிரியை செய்வதையே அவர் விரும்புகிறார்.

146. 17ம் வசனம் கூறுகிறது.

“நீ நிர்பாக்கிமுள்ளவனும், (ஓ!) பரிதபிக்கப் படத்தக்க வனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவிய சம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும் சொல்லுகிறபடியால்"

வெளி.3:17

147. இக்கடைசி கால சபைகளில் உள்ள இந்த பெந்தெகொஸ்தேயினர் தாங்கள் ''ஐசுவரியவான்கள்'' என்று எண்ணினர். அவர்கள் எண்ணினர்... புறம்பான ரீதியில் அவர்கள் அவ்வாறே உள்ளனர். ஆம் ஐயா. அவர்கள் ஐசுவரியமாயுள்ளனர். சில ஆண்டு களுக்கு முன்பாக இருந்த சபையைக் குறித்து எண்ணிப் பாருங்கள், அந்நாட்களில், ஊருக்கு ஊர் துரத்திவிடப்பட்டு, மூலையில் போய் நின்றனர். அவர்களுக்கு மிகவும் கடினமான வேளை உண்டாயிருந்தது. ஆனால் இப்பொழுதோ, எல்லாவற்றையும்விட பெரிய கட்டிடங்கள் அவர்களிடம் உள்ளன.

148. அசெம்ப்ளீஸ் ஆஃப் காட் சபைக்கு இன்றிருக்கிற கட்டிடத் தைப் பாருங்கள். ஒரு காலத்தில் அவர்களுக்கு இங்கிருப்பதைப் போல், மரத்தலான சாதாரண கட்டிடமே இருந்தது, இப் பொழுதோ, அவர்கள் 6 மில்லியன் டாலர் மதிப்புள்ள ஒரு கட்டிடத்தை கட்டிக் கொண்டிருக்கின்றனர். அவர்களும், “இயேசு சீக்கிரம் வரப்போகிறார்'' என்று கூறிக் கொள்ளுகிறார்கள். நீங்கள் அதை விசுவாசிக்கவில்லையென்பதை உங்களுடைய கிரியைகள் நிரூக்கின்றனவே. ஏழை மிஷனரிகளோ ஊழிய களத்திலே, கால் களில் பாதரட்சைகூட தொடுக்காமல், ஊழியம் செய்கின்றனர். அவர்கள் உண்மையான தேவ பயம் உள்ள மிஷனரிமார்களாவர். கால்களில் அவர்களுக்கு பாதரட்சை இல்லை, வாரத்தில் இரண்டு நாட்களுக்குரிய அரிசி மட்டுமே அவர்களுடைய ரேஷனாககிடைத்து, வாரத்தில் இரு வேளைகள் மட்டுமே உண்டு, சுவி சேஷத்தை காடுகளிலும் தங்களுடைய சகோதரர்களுக்கு கொண்டு செல்கின்றனர். ஆனால் நாமோ, 6 மில்லியன் டாலர் செலவில் கட்டிடங்கள் கட்டுகிறோம். சபைக்கட்டிடமானது பெரிய வருணம் பூசப்பட்ட கண்ணாடி



இருக்கிறார்; அவர் நடுவான காலத்திலும் அவ்வாறே இருந்தார், அவ்வாறே எப்பொழுதும் இருக்கிறார். பார்த்தீர்களா? இப்பொழுது ஆதியாகமத்தில் இருந்த கேரு பீன்கள்.... அவைகளைப் பற்றி நான் அந்த விதமாகத்தான் தெரிந்து கொண்டேன். அவைகள் ஆதியில் எவ்வாறு இருந்தன என்பதைப் பற்றி பின்னால் திரும்பிப் பார்க்க வேண்டியுள்ளது.

286. நாம் இப்பொழுது சற்று ஆதியாகமம் 3:24க்கு திரும்புவோம். ஆதியாகமம் 3ம் அதிகாரம் 24ம் வசனம். நீங்கள் அதை நேசிக்கிறீர்களா? (சபையார் 'ஆமென்'') என்று சொல்லுகிறார்கள் - ஆசி) சரி, 22-ம் வசனத்திலிருந்து துவங்குவோம். அதை நான் விரும்புகிறேன். சிறிது கூடுதலாக இவ்வசனத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆனால் ஒரு நாளில் அது மிகவும் நன்மையான ஒரு காரியத்தைச் செய்யக்கூடும்.

“பின்பு... கர்த்தர்: இதோ, மனுஷன்... நம்மில் ஒருவரைப்போல் ஆனான்...”

ஆதி. 3:22

287. இப்பொழுது, எனது அன்புள்ள, விலைமதிப்புள்ள, அருமை யான சகோதரிகளே, (நான் இதை இவ்விதமாகக் கூறுவேனாக), உத்தமும், பண்பமைதியுள்ள, விலையுயர்ந்த அணிகலனாக இருக்கின்ற பெண்மையை நான் இழிவுபடுத்துவதாக நீங்கள் எண்ண வேண்டாம். ஸ்திரீயானவளைப் பற்றி, அவள் என்ன என்பதைப் பற்றி, இங்கே நான் காண்பிக்க விரும்புகிறேன். தயவுகூருங்கள், ஒலி நாடாவில் செய்தியைக் கேட்கப்போகும் பெண்களே, நான் உங்களை வசைபாட முயலவில்லை. ஒளியைக் கொண்டுவரும் கர்த்தருடைய ஊழியக்காரனாக மாத்திரமே நான் இருக்கிறேன். ஒரு பெண் கெட்டவளாயிருந்தால், அவள்தான் இப்பூமியில் இருக்கின்ற அனைத்து ஜீவராசிகளுக்குள்ளேயே மிகவும் கீழ்த்தரமானவளும், ஒழுக்கக்கேடான ஜென்மமாக இருக்கிறாள். ஒரு மனிதனுக்கு, அவன் அடைந்திருக்கும் இரட்சிப்புக்கு அடுத்தபடியாக, அவன் அடையும் மிகவும் விலையுயர்ந்த அணிகலன் எதுவென்றால், ஒரு நல்ல மனைவியே யாவாள். நான் தாழ்ந்த, ஒழுக்கக் கேடான, தரங்கெட்ட பெண்மணிக்கே இவைகளைக் குறித்துப் பேசுகிறேன். இதோ, இப்பொழுது நான் உங்களுக்கு அதைக் குறித்து காண் பிக்கப்போகிறேன், நான் ஏன் ..... பெண்கள் பிரசங்கிகளாகவும், மேய்ப்பர்களாகவும், போதகர்களாகவும் அல்லது இன்னபிற அலுவலர்களில் எதிலும் சபையில் ஈடுபடக்கூடாது என்று ஏன் வேதா

283. அவருடைய வஸ்திரத் தொங்கல்' என்பது என்ன? இதோ அதற்கான விளக்கம் இதுதான்; அது "தூதர்கள், ஜீவன்கள்'' ஆகும். அவரைப் பின்பற்றின ஆடைப் பின்தொங்கல் (வஸ்திரத் தொங்கல்) ஆகிய அவர்கள்தான் அவரின் பின்னால் வருபவர்கள் ஆகும். 'அவரது வஸ்திரத் தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது.''

"சேராபீன்கள் அவருக்கு மேலாக நின்றார்கள். அவர்களில் ஒவ்வொருவனுக்கும் அவ்வாறு செட்டைகளிருந்தன; அவனவன் இரண்டு செட்டைகளால் தன் தன் முகத்தை மூடி, இரண்டு செட்டைகளால் தன் தன் கால்களை மூடி, இரண்டு செட்டைகளால் பறந்து;

ஒருவரையொருவர் நோக்கி: சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டுச் சொன்னார்கள்.

கூப்பிடுகிறவர்கன் சத்தத்தால் வாசல்களின் நிலைகள் அசைந்து, ஆலயம் புகையினால் நிறைந்தது'' (என்னே ! ஓ, என்னே ).

ஏசா. 6:2-4

284. அம்மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் சரியாக அதே காரியம் தான் தரிசனத்தில் காண்பிக்கப்பட்டது என்பதை இக்காட்சி காண்பிக்கிறது. பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்' என்று அந்த ஜீவன்கள் களைப்படையாமல் ஓயாமல் இரவும் பகலும் சொல்லிக்கொண்டே யிருக்கின்றன. "கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்!'' என்றன.

285. நாம் இப்பொழுது வேதத்தில் இந்த ஜீவன்களைப் பற்றி அறிந்து கொள்ள சற்று பின்னால் திரும்பிப்போவோம். வேதத்தில் முதலில் ஆதியாகமத்தில்தான் இந்த காவலர்களைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பொழுது ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். நாம் பிரசங்கிக்கும் ஒவ்வொரு விஷய மும் ஆதியாகமம் முதற்கொண்டு வெளிப்படுத்தின விசேஷம் முடிய உள்ளதக இருக்கவேண்டும். இவ்விஷயத்தில் உங்களுக்கு எப்பொழுதாவது ஏதாவது கேள்வி இருக்குமானால், நீங்கள் என்னிடத்தில் வந்து கேட்கலாம். தேவன் மாறாதவராயிருக்கிறார், எனவே எந்தவொரு விஷயமும் முழு வேதாகமத்தின் அடிப்படையிலும் இருக்கவேண்டுமேயல்லாது, வேத்திலிருந்து அரைகுறை யாக ஏதோ ஒரு பாகத்திற்குட்பட்டதாக இருக்கக்கூடாது. அவர் ஆதியாகமத்தில் என்னவாக இருந்தாரோ, இன்றைக்கும் அதே விதமாகத்தான்



ஜன்னல்கள் பொருத்தப்பட்டதாக, பெரிய அளவில் கட்டுகிறோம். அவர்கள் சபைகளில் கடன் வழங்கம் சங்கங்கள் ஏற்படுத்தும் அளவுக்கு ஏராளம் பணம் குவிந்து விட்டது. உண்மை !

149. அவர்கள் சபைகளில் அவர்களுடைய சுவிசேஷகர்களையும், மிஷனரிமார்களையும் மருத்துவப் பரிசோதனை செய்வதற்கென்றே மருத்துவரும் உள்ளனர். யாராவது மிஷனரியாகப் போக விரும் பினால், அவரை மருத்துவரின் பரிசோதனைக்குட்படுத்தி, அல்லது உளவியல் மருத்துவ நிபுணரைக்கொண்டு (Psychiatrist) உளரீதியாக அவரது விவேகம், மூளை சரியாக இயங்குகிறதா என்பதையெல்லாம் பரிசோதித்து அனுப்புகிறார்கள். பரிசுத்த ஆவியானவர் தான் மனிதனை பரிசோதிக்க முடியும். ஊழியத் திற்குப் போவதற்கு தகுதியுண்டா இல்லையா என்பதை பரிசோதிக்க உளவியல் மருத்துவ நிபுணர் உங்களுக்குத் தேவையில்லை.

150. 'ஏன், நாங்கள் ஐசுவரியவான்கள், எங்களுக்கு ஒரு குறைவுமில்லை'' என்று கூறுகிறார்கள். ஓ, நிச்சயமாக உங்களிடம் ஏராளமான பணம் உண்டு. புறம்பான ரீதியில், குறைவற்று, ஐசுவரியவான்களாயுள்ளனர். அவர்களிடம் பெரிய கட்டிடங்களும், அலங்கார ஜன்னல்கள் பொருத்தப்பட்டும் உள்ளன.

151. பேச்சு சாதுரியமுள்ள பிரசங்கிகள் அவர்களுக்கு உண்டு. ஓ, என்னே, நான் உங்களுக்குக் கூறுவேன், அவர்கள் நிச்சயமாகவே நாவன்மை படைத்தவர்கள்தான். அவர்கள் இரவு முழுவதும் நின்று, பேசி கொண்டேயிருக்க முடியும்? அவர்கள் பிரசங்கிக்க எழும்பி வருகையில்... அவர்கள் கூறக் கூடாதவைகளைப் பற்றி கூறுவதையே நான் குறிப்பிடுகிறேன். அவர்கள் எழும்பி நின்று, இதைப் பற்றியும் அதைப் பற்றியும் சிறிது காரியங்களை அவர்கள் பேசுவார்கள், அவ்வளவுதான். அது எப்படியுள்ளது என்று உங்களுக்குத் தெரியும். அவர்கள் கூலிக்கு அமர்த்திகொள்ளப்பட்ட பாடகர்கள். பிரசங்க பீடத்தில் நாவன்மைமிக்க பிரசங்கிகளாக வருகிறார்கள். பின் தொங்கலற்ற நீண்ட டக்ஸடோ சூட் என்னப் படும் ஒரு வகை விலையுயர்ந்த ஆடை அணிந்தவராய், காலர் பட்டி திருப்பிவிடப்பட்ட நிலையில் அணிந்திருந்து, ஒரு வகையான பின்புறம் வால்போல் நீட்டிக் கொண்டிருக்கும் கோட் மேலே அணிந்தவராய் அவர்களது பிரசங்கியார் இல்லாவிடில், சபையார் அதனால் சற்று மலைப்படைக்கின்றனர்.

152. அப்பாடகர்கள் அங்கே வருகிறார்கள், அவர்களில் பெண் களோ, தலை முடியை யேசபேலைப்போல் குட்டையாக வெட்டிக் கொண்டு, முகத்தில் நிறைய வர்ணம் பூசிக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் முகத்தில் பூசப்பட்டுள வர்ணமானது, ஒரு களஞ் சியத்தை வர்ணமடிக்க போதுமானது. பாடல் குழுவில் அணிந்து கொண்ட அங்கியை கழற்றியே உடனேயே அவர்கள் குட்டையான நிஜார்களை, ஆண்களின் ஆடைகளை அணிந்து கொள்ளுகிறார்கள். 'ஆணின் ஆடையை பெண் தரித்துக் கொண்டால் ஆண்டவரின் பார்வையில் அது அருவருப்பாயிருக்கும்'' என்று வேதம் கூறுகிறது. தங்கள் நாசியை உயர்த்தினவர்களாக தெருவில் நடந்து செல்கின்றனர். மழை பெய்தால் அவர்கள் பூசியிருக்கும் வர்ணமெல்லாம் அவர்களை மூழ்கடித்து விடும். இறுமாப்பும், திமிர்பிடித்ததும், கர்வமான மனநிலையும் உள்ள யேசபேல்கள் இவர்கள். அக்காரணத்தினால்தான், நமக்கு எழுப்புதல் இல்லை, பெரிய அளவில் வெறும் இயந்திரமயமான காரியம் தான் உள்ளது.

153. ஓ, பிரதான தூதனின் சப்தத்தையொத்த சப்தம் கொண்ட வராக நீங்கள் இருக்கக் கூடும், அதற்காக பதிலளிக்க வேண்டிய நிலையில், உங்களைத் தேவன் ஆக்குவார். இந்த எல்விஸ் ப்ரெஸ் லிக்களும், ஏனையோரும், மேலும் எர்னீ போஃர்ட்களும், இன்னும் மற்றுமுள்ளோரும் அருமையான குரல்களையுடையோர் ஆவர். அவற்றை பிசாசுக்காகப் பயன்படுத்துகிறார்கள். தேவன் "நான் அவர்கள் கையில் அதை விசாரிப்பேன்'' என்று கூறினார்.

154. குருடாயிருக்கும் பேஃன்னி க்ராஸ்பியை நான் மதிப்பதின் காரணம் என்னவெனில், அவன் தன்னுடைய வரத்தை ஒரு போதும் உலகுக்கு விற்றுவிடவில்லை. அவள் அவ்வரத்தை தேவனோடு மாத்திரமே வைத்துக்கொண்டாள்.

155. இவர்களில் அநேகர், இனிய குரலையுடைய பாடகர்கள், சொல்வன்மைமிக்க மனிதர், பெரிய மனிதர்கள், தங்களுடைய காலத்தை தேவனுக்காக உபயோகிக்கப்பதற்குப் பதிலாக வேறு வகையாக உபயோகிக்கிறார்கள். பிசாசு அவர்களை அவ்வாறான புரட்டான வழியில் நடத்தியிருக்கிறான். அவர்கள் பிசாசுக்காகவே கிரியை செய்து வருகிறார்கள். அவர்கள் பெரும் புள்ளிகள், வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பேசிடும் பெரும் பிரமு கர்கள், தங்களுடைய திறமைகளை தேவனுக்குக் கொடுப்பதற்குப் பதிலாக உலகுக்கு விற்றுப் போட்டு விட்டார்கள். அவர்களில் சிலர் ஆலயத்திற்கு வருகிறார்கள். அவர்கள் ஆலயத்திற்குபோய், அருமையான



பரிசுத்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்! சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்'' என்று இரவும் பகலும், ஒவ்வொரு காலத்திலும் ஓயாமல் துதித்துக்கொண்டேயிருக்கின்றன.

280. என் மனதில் ஒரு வேதவாக்கியம் இருக்கிறது, ஒரு நிமிடத்தில் அதற்கு நாம் திரும்பிச் செல்லுவோம். ஏசாயா 6ம் அதிகாரத்தை விரைந்து எடுத்துக்கொள்வோம். கவனியுங்கள். சரியாக அதே விதமாக அதே காரியத்தை ஏசாயா கண்டான்.

281. கர்த்தர் ஒவ்வொரு தரிசனமும்..... அதைக் குறித்துத்தான் கூறுகிறேன். இன்று நமக்கு கிடைக்கும் தரிசனங்கள் வேதாகம தரிசனங்களுக்கு சரியாக இல்லாவிடில், அவைகள் தவறாக இருக்கும். அவர் என்னவாயிருந்தாரோ அதற்கு மாறாக அத்தரிசனங்கள் பிரதிபலிக்குமெனில், அல்லது எந்தவொரு வெளிப்படுத்துதலும், தேவன் என்னவாயிருந்தாரோ அதற்கு மாறாக இருக்குமெனில், அப்பொழுது அது தவறான வெளிப் பாடாகவே இருக்கும். மத்தேயு 17ம் அதிகாரத்தின்படி, சபையானது முழுவதும் வெளிப்படுத்தலின்மேல் தான் கட்டப் பட்டுள்ளது.

282. நாம் ஏசாயா 6ம் அதிகாரத்தைப் பார்ப்போம். இவ்விளம் தீர்க்கதரிசியானவன் அப்பொழுது இருந்த அந்த நல்ல அரசனின் ஆதரிக்கும் கரத்தில் நிம்மதியாக சாய்ந்து இருந்தான். அந்த அரசன் தனக்கு நல்ல வஸ்திரங்களையெல்லாம் வாங்கிக்கொடுத்தான். அவன் ஒரு தீர்க்கதரிசியாக இருந்தான். அவன் முன்னேறிச் சென்றுகொண்டேயிருந்தான். ஒருநாள் அரசன் மரித்துவிட்டான். எனவே அவன் இடமாற்றம் செய்ய வேண்டியது வந்தது, எனவே அவன் ஜெபம் பண்ணுவதற்காக ஆலயத்திற்கு சென்றான். இராஜா இருந்த இடத்தில் இருந்து வந்த அவன், அங்கிருந்து வெளியேறிட வேண்டியதாயிற்று. வயது சென்ற அந்த நல்ல அரசன் ஒரு நல்ல பரிசுத்த மனிதனாக இருந்தான். ஏசாயா வெளியே வந்து மக்கள் எவ்வாறு வாழ்கிறார்கள் என்பதைக் கண்டு ஆலயத்திற்குச் சென்றான். இப்பொழுது கவனியுங்கள்.

உசியா ராஜா மரணமடைந்த வருஷத்தில், ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கக் கண்டேன்; அவருடைய வஸ்திரத்தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது. (மகிமை).

ஏசா . 6:1

276. அவைகள் பறந்து சென்றன. அவைகள் சுற்றிலும் உள்ளேயும் பின்புறமும் கண்களால் நிறைந்தவைகளுமாயிருந்தன. அவைகளுடைய விவேகத்தைப் பற்றி அது பேசுகிறது. அவைகள், என்ன இருந்தது, இருப்பது, வரப்போகிறது என்பதைப் பற்றி அறிந்திருந்தன. ஏனெனில் அவைகள் சிங்காசனத்தின் அருகிலே மிகவும் நெருக்கமாக இருக்கின்றன. எனவே அவைகள் மானிடருமல்ல. ஆலய காவலர்கள்... அல்ல அவர்கள் ஆலய காவலர்கள் அல்ல. ஆலயக் காவலர்கள் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்களாவர். ஆனால் இவைகளோ கிருபாசனத்தின் காவலர்களாவர். சிங்காசனத்தின் காவலர்கள் ஆவர். தேவனுக்கு அடுத்து, சிங்காசனத்தின் அருகில் இருப்பவைகள்தான் அந்த நான்கு ஜீவன்களாவர். அவைகள் தேவனுக்கு அடுத்தபடியாக உள்ளன. அவைகள் அங்கே நின்றுகொண்டிருக்கின்றன. இருந்தவரும், இருப்பவரும், வருகிறவருமானவர் யார் என்பதை அறிந்த விவேகமுள்ள வைகளாய் உள்ளன. அவைகள் தங்களில் புறம்பே கண்களை உடையவைகளாய் இருந்தன; எனவே அவைகளால் என்ன வரப்போகிறது என்பதை காண முடியும் என்பதைக் காட்டுகிறது; உள்ளே கண்களால் நிறைந்திருந்தன என்றால், இப்பொழுது இருக்கிறதையெல்லாம் அவைகள் அறிந்திருக்கின்றன என்பதைக் காட்டுகிறது; பின்னால் கண்கள் இருக்கின்றன என்றால், என்ன இருந்தது, நடந்தது என்பதை அவைகள் அறிந்திருந்தன என்பதைக் காட்டுகிறது. இருந்ததை யும், இருப்பதையும் வரப்போகிறதையும் அறிந்துள்ள இவைகள் "இருந்தவரும், இருப்பவரும், வருகிறவருமாகிய நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிற'' இயேசு கிறிஸ்துவை சபைக்காலங்களில் பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றன.

277. அவைகளைப் பற்றி கவனித்துக்கொண்டேயிருங்கள். இன்னும் சில நிமிடங்களில் நாம் அதைப்பற்றி விரிவாக கரும்பலகையில் வரைந்து பார்க்கப்போகிறோம். அதைக் கவனியுங்கள். இன்னும் ஒரு நிமிடத்தில்....

278. அவைகளுடைய விவேகத்தைக் குறித்து வெளிப்படுத்தப் படுகிறது. அவைகள் அறிந்திருக்கிறதைப் பற்றி அது காண்பிக் கிறது. அவைகளுக்கு எதிர்வரும் காலத்தைக் குறித்தும், நிகழ் காலத்தைக் குறித்தும், கடந்த காலத்தைக் குறித்தும் எல்லாம் தெரியும்.

279. அவைகள் களைப்படைவதேயில்லை. மனுஷ சம்மந்தமாக அவைகளிடம் ஒன்றுமில்லை; மனிதனோ களைப்படைகிறான். ஆனால் அவைகளோ களைப்படைவதேயில்லை. பரிசுத்தர், பரிசுத்தர்,



அங்கியணிந்து, அங்கே பாட்டுப் பாடிவிட்டு, அங்கிருந்து திரும்பிப்போய் அடுத்த நாள் இரவில் ராக் அண்டு ரோல் பாட்டுகளை பாடுகிறார்கள். நாம் அறிந்திருக்கிற அவ்வித மான பாடகர்கள், குறிப்பிட்ட சபைகளை சேர்ந்தவகளாயிருக் கிறார்கள். அவர்கள் திரைப்படங்களில் ராக் அண்டு ரோல் பாட்டுப் பாடுகிறார்கள். ராக் அண்டு ரோல் பாடகர்களின் அரசர்கள் என்னப்படுவார்கள். தேவ பக்தியுள்ளவர்களாக தங்களை அழைத்து கொள்கின்றர். அது பிசாசின் ஒரு தந்திரமேயாகும்.

156. ஒரு மனிதனுக்கு போதுமான அளவுக்கு நல்ல பொது அறிவு இருந்தது; அதாவது, அவன் தான் ஞாயிற்றுக் கிழமையில் போய் பிரசங்கிக்கப் போவதாகவும், அதை முடித்த பிறகு, வானொலி ஒலிபரப்பில் ராக் அண்டு ரோல் பாடல்களை பாடப் போவதாகவும் கூறினான். முடிவாக அவன் ஒரு கைத்துப்பாக்கியை எடுத்து தன் தலையில் சுட்டுக்கொண்டு, மூளை சிதறி செத்துப்போனான். அதைச் செய்ததற்காக நான் அந்த மனிதனை மதிக்கிறேன். அவன் செய்தது சரிதான். அந்தப் பன்றிக் கூட்டம், தங்களுக்குள் அசுத்த ஆவிகள் நுழைந்ததும், கடலுக்குள் ஓடிப்போய் மூழ்கி மாண்டு போய் விட்டன. அந்த அளவுக்கு இந்த மனிதனுக்கும் அறிவு இருந் திருக்கிறது. அந்த அளவு அறிவு கூட சிலருக்கு இருப்பதில்லை.

157. அவ்வளவு கடினமாகப் பேசுவதற்கு நானே வெறுக்கிறேன். ஆனால் சகோதரனே, சகோதரியே, அவ்விஷயத்தை நாம் திட்ட வட்டமாக எடுத்துக் காட்டியாகவே வேண்டும். நாம் வாழ்கிற இந்நாள் அதற்காகத்தான் உள்ளது. இயேசு ஏரோதை, ''கிழட்டு நரி என்று அழைத்தாரெனில், யோவான் அவர்களை 'விரியன் பாம்புக் குட்டிகளே'' என்று அழைத்தானெனில்... சரி.

158. அவர்களுக்கு பெரிய கட்டிடங்களும், வர்ணம் பூசப்பட்ட கண்ணாடி ஜன்னல்களும், நாவண்மைமிக்க பிரசங்கிகளும், கூலிக்கு அமர்த்திக்கொள்ளப்பட்ட இனிய பாடகர்களும் உள்ளனர். ஆம் ஐயா, அதில் அவர்களுக்கு என்ன உள்ளது? அதில் என்ன உள்ளது? பரிசுத்த ஆவின் ஒரு அம்சமும் அதில் இல்லை. அவர்கள் குட்டையான உடைகளை அணிந்து, அங்கே நிற்கிறார்கள். பிறகு ஆலயத்துக்கு வந்து, பாடகர் குழுவில் அங்கம் வகித்து பாடுகிறார்கள். அப்படிப்பட்ட பரிதாபத்துக்குரிய மாய்மாலக் காரனே! ஆம், ஐயா, அப்படி தான் நடக்கிறது.

159. ஓ, பிரசங்கியே, நீர் குறைவாகப் பணம் கொடுக்கும் கூட்டத்தைவிட, எங்கு அதிகம் பணம் கொடுக்கிறார்களோ அக்கூட்டத் திற்குத் தான் பிரசங்கிக்கப் போகிறீர், நீர் பிரசங்க பீடத்தில் நிற்ப தற்கு தகுதியுள்ளவர் அல்ல, நீர் ஒரு கயவர். பணம்தான் குறிக் கோள். “இத்தனை ஆயிரம் டாலர்களை நீங்கள் ஒதுக்கீடு செய்திடா விடில் எங்களால் வரமுடியாது. எங்களுடைய மேனேஜர்கள் அங்கே வந்திடுவார்கள். அப்பணத்தை உங்களால் சேர்த்துக் கொடுக்க முடிந்தால் தான் எங்களால் வர முடியும். யாவருடைய முழு ஒத்துழைப்பும் எனக்குக் கிடைக்காவிடில் நான் வரமுடியாது. அனைத்து சபைகளிலுள்ள யாவரும் முழுவதுமாக ஒத்துழைத்தால் தான் எனக்கு ஏராளமான பணம் கிடைக்கும், அதைக்கொண்டு, என் கடன்களையெல்லாம் நான் அடைத்துக் கொள்ள முடியும், ஆகவே அவ்வாறு இல்லாவிடில் நான் வரமுடியாது'' என் றெல்லாம் கூறுகின்றனர்.

160. சகோதரனே, ஒரு உண்மையான தேவனுடைய மனுஷன், பரிசுத்த ஆவியானவரின் நடத்துதல் அவனுக்கு இருந்தால் போதும், அவன் செல்வான், அல்லது சிற்றோடையில் ஓடும் தண்ணீரைக் குடித்துக்கொண்டு திருப்தியோடிருப்பான். நான் வெறும் சோடா க்ராக்கர்ஸ்களை சாப்பிட்டு, (ஏழைகள் சாப்பிடும் ஒரு வகை சாதாரண பிஸ்கட் - மொழிபெயர்ப்பாளர்). சிற்றோடை யின் தண்ணீரைக் குடித்துக் கொண்டு இருந்து விடுவேன். அதுதான் சரி. அவ்விதமான நபர்தான் உண்மையான தேவ மனிதனாவான்.

161. ஆனால் மக்களோ, பெருந்தொகையான பணத்தை சேகரிக் கும் பொருட்டு வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கென தங்களை ஈடுபடுத்திக்கொள்கிறார்கள். நான் கூறுவது முற்றிலும் உண்மை . பாருங்கள்? அது தேவனுக்குரியதல்ல. தேவன் கூறுகிறார், “ஓ, நீங்கள்...''

162. ''நான் ஐசுவரியவான், எனக்கு ஒரு குறைவுமில்லை '' நிச்சயமாக அப்படித்தான் உள்ளது. எது அவசியம் தேவை யாயிருக்கிறதோ அது உன்னிடம் இருக்கவில்லை. ஆம் அதை நீ அறியாமலிருக்கிறாய். ''ஐசுவரியவானும், ஒரு குறைவுமில்லை யென்றும் என்று இருக்கும் நிலையைப் பாருங்கள். சீட்டு விளையாட்டு போன்ற காரியங்களில் சபையிலேயே ஈடுபட அவர்களுக்கு பணம் செலவழிக்கப்படுகிறது. ''எங்களுக்கு பெரிய சபை இருக்கிறது” என்று கூறுகிறீர்கள். ஆம் ஐயா, நிச்சயமாக அப்படித் தான் இருக்கிறது. இருப்பதிலேயே பெரிய சபைதான். ''நல்லது, இந்நகரத்தின் மேயராக இருப்பவரே எங்களது சபைக்குத் தான் வருகிறார் என்பது உங்களுக்கத் தெரியுமா?'' என்று



யோவான் எத்தனை பேர்களைப் பார்த்தான்? நான்கு பேர்கள். எத்தனை பேர்களை எசேக்கியேல் கண்டான். அவனும் நான்கு பேர்களை, நான்கு ஜீவன்களைக் கண்டான். அவர்கள் இருவருமே ஒரேவிதமான தரிசனத்தைக் கண்டார்கள் என்பதை இப்பொழுது கவனியுங்கள்.

273. நான்கு என்ற எண்ணானது பூமிக்குரியதாயிருக்கிறது. அதை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? எத்தனை பேர் நான்கு என்ற எண் பூமிக்குரியது என்று அறிவீர்கள்? நான்கு என்ற எண்ணானது பூமிக்குரிய எண்ணாகும். நிச்சயமாக! நான்கு எபிரெய... போல்... அது பூமிக்குரிய ஒரு எண்ணாக இருக்கிறது. அது விடுதலையைக் குறிக்கும் ஒரு எண்ணாக இருக்கிறது. “விடுதலை” என்பதை நீங்கள் உங்கள் மனதில் வையுங்கள். அதை நான் இன்னும் ஒரு நிமிடத்தில் மிகவும் தீவிரமாக விளக்கிக் கூறப்போகிறேன். ''விடுதலை” என்பதைப் பாருங்கள். அக்கினிச் சூளையினுள் மூன்று எபிரெயப் பிள்ளைகள் இருந்தனர். ஆனால் நான்காவதாக ஒருவர் அங்கே வந்தபோதோ, அது விடுதலையைக் கொண்டுவந்தது. லாசரு மூன்று நாட்கள் கல்லறையில் இருந்தான்; நான்காவது நாள் வந்தபொழுதோ, அவன் விடுவிக்கப்பட்டான். ஆகவே நான்கு "விடுதலையை அளிக்கும் தேவனுடைய எண்ணாக இருக்கிறது. ஆகவே இந்நான்கு ஜீவன்களும்கூட நிச்சயமாக பூமிக்கு சம்மந்தமுள்ளதாகத்தான் இருக்கவேண்டும்.

274. இப்பொழுது நீங்கள் பசியாயிருக்கவில்லை என்று நான் நம்புகிறேன். உங்களுடைய ஆவிக்குரிய பசியானது லௌகீகப் பசியைவிட மேலானதாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். பாருங்கள்? சரி.

275. இப்பொழுது கவனியுங்கள். அவைகளுக்கு கண்கள் இருக் கின்றன. (எசேக்கியேலில் இங்கே இருக்கிறது). முன் புறத்திலும் பின்புறத்திலும் சுற்றிலும் கண்களால் நிறைந்திருந்தன. அதைப்பற்றி நாம் சற்று வாசிப்போம். இங்கே பாருங்கள். இங்கே நான்கு முகங்களையுடைய ஜீவன்களைப் பற்றி அவர்கள் பேசினார்கள்; கழுகைப் போலுள்ளது... செட்டைகள். உள்ளும் புறம்பும் கண்களால் நிறைந்திருந்தன.

அந்த நான்கு ஜீவன்களிலும் ஒவ்வொன்றும் அவ்வாறு சிறகு களுள்ளவைகளும்...

வெளி. 4:8

என்று படிக்கிறார் - மொழி பெயர்ப்பாளர்.) அந்த ஜீவன்கள் மின்னலின் தோற்றம் போல ஓடித்திரிந்தன.

நான் அந்த ஜீவன்களைப் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, (நாம் இதைப் பார்க்கலாம்) பூமியில் ஜீவன்களண்டையிலே நாலு முகங்களையுடைய ஒரு சக்கரத்தைக் கண்டேன்.

சக்கரங்களின் ரூபமும் அவைகளின் வேலையும் படிகப் பச்சை வருணமாயிருந்தன; அவைகள் நாலுக்கும் ஒரேவித சாயல் இருந்தது; அவைகளின் ரூபமும் அவைகளின் வேலையும் சக்கரத்துக்குள் சக்கரம் இருக்குமாபோல இருந்தது.

எசே. 1:13-16

271. "இவ்வடையாளச் சின்னமானது என்ன சகோதரன் பிரன்ஹாம் அவர்களே, அது என்னவாயிருக்கிறது?'' என்று கேட்பீர்கள். அதன் அர்த்தம் என்னவெனில்: இக்காவலர்கள் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டி... அவைகளை எசேக்கியேல் கண்டபொழுது, அவைகள் தங்களில் சக்கரங்களைக் கொண்டிருந்து, பயணம் செய்துகொண்டு இருந்தன. ஆனால் யோவான் அவைகளைக் கண்டபொழுதோ, அவைகள் ஏற்கனவே பரலோகத்தில் அவைகளுக்குரிய சரியான ஸ்தானத்தை வந்தடைந்துவிட்டன. தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியானது பூமியில் இருந்த பொழுது, சக்கரங்களினாலும் ஓடித் திரிந்தது, அவர்கள் அதை இடம் விட்டு இடம் எடுத்துச் சென்றனர், அது பயணம் செய்து கொண்டேயிருந்தது, அவர்கள் அதை வனாந்தரத்தின் வழியாகவும், ஆலயத்திற்குள் போகிற வரையிலும், வழி நெடுகிலும் அதை எடுத்துச் சென்றனர், ஆனால் இப்பொழுது அது உன்னதத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது, ஏனெனில் சபைக்காலமானது முடிவடைந்துவிட்டது, அது மகிமையில் ஏறெடுத்துக்கொள்ளப் பட்டுவிட்டது. பார்த்தீர்களா? அது பரலோகத்தில் இப்பொழுது ஸ்திரமாக அமைந்துவிட்டது. அதைச்சுற்றி தூதர்களும் மற்றும் இன்னபிறவும் சூழ்ந்திருக்கத்தக்கதாக உள்ளது. சற்றுப் பொறுத்து, அவர்கள் தங்கள் கிரீடங்களை எடுத்துவிட்டு, முகங்குப்புற விழுந்து, அவருக்கு மகிமையைக் கொடுத்துக்கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். பாருங்கள்? அவர்கள் தேவனுடைய ஆலயத்திலுள்ள உடன்படிக்கைப் பெட்டியின் காவலர்கள் தாமே.

272. இப்பொழுது, இவர்கள் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியின் அல்லது கிருபாசனத்தின் காவலர்கள் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள்.



கேட்கின்றனர். "இன்ன பிரமுகர் கூட, அவர் கள் நகருக்கு வருகை தரும் போது, எங்களுடைய சபைக்குத் தான் வருகிறார்கள்'' என்கிறீர்கள்.

163. ஆம், பரிசுத்தவான்களான தரித்திரரும், தேவை உள்ளோரும் சபைக்குள் வரட்டும் பார்க்கலாம். அவர்கள் வந்தால் அது உங்களுக்கு ஒரு கண்டனமாக இருக்கிறது. அவர்கள் அங்கே இருப்பதையே நீங்கள் விரும்பவில்லை. அப்படிப்பட்டவர்கள் வந்து விட்டால், நீங்கள் பிரசங்கம் பண்ணும்போது, 'ஆமென்'' என்று சப்தமிடுவர்களே என்று அஞ்சுகிறீர்கள்.

164. இங்கே ஒரு புத்தகத்தில், ஒரு ஆலயத்தினுள் வந்திருந்த ஒரு எளிய பெண்மணியைக் குறித்து நான் வாசித்திருக்கிறேன். அவள் ஒரு சபைக்குள் வந்தாள். அவள் தன் பிள்ளைகளை தூரமான காட்டுப் பிரதேசங்களிலே, உண்மையான தேவதாபக்தியுள்ளவர்களாக, பழைய பாணியிலான ஆவிக்குரிய சபையில் வளர்ந்து ஆளாக்கி யிருந்தாள். அவளது மகள் ஒருத்தியை ஒரு நாள், ஒரு வாலிபன் வந்து விவாகம் செய்து கொண்டு போனான். அவன் பெரிய நகரம் ஒன்றில் அப்பெண்மணி சார்ந்திருந்த அதே ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஒரு பெரிய சபையைக் சேர்ந்தவனாக இருந்தான். எனவே, அவன் அப்பெண்ணின் தாயிடம், தான் ஒரு கிறிஸ்தவன் என்று கூறி விட்டு, அவளது மகளை விவாகம் செய்து கொண்டு, அழைத்துச் சென்றுவிட்டான்.

165. அவன் இறுதியாக, அப்பெண்ணை நாட்டுப் புறங்களிலிருந்து விவாகம் செய்து கொண்டு, தான் வாழும் நகரத்திற்கு அழைத்துச் சென்றபோது, அவள் சார்ந்திருந்த அதே பெயருள்ள நாட்டுப்புற சபையில் இருந்த வந்த நல்ல காரியங்களையெல்லாம் அவளை விட்டு மறக்கடித்துப் போட்டு, நகரில் இருந்த அதே பெயருள்ள தான் அங்கம் வகிக்கும் சபைக்குரியவளாக அவளை மாற்றிப் போட் டான். அவள் முன்பு சார்ந்திருந்த அந்த நாட்டுப் புறத்து சபையில் பரிசுத்த ஆவி உண்டாயிருந்தது. ஆனால் நகரில் இருந்த அதே சபையில் பரிசுத்த ஆவியே இல்லை. எனவே, அவர்கள் இப் பொழுது அந்த பெரிய அருமையான சபையில் வந்து விட்டார்கள்.

166. ஒரு நாள் அப்பெண்ணின் தாயார் தன் மகளை பார்த்து விட்டு போக விரும்புவதாக தெரிவித்திருந்தாள். அவள் வந்தால், அவளை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று மகளும் மருமகனும் திகைத்தார்கள். எனவே, அவள் குறிப்பிட்ட நாளில் வந்தபோது ஏதோ பழங்காலத்து நினைவுச் சின்னத்தைப் பற்றி விவரிக்கும் புத்தகத்தில்

கூறப்பட்ட ஒரு நபரைப் போன்ற அவர்களுக்கு காட்சியளித்தாள். ஏனெனில் அவள் அணிந்திருந்த உடை கழுத்து வரையிலும் உயரமாக உள்ள காலர் உள்ளதாகவும், முழுக்கை உடையதாகவும் இருந்தது. அவளது தலை முடியானது பின்னால் நீண்டு தொங்கிக் கொண்டு இருந்தது. தலையை உரித்த வெங்காயத்தைப் போல், நன்கு மழித்துச் சீவியிருந்தாள். அவள் வந்தபோது, “நல்லது அல்லேலூயா, அன்பே, நீங்கள் எல்லாம்; எப்படியிருக் கிறீர்கள்?'' என்று கேட்டாள். மேலும், “இன்று ஞாயிற்றுக்கிழமை காலையாயிற்றே, நீங்களெல்லாம் ஆராதனைக்குப் போவீர்களல்லவா?'' என்றாள்.

167. மகளுடைய புருஷன், மகளிடம், “இவளை நாம் என்ன செய்யலாம்? இப்படிப்பட்ட இவளை நாம் அங்கெல்லாம் அழைத்துச் செல்லக் கூடாது, என்ன செய்வதென்றே எனக்குத் தெரியவில்லை'' என்று கூறினான். அவன், 'அம்மா , நாங்கள்... நான் உங்களுக்கு கூறுகிறேன்...'' என்றான்.

168. “என்னால் ஆலயத்திற்குப் போகாமல் இருக்க முடியாது. நான் அங்கே அந்த மூலையில் இன்ன சபையொன்றைப் பார்த்திருக்கிறேன். நான் போய் ...'' என்று தாய் கூறினாள்.

169. ''ஓ, நல்லது, வேறு வழியில்லை, அழைத்துக் கொண்டு தான் போவோமே” என்றான் அவன்.

170. ஆகவே, அப்பெண்மணியை அழைத்துக் கொண்டு சபைக்கு வந்தபொழுது, அவளைப்பற்றி வெட்கமாக நினைத்தபடியால், அவளை முதலில் உள்ளே போக விட்டுவிட்டார்கள். இங்கே அவள் தெருவில், அந்த நீண்ட ஆடையை ஆணிந்து கொண்டு, தன் அக்களத்தில் வேதாகமத்தை சுமந்து கொண்டு வந்தாள். ஆனால் சகோதரனே, ஒருவேளை உலகில் உள்ள பெரிய தலைவர்கள் பிரமுகர்கள் ஆகியோரைப் பற்றிக் கூறும் “இன்னார் இன்னார்'' புத்தகத்தில் அவளது பெயர் இடம் பெறாமல் இருக்கக் கூடும். ஆனால் அவளது பெயர் ஆட்டுக்குட்டியானவரிள் ஜீவ புஸ்தகத்தில் இடம் பெற்றிருக்கும் என்று நான் நினைக்கிறேன். அதுவே முக்கியமான காரியமாயிருக்கிறது.

171. அவள் சபையினுள் நுழைந்த போது, அங்கே பின்னால் ஒரு ஆசனத்தில் அமர்ந்தாள். பிறகு தனது வேதாகமத்தை திறந்து அதைப் படிக்க ஆரம்பித்தாள். அங்கிருந்த யாவரும் அவளையே வெறிக்கப் பார்த்து, ஏதோ ஒரு பழங்காலத்து நினைவுச் சின்னம் தான் எங்கிருந்தோ இங்கு தப்பித் தவறி வந்துவிட்டதோ என்று



இங்கே அவ்வாறே அது இருக்கிறது. இது இயேசு கிறிஸ்துவை எசேக்கியேலின் காலத்திலும் மாறாத வராகவும், இப்பூமியில் அதேவிதமாகவும், இன்று நம்மோடு அதே தேவனாக இருக்கவும் செய்கிறது. நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராக இருப்பதைக் காண்பிக்கிறது. இருந்தவரும், இருக்கிறவரும், வருகிறவருமானவராகக் காண்பிக்கிறது. ஆத்துமா, சரீரம், ஆவி ஆகியவற்றுக்குள் பிரவேசிக்கும் வாசலான வார்த்தையாகிய வெண்கலக்கடல் தொட்டியாக அவர் இருக்கிறார். நமது ஆத்துமாவை பரிசுத்தமாக்குபவராகவும், பரிசுத்த ஆவி யினால் நிரப்புகிறவருமாகவும் இருக்கிறார். யாவும் அவரேதான், அவரேதான்.

268. இதை இப்பொழுது கவனியுங்கள்.

'... ஆவி போக வேண்டுமென்றிருந்த எவ்விடத்துக்கும் அவைகள் போயின; போகையில் அவைகள் திரும்பிப் பார்க்கவில்லை."

எசே. 1:12

269. அவைகளால் திரும்ப முடியவில்லை. இவைகள் இந்த வழியாக செல்லுமென்றால், அது ஒரு மனிதனைப் போல் போயிற்று, இந்த வழியாகச் செல்லுமென்றால், அது ஒரு கழுகைப்போல் போனது; இந்த வழியாகச் செல்லுகிறதென்றால், அது ஒரு காளையைப்போல் போயிற்று; இந்த வழியாகச் செல்லுமென்றால் ஒரு சிங்கத்தைப் போல் போனது. அவைகளால் பின்னால் செல்ல முடியவில்லை. சென்ற எவ்விடத்தும் அந்த ஜீவன்கள் ஒவ்வொன்றும் முன்னோக்கியே போகவேண்டியதிருந்தது. வேதத்தில் ஒரு மிருகம் எதைக் குறிக்கும்? வல்லமையைக் குறிக்கும். ஒரு வல்லமையைக் குறிக்கும்.

270. இப்பொழுது:

''ஜீவன்களுடைய சாயல் எப்படியிருந்ததென்றால், அவைகள் எரிகிற அக்கினித்தழலின் தோற்றமும் தீவர்த்திகளின் தோற்றமுமாயிருந்தது; அந்த அக்கினி ஜீவன்களுக்குள்ளே உலாவிப் (ஆங்கில வேதாகத்தில்

''...ஜீவன்களுக்குள்ளே மேலும் கீழும் சென்றது...'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது - மொழி பெயர்ப்பாளர்.) பிரகாசமா யிருந்தது; அக்கினியிலிருந்து ஒளி புறப்பட்டது (அது தேவனாயி ருக்கிறது) -

அக்கினியிலிருந்து ஒளி புறப்பட்டது (இவ்வுலகுக்குரிய ஒளியல்ல, அது நித்திய ஒளியாகும்). (சகோ. பிரன்ஹாம் 'மின்னல்' என்பதை 'ஒளி'

காட்டு விலங்குகளும் அல்ல. அவைகள் சிருஷ்டிகள் - ''ஜீவனுள்ள சிருஷ்டிகள்'' ஆகும்.

265. இப்பொழுது, இதோ இங்கே தேவனுடைய சிங்காசனம் உள்ளது. இதோ இவைகள் அவருடைய காவலர்கள் ஆவர். இன்னும் சில நிமிடங்களில், அதைப்பற்றி கூறும் வசனத்தை நாம் சிறிது வாசித்து பார்ப்போமாக. பாருங்கள், அவர்கள் தேவனுடைய தூதர்கள், இல்லை, தேவனுடைய சிங்காசனத்தைக் காக்கும் தேவனுடைய காவலர்கள் ஆவர். அவர்கள்.... ஒரு நிமிடத்தில் அதைப் பெற்றுக்கொள்வோம். நாம் எசேக்கியேல் தீர்க்கதரிசியின் புத்தகத்திற்கு திரும்பிப்போவோம். நான் இவைகளைப் பற்றி இங்கே என்னிடம் எழுதிக் குறித்துவைத் துள்ளேன். அவைகளைப் பற்றிப் பார்க்காமல் கடந்து செல்ல நான் விரும்பவில்லை. நாம் எசேக்கியேல் 1ம் அதிகாரம் 12ம் வசனத்தில் ஆரம்பித்து 17ம் வசனம் முடிய உள்ளதை ஒரு நிமிடத்தில் பார்ப்போம்.

"அவைகள் ஒவ்வொன்றும் தன்தன் திசைக்கு நேர் முகமாய்ச் சென்றது..."

எசே. 1:12

266. நாம் இப்பொழுது இன்னும் சில சிமிடங்களில் பார்க்கப் போகிறோம். இங்கே இந்த 7ம் வசனத்தை நினைவில் வைத்துக் கொள்வோம். அவைகளின் தோற்றம் எதற்கொப்பாய் அந்நான்கும் இருந்தன என்பதை வெளிப்படுத்தின விசேஷத்தின் அதே அதிகாரத்தின் 7ம் வசனத்தில் பார்ப்போம்.

“முதலாம் ஜீவன் சிங்கத்திற்கொப்பாகவும், இரண்டாம் ஜீவன் காளைக் கொப்பாகவும், மூன்றாம் ஜீவன் மனுஷ முகம் போன்ற முகமுள்ளதாகவும், நான்காம் ஜீவன் பறக்கிற கழுகுக்கு ஒப்பாகவுமிருந்தன."

வெளி. 4:7

267. எசேக்கியேல் தேவனுடைய மகிமையைக் கண்ட போது, அவன் யோவான் கண்ட அதே காரியத்தையே கண்டான். கடந்த ஞாயிறன்று, தேவனுடைய மகிமையைப் பற்றியுள்ளதை நாம் எவ்வாறு பெற்றுக்கொண்டோம் என்றும், நம்மோடுகூட அதின் படம் எடுக்கப்பட அவர் செய்தார் என்றும் பார்த்தோம் என்பதை நீங்கள் நினைவில் வைத்திருக்கிறீர்கள். அதை நினைவில் வைத்திருக்கிறீர்களா? தேவனுடைய மகிமையை எசேக்கியேல் எவ்வாறு இருக்கக் கண்டானோ, அதேவிதமாகத்தான் யோவானும் கண்டான், இன்றும்



நினைத்தார்கள். அவர்களோ லவோதிக்கேயா காலத்திற்கு எடுத்துக் காட்டாய், மிகவும் எடுப்பான ஆடைகளை அணிந்தவர்களாய் அங்கே அமர்ந்திருந்தார்கள். அவர்கள் பின்னால் திரும்பிப் பார்த்து, அப்பெண்மணி தன் முகத்தில் பெரிய புன்முறுவலோடு வேதத்தை வாசித்துக் கொண்டிருப்பதை அவர்கள் கண்டார்கள்.

172. சபைப்போதகர், ஆராதனையின் ஏனைய சடங்குகளையெல்லாம் முடித்துவிட்டு, கடைசியாக பதினைந்து நிமிட பிரசங்கத்திற்காகத் தான் அவருக்கு நேரம் இருந்தது. எனவே அவர் அதற்காக எழும்பி நின்று கர்த்தர் நல்லவர்'' என்று கூறி ஆரம்பித்தார்.

173. “தேவனுக்கு ஸ்தோத்திரம். அது சரிதான், அல்லேலூயா'' என்று அப்பெண்மணி சப்தமிட்டாள். உடனே யாவரும் ஆண் வாத்துக் கோழியைப் போல் தங்கள் கழுத்துக்களை சுற்றுமுற்றும் பார்த்து நீட்டி, “யார் அது? என்றார்கள்.

174. சற்று நேரம் கழித்து, போதகர், “ஹூம் ஹூம்'' என்றார். அவர் மேலும் தொடர்ந்து, ''ஒவ்வொரு காலத்திலும் கிறிஸ்த வர்கள், தீரமிக்க மகத்தான அருமையான கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டும்'' என்று கூறினார். இவ்வாறு இன்னும் சில காரியங்களையும் கூறினார்.

175. 'அதுவே சரி தேவனுக்கு ஸ்தோத்திரம்'' என்று அவள் மீண்டும் கூறினாள். அவர்கள் யாவரும் சற்றும் முற்றும் பார்த்தார்கள்.

176. போதகர், ''ஹூம்'' என்று கூறிவிட்டு, உதவிக்காரர்கள்( டீக்கன்கள்) குழுவை அர்த்தத்துடன் நோக்கிப் பார்த்தார்.

177. அந்த உதவிக்காரர் குழுவுக்கு போதகர் என்ன சமிக்ஞை தெரிவிக்கிறார் என்பதை புரிந்து கொண்டார்கள். அவர்கள் பின்னால் போய், அந்தப் பெண்மணியை கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போய், ஆலய வாசலுக்கு வெளியே கொண்டுபோய் விட்டு, நீ போதகருக்கு இடையூறு செய்கிறாய்'' என்று கூறினார்கள்.

178. நீங்கள் மரித்திருக்கிறீர்கள், அதை அறியாமலும் இருக்கிறீர்கள். ஆம், ஒ, சித்திர வர்ணம் பூசப்பட்ட உங்கள் ஆலய ஜன்னல்கள் என்னத்திற்கு? மெத்தென்ற பூம்பட்டினால் செய்யப்பட்ட சொகுசான இருக்கைகள் என்னத்திற்கு? உங்களுடைய பெரும் திரளான மக்கள் கூடுகிற உங்கள் சபைதான் என்னத்திற்கு? மார்ட்டின் என்ற ஒரு வகைப் பறவை எவ்வாறு தன்னுடைய கூண்டிலேயே தன் அழிவை அடைந்து விடுகிறதோ, அவ்வாறு நேராக நீங்கள் நரகத்துக்கு தான் போகப்போகிறீர்கள். உங்களிடத்தில் தேவனுடைய ஆவி

இல்லையெனில் நீங்கள் கைவிடப்படுவீர்கள். நீங்கள் மறுபடியும் பிறவாவிடில் தேவனுடைய இராஜ்யத்தைக் காண முடியாது.

179. அவ்வாறு கூறுவது கசப்பாகத் தான் இருக்கும். அது நான் விளக்கெண்ணெய் குடிக்கும் வழக்கம் உண்டே, அதைப் போல் இருக்கிறது. நான் தாயிடம், 'அம்மா, என்னால் அதை சகிக்கவே முடியவில்லை'' என்று விளக்கெண்ணெய் குடிப்பதைப் பற்றிக் கூறுவதுண்டு.

180. உனக்கு விளக்கெண்ணெய் குடிப்பது கஷ்டமாக இருக்கா விடில், அது உனக்கு நன்மை பயக்காது'' என்று என் தாய் கூறுவார்கள். இந்த பரம காரியமுங்கூட அந்த விதமாகத்தான் இருக்கிறது என்ற நான் நினைக்கிறேன்.

181. அந்த பெரிய அருமையான கட்டிடங்கள் உள்ள சபையின் மக்களிடம் நீங்கள் பேசிப்பாருங்கள். ஓ, அவர்கள், அவர்கள்... அவர்கள் சபைக்கு நீங்கள் போவீர்களானால், நீங்கள் சொல்ல நேரிடும்.... அவர்கள் சபைக்குப் போய், “நீங்கள் பெந்தெகொஸ் தேயினரா?'' என்று கேட்டால்.

''ஓ ஆமாம், ஊ - ஊ. நிச்சயமாக நாங்கள் பெந்தெகொஸ்தேயினர் தான்'' என்பார்கள்.

''மறுபடியும் பிறப்பதில் நீங்கள் விசுவாசம் கொண்டிருக் கிறீர்களா?'' என்று கேட்டால்.

“ஆம்” என்பார்கள்.

182. "உங்களுக்கு ஒரு காரியத்தை காண்பிக்க நான் விரும்பு கிறேன். இந்தக் கட்டிடத்தைப் பாருங்கள். இக்கட்டிடத்திற்கு கட்டுமானச் செலவு எவ்வளவு ஆயிற்று என்பது உங்களுக்குத் தெரியுமா? இதைக் கட்டியெழுப்புவதற்கு, முக்கால் மில்லியன் டாலர்கள் (7.5 இலட்சம் டாலர்கள் - மொழிபெயர்ப்பாளர்) செலவாயிற்று. எங்களுக்கு முன்பெல்லாம் இம்மாதிரிக் கட்டிடம் கிடையாது. அந்த சந்தில் தான் ஒரு இடத்தில் நாங்கள் கூடு வதுண்டு” என்றெல்லாம் கூறுவார்கள். நீங்கள் சுற்றிப் பார்த்தால், அவர்கள் பெற்றிருக்கிற அந்த பெரிய காரியங்களையெல்லாம் எங்களுக்கு இருக்கிறது'' என்று மேலும் கூறுவார்கள். அவர்களுக்கோ இழந்து போகப்பட்ட ஆத்துமாக்களைப் பற்றிய ஆத்துமபாரம் இல்லை. அவர்கள் எப்பொழுதும் எப்படிப்பட்ட கட்டிடம் தங்களுக்கு இருக்கிறது என்பதைப் பற்றியே உங்களுக்கு காண்பிக்க விரும்புகிறார்கள். “எங்களுடைய ஞாயிறு பள்ளி வருகைப்



ஜீவன்கள் என்னப்பட்டவைகள் தூதர்கள் அல்ல, அவைகள் மூப்பர்களுமல்ல; அவைகள் சிங்காசனத்தின் அருகிலிருந்த ''ஜீவனுள்ள சிருஷ்டிகள்''. ஓ, நீங்கள் அதை நேசிக்கவில்லையா? ஜீவனுள்ள சிருஷ்டிகள்! அவைகள் தூதர்களல்ல, ஏனெனில் பின்வரும் வசனத்தில் அதைப்பற்றி நிரூபிக்கப்படுகிறது:

"பின்னும் நான் பார்த்தபோது, சிங்காசனத்தையும், ஜீவன் களையும் மூப்பர்களையும் சூழ்ந்திருந்த அநேக தூதர்களுடைய சத்தத்தைக் கேட்டேன்...

வெளி. 5:11

262. இங்கே மூன்று வெவ்வேறு வகையினங்கள் உள்ளன. இவ்வமைப்பை நீங்கள் யாவரும் இப்பொழுது இங்கே குறித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று நான் நம்புகிறேன். இப்பொழுது நான் அதை உங்களுக்கு காட்ட விரும்புகிறேன். அங்கே மூன்று வெவ் வேறு வகையினங்கள் உள்ளன, மூன்று வெவ்வேறு உயிரினங்கள் சிங்காசனத்தைச் சுற்றிலும் உள்ளன. இப்பொழுது பாருங்கள்.

263. இதோ இங்கே சிங்காசனம் உள்ளது. இப்பொழுது இங்கே முதலில் சிங்காசனத்தின் அருகில் இருப்பவை நான்கு ஜீவன்கள் ஆகும். அதற்கு வெளியே இருபத்து நான்கு மூப்பர்கள் தத்தமது சிறியதும், கீழாக இருக்கிறதுமான சிங்காசனங்களின் மேல் அமர்ந்திருந்தனர். இதையெல்லாம் சுற்றி, இந்த பெரிய சேனை யாகிய தூதர்கள் சிங்காசனத்தைச் சூழ்ந்து நின்றார்கள். ஓ, ஓ, ஓ! நான் கூறுவதைப் புரிந்து கொண்டீர்களா? அவர்கள் ஒவ்வொரு வரும் வெவ்வேறு வகைப்பட்டவர்கள். அங்கே தூதர்கள் உள்ளனர்; இங்கே மூப்பர்கள் உள்ளனர்; இங்கே ஜீவன்கள் உள்ளன.

264. ஒரு நிமிட நேரம் அதை விட்டு விலகிச் செல்லவேண்டாம். சற்று ஒரு நிமிட நேரம் நாம் பற்றிக்கொண்டிருப்போம். "ஜீவனுள்ள சிருஷ்டிகள்''. அந்த ஜீவன்கள் தூதர்கள் அல்லது மீட்கப்பட்ட மனிதர் அல்லாவிடில் அவர்கள் யார்? அதை நீங்கள் அறிய விரும்புகின்றீர்களா? இதோ அதைப்பற்றி என்னுடைய வியாக்கியானம். அது சரியானது என்று நான் நம்புகிறேன். அவர்கள் தேவனுடைய சிங்காசனத்தைக் காக்கும் தேவனுடைய காவலர்கள் ஆவர் என்று நான் விசுவாசிக்கிறேன். இப்பொழுது நாம் ஒரு சிறிது இதை கரும்பலகையிலிருந்து நீக்கப்போகிறோம். இப்பொழுது கவனியுங்கள், அவர்கள் தூதர்களோ, மனிதரோ அல்ல. அவைகள்

பெயர்ப்பும் கொடுக்கப்பட்டுள்ளதுமானதாகும் - மொழி பெயர்ப் பாளர்). அதில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளதா இல்லையா என்பதைப் பாருங்கள். அங்கே வெளிப்படுத்தின விசேஷம் 11,13,17 ஆகிய அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மிருகங்கள் ''பழக்கி வளர்க்கப்பட முடியாத காட்டு மிருகம்'' என்ற அர்த்தத் தில்தான் உண்மையாக குறிப்பிடப்பட்டுள்ளன என்பதைப் பாருங்கள்.

259. ஆனால் இங்கே வெளிப்படுத்தின விசேஷம் 4ம் அதிகாரத் தில் உள்ளதோ, "ஜீவனுள்ள சிருஷ்டிகள்'' (தமிழ் வேதாகமத்தில் ''ஜீவன்கள்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளன - மொழிபெயர்ப்பாளர்) என்று குறிப்பிடப்பட்டுள்ளதேயல்லாமல், மிருகங்கள் என்ற அர்த்தத்தில் அல்ல. ஆங்கில வேதாகமத்தில் "மிருகம்'' என்று எழுதப்பட்டுள்ளது; ஆனால் அது அவ்வாறு அந்த அர்த்தத்தில் அல்ல. எசேக்கியேல் 1ம் அதிகாரம் 1 முதல் 28 முடிய உள்ள வசனங்களிலும் அதே விஷயம் உள்ளது. இன்னும் ஒரு நிமிடத்தில் அதைப்பற்றி நாம் பார்க்கலாம்.

''பழக்கிவளர்க்கப்படாத, குணப்படாத, மனந்திரும்பாத காட்டு விலங்கு'' - பழக்கி வளர்க்கப்படாத.

260. ஆனால் இவைகளோ "ஜீவிக்கிற சிருஷ்டிகள்'' அவைகள் என்ன? அவைகள் தூதர்கள் அல்ல. அவைகள் என்ன என்பதை நான் உங்களுக்கு கூறுவேன். நாம் இப்பொழுது வெளிப்படுத்தின விசேஷத்தில் 4ம் அதிகாரத்திற்கு அடுத்த பக்கத்தில் உள்ள 5ம் அதிகாரத்தைப் பார்ப்போம். வெளிப்படுத்தின விசேஷம் 5ம் அதிகாரம் 11ம் வசனம்:

"பின்னும் நான் பார்த்தபோது, சிங்காசனத்தையும் ஜீவன்களையும் மூப்பர்களையும் சூழ்ந்திருந்த அநேக தூதர்களுடைய (தூதர்கள்'' என்று பன்மையில் உள்ளது) சத்தத்தைக் கேட்டேன். (என்பது இணையிடைச் சொல் ஆகும்). (இணையிடைச் சொல் என்றால், சொற்களையும் தொடர்களையும் வாசகங்களையும் ஒன்றுடனொன்று - இணைக்கும் சொல் - மொழி பெயர்ப்பாளர்).

வெளி. 5:11)

261. 'and' என்பது இணையிடைச் சொல் ஆகும். (மேலே கண்ட வசனம் ஆங்கிலத்தில் "சிங்காசனத்தையும் ஜீவன்களையும் மூப்பர்களையும்'' என்று வருகின்ற இடத்தில் தமிழில் 'யும்'' என்று சொற்களை இணைக்கும்படி வருகிறது போல ஆங்கில வசனத்தில் இணையிடைச் சொல்லாக (Conjunction)" and வருகின்றது - மொழி பெயர்ப்பாளர்) அந்த



பதிவைப் பார்த்தீர்களானால், அது எவ்வளவு பெரிதாக இருக்கிறது என்பதை நீங்கள் கண்டுணரலாம்'' என்பார்கள். பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்காமல், இதினால் அவர்களுக்கு என்ன நன்மை பயக்கப் போகிறது? அவர்கள் ''ஐசுவரியவானும் திரவிய சம்பன்னரும், ஒரு குறைவுமில்லை'' என்ற நிலைமையில் இருக்கிறார்கள்.

183. அவ்வாறு தான் தேவன் அவர்களைப் பற்றிக் கூறினார். “நீ எண்ணுகிறாய், அவ்வாறு இருப்பதாக. ஆனால் நீ தரித்திரனும், நிர்பாக்கியமுள்ளவனும், பரிதாபப்படத்தக்கவனும், குருடனும், நிர்வாணியுமாய் இருக்கிறாய், நீ அவ்விதமான நிலையில் இருப்பதை அறியாமலும் இருக்கிறாய்.'' பார்த்தீர்களா? அவ்வாறு தான் உள்ளது.

184. ஓ, நிச்சயமாக, அவர்கள், “உங்களுக்குத் தெரியுமா? நாங்கள் முன்பு உபயோகித்து வந்த அந்த ஆலயக்கட்டிடம், அது இப்பொழுது பின்னால் இருக்கிறது. புதிதாக உள்ள இது பெரிய ஆலயமாகும்'' என்று கூறுகிறார்கள். அவர்களுக்கு ஆத்தும பாரம் என்பதே கிடையாது. ஏனைய காரியங்களையெல்லாம் சரியாக இருக்க வேண்டுமென்பதைப் பற்றித் தான் அவர்கள் அக்கறை கொண்டுள்ளார்கள். ஸ்திரீகள் நலநிதி மற்றும் இன்ன பிற காரியங்களைப் பற்றித் தான் அக்கறை எடுக்கிறதாக இருக்கிறதேயொழிய இழந்து விடப்பட்டிருக்கிற ஆத்துமாக்களுக்கான பாரம் துளி கூட கிடையாது.

185. அவர்கள் ஆத்தும பாரம் உடையவர்களாக இருக்கவில்லை. ஆனால் அவர்கள் ஆஸ்தியைப் பற்றித்தான் பாரம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். அப்படித்தான் நடக்கிறது. அவர்களுக்கு தவறான பாரம் தான் உள்ளது அவர்களுடைய ஆஸ்தி பெருகுவதைப் பற்றிய பாரம் தான் அவர்களுக்கு உள்ளதேயொழிய, வழி தவறிவிட்ட ஆத்துமாக்களைப் பற்றிய பாரம் அவர்களுக்கு இல்லை. வேதமானது, ''அவர்கள் நிர்பாக்கியமுள்ளவர்களும், பரிதபிக்கப்படத்தக்கவர்களும், குருடராயுமுள்ளதை அறியாமல் இருக்கிறார் கள்'' என்று கூறுகிறது.

186. அவர்கள் பணத்தைக் கொண்டு உலகை மதமாற்றி விடலாம் என்று எண்ணுகிறார்கள். “ஓ, நமக்கு மட்டும் ஏராளமான பணத்தை திரட்ட திட்டம் இருக்கக்கூடுமென்றால், உலகை மனந்திரும்பப் பண்ண நம்மால் இயலும் என்று நான் விசுவாசிக்கிறேன். சகோதரன். பிரன்ஹாம் அவர்களே! நமது சபையிலுள்ள சில ஐசுவரியவான்களைக் கொண்டு, பணத்தை ஒன்று திரட்டி, அதைக் கொண்டு ஒரு சங்கத்தை நாம் உருவாக்கிட இயலும், அப்பொழுது நாம் உலகம் முழுவதிலும்

சென்று உலகை மனந்திரும்பப் பண்ணலாம். நாம் ஆகாய விமானங்களை எடுத்துக் கொண்டு, ஆப்பிரிக்கா முழுவதிலும் துண்டுப் பிரசுரங்களை அதிலிருந்து வீசியெறிந்தும், மற்றும் இன்னபிற காரியங்களையும் செய்யலாம். நமக்கு மட்டும் போதுமான பணம் இருந்தால்'' என்றெல்லாம் கூறுகிறார்கள்.

187. சகோதரனே, உலகை பணத்தால் மனந்திரும்பப் பண்ண இயலாது. பரிசுத்த ஆவியினால் மாத்திரமே உலகை மனந்திரும்பப் பண்ண இயலும் பரிசுத்த ஆவியினால் உண்டாயிருக்கும் வல்லமை யான பிரசங்கமும், சிலுவையும் மட்டுமே உலகை மனந்திரும்பப் பண்ணும். தேவனுடைய திட்டம், பணம் அல்ல. அது பரிசுத்த ஆவியினால் உள்ள திட்டமாகும். லவோதிக்கேயா சபைக்காலத் திற்கோ அல்லது வேறு எந்த சபைக்காலத்திற்கோ, தேவனுடைய திட்டம் இவ்வாறு தான் உள்ளது. ஆம் ஐயா.

188. அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றிட விரும்புகிறார்கள். அவர்கள், ''எங்களிடம் தங்கம் உள்ளது'' என்று கூறுகிறார்கள். அவர்கள் வைத்திருப்பது பொன் தான், ஆனால் அது வேதம் கூறும் பொன் அல்ல. அவர்களிடம் ஏராளமான பொன் உள்ளது. ஆனால் அது சரியான பொன் அல்ல. எனவே தான் இப்பொழுது இயேசு அவர்களுக்கு கட்டளையிடுகிறார். ''நீ ஐசுவரிவானாயும், பொன்னை உடையவனாயும், ஒன்று குறைவுமில்லையென்ற நிலையிலும் இருக்கிறாய் என்பதை நான் அறிவேன்'' ஆனால்;

“நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னை என்னிடத்தில் நீ விலைக்கு வாங்கிக்கொள்ள வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன் (தமிழ் வேதாகமத்தில் என்னிடத்தில் வாங்கிக் கொள்'' என்று கூறுகிறது - மொழிபெயர்ப்பாளர்). (இது ஒரு வேறுபட்ட பொன்னாக இருக்கிறது. ஆம் ஆக்கினிச் சூளையில் புட மிடப்பட்ட பொன்னாகும் இது, அது மரணம் என்னும் அக்கினி ஊடே கடந்து சென்றதாகும். அது கல்வாரி பாடுகளினூடே கடந்து வந்ததாகும்).

189. நீங்கள் இப்பொழுது பெற்றிருக்கிறதான இப்பொன்னானது மங்கிப்போகும். அதின் ஒளி மங்கிப்போய் விடும், அதைப் பூச்சி அரிக்கும், அது துருப்பிடித்துவிடும். யாக்கோபு எழுதிய நிருபம் 5:1 முதல் 4ம் வசனம் முடிய நீங்கள் வேண்டுமானால் குறித்துக் கொள்ளுங்கள். அங்கே என்ன கூறப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்ளுங்கள்; ''ஐசுவரியவான்களே, கேளுங் கள், (இப்பொழுது கர்த்தருடைய வருகையின் நாளிலே) உங்கள் மேல் வரும்



ஒன்றிணைந்து கொண்டுள்ள ஸ்தாபன சபைகளைக் குறிக்கும். அம்மிருகங்கள் சுவிசேஷத்திற்கு மனந்திரும்பாத, குணப்படாத, வளர்க்கப்பட முடியாதவைகளாகும். வளர்க்கப்படமுடியாதவைகள்.

255. "தேவனுக்கு ஸ்தோத்திரம்; நாங்கள் பெரிய மெதோடிஸ்ட் சபையிலிருந்து வந்தவர்கள், பாப்டிஸ்ட்டுகளிலிருந்து வந்த வர்கள், ப்ரெஸ்பிடேரியனிலிருந்து வந்தவர்கள்; பெந்தெ கொஸ்தே ஸ்தாபனத்திலிருந்து வந்தவர்கள். நாங்கள் பேசுவது இன்னதென்று அறிந்துள்ளோம். யாரும் எங்களுக்கு போதிக்க வேண்டியதில்லை" என்று கூறுகிறீர்கள். இதோ உங்களை இனம் காட்டிவிட்டீர்கள். நீங்கள் குணப்படாத, மனந்திரும்பாத, சுபாவ அன்பில்லாத வர்கள், உடன்படிக்கையை மீறுகிறவர்கள், அவதூறு செய்கிறவர்கள், இச்சையடக்கமில்லாதவர்கள், நல்லோரைப் பகைக்கிறவர்கள், வேஷத்தைத் தரித்து...

256. (ஒலி நாடாவில் காலியிடம் - ஆசி.)... இப்பொழுது அதைப் பற்றி பாருங்கள். நான் அதை இன்னும் விளக்கமாக பிரித்து வகைப்படுத்திக்கூற விரும்புகிறேன். ஆனால் நான்... எனவே இது எப்படியாயினும் ஒலி நாடாவில் பதியப்பெற்றுவிடுமென்பதால் ... ஆனால் அதைச் செய்வதற்கு நமக்கு நேரம் போதவில்லை. இப்பொழுது நீங்கள் புரிந்து கொண்டீர்களா? எத்தனை பேர்கள் புரிந்துகொண்டுள்ளீர்கள்? புரிந்துகொண்டால் ''ஆமென்'' என்று சொல்லுங்கள். (சபையார் 'ஆமென்'' என்று கூறுகிறார்கள் - ஆசி.) பாருங்கள், இவைகள் இப்படியாயிருக்கின்றன.

257. 'சூன்' ("Zoon") என்றால் என்ன? ஜீவனுள்ள சிருஷ்டிகள் (living Creatures) என்பதுதான் அதன் பொருள். அது சூன்' என்று உச்சரிக்கப்படவேண்டும். அதை நீங்கள் எவ்வாறு உச்சரிப்பீர்கள்? 'சூன்'. அதை 'சூன்' என்று நான் உச்சரிப்பேன்.

258. 'தேரியான்' இந்த வார்த்தைக்கு ''திருத்தியமையாத குணப்படாத மிருகங்கள்'' - காட்டுத்தனமாக கொடூர மிருகம் என்று அர்த்தமாகும். மிருகங்கள் அப்படிப்பட்டவைகள்தான். நீங்கள் போய் உங்களுடைய கிரேக்க மொழி அகராதியை எடுத்து அந்த வார்த்தைக்குள்ள அர்த்தம் அப்படியிருக்கிறதா இல்லையா என்பதைப் பாருங்கள். உங்களுடைய கிரேக்க மொழி அகராதியை எடுத்துப்பாருங்கள். எம்ஃபபடிக் டயக்லாட்டை (Emphatic Diaglott) எடுத்துப்பாருங்கள். ("எம்பாடிக் டயக்லாட்'' என்பது புதிய ஏற்பாடு அதன் மூல பாஷையாகிய கிரேக்க பாஷையில் எழுதப்பட்டதும், அதன் அருகில் சரியான ஆங்கில மொழி

வெளி. 4:8

251. அவ்வசனம் தொடர்ந்து இவ்வாறு அம்மிருகங்களைப்பற்றி விவரித்துக் கூறுகிறது. அதைப்பற்றி இன்னும் ஒரு நிமிடத்தில் நாம் பார்த்துவிடுவோம். இப்பொழுது இம்மிருகங்கள் எடுத்துக் காட்டாய் உள்ளன. இந்த "மிருகங்கள்'' என்பனவற்றினைப் பற்றி உங்கள் வேதாகமத்தில் ஓரக்குறிப்பு (marginal reading) உள்ளதா? உங்களிடத்தில் அவ்வகையான வேதாகமம் இருந்தால், அப் பொழுது அதில் உள்ள ஓரக்குறிப்பைப் பாருங்கள். டாக்டர் ஸ்கோஃபீல்ட் இங்கே, தான் மொழிபெயர்த்த வேதாகமத்தில் அதைப்பற்றி குறிப் பிட்டிருக்கிறார். மிருகங்கள் என்பதைப்பற்றி அவர் இங்கே ''ஜீவனுள்ள சிருஷ்டிகள்'' என்று குறிப்பிட்டிருக் கிறார். ஓ, என்னே! இப்பொழுது கவனியுங்கள். அதற்குரிய கிரேக்க பதமானது. Z-O-O-N; கிரேக்க மொழியில் அது "சூன்'' (ZOON) என்று அழைக்கப்படுகிறது; அதன் அர்த்தம் என்னவெனில் ''சிருஷ்டிகள்'' என்பதாகும்.

252. நீங்கள் இப்பொழுது வாசிக்க விரும்பினால் ... நமக்கு நேரம் போதவில்லை. நான் அதை வாசிக்கவேண்டுமென இருந்தேன். ஆனால் நான் அவ்வாறு செய்யப்போவதில்லை. எழுதிக்கொள்ளுங் கள்: வெளிப்படுத்தின விசேஷம் 11, 13, 17 ஆகிய அதிகாரங்கள். வெளிப்படுத்தின விசேஷம் 11, 13, 17 ஆகிய அதிகாரங்களில் அங்கே மிருகங்கள் என்றே குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த அதிகாரங்களில் மிருகங்களுக்கு கிரேக்க மொழியில் 'தேரியான் t-h-e-r-i-0-n என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கிரேக்க பதமாகிய 'தேரியான்' (Therion) என்பதற்கு 'மனிதரால் வளர்க்க முடியாத காட்டு விலங்கு' என்று அர்த்தமாகும். 'தேரியான்' என்ற கிரேக்க வார்த்தைக்கு ''வளர்க்கப்படாத ஒரு காட்டு மிருகம்'' என்று பொருளாகும்.

253. ஆனால் 'சூன்' (zoon) என்பதற்கு ஒரு சிருஷ்டி' என்று அர்த்தமாகும். நான்கு ஜீவன்கள்' (சூன்-'Zoon'). அது 'தேரியான் (therion) என்று சொல்லப்படும் காட்டுமிருகங்கள் அல்ல. ஆனால் 'சூன்' ("Zoon") "உயிருள்ள சிருஷ்டிகள்'' என்று அர்த்தமாகும்.

254. 'தேரியான்' என்றால், 'வளர்க்கப்பட இயலாத காட்டு மிருகங்கள்'' என்று அர்த்தமாகும். அதாவது, வெளிப்படுத்தின விசேஷம் 11ம் அதிகாரத்தில் நீங்கள் கவனித்தால், "ரோமாபுரி யாகிய மிருகம்; 13ம் அதிகாரத்தில் ''அமெரிக்க ஐக்கிய நாடு களாகிய மிருகம்"; 17ம் அதிகாரத்தில் அமெரிக்கா, ரோமாபுரி ஆக இரண்டையும் சேர்த்துக் கூறப்பட்டுள்ளது. அதுதானே கத்தோலிக்க கொள்கைகளோடு



நிர்ப்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள்... உங்கள் பொன்... துருப்பிடித்தது... ''துருப்பிடித்துப் போகிற அவ்விதமான பொன்னைத் தான் அவர்கள் வைத்திருக்கிறார்கள்.

190. ஆனால் இயேசு தருகிற பொன் யாதெனில், பரிசுத்த ஆவியே யாகும், அது பொன்னிறமான ஆவியின் எண்ணெய் ஆகும். அது உங்கள் இருதயத்தில் ஊற்றப்படுகிறது. ''நீ ஐசுவரியவானாகும் படிக்கு, என்னிடத்திலிருந்து பொன்னை விலைகொடுத்து வாங்கிக்கொள்'' என்று ஆலோசனை கூறுகிறார் கர்த்தர். ஓ, ஆம்.

191. அவர்கள் குருடராயும் உள்ளனர். அவ்வாறான நிலை மிகவும் மோசமான காரியமாகும். இந்தக் கிறிஸ்தவர்கள் குருடாராயிருப்பதாக நான் எண்ணவில்லை. அவர்கள் " கிட்டப் பார்வை'' உள்ள வர்களாக இருக்கிறார்கள். அவர்கள் கிட்டப் பார்வையுள்ளவர்கள் என்று நான் விசுவாசிக்கிறேன். அவர்களால் கண்ணுறத்தக்கது அவர்களுடைய பெரிய பெரிய ஆலயக் கட்டிடங்கள் தாம் அவர்களால் பார்க்க முடிந்தது எல்லாம் பெருந்திருள் வட்டமான அவர்களுடைய சபையாரேயாகும். அவர்களால் நோக்க முடிந்திருக்கிற ஒரே காரியம் அவர்களுடைய பெரிய அங்கிகளை யணிந்த, நன்கு பயிற்றுவிக்கப்பட்ட அவர்தம் பாடகர்குழு மட்டுமே. அவர்கள் கிட்டப்பார்வை எனும் நோய் பிடித்தவர்கள் என்று எண்ணுகிறேன். அவர்களால் தங்களது மூக்குக்கு மேலாக பார்வையை செலுத்த முடியாது. அவர்கள் குருடர் என்று நான் எண்ணவில்லை, அவர்கள் கிட்டப்பார்வை எனும் நோயுடைவர்கள்.... அவர்களால் மேற்சொன்ன காரியங்களைத் தவிர அதற்கு மேல் நோக்கிட முடியாதவர்களாய் இருக்கிறார்கள். ''உங்களுக்குத் தெரியுமா? நாங்கள் இன்ன இன்ன ஸ்தாபனத்தைச் சார்ந்தவர்கள்'' என்று பெருமையடித்துக்கொள்கிறார்கள். அவர் தம் பெரிய ஸ்தாபனங்கள், அவர் தம் பெரிய கூட்டம். அநேக உறுப்பினர்கள் எண்ணிக்கை, அவர் தம் ஞாயிறு பள்ளி, அவர்களுடைய அருமையான கட்டிடங்கள், இவை தான் அவர்களுடைய நோக்கம்.

192. ''அவர்களுக்கு பரிசுத்த அவி தேவையாயிருக்கிறது'' என்று இயேசு கூறினார். அவர்களுக்கு பரிசுத்த ஆவி தேவைப்படுகிறது. எனவே கர்த்தர் அவர்களுக்கு கூறினார். ''உங்களுடைய கண் பார்வை மிகவும் மோசமாயிருக்கிறது. நீங்கள் கிட்டப்பார்வை நோய் உடையவர்களாய் இருப்பதால், உங்களால், உங்களுடைய பெரிய கட்டிடங்கள், பெரிய அருமையான பெருந்திரளான சபை யார், நகரத்து மேயர் உங்கள் சபைக்கு வருவது, மற்றும் உங்களுடைய கொண்டாட்டங்கள்

ஆகியவைகளைத் தவிர வேறு எதையும் உங்களால் நோக்க முடிவதில்லை. நீங்கள் என்னை மறந்தீர்கள்... ஆனால், நீங்கள் அந்த அளவுக்கு குருடாயிருந்தால், உங்களுடைய கண்கள் அந்த அளவுக்கு நோயுற்று இருந்தால், நான் உங்களுக்கு கண்களுக்குப் போடும் கலிக்கத்தை விற்பேன்... (ஆம்).

193. பாருங்கள், வேதசாஸ்திரத்தில் டாக்டர் பட்டம் பெற்ற இந்த வேத பண்டிதர்கள் கொஞ்சம் கூட அதைப் பெற்றிருக்கவில்லை என்பது விசித்தரமாயுள்ளது. அவ்வாறு இல்லையா? அவர்களுக்கு ஏராளமான வாசனைத் திரவியம் உள்ளது. எராளமான மதக் கோட்பாடுகள் அவர்களிடம் உண்டு. ஆனால் அவர்கள் கண்களுக்குப் போடக்கலிக்கம் தேவையாயிருக்கிறது. அவர்கள் கர்த்தருடைய வருகையை கண்ணோக்குவதற்காகவும், வேதாக மத்தை சரியாக கண்டு கொள்ளவும். வார்த்தையை நோக்கிப் பார்ப்பதற்கு இயலும் படியாகவும், அவர்களுக்கு தேவனுடைய பரிசுத்த ஆவியாகிய கண்களுக்குப் போடும் கலிக்கம் தேவைப்படுகிறது. "ஆமென்'' என்பதை எவ்வாறு உச்சரிக்க வேண்டு மென்றெல்லாம் அவர்கள் சரியாக தெரிந்து வைத்திருக்கிறார்கள். அவர்களிடம் இவ்விதமான எல்லாவிதமான வாசனைத் திரவியமும் பரிமள தைலமும் உண்டு. ஆனால், அவர்கள் கண்களுக்கோ கலிக்கம் தேவைப்படுகிறது என்று வேதம் கூறுகிறது (கலிக்கம் என்பது ஒரு நோய் தீர்க்கும் மருந்து - மொழி பெயர்ப்பாளர்) ''உன் கண்களுக்குப் போடும்படி உனக்கு சிறிது கலிக்கம் தேவைப்படுகிறது. அதைப் போட்டால், அது பார்வையற்று இருக்கும் உன் கண்களை பார்வையடையச் செய்யும்'' என்று வேதம் கூறுகிறது.

194. நான் இப்போது கூறப்போகும் விஷயத்தை ஏற்கெனவே சபையில் கூறியிருக்கக் கூடும் என்று நான் எண்ணுகிறேன். இப்பொழுது அவ்விஷயம் மீண்டும் என் மனதில் வருகிறது. நான் சிறிது காலம் கெண்டக்கியிலுள்ள மலைப்பகுதியில் வளர்க்கப் பட்டேன். நாங்கள் அங்கே மெல்லிய மரப்பலகைகளால் ஆன பழைய வீட்டில் தான் வசித்து வந்தோம். அச்சிறிய வீட்டில் ஒரு பழைய மச்சு ஒன்று உண்டாயிருந்தது. அங்கே வைக்கோலினால் ஆன மெத்தை ஒன்று இருந்தது. அந்த வைக்கோல் மெத்தையின் மேல் சிறகினால் ஆன மேலுறை இருக்கும். சிறகினால் தயாரிக் கப்பட்ட மேலுறை கொண்ட வைக்கோல் மெத்தை என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ, அது எனக்குத் தெரியாது. அது ஒரு பழைய மெத்தை, நாங்கள் மிகவும் ஏழைகளாக இருந்தோம். அப்பாவும் அம்மாவும் கீழ்தளத்தில் கட்டில் போட்டுபடுத்துகொள்வார்கள்.



வருகிறதாய் இருக்கிறது. இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். அதே தேவன்தான், அதே வல்லமை, அதே மகிமை, எல்லாம் எப்பொழுதும் ஒன்றாகவே இருக்கிறது. அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார், ஓ சகோதரனே!

249. இன்னும் இதற்குமேல் உள்ளதையும் கவனிப்போம். நாம் இப்பொழுது இந்த 4ம் அதிகாரம் 6ம் வசனத்தின் மீதிப்பகுதியை யும் எடுத்துக்கொள்ளுவோம். நான் அதன்பேரில் சில கருத்துக்களை இங்கே எழுதி வைத்துள்ளேன், ஆனால் அவைகளை என்னால் முடிந்தவரை விரைவாகப் பார்க்க வேண்டுமென நான் விரும்பு கிறேன். இப்பொழுது மீதியுள்ளது... இவ்வதிகாரத்தை நீங்கள் கடந்து சென்றபின்,.... இவ்வசனத்தை வாசித்து முடித்தபிறகு, அந்த ஜீவன்கள் என்ன செய்தன என்பதைக் குறித்து கூறுகிறதா யிருக்கிறது. அதைப்பற்றி நாம் படிக்க முடிகிறதா என்று பார்ப் போமாக. "கண்ணாடிக்கடல்.'' இப்பொழுது நாம் அது என்ன என்பதைப் பற்றி அறிவோம்.

".... அந்தச் சிங்காசனத்தின் மத்தியிலும்.... நான்கு ஜீவன்களிருந்தன...''

வெளி. 4:6

250. இப்பொழுது இங்கே எத்தனை பேர்களிடத்தில் வேதாகமத்தின் திருத்திய பதிப்பு உள்ளது? உங்களுடைய திருத்திய பதிப்பில், 'ஜீவிக்கிற மிருகங்கள்'' (living creatures) என்று கூறப் பட்டுள்ளது. ஜேம்ஸ் அரசனின் பதிப்பில் எவ்வாறு அது "நான்கு மிருகங்கள்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளன என்பதைப் பற்றி, அது ஏன் அவ்வாறு உள்ளது என்று நான் வியக்கிறேன். நல்லது, நான் கிரேக்க மொழி அகராதியில் அதைப்பற்றி என்ன அர்த்தம் கூறப்பட்டுள்ளது என்று காண் பேனாக. இதோ அது என்னவென்று இங்கே கூறப்பட்டுள்ளது. இப்பொழுது கவனமாகப் பாருங்கள். இங்கே இவ்வார்த்தை எப்படி மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்பதை குறித்துக்கொள்ளுங்கள்; அதினால் நீங்கள் அதைப்பற்றி திட்டவட்டமாக அறிந்து கொள்ளலாம். உங்களால் கூடுமென்றால், உங்களுக்கு விருப்ப மானால், நான் கூறுவதை குறித்துக்கொள்ளுங்கள். திருத்திய பதிப்பு (ஆங்கில) வேதாகமத்தில் 'ஜீவிக்கிற சிருஷ்டிகள்'' என்று கூறப்பட்டுள்ளது. இப்பொழுது கவனியுங்கள்.

'... அந்த நான்கு மிருகங்களிலும்... சுற்றிலும் உள்ளேயும் கண்களால் நிறைந்தவைகளுமாயிருந்தன...''

களைப் போல நீங்களும் பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள். தீர்க்கதரிசிகளில் யாரை உங்கள் பிதாக்கள் துன்பப் படுத்தாமலிருந்தார்கள்?' என்று அவன் கூறினான். ''உங்கள் பிதாக்கள் தீர்க்கதரிசிகளைக் கொன்றார்கள். அதன்பிறகு அவர்களுக்கு கல்லறைகளைக் கட்டினார்களே' என்றும் கூறினான்.

246. சபை ஸ்தாபனங்களே, அதே காரியத்தை உங்களில் யார் செய்யாமல் இருந்தீர்கள்? பாருங்கள்? நீங்கள் சுற்றிலும் வெள்ளையடிக்கப்பட்ட மாளிகைகளையும், பிணக்கிடங்குகளையும் கட்டிக் கொண்டீர்கள்; அப்படியிருந்து கொண்டும் தேவனைக் குறித்துப் பேசுகிறீர்களே! நீங்கள்தான் அவரைப் பிணக்கிடங்களில் போட்டீர்கள், நீங்கள்தான் அவரைக் கல்லறையில் வைத்தீர்கள். அவரை அங்கே போட்ட அதே மக்கள்தான் அவ்விடத்தில் வெள்ளை மாளிகையான ஒரு ஆலயத்தை எழுப்பியிருக்கிறது; ஸ்தாபனங்கள், பரிசேயர் சதுசேயர்தான் அவரை அங்கே கொன்று கிடத்தினார்கள். அப்படியெல்லாம் செய்து அவருக்கு அங்கே ஒரு நினைவுச் சின்னமும் எழுப்ப முயற்சியும் செய்தார்கள்.

247. கிறிஸ்து ஜீவிக்கிற ஒருவர் என்பதை நான் உங்களுக்கு கூறு வேனாக. மரித்துப்போய்விட்ட ஒருவர் அல்ல அவர். மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்து என்றென்றும் உயிரோடிருக்கிறவராக அவர் இருக்கிறார். ஓ, சகோதரனே, நிச்சயமாக அப்படித்தான்! அது என்ன செய்கிறது? அது எதை பிரதிபலிக்கிறது? அது இங் கிருந்து பிரதிபலிக்கிறது, அது என்னவாயிருக்கும்? அவரை உண்மையாக பிரதிபலிப்பது என்ன? அது முதலாவதாக பிரதிபலிப்பது என்னவெனில், அவருடைய நாமத்தைத்தான் அது முதலில் பிரதிபலிக்கிறது. அது சரிதானே? அது அவருடைய நாமத்தை பிரதிபலிக்கும். அடுத்து அது பிரதிபலிப்பது எதையென்றால், அவருடைய வல்லமையை. நான் கூறுவதைப் புரிந்து கொண் டீர்களா? அவர் என்னவாயிருக்கிறாரோ அதையெல்லாம் அப்படியே பிரதிபலிக்கும்.

248. ஆகவே, இது இங்குள்ள இந்தக் காலத்திற்கு அவர் என்ன வாகவெல்லாம் இருந்தாரோ, அதை இப்பொழுதும் அப்படியே பிரதிபலித்துக் காட்டுகிறதென்றால், அவர் மாறாதவராயிருக்கிறார் என்பதை எடுத்துக்காட்டுகிறது. வ்யூ, மகிமை! மகிமை! அது என்ன? அது அவரை இருந்தவராகவும், இருக்கிறவராகவும், எக்காலத்தும் இருக்கப்போகிறவராகவும் அப்படியே பிரதிபலித்துக் காட்டுகிறது; ஏனெனில், அது நேரடியாக தேவனுடைய சிம்மாசனத்திலிருந்து



நாங்களோ ஒரு சிறிய ஏணியின் உதவியினால் அந்த மேல் மச்சுக்கு ஏறிப்போய் படுத்துக் கொள்வோம் எங்கள் தாயார் கூரையை மூடிக்கொள்வதற்காக கான்வாஸ் துணி ஒன்றைத் தருவார்கள். நாங்கள் அந்த மேல் மச்சில் படுத்திருக்கையில், பலகையினால் ஆன அக்கூரையில் இருக்கும் பெருந்துளைகள் வழியாக தெரியும் நிலவொளி நன்கு படும். அங்கே இரவில் மின்னும் நட்சத்திரங்களைக் கூட எண்ணிடலாம். அந்தவிதமாக அக்கூரையானது அமைந்திருந்தது.

195. எனவே, பனியோ, மழையோ பொழியும்போது, சிறுபிள்ளை களாகிய நாங்கள் மேல் மச்சில் படுத்திருக்கையில், நனைந்து விடாமலிருக்க என் தாயார் கொடுக்கும் அந்த கான்வாஸ் துணி, உதவுகிறதாயிருக்கும். நாங்கள் கான்வாஸ் துணியின் கீழாக மூடப்பட்டு இருப்பதால், பனி மழை இவற்றால் நனைந்துவிடாமல் இருப்போம். சில வேளைகளில் கூரையிலுள்ள அத்துளைகளின் வழியாக அடிக்கும் காற்றினால், எங்களுக்கு ஜலதோஷம் பிடித்துக் கொள்ளும், அப்பொழுது எங்களது கண்களில் சீழ்பிடித்துக் கொள்ளும். அந்த ஜலதோஷத்தினால் கண்களும் பாதிக்கப்படும். கண்கள் அடைத்துக் கொண்டு திறக்க முடியாதபடி இருக்கும். எனவே எங்களது அன்னை கீழே வந்து விடும்படி எங்களை அழைப் பார்கள். அப்பொழுது, நான், அம்மா என்னால் வர முடியாது. ஏனெனில் என் கண்களெல்லாம் பனியினால் சீழ் அடைத்துக் கொண்டு திறக்க முடியாதபடி உள்ளது'' என்று கூறுவேன். பனியானது கண்களை பாதிப்பதால், இவ்வாறு இருக்கும். கண்களைத் திறக்கக் கூட முடியாது. என்னோடு ஒரு சிறிய தம்பியும், ஹம்பியும் இருப்பார்கள். அவர்களும் தங்கள் கண்களை திறக்க முடியாதபடி இருக்கையில், திறக்க முயற்சி செய்வார்கள். ஆனால் இயலாது போகும்.

196. எனது தாத்தா கண்ணி வைத்து மிருகங்களை பிடிப்பதில், அதாவது மரம் ஏறும் ரேக்கூன்களைப் பிடிப்பதில் வல்லவர். அம்மிருகத்தின் கொழுப்பானது ஒரு நல்ல சர்வ ரோக நிவாரணி யாக எங்கள் வீட்டில் உபயோகிக்கப்பட்டது. அம்மிருகக் கொழுப்பைப் கொண்டு, எங்களது காலணிகளைக் கூட பாலிஷ் செய்துகொண்டோம். கொடிய இருமலோடு கூடிய குழந்தைகளில் காற்றுக் குழல் அழற்றி நோய் ஏற்பட்டால், அந்த மிருகக் கொழுப் பில் சிறிது டர்பன்டைனை கலந்து, சிறிது விழுங்க வேண்டும். அது அந்நோயைக் குணமாக்கும்.

197. இவ்வாறு பனியினால் எங்களது கண்கள் சீழ்பிடித்து அடைத் துக் கொண்டு விட்டால், அப்பொழுது எங்களது தாயார் இந்த கொழுப்பை எடுத்து... “ஒரு நிமிடம் பொறுத்துக் கொள்ளுங்கள். பிள்ளைகளே, என்று

சமையல் அறைக்கு ஓடிச் சென்று, அங்கே அந்த பழைய கோப்பையில் வைக்கப்பட்டிருக்கும் அந்த கூன் என்ற மரமேறும் அம்மிருகத்தின் கொழுப்பை எடுத்து அதை நன்கு சூடுபடுத்தி எடுத்துக்கொண்டு மேலே வந்து, அதை எங்கள் கண்களில், கண் திறக்கிற வரையிலும், தடவிக் கொண்டேயிருப் பார்கள். சிறிது நேரம் கழித்து என் கண்கள் திறந்து, என்னால் அப்பொழுது பார்க்க முடியும். ஆகவே, அவ்வாறு கண்கள் அடைத்துக் கொண்டு விட்டால், கூன் என்ற அந்த மிருகத்தின் கொழுப்பானது கண்களைத் திறப்பதற்கு உதவுகிற மருந்தாக இருக்கும்.

198. நமக்கு மிகவும் மோசமான குளிர்ந்த காற்று உண்டாயிருந் தது என்பதை நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். பாருங்கள்? தேசத்தில் மிகவும் மோசமான குளிர்க்காற்று வீசிக் கொண்டிருக் கிறது. பாப்டிஸ்ட்டுகள், 'அற்புதங்களின் நாட்கள் கடந்து சென்று விட்டன. பரிசுத்த ஆவி என்ற ஒன்று கிடையாது. அந்நிய பாஷைகளில் பேசுதலும் இல்லை. கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினால் ஞானஸ்நானம் என்பது கிடையாது'' என்று கூறு கிறார்கள். ஓ, இவ்விதமான எல்லாவிதமான வாடைக் காற்று களெல்லாம் வீசிக் கொண்டிருப்பதால், அது தானே ஆவிக்குரிய குளிர்ந்த நிலையில், அநேகம் கண்களை குருடாக்கி போட்டுவிட்டது. இந்தவிதமான கண் அடைத்துப்போன நிலைக்கு கூன் என்ற அம்மிருகத்தின் கொழுப்பைவிட மேலான ஒரு மருந்தே தேவைப் படுகிறது. அவர்களுடைய கண்களைத் திறப்பதற்கு, சகோதரனே! அவ்விதமான குருட்டுத்தனத்தை குணமாக்க சுத்தமான பரிசுத்த ஆவியின் அபிஷேகமே தேவைப்படுகிறது பரிசுத்த ஆவியின் அபிஷேகமானது அடைத்து இருக்கிற உங்கள் கண்களில் மேல் தடவப்பட்டு, அதைச் சுத்தமாக்கி, உங்கள் கண்களிலிருந்து கிட்டப்பார்வையை உங்களிலிருந்து எடுத்துப் போட்டு, அதினால் தேவனுடைய வார்த்தையே சத்தியமாயிருக்கிறது என்பதைக் காண உங்களுக்கு உதவும். அதுதான் சரி "என்னிடத்திலிருந்து கண்களுக்கு கலிக்கம் வாங்கிக்கொள் என்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்'' என்று கூறுகிறார். உங்கள் கண்களில் பூசப்பட்டு அதினால் உங்களைக் காணச் செய்வது பரிசுத்த ஆவியின் அபிஷேகம்தான்.

199. வேத பண்டிதர்கள், தங்களுடைய சொந்த மதக் கோட் பாட்டை உடையவர்களாய் இருக்கிறார்கள். அவர்களிடம் அவர்களுடைய கொள்கைகள், உபதேசங்கள் ஆகிய வாசனை திரவியங் களும் மற்றும் இன்னபிறவும் உள்ளன. ஆனால் அவை போதாது, அவர்களைப் பார்வையடையச் செய்ய. பரலோக வல்லமைகள் கிரியை



242. மோசே தேவனுடைய சமுகத்தைவிட்டு வெளியே வந்த பொழுது, மக்கள் அவனது முகத்தை நோக்கிப் பார்க்கக் கூடாதிருந்தபடியால், அவன் தனது முகத்தின்மேல் ஒரு முக்காட்டைப் போட்டுக்கொள்ள வேண்டியதாயிருந்தது அல்லவா? அவன் முழுவதும் தேவனுடைய வல்லமையால் நிறைந்திருந்தான்.

243. ஸ்தேவான் முழுவதும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட ஒரு மனிதனாயிருந்தான். அவனை நிறுத்தப்பார்த்தார்கள். அச்செய்கையானது, காற்று பலமாய் அடிக்கிற நாளில் நெருப்புப் பற்றி எரிந்து கொண்டிருக்கிற ஒரு வீட்டை அணைக்க முற்படுவது போல் உள்ளது. அதை அணைக்க அவர்கள் ஊத ஊத, அது இன்னும் அதி கரிக்கவே செய்யும். அவனை உங்களால் தடுத்து நிறுத்தவே முடியாது. அவனை சனதெரின் சங்கத்திற்கு முன்பாக கொண்டு போய் நிறுத்திய போது, "அவன் அங்கு நின்றுகொண்டு, தூதனைப் போல் தோற்றமளித்தான்'' என்று வேதம் கூறுகிறது.

244. "ஒரு தூதன்'' என்பது, அவன் வெறும் ஒரு குறிப்பிட்ட ஜீவ ராசியாக நின்று கொண்டிருக்கிறான் என்று நான் எண்ணவில்லை. ஒரு தூதன் என்று அவன் அங்கே குறிப்பிடும் பொழுது, தான் என்ன அர்த்தத்தில் அதைப் பற்றி குறிப்பிடுகிறோம் என்பதை அவன் அறிந்தேயிருக்கிறான். ஆகவே, சபைக்காலத்தில் தூதன் எவனும், செய்தியாளன் எவனும் அவ்வாறே அதைப் பற்றி, நன்கு அறிந்திருந்தவனாயிருக்கிறான்; தூதன் என்னப்படுவதைப் பற்றி வேதக்கல்லூரிகள் என்ன எண்ணுகின்றன, என்பதைப் பற்றி அவரிடம் போய் கேட்டு அறிந்து கொள்ள வேண்டியது அவனுக்கு அவசியமில்லை. அத்தூதனானவன் தேவன் தம்முடைய வேதத்தில் என்ன கூறியிருக்கிறார் என்பதைப் பற்றி அறிந்தேயிருக்கிறான். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் என்பதை நிரூபிக்கும்படியாக, அவனில் அவ்வல்லமையானது பிரதி பலித்துக் கொண்டிருக்கிறது. அவன் அஞ்சாதவனாக இருந்து, தான் சத்தியம் எது என்று அறிந்திருக்கிறானோ அதை அப்படியே சரியாகக் கூறுகிறவனாயிருக்கிறான். தேவனும் அவனோடு அங்கே நின்று, அவனுடைய செய்தியை அதேவிதமான அற்புத அடையாளங்களோடும், அதே வார்த்தையோடும் ஆதரித்து பின்பலமாக இருக்கிறார். அது தான் ஒரு தூதனுடைய காரியமாகும்.

245. தான் பேசுவது இன்னதென்று அறிந்திருக்கிறதாக ஸ்தேவான் கூறினான். "வணங்காக் கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களே, உங்கள் பிதாக்

உங்களது இருதயமாக மாறவேண்டும். அதுதான் இங்கே பிரதிபலித்துக்கொண்டிருக்கிறது என்பதை அப்பொழுது காண்பீர்கள்.

239. இங்கேயிருக்கும் இது என்ன? அது இதை பிரதிபலித்துக் கொண்டிருக்கிறது. அது வார்த்தையாயிருக்கிறது. தண்ணீர்களாகிய திருவசனத்தால் கழுவப்படுதல், வார்த்தையினால் கழுவப்படுதல். வேறு பிரித்தலின் தண்ணிர்களினால், உலகத்தின் காரியங்களிலிருந்து, உலகத்திலிருந்து வார்த்தையினால் கழுவப்படுதல். ''அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்'' என்று வார்த்தை கூறுகிறது. 'அவர் பெந்தெகொஸ்தேயின் காலத்திலும் சீஷர்களின் காலத்திலும் மாறாமல் இருந்தார்; பிறகு அடுத்துவந்த காலத்தில் அவர் மாறிவிட்டார்'' என்று அது கூறவில்லை. அவ்வாறில்லை. அவர் மாறாமலேயே இருக்கிறார். பார்த்தீர்களா. வேறு எதையாவது கூறும்படி அதை நீங்கள் ஆக்க முடியாது. இந்த விஷயங்களில் ஒன்றில் மாத்திரம் நாம் மணிக்கணக்கில் பேசிக் கொண்டேயிருக்க முடியும். ஆனால் நீங்கள் அதைப் புரிந்துகொண்டு விட்டீர்கள் என்று நான் நம்புகிறேன். தேவன் உங்களை அழைத்திருந்தால் நிச்சயமாக நீங்கள் அதைப் பெற்றுக் கொள்வீர்கள். அவ்வாறுதான் நான் விசுவாசிக்கிறேன். நல்லது, ஐயா.

240. இப்பொழுது, அது என்ன? நீதிமானாகுதல், பரிசுத்தமாகுதல், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் ; ஆத்துமா, சரீரம், ஆவி - யாவும் ஒன்றுதான். இப்பொழுது இந்த விளக்கு வார்த்தையைப் பிரதி பலித்துக்கொண்டிருக்கிறது. உண்மையான வார்த்தை எதைப் பிரதிபலிக்கிறது? ஷெகினா மகிமையிலிருந்தே இவ்விளக்கு பிரதிபலிப்பை பெற்றுக்கொண்டிருக்குமானால், அது ஷெகினா மகிமையையேதான் பிரதிபலிக்கும். அப்படித்தானே?

241. நீங்கள் உங்கள் ஒளியை ஒரு வேதக் கல்லூரியினின்று பெற்றுக் கொண்டிருப்பீர்களானால், நீங்கள் அந்த வேதக் கல்லூரி யையே பிரதிபலிப்பீர்கள். நீங்கள் அதை ஒரு மெதோடிஸ்ட் வேதக் கல்லூரியிலிருந்து பெற்றிருந்தீர்களானால், அப்பொழுது நீங்கள் மெதோடிஸ்ட் கொள்கைகளையே பிரதிபலித்துக் கொண் டிருப்பீர்கள். நீங்கள் பிரதிபலிக்கிறீர்கள். பெந்தெகொஸ்தே வேதக் கல்லூரியினின்றும் நீங்கள் அதைப் பெறுவீர்களானால், அப்பொழுது நீங்கள் பெந்தெகொஸ்தே கொள்கைகளையே பிரதிபலிப்பீர்கள். முட்செடியில் பற்றியெரிந்த தேவனுடைய மகிமையில் அதை நீங்கள் பெறுவீர்களாயின் ...



செய்வதைக் காண்பதற்குரிய ஆவிக்குரிய தரிசனத்தை அடைய அவர்களுக்கு பரிசுத்த ஆவி தேவைப்படுகிறது. பரிசுத்த ஆவிதான், கண்களுக்குப் போட வேண்டிய கலிக்கமாகும். கலிக்கம் என்பது ஒரு சூடாக்கப்பட்ட எண்ணெய் ஆகும் என்பதை நாம் அறிவோம். எனவே பரிசுத்த ஆவி தேவனுடைய எண் ணெயாக இருக்கிறது.

200. 'ஓ, பிரிய சகோதரனே, நீ சரியாகத்தான் இருக்கிறாய் உன்னிடம் எந்த குறையும் இல்லை. எல்லாம் சரியாகத்தான் இருக் கிறது. நமது நகரத்திலேயே, எல்லாவற்றைவிட பெரிய ஆலயம் நமது சபைக்குத் தான் உள்ளது'' என்று கூறுகிறார்கள். இவ்வாறான சமயக் கோட்பாடுகளும், கவர்ச்சியான வாசனை திரவியங்களும் அவர்களிடம் உள்ளன. இவ்வித வாசனை திரவியம் ஒன்றுக்கும் உதவாது. இல்லை. அது உன்னை கிட்டப்பார்வை உடையவனாக, அருகில் உள்ளவைகளை மட்டும் காணக் கூடியவனாக ஆக்கும். அதினால், “ஆம், எங்கள் ஆலயக் கட்டிடம் தான் இருப்பதிலேயே மிகப் பெரியது'' என்று கூறுவீர்கள். ஆனால் லவோதிக்கேயா சபைக்காலத்தின் சபை அங்கத்தினர்களே, வரப்போகும் நியாயத்தீர்ப்பில் தேவன் உங்களை கணக்கொப்புவிக்கக் கேட்பாரே, அதைப்பற்றி என்ன?

201. நான் இங்குள்ளவர்களுக்காக மட்டும் பேசவில்லை. எனது பேச்சு ஒலிநாடாவில் பதிவு செய்யப்பட்டு, உலக முழுவதிலும் போய்க்கொண்டிருக்கிறது. கோடிக்கணக்கான மக்களோடு இந்த வேளையில் பேசிக்கொண்டிருக்கிறேன் என்பதை கவனியுங்கள்.

202. ஆகவே, இவ்வாறான நிலையில் தான் லவோதிக்கேயா உள்ளது. அது அனலுமின்றி, குளிருமின்றி வெதுவெதுப்பாய் பின் மாறினதாகவும், கிட்டப்பார்வையுள்ளதாகவும் இருக்கிறது. இன்னும் வேறென்னதாக உள்ளதோ, நான் அறியேன். ஒரு கோவேறு கழுதையானது இனகலப்பு செய்யப்பட்டு பிறந்த ஒன்றாகும். சொல்லப்போனால், அதற்கு முதலில், செயல்படு வதற்குரிய பொது அறிவு என்பதே கிடையாது. அதனிடம் நீங்கள் பேசி பாருங்கள். அது தனது பெரிய காதுகளை உயர்த்திக் கொண்டு, “ஹா ஹா ஹா'' என்று கத்தும். அதனிடம் தயவு என்பதே கிடையாது. அது இனக்கலப்பினால் பிறந்த ஒன்றாகும். அது குதிரைக்கும் கழுதைக்கும் இடையே உள்ள பிறவியாகும். அதுதான் இப்பொழுது உள்ள காரியமாக இருக்கிறது. நீங்கள் நிக்கொலாய் மதஸ்தினரையும், லவோதிக்கேயரையும் ஒன்றாக சேர்த்து வைத்தால் உங்களுக்கு மீண்டும் ஒரு கழுதை தான் கிடைக்கும். நமக்குத் தேவையானது என்ன? அவர்களுக்கு தாங்கள்

அப்படியிருக்கிறோம் என்பதே தெரியாது. அவ்வாறு தான் உள்ளது. அவர்களிடம் நீங்கள் தெய்வீக சுகமளித்தலைக் குறித்தும், இயேசுவின் நாமத்தினால் உள்ள ஞானஸ்நானத்தையும் குறித்து கூறுங்கள், அதற்கு அவர்கள், "ஹா ஹா, என்னுடைய மேய்ப்பர் அவ்வாறு கூறவில்லை. ஹா ஹா! நாங்கள் அதை விசுவாசிக்கிற தில்லை. நாங்கள் ப்ரெஸ்பிடேரியன்கள்'' என்பார்கள். அவர்கள் அறிவிலிகள்! அவ்வாறு தான் அவர்களை நீங்கள் அழைக்க முடியும். அவர்கள் என்னவாயிருக்கிறார்கள்?

203. நான் ஒரு கோவேறு கழுதையை வெறுக்கிறேன். ஒரு நல்ல, உயர்ந்த இனத்தில் பிறந்து வந்துள்ள குதிரையை நான் விரும்புகிறேன். அதற்கு நீங்கள் எதையாவது சொல்லிக் கொடுக்க முடியும். அதற்கு நீங்கள் பணிந்து அடங்குவதைக் குறித்துப் போதிக்க முடியும். அதை நீங்கள் அரங்கத்தில் கொண்டு செல்ல முடியும். ஏறத்தாழ மனிதனால் செய்யத்தக்கவைகளையெல்லாம் செய்யும்படி கற்பிக்க முடியும். ஏனெனில் அது ... அதற்கு சொன்னால் புரியும். அதற்கு வம்ச அட்டவணை உண்டு. ஆனால் ஒரு கோவேறு கழுதைக்கோ தனது தந்தை யார், தாயார் யார் என்பதே தேரியாது. அதனால் தன்னையே இனப்பெருக்கம் செய்ய இயலாது. அதைப்போலத்தான் இந்த சில பழைய, குளிர்ந்து போன சடங்காச்சார ஸ்தாபனங்ககளின் நிலைமையும் இருக்கிறது. அவர்களால் மீண்டும் எழும்ப முடியாது. ஆவிக்குரிய இன விருத்தி செய்ய முடியாது. சபையானது மரித்ததாய் உள்ளது. எனவேதான் அது ஸ்தபானமாக மாறிவிடுகிறது. அது மீண்டும் எழும்பவே எழும்பாது. அது என்னவாயிருக்கிறது? அது வித்துக் கலப்படத்தினால் பிறந்த கலப்பட மார்க்கமாகும்.

204. மார்ட்டின் லூத்தர் சரியாகத்தான் இருந்தார். ஆனால் அவர் ஸ்தாபனமாக அதை ஆக்கியபொழுது என்ன செய்தார்? மெதோடிஸ்ட் சரியாகத் தான் இருந்தது. ஆனால் அதை மத ஸ்தாபனமாக ஆக்கியபொழுது அவர் என்ன செய்தார்? பெந்தெகொஸ்தேயும் சரியாகத்தான் இருந்தது. ஆனால் நீங்களும் ஸ்தாபனமாக ஆன பொழுது என்ன ஆனீர்கள்? நீங்கள் அதை இனக்கலப்படம் செய்துவிட்டீர்கள். அதை நிக்கொலாய் மதப் போதகத்தைக் கைக் கொள்ளும் கத்தோலிக்க ஸ்தாபனத்தால் கருவுறச்செய்தீர்கள். நீங்கள் சரியாக அக்காரியத்தைதான் செய்தீர்கள். அவளது முறைமையின்படியான ஞானஸ்நானத்தையும், அவளது வழிகளையும், செயல்களையும் பின்பற்றினீர்கள். "நீங்கள் ஒரு வேசியின் மகள், அதனால் நீங்களும் ஒரு வேசி. ஒரு வேசியின் மகள்'' என்று வேதம் கூறுகிறது. அது சரியாக அப்படித்தான் இருக்கிறது.



235. எங்ஙனம் இந்த விளக்குத் தண்டுகள் இங்கேயுள்ள இந்த சில மெதோடிஸ்ட், ப்ரெஸ்பிடேரியன்கள் அல்லது பெந்தெகொஸ்தே ஸ்தாபனங்கள் மேல் ஒளியை பிரதிபலிக்கச் செய்யும்? நிச்சயமாக அவ்வாறு செய்யாது.

236. அதுதானே ஒளியை "இருக்கிறேன்'' என்பதாகத்தான் பிரதிபலிக்கும், "இருந்தேன்'' என்பதாக அல்ல. மூன்று அல்லது நான்கு வெவ்றுே நபர்களாக அல்ல, ஆனால் தேவன் அங்கே அமர்ந்திருந்து தம்மைத்தாமே அந்த ஒவ்வொரு சபைகளுக்குள்ளும் பிரதிபலித்துக்கொண்டிருக்கிறார். முந்தைய காலத்தைத் திரும்பப் பார்த்து அங்கே அவர்கள் என்ன செய்தார்கள் என்பதைப் பாருங்கள். நாம் அதற்காக வரலாற்றை தொடர்ந்து ஆராய்ந்து பார்த்து வந்திருக்கிறோம். அவர்கள் அவரை இருந்தவரும், இருக்கிறவரும், எப்பொழுதும் எவ்வாறு இருக்கப்போகிறாரோ அந்த ரீதியில் பிரதிபலித்தார்கள்.

237. இருந்தவர்...'' அக்காட்சியை யோவான் கண்ட மாத் திரத்திலேயே'' இருந்தவரும், இருப்பவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள தேவன், தேவனுடைய சிருஷ்டி, அல்பா, ஓமெகா, ஆதியும் அந்தமுமானவர்'' என்று கூறினான். அந்த உண்மையான ஒளிதான் பிரதிபலிக்கப்பட வேண்டும். அதை நீங்கள் காண்கிறீர்களா? ஆமென்! வ்யூ!

238. பன்னிரண்டு மணிக்குப்பிறகு..... கவனியுங்கள். நாம் விரை வாகச் செல்வோம், நீங்கள் அதை நகலெடுத்துக்கொள்ளத் தக்கதாக, உங்களை அதிக நேரம் காக்கவைக்க நான் விரும்பவில்லை. நான் மீண்டும் எப்பொழுது உங்களை காண்பேனோ எனக்குத் தெரியாது. நண்பர்களே, நீங்கள் இதைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென நான் விரும்புகிறேன், இது ஜீவனாயிருக்கிறது. இப்பொழுது பாருங்கள், நான் அதைப்பற்றி கூறுகிறபடியால், நான் என்னை உயர்த்திக்கூறுகிறேன் என்பது அர்த்தமல்ல. நான் அவ்வகையில் பிரதிபலித்துக் கொண்டிருப்பேனாகில் அப்பொழுது நான்... நீங்கள் என் இருதயத்தை தவறாகப் புரிந்து கொள்கிறீர்கள். "ஓ, இது... நீங்கள் ஒன்றுமற்றவர்கள்'' என்று நான் பிரதிபலிக்க முயற்சிக்கவில்லை. நான் அதைச் செய்ய முயற்சித்துக்கொண்டி ருக்கவில்லை. நீங்கள் அந்த ஒளியைப் பெற்றுக்கொண்டிராவிடில், இங்கே இருக்கிற அவரையே நான் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த பிரசங்க பீடத்திலிருக்கிறவரை அல்ல, அங்கே சிம்மானத்தில் வீற்றிருக்கிறவரையே சுட்டிக் காட்டுகிறேன். அந்த சிம்மாசனம்

வரலாம். ஆனால் நீங்களோ உங்களது சுயசித்தத் தில், தேவனுடைய சித்தத்தை செய்ய சித்தம் கொண்டு, இங்கே பரிசுத்த ஆவியை உள்ளே பிரவேசிக்கவிடவேண்டும், அதன் மூலமாக, "விசுவாசிக்கிறவர்களைப் பின் தொடரும் அடையாளங் களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள். நவமான பாஷைகளைப் பேசுவார்கள், வியாதியஸ்தர்மேல் கைகளை வைப் பார்கள், சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும்...'' என்ற வசனத்தின்படியான கிரியைகளைக் கொண்டுவர வேண்டும். "தங்களுடைய சித்தத்தை என்னுடைய சித்தமாக ஆகிட இடம் கொடுப்பவர்களை இவ்வடையாளங்கள் பின் தொடரும்; நான் செய்த கிரியைகளை அவர்களும் செய்வார்கள்''. நான் கூறுவதை நீங்கள் கவனிக்கத் தவறமாட்டீர்கள் என்று நம்புகிறேன். தேவனுடைய சித்தத்தை செய்ய ஒரு சித்தம் உண்டு. நான் கூறுவதின் கருத்தை அறிந்து கொண்டீர்களா?

233. இங்கே பாருங்கள், பரிசுத்த ஸ்தலம், கடல் தொட்டி ஆகிய வற்றைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். இங்கே விளக்குகள் உள்ளன. விளக்குத் தண்டுகள் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு உள்ளன. அவைகள் ஒவ்வொன்றும் ஒளியைப் பெற்றிருக்கின்றன. அவைகள் எங்கிருந்து தங்களுடைய ஒளியைப் பெறுகின்றன? ஒளியானது எங்கிருந்து பிரதிபலிக்கின்றது? எதை நோக்கி அது பிரதிபலிக்கிறது? அது இங்கே ஒரு மூலையில் ஒரு ஸ்தாபனத்தின்மேல் பிரதிபலிக்கவில்லை. அது திரும்பி வார்த்தை யினிடத்திற்கே ஒளியைப் பிரதிபலிக்கிறது. அதுதானே வேறு பட்டு பிரிந்துவருவதின் தண்ணீராக இருக்கிறது. வ்யூ!

234. 'அன்றியும் மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எரு சலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத் தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது.'' எருசலேமிலே, மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எவ்வாறு போதிக்கப்பட்டது? அது எதுவரைக்கிலும் போயிற்று? அகில உலகமும் போனது. அப்போஸ்தலர் 2:38ல் பேதுரு கூறுகிறான்: ''மனந்திரும்பி நீங்கள் ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங் கள். அந்தச் செய்தி அகில உலகமும் சென்றடைந்திடவேண்டும். அப்பொழுது முடிவு உண்டாகும். இந்தச் செய்தி உலகம் முழுவதுக்கும் சென்றடைந்தபிறகு, அப்பொழுது முடிவானது வரும்.



205. ஒரு நல்ல ஜாதி குதிரையானது, உயர்ந்த தன்மையுள்ளதாக எக்காலத்திலும் இருக்கிறது. ஓ, அது நல்லதாக இருக்கிறது. நான் அதை விரும்புகிறேன். அது உங்களது தோள்களின் மேல் தலையை வைக்கும், அன்புள்ளதாகவும் பண்புள்ளதாகவும் இருக்கிறது. ஏன்? தனது தகப்பன் யார், தனது தாத்தா யார் என்பதையும், தன் தாத்தாவின் தந்தை யார் என்பதையும் அறிந்திருக்கிறது. தனது வம்சத்தில் உள்ள முன்னோர்களை, வம்ச அட்டவணையை அறிந் ததாக, உடையதாக அது இருக்கிறது.

206. அதே போல் தான், உண்மையான, தான் தோன்றிய வம்சா வளியை அறிந்திருக்கிற கிறிஸ்தவனை நான் காண விரும்புகிறேன். கடந்த வாரத்தில் மெதோடிஸ்ட்டிலும், இந்த வாரம் பாப்டிஸ்ட்டி லும், அடுத்த வாரத்தில் பெந்தெகொஸ்தேயிலும், அதற்கடுத்த வாரம் யாத்திரைப் பரிசுத்த சபையிலுமாக தடுமாறிக் கொண்டே யிருக்கிறவனையல்ல. அவனுக்கு தனது தந்தை யார், தாயார் யார் என்பது தெரியாது. ஆனால், தேவனுடைய ஆவியினால் பிறந்த ஒரு மனுஷன், தன் முன்னோர்களின் வம்சாவழியைச் சொல்லும் படியாக அவன் உங்களை பெந்தெகொஸ்தே நாளுக்கு அழைத்துச் செல்ல முடியும் என்பதை நான் உங்களுக்கு கூறட்டும். அவன், தான் வழித் தோன்றிய தனது வம்சாவழியை, அதன் அட்ட வணையே உடையவனாக, பெந்தெகொஸ்தேகாரனாக இருப்பான். ஆமென். நான் எனது தலை முதல் பாதங்களின் அடிப்பாகம் வரையிலும் முழுவதுமாக பெந்தெகொஸ்தேகாரனாக இருக்கிறேன். நான் ஸ்தாபனமாக ஆகியுள்ள பெந்தெகொஸ்தேயை அர்த்தப்படுத்திக் கூறவில்லை. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் உண்மையான வல்லமையை, மெய்யான பெந்தெகொஸ்தே ஆசீர்வாதத்தைப் பற்றியே குறிப்பிடுகிறேன்.

207. கண்களுக்குப் போடும் கலிக்கம்-அது உங்கள் கண்களைத் திறக்கிறது. அதினால் நீங்கள், அது எங்கிருந்து வருகிறது என்பதை பின்னோக்கி சரியாக அறிந்துகொள்ள முடியும். இன்றைக்கு இருக் கிற சபையையே நீங்கள் நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். அது எங்கிருந்து வருகிறது என்பதை நன்கு பின்னோக்கிப் பார்க்க வேண்டும். பின்பு, தேவனை நோக்கி முன்னேறிச் சென்று கொண்டேயிருங்கள். அப்பொழுது நீங்கள் இந்த ஸ்தாபனத்தை விட்டு விலகிச் செல்வீர்கள். ஆம், ஐயா.

208. ''அவர்கள் நிர்வாணிகளாயிருகிறார்கள்'' இன்னொரு காரியத்தை நான் கவனித்தேன்.

''... நிர்வாணிகளாயிருக்கிறார்கள், ஆனால் அதை அறியவில்லை ...'' (நிச்சயமாக அப்படித்தான்).

209. ஓ, நிர்வாணிகளாயிருந்தும் அதை அறியாமல் இருப்பார்க ளாம். ஒரு மனிதன் நிர்பாக்கியமுள்ளவனும், குருடனாயும், பரிதபிக்கப்படத்தக்கவனும், நிர்வாணியுமாயும் இருந்தால், அவன் பரிதாபமான நிலையில் இருக்கிறவனாயிருப்பான். ஆனால் தான் இருக்கும் இவ்விதமான நிலையை அவன் அறிந்தவனாயிந்தால், அப்பொழுது அவன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள தன்னை சரி செய்து கொள்ளுவான். ஆனால் அவனோ தனது நிலையைதானே அறியாதவனாயிருந்தால், இந்த பரிதாபத்திற்குரிய நபர், புத்தி சுவாதீனத்தையே இழந்துவிட்டான் என்றாகிவிடுகிறது. அது சரிதானே? வியூ! அவ்வாறு கூறுவது கடுமையான ஒன்றாக இருக்கிறது. அவன் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள இயலாதபடி தன் புத்தி சுவாதீனத்தையே இழந்து விட்டான்.

210. தெருவில் ஒருவன் நடந்து கொண்டிருக்கிறதை நீங்கள் காண்கையில், அவன் தரித்திரனாயும், பரிதபிக்கப்படத்தக்கவனாயும், குருடனாயும், நிர்பாக்கியமுள்ளவனாயும், நிர்வாணியுமாயும் இருக்கக்கண்டால், “சகோதரனே, நீ நிர்வாணியாயிருக்கிறாய்'' என்று நீங்கள் கூறினால், அப்பொழுது அவன், "ஓ, நான் அப்படியாயிருக்கிறேன்? ஓ, சகோதரனே, எந்த வகையிலாவது எனக்கு உதவி செய்து, நான் துணி உடுத்திக் கொள்ள எனக்கு வழி செய்யும்'' என்று கேட்பான்.

211. ஆனால், நீங்கள் அவர்களிடம் நடந்து சென்று, “நீங்கள் விசுவாசிகளான பிறகு, பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா?'' என்று கேளுங்கள்.

212. “நீ யார், உருளும் பரிசுத்தனா?' நீ என்னத்தைக் குறிப்பிடு கிறாய்? நான் ஒரு ப்ரெஸ்பிடேரியன், நான் ஒரு பாப்டிஸ்ட், நான் இன்னான் இன்னான், ஆகவே என்னிடம் இவ்வாறெல்லாம் பேசாதே'' என்று கூறுவர்.

213. இவர்கள் நிர்வாணிகளாயும் இருப்பதோடு, அதை அறி யாமலேயிருக்கிறார்கள். நான் இவ்வாறு கூறவில்லை. வேதமே இக்காலத்தைப் பற்றி கூறுகையில், ''நீ நிர்வாணம் தோன்றாதபடி, வஸ்திரங்களை வாங்கிக்கொள்'' என்று கூறுகிறார். 'வெண் வஸ்திரம்'' என்று அவர் கூறினார்.



குற்றப்படுத்த உங்களிடத்தில் ஒன்றுமில்லை. "அது எனது மனச்சாட்சியை பாதிக்கவில்லை'' என்று நீங்கள் கூறலாம். உங்களிடத்தில் மனச்சாட்சி என்ற ஒன்றே இல்லை, உங்களை பாதிக்கச் செய்யும் ஒன்றும் உங்களிடம் இல்லை. நீங்கள் உலகத்துக் குரியவர்களாக இருக்கிறீர்கள்.

230. ஆனால் நான் உங்களுக்கு அறைகூவல் விடுத்துகூறுகிறேன், நீங்கள் இயேசு கிறிஸ்துவை இந்த இடத்தில் உள்ளே வர இடம் கொடுத்துவிட்டு, அந்த காரியங்களை ஒரு தடவை செய்து பாருங்கள் பார்க்கலாம். சகோதரனே, நீங்கள் அவ்வாறு செய்தால், நீங்கள் மிகவும் குத்தப்பட்டு, கண்டிக்கப்பட்டு, அதனின்று பின்வாங்கி விடுவீர்கள். ஏனெனில் அவர் பரிசுத்தமுள்ளவர். நான் இங்கே நின்றுகொண்டிருப்பது எவ்வளவு உண்மையோ, அந்த அளவுக்கு அது நிச்சயமாக நேரிடும். கேளுங்கள். நான் அதற்கான வேத வாக்கியத்தை குறிப்பிடுகிறேன். ''உலகத்திலும் உலகத்திலுள்ளவை களிலும் அன்புகூராதிருங்கள். ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை”.

231. "சுயவிருப்பம்' என்பது எவ்வாறு உள்ளது? அதை ஏன் சுய விருப்பம் என்று அழைக்கிறீர்கள், சகோதரன் பிரன்ஹாம் அவர்களே?'' என்று நீங்கள் கேட்கலாம். ஏனெனில் ஒரு மனிதனையோ அல்லது ஸ்திரீயையோ, அது ஏதேன் தோட்டத்தில் இருந்த ஆதாம் ஏவாளைப் போன்ற அதே நிலையில் வைக்கிறது. எதன் பேரில்? இரு மரங்களின் பேரில், சுயவிருப்பம்... இந்த ஒன்று மரணமாகவும், இது ஜீவனையும் பற்றினதாக இருக்கிறது. சுயவிருப்பமானது... ஒழுக்கக்கேடு... ஒழுக்க நெறியில் நடப்பதற் கான செயல்படுதலை சுதந்திரமாக தீர்மானித்துக்கொள்ளட்டும் என்று தேவன் முதல் மனிதனாகிய ஆதாமையும் ஏவாளையும் அனு மதித்து அவர்களை அங்கே வைத்திருந்தார். அதேவிதமாகத் தான் உங்களையும் அவர் வைத்திருக்கிறார். இந்தக் காரியம் இங்கே நிலைப்படுவதற்கு ஒரே வழி உங்களுடைய சொந்த சுய சித்தம். தேவனு டைய சித்தத்தைச் செய்ய நீங்கள் சித்தங்கொள்ள வேண்டும். உங்களது சுயசித்தத்திற்கு நீங்கள் விடுவிக்கப்பட்டவர்களாகி, அதன் மூலம் தேவனுடைய சித்தம் உள்ளேவர அனுமதிக்க வேண்டும்; அது ஒன்றுதான் இருதயத்திற்கு நேராக வழி நடத்தும் மார்க்கமாக இருக்கிறது.

232. ஓ, பாப்டிஸ்டுகளே, ப்ரெஸ்பிடேரியன்களே, நீங்கள் சபையில் சேர்ந்து கொள்ளக்கூடும். மெதோடிஸ்ட்டுகளே, யாத்திரை பரிசுத்த சபையினரே, நீங்கள் பரிசுத்தமாகுதல் என்ற நிலை வரையில் மட்டும்

226. இவைகளையெல்லாம் நீங்கள் புரிந்து கொண்டீர்களா? புரிந்து கொள்ளவில்லையெனில் இப்பொழுதே எனக்குத் தெரியப்படுத் துங்கள். அவைகளையெல்லாம் நீங்கள் குறித்துக்கொண்டீர்களா? பார்த்தல், ருசித்தல், உணருதல், முகருதல், கேட்டல், என்பவைகள்தான் சரீரத்தில் உள்ள திறப்பாக இருக்கிறது.

227. ஆத்துமாவில் கற்பனாசக்தி, மனச்சாட்சி, ஞாபகசக்தி, எதை யுமே ஏன், எப்படி என்று யோசித்து ஆராய்தல், பாசம் ஆகிய புலன்கள், அல்லது இயல்புக் குணங்கள் உள்ளன. ஆத்துமாவில் புலன்களைப்போல் உள்ளன இவைகள். ஆத்துமாதான் தன்னுள் இருக்கிற ஆவியின் தன்மையாக இருக்கிறது. உங்களுக்குள்ளாக என்ன இருக்கிறதோ அதற்குரிய சூழ்நிலையை வெளியே எடுத்துக் காட்டுகிறதாக ஆத்துமாக இருக்கிறது.

அதுதானே பரிசுத்தமாகுதல் என்ற ஸ்தானத்தைக் கொண்ட தாக இருக்கிறது. ஆத்துமா அவ்வாறு இருந்து அவ்வகையான காரியத்தை அது அங்கே அமைக்கிறது. நல்லது, யாவரும் அதைக் குறித்துக்கொண்டீர்களா?

228. இப்பொழுது இந்த வாசலுக்கு.... அங்கே ஒரேயொரு வாசல்தான் உள்ளது. அது "சுயவிருப்பம்'' என்று அழைக்கப்படுகிறது. அங்கே உள்ளே என்ன போகவேண்டுமோ அதற்குரிய எஜமானாக நீங்களே இருக்கிறீர்கள். அது என்ன செய்கிறது? இது என்ன? சரீரமானது கழுவப்படவேண்டும், கடல் தொட்டியிலே, அடுத்தாக, இங்கே அது பரிசுத்தமாக்கப்படவேண்டும்; அடுத்து, இங்கே அது பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுகிறது. இது அப்பொழுது தேவனுடைய நியாயாசனமாக ஆகிவிடுகிறது. மீண்டும், தேவன் அங்கே உங்கள் இருதயத்தில் அமருகிறார், நீங்கள் ஏதாவது பிழை செய்தால், "ஓ, நான் பிழை செய்தேனே'' என்கிறீர்கள்.

229. சிலர், "நான் குட்டையான முடியைக் கொண்டிருந்தால் அது என்னை எந்த விதத்திலும் குற்றப்படுத்தவில்லை'' என்கிறார்கள். பெண்கள், "கை விரல்களில் வர்ணம் தீட்டிக்கொண்டாலோ, அல்லது முகவர்ணம் தீட்டிக்கொண்டாலுமோ, அது என்னை ஒரு விதத்திலும் குற்றப்படுத்தவில்லை' என்று கூறுகிறார்கள். "நான் நடனமாடச் சென்றாலோ, சிறிது வெள்ளைப் பொய் கூறினாலோ, நான் எனது சீட்டாட்ட பார்ட்டியில் சீட்டு ஆடினாலோ, அது என்னை ஒருக்காலும் பாதிக்கவில்லை, அது என்னை குற்றப்படுத்தவில்லை" என்று கூறுகிறார்கள். அது ஏன் என்று உங்களுக்கு தெரியுமா? உங்களை



''... வெண் வஸ்திரம்...'' (அது பரிசுத்தவான்களுக்கு உரியது, அது பரிசுத்தவான்களுடைய நீதியைக் குறிக்கிறது).

214. நிர்வாணியா? ஓ நிச்சயமாக அப்படித்தான் இருக்கிறார்கள். ஆம், ஐயா! ''சகோ. பிரன்ஹாமே, இது எங்களுடைய சபையைக் குறித்துக் கூறப்பட்டதல்ல. இந்நகரத்திலேயே மிகவும் சிறப்பாக உடுத்திருப்பது நாங்கள் தான்'' என்று ஒரு வேளை நீங்கள் கூறலாம். அதைப் பற்றி எனக்கு ஐயம் இல்லை; நிச்சயமாக நீங்கள் உடுத்துவ தெல்லாம், புதிய பேஷன்களும், நேர்த்தியாக வெட்டியெடுக் கப்பட்ட துணிகளும், ஹாலிவுட் நட்சத்திரங்கள் லேட்டஸ்ட்டாக உடுத்துவதுமான மிகவும் கீழ்த்தரமான பால் உணர்வுகளைத் தூண்டத்தக்கதான, தெருவில் போகும் ஒவ்வொரு மனிதனையும் கவர்ந்திருழுக்கச் செய்வதுமான ஆடைகள் தான். சந்தேகமில்லை. ஊ-°. நிச்சயமாக அப்படித்தான் நீங்கள் உடுத்துகிறீர்கள்.

215. ஒரு பெண்மணி என்னிடம், ''சகோதரன் பிரன்ஹாம் அவர்களே, நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? கடைகளில் இவ்வாடைகளைத் தான் விற்கிறார்கள், அதைத்தான் நாங்கள் வாங்க வேண்டியுள்ளது'' என்று கூறினார்.

216. அதற்கு நான், 'அவர்கள் இன்னும் துணிகளை விற்றுக் கொண்டுதான் இருக்கிறார்கள். தையல் இயந்திரங்களையும் உற்பத்தி செய்து கொண்டு தான் இருக்கிறார்கள். அது ஒரு சரியான காரணம் அல்ல, வெறும் சாக்குப் போக்குத்தான் இது'' என்றேன்.

217. “ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் அவளோடு விபசாரம் செய்தாயிற்று'' என்று வேதம் கூறுகிறது. அது சரி தானே? நல்லது, அப்படியாயின், ஸ்திரீயானவள் பால் உணர்வு களைத் தூண்டத்தக்கதாக உடையுடுத்திக் கொண்டு, ஒரு மனிதனுக்கு முன்னால் தன்னை நிறுத்திக் கொள்வாளென்றால், இப்பொழுது யார்மேல் குற்றம் விழுகிறது? அப்பாவத்தை பிறப்பிக்க காரணமானது அந்த ஸ்திரீ தான். அது தான் சரி.

218. நீங்கள் உங்கள் கணவருக்கு லீலி புஷ்பத்தைப் போல் சுத்த மானவராக இருக்கக் கூடும். உங்கள் வாழ்க்கையில் பிழையே செய்யாத இளம் பெண்ணாக இருக்கக் கூடும். உங்கள் கணவரை மணந்து கொள்ளுகையில், ஒரு சுத்தமான கன்னியாக கூட இருந் திருக்கக் கூடும். ஆனால், நீங்கள் இவ்விதமான உடையுடுத்திக் கொண்டால், அதினால் மனிதர்கள் உங்களை இச்சையோடு உற்று நோக்கிடச் செய்திட்டால், அவன் ஏற்கனவே உங்களோடு தன்

இருதயத்தில் விபச்சாரம் செய்தாயிற்று. அந்தப் பாவி, இச்சை யோடு உங்களை உற்று நோக்கினான். ஒரு கிறிஸ்தவள் என்ற முறை யில், நகரத்திலேயே மிகவும் சிறப்பாக வெட்டப்பட்ட துணியை உடையவராக நீங்கள் இருக்கலாம், சிறந்த கம்பளித் துணிகள் வாங்கியிருக்கக் கூடும். ஆனால் ஒரு தேவனுடைய பரிசுத்த வாட்டிக்கு அவ்வாறு உடுத்துவது அழகல்ல.

219. (ஒலிநாடாவில் காலியிடம்-ஆசி). ஓ, ஆம். இவ்வாறு இருந்தால், நீங்கள் ஒரு தேவ பிள்ளையாக இருக்க முடியாது.

220. ''ஓ, இல்லை'' என்று அவர்கள் கூறுகிறார்கள். நல்லது, அவர்கள், ''எங்கள் சபை...'' என்று கூறுகிறார்கள். நீங்கள் சிறப்பாக உடையுடுத்தியிருக்கிறோம் என்கிறீர்களா? அவ்வாறு இருப்பதாக அவர்கள் கூறினார்கள். அவர்கள், ''ஐசுவரியவான்களும், ஒரு குறையுமில்லை'' என்றும் இருக்கிறார்கள். நிச்சயம் அப்படித்தான். "எங்களுடைய போதகர் ஒரு பெரிய அங்கியணிந்து வெளியே செல்லுகிறார், சபையின் பாடகர் குழுவும் கூட பெரிய அங்கிகளை அணிந்துள்ளனர்'' என்று கூறுகின்றனர். அதற்குக் கீழாக பிசாசு ஒளிந்திருக்கிறான். உ-ஊ, உ-ஊ. அவ்வாறுதான் உள்ளது. அதை நான் மேற்கொண்டும் சொல்லாமல் விட்டுவிடுவது நல்லது. ஆனால் சகோதரனே... சரி.

221. ஓ, இந்த அவர்களுடைய பெரிய காரியங்கள்! அங்கியணிந் துள்ள பாடகர் குழுக்கள், கூலிக்கு அமர்த்தப்பட்டுள்ள பாடகர் குழுக்கள்; இவர்களுக்கு பாடுவதற்கு பணம் கொடுக்க வேண்டும். பிரசங்கியாருக்கு நல்ல தொகை கொடுக்க வேண்டும். பிரசங்கி யாருக்கு நல்ல தொகை கொடுக்க வேண்டும், அவ்வாறு கொடுக்காவிடில், அதைவிட கூடுதலாக அவருக்கு பணம் கிடைக்கும் பொறுப்பை அவர் தெரிந்து கொண்டு விடுவார். அவர் அறங் காவலர்கள் குழுவை கூடிவரச் செய்து, '' சகோதரரே, இங்கே நீங்கள் இதுவரையிலும் என்னிடம் மிகவும் தயவு காட்டி வந்தீர்கள், நீங்கள் வாரத்திற்கு இத்தனை நூறு டாலர்கள் எனக்கு கொடுத்து வந்தீர்கள். ஆனால் அந்த மற்ற ப்ரெஸ்பிடேரியன் சபையோ, அல்லது பெந்தெகொஸ்தே சபையோ, அல்லது வேறு எந்த சபையோ, எனக்கு இன்னும் கூடுதலாக இத்தனை டாலர்கள் கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள்'' என்று கூறுவார்.

222. நிலைமை அவ்வாறு இருந்தால் ஏழையான பரிசுத்தவானுக்கு அங்கே என்ன இருக்கிறது? அவர்களுக்கு என்ன வாய்ப்பு உள்ளது?



பரிசுத்த ஆவியின் வல்லமையினால்தான் அணிவிக்கப் பட்டிருக்கிறார்கள். பார்த் தீர்களா?

இப்பொழுது இவ்வுவமையிலே, அம்மனிதன் வாசல் வழியாகப் பிரவேசிக்கவில்லை என்பதை இது காட்டுகிறது.

223. இப்பொழுது இங்கே கவனியுங்கள். ஒரு மனிதன் மகா பரிசுத்த ஸ்தலத்தினுள் (எவராவது, ஏதாவது வேத போதகர் எனக்கு கூறுங்கள்) உள்ளே புக முயற்சித்தால், இங்கே இந்த வாசல் வழியாக வராமல் மகா பரிசுத்த ஸ்தலத்தினுள் புகமுயற்சித்தால், அவன் மரித்துப் போவான். ஆரோனின் குமாரன் ஒரு நாளிலே, அந்நிய அக்கினியை, ஒரு ஸ்தாபன அக்கினியை, உள்ளே கொண்டுவர முயற்சித்தபோது, அவன் வாசலண் டையிலே மரித்தான். அந்த ஸ்தலத்தில் உள்ள அக்கினி ஸ்தாபன அக்கினியாக இருக்கக்கூடாது. அது சரியல்லவா? அல்லது ஏலியின் புத்திரர் அவ்விதமான காரியத்தைச் செய்தனர். அவர்கள் அவைகளை உள்ளே கொண்டுவந்தனர் என்று நம்புகிறேன். அவர்கள் ஆசாரியனாகிய ஆரோனின் புத்திரருக்கு அடையாள மாயிருந்தனர்.

224. இந்த சரீரத்தினுள் பிரவேசிக்க ஒரு வழியுண்டு. எவ்வாறு இந்த சரீரம் கட்டுப்படுத்தப்படுகிறது? இப்பொழுது மிகவும் கவனமாக கவனியுங்கள். உங்கள் எழுதுகோல்களை ஆயத்தமாக வைத்துக்கொள்ளுங்கள். சரீரத்தினுள் செல்லுகிற வாசல் இதோ இங்கே இருக்கிறது. ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, இப்பொழுது நீங்கள் இதை வரைந்து கொண்டீர்களா? இப்பொழுது இங்கே இந்த முதலாவது வாசல்: பார்த்தல், முகருதல், கேட்டல், ருசித்தல், தொடுதல் அல்லது உணருதல் (அது எது ஒன்றாகவும் இருக்கலாம், பரவாயில்லை). இவைகள் சரீரத்தில் இருக்கும் புலன்களாகும். அப்படித்தானே? ஆறு புலன்கள் சரீரத்தை கட்டுப்படுத்துகின்றன என்பதை எத்தனை பேர்கள் அறிவீர்கள்? இப்பொழுது இதன் வழியாக உள்ளே நுழைந்தபிறகு நமக்கு உள்ளே அங்கே ஒரு ஆத்துமா இருக்கிறது. புலன்கள் புறம்பே உள்ளன. அதுதானே புறம்பே இருக்கிற அமைப்பாகும்.

225. இப்பொழுது இங்கே ஆத்துமாவில் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து இயல்புக்குணங்கள் உள்ளன. அவைகளை நீங்கள் எழுதிக்கொள்ள விரும்புகிறீர்களா? முதலாவது கற்பனையாகும். இரண்டாவது மனச்சாட்சியாகும். மூன்றாவது ஞாபகம் ஆகும். நான்காவது யோசனை, ஐந்தாவது பாசம் ஆகும்.

மூலமாகவோ, அல்லது ஒரு மதஸ்தாபனத்தின் வழியாகவோ உள்ளே பிரவேசித்திருப்பான். அவன் வாசல் வழியாக பிரவேசிக்கவில்லை.

219. ஏனெனில், பழங்காலத்து கிழக்கத்திய நாடுகளில், இன்ன மும் அதே நடைமுறையைத்தான் அவர்கள் பின்பற்றுகிறார்கள். அதாவது, மணவாளனானவன், தன் கலியாணத்திற்கு அவனே அழைப்பைக் கொடுத்து, தான் அழைத்தவர்கள் வரும்போது, அவர்களுக்கு கலியாண வஸ்திரத்தையும் அளிக்கிறான்.

220. ஓ, அதைப்பற்றி எண்ணுகையில் எனதுள்ளம் எவ்வளவாய், அதைச்சுற்றிலும் வளைய வந்து கொண்டிருக்கிறது! "முதலாவதாக என் பிதா ஒருவனுக்கு அழைப்பு விடுக்காமல், அவன் என்னிடத்தில் வரமுடியாது. என் பிதா எனக்குத் தந்தவைகள் யாவும் என்னணடையில் வரும்.'' நாம் எவ்வாறு அழைக்கப்பட்டோம்? உலகத்தோற்றத்திற்கு முன்னரே, நமது பெயர்கள் ஆட்டுக்குட்டி யானவரின் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டிருந்தன. எதற்காக வென்றால், ஒளியைக் கண்டுகொள்ளவும், உள்ளே பிரவேசிப் பதற்காக பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வதற்காகவுமே. ஆட்டுக்குட்டியானவர் அடிக்கப்பட்ட பொழுது.... ஆட்டுக்குட்டி யானவரின் நாமம் அங்கே எழுதப்பட்ட அதே நேரத்தில்தான் நமது நாமங்களும் அங்கே எழுதப்பட்டன. வேதத்தில், ''உலகத் தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவ புஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரையும் அவன் மோசம்போக்கினான்'' என்று கூறப் பட்டுள்ளது. அதை சிறிது நேரத்திற்கு பிறகு பார்ப்போம்.

221. கவனியுங்கள், மணவாளன்தானே வாசலண்டையில் நின்றிருப்பானெனில், அழைக்கப்பட்டவன் தனக்குக் கொடுக்கப்பட்ட அழைப்பிதழை கொண்டுவந்து, ''இதோ, இங்கே கொண்டு வந்திருக்கிறேன்.'' என்பான்.

222. மணவாளன், 'உமக்கு நன்றி'' என்று கூறிவிட்டு அவ் வழைப்பிதழை எடுத்து கீழே வைத்துவிட்டு, எல்லோருக்கும் கொடுக்கும் ஒரேவிதமான அங்கியை அவனுக்கு அணிவிப்பான்; அப்பொழுது அவர்கள் யாவரும் ஒன்றுபோல் தோற்றமளிப்பார் களல்லவா? நான் அதை விரும்புகிறேன். பாருங்கள்? தேவனு டைய வல்லமையிலே, ஜீவனுள்ள தேவனுடைய சபையிலே, பணக்காரர், தரித்திரர், அடிமை, சுயாதீனன், கறுப்பு நிறத்தவர், வெள்ளை, பழுப்பு, மஞ்சள் நிறத்தவர் யாவரும் ஒரேவிதமாகத்தான் தோற்றமளிப்பார்கள், ஏனெனில் அவர்கள் ஒரே



அந்தப் பிரசங்கியார் எதிர்பார்க்கிற அளவுக்கு கவர்ச்சிகரமான ஊதியத்தை அவருக்கு கொடுக்க அவர்கள் சக்தி படைத்தவர்கள் அல்ல. எனவே, கர்த்தர், அவ்வாறான சூழ்நிலையில், உங்களுக் கென ஒன்றை எழுப்புகிறார், ஆமென். அதுதானே அவரது சொந்தக் கரத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட ஒன்றாகவும், அவரே அதின் மேல் கண்காணியாக இருக்கக் கூடியதாகவும் உள்ளது. ''என்னிடம் வெண் வஸ்திரத்தை வாங்கிக் கொள் என்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்'' என்று அவர் கூறுகிறார். “வெண் வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதியே'' என்று வேதம் கூறுகிறது.

223. நாம் இப்பொழுது 19ம் வசனத்தை எடுத்துக் கொள்வோம். 20ம் வசனத்தை நாம் பார்த்தோம் என்று நான் நம்புகிறேன். அதில் மிகச் சிறப்பான காரியத்தை நான் காண்கிறேன். ஆம், இவ் வசனங்களோடு இது முடிவடைகிறது. இதை நாம் ஆராய்கையில், மிகவும் அமைதியாக இருந்து இதை மிகவும் கவனித்துக் கேளுங்கள். கேளுங்கள்!

“இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்.

நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்தது போல, ஜெயங்கொள்ளு கிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடே கூட உட்காரும்படி அருள்செய்வேன்.

ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது என்றார்.

வெளி. 3:20-22

224. புதிய ஏற்பாட்டில் உரைக்கப்பட்டவைகளிலேயே நான் கண்ட தலைசிறந்த வார்த்தைகளில் ஒன்று தான் இதுவாகும். ''இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்'' என்ற வசனத்தை நீங்கள் நன்கு கவனிக்கும்படி நான் விரும்புகிறேன். பாவிகள் மனந்திரும்புவதற்காக விடுக்கப்படும் அழைப்புக்காக பொதுவாக இவ்வசனமானது உபயோகிக்கப்படுவது. அப்படித்தானே? நாம் பாவிகளிடம், "இயேசு வாசற்படியில் நின்று கதவைத் தட்டு கிறார்'' என்று கூறுகிறோம். ஆனால் இங்கோ அவர் சபையின் வாசற்படியில் நின்று அதின் கதவைத் தட்டுகிறார். ஏனெனில் அவர் ஒரு காலத்தில் அவர்களோடு

நடந்து சென்றார். ஆனால் அவர் களோ, தங்களது சடங்காச்சார ஸ்தாபன முறைமையினாலும், லௌகீகத்தினாலும், குளிர்ந்து போய்விட்ட நிலையிலும், அவரை வெளியேற்றிவிட்டார்கள். அவர் இப்பொழுது சபையின் புறம்பே இருக்கிறார்.

225. நாம் இப்பொழுது முடிக்கப் போகிற வேளையில், சபைக் காலங்களின் துவக்கத்தில் அவர் ஏழு பொன் குத்துவிளக்குகளின் நடுவில் உலாவிக் கொண்டிருந்தார் என்பதை நினைவில் கொள்ளுங் கள். இங்கே முடிவுக் கட்டத்தில், அவர் எந்த சபைக்கு வெளியே நிற்பதாக நாம் காண்கிறோம்? லவோதிக்கேயா சபைக்கு வெளியே. புறம்பே இருக்கிறார், அவர்கள் அவரை புறம்பாக்கிப் போட்டுவிட்டார்கள். ஏன்? அவர் வெளியே நின்று கொண்டிருக் கிறார். என்னே ஒரு பரிதாபமானதொரு காட்சியாக இது இருக்கிறது! தனது சொந்த இரத்தத்தால் கிரயத்திற்குக் கொண்ட தன் சபைக்கு வெளியே உலகின் இரட்சகரானவர் நின்று கொண்டிருக்கிறார். அவர்கள் மேல் இது வெட்கக்கேடாக இருக்கிறது!

226. "நான் வாசற்படியிலே நின்று கதவைத் தட்டுகிறேன்''. அவர் தாம் வெளியே தள்ளப்பட்ட பிறகு அல்லது புறம்பாக்கப் பட்ட பிறகு, மீண்டும் உள்ளே நுழைய முயன்று, அவர் நகர்ந்து வந்து, கதவைத் தட்டுகிறார். புதிய ஏற்பாட்டிலேயே மிகவும் குறிப் பிடத்தக்க ஒரு காரியமாக இது காணப்படுகிறது. லவோதிக்கேயா சபைக்காலத்தில், இவ்வுலகின் இரட்சகரானவர் தனது சொந்த சபையை விட்டு புறம்பாக்கப்பட்டு இருக்கக்கூடிய இதைப் போன்றதொரு வருந்தத்தக்க காரியம் வேறு ஒன்றும் இருக்க முடியாது என்று நான் கருதுகிறேன். அவர்கள் செய்திருக்கும் காரியத்தைப் பற்றி அவர்களுக்கு அவர் சொன்ன பிறகு, அவர்க ளுடைய ஐசுவரியத்தைப் பற்றியும், அவர்கள் எவ்வாறு உள்ளனர் என்பதைப் பற்றியும், அவர்கள் எவ்வாறு வெதுவெதுப்பா யுள்ளனர் என்பதைப் பற்றியும், என்பதைப் பற்றியும் அவர் அவர் களுக்கு கூறிய பிறகு, அவர்கள் அவரை... அவர் அவர்களை தம் வாயினின்று வாந்தி பண்ணிப்போட வேண்டியதேயில்லை, அவர்கள் அவரை வாந்தி பண்ணிப்போட்டு விட்டனர். இப்படி யெல்லாம் நடந்த பிறகும்கூட அவர் இன்னமும் வாசற்படியில் நின்று கதவைத் தட்டி மீண்டும் உள்ளே புக முயன்று கொண்டு தான் இருக்கிறார். எதற்காக? அவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பதற்காகத்தான். கல்வாரியில் அவரைக் கொன்றவர்களின் ஆத்துமாக்களைக்கூட இரட்சிக்கவே அவர் முயன்றார். என் வாழ்வில் நான் பார்த்ததிலேயே, நினைத்ததிலேயே மிகவும் ஒரு பரிதாபத்திற்குரிய காட்சியாக அது இருக்கிறது.



இருக்குமா? நான் .... கவனியுங்கள். இதைக் கவனியுங்கள். ஆவி .... ஆவி, ஆத்துமா சரீரம், பாருங்கள்: சரீரம், ஆத்துமா, ஆவி .

216. நான் அந்த வரைபடத்தை அழித்துவிட்டு வேறொன்றை உங்களுக்கு வரையப்போகிறேன். இப்பொழுது நான் ஒன்றை இங்கே உங்களுக்கு வரையப்போகிறேன். கடந்த ஞாயிறன்று இதை வரைய எனக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கவில்லை, எனவே நான் எனக்காக இந்த மஞ்சள் நிற துண்டுக் காகிதத்தில் வரைந்து வைத்திருக்கிறேன். நான் இதை இங்கே வரைந்திட விரும்புகிறேன்; ஏனெனில், நீங்கள் அதைக் குறித்துவைத்துக் கொள்ளவும், நான் கூறியதின் அர்த்தம் என்ன என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவும் அது வசதியாக இருக்கும். இதுதான் சரீரம், இதுவே ஆத்துமா; இதுதான் ஆவி - பரிசுத்த ஆவி அது. இவைகளினால்தான் நாம் உண்டாக்கப் பட்டிருக்கிறோம்.

217. இங்கே நீங்கள் கவனித்துப் பார்த்தீர்களானால், இங்கே பரிசுத்த ஸ்தலம் அடுத்து, மகாபரிசுத்த ஸ்தலம் உள்ளது. இங்கே பலிபீடம் - பரிசுத்த ஸ்தலம்; இங்கே கடல் தொட்டியுள்ளது, அவ் விடத்தில் தான் நீங்கள் வார்த்தையைக் கேட்கிறீர்கள். 'விசுவாசம் கேள்வியினால் வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.'' அது வேறுபிரிந்து வருவதைக் குறிக்கிறது, வேறுபிரிந்து வரச் செய்யும் கடல் தொட்டியாகும் அது. இப்பொழுது இதைக் கவனியுங்கள். இங்கே உள்ளே பிரவேசிப்பதற்கு ஒரேயொரு வாசல்தான் உள்ளது. அதற்காக நீங்கள் இங்கேதான் வரவேண்டும். அது சரிதானே?

218. எனக்கு வரைவதற்கு போதுமான இடம் இருந்தால் நலமா யிருக்கும். அப்படியிருந்தால், நான் இங்கே 'கன்னிகைகளை'' குறிப்பிடுவேன். "கலியான விருந்தையும் " வரைந்து காட்டுவேன். அது இன்னொரு விஷயம். அந்த கலியாண விருந்தில் அம்மனிதன் எவ்வாறு உள்ளே வந்தான் என்பதை பாருங்கள், அவன் வாசல் வழியாக வராமல் வேறு வழியாக உள்ளே நுழைந்துவிட்டான். இங்கேதான் வாசல் உள்ளது. "நானே வாசல்' என்று இயேசு கூறினார். கலியாண விருந்துக்கான மேசை இங்கே வைக்கப்பட்டி ருந்தது. அதைச் சுற்றிலும் மக்கள் அமர்ந்திருந்தனர். இங்கே ஒரு மனிதன் கலியாணவஸ்திரம் தரியாதவனாக உள்ளே நுழைந்திருந்தான். இராஜா வந்தபொழுது, அவர், ''சிநேகிதனே, நீ எவ்வாறு இங்கே உள்ளே நுழைந்தாய். எவ்வாறு உள்ளே பிரவேசித்தாய்?'' என்று கேட்டார். அவன் வாசல் வழியாக பிரவேசிக்கவில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது. அவன் ஒரு ஜன்னல் வழி யாகவோ, அல்லது கொல்லைப்புற வழியாகவோ அல்லது ஒரு கோட்பாட்டின்

நீங்கள் என்ன செய்தீர்களோ அதை மதித்து, தேவன் உங்களை பரிசுத்த ஆவியினால் முத்திரையிடுகிறார்.

212. இப்பொழுது, என்னுடைய பாப்டிஸ்ட் சகோதரனே, நான் ஒரு காரியத்தை உங்களிடம் கேட்க விரும்புகிறேன். "தேவனை விசுவாசிப்பதைத் தவிர ஆபிரகாமினால் வேறு என்ன செய்திருக்க முடியும்? அது அவனுக்கு தேவனால் நீதியாக எண்ணப்பட்டதே'' என்று கூறுகிறீர்கள்.

213. இந்த ஸ்தலத்தில் அவனால் அவ்வளவுதான் செய்ய முடிந்தது. அவன் தேவனை விசுவாசித்தான். ஆனால் தேவனோ, அவனது விசுவாசத்தை ஏற்றுக்கொண்டதற்காக விருத்தசேதன மாகிய முத்திரையை அவனுக்குக் கொடுத்து, அவனை முத்திரை யிட்டு, அவனது விசுவாசத்தை தான் ஏற்றுக்கொண்டதாக அதன் மூலம் காண்பித்தார். நீங்கள் தேவனில் விசுவாசங் கொண்டுள்ள தாக அறிக்கையிடுகிறீர்கள், அப்படியிருந்தும், ஒருபோதும் பரிசுத்த ஆவியினால் முத்திரையிடப்படாதிருக்கிறீர்கள். எபேசியர் 4:30, இவ்வசனத்தை எழுதிக்கொள்ள விரும்பினால் குறித்துக் கொள்ளுங்கள். எபேசியர் 4:30.... முத்திரையாகப்பெற்ற தேவனு டைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்.'' நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெறாதவரையிலும், நீங்கள் முத்திரையிடப்படவேயில்லை.

214. அம்முத்திரை எவ்வளவு காலத்திற்கு நீடித்திருக்கும்? அடுத்த எழுப்புதல் வரைதானா? நம்முடைய மீட்பு வரையிலும், நாம் மீட்கப்படுகின்ற அந்தநாள் வரையிலும் நீடித்திருக்கும். அதை விட்டு அகன்று போக வழியேயில்லை. அதைவிட்டு நீங்கள் அகன்றுபோகவே முடியாது. ஏனெனில், அது உங்களைவிட்டு அகன்றிடவே செய்யாது. பாருங்கள்? ஏனெனில் நீங்கள் மீட்கப்படும் நாள் வரையிலும் முத்திரையிடப்படுகின்றீர்கள். வருங்காலமோ, நிகழ்காலமோ, நாசமோசமோ, பசியோ, தாகமோ, மரணமா, அல்லது வேறு எந்த ஒன்றுமோ, கிறிஸ்துவில் உள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மை பிரிக்கமாட்டாது. பவுல் இதைப்பற்றி கூறுகையில், "நான் அதைப்பற்றி முழுவதுமாக நிச்சயித்திருக்கிறேன்'' என்று கூறினான். அது சரியாக அவ்வாறுதான் உள்ளது; நீங்கள் உங்களுடைய மீட்பின் நாள் பரியந்தமும் முத்திரையிடப்பட்டிருக்கிறீர்கள்.

215. கவனியுங்கள், அது மீண்டும் கடந்த ஞாயிற்றுக்கிழமை பார்த்த விஷயத்தை திரும்பக்கொண்டுவரும். இதைப் பார்க்க எனக்கு நேரம்



227. புறம்பாக்கப்பட்டார்! அவர் எதிலிருந்து புறம்பாக்கப் பட்டார்? இப்பொழுது, சிநேகிதரே, கவனியுங்கள். இது மிகவும் குறிப்பிடத்தக்கதாக அமைந்திருக்கிறதாக இல்லையா என்று பாருங்கள். அதைப் பற்றிய உண்மைத் தோற்றத்தை பெற்றுக் கொள்ளுங்கள். அது உங்கள் உள்ளத்தில் ஆழமாகப் பதியட்டும். நமது இரட்சகர், இப்பூவில் இருக்கையில், தனது சொந்த ஜனத்தாலேயே புறம்பாக்கப்பட்டார். அவர் புறக்கணிக்கப்பட்டார் அவர் வெளியே தள்ளப்பட்டார். உலகம் அவரை புறம்பாக்கி போட்டு சிலுவையில் அறைந்தது. இப்பொழுது அவரது சொந்த சபையை விட்டே அவர் புறம்பாக்கப்பட்டு விட்டார். அவரை எந்த இடத்திலும் ஏற்றுக்கொள்வாரில்லை. அவர் இப்பொழுது அவர்களுக்கு தேவையில்லை. அவர்களுக்கு ஒரு ஸ்தாபனம் கிடைத்து விட்டது. அவர்களுக்கு அவர் தேவையில்லை. அவர்களுக்கு ஒரு போப் இருக்கிறார். இனிமேல் அவர் எதற்கு அவர்களுக்கு தேவை? அவர்களுக்கு இப்பொழுது ஒரு ஆர்ச் பிஷப்பும், தலைமைக் கண்காணியும் உள்ளனர். ஆகவே இனிமேல் அவர்களுக்கு பரிசுத்த ஆவியினால் எந்த உபயோகமும் இல்லை. இனிமேல் அவர்களுக்கு பரிசுத்த ஆவி தேவையில்லை. கிறிஸ்துவாகிய பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு இனி தேவைப்படமாட்டார். எனவே அவர்களுடைய ...

228. அவர்கள் எழுந்து நின்று அவரை வெளியே தூக்கி எறிந்து விட்டார்கள் என்று நான் நம்பவில்லை. ஏனெனில் அவர் சபையில் இல்லாததை அவர்கள் உணரவில்லை. அவர் இல்லாததை அவர்கள் உணரவில்லை. ஏனெனில், அவர்கள் இன்னமும் அரைப் போற்றி பாடல்கள் பாடிக்கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களது பிரசங்கியார் இன்னமும் அவரைப் பற்றி பிரசங்கித்துக் கொண்டு தான் இருக்கிறார். எனவே அவர் இல்லாததை அவர்கள் உணரவில்லை. ஆனால் அவர்கள் சொந்த லௌகீக ஜீவியமும், அவர்கள் ஸ்தாபனத்தை ஸ்தாபித்துக் கொண்டு, “அற்புதங்களின் காலம் கடந்து போய் விட்டது. இன்ன பிற காரியங்கள் ஒன்றும் இப்பொழுது இல்லை'' என்றும் கூறத்தலைப்பட்டுவிட்டார்கள்.

229. நான் உங்களை ஒன்று கேட்கிறேன். வரலாற்றாசிரியர்களே! இந்த சபைக்காலங்கள் நெடுகிலும், எந்த சமயத்திலாவது வந்திட்ட எந்தவொரு எழுப்புதலும், எப்பொழுதும் ஒரு ஸ்தாபனத்திற்கு வெளியே தான் நிகழ்ந்திருக்கிறது. எழுப்புதலை ஆரம் பித்த எந்தவொரு மனிதனும், அதை ஸ்தாபனங்களுக்கு வெளியே தான் ஆரம்பித்தான். எழுப்புதல் ஏற்பட்ட எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர்களுக்கு அற்புத அடையாளங்களும், அன்னிய பாஷைகளில்

பேசுதலும், வியாதிஸ்தர் குணமடைதலும், மற்றும் இன்னபிற காரியங்களும் நிகழ்ந்தன. அவ்வெழுப்புதலை ஆரம் பித்த மனிதன் மரித்த உடனேயே, அவர்கள் அது ஒரு ஸ்தாபனமாக ஸ்தாபித்து, பிறகு மரித்த நிலையில் ஆகிவிட்டனர். அதன் பிறகு அதனோடு தேவன் ஒருபோதும் தன் சமயத்தை வீணடிக்கவில்லை. அது முற்றிலும் உண்மை .

230. இங்கே அவர் கடைசி சபைக்காலத்தில் வாசலில் கதவுக்கு வெளியே நின்று கொண்டிருக்கிறார். அவர் சர்வ வல்லமையுள்ள தேவனவர். அதைப் பற்றி எண்ணுகையில், அது என் இதயத்தை நொறுக்குகிறது. எனது கர்த்தர், தனது சொந்த சபைக்கு வெளியே, அவர்களது லௌகீகத்தினாலும், குளிர்ந்து போன நிலையினாலும், ஸ்தாபனத்தினாலும், அலட்சியத்தினாலும் புறம்பாக்கப்பட்ட பிறகு, வாசலில் நின்றுகொண்டு, மீண்டும் உள்ளே நுழைவதற்காக முயன்று கொண்டு, கதவைத் தட்டிக் கொண்டு நிற்கிறார். சற்று நேரத்திற்கு முன்பாக, நான் அதைப் பற்றி எண்ணிப் பார்க்கையில், நான் எனது மேஜையின் மேல் சாய்ந்து கதற ஆரம்பித்தேன். நான் நினைத்தேன்.....

231. இயேசு அந்தப் பரிசேயனுடைய வீட்டில் உட்கார்ந்து கொண்டிருந்ததைப் பற்றி அடிக்கடி நான் எண்ணிப்பார்த்ததுண்டு. அங்கே அவரை யாரும் கவனிக்கவேயில்லை. ஆனால் அவரது பாதங்கள் அழுக்காயிருந்தது. அவர்கள் அவரை வாசலண்டை வந்து வரவேற்காமலும் அவர் நடந்து வந்ததினால் அவரது பாதங்கள் சாணத்தினால் அழுக்கடைந்து போயிருந்ததை நீக்கும் படி அவரை கழுவி சுத்திகரிக்காமலும், அவரை எண்ணெயால் அபிஷேகிக்காமலும் இருந்தார்கள். அவர் தெருவில் நடந்து வந்ததினால், தெருவில் குதிரைகள் மற்றும் இன்ன பிறவும் சென்ற தினால் உண்டான அழுக்குகள் அவரது ஆடையில் படிந்திருந்தன. அவர் மேல் நாற்றமாக இருந்தது.

232. அவர்களது வழக்கத்தின்படி, அவர்கள் எப்பொழுதும் வீட்டுக்கு வருகிறவர்களின் கால்களை கழுவி விடுவார்கள். அதற்காக எப்பொழுதும் வாசலண்டையில் கால் கழுவிவிடும் ஒரு பணியாள் ஆயத்தமாக இருப்பான். வீட்டிற்கு ஒரு மனிதன் வரும்பொழுது, அப்பணியாட்கள் அவனது கால்களை கழுவிவிடுவார் கள், பிறகு பொருத்தமானதொரு ஜோடி காலணியை அவனுக்கு அணிவித்துவிடுவார்கள். அதன்பிறகு அவன் சிரசில் தைலத்தால் அபிஷேகித்து, அவன் மேல் நல்ல வாசனை இருக்கும்படி செய்வார்கள். சூரிய வெளிச்சத்தில் அவன் நடந்து வந்ததால் அவனது கழுத்து,



207. ஓ, என்னே! "பரிசுத்த ஆவியின் அபிஷேகம்'' என்ற தலைப்பின் பேரில் நாம் ஒருவார காலம் ஆராயலாம்... இப்பொழுது இங்கே வரைந்திடவேண்டிய ஒரு விஷயம் என்னிடத்திலுண்டு, அதை நாம் இப்பொழுது வரைந்து கொள்வோமாக. நாம் இங்கேயே அதைப்பற்றி பார்க்கலாமே.

208. இப்பொழுது இங்கே நாம் கவனித்துப் பார்த்தால், இங்கே ஒரு மகத்தான காட்சி காணப்படுகிறது. இதோ இங்கே மகா பரிசுத்த ஸ்தலம் உள்ளது. இங்கே வருவதற்கு முன்பாக, முதன்முதலாக கடல் தொட்டியை காணலாம்.

209. இப்பொழுது கவனியுங்கள், நாம் எவ்வாறு தேவனை அணுகுகிறோம்? "விசுவாசம் கேள்வியினால் வரும் '' மகா பரிசுத்த ஸ்தலத்திலிருந்து அந்தந்த காலத்திற்குரிய தூதனுக்குள்ளாக பிரதிபலித்துக் கொண்டிருக்கும் தேவனுடைய வார்த்தையை கேட்கிறதினால் வரும்.

210. சாலொமோனின் ஆலயத்திலே, அந்த குத்துவிளக்குகள் தனது விளக்குகளின் ஒளியை அங்கே வெளியேயுள்ள அந்த வெண்கல கடல்தொட்டியின்மேல் பிரகாசித்து பிரதிபலித்தன. எனவே, இங்கே, அந்த சபைக்காலத்திற்குரிய தூதனானவன் அக்கடல் தொட்டியின்மேல் ஒளிவீசி பிரதிபலித்துக் கொண்டிருக் கிறான்; இங்கேயிருந்து கொண்டு, அவருடைய இரக்கத்தையும், அவருடைய திருவசனத்தையும், அவரது நியாயத்தீர்ப்பையும், அவரது நாமத்தையும் பிரதிபலித்துக்கொண்டிருக்கிறவனே அவன். அங்கே யாவும் பிரதிபலித்துக்கொண்டிருக்கின்றன. அதை நீங்கள் விசுவாசிப்பதன் மூலம், அங்கே வேறுபிரிக்கப்படுகின்றீர்கள். அதை நீங்கள் புரிந்துகொண்டீர்களா?

211. இங்கே இது எவ்வளவு அழகாயுள்ளது என்பதை கவனியுங்கள்; நாம் அதைப்பற்றி அன்றைக்கு பேசினோம். கவனியுங்கள். இங்கே, இங்கே. விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால் கழுவப்பட்ட பிறகு, இரண்டாவது ஸ்தலத் தில் பரிசுத்தமாக்கப்படுகிறீர்கள். அதன்பிறகு, பரிசுத்த ஆவி யினால் நிரப்பப்படுகிறீர்கள். நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தமாக்கப்படுதல், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம். அதை நீங்கள் கண்டு கொண்டீர்களா? அவருடைய செய்தியானது எவ்வாறு உள்ளது? கேட்டலினால் நீதிமானாக்கப்படுதல்; பரிசுத்தமாக்கப்படுதல் என்பது, நீங்கள் அதன்பேரில் என்ன செய்கிறீர்களோ அதைப் பொறுத்ததாகும்; அதை மெச்சும் வகையில்,

கர்த்தர், பரிசுத்தவான்களின் இராஜா'' என்பதாகத்தான் கண்டு கொண்டனர். கவனியுங்கள்! நீங்கள் ஆயத்தமாயிருக் கிறீர்களா? 4ம் வசனம்:

"கர்த்தாவே, (ஆங்கிலத்தில் முதல் எழுத்து பெரிய எழுத்தில் உள்ளது. கர்த்தாவே என்பதற்கு, அது ஏலோஹிம் ஆகும்) யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம்?..."

வெளி. 15:4

206. நீங்கள் இப்பொழுது திருவசனத்தைக் கேட்டு, தண்ணீரினால் சுத்திகரிக்கப் படுவதுபோல், அதே தண்ணீரினால்தான் அவர்களும் கழுவப்படுகிறார்கள். அதே விசுவாசம்தான், சர்வவல்லமை பொருந்திய இயேசு கிறிஸ்துவின் அதே வல்லமைதான் இதுவும். ஆதியில் முழு வெளிப்படுத்துதலாக அது இருக்கிறது. இயேசு கிறிஸ்து யார் என்பதைப் பற்றிய வெளிப்பாடு, அதாவது, நம் மத்தியில் மாம்சமான தேவனாகிய இயேசு கிறிஸ்து யார் என்ற வெளிப்பாடு முழுவதும் வெளிப்படுத்தின விசேஷத்தில் பொதிந்து கிடக்கிறது.

'...உமது நாமம் மகத்துவமும் ஆச்சரியமுமானது...'' ''....யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை மகிமைப் படுத்தாமலும் இருக்கலாம்? தேவரீர் ஒருவரே பரிசுத்தர், எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்கள்; உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயின.''

வெளி. 15:4

இதன் அர்த்தம் யாதெனில், 'அதை ஏற்றுக்கொள்ளாமல் இருந்தால், அது என்னவாயிருக்கிறது என்பதைக் காண்கிறோம். உமது நியாயத்தீர்ப்புகள் பிரத்தியட்சமாக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே நாம் இங்கே நிற்கிறோம், இப்பொழுது நாம் கழுவப் பட்டிருக்கிறோம், உபத்திரவ காலத்தின் வழியாக நாம் வந்தபிறகு, நாம் இப்பொழுது கழுவப்பட்டுக்கொண்டிருக்கிறோம். நாங்கள் உமக்காக நிலை நின்றோம்; நாங்கள் உம்மை விசுவாசித்தோம். இப்பொழுது நாங்கள் கண்ணாடிக் கடலின் மேல் நின்றுகொண்டி ருக்கிறோம். உமது பரிசுத்த வசனத்தின் பிரதிபலிப்பில் உம்மை நாங்கள் கனம்பண்ணி, மகிமைப்படுத்திக்கொண்டிருக்கிறோம். உமது விளக்குகள் உண்மையாயிருக்கின்றன, உமது நியாயத் தீர்ப்புகள் நீதியுள்ளவைகள்.''



சூரியனது வெம்மையால் சுட்டெரிக்கப்பட்டது சற்று நலமாகும்படி ஆகும். அவனது தலை முடியை நன்கு வாரி விடுவார்கள். அதன் பிறகு அவன் வீட்டினுள்ளே செல்வான்.

233. வரும் விருந்தாளிக்கு இந்த விதமாக வரவேற்புக் கிடைக்கும். பேட் அவர்களே, இங்கே ஒரு நிமிடம் நில்லுங்கள். நான் உங்களுக்கு ஒன்று காண்பிப்பேன். அவர்கள் இவ்வாறு தான் ஒரு விருந்தாளியை வரவேற்பார்கள். நான் நம்புகிறேன். இல்லை, இது இவ்விதமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். வரவேற்பு இவ்விதமாக இருக்கும். அவர்கள் ஒருவரையொருவர் கட்டித் தழுவி, அவ்வாறு விருந்தாளி வரவேற்கப்படுவான்.

234. ஆனால் பெந்தெகொஸ்தே விருந்துக்கு வருகிறது போல, இயேசு இந்த பரிசேயனுடைய வீட்டு விருந்துக்கு வந்தபொழுது, அவரை யாரும் கவனிக்கத் தவறிவிட்டார்கள். அவர்கள் தங்களுடைய விஷயங்களிலும், பிஷப்புகளை வரவேற்பதிலும், மற்றும் இன்ன பிற காரியங்களிலும் கவனமாக இருந்தபடியினால், இயேசு அவ்விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தபோதிலும், ஒருவரும் அவரது பாதங்களை கழுவவில்லை. அவர் அங்கே ஒரு மூலையில் அவர் மேனி தூசி படிந்து, பாதங்கள் அசுத்தத்தினால் நாற்றமடித்துக் கொண்டு, உட்கார்ந்து கொண்டிருந்தார். ஆனால் எவருமே அவர் அங்கே இருப்பதை அறியவேயில்லை.

235. அப்பொழுது அங்கே ஒரு எளிய வேசி அத்தெரு வழியாக வந்தாள், அவளிடம் ஒரு பையில் சிறிது அளவே பணம் இருந்தது. அவள் எட்டிப்பார்த்தபொழுது, அங்கே இயேசு அழுக்கடைந்த பாதங்களுடன் அமர்ந்திருப்பதைக் கண்டாள். அது அவளது இருதயத்தை உடைத்தது. அந்த மனிதர் தான் அந்தப் பெண்ணின் பாவங்களை மன்னித்தவர், அம்மனிதர்தான் சுகமளித்தலை அளித்தவர் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஏன் அவரைக் கவனிக்கவேயில்லை?'' என்று தனக்குள் வினவினாள்.

236. ஏனெனில், அங்கே பிஷப்புகள், மற்றும் அவர்கள் குழாமும் இருந்தபடியினால் அவரை புறக்கணித்து விட்டார்கள். அங்கே அவர்... அவரை அவ்விருந்துக்கு வரும்படி அவர்கள் அழைப்பு விடுக்கத்தான் செய்திருந்தனர்.

237. அந்த விதமாகத்தான் நாமும் செய்கிறோம். நமது கூட்டங் களுக்கு இயேசு வரும்படி நாம் அழைக்கிறோம். ஆனால் நாமோ, அவர் வருகையில், அவரைப் பற்றி வெட்கமடைகிறோம். 'ஓ, நான்

'கர்த்தருக்கு ஸ்தோத்திரம்' என்று கூற விரும்பவில்லை. சகோதரி ஜோன்ஸைப் போல, அவர்கள் என்னை ஒரு உருளும் பரிசுத்தன் என்று அழைப்பார்களே'' என்கிறார்கள். நீர் மாய்மாலக் காரர்! அப்படித்தான். ''நான் எங்கே அந்நிய பாஷையில் பேசிவிடுவேனோ என்று அஞ்சுகிறேன். என்னை 'பாஷை மனிதன்' என்று கேலி செய்வார்கள் என்று அஞ்சுகிறேன், என்று கூறுகின்றனர். நீர் ஒரு பரிதாபத்திற்குரிய நிர்பாக்கியசாலி.

238. இவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் பரிதபிக்கப்படத்தக்கவரும், நிர் பாக்கியமுள்ளவரும், தரித்திரராயும், நிர்வாணியாயும், குருடாயும் இருந்து கொண்டு, அதை அறியாமலிருக்கிறீர்கள்.

239. கால்கள் கழுவப்படாதவராய் இயேசு அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறார். தெருவில் நிற்கும் வேசி அங்கே போவதை என்னால் காணமுடிகிறது. ஒரு நிமிட நேரம் நாம் யாவரும் அவளைப் பற்றிப் பார்ப்போம். அவன் கடைக்குப் போகிறதை என்னால் பார்க்க முடிகிறது. அங்கு அவள் போய் .... அவளது கன்னத்தில் கண்ணீர் வழிந்தோடுகிறது. என்னால் அதைச் செய்ய முடியாது. இந்தபொருளை எடுத்துச்சென்றால் இப்பணத்தை நான் எங்கேயிருந்து பெற்றேன் என்பதை அவர் அறிவார். எவ்விதமாக நான் இதை பெற்றேன் என்பதை அவர் அறிவார். ஆனால் என்னி டத்தில் இருப்பதெல்லாம் அது தான்'' என்று கூறினாள்.

240. அதைத்தான் அவரும் விரும்புகிறார். அதைதான் அவரும் விரும்புகிறார். ''வெறுங்கையனாக நான் உம்மிடம் வருகிறேன்'' என்று கூறிக்கொண்டு அவரிடம் வாருங்கள். அவர் நீங்கள் என்ன கொண்டு வருகிறீர்கள் என்பதைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை.

241. அவள் அங்கே பரிமள தைலத்தை விலைக்கு வாங்கி வைத் திருந்தாள். அதை அவள் எடுத்துக்கொண்டு வருகிறாள். “எப்படி யாவது அவரை நான் காண வேண்டுமே'' என்று எண்ணிக் கொண் டிருக்கிறாள். பின்பு, அவள் அங்கே உள்ளே மெதுவாக நுழைந்து கதவண்டை வந்துவிடுகிறாள்.

242. அங்கே அவர்கள் அவருக்கு உரிய வரவேற்பு கொடுக்க வில்லை. பரிமள தைலம் உள்ள குப்பியை எடுத்து அதை திறந்து அதை அவரது பாதத்தில் பூசுகின்றாள், பின்பு, அவரது பாதங்களை கழுவ ஆரம்பிக்கிறாள். 'ஓ, இது அவராகத்தான் இருக்க வேண்டும். வேதாகமத்தில் நான் எப்பொழுதும் படித்திருப்பது இவரைப்



மரித்த பரிசுத்தவான்கள் அல்ல இவர்கள், ஏனெனில் இவர்களைப் பற்றி "மகா உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்'' என்று கூறப்பட்டுள்ளது. மகா உபத்திரவ காலமானது, சபையானது பரம வீட்டிற்கு எடுக்கப்பட்ட பிறகு எதிர்வரும் காலத்தில் நிகழப் போகும் காரியமாகும்.

203. ஓ நான் அதை நேசிக்கிறேன். கவனியுங்கள். இன்னும் சற்று அப்பால் பார்ப்போம்; அவர்கள் என்னவிதமான வார்த்தையைக் கேட்டார்கள் என்பதைப் பற்றி நான் பார்க்கவிரும்புகிறேன். இப் பொழுது நாம் வெளி. 15ம் அதிகாரம் 2ம் வசனத்திலிருந்து துவக்குவோம்.

“அன்றியும், அக்கினி கலந்த கண்ணாடிக் கடல்போன்ற ஒரு கடலையும், மிருகத்திற்கும் அதின் சொரூபத்திற்கும் அதின் முத்திரைக்கும் அதின் நாமத்தின் இலக்கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர்கள் தேவ சுரமண்ட லங்களைப் பிடித்துக் கொண்டு அந்தக் கண்ணாடிக் கடலருகே நிற்கிறதையும் கண்டேன்."

வெளி. 15:2

204. இப்பொழுது, அவர்கள் ஒருபோதும் உள்ளே பிரவேசிக்க வில்லையென்பதையும், ஆனால் அவர்கள் திருவசனத்தைக் காதுகளால் கேட்டிருக்கிறார்கள் என்பதையும் பாருங்கள். அவர்கள் திருவசனத்தை கேட்டிருந்தார்கள். இப்பொழுது கவனியுங்கள், அவர்கள் என்னவிதமான உபதேசத்தைக் கேட்டிருக்கிறார்கள் என்பதைப் பாருங்கள். அது சபையோடு ஒத்துப்போகிறதா என்பதைப் பாருங்கள்.

"அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் (அப்பாடல் மோசே செங்கடலை கடந்த பிறகு பாடியதாகும்) ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டையும் பாடி; சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; (யார் அந்த ஆட்டுக்குடியானவர்? சர்வ வல்லமையுள்ள தேவன்தாமே அவர்) பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்".

வெளி. 15:3

205. அவர்கள் அவரை யாரென்று அடையாளங் கண்டு கொண்டனர் என்பதைப் பார்த்தீர்களா? திரித்துவத்தில் உள்ள மூன்றாம் ஆளாக அல்ல, ஆனால் அவரை அவர்கள் ''சர்வ வல்லமையுள்ள தேவனாகிய

நினைவில் கொள்ளுங்கள். உபத்திரவ காலமானது... நகரத்தினுள் தனது இராஜாக்களையும், அவர்களுடைய எல்லா மகிமைகளையும் கொண்டு வந்திருக்கிறாள். நாம் வெளிப்படுத்தின விசேஷம் 22ம் அதிகாரத்தை எடுத்துக்கொள்ளும்போது நீங்கள் அதைக் காண லாம். இதை நீங்கள் எழுதிக் குறிப்பெடுத்து வைத்துக்கொண்டு பார்த்துக்கொண்டே வந்தால், அதைப்பற்றி நாம் பார்க்கையில், நமக்கு அதின் அர்த்தம் என்ன என்பதை கண்டுகொள்ளலாம். அதனுடைய உன்னதமான இடங்களைத் தொடுவதற்கு நமக்கு நேரம் இல்லை. பிறகு, ஏதாவது ஒரு நாளில், ஒருவேளை கர்த்தருக்கு சித்தமானால், அதைப்பற்றி பேசுவதற்கு நமக்கு ஏராளமான தருணம் உண்டாயிருக்கும்.

201. இப்பொழுது எழும்பிவந்த உபத்திரவ காலத்து பரிசுத்தவான்கள், மகா உபத்திரவ காலத்திற்குள் கடந்து வந்திருக்கிறார்கள். சபையானது உபத்திரவ காலத்தினுள் போகாது. அவர்கள் ஏற்கனவே மகிமையில் இருக்கிறார்கள் என்பதைக் காண்கிறீர்களா? இதோ இங்கே உபத்திரவ காலத்து பரிசுத்தவான்கள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாய்....என்னுடையதும் உங்களுடையது மான தவற்றினால் அவர்கள் ஒருபோதும் வசனத்தை கேட்காதவர்களாய் இருந்தார்கள். அவர்கள் கேட்டிருந்தும், அதை அவர்கள் புறக் கணித்திருந்தால், அவர்கள் நரகத்திற்குத்தான் போவார்கள், புறம்பான இருளில் தள்ளப்பட்டிருப்பார்கள், ஏனெனில் அவர்கள் வசனத்தை புறக்கணித்தபடியினால் இப்படியாகி இருக்கும். ஆனால் அவர்கள் ஒருபோதும் கேட்டேயிராவிட்டால், அப் பொழுது தேவன் நீதியுள்ளவராயிருக்கிறார்; உபத்திரவ கால மானது அவர்களுக்கு வருகிறது.

202. ஒரு நிமிடம் கவனியுங்கள், யோசித்துப் பாருங்கள். அதே வார்த்தையினால்தான் இவர்களும் கழுவப்பட்டுள்ளனர். இவர் களுக்கும் அதே பலிபீடம்தான், அதே கண்ணாடிக் கடல்தான், அதே திருவசனம்தான். வெளிப்படுத்தின விசேஷம் 2:5, அல்ல, வெளிப்படுத்தின விசேஷம் 15:2 முதல் 5ம் வசனங்கள் முடிய. ஒரு நிமிடம் கவனியுங்கள். நாம் அவர்களிடத்திற்கு தேவவசனத்தை எடுத்துக்கொண்டு போகவில்லை; அதனால்தான் அவர்கள் இவ்வித நிலையில் இருக்கின்றனர். அதற்காக நாம் பொறுப்பாளிகளாக்கப் படப்போகிறோம். எனவே நாம் அனைவரையும் பிடித்துக்கொள்ள இயலாமல் இருக்கிறது. இந்த காலத்தில் உள்ள சத்தியத்தையுடைய சபையானது அப்படி செய்ய இயலாது. அவர்கள் யாவரும் உபத்திரவ காலத்திற்குள் போகிறபடியால், கடந்துபோன சபைக் காலங்களில்



பற்றித்தான். அவர் என்னை அடையாளங்கண்டுகொள்வார் என்பதை நான் அறிவேன்'' என்று கதறி அழுது கொண்டே மனதில் எண்ணினாள். அதில் முதலாவதான காரியம் என்ன வெனில்... அவரது பாதங்களில் விழுந்த மனந்திரும்புதலின் கண்ணீரினால் அவன் அவரது பாதங்களை நனைத்தாள். அது எவ்வளவு அழகான தண்ணீராக உள்ளது! அவரது பாதங்களை தன் கண்ணீரால் அவள் நனைத்து அதை கழுவின போது, அதை துடைக்க அவளிடம் துணி ஏதும் இருக்கவில்லை. எனவே அவள் தலை முடியை எடுத்து அதைக் கொண்டு துடைத்தாள். சுருள் சுருளான அவளது முடியை அவள் கலைத்துவிட்டிருந்தாள். அவளது கன்னத்திலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. அதைக்கொண்டு அவரது பாதங்களை அவள் கழுவிவிடுகிறாள்; அவ்வப்பொழுது அவள் அவரது பாதங்களை முத்தமிடுகிறாள் (சகோ. பிரான்ஹாம் முத்தமிடும் ஓசையை உண்டாக்குகிறார் - ஆசி) பாதங்களை கழுவிக் கொண்டேயிருக்கிறாள்.

243. அழுக்கடைந்த பாதங்களோடு இயேசு அங்கே இருக்கும் பொழுது, ஒருவரும் அதைப்பற்றிக் கவனிக்கவேயில்லை. இன்றைக்கு உருளும் பரிசுத்தர் மற்றும் இன்னபிற அபாயகரமான நாமங்களை அவர் பெற்றுள்ளார். அவருக்கென்று நிற்பதற் கான தைரியம் மனிதனுக்கு இருக்கவில்லை.

மரணம் என்னை விடுவிக்கும் வரையிலும், அர்ப்பணிக்கப்பட்ட இச்சிலுவையை நான் சுமப்பேன் இன்னல்படும் சில தேவ மைந்தர்களுடன் நான் போகிறேன் இயேசுவோடு நான் புறப்பட்டுவிட்டேன், கர்த்தாவே நீர் என்னை அழைத்துச் செல்லும் (என்னை அழைத்துச் செல்லும் கர்த்தாவே

என்னவானாலும் என்னை அழைத்துச் செல்லும்)

244. யாக்கோபைப் போல், எனக்கு ஒரு கல் என் தலையணையானாலும், அதனால் என்ன வந்தது அவர் எனக்காக செய்ததை எண்ணிப் பார்க்கும்போது!

245. அங்கே இவ்வெளிய விபச்சாரி கதறி அழுது கொண்டு இருக்கிறாள். அவரை விருந்துக்கு அழைத்தவனாகிய சீமோன் என்பவன் அவள் இவ்வாறு செய்து கொண்டு இருக்கையில், ''ஹூம் ஹூம் ஹூம் ஹூம்'' என்று உறுமிக் கொண்டே, ''அவர் தீர்க்கதரிசியா இல்லையா என்பது, அவள் எப்படிப்பட்ட பெண்மணி என்பதை அவர்

அறிந்து கொண்டால் அதிலிருந்து தெரிய வந்துவிடும்'' என்று கூறிக் கொண்டேயிருந்தான். அந்த மாய் மாலக்காரன்!

246. எனவே, அவள் உள்ளே வந்து விட்டபிறகு ... இயேசு தனது பாதங்களை நகற்றவேயில்லை. அவர் அப்படியே உட்கார்ந்து கொண்டு அவளை நோக்கிப் பார்த்து, அவள் செய்வதை கவனித்துக் கொண்டேயிருந்தார். ஒ, நான் அதை விரும்புகிறேன். நாம் செய் கிற பெரிய காரியங்கள் அல்ல காரியம், நாம் சில வேளைகளில் செய்யாமல் விட்டுவிடுகிற சிறிய காரியங்களில் தான் இருக்கிறது. அவரைப் பற்றி யாருமே கண்டு கொள்ளவில்லை. இறுதியாக அவள் அங்கே அழுது கதறிக் கொண்டு, அவரது பாதங்களை கழுவி துடைத்துக்கொண்டிருக்கிற பொழுது, அதுதான் அங்கிருந்த மக்களது கவனத்தை ஈர்த்தது. அவர் அவளை கவனித்துப் பார்த்துக் கொண்டேயிருந்தார். ஒரு வார்த்தையும் சொல்லவில்லை.

247. சீமோன் அங்கே நின்று கொண்டு, 'உம், அவர் தீர்க்கதரிசியா இல்லையா என்பதைப் பாருங்கள். ஏற்கனவே சொன் னேன், நான் சொன்னேன் அல்லவா? அவர் தீர்க்கதரிசியாயிருந் தால், அவள் எப்படிப்பட்ட பெண் என்பதை அவர் அறிந்திருப் பாரே. பாருங்கள், நாம் இங்கே மகத்தான சபையினராக அமர்ந்திருக்கிறோம். நாம் அறிந்து கொண்டு விட்டோம். அவர் தீர்க்கதரிசி அல்ல என்பதை நாம் அறிந்து கொண்டு விட்டோம். அப்படியிருந்தால் அவள் யார் என்பதை அவர் அறிந்திருப்பாரே'' என்று கூறுகிறான்.

248. அவள் அங்கே உள்ளே வந்து விட்ட பிறகு, கன்னத்தில் வழிந்தோடும் அவளது மனந்திரும்புதலின் கண்ணீரினால் இயேசு வின் பாதங்களை கழுவித்துடைத்தாள். இதனால் இயேசு சிறிது புத்துணர்ச்சி அடைந்திருக்க வேண்டும் என்று நான் நம்புகிறேன்.

249. ஒ தேவனே, நான் அங்கு இருந்திருக்கவேண்டும் என்று விரும்புகிறேன். நான் அப்பாதங்களை மீண்டும் ஒரு முறை கழுவியிருப்பேன். ஆம், ஐயா.

250. இன்றைக்கு பாதங்களை தனது தலை முடியினால் துடைப்பது என்பது ஒரு பெண்ணுக்கு மிகவும் கடினமானதாக இருக்கு மல்லவா? பாதங்களைத் துடைப்பதற்கென இன்றைய பெண் களுக்கு போதுமான முடியில்லாததால், அதற்காக அவள் தலை கீழாக நின்றால் தான் முடியும். ஆம் ஐயா, அவர்கள் தங்கள் தலை முடியை வெட்டிக்கொண்டு விட்டார்கள்.



197. எவ்வாறு நாம் வருகிறோம்? புறஜாதி சபையாகிய நாம் இந்த திருவசனத்திற்கு இக்கண்ணாடிக் கடலண்டையில், தண்ணீரா கிய திருவசனத்தண்டையில் வந்து, அது எழுதப்பட்டிருக்கிற வண்ணமாக அதை அங்கீகரித்து வரவேண்டும். அது சரிதானே? அப்பொழுது பலியானது ஏற்றுக்கொள்ளப்பட்டு, உள்ளுக்குள்ளாக பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுகிறது; அந்தக் காலத்திற்குரிய வெளிச்சத்தினால் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. இதிலிருந்து ...... பரிசுத்த ஸ்தலத்திலிருந்து இதற்குள் வருகிறது. வந்து நட்சத்திரம் இருக்கிற ஸ்தலத்திலிருந்து புறப்பட்டு இங்கே வருகிறது. அதைப் புரிந்துகொண்டீர்களா?

198. இந்தக் காலத்தின் முடிவில், வெண்கலக்கடல் தொட்டியை யோவான் காண்கையில், அது பளிங்கைப் போல் தெளிவாயிருந்தது என்பதைக் கவனியுங்கள். அதற்கு என்ன அர்த்தம்? வார்த்தையானது பூமியினின்றும் எடுத்துக்கொள்ளப்பட்டு விட்டது; சபையானது எடுத்துக்கொள்ளப்பட்டுவிட்டது, எனவே இனி அதில் இரத்தம் இல்லை; சபைக்காலமானது முடிவடைந்து விட்டது, எனவேதான் அது பளிங்கைப்போல் தெளிவாய் இருந்தது.

199. இப்பொழுது வெளிப்படுத்தின விசேஷம் 15ம் அதிகாரத்தில், ஸ்திரீயின் சந்ததியாகிய மீதியானவர்கள் உபத்திரவ காலத்து பரிசுத்தவான்கள் ஆவர்; அவர்கள் உபத்திரவ காலத்தின் வழியாக கடந்து செல்லுகிறார்கள், அவர்கள் இந்தக் கடலின் மேல் நின்று கொண்டிருப்பதாகக் காணப்பட்டார்கள். அது அக்கினிமயமாக, இரத்தத்தால் நிறைந்து, சிவப்பான தீ நாவுகள் உள்ளதாக, தேவ அக்கினியானது எரிந்து கொண்டிருந்தது. பாருங்கள். அவர்கள் ரோமாபுரியாகிய மிருகத்தின் மேலும், அவனது இலக்கத்தின் மேலும், அவனது பெயரின் எழுத்துக்களின் மேலும், அவனது சொரூபமாகிய சபைகளின் சமஷ்டி அமைப்பின் மேலும் ஜெயங் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அதைவிட்டு வெளியே வந்து விட்டார்கள். இந்த உபத்திரவகாலத்து பரிசுத்தவான்களாகிய இக்குழுவினரான மக்களை வெளியே கொணருவதற்காக, இஸ்ரவேலுக்காக தோன்றவிருக்கும் அந்த இரு தீர்க்கதரிசிகளாகிய மோசேயும் எலியாவும் செய்கிற பிரசங்கத்தின் மூலமாக அவர்கள் கொண்டுவரப்படுவார்கள்.

200. பாருங்கள், இப்பொழுது சபையானது எடுத்துக்கொள்ளப்பட்டாகிவிட்டது. இது நடக்கையில் கிறிஸ்துவின் மனைவியானவள் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறாள் என்பதை

வெண்கலம்போல் காணப்படுகிறது'' என்று கூறினான். (புறக்கணித்துவிட்ட தேசத்தின்மேல் உள்ள தெய்வீக நியாயத்தீர்ப்பை குறிக்கிறது). ஓ, என்னே! வெண்கலம்.

193. நாம் இப்பொழுது கடல் தொட்டி யண்டையில் இருக்கிறோம். கடல் தொட்டியானது காலியாகவும், பளிங்கைப் போலவும் இருந்தது என்பதை கவனித்தீர்கள். ஏன்? சபையானது ஏற்கனவே மீட்கப்பட்டுவிட்டது.

194. சற்று நேரம் கழித்து உபத்திரவ காலத்து பரிசுத்தவான்கள் மேலே வருவதைக் குறித்து கவனிக்கிறோம். அப்பொழுது முழுவதும் மீண்டும் அக்கினிமயமாக இருப்பதை காண்கிறோம். நீங்கள் அறிவீர்களா? அதை நீங்கள் வாசிக்க விரும்புகிறீர்களா? இப்பொழுது நாம் வெளிப்படுத்தின விசேஷம் 15ம் அதிகாரம் 2ம் வசனத்தை எடுத்துக்கொள்வோம், அங்கே மீண்டும் அக்கினி மயமான வெண்கலம் போன்றுள்ளதைக் குறித்து பார்க்கலாம்.

"பின்பு, வானத்திலே பெரிதும் ஆச்சரியமுமான வேறொரு அடையாளமாகிய கடைசியான ஏழு வாதைகளையுடைய ஏழு தூதரைக் கண்டேன், அவைகளால் தேவனுடைய கோபம் முடிகிறது"

வெளி.15:1

195. இப்பொழுது தேவனுடைய கோபம் என்பதைப் பற்றி கவனியுங்கள்.

"அன்றியும், அக்கினி கலந்த கண்ணாடிக் கடல் போன்ற ஒரு கடலையும், (இப்பொழுது கவனியுங்கள்) மிருகத்திற்கும் அதின் சொரூபத்திற்கும் அதின் முத்திரைக்கும் அதின் நாமத்தின் இலக்கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர்கள் தேவசுரமண்டலங்களைப் பிடித்துக்கொண்டு அந்தக் கண்ணாடிக் கடலருகே நிற்கிறதையும் கண்டேன்.

'அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும்... பாடி...''

வெளி. 15:2-3

196. ஓ, அதை நீங்கள் கண்டீர்களா? ''உபத்திரவ காலம்'' ஓ! நீங்கள் வீட்டுக்குத் திரும்பிப்போக அவசரமாயுள்ளீர்களா? (சபையார் "இல்லை'' என்று பதிலளிக்கிறார்கள் - ஆசி.). நல்லது, கவனியுங்கள். இங்கு ஒரு காரியத்தை நாம் கவனிப்போம்.



251. ஆனால் அங்கே இயேசுவின் பாதங்கள் ஒருவரும் கவனிக்காத நிலையில், அழுக்கடைந்து, நாற்றமடித்துக்கொண்டு, அவர் அங்கே கனவீனப்படுத்தப்பட்டவராய், குறை சொல்லப்பட்ட வராய் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். ஆனால் அவளோ அதை கழுவிவிட்டாள். அவர் தம் பாதங்கள் கழுவித் துடைக்கப் பெற்ற பிறகு, அவளை “நல்லது'' என்று சொல்லுவது போல் நோக்கிப் பார்த்தார்.

252. அவர் சீமோனைப் பார்த்து, “சீமோனே, நான் உனக்கு சொல்ல வேண்டிய ஒரு விஷயம் உண்டு. நீ என்னை இங்கே வரும் படி அழைத்தாய், ஆனால் நீ என்னை வாசலில் வந்து வரவேற்க வில்லை. என் பாதங்களை கழுவ நீ எனக்கு தண்ணீர் கொடுக்கவில்லை. சூரிய வெம்மையில் நடந்து வந்த உஷணத்தை தணிக்க நீ என் தலையை எண்ணெயால் அபிஷேகிக்கவில்லை. நீ வரவேற்புக் கடையாளமான முத்தமும் கொடுக்கவில்லை. ஆனால் இந்த எளிய பெண்மணி, இந்த வெளியாள், தெருவில் உள்ள ஒரு வேசி, இவளுக்கு என் பாதங்களை கழுவ தண்ணீர் இல்லை, ஆனால் அவள் தன் கண்ணீரினால் என் பாதங்களைக் கழுவினாள். துடைப்பதற்கு அவளிடம் ஒன்றுமில்லை, எனவே அவள் தன் தலைமுடியை எடுத்து பாதங்களைத் துடைத்தாள். என் பாதங்களை விடாமல் முத்தமிட்டாள். இப்பொழுது நான் உனக்கு கூறுவதென்னவெனில், அநேகமான அவளது பாவங்கள் அவளுக்கு மன்னிக்கப்பட்டன'' என்று கூறினார். அப்படித்தான், அவர் ஒருபோதும் அவனுடையதைக் குறித்து கூறவில்லை.

“நீ செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது''

லூக்.7:47

253. அதே போல் இன்றைக்கும், இயேசுவானவர் ஒரு பெந்தெகொஸ்தே ஸ்தாபனத்தின் வாசலிலும், பாப்டிஸ்ட் ஸ்தாபனத்தின் வாசலிலும், மெதோடிஸ்ட் ஸ்தாபனத்தின் வாசலிலும் வெளியே நின்று கொண்டு, மீண்டும் பெந்தெகொஸ்தே ஆசீர்வாதத்தோடு உள்ளே நுழைவதற்காக தட்டிக் கொண்டிருக்கிறார், ஆனால் ஜனங்களோ அவரைக் கடந்து சென்று கொண்டிருக்கின்றனர். உங்களுடைய லௌகீகமும் மற்றும் இன்னபிற காரியங்களும் அவரை சபையை விட்டு வெளியே தள்ளிவிட்ட பிறகு, அவர் வெளியே நின்றிருந்து, மீண்டும் உள்ளே நுழைவதற்காக முயற்சித்துக் கொண்டு சப்தமிட்டுக் கொண்டிருக்கிறார். என்னுடைய வாழ்க்கையிலேயே நான் கண்டவற்றில் மிகவும் பரிதாபமான விஷயமாக இது இருக்கிறது. அவர்களுக்கு அவர் தேவையில்லை என்றாகி விட்டது. அவர் வெளியே

வாசலருகே நின்று கதவைத் தட்டி மீண்டும் உள்ளே நுழைய முயன்று கொண்டிருக்கிறார். அவர் அதே காரியத்தைத் தான் செய்ய முயன்று கொண்டிருக்கிறார். ஏன் ஏன்? அவர் வெளியே நிற்கிறார்.

254. அவர்கள் அவரை வெளியே தூக்கி எறியவில்லை. அவர்கள் இன்னமும் அவரைக் குறித்து துதிப்பாடல்கள் பாடுகின்றனர். அவரைக் குறித்தே பிரசங்கிக்கின்றனர். ஆனால் அவர் தங்கள் சமூகத்தில் இல்லாததை உணரவில்லை. அது சரிதான். அவர்கள் தொடர்ந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். ஏன்? அவர்கள் கிட்டப் பார்வை வியாதியுடையவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய பெரிய கட்டியங்களையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள் ஐசுவரியவான்களாயிருக்கிறார்கள் அவர்கள் தாம் சார்ந்திருக்கிற பெரிய ஸ்தாபனங்களைக் குறித்து பெருமிதத்துடன் நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அதை கட்டியெழுப்பி, அதில் மேலும் மேலும் உறுப்பினர்களைச் சேர்த்து உள்ளே கொண்டு வர அவர்கள் முயன்று கொண்டிருக்கிறார்கள். அவர் இல்லாததை அவர்கள் உணரவில்லை. இல்லை, இல்லை. அந்நிய பாஷைகளில் பேசுதல் அவர்கள் மத்தியில் இல்லாதிருப்பதை மகத்தான வல்ல மையான செய்திகள் அவர்கள் மத்தியில் இல்லாதிருப்பதை உணர வில்லை. அச்செய்திகள் இருதயத்தை உருவக்குத்தி, இருதயத்தை விருத்த சேதனம் செய்து, உலகத்தின் காரியங்களை உங்களை விட்டு வேறுக்கிறதாயிருந்து, உங்களை பதரைவிட்டு பிரித்தெடுக்கப் பட்ட கோதுமை மணியாக ஆக்குகிறது. ஓ அவர்கள் .....

255. அவ்வாறு நீங்கள் அவர்களது சபையில் பிரசங்கித்தால், அவர்கள் உங்களை வெளியே தள்ளிவிடுவார்கள். அவ்விதமாகத்தான் பரிசுத்த ஆவியானவர் பிரசங்கித்தார். இயேசு அவர்களை நோக்கி, ''விரியன் பாம்புக்குட்டிகளே, புல்லில் உள்ள பாம்புகளே'' என்ற பிரசங் கித்தார். அந்த மகத்தான அபிஷேகம் பண்ணப்பட்ட மனிதனாகிய யோவானும் அவ்வாறு செய்து, அவர்களது தோலை உரித்தான். அவ்வாறுதான் நடந்தது.

256. ஆனால் அவர்கள் அவர் இல்லாததை உணரவில்லை ஏனெனில் அவர்கள் அந்த உணர்ச்சியை உடையவர்களாயிருக்க வில்லை. பாருங்கள்? அவர்களுக்கு முதுகில் தட்டிக் கொடுக்கும் மலரைப் போல் மென்மையான அலங்காரமான காரியம் உண்டா யிருக்கிறது. “நீங்கள் அவர்களோடு சேர்ந்து கொண்டு, உங்கள் பெயரை இங்கே பதிந்து கொண்டு விட்டால், நாங்கள் உங்களை உறுப்பினராகிவிடுவோம். மற்ற சபைக்குப் போய் உங்களுடைய சம்மந்தமான சான்றை வாங்கி



188. இந்தவிதமாக ஒரு மனிதன் போய் கூறுவானெனில்: "நான் அவளுடைய உணர்வுகளை புண்படுத்தி விட்டேன்; ஆனால் அதனால் ஒன்றும் பாதகமில்லை. நான் அவளிடம், நான் வருந்துகிறேன் என்று சொல்லுவேன், ஆனால் உண்மையில் நான் அவ்வாறு வருந்தவில்லை'' என இவ்வாறு நீர் கூறினால், நீர் ஒரு மாய்மாலக் காரன் ஆவீர். பாருங்கள், அது தேவனால் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

189. நீங்கள் உங்களுடைய பாவங்களுக்காக முழுவதுமாக மனஸ் தாபப்படவேண்டும். அப்படி நீங்கள் உங்களுடைய பாவங் களுக்காக மனஸ்தாபப்படுகிறீர்கள் என்று அறிவீர்களென்றால், அப்பொழுது, மனந்திரும்பி பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது நீங்கள் பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்வீர்கள், அப்பொழுது நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வீர்கள். தேவன் அதை மிகவும் எளிமையானதாக இருக்கும்படி செய்திருக்கிறார் என்பதைப் பாருங்கள்.

190. இந்தக் "கண்ணாடிக் கடல்' பளிங்குக்கொப்பாகக் கூறப் பட்டிருக்கிறது என்பதைக் கவனியுங்கள். இப்பொழுது, இந்த கண்ணாடிக் கடலானது வெண்கலக் கடல் தொட்டியைக் கொண்டு அடையாளமாக காண்பிக்கப்பட்டிருக்கிறது. பரலோகத்திலே இது கண்ணாடிக் கடல் என்று இருக்கிறது. மோசே அதைக் கண்ணாடிக் கடலாகப் பார்த்தான். அதுதான் "வெண்கலக் கடல் தொட்டி'' என்று அழைக்கப்பட்டது. ஒரு வெண்கல பலிபீடம்.

191. வேதாகமத்திலே வெண்கலம் எதைக் குறித்து பேசுகிறது என்பதை நீங்கள் அறிவீர்களா? நியாயத்தீர்ப்பைக் குறித்து. மோசே ஒரு வெண்கல சர்ப்பத்தை உண்டாக்கினான். சர்ப்பமானது எதைக் குறிக்கிறது? அடையாளச் சின்னமாக இருந்த அந்த வெண்கல சர்ப்பமானது, 'அவர் அதன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்' என்று ஏதேன் தோட்டத்தில் சொல்லப்பட்ட பொழுது, பாவமானது ஏற்கனவே நியாயந்தீர்க்கப் பட்டது என்பதை சுட்டிக்காட்டுவதாய் இருக்கிறது.

192. வெண்கலம், ''தெய்வீக நியாயத்தீர்ப்பை எடுத்துக் காட்டுகிறது. வெண்கல பலிபீடத்தின் மேல்தான் பலியானது சுட்டெரிக்கப்பட்டது. வெண்கலக் கடல் தொட்டியானது, பலி திருவசனத்தின் தண்ணீரினால் கழுவப்படுவதற்காக இருக்கிறது. பாருங்கள்? எலியா, தன் நாட்களிலே போய் வானத்தை அண்ணாந்து பார்த்துவிட்டு, "ஆகாயமானது

"எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்'' என்று வேதாக மம் கூறுகிறது.

185. கண்ணாடிக் கடலில்தான் பலி கழுவப்பட்டது. நாம் கழுவப்பட்டிருக்கிறோம். ஓ, அதை நீங்கள் மறந்துவிடவேண்டாம். அதைப்பற்றி நாம் சிறிது நேரத்தில் திரும்பவும் பார்க்கப் போகிறோம். திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்தல். அங்கே நீங்கள் பிரவேசிப்பதற்கு முன்னர், நீங்கள் திருவசனத்திற்கு செவிகொடுக்க வேண்டும். ஏனெனில் தேவனை அணுகுவதற்கு ஒரேயொரு வழிதான் உண்டு. அதுதான் விசுவாசத் தின் மூலம் ஆகும். அது சரிதானே? 'விசுவாசம் கேள்வியினால் வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்''. நமது மனச்சாட்சி கழுவப்படுதல். ஒரு மனிதனை சந்திப்பதற்காக அல்ல, தந்தையை சந்திப்பதற்காக அல்ல, தாயாரை சந்திப்பதற்காக அல்ல, குழந்தையைச் சந்திப்பதற்காக அல்ல; (அவைகளெல்லாம் உண்மைதான், நாம் அதையும் செய்வோம்). ஆனால் நாம் முதலாவதாக வரவேண்டிய இடம் என்னவெனில், தேவனை அணுகுவதற்காக உள்ள வழியில்தான். அங்கு நாம் தேவனுடைய வார்த்தையை கேட்கையில் கழுவப்பட்டாக வேண்டும்.

186. விசுவாசத்தினால் நாம் நடக்கிறோம். தேவன் உங்களுக்கு என்ன செய்தாரோ அதுதான் கிருபையாகும். அது உண்மை . தேவனை நீங்கள் விசுவாசித்தீர்கள். தேவன் பேரில் நீங்கள் விசுவாசங் கொண்டுள்ளீர்கள். நீங்கள் உங்களைப் பற்றி மனஸ்தாபங் கொண்டதுமே, நீங்கள் ஏற்கனவே மன்னிக்கப்பட்டி ருக்கிறீர்கள்.

187. நேற்று நான் ஒரு சகோதரனிடம் பேசிக்கொண்டிருக் கையில், அந்த விஷயத்தில் அவர் சற்று குழம்பிப் போயிருந்தார். நான் அவரிடம், 'பாரும், சகோதரரே, நீங்கள் உங்கள் மனைவியின் மனதைப் புண்படுத்தும்படியாக கூறினீர்களென்றால், உடனே நீங்கள் அதைப்பற்றி மனஸ்தாபப்பட்டு, உங்கள் மனைவிக்காக வருத்தப்படுவீர்களென்றால், நீங்கள் செய்ததைப் பற்றி மனஸ் தாபங்கொள்ளுகிறீர்கள், நீங்கள் ஏற்கனவே உங்கள் இருதயத்தில் மனந்திரும்பிவிட்டீர்கள், அது சரிதான், ஆனால் நீங்கள் அதைப் பற்றி போய் உங்கள் மனைவியிடம் கூறவேண்டும். நீங்கள் நிச்சயம் அவளிடம் போய், ''அன்பே, நான் அவ்வாறு கூறியதற் காக வருந்துகிறேன்'' என்று கூறியாக வேண்டும். அவ்வாறு செய்தால்தான் நீங்கள் முழுவதுமாக மனந்திரும்பினீர்கள் என்று ஆகும். தேவனிடத்திலும் காரியம் இப்படியாகத்தான் இருக்கிறது.



வந்துவிடுங்கள். நாங்கள் அப் பொழுது உங்களை ஏற்றுக்கொண்டு விடுவோம். ஒவ்வொரு வருட மும் எவ்வளவு கொடுப்பது என்பதற்கான உங்களுடைய வாக்குறுதி என்ன?'' என்றெல்லாம் அவர்கள் கேட்கின்றார்கள். பார்த்தீர்களா? அவர்களுடைய காரியம் அவ்வாறுதான் உள்ளது. ''ஐசுவரியவானும், எனக்கு ஒரு குறைவுமில்லை'' என்ற நிலையில் உள்ளனர். ஓ, ஆனால் உங்களுக்கு அதைவிட ஒரு மகத்தான காரியம் தேவைபடுகிறது. ஆனால் நீங்கள் அதைப் பெற்றுக் கொள்ளவில்லை. இயேசு பெந்தெகொஸ்தே ஆசீர்வாதத்தோடு மீண்டும் நுழைவதற்காக, வெளியே நின்று கொண்டு முயன்று கொண்டிருக்கிறார்.

257. மெதோடிஸ்ட் சபையின் நடுவில் பரிசுத்த ஆவி விழுந்தால், அதினால் அவர்கள் சப்தமிட்டு, குதிக்க ஆரம்பித்து, அந்நிய பாஷைகளில் பேசி குடித்த மக்களைப் போல் நடந்து கொண்டால், என்ன நடக்கும் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள்? அந்த மெதோ டிஸ்ட் சபையை, கான்ஃபரென்ஸ்-ஐ விட்டு கான்ஃபரென்ஸ் தூக்கி எறிந்துவிடும். (கான்ஃபரென்ஸ் என்பது இவ்விடத்தில், மெதோடிஸ்ட் சபைக்கு தேசிய அளவில் அதை ஆளுகை செய்யக் கூடிய ஒரு அமைப்பாகும் - மொழிபெயர்ப்பாளர்) நீங்கள் அதை அறிவீர்கள். பாப்டிஸ்ட் சபையிலும் அதே போல் உள்ள காரியம் நடந்திட்டால் என்ன நடக்கும்? அதே தான் இங்கும் நடக்கும். பெந்தெகொஸ்தேயினர்? அதே காரியம் சம்பவித்ததைப் பற்றி அறிந்த அநேகர் உள்ளனர். நிச்சயமாக. ஆம் ஐயா. அதை அவர்கள் அபத்தம் என்று எண்ணுகிறார்கள், எனவே அத்துடன் தங்களை இணைத்துக் கொள்ளமாட்டார்கள். 'அவர்கள் எங்களுடைய புது தரை விரிப்பைக் கூட நாசம் செய்துவிட்டார்கள்'' என்று கூறுவர். ஊ ஊ, நிச்சயம் அப்படித்தான். என்னே ! என்னே ! இவர்கள் ஒரு பரிதாபமான கூட்டம் மக்களாய் உள்ளனர். அது அப்படித்தான்.

258. அவர் அவர்களோடு ஒரு காலத்தில் இருந்தார். அவர் களோடு ஏழு குத்துவிளக்குகளின் மத்தியில் அவர் உலாவினார். இங்கே தான் பதில் உள்ளது; ஸ்தாபனங்களும், அவைகளுடைய லௌகீகமான காரியங்களும், அவர்களுடைய பிஷப்புகளும், கார்டினல்களும், மற்றும் அவர்களுடைய அனைத்து உலக பிரகாரமான காரியங்களும் அவரை வெளியே தள்ளிவிட்டன. அவர் அங்கு இல்லாததை அவர்கள் உணரவில்லை. மேலும் சபையானது ...

259. அவரை திரும்பி அழைத்துக் கொள்வதற்காக நாம் என்ன செய்யப் போகிறோம்? இப்பொழுது அவர் பெந்தெகொஸ்தே சபையைவிட்டும்

வெளியே இருப்பாரானால் அவரை மீண்டும் உள்ளேகொண்டு வருவதற்காக நாம் என்ன செய்யப்போகிறோம் அவரை மீண்டும் உள்ளே கொண்டு வருவதற்காக, மக்களின் ஏகோபித்த கருத்துக் கணிப்பைப் பெறலாமா? புதிய போப், புதிய கார்டினல் ஆகியோரை தேர்ந்தெடுத்துவிட்டால், அவர் உள்ளே வந்துவிடுவாரா? அல்லது, புதியதொரு ஸ்தாபனமொன்று எழுப்பப்படுமென்றால் அது சரி செய்துவிடுமா? அது அக்காரியத்தை சாதிக்காது. அது ஒருக்காலும் அவரை மீண்டும் உள்ளே கொண்டு வராது. ஒரு புதிய ஸ்தாபனம் எழும்புவதால் அக்காரியம் நடக்காது. ஒரு புதிய … ஒரு-ஒரு-ஒரு புதிய கார்டினல் அதைச் சாதிக்க முடியாது. ஒரு புதிய மேய்ப்பர் வந்துவிட்டால், அதனால் எதுவும் நேர்ந்திடாது, நிறைய சம்பளம் கொடுக்கப்பட்ட ஒரு புதிய சுவிசேஷகனால் அதைச் சாதிக்க முடியாது. நீங்கள் நீங்களாகவே அதைச் செய்யாவிட்டால், உலகில் வேறு எதுவும் அதைச் செய்ய முடியாது. எவ்வாறு அவரை உள்ளே கொண்டு வருகிறோம்? ஒரு வாக்கெடுப்பினால் அல்ல. இல்லை ஐயா. இயேசுவை வாக் கெடுப்பின் மூலம் நாம் மீண்டும் உள்ளே கொண்டு வருவதில்லை. ஏனெனில் இயேசு அவ்விதமாக வரமாட்டார்.

260. இதற்குச் செவிகொடுங்கள். இதோ இங்கே அது இருக்கிறது. “ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு கதவைத் திறந்தால்'' இப்பொழுது, கதவு எது என்பதை நாம் அறிவோம். “ஒருவன் கதவைத் திறந்து என் சத்தத்தைக் கேட்டால்.''

261. “ஒரு சபையோ அல்லது ஒரு ஸ்தாபனமோ என் சத்தத்தை கேட்டால்'' என்பதாக அதுவல்ல. அப்படியில்லை, ஐயா. அவர் அவர்களோடு இடைப்படமாட்டார். அவர்கள் ஏற்கெனவே மரித்துப்போய்விட்டார்கள். அதை அவர் வெறுக்கிறார். அவர் அதை எப்பொழுதும் வெறுத்தேயிருக்கிறார். தான் அதை வெறுத்த தாக அவர் கூறினார். இன்றிரவிலும் அதை அவர் வெறுக்கத்தான் செய்கிறார்.

262. ஆனால் அவர், “எவனாவது என் சத்தத்தைக் கேட்டால்'' என்றே கூறுகிறார். “எந்தவொரு மெதோடிஸ்ட் மனிதனோ, எந்தவொரு பாப்டிஸ்ட் மனிதனோ, எந்தவொரு ப்ரெஸ்பிடேரியன் மனிதவனாவது, அல்லது எந்தவொரு கத்தோலிக்க மனிதனாவது, எந்தவொரு தேவ சபை மனிதனாவது, பெந்தெகொஸ்தே மனிதனாவது'' என்பதாக; ''ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன். அவனும் என்னோடே பண்ணுவான்'' அதுவே பெந்தெகொஸ்தே சபைக்கு உள்ள செய்தியாகும். பெந்தெகொஸ்தே ஸ்தாபனத்தை



181. அப்பொழுதுதான் பேதுரு அந்த குறிப்பிடத்தக்க வார்த்தை களை உரைத்தான்: ''ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே '' என்றான்.

182. தேவனுடைய வசனம் மட்டுமே நித்தியமாயிருக்கிறது. ஆகவே எங்காவது யாராவது "பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின்'' நாமத்தினால் ஞானஸ்நானம் பெறும்படி தேவன் செய்தாரென்று எனக்கு காண்பியுங்கள் பார்க்கலாம்.

183. மத்தேயு 28:19ஐ எடுத்துக்கொள்ளுங்கள். ''பிதா, குமாரன், பரிசுத்த ஆவி.'' அங்கே மத்தேயு கூறுகிறான், "நீங்கள் புறப் பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுங்கள்'' என்று, "பிதா, குமாரன், பரிசுத்த ஆவி'' என்பது ஒரு நாமம் என்று யாராவது எண்ணினால், அவர்களுடைய படிப்பில்தான் ஏதோ குளறுபடி இருக்கிறது என்று எடுத்துக்கொள்ளலாம். இதைக் கேட்டுக்கொண்டிருக்கிற பிஷப்புகளுக்கு, பிதா என்பது ஒரு நாமமல்ல, குமாரன் என்பது ஒரு நாமமல்ல, பரிசுத்த ஆவி யென்பதும் ஒரு நாமமல்ல என்று ஏழாம் வகுப்புவரை மட்டுமே படித்த மாணவன் ஒருவன் சொல்லவேண்டிய அளவுக்கு அவர்கள் நிலை இருக்கிறது. அவைகள் யாவும் (அதாவது பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்பவைகள்) வெறும் பட்டங்கள் மட்டுமே, அவைகளுக்கு ஒரு நாமம் உண்டு; அதுதான் இயேசு கிறிஸ்து வாகும்.

184. இவ்வாறு நான் கூறுவது கோபத்திலல்ல, அன்பினால் கூறப் படுகிறது. உலகம் பூராவிலும் உள்ள திரித்துவ சகோதரர்களால் அவர்கள் சபைகளில் பேசும்படி நான் அழைக்கப்பட்டதுண்டு; அவர்களிடத்தில் தேவதா மரியாதையோடும், அன்போடும் கிறிஸ்துவின் முழு சரீரத்தைப் பற்றியும் கருத்தில் கொண்டு இது கூறப்படுகிறது. நான் உங்கள் நடுவில் இருக்கையில் இதைக் குறித்து பேசியதேயில்லை. நீங்களே என்னை கேட்பீர்களென்றால், அப்பொழுது நான் உங்கள் ஆலயத்திற்கு வந்து அதைக் குறித்து உங்களோடு பேசுவேன். ஆனால் உங்கள் சபையார் இடத்தில் அதைப் பேசி விட்டால் அது அவர்களை பெரிதும் கலக்கிடுமே. நீங்கள்தான் உங்கள் மந்தையின் மேய்ப்பன், எனவே அது உங்களுடைய இடம். வெளிப்பாட்டை நீங்கள் உங்கள் மந்தைக்கு கொடுக்கவேண்டும். நான் ஊழியக்காரர்களிடம் பேசுகிறேன். நீங்கள் அதைப் புரிந்து கொள்ளாவிடில், வாருங்கள், நாம் உட்கார்ந்து சேர்ந்து விவாதிப்போம்.

நடந்துகொண்டிருக்கிறீர்கள், இந்த ஒலிநாடாவுக்கு அப்பால் இருக்கிற உங்களுக்கு இதைச் சொல்லுகிறேன். எது வெளிச்சம், எது அந்தகாரம் என்பதை அறிய நீங்கள் விரும் பினால், நாம் அதற்காக தேவனிடத்தில் கேட்கக் கடவோம். நான் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால் என்று கூறியதை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் என்னை அவருடைய ஊழியக்காரன் என்று விசுவாசிப் பீர்களானால் .... அது திருவசனத்தின்படி சரியாக இல்லாவிடில், என்னை சீர்படுத்துவது உங்களுடைய கடமையாகும், உ, ஊ, என்ன நடக்கிறது என்று பாருங்கள். திரித்துவ உபதேசம் தவறானதாகும்.

178. மூன்று தேவர்கள் உண்டு என்று நம்புகிற அநேக ஆயிரக் கணக்கான திரித்துவவாதிகள்கூட இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நம்புகிறேன். ஏனெனில், அவர்களுக்கு எந்த வித்தியாசமும் அதில் தெரியவில்லை. இச்செய்தியில் பின்னால் இதைப்பற்றி நாம் பார்க்கப்போகிறோம்.

179. ஒலிநாடாவை நிறுத்திவிட்டு நீங்கள் வீட்டைவிட்டு வெளியேறிவிடவேண்டாம். திரித்துவ சகோதரர்களே, இதற்கு செவிகொடுங்கள். சில நிமிட நேரம் அமைதியாக அமர்ந்தி ருங்கள். உங்களுக்கு நீங்களே கடமைப்பட்டிருக்கிறீர்கள். உங்களுடைய சபையாருக்கு நீங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள். பாருங்கள்? ஒலி நாடாக்களை பெறுவதை நிறுத்திவிடாதீர்கள். அதனோடு நிலைத்திருங்கள். திருவசனத்தைக் கொண்டு அது சரியாயிருக்கிறதா என்று அதை ஆராய்ந்து பாருங்கள். "எல்லா வற்றையும் சோதித்துப் பாருங்கள்'' என்று வேதவாக்கியம் கூறுகிறது.

180. இது புகழ்பெறாதது என்பதை நான் அறிவேன். இயேசுவும் அப்படியே புகழ்பெறவில்லை; செய்தியும் அப்படியே இருக்கிறது. எப்பொழுதும் அவ்வாறே இருந்து வந்திருக்கிறது. உங்கள் மத்தியில் உள்ள வியாதியஸ்தரையும், வாதிக்கப்பட்டவரையும் குணமாக்க நான் வருகிறபொழுது, நீங்கள் அதை மகத்தானது என்றும், பெரிய கூட்டங்களை சேர்க்கிறது என்றும், சபையை அது கட்டியெழுப்புகிறது என்றும் நீங்கள் எண்ணினீர்கள். இயேசுவும் கூட ஒருநாள் சத்தியத்தைப் பிரசங்கிக்க ஈடுபடுகிறவரையிலும், அப்படியே செய்தார். அவர் அவ்வாறு செய்தபொழுது, அவரோடு இருந்த எழுபது பேர்களுங்கூட அவரை விட்டு விலகிப் போனார்கள். அவர் மீதியாயிருந்த பன்னிரண்டு பேர்களிடமாய் திரும்பி, "நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ?'' என்று கேட்டார்.



எழுப்புதலுக்குட்படுத்த அவர் முயலவில்லை. ஆனால் பெந்தெகொஸ்தேயின் ஆசீர்வாதத்தை தனி மனிதரின் இருதயத்தில் மீண்டும் எழுப்புதலோடு உண்டாக்கவே அவர் முயலுகிறார். அது ஒன்றே வழியாக இருக்கிறது. "நான் அவனோடே போஜனம் பண்ணுவேன். அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்.''

263. அப்படியாயின், இந்தச் சபைக் காலத்திற்குரிய தூதன் .... செய்தி நமக்கு என்ன பாடத்தைப் போதிக்கிறது? ஆவியின் வளர்ச்சி உண்டானது என்றல்ல. இல்லை ஐயா. ஆவியின் நிறைவின் சரிவு, எப்பொழுதும் சரிவே நமக்கு ஏற்பட்டுள்ளது. செய்தி யாளன் ... ஒவ்வொரு சபைக்காலத்திற்குரிய தூதனும், அக்காலத்திற்குரிய செய்தியும், ஸ்தாபனமயமாக்கும் போதகத்தை கண்டனம் செய்தே வந்திருக்கிறது. ஒவ்வொரு சபைக்காலத்திற்குரிய செய்தியும் அவ்வாறே இருந்து வந்துள்ளது. ஆனால் சபை யானது தொடர்ச்சியாக சரிவு நிலையிலேயே இருந்து வந்துள்ளது. எனவே வார்த்தைக்கு அவர்கள் செவி கொடுக்கவேயில்லை. சபைக் குரிய செய்தியானது ஸ்தாபனத்தை மதித்ததாக இருக்கவில்லை. ஸ்தாபனமானது கலப்பின கிறிஸ்தவர்களைப் பிறப்பித்து, பெயரளவில் உள்ளவர்களாக மாத்திரம் அவர்கள் இருந்தார்கள். அவர் களுக்குத் தேவனைக்குறித்தோ, பரிசுத்த ஆவியைக் குறித்தோ தெரியாது. இன்றிரவில் இந்த மேடையில் நான் நின்றிருப்பது எவ்வளவு உண்மையோ, அந்த அளவு அவ்விஷயமும் உண்மையாயிருக்கிறது. மிகவும் அருமையான வெதுவெதுப்பான உறுப்பினர்கள். அவர்கள் அவருடைய வாயினின்று வாந்தி பண்ணிப் போடப்படுவதற்காக மாத்திரமே உள்ளனர்.

264. புறஜாதியார் ஒரு கிளையாயிருந்தனர். அவர்களை பவுல் எச்சரிக்கிறான். உங்களில் சிலர் நீங்கள் விரும்பினால் ரோமர் 11ம் அதிகாரம் 15ம் வசனம் முதல் 27ம் வசனம் முடிய எடுத்துக் கொண்டு யாவரும் குறித்துக் கொள்ளுங்கள். முடிக்கும் முன்னர், அவ்வசனங்களை உங்களுக்கு நான் மேற்கோள் காட்ட விரும்பு கிறேன். ஏனெனில் அது ஒரு... இப்பொழுது ரோமர் 11:15ல் இருந்து 27ம் வசனம் முடிய குறித்துக் கொள்ளுங்கள். நாம் இப்பொழுது சபைக்காலங்களைக் குறித்த செய்தியை முடித்துக் கொண்டிருக்கிற வேளையில் கவனமாகக் கேளுங்கள். பவுல் அவர்களுக்குக் கூறுகிறான். புறஜாதியாரோடு பவுல் அங்கே பேசுகிறான். '... தேவன் ...'' பவுல் கூறினான்.

'சுய ஒலிவக் கிளையை தேவன் அவிசுவாசத்தினிமித்தம் தப்பவிடாதிருந்தாரானால்''

265. அது சரிதானே? யூதர்கள் வெட்டப்பட்டதின் காரணம் என்ன? ஏனெனில் அவர்கள் பெந்தெகொஸ்தேயை புறக்கணித்தார்கள். அப்படித்தானே? பெந்தெகொஸ்தே நாளில் அவர்கள் பரிசுத்தாவியைக்குறித்து கேலி செய்து அதைத் தூஷித்தார்கள்.

266. இயேசு இங்கே இப்பூமியில் இருந்தபோது, அவர் கூறினார்... அவர்கள் அவரை 'பெயல்செபூல்'' என்றழைத்தனர். ''அவன் ஒரு பிசாசு'' என்றனர். ''குறி சொல்லுகிறவன்'' என்றழைத்தனர். இன்னும் என்னவெல்லாமோ சொல்லி அவரை அழைத்தனர்.

267. அவர், ''அதற்காக நான் உங்களை மன்னிப்பேன், ஆனால் பரிசுத்த ஆவியானவர் வரும்பொழுது, அவருக்கெதிராக பேசாதீர்கள், ஏனெனில் அதற்கெதிராக பேசும் தூஷணம் மன்னிக்கப்படமாட்டாது" என்று கூறினார்.

268. ''புறஜாதியாரிடத்தில் போக வேண்டாம்'' என்றும், "காணாமற்போன இஸ்ரவேலரிடத்திற்கே போங்கள்'' என்றும் இயேசு தம் சீஷர்களுக்கு கட்டளையிட்டதை நினைவுகூருங்கள். அப்படித்தானே அவர் கூறினார்.

269. அவர்கள் தங்களைத் தாங்களே எவ்வாறு ஆக்கினைக் குள்ளாக் கிக்கொண்டார்கள்? பரிசுத்த ஆவியை தூஷித்ததினாலும், தேவனுடைய ஆவியை ''அசுத்தமான ஒன்று'' என்று அழைத்ததினாலும் தான். பெந்தெகொஸ்தே நாளில், அவர்கள் ஆவியில் நடனமாடிய போது, ஆவியானவரை அவர்கள் கேலி பரிகாசம் செய்தார்கள். அதைக் குறித்து அந்நகரத்தார் பரிகசித்தார்கள். அதே நகரத்தாரை தீத்து அங்கே கொலை செய்தான். அவர்களது இரத்தம் வாசல் வாசல் வழியாக பாயந்தோடியது. அதே நூற்றாண்டில், அவர்கள் தங்கள் சொந்தப் பிள்ளைகளையே கொன்று தின்றார்கள். அப்படித்தான் நடந்தது. உலகிலுள்ள மகத்தான தேசங்களிலொன்று மிகவும் கீழ்த்தரமானதாக ஆக்கப்பட்டது. அவர்கள் பூமியின் நான்கு திசைகளிலும் சிதறடிக்கப்பட்டனர். ஏன் அவ்வாறு நடந்தது? அவிசுவாசத்தினிமித்தமே! இஸ்ரவேலராகிய அவர்களே சுய அடிமரம், அவர்கள் தான் சுய மரமாவார்கள்.

270. பவுல் அங்கே இவ்வாறு கூறவில்லையா? அவ்வசனத்தை யார் எடுத்திருக்கிறீர்கள்? பேட், எடுத்துக் கொண்டீர்களா எழுந்து நின்று,



ஆளுகைக்கு வந்தது. "திரித்துவம்'' என்ற வார்த்தை வேதாகமப் புத்தகம் முழுவதிலும் எங்குமே குறிப்பிடவில்லை. மூன்று தேவர்கள் என்ற கொள்கையைப் பொருத்தமட்டில் அது பாதாளத்திலிருந்து வந்ததாகும். ஒரேயொரு தேவன்தான் உண்டு. அதுதான் சரியானது ஆகும்.

175. 'அப்படியென்றால், இந்த திரித்துவக் கொள்கைக்காரர் களெல்லாம் பாதாளத்திற்குரியவர்கள் என்று விசுவாசிக்கிறீர்களா?'' என்று நீங்கள் கேட்கலாம். இல்லை, ஐயா அவர்களெல்லாம் கிறிஸ்தவர்கள் என்றுதான் நான் விசுவாசிக்கிறேன். ஆனால் வேளையானது நெருங்கி வந்து கொண்டிருக்கிறது, சகோதரனே! அவர்கள் உத்தமமாக இருந்தும் தவறானவர்களாயிருப்பார்கள்.

176. எந்த மனிதனானாலும் சரி, எந்த இடமானாலும் சரி, எந்த வேளையானாலும் சரி, இந்த விஷயத்தின் பேரில் பேச விரும்புகிறவர்கள் என்னிடம் வரலாம். எந்த ஊழியக்காரரானாலும், பேராயரானாலும், பிரதான பேராயரானாலும் நீங்கள் யாராயிருந் தாலும் சரி. இச்செய்தி ஒலிநாடாவில் பதிவு செய்யப்படுகிறது, இது உலகம் முழுவதிலும் செல்லும். உலகம் பூராவிலும் செல்லும் இந்த ஒலிநாடாவிலுள்ள எனது செய்தியைக் கேட்டு என்னிடத்தில் வரும் எந்த ஒரு நபரையும் நான் சகோதர அன்போடு கேட்கிறேன். என்னவெனில், திருவசனத்தில் எங்காவது, அல்லது நம்பத்தகுந்த எந்த வரலாற்றுப் புத்தகத்திலும் ஒரு பாராவிலாவது, கத்தோலிக்க சபை ஸ்தாபிக்கப்படுகிற வரையிலும் பிதாகுமாரன் பரிசுத்த ஆவி யின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றதாக எந்த ஒரு நபரைக் குறித்தாவது எனக்கு காண்பிக்கட்டும் பார்க்கலாம். அப்படி காண்பித்தால், நான் எனது உபதேசத்தையே மாற்றிக் கொள்வேன். ஒவ்வொரு நபரும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால்தான் ஞானஸ் நானப்படுத்தப்பட்டார்கள். என்னுடைய விலையேறப்பெற்ற சகோதரர்களே! இக்காரியங்களுக்கு உங்களது கண்கள் குருடாக்கப்பட்டுள்ளன. தேவன் உங்களுக்கு வெளிச்சத்தை கொடுக்கும்படி ஜெபிக்கிறேன்.

177. அதைக்குறித்து நிரூபிக்கும்படியான திருவசனம் உங்களிடம் இருந்தால், நீங்கள் எனக்கு அதைக் காண்பிக்கும்படி உங்களுக்காக நான் காத்திருப்பேன். அல்லது உங்களது கட்சியை நிரூபிப்பதற்காக நீங்கள் என்னை தொலைபேசியில் அழைப்பதற்காக கவனித்துக் கொண்டிருப்பேன். நீங்கள் இந்த விஷயத்தின் பேரில் எனக்கு சவால் விடுக்காவிடில், நீங்கள் வேண்டுமென்றே ஆவிக்குரிய அறியாமையில்

169. எனவே, வார்த்தையின்படி வராத எந்த பலிகளும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அப்படித்தானே? (ஓ, சகோதரனே, இதை நான் கூறவிரும்பவில்லை. இதைக்கூற எனக்கு விருப்ப மில்லை. இதைக் கூறுவதற்காக என்னை மன்னியுங்கள்) இக்காரணத் தினால்தான் வேதாகமத்தில் அப்போஸ்தலர் 19ம் அதிகாரம் இருந்துவருகிறது. "நீங்கள் விசுவாசிக்க ஆரம்பித்ததிலிருந்து இதுவரையிலும் பரிசுத்த ஆவியைப் பெற்றுள்ளீர்களா?'' என்று அதில் கேட்கப்பட்டுள்ளது.

அதற்கு அவர்கள், 'அப்படி ஒன்று உண்டென்றே நாங்கள் கேள்விப்படவில்லை'' என்று பதிலளித்தார்கள்.

170. 'அப்படியென்றால் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள்? நீங்கள் ஏன் இதற்குள் வரவில்லை?'' என்று கேட்கப்பட்டது.

171. வார்த்தையின் வழியாக அல்லாமல் வேறு வழியாக அவர்கள் வந்துவிட்டனர். "ஓ, நாங்கள் மரபு முறையின்படி அதன் வழியாக வந்தோம். நாங்கள் யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோம்'' என்றார்கள்.

172. அவன் அதற்கு, "அது இப்பொழுது பலனளிக்காது, யோவான் மனந்திரும்புதலுக்காக ஞானஸ்நானம் கொடுத்தான், பாவ மன்னிப்புக்கென்று கொடுக்கவில்லை' என்று பதிலளித்தான்.

173. இதை அவர்கள் கேட்ட பொழுது, அவர்கள் மறுபடியும் ஞானஸ்நானம் பெற்றார்கள். ஏன்? 'திருவசனத்தைக்கொண்டு "திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் கழுவப்படுவதற்காக'' திருவசனமானது, "இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால்'' என்று கூறியுள்ளது. அதனோடு வேறு எதையாவது இணைக்கப் பார்க்கிற எதுவும் பொய்யாய் இருக்கிறது.

174. இப்பொழுது எனது விலையேறப்பெற்ற சகோதரனே, இது பதிவு செய்யப்படுகிறது என்று நான் அறிவேன். இப்பொழுது நீங்கள் உணர்ச்சி வசப்படவேண்டாம். தெய்வீக அன்போடு நான் கூறட்டும்; இந்தக் காரியங்களின் பேரில் இனிமேலும் நான் அமைதியாயிருக்கக்கூடாத வேளையானது வந்துவிட்டது, வருகைக்கு மிக அருகில் இருக்கிறோம். பார்த்தீர்களா? "திரித்துவக் கொள்கை பிசாசினுடையது'' என்பதை நான் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால் என்பதாகக் கூறுவேன். அது எங்கிருந்து வந்தது என்பதைக் கவனியுங்கள். நிசாயா ஆலோசனை சங்கத்தில் தான் ஆரம்பித்தது, அப்பொழுதுதான், அங்கே கத்தோலிக்க சபை யானது



15ம் வசனம் முதல் 27 வசனம் முடிய வாசியுங்கள். (சகோதரன் பேட் அவர்கள் பின்வரும் வேத வாக்கியங்களை படிக்கிறார் - ஆசி).

அவர்களை தள்ளிவிடுதல் உலகத்தை ஒப்புரவாக்குதலாயிருக்க, அவர்களை அங்கீகரித்துக்கொள்ளுதல் என்னமாயிராது; மரித்தோரிலிருந்த ஜீவன் உண்டானது போலிருக்கமல்லவோ?

மேலும் முதற்பலனாகிய மாவானது பரிசுத்தமாயிருந்தால், பிசைந்த மா முழுவதும் பரிசுத்தமாயிருக்கும்; வேரானது பரிசுத்தமா யிருந்தால் கிளைகளும் பரிசுத்தமாயிருக்கும்.

சில கிளைகள் முறித்துப்போடப்பட்டிருக்க, காட்டொலிவ மரமாகிய நீ அவைகள் இருந்த இடத்தில் ஒட்ட வைக்கப்பட்டு, ஒலிவமரத்தின் வேருக்கும் சாரத்துக்கும் உடன் பங்காளியாயிருந்தாயானால்,

நீ அந்த கிளைகளுக்கு விரோதமாய்ப் பெருமை பாராட்டாதே; பெருமை பாராட்டுவாயானால், நீ வேரைச் சுமக்காமல் வேர் உன்னைச் சுமக்கிறதென்று நினைத்துக்கொள்.

நான் ஒட்டவைக்கப்படுவதற்கு அந்தக் கிளைகள் முறித்துப் போடப்பட்டதென்று சொல்லுகிறாயே.

நல்லது அவிசுவாசத்தினாலே அவைகள் முறித்துப் போடப் பட்டன.

ரோமர் 11:15-20

271. கவனியுங்கள். ''அவிசுவாசம்' நல்லது, தொடர்ந்து படியுங் கள். (சகோதரனே பேட் அவர்கள் பின்வரும் வேத வாக்கியங்களை தொடர்ந்து படிக்கிறார் - ஆசி).

....நீ விசுவாசத்தினாலே நிற்கிறாய், மேட்டிமைச் சிந்தையாயிராமல் பயந்திரு, சுபாவக் கிளைகளைத் தேவன் தப்பவிடாதிருக்க, உன்னையும் தப்பவிட மாட்டார் என்று எச்சரிக்கையாயிரு.

ஆகையால், தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்; விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும், உன்னிடத் திலே தயவையும் காண்பித்தார்; அந்தத் தயவிலே நிலைத்திருப் பாயானால் உனக்குத் தயவு கிடைக்கும்; நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டு போவாய்.

அன்றியும், அவர்கள் அவிசுவாசத்திலே நிலைத்திராதிருந்தால் அவர்களும் ஒட்டவைக்கப்படுவார்கள்; அவர்களை மறுபடியும் ஒட்ட வைக்கிறதற்குத் தேவன் வல்லவரா யிருக்கிறாரே.

சுபாவத்தின்படி காட்டொலிவ மரத்திலிருந்து நீ வெட்டப்பட்டு, சுபாவத்திற்கு விரோதமாய் நல்ல ஒலிவ மரத்திலே ஒட்டவைக்கப்பட்டிருந்தால், சுபாவக் கிளைகளாகிய அவர்கள் தங்கள் சுய ஒலிவ மரத்திலே ஒட்ட வைக்கப்படுவது அதிக நிச்சயமல்லவா?

மேலும், சகோதரரே, நீங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு ஒரு இரகசியத்தை நீங்கள் அறிய வேண்டுமென்றிருக்கிறேன்; அதென்னவெனில், புறஜாதி யாருடைய நிறைவு உண்டாகும் வரைக்கும் இஸ்ரவேலரில் ஒரு பங்குக்கு கடினமான மனதுண்டாயிருக்கும்.

இந்தப் பிரகாரம் இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப் படுவார்கள். மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து அவபக்தியை யாக்கோபை விட்டு விலக்குவார் என்றும்;

நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை என்றும் எழுதியிருக்கிறது.

ரோமர் 11:20-27

272. அதை அறிந்து கொண்டீர்களா?'' இஸ்ரவேலர் இங்கு வந்து, பரிசுத்த ஆவியினால் நடைபெற்றும் அடையாளங்களைப் பார்த்த பிறகு வெட்டப்பட்டால்...'' என்று பவுல் கூறினான். அவர்கள் பவுலுடைய செய்தியை நிராகரித்தபடியினால், இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறுதல், மனந்திரும்பி, இயேசு வின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறுதல், விசுவாசிக்கிறவனைத் தொடரும் அடையாளங்கள் அற்புதங்கள் போன்றவை) அவ்வாறு ஆகியது என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவர்கள் அதை புறக்கணித்தனர். அவர்கள் கூறினர்.

".... இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம்"

அப்.13:46.

273. அது சரிதானே? அவர்கள் முதலில் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டது எபேசுவிலே அல்ல, அந்தியோகியாவிலே இவ்வாறு நடந்தது என்று நான் நினைக்கிறேன். அதைப் பார்ப்போம்.

274. முதல் மரமானது பரிசுத்தமாயிருந்தால், அதன் கிளைகளும் பரிசுத்தமாக இருக்கும் சுய ஒலிவ மரமாகும் அது. பவுல் பிரசங்கித்த பெந்தெகொஸ்தேயின் செய்தியை அவர்கள் அவிசுவாசித்த படியினாலே, (அப்படித்தானே?) தேவன் அவர்களை வெட்டி எறிந்து



"...கர்த்தருக்கு...

கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்.

ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும்.

புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, (மனைவியை அசட்டை செய்யாதீர்கள், அப்படிச் செய்தால் நீங்கள் கணவனாயிருப்பதற்கு தகுதியில்லை).

எபே. 5:23-25

167. கவனியுங்கள், இதோ இங்கே இது வருகிறது, அதை எடுத்துக்கொள்ளுங்கள்.

தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும்.... ('தாம் அதை'' என்று சகோ. பிரன்ஹாம் கூற சபையார் "திருவசனத் தைக் கொண்டு " என்ற வார்த்தையைக் கூறுகிறார்கள் - ஆசி.).

எபே. 5:26

168. ஆகவே, தொழுதுகொள்ளும்படியாக வருகிற ஒவ்வொரு வரும் இவ்விடத்திற்கு தொடர்பு கொள்ள வருகையில், அதற்கு முன்பாக முதலில் வார்த்தையின் வழியாகத்தான் வரவேண்டும். அநேகர் வேறு வழியாக வருகிறார்கள். சிறுகதைகளை உதாரணமாக கூறுவதைப் பற்றி நானும் நம்புகிறேன். ''தாயார் அநேக ஆண்டு களுக்கு முன்பாக மரித்துவிட்டார்களென்றும், அவர்கள் உங்களுக் காக பரலோகத்தில் காத்துக்கொண்டிருக்கிறார்கள்'' என்று ஒரு கதை உண்டு. வார்த்தை பயன்படுத்தப்பட்ட பிறகு இந்த விஷயம் வரலாம். அநேகர் பீடத்தண்டையில் வருகிறார்கள்; ஏனெனில் பரலோகத்திலுள்ள தங்கள் தாயாரை சந்திக்க அவர்கள் விரும்புகிறார்கள். அதெல்லாம் சரிதான், நீங்கள் அதைச் செய்ய வேண்டி யதுதான். ஆனால் பீடத்தண்டையில் நீங்கள் வருவதன் காரணம் அதுவல்ல. வசனத்தின்படி, கிறிஸ்து உங்களுக்குப் பதிலாக மரித்தபடியினால், நீங்கள் உங்கள் பாவங்களை அறிக்கையிடும்படி பீடத்தண்டையில் வருகிறீர்கள்.

"தாம் அதை சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறதற்கும்…'' (அவர் இங்கே சபையைக் குறித்துப் பேசுகிறார்).

163. நாம் இந்த வசனத்திற்கு இன்னும் சற்று பின்னால் போவோம். 21ம் வசனத்தை எடுத்துக்கொள்வாம்.

''தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்."

எபே. 5:21

164. 'உங்களை சமர்ப்பியுங்கள்'' (தமிழ் வேதாகமத்தில் "கீழ்ப்படியுங்கள்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் உள்ளதின்படி ''ஒப்புக்கொடுங்கள்'' அல்லது "சமர்ப்பியுங்கள்'' என்றும் கூறலாம் - மொழிபெயர்ப்பாளர்). சபையோரே நீங்கள் உங்களை உங்களது மேய்ப்பனுக்கு (பாஸ்ட்டர் - Pastor என்பதற்கு மேய்ப்பன் என்றே பொருள் - மொழிபெயர்ப்பாளர்) - ஒப்புக்கொடுங்கள். மேய்ப்பனே (Pastor), நீர் உம்மை உமது சபையோருக்கு ஒப்புக்கொடுங்கள். சபையில் சிறியதொரு கோஷ்டி உருவானால், எந்த ஒரு பட்சத்திலும் சாயாமல் இருந்து முழுச் சபைக்கும் உம்மை ஒப்புக்கொடும். சபையோரே, நீங்கள் ஒரு கோஷ்டியை உருவாக்க நேர்ந்தால், அப்பொழுது, நீங்கள் தேவனுடைய பயத்தோடு உங்களது மேய்ப்பனுக்கு உங்களை சமர்ப்பியுங்கள். பார்த்தீர்களா? ஓ, சகோதரனே! °!

"மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள்.”

எபே. 5:22

165. பெண்டிரே! நீங்கள் எத்தனை பேர்கள் இதை அறிவீர்கள்? அது மிகவும் சரியாயிருக்கிறது. வேதாகமம் ஆதியிலேயே இவ்வாறு கூறியுள்ளது. இதுவரையிலும் அவ்வாறே இருந்து வருகிறது.

மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்.'' (அவ்விதமாகவே கணவனும் இருக்கிறான்).

166. விவாகம் ஆனவர்களே, வயது வந்தோரே, வாழவேண்டிய விதத்தை அறிந்துகொள்வதற்குரிய பிராயத்தை அடைந்துள்ள பிள்ளைகளே, நீங்கள் இந்த விஷயத்தை நிச்சயம் அறிந்து கொள்ளவேண்டும்.



விட்டு, புறுஜாதியாராகிய காட்டொலிவக் கிளைகளாகிய நம்மை வெட்டி, சுய ஒலிவ மரத்தில் ஒட்டவைத்து, அதின் வேரிலுள்ள சாரத்திலும் பங்கெடுத்துக்கொண்டு, அதினால் நாம் ஜீவிக்கத்தக்கதாக இயன்றது.

275. இப்பொழுது, சபைக்காலங்களினூடே கடந்து வந்துள்ள இந்தப் பெந்தெகொஸ்தேயின் செய்தியை இந்நாளில் நாம் நிரா கரித்தால், அது எவ்வளவு அதிகமாயிருக்கும்? அன்றைக்கு செய்ததை போல், ஒட்டவைக்கப்பட்ட இந்த காட்டொலிவக் கிளைகளை எவ்வளவு அதிகமாய் அவர் வெட்டிவிட்டு, அந்த மற்ற சுய ஒலிவக் கிளையை மீண்டும் ஒட்ட வைக்கிறதற்கு வல்லவராயிருக்கிறாரல்லவா? அவிசுவாசத்தினால் அவன் அதை புறக் கணித்தான். இன்று காலையிலுள்ள பாடத்தோடு இதை சரியாகப் பொருத்திப் பாருங்கள். இப்பொழுது நாம் எங்கே நின்று கொண்டிருக்கிறோம் என்பதை நீங்கள் அறிவீர்களல்லவா? நாம் தாமே புறஜாதி சபையானது எடுத்துக்கொள்ளப்படுவதற்காக உள்ள கடைசி காலத்தில் இருந்து கொண்டிருக்கிறோம். பரிசுத்த ஆவியானவர் யூதர்கள் மேல் வந்து இறங்குவதும், இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்கள் முத்திரையிடப்படுதலும் நிகழப் போகிற கட்டம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இஸ்ரவேலராகிய சுய ஒலிவக்கிளைக்கு மீண்டும் ஆசீர்வாதத்தை கொண்டு வருதல் நடக்கப்போகிறது.

276. இயேசுவானவர் எப்பொழுதுமே உங்களுடைய வாசலில் நின்றிருந்து கதவைத் தட்டிக் கொண்டிருக்கப் போவதில்லை. அவர் போதும் என்று அளவுக்கு தட்டிக் கொண்டிருக்கப்போவதில்லை அவர் போதும் என்ற அளவுக்கு தட்டி முடித்துவிட்டு திரும்பிப் போய்விடும் நேரம் ஒன்று வரும். அப்பொழுது நீங்கள் அவரு டைய கதவைத் தட்டுவீர்கள், ஆனால் நீங்கள் ஒரு போதும் அவரை கண்டு கொள்ளவே முடியாது. வருவதற்கான நேரம் இருக்கையில் வந்து விடுங்கள். பெந்தெகொஸ்தே நாளில் அவர்கள் பெற்றுக் கொண்டதுபோல், அதே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்திற்குக் குறைவாக எதையும் பெற்றுக்கொள்ள எதனோடும் ஒப்புரவாக வேண்டாம். அதே விதமாக தண்ணீர் ஞானஸ்நானம், அன்றைக்கு அவர்கள் செய்த அதே காரியம், இதை தவிர வேறு எதையும் பெற விரும்பாதீர்கள். அதைத் தவிர வேறு எதையும் உங்கள் உள்ளத்தில் நீங்கள் ஏற்றக்கொள்ள வேண்டாம்.

277. இப்பொழுது, எனது கத்தோலிக்க நண்பர்களே, உங்களுக்கு நான் ஒன்றைக் கூறட்டும். நீங்கள் கன்னி மரியாளிடத்தில் விசுவாசங் கொண்டுள்ளீர்கள். கன்னி மரியாள் இயேசுவின் தாயானாலும்,

அவளும் பெந்தெகொஸ்தே அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியதிருந்தது அதைப்பெற்றுக்கொண்ட போது, அவளும் ஒரு குடித்தவளைப்போல் நடந்துகொண்டாள். அவளும் அந்த நூற்றிருபது பேரோடு இருந்து, பரிசுத்தாவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டு, அந்நிய பாஷைகளில் பேசி, தேவனுடைய ஆவியினால் நிரம்பியிருந்த பொழுது, குடித்த ஒரு பெண்மணியைப் போல் நடந்து கொண்டாள். கன்னி மரியாள் மகிமைக்குள் போவதற்காக அதை நிறைவேற்ற வேண்டியிருந்த பொழுது, அதற்குக் குறைவான தொன்றை நீங்கள் எவ்வாறு பெற்றுக் கொள்ளப்போகிறீர்கள்? அதைப் பற்றி எண்ணிப் பாருங்கள். அது தான் சரி.

278. இங்கே பின்னால் அமர்ந்திருக்கிற பாப்டிஸ்ட் பிரசங்கியார் பாப்டிஸ்டுகளுக்கும் அதே காரியம் தான் கூறப்படுகிறதோ என்று நிச்சயமாக அறிய விரும்புகிறார். யாராயிருந்தாலும் சரி, யாவருக்கும் அதே தான் வேண்டும்.

279. எனவே, வெறுமனே ஒரு சபையில் சேர்ந்து கொண்டு, சமயக்கோட்பாட்டை ஒப்பித்துவிட்டு, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை காலையிலும் தவறாது ஆலயத்திற்கு செல்வது என்ற காரியங்கள் ஒரு நன்மையும் விளைவிக்காது. அதன் பலனாக நீங்கள் தேவனை பரிகசிக்கிறதாகத் தான் ஆகும். ஒன்று ஒரு உண்மையான கிறிஸ்தவனாக இருங்கள், அல்லது நீங்கள் முற்றிலும் ஒன்றுமற்ற நிலையில் இருந்துவிடுங்கள். ஒன்று நீங்கள் அனலாயிருங்கள், அல்லது குளிராயாவது இருங்கள் கறுப்பு- வெள்ளை பறவையை நீங்கள் காண முடியாது. குடிகாரனாயும், குடிக்காதவனாயும் உள்ள ஒருவனை நீங்கள் காணமுடியாது. பாவியாயும் பரிசுத்தவானாயும் இருக்கும் ஒரு மனிதனையும் நீங்கள் காண முடியாது. அப்படிப் பட்டவைகளை நீங்கள் உண்டாக்க முடியாது. ஒன்று நீங்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவன் உங்களில் வாசம் பண்ணுதலை உடையவராயிருங்கள், அல்லது அது அற்றவராயிருங்கள். இருந்தால் இப்படிப்பட்ட நிலையில் இருங்கள், அல்லது மற்றும் அற்றுப்போன நிலையில் இருங்கள்.

280. எனவே, இயேசு உங்களில் வாசலில் நிற்கிறார் என்பதையும், இந்நாட்களில் அவர் என்ன செய்யப் போகிறார் என்பதைப் பற்றிய தேவனுடைய வாக்குத்தத்தையும் நினைவு கூருங்கள். எதனால் அப்படியாயிற்று? புறக்கணித்தபடியினால், சுய ஒலிவக்கிளையாகிய இஸ்ரவேலர் வெட்டப்படுவதற்கு காரணம் என்ன? ஏனெனில், அவர்கள்



வெண்கலக் கடல் என்று அழைக்கப்பட்டது என்பதைப் பாருங்கள்; அது ஒன்றும் மிகவும் பெரிதான ஒன்றல்ல. அது ஆலயத்தில் அதற்குரிய இடத்தில் அமைக்கப்பட்டிருந்தது. இவ்விதமாக கண்ணாடிக் கடலானது வைக்கப்பட்டிருந்தது. அது வெண்கலத்தால் செய்யப்பட்ட ஒரு தொட்டியாகும்; அங்கேதான் அவர்கள் பலியைக் கழுவினார்கள். பலிகள் சுட்டெரிக்கப்படு வதற்கு முன்பாகவோ அல்லது அது ஏற்றுக்கொள்ளப்படும் முன்னரோ அது கழுவப்படவேண்டும்.

160. ஓ இப்பொழுதே அந்த விஷயம் ஒரு பிரசங்கத்தை அமைத்துத்தரவில்லையா? ஓ "கழுவப்படல்' என்ற விஷயம் என் கவனத்தைத் தொட்டது. தேவனிடத்தில் எந்த ஒரு பலியும் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு முன்பாக, அது முதலாவதாக கழுவப் படவேண்டும். எப்படி? உணர்ச்சிவசப்பட்டு அல்ல, ஆனால் வார்த்தையால் கழுவப்படவேண்டும். நான் சிவப்பான கிடாரியைப் பற்றியும், வேறுபடுதலின் தண்ணீர்களைப் பற்றியும்; தண்ணீர்கள் வைக்கப்பட்டிருந்தது, வேறு பிரிந்து வருவதற்காக இருக்கிறது என்பதைப் பற்றியும் பிரசங்கித்தபோது, அந்த யூத போதகர் அங்கே இருந்தார். அதை நாம் நினைவுபடுத்திக் கொள்ள முடியும். தேவனிடத்தில் நாம் உண்மையான விசுவாசத்தோடு வருவதற்கு முன்பாக, நாம் முதலில் வேறுபிரிதலின் தண்ணீர்கள் அண்டையில் வரவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆம், ஐயா, அவ்வாறுதான் செய்ய வேண்டும். எதன் வழியாக நீங்கள் வரவேண்டும்?

161. நீங்கள் இதை சரியாக புரிந்துகொள்ளத்தக்கதாக, இதைக் குறித்து உங்களுக்கு இன்னும் இதன்பேரில் பேசமுடியுமா என்று பார்க்கிறேன். இப்பொழுது ஆவிக்குரிய சிந்தையைத் தரித்துக் கொள்ளுங்கள். உங்களுடைய ஆடம்பரமான அறிவுசார்ந்த சிந்தையை அகற்றிவிட்டு, ஆவிக்குரிய சிந்தையைத் தரித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் இப்பொழுது ஒரு விஷயம் வருகிறது. "பலிபீடத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் முன்னர் முதலாவதாக அது வேறுபிரிதலின் தண்ணீர்களால் கழுவப்பட்டாக வேண்டும்'' என்கிற விஷயம்.

162. இப்பொழுது என்னோடு சேர்ந்து வேகமாக எபேசியர் கம் அதிகாரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். இப்பொழுது பார்த்துக் கொண்டிருக்கிற பகுதியை விடாமல் வைத்துக் கொண்டு, கொஞ்சம் சில பக்கங்கள் பின்னால் போய் எபேசியர் 5ம் அதிகாரம் 26ம் வசனத்தை எடுத்துக்கொள்ளுங்கள்.

வெளி. 4:6

156. ஓ, என்னே! அந்த ஜீவன்கள் கண்களால் நிறைந்திருந்ததைப் பாருங்கள்; முன்னும் பின்னும் கண்களால் நிறைந்திருந்தன. இப்பொழுது பொறுங்கள்!

அந்தச் சிங்காசனத்திற்கு முன்பாக பளிங்குக்கொப்பான கண்ணாடிக்கடலிருந்தது. அந்தச் சிங்காசனத்தின் மத்தியிலும் அந்தச் சிங்காசனத்தைச் சுற்றிலும் நான்கு ஜீவன்களிருந்தன. அவைகள் முன்புறத்திலும் பின்புறத்திலும் கண்களால் நிறைந்திருந்தன.

157. இப்பொழுது கண்ணாடிக் கடல்" என்பதைப் பார்ப்போம். இங்கே... இது... ஒரு பெரிய அளவுக்கு அடையாளச் சின்னமாகத் திகழவில்லை, ஆனால் ஒரு நிமிடம் இதை கற்பலகையிலிருந்து அழித்துவிடுகிறேன். இதைப்பற்றி சிறிதளவு படிப்போம். பழைய ஏற்பாட்டு ஆலயத்தில் கண்ணாடிக்கடல் அடையாளச் சின்னமாகக் கொடுக்கப்பட்டிருந்தது. மோசே பரலோகத்தில் தான் பார்த்ததைப் போலவே பூமியிலும் ஆலயத்தைக் கட்டும்படியாக தேவனால் கட்டளையிடப்பட்டதால், கண்ணாடிக்கடலும் இடம் பெற்றது. யாவரும் அதை அறிவோம்.

158. இங்கு நான் சற்று வரைந்து காட்டுகிறேன் - இதோ இங்கே உடன்படிக்கைப் பெட்டி இருந்தது, பழைய ஏற்பாட்டுக் காலத்தில். அடுத்ததாக, அந்த இடம் "மகா பரிசுத்த ஸ்தலம்'' என்று அழைக்கப்பட்டது. இதோ இங்கே பலிபீடமானது இருந்தது. அது பரிசுத்த ஸ்தலம் என அழைக்கப்பட்டது. பலிபீடத்திற்கருகில் "வெண்கல கடல்'' என்பது இருந்தது. அதாவது, பலிகளை வெண்கல பலிபீடத்தில் படைக்கப்படும் முன்னர் இந்த இடத்தில் தான் கழுவப்பட்டது. வெண்கல பலிபீடத்தில்தான் பலியானது எரிக்கப்பட்டது.

159. கண்ணாடிக்கடல் எங்கே இருந்தது என்பதைப் பார்க்க நாம் விரும்புகிறோம். இந்த கண்ணாடிக்கடல் சிங்காசனத்திற்கு முன்பாக, பரிசுத்த ஸ்தலத்திற்கு முன்பாக இருந்தது. இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள்; இந்த இடத்தில்தான் ஏழு பொன் குத்துவிளக்குகள் இவ்விதமாக வைக்கப்பட்டிருந்தன; அந்த இடத்தில்தான் ஒரு தொட்டியும் வருகிறது. பாருங்கள்? அக்குத்து விளக்குகள்தான் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து உள்ள ஒளியை இங்கு பிரதிபலிக்கிறதாக இருக்கிறது. நீங்கள் விரும்பினால் ஒழிய இதை நீங்கள் எழுதிக்கொள்ளத்தேவையில்லை. உங்களுக்கு கூற வேண்டிய ஒரு விஷயத்தை நான் இங்கே வரைந்திருக்கிறேன். ஆனால் இது



பவுலுடைய பெந்தெகொஸ்தே செய்தியை புறக்கணித்தார்கள். இது கடைசி சபைக் காலம் என்பதை விசுவாசிக்கிறீர்களா? வேதம் அவ்வாறு கூறியது. அவர்களுக்கு என்ன சம்பவிக்கப்போகிறது என்று நினைக்கிறீர்கள்? அவர்கள் பெந்தெகொஸ்தே செய்தியை புறக்கணித்துவிட்டபடியினால், இவர்களும் வெட்டப்படுவார்கள், அதன் பிறகு தேவன் மீண்டும் யூதர்களிடம் திரும்புவார்.

281. அப்பொழுது இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். ஏனெனில் அவர் அவர்களை ஒரு தேசமாக எடுத்துக் கொள் வார். தனிப்பட்ட நபர்களாக அல்ல. ஆனால் நீங்களும் நானுமோ, தனித்தனி நபர்களாகத்தான் நம்மை அவர் தெரிந்து கொள்கிறார். ஏனெனில் அவர் யூதர்களிடம் வருவது... அப்போஸ்தலர் நடபடிகளின் புத்தகத்தில், அவர்கள் புறஜாதிகளிடத்தில் வந்தது, ''புறஜாதிகளினின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தை தெரிந்து கொள்ளும்படி'' யாகத்தான். அது அவருடைய மணவாட்டியாகும். ''ஒரு ஜனம், இங்கொன்றும், அங்கொன்றும், இங்கொன்றும், அங்கொன்றும் ஆக அவர் நம்மிடம் தனிப்பட்ட நபர்களாகத்தான் இடைபடுகிறார். இனம் ஜாதி, நிறம் என்று பாராமல் அவர் நம்மை தெரிந்து கொண்டார். அவர் நம்மோடு தனிப்பட்ட நபர்களாகத் தான் இடைபடுகிறார். அது அவருடைய மலர்ச்செண்டு, அதை அவர் தனது பீடத்தின் மேல் வைப்பார். ஆனால் யூதர்களைப் பொறுத்தமட்டிலோ, அவர் இஸ்ரவேலருடன் ஒரு தேசமாகத்தான் இடைபடுகிறார், அவர்கள் ஒரு ஜாதியான ஜனம் ஆவர், அவருடைய ஜாதி.

282. நமக்கு இந்த செய்தி கிடைத்திருக்கிறபடியினால், நான் இன்றிரவில் மகிழ்ச்சியாயிருக்கிறேன். நீங்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டபடியினால் நான் மகிழ்ச்சியாயிருக்கிறேன். நீங்கள் கலந்து கொண்டதை நான் மெச்சுகிறேன். என்னை அவர் இதைக் காண செய்தபடியினாலும், நான் இதை சபைக்கு அளிக்க இயலும்படி செய்தபடியினாலும், நான் சர்வவல்லமையுள்ள தேவனுக்கு நன்றியுள்ளவனாயிருக்கிறேன். இப்பொழுது அது என் இருதயத்தை விட்டு இறக்கி வைக்கப்பட்டுள்ளது. சில காலம் பரிசுத்த ஆவியானவர் என் இருதயத்தில் இதைக் குறித்து இடைப்பட்டார், என்னால் அதை அலட்சியம் செய்துவிட முடியவில்லை. நான் அதனோடு இணைந்து செல்ல வேண்டியதாகத் தான் இருந்தது.

இரு காரியங்கள் செய்யும்படி நான் நடத்தப்பட்டுள்ளேன்.

283. லூயிசியானாவிலுள்ள ஷ்ரீவ்போர்ட்டுக்கு சகோதரன் மூர் அவர்களுடன் ஒரு கூட்டத்திற்காக செல்ல வேண்டும். அநேக வாரங்கள் நான் ஏறத்தாழ கதறிவிட்டேன். ஏனெனில் நான் ஷ்ரீவ்போர்ட்டுக்கு போக விரும்பினேன். அங்கே அமர்ந்திருக்கிற என் மனைவி அதைப்பற்றி உங்களுக்கு கூற முடியும். ஏன்? ஷ்ரீவ் போர்ட்டில் இருந்த யாராவது இங்கிருந்தால், ஏன் என்பதை இப்பொழுது அறிய முடியும். அதைப் போல காரியத்தை அவர்கள் கேட்டிருக்கவோ, பார்த்திருக்கவோ இல்லை, எவ்விடத்திலுமிருந்து பிரசங்கிகளும், பாப்டிஸ்ட்டுகளும், இன்னும் பல வகையான மக்களும் வந்திருந்தனர். ஐஸ் பெட்டியின் மேல் கை வைத்த மனிதன் ஒருவன், அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் அவன் மேல் வந்திறங்கி, "ஷ்ரீவ்போர்ட்டுக்குப் போ, அங்கே நீ என்ன செய்ய வேண்டுமென்பது உனக்குக் கூறப்படும்'' என்று கூறினார். என்னுடைய பெயரையும் அவருக்குத் தெரியப்படுத்தி, எங்கே காணலாம் என்பதையும் கூறினார். ''அவன் உனக்கு நீ என்ன செய்யவேண்டுமென்பதை கூறுவான்'' என்று கூறினார்.

284. "படிகளுக்கு அடியில் தண்ணீர் தொட்டியானது ஆயத்தமாயுள்ளது, உனக்கு பரிசுத்த ஆவியின் அபிஷகமானது தேவையாயுள்ளது'' என்றேன் நான். அங்கே ...

285. எனவே அங்கே நடக்கப் போகிறவைகளைப் பற்றி முன்னுரைத்தல்களும், தீர்க்கதரிசனங்களும் மக்கள் பேசினார்கள், அவைகள் அங்கே நம்மத்தியில் அப்படியே நடைபெற்றன.

286. பிறகு, "நான் ஜெபர்சன்வில்லுக்கு சென்று இப்புத்தகத்தை எழுதிட வேண்டும், ஏனெனில் இங்கே இன்னும் எவ்வளவு காலம் நான் இருந்தாக வேண்டும் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் இம்மகத்தான செய்தியை நான் உரைத்திட்டால், அது புத்தக வடிவம் பெற்றுவிடும், நான் போய் விட்ட பிறகோ அவ் வார்த்தைகள் தொடர்ந்து ஜீவித்துக் கொண்டேயிருக்கும்'' என்று நான் கூறினேன். இது சம்மந்தமான வரலாற்றுக் குறிப்புக்களை எழுதிடச் செய்திட்டேன், அதுவும் புத்தகத்தில் இடம் பெறும். நான் இங்கே இச்செய்தியை சபைக்கு கொண்டு வருவதற்காக வந்தேன். ஏனெனில் பரிசுத்த ஆவியின் அசைவு இச்செய்தி யில் இருப்பதை கண்டுணர வேண்டுமே; நானும் கூட இதற்கு முன் இதைப்பற்றி அறியாதிருந்தேன். அது உண்மையாயிருக்கிறது. இதை கர்த்தருடைய நாமத்தில் உரைக்கிறேன். "நானுங்கூட அவைகளை அறியாதிருந்தேன்'' என்பது உண்மை யாயிருக்கிறது.



152. எனவே அது வேதாகமத்தின் ஆவிக்குரிய தன்மையைக் கொண்டதாக இருக்கட்டும். வேதாகமத்திலுள்ள ஆவிக்குரிய இயல்பைப்போல உலகில் பரிபூரணமானது வேறொன்றுமில்லை. ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் முடிய உங்களால் ஒரு பிழைகூட அதில் கண்டுபிடிக்கமுடியாது. அதன் ஆவிக்குரிய தன்மையில் பிழையேதுமில்லை. வேறுவகையான இலக்கியத்தில் மூன்று வசனங்கள் வாசிப்பதற்குள்ளாகவே, உங்களால் பிழை கண்டுபிடிக்காமல் இருக்கமுடியாது. ஆனால் வேதாகமத்தில் அப்படியல்ல.

153. கர்த்தருடைய ஜெபத்தோடு ஒரு சொற்றொடரை சேர்க்கவோ, அல்லது அதிலிருந்து ஒன்றை எடுத்துவிடவோகடந்த இருநூறு ஆண்டுக்காலத்திற்கு மேலாக முயன்றுகொண்டிருக் கின்றனர். ஆனால் அதுவோ பரிபூரணமாயிருக்கிறது. இனி எதையும் அதனோடு சேர்க்கவோ, அல்லது இனி எதையாவது அதினின்றும் அகற்றிவிடவோ முடியாது. அந்த ஜெபத்தை இன்னும் சற்று சிறப்பாக ஆக்கவேண்டும் என்று அவர்கள் எண்ணிக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் ஏதாவது ஒரு காரியத்தை அதற்குள் திணிக்கவோ, அல்லது வேறு ஒன்றை அதற்குள் சேர்க்கவோ, அல்லது குறிப்பிட்ட இன்ன வசனத்தை அதிலிருந்து அகற்றிவிடவோ முயலுவார்கள். ஆனால் அது சரியான காரியமல்ல. அது பரிபூரணமாயிருக்கிறது என்பதைப் பாருங்கள். தேவனுடைய எல்லா வழிகளும் பரிபூரணமாயிருக்கிறது.

154. எனவே நாம் பரிபூரணமில்லாதவர்களாயிருக்கிறோம். ஆனால் அவர் ''ஆகையால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்'' என்றார். நாம் எவ்வாறு பரிபூரணமாக முடியும்? விலையேறப்பெற்ற இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலேயே, அதனால் நாம் நம்மையே மறந்து, அப்படியே அவரில் ஜீவிக்கத்தக்கதாக செய்கிறது. அது எத்தனை விலையேறப் பெற்றதாயிருக்கிறது!

155. நல்லது, இப்பொழுது 6ம் வசனத்திற்குள் செல்வோம். "ஏழு தீபங்கள்''

அந்தச் சிங்காசனத்திற்கு முன்பாகப் பளிங்குக்கொப்பான கண்ணாடிக் கடலிருந்தது; அந்தச் சிங்காசனத்தின் மத்தியிலும் அந்தச் சிங்காசனத்தைச் சுற்றிலும் நான்கு ஜீவன்களிருந்தன; அவைகள் முன்புறத்திலும் பின்புறத்திலும் கண்களால் நிறைந்திருந்தன.

நோயால் மரித்துக்கொண்டிருக்கிறவள்'' என்று குறிப்பிடப்பட்டு இருந்தவள் அச்சகோதரி. அது பதினேழு ஆண்டுகளுக்கு முன்பாக. அச்சகோதரி 412 நாப்ளாக் அவென்யூவில் வசித்து வருகிறார்கள்; மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்து கொண்டிருக்கிறாள். ஓ ஓ ஆச்சரியமான கிருபை, அதன் சத்தம் எத்தனை இனிமை!

149. இங்கு லூயிவில்லில் வழக்குரைஞரான ஜிம் டாம் ராபர்ட்சன் என்பவர் இருக்கிறார். ஜிம் டாமை நாம் யாவரும் அறிவோம். அந்த நிகழ்ச்சிதான் அவரை இந்த செய்தியை விசுவாசிக்கும்படி கொண்டு வந்தது. அவர் அங்கே சென்றிருந்தார். அவருடைய தந்தையார் அம்மருத்துவமனையில் உள்ள பணியார்களுக்கெல்லாம் முதன்மையானவராக இருக்கிறார். அவர் அங்கு சென்று அச்சகோதரி புற்றுநோயால் மரித்துக் கொண்டிருக்கிறாள் என்பது உண்மைதானா என்பதை கண்டறிய அங்கு சென்றிருந்தார். அவள் கைவிடப்பட்டு வீட்டுக்கு அனுப்பிவிடப்பட்டிருந்தாள். அவர்கள் கருத்துப்படி ஏறக்குறைய அவள் ஏற்கனவே மரித்தவளாக கருதப்பட்டாள். அவருடைய தந்தையார் முழுவதும் அலசி ஆராய்ந்து பார்த்தார். அது உண்மையாயிருக்கிறது. ஜிம் டாம் கூறினார்: ''அது ஒரு பொய்; அவள் அங்கே இப்பொழுது நலமுடன் உட்கார்ந்து கொண்டிருக் கிறாள், நான் அவளிடம் உம்மை கொண்டுச் செல்லமுடியும்''.

150. ஓ ஓ - அவர் - அவர் உண்மையுள்ள தேவன் அல்லவா? அவர் நம்முடைய பிழைகளையெல்லாம் கண்ணிலெடுக்காது இருக்கிறார் என்பதைக் குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியுள்ளவனா யிருக்கிறேன். நீங்கள் அவ்வாறு மகிழவில்லையா? அது நம்மை அவரை முழு இருதயத்தோடும் நேசிக்கச் செய்கிறது.

151. சிங்காசனங்களும், மின்னல்களும்... என்ன? 'ஏழு தீபங் கள்'' அல்லது விளக்குகள், அல்லது ஏழு நட்சத்திரங்கள், அது "ஏழு ஆவிகள்'' என்றும் அழைக்கப்படுகின்றன. அதாவது, அதன் அர்த்தம் என்னவெனில், ஏழு சபைக்காலங்களில் ஜனங்களுக்காக ஏழு கிருபாசனங்களாயிருந்தும், பரிசுத்த ஆவியின் ஏழு தோற்றங்களுமாயிருப்பது என்பதுதான். அவைகள் இவ்வாறு உள்ளன; ஏழு கிருபாசனங்கள், ஏழு ஆசனங்கள், ஏழு சபைகள், ஏழு நட்சத்திரங்கள், ஏழு பிரத்தியட்சமாகுதல்கள், ஏழு ஆவிகள், ஏழு தீபங்கள், ஓ, தேவன் எவ்வளவாய் பரிபூரணராய் இருக்கிறார் ஒவ்வொரு...



287. நான் இப்பொழுது விடுதலை பெற்றதாக உணருகிறேன். இச்செய்தியை தேவன் தாமே நமக்குக் கொண்டு வந்திருக்கிறார் என்று நான் உணருகிறேன். நாம் சாலையின் முடிவுக்கு வந்து விட்டோம் என்ற நான் நம்புகிறேன். தேவன் பிரத்தியட்மாகுதல் நம் மத்தியில் உண்டாவதற்கான வேளையானது வந்து விட்டது என்று நான் விசுவாசிக்கிறேன். இன்னும் எவ்வளவு காலம் இருக்கும் என்பது எனக்குத் தெரியாது, ஆனால் சமயமானது நெருங்கிவிட்டது.

288. அந்த மகத்தான மனிதன் எழும்புவதற்காக நாம் எதிர் பார்த்துக் கொண்டு இருப்போம். என்னுடைய நாளிலேயே அவன் வரக்கூடும். அல்லது வெகு சீக்கிரத்திலேயே வரக்கூடும். நான் அறியேன். இப்பொழுது அவன் நம் மத்தியிலேயே கூட இருக்கக் கூடும். நம்மால் கூற இயலாது. அந்த வேளை வரையிலும் நம்மை நடத்தப் பரிசுத்த ஆவியானவர் இங்கே இருக்கிறார். அப்பொழுது இந்த வழிகாட்டி நம்மை வழி நடத்துவதற்கான பொறுப்பை எடுத்துக் கொள்ளும் போது, அவன் பரிசுத்த ஆவியால் அபிஷேகிக்கப்பட்டவனாகவே இருப்பான். வரப்போகிற அந்த மனிதன் நிச்சயமாக எலியாகவாகத் தான் இருப்பான். ஆனால் அவன் தானே வழி நடத்திச் செல்கிறவனாக இருந்து, பிள்ளைகளின் இருதயங்களை திருப்புவான், அல்லது பிள்ளைகளின் இருதயங்களை பிதாக்களின் செய்திக்கு திருப்புவான், அச்செய்தியானது, அவர் தம்முடைய ஆவியை பெந்தெகொஸ்தே நாளில் ஊற்றியபொழுது கொடுக்கப் பட்டதாகும்.

289. அச்செய்தியானது எவ்வாறு தொடர்ந்து வந்து கொண்டிருக் கிறது என்பதை நான் என்னால் முடிந்த வரை, வரலாற்றிலிருந்தும், வேதத்திலிருந்தும் கொண்டு வந்து காண்பித்து இருக்கிறேன். அது தானே சபைக்காலங்களின் வழியாக தொடர்ந்து வந்து, இன்றைக்கு அதுதான் இச்செய்தி என்பதை காண்பித்திருக்கிறேன். ஸ்தாபனங்கள் தேவனுக்கு முன்பாக சாபக்கேடாக இருக்கிறது என்பதையும் காண்பித்தேன். வேத பூர்வமாகவும், அப்போஸ் தலருடைய நடபடிகளின் வாயிலாகவும், வரலாற்றின் மூல மாகவும் உரைக்கப்பட்ட இச்செய்தியானது உங்கள் சிந்தையில் பதிந்திருக்கிறது என்று நான் நம்புகிறேன். அது....

290. தேவன் தம்முடைய சபையை மத ஸ்தாபனமாக ஆக்கிய ஒரு சந்தர்ப்பம் கூட இல்லை. ரோமன் கத்தோலிக்க பரம்பரை குருக்களாட்சி முறைதான், ஸ்தாபன சபைகளின் தாயாக இருக் கிறது. ஸ்தாபனங்கள் யாவற்றின் தாய் ரோமன் கத்தோலிக்க சபையேயாகும். எந்தவொரு ப்ராடெஸ்டெண்ட் குழுவிலும் எழுப்புதல்

எப்பொழுதாவது ஏற்பட்டால், அது உடனே தன் தாயிடமே திரும்பிச் சென்று, அதே காரியத்தையே செய்தது. அவள் ஒரு வேசி என்றும், அவளுக்கு குமாரத்திகள் உண்டு என்று வேதம் கூறுகிறது. அவர்கள் வேசிகள் என்று அழைக்கப்படுவதால், அவர்கள் பெண்களாகத் தான் இருக்கவேண்டும். அங்கே அவள் இருக்கிறாள். எனவே நாம் அமர்ந்து கொண்டிருக்கிறோம்...

291. ஆனால் அவரும் நமக்குக் கூறியிருக்கிறார்; "பயப்படாதே, சிறுமந்தையே, உங்களுக்கு இராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்''. எனவே நாம் யாவரும் அந்நாளில், மெதோடிஸ்ட்டுகளே, பாப்டிஸ்டுகளே, நீங்கள் யாராயிருந்தாலும் சரி, "ஒருவன் கதவைத் திறந்தால், நான் அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்.''

292. என் சகோதர சகோதரிகளே, நாம் தானே அந்நாளில் அந்த சிறு மந்தையாக எண்ணப்படுவோமாக. அவர் வந்து இப்பூமியை விட்டு எடுத்துக்கொள்வதற்கான அவ்வேளை வரையிலும், காத்திருக்கும் அந்த சிறு மந்தையில் அங்கம் வகிக்கிறவர்களாக நாம் இருப்போமாக. எடுத்துக்கொள்ளப்படுதலானது உலாகளா வியதாக இருக்குமே. "இரண்டுபேர் படுத்திருப்பார்கள், ஒருவரை நான் எடுத்துக்கொள்வேன், இரண்டு பேர்கள் வயலில் இருப் பார்கள். நான் ஒருவரை எடுத்துக்கொள்வேள்'' என அவர் கூறுகிறார். இது பூமியின் ஒரு பக்கத்தில் இரவாகவும், மறுபக்கத் தில் இது பகலாகவும் இருக்கும் என்பதைக் காட்டுகிறதல்லவா? "இரண்டு பேர் படுத்திருப்பார்கள், இரண்டு பேர் வயலிலிருப்பார்கள் அவர்களில் தலா ஒருவரைத் தான் நான் எடுத்துக் கொள்வேன்'' என்று கூறுகிறார்.

293. நான் இன்று காலையில் கூறியது போல், நீங்கள் சாலையில் உங்கள் தாயுடன் பேசிக்கொண்டு காரோட்டி சென்று கொண்டிருக் கக் கூடும். நீங்கள் சுற்றுமுற்றும் பார்க்கையில் உங்கள் தாய் போய் விட்டிருப்பார்கள். நீங்கள் மேசையில் உட்கார்ந்து, உங்கள் காபியையோ, அல்லது காலை உணவையோ அருந்திக்கொண்டு, புசித்துக் கொண்டு இருக்கக் கூடும். முதலாவது காரியம் என்ன வெனில், நீங்கள் சுற்றும் முற்றும் பார்க்கையில், அங்கே இனி உங்கள் தந்தையார் காணப்படமாட்டார். அவ்வாறு அது இருக்கும். அது வருகிறது, ஆனால் எந்த வேளையில் நடக்கும் என்பதை அறியோம். ஆனால் அதன் காரியம் என்னவெனில், அது நடந்து முடிந்துவிட்டதென்றால், முடிந்ததுதான். அப்பொழுது உங்களால் ஒன்றுமே செய்ய முடியாது.'' அதைப்பற்றி நான் நீண்ட காலமாக



வலி உண்டாகும். அவருக்கு எழுபத் தைந்து வயதாகிய போது, அவருக்கு வாதநோய் ஏற்பட்டது. அவருக்கு ஏதாவது ஒரு தொந்தரவு சரீரத்தில் ஏற்பட்டுக் கொண்டேயிருந்தது. ஒரு குறிப்பிட்ட இடத்தில் சரீரத்தில் அவருக்கு நோவு ஏற்பட்டால், அவர் ஓடிப்போய் வேதாகமத்தை எடுத்து அந்த இடத்தில் வைத்துக்கொள்வார், இன்னொரு இடத்தில் வேதனை ஏற்பட்டால் அந்த இடத்திலும் இன்னொரு வேதாகமத்தை எடுத்து வைத்துக்கொள்வார். ஒருநாள் நான் அவரைப் பார்க்கப் போன பொழுது, அவர்மேல் எங்கும் வேதாகமங்களினால் மூடியிருந்தது, அதினால் அவரைப் பார்க்கவே முடியவில்லை. அவர் சரீர முழுவதும் வலியுள்ள பாகங்கள் பூராவும் வேதாகமங்களைக் கொண்டு மூடிக்கொண்டிருந்தார். அவர், "இது தேவனுடைய வாக்குத்தத்தம் ஆக இருக்கிறது'' என்று கூறினார். அவ்வாறுதான் அது இருக்கிறது.

146. "வானமும் பூமியும் ஒழிந்து போம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை'

147. அந்த வயதான மனிதர் வந்து என்னை சந்தித்துவிட்டுப் போவது உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? அவருடைய பந்துக்கள் ஒருவரும் இங்கே இல்லை என்று நான் நினைக்கிறேன். அவருக்கு நான் சிறிதளவு பண உதவி செய்வதுண்டு. ஏனெனில் அவர் வயோதிபராகவும், பணம் தேவையுள்ளவராகவும் இருந்தார். அவர் வருவதுண்டு. ஒருநாள் நான் கனடா தேசத்திற்கு போகக்கிளம்பிக் கொண்டிருந்தேன். அப்பொழுது அவர் வந்திருந்தார். வாயிலை விட்டு நான் வெளியே புறப்பட இருந்தபொழுது, அவர் அங்கே வந்து என்னை சந்தித்து, "என் மகனே, பில்லி, இந்நாட்களில் ஒன்றில் நீ திரும்பி வரும்பொழுது, இந்த சாலையில் இந்த வயதான அங்கிள் ஜிம் நடந்து இனிமேல் திரிந்து கொண்டிருக்கமாட்டார்'' என்று கூறினார். அதுவே அவரை நான் கடைசியாக சந்தித்தது. நான் கனடாவுக்கு போய்ச் சேர்ந்தபொழுது, எனக்கு ஒரு தந்தி வந்தது, சகோதரி மார்கன் அவர்களுடைய கரங்களில் அவர் உயிர் நீத்தார். அவருக்கு மாரடைப்பு ஏற்பட்ட போது, அவரை உடனே மருத்துவமனைக்கு விரைந்து எடுத்துச் சென்றார்கள்; சகோதரியை நோக்கிப் பார்த்துவிட்டு, அவர் உயிர் நீத்திருக்கிறார்.

148. சகோதரி மார்ஜி இன்று காலையில் இங்கேயிருக்கிறார்களா? அவர்கள் இங்கே வழக்கமாக வருவதுண்டு. நீங்கள் யாவரும் அறிவீர்கள். பாப்டிஸ்ட் மருத்துவமனையில் உள்ள மெடிக்கல் க்ளினிக்கில் பதினேழு ஆண்டுகளாக தீவிரப் புற்றுநோயால் அவதிப்பட்டுக்கொண்டு, அங்குள்ள தாஸ்தாவேஜுகளில் "புற்று

ஸ்ப்ரிங் தெருவில் ஏற்பட்ட வெள்ளத்தில் சுமார் ஆறு அங்குல உயரத்திற்குத்தான் தண்ணீர் பெருகியது'' என்று என்னிடம் கூறினார்.

140. ஆகாயத்திலிருந்து ஒரு மனிதன் இறங்கி வருவதையும், அவன் ஒரு அளவுகோலை எடுத்து, இருபத்திரண்டு அடி உயரத்தை 'ஸ்பிரிங் தெருவில் அளந்தான் என்பதை நான் கண்டேன்'' என்று நான் அவரிடம் கூறினேன்.

"நீங்கள் உணர்ச்சி வசப்பட்டு விட்டீர்கள்'' என்று அவர் பதிலளித்தார்.

“நான் உணர்ச்சி வசப்படவில்லை. அது கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால் என்பதாக இருக்கிறது'' என்று நான் கூறினேன்.

141. ஸ்ப்ரிங் தெருவில் வெள்ளம் எவ்வளவு அடி உயரத்துக்கு இருந்தது என்பதை அவர்களிடம் கேளுங்கள். மிகவும் சரியாக இருபத்திரண்டு அடி உயரத்துக்கு அது இருந்தது.

142. அன்றிரவில் நான் பிரசங்கித்துவிட்டு வைத்துவிட்டு வந்த அந்த பழைய வேதாகமம் நான் வைத்துவிட்டு வந்த அதே இடத்தில்... மழை பெய்ய ஆரம்பித்து, வெள்ளம் பெருக் கெடுத்தது, இப்பழைய சபையில் இருந்த இருக்கைகள், கட்டிடத்தின் கூரை வரையிலும் வெள்ளத்தில் உயர கொண்டு போகப் பட்டது, உள்ளே வெள்ள நீர் நிறைந்திருந்து எல்லாவற்றையும் மேலே கொண்டுபோய்விட்டது; பிரசங்க பீடமானது மேலே போய்விட்டது. பிறகு அவைகள் கீழே வந்துவிட்டன, ஒவ்வொரு இருக்கையும் அதன் அதன் இடத்தில் திரும்பி வந்து இறங்கி நின்றுவிட்டது. வெள்ள நீரினால் மேலே கொண்டுபோகப்பட்ட வேதாகமமும் திரும்ப அதனிடத்திற்கு வந்து எந்த அதிகாரத்தில் திறந்து வைக்கப்பட்டு அங்கே விடப்பட்டு இருந்ததோ, அதே அதிகாரம் திறந்து வைக்கப்பட்டு இருந்தது. இவ்வளவு தண்ணீர் பெருகியிருந்துங்கூட, இவ்வாறு நிகழ்ந்தது.

143. "வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை"

144. அவ்வேதாகமம் அந்த உப்புத் தண்ணீரில் இரண்டு ஆண்டுகள் மிதந்து கொண்டிருந்தும்கூட, அதன் எழுத்துக்கள் கொஞ்சமும் அழிந்து போகாமல் எப்படியாய் இருந்தது பாருங்கள்! தேவனுடைய வார்த்தைகள் உண்மையாயிருக்கின்றன. ஆமென்.

145. அதன்பிறகு சகோதரன் ஜிம் ஹைஸ்ஹார்ட் அவர்கள் அதைப்பற்றி திருப்தியடைந்தவராக இருந்தார். அவருக்கு அடிக்கடி தனது கையில்



கேட்டு வந்திருக்கிறேன்'' என்று நீங்கள் கூறுவீர்கள். ஆனால் உங்களுடைய கடைசி சந்தர்ப்பமாக நீங்கள் அதைக் குறித்துக் கேட்கப் போகிறீர்கள். அது சம்பவிக்கத்தான் போகிறது, ஏனெனில் அது கர்த்தருடைய வார்த்தையாயிருக்கிறது. நான் பிரசங்கித்து வந்திருக்கிற கடந்த எட்டுநாட்களாக, அது, எப்பொழு தாவது பிசகிப்போயிருக்கிறதா? இங்கே இயேசு என்ன கூறியிருக்கிறாரோ, அது வந்து நிறைவேறியாகவே வேண்டும், அவ்வாறு தான் சபைக்காலமெல்லாம் நடந்திருக்கிறது.

294. இந்த சபைக்காலமானது சரியாக இதற்குள் இருக்கிறது. அதன் சரியான வேளையில் அது இருந்து கொண்டிருக்கிறது. இன்று காலையில் கூட, பத்துக் கன்னியர் எதற்கு அடையாளமாக உள்ளனர் என்பதைக் குறித்தும், நித்திரை செய்யும் புத்தியில்லாத கன்னிய ரின் வேளையைக் குறித்தும் பார்த்தோம். வேதமானது கூறியதைக் குறித்து நினைவில் கொள்ளுங்கள்; அதாவது, புத்தியற்ற நித்திரை செய்யும் கன்னியர்.... “இதோ மணவாளன் வருகிறார், இதோ கர்த்தருடைய வருகை'' என்ற சத்தம் புறப்பட்டுச் சென்றபோது, வார்த்தையின் பிரசங்கித்தலும் நடந்த போது .... அப்பொழுதுதான் என்ன சம்பவித்தது? ''காலம் சமீபமாயிற்று அணுகுண்டுகள் மற்றும் இன்ன பிறவும் ஆயத்தமாயுள்ளன'' என்ற பிரசங்கிகள் தெருக்களின் ஓடிச்சென்று செய்தியை பிரசங்கித்தனர்.

295. அவ்வாறு அவர்கள் செய்த உடனேயே, நித்திரை செய்யும் புத்தியில்லாத கன்னியர் ஆகிய பெரிய சபையானது, “ஒ, நல்லது, நாம் இத்தனை காலமாக ப்ரெஸ்பிடேரியன் ஆக இருந்து விட்டோம். நாம் இதைப் பற்றி ஆராய்ந்து இதைக் கண்டு பிடிப் போம். ஆம், நமக்கு பரிசுத்த ஆவி தேவையென்பதை நான் விசுவாசிக்கிறேன்'' என்று கூறியது. அவர்கள் இப்பொழுது அதைக் குறித்து துண்டுப்பிரதிகளை எழுதி வெளியிட ஆரம்பித்து விட்டார்கள். ''அதில் எங்களுக்குக் கொஞ்சம் தாருங்கள்'' என்று அவர்கள் கூறினார்கள்.

296. இவர்களோ, "எங்களுக்குப் போதுமான அளவே எங்களிடம் உள்ளது, ஆகவே கொடுக்க இயலாது'' என்றார்கள்.

297. எனவே இன்றைக்கு, ஸ்தாபனங்களாகிய பெரிய சபைகள் செய்வதைப்போல், அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள் வதற்காக ஜெபிக்கும்படி புறப்பட்டுச் சென்றார்கள். அவர்கள் எண்ணெய் வாங்கச் சென்றபொழுது, மணவாளன் வந்துவிட்டார். ''நாம் பெந்தெகொஸ்தேயின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள அதனிடம்

திரும்பியாக வேண்டும். சபையில் தெய்வீக சுகமளித்தலின் வரத்தைப் பெற்றவர்கள் நமக்கு இருக்க வேண்டும்; அந்நிய பாஷைகளில் பேசுகிறவர்கள் நமக்கு வேண்டும். அந்நிய பாஷைகளை வியாக்கியானம் செய்கிறவர்கள் நமக்கு வேண்டும். நமது சபையில் இந்த அனைத்து ஆவிக்குரிய வரங்களும் நாம் பெற்றிருக்கவேண்டும். எனவே அதற்கான கூட்டங்களை நாம் ஆரம்பித்து அதைச் செய்ய ஆரம்பிக்க வேண்டும்'' என்று கூறிக் கொண்டு, இந்த பெரிய சபைகள் ஆகிய ஸ்தாபனங்கள் மகத்தான சர்வதேச கூட்டங்களை ஏற்பாடு செய்து அதைப் பெற்றுக் கொள்ள இப்பொழுதே அவர்கள் முயன்று கொண்டிருக்கிறார்கள். அதற்காக கவுன்சில்களை அமைத்து, அதைச் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். அவ்வாறு அவர்கள் அதைச் செய்ய புறப்பட்டு சென்றிருக்கிற பொழுது, அப்பொழுது அந்த வேளையில் தான் மணவாளன் வந்தார். வந்து விளக்கில் எண்ணெய் உள்ளவர்களை அழைத்துக் கொண்டு சென்று விட்டார்.

298. புத்தியில்லாத கன்னியர் திரும்பி வந்தபொழுது என்ன சம்ப வித்தது? அழுகையும், பற்கடிப்பும் நிறைந்திருக்கிற மகா உபத்திரவ காலமாகிய புறம்பான இருளிலே அவர்கள் தள்ளப்படுவார்கள். அந்த வேளையில் மணவாட்டியோ பரலோகத்தில் இருப்பாள். ஓ, என்னே !

299. அதன்பிறகு மூன்றரை ஆண்டுகளின் முடிவில், யோசேப்பைப் போல் அவர் வந்து, தன்னை தனது சகோதரராகிய யூதர்களுக்கு அறியப்படுத்துவார். அவர்கள் குடும்பம் குடும்பமாக பிரித்துக் கொண்டு, அவருக்காக அழுது புலம்பி, 'இந்தக் காயங்கள் எங்கே உமக்கு ஏற்பட்டன?'' என்று கேட்டு, தாங்கள் குத்தினவரை நோக்கிப் பார்ப்பார்கள். அவர் தனது சகோதரர்களுக்குதான் யார் என்பதை அவர்கள் அறியும்படி செய்வார்.

300. இப்பொழுது, அவர் தன் சபைக்கு, தன்னை அவர்கள் அறியும்படி செய்திட முயன்று கொண்டிருக்கிறார். ஆனால் அவர்களோ அவரை வெளியே தள்ளிவிட்டார்கள். அவர் இன்னமும் வாசலருகே நின்று கதவை தட்டிக்கொண்டே, ''அங்கே இன்னும் யாராவது ஒருவர் உள்ளனரா? எனக்காக கதவைத் திறந்து என்னை உள்ளே வர விட்டு உன்னோடு பேசவிடும்படி செய்ய இன்னும் யாராவது ஒருவர் உள்ளனரா?'' என்று கேட்கிறார்.

301. நான் மகிழ்ச்சியாயிருக்கிறேன். மிகவும் நன்றியுள்ளவனாயிருக்கிறேன். அநேக ஆண்டுகளுக்கு முன்பாக, சுமார் இருபத் தெட்டு ஆண்டுகளுக்கு முன்பாக, என்னுடைய



135. இப்பொழுது சிக்காகோவுக்கு அருகில் உள்ள ஒரு ஊரில் ஒரு ஆலயத்தில் உள்ள பிரசங்க பீடத்தின் மேல் ஒரு வேதாகமமானது வைக்கப்பட்டுள்ளது. முதல் உலகப்போருக்கு முன், ஒரு மிஷனரியானவர்.... ஒருமனிதன் இரட்சிக்கப்பட்டான். அப்பொழுது அம்மனிதன் அம்மிஷனரிக்கு ஒரு வேதாகமத்தை அளிக்க விரும்பினான், அப்பொழுது அவன், ''நான் உமக்கு இந்த வேதாகமத்தை அளிக்க இயலாதவனாயிருக்கிறேன், என் தாயார் எனக்கு இதைக் கொடுத்தார்கள். நான் வீடு திரும்பும் பொழுது, உமக்கு ஒரு வேதாகமத்தை அனுப்பித் தருவேன்'' என்று கூறினான். 136. அவன் கடலில் பிரயாணம் செய்த பொழுது, ஒரு ஜெர்மானிய நீர்மூழ்கியானது இவன் பயணம் செய்த கப்பலை குண்டு போட்டு தகர்த்தது. அக்கப்பலின் உடைந்த ஒரு துண்டைக் கூட அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. இரண்டு ஆண்டுகள் கழித்து, கடற்கரைக்கருகில் ஒரு பெட்டி மிதந்து கொண்டிருப் பதைக் கண்டார்கள். மூழ்கிப்போன ஏதோ ஒன்றுதான் அங்கே மிதந்து கொண்டிருப்பதாக சிலர் எண்ணினர். எனவே அவர்கள் அப்பெட்டியை எடுத்து அதைத் திறந்து பார்த்தார்கள். அதனுள் அத்தாக்குதலுக்கு தப்பி மீதியாயிருந்த அந்த மிஷனரிக்கு தான் அனுப்பித்தருவதாக வாக்களித்த அந்த வேதாகமம் மட்டுமே இருந்தது. அதை அவருக்கு அனுப்புவதற்காக வைத்திருந்தார். அது சிக்காகோவுக்கு அருகில் ஒரு மெதோடிஸ்ட் சபையில் உள்ள ஒரு பிரசங்க பீடத்தில் இன்றைக்கும் வைக்கப்பட்டிருக்கிறது. 'வானமும் பூமியும் ஒழிந்து போம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை"

137. 1937ம் ஆண்டில் இவ்வூரில் ஏற்பட்ட வெள்ளத்தின் போது, மண்ணால் போடப்பட்ட தரையுள்ள இங்கேயிருந்த இந்த பழைய சபைக்கட்டிடமானது வெள்ள நீரினால் நிறைந்திருந்தபடியால், ஒரு இழுவைப் படகில் நாம் கட்டிடத்தின் கூரை வரையிலும் செல்லக்கூடிய அளவுக்கு இருந்தது. அன்றிரவில் நான் சுவிசேஷத் தைப் பிரசங்கித்துவிட்டு எனது வேதாகமத்தை திறந்தபடி பிரசங்க பீடத்தில் வைத்துவிட்டு நான் வீடு திரும்பிய பிறகு, வெள்ளம் ஏற்பட்டு, மேலே வரைக்கிலும் பெருகியது.

138. நான் வெள்ளம் வரும் என்று முன்னுரைத்திருந்தேன். "இங்கே இந்த ஸ்ப்ரிங் தெருவில் 22 அடி அளக்கப்படுவதைக் கண்டேன்'' என்று நான் கூறினேன்.

139. ஜிம் வைஸ்ஹார்ட் என்ற வயதான சகோதரனும் ஏனை யோரும் அதைக் குறித்து என்னை கேலி செய்தனர். சகோதரன் ஜார்ஜ் அவர்களே, அது உங்களுக்கு ஞாபகமிருகிறதா? அவர், "பில்லி, 1884ல்

ஊழியஞ்செய்கிற ஆவிகளாயினர். ''நம்முடைய மீறுதல்களினி மித்தம் அவர் காயப்பட்டு (அந்த பெரிய வைரக்கல் வெட்டப் பட்டது ) நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப் பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்'' அது என்ன செய்து கொண்டிருந்தது. ஒளியை பிரகாசித்துக் கொண்டிருந்தது.

132. தேவனுடைய ஊழியக்காரன் என்று கூறிக்கொள்ளுகிற ஒரு மனிதன், தெய்வீக சுகமளித்தலையும், அவருடைய வல்லமையையும் மறுதலிப்பானெனில், அவன் அந்த வைரக்கல்லிடமிருந்து தனது ஒளியை பெற்றுக்கொள்ளாமல் இருக்கிறான். ஏனெனில் அது அவரை, நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராக இருக்கிறார் என்று பிரதிபலித்துக்கொண்டிருக்கிறது. அந்த வைரக்கல்லில் ஏழு நட்சத்திரங்களையும், ஏழு சபைக்காலங்களையும் நீங்கள் காண முடியும்.

133. ஓ, தேவனுக்கு துதி உண்டாவதாக! பிரசங்க பீடத்தி லிருந்து கொண்டு ஒரு ஊழியக்காரன் தேவனை நன்றி நிறைந்த ஸ்தோத்திரத்துடனும் துதியுடனும், கனம், வல்லமையுடனும், தொழுது கொள்வதென்பது பொருத்தமானதுதான் என்று நான் கருதுகிறேன். ஓ, எவ்வளவு உண்மையாய் இருக்கிறது, அது எவ்வளவாய் என் இருதயத்தை புளகாங்கிதங்கொள்ளச் செய்கிறது! அதனால் நான் எவ்வளவாய் சத்தமிட முடியுமோ அவ்வள வாய் சத்தமிடவும், எவ்வளவு உயரமாய் நான் குதிக்க முடியுமோ அவ்வளவு உயரமாய் குதிக்கவும் வேண்டும்போல் உணருகிறேன். ஏனெனில், என்னில் இருக்கிற ஒன்று, நான் எப்படியிருந்தேனோ அதிலிருந்து என்னை மாற்றிவிட்டதே. நான் என்னவாயிருக்க வேண்டுமோ அதுவாய் நான் இருக்கவில்லை; நான் எப்படியிருக்க வேண்டுமென்று விரும்புகிறேனோ அப்படியாயும் இருக்கவில்லை. ஆனால், நான் எப்படிப்பட்டவனாய் இருந்து வந்தேனோ அதி லிருந்து மாற்றப்பட்டிருக்கிறேன் என்பதை நான் அறிவேன். ஏதோ ஒன்று சம்பவித்திருக்கிறது; ஏதோ ஒன்று நிகழ்ந்திருக்கிறது.

134. இங்கே நின்றிருந்து, இந்த நித்திய வார்த்தையானது, எழும்பி, ஒவ்வொரு புயலையும் அசைத்ததை காணுங்கள்! வேதாகமங்களை அவர்கள் எரிக்க முயன்ற பொழுது, அதேவிதமாக அது அப்புயலுக்கெதிராக அசைந்தது. ஏனெனில் வசனம் கூறுகிறது. 'வானமும் பூமியும் ஒழிந்து போம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை" என்று.



இருதயத்தில் அந்த தட்டுதலை நான் உணர்ந்தேன். நான் ... அவர் உள்ளே வந்தார், அது முதற்கொண்டு நான் அவரோடு போஜனம் பண்ணவும், அவர் என்னோடு போஜனம் பண்ணவும் செய்து கொண்டிருக்கிறோம். நான் பெந்தெகொஸ்தேயின் ஆசீர்வாதமான பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டேன்.

302. நான் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத் தினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டேன். என்னுடைய வாழ்க் கையில் நான் ஞானஸ்நானம் பெற்றது ஒரே ஒரு முறைதான், அதை இவ்வாறு பெற்றுக் கொண்டேன். நான் ஒரு சிறு பையனாக இருந்தபொழுது, யாரும் என்னிடம் மூன்று தேவர்கள் உண்டு என்ற சொல்ல முடியவில்லை. அப்போதகத்தை என்னிடம் யாரும் திணிக்க முடியாது. தேவன் என்னப்பட்டவர் யார் என்பதை அறிந்திருக்கும் எவரிடமும் நீங்கள் அதை திணித்துவிட முடியாது. எனவே நான் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபொழுது, ஒரு பாப்டிஸ்ட் பிரசங்கியார் எனக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். ''நான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ் நானம் பெறவேண்டும் என விரும்புகிறேன்'' என்று நான் கூறி னேன். டாக்டர் ராய் ஈ.டேவிஸ் என்பவர்தான், நான் வாலிபனாக இருந்தபொழுது எனக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தார். அதுதான் சரியானது.

அதை நான் விசுவாசித்தேன்; அதோடு நிலைத்து நினறேன். அது வேத சத்தியம் என்பதை நான் அறிந்திருக்கிறேன். அது தேவனுடைய நித்தியமான வார்த்தையாக இருக்கிறது.

அவர்களில் நானும் ஒருவன் என்பதால் சந்தோஷமே நானும் அவர்களில் ஒருவன், அவர்களில் ஒருவன் அவர்களின் நானும் ஒருவன் என்பதால் சந்தோஷமே அவர்களில் நானும் ஒருவன், அவர்களில் ஒருவன் அவர்களின் நானும் ஒருவன் என்பதால் சந்தோஷமே இவர்கள் கல்லாதவராயினும், லோக கீர்த்தி,அற்றவராயினும் இயேசுவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று, பெந்தெகொஸ்தேயின் ஆசீர்வாதம் பெற்றனரே இப்பொழுது அவர்கள் எத்திசையிலும் சென்று அவருடைய வல்லமை மாறாதது என்று கூறுகின்றனர். இம்மக்களில் நானும் ஒருவன் என்று கூறிட எனக்கு சந்தோஷமே.

303. நீங்கள் மகிழ்ச்சியாயிருக்கிறீர்களா? அப்படியாயின் உங்கள் கரங்களை உயர்த்துங்கள்.

அவர்களில் நானும் ஒருவன், நான் அவர்களில் ஒருவன் அவர்களில் ஒருவன் என்றிட எனக்கு சந்தோஷமே வாரும் என் சகோதரரே, ஆசியை நாடுவீர், அது உம் இதயத்தை பாவத்தினின்று சுத்திகரிக்குமே அது உம்மில் சந்தோஷத்தின் மணியோசை கேட்கச்

செய்யும் அது உம் அத்துமாவை அனலுள்ளதாக்குமே ஓ, இப்பொழுது அது என் இதயத்தில் கொழுந்துவிட்டு

எரிகிறது, ஓ, அவர் நாமத்திற்கே மகிமை, நானும் அவர்களில் ஒருவன் என்ற கூறிட இயன்றதால் எனக்கு சந்தோஷமே ஓ, அவர்களில் ஒருவன், அவர்களில் ஒருவன் நான், நான் அவர்களில் ஒருவன் என்பதால் எனக்கு சந்தோஷமே

அல்லேலூயா அவர்களில் ஒருவன், அவர்களில் ஒருவன், அவர்களில் நானும் ஒருவன் என்பதால் எனக்கு சந்தோஷமே, அவர்கள் மேல் வீட்டறையில் கூடி வந்து, அவர் நாமத்தில் ஜெபித்தனர், அவர்கள் பரிசுத்த ஆவியால் அபிஷேகிக்கப்பட்டனர் அந்நாளில் அவர் அவர்களுக்குச் செய்ததை உனக்கும்

செய்வார், நானும் அவர்களில் ஒருவன் என்ற கூற முடிந்ததால் எனக்கு

சந்தோஷமே.

304. இப்பொழுது, நாம் முன்னும் பின்னும், சுற்றிலும் உள்ள வர்களோடு கைகுலுக்குவோம்.

அவர்களில் ஒருவன், அவர்களில் ஒருவன், நானும் அவர்களில் ஒருவன் என்பதால் எனக்குச்

சந்தோஷமே, அவர்களில் ஒருவன், அவர்களில் ஒருவன், அவர்களில் நானும் ஒருவன் என்பதால் எனக்குச்

சந்தோஷமே, அவர்களில் ஒருவன், அவர்களில் ஒருவன், நானும் அவர்களில் ஒருவன் என்பதால் எனக்குச்

சந்தோஷமே, நல்லது, அவர்களின் ஒருவன், அவர்களில் ஒருவன் நானும் அவர்களில் ஒருவன் என்பதால் சந்தோஷமே அவர்களில் ஒருவன், அவர்களில் ஒருவன், நானும் அவர்களில் ஒருவன் என்பதால் எனக்குச்

சந்தோஷமே, அவர்களில் ஒருவன், அவர்களில் ஒருவன்,

நானும் அவர்களில் ஒருவன் என்பதால் எனக்கு சந்தோஷமே



128. இரண்டு ஞாயிற்றுக் கிழமைகளுக்கு முன்பாக நாம் அதைப்பற்றி, அதாவது பெரிய வைரக்கல்லைப் பற்றி பார்த்தோ மல்லவா, அதைப்பற்றி ஞாபகத்தில் வைத்திருங்கள். ஆனால் அது பல்வேறு முறைகளில் வெட்டி பட்டை தீட்டப்பட்டு, அதினிடத் தினின்று உள்ள அக்கினியையும், தீபங்களையும் பிரதிபலிக்கும்படி செய்யப்பட்டிருக்கிறது. ''தேவனுடைய சிருஷ்டிப்புக்கு ஆதியு மானவராக இயேசு கிறிஸ்து இருக்கிறார்'' என்பது அந்த விதமாகத் தான். வெளிப்படுத்தின விசேஷம் 1ம் அதிகாரம். அது சரிதானே? அப்படியெனில், தேவன் எப்பொழுது சிருஷ்டிக்கப்பட்டார்? அவர் தேவனுடைய சிருஷ்டிப்புக்கு ஆதியுமானவர். தேவன் நித்தியமானவராக இருக்கிறார். அப்படித்தானே? ஆனாலும் தேவன் சிருஷ்டிக்கப்பட்ட பொழுது.... கன்னிகையாயிருந்த ஒரு தாயின் வயிற்றில் ஒரு குழந்தை உற்பவித்தபொழுது, அது நடந்தது. அவள் தேவனுடைய சிருஷ்டிப்புக்கு ஆதியாயிருந்த இக்குழந்தையை பிறப்பிக்கும்படி இக்குழந்தைக்குரிய உயிரணுக்களை தனக்குள் வளரும்படி கொண்டிருந்தாள். "தேவன் மாம்சமாகி, நமக்குள் வாசம் பண்ணினார், அவர் இம்மானுவேல்' என அழைக்கப் பட்டார், அதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்'' இதுவே தேவனுடைய சிருஷ்டிப்புக்கு ஆதியுமானவர் என்ப தாகும்.

129. பூமியின் தூளிலிருந்து கிடைக்கக்கூடிய அந்த வைரக்கல் லிலே ... ஏனெனில் அவர் மண்ணிலிருந்து உண்டாக்கப்பட்டார். அது சரிதானே? நான் உணவு உண்பதைப்போல அவரும் உணவு உண்டார். நீங்கள் உண்பது போலவே, அவரும் உணவு உண்டார். அந்த மண்ணான சரீரத்தில், மண் சரீரத்திற்குரிய கால்ஷியம், பொட்டாஷ், இயலுலக அண்டத்தின் ஒளி (Cosmic light) ஆகியவற்றைக் கொண்டவராக இருந்தபோதிலும், அவருக்குள் நித்திய ஒளியானது வாசமாயிருந்தது. அந்த சாஸ்திரிகள், அந்நட்சத்திரத்தினிடத்தில், “உம்முடைய பரிபூரண ஒளியினிடம் எங்களை வழிநடத்தும் என்று கூறியதில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை.

130. ஒரு பரிபூரண ஒளியின் வெளிச்சத்தையே அவர்கள் பிரதிபலித்தனர். அங்கே அவர் இருந்தார், அவரே தேவனுடைய பரிபூரண ஒளியாயிருந்தார். அவரே தேவனுடைய சிருஷ்டிப்பின் ஆதியாயிருந்தார். அவர் அங்கே...

131. சாஸ்திரிகள் வானத்தில் அவரைக் கண்டபிறகு, எவ்வாறு அவர் தன்னையே பூமிக்குரிய தனது நடசத்திரங்களினிடத்திற்கு பிரதிபலித்துக் காண்பிக்கமுடிந்தது? அவர்கள் இப்பூமியில்

கொடுத்தார். ஆனால் உங்களில் ஒருவரால்கூட என்னைத் துரத்த முடியாது'' என்று சீஷர்களிடம் கூறியிருப்பான்.

124. ஆனால் சகோதரனே, அவன் இயேசு வருவதைக் கண்ட போது; அவர் அமைதியாக நடந்துவந்தார். ஊ ஊ ஓ! அவர் ஒன்றும் சொல்லத் தேவையாயிருக்கவில்லை. ஏற்கனவே பிசாசு அவரைக் கண்டு பயந்து போயிருந்தான். அவன் அந்தப் பிள்ளையைவிட்டு வெளியேறியாக வேண்டும் என்பதை அறிந்திருந்தான்; ஏனெனில், ஜீவனுள்ளவர் அங்கே வந்து விட்டார், அவர் வெறும் ஒரு பிரசங்கமாக மட்டுமல்ல, ஆனால் அவர் ஜீவனாகவும் இருக்கிறார். அவர், 'அவனைவிட்டு வெளியே வா" என்று கூறினார். ஓ, என்னே! அதுவே போதுமாயிருந்தது. அமைதியாக அவர் பேசினார். அவர், தான் என்ன பேசுகிறோம் என்பதை அறிந்திருந்தார். அவர், தான் என்ன செய்கிறோம் என்பதை அறிந்திருந்தார்.

125. "சத்தங்கள்'' ஏழு எக்காளங்களின் சத்தங்கள்; ஏழு நட்சத் திரங்களின் சத்தங்கள், அது ஏழு தூதர்கள் ஆகும். அவைகள் அங்கே இருந்தன. ஆனால் இப்பொழுது கவனியுங்கள்.

"... தேவனுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்கள் சிங்காசனத்திற்கு முன்பாக எரிந்துகொண்டிருந்தன.''

வெளி. 4:5.

126. "ஏழு தீபங்கள்'' - இங்கு நாம் சிறிது வரைந்துகொள்வோம். சிங்காசனம் - பரிசுத்தஸ்தலம் - சபையார். இந்த இடத்தில்தான் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு ஆக ஏழு நட்சத்திரங்கள் - ஏழு தீபங்கள் - ஏழு செய்திளார்கள் - தூதர்கள் - ஏழு ஆவிகள்; தேவன் ஏழு ஆவிகளில் இருக்கிறார் என்று ஒட்டு மொத்தமாக இங்கு அர்த்தம் கொடுக்கவில்லை, ஆனால் 'ஒரே பரிசுத்த ஆவியின் ஏழு பிரதியட்சமாகுதல்கள் அல்லது தோன்றுதல்கள்'' என்பதாகும்.

127. பரிசுத்த ஆவி எங்கேயிருக்கிறது? இங்கே சிம்மாசனத்திலே, ஒவ்வொரு சபைக்காலத்திலும் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. இந்த சபைக்காலமானது தேவனுடைய சத்தங்களாக இருந்து, தனக்கடுத்த சபைக்காலத்திற்குள் அதே ஒளியை பிரகாசித்து, "இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவரா யிருக்கிறார்'' என்று கூறிக்கொண்டிருக்கிறது. ஏழு என்பதைப் பாருங்கள், அங்கே சத்தங்கள் உண்டாயிருந்தன. எரியும் ஏழு தீபங்கள் தேவனுடைய ஏழு ஆவிகளாகும். ஏழு ஆவிகள்.



305. அவர்களில் நீங்களும் ஒருவர் என்பதால் உமக்கு சந்தோஷமில்லையா? (சபையார், ''ஆம், ஆமென், அல்லேலூயா'' என்று பதிலளிக்கிறார்கள் - ஆசி) சத்தம் போடுகிற கூட்டம்.

306. (ஒரு சகோதரன் அந்நிய பாஷையில் பேசுகிறார். இன்னொரு சகோதரன் அதற்கு வியாக்கியானம் செய்கிறார் - ஆசி). பிதாவே, எவ்வளவாய், நாங்கள் உமக்கு, அபாத்திரரான எங்கள் மேல் உள்ள உம்முடைய தயவுக்காகவும், இரக்கங்களுக்காகவும், நன்றி செலுத்துகிறோம். உம்முடைய செய்தியை இப்பொழுது நீர் உறுதிப்படுத்துவீர் என்பதைக் குறித்து நீர் வாக்குத்தத்தம் செய்துள்ளீர், கர்த்தாவே, அதைப்பற்றி எண்ணுகையில்... உம்முடைய இரக்கங்கள் அவர்கள் மேல் தங்க வேண்டும் என்று நான் ஜெபிக் கிறேன், தேவனே.

307. இங்கே யாராவது அவரை இரட்சகராக அறியாதிருந்தால், இப்பொழுதே நீங்கள் அவரை உங்கள் இருதயத்தில் இரட்சகராக கண்டு கொள்ள விரும்பினால், நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கும் பொழுது எழுந்து நிற்பீர்களா? அவர் தாமே இச்செய்தியை இப்பொழுது நீர் உறுதிப்படுத்த விரும்புவதாக கூறினார். அவரை அறியாத யாராவது இங்கிருந்தால், இன்னும் அவரது ஆவியை பெறாமல் இருந்தால், அவர் உங்களோடு பேசிக்கொண்டிருக்கிறார்.

308. நல்லது, அதோ அங்கே பின்னால் ஒருவர்... நீங்கள் எழுந்து நிற்பீர்களா, சகோதரனே! (சபையிலிருந்து ஒரு சகோதரன் பேசு கிறார்-ஆசி) அவர் பரிசுத்த ஆவியினாலே அபிஷேகிக்கப்பட விரும் புகிறார், அப்படித்தானே சகோதரனே? தேவன் உம்மை ஆசீர்வதிப் பராக. நீங்கள் இருக்கும் இடத்திலேயே நில்லுங்கள். "பரிசுத்த ஆவியினால் நானும் அபிஷேகிக்கப்படவேண்டும்'' என்று எழுந்து நின்று கூற விரும்புகிற இன்னும் யாராவது உள்ளனரா? தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக, சகோதரனே, தேவன் உம்மை ஆசீர் வதிப்பாராக. எழுந்து நில்லுங்கள். அப்படியே நின்று கொண் டிருங்கள். இன்னும் யாராவது இங்கு பரிசுத்த ஆவியைப் பெற்று, ஞானஸ்நானம் பண்ணப்பட்ட விரும்பி, அதற்காக எங்களுடைய ஜெபங்களில் நினைத்துக் கொள்ளப்பட்ட இப்பொழுது விரும்பு கிறீர்களா? பரிசுத்த ஆவியினால் நீங்கள் அபிஷேகிக்கப்பட விரும் புகிறீர்களா? நான் கூற வேண்டியதை கூறிடும் முன்னர் இன்னும் யாராவது எழுந்து நின்று சேர்த்துக் கொள்ளப்பட விரும்புவீர்களா? அவருடைய மந்தையில் ஒருவராக எண்ணப்பட வாஞ்சிக்கிறீரா? (அதைச் செய்வீர்களா?) கறைதிரையற்று, விழித்திருந்து அவர் மீண்டும் வரும் காட்சியை காண காத்திருப்பீர்.

309. அவர் மீண்டும் வருகிறார். அவருடைய பகைவராக இருக்க விரும்புவீரா? அல்லது அவருடைய பிள்ளையாக இருக்க விரும்பு வீரா? இயேசுவின் இரத்தத்தைத் தவிர வேறு எதையும் தேவன் அங்கீகரிக்கமாட்டார். அவர் சினமடைகிற தேவன் அவர் ஒரு பொழுதும்... உங்களுடைய சபை அங்கத்துவம் அவருக்கு ஒன்று மில்லை. இயேசுவின் இரத்தத்தைத் தவிர வேறு எதையும் அவர் பாரார்.

மெய்யாம் ஜீவ நதி, பாவம் போக்கும் நதி வேறே நதியை அறியேன் இயேசுவின் இரத்தந்தானே. பாவ தோஷம் நீக்கிட மீட்பரின் இரத்தந்தானே தீயகுணம் மாற்றிட மீட்பரின் இரத்தந்தானே மெய்யாம் ஜீவ நதி, பாவம் போக்கும் நதி வேறே நதியை அறியேன் இயேசுவின் இரத்தந்தானே.

(சகோதரன் பிரன்ஹாம் அவர்கள இப்பாடலை தாழ்ந்த குரலில் தனக்குள் பாடிக்கொள்கிறார் - ஆசி).

வேறே இரட்சிப்பில்லையே, இயேசுவின் இரத்தந்தானே புண்ய கிரியை செல்லாதே

இயேசுவின் இரத்தந்தானே

310. வேறு யாராவது உள்ளனரா?

மெய்யாம் ஜீவ நதி, (ஒன்றும் நிலைக்காது சகோதரனே, சகோதரியே இவ்வுலகானது மூழ்கிக் கொண்டிருக்கிறது, அது முடிந்து போய்விட்டது).

பனியைப் போல.... வேறே நதியை அறியேன்

இயேசுவின் இரத்தந்தானே.

311. டெடி அவர்களே, நீங்கள் விரும்பினால், மெதுவாக “இம்மானுவேலின் இரத்தத்தாலே நிறைந்த ஊற்றுண்டே'' என்ற பாடலை ...

312. இப்பொழுது சிநேகிதரே, நின்று கொண்டிருக்கிற நீங்கள் இயேசு கிறிஸ்துவின் இனிமையை ஏற்றுக்கொள்ள முயன்று கொண்டிருக்கிறீர்கள். இந்தக் காரியங்கள் சம்பவிக்கும் என்று உரைத்த அதே வேதாகமத்தில், அவர் எவ்வாறு வாக்குத்தத்தம் செய்தாரோ அதே விதமாக அவைகளை செய்து நிறைவேற்றினார். “வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும்,



எவ்வளவாய் வாஞ்சிக்கிறோம்! தேவனுடைய இடிமுழக்கமாக இருந்து, இன்றைக்கு பூமியில் கறை திரையின்றி, இனிமையிலும் பரிசுத்தத்திலும், தூய்மையிலும், கறைபடாத ஜீவியங்களிலும் நடந்து தேவனுடைய இடிமுக்கத்தை முழங்கித் திரிபவர்களாக அவர்கள் இருப்பார்கள். ஆம், ஐயா, உண்மையான கிறிஸ்தவர்கள், சத்துருவுக்கு எதிராக இடிமுக்கமாக இருக்கிறார் கள். நீங்கள் எவ்வளவாய் கத்துகிறீர்கள் என்பதைக் குறித்து பிசாசு அக்கறைப் படுகிறதில்லை; அல்லது எவ்வளவாய் உங்களால் குதிக்கமுடிகிறது, அல்லது எவ்வளவு உரத்த சத்தமாய் கத்துகிறீர்கள் என்பதைப் பற்றி பிசாசு கவனிக்கிறதில்லை. ஆனால் பரிசுத்தமாக்கப்பட்ட, தேவனுக்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட பரிசுத்த ஜீவியத்தை பிசாசு காணும் பொழுது, அதுவே அவனை மிகவும் பாதிக்கிறது. அவனைக் குறித்து யார் எது சொன்னாலும், அவனை எப்படியெல்லாமோ இழிவாக சொன்னாலும், அதைப்பற்றி சலனம் அடையாமல் அவன் எவ்வளவு இனிமையாக இருக்கமுடியுமோ அவ்வளவாய் இனிமையாய் இருந்து, தேக்கமடையாமல், தொடர்ந்து நல்வழியில் முன்னேறிச் செல்லுகிறான். ஓ அவ்விதமான ஜீவியமானது, பிசாசை தூக்கி யெறிந்துவிடும்; பிசாசை அசைக்கும் இடி முழக்கம் அதுவே.

121. அவரால் பில்லிகிரகாமைப் போலவோ, அல்லது ஓரல் ராபர்ட்ஸைப் போலவோ அல்லது மகத்தான புகழ்மிக்க ஒரு பேச்சாளரைப் போலவோ பிரசங்கிக்க முடிந்தால், அவருக்கு அது இப்படியாக இருக்குமே'' என்று கூறுகிறீர்கள். ஓ, இல்லை! சில வேளைகளல் பிசாசானவன் அதைப்பார்த்து நகைக்கிறான். ஒன்று மற்ற ஒன்றைப்போல அதைப்பற்றி அவன் கவனம் செலுத்துகிற தில்லை. வேத தத்துவமெல்லாம் நீங்கள் பெற்றிருக்கிறீர்கள், எல்லாவித வேதக்கல்லூரியின் பயிற்சியும் பெற்றிருக்கிறீர்கள்; பிசாசானவன் பின்னால் உட்கார்ந்து கொண்டு அதைப்பார்த்து நகைக்கிறான். ஆனால் அவன் ஜீவனுள்ள ஒன்றை காணும்போதோ!

122. அன்றைக்கு இருந்த சீஷர்களைப் பாருங்கள். சந்திரரோகி யாயிருந்த சிறுவனிடத்திலிருந்து பிசாசைத் துரத்த, 'பிசாசே, அவனைவிட்டு வெளியே வா, அவனைவிட்டு வெளியே வா, அவனைவிட்டு வெளியே வா'' என்று சொல்லிக் கொண்டிருந் தார்கள்.

123. அங்கே உட்கார்ந்து கொண்டிருந்த பிசாசானவன், "நீங்கள் உங்களையே வெட்கத்திற்குட்படுத்திக் கொண்டிருக்கவில்லையா? என்னைத் துரத்துங்கள் என்று இயேசுவானவர் உங்களுக்கு கட்டளை

விசுவாசிக்கவில்லை'' என்கின்றனர். ஓ இரக்கம் வேண்டும். ஊ! தேவனுடைய வார்த்தையை அடக்கி வைக்காத தேவ மனிதனே நமக்குத் தேவை.

118. யாவருமே ஒரு பிரசங்கியாக முடியாது, ஆனால் உங்களுக்கு ஒரு சத்தம் உண்டு. ஜனங்களுக்கு ஒரு பிரசங்கத்தை உங்களால் பிரசங்கிக்க முடியவில்லையெனில்.... நீங்கள் ஒரு பிரசங்கியாயிருந்தால், பிரசங்க பீடத்திலிருந்து பிரசங்கிக்க அழைக்கப்பட்டுள்ளீர்கள். அவ்வாறு அழைக்கப்படவில்லையெனில், அப்படி யிருந்தும் ஜனங்களுக்கு முன்னால், உங்கள் வாழ்க்கையே ஒரு பிரசங்கமாக அமைய வேண்டும், அதன்மூலம் நீங்களும் ஒரு பிரசங்கியாகத்தான் இருப்பீர்கள். உங்களுடைய பிரசங்கமானது உங்களால் வாழ்ந்துகாட்டப்படட்டும், அவ்வாறு செய்தால், அதுவே தேவனுடைய சத்தமாக இருக்கிறது, அதை புறக்கணிக் கிறவர்கள் மேல் அது நிந்தையைக் கொண்டுவரும். அவர்கள் கூறுவார்கள்: 'அவன் அல்லது அவளுடைய ஜீவியத்திற்கெதிராக ஒருவரும் குற்றஞ்சுமத்த முடியாது. அவர்கள் இனிமை யானவர்கள், வாழ்ந்து காட்டுகிறார்கள். தேவனுடைய மனிதன் என்று சொல்லும்படி யாராவது ஜீவித்திருக்கிறார்களெனில், அது அந்த மனிதன்தான் அல்லது அந்த பெண்மணிதான்'' என்பார்கள். பாருங்கள், நீங்கள் பிரசங்கத்தை வாழ்ந்து காட்டுங்கள், அதுவே உங்கள் பிரசங்கமாக இருக்கட்டும். நீங்கள் அவர்களுக்கு ஒரு பிரசங்கியாக இருக்கும்படி அழைக்கப்படாவிடில், பிரசங்கியாவதற்கு முயற்சிக்கவேண்டாம். நீங்கள் அவ்வாறு செய்யாவிடில், எல்லாவற்றையும் போட்டு குழப்பி, குழப்பம் உண்டாக்கி, மக்களை நீங்கள் சிக்கலில் மாட்டி வைத்து, என்ன நடக்கிற தென்பதையே நீங்கள் கெடுத்து, உங்களையும்கூட கெடுத்துக் கொண்டுவிடுவீர்கள். எனவே உங்கள் பிரசங்கத்தை வாழ்ந்து காட்டுங்கள்.

119. பிரசங்கியானவன் தன்னுடைய பிரசங்கத்தை பிரசங்கிக்க அழைக்கப்பட்டிருப்பதோடு, அதை தன்னுடைய வாழ்க்கையில் வாழ்ந்துகாட்டவும்கூட அழைக்கப்பட்டுள்ளான். உங்களால் பிரசங்கத்தின்படி வாழ்ந்துகாட்ட இயலாவிடில், நீங்கள் பிரசங்கப்பதையே நிறுத்தி விடுங்கள். ஆனால் நீங்கள் செய்கிற பிரசங் கத்தின்படியெல்லாம் வாழ்ந்துகாட்டவேண்டும் என்று உங்களைப் பற்றி எதிர்பார்க்கப்படுகிறது.

120. நல்லது, இங்கே 'சத்தங்கள்'' இருந்தன. ஓ! ஜெபர்சன்வில்லில் வாழ்ந்துகாட்டுகிற சத்தங்கள் ஆயிரக்கணக்கில் வேண்டு மென்று



நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது'' என்று பேதுரு கூறினான்.

313. உங்கள் மேல் தேவனுடைய ஆசீர்வாதம் வேண்டுமென்ற விரும்பி நீங்கள் எழுந்து நின்றீர்கள். அவருடைய ஊழியக்காரன் என்று முறையில் நான் இப்பொழுது உங்களுக்காக ஜெபிக்கிறேன். தேவன் உங்களுக்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் கொடுக் கும்படி நான் ஜெபிப்பேன். நீங்கள் உத்தமமாயிருந்தால் இந்த வாக்குறுதியை தேவனுக்கு நீங்கள் பின்வருமாறு செய்வீர்களோ என்று நான் பார்க்கிறேன். இதை உங்கள் இருதயத்தில் செய் வீர்களானால், பின்வரும் வாக்குறுதியை தேவனுக்கு கொடுங்கள்: "தேவனே, இந்த நேரம் முதல், என் கால் ஒன்றி நிற்கும் நான், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை தேடிக்கொண்டு இருக்கிற நான், நீர் என்னை பரிசுத்த ஆவியினால் நிரப்பும் வரையிலும், தொடர்ந்து ஜெபித்துக் கொண்டு, காத்துக் கொண்டிருப்பேன்.'' நீங்கள் உங்கள் கரத்தை உயர்த்திக்காட்டி தேவனுக்கு இந்த வாக்குறுதியை அளிப்பீர்களா? "பரிசுத்த ஆவியின் இனிமையினாலும் நன்மை யினாலும் நீர் என்னை நிரப்பும் வரையிலும் நான் தொடர்ந்து ஜெபித்துக்கொண்டேயிருப்பேன்'' என்று கூறுங்கள். நாம் தலைகளை வணங்கியிருக்கையில் நான் இப்பொழுது என்னுடைய ஜெபத்தை ஏறெடுக்கிறேன்.

314. எங்கள் பரம பிதாவே, அவர்கள் உம்முடைய சமூகத்தின் வெற்றிச் சின்னமாக இருக்கிறார்கள். அவர்கள் உம்முடைய வர்களாக இருக்கிறபடியால், அவ்வார்த்தைகள் உண்மையானவை என்று அறிந்திருக்கிறார்கள். அவைகள் பரிசுத்த ஆவியினால் அளிக்கப்பட்டவை என்று அவர்கள் அறிகிறார்கள். ஏனெனில் அவைகள் தேவனுடைய வார்த்தையாக இருக்கின்றன. அவர்கள் தங்களுக்கு நீர் தேவை என்பதையும், ஜெயங்கொள்ளுகிற வல்லமையை அளிக்கும் பரிசுத்த ஆவியின் இனிமை தங்கள் ஜீவியத்தில் தேவைப்படுகிறது என்பதையும் குறித்து அறிந்து உணர்ந்திருக்கிறார்கள். உன்னதத்திலிருந்து வரும் பெலத்தால் அவர்கள் தரிப்பிக்கப்படுவார்கள். ஒரு கிறிஸ்தவ ஜீவியத்தை ஜீவித்துக் காட்டுவதற்கான வல்லமையை அவர்கள் பெற்றுக் கொள்ளுவார்கள்; சோதனையை ஜெயிக்கிறதற்காக வல்லமையை அவர்கள் பெற்றுக் கொள்ளுவார்கள். 'அவர்கள் மேல் வீட்டறையில் அவரது நாமத்தினால் ஜெபித்த பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டனர், ஆராதனைக்கான வல்லமை இறங்கியது'' என்ற பாடலை சற்று முன் நாம் பாடியதுபோல் ஆராதனைக்கான வல்லமை அவர்கள் மேல் வரவேண்டும். அதைத்தான் அவர்கள் விரும்புகிறார்கள்.

315. உம்முடைய ஊழியக்காரன் என்ற முறையில் நான் உம்மிடம் ஜெபிக்கிறேன், பிதாவே; அவர்கள் தங்கள் கரங்களை உயர்த் தியதை நீர் காண்கையில், அவர்கள் உமக்கு ஒரு உறுதி மொழி அளித்துள்ளனர், அவர்கள் ஒரு வாக்குறுதியை செய்துள்ளனர், என்னவெனில், நீர் அவர்களை நிரப்பும் வரையிலும், விடாமல் ஜெபிப்பார்கள் என்றும், அதை விட்டுவிடமாட்டார்கள் என்றும் உறுதி கூறியுள்ளனர், அவர்களுடைய ஜீவியத்தில், போதுமான அளவு உம்முடைய பரிசுத்த பிரசன்னத்தினாலே நீர் நிரப்பியருளும். அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்படவேண்டும் என்று, கர்த்தாவே, அவர்கள் சார்பில், உம்முடைய ஊழியக்காரன் என்ற முறையில், நான் என்னுடைய ஜெபத்தை ஏறெடுக்கிறேன். அது அவர்களுக்கு நேரிடுகிற வரையிலும் இந்த சபையை விட்டு அவர்கள் அகல வேண்டாம் என்று நான் ஜெபிக்கிறேன்; அவர்கள் ஒவ்வொரு ஆத்துமாவும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும் வரையிலும், அவர்கள் இங்கேயே இருக்கவேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். இதை அளித்தருளும், கர்த்தாவே.

316. நீர் சர்வ வல்லமையுள்ள தேவன்; உலகத்தின் பாவத்தைப் போக்க நீர் மாம்சத்தில் பிரசத்தியட்சமானீர். நீர் மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்து, உன்னதத்திற்கு எழுந்தருளினீர். இன்றிரவில், நீர் எங்கள் நடுவே, பரிசுத்த ஆவி என்ற பெயரோடு இங்கே இருக்கிறீர். அவர்கள் ஒவ்வொரு வரையும், பிதாவே, நீர் எங்கள் விலையேறப்பெற்ற கர்த்தராகிய நீர், உம்மைக் கொண்டே நிரப்பி யருளும். அவர்கள் தாமே உம்முடைய இராஜ்யத்திற்கு ஒரு ஆசீர்வாதமாகவும், வரப்போகும் உலகுக்கும் இருக்கட்டும். ஒரு நாளிலே நீர் சாலையின் முடிவுக்கு வரும்பொழுது, அது இன்றைய நாளாகவும் இருக்கக்கூடும், அது எப்பொழுது இருக்கும் என்பதை நாங்கள் அறியோம்... எடுத்துக்கொள்ளப்படுதலில் போகிறவர்களுக்குள்ளே நானும் ஒருவனாக எண்ணப்படட்டும், கர்த்தாவே. எடுத்துக்கொள்ளப்படுதலில் போகிறவர்களுக்குள்ளே இவர்களும் காணப்படட்டும். தெய்வீக பிரசன்னத்தில் உள்ள ஒவ்வொருவரும், பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட யாவரும், அவர்கள் தேவனுக்குச் சொந்தமானவர்களாமே, அவர்கள் யாவரும் எடுத்துக் கொள்ளப்படுதலில் போவார்களாக.

317. இவர்களை நீர் ஏற்றுக்கொள்ளும், பிதாவே. அவர்கள் இப்பொழுது உம்முடையவர்களாக இருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து வின் நாமத்தினால் வேண்டுகிறேன். ஆமென்



114. (ஒலிநாடாவில் காலியிடம் - ஆசி). மக்கள் சபையில் பின்னால் உட்கார்ந்துகொண்டு, அன்னிய பாஷைகளில் பேசுபவரையோ அல்லது ஆவியில் நடனமாடுபவரைக் குறித்தோ பரிகசிக்கின்றனர்; அதனால் பரிசுத்த ஆவியை அவர்கள் தூஷித்தா யிற்று, இனி அவ்வளவுதான், அவர்கள் என்றென்றைக்குமாக முத்திரையிடப்பட்டுவிட்டார்கள். "எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை''. அதை நீங்கள் ஏறிட்டுப் பார்க்க வேண்டாம். ஒன்று அதைவிட்டு நீங்கியிருங்கள், அல்லது அதை ஏற்றுக்கொள்ளுங்கள்.

115. நாம் அந்த வேதவாக்கியத்தை விட்டு கடந்து சென்றுவிடு வோம். அதைத் தொடர்ந்து மீதியுள்ள வசனங்களை வாசியுங்கள்: தேவன் அங்கே என்ன சொல்லியிருக்கிறார் என்பதைப் பாருங்கள். ஜனங்கள் மோசேயிடம், "ஓ, மோசே, நீரே பேசும், தேவன் இனி மேல் பேசவேண்டாம். நாங்கள் இக்காரியத்தை கேட்டேயிருக்கக் கூடாது என்று கருதுகிறோம். மோசே, நீரே எங்களிடம் பேசும். தேவன் எங்களோடே பேசினால் நாங்கள் செத்துப்போவோம்'' என்று கூறினார்கள். தேவன் ஒரு பாவ நிவிர்த்தியை உண்டாக்கினார் என்பதைப் பாருங்கள்.

116. "சிங்காசனத்தின் சத்தம்'' என்பதை இப்பொழுது பார்ப் போம். இந்த சிங்காசனத்தை கவனியுங்கள். ''சிங்காசனத்திற்கு முன்பாக ஏழு நட்சத்திரங்கள்'' நட்சத்திரங்களின் சத்தம். ''சத்தங்கள்'' என்பதைக் கவனியுங்கள். வெளிப்படுத்தின விசேஷம் 4ம் அதிகாரத்தில் அல்லது 5ம் அதிகாரத்தில் இங்கே நாம் காண்பது என்னவெனில், ''அந்தச் சிங்காசனத்திருந்து மின்னல் களும் இடிமுழக்கங்களும் சத்தங்களும் புறப்பட்டன'' ஒரு சத்தம் அல்ல அது, ''சத்தங்கள்'' என்று பன்மையில் கூறப்பட்டுள்ளது. அது என்ன? தேவன் சபையிடம் ஏழு ஆவிகள் மூலமாக தன்னையே பிரதிபலித்து காண்பித்துக்கொண்டு, பேசிக் கொண்டிருக்கிறார். தேவனுடைய உண்மையான அபிஷேகம் பெற்றவர் பேசும்போது, அதுவே தேவனுடைய சத்தமாயிருக்கிறது. அதைப் புறக்கணிப்பதானது, அந்த குத்துவிளக்கை அகற்றிவிடுவதாகும். பார்த்தீர்களா? "சத்தங்கள்'', ஏழு சபைக் காலங்களின் சத்தம் (இந்த மூலையில்) சத்தங்கள் இடிமுழக்கத்துடனும், மின்னலுடனும் பேசிக் கொண்டிருக்கின்றன.

117. இந்நாட்களில் இவ்வாறு அவர்கள் கூறுகிறார்கள்: ''நல்லது, பிரசங்க பீடத்திலிருந்து 'நரகம்' என்ற சொல்லை உபயோகிப்பதை நாங்கள்

நான் அவரை சமாதானத்துடன் சந்திக்கவே விரும்புகிறேன், அவ்விதமாக அல்ல) அவர்கள் மலையின் அடிவாரத்தில் நின்றார்கள்.''

யாத். 19:17.

111. அந்த மலையைச் சுற்றிலும் எல்லை வரையறை செய்யப்பட்டி ருந்தது. ஒரு மாடு அதைத் தொட்டாலும் அது அப்பொழுதே சாகவேண்டும். தேவனுடைய சமுகத்தில் வரமுடியாது. தேவன் ... "மோசே ஜனங்களை புறப்படப் பண்ணினான்''

112. அடுத்து 18ம் வசனம் :

''கர்த்தர் சீனாய் மலையின்மேல் அக்கினியில் இறங்கின படியால், அது முழுவதும் புகைக்காடாய் இருந்தது; அந்தப் புகை சூளையின் புகையைப்போல எழும்பிற்று; மலை முழுவதும் மிகவும் அதிர்ந்தது."

யாத். 19:18

113. அவர் எவ்விதமாக இறங்கினார்? அவர் தமது ஷெகினா மகிமையில் இறங்கிடவில்லை. ஆனால் அவரது நியாயத்தீர்ப்பின் சினத்தில்தான் இறங்கிவந்தார்.

"... அந்தப் புகை சூளையின் புகையைப்போல எழும்பிற்று; மலை முழுவதும் மிகவும் அதிர்ந்தது. (சகோதரனே, நான் அந்த ஸ்தலத்தில் இருக்க விரும்பவில்லை).

எக்காள சத்தம் வரவர மிகவும் பலமாய்த் தொனித்தது; மோசே பேசினான்; தேவன் இவனுக்கு வாக்கினால் மறுமொழி கொடுத்தார். (மோசே தான் பேசினான், ஜனங்கள் பேசவில்லை; அவர்கள் மிகவும் நடுங்கிக் கொண்டிருந் தார்கள்).

கர்த்தர் சீனாய் மலையிலுள்ள கொடுமுடியில் இறங்கினபோது, கர்த்தர் மோசேயை மலையின் கொடுமுடியிலே வரவழைத்தார்; மோசே ஏறிப்போனான்.

அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: ஜனங்கள் பார்க்கிறதற்கு எல்லையைக் கடந்து கர்த்தரிடத்தில் வராதபடிக்கும், அவர்களில் அநேகர் அழிந்துபோகாத படிக்கும், நீ இறங்கிப்போய் அவர்களை உறுதியாக எச்சரி."

யாத். 19:18-21



318. இப்பொழுது, பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்து, இந்த மக்கள் அருகே நின்றுகொண்டிருக்கிற மற்றவர்கள் யாவரும் அவர்கள் மேல் உங்கள் கைகளை வையுங்கள்.

இம்மானுவேலின் இரத்தத்தால் நிறைந்த ஊற்றுண்டே எப்பாவத்தீங்கும் அதினால் நிவிர்த்தியாகுமே நிவிர்த்தியாகுமே நிவிர்த்தியாகுமே எப்பாவத்தீங்கும் அதினால் நிவிர்த்தியாகுமே மா பாவியான கள்ளனும், அவ்வூற்றில் மூழ்கினான் மன்னிப்பும் மோட்சானந்தமும், அடைந்து பூரித்தான் அவ்வாறே நானும் இயேசுவால் விமோசனம் பெற்றேன் என் பாவம் நீங்கிப் போனதால் ஓயாமல் பாடுவேன், ஓயாமல் பாடுவேன் ஓயாமல் பாடுவேன்

என்பாவம் நீங்கிப் போனதால் ஓயாமல் பாடுவேன்,

319. இப்பொழுது உங்களுடைய கரங்களை உயர்த்தி தேவனுக்கு ஸ்தோத்திரத்தை செலுத்துங்கள். "நன்றி உமக்கே, கர்த்தாவே, நான் காலூன்றி எழுந்து நின்றேன், நான் உமக்கு துதி செலுத்து வேன். உம்முடைய ஆசீர்வாதங்களுக்காக நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன்; உம்முடைய நன்மைக்காகவும், எனக்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை தந்ததற்காகவும் உமக்கு நன்றி செலுத்துகிறேன், கர்த்தாவே, நன்றி கர்த்தாவே, நீர் வாக்குரைத்ததை எங்களுக்கு தருவதற்காக எங்களை அழைத்ததற்காக உமக்கு நன்றி; நீர் உம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுகிறீர். நீர் அதை திரும்ப எடுத்துக் கொள்ளமாட்டீர். நாங்கள் உம்மை விசுவாசிக் கிறோம்.

320. நீங்கள் சந்தோஷமாயிருக்கவில்லையா? ''கர்த்தருக்கு ஸ்தோத்திரம்'' என்று கூறுங்கள். டெடி...? இன்னும் ஒரு தடவை... "இது எனக்கு பரலோகத்தைப் போல் உள்ளது, இதைப் புரிந்துகொள்ள முடியாத அநேகரை நாம் காண்கிறோம்'' என்ற பாடல்.

நமது மகிழ்ச்சி, விடுதலை இவற்றின் காரணம் அறியாமல், அநேகர் இருப்பதை நாம் காண்கிறோம் நாம் யோர்தானை கடந்து கானான் எனும் அழகிய

தேசத்தினுள் வந்துவிட்டோம். இது எனக்கு பரலோகத்தைப் போலுள்ளது. ஓ இது எனக்கு பரலோகத்தைப் போலுள்ளது ஓ இது எனக்கு பரலோகத்தைப் போலுள்ளது நல்லது, நான் யோர்தானைக் கடந்து அழகிய கானான் தேசத்தினுள் பிரவேசித்தேன், இது எனக்கு பரலோகத்தைப் போலுள்ளது. நான் மகிழ்ச்சியடைகையில், நான் பாடி

ஆர்ப்பரிப்பேன் நான் காண்பதை பிசாசு நம்பவில்லை ஆனால் நான் ஆவியால் நிரப்பப்பட்டேன், அதில் ஐயம் ஏதுமில்லை அதுவே நான் அடைந்திட்ட பாக்கியம் அதுவே நான் அடைதிட்ட பாக்கியம் (தேவனுக்கு துதி) ஒ, இது எனக்கு பரலோகத்தைப் போலுள்ளது நான் யோர்தானைக் கடந்து அழகிய கானானுக்குள்

பிரவேசித்தேன் இது எனக்கு பரலோகத்தைப் போலுள்ளது.

321. அது உங்களை சந்தோஷப்படுத்தவில்லையா? நல்லது. யாருடனாவது கைகுலுக்கி, "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! இது பரலோகத்தைப் போலுள்ளது'' என்று கூறிடுங்கள்.

துக்கத்தையும், வேதனையும் சுமந்த பிள்ளையே இயேசுவின் நாமத்தை எடுத்துக்கொள்ளுங்கள் அது உங்களுக்கு மகிழ்ச்சியையும் ஆறுதலையும் அளித்திடுமே நீங்கள் போகுமிடமெல்லாம் அதை எடுத்துச்செல்லுவீர் அந்நாமம் விலையேறப்பெற்றது, ஓ, அது எத்தனை இனிமை பூலோகத்தின் நம்பிக்கையும், பரத்தில் மகிழ்ச்சியுமாமே அது விலையேறப்பெற்ற நாமம், மிக்க இனிமையானதுவே பூவின் நம்பிக்கையும், பரத்தில் மகிழ்ச்சியுமாமே அது நம் யாத்திரை முடிவு பெறுகையில், நாம் இயேசுவின் நாமத்தில் அவர் பாதத்தில் சாஷ்டாங்கம் செய்து வணங்குவோம், அவரை இராஜாதி இராஜவாக முடிசூடிடுவோம் நாம் விலையேறப்பெற்றதும் இனிமையானதும் அந்நாமமே பூவின் நம்பிக்கையும், பரத்தின் மகிழ்ச்சியுமாமே விலையேறப்பெற்ற நாமமது, மிகவும் இனிமையானது பூவின் நம்பிக்கையும் பரத்தின் மகிழ்ச்சியுமாமே அந்நாமம் இப்பொழுது நம்முடைய தலைகளைத் தாழ்த்தி, மெதுவாக... எப்பொதும் இயேசுவின் நாமத்தை எடுத்துக்கொள்வீர் அது கண்ணிகளினின்று காக்கும் கேடயமாமே சோதனைகள் உன்னை சூழ்ந்து கொள்ளுகையில் அப்பரிசுத்த நாமத்தை ஜெபத்தில் உச்சரிப்பீர் அது விலையேறப்பெற்ற நாமமது, இனிமையானதுவே.



மகா பலத்த எக்காள சத்தமும் உண்டாயிற்று: (எக்காள சத்தமானது என்ன? பிரதான தூதன்) பாளயத்திலிருந்து ஜனங்கள் எல்லாரும் நடுங்கினார்கள் (கவனியுங்கள்!).

யாத். 19:16

107. "நியாயத்தீர்ப்பு!" வ்யூ! அவர்கள் நடந்து அங்கு சென்றிருந் தார்கள். அவர்கள் பிரயாணம் செய்ய தேவன் அவர்களுக்கு கிருபை அளித்தார். ஆனால் அவர்களோ ஒரு நியாயப்பிரமாணம் வேண்டுமென்று கோரினர். தேவன் அவர்களை ஒரு ஸ்தாபன ரீதியாக இல்லாதவர்களாக இருக்கும்படி விரும்பினார். ஆனால் அவர்களோ, தேவனைப் பின்பற்றுவதையும், அவரது ஆதிக்கத் தினுள் வாழ்வதையும், அவரது வல்லமையின் கீழ் வாழ்வதையும் விட, அதைக்கொண்டு ஒரு ஸ்தாபனம் உண்டாக்கிக்கொள்ளவும், எதைப்பற்றியாவது தர்க்கிக்கவுமே விரும்பினார்கள். கிருபையானது அவர்களுக்கு ஒரு தீர்க்கதரிசியை, பாவப்பிராயச்சித்தத்திற்காக ஒரு ஆட்டுக்குட்டியை அளித்திருந்தது; கிருபையானது இவ்வெல்லா காரியங்களையும் அவர்களுக்கு அளித்தது. ஆயினும் அவர்களோ நியாயத்தீர்ப்பையே விரும்பினார்கள். தாங்கள் கிரியை செய்யும்படி ஒன்றை அவர்கள் விரும்பினர்.

108. "அவர்களை கூடிவரச் செய்: அது என்னவென்பதை நான் அவர்களுக்கு அறியச்செய்வேன், அது என்னவென்று அவர்களுக்கு காண்பிப்பேன்'' என்றார். படியுங்கள். கவனியுங்கள். அவ்வெக் காள சத்தமானது வரவர பெரிதாகிக்கொண்டே வந்து, அது பூமியை அசையப் பண்ணத்தக்கதாக அந்த அளவுக்கு பலமாகத் தொனித்தது. நியாயத்தீர்ப்பானது என்னவென்பதை நீங்கள் பார்த்தீர்களா? எனக்கு அது வேண்டாம். எனக்கு கிருபையைத் தாரும்.

109. (சகோரன் ஃப்ரெட், ''சகோதரன் பிரன்ஹாம் அவர்களே'' என்று அழைக்கிறார் - ஆசி.). (அவர் சகோதரன் பிரன்ஹாமிடம், அவர் கடைசியாகக் குறிப்பிட்ட வேதவசனக் குறிப்பு எது என்பதைக் கேட்கிறார் - ஆசி.) அது யாத்திராகமம் 19ம் அதிகாரம் 16ம் வசனம், சகோதரன் ஃப்ரெட் அவர்களே. யாத்திராகமம் 19:16.

110. இப்பொழுது 17ம் வசனத்தைக் கவனியுங்கள்.

''அப்பொழுது ஜனங்கள் தேவனுக்கு எதிர்கொண்டுபோக, மோசே அவர்களைப் பாளயத்திலிருந்து புறப்படப் பண்ணினான்; (ஓ, என்னே!

இரத்தத்தையும் கிருபாசனத் தின் மேலும் அதற்கு முன்பாகவும் தெளித்து,

இஸ்ரவேல் புத்திரருடைய தீட்டுகளினிமித்தமும், அவர்களு டைய சகல பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய மீறுதல்களினிமித்தமும், பரிசுத்த ஸ்தலத்திற்காகப் பிராயச்சித்தஞ் செய்து, அவர்களிடத்தில் அவர்களுடைய தீட்டுகளுக்குள்ளே நிற்கிற ஆசரிப்புக் கூடாரத்திற்காகவும் அப்படியே செய்யக்கடவன்''

லேவி. 16:15-16

104. அது என்னவாயிருந்தது? 'கிருபாசனம்''. அவைகள் இப்பொழுது எங்கேயுள்ளன? உடன்படிக்கைப் பெட்டியினுள் என்ன இருந்தது? பத்துக் கற்பனைகள் இருந்தது. அதில் ஒன்றை மீறினால் கூட இரக்கம் இன்றி மரிக்க வேண்டியதுதான். ஆனால் உங்களுக்கு இரக்கம் கிடைப்பதற்காக, இரத்தமானது பலிபீடத் தின் மீது சிந்தப்பட்டு, கிருபாசனத்தின்மீது தெளிக்கப்பட வேண்டியதாயிருந்தது. கிருபாசனமே, நீங்கள் மண்டியிட்டு, இரக்கத்திற்காக வேண்டுதல் செய்யக்கூடிய பீடமாக இருக்கிறது. மனிதன் முழங்கால்படியிட்டு, தேவனை நோக்கி இரக்கத்திற்காக கெஞ்சும்படி, உள்ள பழங்காலத்துப் பாணியிலான பீடமானது நமது சபைகளை விட்டு நாம் எடுத்துப்போட்டுவிடாதபடிக்கு தேவன் நம்மை தடுத்தாட்கொள்வாராக. கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தினிடமிருந்து, இரக்கமானது ஏராளமாகவும் இலவசமாக வும் பாய்ந்தோடிக்கொண்டிருக்கிறது. இப்பொழுதும்கூட அந்த இரக்கம் உண்டு. அதுவே இரக்கத்தின் ஆசனமாயிருக்கிறது.

105. ஆனால் இங்கே, இரக்கத்தின் ஆசனமாக இது இல்லை என்பதை நீங்கள் கவனியுங்கள். ஏனெனில் அங்கே "மின்னல் களும், இடி முழக்கமும் சத்தங்களும் இருக்கின்றன. இரக்கத்தின் ஆசனத்தில் மின்னலும், இடிமுழக்கங்களும் கிடையாது. நியாயத்தீர்ப்பின் சிம்மாசனத்தில் தான் அவ்வாறு இருக்கும்.

106. நாம் யாத்திராகமம் 19ம் அதிகாரம் 16ம் வசனத்தை எடுத்துக் கொள்வோம். யாத்திராகமம் 19ம் அதிகாரம் 16ம் வசனத்தில் இருந்து ஆரம்பிப்போம்.

உண்டாயிற்று ...... (என்னவென்று கவனியுங்கள்.... தேவன் சீனாய் மலையின்மேல் இறங்கியபொழுது ) மூன்றாம் நாள் விடியற்காலத்தில் இடிமுழக்கங்களும் மின்னல் களும், மலையின்மேல் கார்மேகமும்

## வெளிப்படுத்தின விசேஷம்

## நான்காம் அதிகாரம்

## முதலாம் பாகம் #1

## REVELATION CHAPTER-4, PART- #1

## பிரான்ஹாம் கூடாரம், இந்தியானா, அமெரிக்கா

## 60-12-31

1. ... நானே ..... அது தான் அநேக மக்களுடைய மனப் பான்மையாக இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். அங்கே இருக்கிற அந்த இளம் சகோதரி பாடிய பாடலின் கடைசி வரியை நான் நிச்சயமாக மெச்சுகிறேன். நாம் புத்தாண்டின் இரவில் வந்து கொண்டிருக்கையில், இந்த இராத்திரிக்கு பொருத்தமான இதை விட சிறந்ததொரு பாடலை பாட முடியும் என்று நான் நினைக்கவில்லை.

2. புத்தாண்டை நாம் நல்லபடியாக ஆரம்பிக்கிறது போல் தெரிகிறது; ஆண்டின் இந்த சமயத்தில் இண்டியானாவுக்கு உரித்த சீதோஷ்ண நிலைக்கு ஏற்றபடி, வெளியே பனி பெய்து கொண்டும், பனி நீர் தெளித்துக் கொண்டும் இருக்கிறது, ஜார்ஜியா விலிருந்தும், ஒஹையோவிலிருந்தும் மக்கள் வந்திருக்கிறீர்கள். சகோதரன் டோ, சகோதரி டோ ஆகியோர், ஓஹையோவில் இதே போன்ற சீதோஷ்ண நிலை இருக்கிறது என்பதை அறிவீர்கள். ஆனால் நாம் ஒரு பரம தேசத்திற்குப் போய்க்கொண்டு இருக்கி றோம். அங்கே அந்த விதமானவையெல்லாம் இருக்காது. அங்கே இப்படியிருக்காது என்பதை பாருங்கள்.

3. இன்று புத்தாண்டுக்கு முந்திய இரவு வேளையாயிருக்கிறது. நிச்சயமாக ஒவ்வொருவரும் புத்தாண்டுக்காக ஒரு பிரதிக்கினையை எழுதி வைக்கிறார்கள். புத்தாண்டுக்காக ஒரு உறுதிமொழியை செய்யப்போகிறீர்கள், பிறகு, நாளைக்கு நாளில், அவையாவும் முறிக்கப்படும். எனவே ஒவ்வொரு ஆண்டும், ஒரு புதிய பக்கத்தை நீங்கள் திருப்புகிறீர்கள். அதன்பிறகு அடுத்த நாள் காலை யில் பழையபடி திரும்பிவிடுகிறீர்கள்.

4. ஆனால் ஒரு காரியத்தை மாத்திரம் நான் கூற விரும்புகிறேன். அது, அப்போஸ்தலனாகிய பவுல், "பின்னானவைகளை மறந்து ,'' கடந்த காலத்தில் உள்ள என் அனைத்து தவறுகளையும், மற்றும் நான் செய்திட்ட அனைத்து காரியங்களையும் தள்ளிவிட்டு, "கிறிஸ்து இயேசுவுக்குள்..... பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்'' என்று கூறியதைப் போல் கூற விரும்புகிறேன். கடந்த ஆண்டில் உள்ள எனது பிழைகளும், என் ஜீவியத்தின் கடந்த பாகத்தைக் குறித்தும் நான் விசனமடைகிறேன். எனவே, பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருவதற்காக அவருடைய கிருபையை மாத்திரம் நான் தாழ்மையுடன் அவரிடம் கேட்டுக் கொண்டிருக்கிறேன். நம் யாவருடைய சாட்சியும் அந்த விதமாகத் தான் இருக்கும் என்றும், அவ்விதமாகத்தான் நாம் யாவரும் உணருகிறோம் என்றும் நான் நம்புகிறேன்.

5. இன்று இரவில் கால நிலையானது மோசமாக இருப்பதற்காக வருந்துகிறேன். அதனால் ஜனங்கள் வர முடியாமறப்போயிற்று, நான் சகோதரன் நெவில் அவர்களை தொலைபேசியில் அழைத்துப் பேசினேன். அவர் இங்க வரமுடியுமா இல்லையா என்பதை நான் அறியவில்லை. பிறகு, சகோதரன் இல்லையா என்பதை நான் அறிய வில்லை. பிறகு சகோதரன் ஸ்கேக்ஸ் அவர்கள் வந்தார். அவர் மிகத் தொலைவிலுள்ள கென்டக்கியிலிருந்து வருகிறார். அங்கே பனிக் கட்டி மூன்று அடி உயரத்திற்கு அல்லது இன்னும் சற்று அதிகமாக பெய்ந்திருக்கிறது. ஏறத்தாழ இங்குள்ளதைப் போலவே இருக்கிறது'' என்று அவர் கூறினார். இரு தடவைகள் அவர் சென்று கொண்டிருந்த வாகனத்தை, ஒரு விவசாயி பனியைவிட்டு வெளியே தனது ட்ராக்டரைக் கொண்டு இழுத்துக்கொண்டு வந்து, மலையின் மேல் கொண்டு வந்துவிட்டிருக்கிறார். எனவே, ''நல்லது, பனிக்கட்டி இரண்டு அல்லது மூன்று அங்குலங்கள் உயரம் இருக்குமானால், அதைப்போல் இருக்குமளவும், நாங்கள் அதைப் பொருட்படுத்தமாட்டோம்'' என்று எண்ணினேன். ஆனால் சாலைகள் வாகனங்கள் கடந்து செல்லத்தக்கதாகத்தான் உள்ளன, யாவரும் பிரயாணம் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

6. இப்பொழுது நிச்சயமாக, இன்றிரவானது, வெவ்வேறு இடங்களிலிருந்து வந்திருக்கிற பல்வேறு ஊழியக்காரரர்கள் மூலமாக நாம் பிரசங்கம் கேட்க கூடியதான இரவாக இருக்கிறது. இன்றிரவில் வெவ்வேறு பாகங்களிலிருந்தும் ஒருவேளை நடுநிசி வரையிலும் வந்து கொண்டிருப்பார்கள். அவர்கள் அமர்ந்திருந்து, பழைய ஆண்டு கடந்து



பின்பு காளையின் இரத்தத்திலே கொஞ்சம் எடுத்து, கீழ்ப்புறமாக நின்று, தன் விரலினால் கிருபாசனத்தின் மேல் தெளித்து, அந்த இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து கிருபாசனத்துக்கு முன்பாக ஏழு தரம் தன் விரலினால் தெளிக்கக்கடவன்

லேவி. 16:14

102. "கீழ்ப்புறமாக'' என்ற வார்த்தையை மறந்துவிட வேண்டாம். எத்திசையிலிருந்து இயேசு வருகிறார்? கிழக்கிலே, ஒரு மகிமையின் மேகத்திலே, சூரியன் (S-U-N) எத்திசையில் உதிக்கிறான்? கிழக்கு. குமாரன் (S-O-N) எத்திசையிலிருந்து உதிப்பார்? அதுவும் கிழக்கு. கிருபாசனமானது எத்திசையில் அமைந்திருந்தது? கிழக்கு நோக்கி. நான் ஏன் உங்களையெல்லாம் கிழக்கு நோக்கி அமரப் பண்ணியிருக்கிறேன்? ஏன்? பலிபீடம் கிழக்கு நோக்கியே உள்ளது. அது எவ்வளவு அழகாக அமைந்திருக்கிறது என்பதை சிறிது நேரத்தில் நாம் பார்ப்போம். அதை படமாக வரையப்போகிறேன். இந்த வரைப்படங்களை சில நிமிடங்களில் வரைந்து எடுத்துக்கொள்வதற்காக காகிதங்களைக் கொண்டுவரும்படி, எத்தனை பேர்களிடத்தில் சொல்ல முடியுமோ அத்தனை பேர்களிடத்தில் நான் கூறியுள்ளேன். நல்லது. ".... கீழ்ப்புறமாக நின்று, தன் விரலினால் கிருபாசனத்தின்மேல்

இரத்தத்தை ஏழு தரம் தெளிக்கக்கடவன்."

103. ஓ, இது மிகவும் அழகாக இருக்கவில்லையா? ''கிழக்கு நோக்கி ஏழு தரம்'. அது என்ன? ஏழு சபைக் காலங்கள் இரத்தத்தினால் மூடப்பட்டிருக்கும். அல்லேலூயா! இயேசு கிறிஸ்துவின் இரத்தமானது ஒவ்வொரு பாவியையும் இரட்சிக் கவும், ஒவ்வொரு வியாதியஸ்தரையும் குணமாக்கவும், ஒவ்வொரு அற்புதங்களையும் புரியவும், ஒவ்வொரு அடையா ளமும் நிறைவேறவும், எவ்வாறு கடந்த காலத்தில் போதுமானதாக இருந்ததோ, அதேபோல் இன்றும் என்றும், ஒவ்வொரு காலத்திலும் மிகவும் போதுமானதாக இருக்கிறது. கிறிஸ்து வருவதற்கு ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பாக வெகுகாலத்திற்கு முன்பாகவே, பழைய ஏற்பாட்டின் காலத்தில் "ஏழு தரம்' தெளிக்கப்பட்டது. அதைப் பற்றி எண்ணிப்பாருங்கள். ''ஏழு தரம்'' அடையாளச் சின்னம்.

''பின்பு ஜனத்தினுடைய பாவநிவாரண பலியான வெள்ளாட்டுக் கடாவை அவன் கொன்று, அதின் இரத்தத்தை திரைக்கு உட்புற மாகக் கொண்டு வந்து, காளையின் இரத்தத் தைத் தெளித்தது போல, அதின்

98. ஒ, நான் இந்த சிறிய சிங்காசனத்தை கிறிஸ்துவின் ஆசனத்தண்டையில் எடுத்துக்கொண்டு போய், அவரது இரத்தத்தை ஏற்றுக்கொள்ளட்டும். கர்த்தாவே, நான் என் கையில் வேறெதுவும் என்னுடன் கொண்டுவரவில்லை. இயேசுவின் இரத்த ஊற்றைத்தவிர

(நான் அறிந்ததெல்லாம் அதைப்பற்றி மாத்திரமே) வேறே ஊற்றை நான் அறியேன், இதுவே எனது நம்பிக்கையும் ஆதரவும் இயேசுவின் இரத்தம் அன்றி வேறெ நம்பிக்கை இல்லை.

99. எட்டி ப்ரூயிட் இவ்வாறு எழுதியதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. அவர் ஒரு கிறிஸ்தவனாக இருந்தபோது, ஊக்கமான கிறிஸ்தவனாக இருந்தபோது, அவரது பாடல்களில் வாங்கிக் கொள்ள அவர்கள் விரும்பவில்லை. ''ஒருநாள் நான் ஒன்றை இயற்றுவேன், அவர்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள்'' என்று கூறினார். மக்கள் பக்திப் பாடல்களை இன்னும் கூடுதலாக நவீன மான ஒன்றை விரும்பிக்கொண்டிருந்தார்கள். ஒரு நாளிலே ஆவியானவர் அவரை ஆட்கொண்டபோது, அவர் எழுதுகோலை எடுத்து பின்வருமாறு எழுதினார்.

எல்லாருக்கும் மா உன்னதர் கர்த்தாதி கர்த்தரே மெய்யான தேவ மனிதன் நீர் வாழ்க - இயேசுவே! நான் நிற்கும் பாறை கிறிஸ்துதான் வேறஸ்திபாரம் மணல்தான்.

வேறஸ்திபாரம் மணல்தான்.

100. சபையானாலும், நண்பனானாலும், சத்துருவானாலும், தேசமா னாலும், ஐசுவரியங்களானாலும், வறுமையானாலும், நன்மையா னாலும், அது என்னவாயிருந்தபோதிலும், வேறெந்த அஸ்திபாரமும் சரியும் மணல்தான். அவை யாவும் ஒழிந்துபோக வேண்டியது தான். அதுதான் நடக்கும். ஆனால்: நான் நிற்கும் உறுதியான பாறை கிறிஸ்துதான் வேறெந்த அஸ்திபாரமும் சொரி மணல்தான் (அதை நினைவில் கொள்ளுவீர்)

101. வேதாகமத்தின் பின் பகுதியில் உள்ள லேவியராகமம் 16ம் அதிகாரத்திற்குப் போய் அங்கே லேவியருக்குரிய பிரமாணங் களிலே பார்ப்போமாக. லேவியராகமம் 16ம் அதிகாரம். 14ம் வசனத்தில் துவங்குவோம். இந்த காரியங்களின் பேரில் நான் எனது நேரத்தை எடுத்துக்கொண்டு, இவைகளை நான் பிரசங்கித்தாக வேண்டும். லேவியராகமம் 16:14.



போகவும், புத்தாண்டு வருவதையும் கவனித்துக்கொண்டிருப்பார்கள் என்று நான் எண்ணுகிறேன். வழக்கமாக அவர்கள் பீடத்தண்டையில் கூடி வந்து, தேவனுக்கென்று தங்களுடைய புதிய பிரதிக்கினைகளை செய்து, ஏற்கனவே செய்த பிரதிக்கினைகளை புதுப்பித்துக்கொள்ளவும் செய்வார்கள்.

7. நான் சகோதரன் நெவில் அவர்களிடம் கூறினேன்.... அவர் வருகிறாரா என்பதைப்பற்றி அறிவதற்காக நான் அவரை தொலை பேசியின் மூலம் அழைத்துப் பேசினேன். 'அவர் வராவிடில், என்னால் முடிந்தவரை சிறப்பான அளவுக்கு தொடர்ந்து ஆரா தனையை நடத்திச் செல்வேன். பின்பு காலையிலும் அவரால் வர இயலாமற்போனால், அவர் இல்லாத அவ்வேளையில் நான் முடிந்த வரை நல்ல முறையில் தொடர்ந்து நடத்திச் செல்வேன்'' என்று கூறினேன். இன்றிரவில் பதினைந்து நிமிட நேரத்திற்கு மட்டுமே உள்ள ஒரு செய்தியை அளிக்க நான் முயற்சி செய்யப்போகிறதைப் பற்றி சிந்தித்துக்கொண்டிருக்கிறேன் என்று நான் அவரிடம் கூறினேன். இங்கே உட்கார்ந்து காத்துக்கொண்டிருக்கிற இன்னும் பல்வேறு ஊழியக்காரர்கள் இருப்பதை நான் காண்கிறேன்.

8. எனவே, நான் வெளிப்படுத்தின விசேஷப் புத்தகத்தில் இருந்து தொடர்ந்து பிரசங்கிக்கும்படி 4ம் அதிகாரத்தை இப்பொழுது எடுத்துக்கொண்டு ஆரம்பிப்பேன் என்று எண்ணினேன். அதன்பிறகு நாம் 5ம் அதிகாரத்திற்கும், பின்பு 6ம் அதிகாரத்திற்கும், பின்பு இன்னும் முடிந்த வரையிலும் போவோம். அவைகளைப் பார்க்க கர்த்தர் நமக்கு உதவி செய்வாராக.

9. நாம் ஆரம்பிப்பதற்கு முன்னர், ஒரு காரியத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். சற்று நேரத்திற்கு முன்பாக சகோதரன் ட்ரம் மாண்ட் தாம்ஸ் அவர்களும், அவரது மனைவியும் வருகை புரிந் திருக்கின்றனர். இங்கே இன்றிரவில் அச்சகோதரியின் தாயும் தந்தையும் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்கள் இப்பொழுதுதான் ஆப்பிரிக்காவிலிருந்து திரும்பி வந்திருக்கிறார்கள். அங்கே அவர்கள் மகத்தான ஆத்தும ஆதாயக் கூட்டங்களையும், தெய்வீக சுகமளித்தல் ஆராதனைகளையும் நடத்தி விட்டு வந்திருக்கிறார்கள். இந்த இளம் பெண்மணி தன்னுடைய பாட்டியின் ஸ்தானத்தை அன்றொரு நாளில் எடுத்துக்கொண்டு சிறைகளில் கூட்டங்கள் நடத்தி வந்தாள். பாவிகள் கர்த்தரிடம் வந்தார்கள். அந்த இளம் தம்பதியினரை தேவன் எவ்வாறு நடத்தி வருகிறார் என்பதை அறிய அற்புதமாய் இருக்கிறது. அவர்கள்

இருவரும் இப்பொழுது அமெரிக்காவில், சிறிது காலம் சுவிசேஷ ஊழியத்தினிமித்தம் இருக்கிறார்கள்.

10. மேய்ப்பர்கள் யாராவது விரும்பினால்... நான் சகோதரன் ட்ரம்மாண்டுக்கு எழுத விரும்புகிறேன். ட்ரம்மாண்ட்... இப் பொழுது நான் அந்தப் பெயரை சற்று குழப்பி சொல்லிவிட்டேன். ஏன் அவர் ஒரு ஆங்கிலப் பெயரை தரித்துக்கொண்டு, அந்தப் பெயரை மறந்துவிடக்கூடாதா? நாம் அவருக்கு ஒரு எண்ணைக் கொடுப்போம். நீங்கள் என்ன கூறுகிறீர்கள்? எனக்கு சரியாக புரியவில்லை, நம்மில் பாதி பேருக்கு அந்தப் பெயர் வாயில் வராது என்று நான் நினைக்கிறேன். 'ட்ராம்மாண்ட்'' அதுதான் சரியான உச்சரிப்பு என்று நான் எண்ணுகிறேன். மற்றும் சகோதரி சார்லெட் அவர்கள். உங்களில் யாராவது விரும்பினால், நீங்கள் அவர்களை உங்கள் சபையில் அழைத்து, பிரசங்கிக்கக் கேட்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

11. அந்தப் பெண்மணி, சகோதரி சார்லெட் ஒரு சிறுமி. அவள் சற்று முன்னதாக மேடாவிடம் ஆப்பிரிக்காவில் அவளுக்குக் கிடைத்த அனுபவங்களைப் பற்றிய சாட்சியைக் கூறிக்கொண்டிருந்தாள். பில்லி, அது முன் காலங்களை மீண்டும் நினைவுபடுத்தியது, அது ஆப்பிரிக்க மொழியைப் பேசியது போல் இருந்தது. எனவே, அங்கேயும் சரி, இங்கேயும் சரி, போராட்டமானது தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

12. யாராவது சகோதரன் ட்ரம்மாண்ட் அவர்களையும், அவரது மனைவி சகோதரி சார்லெட்டையும், தங்கள் சபையில் விசேஷித்த கூட்டங்களுக்காக அழைக்க விரும்பினால், நீங்கள் சகோதரன் டோனி ஸேபிள் அவர்களுக்கு, எம் எல்ரோஸ் 7-3945 இல் அழைத்துத் தெரியப்படுத்துங்கள். ஊழியக்காரராகிய நீங்கள் யாராவது அதைக் குறித்துக்கொள்ள விரும்பினால் அப்படியே செய்யுங்கள். நான் நிச்சயமாக இச்சகோதரனை உங்களுக்கு சிபாரிசு செய்கிறேன். ஏனெனில் அவர் ஒரு நல்ல பிரசங்கியார் ஆவார். அவர் ஒரு உத்தமமான இளைஞர், அவருக்கு உற்சாகமூட்டி நல்ல ஆரம்பத்தை கொடுப்பது அவருக்கு அவசியமாயிருக்கிறது. அவர் அஞ்சாமை உள்ளவர், ஒரு நல்ல இளைஞர், அவரை நான் மிகவும் விரும்புகிறேன். இப்பொழுது நினைவில் வைத்துக்கொள்ள மீண்டும் கூறுகிறேன்: எம் எல்ரோஸ் நம்பர் 7-3945. இங்கே அவர்களுடைய முகவரி அச்சிட்ட அட்டை உள்ளது, இந்த நம்பரை குறித்துக்கொள்ள உங்களுக்கு இயலாமற்போனால், இன்றிரவில் வெவ்வேறு ஆராதனைகளுக்கு இடையில் வரும் இடைவேளை நேரத்தில் நீங்கள் இங்கே வந்து அந்த



ஆடையைத் தயாரித்தார்கள். ஆனால் பார்க்கக் கூடாதபடி தேவனுடைய பார்வையை அவ்வாடை மறைக்க முடியாது. எனவே, அவர் ஒரு மிருகத்தைக்கொன்று, இறந்து போன மிருகத்தின் தோலை எடுத்து அவர்களுக்கு மூடுவித்தார். இரத்தமானது அந்த ஸ்தானத்தை எடுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. அதுவே அவருடைய கோபத்தை தடுத்து நிறுத்தியது. ஏனெனில் ஒன்று தனது ஜீவனை கொடுத்திருக்கிறது. ஓ தேவனே!

96. அதைப்பற்றி எண்ணிப் பாருங்கள் ! தேவனைத் தடுத்து நிறுத்துவது இரத்தம் மாத்திரமே. தேவன் ஒரே ஒரு இரத்தத்தைப் பார்த்தால்தான் நியாயத்தீர்ப்புக்கு கை நீட்டாமல் நிற்பார், அது அவருடைய சொந்தக் குமாரனின் இரத்தமே. அது அவருடைய சொந்த குமாரனின் இரத்தம்தான் என்பதை அவர் காண்கிற பொழுது, நியாயந்தீர்க்க முன்வரமாட்டார். ஏனெனில் தேவன் தமது குமாரனுக்கு அளித்த ஈவாகும் அது; தாம் உலகத்தோற்ற முன் தெரிந்து கொண்டவர்களை மீட்பதற்காக அவருக்கு அவர் அளித்த ஈவாகும். அதுவே தேவனை நியாயாசனத்தில் இருந்து திரும்பக் கொண்டுவருகிறது. ஆனால் அந்த இரத்தமானது நீக்கப்பட்ட பிறகு, முன்னறிந்துகொள்ளப்பட்டவர்கள் யாவரும் விலை யேறப்பெற்ற அவருடைய சரீரத்தினுள் வந்து சேர்ந்து கொள்வதற் காக அழைக்கப்பட்டு, அவருடைய சபையானது ஆயத்தப்பட்டு, எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகு, அப்பொழுது ஜனங்களின் மேல் தேவனுடைய கோபாக்கினையானது வருகிறது.

97. ஒருபோதும் அவ்விடத்தில் நிற்க விரும்பாதீர்கள். ஓ, சகோதரனே! நான் ஒரு இயந்திரத் துப்பாக்கி முன் நின்று, நான் துண்டு துண்டாக சுட்டுக்கொல்லப்பட்டாலும் பரவாயில்லை; நான் அங்குலம் அங்குலமாக அறுக்கப்படட்டும், பரவாயில்லை; எனக்கு என்ன வேண்டுமானாலும் சம்பவிக்கட்டும். கொலம்பஸ் துறவிகளின் சபதத்தைப்போல் .... (நைட்ஸ் ஆஃப் கொலம்பஸ் Knighs of Columbus என்பது, ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தில் 1882ம் ஆண்டில் துவக்கப்பட்ட ஒரு சர்வதேச சங்கமாகும் இது - மொழிபெயர்ப்பாளர்). அவர்கள் எனது வயிற்றை அறுத்து திறந்து என்னிலுள்ள கந்தகம் மற்றும் இன்னபிற இரசாயனங்களை யெல்லாம் சுட்டெரிக்கட்டும், எனது கரங்களும், கைகளும் துண்டாக்கப்படட்டும், எனக்கு என்ன நேரிட்டாலும் சரி, ஆனால் ஒருபோதும் தேவனுக்கு முன்பாக அந்த வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்புக்கு முன்பாக நான் நிற்கவே வேண்டாம்.

அப்பொழுது அதில் இரக்கம் இருக்குமா? அங்கே ஒரு துளி இரக்கமும் இருக்கப்போவதில்லை. நியாயாசனத் தண்டையில் நீங்கள் இரக்கம் வேண்டும் என்று கதறும் போது, இனிமேல் கதறவே முடியாது என்ற அளவுக்கு கதறின போதிலும் அங்கே கொஞ்சம்கூட இரக்கம் இராது போய்விடும். நீங்கள் ஆகாயத்தில் கத்தித் தீருமட்டும் கதறுவீர்கள், ஏனெனில் அங்கே இரக்கமே இராதுபோகும்.

92. இப்பொழுதே இரக்கத்தின் நாள் உள்ளது. இப்பொழுது நாம் பழைய ஏற்பாட்டில் சிறிது திரும்பிப்போய், இரக்கமானது என்ன என்பதை நாம் அங்கே காண்போம். திரும்பிப்போய், இந்த சிங்காசனத்திற்கு என்ன நேர்ந்தது என்பதைப் பார்ப்போம். இந்த சிங்காசனம் உண்மையிலேயே நியாயத்தீர்ப்பு ஆசனம்தான். இன்றைக்கு இரக்கம் இருப்பதின் காரணம் என்னவெனில், பாவப்பிராயச்சித்த இரத்தத்தால் கிருபாசமானது தெளிக்கப்பட்டி ருக்கிறது. நியாயாசனத்தின் மீது அந்த இரக்கமானது இருக்கிற வரையிலும் அது நியாயாசனமாக விளங்காது, அது இரக்காசன மாகவே இருக்கிறது. ஏனெனில் நியாயத்தீர்ப்பினின்று காக்கும் படி ஒருவர் மரித்திருக்கிறார். அதை நீங்கள் கண்டுணர்ந்தீர் களெனில், 'ஆமென்'' என்று சொல்லுங்கள். (சபையார் 'ஆமென்'' என்று கூறுகிறார்கள் - ஆசி). கிருபாசனத்தின் மீது இரத்தமானது காணப்படுகிற வரையிலும், நியாயத்தீர்ப்பை தடுத்து நிறுத்துவதற்காக ஒருவர் மரித்துள்ளார் என்பதை அது காட்டுகிறது. ஆனால் சபையானது எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் பொழுது, கிருபாசமானது நியாயாசனமாக ஆகிவிடுகிறது.

93. இங்கே புதிய ஏற்பாட்டிலுங்கூட, பரிசுத்த ஸ்தலத்தில் நியாயாதிபதி தன் ஆசனத்தில் வீற்றிருக்கிறார். பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கும் அந்த நியாயாசனம் முழுவதும் புகையால் நிறைந்தது. அது என்னவாயிருக்கிறது? சீனாய் பர்வதத்தில் இருந்த நியாயத் தீர்ப்பு ஆசனத்தைப்போல் அது உள்ளது. தேவனுடைய சிங்கா சனத்தைவிட்டு இரக்கமானது அகன்றுவிட்டது. இரக்கமில்லாமல் தேவன் உலகை நியாயந்தீர்ப்பார். அதை எத்தனை பேர்கள் அறிவீர்கள்?

94. அந்நாளில் அவர் அங்கீகரிக்கும் காரியம் ஒன்றேயொன்று தான் உண்டு. அது என்ன? அதுதான் இரத்தம். கோபமுள்ள தேவனை சாந்தப்படுத்துவது இரத்தம் ஒன்றுதான்.

95. ஆதாமும் ஏவாளும் தங்கள் நிர்வாணத்தை மூடிட, எந்தவொரு மெதோடிஸ்ட்டும், பாப்டிஸ்ட்டும், ப்ரெஸ்பிடேரியனும் அல்லது பெந்தெகொஸ்தேகாரரும் செய்ய முடிந்திருக்கிற அளவுக்கு, ஒரு



கார்டை எடுத்துக் குறித்துக் கொள்ளலாம். அவர்களுடைய நம்பரைக் குறித்துக் கொண்டு, அவர்களை தொலைபேசியில் அழைத்து, உங்களுடைய சபைகளில் ஒரு கூட்டத்திற்காக அவர்களை அழைக்க விரும்பினால், அதைத் தெரியப்படுத்தலாம். அல்லது உங்களுக்குத் தெரிந்தயாராவது அவர்களை அழைக்க விரும்புவார்கள் என்பதை நீங்கள் அறிந்திருந்தால், நீங்களும் தெரியப்படுத்தலாம். ஏனெனில் அவர்கள் அமெரிக்கா எங்கிலும் ஊழியம் செய்து கொண்டு வருகின்றனர்.

13. அது குறிப்பிடத்தக்கதாக இருக்கவில்லையா? ஆப்பிரிக்கா தேசமானது, இங்கே அமெரிக்காவுக்கு மிஷனரிகளை அனுப்பவேண்டிய நிலையில் உள்ளது. இத்தேசம் ஆப்பிரிக்காவை விட மோசமடைந்து விட்டபடியினால், இங்கேதான் அவர்கள் தேவைப் படுகிற அளவுக்கு இருக்கிறது.

14. எனவே, எத்தனை பேர்கள் இன்னொரு ஆண்டு முழுவதும் கர்த்தர் உங்களை பாதுகாத்தார் என்பதற்காக சந்தோஷமாயிருக்கிறீர்கள்? இங்கே, நாம் தானே, சாலையின் முடிவுக்கு வந்திருக்கிறோம். தேவன் தாமே நம்முடைய எல்லா பாவங்களையும், குறைகளையும் மன்னிக்கும்படியாக ஜெபிக்கிறேன்.

15. இதோ இந்த விஷயத்தை, நான் இப்பொழுது பிரசங்கிக்கத் தொடங்கு முன்னர், கூற விரும்புகிறேன். உங்கள் ஒவ்வொரு வருக்கும், மிகவும் வெற்றிகரமான, ஆசீர்வாதமான, ஆரோக்கியமான ஆண்டாக இப்புத்தாண்டு அமைய வேண்டுமென்று வாழ்த் துகிறேன். தேவன் உங்களோடு இருப்பாராக. நீங்கள் தாமே சரீரப் பிரகாரமாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும், பண காரியங்களிலும், பொருள் ரீதியாகவும் வளருவீர்களாக. தேவன் எதையெல் லாம் உங்கள் மேல் கொண்டுவர முடியுமோ, அதையெல்லாம் அவர் செய்ய வேண்டி நான் ஜெபிக்கிறேன்.

16. இப்பொழுது, நானும் கூட ஒரு புதிய ஆண்டை எதிர் நோக்கிக்கொண்டிருக்கிறேன். எதிர்வரும் காலத்தில் என்ன இருக்கிறது என்பதை தேவன் மாத்திரமே அறிவார். இப்பொழுது தானே நம்முடைய தீர்மானங்கள் எல்லாம் நாம் செய்தாக வேண்டும். உலகம் பூராவிலும் இருந்து வரும் அழைப்புகளுக்காக, கர்த்தர் நம்மை எங்கே நடத்துவார் என்பதைப் பார்த்துக்கொண்டு, அதற்காக எல்லாவிதத்திலும் களத்தில் நிற்பதற்கான ஆயத்தங்கள் ஆயத்தமாக உள்ளன. நான் தவறாக நடந்துவிடாதபடி தடுத்தாட் கொள்ள தேவன்

எனக்கு உதவி செய்யும்படி நீங்கள் முழு இருதயத்தோடு ஜெபிப்பதற்காக உங்கள் ஜெபங்களை நான் நிச்சயமாக நாடுகிறேன். எந்தவொரு விஷயத்திலும் நான் விரும்புவதெல்லாம், உத்தமமாயிருக்க வேண்டுவதையும், ஒருபோதும் தவறாக வழி நடத்தப்பட்டுவிடாதபடி இருக்கவும்தான். இப்பொழுது, எனக்கு ஒரு நல்ல ஆண்டு உண்டாயிருந்தது.

17. அநேக சமயங்களில் மக்கள் தவறாக புரிந்து கொள்ளு கின்றனர். ''சகோதரன் பிரன்ஹாமே, நீங்கள் முன்பு வழக்கமாக போகிற இடங்களுக்கெல்லாம், மற்ற ஊழியக்காரர்கள் செய்வது போல், நீங்கள் போகிறதில்லையே'' என்று கூறுகிறார்கள். ஒரு பாடத்தை நான் கற்றுக்கொண்டேன். நான் வேதத்திலிருந்தும், நமது கர்த்தரிடத்திலிருந்தும் கற்றுக்கொண்ட பாடமானது, இயேசுவானவர் தன்னை யாவரும் காண்பதற்குரிய காட்சிப்பொருளாக ஆக்கிக்கொள்ளவில்லை, என்பதுதான். அந்த விஷயத்தில் அவர் குறைவுபட்டார். அவரிடத்தில், யாவரும் தன்னைக் காட்சியாக காணவேண்டும் என்ற தன்மை இல்லை. அவருடைய சீஷர்களும் அப்படிப்பட்டவர்களாக இருக்கவில்லை. ஒருபொழு தும் அவர்கள் தங்களை காட்சிப் பொருளாக, காட்சிக்குரிய மனிதர்களாக, ஆக்கிக்கொள்ளவில்லை.

18. அங்கே தான் நம்மில் அநேகர் இன்றைக்கு படகைத் தவற விட்டுவிட்டோம். ஒருவேளை இது என்னுடைய சொந்த அபிப்பிராயமாக இருக்கக்கூடும். நாம் யாவற்றையும் பற்றி பெரிதாக தம்பட்டமடித்துக்கொள்கிறோம். அது பரிசுத்தமான தொன்று என்று இருப்பதைவிட, பெரிதாக காட்சிக்குரியதாக தம்பட்ட மடித்துக்கொள்ளுதலாகவே இருக்கிறது.

19. கர்த்தருடைய முதலாம் வருகையில், அவரை உண்மையாகவே ஏற்றுக்கொண்டவர்களை கவனித்துப் பார்த்தீர்களா? அதில் சிமியோனும் ஒருவன்; அவன் கர்த்தருடைய வருகைக்காக எதிர்நோக்கிக்கொண்டிருந்தான். ஒருவரும் அவனைக் குறித்து ஒன்றும் கேள்விப்பட்டிருக்கவேயில்லை. ஆலயத்தில் இருந்த குருடான அன்னாள், வனாந்திரத்தில் இருந்த யோவான் ஸ்நானன் ஆகியோரும் அப்படித்தான். இவர்கள் எல்லாம்.....

20. யோவான் ஸ்நானன் தனக்கு ஒன்பது வயதானபோது வனாந்திரத்திற்குள் சென்றுவிட்டு, அவன் முப்பது வயதாகும் வரையிலும் மீண்டும் உலகுக்குத் தோன்றவேயில்லை. அதுவரை



விசனமடைய வேண்டாம், நான் அதைப்பற்றி தரிசனத்தில் கண்டேன். அது "கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்" என்பதாக இருக்கிறது. அது வருகிறது. அவள் தன் பாவத்திற்குத்தக்கதாக செலுத்தித் தீர்க்கப்போகிறாள்.

88. அமெரிக்கா முன்பு அமெரிக்காவாக இருந்தபோது, அவள் ஒரு மகத்தான தேசமாக இருந்தாள். இஸ்ரவேலின் நாட்கள் முதற்கொண்டு, உலகம் முழுவதிலும் பிரசித்தி பெற்ற தேசமாக விளங்கியது அமெரிக்காதான். ஆனால் அவளோ இப்பொழுது தன்னை அசுசிப்படுத்திக்கொண்டுவிட்டாள். அவள் செய்தியைப் புறக்கணித்துவிட்டாள். அவள் எதைத் தெரிந்து கொண்டாள்? அவள் இப்பொழுது... அப்படிப்பட்ட நிலையை அடைந்து விட்டாள். அவள் இப்பொழுது எந்த நிலையில் இருந்து கொண்டிருக்கிறாள் என்பதை நீங்கள் காணலாம். அதை யாவரும் அறிவர். கடந்த தேர்தலில் அவளது ஆவிக்குரிய நிலையானது எப்படியிருக்கிறது என்பதை காண்பித்துவிட்டாள். ஊ - ஊ, அவள் அறியாமல் இருக்கிறாள்.

89. இங்கே இந்த மூப்பர்கள் சிங்காசனங்களின் மேல் தங்கள் தலையில் கிரீடமணிந்தவர்களாய் வீற்றிருக்கிறார்கள். 5ம் வசனத்திலிருந்து நாம் ஆரம்பிக்கப் போகிறோம்.

“அந்தச் சிங்காசனத்திலிருந்து மின்னல்களும் இடி முழக்கங்களும் சத்தங்களும் புறப்பட்டன; தேவனுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்கள் சிங்காசனத்திற்கு முன்பாக எரிந்து கொண்டிருந்தன”.

வெளி. 4:5

90. ஓ, நான் இதை நேசிக்கிறேன். நீங்கள் நேசிக்கவில்லையா? எனது மேற்சட்டை எனக்கு பொருத்தமாக இருப்பது போல் உணருகிறேன். நான் ஆவிக்குரிய மேற்சட்டையைக் குறித்துக் கூறுகிறேன். நீங்கள் அதை அறிவீர்கள்.

91. 'சிங்காசனத்திலிருந்து இப்பொழுது நாம் இந்த சிங்காசனத்தைக் குறித்து சில நிமிடங்கள் பேசுவோமாக. இது இரக்கத்தின் சிங்காசனமல்ல; இரக்கத்தின் சிங்காசனத்தின் வேளை முடிந்துவிட்டது. இனிமேல் இரக்கம் இல்லை. அச்சிங்காசனத்தில் இரக்கம் இல்லை. நாம் என்ன செய்ய போகிறோம்.... நியாயாசனம் எவ்வாறு கிறிஸ்துவின் நியாயாசனமாக ஆகப்போகிறது? எவ்வாறு வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு ஆசனமாக ஆகப் போகிறது?

விலங்கை நீங்கள் அவ்வாறு சுடலாம், அதைக்கொல்வதற்காக அவ்வளவு தீவிரமாக சுடலாம். அவர்கள் கட்டு மீறிப்போய் "பேங், பேங், பேங்' என்று ஒவ்வொன்றாக சுட்டனர். அவைகள் மரித்துவிடும். சுரம் அவைகளைப் பீடித்ததெனில், அவ்வளவுதான், நீங்கள் அவைகளைக் கண்டால் அவைகளால் உங்களுக்குப் பயனில்லை. அவைகள் அப்பொழுதே கெட்டுப்போய்விடும். அழுகிய பிணங்களைத் தின்று வாழும் விலங்குகளும், ஓநாய்களும் அவைகளைத் தின்றுபோடும். அத்துப்பாக்கிகளினால் சுடப்பட்டு குண்டு துளைக்கப்பட்டு, இரத்தமானது இரண்டு அடி உயரத்திற்கு பீறிட்டு வந்து, பெரிய குளம்புகளையுடைய அக்காட்டு மாடுகள் கொல்லப்பட்டு, அங்கே பத்தொன்பது படுகைகள் காணப்பட்டன. அவ்விதமான போக்கிரிகளை தங்கள் கையில் துப்பாக்கிகள் வைத்துக்கொள்ள அனுமதிக்கவே கூடாது. அவனுக்கு ஒரு துப்பாக்கியைக் கையாள்வதற்கான அறிவே இல்லை. அவ்விதமாக காட்டுமிராண்டித்தனமாக விலங்குகளைக் கொன்றுகுவிப்பது பயங்கரமானதாகும், அவ்வாறு செய்வது பாவமான செயலாகும்.

87. அது பயங்கரமான செயலாகும். ஆனால் அமெரிக்காவின் செயல் அப்படித்தான் இருக்கும். கனடா தேசமே, கனடா தேசத்திலிருந்து உள்ள விலையேறப்பெற்ற மக்களே! அமெரிக்கர் அங்கு போய்க்கொண்டேயிருந்தால், கனடாவும் அமெரிக்காவைப் போல் சிறிது காலத்தில், கீழ்த்தரமாகப் போய்விடும். கனடாவின் எல்லைகள் நெடுகிலும் போய்ப்பாருங்கள். அங்கே நீங்கள் அமெரிக்க சூழ்நிலையையே காண்பீர்கள். இந்த அமெரிக்க தேசமானது நாடுகளுக்கெல்லாம் வேசியாயிருக்கிறது. அவ்வாறு தான் அவள் இருக்கிறாள். இப்பொழுது இருக்கிறதை விட இன்னும் மோசமாக அவள் ஆகப்போகிறாள். அவள் தன் முடிவை நெருங்கிக்கொண்டிருக்கிறாள். வேதாகமம் அவள் தனது அழிவை அடையப்போகிறதைப் பற்றிக் கூறுகிறது. அவள் எவ்வாறு இருக்கப் போகிறான் என்பதைப் பற்றி பேசுகிறது. அமெரிக்கர்; கீழ்த்தரமாகவும், அழுகிப்போனதாகவும், அசுத்தமானதாகவும், பொல்லாததாகவும் காணப்படுகிறாள். சரியாக அப்படியே அவள் இருக்கிறாள். அவள் ஒரு காலத்தில் மகத்தான தேசமாக இருந்தாள். அவள் சுவிசேஷ செய்தியை சுமந்துகொண்டு சென்றாள். அவள் இப்பொழுது இருக்கிற நிலைக்கு அவளை ஆளாக்கியது எது? ஏனெனில் அவள் சுவிசேஷ செய்தியை தள்ளிப் போட்டு, சத்தியத்தை நிராகரித்துவிட்டாள். அவள் பயங்கரமானவளாகி விட்டாள். அவள் தன் முடிவை நெருங்கிக்கொண்டிருக்கிறாள்; அதைப்பற்றி நீங்கள்



யிலும் அவன் வனாந்தரத்திலேயே இருந்து வந்தான். அவ்விதமான மனிதர், இரகசியமாக விசுவாசித்து, தாழ்மையாக இருந்து கொண்டு, கர்த்தருடைய வருகையை எதிர்நோக்கிக் கொண்டிருந் தார்கள். அவர்கள் ஒருபோதும் தங்களுடைய கூட்டங்களைப் பற்றி பெரிதாக தம்பட்டமடித்துகக் கொண்டு, அதைப்பற்றிய பெரிய விளம்பரங்களைச் செய்து, இத்தனாம் மணி நேரம் என்றெல்லாம் போட்டு போஸ்டர்கள் பெரிதாக அடித்து பந்தா பண்ணிக் கொள்ளவில்லை. அந்தவிதமாக செய்திட விரும்புபவர்களுக்கு அதெல்லாம் சரிதான். ஆனால் எனக்கோ, அது கிறிஸ்துவுக்கேற்ற செய்கையாகப் படவில்லை .

21. அவருடைய சகோதரர்கள் ஒரு சமயம் கூறியதை நான் அறிவேன். அவர்கள் அவரிடம், "நீர் இந்த அற்புத அடையாளங் களைச் செய்கிறீர், நீர் ஏன் எருசலேமுக்கு போய் வெளியரங்கமாக அவைகளைச் செய்யக்கூடாது? நாங்கள் பஸ்கா பண்டிகைக்கு எருசலேமுக்குப் போகிறோம், நீரும் அங்கே வந்து, பிரதான ஆசாரி யனான காய்பாவை அழைத்து, மற்றும் அவரைச் சேர்ந்தவர்களையும் வரவழைத்து, அங்கே அவர்களுக்கு முன்பாக இவைகளையெல்லாம் ஏன் செய்யக்கூடாது? அவர்களும் அறிந்து கொள்ளட்டுமே!'' என்று கூறினார்கள். அவர்களுக்கு முன்பாக இவைகளைச் செய்யும், அப்பொழுது அவர்களும் உம்முடைய கிரியைகளை அறிந்துகொள்வார்களே'' என்றார்கள். "நீரோ ஒரு கூட்டம் மீனவர்களோடும் மற்றும் இன்னபிற மக்களோடும் ஆற்றங்கரையில் உமது நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறீரே, அவர்களெல்லாம் கீழான மக்களாயிற்றே. நீர் ஏன் அங்கே போய் இவைகளைச் செய்யக்கூடாது? உலகம் அதைப் பார்க்கட்டுமே'' என்றார்கள்.

22. இயேசு "என் வேளை இன்னும் வரவில்லை, உங்கள் வேளையோ எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறது'' என்று கூறினார்.

23. யோவான் ஒரு சமயம்..... யோவான் ஸ்நானன் அவனது வருகையைக் குறித்து வேதவாக்கியங்கள் முன்னுரைத்துள்ளன. அவன் வரும்பொழுது... ஏன், ஏசாயாகூட யோவான் ஸ்நானன் பிறப்பதற்கு எழுநூற்றுப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் பாகவே வனாந்திரத்தில் கூப்பிடுகிற சத்தம் உண்டாயிற்று' என்று முன்னுரைத்திருக்கிறான். "மலைகளெல்லாம் ஆட்டுக் குட்டிகளைப் போல் துள்ளியது, இலைகளெல்லாம் கை கொட்டின. பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு சகல மலையும் குன்றும் தாழ்த்தப்பட்டு' என்று ஏசாயா கூறியுள்ளான்.

24. இப்படிப்பட்ட தீர்க்கதரிசனங்களெல்லாம் கூறப்பட்டுள்ளன! அந்நாட்களின் ஊழியக்ககாரர்களெல்லாம் எப்படியிருந்திருப்பார்கள் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள்? இத்தீர்க்கதரிசன வாக்கியங்களை படித்த மக்கள், அவர்கள் இவ்வாறு கூறியிருக்கக் கூடும் : 'அந்த மகத்தான தீர்க்கதரிசி வரும்பொழுது, யாவரும் அவரை அறிந்து கொள்ளுவார்கள். தேவன் ஆகாயத்தில் விதானத்தை விரித்து, பரலோகத்தின் நடைக்கூடத்தை தேவன் முன்னுக்கு நீட்டி, அதிலிருந்து அக்கினி இரதத்தை தோன்றச் செய்து அதை கீழே இறங்கப் பண்ணி, ஒரு தூதனுடைய கரம் அவனை பூமிக்கு பாதுகாவலாக கொண்டு வந்து சேர்த்து, இவ்வாறு அவன் வெளிப்படுவான்'' என்று அவர்கள் செய்திருப்பார்கள்.

25. ஆனால், அவன் வந்தபொழுதோ, அவன் கவர்ச்சியற்ற முகத் தையுடைய பிரசங்கியாக, ஆட்டுத் தொலைப் போர்த்திக் கொண்டு, இடுப்பில் ஒரு தோல் துண்டை கச்சையாக உடுத்திக் கொண்ட வனாக வந்தான். ஒரு வேளை குளித்திருக்கவே மாட்டான் போலும். ஒரு வேளை மூன்று மாதத்திற்கொருமுறை அல்லது நான்கு மாதத்திற்கொரு முறையோ தான் குளித்திருக்கக் கூடும். அவன் வனாந்திரத்திலிருந்து வெளியே வந்து, முழங்கால் அளவு சகதியாக இருந்த இடத்தில் நின்று கொண்டு, "மனந்திரும்புங்கள், பரலோக இராஜ்யம் சமீபமாயிருக்கிறது'' என்ற பிரசங்கித்தான். அவன் ஒருபோதும் பெரு நகரங்கள் ஒன்றும் செல்லவேயில்லை. யாராவது அவன் பிரசங்கிப்பதைக் கேட்க விரும்பினால், அதற்காக யோர்தான் நதிக்கரைக்குத் தான் வரவேண்டும். அவர்கள் அதை விரும்பவில்லை. அவன் என்ன செய்தான்? அவன் தேசத்தை அசைத்தான். அவன் உலகை அசைத்தான்.

26. அங்கே ஒரு பெரிய அசைவு ஏற்பட்டுக் கொண்டிருந்தது, ஆனால் அந்த மக்களோ அதைப்பற்றி ஒன்றுமே அறியவில்லை. இயேசு வந்தபொழுது, அவர் ஒருபொழுதும் பெரும்புள்ளிகள் நடுவில் தன்னை காண்பித்துக்க கொள்வில்லை. அவர் தமக்கு சொந்த மானவர்களிடத்திற்கே வந்தார். அவர் வருகையை எதிர் நோக்கிக் கொண்டிருந்தவர்களிமிடம் மட்டுமே வந்தார். அங்கேதான் அசைவு வருகிறது. இன்றைக்கு அவர் அதைத்தான் செய்கிறார். தேவனால் அழைக்கப்பட்டவர்களிடம் தான் பரிசுத்த ஆவியானவர் வருகிறார், தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் நடுவில் மகத்தான தொரு அசைவானது உண்டாயிருக்கிறது. மகத்தான, வல்லமையான காரியங்கள் அவர்கள் நடுவில் நடைபெற்றுக் கொண்டிருக் கிறது, ஆனால் உலகமோ அதைப்பற்றி ஒன்றுமே அறியாமல் இருக்கிறது.



எதையும் அந்தவிதமாக சுடுகிற ஒருவனுடைய கையில் ஒரு துப்பாக்கியை வைத்திருக்க அவனுக்கு தகுதியில்லை. அதைக் கையாள போதுமான விவேகம் அவனுக்கு இல்லை.

84. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக என்னுடைய நல்ல நண்பர் ராய் ராபர்சன் நிலத்தில் சில மரை மான்களின் மந்தையை கூட்டிச் சேர்க்க முயற்சித்தேன். கொலரேடோவில் நான் அவைகளை வழி நடத்திக்கொண்டிருந்தேன். அங்கே எங்களுக்கு அருமையான மந்தை உண்டாயிருந்தது. ஜெஃப்புக்கும் எனக்கும் அநேக ஆண்டுகளாக அவைகள் உண்டாயிருந்தன. ஏறத்தாழ எண்பது மரைகள் அங்கேயிருந்தன. டென்வரிலிருந்து சில அதிகாரிகளை வேட்டையாடுவதற்காக அவர்கள் உள்ளே விட்டு விட்டார்கள் என்று நான் கேள்விப்பட்டேன். அவர்கள் தொளதொளவென்று தைக்கப்பட்டிருக்கும் நீளமான கால் சட்டைகளையும் காலில் பின்னல் வேலையான உறையையும் அணிந்து கொண்டு ஜீப்புகளில் ஒரு குழுவானது வந்திறங்கியது. இவர்களெல்லாம் வேட்டையாடுபவர்கள்? ஊ! அவர்கள் எங்கள் பிரதேசத்தில் நுழைந்து விட்டார்கள்.

85. நான் இந்த மரை மந்தையை மலையின் மேல் அவைகளின் பின்னால் இருந்து ஓட்டிச் சென்று கொண்டிருந்தேன். (மரை என்பது ஒருவகை காட்டுமான் - மொழிபெயர்ப்பாளர்). அவைகள் வழி நெடுக மேய்ந்து கொண்டிருந்தன. வயதான பெரிய எருதுகள் மற்றும் இன்னபிறவற்றின் மந்தையை நெருக்கலாக வைத்திராமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அவ்வாறு செய்யாவிடில் மந்தையை நீங்கள் உடைந்துபோகப் பண்ணுவீர்கள். மாட்டு மந்தையை வளர்ப்பது போல் இவைகளும். வனவிலங்கும் அதேபோல்தான் நமக்கு இருக்கின்றன. இப்படிப்பட்டவைகள் வேட்டையாடுவதற் குரிய இலக்கு அல்ல. நீங்கள் வேட்டையாடுவதற்கான இலக்கு வேண்டுமெனில் அதற்கென காடு உள்ளது. இவ்விதமான பிராணிகளை வெட்டிச் சாய்ப்பது அவமானகரமான செயலாகும். அது பாவகரமானதும், தேவபக்திக்குரியதல்லாத செயலுமாகும்.

86. அம்மனிதர்கள் இயந்திரத் துப்பாக்கிகளைக் கொண்டு நூற்று இருபத்து மூன்று குண்டுகள் சுட்டதை நான் எண்ணினேன். தங்கள் தோள்களில் வைத்துக்கொண்டு சுட்டார்கள் போலும், அடுத்த நாள் காலையில் என்னுடன் இருந்த சகோதரன் பாங்க்ஸ் வுட் அவர்களோடு மலையின் மேல் ஏறிப்போய், இரத்தம் தோய்ந்த பத்தொன்பது படுகைகளை கண்டு எண்ணினோம். அவர்களுக்கு வேட்டையாடுதலைப் பற்றி ஒன்றுமே தெரியவில்லை. பெரியதொரு

அகற்றிவிட்டனர். அதனால் அது குளிர்ந்து போயிற்று. நீங்கள் அதை சூரியனிடம் எறிந்துவிட்டால், அது எரிந்து போகும். அவர் முன்பு தண்ணீரினால் அழித்து, வானத்தில் வானவில்லை வைத்ததுபோல, இனிமேல் அவர் செய்யமாட்டார். இப்பொழுது, அவர் பூமியை நெருப்பினால் சுட்டெரிக்கப் போவதாக வாக்குரைத்திருக்கிறார். அங்கேதான் பாவமும், எல்லா கவர்ச்சியும், அனைத்து அசுத்தமும் அழியும், அவ்விடத்திற்குத்தான் நீங்கள் வருகிறீர்கள்.

82. சமீபத்தில் நான் புல்வெளிகள் வழியாக குதிரையில் சவாரி செய்து போய்க்கொண்டிருந்தேன். நான் சிறுவனாயிருந்தபோது, என்னுடைய சரித்திரப் புத்தகங்களையும், புவியியல் புத்தகங்களை யும் எடுத்து வைத்துக்கொண்டு, மேற்கத்திய சமவெளிகளைப் பற்றி சிந்திப்பதுண்டு. நான் எனக்குள், 'ஒரு நாள், நான் அப்பிரதே சத்தில், பாவமில்லாத அவ்விடத்தில், அமைதியாகவும், சமாதானமாகவும் வாழ்வேன், அங்கே நான் இந்தியரைப்போல (செவ்விந் தியரைப் பற்றிக் குறிப்பிடுகிறார் - மொழிபெயர்ப்பாளர்) நான் அவ்வெளிகளில் அலைந்து திரிந்து, வேட்டையாடுவேன். நான் அங்கே வாழ்நாள் முழுவதும் சமாதானமான வாழ்க்கை வாழ் வேன்'' என்று கூறுவது வழக்கம். ஆனால் இப்பொழுதோ, அங்கே வெள்ளையன் குடியேறிவிட்டான். வெள்ளையன் எங்கேயெல்லாம் போகிறானோ, அங்கெல்லாம் அவனோடு பாவமும் போகிறது. இப்பூமியிலேயே மக்களையெல்லாம் கொன்று குவித்தபெரிய கொலைகாரன் அவன்தான். எல்லா நிறத்தவரிலும் அவனே துரோகியாக இருக்கிறான்.

83. சமீபத்தில் பத்திரிக்கையில் இரண்டு வாரங்களுக்கு முன்பு, ஒரு விஷயத்தை நான் படித்தேன். (சகோதரன் டாம் ஆப்பிரிக்காவிலிருந்து இங்கே வந்திருக்கிறார்.) அதில் கூறப்பட்டுள்ளது என்னவெனில்: ''அமெரிக்கர்கள் இன்னமும் தொடர்ந்து ஆப்பி ரிக்காவுக்கு போக அனுமதிக்கப்பட்டார்களெனில், இப்பொழுதி லிருந்து பத்து ஆண்டுகளில் பெரிய ஆப்பிரிக்க சிங்கங்கள் மற்றும் யானைகள் முற்றும் ஒழிந்துபோய்விடும்.'' இந்த துரோகிகள் கண்ட கண்ட இடத்திலெல்லாம் சுடுகிறார்கள். இரண்டு பெரிய ஆண் சிங்கங்கள் காயமடைந்த இன்னொரு பெண் சிங்கத்தை தூக்கி நிறுத்த முற்படுகின்ற படத்தை நான் பார்த்தேன். அவைகளுடைய கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடிக்கொண்டிருந்தது. பெண் சிங்கங்கள் இறப்பதை ஆண் சிங்கங்கள் விரும்புவதில்லை. அப்பெண் சிங்கத்தை தரையில் விழுந்துவிடாமல் தூக்கி நிறுத்திய வாறு இரு பக்கங்களிலும் அவைகள் பிடித்துக்கொண்டு நின்று கொண்டிருக்கின்றன. அது குண்டுக்காயம் பட்டு சிதறிப்போயிருந்தது.



27. அவர்கள் இந்த எல்லாவிதமாக சொல்நயம், காண்பதற்கு நயமுள்ளதான காரியங்களையே பற்றி சிந்திக்கிறார்கள். உலகளாவிய வானொலி, தொலைக்காட்சி, ஒலி ஒளி பரப்புக்களும், பலகோடி டாலர்கள் மதிப்புள்ள கட்டிடங்கள் மற்றும் இவ்வித மான காரியங்களையே அவர்கள் பெரிதாக நினைக்கிறார்கள். அவை தேவனுடைய பார்வையில் மதியீனமாக இருக்கின்றன. தேவன் இவ்வாறான பெரிய காரியங்களைப் பார்க்கிறதில்லை. மனிதன் எதை "மதியீனம்'' என்ற அழைக்கிறானோ, அதை தேவன் “மகத்தானது" என்று அழைக்கிறார். மனிதன் எதை மகத்தானது'' என்று அழைக்கிறார். "பைத்தியமாயத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே, இழந்து போகப் பட்டவர்களை இரட்சிப்பது தேவனுக்குப் பிரியமாயிருந்தது".

28. இப்பொழுது யோவானைப் பற்றிப் பார்ப்போம். அவர்கள் என்ன சொல்லியிருப்பார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?'' அங்கே ஒரு மத வெறியன் இருக்கிறான். ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டு வனாந்திரத்திலிருந்து வெளியே வந்துள்ள அவன், பார்க்கவே அசிங்கமாக இருப்பான். அவன் சேற்றில் நின்று கொண்டு பிரசங்கித்துக்கொண்டிருக்கிறான். யாராவது அவன் பேசுவதை போய் கேட்பார்களா?' என்று சொல்லியிருப்பார்கள்.

29. இயேசு வந்தபொழுது, "ஒரு மேசியா மாட்டுத் தொழுவத்தில் வைக்கோல் குவியல் மேல், மாடுகள் படுத்துக் கொண்டிருக்கும் இடத்தில் பிறந்திருக்கிறாரா? முறைகேடான ஒரு தாயாரா அவருக்கு உண்டு என்று கூறுகிறாய்? அவரது, தாயும் தந்தையும் விவாகம் செய்து கொள்ளும் முன்பே, அவள் தாயாகிவிட்டாளே? அவர் முறைகேடாகப் பிறந்தாரே? அந்த ஆளா மேசியா?'' என்றெல்லாம் கேட்டிருப்பார்கள். ஓ, என்னே! பார்த்தீர்களா? ஆனால் அவரோ மகத்தானவராக இருந்தார். ஆனால் அவர்களோ அதை அறியவில்லை. பாருங்கள்? அவர்கள் அவரை அறியவில்லை.

30. அதேபோல்தான், இன்றைய சுவிசேஷமும் மகத்தானதாக இருக்கிறது. சுவிசேஷமானது இதற்கு முன்பாக நடந்திராதபடி, பெரிய அசைவைக் கொண்டு வந்திருக்கிறது. அது கர்த்தருக் கென்று மீதியாயிருப்பவர்களிடத்தில் அசைவைக் கொண்டு வந்திருக்கிறது. அதுதான் சரி. அது அவர்களை ஆயத்தமாக்கி வைத்திருக்கிறது.

31. அவர் தனக்கு சொந்தமானவர்களிடத்தில் வந்தார். அவருக்குச் சொந்தமானவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்

சீஷர்களிடம், 'புறஜாதியாரிடத்தில் போகாதிருங்கள், காணாமற் போன இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கே போங்கள். நீங்கள் போகையில் உங்களை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக் கொள்கிறான். ஒரு பட்டணத்திற்கு நீங்கள் போகையில், அவர்கள் உங்களை ஏற்றுக்கொள்ளாவிடில், உங்கள் பாதங்களிலுள்ள தூசியை தட்டியெறிந்து விட்டு, அங்கிருந்து புறப்பட்டுப் போங்கள். நியாயத்தீர்ப்பின் நாளிலே அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப் பார்க்கிலும் சோதோம் கொமோரா பட்டணத்திற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லு கிறேன்'' என்று கூறினார். அம்மனிதர்களை ஏற்றுக் கொள்ளாத நகரங்கள் ஒவ்வொன்றும் இன்றைக்கு சாம்பலாய் கிடக்கின்றன. அவர்களை ஏற்றுக் கொண்ட வைகள் ஒவ்வொன்றும் நட்சத்திரங்களைப் போல் இன்னும் நிலைத்து நின்று கொண்டிருக் கின்றன. அவ்வாறுதான் நடந்துள்ளது. பாருங்கள் அவர் பதிலளிப் பதற்கு நீண்ட காலம் பிடிக்கிறது அவருக்கு, ஆனால் எப்படியும் அவர் பதிலளிக்கிறார். கவலை வேண்டாம். ஒ, நான் இன்னமும் வெளிப்படுத்தின விசேஷத்தில் ஆரம்பிக்கவில்லை. இப்படியே போனால் அதற்குள் போகவே மாட்டேன் போலும். ஓ நான் அவரைக் கண்டு, அவரது முகத்தை நோக்கிட

வாஞ்சிக்கிறேன் அங்கே அவரது இரட்சிப்பின் கிருபையைப்பற்றி

என்றென்றும் பாடுவேன் மகிமையின் தெருக்களில் நான் எனது சத்தத்தை

உயர்த்திடுவேன், அப்பொழுது கவலைகள் யாவும் தீரும், என்றும் மகிழ்ந்திட பரம் வீட்டில் சேர்வேன்.

32. நான் அதை விரும்புகிறேன். நாம் தலைகள் வணங்குவோம். அதற்க முன்பாக எழுந்து நிற்பீர்களா? வேதம் கூறுகிறது , "நீங்கள் நின்று ஜெபம் பண்ணும் போது, மன்னியுங்கள்'' இங்கே எத்தனை பேர்களுக்கு ஜெப விண்ணப்பம் ஒன்றுண்டு? அவர்கள் கைகளை உயர்த்திக் காட்டுவதின் மூலம் தெரியப்படுத்த லாம். தேவன் பார்க்கிறார், அவர் அது என்ன என்பதைப் பற்றி யாவையும் அறிவார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

33. எங்கள் பரம பிதாவே, நாங்கள் உம்முடைய தெய்வீக பரிசுத்தத்தை இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அணுகிறோம். "இயேசு'' என்ற நாமம் சகலத்திலும் போதுமானதாக இங்கே மனிதர் களுக்குள்



...வளி மண்டலத்தின் மூலமாக, அவர்... வளிமண்டலமானது ஹைட்ரஜனாலும் (ஜலவாயு - மொழிபெயர்ப்பாளர்) ஆக்ஸிஜனாலும் (பிராண வாயு - மொழி பெயர்ப்பாளர்) மற்றும் இன்னபிறவற்றாலும் நிரம்பியிருப்பதாக இருக்கிறது. தேவன் அதை பூமியைவிட்டு மேலே எடுத்து, அதைப் பிரித்தார். அப்பொழுது பூமியில் சமுத்திரம் இல்லாமல் இருந்தது. தேவன் பூமிக்கு நீரிறைத்தார். அப்பொழுது மழையே பெய்யவில்லை. அவர் ஊற்றுக் கண்களைக்கொண்டு பூமிக்கு நீர்ப்பாசனம் உண்டாகச் செய்தார். அப்பொழுது அவர் செய்த ஒரே காரியம்....

79. மனிதன் பூமியை அதன் சுற்றுப் பாதையை விட்டு விலகும்படி செய்தபோது, என்ன நடந்தது? அப்பொழுது உஷ்ணப்பகுதி அந்தப் பக்கமும், குளிர்ப்பகுதி இந்தப் பக்கமுமாக இடம் மாறியது. உஷ்ணமும் குளிரும் எதைக் குறிக்கிறது? இப்பொழுது அங்கே ஜன்னல்கள் வழியாக வெளியே குளிராகவும், உள்ளே உஷ்ணமாயும் இருப்பதை உணர்ந்து பாருங்கள். வியர்வையைப் பாருங்கள்? மழையானது வியர்வையைத் தவிர வேறொன்றுமில்லை; அது வியர்த்தல்தான். தண்ணீரானது சாம்பலாய் இருக்கிறது. எனவே, அது.....

80. அப்பாடலை நான் விரும்புகிறேன். விலையேறப்பெற்ற கர்த்தாவே, நீர் புல்வெளியின்மேல்

உமது கரத்தை வைத்தீர் நீர் உமது கரத்தை மேய்ச்சல் நிலத்தில் வைத்தீர், கர்த்தாவே நீர் நீரூற்றை ஊற்றினீர், மலையை எழுப்பினீர் ஓ! கர்த்தாவே நீர் உமது கரத்தை என் மேல் வைத்தருளும், நீர் மேகங்களை உண்டாக்கினீர், மழையைத் தரும்

மேகத்தை உருவாக்கினீர், நீர் எங்களுக்கு பரிபூரண ஜீவனை கொடுப்பதற்காக; நீர் பூமியையும், வானங்களையும் உம்முடைய அதிகாரத்தில் வைத்திருக்கிறீர், கர்த்தாவே. ஓ, உமது விலையேறப்பெற்ற கரத்தை என்மேல் தயவுகூர்ந்து வைத்தருளும்.

(ஓ நீர் எவ்வளவாய் மகத்துவமுள்ளவராய் இருக்கிறீர்! ஆம், பரலோகத்தின் தேவன்).

81. பிறகு இந்த மகத்தான வேளையில், அது இப்பொழுது, இவ்விதமாக சார்ந்து கொண்டு இருக்கிறது. அவர் நமக்கு ஒரு வாக்குத்தத்தத்தை கொடுத்தார். "இனிமேல் தண்ணீரினால் அல்ல, நெருப்பினால்தான் இத்தடவை அழிவு" என்றார். அவர்கள் பூமியை சூரியனைவிட்டு

76. பரலோகத்தினின்று தேவனிடத்திலிருந்து இறங்கி வருகிற நகரத்தையும் குறித்து நாம் கண்டோம். பூமியானது வெடித்து தூள் தூளாக ஆனபிறகு, பூமியில் எரிமலை வெடிப்பில் உண்டாகும் சாம்பலைத் தவிர வேறு எதுவும் இருக்காது; அதுதான் மீதமாயிருக்கும் இப்பூமியில்; இனிமேல் சமுத்திரமும் இருக்காது. சமுத்திரம் வறண்டு போகும்.

77. நான் நேற்றிரவில் யாரோ ஒருவரிடம், எவ்வாறு பூமியானது ஒரு காலத்தில் காணப்பட்டது என்பதைப் பற்றி பேசிக்கொண் டிருந்தேன். அது சூரியனைச் சுற்றி இருந்துகொண்டிருக்க, பூமியில் எப்பகுதியிலும் ஒரே சமமான உஷ்ணமானது காணப்பட்டது; பிரிட்டிஷ் பனிக்கண்டத்தில் நீங்கள் 500 அடி ஆழத்திற்கு வெடிப்பினால் ஆழப்படுத்தி காண்பீர்களானால், அங்கே ஈச்ச மரங்களைக் காணலாம். குளிர்சாதனம் செய்வதுபோல் திடீரென அந்நிலை தோன்றி, அவற்றை உறையச் செய்துவிட்டது. உங்க ளுடைய , நீரை வற்றச் செய்யும் சாதனம்போல; மிகுகுளிர்பதன சாதனங்கள் ஸ்ட்ராபெர்ரி பழங்களைப் பாதுகாத்து அநேக ஆண்டுகாலம் வைத்திருப்பது போல், பனிக்கண்டங்கள் தோன்றி அவ்வாறு செய்தன. அதேவிதமாகத்தான் அக்காலத்தில் ஏற் பட்டது. ஜலப்பிரளய காலத்திற்கு முந்தின காலத்தில் ஒரு அழி வானது ஏற்பட்டு, அது பூமி முழுவதிலும் ஜலப்பிரளயத்தை ஏற்படுத்தியது. அப்படி காரியம் சம்பவித்தபொழுது, அணுசக்தி விசையானது வெடித்து, பூமியை அதனுடைய சுற்றுப் பாதையி லிருந்து விலகும்படி செய்தது, அப்பொழுது அது உறை நிலைக்குப் போய், அங்கே அவ்வாறு அமைந்துவிட்டது. துருவப் பிரதேசங் களில் ஆழமாகத் தோண்டிப் பார்த்தால், பனை ஈச்ச மரங்களையும் மற்றும் இன்னபிறவற்றையும் நீங்கள் அங்கே காணலாம். ஒரு காலத்தில் அது மிகவும் அழகான முறையில் குடியிருக்கப் பெற்றிருந்தது என்பதை காண்பிக்கிறது. ஆனால் இப்பொழுதோ அது நிலைகுலைந்து போயுள்ளது.

78. ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தில் "பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது, ஆழத்தின்மேல் தண்ணீர் இருந்தது. தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார், 'வெளிச்சம் உண்டாகக்கடவது' என்றார்'' என்று தொடங்குகிற இடத்தை வாசிக்கையில், தேவன் எவ்வாறு தண்ணீரை எங்கிருந்து உண்டாக்கினார் என்பதைப் பற்றி சிந்தித்துப் பார்த்தேன். தேவன் அப்பொழுது தண்ணீரையும் வெட்டாந்தரையையும் வெவ்வேறாகப்பிரித்தார். வெட்டாந்தரையே பூமியாயிற்று. ஆனால் முழு பூமியும் சுற்றிலும் மூடப்பட்டிருந்தது. அவர் என்ன செய்தாரெனில்



அளிக்கப்பட்டுள்ளது, "பூலோகத்திலும் பரலோகத்திலும் உள்ள குடும்பங்களுக்கு அந்நாமமே பெயராக சூட்டப்பட்டுள்ளது''

34. எங்களுடைய நன்றி நிறைந்த ஸ்தோத்திரத்தை நீர் ஏற்றுக் கொள்ள வேண்டுமே என்று நாங்கள் ஜெபிக்கிறோம், கர்த்தாவே. முதலாவதாக, துவக்கமாக, நாங்கள் இன்றிரவு ஆராதனையில் உமக்கு துதி செலுத்திக் கொண்டும், உம்முடைய வார்த்தையை ஆராய்ந்து கொண்டும், "கர்த்தர் உரைக்கிறதாவது'' என்பதின் அர்த்தத்தையை அறிந்து கொண்டும், இப்படியாக இந்த மரித்துக் கொண்டிருக்கும் ஆண்டைவிட்டு வெளியேறிக் கொண்டிருக் கிறோம். நாங்கள் நன்றியுள்ளவர்களாயிருப்பதற்கு ஏராளமான காரியங்கள் உண்டு, அவைகளை தாளில் எழுதினாலும் இடம் போதாவது. சிறு சிறு ஆபத்துக்களில் நாங்கள் தப்பியது, மயிரிழை யில் உயிர்தப்பியது போன்றவைகள் இந்த கடந்து செல்லும் ஆண்டில் எங்களுக்கு இருந்தன. நீர் மாத்திரம் எங்களோடு இருந் திராவிடில் சாத்தான் அவ்வேளைகளில் எங்கள் ஜீவனை திக்கு முக்காடச் செய்து அழித்திருப்பான். இதனால் தான் எங்களால் தொடர்ந்து சென்று கொண்டிருக்க முடிகிறது. நாங்கள் இவ்வுலகில் பிறந்து வளர்க்கப்பட்டது எல்லாம், உம்மை கனம் பண்ணவும் மகிமைப்படுத்தவும் மாத்திரமே என்று நாங்கள் விசுவாசிக் கிறோம். கர்த்தாவே.

35. பிதாவே, எங்கள் வாழ்க்கைப் பயணத்தின் நெடுக நாங்கள் செய்துள்ள ஒவ்வொரு மீறுதல்களையும், ஒவ்வொரு பிழையையும் நீர் மன்னிக்க வேண்டுமென்று நாங்கள் ஜெபிக்கிறோம். எங்களு டைய பிழைகளை நாங்கள் அறிக்கையிட்டுவிட்ட பிறகு, அவைகளை கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் ஆழ் மறதிக் கடலில் மீண்டும் தோண்டி எடுக்கக்கூடாதபடி புதைத்து விட்டு, நாங்கள் தொடர்ந்து பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக பரிபூரண மனிதனாகிய கிறிஸ்து இயேசுவாகிய இலக்கை நோக்கி நாங்கள் தொடரட்டும், இதை எங்களுக்குச் செய்தருளும், பிதாவே.

36. உம்முடைய ஊழியக்காரர்கள் பேசும் பொழுது, அவர்கள் ஒவ்வொருவரையும், நீர் ஜீவனின் ஆவியால் அபிஷேகித்து, அவர்கள் இது வரையிலும் பிரசங்கித்திராத வண்ணம் இன்றிரவில் சபையில் செய்திகளை கொண்டு வந்து பிரசங்கிக்கட்டும்.

37. இச்சிறிய கூரையின் கீழாக நாங்கள் கூடி வந்திருக்கிறோம். அதற்காக தாங்கள் நன்றியறிதலோடு இருக்கிறோம். கர்த்தாவே.

நாங்கள் இங்கே அமருவதற்காக எங்களுக்கு அவசியம் தேவைப் படுகிற அனலுண்டாக்கும் கணப்பு உண்டாயிருப்பதற்காகவும், எங்கள் தலைக்கு மேல் அமைந்திருக்கிற கூரைக்காவும் நாங்கள் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம், கர்த்தாவே.

38. எங்களுடைய பொக்கிஷங்கள் இவ்வுலகில் இல்லை, வரப் போகிற உலகில் அவைகள் உள்ளன. தேவனே, அவைகளை நாங்கள் அங்கேதான் சேர்த்து வைக்கிறோம், அங்கே திருடன் கன்னமிட்டு திருடுவதில்லை. பூச்சி அவைகளை அரிக்கிறதுமில்லை, ஏனெனில் எங்களுடைய பொக்கிஷங்களெல்லாம் நித்திய ஜீவனாயிருக்கிறது. பிதாவே, எங்களுடைய வாழ்நாட்காலம் முழுவதும் அவைகள் யாவற்றையும் நாங்கள் போற்றிப் பேணட்டும், பிதாவே.

39. தகுதியுள்ள ஊழியக்காரர்களாக எங்களை ஆக்கியருளும். நாங்கள் உமக்கு முன்பாக தாழ்மையுள்ளவர்களாயும், இனிமை யானவர்களாயும் இருப்பதற்காக, எங்கள் ஜீவியத்தை விட்டு பகைமை, கசப்புணர்ச்சி ஆகியவற்றின் எல்லா வேர்களையும் அகற்றியருளும், கர்த்தாவே. இதை அளித்தருளும், கர்த்தாவே. வரப்போகும் ஆண்டு, இது வரையிலும் இருந்த ஆண்டுகளைவிட மேலாக, மகத்தானதாக எங்களுக்கு இருக்கட்டும். அதை எங் களுக்கு அளித்தருளும். மேற்கொண்டு உம்முடைய செய்திக்காக நாங்கள் காத்திருக்கையில், இன்றிரவில் உம்முடைய வார்த் தையை இப்பொழுது எங்களுக்கு தந்தருளும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென். (நீங்கள் அமரலாம்).

40. இங்கிருந்து கொண்டு, அங்குள்ள அந்த கடிகாரத்தைப் பார்ப்பது கடினமாய் எனக்கு உள்ளது. நான் என்னுடைய சகோதர் களை காத்திருக்க வைக்க விரும்பவில்லை. எனவே நான் ஆராதனை யின் இந்த பாகத்தை முடிந்த அளவு விரைவாக முடிக்க முயற் சிப்பேன். ஒரு வேளை நம்மால் இதை முடிக்க முடியவில்லை யெனில், நாளை காலை, கர்த்தருக்கு சித்தமானால், இதைக் தொடர்ந்து பார்ப்போம். அதன்பிறகு, சகோதரன் நெவில் அவர்கள் வரவில்லையெனில், அல்லது என்னவானாலும், அப்பொழுது, கர்த்தருக்கு சித்தமானால், ஞாயிறு ஆராதனையை நடத்த நான் இங்கேயிருக்க முயற்சிப்பேன்.

41. இப்பொழுது, நீங்கள் மறக்கவேண்டாம்

ஜெபி, ஜெபி அது ஒன்றே வழி உயர் ஸ்தலத்தை போய்ச்சேர ஜெபி, ஜெபி, விசுவாச ஜெபமே



பரலோகத்திலிருந்து கேட்ட பொழுதும், அவன் கேட்டான். யோவான் மேலே ஏறிப்போனான். அச்சம்பவம், சபையானது எடுத்துக் கொள்ளப்படுதலில் மேலே ஏறிப்போவதற்கு முன்னடையாளமாயிருந்தது.

73. யோவான் ஆவிக்குள்ளானான். அவன் பரலோகத்திற்குள் எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவன் வாக்குத்தத்தம் செய்து, "நான் வருமளவும் அவனிருக்க எனக்கு சித்தமானால் உனக்கென்ன" என்று சீஷர்களிடம் அவர் கூறிய பிரகாரமாக, எல்லா காரியங் களையும் அவன் முன்கூட்டியே கண்டான். அவன் பூமியிலிருக்கையில், சபையின் எடுத்துக்கொள்ளப்படுதல் வரைக்கிலும் பூமியில் என்ன சம்பவிக்கும் என்பதைக் கண்டான். பின்பு அவன் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஆயிர வருட அரசாட்சிக்கு பிறகும் நடக்கப்போகிறவைகளையெல்லாம்கூட அவன் கண்டான். ஒ, அது அற்புதமாயிருக்கவில்லையா?

74. நாம் கடந்த ஞாயிறன்று, வெளிப்படுத்தின விசேஷம் 4ம் அதிகாரம் 4ம் வசனத்தில் அவனை விட்டுவிட்டு வந்தோம்.

''அந்தச் சிங்காசனத்தைச் சூழ இருபத்து நான்கு சிங்காசனங் களிருந்தன; இருபத்து நான்கு மூப்பர்கள் வெண்வஸ்திரந் தரித்து, தங்கள் சிரசுகளில் பொன்முடி சூடி, அந்தச் சிங்காசனங்களின் மேல் உட்கார்ந்திருக்கக் கண்டேன்."

வெளி.4:4.)

75. இவர்களெல்லாம் மூப்பர்கள் என்பதை நாம் பார்த்தோம். மூப்பர் என்னும் சொல் ஒருபோதும் ஒரு தூதனையோ அல்லது வேறு எந்த ஜீவ ராசியையோ குறிக்காது. மூப்பர்கள் என்பது மீட்கப்பட்ட மானிட வர்க்கத்தையே குறிக்கும். ஏனெனில் அவர்... சிங்காசனங்களும், கிரீடங்களும், ஆளுகைகளும் ஒருபோதும் தூதர்களுக்கு சம்மந்தமுள்ளதல்ல. ஆனால் கிரீடங்களும், சிங்காசனங்களும் மானிட வர்க்கத்திற்கு சம்பந்தமுள்ள தாகவே உள்ளன. இம்மூப்பர்கள் கிரீடமணிந்து, வெண்வஸ்திரந் தரித்தவர்களாய், சிங்காசனங்களில் வீற்றிருந்தார்கள். மற்ற வேத வாக்கியங்களில் அவர்கள் பன்னிரண்டு அப்போஸ்தலர்களையும், பன்னிரண்டு கோத்திரப்பிதாக்களையும் குறிக்கும் என்பதாகக் கண்டோம். அவர்கள் இருபத்து நான்கு பேர்கள். அதாவது பன்னிரண்டு அப்போஸ்தலர்களும், பன்னிரண்டு கோத்திரப் பிதாக்களுமாவர்.

69. இப்பொழுது, நடைபெற வேண்டிய ஏனைய காரியங்களெல் லாம், சபையானது மகிமையில் இருக்கையில் நடைபெறும் விவாக நிகழ்ச்சியின்போது உள்ளவையாகும். தேவன் திரும்பி வருகிறார். அப்பொழுது யூதர்களால் மகத்தான அற்புதங்கள், சர்வதேச அதிசயங்கள் நிகழ்த்தப்படும், அது சபைக்கு நடக்கப் போகிற காரியமாக இருக்காது.

70. 3ம் அதிகாரம், சபைக்காலத்தை முடித்து வைக்கிறது. சபைக்காலமானது, நாம் காண்கிறபடி, மிகச்சிறிய சிறுபான்மை யினரோடு முடிவடைகிறது. இங்கே சற்று கவனியுங்கள். வெளிப்படுத்தின விசேஷம் 3ம் அதிகாரம் 20ம் வசனம் முதல் 22ம் வசனம் முடிய உள்ள வசனங்களில், சபைக்காலத்தின் முடிவில் கிறிஸ்து இருக்கிற இடத்தையும், அவரது மனப்பான்மையையும் குறித்துக் கூறுகிறவைகளை நான் இன்று காலையில் மீண்டும் படித்தபோது, அது என்னை ஏறக்குறைய மிகவும் நொறுக்கியது. அதைப்பற்றி எண்ணிப் பாருங்கள், முடிவுக்காலத்தில் கிறிஸ்து எங்கே இருக்கிறார் என்பதை. சபைக்காலங்களின் முடிவில் அவர் எங்கே இருக்கிறார்? அவர் தன் சபையை விட்டு வெளியே இருக்கிறார்; மத ஸ்தாபனங்களாலும் மதக் கோட்பாடு களாலும் அவர் வெளியே தள்ளப்பட்டிருக்கிறார். அவரது மனோபாவம் எப்ப டியுள்ளது? மீண்டும் உள்ளே பிரவேசிக்க முயன்று கொண்டிருக்கிறார். அது மிகவும் பரிதாபகரமானதொரு நிலையாகும்.

71. பிறகு, நாம் இங்கே, "இவைகளுக்குப் பின்பு அவனோடு பேசுகிற ஒரு சத்தத்தை அவன் கேட்டான் என்பதை நாம் இங்கே காண்கிறோம். அது என்னவாயிருக்கிறது? ஆவியானவர் பூமியை விட்டு கிளம்பிப்போய்விட்டார். முதலாம் வசனத்தில் "இவைக ளுக்குப் பின்பு" என்ற வாக்கியத்தோடு வசனம் ஆரம்பிக்கிறது. "இவைகளுக்குப் பின்பு, இதோ பரலோகத்தில் திறக்கப் பட்டிருந்த ஒரு வாசலைக் கண்டேன்…"

வெளி. 4:1

72. வெளிப்படுத்தின விசேஷம் 4:1-சபையானது போய்விட்ட பிறகு, ஒரு வாசலானது திறக்கப்பட்டது. நாம் அதைப்பற்றி யெல்லாம் பார்த்து, அது கிறிஸ்துதான் என்பதையும் கண்டு கொண்டோம். கிறிஸ்துவே அந்த வாசலாயிருக்கிறார் என்பதைக் கண்டோம். ஏழு குத்து விளக்குகளின் மத்தியில் உலாவிக் கொண்டிருந்தவருடைய அதே சத்தத்தைத்தான், "இங்கே ஏறி வா" என்ற சத்தத்தை



தேவாசீர்வாதங்களை இறங்கப்பண்ணும்

42. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் அது ஒன்றே. நாம் அதை சேர்ந்து பாடுவோம். அதை நாம் உண்மையாகவே கேட்போம். நமக்கு ஏராளமான சமயம் இருக்கிறது.

ஜெபி, ஜெபி அது ஒன்றே வழி உயர் ஸ்தலத்தில் போய்ச் சேர்ந்திட ஜெபி, ஜெபி, விசுவாச ஜெபமே தேவாசீர்வாதங்களை இறங்கப்பண்ணும்

43. எனவே, விசுவாச ஜெபமே தேவாசீர்வாதங்களை இறங்கப் பண்ணு மென்றால், நாம் தொடர்ந்து ஜெபிக்கக்கடவோம். இன்றிரவில் நாம் மிகவும் சந்தோஷமாயிருக்கிறோம். ஏனெனில் தேவனு டைய இராஜ்யத்தில், கடந்த ஆண்டில் காணாத புதிய முகங்கள் நமக்கு இப்பொழுது இருக்கிறது. எப்பொழுதும், இன்னும் அதிகமதிகமானவர்கள் சேர்க்கப்படட்டும் என்று நான் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருக்கிறேன். மறுபக்கத்தில் எப்படியிருக்கும் என்பதைப் பற்றி பாதி கூட நமக்கு ஒருபோதும் கூறப்படவில்லை.

44. நாம் இப்பொழுது வெளிப்படுத்தின விசேஷப் புத்தகம் 4ம் அதிகாரத்திற்கு திருப்புவோம்.

45. யாருக்காவது வேதாகமம் தேவையா? வசனங்கள் வாசிக்கை யில் அதைத் தொடருவதற்காக உங்களுக்குக் கொடுக்க இங்கே சில வேதாகமங்கள் உள்ளன. இப்பொழுது வாயிலோரில் ஒருவர் இங்கே வரட்டும், இங்கே நமக்கு வேதாகமங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. அறங்காவலர்களில் ஒருவர், அல்லது வாயிலோரில் ஒருவர் உடனே இங்கே வாருங்கள். சகோதரன் சேபிள் இன்னும் ஒருவர் கூட வரட்டும். நீங்கள் இரு மருங்கிலும் கொடுக்க விரும்பினால், அப்படியே நடுவிலுள்ள நடைபாதை வழியாக கடைசி வரை செல்லலாம். யாருக்காவது ஒரு வேதாகமம் எங்களோடு வேதவசனங்களை தொடருவதற்கு தேவைப் பட்டால், தேவைப்படுகிறவர்களுக்கு அதைக் கொடுங்கள்.

46. இப்பொழுது வெளிப்படுத்தின விசேஷம் 4ம் அதிகாரத் திற்கு நீங்கள் திருப்பும்படி நாம் விரும்புகிறோம்.

47. இப்பொழுது பின்னால் அமர்ந்திருக்கிறவர்கள் இங்கே முன்னால் வந்து உட்கார விரும்பினால், நீங்கள் முன்னுக்கு வந்து உட்காருவதற்காக இன்றிரவில் ஏராளமான இடம் இருக்கிறது. உங்களுக்கு வசதியானபடி உட்காருங்கள், பாடத்தில் கவனம்

செலுத்துங்கள், நாம் கூடிவந்திருக்கிற இத்தருணத்தில் நமது பாடத்தை படித்து ஆராய எனக்கு உதவி செய்யுங்கள். இங்கே இருக்கைகள் உள்ளன, ஒரு தம்பதி வருவதை நான் காண்கிறேன். இந்த இடத்தில் இரு இருக்கைகள் உள்ளன. ஒருவருக்கு இங்கே ஒரு இருக்கை உள்ளது. இங்கே பின்னாலும் இருக்கைகள் உள்ளன. காற்றோட்டமியக்கும் பொறி (Blower) எங்கும் வியாபமாக இருக்கிறது என்று கருதுகிறேன்.

48. ஏழு சபைக்காலங்களைப் பற்றி நமது கடந்த எட்டு நாட்களின் பாடத்தை எத்தனை பேர் இரசித்தீர்கள்? உங்களுக்கு நன்றி. அது என்னை மிகவும் அருமையாக உணரச் செய்கிறது, ஏனெனில் நானே மகத்தான ஆசீர்வாதத்தை அவைகளிலிருந்து பெற்றேன்.

49. இப்பொழுது, இன்றிரவில், 4ம் அதிகாரத்தோடு நாம் முடித்துக்கொள்கிறோம். யோவான் லவோதிக்கேயா சபைக் காலத் தோடு பேசியிருக்கிறான். ஏனைய சபைக்காலங்களைக் காட்டிலும் லவோதிக்கேயா சபைக்காலம் தான் மிகவும் அதிகமாக குளறுபடி செய்கிறதாக இருக்கிறது.

50. லவோதிக்கேயா சபைக்காலத்தின் இறுதிப் பகுதியில், மிகவும் பரிதாபமானதொரு காரியத்தை நாம் பார்த்தோம்; அது இயேசு தமது சொந்த சபைக்கு வெளியே நின்று கொண்டிருத் தலாகும். ஏனெனில் அங்கிருந்து அவர் வெளியே தள்ளப்பட்டு விட்டார். அவர் மீண்டும் உள்ளே நுழைய தன் சொந்தவாசலுக்கு வெளியே நிற்பதும் அவரது சொந்த சபையே அவரை வெளியே தள்ளிவிட்டிருக்கிறதும், அவர் அவர்களை இரட்சிக்க வேண்டி மீண்டும் உள்ளே பிரவேசிக்க முயன்று கொண்டிருப்பதுமான பரிதாபமான காட்சியைப் பற்றிய வேத வாக்கியங்களைப் போல வேறு எதையும் நான் வாசித்திருக்கவில்லை. “எவனாவது கதவைத் திறந்தால், என்னுடைய சொந்த வீட்டிற்குள் நான் மீண்டும் திரும்ப என்னை விடட்டும், நான் அவனோடு போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்.'' அது துயரத்தை ஏற்படுத்துகிற காட்சியாக இருக்கவில்லையா? பரலோகத்தின் தேவனானவர் தனது சொந்த சபையாலேயே, அவர்களது சமயக் கோட்பாடுகளினாலும், ஸ்தாபனங்களாலும் அவர்கள் செயல்படும் விதத்தினாலும் வெளியே தள்ளப்பட்டிருக்கிறார், அவர்களுடைய சமயக் கோட்பாடுகளையே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

51. இயேசு சிலுவையில் அறையப்பட்ட நாளில் இருந்ததைப் போலவே அது இருக்கிறது. அவர்கள் ஒரு கொலைகாரனாகிய பரபாஸை



ஜெபிக்கிறோம். அவரது ஆவி எங்கள் மத்தியில் அசைவாடி எங்களை ஆசீர்வதித்து, எங்களுடைய அனுபவத்தை உயர் தரமுள்ளதாக, ஜெயங்கொள்ளுகிறதற்கான கிருபையை அளிப்பதாக.

67. மேலும் தேவனே, சத்தருவை எதிர்கொள்ள தூரத்திலுள்ள ஊழியக்களங்களுக்கு நான் புறப்பட்டுச் செல்லுகையில், ஜெபம் என்னும் பாதுகாப்பு அரண் ஒவ்வொரு நேரமும் என்னை பாது காத்துக் கொண்டு இருக்கிறது என்பதை நான் உணருவேனாக. ஓ எவ்வளவாய் நான் அந்த பாதுகாப்பு அரணை நம்பியிருக்கிறேன்; சத்துரு அணுகும் வேளையிலெல்லாம் ஜெபமாகிய பாதுகாப்பு அரண்தான் தடுத்து நிறுத்துகிறது; ஏனெனில்; மறுபடியும் பிறந்த அனுபவத்தையுடைய , பரலோகத்திற்கு பயணம் செய்துகொண் டிருக்கிற கிறிஸ்தவர்களாகிய தாய்மார்களும், தந்தையர்களும், வாலிபரும், வாலிபப்பெண்களும், தங்கள் முழங்கால்களில் நின்று, "தேவனே, விடுதலையை அளியும்'' என்று ஜெபித்துக் கொண்டிருக்கிறார்கள். பிதாவே, நாங்கள் சத்தருவினுடைய வரிசைகளுக்குள் பிரவேசித்து, அங்கே காத்துக் கொண்டிருக்கிற ஒவ்வொரு விலையேறப் பெற்ற ஆத்துமாவையும் ஜெயிக்கத் தக்கதாக நீர் எங்களுக்கு உதவிட வேண்டுமென ஜெபிக்கிறோம். அவ்வாறு செய்யும், கர்த்தாவே, அவர்களை இருளினின்றும் வெளியே கொண்டு வந்து, ஒளியினுள் பிரவேசிக்கச் செய்தருளும். நாங்கள் இயேசுவின் நாமத்தில் இதைக் கேட்கிறோம். ஆமென்.

68. இப்பொழுது, வெளிப்படுத்தின விசேஷம் 4ம் அதிகாரம். நாம் 3ம் அதிகாரத்தை முடித்துவிட்டோம்; நாம் பயபக்தியுடன் இருப்போம்; நான் உங்களை அதிக நேரம் இங்கே வைத்துக் கொண்டிருக்கமாட்டேன். ஆனால் இந்த 3ம் அதிகாரத்தில் யோவான் மேலே எடுக்கப்பட்டபோது, அது சபை எடுக்கப்படுதலுக்கு முன்னடையாளமாகத் திகழ்ந்தது. சபையானது மேலே எடுக்கப் பட்ட முதற்கொண்டு, திரும்பி வருகிறவரையிலும் நடப்பவை யெல்லாம் இஸ்ரவேல் சம்மந்தமாகவே இருக்கின்றன. அது எவ்வாறு இருக்கிறது என்பதை நீங்கள் காணவில்லையா? இன்றைக்கு இருக்கிற மக்கள் எப்படியிருக்கிறார்களென்றால், மகத்தான ஒரு காரியம் முழு உலகையும் அசைக்கப்போகிறது என்று கூறுகிறார்கள். அது வேதவாக்கியங்களுக்கெதிரான ஒன்றாகும் அப்படி இருக்காது, ஐயா. நடைபெற வேண்டிய சம்பவங்களின் வரிசையில் ஒழுங்கில், அடுத்தபடியாக சபையானது எடுக்கப்படுதல்தான். சபைக் காலங்கள் புஸ்தகத்தில் அதைப் பற்றி வாசித்து அறிந்து கொள்க.

"வார்த்தை மாம்சமாகி நமக்குள் வாசம் பண்ணினார்''. உண்மையான தேவனுடைய வார்த்தையின் பிரத்தியட்ச மாகுதலைக் காணுவதென்பது, வேத வாக்கியங்களின்படியே காணும்படியாக தோற்றமளித்தலாகும். வேதவாக்கியம் கூறுகிற படி, மக்கள் எவ்வாறு பயணம் செய்து வார்த்தையைத் தேடுவார்களென்பதும், அப்படியும் அதைக் காணத் தவறிடுவர் என்பதும் அப்படியே நிறைவேற்றியிருக்கிறது. ஓ தேவனே, நாங்கள் மகிழ்ச்சியுள்ளவர் களாயிருக்கிறோம்; ஆண்டுகளுக்கு முன்பாக நாங்கள் அவரைக் கண்டு கொண்ட தாலும், அது எங்களுடைய இருதயத்திற்கு விலையேறப் பெற்றதாக இருப்பதாலும், நாங்கள் ஒரு சிறிதளவுகூட குழம்பியிருக்கவில்லை என்பதைக் காணவும், நாங்கள் மகிழ்ச்சியுள்ளவர்களா யிருக்கிறோம்.

64. ஓ தேவனே, "தங்கள் தேவனை அறிந்திருக்கிற ஜனங்கள் திடங்கெண்டு, மகத்தான காரியங்களைச் செய்வார்கள்'' என்று நீர் கூறினீர். நாங்கள் இந்தக் கடைசி நாட்களில் இருந்து கொண்டு, இன்னின்ன காரியங்கள் இக்காலத்தில் சம்பவிக்கும் என்று இயேசுவானவர் முன்னுரைத்த காரியங்கள் எங்கள் மத்தியில் வந்து நிறைவேறி, பிரத்தியட்சமானயாவற்றையும் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறோம். அவர் செய்த வண்ணமாகவே, அதே அடையாளங்கள், அற்புதங்கள், அதிசயங்கள், நிகழ்த்தப் படுவதையும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். "சோதோமின் நாட்களில் நடந்தது போல மனுஷகுமாரனுடைய வருகையிலும் நடக்கும்'' என்று அவர் கூறியது போலவே இருக்கிறது.

65. கர்த்தாவே, நீர் பரிசுத்த ஆவியினாலே, உம்முடைய வார்த்தையில் சேர்ந்து, அதிலிருந்து உண்மையான காரியங்களைப் பெற்றுக் கொள்ளவும், அவைகளை வார்த்தையைக் கொண்டு கல்வாரியோடு இணைத்துப் பார்க்கும்படி எங்களுக்கு செய்து, அவரில் எங்களுக்கு பரிபூரணம் இருக்கிறது என்பதைக் கண்டு கொள்ளச் செய்திருக்கிறீர். செல்வங்களும், ஆசீர்வா தங்களும், மகிமையும், எல்லாம், அவற்றைப் பெற்றுக் கொள்ள பாத்திரராயிருக்கிற அவருக்கே போகிறது. அவர் உலகத் தோற்றமுதல் அடிக்கப்பட்டிருக்கிறபடியால், பாத்திரராயிருந்து, சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்தவருடைய வலது கரத்தில் இருந்த புத்தகத்தை எடுத்துக் கொள்ள வருகிறார், அவர் தாமே சிங்காசனத்தில் வீற்றார்.

66. பிதாவே, அவரைக் குறித்து இன்று காலையில் நாங்கள் பேசு கிறோம். நீர் எங்கள் இருதயங்களை, ஆசீர்வதிக்க வேண்டுமென



ஏற்றுக்கொண்டு, இயேசுவை சிலுவையில் அறைந்தார்களே, அதுபோல் உள்ளது. தங்கள் மத்தியில், ''ஒரு கொலையாளி'' என்று குற்றம் நிரூபிக்கப்பட்ட ஒருவனை சுதந்திரமாக அவிழ்த்து விட்டனர். ஆனால் ஜீவனை அளிக்கக் கூடிய இயேசு கிறிஸ்துவையோ நிராகரித்தனர்.

52. அதே காரியத்தைத் தான் ஒவ்வொரு ஸ்தாபனமும், பெந்தெ கொஸ்தே ஸ்தாபனமும் இன்றைக்குக் கொண்டிருக்கின்றன. அந்த ஸ்தாபனங்களில் போஷிக்கப்படுகின்றனர். ஸ்தாபனத்தை ஸ்தா பித்ததுமே உடனடியாக அது மரித்து விடுகிறது. வரலாற்றின் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தால், அங்கே ஸ்தாபனம் உண்டாக்கிக் கொண்ட எந்தவொரு சபையும் உடனே மரித்ததைத் தவிர வேறு எதுவும் அதற்கு நடக்கவில்லை என்பதைக் காணலாம். அவர்கள் ஸ்தாபனம் உண்டாக்கிக் கொண்ட உடனேயே அவர்களை விட்டு அற்புத அடையாளங்கள் நீங்கிப் போயின. கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டு, தங்களில் ஜீவனைப் பெற்றுக் கொள்வதற்குப் பதிலாக, அவர்கள் பின்னுக்குத் திரும்பி, தங்கள் மத்தியில் பரபாஸை அவிழ்த்துவிட்டனர். அது மோசமான ஒன்றாக இருக்க வில்லையா? தேவன் தன் சபையை விட்டு வெளியே தள்ளப்பட்டிருப்பதும், அவர் வெளியே நின்று கொண்டு இக்கடைசி சபைக் காலத்தில் கதவைத் தட்டிக் கொண்டு, உள்ளே பிரவேசிக்க முயன்று கொண்டிருப்பதும் ஒன்றும் ஆச்சரியமாய் இல்லை.

53. வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகமானது மூன்று பாகங் களாக பிரித்துவைக்கப்பட்டிருக்கிறது. முதல் பாகமானது முதல் மூன்று அதிகாரங்களில் உள்ளது. அது சபையைக் குறித்தவையாகும். சபைகளின் தூதர்களுக்கு அளிக்கப்பட்ட செய்திகளாகும். அவைகள் பின்பு அவள், 3-ம் அதிகாரத்தில் மறைத்து விடுகிறாள்; பின்பு 19ம் அதிகாரத்தில், தான் மீண்டும் தோன்றுகிற வரையிலும், இடையில் வேறு எங்கும் காணப்படவில்லை. அங்கே தான் அவள் திரும்பி வருகிறாள். அதற்கிடைப்பட்ட காலத்தில் தேவன் யூதரோடு இடைப்பட்டுக் கொண்டிருக்கிறார். அதன்பிறகு, அப்பொழு திலிருந்து, மகத்தான புதிய எருசலேம் நகரம் வருவதற்கும், யூத ஜனங்கள் முத்திரையிடப்படுவதற்கும் இடைப்பட்ட கடைசி காலமாக இருக்கிறது.

54. எனவே இன்றிரவில் நான்... இதற்கு பிறகு, உடனே யோவான் பத்மு தீவில் கண்டான்... கடற்கரையிலிருந்து எவ் வளவு தூரத்தில் பத்மு தீவானது இருந்தது என்பதை எத்தனை பேர் நினைவில்

வைத்திருக்கிறீர்கள்? எவ்வளவு தூரத்தில் அது இருந்தது? கரையில் இருந்து 30 மைல்கள் தூரத்தில் அது இருந்தது. பத்மு தீவின் சுற்றளவு எத்தனை தூரம்? அதன் புவியியல் அறிந்த சிலர் அதைப் பற்றி நினைவில் வைத்திருக்கிறீர்களா? அது பதினைந்து மைல்கள் சுற்றளவுள்ளதாக இருந்தது. அத்தீவை ரோமனியர்கள் குற்றவாளிகளை நாடு கடத்துவதற்காக பயன்படுத்தி, அங்கே சிறைக்கைதிகளை வைத்திருந்தார்கள். யோவான் அத்தீவில் எதற்காக வைக்கப்பட்டிருந்தான்? அவன் அப்படி என்ன செய்து விட்டான் அங்கேயிருப்பதற்கு? எதையாவது திருடி விட்டானா? இல்லை. அவர்கள் அவனை அங்கே போட்டு விட்டார்கள். ஏனெனில், அவர்களை பார்வையில், அவன் மக்களுக்கு தொந்தரவு செய்து விட்டதாகவும், ஏதோ தீமையான காரியத்தை செய்து விட்டதாகவும் கருதினார்கள். அவன் அப்படியெதுவும் செய்து விடவில்லை. அப்படியெனில், அவன் எதற்காக அங்கே வைக்கப் பட்டிருந்தான்? தேவனுடைய வார்த்தையினிமித்தமும், தன்னு டைய சாட்சியினிமித்தமும், சுவிசேஷத்தைப் பிரசங்கித்த தினிமித்தமும்தான் அவன் அங்கே வைக்கப்பட்டிருந்தான்.

55. ஒரு கிறிஸ்தவனுக்கு மிகச் சிறப்பானதொன்று சம்பவிக்க வேண்டுமெனில், இது மாதிரியான அனுபவம் இல்லாமல் அது நடக்க முடியுமா? இல்லை, இல்லை. எனவே, தேவன் யோவானை தனியே அத்தீவில் போய் இருக்கும்படி செய்தது எதற்காக? இந்த வெளிப்படுத்தின விசேஷப்புத்தகத்தை நமக்கு அளிக்கத் தான். தேவனால் பிசாசினுடைய கண்களை எந்த நேரத்திலும் மறைத்து விட்டு காரியம் செய்ய முடியும். அவர் விரும்பினால் முடியும். அவருக்கு இயலுமல்லவா? அவரால் மிக எளிதாக இயலும். நான் அவரை நேசிக்கிறேன். ஏனெனில் நான் புத்திசாலியாக இருக்கத் தேவையில்லை. நான் புத்திசாலியாக இருப்பேனெனில். ஒருவேளை அதைப்பற்றியெல்லாம் நான் மறந்து விடுவேன். தேவனை விட அதி புத்திசாலி வேறு யாரும் கிடையாது என்பதை நான் அறிவேன். எனவே நான்... எனக்கு உள்ள அனைத்தையும், நான் என்னையே அவருக்கு அர்ப்பணித்து, அவர் என்ன செய்யக் கூறுகிறார் என்பதைப் பார்க்கிறேன். அவ்வளவுதான் சில சமங் களில் என் கருத்துக்கு அது மிகவும் முரணாக இருக்கிறது. ஆனால் நான் ஒன்றை அறிவேன், அதென்னவெனில், அவர் என்னை நடத்திக் கொண்டிருக்கிறார் என்பதே. அவர் புத்திசாலியாக இருக்கிறார். அவர் என்ன செய்கிறார் என்பதை அவர் அறிந்தே யிருக்கிறார். நான் அப்படியில்லை. எனவே, நான் அவரை கிரியை செய்ய விட்டுவிடுகிறேன். அதன் பிறகு நான் ....



60. அவர் தேவனாயிருக்கிறார். சகோதரன் ராய்! அவர் ஜெபத்திற்கு பதிலளிக்கிறார். சகோதரன் ஸ்லாட்டார். அதேவித மாகத்தான் அவர் செய்கிறார்; உங்களுடைய சிறிய நாயைக்கூட அவர் குணமாக்கினார். அவர் சுகமளிக்கிறார் என்பதை நான் அறிவேன். அவர் ஜெபத்திற்கு பதிலளிக்கிறார். அவர் இன்னமும் அற்புதங்களைச் செய்கிறார். அவர் இன்னமும் தேவனாயிருக்கிறார். அப்படியே அவர் செய்வார். எப்பொழுதும் அவர் தேவனா யிருந்தார், அவர் இன்னமும் தேவனாகவே இருப்பார்.

வீட்டின் கூரையின் மேலும் அவர் தேவனாயிருக்கிறார் (அப்பாடலை சபையில் பாடும் சகோதரர் யார்?) சமையலறையில் தேவன் இருக்கிறார், பண்ணையில் தேவன் இருக்கிறார், வாகனத்தில் தேவன் இருக்கிறார், எங்கும் தேவன் இருக்கிறார்; எல்லாவற்றிலும், எங்கும் தேவன் தேவனாக இருக்கிறார்.

61. ஓ, எவ்வளவு அற்புதமானவர் நாம் இவ்விதமாக பிரசங்கம் செய்து கொண்டே போகலாம், அப்பொழுது நம்மால் இந்தப் பாடத்திற்குள் செல்லவே முடியாது போய்விடும். நல்லது, நாம் இப்பொழுது ஒரு க்ஷணம் ஜெபத்திற்காக தலை வணங்குவோமாக.

62. கிருபையுள்ள பரம பிதாவே, நாங்கள் உம்முடைய பரிசுத்த வார்த்தையின் மேல் மிகவும் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிறோம். அதினால் எங்களுடைய இருதயங்கள் எங்களுக்குள்ளாக கொழுந்து விட்டு எரிகிறது, அப்பொழுது நாங்கள், உம்முடைய ஆவி எங்கள் மத்தியில் இறங்கி வருகிறார் என்றும், எங்களோடு பேசுகிறார் என்றும், எங்கள் இருதயங்கள் முன் வந்து அதைப் பற்றிக் கொள் கிறது என்றும் அறிகிறோம். கர்த்தாவே, அதைக் குறித்து நாங்கள் மிகவும் நல்லவிதமாக உணருகிறோம்.

63. மிகவும் அதிகமாக குழப்பம் நிறைந்திருக்கிறதாக இந்த இருளான வேளை இருக்கிறது என்பதை அறிகிறோம். தீர்க்க தரிசியானவன், கடைசி நாட்களில் ஒரு பஞ்சம் வரும். அது இவ் விதமாக இருக்கும். எப்படியெனில், ஆகாரக் குறைவினால் உண்டாகிய பஞ்சமல்ல, ஜலக் குறைவினால் உண்டாகிய பஞ்ச முமல்ல. ஆனால் தேவனுடைய உண்மையான வார்த்தையைக் கேட்க முடியாத பஞ்சமாகும் அது. உண்மையான தேவனுடைய வார்த்தையை தேடுவதற்காக மனிதர் கிழக்கிலிருந்து மேற்குக்கும், வடக்கிலிருந்து தெற்குக்கும் அலைந்து திரிவார்கள் என்று கூறிய தைப் போல் நிலைமை இருக்கும். வார்த்தை! வார்த்தை என்பது யார்? இயேசுவே வார்த்தையாயிருக்கிறார்.

வேறுமாதிரியாக உருவாக்கிவிடுவார்கள். திருடப்பட்ட இந்த வாகனம் மிகவும் நல்லதொரு வண்டியாகும். அது ஒரு ஸ்டேஷன் வாகன் என்று எண்ணுகிறேன். அப்படித்தானே சகோதரன் ஈவான்ஸ் அவர்களே? ஆம், அது ஒரு ஸ்டேஷன் வாகன்தான்.

57. எனவே, என்ன நடந்தது? நாங்கள் முழங்கால் படியிட்டு ஜெபித்தோம். எல்லாம் சரியாக இருக்கிறது என்பதாக கர்த்தர் எங்களுக்கு சாட்சியிட்டார். எனவே, அப்பொழுது கர்த்தருடைய வல்லமையானது எங்களுக்குள் வந்தது. சகோதரன் ஈவான்ஸ் ஒரு குறிப்பிட்ட வழியாக போகும்படியாக நடத்தப்பட்டு புறப்பட்டுச் சென்றார்.

58. வாகனத்தை திருடியவன் அதை நேரே இங்கே ஜெபர்சன் வில்லுக்கே திரும்பக் கொண்டு வந்துவிட்டான். அவ்வாகனமானது லூயிவில்லில் திருடப்பட்டது. திருடியவன் பௌலிங் க்ரீன் வரையிலும் அதைக் கொண்டுபோய் விட்டு, அதை இங்கே திரும்பக்கொண்டு வந்து விட்டு விட்டான். அவன் வாகனத்தை விட்டு வெளியேறி, அதன் சாவியையும் வண்டியிலேயே விட்டு விட்டு, வண்டியை அங்கேயே நிறுத்தி விட்டு, நடந்து சென்று விட்டான். ஈவான்ஸ் கண்டு கொள்ள வசதியாக ஜெபர்சன் வில்லிலேயே விட்டுவிட்டு சென்று விட்டான்; லூயிவில்லில் அல்ல. இவ்வளவு தூரம் திரும்ப இங்கே ஜெபர்சன்வில்லுக்கு அவன் வெகுதூரம் ஓட்டிக் கொண்டு வந்துவிட்டு விட்டுப் போய் விட்டான்.

59. பறவைகள் தனக்குக் கீழ்ப்படியும்படி கர்த்தரால் செய்ய முடியும். மனிதன் அவருக்குக் கீழ்ப்படியும்படி செய்ய அவரால் முடியும்; அவருடைய சத்துரு அவருக்கு கீழ்ப்படியும்படி செய்ய அவரால் இயலும். ஆம், ஐயா. அவர் தேவனாயிருக்கிறார். ஒரு பொருள்கூட இழக்கப்படாமல், பெட்ரோல் டாங்கின் பாதியளவுக்கு பெட்ரோல் நிரப்பியிருந்து, வாகனமானது அங்கே, பௌலிங் க்ரீன் வரைக்கிலும் அத்திருடன் அதை ஓட்டிக்கொண்டு போய் விட்டு , அவனால் திரும்பக்கொண்டு வந்து நிறுத்தி விடப் பட்டிருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் அவனிடம், ''வண்டியைத் திருப்பு , வண்டியை ஜெபர்சன்வில்லுக்கு திருப்பி ஓட்டிக் கொண்டுபோ, இன்ன இடத்தில் இன்ன தெருவில் நிறுத்திடுவாயாக, நான் அவனை, வாகனத்தை கண்டு கொள்ளும்படி அந்த இடத்திற்கு அனுப்பப் போகிறேன். இன்ன வழியாக'' என்று கூறியிருக்க வேண்டும். அது சரிதானே சகோ. வெல்ச் அவர்களே? அது சரிதான்.



அவ்வாறுதான் உள்ளது, சகோதரன் நெவில் அவர்களே, ஆம் ஐயா, அவர் கிரியை செய்ய விட்டுவிடுங்கள். பாருங்கள்? அவர் தான் என்ன செய்கி றோம் என்பதை அறிந்தேயிருக்கிறார். நான்; அறியேன். பாருங்கள்? எனவே, நான் எந்த பெரிய பகட்டான காரியத்தையும் பெற்றிருக்க முயற்சிப்பதில்லை. அப்படியே நான் என்னையே தாழ்த்தி, "இதோ நான் இருக்கிறேன், பிதாவே, எந்த வேளையில் நீர் விரும்பினாலும்...'' என்கிறேன். எனவே அவ்வாறு தொடர்ந்து செல்லுங் கள், அப்படி செய்தால் அது முடிவில் சரியாகத் தான் இருக்கும்.

56. எனவே, அங்கே யோவான் இருந்திருக்காவிடில், யோவான் அத்தீவுக்குச் சென்றிருக்காவிடில், நமக்கு வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் கிடைத்திருக்காது. தேவன் நமக்கு வெளிப் படுத்தின விசேஷ புத்தகத்தை கொடுப்பதற்காக அது அவருடைய வழியாயிருக்கிறது. அவன் அங்கே மூன்று ஆண்டுகள் இருந்தான் என்று எண்ணுகிறேன்; வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தை அங்கே எழுதினான்.

57. அழைப்பு விடுக்கும் கடைசி வசனத்தில் நாம் யோவானை வெளி.3:22-ல் விட்டு வந்தோம். ''ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன்.''

58. இப்பொழுது 4ம் அதிகாரத்தில் ஆரம்பிப்போம்.

"இவைகளுக்கு பின்பு, இதோ, பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசலைக் கண்டேன். முன்னே எக்காள சத்தம் போல என்னுடனே பேச நான் கேட்டிருந்த சத்தமானது: இங்கே ஏறி வா, இவைகளுக்குப் பின்பு சம்பவிக்க வேண்டியவைகளை உனக்குக் காண்பிப்பேன் என்று விளம்பினது.

வெளி.4:1

59. நாம் ஒவ்வொரு வசனமாகப் பார்க்கப்போகிறோம். நான் இங்கே அநேக வேத வாக்கியங்களை எழுதி வைத்திருக்கிறேன், அவைகள் எழுதப்பட்ட ஒரு புத்தகம் உள்ளது. அதற்குள்ளாக நாம் எந்த அளவு பார்க்கப் போகிறோம் என்பதை நான் அறியேன். கர்த்தர் வழி நடத்துவராக. இப்பொழுது, கவனியுங்கள், வார்த்தை யானது இவ்வாறிருக்கிறது.

"இவைகளுக்குப் பின்பு" (சபைக்காலத்திற்குப் பிறகு )

60. சபையானது எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகு, பூமியில் நடைபெறப் போகிறவைகள் தான் இவ்வாறு இவைகளுக்குப் பின்பு சம்பவிக்க

வேண்டியவைகள்'' என்று குறிப்பிடப் பட்டுள்ளது. இச்சம்பவங்கள் இஸ்ரவேலர் சம்மந்தப்பட்ட வைகளாக இருக்கப்போகின்றன. சபைக் காலத்திற்குப் பிறகு, சபைக் காலங்களுக்குப் பிறகுள்ளவைகள் இவைகள். அவர்கள்..... இதிலிருந்து, வெளிப்படுத்தின விசேஷத்தின் 19ம் அதிகாரம் வரையிலும் மணவாட்டி ஒருபொழுதும் காட்சியில் தோன்று வதேயில்லை. 19ம் அதிகாரத்தில் தான் அவள் தன் மணவாளனோடு திரும்பி வருகிறாள். அக்கலியாணத்திற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்!

61. நாம் அதை வாசிப்போமாக. நாம் இவ்வேத வாக்கியங்களை எடுத்துக்கொள்கையில், நீங்கள் அதை வாசிக்க விரும்புகிறீர்களா? நல்லது, நாம் இப்பொழுது வெளிப்படுத்தின விசேஷம் 19ம் அதிகாரம் எடுத்துக்கொள்வோம். வெளிப்படுத்தின விசேஷம் 19ம் அதிகாரம், 7ம் வசனத்தில் ஆரம்பிப்போம். வெளிப்படுத்தின விசேஷம் 19ம் அதிகாரம், 19ம் அதிகாரம் வருகிற வரையிலும் சபையானது மீண்டும் அதற்கிடையில் ஒருபோதும் தோன்ற வேயில்லை. இவ்வதிகாரத்தில்தான் சபையானது மீண்டும் தோன்றுகிறது.

''நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதி செலுத்தக் கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன்.

வெளி.19:7

62. ஓ, நடுநிசி வரையிலும் அதின் பேரில் என்னால் பிரசங்கிக்க முடியும், ஆயினும் அதில் பாதிகூட விவரித்திருக்க முடியாது. "அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள்.'' என்ற வசனத்தைப் பாருங்கள்.

63. சார்லி, நெல்லி மற்றும் உள்ள யாவரோடும் மற்றும் ராட்னி யோடும் அன்றொரு நாளிலே, நாம் பேசிக் கொண்டு வந்தோமே, பார்த்தீர்களா? எலிசா அந்த சால்வையை எலியாவின் மேல் போட் டான் .... அல்லது எலியா சால்வையை எலிசாவின் போட்டான். எலியா மீண்டும் தன் கையை நீட்டி அவன் மேல் போட்ட சால்வையை திரும்ப எடுத்து, தன்மேல் போட்டுக் கொண்டு, யோர்தானைக் கடந்து, மலையின் மேல் ஏறி, அக்கினி இரதத்தில் ஏறிச்சென்று, சால்வையை கீழே போட்டு விடுகிற வரையிலும், தன்மேல் போட்டுக்கொண்டு நடந்து திரிந்தான்.



வீடுகளைக் குறித்து நான் ஒப்பிட்டுச் சொல்லவில்லை. வீட்டை விட்டு வெளியே உள்ளவற்றில், எனக்குத் தெரிந்தவரை அங்கு தான் நன்றாக உள்ளது. நானும் அங்கு சாப்பிடுவது உண்டு. நான் எனது குடும்பத்தை வீட்டில் வைத்து உணவளிப்பதைவிட மிக மலிவாக அந்த உணவகத்தில் உணவளிக்க முடியும்.

54. எனவே, அப்பொழுது நான் அங்கே உள்ளே சென்றேன். அதே போல், சகோ. ஈவான்ஸ் அவர்களும் சாப்பிடுவதற்காக, தனது மோட்டார் வாகனத்தை வெளியே நிறுத்தி வைத்துவிட்டு, உள்ளே சென்றார். அவர் தானும் தனது குடும்பமுமாக உணவகத்தை விட்டு வெளியே வரும்போது, அங்கே அவரது எல்லாத் துணிமணிகளோடும் அவரது மோட்டார் வாகனமானது காணப்படவில்லை. எல்லாம் போய்விட்டிருந்தது. நம் எல்லா ரையும் போலுள்ளவர்தான் சகோதரன் ஈவான்ஸ் அவர்களும். அவருக்கு அங்கே ஒரு சிறு வியாபாரம்தான் உண்டு, அவர் மோட்டார் வாகனத்தில் வேலை செய்கிறவர். மிக மோசமாக சேதமடைந்த வண்டிகளை வாங்கி, அவைகளை சீர் செய்பவர் அவர். அவர் ஒரு எளிய மனிதர், அவர் தனது பணத்தை, இந்த வகையான சுவிசேஷத்தை அவர் விசுவாசிக்கிறபடியினால், அதைக் கேட்பதற்காக செலவழித்துக் கொண்டு வந்து கொண்டு இருக்கிறார். தேவன்தாமே அவர்களுக்கு, அத்தேசத்தில் உதவியாக இருந்து இச்செய்தியைப் பிரசங்கிப்பதற்காக, எங்கிருந்தாவது ஒரு செய்தியாளனை அனுப்பும்படி நான் ஜெபித்துக்கொண்டு இருக்கிறேன்.

55. அப்பொழுது சகோதரன் ஈவான்ஸ் செய்வதறியாமல் வந்தார். அவர் காவல் துறையினருக்கும் தெரிவித்துவிட்டார். அவர்களாலும் கண்டுபிடிக்கமுடியவில்லை. எனவே அவரும், அவரோடு சகோ. ஃப்ரெட் அவர்களும் வந்தனர், நாங்கள் அறையில் அமர்ந்து அதைக் குறித்து பேசினோம். அவ்வித மாகத்தான், நாங்கள் என்ன நடக்கிறதென்று அறையில் உட்கார்ந்து பார்த்து, பிறகு தேவனிடத்தில் போவது வழக்கம். எனவே நாங்கள் கர்த்தரிடம் ஜெபித்த பொழுது, அவ்வாகனத்தை எடுத்துக் கொண்டுபோன மனிதனை சந்தித்து, அவன் எங்கிருந்தாலும் சரி, அவனைத் திருப்பியனுப்பும்படி கேட்டோம்.

56. வழக்கமாக இத்திருடர்கள், வண்டியை வெகுவேகமாக போலீஸ் கைக்கு எட்டாத தூரத்தில், அதாவது பௌலிங் க்ரீன் என்ற பகுதியைத் தாண்டி ஓட்டிச் சென்றுவிடுவர், அதனால் அவர்களால் அதைக் கொண்டுபோய் மறுபடியும் வேறு வர்ணம் பூசி, அதை

51. இங்கே சமீபத்தில் லூயிவில்லில் இந்தக் கார்களைத் திருடி, வெகு விரைவாக அவைகளை கென்டக்கியில் ஏதோ ஒரு இடத்தில், எடுத்துச் சென்றுவிடும் ஒரு திருட்டுக் கும்பலைப் பற்றி நீங்கள் யாவரும் கேள்விப்பட்டும், பத்திரிக்கைகளில் அதைப் பற்றி படித்தும் இருக்கிறீர்கள். கென்டக்கியில் ஒரு மோட்டார் வாகனத்தை உரிமை கொண்டாட அதற்கான உரிமைப் பத்திரம் உங்களுக்குத் தேவையில்லை; அதை கென்டக்கியிலேயே உங்களுக்கு தயாரித்துக் கொடுப்பார்கள். ஆகவே, நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், அதை நீங்கள் எடுத்துக்கொண்டு போய் உரிமைப்பத்திரம் இல்லாமலேயே விற்றுவிட வேண்டியதுதான். எனவே அவர்கள் இவ்வாறு திருடிக் கொண்டு வந்த விற்கப்பட்ட வாகனங்களை எடுத்து ஒட்டிக்கொண்டுபோய், அவைகளுக்கு வேறு வர்ணம் பூசி, அவைகளைத் கொண்டு வந்து விற்று விடுவார்கள். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், அவ்வாகனத்திற்கான உரிமைப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக உங்களுடைய குடியிருப்பின் இலக்கத்தை மட்டும் சொன்னால் போதுமானது. அதைக் கொண்டு அவர்கள் உங்களுக்கு உரிமைக்கான தஸ்தா வேஜைத் தயாரித்து அளித்து விடுவார்கள். இப்படியாக அவர்கள் மோட்டார் வாகனத்தை தெருவிலிருந்து திருடிக்கொண்டு, அதை வெகு வேகமாக ஓட்டிச் சென்று, ஏதாவது ஒரு பணிமனையில் கொண்டுபோய் நிறுத்தி, அதற்கு வேறு வர்ணம் கொடுத்து, அவ் வண்டியின் தோற்றத்தை முழுவதுமாக மாற்றியமைத்து, அதை விற்றுவிடுவார்கள். அமெரிக்காவில் எங்கும் இவ்விதமான மோசடியானது நடைபெற்று கொண்டிருக்கிறது. அது விசேஷ மாக கெண்டக்கியில் தான் மிக அதிகமாக நடைபெறுகிறது. அதைப் பற்றிய கட்டுக்கதையை சமீபத்தில் பத்திரிக்கையில் படித்தேன்.

52. பெருந்தன்மையும், நல்ல உள்ளமும் படைத்த, விலையேறப் பெற்ற சகோதரன் ஈவான்ஸ் அவர்களும் அவரது குடும்பத்தினரும் ஜார்ஜியாவிலுள்ள மேகோனிலில் இருந்து மோட்டார் வாக னத்தை ஓட்டிக்கொண்டு, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இங்கு சுவிசேஷத்தைக் கேட்பதற்கென்றே வந்துகொண்டிருக்கிறார்கள். ஓ, எவ்வளவாய் அவர்கள் உத்தமமும், உண்மையுமான சிநேகிதராயிருக்கிறார்கள்! பிறகு அவர் மில்லருடைய உணவகத் தில் சாப்பிட செல்வதுண்டு.

53. மில்லர் நிறுவனத்திற்காக நான் விளம்பரம் கொடுக்க வில்லை. லூயிவில் கெண்டக்கியின் மிகச்சிறந்த உணவை அவர்கள் விற்கிறார்கள் என்று நான் நிச்சயமாக கருதுகிறேன். தனிப்பட்ட



64. ஒரு கிறிஸ்தவன் முதலாவதாக இரட்சிக்கப்படுகிற பொழுது, அவனது விசுவாசமானது கிறிஸ்துவினிடமாகத் திரும்பு கிறது. அப்பொழுது அவன் தனக்குத் தானே ஒன்றைச் செய்ய வேண்டியவனாயிருக்கிறான். இரட்சிக்கப்பட்டபிறகு அவன் எல்லா அசுத்த பழக்கங்களிலிருந்தும் தன்னை சுத்திகரித்துக் கொள்ள வேண்யடிவனாயிருக்கிறான். 'பாரமான யாவற்றையும் தள்ளி விட்டு ' அவள் தன்னைத் தானே ஆயத்தப்படுத்திக் கொள்ளுகிறாள். மணவாட்டி தன்னை ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கிறாள்.

65. நாம் தொடர்ந்து போகிறதற்கு முன்பாக, ஒரு சிறு கதை எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது, அதை சொல்லியாக வேண்டும். இங்கே மேற்கிலே, அநேக ஆண்டுகளுக்கு முன்பாக, இந்த மகத் தான ஆர்மர் அண்ட் ஸ்விஃப்ட் பேக்கிங் கம்பெனி ('Armour & Swift Packing Company) என்று நிறுவனம் இருந்தது. அவர்கள் எவ்வாறு தொழில் செய்தனர் என்றால், அவர்கள் அங்கே வந்து, கால்நடைகளையும், அவற்றிற்கான மேய்ச்சல் நிலங்களையும் வாங்குவார்கள். அவைகள் பெரும் மதிப்புள்ளவைகள். அங்கிருக் கும் எல்லா சிறு மேய்ச்சல் நிலங்களையும் வாங்கிவிடுவார்கள். அதினால் அவர்களிடம் பல மில்லியன் ஏக்கரா மேய்ச்சல் இருக்கின்றன. அதில் அவர்கள் உயர்ந்த இன ஹியர்ஃபோர்ட் ரக பசுக்களை பிரிவுகளில் மேய்த்தார்கள். அவர்களுக்கென்று சொந்தமான இரயில் பாதைகள் உண்டாயிருந்தபடியினால், அதில் கால் நடைகளை ஒரு மேய்ச்சல் நிலத்திலிருந்து இன்னொரு மேய்ச்சல் நிலத்திற்கு கொண்டு செல்லப்படும்.

66. இந்த ஆர்மர் அண்ட் ஸ்விஃப்ட் கம்பெனிக்கு ஒரு பெரிய மேய்ச்சல் நிலம் இருந்தது. அவர்களுக்கு அங்கே கண்காணிப் பாளர் ஒருவர் இருந்தார். அவர் அந்த மேய்ச்சல் நிலத்தின் மேல் பொறுப்பாக இருந்தார். அவருக்கு நான்கு அல்லது ஐந்து குமாரத்திகள் இருந்தனர். ஒரு நாள் அந்த கம்பெனி முதலாளிகளில் ஒருவருடைய மகன் அந்த மேய்ச்சல் நிலத்திற்கு விஜயம் மேற் கொள்ள விருக்கிறான் என்பதை அறிந்து கொண்டார்கள். அவன் திருமணமாகாத ஒரு இளைஞனாவான். அவன் வந்தவுடன் அவன் மையல் கொள்ளும்படி மயக்கிட வேண்டுமென அவர்கள் உறுதி யாக இருந்தனர். எனவே அவர்கள் யாவரும் அவன் வருகைக்காக எல்லாவிதமான ஆயத்தங்களையும் செய்தார்கள்.

67. அவன் அங்கே வந்து சேருகையில், அவர்கள் அவனை போய் சந்திக்க இருந்தார்கள். அவர்கள் தங்கள் சிறிய குஞ்சம் தொங்க

விடப்பட்டுள்ள ஆடைகளையணிந்து கொண்டு, தலைக்குப் பின் தொங்கிக் கொண்டிருக்கும் தொப்பியை அணிந்து கொண்டிருந் தனர். ஆடையணிந்து கொண்டு இருந்தனர். அவர்கள் சரியான மேற்கத்தியர்களுக்கேற்றவிதமாக இருந்தனர். அவர்களில் ஒரு பெண் தான் அந்தப் பையனை அடைய வேண்டும் என்று இருந்தனர்.

68. அப்பெண்களுக்கு உறவினளான ஒரு பெண் அங்கே யிருந்தாள், அவளது தாய், தந்தை இருவருமே மரித்துவிட்டிருந் தனர். அவள் அவர்களுக்கு உறவினளாக இருந்தாள். அவள் அங்கிருந்த யாவருக்கும் ஒரு அடிமையைப் போல் இருந்தாள். அவள் தான் அங்கே பாத்திரம் கழுவுதல் உட்பட அனைத்து மட்ட மான வேலைகளையெல்லாம் செய்ய வேண்டியவளாய் இருந்தாள். அவளுக்கு ஆடைகள் இல்லாததால், பிறர் உபயோகித்துவிட்டுக் கொடுப்பவைகளையே அவள் அணிந்து வந்தாள்.

69. ஆகவே, அவ்விளைஞன் வந்து சேரும் நேரம் சமீபித்தபோது, அப்பெண்கள் யாவரும் தங்களுடைய சாரட் வண்டிகளில் ஏறிக் கொண்டு, ஸ்டேஷனுக்கு அவனை வரவேற்கச் சென்றார்கள். அவர்கள் துப்பாக்கி வேட்டுக்கள் முழங்க, குதிரைகள் கனைப்புடன் கூடிய வரவேற்பு நல்கினார்கள். பிறகு அவனை மேய்ச்சல் நிலத்திற்கு அழைத்துக் கொண்டு வந்தார்கள். அங்கே அவர்கள் அந்த இரவில் பெரிய நடனம், விருந்து போன்ற கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்தார்கள். அவர்கள் வைக்கோல் போர் உள்ள இடங் களுக்குச் சென்று, கால்நடைப் பட்டிக்குச் சென்று, பாடல்கள் பாடி, நடனமாடி இரவு முழுவதும் களி கொண்டாடினார்கள். அவ்விளைஞன் இரண்டு அல்லது மூன்று நாட்கள் தங்கியிருந்தான்.

70. இந்த எளிய உறவினளோ .....

71. இக்காரியத்தை ஒரு விஷயத்துடன் ஒப்பிடப் போகிறேன். மிகவும் பிரமாதமாக உடையுடுத்திக்கொண்டும், கூர்மையான கோபுர கம்புகளையுடைய ஆலயங்களையுடைய நமது உறவினர் களாகிய சபைகள் உள்ளனவே, அவைகள், பெந்தெகொஸ்தே அனுபவம் உள்ளவர்களுக்கு, மோசமான பெயர்கள் என்ன வெல்லாம் உண்டோ அதையெல்லாம் அவர்களுக்கு சூட்டுகிறார் கள். அது மிகவும் தவறான காரியமாகும். அவர்களும் கூட தவறான காரியங்களைச் செய்கிறார்கள். ஆனால் அதெல்லாம் வெளியே தெரிய வராது, பாருங்கள். அவர்கள் மேட்டுக்குடியினராக இருப்ப தால், அவர்களுடைய காரியங்கள் வெளியே வராது. ஆனால்



தொடர்ந்து அவர் தேவனாகவேயிருக்கிறார். நாம் சுற்றிலும் போய் தற்புகழ்ச்சி செய்து கொண்டிருக்கவில்லை. அவ்வாறு நாம் செய்யக் கூடாது. வலது கை செய்வதை இடது கை அறிய வேண்டாம். இடதுகை செய்வதை வலது கை அறிந்திட வேண்டாம். நாம் நமக்குள் அதைப் பற்றி பேசிக்கொள்கிறோம்; அதை எங்காவது நாம் தம்பட்டமடித்துக் கொள்வதில்லை. ஏனெனில் "தேவன் ஒரு நபருக்கு மாத்திரமே அதைச் செய்ய முடியும்'' என்று கூறுவது போல், அது சுயபெருமை ஆகிவிடும். அவரை விவாசிக்கிற எவருக்கும் அதை அவர் செய்ய முடியும். அது விசுவாசமாக இருக்கிறது. விசுவாசம்! நீங்கள் என்ன செய்ய விரும்பின போதிலும் உங்கள் எண்ணங்கள் என்னவாயிருந்தாலும் சரி, அவற்றை தேவனிடத்தில் எடுத்துச் செல்லுங்கள். அவர் எல்லாவற்றையும் அளிக்கிறவராயிருக்கிறார். அது அவ்வாறு இருக்க வில்லையா? எனவே அவர் ஜெபத்திற்கு பதிலளிக்கிறார். தேவன் பதிலளிக்கிறார். தேவன் ஜெபத்திற்கு பதிலளிக்கிற பிதாவாயிருக்கிறார்.

47. எனவே, இப்பொழுது இத்தொடர் கூட்டங்களின் இறுதியாக, கர்த்தருக்கு சித்தமானால், இக்கூட்டத்தின் இறுதியில், ஒருவேளை இக்கூட்டத்தின் சமயத்தில், இருதயத்தின் எண்ணங்களை பகுத் தறிந்து சொல்லும் ஊழியத்தை வைத்துக்கொள்ளலாம் என்று நான் எண்ணினேன். அவர் என்ன செய்யப்போகிறார் என்பதை நாம் அறியமாட்டோம். அந்தவிதமாக இருப்பதை நான் விரும்புகிறேன். எந்த ஒன்றையும் நீங்கள் உறுதியிட்டு நிச்சயப்படுத்தி வைக்க வேண்டாம். அவர் எப்படி செய்ய விரும்புகிறாரோ அவ்வாறே நடக்க விட்டுவிடுங்கள்.

48. இப்பொழுது வெளிப்படுத்தின விசேஷம் 4ம் அதிகாரத்தை எடுத்துக் கொண்டு, கடிகாரத்தை நிறுத்தி விடுங்கள்.

49. (ஒரு மனிதர் 'சகோதரன் பில் அவர்களே' என்று அழைக் கிறார் - ஆசி). ஆம்? (நான் பேசலாமா?'' என்று அவர் கேட்கிறார்) சரி, சகோதரனே (அந்த சகோதரன் சாட்சி சொல்ல ஆரம்பிக்கிறார் - ஒலிநாடாவில் காலியிடம்-ஆசி). நிச்சயமாகவே நான் அதை விசு வாசிக்கிறேன். நான் அதை முழுமையாக விசுவாசிக்கிறேன்.

50. இதோ இங்கே சகோதரன் வெல்ச் ஈவான்ஸ்... இதோ அங்கே அவர் தான் அமர்ந்திருக்கிறார் என்று நான் எண்ணுகிறேன். நாம் வெளிப்படுத்தின விசேஷம் 4ம் அதிகாரத்தை எடுத்துக் கொள்ளுகையில்....

அந்த சாவிகள் எங்கேயிருக்கின்றன? அவைகளை நாங்கள் எங்கே காணலாம்?" என்று கேட்டார்.

42. அவ்விதமான கேள்வியை ஒரு மனிதன் கேட்பதைக் குறித்து உங்களில் சிலர் மலைக்கக்கூடும். ஆனால் ஒரு நிமிடம் பொறுங்கள்; ஈசாயின் புத்திரர் கழுதைகளைத் தேடிக் கொண்டு போன சம்பவத்தை ஞாபகத்தில் வைத்திருக்கிறீர்களா? "என்னிடத்தில் ஒரு வரம் இருந்தால் அது எங்கே என்று கண்டுபிடித்து சொல்லி விடுவேன். தீர்க்கதரிசியினிடத்தில் அவ்விஷயத்தைக் கேளுங்கள், அவன் ஒரு வேளை கழுதைகள் எங்கே இருக்கின்றன என்பதை சொல்லி விடுவான்'' என்று சொல்லப்பட்டது. அது உங்களுக்கு ஞாபகத்தில் இருக்கிறதா?

43. அவன் சாலையில் நடந்து செல்லுகையில், அவர்கள் தீர்க்கதரிசியைச் சந்தித்தார்கள். அப்பொழுது தீர்க்கதரிசி, ''நீங்கள் கழுதைகளைத் தானே தேடிக்கொண்டு வந்தீர்கள்? நீங்கள் உங்கள் வீட்டிற்கு திரும்பிச்செல்லுங்கள். அவைகள் ஏற்கனவே வீட்டிற்குப் போய் விட்டன'' என்றான். அது உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா?

44. நான் ஜெபித்தேன். ஃப்ரெட் எளிதாக அதைக் கண்டு எடுத்துக் கொண்டார். பார்த்தீர்களா?

45. சகோதரன் எட் டால்டன் அவர்களே, நீங்கள் எங்கேயிருக்கிறீர்கள்? எட் டால்டன் எங்கேயிருக்கிறார்? அவர் இங்கு எங்கோ தான் இருக்கிறார்; சற்று முன்னர்தான் நான் அவரைப் பார்த்தேன். ஓ பின்னால் அதோ அங்கே இருக்கிறார். இண்டர்காம் அல்லது ஒலிபெருக்கி மூலம் நான் கூப்பிடுவதை அவர் கேட்டார். அன்றொரு நாள் இரவில் ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது; சகோ. எட் அவர்கள் மிகக் கடுமையான தொல்லையில் அகப்பட்டிருந்தார். நான் அவருக்கு உதவி செய்ய விரும்பினேன். "இல்லை, நீங்கள் தேவனிடத்தில் எனக்காக விண்ணப்பிக்கவே நான் விரும்புகிறேன்'' என்று அவர் கூறினார். அவருக்கு உதவி செய்யும்படி நான் கர்த்தரை வேண்டிக்கொண்டேன். அடுத்த நாள் அவரது மனைவி என்னை தொலை பேசியில் அழைத்து, ஒருவர் உதவிக்கு வந்திட்டதாகத் தெரிவித்தார். அப்படித்தானே சகோதரன் எட்?

46. அவர் தேவனாயிருக்கிறார் என்பதைப் பாருங்கள். அப்படித் தான். அவர் தேவனாகவே இருக்கிறார். ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கும், ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கும், அது எத்தகைய தொல்லையாக இருந்தாலும், எங்கும் எப்பொழுதும்,



எப்பொழுதாவது ஒரு பெந்தெகொஸ்தே ஊழியக்காரர் ஒரு பிழை செய்து விட்டால், சகோதரனே, நான் உங்களுக்குச் சொல்லுவேன், அச்செய்தியை தேசம் பூராவிலும் செய்தித்தாளில் போட்டு தெரியப்படுத்தி விடுவார்கள். ஆம், ஐயா. ஒரு பெந்தெகொஸ்தே சகோதரன் ஒரு குழந்தைக்காக ஜெபித்து, அக்குழந்தை இறந்து விட்டால், நாட்டில் உள்ள ஒவ்வொரு செய்தித்தாளும், "தெய்வீக சுகமளித்தல் ஒருமத வெறிக்கொள்கைதான்' என்று தூற்றுவார்கள்.

72. நல்லது, அப்படியென்றால், ஏன் டாக்டர்களால் காப்பாற்ற முடியாத கேஸ்களை ஒவ்வொன்றாக செய்தித்தாளில் போடு வதில்லை? இவர்களுக்கு ஒரு நியாயம், அவர்களுக்கு வேறொரு நியாயமா? பாருங்கள்? எனவே, அவர்கள் டாக்டர்களால் பிழைக்க வைக்கமுடியாத கேஸ்களையெல்லாம் செய்தித்தாளில் வெளியிடுவார்களென்றால், அப்படி மரித்தவர்களின் விபரங்களை வெளியிட பத்திரிக்கைகளின் பத்திகளில் இடம் போதாது. நான் கல்லறைக்குச் சென்று, 'தெய்வீக சுகமளித்தலின் கீழாக மரித்தவர்கள் யாவரும் எழுப்புங்கள்'' என்றும் பின்பு, "வைத்திய சிகிச்சையின் கீழாக மரித்தவர்களெல்லாம் எழும்புங்கள்'' என்றும் கூறுவேனென்றால், முந்தினது ஒன்று என்றால், பிந்தினது பத்து இலட்சம் என்ற விகிதத்தில் தான் இருக்கும். எனவே அவர்கள் ஒருவரைக் குறை கூறினால், மற்றவர்களுடைய குறையை விமர்சிக்கட்டும். அது தான் சரி. ஆனால் அவர்கள் ஒரு ஆண்டில் பல இலட்சக்கணக்கில் மக்களை மருந்துகளாலும், அறுவை சிகிச்சைகளாலும் கொன்று விடுகிறார்கள், ஆனால் நீங்கள் அதைப்பற்றி ஒரு வார்த்தையும் கேள்விப்படுகிறதில்லை பாருங்கள்?

73. எனவே இச்சிறிய பெண், எல்லாவித கடினமான வேலையும் அவளுக்கு இருந்தது. எனவே, ஒரு நாள் இரவில், இரவு உணவு முடிந்தபிறகு, அவர்கள் நடனமாடிய பிறகு, அப்பெண்கள் ஒவ் வொருவராக தங்களை அழகுபடுத்திக் காண்பித்த பிறகு... அவ் வெளிய பெண்பழைய கந்தலான ஆடையை அணிந்து கொண்டு, உணவுக் கூடத்தில் உட்கார்ந்து கொண்டு, இரவு உணவு வேளைக்குப் பிறகு, உணவு பரிமாறப்பட்ட பாத்திரங்களையெல்லாம் அவள் கழுவிவிட்டு, பாத்திரங்களைக் கழுவிய தண்ணீரை கொல்லைப் புறத்தில் கொண்டுபோய் கொட்ட விரைந்து சென்றாள். அவள் அவ்வேலையை முடித்துவிட்டு, கால்நடைப்பட்டியின் பக்கமாக திரும்பிய பொழுது, இங்கே அந்த இளைஞன் பட்டியின் வேலியில் சாய்ந்து கொண்டு நின்றான். அவன் அவளை நோக்கி, ''ஹலோ'' என்று அழைத்தான்.

74. அவள் மிகவும் நாணமடைந்தாள், ஏனெனில் இவ்விளைஞன் அம்மேய்ச்சல் நிலங்களின் முதலாளியின் மகன் ஆவான். அவன் தன் கையிலிருந்த பாத்திரங்களை கீழே தவறவிட்டுவிட்டாள். அவன் தான் அணிந்திருக்கிற கந்தலான ஆடையை கவனித்துவிடக் கூடாதே என்று எண்ணி, தன் வெறுங்காலுடன், பின்பக்கமாக நகர்ந்தாள்.

75. அவன் அவளை நோக்கி நடந்து சென்று, "என்னைக் கண்டு பயப்படவேண்டாம்" என்றான். "நான் ஒரு காரியம் கூற விரும்புகிறேன். நான் இங்கே ஒரு நோக்கத்தோடு தான் வந்தேன். நான் ஒரு மனைவியை கண்டு பிடிக்கவே வந்தேன். எவ்விடங்களிலும் நான் தேடிக் கொண்டிருக்கிறேன். நான் நகரத்தில் வாழும் எந்தப் பெண்ணையும் மணந்து கொள்ள விரும்பவில்லை. என் சிந்தையில் இருக்கிறபடி ஒரு உண்மையான மனைவியை அடைய வே நான் விரும்புகிறேன். சிலர் மூலமாக நீ ஒரு உறவினள் என்பதை அறிந்து கொண்டேன்'' என்றான்.

"அது உண்மைதான், ஐயா" என்றாள் அவள்.

76. "நான் உன்னை கேட்க விரும்புகிறேன். நீ என்னை விவாகம் செய்து கொள்வாயா?'' என்று கேட்டான். அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவள் மிகவும் இக்கட்டான நிலைமையில் ஆகிவிட்டாள். அம்மனிதனுக்கு என்ன பதில் சொல்வ தென்றே அவளுக்குத் தெரியவில்லை.

77. அவள் எவ்வாறு உணர்ந்திருப்பாள் என்பதை என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. நீங்கள் அவ்வாறு செய்ய வில்லையா? ஒரு காலத்தில் பாவியாயிருந்த நான், ஒன்றுக்கும் இலாயக்கில்லாதவனாக இருந்தபொழுது, ஒரு குடிகாரனின் மகனாக இருக்கையில், இயேசு கிறிஸ்து, "நீ எனக்கு வேண்டும்'' என்றார். என்னைப் போலுள்ள ஒருவனிடம் அவர் எவ்வாறு வர இயலும்? ''உனக்கு பரலோகத்தில் ஒரு வீட்டைத் தருவேன்'' என்று எனக்கு எவ்வாறு கூறமுடியும்? 'நான் உன்னை இரட் சிப்பேன்'' என்று என்னைப்பார்த்து அவர் எவ்வாறு கூற முடியும்?

என்னைப் போன்ற நிர்பாக்கியமுள்ளவனுக்கு அது எவ்வாறு சாத்தியமாகும்? ஆனால் அவர் அதைச் செய்தார்.

78. அவள், ''ஐயா, நான் பாத்திரமானவள் அல்ல. உம்மைப் போன்ற ஒரு மனிதனுக்கு நான் மனைவியாக ஆவதற்கு என்னால் இயலாது. ஏனெனில் நீர் மேன்மையான காரியங்களுக்கு பழக்கப்பட்டவர். நான்



38. "அநேகர் ஜெப அட்டைகள் தங்களுக்கு தரப்படவேண்டுமென்று விரும்பினார்கள்; ஆனால் அவர்கள் சபையில் உள்ள மக்கள்தான்'' என்று மகன் கூறினான். பாருங்கள்?

39. தேவன் தேவனாகவே இருக்கிறார் என்பதை நாம் அறிவோம். அவர் செய்கிற காரியங்களைப் பார்க்க எப்படியாயிருக்கிறது! பல்வேறு காரியங்களைப்பற்றி ஜெபிப்பதற்காக மக்கள் தொலைபேசி மூலம் தெரியப்படுத்துகிறார்கள். சிலவேளைகளில் சிறு காரியங்களைப் பற்றிகூட, தேவன் அவைகளுக்கு எப்படியாய் பதிலளிக்கிறார் பாருங்கள்!

40. என்னுடைய வீட்டிற்கு அன்றொரு பன்னிரண்டு அல்லது ஒருமணி சுமாருக்கு நியூ ஆல்பேனியிலிருந்து அவ்விளம் பெண்மணி, இல்லை, அவளுடைய கணவர், நிமோனியோ ஜுரத்தினால் பாதிப்பட்டு மூச்சுத் திணறலுடன் கொண்டு வந்த அக் குழந்தைக்கு என்ன ஆயிற்று என்று அறிய நான் விரும்புகிறேன். அதோ அங்கே; குழந்தை எப்படியிருக்கிறது? (சபையில் இருந்த ஒரு மனிதர், "ஓகே'' என்று கூறுகிறார்-ஆசி). நன்றாயிருக்கிறாள், நலம் தான்; நல்லது.

41. நான் ஒரு விஷயத்தை உங்களுக்கு காண்பிப்பேனாக; அதென்னவெனில், நீங்கள் புரிந்துகொள்ள முடியாத ஒரு காரியம் இருந்தால், பரிசுத்த ஆவியானவர் பேசிய பிறகு, அது தொடர்ந்தும் அப்படி இருப்பதில்லை. ஃப்ரெட் சாத்மேன்.... நமது விலை யேறப்பெற்ற சகோதரன் ஃப்ரெட் அவர்கள், ஆமென்'' என்று சற்று முன்பு கூறியது என் காதில் விழுந்தது. ஆனால் அவர் எங்கு உட்கார்ந்து கொண்டிருக்கிறார் என்பதை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர் எங்கேயிருக்கிறார்? அவர் இங்கேதான் இருக்கிறாரா? இதோ இங்கே தான் சகோதரன் ஃப்ரெட் சாத்மேன் அவர்கள் இருக்கிறார். அது எவ்வளவு எளிமையாயுள்ளது என்பதை காண்பிக்கும் படியாக... அவரிடத்தில் சில நண்பர்கள் வந்திருந்தனர். அது சகோதரன் வெல்ச் ஈவான்ஸ் என்று நான் அனுமானிக்கிறேன். எனக்குத் தெரியாது. அவர்களிடத்தில் ட்ரெய்லர் வண்டி ஒன்று இருந்தது. அதன் கதவைத் பூட்டி விட்டார்கள், ஃப்ரெட் அதன் சாவிகளை தொலைத்துவிட்டார். அவர்கள் எல்லா இடங்களிலும் அதைத் தேடிக் கொண்டிருந்தார்கள், அதை எந்த இடத்திலும் கண்டு பிடிக்கவே முடியவில்லை. எனவே சகோ. வெல்ச் இங்கு வந்து சேர வேண்டியதான நாள் வந்தது; ஆனால் அவர்களால் அவ்வாகனத்தின் சாவிகளை எங்கு தேடியும் கண்டுபிடிக்கவே முடியவில்லை. எனவே அவர் என்னிடம் என் வீட்டிற்கு தொலை பேசி மூலம் தொடர்பு கொண்டு, 'சகோதரன் பிரன்ஹாம்,

விசேஷம் நான்காம் அதிகாரத்தை முடித்துவிட வேண்டுமென்று விரும்புகிறேன். உங்களை அது களைப்படைய செய்யாது என்று நான் நம்புகிறேன், அது உங்களுக்கு மகிமையாக இருக்கும் என்று நம்புகிறேன். அது உங்களுக்கு நன்மை செய்வதும், உதவி செய்வதுமான ஒன்றாக இருக்கும் என்றும், எதிர் வரும் நாட்களுக் கென்று உங்களுக்கு உதவி செய்வதாயிருக்கும் என்றும் நான் நம்புகிறேன்.

34. இப்பொழுது ஒருவேளை ... இன்று காலையில் இங்கு வருவதற்கு முன்னர் நான் பில்லியிடம், நமது மத்தியில் யாராவது அந்நியர்கள் வந்திருந்தால் அவர்களுக்கு ஜெப அட்டைகளை கொடுக்கும்படி கூறியிருந்தேன்; ஏனெனில், நாங்கள் இங்கிருந்து புறப்பட்டுச் செல்லப்போகிறோம், இனி எப்பொழுது திரும்பி வருவோம் என்று தெரியவில்லை. தேவன் மாத்திரமே அதை அறிவார். நான் விரும்பினேன்.... இது ஒருவேளை கடைசி கூட்டமாக இருக்கக்கூடும் என்று எண்ணினேன் ... ஒன்பது மணி சுமாருக்கு என் மகன் என்னை அழைத்து, ''அப்பா, சில மக்கள் ஜெபித்துக்கொள்வதற்காக காத்திருக்கிறார்கள், அவர்களை நான் கேட்டேன், ஆனால் அம்மக்கள் எப்பொழுதும் சபைக்கு வருகிறவர்கள்தான்'' என்று கூறினான்.

35. ''அப்படியெனில், ஜெப அட்டைகள் எதையும் கொடுத்திட வேண்டாம், ஏனெனில் அந்த மக்கள்... நமக்கு இன்று காலையில் வியாதியஸ்தருக்காக ஜெபிப்பது இருக்குமென்றால், அப்பொழுது நாம் அவர்களை மேலே அழைத்து அவர்களுக்காக ஜெபிப்போம்'' என்று நான் கூறினேன். "நாம் அறிந்திருக்கிற வழக்கமாக கூடாரத்திற்கு வருகிற ஜனங்கள்தான் அவர்கள் என்றால் வேண்டாம்" ''யாராவது புதியவர்கள் வந்திருந்தால்தான் கொடுக்க விரும்புகிறேன்'' என்று கூறினேன்.

36. பிறகு என் மகன் சில நிமிடங்களுக்கு முன்னர், நான் அங்கே நின்று கொண்டிருக்கையில், வந்து, என்னை சந்தித்தபொழுது, "நல்லது, நான் சில ஜெப அட்டைகளை வழங்கிவிட்டேன்; வெகு சிலருக்குத்தான் நான் ஜெப அட்டைகளை வழங்கினேன்; நீங்கள் உங்கள் விருப்பப்படியே செய்து கொள்ளுங்கள்'' என்று கூறினான்.

37. அதற்கு நான், "நல்லது, செய்தி எவ்வாறு போகிறது என்று பார்ப்போம், நாம் எங்கே இருக்கிறோம் என்பதைப் பார்ப்போம், அதன்பிறகு நாம் போவோம். நான் ...'' என்று பதிலளித்தேன்.



ஏழை, எனக்கு அவைகளைப் பற்றி ஒன்றுமே தெரியாது'' என்று அவரிடம் கூறினாள். அவனோ , ''ஆனால் நீ என்னுடைய தெரிந்தெடுத்தலாக இருக்கிறாய்'' என்று கூறினான்.

79. அதே காரியத்தை இயேசு உங்களுக்கும் கூறியது அருமை யாக இருக்கவில்லையா? நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருப்பதற்கு உங்களுக்கு தகுதியில்லை என்பதை நீங்களே அறிந்திருக்கிறீர்கள். அதற்காக நீங்கள் செய்யத்தக்கது ஒன்றுமில்லை. ஆனால் அவர்.... அவரே உங்களை தெரிந்தெடுத்தார். அது அவருடைய தயவாக இருக்கிறது. அவருடைய இரக்கம்தான் உங்களைத் தெரிந்தெடுத் தது. நீங்கள் அவரை தெரிந்தெடுக்கவில்லை என்பதை நீங்கள் அறி வீர்கள். அவர் உங்களைத் தெரிந்தெடுத்தார். அது உண்மை .

80. "நான் ஏற்றவளல்ல" என்றாள் அவள்,

81. "நீ உன்னுடைய ஆடைகளைப் பார்க்க வேண்டாம். உன்னு டைய ஆடைகளை நான் பார்க்கவில்லை. நீ என்னவாய் இருக்கிறாய் என்பதைத் தான் நான் பார்க்கிறேன்'' என்றான் அவன். "நீ என்னை மணந்து கொள்வாயா?" என்று கேட்டான். இறுதியாக அவர்கள் இருவருக்கிடையில் விவாகத்தைப் பற்றிய ஒப்பந்தம் ஏற்பட்டது. "இந்த நாளிலிருந்து ஒரு வருட காலத்தில் நான் திரும்பி வருவேன். நீ ஆயத்தமாயிருப்பாயாக. கலியாண வஸ்திரத்தோடு ஆயத்தப் பட்ட இரு, நான் இதே இடத்திற்கு திரும்பி வந்து உன்னை இங்கேயே வந்து மணந்து கொள்ளுவேன். நான் உன்னை சிக்காகோ பட்டணத்திற்கு புறநகர் பகுதியில் கொண்டு செல்வேன். அங்கு நீ வசிப்பதற்கென உனக்கு ஒரு அரண்மனை உண்டாயிருக்கும். இந்த எல்லா பாத்திரம் கழுவுதலும். அப்பொழுது முடிந்து போகும்'' என்று கூறினான்.

82. இப்பெண்ணின் ஒன்றுவிட்ட சகோதரிகள் அதைப் பற்றி கேள்விப்பட்ட பொழுது, "எளிய அறியாமையுள்ள முட்டாளே! அம்மனிதன் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை என்பதை அறியவாயாக'' என்றார்கள்.

83. அதேவிதமாகவே அவர்களும் இன்றைக்கு கூறவில்லையா? "ஒரு கூட்டம் உருளும் பரிசுத்தர். தங்கள் பெயரைக்கூட எழுதத் தெரியாத ஒரு கூட்டம் மக்கள். எவ்வாறு சபையாக இருக்க முடியும்? எவ்வாறு அவ்வதமானதொரு குழுவினர் அவ்வாறு இருக்கமுடியும்?'' என்று கூறுகிறார்கள். ஆனால் நான் இயேசு கிறிஸ்துவுக்கு என்று நிச்சயிக்கப்பட்டு, நம் பாவங்களை போக்கத்தக்கதாக நம் இருதயத்தில் இயேசு கிறிஸ்துவின் நிச்சயதார்த்த முத்தத்தை பெற்று

விட்டபடியினால், அதெல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. ஏதோ ஒன்று, அவர் நமக்காகத் திரும்பி வருகிறார் என்பதை நமக்குக்கூறிக் கொண்டிருக்கிறது. ஒரு நாளில் அவர் திரும்பி வருவார்.

84. ஆண்டு முழுவதும் அப்பெண் உழைத்தாள் அடிமையாக. தினக்கூலியாக அவளுக்குக் கொடுக்கப்பட்ட எழுபத்தைந்து செண்ட் நாணயத்தை அவள் சேமித்துக்கொண்டே வந்தாள். அவள் கலியாண உடுப்பை வாங்கியுடுத்திக் கொண்டு ஆயத்தமாக இருப்பதற்காக பணத்தை சேமித்தாள். அவள் தன்னை ஆயத்தம் செய்து கொள்வதிலேயே சிந்தனையாயிருந்தாள். அவள் தன்னை ஆயத்தம் செய்து கொண்டாள். அவள் தன் ஆடைகளை சேர்த்தாள், தன் கலியாண வஸ்திரத்தை. அதைப் பார்த்து அவளுடைய ஒன்று விட்ட சகோதரிகள் ஏளனம் செய்தார்கள், பரிகசித்தார்கள்.

85. இறுதியாக, அந்தக் குறிப்பிட்ட நாள் வந்தது. ஓ, அவன் தனது கலியாண ஆடையை உடுத்திக்கொண்டு தன்னை ஆயத்தம் செய்துகொண்டாள். அவள் ஆயத்தமாக இருக்கும்படி தன்னை சுத்தம் பண்ணிக்கொண்டாள். அவளுடைய ஒன்று விட்ட சகோதரிகள் வந்து அவளைச் சுற்றி நின்று கொண்டு , கேலியாக தலைவணங்கி, ''மதியீனமுள்ள சிறுமியே , அம்மனிதன் அந்த அர்த்தத்தில் கூறிவில்லை. உன்னைப்போல் ஒரு பெண்ணை அவன் திருமணம் செய்து கொள்ளவே மாட்டான்'' என்று கூறினார்கள். ஆயினும், அவன் தன்னை ஆயத்தம் செய்து கொள்ளத்தான் செய்தாள்.

86. எனவே, மாலைப்பொழுது கழியும் நேரம் வந்தது, அவர்கள் அவளை பரிகசித்து, ஏளனம் செய்ய ஆரம்பித்தார்கள். அவளோ, வாசலண்டையில் நின்று காத்துக் கொண்டேயிருந்தாள். எனவே அவள்.... அவர்கள், "அவன் எந்த வேளையில் இங்கே வந்து சேருவதாக் கூறினான்?'' என்று கேட்டார்கள்.

87. 'அவர் சொல்லவில்லை'' என்றாள். ஆனால் அவர் என்னை மணந்து கொண்ட இரவில் .... அல்லது என்னோடு விவாக நிச்சயதார்த்தம் செய்து கொண்டு அதற்காக மோதிரத்தை அவ்விரலில் அளித்தபோது, 'இப்பொழுதிலிருந்து ஒரு வருடத்தில் வருவேன்' என்று கூறினார். எனவே, இன்னும் ஒரு மணி நேரம்தான் இருக்கிறது'' என்று கூறினாள். ஆமென். அவள் காத்துக் கொண்டிருந்தாள். "எனக்கு இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறது. இன்னும் முப்பது நிமிடங்கள் உள்ளன, இன்னும் பத்து நிமிடங்கள் உள்ளன'' என்றாள். அவர்களோ சிரித்து, அவளை



31. அது எத்தகையதொரு குறுகிய மனப்பான்மை என்பதைப் பாருங்கள். அவர்களுக்கு சரியான ஆவிக்குரிய நிதானிப்பு இல்லை என்பதைத்தான் இது எடுத்துக்காட்டுகிறது. அவர்கள் குருடராயும், பாவத்திலும் அக்கிரமங்களிலும் மரித்தவர்களாயுமிருக்கிறார்கள். பாவம் என்றால் அவிசுவாசம் என்று பொருள். அவிசுவாசமான எந்தவொன்றும் பாவமாயிருக்கிறது. ஒரு நபர் எத்தனை நீளமான பட்டங்களைப் பெற்றிருந்தாலும், அதாவது, டி.டி. இரட்டை பி.ஹெச்.டி. பட்டங்கள், எல்.எல்.டி., ஆகிய பட்டங்களை ஒரு சேரப் பெற்றிருந்தாலும், அந்த ஆள், "தெய்வீக சுகமளித்தல் என்ற ஒன்று கிடையவே கிடையாது. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்பதும் கிடையாது'' என்று கூறினால், அம்மனிதன் பாவத்தில் மரித்தவனாயிருக்கிறான். அவன் ஒருவேளை வேதாகமத்தில் இருந்து எல்லாவிதமான இரகசியங்களையும் விளக்கத் திறனுள்ளவனாக இருக்கக்கூடும், ஆனால் அவனது வாழ்க்கையே , அவனது சாட்சியே , அவன் மரித்தவனாயிருக்கிறான் என்பதை நிரூபிக்கிறது. அவன் பாவத்திலும் அக்கிரமங்களிலும் மரித்தவனாயிருக்கிறான், ஏனெனில் அவன் பாவியாயிருக்கிறான்.

32. பாவம் என்பது அவிசுவாசமாகும். பாவம் என்பது விபச்சாரம் செய்வது, சிகரெட் புகைப்பது, நடனமாடுவது, மற்றும் அது போன்ற இன்னபிற காரியங்களைச் செய்வதல்ல. அவையல்ல பாவம், அவைகள் அவிசுவாசத்தின் தன்மைகளாகும். ஆனால் ஒரு விசுவாசியோ..... ஒரு மனிதன் குடிப்பதில்லை, புகைப்பதில்லை, இச்செயல்களையெல்லாம் செய்வதில்லை; ஒரு கெட்ட வார்த்தை கூட சொல்லவில்லை; பத்துக் கற்பனைகள் அனைத்தையும் கைக்கொள்ளுகிறவன் என்று இருந்தாலும்கூட, அவன் தேவனுடைய வல்லமை எந்தவொன்றையும் மறுதலித் தால், அவன் முழு கறுப்புப் பாவியாயிருப்பான், அவன் முதல் தரமான பாவியாயிருக்கிறான். பாவம் என்ற வார்த்தை அவிசுவாசத் தையே குறிக்கும். அது சரிதானா அல்லவா என்பதைப் பாருங்கள். தேவனுடைய வார்த்தையின் பேரில் அவிசுவாசம் கொண்டுள்ள ஒரு நபர் பாவியாயிருக்கிறான், அவனால் அந்த இராஜ்யத்தில் பிரவேசிக்கவே முடியாது.

33. ஓ! இப்பொழுது, கர்த்தருடைய சித்தத்தை நான் மேற்கொண்டவனாக, பரிசுத்த ஆவியானவருடைய கட்டளையின்படி, மீண்டும் இக்கூடாரத்திற்கு வந்திட இன்று காலையில் நான் தீர்மானித்து, ஒருவேளை உங்களை இரண்டு அல்லது மூன்று மணி நேரம் செய்தியின் பேரில் காக்க வைத்திடுவேன் என்று நினைக்கிறேன். ஆனால் நான் போவதற்கு முன்பாக வெளிப்படுத்தின

இருக்கக்கூடும். நாம் நீரோடையில் வலை வீசிக்கொண்டிருக்கிறோம். தேவனோ அதிலுள்ள மீன்களைப் பொறுக்கியெடுத்துக் கொண்டிருக்கிறார். அவருக்கு அவற்றில் எது மீன், எது மீன் அல்ல என்பது தெரியும்.

28. ஆகவே, பாருங்கள், நாங்கள் பிரசங்கிப்பதை மட்டுமே செய்கிறோம். அதே காரியத்தைத்தான் இந்தக் கூடாரத்திலும் நீங்கள் செய்கிறீர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் "என் ஆடுகள் என் சத்தத்திற்கு செவி கொடுக்கும்'' என்பதை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். தேவனுடைய சத்தமானது அவருடைய வார்த்தை யாயிருக்கிறது.

29. அன்றொரு நாள் நான், இந்த ஜனங்கள், அது ஒருபோதும் இருக்கவில்லை என்று எவ்வாறு கூறுகிறார்கள் என்பதைக் குறித்து சிந்தித்துக்கொண்டிருந்தேன். ஒரு ஸ்தாபன சபையானது, "தெய்வீக சுகமளித்தல் என்பது சரியானது அல்ல. பரிசுத்த பவுல், மேல்வீட்டறையில் கூடியிருந்த பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் ஆகியோர்களைத் தவிர வேறு எவருக்கும் எக்காலத்திலும் தெய்வீக சுகமளித்தல் வரமொன்று அளிக்கப்படவேயில்லை. அவர்களுக்கு மட்டும் தான் தெய்வீக சுகமளித்தல் வரம் கொடுக்கப்பட்டது, அவ்வளவுதான், அதற்குப்பிறகு யாருக்கும் கொடுக்கப்படவே யில்லை" என்று கூறுகின்றனர்.

30. ஆனால், இங்கே இருக்கிற அந்த சகோதரன் வில்லி நமக்காக மிகவும் அற்புதமான முறையில் அமைத்துத் தந்திருக்கிற இந்த அற்புத வரைபடத்தின் மூலமாக, சபைக்காலங்கள் தோறும் எவ்வாறு அவ்வரங்களின் கிரியையின் தொடர்ச்சியானது தடை படாமல் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது என்பதைப் பாருங்கள். அதே சபையானது சபை சரித்திரத்தைப் பற்றியும், ஐரேனியஸ், பரிசுத்த மார்ட்டின் ஆகியோரைக் குறித்தும் என்ன கூறிடும் என்பதையும் பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன். அப்போஸ்தலர்கள் யாவரும் மரித்தபிறகு இருந்த காலங்களினூடே நூற்றுக்கணக் கான ஆண்டுகளாக ஜீவனைக் கொடுத்த இரத்த சாட்சிகள்கூட அந்நிய பாஷைகளில் பேசினார்கள், வியாதியஸ்தரைக் குணமாக்கினர், மரித்தோரை உயிரோடெழுப்பினர், அற்புதங் களைச் செய்தனர், முழுச் சபையுமே அவ்வாறு செய்தது. வரங்கள் அப்போஸ் தலர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டன என்று அந்த சபை கூறுமானால், இவர்களைப் பற்றி என்ன என்று நான் வினவுகிறேன்.



பரிகசித்தனர், அவளை எல்லாவிதமான பெயர் சொல்லி அழைத்தார்கள்.

88. ஆனால் இறுதியாக, சரியாக அந்த முக்கியமான வேளை வந்தது, அவர்கள் இரதத்தின் சக்கரங்கள் கிளப்பிவிடுகிற புழுதி யையும், இரதத்தின் சத்தத்தையும், குதிரைகள் குளம்பொலியை யும் கேட்டனர். அச்சிறிய மணவாட்டி தன்னை ஆயத்தம் பண்ணிக் கொண்டு, வாசலிலிருந்து குதித்து, ரோஜாக்காளால் அலங்கரிக் கப்பட்ட அப்பின்னல் தட்டி வழியாக ஓடி, தான் நேசித்தவனும், தனக்கு கணவனாக ஆகப்போகிறவனும், தன்னை கொண்டு சென்று மணந்து கொள்தவற்காக இரதத்தில் அழைத்துச் செல்லப்போகிறவனுடைய கரங்களில் பறந்தோடி அடைக்கலம் புகுந்து கொண் டாளே, அக்காட்சியையோ பார்ப்பதற்கு எவ்வளவு அருமையாக இருந்தது!

89. "உருளும் பரிசுத்தர், பெந்தெகொஸ்தேயினர்'' என் றெல்லாம் பரிகசிக்கிறார்களே... இந்நாட்களில் ஒன்றில் .... நாம் காத்துக்கொண்டு இருக்கிறோம், நமக்கு இன்னும் சிறிது நேரம் உள்ளது. 'அதெல்லாம் ஒன்றும் பெரிய வித்தியாசம் இல்லை" என்று கூறுகிறார்கள். கவலைப்படவேண்டாம். நமக்கு இன்னும் சிறிது நேரம் உள்ளது. அவர் வாக்குரைத்தப்படி அந்த க்ஷணத்தில் அவர் இங்கே இருப்பார். இந்நாட்களில் ஒன்றில் நாம் பறந்து சென்றுவிடுவோம். ஆயத்தமாயிருங்கள். கலியாண வஸ்திரம் தரித்தவர்களாயிருங்கள். எல்லாக் கொடுமையும் உங்கள் இருதயத்தைவிட்டு அகற்றிவிடுங்கள்....

90. இவ்வேதவாக்கியம் எவ்வாறு கூறுகிறது என்பதை கவனியுங்கள்.

"நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதி செலுத்தக் கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள் என்று சொல்லக்கேட்டேன். (புரிந்து கொண்டீர்களா?)

சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக் கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது; அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே. (தேவனுக்கு ஸ்தோத்திரம்)

பின்னும், அவன் என்னை நோக்கி : ஆட்டுக்குட்டியானவரின் கலி யாண விருந்துக்கு அழைக்கப்பட்ட வர்கள் பாக்கியவான்கள் என்றெழுது என்றான். மேலும் இவைகள் தேவனுடைய சத்திமான வசனங்கள் என்று என்னுடனே சொன்னான். வெளி. 19:7-9

91. எனவே இந்நாட்களில் ஒன்றில், இனிமை நிறைந்த அந்த எதிர்வரும் காலத்தில், ஆகாயத்தில் ஒரு சந்திப்பை உண்டாகப் போகிறது. ஆம் ஆயத்தமாக நிலைத்திருங்கள். உங்களை ஆயத்த மாக்கிக்கொள்ளுங்கள் எல்லா கெட்ட எண்ணங்களையும் உங்கள் இருதயத்தை விட்டு அகற்றி சுத்தம் செய்து கொள்ளுங்கள். அது எவ்வளவு இருளாய் தோன்றினாலும், 'நீங்கள் ஒரு தவறு செய்து விட்டீர்கள்'' என்று எத்தனை பேர்கள் உங்களை நகைத்து, கேலி செய்து கூறினாலும், அதையெல்லாம் பொருட்படுத்த வேண்டாம், தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள். பரிசுத்தமாக ஜீவித்துக், தேவனுக்காக ஜீவித்து, சரியானவற்றை தொடர்ந்து காத்துக் கொள்ளுங்கள். தொடர்ந்து முன்னேறிச் செல்லுங்கள், அந்த வேளை வந்து சேரும்.

92. எனவே, அவள் மீண்டும் வெளிப்படுத்தின விசேஷம் 19ம் அதிகாரத்தில் காணப்படுகிறாள் என்பதைப் பாருங்கள்.

"இவைகளுக்குப் பின்பு...'' (யோவான் சபைக் காலங்களைப் பார்த்தபிறகு)

இவைகளுக்கு பின்பு, இதோ பரலோகத்தில் ... ஒரு வாசலைக் கண்டேன்.

93. யோவான் இன்னமும் பத்மு தீவில் தான் இருக்கிறான் என்பதை நினைவில் கொள்ளுங்கள். சபைக்காலங்களெல்லாம் முடிவடைந்ததை அவன் பார்த்த பிறகு:

''...பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசலைக் கண்டேன்..."

வெளி.4:1

94. "ஒரு வாசல்" வாசலானது எது? வெளிப்படுத்தின விசேஷம் 3.8. வெளிப்படுத்தின விசேஷம் 3ம் அதிகாரம் 8ம் வசனத்தில் : "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்... இதோ திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். அதை ஒருவனும் பூட்ட மாட்டான்' என்று கூறப்பட்டுள்ளது. ஒருவனும் அதை திறக்கவும் முடியாது. அவரே வாசலாயிருக்கிறார். வாசல்! கிறிஸ்துவே வாசலாயிருக்கிறார். ''ஆட்டுத் தொழுவத்துக்கு நானே வாசல்'' என்று யோவான் 10 அதிகாரத்தில் கூறியிருக்கிறார்.

95. பழைய நாட்டுபுற தேசத்தில் மேய்ப்பனானவன் தன் ஆடுகளை தொழுவத்திற்குள் கொண்டுபோய் விட்டு விட்டு அவைகள் யாவும்



சம்மந்தமே இல்லை. பாருங்கள்? அது அவளுடைய ஸ்தானம் அல்ல. 'அது என்னை மிகவும் வாதிப்பது வழக்கமாயிருந்தது; ஆனால் இப்பொழுதோ நான், இது நம்முடைய இராஜ்யம் அல்லவே, நாம் இவ்வுலகுக்கு உரியவர்கள் அல்லவே என்பதைக் குறித்து ஞாபகப்படுத்திக்கொள்ள ஆரம்பித்தேன்'' என்று நான் கூறினேன்.

25. ஏன் ஸ்திரீகள், நமது ஸ்திரீகள் குட்டையாக முடியை கத்தரித்துக்கொண்டு, மேக்-அப்புகளை செய்துகொண்டு, ராக் - என்ரோல் மற்றும் இன்னபிற காரியங்களையும் விரும்பிக்கொண்டிருக் கின்றனர்? நல்லது, மக்கள் சாதாரண சபைகளுக்கு போகிறார்கள்; அது சரியென்று எண்ணுகிறார்கள். ஏன்? அவர்கள் அமெரிக்கர்கள், அவர்கள் அமெரிக்கர்கள், அமெரிக்க ஆவியைப் பெற்றுள்ளனர். ஆனால் நாமோ அமெரிக்கர்கள் அல்ல; நாம் கிறிஸ்தவர்களாயிருக்கிறோம். நாம் ஜீவிப்பது... நமது ஆவியோ வேறொரு இராஜ்யத் திற்குரியதாக உள்ளது. நமது ஆவியானது இந்த இராஜ்ஜியத்திற்கு உரியதாக இருக்குமென்றால், அப்பொழுது நாம் இந்தக் காரியங் களோடு தொழுது கொள்ளுகிறவர்களாக இருப்போம்; அப் பொழுது நாம் இந்த கீழ்த்தரமான பாடல்களை தொழுது கொள்ளுகிறவர்களாக இருப்போம்; இந்த ராக் - என் - ரோல்களை தொழுது கொள்ளுகிறவர்களாக இருப்போம். "உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ, அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்". நமது பொக்கிஷங்கள் உன்னதத்தில் இருக்கின்றன. ஆகவே நாம் ஒரு இராஜ்யத்திற்குப் போய்க்கொண்டிருக்கிறோம்.

26. இது நம்முடைய வீடு அல்ல; நாம் இங்கே பரதேசிகளாக சஞ்சரித்துக் கொண்டேயிருந்து, மற்ற பிரஜைகளையும் இருளை விட்டு வெளியே கொணர முயற்சித்துக்கொண்டிருக்கிறவர்களாக இருக்கிறோம். இதற்காக நாம் ஒரு நகரத்திற்குள் போய், அங்கே ஒரு வாரம் அல்லது பத்து நாட்களுக்கு நகரளாவிய ஒரு பெரிய கூட்டத்தை ஏற்படுத்தி, ஒருவேளை அங்கேயிருக்கிற ஒரேயொரு விலையேறப்பெற்ற ஆத்துமாவுக்காக, அந்நிலத்தை உழுது கொண்டிருக்கிறோம்; அங்கு ஒன்றே ஒன்றுதான் இருக்கக்கூடும்.

27. "இந்த கூட்டமானது பெரிய வெற்றியாக அமைந்தது, ஐயாயிரம் பேர்கள் பீடத்தண்டையில் வந்தார்கள்'' என்ற நீங்கள் ஒருவேளை கூறலாம். ஆனால் அவர்களில் ஒரு நபர்கூட இரட் சிக்கப்பட்டிருக்காமல் இருக்கக்கூடும். பாருங்கள்? "இரு நபர்கள் மாத்திரமே பீடத்தண்டை வந்தார்கள்'' என்று நீங்கள் எண்ணக்கூடும். ஆனால் அவர்களில் ஒருவர் ஒரு விலையுயர்ந்த இரத்தினமாக

போர்த்துக் கொண்டு, வனாந்தரத்திலிருந்து புறப்பட்டு வந்தான். வனாந்திரத்தில் எந்தவித சௌகரியங்களும், வசதிகளும் அவனுக்கு இருக்கவில்லை. அவன் அவ்வனாந்திரத்தில் ஒன்பது வயதிலிருந்து இருந்துவந்திருக்கிறான்; அவன் அங்கிருந்து புறப்பட்டு வரும்போது, அவன் முப்பது வயதுள்ளவனாயிருந் தான். வனாந்திரத்திலிருந்து அவன் நடந்து வந்து, தேசத்தில் கால் மிதித்து வந்து, மனந்திரும்புதலைக் குறித்து பிரசங்கித்துக் கொண் டிருந்தான்; அப்பொழுது ஒருவேளை அவன் யோர்தான் நதிக்கரையில் முழங்காலளவு சேற்றில் நின்று கொண்டிருந்திருப்பான். அப்பொழுது தான் உயர்ந்த ஸ்தலங்கள் பள்ளத்தாக்காகியது; பள்ளத்தாக்குகளெல்லாம் மேடான ஸ்தலங்கள் ஆகியது.

22. உங்களுக்கு ஆவிக்குரிய நிதானிப்பு இருக்க வேண்டும். ஒரு காரியத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள், அதென்னவெனில், தேவன் இப்பூமியில் ஒருபோதும், பகட்டானவற்றில் வாசம் பண்ணவில்லை, அப்படி இனியும் வாசம் பண்ணப்போவ தில்லை. அவர் அதற்கெதிராக இருக்கிறார். அவர் ஒருபோதும்... இந்த மகத்தான செய்தியானது ஒருபோதும் "இன்னார் இன்னாரை பெரிதாக்குங்கள்'' என்பதாக இருக்கவே இருக்காது. அந்த விதமாக அது செய்வதேயில்லை. அவருடைய ஊழியக்காரர்கள் ஒருபோதும் அந்த விதமாக கிரியை செய்வதில்லை. அவரது மகிமையும், பகட்டும் உன்னதத்திற்குரியவையாகும்.

23. நேற்று அல்லது இரு தினங்களுக்கு முன்பாக என் நண்பர் பேங்க்ஸ் வுட் அவர்களோடு கெண்டக்கிக்கு சென்று கொண்டிருந்தோம். அங்கே ஒரு பெண் போலீஸ் நின்றுகொண்டிருந்தாள்; அவர் அப்பொழுது, "நாம் வண்டியை சற்று வேகத்தைக் குறைத்து ஓட்டுவது நல்லது, அவள் கடுமையாக இருக்கிறாள்'' என்றார்.

24. 'ஆம் அது சரிதான்'' என்று நான் கூறினேன். "ஒரு தேசமானது இலட்சக்கணக்கானவர்களை வேலையில் அமர்த்திக் கொள்ள வேண்டியிருக்கையில், அதற்காக அவர்கள் பெண்களை அப்பதவிகளுக்கு நியமித்துக்கொள்வதும், பெண் போலீஸ் காரிகளாக அவர்களை நியமித்துக்கொள்வதும், டாக்ஸி டிரைவர் களாகவும் அவர்களை நியமித்துக்கொள்வதுமாக இருந்தால், அது நமது தேசத்தின் மேல் படிந்திருக்கும் பெரிய கறைகளில் ஒன்றாக இருக்கிறது'' என்று நான் கூறினேன். ஒரு முயலுக்கு எண்ணெய் சட்டியில் எவ்வாறு எந்தவொரு வேலையும் இருக்கமுடியாதோ, அதேபோல் பெண்களுக்கும் அவ்விதமான வேலைக்குப்போக



உள்ளே வந்துவிட்டனவா என்று அவைகளை எண்ணிப் பார்த்துவிட்டு, வாசலில் அவன் குறுக்காக படுத்துக்கொள்கிறான். அவன் மேல் நடந்து செல்லாமல், ஓநாய் தொழுவத்திற்குள் நுழையவே முடியாது. ஆடுகளும் அவன் மேல் தாண்டிச் செல்லா மல் தொழுவத்தைவிட்டு வெளியேற முடியாது. மேய்ப்பனே ஆட்டுத் தொழுவத்தின் வாசலில் படுத்துக் கொள்வதால், ஆடுகள் தாங்கள் பாதுகாப்பாய் இருக்கிறோம் என்பதை எவ்வளவாய் உணரும்!

96. பழைய ஏற்பாட்டில், நோவா பேழையின் வாசலில் நின்றான். ஓ, கவனியுங்கள். நான் ஒரு காரியத்தைக் கூறப் போகி றேன்! அவன் பேழையின் வாசலில் நின்று, தன்னைப் பரிகசித்த மக்களுக்கு மனந்திரும்புதலையும், நீதியையும் குறித்து பிரசங்கித் தான். அவன் நின்றிருந்த அதே வாசலைத் தவிர வேறு எந்த வாசல் வழியாகவும் யாரும் பேழைக்குள் பிரவேசித்திட முடியாது. பேழைக்கு அந்த ஒரு கதவு தவிர வேறு வாசல்கள் இல்லை யல்லவா?

97. அங்கே ஒருயொரு வழிதான் உள்ளது. சகோதரன் ஸ்ட்ரிக் கரே, கிறிஸ்துவின் சரீரத்திற்குள் பிரவேசிக்க ஒரேயொரு வழிதான் உள்ளது. ஜீவனுள்ள தேவனுடைய சபைக்கு ஒரேயொரு வாசல்தான் உண்டு, அவ்வாசல் இயேசுவே . ''நானே வாசல்'' என்றார். அவ்வாசலுக்குப் போகும் சாலையாகிய வழி நானே ஆட்டுத் தொழுவத்திற்கு நானே வாசல்'' என்றார்.

98. இச்பைக் காலத்திற்கு, "இதோ, திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்'' என்று கூறினார். மெதோடிஸ்ட் சபைக்காலத்திற்கு அவர் இதைக் கூறினார். ஆனால் அவர்களோ அதினின்று விலகிச் சென்று, ஸ்தாபனத்திற்குள் சென்றுவிட்டனர். "ஆனால் நான் உனக்கு முன்பாக திறந்த வாசலை வைத்திருக் கிறேன்'' என்கிறார். அவர்கள் தங்கள் காலத்தில் பரிசுத்தமாகுதலைப் பெற்றுக் கொண்டதற்குப் பிறகு, "நான் திறந்த வாசலை உனக்கு முன்பாக வைப்பேன்'' என்றார். திறந்த வாசல் பரிசுத்த ஆவிதான். “ஒரே ஆவியினாலே நாம் எல்லோரும் அந்த ஒரு சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம்'' அந்த ஒரு சரீரம் கிறிஸ்துவே . அவர் அச்செய்தியை மெதோடிஸ்ட் சபைக்கு முன்பாக வைத்தார். ஆனால் அவர்களோ அதினின்று விலகிச் சென்று விட்டனர். அவர் பரிசுத்தமாகுதல் வரையிலும் வந்துவிட்டு, பரிசுத்த ஆவியைப் புறக்கணித்தனர். அதை ஞாபகத் தில் வைத்திருக்கிறீர்களா? அந்த ''திறந்த வாசல்''

99. நாம் எவ்வாறு கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்கிறோம்? ஒரே ஆவியினால், பரிசுத்த ஆவியினால் தான், அது கிறிஸ்துவின் ஆவியாகும். நான் கைகுலுக்கிக்கொள்வதினால் அல்ல, தெளித்தலினால் அல்ல. ஆனால் ஒரே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தினால் உள்ளே பிரவேசித்திருக்கிறோம். பரிசுத்த ஆவியினால் நாம் யாவரும் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, அச்சரீரத்தில் பங்கு கொள்ளுகிறவர்களாக ஆக்கப்பட்டோம். அந்த வாசலில் பிரவேசிக்க ஒரு பரிசுத்த ஆவியின் அபிஷேகம்.

100. இந்த வாசல் பரலோகத்தில் வைக்கப்பட்டுள்ளது. அவன் ஏறெடுத்துப் பார்த்தபோது, அவன் கர்த்தராகிய இயேசுவைக் கண்டான். அவ்வசனத்தின் தொடர்ந்துள்ள பாகத்தைப்பாருங்கள். அவ்வாசல், கர்த்தராகிய இயேசுவே.

'... இதோ, பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசலைக் கண்டேன். முன்னே எக்காள சத்தம் போல என்னுடனே பேச நான் கேட்டிருந்த சத்தமானது...''

வெளி.4:1

101. இப்பொழுது காட்சியானது மாறுகிறது. யோவான் பத்மு தீவில் கவனித்துக்கொண்டிருந்தான். இப்பொழுது மேலே ஏறெடுத்துப் பார்க்கிறான். ஏன்? அவன் பூமியில் இங்கே நடை பெற்று வந்து சில காரியங்களைப் பார்க்கிறான் (இந்த சபைக் காலங்களை), ஏழு சபைக்காலங்கள் நெடுகில் உள்ளவைகளைக் கண்டான், அவன் இவ்வாறு இச்சபைக்காலங்களைப் பார்த்த பிறகு, அதன் பிறகு, சபைக்காலங்கள் முடிவடைந்த பிறகு, ஒரு சத்தத்தைக் கேட்டான். அவன் பரலோகத்தை ஏறெடுத்துப் பார்த்து, அங்கே திறந்த வாசலைக் கண்டான். அவன் முதலில் கேட்ட சத்தமானது எக்காள சத்தம் போல் இருந்தது, நல்லது, இப்பொழுது காட்சியானது பத்மூ தீவிலிருந்து பரலோகத்திற்கு மாறுகிறது.

102. ஏழு குத்துவிளக்குகளின் மத்தியில் உலாவிய அதே சத்தம் தான் இந்த சத்தமும். அதே சத்தம்தான். சத்தம் மாறவில்லை. ஆனால் அவன் முதலில் அந்த சத்தத்தை கேட்ட போது அந்த சத்தம் எங்கேயிருந்தது? முதல் சபைக்காலத்தில் நடந்ததை எத்தனை பேர்கள் நினைவில் வைத்திருக்கிறீர்கள்? அவன் அவனுக்குப் பின்னாக. '... கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்...'' வெளிப்படுத்தின விசேஷம் 1:10.... "ஆவிக்குள்' வெளிப்படுத்தின விசேஷம் 1:10,13 ஆகிய வசனங்களுக்கு



18. ஆகவே, நமக்கு ஏதாவது உள்ளத்தில் தோன்றினால், அது எவ்வளவு உண்மைபோல் தோற்றமளித்தாலும், வேதவாக்கியங்களின்படி அது இருக்கவில்லையெனில், அதை உடனடியாக விலக்கிக் கொள்ளுங்கள், ஏனெனில், உண்மையான ஒன்று காத்துக்கொண்டிருக்கிறது, பாருங்கள்.

19. எனவே இப்பொழுது ஜெபியுங்கள். எப்பொழுதும், நீங்கள் என்ன செய்தபோதிலும், எனக்காக ஜெபியுங்கள். எனக்காக ஜெபி யுங்கள்; ஏனெனில் கடைசி தடவையாக நாம் ஊழியக்களங்களுக்கு சென்றுகொண்டிருக்கிறோம் என்பது எனது கருத்து, நாம் இப்பொழுது ..... போய்க்கொண்டிருக்கிறோம்.....

20. மகத்தான காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள், அவைகளோ உலகத்தார் மத்தியில் அறியப்படாமல் இருந்து கொண்டிருக்கின்றன. இயேசு உலகில் வந்து, வாழ்ந்து, மரித்து, பலியாகி, உயிர்த்து, மகிமைக்கு திரும்பிப்போனார். ஆனால் அதைப்பற்றி கோடிக்கணக்கானோர் அறிந்திருக்கவேயில்லை. பாருங்கள்? அது ஆடம்பரமாக, கோலாகலமாக, மகத்தானதாக, பெரிய காரியமாக காணப்படவில்லை. 'அவர் தமக்கு சொந்தமானவர்களிடத்திற்கு வந்தார்'' என்பதாக இருந்தது. ''ஆவியானவர் சபைக்குச் சொல்லு கிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன்.'' புறம் பேயிருக்கிறவர்களுக்கல்ல, "சபைக்குச் சொல்லப்படுவதை'' என்பதாக அது இருக்கிறது. சபைதான் தனக்குரிய அசைவைப் பெற்றுக்கொள் கிறது.

21. கர்த்தர் ஒருநாள் என்னோடு பேசுகிற வரைக்கிலும், நான் அதைப்பற்றி வேறுபட்ட கருத்தை உடையவனாய் இருந்தேன்; அவர் என்னை தேவனுடைய வார்த்தைக்கு திரும்பிப்போய் அங்கே எவ்வாறு யோவானைக் குறித்து தீர்க்கதரிசிகள், "உயர்ந்த ஸ்தலங் களெல்லாம் பள்ளமாகும், தாழ்ந்த இடங்களெல்லாம் மேடாகும்" என்பதாக கூறினார்களோ, அதைப்பற்றி பார்க்கும்படி செய்தார். எவ்வாறு தேவனுடைய வல்லமை கிரியை செய்யும் என்பதையுங் குறித்து கூறப்பட்டதைக் காண்பித்தார். "மலைகளெல்லாம் ஆட்டுக் கடாக்களைப் போல் துள்ளினது' ''மரங்களெல்லாம் கை கொட்டும்". அது சரிதான், அது ஏதோ சம்பவிக்கப் போகிறதைக் குறித்து கூறுவதாக தோன்றியது. பார்த்தீர்களா? எனவே, அக்காரியம் சம்பவித்த பொழுதோ , என்ன நடந்தது? தாடி வளர்ந்திருந்த வயோதிபன் போல் உள்ள ஒரு நபர் தன் இடுப்பில் ஆட்டுத்தோலைப்

நாங்கள் உங்களுடைய சகோதரர்கள் மாத்திரமே என்பதை நீங்கள் பாருங்கள். நாங்கள் சுவிசேஷத்தை போதிக்கிறவர்கள் மாத்திரமே. ஆகவே நாம் யாவரும் ஒன்று சேர்ந்து உழைப்போம்.

16. சில சமயங்களில், ஒரு நபர் பெற்றிருக்கிற வரமானது கிரியை செய்யும் விதத்தைக் குறித்து அதை ஒழுங்குபடுத்தும்படி அதைப்பற்றி ஏதாவது கூறவோ, கடிந்துகொள்ளவோ செய்யும் பொழுது, அவ்வரத்தைப் பெற்றிருக்கும் அந்நபர் அதை ஏற்றுக் கொள்ளாமல், அதை நிராகரித்தால், அவ்வரம் சரியான ஒன்றல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள். முதலாவதாக, அது தேவனிடத்திலிருந்து வந்ததே அல்ல. தேவனுடைய ஆவியானது எப்பொழுதும் சீர்த்திருத்தலை ஏற்றுக்கொள்ளும்படியாக, அது இனிமையாகவும், தாழ்மையாகவும், விருப்பமுள்ளதாகவும் இருக்கும். பாருங்கள்? ஆனால் அதற்கு மாறாக, சீர்திருத்தல் வரும்போது எழுந்து நின்று, "நான் எப்படி வேண்டுமானாலும் செய்துகொள்வேன்'' என்று சொன்னால், அவ்விதமான ஆணவத் தன்மையுள்ள ஆவிகள், தேவனிடத்திலிருந்து வந்ததல்ல. பாருங்கள்? எனவே, பூமி முழுவதும் தேவனுடைய மகிமையால் நிரம்பியிருக்கையில், தேவனுடைய உண்மையான வல்லமையால் நிரம்பியிருக்கையில், ஏன் போலியைத் தெரிந்து கொள்ள வேண் டும்? நாம் ஏன் ஒரு போலியை தெரிந்து கொள்ளப் போகிறோம்? இப்பொழுது இந்த நாளில் நாம் மிகவும் தாமதமாக இருந்து கொண்டிருக்கிறோம், ஆனால் ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்; என்னவெனில், வஞ்சிக்கிறவன், எவ் வளவு சூதும் வஞ்சகமுமாயிருக்க முடியுமோ, அந்த அளவுக்கு இருந்து, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கப்பார்ப்பான். பாருங்கள்?

17. சில வேளைகளில் நாம் அந்த தெரிந்து கொள்ளப்பட்டவர் களின் கூட்டத்தில் இருக்கிறோம் என்று எண்ணுகிறோம். அதில் நாம் இருக்கிறோம் என்று நானும் நம்புகிறேன்; ஆனால் நாம் வேதத்தோடு சரியானபடி இருக்கக்கடவோம். அப்பொழுது எல்லாமே வேத வாக்கியங்களின்படியே சரியாக இருக்குமென்றால், தேவனுக்கு மகிமையைக் கொண்டு வருமென்றால், சபைக்கு கனத்தை ஏற்படுத்துமென்றால், அப்பொழுது அது தேவனால் உண்டானது என்று அறிகிறோம், ஏனெனில் வேதமும் அது சரியென்று அதை ஆதரிக்கிறது. ஆனால் நமது உபதேசங்கள் அதை சரியென்று கூறாவிடில், அது நன்மை பயக்காது, அது வீழ்ச்சி யடைந்துவிடும்.



திரும்புங்கள். 'கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது எனக்குப் பின்னாலே எக்காள சத்தம் போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டேன் .... சத்தம் பெருவெள்ளத்து இரைச்சலைக் போலிருந்தது ... சத்தத்தைப் பார்க்கத் திரும்பின போது ஏழு குத்துவிளக்குகளின் மத்தியில் ஒருவர் நிற்கிறதைக் கண்டேன்.''

103. அவர் யோவனுக்கு ஏழு குத்துவிளக்குகளின் இரகசியத் தையும், ஏழு நட்சத்திரங்களை ஏந்திக் கொண்டிருக்கிறதைப் பற்றியும், அவர் தலையின் மேல் வெள்ளை தலைப்பாகை அணிந் திருப்பதைப் பற்றியும், பாதங்கள் வெண்கலம் போன்று இருப்ப தையும், கண்கள் அக்கினி ஜுவலையாக இருப்பதைப் பற்றியும் மற்றும் இவ்விதமாக அடையாச் சின்னங்கள் பற்றியும் உள்ள இரகசியத்தையும் வெளிப்படுத்திய பிறகு, அதே சத்தத்தை (என்ன?) பரலோகத்திலிருந்தும் பேசக் கேட்டான். அவன் மேலே ஏறெடுத்து, திறக்கப்பட்ட வாசலைப் பார்த்தான். ஓ, பரலோகத் திற்குப் போவதற்கு ஒரு திறந்த வாசல்! அதற்குள் நீங்கள் எவ்வாறு பிரவேசிக்கிறீர்கள்? கிறிஸ்து இயேசுவாகிய அந்த ஒரே வாசல் வழியாக, ஒரே வழியாகத்தான். அதைத் தவிர வேறு வழி ஏதும் இல்லை .

104. ''வேறு வழியாய் ஏறுகிறவன், கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான்''. வேறு வழியாக ஏறி, கலியாண விருந்தில் கலியாண வஸ்திரம் தரியாதவனாய் காணப்பட்டவனைப் பற்றிய உவமையில், அவன் குற்றமுள்ளவனாகக் காணப்பட்டு, அவனைக் கட்டி புறம்பான இருளில் தள்ளிவிட்டார்கள். கலியாண விருந்துக்கு உள்ளே வருவதற்கு ஒரேயொரு வழிதான் உண்டு. சமீபத்தில் தான் நான் இங்கே அதைக் குறித்துப் பிரசங்கித்தேன். ஒரு மனிதன் திருமாணமாகும் பொழுது, முன்காலத்தில் அவனே நேரில் போய் அதற்கான அழைப்பைக் கொடுக்க வேண்டும். அவனே கலியாண வஸ்திரமெல்லாம் வருவபவர்களுக்கு அளிக்க வேண்டுமாம். எனவே விருந்து மேசையில் கலியாண வஸ்திரம் தரித்திராத அந்த மனிதனை மணவாளன் சந்தித்தபொழுது..... இவ்வுண்மையை எத்தனை போர்கள் ஞாபகத்தில் வைத்துள்ளீர்கள்? வேதத்தை படித்த யாவரும் நிச்சயம் அறிவீர்கள். அவன் கலியாண வஸ்திரம் தரித்திராத ஒரு மனிதனை, கலியாண விருந்து மேசை யருகே அமர்ந்திருக்கிறதைக் கண்டான்.

105. அது என்னவாக இருக்கிறது? மணவாளனானவன் வீட்டு வாசலில் தானே வந்து நின்று, அழைப்புப் பெற்றவர்கள் வருகையில் அவர்களை வரவேற்கிறான். "என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில்

வரான்'. 'என் பிதா எனக்குத் தந்தவர்கள் யாவரும், அல்லது என் பிதா அழைத்தவர்கள் யாவரும் என்னிடத்தில் வருவார்கள்'' என்று கூறினார் இங்கே அழைப்புப் பெற்றவர்கள் யாவரும் வருகிறார்கள், தங்கள் அழைப்பைக் கொடுக்கிறார்கள், மணவாளன் உள்ளே வந்து யாவரையும் பார்க்கையில் அவர்கள் யாவரும் ஒரே விதமாகத் தோற்றமளிக்கிறார்கள். பழங்காலத்து பரிசுத்த ஆவியின் மார்க்கத்தைப் பற்றிய ஒரு ஒரு நல்ல காரியம் இது. அது யாவரும் ஒன்று போல் இருக்க ஆக்குகிறது. அவர்கள் ஐசுவரியவான்களாயினும், தரித்திரராயினும் சரி, அடிமையோ, சுயாதீனனோ, அவர் கறுப்பரோ, அல்லது வெள்ளையரோ, ஆணோ அல்லது பெண்ணோ யாராயினும் அவர்கள் யாவரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாக இருக்கிறார் கள். மணவாளனானவன் வாசலில் நின்று, அழைக்கப்பட்டவர்களை வரவேற்று, அழைப்புச் சீட்டைப்பெற்றுக்கொண்டு, அங்கியினால் அணிவித்துவிடுகிறான், எனவே பணக்காரனானாலும் சரி, ஏழையானாலும் சரி, யாவரும் ஒரேவிதமாக தோற்றமளிக்கிறார்கள். தேவனுடைய இராஜ்யத்திலும் அதேவிதமாகத் தான் உள்ளது. அங்கே பெரிய மனிதர்கள் என்றும் சிறிய மனிதர்கள் என்றும் வேறுபாடு இல்லை, யாவரும் ஒரேவிதமான நபர்கள்தான். யாவரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்கிறார்கள்.

106. மணவாளன் திரும்பி வந்து, கலியாண வஸ்திரம் தரித்திராதவனாய் ஒரு மனிதன் உட்கார்ந்திருக்கிறதைக் கண்டதைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? "சிநேகிதனே, இங்கே எப்படி வந்தாய்?'' என்று கேட்டான். அதற்கு அவன் பேசாமலிருந்தான். அம்மனிதன் வாசலைத் தவிர வேறு வழியாக உள்ளே நுழைந்துவிட்டான் என்பதைக் தான் இது காண்பிக்கிறது. அவன் ஒரு ஜன்னல் வழியாகவோ, அல்லது கொல்லைப்புற வாசல் வழியாகவோ தான் உள்ளே நுழைந்து இருக்கவேண்டும். அம் மனிதனை அவன் சிநேகிதன் என்று அழைத்தான்; அம்மனிதன் ஒரு சபை அங்கத்தினன் என்பதைத்தான் இது காண்பிக்கிறது. "சிநேகி தனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டான்'' இயேசு தாமே இதைக் கூறினார். "அவன் பணிவிடைக்காரரை நோக்கி: இவனை கையுங்காலும் கட்டி...'' என்றார் அவனை அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போட்டார்கள். அவை கிறிஸ்துவின் சொந்த வார்த்தைகளாகும், சரிதானே? அவன் தள்ளப்பட்டான் ஏனெனில், அவன் கல்யாண வஸ்திரம் தரித்திராதவனாய் வாசல் வழியாய் வராமல் வேறு வழியாய் ஏறி உள்ளே வந்து விட்டான் என்பதை அது நிரூபிக்கிறது. அவன் வாசல்



11. வார்த்தையானது, வரம் இங்கு உண்டாயிருக்கும் என்றும், அது இன்னவிதமாக கிரியை செய்யும் என்றும் கூறியிருக்கிற வரையிலும், அதனோடு நிலைத்திருங்கள். ஒருபோதும், யார் என்ன செய்தபோதிலும், அது எவ்வளவு உண்மைபோல் தோன்றினாலும், வழி விலக வேண்டாம். அது ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரையிலும் உள்ள வேத வாக்கியங்களை பிரதிபலிக் கவில்லையெனில், அதை விட்டு விடுங்கள். இப்பொழுது சாத்தான் அவனுடைய தன்மையின்படியே, வஞ்சித்துக் கொண்டிருக்கிறான்; எனவே அதற்கு இடம் கொடுத்து விடாதீர்கள்......

12. நான் ஒரு எஜமானனின் ஸ்தானத்தை எடுத்துக்கொள்ள முயலுவதாகத் தோன்றுமானால், என்னை மன்னியுங்கள். நான் எஜமானன் அல்ல. பவுல் ஒரு சமயம் தனது சபையாரைப் பார்த்து, "நீங்கள் என் கிரீடத்தில் உள்ள நட்சத்திரங்கள்'' என்று கூறினானே, அதைப் போலவே நானும் உங்களிடம் கூறும் படியான எண்ணம் வருகிறது. அக்கரையில் இருக்கும் அப்பரம் தேசத்திற்கு நான் கடந்து சென்று, உங்களை அந்த மகிமைப்பட்ட நிலையில் நான் சந்திக்கையில், நீங்கள் அங்கே நட்சத்திரங்களாக பிரகாசிக்க வேண்டுமென நான் வாஞ்சிக்கிறேன், பாருங்கள்? நீங்கள் அங்கே இருக்க வேண்டுமென நான் விரும்புகிறேன். நான் அங்கே இருக்க வேண்டுமென விரும்புகிறேன்.

13. கர்த்தருடைய பிரசன்னத்தை, அல்லது அவருடைய ஜனங்களை அக்கரையிலுள்ள மகிமையான தேசத்தில், என் தரிசனத்தில் கண்டதைநான் நினைவுகூருகிறேன். நான் சுற்று முற்றும் பார்த்து, அவர்களிடம் கூறினேன்.... அவர்கள் என்னிடம் நான் சுவிசேஷத்தை எவ்வாறு பிரசங்கித்தேனோ, அதன்படியே முதலாவதாக நியாயந்தீர்க்கப்படுவேன் என்று கூறினார்கள்.... 'பவுல் எவ்விதமாக அதை பிரசங்கித்தானோ அதேவிதமாகத்தான் நானும் பிரசங்கித்தேன்'' நான் கூறினேன்.

14. அந்த இலட்சக்கணக்கான மக்கள் அங்கே நாங்கள் அதின் பேரில்தான் இளைப்பாறிக் கொண்டிருக்கிறோம்'' என்று ஆர்ப் பரித்தார்கள். பாருங்கள்? அது அவ்வண்ணமாகவே இருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஒரு நாளில் நாம் அங்கே சந்திக்கப்போகிறோம்.

15. தேவன் என்னையும் சகோதரர் நெவிலையும் எஜமானர்களாக இருக்க வேண்டுமென்று அனுப்பவில்லை. அப்படி இல்லவே இல்லை.

வேதாகம உபதேசங்களுக்கு கீழ்ப்படிவீர்கள் என்று நான் நம்புகிறேன். சகோதரர் நெவில் அவர்கள் தேவனாகிய கர்த்தரின் ஊழியக்காரரன் தான் என்பதை நாம் மிகவும் உயர்வாக பரிந்துரை செய்கிறேன். அவர் தேவனோடு ஆழமாக, இன்னும் ஆழமாக முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறார், அதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியாயிருக்கிறேன்.

9. சிறிய சபையே, நீங்கள் தேவனுடைய கிருபையில், உறுதியாக நிலைத்திருக்கவும், எப்பொழுதும் கல்வாரியை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கவும், உங்கள் ஆத்துமா, இருதயத்தினின்று எல்லா கசப்பான வேரையும் அகற்றிவிட்டு, தேவன் எந்த சமயத்திலும் உங்களை உபயோகிக்கத்தக்கதாகவும் இருக்கும்படி நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினால் எச்சரித்து அறிவுறுத்துகிறேன். எதையாவது நீங்கள் செய்யும்படியோ, அல்லது ஏதாவது ஒரு வெளிப்பாடோ வினோதமான முறையில் உங்களுக்கு எச்சரிக்கையாக வருமென்றால், கவனமாக இருங்கள். மிகவும் சூழ்ச்சியும் சாமர்த்தியமும் உள்ளவனாக சாத்தான் இருக்கிறான். பாருங்கள்? அதை தேவனுடைய வார்த்தையோடு சரிபார்த்து, உங்களது மேய்ப்பனோடு அதைப் பற்றி கலந்தா லோசியுங்கள்.

10. வரங்கள் சபையில் நுழைந்து கொண்டிருக்கின்றன என்றும், அவை சபையில் கிரியை செய்து கொண்டிருக்கின்றன என்பதையும் நீங்கள் காண்கிறீர்கள். அவ்வரங்கள் கிரியை செய்யும் முன்பாக, அதைப் பற்றி உங்கள் இருதயத்தில் சரியான நெருக்குதலை முதலாவது உணருகிறீர்களா என்று பாருங்கள். இப்பொழுது சத்துருவானவன் மிகவும் சாமர்த்தியமான வஞ்சகனாக இருக்கிறான். பாருங்கள்? ஒவ்வொரு சமயத்திலும் உண்மையான வரமானது தவறாக பயன்படுத்தப்படுதல் தான் சபைகளை சிதறடிக்கிறது. பாருங்கள்? தேவன் செய்ய முயற்சிக்கும் ஒரு காரியத்தில் வரமானது தவறாப் பயன்படுத்தப்பட்டால், அது உங்களை புண் படுத்துவதுமல்லாமல், அது முழு சபையும் உடைத்துவிடுகிறது. பாருங்கள்? அதைப் பற்றி ஆராய்ந்து பார்த்து, அது வேதாகமத்தின்படி உள்ளதா என்பதை சரி பார்த்து, அது தேவனால் வழி நடத்தப்பட்டதா அல்லவா என்பதை சோதித்துப் பாருங்கள். அதைத் தொடர்ந்து சோதித்துப் பார்த்து, பரீட்சித்துப் பார்த்து அது கோட்டை விட்டு விலகாததாக, தேவனுடைய வார்த்தையோடு சரியாக பரிபூரணமாக இருக்கிறதாக இருக்க நீங்கள் கண்டால், அப்பொழுது சரியான நிலையில் உள்ளீர்கள் என்பதை அறியலாம்.



வழியாய் பிரவேசித்திருந்தால், அவன் ஒரு கலியாண வஸ்திரத்தைப் பெற்றுக் கொண்டிருப்பான்.

107. ஓ , இதைக் கேளுங்கள்! பரிசுத்த ஆவியின் அபிஷேகம் கலியாண வஸ்திரமாக இருக்கிறதென்றால், வேறு எந்தவிதமாக நாம் கலியாண விருந்தில் பங்குகொள்வது? முதலாம் சபைக் கால மானது கிறிஸ்து இயேசுவாகிய வாசல் வழியாகப் பிரவேசித்து, இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்குள் ஞானஸ்நானம் பண்ணப் பட்டு, கலியாண வஸ்திரம் தரித்துக் கொள்வதற்காக பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டு வரவேண்டியது அவர்களுக்கு அவசியமாகக் காணப்பட்டால், நாம் வேறு எந்த வழியாக பிரவேசிக்கப்போகிறோம்? நீங்கள் மெதோடிஸ்ட், பாப்டிஸ்ட், பெந்தெகொஸ்தே அல்லது வேறு எந்த ஸ்தாபனங்கள் வழியாக வந்தால், நீங்கள் கையுங்காலும் கட்டப்பட்டு புறம்பான இருளில் தள்ளப்படுவீர்கள் ஒரே வழியும், ஒரே வாசலும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவின் வழியாகத் தான் நீங்கள் வரவேண்டும். ஆமென்!

108. அதே சத்தம் தான். வெளிப்படுத்தின விசேஷம் 1ம் அதி காரம் 10,13 ஆகிய வசனங்கள். அவனிடத்தில் பேசின சத்தமானது எக்காள சத்தம் போல் தெளிவாக இருந்தது என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். ஒரு எக்காளமானது எத்தகைய சத்தத்தை தொனிக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். அது கூரிய கீச்சிடுகிற தொனியைத் தான் கொடுக்கிறது. வேதத்தில் எக்காளம் என்பது எதைக் குறிக்கிறது? யுத்தத்தைக் குறிக்கிறது. வேதாகம நாட்களில் ஒரு எக்காளம் முழங்குகிறதை நீங்கள் கண்டால், அதன் தொனி யுத்தத்தைக் குறிக்கும் ஒரு வெளிப்படுத்தலாக இருக்க வேண்டும், அல்லது ஏதோ ஒரு காரியம் நடைபெறவிருக்கிறது.

109. சபைக்காலங்கள் முடிவடைந்த பிறகு, எல்லாம் ஆயத்தமாக வந்தபிறகு, 4ம் அதிகாரமானது, இங்கே சபைக்காலங்கள் முடிவடைந்த நிலையில், ஆயத்தமாக அமைக்கப்படுகிறது. அவர் பூமியைவிட்டு கிளம்பி விட்டார் என்பதை நீங்கள் பாருங்கள் ஏழு குத்து விளக்குளின் மத்தியில் இருந்து கொண்டு யோவானோடு அவனுக்குப் பின்னாக இருந்து பேசினவரின் சத்தத்தை நினைவில் கொள்ளுங்கள். கிரியையானது முடிவடைந்துவிட்டது. இப்பொழுது அதே சத்தமானது பரலோகத்தில் இருந்து பேசிக்கொண் டிருக்கிறது. அது என்னவாயிருக்கிறது? அவர் தன் ஜனங்களை மீட்டுக் கொண்டுவிட்டார். பூமியில் உள்ள அவரது கிரியையானது முடிவடைந்துவிட்டது. அவர் இப்பொழுது மகிமையில் இருந்து

கொண்டிருக்கிறார். அங்கிருந்து யோவானை, ''இங்கே ஏறி வா'' என்று அழைக்கிறார். ஆமென் இப்புத்தாண்டு தின வேளையில், நான் ஆர்ப்பரிக்க வேண்டும்படி உணரத்தக்கதாக அது எனக்குச் செய்கிறது. ஓ, என்னே ! ஆயத்தப்படுங்கள். இங்கே ஏறி வா''

110. யுத்தம்! இது பெரிய யுத்தம் ஒன்று நிகழவிருப்பதைக் காட்டு கிறது. தேவனுடைய செய்தியை நிராகரித்தவர்கள், பரிசுத்த ஆவியையே நிராகரித்தார்கள், அவரே ஏழு சபைக் காலங்களின் செய்தியாளர். அவரது இக்கிருபையின் செய்தியைப் புறக்கணிக் கிறவர்களுக்கு, நியாயத்தீர்ப்பைத் தவிர வேறு எதுவும் ஆயத்த மாய் இருக்கவில்லை; அவர் இப்பொழுது பூமியின் மேல் வாதைகளை ஊற்ற ஆயத்தமாக்கிக்கொண்டு இருக்கையில் "இங்கே ஏறி வா, என்ன சம்பவிக்கப் போகிறதென்பதை நான் உனக்கு காண்பிப்பேன்; கிறிஸ்துவைப் புறக்கணித்த தேவனற்ற பாவிகள் மேல் நான் என்னுடைய கோபாக்கினையை ஊற்றப் போகிறேன்'' என்று அழைக்கிறார்.

111. காட்சியமைப்பைப் பாருங்கள். இந்த இரவில் நாம் மேலும் ஆராய்கையில், இன்னும் கூடுதலான விஷயங்களை நீங்கள் அறிய வருவீர்கள். இங்கே நாம் எல்லாவற்றையும் பெற்றுக் கொண்டு விட முடியாது; ஒவ்வொரு வேத வசனத்தைக் குறிப்பிட்டுக் கொண்டே தான் போக வேண்டும். கடைசி எக்காளம் தொனிக்கை யில், கடைசி யுத்தமானது சண்டையிடப்படும் பொழுது, கடைசி பிரசங்கமானது பிரசங்கிப்படும் பொழுது, கடைசி பிரசங்கமானது பிரசங்கிக்கப்படும்பொழுது, கடைசி பாடலானது பாடப்படுகையில், புறக்கணித்தவர்களுக்கு அது எவ்வளவு பயங்கரமானதாக இருக்கப்போகிறது! நாம் கிறிஸ்துவின் நியாயசனத்திற்கு முன்பாக நிற்போம். "நீங்கள் ஏன் அதைக் ஏற்றுக்கொள்வில்லை?'' என்று உங்களிடம் கேட்கப்படும். "நான் உனக்கு கொடுத்த ஜீவனைக் கொண்டு நீ என்ன செய்தாய்?' என்று கேட்கப்படும். சரியான காரணம் ஒன்றை கூறும்படி நீங்கள் கேட்கப்படுவீர்கள். அதன் பிறகு என்ன?

112. நான் அப்பாடலை பாட நீங்கள் கேட்டிருக்கிறீர்கள், அல்லது பாட முயன்றதை. அவ்வேளையில் என்ன? அவ்வேளையில் என்ன? மகத்தான அப்புத்தகம் திறக்கப்படுகையில் அப்பொழுது

என்ன ? செய்தியைப் புறக்கணித்தவர் யாவரும் காரணம் கூறும்படி கேட்கப்படுவீர்களே, அப்பொழுது, என்ன ?



கொண்டிருக்காமல், அதை மற்றவர்களிடமும் கூறி, அதைப்பற்றி அவர்களும் சிந்தித்துப் பார்த்து, அதின் பேரில் ஜெபிக்கச் செய்து இருக்கிறேன். அப்பொழுது, நாம் தானே இச்சமயம் மேற்கிலும், தெற்கிலும், போக வழி நடத்தப்பட்டது போல் நமக்குத் தோன்றியது. இந்த வேளையில் மேற்கே சுற்றிலும் எல்லா இடங்களிலிருந்தும் நமக்கு அழைப்புக்கள் வந்துள்ளன; எனவே நாம் புறப்பட்டு விட்டோம். முதலாவதாக போக வேண்டிய இடமாகப்பூமோண்ட் அல்லது சான் அண்டோனியோ இருக்கும் என என் இருதயத்தில் உணர்ந் தேன். நமக்கு இரு இடங்களிலிருந்துமே அழைப்பு உண்டா யிருக்கிறபடியினால், எங்கு போகவேண்டும் என்பதை அறிய விரும்பினோம்.

6. ப்யூமோண்டில் ஒரு தொடர் கூட்டத்தை நாம் அறிவித்திருக் கிறோம். அவர்களிடம் நாற்பத்திரண்டு சபைகள் ஐக்கிய பெந்தெ கொஸ்தே சபையின் ஒத்துழைப்பாய் இருக்கிறபடியால், அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஐந்து ஐந்து நாட்கள் என்று கூட்டங்களைக் கொடுப்பதைவிட, ஒரே இடத்தில் அவர்கள் யாவரையுமே கூடிவரச் செய்து, ஒரு பெரிய அரங்கத்தில் பத்து நாட்களுக்கான கூட்டத்தை ஒழுங்கு செய்வது சிறந்தது என்று நாங்கள் எண்ணி னோம். ஆகவே அவ்வாறு ஒரு இடத்தை நடுமையமாக வைத்து கூட்டத்தை நடத்துவது மேலானதாக இருக்கும் என்று நான் எண்ணுகிறேன். ப்யூமோண்டைச் சுற்றிலும், டெக்ஸாஸின் எண்ணெய் வளப்பகுதியின் தொலைதூரப் பிரதேசங்களிலும், தேவையுள்ள மக்கள் ஏராளமானோர் உள்ளனர், ஆகவே ப்யூ மோண்டில் நாம் ஒரு மகத்தான வேளையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம்.

7. பெரிய நகரங்கள், பெரிய ஸ்தலங்கள் இருக்கிற இடங்களாகப் பார்த்துப் போவதற்கு நாங்கள் ஒருபோதும் முயலவில்லை. ஆனால் நாங்களோ, அது சிறிய இடமாக இருந்தாலும் சரி, கர்த்தர் நடத்துகிற வண்ணமாகவே போக நாங்கள் முயலுகிறோம். எந்த ஒரு சமயத்திலும் நமக்கு ஒரு மக்கதோனிய அழைப்பை அவர் கொடுக்கக் கூடும். அவர் எங்கு போகச் சொன்னாலும் அதற்காக நாம் எந்த சமயத்திலும் ஊழியக்களத்திற்கு புறப்பட்டு விடுவோம்.

8. அருமையான மக்களாகிய உங்களோடு, தேவனுடைய வார்த்தையைச் சுற்றி நாம் கொண்டுள்ள இந்த ஐக்கிய வேளையை நிச்சயமாக மகிழ்ச்சியுடன் அனுபவித்தோம். இப்பொழுது நீங்கள் உத்தமமாயிருந்து, சபைக்கு ஒழுங்காக வந்து, இங்கேயிருக்கிற தீரமிக்க நமது சகோதரர் நெவில் அவர்கள் மூலமாக கொடுக்கப் படும்

கூட்டங்களுக்கு வந்து சேருவதற்காக அவர்கள் 27 கோச்சுகள் கொண்ட ஒரு இரயில் வண்டித் தொடரை அதற்கென ஓடும்படி ஒழுங்கு செய்திருக் கிறார்கள். அங்கே தான் அந்நகரத்தின் மேயரானவர் ஒரு பேரணியை தெருக்களில் நடத்திச் சென்றார். அவர்கள் யாவரும் சென்றார்கள். ப்யூமோண்டில் மகத்தான வேளை நமக்கு உண்டாயிருந்தது. அவ்வூருக்கு நாம் மீண்டும் அடுத்த வாரம் திரும்பிப் போகிறோம். அதற்குப் பிறகு சான் அண் டோனியோ என்ற இடத்திற்கு போவதற்காக எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறோம். ஆனால் திரும்பி வரும் வழியில் அங்கே போவதற்கு போதுமான சமயம் நமக்கு இருக்காது.

3. நாம் அங்கிருந்து பீனிக்ஸ், லாஸ் ஏஞ்ஜெலிஸுக்குப் போய் விட்டு, பிறகு லாங் பீச்சுக்கும் போகப்போகிறோம். அதன்பிறகு, கர்த்தருக்கு சித்தமானால், நாம் திரும்பி வந்து, கிழக்குக் கடற் கரையில், வர்ஜீனாயாவுக்கும், தெற்கு கரோலினாவுக்கும் போகப் போகிறோம். பிறகு, அங்கிருந்து ப்ளூமிங்டன், இல்லினாய்க்கு போவோம். அங்கிருந்து, ஏப்ரல் மாதத்தின் கடைசி வாரத்தில் லேன் டெக் உயர்நிலைப் பள்ளியில் கிறிஸ்தவ வர்த்தகர் குழு நடத்தும் கூட்டத்திற்குப் போவோம். அதன்பிறகு நான் அங் கிருந்து புறப்பட்டு, வடக்கு பிரிட்டிஷ் கொலம்பியாவுக்கும், அலாஸ்கா வரையிலும் சென்று, அப்பகுதிகளில் ஜூன் வரையிலும் இருப்பேன். இப்பொழுது நமக்கு மகத்தான நேரம் உண்டாயிருக்கும் என்று நாம் நம்புகிறோம்.

4. இங்குள்ள இச்சபையைக் குறித்து வருமானவரித் துறையினர் என்னிடம் செய்யும் புலன் விசாரணையானது அந்த சமயத்தின் போது முடிவடைந்துவிட வேண்டும் என்று ஜெபித்துக் கொண்டிருக்கிறேன். அது முடிவடைந்து விட்ட பிறகு, ஜூன் மாதத்தில் வெளிநாட்டிற்கு நான் போக முடியும்; அது ஆப்ரிக்காவுக்கு போவதற்கு ஏற்ற சமயமாக இருக்கும். ஜூன், ஜூலை, ஆகஸ்ட் ஆகிய மாதங்களில் நான் ஆப்பிரிக்காவில் இருப்பேன். ஆகவே, நிச்சயமாக உங்களுடைய ஜெபங்கள் எனக்குத் தேவையாயிருக்கிறது. 5. நாம் கர்த்தருடைய வருகைக்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். நான் கூறிய இக்கூட்டங்களெல்லாம், அது கர்த்தருடைய சித்தமாக இருக்குமானால்'' என்று தான் உள்ளன. பாருங்கள். நமக்குத் தெரியாது. அவரால் முடியும். இக்கூட்டங்களெல்லாம் சரியாக வழிநடத்துதல்கள் பேரில் உள்ளவையாக அறிவிக்கப்படவில்லை. ஆனால் நமக்கு வந்த அழைப்பையெல்லாம் ஒன்று சேர்த்து, அவைகளின் பேரில் ஜெபித்து, "நாங்கள் எப்பக்கம் செல்ல வேண்டும்?'' என்று கேட்டோம். அது நடத்துதல் போல் தோன்றுகிறது; நான் என்னிடம் மட்டுமே வைத்துக்



113. இப்புத்தகம் எழுதப்பட்டது எவ்வளவு நிச்சயமோ, அந்த அளவுக்கு அங்கே நிற்கப்போவதும் நிச்சயமாமே. நீங்கள் அங்கே நிற்கப்போகிறீர்கள். அப்பொழுது காரணம் கூறும்படி கேட்கப்படு வீர்கள் என்பதைக் கவனியுங்கள். தேவனுடைய குமாரர்கள், குமாரத்திகள் என்ற முறையில் நாம் நம்மையே அன்றாடம் ஒவ்வொரு மணி நேரத்திலும் பரிசோதித்துக் கொள்ள வேண்டியது நமக்கு அவசியமாய் இருக்கிறது. "நான் அனுதினமும் சாகிறேன்'' ''ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்'' பாருங்கள்? உங்களை சோதித்துப் பாருங்கள்? ஏனெனில் பதிலளிக்க நீங்கள் எப்பொழுது எந்த வேளையில் உன்னதத்திற்கு அழைக்கப்படுவீர்கள் என்பதை அறியமாட்டீர்கள்.

114. இப்பொழுது "எக்காள சத்தத்தைக் கேட்டேன்' என்பதைப் பற்றி முதலாம் வசனத்தின் கடைசி பாகத்தில் யோவான் என்ன கூறினான் என்பதை குறித்துக்கொள்ளுங்கள்.

".. முன்னே எக்காள சத்தம் போல என்னுடனே பேச நான் கேட்டிருந்த சத்தமானது: இங்கே ஏறிவா...''

வெளி. 4:1

''நான் உனக்கு பூமியில் உள்ள சபைக் காலங்களைக் குறித்து காண்பித்தேன்; இப்பொழுது இங்கே ஏறி வா, இங்கே நடக்கிறவைகளை உனக்குக் காண்பிக்க விரும்பு கிறேன்.''

115. பாருங்கள், அப்படியானால் கிறிஸ்து பூமியை விட்டு புறப் பட்டுவிட்டார். அவர் மகிமைக்குள் சென்றுவிட்டார். சபைக் காலமானது முடிவடைந்துவிட்டதையும், அவரது ஆவியின் கிரியை இங்கே முடிவடைந்து விட்டது என்பதையும் காண்பிக்கிறது. அவர் மகிமைக்குள் போய்விட்டார், அங்கிருந்து கொண்டு யோவானை மேலே ஏறிவரும்படி அழைக்கிறார். வேறென்ன சம்பவிக்கப் போகிறது என்பதை அவனுக்கு காண்பித்தார். அதற்காக அவனை "இங்கே ஏறிவா' என்று அழைத்தார்.

116. 2ம் வசனத்தை கவனியுங்கள். யோவான் மேலும் இவ்வாறு கூறினான்:

“உடனே...” (ஆமென்!)

117. நான் வினோதமாக நடந்துகொண்டால், நான் மிகவும் நல்ல படியாக உணருகிறேன். யோவான் மேலும் கூறினான்.

.... உடனே ஆவிக்குள்ளானேன்..."

வெளி.4:2

118. தேவனுடைய சத்தம் உங்களோடு பேச நீங்கள் கேட்கையில் ஏதோ ஒன்று சம்பவிக்கிறது. ஆமென்! அவ்வாறு உங்களுக்கு சம்பவித்ததுண்டா? முப்பதொன்று ஆண்டுகளுக்கு முன்பாக எனக்கு அவ்வாறு சம்பவித்தது. அதன்பிறகு நான் முன்பு போல் இருக்கவில்லை. "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப் பாறுதல் தருவேன்" என்று அவர் கூறினார். அது என்னை மாற்றினது.

119. யோவான் கூறினான்:

"உடனே ஆவிக்குள்ளானேன் (என்ன ஆவிக்குள்? பரிசுத்த ஆவிக்குள் ஓ!) ஆவிக்குள்ளானேன்.... இதோ, வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது. அந்தச் சிங்காசனத்தின் மேல் ஒருவர் வீற்றிருந்தார்.''

வெளி.4:2

120. இப்பொழுது யோவான் பூமியைவிட்டு புறப்பட்டு விட்டான். கிறிஸ்து பூமியை விட்டு கிளம்பிவிட்டு (பரிசுத்த ஆவி யின் ரூபத்தில்) மீண்டும் சரீரத்திற்குள்ளாக திரும்பிவிட்டார். இன்றைக்கு சரீரமானது ஒரு நினைவுகூருதலாக அங்கே இருந்து கொண்டு இருக்கிறது. ஒரு பலியாக இருந்து கொண்டிருக்கிறது. இவ்வதிகாரத்தினூடே நாம் அவ்விஷயத்தைப் பார்க்கிறோம். ஆனால் கிறிஸ்துவின் ஆவியானது சபைக்குள் வாசம்பண்ணும்படி திரும்பி வந்திருக்கிறது. நமக்குள் வாசம் பண்ணும்படியாக.

121. இப்பொழுது, இங்கே பூமியில் அவரது கிரியையின் காலத்தின் முடிவைக் குறித்து காண்பித்த பிறகு, அவர் பரலோகத் திற்குள் சென்றார். "இவைகளுக்குப் பின்பு சம்பவிக்கப் போகிற வைகளை நான் உனக்குக் காண்பிப்பேன். சபைக்காலங்களுக்குப் பிறகு உள்ளவைகளை காண்பிப்பேன்' என்று யோவானிடம் கூறினார். ''யோவனே, நான் இனிமேல் கீழே பூமியில் இருந்து எதையும் உன்னோடு பேச முடியாது; ஏனெனில் நான் அதைவிட்டு நீங்கி வந்துவிட்டேன். நான் உன்னதத்திற்கு வந்துவிட்டேன். எனவே நீ மேலே என்னோடு வந்துவிடு' என்று கூறினார். ஆமென்! "இதற்குப் பிறகு சம்பவிக்கப்போகிறவைகளை நான் உனக்கு காண்பிப்பேன்'' என்றார். ஓ, என்னே! ஓ! தரிசனத்தில் மகிமைக் குள் எடுத்துக்கொள்ளப்பட்டான்.

## வெளிப்படுத்தின விசேஷம்

## நான்காம் அதிகாரம் #3

## இரக்கத்தின் சிங்காசனமும்

## நியாயத்தீர்ப்பின் சிங்காசனமும்

## THRONE OF MERCY AND JUDGEMENT

**பிரான்ஹாம் கூடாரம்,இந்தியானா, அமெரிக்கா**

**61-01-08**

1.வேதத்தை அறிந்து கொள்ள வந்திருப்போரே! உங்களுக்கு எனது காலை வணக்கம். இன்று காலையில் ஒவ்வொருவரும் எவ்வாறு உணருகிறீர்கள்? நன்றாக இருப்பதாக உணருகிறீர்கள் என்று நான் நம்புகிறேன். ஆமென். நாங்கள் இன்று காலையில் இங்கே இருப்போம் என்பதை மிகக் குறைந்த கால அவகாசத்தில் அறிவித்திருந்தோம். ஏனெனில் நான் எனது நிகழ்ச்சி நிரலை இன்னும் இறுதியாக்கவில்லை; எப்பொழுது நான் புறப்படுவேன் என்பதும் முடிவாகவில்லை. இந்நிகழ்ச்சி நிரலானது அடுத்த ஆறு மாத காலத்திற்கென தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே நான் இன்று காலையில் இவ்வாராதனையை நடத்தி விடுவோமே, அது நல்லது என்று எண்ணினேன்; ஏனெனில் நான் அறிந்த வரையிலும், இலையுதிர் காலத்தில் நான் இங்கு திரும்பி வருகிற வரையிலும், சில காலம் ஆகிவிடுமே.

2. வருகின்ற வாரத்தில் நான் டெக்ஸாஸிலுள்ள ப்யூ மோண்டுக்கு புறப்பட்டுவிடுவேன். அங்கே அடுத்த வாரத்தில் ஆரம்பித்து, சுமார் எட்டு அல்லது பத்து நாட்களுக்கு சுயாதீன சபைகளின் சங்கமும் மற்றும் வேறு பல சபைகளும் ஒழுங்கு செய்துள்ள கூட்டங்களில் கலந்து கொள்ளுவோம். டெக்ஸாஸிலுள்ள ப்யூமோண்ட் டில் உள்ள இயேசு நாமக்கார சபைகள் தான் அக்கூட்டங்களை நடத்துகிறது. அந்த ஊரில் தான் சில காலத்திற்கு முன்பாக நமக்கு மகத்தான கூட்டம் உண்டாயிருந்தது; அது இந்தப் படம் எடுக்கப் பட்ட பிறகு அச்சமயத்தை ஒட்டி நடந்ததாகும். ப்யூமோண்டில் நடைபெறும்

எவ்வளவாய் வளர்க்கிறீர்! எவ்வாறு ஒரு தாயானவள் தனது சிறு பிள்ளைகளை கவனித்து, அவர்கள் கண்களிலுள்ளதை எல்லாம் துடைத்து, அவர்களை அவள் நேசிக்கிறபடியினால் அவர்களுக்கு விசேஷித்த காரியங்களை அவள் கொடுக்கிறாளோ, அதேவிதமாக நீர் புதிதாக பிறந்த உம்முடைய குழந்தைகளை நேசிக்கறீர், கர்த் தாவே. அவர்களால் இன்னும் நடக்க இயலாது, அவர்கள் பேசக் கூட முடியாது. அழுது, தங்களது தாயை நோக்கிப் பார்க்கிற அந்த ஒரேயொரு காரியத்தை மட்டுமே அவர்களால் செய்ய முடியும். ஓ, தேவனே, அவர்களை உமது கரங்களால் சிறிய ஆட்டுக்குட்டி களைப் போல் மெதுவாக மென்மையாகப் பிடித்துக் கொள்ளும்; அவர்களால் நடக்க இயலுகிற அளவுக்கு அவர்கள் வளரும் வரையிலும் அவர்களை வழி நடத்தியருளும். ஆராதனையின் வழிகள் முழுவதிலும் அவர்களை தொடர்ந்து நடத்தும், கர்த்தாவே அதை அளித்தருளும்.

323. எங்களுக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவர்களை நாங்கள் மன்னிக்கிறது போல், எங்களை எங்கள் பாவங்களிலிருந்து மன்னித்தருளும். எங்களை சோதனைக்குட்படப் பண்ணாமல் தீமையினின்று இரட்சித்தருளும். இராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் கேட்கிறேன். ஆமென்.

324. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக! கர்த்தர் உங்களுக்கு ஒரு குறிப்பிட்ட காரியத்தின் பேரில் இந்தப் புத்தாண்டை ஆரம்பிக்க, இன்று காலையில் ஒரு காரியத்தை செய்திருக்கிறார் என்று நான் நம்புகிறேன். அதென்னவெனில்: நீங்கள் இயேசு கிறிஸ்துவை நேசிக்கவும், ஒரு நாளில் நீங்கள் அவரைக் காணவும், அவரை நேசித்து, அவரோடு என்றென்றும் ஜீவிக்கவும் விரும்பும்படி உங்களுக்கு செய்திருக்கிறது. உங்களில் ஒருவர் கூட இழந்து போகப்படக்கூடாது என்றும், நீங்கள் ஒவ்வொருவரும் இரட்சிக்கப்பட்ட, பரிசுத்த ஆவினால் நிரப்பப்பட்டு, அவருடைய வருகை பரியந்தமும் காக்கப்பட வேண்டுமென்றும் தான் நான் வாஞ்சை கொண்டிருக்கிறேன். ஏனெனில் அது சீக்கிரத்தில் இருக்கும் என்று நான் விசுவாசிக்கிறேன்.

இப்பொழுது நான் ஆராதனையை சகோதரர் நெவில் அவர்களிடம் தருகிறேன்.



122. அவனுடைய அனுபவம் பவுலுடைய அனுபவம் போன்ற தாகத்தான் இருக்கவேண்டும். 2கொரிந்தியர் 12:2-4 குறித்துக் கொள்ள விரும்பினால் அதைக் குறித்துக்கொள்ளுங்கள். 2 கொரிந் தியர் 12:2-4. பவுலும்கூட ஒரு நாளிலே தரிசனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டான். அதை நீங்கள் அறிந்தீர்களா? அவன் பார்த்த காரியங்கள், அவைகளைப் பற்றி வெளியே பேசுவதற்கு உகந்ததல்ல என்பதாய் இருந்தது. பதினான்கு வருடங்கள் அவன் அதைப்பற்றி குறிப்பிடவேயில்லை. ஆனால் அவ்விரு அனுபவங்களுக்கிடையே உள்ள வேறுபாட்டைக் கவனிக்கவும்.

123. பவுல் எதைக் கண்டானோ அதைப்பற்றி வெளிப்படையாக பேசவோ அல்லது அதைக்குறித்து சொல்லவோ தடை செய்யப் பட்டான். ஓ, என்னே! அவன் அதை வெளியே சொல்ல முடியும் என்பதை நான் விசுவாசிக்கவில்லை. ஒரு சிறு பயணமான நான் ஒரு நாள் இவ்வாறு சென்றிருந்தேன். அதைப்பற்றி நான் குறிப் பிட்ட தேயில்லை. இனி ஒரு போதும் கூறவுமாட்டேன். அவன் வெளியே பேச இயலாதபடிக்கு உள்ள காரியங்களை அவன் பார்த் தான். அவன் மூன்றாம் வானம் வரைக்கிலும் எடுத்துக் கொள்ளப்பட்ட போதிலும், அதைப்பற்றி விவரிக்க வார்த்தைகளே அவனுக்கு இருக்கவில்லை என்று நான் கருதுகிறேன். மூன்றாம் வானம் வரைக்கும் எடுத்துக் கொள்ளப்பட்டான், பாருங்கள்.

124. யோவன் எடுத்துக்கொள்ளப்பட்டபொழுது அது எத்தகையதொரு வேறுபாடானதாக இருந்தது! அவன் அப்பொழுது இயேசுவைக் கண்டான். அவர் அவனிடம், "நீ கண்டவைகளை ஒரு புஸ்தகத்தில் எழுதி, சபைகளுக்கு அனுப்பு'' என்று கூறினார். பவுல் கண்டவைகளைப் பேச தடை செய்யப்பட்டான். ஆனால் யோவானோ, ஒரு புஸ்தகத்தில் அதை எழுதி, அது காலங்கள் நெடுகிலும் போகும்படியாக அவனுக்குக் கூறப்பட்டது. ஓ, என்னே! அது இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அது இந்தக் கடைசி நாட்களில் தான் வெளிப்படுத்தப்படவேண்டும் என்று இருக்கிறது. யோவானின் நாளில் அது வெளிப்படுத்தப்படவில்லை. நாம் போய்க் கொண்டிருக்கையில், இப்பொழுது அது வெளிப்படுத்தப்படுகிறது.

125. ஓ கவனியுங்கள், சபைக்காலம் முடிவடைந்த உடனேயே, யோவான் எடுத்துக்கொள்ளப்பட்டதானது, லவோதிக்கேயா சபைக்காலம் முடிவடைந்த உடனேயே எடுத்துக்கொள்ளப்பட்ட சபைக்கு முன்னடையாளமாக இருக்கிறது. இந்த சபைக் காலத் திற்குப் பிறகு எடுத்துக் கொள்ளப்படுதல் வருகிறது. யோவான் மேலே போனது

போல, சபையும் தேவனுடைய சமுகத்திற்கு மேலே போகிறது. அதை நினைக்கையில் அது என் ஆத்துமாவை எழுச்சியூட்டச் கூடியதாக இருக்கிறது. சபையானது எடுத்துக் கொள்ளப்படுதலில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. வெளிப்படுத்தின விசேஷப் புத்தகத்தில் இந்த இடம் பாருங்கள், சபைக் காலத்திற்கு முடிவிலே எழுதப்பட்டிருக்கிறது.

126. இங்கே என்னிடம் இப்பொழுது நான் தெளிவுப்படுத்த விரும்புவதான ஒரு விஷயம் இருக்கிறது; அதுதானே நீண்ட காலமாக அநேக கிறிஸ்தவர்கள் நடுவில் தீர்க்கப்படாத, முடிவு கண்டடையாத விஷயமாக இருக்கிறது. நான் இன்றைக்கு வேத வாக்கியங்களை படித்து குறிப்பெடுத்துக் கொண்டிருக்கையில் பல்வேறு பெயர்களையும், வெவ்வேறு நிறங்களையும் வான வில்லையும், அடையாளச் சின்னங்களையும் குறித்துப்பார்த்தேன். அவைகளைப் பற்றி சற்று நேரம் கழித்து நாம் பார்க்கலாம். நான் இன்று சிந்தித்தேன்... நான் இவ் வேதவாக்கியங்களை குறிப் பெடுத்துக்கொண்டிருந்தேன். அதினால் நான் அவைகளை திரும்பிப் பார்க்கவும், அவைகளை குறிப்பிடவும் சாத்தியமாகுமே என்ப தினால் அப்படிச்செய்தேன், ஏனெனில், வழக்கமாக, நான் ஒன்றைக்குறித்து இதைப்போல் பிரசங்கிக்கப்போகிறதென்றால், அது வித்தியாசமானதாக இருக்கும், அதை நான் எழுதி வைத் திருக்கிறதைப் பாராமல் பேச அறிவேன். ஆனால் இந்த முறையிலே, உங்களுக்கு சிறிது நேரமே இருக்கையில், இவ்விஷயம் வேத வாக்கியங்களில் முன்னும் பின்னுமாக நெடுக சம்மந்த முள்ளதாக இருக்கிறபடியால், நான் அவைகளை குறிப்பிட விரும்புகிறேன்.

127. மத்தேயு 16:13ல் இதை நாம் காண்கிறோம். விரும்பினால், இதைக் குறித்துக்கொள்ளலாம். மத்தேயு .... வாசிக்க நீங்கள் விரும்பினால் அதை எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் அதை எடுத்துக்கொள்ள விரும்பினால்..... நல்லது, மத்தேயு 16:13 நாம் அவ்வசனத்தை எடுத்துக்கொண்டு படிப்போம், அப்பொழுது நாம் அதை நிச்சயமாக அறியலாம். மத்தேயு 16ம் அதிகாரம், 13ம் வசனம். மத்தேயு 16:13 வாசிக்கையில் நாம் மிகவும் கவனமாக கேட்போம். பேதுரு வந்தபொழுது...

''பின்பு, இயேசு பிலிப்புச் செசரியாவின் திசைகளில் வந்தபோது, தம்முடைய சீஷரை நோக்கி: மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார்.



அதைக்குறித்து எண்ணுகையில் என் ஆத்துமாவை மிகவும் நொறுக்குகிறது). அவர்களுடைய வேதனையான கசப்பான கதறுலுக்கு செவிமடுப்பீர், தீவிரியும், சகோதரரே, அவர்களுடைய அடைக்கலத்துக்காக தீவிரியும் "ஆண்டவரே, இதோ அடியேன்'' என்று அவருக்கு பதிலளிப்பீர்

320. ஆண்டவரே, அதை அளித்தருளும். அதை மீண்டும் அளித்தருளும். கடந்த ஆண்டு முழுவதும் நான் எல்லாவிதமான பிழைகளையும் செய்துள்ளேன். பிதாவே, அவைகளுக்காக நீர் என்னை மன்னிக்க வேண்டுமென்று ஜெபிக்கிறேன். இப்புத்தாண்டில் நீர் என்னை புதிதாக அபிஷேகித்தருளும். அங்கே தொலைவில் பாவத்திலும், நிந்தையிலும் சிக்கி மரித்துக் கொண் டிருக்கிற இலட்சக்கணக்கானோரிடம் நான் செல்லட்டும், நான் அவர்களுக்கு இந்த உம்முடைய சத்தியத்தின் மகத்தான வெளிப் பாட்டை கொண்டு செல்லட்டும், அதின மூலம் அவர்களுக்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை கொண்டு வரமுடியும். அந் நாளில் அவர்கள் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து கூடிவந்து, உம்முடைய கிரீடத்தில் முத்துக்களாக திகழட்டும் பிரகாசிக் கட்டும் நான் அவர்களிடம் போய், அவர்களுக்கு நம்பிக்கையளித்து, அவர்களை அவர்கள் வாழக்கிற அசுத்தமான இப்பூமியின் அசுத்தத் திலிருந்து தூக்கியெடுக்கட்டும், அதற்காக எனக்கு உதவி செய்யும். கர்த்தாவே. தங்களை பரிசுத்தமாக்கி, கிறிஸ்தவர்களாக வாழச் செய்து, உமக்கு முன்பாக பரிசுத்தமாக்கப்பட்ட சுத்தமாக விளங்கும் படி செய்கிற பரிசுத்த தேவனை அவர்கள் காணட்டும். அவர்கள் எல்லா தீமைகளிலிருந்தும் நீங்கலாக்கி, எல்லாவிதமான உலகத் தின் களியாட்டங்களிலிருந்தும் மனந்திரும்பி, ஜீவிக்கிற தேவனி டம் திரும்பட்டும். அந்த மகத்தான நாளில் உமது இராஜ்யத்தின் பிரதிநிதிகளாக அவர்கள் ஆகட்டும்.

321. இன்று காலையில் இச்சிறு சபையை பரிசுத்தமாக்கும், கர்த் தாவே. இங்கிருக்கிற ஒவ்வொரு நபரையும் உமது ஆவியால் பரிசுத்தமாக்கியருளும்; பரிசுத்த ஆவியானவர் அவர்களது இருதயங்களுக்குள், எங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் வர வேண்டும். அவர்களுடைய இருதயங்களை அவர்களது சுயவிருப்ப மாகிய திரை வழியாகதிறந்து, அதினால் அவர்கள் தங்கள் சுய சித்தத்தை மறுத்து, உம்முடைய சித்தத்தை அறியும்படி அவர்களை வரச்செய்திருக்கிற, அவர்களில் இருக்கிற ஆவியை புதுப்பியும்.

322. அந்த இளம் பிள்ளைகள், கர்த்தாவே, அவர்கள் அநேகர் சிறு குழந்தைகளாக இருக்கிறார்கள். நீர் உமது கரங்களில் அவர்களை

தெயவீக ஒளி- தெய்வீக ஒளியால் பிரகாசிமாயிருக்கும்) அவரது கிருபையில் பங்கு கொண்டோர்

பாக்கியமுள்ளோர், அவர்கள் அவர் தம் கிரீடத்தில் முத்துக்களாய் பிரகாசிப்பர் ஓ, தேவனே, அக்கினி தழல் தீர்க்கதரிசியின் உதடுகளைத் தொட்ட பொழுது, அது அவனை சுத்தமாக்கியது அப்பொழுது தேவ சத்தமானது, 'யார் நமக்காக போவான்?'' என்று கூவியது அப்பொழுது அவன், ''இதோ அடியேன், என்னை அனுப்பும்'' என்றான்

318. ஓ, இக்காலையில் தூதனை அனுப்புமே. ஆறு செட்டைகளோடு கூடிய கேருபீனை ஆலயத்தினுள் பறந்து "கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர்'' என்று சத்தமிட்டுச் கொண்டே இருந்த அக்கேருபீனை ஏசாயா கண்டானே, அதை அனுப்பும் இளைஞன் ஏசாயா, ''நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன், கர்த்தருடைய மகிமையை என் கண்கள் கண்டதே'' என்றான். ஆலயத்தின் தூண்கள் அசைந்தன. அப்பொழுது ஒரு தூதன் பலிபீடத்திலிருந்து தன் கையிலே பிடித்த குறட்டால் ஒரு நெருப்புத்தழலை எடுத்து, அதினால் அவனது உதடுகளைத் தொட்டு, ''இதோ, உன்னை சுத்தமாக்கினேன். இப்பொழுது மனுஷகுமாரனே, தீர்க்கதரிசனம் உரை'' என்றான். இன்று காலையில், கர்த்தாவே, தூதனை அனுப்பியருளும்மேன். எந்த பிழையான காரியங்களிலிருந்தும் எங்கள் உதடுகளை சுத்தமாக்கியருளும். எங்கள் இருதயங்களை சுத்தமாக்கி அதில் பிரவேசித்தருளும். கர்த்தாவே சுயவிருப்பம் என்ற திரையைக் கிழித்தருளும். என்னுடைய சித்தமானது உம்மிலே உம்முடைய சித்தமாக ஆகட்டும் கர்த்தாவே, ஓ, உம்முடைய சித்த மானது என்னிலே இருக்கட்டும். ஓ , தேவனே. நானும், எனது சபையும், எனது ஜனங்களும் உம்முடையவர்களாக இருக்கட்டும், ஓ, கர்த்தாவே . எங்களை உம்மிடம் சமர்ப்பிக்கிறோம்.

319. பிதாவே, கவிஞன் தொடர்ந்து இவ்வாறு கூறியுள்ளான். இலட்சக்கணக்கானோர் பாவத்திலும் நிந்தையிலும் மரித்துக் கொண்டிருக்கின்றனர்

(ஆப்பிரிக்காவிலும், இந்தியாவிலும், உலகம் பூராவிலும் ஒரு மணிக்கு ஆயிரக்கணக்கில், உம்மை அறியாமல் உம்மை சந்தித்துக்கொண்டிருக்கின்றனர்.

இப்பொழுது இலட்சக்கணக்கானோர் பாவத்திலும் நிந்தையிலும் மரித்துக் கொண்டிருக்கின்றனர் (இருப்பினும், தேவனே,



அதற்கு அவர்கள் : சிலர் உம்மை யோவான் ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும்; வேறுசிலர் எரேமியா, அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள்.

அப்பொழுது அவர் 'நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார்."

சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்.

இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்த வில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்.

மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வ தில்லை .

பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்தில் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழக்கப்பட்டிருக்கும் என்றார்.

அப்பொழுது, தாம் கிறிஸ்துவாகிய இயேசு என்று ஒருவருக்கும் சொல்லாதபடிக்குத் தம்முடைய சீஷர்களுக்குக் கட்டளையிட்டார்.

மத் 16:13-20.

128. இப்பொழுது கவனமாகக் கேளுங்கள். அது முதல்... அந்த வேளை முதற்கொண்டு அவர்... தொடங்கினார். இன்னொரு வசனத்தை நீங்கள் எடுத்துக்கொண்டு வாசிக்க விரும்பு கிறேன். 28ம் வசனத்தை எடுத்துக்கொள்ளுங்கள். மீதியுள்ள வசனங்களை நீங்கள் வீட்டில் போய் வாசித்துக் கொள்ளலாம்.

"இங்கே நிற்கிறவர்களில் சிலர் மனுஷகுமாரன் தம்முடைய இராஜ்யத்தில் வருவதைக் காணுமுன் மரணத்தை ருசி பார்ப்பதில்லை என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

மத்.16:28

129. ஓ, அதைப்பற்றி எண்ணிப் பாருங்கள் "இங்கே நிற்கிறவர்களில் சிலர், இங்கே நிற்கிறவர்களில் சிலர் மனுஷகுமாரன் தம்முடைய

ராஜ்யத்தில் வருவதைக் காணுமுன் மரணத்தை ருசி பார்ப்பதில்லை.'' என்னே ஒரு அறிக்கை இது! குறை கூறுவரோர் அதை எடுத்துக்கொண்டு, தான் எவ்வளவு ஊமையாயிருக்கிறார் என்பதை காண்பிக்கிறார். எப்படி அதைப் பிடித்துக் கொள்ள விரும்புகிறார்! அது நிறைவேறியிருக்கிறது, ஆயினும் அவர்கள் அதைப் பற்றி அறியவில்லை.

130. பேதுருவின் கன்மலை பற்றிய அறிக்கைக்குப் பிறகு.... அவனுடைய அறிக்கையானது எப்படிப்பட்டது என்று நாம் அறிவோம். இதே பாறையின் மேல் தான் அவர் தன் சபையைக் கட்டுவார். சிறிய கல்லாகிய பேதுருவின் மேல் அல்ல. ரோமன் கத்தோலிக்கர் அவ்வாறு கூற முயலுகின்றனர். பேதுருவின் வெளிப்படுத்தலைப் பற்றிய அறிக்கையிருக்கிறதே, அதுதான் சபையாகும். தேவன் அதை வெளிப்படுத்துவார். இந்த மனிதனைப் பற்றிய அறிக்கையல்ல, ஏனெனில் அவன் பிறகு பின்மாற்ற மடைந்தான். அவர் தேவனுடைய குமாரன் என்பதைப் பற்றிய பேதுருவின் அறிக்கையல்ல அது. ஏனெனில், அவர் தேவனுடைய குமாரன் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். பேதுரு அப் பொழுதுதான் அதைக் கூறினான். ஆனால் அது என்னவாயிருக் கிறது என்றால், அவர் தேவனுடைய குமாரன் என்னும் வெளிப் படுத்தலானது பரலோகத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டது. ''மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு போதிக்கவில்லை, ஆனால் பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத் தினார். இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன். இந்தக் கல்லைப் பற்றிய அறிக்கையின் மேல். பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.

131. நமக்கு நேரம் விரைவாக கடந்துவிடவில்லை என்று நினைக்கி றேன். அப்படியாயின், நாம் இதற்குள் இன்னும் பார்க்கலாம். மானிடருக்குள் இது எவ்வாறு செல்கிறது என்பதை பார்க்க நாம் விரும்புகிறோம். நாம் அதற்குள் செல்வோமென்றால், அது ஒரு அழகான சித்திரமாகக் காணப்படும். நல்லது, இந்த கன்மலையைப் பற்றிய அறிக்கை - அவர் தன்னுடைய சபையை பேதுருவின் அறிக்கையின் பேரில் கட்டுவார். "இங்கே நிற்கிறவர்களில் சிலர், தேவகுமாரன் தம்முடைய இராஜ்யத்தில் வருவதைக் காணுமுன் மரணத்தை ருசி பார்ப்பதில்லை'' என்றார்.

132. இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள், அவர் ''சிலர்'' என்று கூறினார். சிலர் என்றால் ஒரு நபருக்கும் மேல் என்று அர்த்தம் அல்லவா? "சிலர்'' என்றால் "ஒருவருக்கு மேல் அதிகமான'' என்பதாகும்.



சோதனைகளெல்லாம் முடிவுறும் பாவத்தினின்று விடுதலை பெற்றோருக்கு, நமது கர்த்தர் இந்த க்ஷணத்தில் வந்தால் அது

எப்படியிருக்கும்? ஓ! அப்பொழுது அது உமக்கு மகிழ்ச்சியை கொண்டு

வருமா? அல்லது கவலையையும் மிகுந்த துக்கத்தையும் கொண்டு

வருமா? மகிமையிலுள்ள நமது கர்த்தர் வருகையில்

நாம் அவரை ஆகாயத்தில் சந்திப்போம்.

316. ஆமென்! ஓ, அவரை நான் நேசிக்கிறேன். அது உங்களுக்கு கவலையையும் துயரத்தையும் கொண்டு வருமா, அல்லது மகிழ்ச்சியைக்கொண்டு வரமா? மகிமையிலுள்ள நமது கர்த்தர் வருகையில், நாம் அவரை ஆகாயத்தில் சந்திப்போம். இந்த எண்ணங்களை நமது சிந்தையில் கொண்டவர்களாய் நாம் தலைகளை வணங்கு வோம். கர்த்தருக்குச் சித்தமானால், இந்த ஆராதனையை மற்றொரு சமயத்தில் முடிப்பேன்.

317. எங்கள் பரம பிதாவே, ஓ அவர்கள் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வருவார்கள். அவர்கள் கடையாந்தரங்களிலிருந்தும் வருவார்கள். நான் அந்த மகத்தான எடுத்துக்கொள்ளப்படுதலைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். ஆப்பிரிக்காவிலும், இந்தியாவிலுமுள்ள மக்களுக்கு நான் பிரசங்கித்திருக்கிறேன்; உலகம் முழுவதிலுமுள்ள மக்களுக்கு பிரசங்கித்திருக்கிறேன்; அவர்களது முகங்களை நான் மீண்டும் எப்படியாய் காணப் போகிறேன். அவர்களில் அநேகர் கதறிக்கொண்டும் அழுது கொண்டும், அங்கே விமான நிலையத்திற்கு சென்று வேலியில் சாய்ந்து கொண்டு, கதறி அழுது கொண்டிருந்தனர். ஒரு சமயம் பவுலோடு அவர்கள் ஊருக்கு வெளியே சென்று முழங்காற்படியிட்டு ஜெபித்ததை நான் நினைவு கூருகிறேன். "நீங்களெல்லாரும் இனி என் முகத்தைப் பார்க்கமாட்டீர்களென்று அறிந்திருக்கிறேன்'' என்று பவுல் கூறினான்.

அவர்கள் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வருவார்கள் நமது இராஜவோடு அவரது விருந்தினராக விருந்துண்ண அவர்கள் தொலைதூர தேசங்களிலும் இருந்து வருவார்கள் இம்மோட்ச யாத்திரிகர் எத்தனை சிலாக்கியம் பெற்றோர் அவர்கள் அவரது பரிசுத்த முகத்தை (மரகதம் போன்ற நிறமுள்ள மகிமையை) நோக்கிக் கொண்டேயிருப்

பார்கள். அது தெய்வீக ஒளியினால் பிரகாசமாயிருக்கும் (வெறும் விளக்கொளியல்ல அல்லது குத்துவிளக்கு ஒளியுமல்ல- ஆனால்

யாவும் ஒன்று மற்றதாகத் தோன்றும்'' என்ற பாடலை எனக்காக பாட முன் வரவேண்டும் என்று நான் வாஞ்சிக்கிறேன்.

313. சுவிசேஷ காரியத்தை துவக்குவதற்காக நான் சபையை விட்டு புறப்பட்ட இரவில் நீங்கள் அழுது கதறியதை நான் நினைவுகூருகிறேன். இங்கே இருக்கிற உங்களில் சிலரைத் தவிர ஏனையோரெல்லாம் உலகைவிட்டு கடந்து சென்றவிட்டனர். சகோதரி, சகோதரன் ஸ்பென்சர், மற்றும் இன்னும் ஒரு சில பழைய காலத்தவர்கள் மட்டும் உயிரோடிருக்கிறீர்கள். அவர்கள் யாவரும் கதறி அழுதபொழுது, பரிசுத்த ஆவியானவரோ, “நீ போகத்தான் வேண்டும்'' என்று கூறினார்.

314. எனது முதல் கூட்டத்தை நான் நினைவுக்கு கூருகிறேன். சில மாதங்கள் கழித்து, கூட்டங்கள் நடந்து கொண்டு இருந்த ஜோன்ஸ்பரோ என்ற இடத்திற்கு அப்போது சிறிய குழந்தை யாயிருந்த பெக்கியையும் அழைத்துக்கொண்டு என் மனைவி மேடா, பழைய காட்டன் பெல்ட் ட்ரெயினில் வந்து சேர்ந்தாள். அங்கு அவர்கள் அவ்வண்டியில் வந்து சேர அநேக நாட்கள் பிடித்தன. அவள் வந்து சேர்ந்த அன்றிரவில் நான் வெளியே காத்திருந் தேன். நாங்கள் கூட்டம் நடந்த அந்த அரங்கத்திற்கு செல்ல மூன்று வட்டகைக்கு அப்பால் தள்ளி இருந்தோம். காவல் துறையினர், தெருக்களெல்லாம் மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தபடியால், கூட்டத்தை ஒழுங்கு செய்து, தெருக்களில் நின்றிருந்தார்கள். கூட்டம் நடந்த அரங்கத்திற்குச் செல்ல முடியாதபடி மக்கள் கூட்டம் தெருக்களில் நிரம்பி வழிந்தபடியால், அரங்கத்திற்கு சுற்றி வளைத்து எங்களை அழைத்துச் சென்றார்கள். மேடா என்னிடம், "பில்லி, உங்களுடைய பிரசங்கத்தைக் கேட்ட இவர்கள் எல்லாம் வந்திருக்கிறார்களா?'' என்றாள்.

315. அதற்கு நான், 'இல்லை'' என்றேன். பிறகு நாங்கள் பாடினோம்.

அவர்கள் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வருகின்றனர் தொலைதூரத்திலிருந்தும் அவர்கள் வந்தனர் நமது இராஜவோடு விருந்துண்ண, அவரது விருந்தினராய் எத்தனை சிலாக்கியம் பெற்றோர் இம்மோட்ச யாத்திரிகர் அவரது பரிசுத்த முகத்தை அவர்கள் தரிசிக்கின்றனர். அது தெய்வீக அன்பினால் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது அவரது கிருபையில் பங்கு பெற்றோர் பாக்யம் பெற்றோர், அவர்கள் அவர் தம் கிரீடத்தில் முத்துக்களாய் பிரகாசிப்பர் ஓ இயேசு சீக்கிரம் வரப்போகிறார் அப்போது நமது



ஆனால், இப்பொழுது கவனியுங்கள்: அவருடைய சீஷர்கள் யாவரும் அங்கே நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரையும் அவர் கேட்டார். "இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர் கள்?'' என்று. ஆனால் அவர் கூறினார்: “இங்கே நிற்கிறவர்களில் சிலர், மனுஷகுமாரன் தம்முடைய இராஜ்யத்தில் வருவதைக் காணுமுன் மரணத்தை ருசி பார்ப்பதில்லை.'' என்னே அறிக்கையிது! இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக அது கூறப்பட்டது அம், அப்படித்தான்.

133. தேவனுடைய வார்த்தையானது பிழையின்றி இருக்கிறதா? அவர் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் நிச்சயமாக நிறைவேறும்.

134. இப்பொழுது நாம் மத்தேயு 17ம் அதிகாரத்திற்கு திருப்ப விரும்பினால்..... இங்கே அடுத்த காட்சி. சில நாட்கள் கழித்து, அவர் பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோரை தனித்திருக்கும் படி உயர்ந்த மலையின் மேல் கூட்டிக் கொண்டு போனார், அவர்கள் சாட்சிகளாயிருக்கும்படி. பேதுரு யாக்கோபு, யோவான் ஆகியோர் தேவனுடைய இராஜ்யம் வல்லமையோடு வருகிறதைப் பார்த்தார் கள். தேவனுடைய இராஜ்யம் வருவதின் ஒத்திகையைப் பார்த்தார் கள். ஆமென்! ஓ, தேவனுடைய இராஜ்யமானது வருகிறதின் ஒத்திகையை காண்பதற்கு அது அவர்களுக்கு முன்பாக கொண்டு வரப்பட்டது. அவர்கள் ஒத்திகையைக் கண்டார்கள்.

135. சில காலத்திற்கு முன்பு, சில ஊழியக்காரரர்களை ஓரல் ராபர்ட்ஸு அதில் ஒருவர்... சிசில் பி.டி மில் பத்து கட்டளைகள் என்ற படத்தை தயாரித்தபொழுது, அவர் சகோதரன் ஷ்க்கேரி யனையும், சகோதரன் ராபர்ட்ஸையும், மற்றும் தேசத்தில் எங்கிலும் உள்ள பிரசங்கியார்களையும், இன்னும் வரவிரும்பும் எந்தப் பிரசங்கிகளையும், இன்னும் வரவிரும்பும் எந்தப் பிரசங்கியையும், திரைப்பட எடுப்பு அரங்குக்கு வந்து, அப்படம் பொதுமக்களுக்கு திரையிடப்படும் முன்னர், முன்கூட்டியே அதைப் பார்த்திட அழைத்தார். பொதுமக்களுக்கு திரையிடப்படும் பொழுது, ஒரு டிக்கெட்டுக்கு இருபத்தைந்து டாலர்கள் கட்டணம் வசூலித் தார்கள், அதற்கு முன்பாகவே இவர்களுக்கு முன் காணலாக திரையிடப்பட்டுக் காண்பிக்கப்பட்டது. 'அதன் ஒத்திகையை பாருங்கள்'' என்றார் அவர். ஏனெனில், ஏதாவது விமர்சிப்பதற் குரிய காரியங்கள் இருந்தால் அதைப் பற்றிய கருத்தை அவர்கள் முன்கூட்டியே தெரிவிப்பதற்காகவும், அல்லது அதைப்பற்றி என்ன கூறுவார்கள்

என்பதைப் பற்றி அறியவும் அவர் விரும்பினார். பொது மக்கள் பார்க்கும் முன்னர் இவர்கள் அதை முன் கூட்டியே கண்டனர்.

136. இயேசு கூறினார்: "இங்கே நிற்கிறவர்களில் சிலர் (ஆமென்!) தேவனுடைய இராஜ்யம் வல்லமையோடு வருவதைக் காணுமுன், அல்லது மனுஷகுமாரன் தமது இராஜ்யத்தில் வருவதைக் காணு முன், மரணத்தை ருசி பார்ப்பதில்லை'' என்று ''மனுஷகுமாரன் தமது இராஜ்யத்தில் வருவதைக் காணுமுன்'' என்பதை பாருங்கள். அதற்கு சில நாட்களுக்குப் பின்னர் அவர் பேதுரு, யாக்கோபு , யோவான் ஆகியோரை கூட்டிக் கொண்டு ஒரு உயர்ந்த மலையின் மேல் போய், அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார். அவர் அணிந் திருந்த வஸ்திரமானது மிகவும் பிரகாசித்தது, சூரியன் கூட அவ் வளவாய் பிரகாசிக்கவில்லை. ஒரு உவமையை நாம் எடுத்துக் கொண்டால், அதை வேதாகமம் முழுவதும் தொடர்ந்து பார்க்க முடியும் என்பதை எத்தனை தடவைகள் நாம் கண்டிருக்கிறோம்!

137. ஒரு குறிப்பிட்ட வேத வாக்கியத்தை நாம் எடுத்துக் கொண்டால், அதை வேதம் முழுவதோடு கட்டி இணைக்கலாம். ஆம் ஐயா. எங்கும் ஒரு கசிவு கூட இல்லை. அவையாவும் தேவனுடைய வல்லமையால் நிறைக்கப்பட்டதாக இருக்கின்றன. பிசாசானவனால் அவன் விரும்பினாலுங்கூட வேத வசனத்தினுள் எதையாவது அழுத்தி உள்ளே நுழைத்திவிட முடியாது. அப்படித்தான் அது இருக்கிறது. பரிசுத்தவான்கள் தங்கள் சாட்சியை உறுதிப்படுதியிருக்கிறார்கள். தேவனுடைய இராஜ்யத்தில் அவர்கள் விசுவாசங்கொண்டு, ஒவ்வொரு வேதவாக்கியத்தை எடுத்துக் கொண்டு அதை பரிசுத்த ஆவியின் வல்லமையால் பூசி, இரத்தத்தில் அதைக் கழுவி வைத்திருக்கிறார்கள்; அம் மக்களுக்குள் பிசாசா னவன் நுழைந்து விட முடியாது. அதற்குள் உலகம் நுழைந்து விட முடியாது. பிசாசானவனால் அதற்குள் நுழைந்துவிட முடியாது. அவர்கள் மரித்து, அவர்களது ஜீவனானது தேவனுடைய முத்திரை மூலமாக பரிசுத்த ஆவியினால் கிறிஸ்துவினுள் மறைந்திருக்கிற தாக இருக்கிறது. அப்படியிருக்க, பிசாசு அவர்களை எவ்வாறு தொல்லைப்படுத்த முடியும்? அவர்கள் அவ்வாறான நிலையில் இப்பொழுது இருக்கிறார்கள்.

138. இந்த இடத்தில், அப்பொழுது, அவன் வருகையைக் கண்டான், அல்லது அதன் ஒத்திகையைக் கண்டான். அவன் முதலில் எதைக் கண்டான்? வருகையில் முதலாவதாக அவன் கண்டது மோசேயாகும், மரித்த பரிசுத்தவான்களுக்கு எடுத்துக் காட்டாக அவன் இருக்கிறான். அங்கே எலியாவும் நின்று கொண்டிருக்கிறான்.



திரும்பி வருவார்கள். வயது சென்றவர்களாக அல்ல, என்றென்றும் இளவயதினராக, சாவாமை உள்ளவராக. அவருடைய சாயலைத்தரித்து நிற்போம். சூரிய சந்திர ரைக் காட்டி லும் மிஞ்சி நாம் பிரகாசித்துக் கொண்டிருப்போம்.

அவ்வழகான நகருக்கு போக நான் ஆயத்தமாயுள்ளேன் அதை எனதாண்டவர் தமக்குரியவர்க்காக ஆயத்தம்

செய்துள்ளார் அங்கே சதா காலங்களும் மீட்கப்பட்ட அனைவரும் வெள்ளை சிங்காசனத்தை சுற்றி நின்று மகிமை

எனப்பாடுவர் சில வேளைகளில் நான் பரலோக வீட்டை பற்றியும் காணப்போகும் மகிமையைப்பற்றியும் உள்ள நினைவால்

வாடுகிறேன், என் இரட்சகரை அப்பொன்னான நகரத்தில் நான் காணப்

போகையில் என்னே ஒரு மகிழ்ச்சியாக அது இருக்கும்

311. ஓ, நான் அவரைக் காண எவ்வளவாய் ஏங்குகிறேன் நான் அவரைக் காண விரும்புகிறேன். நான் அந்த அழகிய நகருக்குப் போக ஆயத்தமாயுள்ளேன். யோவான் அந்நகரத்தை பத்மூ தீவில் இருக்கும்போது கண்டான்; அவன் காண்கையில் அந்நகரம் தன் கணவனுக்காக அலங்கரிக்கப்பட்ட ஒரு மணவாட்டியைப்போல் இறங்கி வந்தது. அதன் மகிமையை ஒரு நாளில் நான் விரும்பு கிறேன்.

நான் அவரைக் கண்டு அவர் முகத்தை ஏறெடுத்துப் பார்க்க

விரும்புகிறேன். அங்கே அவரும் இரட்சிப்பின் காருண்யத்தைக் குறித்து

என்றென்றும் பாடுவேன் மகிமையின் தெருக்களில் என்னுடைய சத்தத்தை நான்

உயர்த்திப் பாடுவேன் கவலைகள் யாவும் ஒழிந்தது, இறுதியில் என்றென்றும்

மகிழ்ந்திருக்க வீடு வந்து சேர்ந்தேன்.

312. வழுக்குகிற, சறுக்குகிற நிலைமை இருக்கிறது, பகலின் வெப்பமும், பாடுகளும் நிறைந்து இருக்கிறது; என் மனைவியும் மேலும் பாதையின் முடிவுக்கு நான் வரும்போது, நடந்து வந்ததின் சிரமங்கள்

''நீதியைக் குறிக்கும். அவர்கள் அங்கி அணிந்திருந்தது எதைக் காட்டுகிறதென்றால், அவர்கள் ஆசாரியர்களும் நியாயாதி பதிகளுமாயிருக்கிறார்கள் என்பதைத் தான். வெண்ணங்கி அணிந் திருந்த ஆசாரியர்கள், நியாயதிபதிகள், தீர்க்கதரிசிகள் அவர்கள் யார் என்று கண்டு கொண்டீர்களா? வெண்ணங்கி அணிந்திருந்த இருபத்து நான்கு மூப்பர்கள் அவர்கள். அவர்கள் பன்னிரண்டு பேர்கள் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களுக்காகவும், பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் சபைக்காகவும் உள்ளார்கள்.

308. அவர்கள் மகத்தான் இராஜவின் சமூகத்தில் வீற்றிருக் கிறார்கள். அவர்கள் அங்கே வீற்றிருக்கிறார்கள். என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். இங்கே மணவாட்டியும் கிறிஸ்துவும் அவருடைய சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார்கள். அவருடைய மனைவியாகிய சபையானது அவரருகில் அமர்ந்திருக்கிறாள். இருப்பத்து நான்கு மூப்பர்களும்.... இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்களாகிய அண்ணகர்களும் தேவலாயத்தில் அவரை சேவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர் எழும்பும் பொழுது, அவருடைய மனைவியும் அவரோடு செல்கிறாள், ஓ, எதிர்வரும் அம்மகத்தான காலத்தில், பாவம் அனைத்தும் பாவத்தின் சாயல் யாவும் தொலைக் கப்பட்டிருக்கும் பொழுது....

309. இன்று மக்கள் மிகவும் போற்றி பேணிக்கொள்கிற பெரிய அருமையான கட்டிடங்களும், பணம் அனைத்தும், பாவமும், அழகுமான ஆண்களும், பெண்களும் அவர்கள் எப்படியெல்லாமோ தங்கள் சரீரத்தை அரங்கரித்துக் கொண்டாலும், அதின் மூலம் ஆத்துமாக்களை நரகத்திற்கு அனுப்புவதற்குரிய பிசாசின் கண்ணியாக அவர்கள் இருந்தாலும், எல்லாம் அழிந்து கெட்டுப் போகும் தோல் புழுக்கள் அவர்களை தின்றுபோடும். முதலாவதாக தோல் புழுக்கள்.... அவர்கள் யாவரும் எரிமலை நெருப்பினுள் போய், எரிமலை சாம்பலாக எரிந்து அழிந்து ஒன்றுமில்லாமற் போவார்கள்.

310. ஆனால் வரப்போகும் காலைகளில் ஒன்றில், நண்பரே, வரவிருக்கும் காலைகளில் ஒன்றில், எல்லாம் முடிந்த பிறகு, பூமியானது மீண்டும் செழிக்கும். வெளிகளில் பசும்புல் முளைத்து, ரோஜாவின் நற்கந்தம் ஜீவ விருட்சத்தின் பூத்துக் குலுங்குவதோடு இணைந்து மணம் வீசும், ஒரு காலையில் கிறிஸ்து திரும்பி வருவார். பெரிய பறவைகளும், புறாக்களும் மரங்களில் உட்கார்ந்து, கூவென்று அப்போழுது கத்தும், அதன்பிறகு இனிமேல் மரணமும் அலறுதலும் இருக்காது. கிறிஸ்துவும் அவரால் மீட்கப்பட்டவர் களும் பூமிக்குத்



139. ஓ, என்ன நடக்கவிருக்கிறது என்பதை நீங்கள் கவனிக்க வேண்டுமென நான் விரும்புகிறேன். முதலில் அங்கே மோசே இருக்கிறான்; அது தான் இந்த ஆறு காலங்களிலும் நித்திரை செய்தவர்களைக் குறிக்கும் ஆறு சபைக்காலங்கள். அது மாத்திரமல்ல, அங்கே எலியாவும் இருக்கிறான்; கடைசி நாளின் செய்தியாளன் - தூதன் தன்னுடைய குழுவினரோடு நிற்கிறான், அவர்கள் தான் எடுத்துக்கொள்ளப்படபோகும், மருரூபமாகும் குழுவினர். ஆமென்! எதிர்வரும் வருகையை எதிர்நோக்கிக் காத்திருக்கிற வர்கள் அவர்கள்.

140. அவரோடு எல்லோரும் அம்மலையின் மேல் கூடி வரவில்லை. ஓ, என்னே ! அது என்னவாயிருந்தது? பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோருக்கு அவர் அளித்த வாக்குத்தத்தம் நிறை வேற்றப்பட்டது. ஏனெனில் அவர், இங்கே நிற்கிறவர்களில் சிலர் மனுஷகுமாரன் தமது இராஜ்யத்தில் வருவதைக் காணுமுன் மரணத்தை ருசி பார்ப்பதில்லை'' என்று கூறியிருந்தார். அவர்கள் அதனுடைய முன்காட்சியை - ஒத்திகையைக் கண்டார்கள். இதற்குப் பிறகு, உயிர்த்தெழுதலுக்குப் பிறகு...

141. இன்னொரு காரியத்தையும் நான் உங்களுக்கு முன்பாக கொண்டு வர விரும்புகிறேன். இயேசு மரித்து அடக்கம் பண்ணப் பட்ட பிறகு - யோவான் 21:20. தவறாக அர்த்தம் கொண்டோர், இவ்வுபதேசத்தை அந்நாட்களில் ஆரம்பித்தார்கள் நாம் மற்ற விஷயங்களைப் பார்த்துக் கொண்டிருக்கையில், இதைக் குறித்த விஷயத்தையும் நாம் தெளிவுபடுத்தி விடுவோம். யோவான். 20:21-ல் இயேசு தன் சீஷர்களை சந்தித்தார். அவர்களுக்கு நெருப் புத்தழலில் சுடப்பட்ட மீனையும் அப்பத்தையும் கொண்டு உணவளிக்கிறார்; அவர்கள் கரைக்குச் செல்லுகையில், யோவான் அவரது மார்பில் சாய்ந்து கொண்டிருந்தான். அப்பொழுது "இவனுக்கு என்ன சம்பவிக்கும்?'' என்று பேதுரு கேட்கிறான். இயேசு யோவானை நேசித்தார். யோவான் மிகவும் அன்புள்ள ஒரு மனிதன். "இவனைப் பற்றி என்ன? அவனுடைய நிலைமை என்ன வாகும்? அவனது எதிர் காலம் என்ன?'' என்று கேட்டான்.

142. இயேசு அவர்களிடம், "நான் வருமளவும் இவனிருக்க எனக் குச் சித்தமானால், உனக்கென்ன?'' என்று கேட்டார்.

143. சீஷர்கள் ஒரு தவறைச் செய்தார்கள். அவர் வருமளவும் அவன் உயிரோடு வாழப்போகிறான் என்று இயேசு கூறினதாக அவர்கள் கூறினார்கள்.

144. ஆனால் இயேசு எந்தத் தவறையும் செய்யவில்லை. வெளிப் படுத்தின விசேஷம் 4ம் அதிகாரத்தில் கிறிஸ்து தமது வார்த்தை யைக் காத்துக்கொண்டார். அவர் யோவானை பரலோகத்திற்குச் கொண்டு வந்து, அவனுக்கு அனைத்தையும் முன் காணலாக காண்பித்தார். மகிமை! அவன்; தானே வரப் போகிற காட்சிகளின் முன் காட்சியைக் கண்டான். அவன் தானே முழு சபைக்காலங்கள் நெடுகிலும் பூமியில் ஜீவிக்கிறவன் போல் இருந்து, அவை சம்ப விக்கிறதையெல்லாம், கர்த்தருடைய வருகையையும், வெளிப்படுத்தின விசேஷ புஸ்தகம் முழுவதின் சம்பவங்களையும் முன் கூட்டியே பார்த்தான்.

145. அவருடைய வாக்குத்தத்தம் எவ்வளவு பிழையற்றதாய் இருக்கிறது என்பதைப் பாருங்கள். யோவானைத் தவிர, யாக்கோபோ, ஏன் பவுலுங்கூட, இன்னும் மீதியுள்ளவர்கள் எவரும் அவைகளைக் காணவும், கூறவும் அனுமதிக்கப்படவில்லை.

"நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்ன?'' என்று அவர் கேட்டார்.

146. அவர்கள் அதைச் சொன்னபடியினால், அவர் யோவானைத் தெரிந்துகொண்டு, அவனை உயரே எடுத்து, அவன் மரிப்பதற்கு முன்னதாக, எதிர்காலத்தில் சம்பவிக்கப் போகிறவைகளை அவனுக்கு காண்பித்தார். எதோ அக்காலங்களில் அவன் வாழ்ந்தது போல் அவைகளைக் கண்டான். அது என்னவாயிருக்கும் என்பதை அவனுக்குக் காண்பித்தார். சகோதரன் பேட் அவர்களே, அது அற்புதமானதாக இல்லையா? ஓ, பாருங்கள் அவனை உயரே தூக்கி யெடுத்தார். வெளி.. 4:2 அதை நிரூபிக்கிறது. அவனுக்கு நடந்த வைகளையும், நடப்பவைகளையும், நடக்கவிருப்பவைகளையும் காண்பித்தார். அவர் அவனுக்கு சபைக்காலங்களையும், யூதர் களுடைய வருகையையும், வாதைகள் ஊற்றுதலையும், எடுத்துக் கொள்ளப்படுதலையும், மீண்டும் உள்ள வருகையையும், ஆயிர வருட அரசாட்சியையும், அவரது இரட்சிக்கப்பட்டவர்களின் நித்திய வீட்டையும் காண்பித்தார். அவைகள் சம்பவிக்கிற காலத்தில் அவன் வாழ்ந்தது போல் இருந்தது அவைகள் சம்பவிக்க கண்டான். அவனை உயர தூக்கியெடுத்து, அவர் எடுத்திருக்கிற படக்காட்சியை அவனுக்கு முன் கூட்டியே முன் காணலாக - ஒத்திகையை காண்பித்தார். ஓ, என்னே!

147. வெளிப்படுத்தின விசேஷம்4:2 அவன் எடுத்துக் கொள்ளப் பட்டான். அதில் அவரது வாக்குத்தத்தம் நிறைவேறியது. யோவான் தனது



மலையின் மேல் கண்டதைப் போலவே. அதே காரியத்தை யோவனும் கூறினான். கண்டான். அதைத்தான் பவுலும் கண்டான்.

304. பன்னிரண்டு அஸ்திபாரங்களிலும் அப்போஸ்தலர்களின் நாமங்கள் எழுதப்பட்டிருந்தன என்றும், பன்னிரண்டு வாசல்களிலும் ஒவ்வொரு வாசலிலும் ஒவ்வொரு கோத்திரத்தின் பெயரானது எழுதப்பட்டிருந்தது என்றும் காண்கிறோம். எவ்வாறு நாம் அதைக் காண்கிறோம். அங்கே நாம் பண்ணிரண்டு மூப்பர்கள், பன்னிரண்டு கோத்திரங்கள், பன்னிரண்டு அப்போஸ்தலர்கள், பன்னிரண்டு அஸ்திபாரங்கள், பன்னிரண்டு வாசல்கள் என்பதாகப் பார்க்கிறோம். ஓ, என்னே! ஒவ்வொரு காலத்திலும், ஒவ்வொரு இடத்திலும் தேவனுடைய எண்கள் பிழையின்றி சரியாக ஓடிக் கொண்டேயிருக்கும். நீங்கள் அதைக் காணாமல் இருக்க முடியாது.

305. அக்காரணத்தினால் தான், நமக்கு அந்த ஆறு நாட்கள் உள்ளன. இந்த ஆறு நாட்களில் உலகமானது கிரியை செய்தது, நாம் இப்பொழுது ஏழவது நாளுக்கு சமீபமாயிருக்கிறோம். முதல் இரண்டாயிரவமாவது ஆண்டில் தேவன் உலகை தண்ணீரினால் அழித்தார். இரண்டாவதாக இரண்டாயிரமாவது ஆண்டில் கிறிஸ்து வந்தார். இந்த ஆண்டு 1961 ஆகும். நாம் வாசலண்டையில் வந்திருக்கிறோம். இன்னும் சிறிது காலம் தான் உள்ளது. இது இன்னும் ரொம்ப காலத்திற்கு போய்கொண்டே யிருக்காது. ஏனெனில் நான் என்னுடைய கிரியையை சீக்கிர மாகவே முடிப்பேன். அவ்வாறு நான் செய்யாவிடில், சகல மாம்சமும் அணுகுண்டினால் அழிக்கப்பட்டுவிடும். தெரிந்து கொள்ளப் பட்டவர்கள் நிமித்தமாக, என் நீதியின் கிரியையை சீக்கிரமாகவே முடிப்பேன். உரிய வேளைக்கு முன்னதாக முடிப் பேன்'' என்று கூறுகிறார். அதன்பிறகு மகத்தான நாளாகிய ஆயிரமாண்டு அரசாட்சி நடக்கும்.

306. சபையானது ஆறாயிரம் ஆண்டுகள் பாவத்திற்கெதிராக பாடுபட்டது. அதன்பிறகு ஏழாயிரமாண்டிலிருந்து ஆயிர வருட ஆரசாட்சி நடைபெறும். தேவன் இவ்வுலகை உண்டாக்க ஆறாயிரம் ஆண்டுகள் எடுத்துக் கொண்டார்; அதன்பிறகு ஏழாயிரமாவது ஆண்டில் அவர் தன் கிரியைகளை விட்டு ஓய்ந்திருந்தார். சபை யானது ஆறாயிரம் ஆண்டுகள் பாவத்திற்கெதிராக பாடுபட்டு, பின்பு ஏழாயிரமாவது ஆண்டில் இளைப்பாறுகிறது.

307. மூப்பர்கள் அணிந்திருந்த வெண்ணங்கிகள் எதைக் குறிக்கிற தென்றால், பரிசுத்தவான்களுடைய நீதியைத்தான். வெண்மை என்பது

அவரது கிறிஸ்துவுக்குமுரிய இராஜ்யங்களாக ஆயின, அவர் அவர்கள் மேல் அதிகாரம் செலுத்தி ஆளுகை செய்வார். அப்படித் தான் நடக்கப்போகிறது!

300. அவர் வல்லமையோடு வரப்போகிறார் என்பதை நாம் அறி வோம். எனவே அவருடைய மிகச் சிறிய விருப்பமும் கூட அவருடைய கட்டளையாகவே நமக்கு இருக்கிறது. ''ஐம்பது காசுகளுக்கு கூட வழியில்லாத, ஒன்றுக்கும் வழியில்லாத, தரித்திரரான ஒரு கூட்டம் மக்கள் நிறைந்த ஒரு சிறிய எளிய, டிம்பக்டூ போன்ற ஊருக்கு அவர் என்னை தன்னுடைய பிரதிநிதியாக இருக்கும்படி விரும்புகிறாரெனில், அதுவே அவருடைய விருப்பம் ஆகும்.'' ஆமென்!

301. "நீங்கள் எனக்கு இவ்வளவு பணம் கொடுக்கத் தேவையில்லை, நீங்கள் இன்னின்னதை எனக்கு செய்ய தேவையில்லை, அவர் நான் எங்கு போக வேண்டுமென்று விரும்புகிறாரோ அதை, தெரிவித்தால் போதுமானது.'' ஆமென். அதுவே போதும்.

302. "நான் வேறுபட்ட விதமாக செயல்பட வேண்டுமென்று அவர் விரும்பினால், இந்த சகோதரிகளைப் போல் வேறுபட்ட விதமாக நடக்க வேண்டுமென்று அவர் விரும்பினால், ஒரு குறிப்பிட்ட காரியத்தை நான் செய்ய வேண்டுமென அவர் விரும்பினால், தேவனுக்கு ஸ்தோத்திரம், அதைச் செய்வது எனக்கு சிலாக்கிய மாயிருக்கிறது.'' அதுதான் சரி. உலகம் என்ன வேண்டுமானாலும் சொல்லிகொள்ளட்டும், அதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை; அவர் வல்லமையோடு வருகிறார் என்பதை நாம் அறிவோம். "பாரமான யாவற்றையும் நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, எனக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிற பந்தய ஓட்டத்தில் நான் பொறுமையோடே ஓடக்கடவன். அதிகாரத்தோடு வருகிற, விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசு கிறிஸ்துவை நான் நோக்கிப் பார்க்கட்டும்.''

303. அம் மூப்பர்கள் இருபத்து நான்கு முப்பர்கள் வெளிப் படுத்தின விசேஷத்தை நாம் திருப்பினால் அங்கே இதைக் காண்கிறோம். வெளிப்படுத்தின விசேஷம் 21ம் அதிகாரத்தில் எருசலேம் நகருக்கு பன்னிரண்டு அஸ்திபாரங்கள் இருந்தன. அப்படித் தானே? பக்கத்திற்கு மூன்று வீதம் நான்கு பக்களிலும் மொத்தம் பன்னிரண்டு வாசல்கள் இருந்தன. வனாந்திரத்தில் வைக்கப் பட்டிருந்த ஆசரிப்புக் கூடாரத்தைப் போலவே சரியாக அப்படியே அது இருக்கிறது. மோசே



மரணத்திற்கு முன்பாகவே, மேலே எடுத்துக் கொள்ளப்பட்டு, இனி சம்பவிக்கப்போகிறவைகளை, அவைகள் நிகழப்போகும் காலத்தில் அவனும் உயிரோடிருந்து ஜீவித்துக் கண்டது போல் அவைகள் நிகழக் கண்டான். இவ்விதமாக யோவான் என்ன நடக்கவிருக் குமோ, பூமியில் அக்கால முதல் கர்த்தராகிய இயேசுவின் வருகை பரியந்தம் அப்படியே என்ன நடந்ததோ, நடக்கவிருக்குமோ அவைகளை ஒரு தரிசனத்தில் கண்டான். ஒரு தரிசனத்தில் அதை அவனுக்குக் காண்பித்தார்.

148. எனவே, பிறகு அவருடைய சீஷர்களோ, வேறு எவருமோ, அவர் அக்காலத்தில் வருவார் என்று கூறவில்லை. ''நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்ன?'' என்று கேட்டார். பிறகு அவனை அவர் மேலே எடுத்துக் கொண்டு, சம்பவிக்கப் போகிறவைகளை முன்கூட்டியே ஒத்திகையாக நிகழ்த்திக் காண்பித்தார். ஓ, நான் அதை நேசிக்கிறேன். ஓ, என்னே!

இப்பொழுது இது என்ன என்பதை நாம் பார்க்கலாம்.

''உடனே ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது, இதோ, வானத்திலே ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது. அந்தச் சிங்காசனத்தின் மேல் ஒருவர் வீற்றிருந்தார்..''

வெளி.4:2

149. ஒரு 'சத்தம்' அவனை அழைத்தது. ஓ, அந்தச் சத்தம் அவனுக்குப் பின்னாக இருந்த அந்த சத்தம்- அதை விட்டு என்னால் அகலவே முடியாது. அவன் நோக்கிப் பார்த்தான், அவனுக்கு சபைக்காலங்கள் யாவையும் காண்பித்தார். அவன் ஏழு பொன் குத்து விளக்குகளாகிய சபைக்காலங்களில் நின்று கொண்டிருந் தான், பிறகு அவன், சபைக்காலங்கள் முடிந்த பிறகு, அந்த சத்தத்தைக் கேட்டான். அந்த சத்தம் பூமியைவிட்டு மேலே ஏறிப் போய்விட்டது. அவர் மகிமைக்குள் பிரவேசித்த பிறகு, இங்கே ஏறிவா'' என்று அங்கிருந்து அவர் அவனைக் கூப்பிட்டதைக் கேட்டான். 'இவைகளுக்குப் பின்பு பின்பு சம்பவிக்க வேண்டி யவைகளை உனக்குக் காண்பிப்பேன்'' என்று கூறினார்.

150. அந்த சத்தம் இன்றிரவு நாம் அந்த சத்தத்தைப் பற்றி பேசுவோமாக. சில வேதவாக்கியங்களை நான் இங்கே எழுதி வைத்திருக்கிறேன். நாம் 1 தெசலோனிக்கேயர் 4ம் அதிகாரத்திற்கு போவோம். இந்த சத்தம் என்ன கூறப்போகிறது என்பதை கவனிப் போம். அதை படிக்கும் முன்னரே அது என்ன கூறப்போகிறது என்பதை நாம் யாவரும்

அறிந்திருக்கிறோம் அல்லவா? என்ன சம்பவிக்கப்போகிறது என்பதை நாம் அறிவோம். "தேவ எக்காளம் தொனிக்கும், அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர் கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.'' அப்படித்தானே? 1 தெசலோனிக்கேயர் 4:16-17 ஆகிய வசனங்களைப் படிப்போம். "அந்த சத்தம், அந்த சத்தம் கிறிஸ்துவின் சத்தம் ஆகும். அது சரிதானே. அது கிறிஸ்துவின் சத்தம்.

'...தேவ எக்காளத்தோடும்.... (தொனிக்கும்) அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக,... அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப் பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்.”

1 தெச. 4:16-17

151. யோவானை மேலே ஏறிவரும்படி அழைத்த அதே சத்தம் தான், ஒரு நாளில் சபையையும் அழைத்திடும். ஆமென். சபையை அழைத்திடும்.

152. மேலே ஏறிவரும்படி யோவானை அழைத்த அதே சத்தம் தான் பரிசுத்த லாசருவையும் கல்லறையைவிட்டு எழுந்து வரும்படி அழைத்தது. அது தான் பிரதான தூதனுடைய சத்தமாம். கிறிஸ்துவே பிரதான தூதனுடைய சத்தம் ஆவார். 'பிரதான தூதனுடைய சத்தம்” பாருங்கள். ஓ, கிறிஸ்துவின் எக்காள சத்தம் யோவானை மேலே ஏறிவரும்படி அழைத்தது. அதே சத்தம்தான் லாசருவையும் அழைத்தது. லாசருவின் கல்லறையில் கவனித் தீர்களா? அவர் உரத்த சத்தத்தோடு பேசினார். "லாசருவே.. வெளியே... வா'' என்று மெதுவாக பேசவில்லை. அவர் ''லாசருவே, வெளியே வா'' என்று அதிகாரத்தோடு சத்தமிட்டு அழைத்தார். மரித்தோரிலிருந்து எழுந்து வரும்படி அவனை ஆணையிட்டு அழைத்தது அந்த சத்தம். 15. "நான் இங்கே இருக்கிறேன்'' என்று அவன் பதிலுரைத் தான். அவன் செத்து, அவன் சரீரம் நாறிப்போன பிறகு, மரித்தோரி லிருந்து எழுந்து வந்தான். 15. அதே சத்தம் தான் யோவானிடம், "இங்கே ஏறிவா'' என்று அழைத்தது. "இவைகளுக்குப் பின்பு சம்பவிக்க வேண்டியவை களை உனக்குக் காண்பிப்பேன்'' என்று விளம்பினது. 15. கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் உயிரோடு எழும்பும் பொழுது, அதற்காக, அதே சத்தம்தான் தொனிக்கப்போகிறது.

'ஏனெனில் எக்காளம்....' எக்காளம்! எக்காளம் எதைக் குறிக்கிறது? அது கிறிஸ்துவின் சத்தமாகும். அவர் திரும்பி அவனை மேலே ஏறி வரும்படி உத்தரவிட்டு அழைத்தார். அவன் அந்த சத்தத்தை எக்காளம் போல்



முயல்பவன்'' என்று எண்ணினர். ஆனால் அவன்தான் அரசனாகப் போகிறவன் என்று சிலர் அறிந்திருந்தனர். அவர்களெல்லாம் அவனோடு நிலைத்திருந்தனர். தாவீதை விட்டு அவர்களையெல்லாம் உங்களால் பிரிக்கவே முடியாது. சகோதரனே, அந்த அளவுக்கு அவனோடு நடந்தார்கள்.

297. ஒரு நாள், அவன் அங்கே அம்மலையின் மேல் நின்று கொண்டு, கீழே உள்ள அவனுக்குப் பிரியமான, அவனது சொந்த, அச்சிறிய பட்டணமானது பகைஞரால் முற்றுகையிடப்பட்டிருப் பதைக் கண்ணோக்கினான். அவன் சிறுவனாய் இருந்தபோது அங்கே ஆடுகளை மேய்த்து நடத்திச் சென்று, அங்கேயிருந்த கிணற்றின் அருமையான தண்ணீரைக் குடிப்பதை வழக்கமாகக் கொண்டிருந் ததைப் பற்றியெல்லாம் நினைவு கூர்ந்தான். நாம் சமீபத்தில் தான் ஜீவதண்ணீர்கள் என்ற தலைப்பில் அதைப் பற்றிப் பிரசங்கித்தோம். "நான் அத்தண்ணீரைக் குடித்ததை எண்ணிப் பார்க்கிறேன்'' என்று கூறினான்.

298. அவனுக்கு இருந்த மிகச்சிறிய விருப்பமும் கூட, அவனுடன் இருந்த ஆட்களுக்கு கட்டளையாக இருந்தது. சகோதரரே, அவனிடம் இருந்த அம்மனிதர்களில் இருவர் தங்களது கரங்களில் பட்டங்களைப் பிடித்துக் கொண்டு, பெலிஸ்தரின் பாளயத்திற்குள், பதினைந்து மைல்கள் தூரம் அவர்களை வலப்பக்கமும் இடப்பக்க முமாக, வெட்டிக்கொண்டே சென்று, அக்கிணற்றின் தண்ணீரை தாவீதுக்காக கொண்டு வந்தார்கள். தாவீது அதிகாரத்திற்கு வரப் போகிறான் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். ஆம் ஐயா. இன்னொரு சமயம் அவர்களில் ஒருவன், அவனைக் காப்பாற்றுவதற்காக, ஒரு பள்ளத்தில் குதித்து, அங்கிருந்த ஒரு சிங்கத்தை ஒற்றைக் கையாலேயே கொன்று போட்டான். அவர்கள் போர் வீரர்களாக இருந்தார்கள். தாவீது அதிகாரத்திற்கு வந்தபொழுது என்ன செய்தான் என்பதை நீங்கள் அறிவீர்களா? அவன் தன்னோடிருந்த அவர்கள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு குறிப்பிட்ட நகரத்தின் மேலும் அதிபதியாக ஆக்கினான்.

299. அங்கே கிறிஸ்துவை காண்கிறீர்களா? "ஜெயங்கொள்ளுகிற வன் எவனோ, அவன் ஒரு நகரத்தின் மேல் ஆளுகை செய்வான்.'' ஜெயங்கொள்ளுகிறவர்கள்! இன்று நாம் அதிகாரத்தோடு அவர் வருவார் என்பதைக் காண்கையில், கிறிஸ்துவனாவர் இவ்வுலகில் ஆளுகை செய்வார். ஜெர்மனி, அமெரிக்கா ஆகிய அனைத்து நாடுகளும் வீழ்ச்சியடையும் ஒவ்வொரு தேசமும் வீழ்ச்சியடைய வேண்டும். இவ்வுலகின் இராஜ்யங்கள், நம்முடைய தேவனுக் கும்

மேயர், இந்நகரத்தின் தலைவனாக இருக்கிறார். நகரங்களின் தலைவன். வேதாகம நாட்களில் நகரத்தின் மூப்பர்களைப் பற்றி உங்களுக்கு ஞாபகமிருக்கும். ஆகவே மூப்பர் என்றால், 'நகரத்தின் தலைவன்'' அல்லது 'ஒரு கோத்திரத்தின் தலைவன்'' என்று பொருளாகும்.

293. அம்மூப்பர்கள் எத்தனை பேர்கள் அங்கே வீற்றிருந்தார்கள்? அவர்கள் இருபத்து நான்கு பேர்கள் இருந்தார்கள். அது சரிதானே? ஓ, என்னே! அவர்கள் யார்? அவர்கள் பன்னிரண்டு அப்போஸ்தலர்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரப் பிதாக்களும் ஆவர். நாம் இதைக் தொடர்ந்து ஆராய்ந்து, மற்ற பாடங்களையும் பார்க்கிற வரையிலும் இருந்து, அங்கே அது சரிதான் என்பதை நிரூபிக்கப் போகிறோம். நீங்கள் இப்பொழுது இவற்றையெல்லாம் எழுதிக் கொண்டிருக்கிறதைக் குறித்து நான் மகிழ்ச்சி யடைகிறேன். பன்னிரண்டு கோத்திரப்பிதாக்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களும். இப்பொழுது கவனியுங்கள். இயேசு அதைக்குறித்து கூறினார்.

294. ஒரு நாள் பேதுரு, ''நாங்கள் தகப்பனையும், தாயையும், கணவனையும், மனைவியையும், பிள்ளைகளையும் மற்றும் யாவற்றையும் விட்டுவிட்டு உம்மைப் பின்பற்றினோமே, எங்களுக்கு என்ன கிடைக்கும்?'' என்று கேட்டான். ''உம்மைப் பின்பற்றுவதற்காக நாங்கள் எங்கள் மனைவியையும், எங்கள் பிள்ளைகளையும், எங்கள் தகப்பனையையும், தாயையும், எங்கள் வீடுகளையும் நிலங்களையும் கூட விட்டு வந்தோமே'' என்றான்.

295. அதற்கு அவர் "இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங் களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின் மேல் வீற்றிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்று கூறினார். பார்த்தீர்களா? அவர்கள்தான் மீட்கப்பட்ட மூப்பர்கள்.

296. கிறிஸ்துவுக்கு முன் அடையாளமாகத் திகழ்ந்த தாவீதைப் பாருங்கள். தாவீது அதிகாரத்திற்கு வருவதற்கு முன்னர் அவனுக்கு மிகவும் மோசமான வேளை உண்டாயிருந்தது. அவன் அதிகாரத்திற்கு வரும்பொழுது, செய்த முதல் காரியம் என்னவெனில்; அவன் அதிகாரத்திற்கு வருவதற்கு முன்னர் அவன் மேல் அபிஷே கமானது இன்னமும் இருந்து கொண்டிருந்தது. அவன் மேல் அபிஷேகமானது இருந்து கொண்டுதான் இருந்தது. அநேகர் அவனைப் பற்றி, 'அவன் ஒரு துரோகி, வித்தியாசமான ஒரு சின்ன ஆள், அமைதியைக் குலைக்க



தொனிக்கக் கேட்டான். "இங்கே ஏறிவா'' என்றார். உயிர்த்தெழுதல் எவ்வாறு இருக்கும் என்பதைப் பாருங்கள். அது ஒரு க்ஷணத்தில், ஒரு இமைப்பொழுதில் நடக் கும். தெளிவாகத் தொனிக்கும் அந்த சத்தமானது, அவர் தாமே சபையை வரும்படி அழைத்திடுவார். ஏனெனில் அவர் அதை விட்டு வெளியே வந்துவிட்டார். அந்த மகத்தான ஆணையிட்டு அழைக்கும் சத்தம்! தேவனே, நான் அந்நாளில் அந்த சத்தத்தைக் கேட்டிட எனக்கு உதவி செய்திடும்.

156. நான் அடிக்கடி கூறுகிறபடி... சாவுக்கேதுவானவன் என்ற முறையில் நான் அறிவேன்.. ராட்னி அவர்களே... எனக்கு முன்பாக ஒரு பெரிய இருளான வாசலானது வைக்கப்பட்டிருக்கிறது என்று அறிவேன். அது மரணம் என்று அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு தடவை என் இருதயம் துடிக்கும் போதும் அவ்வாசலுக்கு ஒரு இதயத்துடிப்பு சமீபமாக செல்கிறேன். இந்நாட்களில் ஒன்றில் நான் அதற்குள் போகத்தான் வேண்டும். ஆனால் நான் ஒரு கோழையைப் போல் அலறிக்கொண்டும் கதறிக்கொண்டும் போக விரும்பவில்லை. அங்கே நான், அவருடைய நீதியின் வஸ்திரத்தைத் தரித்துக் கொண்டு, அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையின் படியே நான் அவரை அறிந்தவண்ணமாய், பிரவேசிக்க விரும்பு கிறேன். ஒருநாளில் அவர் அழைக்கும் பொழுது, நான் மரித்தோரி லிருந்து எழுந்து வருவேன். உன்னதத்தில் ஆஜராகும்படி அவர் என்னை உத்தரவிட்டு அழைக்கையில், தேவ எக்காளம் அப்பொழுது தொனித்திடும், அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்த வர்கள் உயிரோடு எழுந்திருப்பார்கள். நான் உயிரோடு இருப்பே னெனில், ஒரு க்ஷணத்தில் ஒரு இமைப்பொழுதில் மறுரூபமா வேன். அவ்விதமாய் ஆகாயத்தில் கர்த்தரை சந்திக்கும்படி மீதியாயிருக்கிறவர்களோடே ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படு வேன். தேவ எக்காளம் தெளிவாக உரத்து தொனிக்கும். அவரு டைய வருகையிலும் அதே சத்தம்தான் தொனிக்கும். அதே சத்தம்தான்.

157. அது விளங்காத சத்தம் அல்ல. "இங்கே ஏறிவா'' என்று யோவானை அந்த சத்தம் அழைத்தபோது, யோவானுக்கு அது விளங்காத சத்தமாக இருக்கவில்லை. அவன் மேலே ஏறிப் போனான், ஆமென்.

158. லாசரு மரித்தோரிலிருந்தபோது, கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டிருந்தபோது, அவனது ஆத்துமா நான்கு நாட்கள் பயணமாக எங்கோ போயிருந்தது; அது எங்கே இருந்தது என்பது எனக்குத் தெரியாது, நம்மில் எவருக்கும் அது தெரியும். என்று நான் கருதவில்லை. அது எங்கிருந்த போதிலும், அது ஒரு துளி

வித்தியாசத்தையும் ஏற்படுத்தி விடுவதில்லை. மரித்து, சரீரத்தின் தோலெல்லாம் தோல் புழுக்களால் அரிக்கப்பட்டு, அழுகி நாறிக் கொண்டிருக்கிற ஒரு மனிதனை, அவர் சத்தமிட்டு ஒரு அழைப்பு விடுத்தார். அந்த தெளிவான எக்காள சத்தமானது, "லாசருவே, வெளியே வா' என்று அழைத்தது. அங்கே ஒரு மனிதன், மரித்து நாறிக்கொண்டிருந்தவன், தன்னை உதறிக் கொண்டு, கல்லறையை விட்டு வெளியே நடந்து வந்தான். அந்த சத்தத்தைப் பற்றி எந்தவித நிச்சயமற்ற, தெளிவற்ற தன்மை கிடையாது, அப்படி ஏதும் உண்டா , சகோதரனே? அங்கே எந்தவித நிச்சயமற்ற விளங்காத தன்மை ஏதும் இல்லை.

159. தெளிவாக தொனித்துக் கொண்டிருக்கிற சத்தமானது, 'பாவியே , மனந்திரும்பு , நான் உனக்கு நித்திய ஜீவனைத் தரு வேன்'' என்று கூறுகையில், இன்றிரவிலும் அதேவிதமாகத்தான் அது இருக்கிறது. "நீங்கள் ஒவ்வொருவரும் மனந்திரும்பி பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ் நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்''. அது தான் ஆணையோடு அழைக்கிறதாயிருக்கிறது. அதைப்பற்றி எந்தவித விளங்காத தன்மையும் இல்லை.

160. அது உண்மையாயிருக்கிறது என்பதற்கு நான் ஒரு சாட்சி யாய் இருக்கிறேன். அது உண்மையாயிருக்கிறது என்று கூறும் ஒரு சாட்சியாக, உலகெங்கிலும் பல இலட்சணக்கணக்கில் வேறு சாட்சிகளும் இருக்கின்றனர். வேதமாகிய தேவனுடைய வார்த் தைகள் வருகிறபொழுது, ஒவ்வொரு தேவனுடைய வார்த்தையும் ஒரு எக்காளமாயிருக்கிறது, வார்த்தையின் ஒவ்வொரு தொனிப்பும் ஒரு எக்காளமாயிருக்கிறது. அது சுவிசேஷ எக்காளமாயிருக்கிறது. அது முழங்குகையில், அது சத்தியமாயிருக்கிறது. வார்த்தையானது "இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்'' என்று கூறும் பொழுது, அதைப்பற்றி விளங்காத தன்மை ஏதும் இல்லை . அவர் மாறாதவர். ஆம், ஐயா.

161. "மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ் நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.'' அதைப்பற்றி விளங்காத தன்மை ஏதும் இல்லை .

162. “என்னுடைய வார்த்தைகளைக் கேட்டு, என்னை அனுப்பின வரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். உயிரோடிருந்து என்னை



கலியாக இருந்தன. அவன் சிங்காசனங்கள் வைக்கப்பட்டதையும், நீண்ட ஆயுசுள்ளவர் பரலோகத்திலிருந்து இறங்கி வருவதையும் கண்டான். ஆனால் யோவான் அக்காட்சியைக் கண்டபோது சிங்காசனத்தில் ஏற்கனவே இயேசுவானவர் அமர்ந்துவிட்டார்; சீஷர்கள், கோத்திரப்பிதாக்கள், ஆகியோராகிய மீட்கப்பட்டவர்களுக்கான சிங்காசனங்களில் ஏற்கனவே அவர்கள் அமர்ந்து விட்டார்கள். பார்த்தீர்களா? கிறிஸ்துவின் காலத்திற்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தானியேல் அக்காட்சியைக் கண்டான். பிறகு, கிறிஸ்துவுக்குப் பிறகு, 25 நூற்றாண்டுகள் கடந்துவிட்ட, வரப்போகிற அந்தக் காலத்திற்குள் யோவான் வாழ்ந்து இவை யெல்லாம் சம்பவிப்பதைக் காண்கிறான். ஆனால் தானியேலோ அதைக் காணவில்லை. அவன் நீண்ட ஆயுசுள்ளவர் வருவதை மட்டுமே காண்கிறான். அவர் வருவதை அவன் காண்கிறான். ஆனால் யோவான் அவரைக் கண்டபோது, சிங்காசனத்தில் அவர் வீற்றிருந்தார், நீண்ட ஆயுசுள்ளவரோடு, சிங்காசனங்கள் வைக்கப் பட்டதை அவன் கண்டான்; நியாயா சங்கமானது உட்கார்ந் திருந்தது. ஆனால் யோவான் அவரைக் கண்டபோது, மூப்பர்கள் இன்னும் யோவானின் காலத்தில் தெரிந்து கொள்ளப்பட வேயில்லை. அல்லது தானியேலின் காலத்தில் தெரிந்து கொள்ளப் படவேயில்லை. ஆனால் அவர்கள் ஏற்கெனவே கடைசி காலத்தில் மீட்கப்பட்டுவிட்டார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் ஓ, ஓ அவர் அற்புதமானவராக இருக்கவில்லையா?

291. எனவே தானியேல் 7ம் அதிகாரம் .... அங்கே தானியேல் என்ன செய்கிறான்? அவன் நியாயத்தீர்ப்பை முன்கூட்டியே காண்கிறான். சிங்காசனங்கள் காலியாக இருக்கக் காண்கிறான். அவைகள் காலியாக இருக்கவேண்டுமென்று தான் அப்பொழுது இருந்தது. சபையானது எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகு, மீட்கப்பட்ட மூப்பர்களால் அச்சிங்காசனங்கள் நிரப்பப்பட்டதை யோவான் தன்னுடைய காலத்தில் காண்கிறான்.

292. மூப்பர் என்பதன் பொருள் என்ன? மூப்பர் என்ற வார்த்தையை நீங்கள் எடுத்துக்கொண்டால்..... அதைப் பற்றி எல்லாவிதமான விளக்கங்களும் நான் இங்கே எழுதி வைத்திருக் கிறேன். ஆயினும் நான் அதை எடுத்துக் கொள்ளப்போகிறதில்லை. மூப்பர் என்றால், "ஒரு நகரத்தின் தலைவன்'' அல்லது 'ஒரு கோத்திரத்தின் தலைவன்'' என்று பொருள். "ஏதோ ஒன்றின் தலைவன்'' என்ற பொருள். நான் இருப்பதைப் போல்... சகோதரன் நெவில் இப்பொழுது இந்த சபைக்கு மூப்பராக இருக்கிறார். அவர் என்னவாக இருக்கிறார்? அவர் இந்த உள்ளூர் சபைக்குத் தலைவராக இருக்கிறார். பாருங்கள்? இந்த நகரத்தின்

பாருங்கள்? அவர்களுடைய ஆடையைக் குறித்தும், அவர்கள் எவ்விதமாக உடையுடுத்தியிருந்தார்கள் என்பதையும், அவர்களுடைய நிலையையும் அவர்களுக்கு என்ன இருந்தது என்பதையும், அவர்கள் பாடிய பாடலையும் நீங்கள் பரிசீலனை செய்தால், அப்பொழுது, அவர்கள் பரலோகவாசி களாகிய தூதர் கூட்டமல்ல என்பதை அறிந்துகொள்ளலாம்.

289. இன்னும் ஒரு வேதவாக்கியத்தைக் கூட நாம் வாசித்து விடுவோம். அவ்வாறு செய்ய நான் விரும்பவில்லை. நீங்கள் வாசிப்பீர்களா? நல்லது. நாம் தானியேல் 7-ம் அதிகாரத்திற்கு திரும்பிப் போவாம். இங்கே ஒரு வேதவாக்கியத்தை நாம் வாசிப் போம். இன்று காலையிலுள்ள இச்செய்தியின் மீதிப்பகுதி முழுவதுக்கும் இவ்வதே வாக்கியமானது உங்களுக்கு பெரிதான அளவில் உதவிகரமாக இருக்கும். இவ்வேத வாக்கியத்தை நீங்கள் வாசித்த பிறகு, தானியேல் 7-ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள வற்றைப் பார்த்து, அதனால் அதிகமான அளவுக்கு நீங்கள் நன்றாக உணருவீர்கள். தானியேல் 7-ம் அதிகாரம் 9-ம் வசனத்தை எடுத்துக்கொள்வோம். இந்தக் காரியங்களின் பேரில் மிகுந்த கவனம் செலுத்துங்கள்.

"நான் பார்த்துக் கொண்டிருக்கையில், சிங்காசனங்கள் வைக்கப்பட்டது; நீண்ட ஆயுசுள்ளவர் வீற்றிருந்தார்; அவருடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போலவும், அவருடைய சிரசின் மயிர் வெண்மையாகவும் பஞ்சைப் போலத் துப்புரவாகவும் இருந்தது; அவருடைய சிங்காசனம் அக்கினி ஜுவாலையும் (மீண்டும் அது மரகதம் போன்ற அக்கினிமயமான நிறத்தில் காணப்படுகிறது என்பதைப் பாருங்கள்) அதின் சக்கரங்கள் எரிகிற நெருப்புமாயிருந்தது.

அக்கினி நதி அவர் சந்நிதியிலிருந்து புறப்பட்டு ஓடினது; ஆயிரமாயிரம் பேர் அவரைச் சேவிக்க வந்தார்கள்; கோடாகோடி பேர் (அங்கே தான் உங்களுடைய மீட்கப்பட்ட மக்கள் வருகிறார்கள்) அவருக்கு முன்பாக நின்றார்கள்; நியாயசங்கம் உட்கார்ந்தது; புஸ்தகங்கள் (புஸ்தகங்கள் என்று பன்மையில் கூறப்பட்டுள்ளது) திறக்கப்பட்டது.

தானி.7:9-10

290. இப்பொழுது கவனியுங்கள்; நியாய சங்கமானது உட்கார்ந்தது. பார்த்தீர்களா? இப்பொழுது கவனியுங்கள். தானியேல் நியாயத்தீர்ப்பிலே சிங்காசனங்களைக் கண்டபோது அவைகள்



விசுவாசிக்கிறவன் எவனும் என்றென்றைக்கும் மரியா மலும் இருப்பான். இதை நீ விசுவாசிக்கிறாயா?'' என்று கேட்டார். அதைப்பற்றி விளங்காத தன்மை ஏதும் இல்லை. ''அவன் ஜீவிப்பான்.''

163. "என் மாம்சத்தைப்புசித்து, என் இரத்தத்தை பானம் பண்ணு கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவேன்.'' அதைப்பற்றி எந்தவித விளங்காத தன்மையும் இல்லை. அது ஒரு நிச்சயமான விளங்கும் சத்தமாக இருக்கிறது.

164. ஓ, நான் அதை அறிந்திருக்கிறேன். என்னுடைய எளிய ஐரிஷ் இருதயத்தில், ஒரு நாளில் இந்த எளிய பாவிக்கு, அந்த சத்தம் தொனிக்கக் கேட்டேன். அது என்னைப் போன்றவனுக்கு எப்படி கிடைக்கும்? ஆனால் நான், அது ஒரு தெளிவான விளங்கும் சத்தம் என்று விசுவாசித்து அதை ஏற்றுக்கொண்டேன். அது உண்மையாயிருக்கிறது என்பதற்கு நான் ஒரு சாட்சியாயிருக்கிறேன்.

165. ஒரு நாளில் அவர் மீண்டும் அழைத்திடுவார். நாம் உலகை விட்டுப் போய்விடுவோம். அந்த எக்காள தொனியைப் பற்றி எந்தவித விளங்காத் தன்மையும் கிடையாது. ஆம், ஐயா. எக்காலத்திலும் அது விளங்காத சத்தமாக இருக்கவில்லை.

166. அவர் நம்மை அழைக்கையில், இன்று தெளிவான சத்தம் தொனிக்கிறார். அவர் எதைக் கூறினாலும், அது மாறாததாயிருக்கிறது.

167. நாம் வசனத்திற்குத் திரும்பிப் போவோம்.

".... இதோ, வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட் டிருந்தது, அந்தச் சிங்காசனத்தின் மேல் ஒருவர் வீற்றிருந்தார்."

வெளி.4:2

168. "சிங்காசனம்" என்பதைக் கவனியுங்கள். அவர் சிங்காசனத்தின் மேல் உட்கார்ந்தார். அவர் இனிமேல் பூமியில் குத்துவிளக்கு களின் மத்தியில் இருக்கவில்லை. எடுத்துக் கொள்ளப்படுதல் நடந்து விட்டது. அவர் மகிமையில் இருக்கிறார். தமது சிங்காசனத்தின் மேல் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். தொடர்ந்து வாசித்து நீங்கள் கவனிக்க வேண்டுமென விரும்புகிறேன். 5ம் அதிகாரத்தில் பார்க்கையில், அது இரக்கத்தின் சிங்காசனம் அல்ல என்பதைக் காண்கிறோம். அது இனிமேல் கிருபாசனம் அல்ல. அதுதானே நியாயாசனம் ஆக இருக்கிறது. ஏனெனில் அக்கினியும், மின்னல் களும், இடிமுழக்கங்களும் அதிலிருந்து புறப்பட்டுச் சென்றது.

இனிமேல் அங்கே இரக்கம் இல்லை (அது முடிந்துவிட்டது. சபைக் காலமானது முடிவடைந்துவிட்டது). ''அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும், நீதியாயிருக்கிறவன் இன்னும் நீதி செய்யட்டும். பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்த மாகட்டும்.'' இனிமேல் அது கிருபாசனம் அல்ல.

169. இன்றிரவில் இரத்தமானது அந்த சிங்காசனத்தின் மேல் இருக்கிறது. அதுதானே இரக்கத்தைத் தேடுகிற ஒவ்வொரு பாவிக்கும் கிருபாசனமாக இருக்கிறது. ஆனால் அந்த நாளில் அது கிருபாசனமாக இருக்கமாட்டாது. அது நியாயாசனமாக இருந்து, அதின் மேல் சினம் கொண்ட தேவன் அமர்ந்திருக்கிறதாக இருக் கிறது. அங்கே... "நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்?". அவர் தமது மகிமையின் மேகங்களோடு வரும் பொழுது, மலைகள் கூட ஒளிந்து கொள்ள முயலும். அப்படியிருக்க நாம் அப்பொழுது எங்கே நிலைநிற்க முடியும்?

மெய்யாம் ஜீவ நதி, பாவம் போக்கும் நதி,

வேறே நதியை அறியேன்,

இயேசுவின் இரத்தந்தானே.

170. ஓ, என்னே ஒரு பாடம் இது! விளங்காத சத்தம் அல்ல! அவரது சிங்காசனம்

அவர்.... ''சிங்காசனத்தின் மேல்.... வீற்றிருந்தார்.'' (அவர் இனிமேல் இங்கே இல்லை.)

171. அது இன்னொரு காரியம்; மகா உபத்திரவ காலத்திற்கு முன்பாக சபையானது மேலே எடுத்துக்கொள்ளப்பட்டுவிட்டது என்பதற்கான நிரூபணமாக அது இருக்கிறது. பார்த்தீர்களா? ஏன்? அவர் மகிமையில் இங்கே சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறார், சபையானது பூமியை விட்டுப் போய்விட்டது. பிறகு, அவர் உபத்திரவ காலத்தில் வருகிறார். நான் எப்பொழுதும் அவ்வாறு தான் கூறி வந்திருக்கிறேன்.

172. நோவாவின் நாட்களில், ஒரு துளிமழை கூட பெய்யும் முன்னர், நோவா பேழைக்குள் போய்விட்டான். சோதோமில் அக்கினி விழுவதற்கு முன்னர், லோத்து சோதோமைவிட்டு வெளி யேறி விட்டான். அணு குண்டு விழுவதற்கு முன்னர் சபையானது மகிமைக்குள் பிரவேசித்துவிடும். அதுசரிதான். அணுகுண்டு விழுவதற்கு முன்னர் அவ்வாறு நடக்கும்.



கடந்துவிட்டேன். ஓடி, ஓடி, ஓடி, சரியாகக் கடந்துவிட்டேன். ஓடி, ஓடி, ஓடிக்கொண்டேயிருந்திடுங்கள், உட்கார உங்களால் இயலாது.

(அவ்வெளிய வயோதிப ஆத்துமா அக்கரையில் இன்று இருக்கிறாள்).

286. அங்கே சிங்காசனங்கள் இருந்தன. இருபத்து நான்கு இருக்கைகள் உண்டாயிருந்தன. அவைகள் எத்தனை? இருபத்து நான்கு.

''... இருபத்து நான்கு சிங்காசனங்களிருந்தன; இருபத்து நான்கு மூப்பர்கள் வெண் வஸ்திரந்தரித்து, தங்கள் சிரசுகளில் பொன்முடி சூடி (ஆளுக்கொரு இருக்கையில்) அந்தச் சிங்காசனங்களின் மேல் உட்கார்ந்திருக்கக் கண்டேன்.''

வெளி.4:4

287. இப்பொழுது இருபத்து நான்கு மூப்பர்கள் - அவர்கள் தூதர் கூட்டமல்ல என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும் என்ற நான் விரும்புகிறேன். பரலோகவாசிகளாகிய தூதர்கள் கிரீடங்க ளோடும், சிங்காசனங்களோடும் சம்மந்தப்பட்டிருக்கமாட்டார்கள். அவர்கள் இவ்விதமான காரியங்களோடு தொடர்புடையவர்களல்ல, அவர்கள் தூதர்கள், அவர்கள் ஒருபோதும் ஜெயங் கொள்ளவில்லை. சிறிது நேரம் கழித்து நீங்கள் கவனித்துப் பார்த்தால், அவர்கள் பாடிய பாடல்கள் மற்றும் காரியங்களை பார்க்கை யில், அவர்கள் தூதர்கள் அல்ல என்று அவை நிரூபிக்கின்றன. பாருங்கள்? அவர்கள் மீட்பின் பாடல்களை பாடினார்கள் எனவே, தூதர்கள் மீட்கப்பட்ட வேண்டிய அவசியமேயில்லை. பார்த்தீர்களா? ஆனால் அம்மூப்பர்களோ மீட்கப்பட்ட மானிடர்கள்.

288. இதை மேற்கொண்டு பார்க்க எனக்கு நேரமில்லை; ஆனால் இதை எழுதிக் கொண்டிருக்கிறவர்களே, அவர்கள் மீட்கப்பட்ட மனிதர்கள்தான், தூதர்களல்ல என்பதை நீங்கள் அறிந்துகொள்ள விரும்பினால், மத்தேயு 19:28ஐ எடுத்துக் கொள்ளுங்கள். மத்தேயு 19:28. வெளிப்படுத்தின விசேஷம் 3:21- அப்படியெனில் அவர்கள் யார் என்பதை அவற்றின் மூலம் அறிந்து கொள்ளுங்கள். வெளி. 20:4; வெளி.2:10;1 பேதுரு. 5:2-4,2 தீமோத்தேயு .4:8 ஆகிய வசனங்கள் அம்மூப்பர்கள் மீட்கப்பட்ட மானிடர்கள் என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்தும். அவைகளையெல்லாம் இன்னு காலையில் ஆராய வேண்டும் என்றுதான் நான் விரும்பினேன். நீங்கள் அதன் பேரில் வாரங்கள் கணக்கில் அலசி ஆராயலாம். அவர்கள் தூதர்களல்ல, அவர்கள் பரலோகவாசிகளல்ல, அவர்கள் மீட்கப்பட்ட மனிதர்கள்தான்.

முடியவில்லையா? நித்திரை செய்யும் புத்தியில்லாத கன்னியர் ஆகிய சபையானது, மாணவாளனைச் சந்திக்க புறப்பட்டுச் சென்றது, ஆனால் அவர்கள் தங்கள் விளக்குளிலிருந்த எண்ணெயானது தீர்ந்து போகும்படி செய்துவிட்டார்கள். இந்த ஸ்தலத்தினுள் அவர்கள் பிரவேசிக்கவேயில்லை. கிறிஸ்து ஒரு போதும் அதை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள அவர்கள் அனுமதிக்கவேயில்லை. அவ்வாறு விட்டிருந்தால் அவர் அற்புதங்களைப் புரிந்து, அந்நிய பாஷைகளில் பேசி, அவர் தம்முடைய சபையில் ஜீவிக்கிறார் என்பதை நிரூபிக்கும்படி அற்புதங்கள் செய்திருக்க முடியும்.

282. இயேசுவானவர் இவ்வுலகுக்கு வந்து, "நான் இயேசு, நான்தான் தேவகுமாரன்'' என்று கூறிவிட்டு, ஒன்றுமே செய்யாமல், ''நான் போய் இந்த சபையில் சேரப்போகிறேன்'' என்று அவர் கூறினால் எப்படியிருக்கும்? தேவகுமாரன் செய்யும் செயலா அது?

283. அவர் என்ன சொன்னார்? ''என் பிதாவின் கிரியைகளை நான் செய்யாதிருந்தால் நீங்கள் என்னை விசுவாசிக்க வேண்டியதில்லை'' என்று கூறினார்.

284. என்னே! நீங்கள் காண்கிறீர்களா? தேவன் தன்னைக் குறித்து பிரகடனம் செய்கிறார். அவ்வாறு செய்ய அவர் விரும்புகிறார். அவர் யேகோவா, அவர் தம்மை அறியப்படுத்தவே விரும்புகிறார். ஓ , நான் அதைக்குறித்து மகிழ்ச்சியாயிருக்கிறேன். ஆம், ஐயா. அவர் தன்னை எனக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார். அவர் தன்னை உங்களுக்கும் அறியப்படுத்தியிருக்கிறார் என்பதை நான் அறிவேன். சமீபத்தில் இரட்சிக்கப்பட்ட உங்களில் சிலராகிய இளம்பிராயத் திலுள்ளவர்களே, இன்னும் நீங்கள் அவரை அவரது வல்லமையிலும், அவரது மகத்தான காரியங்களிலும் வளர்ந்த கிறிஸ்தவர்கள் அறிந்திருக்கிறது போல அறிந்திருக்கவில்லை; ஆனால் நீங்கள் அந்த அனுபவத்திற்கு நேராக சரியானபடி வந்து கொண்டிருக்கிறீர்கள். இராஜாவின் பெரும்பாதையில் சரியாக நீங்கள் வந்து கொண்டு இருக்கிறீர்கள். நோக்கிப் பார்த்து கொண்டே உங்களால் முடிந்த அளவாக தொடருங்கள். ஓடுங்கள், ஓடுங்கள், உங்களால் முடிந்த அளவு கடினமாக ஓடுங்கள். எதினிமித்தமுமாக ஓடுவதை நிறுத்தாமால், விடாது ஓடிக்கொண்டேயிருங்கள்.

285. எளிய வயோதிப சகோதரி ஸ்நெல்லிங் கூறுவது போல் : நான் ஓடிக்கொண்டே, ஓடிக்கொண்டே ஓடிக்கொண்டேயிருந்து, சரியாகக்



173. "முதலில் விழுந்ததைக் குறித்து என்ன?' என்று கேட்கலாம். அது அஞ்ஞானிகள் மேல்தான் விழுந்தது, கிறிஸ்தவர்கள் மேல் அல்ல .

174. இப்பொழுது கவனியுங்கள். ஓ! அவர் தம்முடைய கிரியை பூமியில் முடித்தார், அவர் தம்முடைய சபையை பூமியை விட்டு எடுத்துவிட்டு, இப்பொழுது அவர் நியாயத்தீர்ப்பை அனுப்பு கிறார். உலகம் அவரைப் புறக்கணித்தது. அவர் தம்முடைய நியாயத்தீர்ப்பை அனுப்பினார். அவரும் அவருடைய சபையும் மகிமைக்குள் போய்விட்டனர்.

175. பத்மு தீவில் இருந்த யோவான், சபைக்கு வெளிப்படுத் தலைக் கொண்டு வந்தவனாவான்; அவன் இங்கே ஏறிவா'' என்று அழைப்பட்டு, மகிமைக்குள் எடுத்துக் கொள்ளப்பட்ட சபைக்கு முன்னடையாள மானவனாக இருக்கிறான்.

''அவன் சபைக்கு எடுத்துக்காட்டாக இருந்தான்'' என்றா கூறினர்கள்?''

176. இவ்வார்த்தையைக் கேட்கிற ஒவ்வொருவருக்கும்; யோவான் அவருக்காக பிரதிநிதியாக நின்றான். ஆமென். யோவான் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்திற்கு பிரதிநிதியாக இருந் தான். வார்த்தைக்கு சாட்சியாக இருந்தான், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்கு ஒரு சாட்சியாக அவன் இருந்தான். கிறிஸ்து வோடு தனிப்பட்ட முறையில் ஐக்கியம் கொண்டு இருந்தான். அவன் சபை முழுவதற்கும் எடுத்துக்காட்டாக விளங்கினான். கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டு, அவரை அதே அடிப்படையில் ஏற்றுக் கொள்கிற ஒவ்வொரு மனிதனோ, பெண்ணோ , வாலி பனோ, வாலிபப் பெண்ணோ , யாராயிருந்தாலும் சரி, ஒருநாளில் அவர்களை அவர் கூவி அழைப்பார். “இங்கே ஏறிவா'' என்று. அவர்கள் உபத்திரவக் காலத்திற்கு முன்பாக எடுத்துக் கொள்ளப் படுவார்கள். உபத்திரவ காலமானது இன்னும் ஆரம்பிக்கவில்லை என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

177. நியாயத்தீர்ப்பு அமையவிருக்கிற வேளையாக இது இருக் கிறது. சபைக் காலத்திற்கு பிறகு என்ன சம்பவிக்கப் போகிறது என்பது யோவானுக்கு காண்பிக்கப்பட்டது. பாருங்கள்? எனவே அது...

178. 3-ஆம் வசனத்தில் மீண்டும் கவனியுங்கள், அல்லது 2ம் வசனம், "பரலோகத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது. அதின் மேல் ஒருவர் வீற்றிருந்தார்.'' பூமியில் இருந்த அதே ஆவியானவர்தான், பூமியை விட்டு கடந்து சென்று, மகிமைக்குள் சென்று, சிங்காசனத்தின் மேல் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். இன்றிரவில் கிருபாசனத்தில்

உட்கார்ந்து கொண்டு நம்மோடு இருக்கிற அதே இயேசு தான் இந்த ஆவியானவர் ஆவார்.

''வீற்றிருந்தவர், பார்வைக்கு வச்சிரக்கல்லுக்கும், பதும ராகத் துக்கும் ஒப்பாயிருந்தார்; அந்தச் சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வான வில்லிருந்தது; அது பார்வைக்கு மரகதம்போல் தோன்றிற்று."

வெளி. 4:3

179. நான் முடிக்கப்போகிறேன், ஏனெனில், பிரசங்கிப்பதற்காக ஏனைய சகோதரர்கள் இருக்கிறார்கள். ஒரு வேளை காலையில் நான் இதைத் தொடர்ந்து பிரசங்கிப்பேன்.''... அது பார்வைக்கு மரகதம் போல் தோன்றியது ... "ஓ, என்னே! பெந்தெகொஸ்தே நாளில் விழுந்த அக்கினியின்

ஜூவாலையினால் இதயங்கள் கொழுந்து விட்டு எரிந்து

கொண்டிருக்கும் மக்கள் எவ்விடத்திலும் உள்ளனர் (அதை நீங்கள்

விரும்புகிறீர்கள் அல்லவா?) அது சுத்திகரித்து, பரிசுத்தமாக்கியது ஓ, அது என் இருதயத்திள் எரிந்துகொண்டிருக்கிறது. அவர் நாமத்திற்கே மகிமை

நானும் அவர்களில் ஒருவன் என்பதால் சந்தோஷமே.

180. மனுஷகுமாரன் வருகையை காண்பான் என்று யோவா னுக்கு தேவன் வாக்களித்தபடியே, கர்த்தராகிய இயேசுவால் அழைக்கப்பட்டு, மேலே வரும்படி கூப்பிடப்பட்டான். பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோர் தன் முன்பாக நின்று இருக்க, இயேசுவானவர் அவர்களிடம், "இங்கே நிற்கிறவர்களில் சிலர் மனுஷகுமாரனுடைய வருகையைக் காணுமுன் மரணத்தை ருசி பார்ப்பதில்லை" என்று கூறினார். "இங்கே நிற்கிற யாவரும்' என்று இயேசு கூறாமல், "சிலர்'' என்று மட்டுமே கூறினார். அதற்கு சில நாளைக்குப் பிறகு, அவர்கள் போய், உயிர்த்தெழுதலின் முறையும், கர்த்தருடைய வருகையும் தங்கள் முன்பாக ஒத்திகை போல் நடத்திக் காட்டப்பட்டதை கண்டார்கள்.

181. மோசே, மரித்து உயிர்த்தெழும் பரிசுத்தவான்களுக்கு அடை யாளமாகவும், எலியாவோ, மறுரூபப்படுத்தப்படும் மக்களுக்கு அடையாளமாகவும் இருக்கிறான். மோசே தான் முந்தினவன், எலியா இரண்டாமவன். கடைசி நாளுக்குரிய தூதனாயிருக்கும்படி எலியா வைக்கப்பட்டிருந்தான். அவனோடும், அவனுடைய குழுவினரோடும் சாகாமல் எடுத்துக் கொள்ளப்படுதல் வரும். மோசே உயிர்த்தெழுதலை



அவர்கள் இருக்கிற ஸ்தலத்தில் அவர்களை நியாயந்தீர்க்க அங்கே ஒன்றுமில்லை.

278. ஆனால் கிறிஸ்து உள்ளே பிரவேசிக்கையில், நீங்கள் உங்கள் இருதயத்தினுள் ஒரு பலிபீடத்தை உருவாக்கியிருக்கிறீர்கள், எனவே உங்கள் பாவங்கள் தினந்தோறும் எடுத்துக் கொள்ளப்படு கிறது. மகத்தான பரிசுத்த பவுலுங்கூட, 'நான் அனுதினமும் சாகி றேன்'' என்று கூறினான். ஓ, சகோதரனே, சகோதரியே! அதோ அங்கேதான் அந்த உள் திரையானது இருக்கிறது.

279. விரைந்திட வேண்டும் நான் அறிவேன். ஓ இல்லை என்னால் முடிக்க இயலவில்லை. நான் நேரங் கடந்து விட்டேன். நாம் பார்க்கலாம். இல்லை, நான் அப்படி செய்யவேண்டாம். நான் இருபத்து நான்கு மூப்பர்களைப் பற்றி எடுத்துக் கொள்ள வேண்டுமென விரும்புகிறேன். உங்கள் பகலுணவுக்கு நீங்கள் செல்ல முடியாதபடி நான் உங்களை இங்கே வைத்துக் கொண்டிருக்கிறேன். நாம் அதை.... பார்க்கலாம். எத்தனை பேர்கள் "இருபத்து நான்கு மூப்பர்களைப் பற்றி எடுத்துக்கொள்ளுங்கள்'' என்று கூறுகிறீர்கள்? (சபையோர் ஆமென்'' என்று கூறுகிறார்கள் - ஆசி.) நல்லது, ஒரு நிமிடம். நல்லது ஒரே நிமிடம்தான். "இருபத்து நான்கு மூப்பர்கள்'' ''சிங்காசனத்தை சூழ இருபத்து நான்கு மூப்பர்களைப் பற்றி நாம் விரைவாக எடுத்துக்கொண்டு பார்ப்போம்.

280. இப்பொழுது சிங்கானமானது எங்கேயிருக்கிறது என்று நீங்கள் பாருங்கள். அது இருதயத்தினுள் இருக்கிறது. யாருடைய இருதயத்திலே? ஏழு சபை காலங்களில் உள்ள அங்கத்தினர்களுக்குள்ளே அது கிறிஸ்துவாயிருக்கிறது! அதற்கெதிராக பேசப்படும் ஒரு வார்த்தையோ, அல்லது செயலோ, நீங்கள் செய்தால், நீங்கள் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று. நியாயத்தீர்ப்பின் நாளில் நீங்கள் அதற்காக பதில் அளிக்க வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள். யார் பூமியை நியாயந்தீர்ப்பார்கள்? பரிசுத்தவான்கள் பூமியை நியாயந்தீர்ப்பார்கள்.

281. தானியேல் ஆயிரமாயிரம் பேர்கள் வருகிறார்கள் என்று பார்த்தனே. அது யாரைக் குறித்து அவன் கண்டான்? அவர்கள் பரிசுத்தவான்கள். புத்தகங்கள் திறக்கப்பட்டன, பாவிகளுக்குரி யவை. வேறொரு புத்தகமும் திறக்கப்பட்டது, அதுதான் ஜீவ புத்த கம். நித்திரை செய்யும் கன்னியர். ஓ, உங்களால் அதைக்காண

274. புலன்களுக்குள்ளே கிறிஸ்துவானவர் வரட்டும். "நான் நல்லது செய்யக் கடமைப்பட்டுள்ளேன். நான் நரகத்திற்குப் போக விரும்பவில்லை. ஒரு காரியம் செய்வேன். நான் சபையில் சேர்ந்து கொள்வேன்'' என்று கூறலாம். லூத்தரன்களைத் தான் அது குறிக்கிறது.

275. ''நல்லது, என்ன செய்ய வேண்டும் என்பதை நான் உங்களுக் குக் கூறுவேன். நான் ஒரு வித்தியாசமான வாழ்க்கையை வாழ வேண்டும் என்பதை நான் விசுவாசிக்கிறேன்'' என்று ஒருவர் கூறலாம். அதுதானே பலிபீடத்தண்டையில் உள்ள பரிசுத்தமாகுதல் என்பதாகும். அது மொதோடிஸ்டுகளைப் பற்றிய காரியம்.

276. அதற்குப் பிறகு, விருப்பமுள்ளவன் எவனோ, அவன் கிழிக்கப்பட்ட திரைவழியாக உள்ளே கடந்து செல்வானாக. ஓ, தேவனுக்கு மகிமை! நான் அக்கரையில் உள்ளேன். இப்பொழுது, அவர் நாமத்திற்கே அல்லேலூயா! ஓ, விருப்பமுள்ளவன் எவனோ, அவன் தனது சொந்த சித்தமாகிய திரையைக் கிழித்துக் கொள்ளட்டும். அப்பொழுது தேவன் அவனது இருதயத்தினுள் பிரவேசிப்பாராக. மானிட இருயதத்தினுள், கிறிஸ்து தமது நியாயசனத்தில் வீற்றிருக்கிறார். என்ன சம்பவிக்கவேண்டும்?

277. "நான் இங்கே வந்தது சரிதான், இங்கே நான் அசுத்தமான நகைச்சுவையை பேசலாம். அது என்னை கண்டனம் பண்ண வில்லை'' என்று நீங்கள் கூறுகிறீர்கள். ஏன்? உன்னைக் கடிந்து கொள்ள, அக்கினைக்குட்படுத்த நீ இருக்கிற இடத்தில் அங்கே ஒன்றும் இல்லை. பெண்கள் கூறுகிறார்கள்: "நல்லது, நான் உங்களுக்குக் கூறுகிறேன். நான் தலைமயிரைக் கத்தரித்து குட்டை முடியை உடையவளாய் இருக்கலாம். குட்டையான பாவா டைகளை நான் அணியலாம். அதனால் எனக்கு ஒரு கண்டனமும் இருக்கவில்லை' என்று. இது ஒன்றும் ஆச்சரியமல்ல. "நான் சுருட்டுப் புகைத்தாலும் அதனால் ஒரு விபரீதமும் எனக்கு ஏற்பட வில்லை; கொஞ்சம் சீட்டாட்டம் நான் விலையாடலாம். அதுவும் என்னை ஒன்றும் செய்துவிடாது. சூதாட்ட பகடைப் பெட்டியில் நான் அம்பு செய்யலாம். அதனால் ஒரு கெடுதலும் ஏற்பட்டு விடாது'' என்று மனிதன் கூறுகிறான். அவர்கள் என்னவெல்லாமோ செய்து விட்டு 'அது எனக்கு ஒரு கெடுதலும் ஏற்படுத்தாது” என்று கூறுகிறார்கள். இப்படியெல்லாம் செய்து கொண்டே, அவர்கள் இன்னமும் சபையைச் சார்ந்தவர்களாகத்தான் இருந்து கொண்டு இருக்கிறார்கள். “இதைச் செய்வதினால் எல்லாம் ஒரு கெடுதியும் விளையப் போவதில்லை'' என்கிறார்கள். ஏன? ஏன்?



பெறும் கூட்டத்தையும், எலியா மறு ரூபப்படுத்தப்படும் குழுவினரையும் கொண்டு வருகிறார்கள். அவர்கள் இருவருமே இங்கே, இரு கூட்டத்திற்குமாக நின்று கொண்டிருக்கிறார்கள்.

182. சிறிது நேரம் கழித்து, அவர்கள் அக்காட்சியை கவனித்துக் கொண்டிருக்கையில், அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில், பேதுரு கூறினான், "நாம் மூன்று கூடாரங்களை போடுவோம். சிலர் நியாயப்பிரமாணத்திற்குக் கீழாகவும், சிலர் எலியாவின் கீழாக வும், சிலர் இந்த வழியாகவும் செல்வோம்'' என்று கூறினான்.

183. அவர்கள் இன்னமும் இவ்வாறு பேசிக் கெண்டிருக்கையில், ஒரு சத்தமானது பேசி, கூறியது, "இவர் என்னுடைய நேச குமாரன், இவருக்கு செவி கொடுங்கள்'' என்று. அவர்கள் பார்த்த பொழுது, அவர்கள் இயேசுவை மாத்திரம் கண்டார்கள். அங்கே இருந்த மற்றவைகளெல்லாம் அந்த ஒருவருக்குள் மறைந்து விட்டது. ஓ, அவரே ஒளியும், சத்தியமும், வழியும், வாசலும், வானவில்லுமாயிருக்கிறார்.

184. ஓ, கர்த்தருக்கு சித்தமானால் நாளைக்கு நமக்கு மகத்தான பாடம் ஒன்று இருக்கிறது. நாளைக்கு நாம் "நியாயத்தீர்ப்பை " எடுத்துக் கொள்வோம். பதுமராகம் என்றால் என்ன என்பதையும், அதன் பங்கு என்ன என்பதையும் பார்ப்போம். வச்சிரக்கல் எதைக் குறிக்கிறது என்பதையும் பார்ப்போம். மற்றும் வெவ்வேறு கற்க ளையும் குறித்துப் பார்ப்போம். அவைகளை எசேக்கியேல் மற்றும் ஆதியாமத்திலும், வெளிப்படுத்தின விசேஷம் பிறகு வேதாகமத்தின் மத்திய பகுதிக்கு வந்து, அவைகள் யாவையும் ஒன்றாக இணைத்து, இந்த வெவ்வேறு கற்கள் நிறங்கள் என்ன என்பதைப் பற்றி பார்ப்போம். அதனிடமாக நாம் திரும்பி வந்து பார்த்து அவை சரியாக இருக்கிறதா என்று பார்த்திடுவோம். அதே நிறம்தானா , மற்றும் உள்ளவைகள் சரியாக அவ்வாறு அங்கும் இருக்கிறதா என்பதைப் பற்றியெல்லாம் பார்ப்போம். அதே தேவன்தான், அதே பரிசுத்த ஆவியானவர்தான், வேதம் முழுவதிலும் அதே அடையாளங்களையும், அதே அற்புதங்களையும், தான் வாக்குரைத்தபடி காண்பித்துக் கொண்டிருக்கிறார் என்பதை காணலாம்.

185. பேதுரு, யாக்கோபு, யோவான் மற்றும் அங்கே நின்று கொண்டிருந்த அவருடைய ஏனைய சீஷர்கள் அனைவரிடமும், அவர் கூறினார்: "இங்கே நிற்கிறவர்களில் சிலர் மனுஷகுமாரன் தமது இராஜ்யத்தில் வருவதைக் காணுமுன் மரணத்தை ருசி பார்ப்ப தில்லை '' என்று .

186. "இவனை நீர் என்ன செய்யப்போகிறீர்? இவன் காரியம் என்ன?'' என்று பேதுரு யோவானைக் குறித்துக் கேட்டான். "இவனுக்கு என்ன சம்பவிக்கப் போகிறது?'' என்று கேட்டான்.

187. ''நான் வருவதைக் காண இவன் இருந்தால் உனக்கென்ன?'' என்று அவர் கேட்டார். அவன் அதைக் காணுவதற்காக அது வரை யிலும்; உயிர்வாழ அனுமதித்தார். ஏனைய சீஷர்கள் யாவரும் மரித்துவிட்ட பிறகு, யோவான் அதன் பிறகும் உயிர்வாழ்ந்து, கர்த்தருடைய வருகையானது வல்லமையோடு வருவதையும், தன் காலத்திலிருந்து நியாயத்தீர்ப்பானது முடிவு பெறும் வரையிலும், அதன் பிறகு, ஆயிரம் வருட அரசாட்சி துவங்குவதையும் கூட காண்பதற்காக வாழ்ந்திருந்தான். யோவான் அவைகள் ஒவ் வொன்றைம் கண்டான்; ஆயிரம் ஆண்டு அரசாட்சி முடிவு பெறு வதையும், அதன் பிறகு இராஜ்யத்தின் காலம் துவங்குவதையும் கூட கண்டான். ஆகவே, அவர் தம்முடைய வார்த்தையை காத்துக் கொள்கிறார் அல்லவா?

188. நாம் 2ம் வசனத்தைக் குறித்துக் கொள்வோம். கர்த்தருக்கு சித்தமானால் காலையில் 3ம் வசனத்தில் ஆரம்பிப்போம்.

நாம் தலைகளை வணங்குவோம்.

189. என் சகோதரனே, என் சகோதரியே, உங்களில் எத்தனை பேர்கள், ஒருநாளில் வரும்படி அவரால் அழைக்கப்படப் போகிறீர்கள் என்பதைக் குறித்து அறிந்தவர்களாய் இருக்கிறீர்கள்? அதற்கு நீங்கள் ஆயத்தமாய் இருக்கிறீர்களா? இல்லையா? நீங்கள் ஆயத்தமாய் இருந்தாலும் இல்லாமற் போனாலும் தேவனைச் சந்திக்கும்படி வருவதற்காக அழைக்கப்படுவீர்கள். அந்த எக்காளமானது தொனிக்கப்போகிறது; அவ்வாறு அது தொனிக்கையில், அது உங்களுடைய ஆக்கினைக்காகத்தான் தொனிக்கப் போகிறது; அங்கே மீண்டும் ஜீவிக்கமாட்டீர்கள்; பிசாசின் பாதாளக் குழிகளில் இலட்சக்கணக்கான ஆண்டுகளாக வாதிக்கப்படுவீர்கள்; அல்லது உன்னதத்தில் மகிமையான பரிசுத்தவான்களை சந்திப்பதற்காக அழைக்கப்படுவீர்கள்.

190. தேவன், பேதுரு யாக்கோபு யோவான் ஆகியோருக்கு கொடுத்த வாக்கைக் காத்துக் கொண்டது எவ்வளவு நிச்சயமோ, வெளிப்படுத்தலை தந்த பிரியமுள்ள யோவானுக்கு அளித்த வாக்கை அவர்காத்துக் கொண்டது எத்தனை நிச்சயமோ, சபைக்கால நெடுகிலும் அவர் தன்னுடைய வாக்குத்தத்தத்தைக் காத்துக் கொண்டது எத்தனை நிச்சயமோ, அதே அளவு நிச்சயமாக, அவர்



271. ஆனால் ஆண்டுக்கொருமுறைதான் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரதான ஆசாரியன் பிரவேசிக்கிறான். அங்கே ஆக்கினைத் தீர்ப்பு உண்டு. அதற்கு முன் லூத்தரன் காலம் இருந்தது. அதன் பிறகு மெதோடிஸ்ட் காலமானது வந்தது. பின்பு, இந்தக் காலம்; சபை வெளிச்சங்கள் வந்தன, அது அப்படியே மானிடப் பிறவியில் காணப்படுவதற்கு ஒத்து காணப்படுகிறது.

272. பிறகு இந்த மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நாம் எவ்வாறு பிரவேசிக்கிறோம்? பரிசுத்த ஸ்தலத்திற்குள் இடையில் ஒரு திரையானது தொங்கிக்கொண்டிருக்கிறது என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள். மகா பரிசுத்த ஸ்தலத்தில்தான் கிறிஸ்து வந்து உங் களுடைய இருதய சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறார். கிறிஸ்து அங்கே அரியாசனம் ஏற்றப்படுகிறார். அவர் "நீதிமானாகுதல்'' பரிசுத்தமாகுதல் வழியாகத்தான் வருகிறார். அது சரிதானே?" நாம் எல்லாரும் ஒரே தண்ணீரிலா? ஒரே சபையினாலா? ஒரே மதக் கோட்பாட்டினாலா?) ஒரே ஆவியினாலே... இங்கிருக்கிற நாம் யாவரும் கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணபட்டோம். எதனால்? பரிசுத்த ஆவியினாலே.

273. யார் உள்ளே வருகிறார்? மெதோடிஸ்ட், பாப்டிஸ்டோ ப்ரெஸ்பிடேரியனோ, பெந்தெகொஸ்தேகாரரோ, எவர் வர விரும்புகிறாரோ அவரெல்லாம் உள்ளே வரலாம். அந்தத் திரை ? அந்த திரையானது எதை உங்கள் இருதயத்தினிடமிருந்து திரையிட்டு மறைக்கிறது? நீங்கள் ஆயத்தம்தானா, அத்திரையானது 'சுய விருப்பம்'' என அழைக்கப்படுகிறது. இப்பொழுது இதன் கருத்தை நீங்கள் அறிந்து கொண்டீர்களா? வெளியே உள்ள புலன்கள் - சரீரத்தில் உள்ள புலன்கள், ஆத்துமாவுக்கென உள்ள புலன்கள் - பரிசுத்த ஸ்தலத்திற்கும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும் இடையே உள்ள அந்த திரை. திரையை தாண்டி நீங்கள் உங்கள் பிரவேசிப்பதற்குரிய மார்க்கம் என்னவெனில், உங்களுக்கென அதற்காக இருக்கவேண்டியது "சுய விருப்பம்'' தான். ''விருப்பமுள்ளவன் எவனோ" என்ன? கைகளைக் குலுக்கிக் கொள்ளகிறவன் எவனோ என்றா? முழுக்கு ஞானஸ்நானம் எடுத்துக் கொள்கிறவன் எவனோ என்பதாக உள்ளதா? சபையில் சேர்ந்து கொள்கிறவன் எவனோ என்பதாக உள்ளதா? தன் கடிதத்தை கொடுத்து அனுப்புகிறவன் எவனோ என்பதாக அது உள்ளதா? கிரியை செய்கிறவன் எவனோ என்பதாக உள்ளதா? இல்லை. "திரைக்கு அப்பால் வர விருப்பமுள்ளவன் எவனோ' என்பதாகவே அது உள்ளது.

விரும்புகிறேன். இங்கே இருக்கிற இவ்வைந்து வாசல்களும் தான் ஐம்புலன்களாகும் என்பதை நீங்கள் அறிவிறீர்கள். எத்தனை புலன்கள் சரீரத்தை கட்டுப்படுத்துக்கின்றன? ஐந்து, அவையாவன: காணுதல், ருசித்தல், உணருதல், முகருதல், கேட்டல். அது சரிதானே? அதுவே மாம்சமாயிருக்கிறது, வெளிப் பிரகாரம்: அது மாம்சமாயி ருக்கிறபடியால், நீங்கள் சார்ந்து கொள்ளவே முடியாது.

267. அதன்பிறகு, உள்பிரகாரங்கள்; நமக்கு உள்பிரகாரம் உண்டு. அதுதானே அடுத்ததாயுள்ள பலிபீடமாயுள்ளது. அடுத்ததாயுள்ள பலிபீடம் வருகிறது. அதனோடு, மனச்சாட்சி, கற்பனைகள், நினைவு கள், உணர்ச்சிகள், பாசம் முதலியவையும் வருகின்றன. இவைகள் தான் உள்ள பிரகாரத்தை கட்டுப்படுத்தும் அதனுடைய ஐம்புலன்களாகும். அதுவே ஆத்துமாவாகும். அதன்பிறகு அடுத்து உணர்வைக் காட்டும் உணர்வு உள்ளது. அங்கேயும், நினைவுகள், மனச்சாட்சி, இரக்கம் மற்றும் இன்னபிறவும் உள்ளன. கற்பனையும் கூட உண்டு. நீங்கள் உட்கார்ந்து கற்பனை செய்கிறீர்களல்லவா? நீங்கள் உங்களது மாம்சத்தைக்கொண்டு அதைச் செய்வதில்லை, உங்களது புலன்கள் கற்பனை செய்வதில்லை. உங்களுக்குள்ளாக இருக்கும் உள் பிரகாரம்தான் அதைச் செய்கிறது.

268. அதற்கு மூன்று வாசல்கள் உள்ளன. நாம் என்ன செய்கிறோம்? நாம் இதோ அதை விவரித்துக் கொண்டிருக்கிறோம். புலன்கள் கவனிக்கத் தவறவேண்டாம். மாமிசத்திலிருந்து ஐம்புலன்கள் வருகின்றன; அதற்கடுத்து, உள்பிரகாரமாகிய ஆத்துமா வருகிறது. ஆனால் இப்பொழுது நீங்கள் இருதயத்தினிடத்திற்கு வருகிறீர்கள். பாருங்கள்?

269. வெளியே பலிபீடத்தோடு நல்லவர்களாகிய யாத்திரை பரிசுத்த சபையினர், மெதோடிஸ்டுகள் ஆகியோராகிய நீங்கள் நின்று விட்டீர்கள். நீங்களும் , லூத்தரன்களும் மற்றும் இன்னபிற சபையினரும் ஐம்புலன்களோடு, கண்காண்கிறதைக் கொண்டு அறிந்து கொள்கிற அனுபவத்தோடு மட்டும், உங்கள் மாம்சத்தில் வெளியே பிரகாரத்திலேயே நின்ற விட்டீர்கள்.

270. இங்கே தான் யாத்திரைப் பரிசுத்த சபையினர் ஆகிய சுயாதீன மெதோடிஸ்ட்டுகள் (Free methodists) வருகின்றனர். அவர்கள் அடுத்துள்ள பிரகாரங்களுக்கு வருகிறார்கள். வந்து பரிசுத்தத்தில் விசுவாசம் கொண்டிருந்தனர். ஏனெனில் அந்த ஸ்தலம் என்று அழைக்கப் பட்டது. அங்கே பலிகள் வைக்கப்படுகின்றன.



இந்தக்கடைசி நாட்களுக்கான வாக்கையும் காத்துக் கொள்வார்; அவர் இந்தக் கடைசி நாட்களில், பின்மாரியை அனுப்புவேன் என்றும், பூமியில் அவர் இருக்கையில் அவரில் இருந்த அதே ஆவியை கொண்டு வருவதாகவும், சாயங்கால நேரத்திலே வெளிச்சம் உண்டாகும் என்பதாகவும், இந்தக் கடைசி நாட்களில் இந்த "திறந்த வாசலின்' காலத்தில், அவர் தன் நாளில் செய்திட்ட அதே வல்லமை, அதே அடையாளங்கள் மற்றும் அவர் செய்த யாவையும் மீண்டும் காண்பித்து செய்திடுவதாக வாக்குரைத்திருக்கிறார். அதை நிச்சயமாக செய்திடுவார்.

191. இங்கே அது இருக்கிறது! நேற்றும் இன்றும் என்றும் மாறாத இயேசு கிறிஸ்துவாகிய பரிசுத்த ஆவியானவரை இப்பொழுதே நம்மிடத்தில் நாம் பெற்றிருக்கிறோம். அவர் உங்களுக்குப் பிரசங்கித்துக் கொண்டும் போதித்துக் கொண்டும், எது சரியானது எது தவறானது என்றும் நீங்கள் கண்டு கொள்ளச் செய்ய முயன்று கொண்டும் இருக்கிறார். அது பரிசுத்த ஆவியானவர்தாமே. அவரே மானிட உதடுகள் மூலம் பேசிக் கொண்டும், மனித இனத்தின் நடுவில் கிரியை செய்து கொண்டும், இரக்கத்தையும் கிருபை யையும் காண்பிக்க முயன்று கொண்டும் இருக்கிறார்.

192. இன்னமும் அவரை ஏற்றுக்கொள்ளாதவர்கள் ஆக இருக்கிற நீங்கள், இப்புத்தாண்டு தின இரவில் தேவனுக்கு நேராக உங்கள் கரங்களை உயர்த்தி, "தேவனே, வெளிப்படுத்தின விசேஷம் கொண்டு வந்த யோவான் மேல் இருந்த வல்லமையை நான் பெற்றுக் கொள்ளட்டும். அதினால், நான் யோவானைப்போல், மேலே வரும்படி அழைக்கப்படுகையில், உமக்கு முன்பாக சமாதானத்துடன் வந்து நிற்க எனக்கு முடியுமே'' என்று கூறுங்கள். உங்கள் கரத்தை உயர்த்திடுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப் பாராக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. சபை முழுவதிலும், தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. "நான் எனக்கு விடுக்கப்படும் அழைப்புக்காக பதில் உரைக்க ஆயத்தமாக இருக்கட்டும்"

193. எங்கள் பரம பிதாவே, இப்போதிலிருந்து இன்னும் இரண்டு மணி நேரம் தான் உள்ளது. அதன் பிறகு, புத்தாண்டு வேளையானது வந்துவிடும், அப்போது ஒரு புத்தாண்டு பிறந்துவிடும். இந்த ஆண்டில் நாங்கள் என்ன செய்தோமோ அவைகளை நாங்கள் செய்து விட்டோம். நான் செய்த அநேக காரியங்களைப் பற்றி நானே வெட்கமடைகிறேன். கர்த்தாவே, நான் அவைகளைப் பற்றி மனந் திரும்புகிறேன்.

194. நான் செய்திட்ட அநேக காரியங்கள் உண்டு. அவைகளில் அநேகத்தை என் சகோதரர்கள் புரிந்து கொள்ளவில்லை. நான் ஏன் அவைகளைச் செய்தேன் என்பதை வெளியிலே உள்ள எனது சகோதரர்கள் அநேகர் புரிந்து கொள்ளவில்லை. ஆனால், பிதாவே, அவ்வாறு செய்ய நான் நடத்தப்பட்டதால், அவ்வாறு செய்தேன். அந்த வழி நடத்தல் நிமித்தமாக நான் வெட்கமடையாதிருக்கச் செய்தருளுவீராக என்று நான் ஜெபிக்கிறேன். ஆனால் என்னை தொடர்ந்து வழி நடத்தும், கர்த்தாவே நான் கிரியை செய்ய வழி நடத்தப்பட்டது போலவே தொடர்ந்து செய்ய என்னை வழி நடத்தியருளும். தேவனே, எனக்கு உதவி செய்தருளும், ஏனெ னில், நான் உம்முடைய சித்தத்தை அறிந்து கொள்ள வேண்டுமென உத்தமமாக தேடுகிறேன். அப்பொழுது உலகத்தின் மக் களுக்கு ஜீவ அப்பத்தை நான் கொண்டு வருவதற்கு இயலுமே. அநேக ஆண்டுகளுக்கு முன்பாக இந்த சபையை விட்டு நீங்கிய போது நீர் எனக்கு காண்பித்தவிதமாக, நான் அப்பத்தாலான அந்த பெரிய அப்பமலையைக் கண்டேன். வெண்வஸ்திரம்தரித்த பரிசுத்த வான்கள் பூமி முழுவதிலுமிருந்து வந்து, இந்த ஜீவ அப்பம் புசிப்பதைக் கண்டேன். ஓ தேவனே, ஜீவ அப்பத்தைக் கொண்டு மக்களை போஷிப்பதிலிருந்து நான் தவறிட வேண்டாம்.

195. இப்பொழுது தங்கள் கரங்களை உயர்த்திட்ட பசியுள்ள ஆத்துமாக்களை ஆசீர்வதியும். அவர்கள் இன்னும் கூடுதலான ஜீவனுக்காக தேடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரையும், பரிசுத்த அவியால் நீர் நிரப்பிட வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன், கர்த்தாவே . தேவனே, அதை அளித்தருளும். அவர்களுக்கு ஆசீர்வாதங்களை அளித்தருளும். எங்குமுள்ள எங்கள் சகோதரர்களுக்கு ஒரு உதவி செய்தருளும்.

196. இங்கு வருவதற்காக புறப்பட்டுக் கொண்டிருக்கிற எங்களுடைய ஊழியக்கார சகோதரர்களை ஆசீர்வதியும், மற்றவர்கள் பிரசங்கித்துக் கொண்டிருப்பார்கள். நாங்கள் அந்த சத்தத்தை கவனமாகவும், பயபக்தியோடும் கேட்டுக் கொண்டிருக்கையில், அவர்கள் எங்களுக்கு ஜீவ அப்பத்தை தரவேண்டுமென்று ஜெபிக்கிறோம், பிதாவே. அதை அளித்தருளும்.

197. எங்களை ஆசீர்வதித்தருளும். புதிய நம்பிக்கைகளோடும், புதிய சிந்தைகளை கொண்டு வருவதோடும், புதிய வெளிப்படுத்துதல்களோடும், புதிய வல்லமையோடும் மற்றும் எல்லாவற்றோடும் இப்புத்தாண்டு உதயமாகட்டும். உம்முடைய



262. ஆனால் நீங்கள் உண்மையாகவே விசுவாசியை, தன்னுடன் அடையாளங்கள் பின்பற்றுவதாக அமைந்திருக்கக் காண்பீர்களாயின், அவர்களது ஜீவியத்தில் தாழ்மையை நீங்கள் கண்டால், அப்படிப்பட்டவர்கள் பாசாங்கு செய்பவர் அல்ல, அவர்கள் மெய்க் கிறிஸ்தவர்கள் என்று அறிந்துகொள்ளுங்கள்; ஒரு உண்மை யான அசலான ஒன்று என்று அறிந்துகொண்டு, அதைப் பற்றி ஒன்றும் பேசாதிருங்கள். நீங்கள் செய்ய வேண்டிய தெல்லாம், அவர்களோடு ஒன்று சேர்ந்து கொண்டு, தொடர்ந்து முன்னே செல்லுங்கள், ஏனெனில் நீங்கள் அவ்வாறு செய்கையில், இராஜா வின் பெரும்பாதையில் நீங்கள் முன்னேறிச் சென்று கொண்டிருக் கிறீர்கள்.

263. இப்பொழுது, என்ன நடக்கிறது? இதைக் கவனியுங்கள். வெளிப்பிரகாரங்கள், லூத்தரின் காலம் அது, புறஜாதி சபையாகிய சரீரத்தில் நாம் துவக்குகையில் இது ஏற்படுகிறது.

264. சுமார் கி.பி.606 வரையிலும், தியத்தீரா சபை காலம் வரையிலும், இரட்சிக்கப்பட்டவர்களில் அநேகர் யூதராயிருந்தனர். பிறகு இரட்சிக்கப்படும் யூதர்கள் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்து, யூதர்களும் புறஜாதிகளும் சம அளவில் கர்த்தரை ஏற்றுக் கொள்ளுகிற அளவுக்கு வந்தது. ஆயினும் அநேகர் யூதராகவே இருந்தனர். ஆனால் முழுவதும் புறஜாதிகளின் காலத்திற்குள் சபைக்காலமானது வந்தபொழுது, மார்ட்டின் லூத்தர், ஜான் வெஸ்லி ஆகியோரின் காலம் வந்தது. பாருங்கள்?

265. இருண்ட காலத்திற்குப் பிறகு வந்த கடைசியான மூன்று சபைக்காலங்களையும் கவனியுங்கள். இருண்ட காலமானது சபைக் காலங்களின் மத்தியப் பகுதிவரையிலும் நீடித்து, அதைக் கடந்தும் சென்றது. கடைசி மூன்று சபைக்காலங்கள் வருகையில், இந்த வெளிப்பிரகாரங்களைக் கவனியுங்கள். பாருங்கள் : மாம்சம், ஆத்துமா, ஆவி, வெளிப்பிரகாரமானது மாம்சமாயிருக்கிறது. பரிசுத்த ஸ்தலம்: நசரேய சபை, யாத்திரை பரிசுத்த சபை, சுதந்திர மெதோடிஸ்டுகள், பார்த்தீர்களா? அதன்பிறகு, மகா பரிசுத்த ஸ்தலம் வருகிறது: பெந்தெகொஸ்தேக்குள் திரும்பி வருகிறது. ஆதியில் அவ்வாறு தான் ஆரம்பித்தது. ஆதிக்குத் திரும்பினால் அப்படியே இருந்தது.

266. நீங்கள் இவ்வரைப்படத்தை வரைந்து கொள்கிறீர்களென்றால், நான் அங்கே, மாம்சத்தை கட்டுப்படுத்துகிற, மாம்சத் திற்குள் வழிநடத்துகிற அதன் ஐந்து வாசல்களைப் பற்றி இங்கே குறிப்பிட

257. நீங்கள் அதன் வழியாக கடந்து சென்று விட்டால், அவர் அப்பொழுது, இருதயத்தினுள்ளே சென்று, அங்கேதான் அவர் அரியாசனம் ஏறுகிறார். அவ்வனுபவம்தான் உங்களில் பரிசுத்த ஆவியானவர் இருப்பதாகும். இயேசு கூறினார், 'அவன் இந்தச் சிறுவரில் ஒருவனுக்கு இடறலுண்டாக்குகிறதைப் பார்க்கிலும் அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல் கட்டப்பட்டு, அவன் சமுத் திரத்தில் தள்ளுண்டு போவது அவனுக்கு நலமாயிருக்கும்'' அவர்களுக்கு எந்தத் தீங்கும் செய்யப்படக் கூடாது. அவர்களுக்கு இடறல் உண்டாக்குவது, அவர்களை ஏதாவது விஷயத்தில் நிலை தடுமாற வைப்பது உங்களுக்கு ஆகாது. இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு இடறல் உண்டாக்குவதைவிட, நீங்களே உங்களை சமுத்திரத்தில் மூழ்கடித்துக் கொள்வதோ, அல்லது இப்பூமியில் பிறவாமல் இருந்திருந்தாலோ நல்ல தாயிருக்கும். அந்தக் கருத்தில்தான் அவர் கூறினாரோ? அவர் பொய் உரைக்க முடியுமா? அப்போஸ்தலர்கள் அதைக் கூறினரா? இல்லை. இயேசுவே அதைக் கூறினார். என்னை விசுவாசிக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு நீங்கள் ஒரு இடறலைக் கூடக் கொண்டு வந்தால் என்று கூறினார். 'விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன'

258. ஒரு பெரிய மனிதர் கூறினார், "ஓ, நான் அவரில் விசுவாசம் வைத்துள்ளேன். அல்லேலூயா!''

259. 'அவர் வாக்குரைத்தப்படி நீங்கள் அந்நிய பாஷைகளில் பேசியிருக்கிறீர்களா, பாஷைகளை வியாக்கியானம் செய்திருக்கிறீர்களா, பிசாசுகளை துரத்துகிறீர்களா? தரிசனங்கள் உண்டா ? என்று அவரிடம் கேட்கப்பட்டது.

260. அதற்கு அவர், "இல்லை. அந்நாட்கள் கடந்து போய் விட்டன'' என்றார்கள். இந்த மனிதர் விசுவாசியல்ல, இவர் ஒரு பாவனை விசுவாசி.

261. இயேசு தாமே இறுதியாகக் கூறிய அவரது கடைசி வார்த்தைகள் என்னவெனில், 'விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங் களாவன' என்று. "உலகம் முழுவதும் போய் சர்வ சிருஷ்டிக்கும் அதைக் கூறுங்கள். செய்யுங்கள்'' என்று கூறினார். அது தான் சரியானது. ''நான் திரும்பி வருகிற வரையிலும் இவ்வடையாளங்கள் விசுவாசியைப் பின் செல்லும்'' என்று கூறினார். இவ்வுலகில் அவர் கூறிய கடைசியான வார்த்தைகள் இவைகள் தான். அதை எத்தனை பேர்கள் அறிவீர்கள்? வேதாகமத்தில் இது மாற்கு 16 அதிகாரத்தில் உள்ளது.

இப்பொழுது பாருங்கள், அந்த மனிதர் ஒரு பாவனை விசுவாசி.



ஆசீர்வாதங் கள், வாக்குத்தத்தங்கள் ஆகியவற்றை அது எங்களுக்கு மீண்டும் புதுப்பித்துத் தரட்டும். கர்த்தாவே. உம்முடைய கரங்களுக்குள் ளாக, எங்களுடைய ஜெபத்தோடு எங்களையே நாங்கள் ஒப்புக் கொடுக்கிறோம். இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, ஆமென்.

என்னுடைய சகோதர, சகோதரிகளே, உங்களுக்கு நன்றி.

## வெளிப்படுத்தின விசேஷம்

## நான்காம் அதிகாரம் #2

## இருபத்து நான்கு மூப்பர்கள்

## REVELATION CHAP. FOUR #2

## TWENTY FOUR ELDERS

## பிரான்ஹாம் கூடாரம்,இந்தியானா, அமெரிக்கா

## 61-01-01

1.... இக்காலையில் மீண்டும் இங்கே இருப்பதற்காக மிகவும் மகிழ்ச்சியாயிருக்கிறேன். நான் இப்பொழுது தான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். எவ்வாறு இந்தப் பனியானது... இப்பொழுது நாம் கொலராடோவில் இருந்திருந்தால், பனியானது பூஜ்யம் டிகிரிக்கு கீழே நாற்பது டிகிரியாகவும், மிருது வாயும், இளகினதாயும் இருக்கும். அதினால் நீங்கள் ஊதினால், அது மண்ணின் தூசி வரையிலும் செல்லும். (சகோ.பிரன்ஹாம் காற்றை வெளியே ஊதுகிறார் - ஆசி) குளிர்காலம் முழுவதும் இப்படித்தான் இருக்கும். ஆனால் இப்பொழுது இங்கேயோ, மத்தியப் பிரதேசமாக இது இருப்பதால், மிகவும் அதிகமாக ஈரமாகவும் தூறிக் கொண்டும் மிகவும் மோசமாக இருக்கிறது. நான் இங் கிருந்து பறந்து அரிசோனாவுக்கு போய், வசந்தம் வரும்வரை யிலும் அங்கே காத்து இருந்துவிட்டு, அதன்பிறகு திரும்ப வர வேண்டும் போல் இருக்கிறது.

2. இப்படித்தான் நமக்கெல்லாம் ஜலதோஷம் பிடிக்கிறது. கிருமிகள் யாவும் நிலத்தில் கிடக்கின்றன. அவைகள் யாவும் உறைந்து போய் இருக்கிறது, அது மீண்டும் உருகிடும், பிறகு மீண்டும் உறைந்து விடும்; பிறகு மீண்டும் உருகிடும். அது வெளியே மீண்டும் வருகிறது, அதை நாம் சுவாசிக்கிறோம், அதினால் கரகரப்பான தொண்டை நோயும், தலைவலிகளும், உபாதைகளும், வலிகளும் பெற்றுக் கொள்கிறோம். என்னே இது ஒருவேளை, என்னே ஒரு ஸ்தலம் அது.



இருதயத்தில் அல்ல. ''அந்த இடம்தான், ஆத்துமா அல்லது ஆவி என்பது குடிகொண்டிருக்கும் இடமாகும்'' என்று கூறுகிறார்கள். அவர்களை விட்டுவிடுங்கள். அவர்கள் தங்களுடைய அற்பமான கரியங்களை எடுத்து ஆராய்ந்து அதிலிருந்து தேவன் உண்டென்பதை நிரூபிப்பார்கள் மதியீன மானவைகளைக் கொண்டு தன்னைக் குறித்து சாட்சிகொடுக்க தேவன் செய்கிறார்.

252. இப்பொழுது அந்த விஷயம் பத்திரிக்கையில் பெரிய தலைப்புச் செய்தியாக இருக்கிறது. சகோதரன் போஸேயின் சிறிய மகள் என்னிடம் வந்து, 'சகோதரன் பிரன்ஹாமே, அன்றொரு நாளிலே நீங்கள் சொல்லிக் கொண்டிருந்தீர்களே பாருங்கள், பாருங்கள், விஞ்ஞானம் அதைக் கண்டு பிடித்துவிட்டது'' என்று கூறினாள்.

253. ''நல்லது, தேவனுக்கு துதி உண்டாவதாக! அதை நான் விரும்புகிறேன். சகோதரி, அதை நான் விரும்புகிறேன்'' என்று நான் கூறினேன்.

254. மனிதனின் ஆத்துமாவானது ஆவியின் தன்மையாக இருக் கிறது, அந்த ஆவியானது மனிதன் இருதயத்தில் வாசம் பண்ணு கிறது.

255. வெளிப்பிரகாரங்கள் என்பது என்ன? அதுவே மாம்சமாயிருக்கிறது. பார்த்தீர்களா? மாம்சம்தான் நீங்கள் முதலில் வருவதாக இருக்கிறது. முதலில் நீங்கள் அதை அக்கினியால் பட்சித்தாக வேண்டும். நீங்கள் மாசம்மைதக் கடந்து செல்ல வேண்டும். "நான் எழுந்து ஆலயத்திற்குச் செல்ல எனக்கு மனதில்லை, சாலைகள் மிகவும் வழுக்கலாயிருக்கின்றன; மிகவும் உஷ்ணமாயிருக்கிறது, ஓ சபைக்குப் போவதா, எனக்கு தெரியவில்லை'' என்று கூறு கிறீர்கள். அதுதான் மாம்சத்தின் சிந்தை. நீங்கள் அதை பட்சித்து விட்டு, அதைக் கடந்து செல்லவேண்டும். தேவன் அதைக் கடந்து செல்லவேண்டியதிருக்கிறது.

256. தேவன் பிரவேசிக்க வேண்டிய அடுத்த பாகமானது, அவர் ஆத்துமாவுக்குள் வர வேண்டியதிருக்கிறது. அதுதான் சுபாவமாயிருக்கிறது. ''ஓ, ஜோன்ஸ் குடும்பத்தினர் என்னைப் பற்றி என்ன சொல்வார்களளோ? ஓ, என்னே! அவ்விதமான ஒரு காரியத்தை நான் செய்தால், என் சபை என்னை வெளியே தள்ளிவிடுமே என்று கூறலாம். பாருங்கள்? ஆனால் நீங்கள் அதன் வழியாகவும் கடந்து செல்லவேண்டும்.

249. இப்பொழுது, இங்கே ஜான் டோ என்ற ஒரு மனிதன் இருக் கிறான் என்று வைத்துக்கொள்வோம். அங்கே சாம்டோ என்று இன்னொரு மனிதனும் இருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். ஜான் டோ என்பவர் ஒரு மனிதன், சரீரம்.... இவர், சாம்டோவுக்கு சகோதரனாவார். ஜான் என்பவர் ஆவி, ஆத்துமா சரீரம் என்ப வைகளை உடையவர். அதே விதமாகத்தான் சாம்டோவும் இருக்கிறார். இவருக்கும் ஆவி ஆத்துமா சரீரம் உள்ளது. இம்மனிதன் பொல்லாதவனும், கீழ்த்தரமானவனும், ஏமாற்று கிறவனும், திருடுகிறவனும், பொய் சொல்லுகிறவனும், விபச்சாரம் செய்கிற வனும், மற்றும் அவனால் செய்ய முடியும் அளவுக்கு எல்லாப் பொல்லாங்கும் உடையவனாய் இருக்கிறான். ஆனால் மற்ற மனிதனோ தன்னில் முழுவதும் அன்பு, சமாதானம், சந்தோஷம் இவற்றால் நிறைந்தவனாய் இருக்கிறான். இவர்கள் இருவருமே ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகியவைகளை உடையவர்களாக இருக்கிறார்கள். சரி, அப்படியானால் இவர்களுக் கிடையே அப்படி என்ன தான் வேறுபாடு உள்ளது? இவர்களில் ஒரு மனிதன் தன் கடந்த காலத்தைக் குறித்து சிந்தித்துப் பார்த்து, "என் தாயாரைப் பற்றி எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது, நாங்கள் சிறுவர்களாக இருந்த போது செய்தது எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது'' என்று கூற முடியும். இருவருமே அவ்வாறு நினைவு கூர முடியும். இவர்கள் இருவருக்குமே ஆவிகள் உண்டு, இவர்கள் இருவருமே ஆத்து மாக்களை உடையவர்கள், இவர்கள் இருவருமே சரீரங்களை உடையவர்கள்தான்.

250. ஆனால் இவ்விருவரில் ஒரு மனிதனுடைய ஆவியின் சுபாவ மானது பொல்லாததாயும், இன்னொரு மனிதனுடைய ஆவியின் சுபாவமோ நல்லதாக இருக்கிறது. ஆகவே ஆவியின் சுபாவம்தான் ஒரு மனிதனின் ஆத்துமாவாகும். பாருங்கள்? ஆகவே, இப் பொழுது, தேவன் எதனுள் பிரவேசிக்க முயன்று கொண்டிருக் கிறார்? ஆவிக்குள், மனிதனின் இருதயத்திற்குள் தான். ஆவி யானது மனிதனின் இருதயத்திற்குள்தான் இருக்கிறது.

251. நான் இன்னும் இதைப் பற்றி கூறி முடிக்கவில்லை. விஞ்ஞானம் அதைப் பற்றி என்ன கூறியது என்பது உங்களுக்குத் தெரியும். "மனிதன் தன் இருதயத்தைக் கொண்டு சிந்தனை செய்ய முடியாது' என்று கூறினார்கள். ஆனால் விஞ்ஞானமானது ஒரு விஷயத்தை கண்டுபிடிக்க ஆரம்பித்திருக்கிறது, அதென்ன வெனில், மானிட இருதயத்தினுள் ஒரு சிறு அறை உள்ளதென்றும், அங்கே ஒரு இரத்த உயிரணுகூட கிடையாது என்றும், அங்கே ஒன்றுமே இல்லை என்றும் கூறுகிறார்கள். இது மனித இருதயத்தில்தான், மிருகத்தின்



ஆனால் நதிக்கப்பால் ஓர் தேசமுண்டு அது என்றும் இனிமையானது என்பர் விசுவாச அளவைக்கொண்டே அதின் கரையை நாம்

அடைவோம் ஒவ்வொருவராய் அதன் நுழைவாயிலில் நுழைவோம். அங்கே சாகாமையுள்ளவரோடு வாழ்வோம் ஒரு நாளில் பொன்னான மணியோசை ஒலிப்பர், உமக்காகவும் எனக்காகவும்.

3. அப்பரம் வீட்டுக்குத் தான் நாம் போய் வாழப் போகிறோம் அல்லவா? அந்நாளுக்காகத்தான் நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

4. கடந்த இரவில் எனது சகோதரர்கள் பிரசங்கித்த அற்புதமான பிரசங்கங்களை நான் நிச்சயமாக கேட்டு உணர்ந்து மகிழ்ந்தேன். பேட் டைலர் எங்கே இருக்கிறார்? அவர் இன்று காலையில் இங்கே இருக்கிறாரா? பேட், நீங்கள் அங்கே ஜீவனைப் போல் பெரிதாக வும், இயற்கையைப் போல் இரட்டை மடங்காகவும் உட்கார்ந் திருப்பதை நான் காணவில்லை. நீங்கள் அங்கே உட்கார்ந்திருப் பதை நான் காணவில்லை. முதல் தடவையாக பேட் அவர்கள் பிரசங்கிக்கக் கேட்டேன். அதை நான் நிச்சயமாக கேட்டுணர்ந்து மகிழ்ந்தேன். நாம் யாவருமே அவ்வாறுதான் உணர்ந்தோம் என்று நான் நிச்சயமாக இருக்கிறேன்.

5. அதன்பிறகு, அந்த சிறிய சகோதரனொருவர் இங்கே ஒரு பிரசங்கத்தைப் பற்றி அனல் கக்கும் சாட்சியைக் கொடுத்தார்; அது உண்மையிலேயே ஒரு இயந்திரத் துப்பாக்கியால் சுட்டது போல் இருந்தது. ஓஹையோவிலிருந்து வந்த ஒரு சகோதரன் அவர், இக்காலையில் அவர் இங்கேயிருக்கிறாரா? சகோதரன் நெவில் அவர்கள், அவர் மிகவும் தீவிரமாக அனலுறைக்கப் பேசியதைப் பற்றிக் குறிப்பிட்டார்.

6. பிறகு, சகோதரன், ஜே.டி.பார்நெல் அவர்கள். சகோதரன் பீலரை அவர்கள் பேசும்படி கேட்டுக் கொள்ளவில்லை என்று நான் எண்ணுகிறேன். சகோதரன் பார்நெல் இங்கு இருக்கிறாரா? சகோதரன் பார்நெல் அவர்களும், சகோதரன் பீலர் அவர்களும்? எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை, நான் சகோதரன் பீலரை பார்த்தேன் என்று நினைக்கிறேன்.

7. இந்த விளக்கொளிகள், இது ஒரு... புதிய கூடாரத்தை அவர்கள் கட்டுகையில் அவைகளை வித்தியாசமாக அமைப்பார்கள் என்று நான் நம்புகிறேன். சிறிது வித்தியாசமாக ... பரீட்சார்த்தமாக இது முதலில் அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே, புதிய ஒன்றை அமைக் கையில்,

இவ்விளக்குகள் இப்போதிருப்பதை விட சற்று வித்தியாசமாக இருந்திட வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். சரியாக பார்க்க முடியவில்லை; ஒரு புதிய கூடாரத்தைக் கட்டு கையில், மக்கள் அமர்ந்திருக்கும் இடம் சற்று சாய்வாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். எப்பொழுதும் சபை யாரை நேருக்கு நேராகப் பார்க்க வேண்டியது உள்ளது. அதிலும் விசேஷமாக இருதயத்தைப் பகுத்தறிந்து சொல்லும் கூட்டங்களின் போது, நாம் முன்னும் பின்னுமாக இருந்து, நபர்களைக் கூறி அழைக்க வசதியாக இருக்கும்படி கட்ட வேண்டும். பின்பு, ஒரு சிறிய முகப்பு (பால்கனி) இருந்தால் வெளியே வருவதற்கு நன்றாக இருக்கும்.

8. சகோதரன் லிட்டில்ஃபீல்ட், பில்லி இங்கேயிருந்தால்.... அவர் நேற்று இரவு என்னை தொலைபேசியில் அழைத்து, நான் பிரதிஷ்டை செய்த அந்த கூடாரத்திற்கான விளக்கங்களுடன், கட்டிடக் கலைஞர்கள் வரைந்த படத்துடன் அனுப்பியிருப்பதாகக் கூறினார்... சகோதரன் வுட்ஸ் அவ்வரைப்படத்தை வரைய கட்டிடக் கலைஞர் களுக்கு ஐந்நூறு டாலர்கள் கொடுக்க வேண்டியதாயிருந்தது என்று நான் நம்புகிறேன். அவர் கட்டிடப் பொருள்களுக்கான விலை விபரங்களுடன், இவ்வளவுக்கு இவ்வளவு அளவில் கலவை இருக்க வேண்டும், என்பது பற்றிய விபரங்களையெல்லாம் அனுப்புவதாகக் கூறினார். அதை அவர் நமக்கு அனுப்புவதாகவும், நாம் வரவேண்டுமென்றும் விரும்புகிறார் என்றும், கட்டப் போகும் கட்டிட மாதிரியை மரத்துண்டுகளால் வெட்டி மாதிரி வடிவமைப்பை, உருவாக்குபவர்களிடம் போய், அவருடைய கூடாரத்தைப் போல் ஒரு வடிவமைப்பை, மாதிரியை உருவாக்க முடியுமோ என்று பார்த்து வருவதாகவும் கூறினார். அது ஒரு அழகான கூடாரமாகும், ஒரு பெரியதொன்றல்ல, ஆனால் அது அழகான கூடாரமாகும்.

9. "பில்லிக்கு நீங்கள் அதை அனுப்பின உடனேயே, அதை அறங்காவலர்களிடமும், உதவிக்காரர்களிடமும் கொடுத்து விடுவேன்; அப்பொழுது அவர்கள் எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும், தங்கள் கட்டிடத்தை ஆரம்பிக்க அவர்களுக்கு எவ்வளவு பணம் தேவைப்படும் என்பதை மதிப்பீடு செய்யட்டும்'' என்று நான் அவரிடம் கூறினேன்.

10. அவர் கூறினார், "நீங்கள் வேலையை ஆரம்பிக்கும் பொழுது, நான் வேலை செய்யும் பொழுது அணிந்து கொள்ளும் ஒரு ஜோடி மேல்காற் சட்டைகளை அணிந்து கொண்டு, வேலை நடக்கும் காலத்தில் அங்கேயே தங்கி கவனித்துக் கொள்கிறேன்'' என்று. சகோதரன்



முடியும்? அவர் மூளையைப் பற்றித்தான் கூறியிருக்க வேண்டும்'' என்று அம்மனிதன் கூறினார்.

242. தேவன் இருதயம் என்பதற்குப் பதிலாக அவனது மண் டையிலே சிந்தித்தான் என்ற அர்த்தப்படுத்தியிருப்பாரெனில், அவர் ''அவனது தலை'' என்று கூறியிருப்பார்.

243. மோசேயிடம் தேவன் சொன்னதைப் போல்... "உன் பாதரட் சையைக் கழற்று, நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி'' என்று தேவன் மோசேயிடம் கூறினார். அப்படியிருக்க, மோசே, "நல்லது, நான் என் தொப்பியை கழற்றிவிடுகிறேன், அதுவும் நல்லதுதான்'' என்று அவன் கூறினார் எப்படி? அவர் தொப்பி' என்று கூறவில்லை. 'பாதரட்சை ' என்றுதான் கூறினார்.

244. "நீங்கள் மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்'' என்று அவர் கூறிய போது, அவர், 'பிதா குமாரன் பரிசுத்த ஆவி' என்ற அர்த்தத்தில் கூறவில்லை. அவர் என்ன கூறினாரோ அதுவேதான் அதன் பொருளாகும்.

245. "நீ மறுபடியும் பிறக்க வேண்டும்'' என்று அவர் கூறிய பொழுது, "நீ அவ்வாறு விரும்பினால் செய்யலாம்' என்ற அர்த்தத் தில் கூறவில்லை.

246. "விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன'' என்று அவர் கூறினாரேயல்லாமல், ஒரு வேளை அவ்வாறு நடக்கலாம்'' என்று கூறவேயில்லை.

247. அவர் என்ன கூறுகிறாரோ அதுவே தான் அவர் கூறியதன் பொருளாகும். அவர் தேவனாயிருக்கிறார். அவர்தாம் கூறியதை திரும்பப் பெற்றுக்கொள்ள மாட்டார். அவருக்கு எது நிறைவானது என்று தெரியும். எனவே அவர் அந்த விதமாக அதைச் செய்கிறார். அவ்விதமாகவே அது இருக்கும்படி அவர் விரும்புகிறார். நீங்கள் அந்த அளவுக்கு உயர்ந்துவர வேண்டும். உங்களது எண்ணத் திற்கேற்ப அவர் இறங்கி வர முடியாது, நீங்கள்தான் அவரது கருத்திற்கேற்ப உயர்ந்து போக வேண்டும். அதுதான் அங்கிருக்கிற வேறுபாடு.

248. இப்பொழுது இந்த சரீரம், ஆத்துமா என்ற அமைப்பில் .. ஆத்துமா' என்ற வார்த்தையை வேதாகம அகராதியிலோ, அல்லது வெப்ஸ்டர் ஆங்கில மொழி அகராதியிலோ பார்த்தால், அது "ஆவியின் சுபாவம்'' என்ற அர்த்தத்தை உங்களுக்குக் கொடுக்கும்.

அப்பிரகாரங்களை ஒரு வட்ட வளைத்தில் வரைந்து கொள்ளலாம். இவ்விதமாக நாம் எடுத்து பிரகாரங்களை வரைந்து கொள்வது மிகவும் நல்லது என்று நான் நம்புகிறேன்.

239. மனிதன் என்னவாயிருக்கிறான்? அவன் சரீரம், ஆத்துமா, ஆவி ஆகிய மூன்றும் அடங்கிய ஒருவனாயிருக்கிறான். அதை எத்தனை பேர்கள் அறிவீர்கள்? தேவனுடைய அணுகுமுறையை கவனியுங்கள். அவனுடய இருதயமானது எப்படியிருக்கிறது? "தேவன் மனிதனின் இருதயத்தை, தனது கட்டுப்பாட்டு அறை யாக இருக்கும்படி அதைத் தெரிந்துகொண்டார்'' என்ற எனது செய்தியை நீங்கள் நினைவில் வைத்திருக்கிறீர்களா? பிசாசானவனோ மனிதனின் தலையை, தனது கட்டுப்பாட்டு அறையாக இருக்கும்படி தெரிந்து கொள்கிறான். பிசாசு மனிதனை, அவனது கண்களைக் கொண்டு காணும்படி செய்து, அதன் மூலம் காரியங்களை அறிந்து கொள்ளச் செய்கிறான். ஆனால் தேவனோ, மனிதன்தான் கண்களால் காண முடியாதவைகளை இருதயத்தால் விசுவாசிக்கும்படி செய்கிறார். தேவன் மனிதனின் இருதயத்தில் வாசம் பண்ணு கிறார்; மனிதனின் இருதயமே தேவனுடைய சிங்காசமான இருக்கிறது. அதை நீங்கள் புரிந்து கொண்டீர்களா? மனிதன்! தேவன் மனிதனின் இருதயத்தில் தனது சிங்காசனத்தை உண்டாக்கினார்.

240. இப்பொழுது கவனியுங்கள், மனிதனில் முதலாவதான பாகமானது என்ன? மனிதனில் முதலாவதான பாகம் சரீரமாகும். அடுத்த பாகம் ஆத்துமாவாகும். அதுவே அவனது ஆவியின் சுபாவமாக இருக்கிறது : அவன் அப்படிப்பட்டவனாயிருக்கிறானோ, அவ்வாறாக அவனை உருவாக்குகிறது. இப்பொழுது அவர் அணுகுகிறார். மனிதனின் மூன்றாவதான பாகமானது அவனது ஆவியாகும். அவனது ஆவியானது அவனது இருதயத்தின் மத்தியில் உள்ளது. இருதயத்தின் மத்தியில்தான் தேவன் தனது சிங் காசனத்தை ஸ்தாபித்து அமர வருகிறார்.

241. நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக சிக்காகோவிலுள்ள ஒரு வயோதிப அவிசுவாசியான ஒருவர் கூறியது பத்திரிக்கையில் வந்தது, அவர் கூறுவதுண்டு இவ்வாறாக: "தேவன் சாலொமோன் மூலம், 'அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ' என்று கூறியதின் மூலம் ஒரு தவறு செய்து விட்டார். ஏனெனில், இருதயத்தில் நினைவு கொள்வதற்கு அங்கே எந்தவித சிந்திக்கத்தக்கதான வினைத்திறமும் கிடையாது. எனவே மனிதன் எங்ஙனம் தன் இருதயத்தின் வாயிலாக சிந்திக்க



லிட்டில் ஃபீல்ட் அத்தனை தயவுள்ள மனிதர் அவர். அவர் அருமையானவர், தயவு பொருந்திய மனிதர்.

11. இப்பொழுது இப்புத்தாண்டை துவங்குவதற்கு நீங்கள் யாவரும் சரியான உணர்வோடு இருக்கிறீர்களா? இப்புத்தாண் டில் சரியான சீரோடு இங்கிருந்து வெளியே செல்லுங்கள். கர்த்தரை சேவிக்கிறவர்களாய் நாம் இவ்வாண்டை சரியாக ஆரம்பிக்க போகிறோம். எத்தனை பேர் காலையில் எழுந்து, பழைய ஆண்டுக்காகவும் அது உங்களுக்கு எவ்வளவு முக்கியம் வாய்ந்த தாயிருந்தது என்பதற்காகவும் நன்றி செலுத்தி, பழையனவற்றை மறந்துவிடும்படி அவரைக் கேட்டுக் கொண்டீர்கள்? எனவே நாம் நமது படுக்கையண்டையில், எழுந்திருக்கும் போது அதைச் செய்கிறோம். அதன்பிறகு நாம் மேசைக்கு வந்து, வழக்கமான குடும்ப பலிபீடமாக அது இருக்கிறது; அங்கே குடும்பமாக மேசையண்டை கூடி வந்து ஜெபிக்கப்படுகிறது.

12. எனவே நாம் எப்பொழுதும் படுக்கைக்கு செல்லும் முன்னர், இரவில் ஜெபிக்கிறதை ஒரு பழக்கமாக கொள்ள முயற்சிக்கிறோம். நான் மனந்திரும்பியது முதல் அதை என் பழக்கமாகக் கொண்டிருக்கிறேன். அதிகாலையில் நான் எழுந்து, அது இருளாயிருந்தாலும் பனி மூட்டமாயிருந்தாலும், நான் எங்கே போகிறேன் என்பதே தெரியாமல் நடந்து செல்வேன். ஆனால் நான் அவரிடம் என் கரத்தைப் பிடித்து, அந்த நாள் முழுவதும் நடத்தும்படி கேட்பேன்.

13. முன்பு இந்த தெருவுக்கு அப்பால் நாங்கள் குடியிருந்த போது, நான் இளைஞனும், பில்லி பாலுக்கு மூன்று அல்லது நான்கு வயது இருக்கும், அந்நாட்கள் எனக்கு நினைவுக்கு வருகிறது. ஒரு இரவில் அவன் குடிக்கத் தண்ணீர் கேட்டான். ஒரு வாளியில் குவளையுடன் தண்ணீர் சமையலறையில் இருந்தது. நாள் முழுவதும் நான் கடினமாக வேலை பார்த்து விட்டு வந்து, பாதி இராத்திரி வரையிலும் பிரசங்கம் செய்திருந்தேன். அவன், ''அப்பா, எனக்கு தண்ணீர் வேண்டும்'' என்றான்.

14. "பில்லி, சமையலறைக்குள் போ, தண்ணீர் அந்த சிறிய மேசையின் மேல் இருக்கிறது, எடுத்துக்குடி” என்றேன் நான்.

15. அவன் எழுந்து, கண்களை கசக்கிக் கொண்டு, அங்கே பார்த்தான். ''அப்பா, எனக்குப் போக பயமாயிருக்கிறது'' என்று கூறினான்.

16. "ஓடிப்போய் தண்ணீர் குடித்துக் கொள், அப்பா மிகவும் களைப்பாயிருக்கிறேன், அன்பே" என்று கூறினேன். அந்த ஜன்னல் வரைக்கும் உள்ள தூரம் தான், மிகவும் சமீபத்தில் இருந்தது.

17. "ஆனால் போக எனக்குப் பயமாயிருக்கிறது, அப்பா'' என்றான் அவன். பாருங்கள்.

18. நான் சிறுவனோடு எழுந்தேன். அவன் கையை நீட்டி என் கையைப் பிடித்துக் கொண்டான். அது நன்றாக இருந்தது. நாங்கள் நான்கு அல்லது ஐந்து அடிகள் நடந்திருப்போம். அங்கே அவன் தரை விரிப்பின்மேல் இடறிக்கொண்டான், அதினால் அவன் சற்று சறுக்கிவிட்டான். மேடா மெழுகைக் கொண்டு தரையைப் பூசி விட்டு, அதன் மேல் லினோலியத்தை விரித்திருந்தாள். அது எப்படியிருக்கும் என்று உங்களுக்குத் தெரியும். ஆனால் நான் அவனது கையைப் பிடித்திருந்தேன். அப்பொழுது அவனும் என் கையைப் பிடித்து இறுக்கி இன்னும் அதிகமாக பற்றிக் கொண்டான். அங்கே அப்பொழுது நான் ஒரு கணம் நின்றேன். அப்பொழுது நான் எனக்குள், "தேவனே, அது சரிதான், என் கரத்தை நீர் பிடித்துக் கொள்ளாமல் ஒரு அடி கூட எடுத்து வைக்க விரும்பவில்லை; ஏனெனில் எப்பொழுது என் அடிகள் சறுக்கும் என்பதை நான் அறியேன்'' என்று சிந்தித்தேன். பார்த்தீர்களா? "உம்முடைய பலத்த வல்லமையான கரமானது என் கரத்தை இறுகப் பிடித்துக் கொள்கிறது என்பதை நான் உணர முடிகிற வரையிலும், எனது அப்படிப்பட்ட வேளைகளில் நீர் என்னைப் பிடித்துக் கொள்வீர் என்பதை நான் அறிவேன்'' என்றேன். பாருங்கள்.

19. எனவே, என் கரத்தை அவர் கரத்தினுள் வைத்துக் கொள்ளும் பழக்கத்தை பழக்கமாகக் கொண்டிருக்க நான் முயலுகிறேன். சில வேளைகளில் என் பார்வைக்கே நகைப்புக்கிடமானதாக, அர்த்த மற்றதாக இருக்கக்கூடிய காரியங்களை நான் செய்திருக்கிறேன், அவ்விதமான காரியங்கள் மானிட சிந்தைக்கு, இயல்பானதாக இராமல் அதற்கு முரணாக இருப்பதாகத் தோன்றும்; ஆனால் அப்படியே நடக்கட்டும் என்று அதை விட்டு விடுவோமானால், சரியாக செய்யக்கூடிய காரியம் அது ஒன்றே என்பதை நான் பின்பு கண்டுபிடித்திருக்கிறேன்.

20. சரியாக இல்லை என்பதாக பார்வைக்கு தோன்றும் காரியங் களைச் செய்யும்படி தேவன் உங்களை நடத்துவாரெனில், எங்கோ அது சரியாகத்தான் இருக்கும் என்பதை நீங்கள் காண்பீர்கள்; ஏனெனில் எவ்விதம் வழிநடத்துவது என்பதை அவர் அறிவார். எனவே, நம்முடைய



தேவனுடைய நியாயசனமாக இருக்கிறார். "நீங்கள் எனக்கு விரோத மாகப் பேசினார் அது உங்களுக்கு மன்னிக்கப்படும், ஆனால் இன்றுெவர், இன்னொரு கிருபாசனம் வருகிறார். பாருங்கள். நீங்கள் மனுஷகுமாரனுக்கு விரோதமாகப் பேசலாம். அதை நான் உங்களுக்கு மன்னிப்பேன், ஆனால் ஒருநாளிலே, பரிசுத்த ஆவியானவர் வந்து ஜனங்களின் இருதயங்களில் வாசம் பண்ணுவார். அவருக்கெதிராக பேசப்படும் ஒரு வார்த்தையும் மன்னிக்கப் படுவது இல்லை.''

235. நியாயத் தீர்ப்பானது காலங்கள் தோறும் இன்னும் அதிக மதிகமாக கடுமையாகிக் கொண்டே போகிறது. தேவன் தன்னோடு ஒப்புரவாகிட, பாவிகள் தன்னிடம் வரவேண்டுமென்பதற்காக முயற்சித்துக் கொண்டேயிருக்கிறார்; ஆனால் அவரது பொறுமையானது தொடர்ந்து நீடித்துக் கொண்டேயிருக்க முடியாது, தேவனுடைய பொறுமை முடியப் போகிறது. முதலாவதாக அவர் உயர வானங்களில் இருந்து நட்சத்திரங்களில் பிரகாசித்துக் கொண்டேயிருந்தார். இரண்டாவதாக அவர் பூமியிலிருந்து கொண்டு ஷெகினா மகிமையின் மூலமாக பிரகாசித்துக் கொண்டேயிருந்தார். அடுத்ததாக, அவர் மாம்சமாகி, நம் மத்தியில் வாசம் பண்ணினார், இன்னமும் அவர் பொறுமையை உடையவராக இருந்து கொண்டேயிருக்கிறார். பிறகு, அவர் மனிதனை தமது இரத்தத்தால் மீட்டுக் கொண்டு, தமது சபைக்குள் பரிசுத்த ஆவியின் ரூபத்தில் வந்திட்டார். அதற்கெதிராக பேசினால் இனி மேல் மன்னிப்பே இல்லை என்ற அளவுக்கு அது முடிவடைந்து விட்ட விஷயமாக இருக்கிறது.

236. இப்பொழுது எங்கே அசைவானது வருகிறது என்பதை நீங்கள் காண முடியும். மக்கள் இன்ன நேரம் இது என்பதை உணர மாட்டாத வேளையில் நாம் இருந்து கொண்டிருக்கிறாம். அது என்ன வாயிருக்கிறது என்பதை மக்கள் கிரகித்துக்கொள்ள முடியாததாக இருக்கிறது.

237. இப்பொழுது முதலாவதாக சிங்காசனம் பரலோகத்தில் இருந்தது, அது நியாயாசனமாக இருந்தது. இரண்டாவதாக சிங்காசனமானது கிறிஸ்துவிலே இருந்தது. மூன்றாவது சிங்காசனமானது மனிதனில் இருக்கிறது.

238. இங்கே நான் வரைந்திருக்கிற காரியத்தை இப்பொழுது எடுத்துக்கொள்ளட்டும். எனக்கு கரும்பலகை இருந்தால் நல்லது என்று நான் நினைக்கிறேன். ஆனால் நான் இவ்விஷயத்தை இன்னும் கூடுதலாக புரிய வைக்க முடியும். நாம் அதை எடுத்துக் கொண்டு,

பிரதிபலித்துக்கொண்டு இருக்கிறது. அவ்வொளிதான் அவ்வேழு விளக்குகளின்மேல் பிரகாசித்துக் கொண்டு, அவருடைய ஒளியை, அவரது நிறங்களை, அவரது உயிர்த்தெழுதலின் வல்லமையை நேராக சபைக்குள் பிரதி பலித்துக் கொண்டிருக்கச் செய்கிறது. ஆமென்!

"அந்தச் சிங்காசனத்திற்கு முன்பாகப் பளிங்குக் கொப்பான கண்ணாடிக் கடலிருந்தது; அந்தச் சிங்காசனத்தைச் சுற்றிலும் நான்கு ஜீவன்களிருந்தன. அவைகள் முன்புறத்திலும் பின்புறத்திலும் கண்களால் நிறைந்திருந்தன."

வெளி. 4:6

232. அவன் தொடர்ந்து கூறிக்கொண்டே வந்து, இங்கே எசேக்கியேல் பார்த்த அதே ஜீவன்களைப்பற்றிக் குறிப்பிடுகிறான். அவைகள் காவல் செய்பவையாகும். ஒன்று மனுஷ சாயலானது, இன்னொன்று சிங்க முகமாகவும், அடுத்தது கழுகு முகமாகவும் இருந்தது. அது என்னவாக இருந்தது? இப்பொழுது கவனியுங்கள், நாம் யூதா கோத்திரத்து சிங்கம் முதற்கொண்டு மற்றும் உள்ள ஜீவன்களைப் பற்றி உங்களுக்கு காண்பிக்கப்போகும் பொழுது, ஓ அது என்னே ஒரு காட்சியாக இருக்கிறது! அவைகள் கிருபாசனம் வைக்கப்பட்டிருந்த அந்த ஆசரிப்புக் கூடாரத்தின் நான்கு பக்கங்களிலும் நான்கு சுவர்களாக நின்று கிருபாசனத்தை காவல் காத்துக்கொண்டிருந்தன. ஓ, நான் ..... மகத்தான நாட்கள் நமக்கு முன்னால் உள்ளன.

233. நாம் இப்பொழுது கண்ட வண்ணமாக, அது பரலோகத்தில் உள்ள தேவனுடைய சிங்காசனமாக இருக்கிறது. மோசே அதை இப்பூமியில் நிழலாட்டமாக உண்டாக்கினான், அது பரலோகத்தில் உள்ள தேவனுடைய சிங்காசனத்திற்கு மாதிரியாக இருந்தது; ஏனெனில் அவரது நியாயசனம் பூமியில் காணப்பட்ட ஆசரிப்புக் கூடாரத்தின் மகாபரிசுத்த ஸ்தலத்தில் மாதிரியாக வைக்கப்பட்டிருந்தது. இஸ்ரவேலர் அனைவரும் அந்த ஒரு ஸ்தலத்திற்கு இரக்கத்தைக் கண்டடையும்படி வந்தனர். ஏனெனில் தேவன் சிந்தப்பட்ட இரத்தத்தின் கீழாகத்தான் பாவியை சந்திக்கிறார்.

234. இப்பொழுது கவனமாகக் கேளுங்கள். ஒருநாளிலே, கிருபாசனத்தின் மீதிருந்த ஷெகினா மகிமையானது இன்னொரு கூடாரத்தின் மேல் போய் தங்கினது. (ஆமென்!) இந்த ஒருவர், "பிதாவான வர்தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரம் முழுதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்'' (யோவான் 5:22). இந்த ஒருவர்தான்



சகலத்திற்கும் போதுமான கிருபையுள்ளவர் அவரே என்பதையும், நமக்கு அவசியமானவை யாவும், நமக்காக அக்கறை கொள்கிறதும் யாவும் அவரிலே உள்ளது என்றும் நாம் கண்டு கொண்டோமானால், அவரைத்தவிர மற்ற எல்லாவற் றையும் நாம் தள்ளிவிட்டு, மாறாதவரான அவரது கரத்தை பற்றிக் கொள்வோமாக.

21. இங்கே நாம் ஒரு பாடலை பாடுவது வழக்கம். நீண்ட காலமாக அதைப்பாட நான் கேட்டிருக்கவில்லை. ஆனால் என்னால் பாட முடியாது ..... இங்கே அந்நியர்கள் யாரும் நம்மோடு இல்லை என்று நான் நினைக்கிறேன். எனவே தான் நான் இந்த சிறு பாடல்களை பாட முயற்சிக்கிறேன், ஏனெனில் நான் அவைகளை நேசிக்கிறேன். ஜீன், இதை ஒலிநாடாவில் பதிவாக விடுவீரெனில், பொதுவிலே கேட்கும்படி போகட்டும். இந்த ஒரு சிறிய பாடலை பாடுவது வழக்கம். காலமானது விரைவான சூழல் மாற்றங்களைக் கொண்டது, பூமியில் ஒன்றும் அசையாதவைகள் அல்ல, அசையாத

வைகளே நிலைக்கும் நித்தியமானவைகளின் மேல் நம்பிக்கை கொள்ளுவீர்,

தேவனுடைய மாறாத கரத்தைப் பற்றிக்கொள்வீர்

22. நீங்கள் எத்தனை பேர்கள் இப்பாடலைக் கேட்டிருக்கிறீர்கள்? நான் அதை நேசிக்கிறேன். நீங்கள் நேசிக்கவில்லையா? ஒரு வரியை முயற்சிப்போம்.

தேவனுடைய மாறாத கரத்தைப் பற்றிக்கொள்வீர் தேவனுடைய மாறாத கரத்தைப் பற்றிக்கொள்வீர் நித்தியமானவைகளில் உம் நம்பிக்கையைக் கட்டுவீர்

தேவனுடைய மாறாத கரத்தைப் பற்றிக்கொள்வீர்

23. ஒரு அடியை பாட முயற்சிப்போம் :

நம் யாத்திரை முடியும் பொழுது, தேவனுக்கு நாம் உண்மையாய் இருந்திருப்போமெனில், மகிமையில் அழகும் பிரகாசமுமான உமது வீட்டை பரவசமான உம் ஆத்துமா காணுமே.

தேவனுடைய மாறாத கரத்தைப் பற்றிக்கொள்வீர் தேவனுடைய மாறாத கரத்தைப் பற்றிக்கொள்வீர் நித்தியமானவைகளில் உம் நம்பிக்கையைக் கட்டுவீர்

தேவனுடைய மாறாத கரத்தைப் பற்றிக்கொள்வீர்

24. ஜெபத்திற்காக நாம் ஒரு நிமிடம் எழுந்து நிற்போமாக. விரும்பினால் நாம் நமது கரங்களில் ஒன்றை தேவனுக்கென்று உயர்த்துவோமாக, அப்பாடலை மீண்டும் பாடுவோம்.

தேவனுடைய மாறாத கரத்தைப் பற்றிக்கொள்வீர் தேவனுடைய மாறாத கரத்தைப் பற்றிக்கொள்வீர் நித்தியமானவைகளில் உம் நம்பிக்கையைக் கட்டுவீர் தேவனுடைய மாறாத கரத்தைப் பற்றிக்கொள்வீர் உலகின் வீணான ஐசுவரியத்தை இச்சியாதீர் அது விரைவில் கெட்டுப்போகும் நித்தியமானவைகளில் உம் நம்பிக்கையை கட்டுவீர் அவை ஒருக்காலும் ஒழிந்து போவதில்லை.

25. பரம பிதாவே, நாங்கள் நிற்கையில் கர்த்தாவே, ஓ, நான் இப் பழைய பாடல்களை பாட விரும்புகிறேன், அவைகள் எங்களது இருதயத்தின் ஆழத்தில் அதின் உள்பாகங்களில் போய், ஜீவிக்கிற தேவனாகிய உமக்கு எங்களது அன்பைத் தெரியப்படுத்தலை வெளிக் கொணர்கிறது. இக்காலையில் எங்கள் கரங்களை உயர்த்தியிருக் கையில், கர்த்தாவே, அதுதானே "எங்கள் கரங்களை பற்றிக் கொள்ளும்'' என்று நாங்கள் கேட்பதற்கு அடையாளமாக அது அமைந்திருக்கிறது. பில்லி பால் எவ்வாறு என் கரத்தைப் பற்றிக் கொண்டான் என்றும், அவ்வாறு நான் அவன் கரத்தைப் பற்றிக் கொண்டிருக்காவிடில், அவன் கீழே விழுந்திருப்பான் என்பதைப் பற்றி நான் சொல்லிக் கொண்டிருந்தேனே, அதைப் போல், ஓ தேவனே, நீர் எங்கள் கரத்தை பற்றிக் கொண்டு இருந்திருக்கா விடில், அவன் கீழே விழுந்திருப்பான் என்பதைப் பற்றி நான் சொல்லிக் கொண்டிருந்தேனே, அதைப்போல், ஓ தேவனே, நீர் எங்கள் கரத்தை பற்றிக் கொண்டு இருந்திருக்காவிடில், எத்தனை தடவைகளில் நாங்கள் விழுந்திருப்போமே. அவனைப் பற்றி நினைக் கையில், தாயில்லாமல் இருந்தான், ஒரு சிறிய பிள்ளை அவன், எவ்வாறு அவனது வாழ்க்கை முழுவதிலும், அவன் எடுத்துக் கொண்ட பாதையைப் பார்த்தால், அவன் எப்பொழுதோ கொல்லப்பட்டிருப்பான், ஆனால் அந்த மகத்தான கரமானது, என் கரம் நீட்டி காப்பாற்ற முடியாத இடத்திலெல்லாம் நீட்டப்பட்டு பற்றிக் கொண்டு காத்ததுவே. நாங்கள் அதற்காக நன்றியுள்ள வர்களாயிருக்கிறோம், இப்பொழுது.

26. எங்களது ஆத்துமாவானது இந்த சரீரத்தினின்று பிரிக்கப்படு வதாக நாங்கள் உணருகையில், அப்பொழுது கூட, நதிக்கப்பால் எங்களை நடத்திச் செல்லும் ஒரு கரமானது நாங்கள் கையை நீட்டி பற்றிக் கொள்ளத்தக்கதாக எங்களுக்கு இருக்கிறது என்பதை நாங்கள் உணரும் பொழுது, நாங்கள் மிகவும் மகிழ்ச்சியாயிருக் கிறோம்.



228. உங்களது அன்றாட நடத்தை, உங்களது அன்றாடக பேச்சு, உங்களது அன்றாடக நடக்கை, உங்கள் இருதயம், உங்களது ஆத்துமா மற்றும் யாவும் "கர்த்தருக்கு பரிசுத்தம், பரிசுத்தம் பரிசுத்தம்'' என்று கூறிக் கொண்டேயிருக்கும். கசப்பான வேர் ஏதும் இல்லை. "கர்த்தருக்கு பரிசுத்தம், பரிசுத்தம், பரிசுத்தம், பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், கர்த்தர் பரிசுத்தர்'' என்று, நமது சகோதரன் சார்பாக நாம் தேவனை அணுகுகையில் அவ்வாறு கூறுகிறோம். எவன் வர விருப்பமாய் உள்ளானோ அவன் வரலாம். அபிஷேகிக்கப்பட்டு, இரத்தமானது அவனுக்கு முன்னாக போய், ''பரிசுத்தர், பரிசுத்தர், கர்த்தர் பரிசுத்தர்'' என்று முழங்கிக் கொண்டே இருக்கிறது.

229. அதுதானே வெளிப்பிரகாரம், பரிசுத்த ஸ்தலம் முதலியவை யாகும். மகா பரிசுத்த ஸ்தலமோ, அது பூமியிலே உள்ள தேவனுடைய வாசஸ்தலமாக இருந்தது. பரலோக்திலுள்ளதற்கு சாயலாக அது பூமியில் உள்ளதாக இருந்தது. இப்பொழுது நான் மீண்டும் நாம் ஏற்கனவே பரிசுத்த அதே வேதவசனத்திற்கு வரப்போகிறோம். வெளிப்படுத்தின விசேஷத்தை நாம் படித்துக்கொண்டேயிருக்கிற வரையிலும் நாம் இதற்கு மீண்டும் திரும்பி வந்திடுவோம்.

230. இப்பொழுது யோவான் எங்கே நின்று கொண்டிருக்கிறான்? பிரகாரங்களில் நின்று கொண்டிருக்கிறான். இங்கே நாம் இன்னும் சற்று தள்ளி வாசிப்போம். அப்பொழுது நீங்கள் அந்தக் காட்சியைப் புரிந்து கொள்வீர்கள்.

"அந்தச் சிங்காசனத்திலிருந்து மின்னல்களும் இடிமுழக்கங் களும் சத்தங்களும் புறப்பட்டன; தேவனுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்கள் (அதைப்பற்றி நாம் ஆராயப்போகிற வரையிலும் காத்திருங்கள்) சிங்காசனத் திற்கு முன்பாக எரிந்து கொண்டிருந்தன. அவை தேவனு டைய சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வந்து, தேவனு டைய ஒளியை சபைக்கும் பிரதிபலித்துக் கொண்டு இருக்கின்றன.

வெளி. 4:5

231. ஒரு வேதக்கல்லூரியின் மூலமாக அல்ல, ஒரு பேராயர் மூலமாக அல்ல; ஆனால் தேவனுடைய சிங்காசத்திலிருந்து, அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையினால் உள்ள வெளிப்படுத்துதலின் மூலமாக அது உண்டாயிருக்கிறது; அது அவரை நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராகக் காண்பித்துக் கொண்டிருக்கிறது. அந்த ஏழு நட்சத்திரங்களும் அங்கே நின்று கொண்டு, மகா பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள ஷெகினா மகிமையிலிருந்து, ஷெகினா ஒளியை அங்கே

226. அவன் அங்கே ஆண்டுக்கு ஒருமுறை உள்ளே சென்று, கிருபாசனத்தின்மீது இரத்தத்ததை தெளித்தான். அவன் அங்கே உள்ளேயிருக்கையில், ஷெகினா மகிமையை காண்பதற்கான சிலாக்கியம் பெற்றிருந்தான்; அப்பொழுது அங்கே அக்கினி ஸ்தம்பம், மரகதம் போல் தோன்றுகிற ஒளியானது இறங்கி வந்தது, அதுவே இஸ்ரவேலரை வழி நடத்திச் சென்றது. அவர் ஆலயத்தை புகையைப் போல் தமது மகிமையால் நிரப்பினார், அதினால் ஒருவரும் அதைக் காண இயலவில்லை. அது ஒரு புகையைப் போல் அங்கே நிரம்பியிருந்தது. அங்கே அது ஒரு புகையைப் போல் மண்டிக்கிடக்குமளவுக்கு, கர்த்தருடைய மகிமையானது அங்கே நிறைந்தது. அவர்தாமே உள்ளே வந்து, திரைக்குப் பின்னால் போய், அங்கே மகாபரிசுத்த ஸ்தலத்தில் கிருபாசனத்தின்மீது அமர்ந்தார். 'அதி பரிசுத்த ஸ்தலம்'' அது மகா பரிசுத்த ஸ்தலம் என்று அழைக்கப்பட்டது. அவன் விசேஷித்த விதமாக உடை உடுத்தியிருக்கவும், விசேஷித்த விதமான நடக்க வும், விசேஷித்தவிதமாக அபிஷேகம் பண்ணப் பட்டவனாக, ஒரு விசேஷித்த நபராக உள்ளே சென்றான். அவனைப் பற்றி சபையோர் எந்த அளவுக்கு அவன் பேரில் பொறாமைப் பட்டிருக்க வேண்டும்!

227. ஆனால் இயேசு மரித்தபொழுது, ஆலயத்தின் திரைச்சீலை கிழிந்தது. இப்பொழுது, ஒரு பிரதான ஆசாரியன் மாத்திரமல்ல விருப்பமுள்ளவன் எவனோ, அவன் அதேவிதமான ஷெகினா மகிமையின் அபிஷேக்தைப் பெற்றுக்கொண்டவனாய், "பரிசுத்தர், பரிசுத்தர், கர்த்தருக்கு பரிசுத்தம்" என்று கூறிக்கொண்டே, பரிசுத்த ஜீவியத்துடன் நடந்து கொண்டு, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக தேவனுடைய பிரசன்னத்திற்குள், அவருக்கு முன்பாக செல்ல முடியும் கர்த்தராகிய இயேசுவே, இங்கே ஒரு வியாதிப் பட்ட மனிதன் கிடக்கிறான், அவன் என் சகோதரன், அவன் மரணப்படுக்கையில் இப்பொழுது கிடக்கிறான், நான் உம்மை அணுகுகிறேன், பரிசுத்தர், பரிசுத்தர், கர்த்தருக்கு பரிசுத்தம்' என்று கூறிக்கொண்டே நீங்கள் அங்கே உள்ளே போய் ஜெபிக்கலாம்.

'எதினிமித்தம்?

ஒரு பிரதான ஆசாரியன் என்ற ரீதியில்.''

''யாருக்காக''?

"எனது சகோதரனின் சார்பில், 'பரிசுத்தர், பரிசுத்தர், கர்த்தருக்கு பரிசுத்தம்'' என்று கூறிக்கொண்டே.''



இவைகளுக்காக, இந்த உறுதி மொழிக்காக, எங்களுக்கு இருக்கிற இந்த ஆசீர்வதிக்கப்பட்ட உறுதிமொழிக்காக, நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். அது ஒரு ஆத்தும நங்கூரமா யிருந்து எங்களை உறுதியாக நிலை நிறுத்துகிறது, நாங்கள் இந்த யாத்திரையில் நடந்து செல்லுகையில், அல்லது வாழ்க்கையின் ஆரவாரமிக்க ஆழ்கடலில் பயணம் செய்கையிலும் அக்கரம் காக்கிறது.

27. "நிர்பாக்கியமுள்ள, கப்பல் சேதத்தில் சிக்கிக் கொண்ட, ஒரு சகோதரன், எங்களுடைய நிலைத்து நிற்கும் தன்மையைக் கண்டு, அதினால் மீண்டும் தைரியம் கொண்டு, மீண்டும் முயலட்டும் என்று கவிஞன் பாடியது போல், நாங்கள் ஜெபிக்கிறோம், பிதாவே நாங்கள் இடறும் பொழுதோ அல்லது விழும் பொழுதோ, சகலத்திற்கும் போதுமான தேவனுடைய கரமானது எங்களுக்கு உதவி செய்ய இருக்கிறது என்றும், அவருடைய கிருபை போதுமானது என்றும் நாங்கள் அறிந்து கொள்ளட்டும்.

28. இன்று காலையில், இப்புத்தாண்டை ஞானப்பாட்டுகளை பாடிக் கொண்டும், களிகூர்ந்து கொண்டும், வாழ்க்கையின் பயணம் முழுவதிலும், பிறகு மரண நதிக்கப்பாலும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் வழி நடத்துவார் என்று அறிந்து கொண்டும் நாங்கள் துவங்கட்டும் என்று ஜெபிக்கிறேன், தேவனே. கரைபுரண்டு ஓடும் மரண யோர்தானுக்கப்பால் எங்கள் கண்கள் ஏறெடுக்கின்றன, அங்கே பசுமையான மகிழ்ச்சி தரும் வயல்வெளிகளும், இலையுதிராத மரங்களும் உள்ள நிலங்கள் உண்டு, எங்கள் ஆத்துமாக்கள் அதன் காட்சியை கண்டு கொண்டு, அதை இழக்காதிருக்கட்டும் என்று நாங்கள் ஜெபிக்கிறோம், தேவனே. என்றாவது ஒருநாளில், நாங்கள் அந்த நதியண்டையில் வந்து அதைக் கடக்க வேண்டியதிருக்கும் பொழுது, முன்காலத்து எலியாவைப்போல், தேவனுடைய சால்வையானது மரண நீரோட்டங்களை அடித்து வற்றிப் போகப் பண்ணி, அதினால் ஒரு பயமும் இன்றி, நாங்கள் கடந்து செல்வோம், அதை அளித்தருளும், கர்த்தாவே.

29. உம்முடைய வார்த்தையை நாங்கள் அணு குகையில், கர்த்தாவே, எங்களுக்கு உதவி செய்யும். இவ்வார்த்தைகளை உம்முடைய பரிசுத்த ஆவியானவர் அபிஷேகித்தருளவேண்டுமென்று நான் ஜெபிக்கிறேன், கர்த்தாவே . நாங்கள் ஒரு போதகரல்ல. எனவே, போதிக்கிறதற்கு நாங்கள் தகுதியுள்ளவர்களல்ல. அதை நாங்கள் அறிந்து கொள்வதற்குள்ள ஒரே வழி என்னவெனில், அந்த மகத்தான போதகரானவர் வந்து, எங்கள் இருதயங்களில் வாசம் பண்ணி,

எங்களுடைய சிந்தைகளையும் எண்ணங்களையும் மேற்கொண்டு, பரிசுத்த வேத வாக்கியங்களை அவரே எங்களுக்கு வியாக்கியானித்துத் தர வேண்டும். பயபக்தி யோடு நாங்கள் அதை சார்ந்து கொள்கிறோம். அதைப் பற்றி சிந்திக்கிறோம், தேவனே.

30. அவ்விதமான ஒரு ஜீவிக்கிற பிதா எங்களுக்கு இருக்கிறார் என்பது எத்தனை அற்புதமானது; அவர் நித்தியத்தின் பிறப்பு அழிவுள்ளவர்களாகிய எங்களிடத்தில் ஏற்பட உதவி புரிந்து, அவர் தமது வார்த்தையை கொண்டு வந்து, எங்கள் வாயிலும் இருதயங் களிலும் காதுகளிலும் கொடுத்து, அதினால் நாங்கள் செவி கொடுத்து, ஜீவிக்கும்படி செய்து இருக்கிறார்; அதோடு, எங்களை ஒரு சாபத்தினின்றும் மீட்டுக் கொண்டிருக்கிறார், அச்சாபம் எங்களுக்கு வருவதற்கு நாங்கள் காரணமல்ல; பிதாவே, ஏனெனில் முதல் மனித இனம் அதற்கானதைச் செய்தது, நாங்கள் அம் முதல் தம்பதிகளுடைய வழித்தோன்றல்கள் தான், நாங்கள் பாவத்தில் பிறந்திருக்கிறோம், மீறுதலில் உருவாகியிருக்கிறோம். ஆனால் ஒரு நீதியுள்ள ஜீவிக்கிற தேவனோ, எங்களுக்கும் அதற்கும் சம்மந்த மில்லை என்பதை அறிவார், எனவே, தப்பித்துக் கொள்வதற்கான ஒரு வழியை உண்டாக்கி, அவரிடம் வருவதற்கு ஒரு சிலாக் கியத்தை உண்டாக்கிக் கொடுத்திருக்கிறார். பிதாவின் வீட்டிற்கு நாங்கள் வந்திருப்பதைக் குறித்து நாங்கள் எவ்வளவாய் மகிழ்ச்சி யுள்ளவர்களாய் இருக்கிறோம்!

31. இங்கேயுள்ள எங்கள் சபையை நீர் இப்பொழுது ஆசீர்வதிக்க வேண்டுமென்றும், எங்களுடைய தீரமிக்க மேய்ப்பர் சகோதரன் நெவில் அவர்களை ஆசீர்வதிக்க வேண்டும் என்றும் ஜெபிக்கிறோம், அவர் உம்முடைய தாழ்மையான ஊழியக்காரனாவார். எங்க ளுடைய உதவிக்காரர்களுக்காகவும் ட்ரஸ்டிகளுக்காகவும் ஜெபிக்கிறோம். நீர் தாமே அவர்களுக்கு எல்லா ஆண்டுகளையும் விட மிகச் சிறப்பான ஆண்டைத் தாரும். கர்த்தாவே. அவர்களுக்கு நீண்ட ஆயுளைத் தாரும். அவர்களை பெலப்படுத்தியருளும், கர்த்தாவே. அவர்கள் உம்முடைய ஊழியக்காரர்களாய் இருக்கிறார் களே. தங்கள் பனிமனையில் அவர்கள் தொடர்ந்து தீரத்தோடு நிலைத்திருக்கட்டும். சபையின் அங்கத்தினர்களை ஆசீர்வதியும். அவர்கள் உம்முடைய பிரியமுள்ள பிள்ளைகளாவர், இந்த வீட்டிற்கு அவர்கள் வருகிறார்கள், தேவனே, இவ்வீட்டின் வாசற் படியைத் தாண்டி இங்கே வருகிற இவர்களுடைய ஒவ்வொரு ஆத்துமாவையும் நாங்கள் உரிமை கோருகிறோம். அவர்களை உமக்கென்று கோருகிறோம், கர்த்தாவே . வார்த்தையை எளிமையாகவும், மிகவும் உண்மையாகவும் பரிசுத்த ஆவியினாலே



ஆனால் பிரதான ஆசாரியன் ஆண்டுக்கு ஒரு முறை தன்னோடு பலியாட்டுக்குட்டியின் இரத்தத்தை எடுத்துக் கொண்டு உள்ளே பிரவேசிக்க முடியும்.

224. அவன் ஒரு குறிப்பிட்ட விதத்தில் உடை உடுத்தியிருக்க வேண்டும், ஒரு குறிப்பிட்ட ஆடையை அணிந்திருக்க வேண்டும். அதில் கீழே வரிசையாக ஒரு மணியும், ஒரு மாதுளையும் ஆக மாறி பொருத்தப்பட்டிருக்கும். அவன் நடந்து செல்லுகையில் ஒரு குறிப்பிட்ட விதமாகத்தான் நடந்து செல்லவேண்டும். "பரிசுத்தர், பரிசுத்தர், கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், கர்த்தர் பரிசுத்தர்'' என்று இசைத்துக் கொண்டேதான் அவன் செல்லவேண்டும். அவனது ஆடைகளின் கீழ்ப்பாகத்தில் பொருத்தப்பட்டிருக்கும் பொன்மணிகளும், மாதுளைகளும், பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்'' என்று ஒன்று சேர்ந்து இசைத்துக் கொண்டேயிருக்கும். ஏன்? அவன் தேவனை, தன் கைகளில் உடன்படிக்கையின் இரத்தத்தை வைத்திருக்கிறவனாக, அதை ஏந்திக் கொண்டே, அவருக்கு முன்பாக அணுகிக் கொண்டேயிருக்கிறான். அவருக்கு முன்பாக போய்க் கொண்டேயிருக்கிறான்.

225. அவன் குறிப்பிட்ட பரிமளதைலத்தினால் அபிஷேகிக்கப் பட்டு இருந்தான். (ஓ, என்னே !) அவனது ஆடைகள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட கரங்களால் தான் உண்டாக்கப்பட வேண்டும். அவனது ஆடைகளைத் தைப்பதற்காகவே பதிவு செய்யப்பட்ட கரங்கள் அவைகள் சாரோனின் ரோஜாவாகிய அபிஷேகத்தைலமானது அவனது சிரசின்மேல் ஊற்றி அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறது, அது அவனது தாடியில் வடிந்து கீழாக அவனது ஆடையிலும் அது பரவுகிறது. ஒரு மாதுளை, பிறகு ஒருமணி இவ்வாறாக அவனது ஆடையில் தைக்கப்படிருக்கும் அவைகள் அங்கே உள்ளன, ராஜரீக பரிமள தைலம் அவன் பூசியிருந்தான். பாவமில்லாத ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை எடுத்துக் கொண்டு போகிறான். இவ்விதமான முறையில் அல்லாமல் அவன் அத்திரையை அணுகவே துணியமாட்டான், இப்படித் துணிந்தால், 'நிற்கிற இடத்திலேயே, அவன் அங்கேயே மரித்து விடுவான். எனவே அவன் ஒரு குறிப்பிட்டவிதமாகத்தான் அங்கே நடந்து செல்ல வேண்டும்; "பரிசுத்தர், பரிசுத்தர், கர்த்தருக்கு பரிசுத்தம்" என்று கூறிக் கொண்டே தேவனை அணுகிக் கொண்டிருந்தான். "கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்' என்று கூறிக் கொண்டே செல்லவேண்டும்.

அவர் தங்குவதற்காக கயூரி ஹோட்டலுக்குச் சென்றார். அந்த ஹோட்டலில் இருந்த அப்பெண்மணிக்கு அவரைத் தெரியும். அவள் கூறினாள்: "ரபீ, உங்களுக்கென அருமை யான ஒரு அறை உள்ளது, ஆனால் எங்களிடம் டெலிவிஷன் இல்லை'' என்று.

219. அதற்கு அவர், 'அவைகளெல்லாம் 'ஹெலிவிஷன்கள்'' (Hellevisions), அவைகளை தூக்கியெறியுங்கள். அங்கே அது எனக்குத் தேவையில்லை. அப்படி டெலிவிஷன் அங்கே இருக்கு மானால், அதை அங்கிருந்து வெளியே எறிந்துவிடும்படி உங்களை நான் செய்துவிடுவேன்'' என்று கூறினார். (ஹெலிவிஷன் என்றால் நரகக் காட்சி என்று பொருள்படும் - மொழிபெயர்ப்பாளர்).

அப்பெண்மணி, 'ரபீ'' என்று அழைத்தாள்.

அவர் கூறினார், "நான் ஒருபெந்தெகொஸ்தே ரபீ'' என்றார். அல்லேலூயா!

220. அவர் என்னிடம், ''சகோதரன் பிரன்ஹாம் அவர்களே, தாங்கள் இஸ்ரேலுக்குப் போகும் போது நானும் உங்களுடன் வர விரும்புகிறேன். நான் சுவிசேஷத்தை எங்களுடைய ஜனங்களிடத்தில் எடுத்துச் செல்லலாம்'' என்று கூறினார்.

221. அதற்கு நான், "இப்பொழுது அல்ல, ரபீ அவர்களே, இப்பொழுது அல்ல. இப்பொழுது அல்ல, இன்னும் அதற்கான வேளை வரவில்லை. இன்னும் சிறிது காலம் பொறுத்திருங்கள்'' என்று கூறினேன்.

222. இந்த பரிசுத்த ஸ்தலங்களை இப்பொழுது கவனியுங்கள். நீங்கள் இப்பொழுது இந்தப் பிரகாரங்களில் வரும்பொழுது, முதலில் இப்பிரகாரங்கள், அதாவது வெளிப்பிரகாரம் உள்ளது. அடுத்தது பலிபீடமாகும், அங்கே பலிகள் செலுத்தப்பட்டன. அது வெண்கல பலிபீடமாகும். வெண்கல பலிபீடமானது வெளியே இருந்தது; மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு பிரவேசிக்கும் முன்னதாக ஒரு திரையானது அங்கே தொங்கிக்கொண்டிருந்தது. அதினுள் கிருபாசனமும், அதன் மேல் கேருபீன்களும் இருந்தன. அதைப் பற்றித்தான் நமது அடுத்த பாடத்தில் நாம் படிக்க வேண்டுமென நான் விரும்பினேன். அக்கேருபீன்கள் கிருபாசனத்தை நிழலிட்டு மூடிக் கொண்டிருந்தன. அக்கேருபீன்களைப் பற்றி நாம் மாதம் முழுவதும் படித்துக் கொண்டேயிருக்கலாம்.

223. அவர்கள் அங்கே பிரவேசித்தபொழுது, கவனியுங்கள். சபையார் பிரகாரத்தில் வந்து நிற்பார்கள்; பிரதான ஆசாரியன் இங்கே நிற்பான்;



கொண்டு வந்து, அதினால் மக்கள் உம்மைப் போல் ஆக வாஞ் சிக்கும்படி ஆகத்தக்கதாக, அத்தகைய ஊழியக்காரர்களாக எங்களை ஆக்கியருளும். அதை அளித்தருளும், கர்த்தாவே. உள்ளே வருகிற வியாதிப்பட்டவர்களையும் துன்பப்பட்டவர்களையும் குணமாக்கி யருளும். உலக முழுவதிலும் ஒவ்வொரு தேவனுடைய வீட்டில் உள்ளவர்களுக்கும் அதைச் செய்தருளும்.

32. முடிவாக, நீர் உம்முடைய கிரியை முடிக்கும் பொழுது, கர்த்தாவே, நாங்கள் உம்முடைய வாயிலில் பிரவேசித்து, தேவனுடைய வரவேற்பு மேசையில் அமர்ந்து, முடிவில்லாத காலங்களில் ஒன்று சேர்ந்து நாங்கள் வாழ்வோமாக. அதுவரையிலும், நாங்கள் ஆரோக்கியம், பெலன், சந்தோஷம், மகிழ்ச்சி, வல்லமை, சத்துவம், எங்களை வழி நடத்துவதற்காக பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதங்கள் ஆகியவைகளை நாங்கள் உடையவர்களாயிருக்கட்டும். இயேசுவின் நாமத்தினால் கேட்கிறோம். ஆமென். (நீங்கள் அமரலாம்).

33. இக்காலையில் அந்த அருமையான இசையை நான் பாராட்டு கிறேன். நான் சரியான நேரத்தில் உள்ளே பிரவேசித்தேன்; அப்பொழுது வாசலண்டையில் என்னுடைய நல் நண்பர் சகோதரன் ஸ்நேக்ஸ் அவர்களுடனும், பின்னால் இருக்கிற சகோ.ஜீன் அவர்களிடமும், இன்னொரு சகோதரனிடமும் பேசிக் கொண்டிருந்தேன். நான் அதன் ஒரு பகுதியை மட்டுமே கேட்டேன். ஆனால் அது ஒலிப்பதிவு கருவிக்கு மிகவும் அழகாக வந்து கொண்டிருந்தது.

34. வெளிப்படுத்தின விசேஷத்தை நீங்கள் எத்தனை பேர் கேட்டுணர்ந்து மகிழ்ந்திருக்கிறீர்கள்? நல்லது, என்னுடைய சிறிய மகள் சாராளைப் போல் அநேகருக்கு அது நன்றாக இருக்கிறதாக நான் நம்புகிறேன். சாராள் கூறுவது போல் அது எனக்கு "சுழற்சி களாக'' (Revolutions) ஆகியிருக்கிறது. அது மீண்டும் வருகிற சுழற்சியாக இருக்கிறது. நான் விரும்புவதென்னவெனில், நமக்கு மார்ச் அல்லது ஏப்ரல் வரையிலும் கூட்டங்களை ஒழுங்கு செய்து கொண்டு இங்கே பின்னால் பெரிய கூடார கேன்வாசை போட்டு, பகல் வேளைகளில் வந்து இச்செய்தியைப் பற்றிய சித்திரங்கள், விவர விளக்கப்படங்கள் ஆகியவற்றைக் கொண்டு, அவைகளை வேண்டுவது போல், ஜன்னல் ஷேட்களை ஏற்றி இறக்கிக் கொள்வது போல் செய்து, (ஜன்னல் ஷேட்கள் என்றால், கெட்டியான துணியானது ஜன்னல்கள் மேல் விரிக்கப்பட்டு, ஒரு ஸ்ப்ரிங் ரோலரில் மாட்டப்பட்டு, அதினால் வேண்டும் பொழுது சுருட்டி விட்டு, பிறகு இறக்கிக் விட்டுக் கொள்ளலாம் - மொழி பெயர்ப்பாளர்) செய்தியைப் படிப்பிக்கலாமே

என்பது தான். இவ்வாறான வசதியையுடைய ஒரு பெரிய கூடாரத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்று நான் எப்பொழுதும் வாஞ்சிப்பதுண்டு; அங்கே இந்த விவர விளக்கப் படங்களை மேடையில் மாட்டி வைத்து, வேண்டுபவைகளை காண்பித்து, அதைக் கொண்டு போதித்து, மேடையிலிருந்து வந்து, கர்த்தர் எனக்குத் தருகிற வெளிப்படுத்து தல்களையும், வியாக்கியானங்களையும் போதித்து, விவர விளக்கப் படங்களை ஒரு சுட்டிக் காட்டும் கோலைக் கொண்டு சுட்டிக் காண் பித்து விளக்கி, இந்த சபைக்காலங்களைக் குறித்து போதிக்கலாம். ஒரு படத்திலிருந்து ஒன்றை விளக்கிக் காண்பித்த பிறகு, அதை மேலே சுருட்டிவிட்டு, அடுத்ததை இறக்கிவிட்டு, அதிலிருந்து போதித்து, இவ்வாறாக எல்லாவற்றையும் விளக்கிக் காண்பித்து, போதித்து வரலாம். ஓ, அது சிறிய பரலோகம் போல் இருக்குமல்லவா? குளிர்காலம் முழுவதும் அவ்வாறு அமர்ந்து, கர்த் தருடன் அமர்ந்து இருக்கலாம்.

35. அவரோடு தனித்திருப்பது மிகவும் நல்லதாக இருக்கிறது. "என் ஆண்டவராகிய கிறிஸ்துவோடு தனித்திருக்கும்படி நான் வாஞ்சிக்கிற வேளைகள் உண்டு, அப்பொழுது, நான் அவரிடம் எனது துன்பங்கள் யாவற்றையும் தனித்திருந்து கூறுவேனே'' என்ற ஒரு பாடலை நாங்கள் பாடுவது வழக்கம். அவ்விதமாகத்தான் பெற்றுக் கொள்ள முடியும். அவர்கள் பாடுவது வழக்கம். ராய்டேவிஸ் அவர்கள், "தனித்திருந்து, இயேசுவிடம் ஜெபி' என்று பாடலை பாடுவதுண்டு. யாவும் சுட்டிக்காட்டுகிறது. யாவும் நமக்கு இயேசு கிறிஸ்துவையே எடுத்துக் காண்பிக்கிறதாய் இருக்கிறது அல்லவா?

36. இப்பொழுது, கடந்த எட்டு நாட்கள் கூட்டங்களில், சபைக் காலங்களை பேசக் கேட்டோம். நேற்றிரவில், வெளிப்படுத்தின விசேஷம் 4ம் அதிகாரம் 2ம் வசனம் முடிய பார்த்தோம் என்று நான் நினைக்கிறேன். நீங்கள் யாவருமே நேற்று இரவில் அச் செய்தியைப் பெற்றுக் கொள்ள இங்கிருந்தீர்கள் என்று கருது கிறேன். எனவே, ஒருவேளை, நான் இக்காலையில் ஒன்றோ அல்லது இரண்டோ வசனங்களை எடுத்துக்கொண்டு பிரசங்கித்தால் ... அல்லது கர்த்தர் எதுவரையிலும் நடத்துவார் என்பது எனக்குத் தெரியாது. நான் 6 அல்லது 7ம் வசனம் வரையிலும் ஆராய்ந்து கொண்டிருந்தேன். அதைப் பற்றி சம்பவங்களை கோர்வைப்படுத்தி இணைத்துப் பின்னி ஒரு அமைப்பை எழுதி வைத்திருக்கிறேன். அதிலிருந்து வேதவாக்கியங்களின் பல்வேறு பாகங்களுக்குள் சென்று, அவைகளை உங்களுக்கு நான் எடுத்து காண்பிக்க முடியும், நான் நேற்றிரவில் படித்தவைகளையும் உங்களுக்கு தெளிவாக்க முடியும்.



அணுகுவதற்கான விதம் எவ்வாறு என்பதைப் பார்க்கலாம். ஓ, நான் இதை நேசிக்கிறேன்.

215. இப்பொழுது, பழைய ஏற்பாட்டில் மக்கள் கூடி வருதலான சபை அங்கே இருந்தது. முதலாவதான காரியம் என்னவெனில், அவர்கள் சபையாக கூடி வந்தார்கள். அங்கே அவர்கள் உள்ளே வருவதற்கு, அவர்கள் சிந்தப்பட்ட இரத்தத்தின் கீழாக வெளிப் பிரகாரத்தில் வரவேண்டும். முதலாவதாக அவர்கள் வேறு பாட்டின் தண்ணீர்களுக்குக் கீழாக வருகிறார்கள். அங்கே சிவப்பான கிடாரி கொல்லப்பட்டு, வேறுபாட்டின் தண்ணீர் களண்டைக்கு வருகிறார்கள். அதில் தான் பாவி வந்து, வார்த் தைக்கு செவிகொடுக்கிறான்.

216. டுல்ஸா என்ற இடத்தில் அந்த பெரிய யூத ரபீ (போதகர்) நான் அவைகளைக் குறித்துப் பேசியதைக் கேட்டபொழுது தான், கர்த்தரிடம் வந்தார். அது டுல்ஸா என்ற இடத்தில் நடைபெற்றது. டுல்ஸா, ஓக்லஹோமா என்ற இடத்தில் நாங்கள் இருந்தோம். அவர் அங்கே வந்து அக்கூட்டத்தை வேடிக்கை பார்க்கிறவராக நின்று கொண்டிருந்தார். ஆராதனை முடிந்தபிறகு, அவர், "நான் அறிவேன்'' என்று கூறிவிட்டுச் சென்றார். உலகத்தில் தலைசிறந்த ஏழு ரபீமார்களில் அவரும் ஒருவர், 'அந்த கிறிஸ்தவ வியாபாரி கள் என்ன கூறுகிறார்கள் என்று, நான் அங்கே போய் உட்கார்ந்து கேட்க விருப்பமாயுள்ளேன்'' என்று அவர் கூறினார். அவர் அவர்களை "பெந்தெகொஸ்தேயினர்'' என்று அழைத்தார்.

217. கர்த்தர் என்னை அந்த சிவப்பான கிடாரியை பலியிடுதலைக் குறித்து பேச நடத்திய போது, ஆராதனைக்குப்பிறகு, அந்த யூத ரபீ பின்னால் இருந்த சில சகோதரர்களை சந்தித்து, "நான் இந்த மனிதனை சந்திக்க விரும்புகிறேன், அவருக்கு சரியான கல்வியறிவு கூட கிடையாது என்பதை நான் அறிகிறேன்; நான் ஒரு யூத போதகர் ஆவேன், தேவனை அணுகுவதற்கான அந்த பல்வேறு வகையான அணுகுதல்களையும் பற்றி அறிவேன். நான் என் வாழ்நாளிலேயேயே இந்தவிதமாக காரியத்தை பார்த்ததில்லை. ஒருபோதும் இதுபோல் நான் கேட்டதில்லை'' என்று கூறினாராம்.

218. இப்பொழுது அவர் ஒரு பெந்தெகொஸ்தே போதகர் ஆவார், அவர் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக் கொண்டிருக்கிறார். அவர் தன்னை பெந்தெகொஸ்தே ரபீ என்றே அழைத்துக் கொள்கிறார். அன்றொரு நாளில் சகோதரன் ஜாக் அவர்கள் இடத்தில் கூட்டத்திற்காக நாங்கள் அங்கே கூடியிருந்தபோது,

டாக்கினான். நாம் அதை அறிவோம் அல்லவா? பவுலும் அதையே தான் செய்தான் என்பதை நாம் காண்கிறோம். எபிரெயர் 9:23ல் மோசே தான் கண்டபிரகாரமாகவே அதற்கு சாயலானவைகளை உண்டாக்கினான். பவுலுங்கூட தன் தரிசனத்தில் பரலோகத்திற்கு மேலே ஏறிச்சென்றபொழுது, மோசே பார்த்த அதே காரியங்களை அவனுங் கண்டான். ஏனெனில் அவன் அதைப் பற்றி எபிரெயர் நிரூபத்தில் போதிக்கிறான். அவன் கிறிஸ்தவமானது எவ்வாறு பழைய ஏற்பாடாகிய நிழலுக்கு உரிய பொருளாக இருக்கிறது, அந்நிகழலுக்குரிய உண்மை பொருளாக இருக்கிறது என்பதை எபிரெயர் புத்தகத்தின் மூலம் போதித்தான். பவுல் ஒரு பெரிய போதகனாக இருந்தான். அப்பொழுது அதுவே அவருடைய சிங்காசனமாயிருந்தது. பிறகு...

213. நாம் இதை முடிப்போமாக. நான் இதைக் கடந்து சென்று விட இருந்தேன். ஆனால் என்னால் அவ்வாறு செய்ய இயலவில்லை. அந்த கறுப்பு.... எங்கே? பின்னால் இருக்கும் டாக் அவர்களே, நீங்கள் அதை பின்னால் எடுத்துக் கொண்டுபோய் விட்டீர்களா? இங்கிருந்து அதை நான் உங்களுக்குக் காணும்படி செய்ய இயலும். நான் ஒரு காரியத்தைக் கூறப் போகிறபடியால், உங்களுடைய பேப்பரையும், எழுதுகோலையும் எடுத்துக் கொள்ளுங்கள். நான் இன்று காலையில் உட்கார்ந்து கொண்டிருக்கையில், ஒரு காரியம் என்னிடத்திற்கு வந்தது. நான் என்ன செய்தேன் என்பதை உங்களுக்கு கூறுவேன்; இதற்குப் பின்னால் நான் அதை வரைந் திருக்கிறேன், அதை நீங்கள் கவனித்தால் காணலாம். ஆவியானவர் எனக்குத் தந்த வண்ணமாகவே, அப்படியே நான் அதை இங்கே வரைந்திருக்கிறேன். அது எவ்வாறிருக்கும் என்று காட்டப் பட்டதோ அதை வரைந்திருக்கிறேன். ஆனால் நான் இங்கே ஒரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன்.

214. தேவன் சிங்காசனத்தில் வீற்றிருக்கையில், அப்பொழுது அவர் நியாயாதிபதியாக இருக்கிறார். அப்படித்தானே? எப்பொழுது ஒரு நியாயாதிபதி நியாயந்தீர்க்கிறார்? அவர் தன்னுடைய நியாயசனத்திற்கு வரும் பொழுது; அது ஒரு சிங்காசனமாக இருக்கிறது. பழைய ஏற்பாட்டில் எவ்வாறு அவரது சிங்காசனத்தினை அணுகும் பிரகாரங்கள் உண்டாக்கப்பட்டன என்பதை நீங்கள் இப்பொழுது கவனிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அதை யோவான் இங்கே எவ்விதமாக இருக்கக் கண்டான் என்பதை கவனியுங்கள். நாம் இன்று காலையில் இதில் முழு வதையும் பார்க்கப் போகிறதில்லை. ஆனால் யோவான், அவரை அணுகுவதற்கான பிரகாரங்களை எவ்வாறு கண்டான், அவரது பிரகாரங்களை



37. நேற்றிரவில் நாம் 2ம் வசனத்தோடு நிறுத்திக் கொண்டோம் என்றும், 3ம் வசனத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றும் நான் நம்புகிறேன். "எக்காளத்தின் சத்தம்' என்பது வரையிலும் நாம் பார்த்தோம் என்று நான் நினைக்கிறேன். அது சரிதானே? ''சத்தம் முழங்குவது?'' நாம் எல்லாவற்றையும் வாசித்து மீண்டும் திருப்பிப் பார்ப்போம்.

"இவைகளுக்கு பின்பு, இதோ, பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசலைக் கண்டேன். முன்னே எக்காள சத்தம் போல் என்னுடனே பேச நான் கேட்டிருந்த சத்தமானது; இங்கே ஏறிவா, இவைகளுக்குப் பின்பு சம்பவிக்க வேண்டிய வைகளை உனக்குக் காண்பிப்பேன் என்று விளம்பினது.

உடனே ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது, இதோ வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது, அந்த சிங்காசனத்தில் மேல் ஒருவர் வீற்றிருந்தார்.

வீற்றிருந்தவர், பார்வைக்கு வச்சிரக்கல்லுக்கும் பதுமராகத் துக்கும் ஒப்பாயிருந்தார்; அந்தச் சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வானவில்லிருந்தது; அது பார்வைக்கு மரகதம் போல் தோன்றிற்று.

வெளி.4:1-3

38. இப்பொழுது இது அழகான, ஒ, அழகான பாடமாகும். இன்று காலையில் நான் இங்கே வருவதற்கு முன், ஆறாம் வசனத்தை தியானித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது நான், "ஓ, என்னால் இவ்வசனத்தைவிட்டு அகலவே முடியவில்லையே; ஏனெனில் இந்த ஆறாம் வசனத்தில் ஒரு காரியம் உள்ளது, நாம் இந்த ஜீவன்களைக் குறித்து படிக்கையில் யாவரும் அதை மிகவும் கவனமாகக் கவனிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்'' என்று எண்ணினேன். மூல வேதாகமத்தைப் பார்க்கையில், இந்த ஜீவன்களைப் பற்றி வேறுபட்ட விளக்கங்கள் இங்கே இருக் கின்றன, ஒன்று ஒரு விதமாக மிருகமாகும், ஏனைய நான்கு மிருகங்களும் வேறு ஆகும். இம்மிருகங்களைக் குறித்து வித்தியாசமான விளக்கமானது தரப்பட்டிருக்கிறது. ஆனால் மூல வேதாகமத்தில் நான்கு ஜீவன்களைப் பற்றி வேறு வார்த்தை கூறப்பட்டுள்ளது. மிருகம் என்று சொல்லப்படுவதற்கு வேறு வார்த்தை, நான்கு ஜீவன்களுக்கு உபயோகிக்கப்பட்ட வார்த்தை யல்லாமல், வேறு விதமாக சொல்லப்பட்டுள்ளது கிரேக்க மொழியில் மிருகம் என்று சொல்லப்படுவது "கெடியுள்ள மிருகம்'' என்று அர்த்தத்தில் தரப்பட்டுள்ளது. ஆனால் இந்த நான்கு ஜீவன்களைப் பற்றி ஜேம்ஸ் அரசனின் ஆங்கில வேதாகமத்தில்'' சரியான அர்த்தத்தில்

மூலத்திலிருந்து மொழிபெயர்க்கப்படவில்லை. அவைகள் மூல கிரேக்கத்தின்படி மிருகங்கள் அல்ல. அச்சிருஷ்டிகள் எப்படிப்பட்டவை யெனில், அவைகள் மனித இனமுமல்ல, தூதருமல்ல. எனவே அவைகள் ''ஜீவனுள்ள சிருஷ்டிகள்'' ஆகும். அவைகளுக்கு நான்கு முகங்களும், நான்கு... உள்ளன. அவைகளை நாம் நேராக சுவிசேஷத்தோடு பொருத்திப் பார்ப்போம். பிறகு இன்றைக்குள்ள காரியத்தோடு அது எவ்வளவு பரிபூரணமாக பொருந்துகிறது என்பதையும் நாம் பார்க்கலாம். நான்கு என்ற எண் பூமிக்குரிய எண்ணாகும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அது தானே அங்கே அழகான தொரு பாடமாக உள்ளது. ஆனால் நாம் இப்பொழுது அதற்குள் போகப் போகிறதில்லை என்பதைக் குறித்து நான் நிச்சயமாக இருக்கிறேன். ஒருவேளை பின்னால் நாம் பார்க்கலாம். ஆனால் அது மிகவும் அற்புதமானதாக இருக்கிறது.

39. பிறகு கர்த்தருக்கு சித்தமானால், நாம் இங்கு 19 இருந்தால், அடுத்த ஞாயிறு அன்று அதை நாம் மீண்டும் பார்க்க முயற்சிக்க லாம். நாம் இங்கிருந்து கிளம்பிச் சென்றுவிடும் முன்னர்; 4ம் அதிகாரத்தை முடிக்கப் பார்ப்போமாக. முதல் துவக்கமானது எங்கே என்பதை நாம் சரியாக அறியவில்லை.

40. "இவைகளுக்குப் பிறகு'' என்ற இடத்தைப் பார்த்தோம். ''பிறகு'' என்றால் ''சபைக்காலங்கள் முடிவடைந்த பிறகு" என்று அர்த்தமாகும்.

41. பிறகு யோவான் "இங்கே ஏறிவா' என்று மேலே ஏறிப் போகும்படி அழைக்கப்பட்டான். சபைக்காலத்தில் உலகத்தில் நடைபெறப் போகிறவைகளை அவர் அவனுக்குக் காண்பித்தார். சபைக்காலங்களுக்குப் பிறகு, உன்னதத்திலிருந்து கிறிஸ்து வானவர், ''மேலே ஏறி வாருங்கள்'' என்று அழைக்கப் போகும் ஒவ்வொரு உண்மையான விசுவாசிக்கும் முன்னடையாள மாக, மேலே ஏறி வரும்படி அவன் சபைக் காலங்களுக்குப் பிறகு அழைக்கப்பட்டான். "இங்கே ஏறிவா'' என்று அவன் அழைக் கப்பட்டான். அப்படித்தானே?

42. அவனோடு பேசிய சத்தமானது எக்காள சத்தம் போன்று இருந்தது; அது தெளிவாக புரிந்து கொள்ளும்படியாக இருந்தது, அதே சத்தம் தான் அவனோடு பூமியில் இருந்தும் பேசியது. அவர் ஏழு பொன் குத்துவிளக்குகளின் மத்தியில் இருக்கிற வரையிலும், அவர் அவைகளிலிருந்து கொண்டு பேசிக் கொண் டிருந்தார் . ஓ , நான் அதை விரும்புகிறேன். ''குத்து விளக்குகளின் மத்தியிலிருந்து பேசிக் கொண்டிருந்தார்." பாருங்கள், அவர் குத்து விளக்குகளில் இருந்தார்.



மட்டும் நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். சீனாய் மலையின் மேல் மோசேக்கு தரிசனம் அளிக்கப்பட்ட போது......

208. இங்கே காணப்பட்ட சிங்காசனமானது இனி முதற் கொண்டு கிருபையின் சிங்காசனம் அல்லவே அல்ல என்பதை நீங்கள் கவனிக்க வேண்டுமென நான் விரும்புகிறேன். அங்கே இரத்தமானது நீங்கிவிட்டது, பலியானது திரும்பிவிட்டது, அவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டார்கள். எனவே இப்பொழுது கிருபாசனத்தின் மீது இரத்தமானது இருக்கவில்லை. ஆகவே அது இப்பொழுது ஒரு நியாயாசனமாக ஆகிவிட்டது. ஏனெனில், அங்கே இடிமுழக்கங்களும், மின்னல்களும் அதிலிருந்து புறப்பட்டது. அது சரிதானே?

209. அது சீனாய் மலையைப் போல் இருந்தது என்பதை நினைவில் கொள்ளுங்கள். மோசேசீனாய் மலையின் மேல் சென்றபோது என்ன நேரிட்டது? இடி முழக்கமும், மின்னலும் உண்டாகியது. ஒரு மாடோ, அல்லது ஒரு கன்றுக்குட்டியோ, அல்லது ஆடோ அல்லது வேறு எதுவுமோ அந்த மலையைத் தொட்டால் கூட அது சாக வேண்டும். 'மோசேயும் பயந்து நடுங்கத்தக்கதாக அந்தக் காட்சி அவ்வளவு பயங்கரமாயிருந்தது'' என்று வேதம் கூறுகிறது. மோசேக்கு கூறப்பட்ட பொழுது.... "உன் பாதரட்சையைக் கழற்று, நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி'' என்னப்பட்டது. மகத்தான போர் வீரனான யோசுவா இஸ்ரவேல் புத்திரரை அழைத்துச் சென்று அவர்களது சுதந்திர வீதத்தை அவர்களுக்குப் பிரித்துக் கொடுக்க ஏற்படுத்தப்பட்டான், அவனுங்கூட மலையில் பாதியளவே வர முடிந்தது.

210. இங்கே மோசே, தேவன் தன்னுடைய நிறங்களோடு நின்று கொண்டிருக்க, மின்னல்களும், வெளிச்சங்களும், அவரைச் சுற்றி மரகதம் போல் காணப்பட்டிருக்க, கட்டளைகள் எழுதப்படு வதைக் கவனித்துக் கொண்டிருந்தான். அவன் தேவ சமூகத்தில் நின்று கொண்டிருக்கையில், அந்த சத்தமானது அவனிடம் பேசி, "மோசே, நீ எங்கு நின்று கொண்டிருக்கிறாய்? நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி, உன் பாரதட்சைகளைக் கழற்று" என்று கூறியது.

211. அது இப்பொழுது நியாயாசனமாக ஆகியிருக்கிறது, மீட்கப்பட்டவரைத் தவிர வேறு எவரும் அதற்கு முன்பாக நிற்க இயலாது. பாவி அதை அணுக முடியாது, முடிந்துவிட்டது, அது நியாயாசனம் இப்பொழுது.

212. மோசே பரலோகத்தில் கண்ணுற்றவைகளுக்கொப்பான வைகளை பூமியில் உண்டாக்கினான், ஆசரிப்புக் கூடாரத்தை உண்

கதறுகிறது, அப்போது நமது இரட்சகர் பூமிக்கு மீண்டும் வந்திடுவாரே.

203. ஓ! ஆயிரமாண்டு அரசாட்சி வந்திடும் என அவர் வாக்குரைத்த அந்த மகத்தான நாளுக்காக நாம் எவ்வளவாய் ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கிறோம்! மற்றுமொரு காரியம், வானவில் அவரைச் சூழ்ந்திருந்தது என்பதற்குக் காரணம் என்னவெனில், அவர் உடன்படிக்கையைக் காத்துக் கொள்கிற தேவனவர். அவர் தமது உடன்படிக்கையைக் காத்துக் கொள்வார்.

204. இப்பொழுது, நாம் எப்படியாவது அடுத்த வசனத்தை எடுத்துக்கொள்வோம். நாம் இன்னும் ஒரு வசனத்தை எடுத்துக்கொள்வோம், அதைப் பார்ப்பதற்கு நமக்கு பத்து பதினைந்து நிமிடங்களே உள்ளன. நீங்கள் மிகவும் களைப்பாய் இருக்கிறீர் களா? தொடர்ந்து நாம் செல்லலாமா? (சபையோர் 'ஆமென்'' என்கின்றனர்-ஆசி). நல்லது நாம் நான்காம் வசனத்தை எடுத்துக் கொள்வோம்.

"அந்தச் சிங்காசனத்தைச் சூழ இருபத்து நான்கு சிங்காசனங் களிருந்தன; இருபத்து நான்கு மூப்பர்கள் வெண் வஸ்திரந் தரித்து, தங்கள் சிரசுகளில் பொன்முடி சூடி, அந்தச் சிங்காசனங்களின் மேல் உட்கார்ந்திருக்கக் கண்டேன்.''

வெளி. 4:4)

205. அந்த வசனத்தை முழுமையாக நாம் பார்க்க முடியாது போகக்கூடும். ஆனால் நாம் நான்காம் வசனத்தை ஆரம்பித்து விடுவோம். இப்பொழுது பாருங்கள், யோவான் அவரைக் கண்ட போது, அவரைச் சுற்றிலும் மரகத நிறம் போல் இருந்தது. நாம் எல்லா நிறங்களையும் பார்த்தோம், வானவில்லையும் மற்றும் இன்ன பிற காரியங்களையும் பார்த்தோம், அவைகள் எதைக் குறிக்கின்றன என்பதையும் பார்த்தோம். நான்காம் வசனத்தில், இப்பொழுது, இங்கே அவர் முதலாவதாக கூறும் காரியம் என்னவெனில், நான்காம் வசனத்தில் :

"அந்தச் சிங்காசனத்தைச் சூழ..."

206. கவனிக்கவும் இங்கே அது அத்தகையதொரு அழகான காட்சியாக இருக்கிறது, அதைக் கவனிக்கத் தவறவேண்டாம். ''சிங்காசனம்.''

207. நாம் மோசேக்கு திரும்பிப் போவோம். அதையெல்லாம் நாம் எடுத்துப் பார்ப்பதற்கு நமக்கு நேரம் இல்லை. நான் சொல் வதை



அங்கிருந்து கொண்டு தம்முடைய சபையோடு பேசிக் கொண்டிருந்தார். பிறகு சபைக்காலங்கள் முடிவடைந்த பிறகு, அவர் பூமியை விட்டு பரலோகத்திற்குச் சென்று, தன்னால் மீட்கப்பட்டவர்களை மேலே வரும்படி அழைத்தார். ஓ, அது அழகாக இருக்கவில்லையா? ஓ, அது என் இருத யத்தை துள்ளச் செய்கிறது.

43. நாம் இந்த காரியங்களைப் பற்றி போதிக்கையில், விசேஷமாக கர்த்தருக்குள் புதிதாக வந்திருக்கிற சகோதரி ஜனாவும் அவளுடைய கணவரும், ராட்னியும் அவரது மனைவியும், சார்லி தம்பதி யினரும் ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். மற்றும் கர்த்தருக்குள் புதிதாக வந்திருக்கிற இளமையானவர்களாகிய ஏனைய அநேகர், நீங்கள் இன்னமும் ஆழமாகச் செல்ல வில்லை, நீங்கள் கர்த்தர் நல்லவர் தயையுள்ளவர் என்பதை மட்டும் ருசி பார்த்திருக்கிறீர்கள்; இவைகளை நீங்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டியது அவசியமென்பதால் தான் உங்களுடைய விசு வாசத்தை நிலைநாட்டிடவும் வேண்டுமென்பதற்காகத்தான் இவைகளை போதிக்கிறோம். தேவன் எதையாவது கூறினால் அது நிச்சயமாக நிறைவேறும். அது தவறவே தவறாது. தேவன் உரைத்த வைகள் அவை நிறைவேறுவதற்குரிய வாய்ப்புகளுக்கு பல இலட்சக்கணக்கான மைல்கள் தூரத்தில் உள்ளது போல் தோன்ற லாம், ஆனால் தேவனோ, சரியானபடி அதை சம்பவிக்கப் பண்ணுகிறார். உங்கள் தோற்றத்தில் அது சாத்தியமில்லாதது போல் தோன்றக் காரணம், அவர் உங்களை சோதிப்பதற்காக அவ்வாறு செய்வதினால்தான்.

44. அவர் ஆபிரகாமுக்குக் கூறியதைப் பாருங்கள். ஆபிரகாம் அவனுக்காக இருபத்தைந்து ஆண்டுகள் காத்திருந்தான். அவர் அவனிடம், 2நீன் உள் மகனை மலையின் மேல் கொண்டு சென்று அவனை அங்கே கொன்று விடு,'' என்றார். அவர், ''அவனை இங்கே கொன்றுவிடு,'' எவ்விதம்..... "நான் உன்னை தேசங்களின் பிதாவாக்குவேன்.''

45. ஆபிரகாம் நூறு வயதாயிருந்தான், அவன் மனைவியோ தொண்ணூறு வயது டையவளாயிருந்தாள். அவர்களது ஒரே மகனை..... அப்பொழுது ஆபிரகாமுக்கு நூற்றுப் பதினைந்து வயது இருக்கும், எனவே அவன் கூறினான், ''அது எவ்வாறு நடக்கப் போகிறது, அவன் எவ்வாறு....? நான் முதிர்வயதுடைய வனாயிருக்கிறேன், அவளும் என்னைப் போல் முதிர்வயதுடையவள்தான், நாங்கள் இருபத்தைந்து ஆண்டுகள் காத்திருந்த பிறகு..... நான் எழுபத்தைந்து வயதாயிருக் கையில் நீர் எனக்கு ஒரு வாக்குத்தத்தத்தைத்தந்தீர். இதோ இங்கே

நான் நூறு வயதுள்ளவனாயிருக்கிறேன், சாராளோ அறுபத்தைந்து வயது டையவளாயிருக்கையில் ..... அவள் இப்பொழுது தொண்ணூறு வயதுடையவளாய் இருக்கிறாள். எப்படி? இந்தக் குழந்தையை நாங்கள் பெற்ற பிறகு.... நீர் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால், அப்பொழுது நான் எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால், அப்பொழுது நான் எழுபத்தைந்து வயதுடையவனாய் இருந்தேன். சாராளோடு நான் இத்தனை ஆண்டுகள் வாழ்ந்துவிட்ட பிறகு, நான் குழந்தையை அடையப் போகிறேன் என்று நீர் கூறினீர். நானோ மூப்படைந்ததினால் இனப் பெருக்கத்துக்கு தகுதியற்றவனாகவும், சாராள் மலடியாகவும் இருந்தாள். ஆகவே, பிறகு அது எவ்வாறு நடந்தது? என்னையும் அவளையும் இனப் பெருக்கத் துக்கு தகுதியுள்ளவர்களாக ஆக்கினீர். இவ்வாறாக நீர் எங்களுக்கு இக்குழந்தையைத் தந்தீர். இந்தப் பிள்ளையை இந்தப் பதினைந்து ஆண்டுகள் வரையிலும் வளர்த்து விட்டோம். இந்தக் குழந்தை யின் மூலமாக பூமியிலுள்ள புறஜாதிகள், மற்றும் எல்லா ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று கூறினீர். இப்படியாக நான் புறஜாதிகளுக்கும் கூட தகப்பனாவேன் என்று சொன்னீர்; பிறகு வரப்போகும் காலங்களில் கூட, கர்த்தாவே, நீர் என்னை வானத்தின் கீழே, ஒவ்வொரு ஜாதியினருக்கும், இக்குழந்தையின் மூலமாக என்னை தகப்பனாக ஆக்குவேன் என்று நீர் வாக்கருளியிருக்கிறீர். இந்தக் குழந்தையின் மூலமாக, இதன் சந்ததியில், ஒரு மீட்பர் வருவாரென்றும், அந்த மீட்பர் முழு மனித இனத்தையும் மீட்டுக் கொள்வார் என்றும் கூறினீர். ஆகவே நீர் அதையெல்லாம் எவ்வாறு நடத்தப் போகிறீர் கர்த்தாவே?" என்று கேட்டிருப்பானா? அது ஆபிரகாமுடைய சிந்தையல்ல, அது ஆபிரகாமுடைய கேள்வியல்ல. கீழ்ப்படிதல்! "நீர் எப்படி இதைச் செய்யப் போகிறீர்?'' என்று அவன் கேட்கவில்லை.

46. ''அது என்னுடைய வேலையல்ல. நீர் அதைக் கூறினீர். உம்முடைய வார்த்தை சரியாயிருக்கிறது என்பதை நான் அறிவேன். நான் எழுபத்தைந்து வயதுடையவனாய் இருக்கையில், 'நீ பிரிந்து வந்து, நீ அறியாத நான் காண்பிக்கும் அந்நிய தேசத்திற்குள் சஞ்சரி' என்று கூறினீர். நான் இந்த தேசத்தில் இருபத்தைந்து ஆண்டுகளாக சஞ்சரித்து வருகிறேன்; வயோதிபனாக இத்தேசத்தில் விடப்பட்டு, என் மனைவியோடு வாழ்ந்து வருகிறேன்; அவள் சிறு பெண்ணாக இருந்த காலந்தொட்டு அவளோடு வாழ்ந்து வந்திருக்கிறேன்.'' அவள் அவனது ஒரு வழியில் சகோதரி முறை யானவளுங்கூட. "நீர் வாக்குத்தத்தம் செய்தபடியே இக்குழந் தையை எனக்குத் தந்தீர். மரித்தோரிலிருந்து



201. அங்கே தேவனிலும் மேலானவர் ஒருவர் இல்லை, ஆகவே அவர் தமது பேரிலே தானே ஆணையிட்டு கொடுத்தார். ஆமென் அவர் தன்னைக்கொண்டே தன் பேரிலேதானே ஆணையிட்டு, தாம் இந்த உடன்படிக்கையை உறுதிப்படுத்துவதாகக் கூறினார். ஆமென் ஓவ்யூ! 'ஆபிரகாமின் வித்தைக் காப்பதாக'' தன் பேரிலேயே ஆணையிட்டுக் கொடுத்தார். புறஜாதிகளுக்கு ஆபிரகாமின் சந்ததி எவ்வாறு உள்ளது? பரிசுத்த ஆவியின் அபிஷேகம் ஆபிரகாமின் சந்ததியாயிருக்கிறது. தமது பேரிலேதானே ஆணையிட்டு, "நான் அவர்களை எழுப்பி, அவர்கள் ஒவ்வொருவருக்கும் நித்திய ஜீவனைக் கொடுத்து, அவர்களை இப்பூமியில் மீண்டும் நிலைக்கப் பண்ணு வேன்" என்றார். அதை பார்க்கையில், நமக்கு வருத்தப்படுவதற்கு என்ன இருக்கிறது?

202. எனவே நாம் அவரை இந்த பச்சை, சொகுசாவின் நிறமுள்ள வட்டவடிமான வில்லில் பார்க்கிறோம். பச்சை நிறமாயுள்ள இது, எதை எடுத்துக் காட்டுகிறது? ஜீவனை எடுத்துக் காட்டுகிறது. பச்சை நிறம் சதா பசுமையாகவே இருக்கிறது. எப்பொழுதும் பச்சையாகவே இருக்கிறது. அது ஜீவனாயிருக்கிறது. அதன் அர்த்தம் என்ன? ஆதியாகமத்தில் அவர் ஆணையிட்டுக்கொடுத்து, வாக்குத் தத்தம் செய்திட்டார். எப்படியெனில், ஆகாயத்தில் வானவில்லைப் போட்டு, இனி இவ்வுலகை ஜலத்தினால், அழிக்கப்போவதில்லை என்று ஆணையிட்டு கொடுத்தார். அவர் மேலும் ஆணையிட்டு, தமது பேரிலேதானே ஆணையிட்டுக் கொடுத்ததென்னவெனில், ஆபிர காமின் சந்ததி அனைத்தையும் எழுப்புவேன் என்றார். மேலும் இவ்வுலகமானது, அசையச் செய்யும் நியாயத்தீர்ப்புகள் அனைத் திலும் நிலைத்திருக்கும் என்றார். வரப்போகும் பாடங்களில் நியாயத்தீர்ப்புகளைப் பற்றி நாம் பார்க்கிப்போகிறோம். அப்பாடம் உங்களுக்கு இவ்வுலகமானது எப்படி வெந்து எரிமலைப் போல் உருக்கிப்போகும் என்பதையும், வெடித்துச் சிதறும் என்பதையும் தலைகீழக புரட்டிப்போடப்படும் என்பதையும் பற்றியும் உங்களு களுக்கு காண்பிக்கும் ஆனால் அவரோ தம் பேரிலே தானே ஆணையிட்டு, தான் அழிப்பதில்லை என்றும், தாம் அதை நேர்சீர் செய்து தமது பிள்ளைகளை ஆயிரமாண்டு அரசாட்சிக்காக அங்கே வைக்கப்போவதாகவும் உறுதியிட்டு வாக்குரைத்தார். ஓ, என்னே! ஆயிரமாண்டு அரசாட்சியின் நாளுக்காக நான் ஆவலுடன்

காத்திருக்கிறேன்; அப்போது நமது துதிக்கப்பட்ட கர்த்தர் வந்து, காத்துநிற்கும் தம் மாணவாட்டியை எடுத்துக்கொள்வார். ஓ எனது இதயம் அவ்வினிய விடுதலைக்காக ஏங்குகிறது,

ஒரு சமயத்தில் பூமியின் பாதியளவுக்கு மட்டுமே பிரகாசிக்கிறது என்பதைப் பாருங்கள். ஆனால் யோவான் அவரை அங்கே காண்கையில், அவர் அங்கே அச்சிங்காசனத்தின் மேல் அமர்ந்திருக்கையில் பார்வைக்கு பதுமராகத்துக்கும் வச்சிரக் கல்லுக்கும் ஒப்பாயிருப்பதைக் கண்டான். அது சொகுசாவின் நிறமாயிருந்தது. பதுமராகத்யுைம் வச்சிரக்கல்லையும், அதின் இரு நிறங்களையும் கலந்தால், உங்களுக்கு சொகுசாவின் நிறம் கிடைக் கும் சிங்காசனத்தைச் சுற்றிலும் சொகுசாவின் நிறம் உண்டா யிருந்தது. ஓ, என்னே ! நான் உங்களுக்குக் கூறுவேன். இதைப் பற்றி நாம் இன்னும் பார்த்துக் கொண்டே போகலாம்.

197. ஏழு ஆவிகளில், ஏழு நிறங்கள் ஏழு சபைக்காலங்கள், ஏழு தூதர்கள், ஏழு விளக்குகள், ஆக யாவும் ஏழில் உள்ளது. தேவன் 'ஏழு'' என்ற எண்ணில் நிறைவு அடைகிறவராக இருக்கிறார். தேவன் ஆறு நாட்கள் கிரியை செய்து, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந் தார். உலகமானது ஆயிரம் ஆண்டுகள் நிலைத்திருந்து, பிறகு , ஏழாவது ஆயிரத்தில் ஆயிர வருட அரசாட்சியாகும்.

198. அரை வட்டத்தில், "இன்னும் பாதியளவு கூறப்பட்ட வேயில்லை" என்பதைக் கவனியுங்கள். இப்பொழுது, இவைகள் நிச்சயமாகவே ஒன்றைக் குறித்து எடுத்துகாட்டாய் உள்ளன.

199. யாத்திரகாமம் 23:13லும், எபிரெயர் 6:12லும் தேவன் தன் பேரில்தானே ஆணையிட்டு " ஒரு உடன்படிக்கையை ஏற்படுத் தினார் என்று பார்க்கிறோம் எபிரெயர் 6:13-ல் தமது பேரிலே ஆணை யிட்டு என்று கூறப்பட்டுள்ளது. ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் அவர் சொன்னபோது, ஆபிரகாமோடு அவ்வுடன்படிக்கை அவர் செய்யப்போவதாக கூறிய போது - அது நித்திய உடன்படிக்கையை யாகும்? ஆணையிடுவிக்கும்படி அவரிலும் மேலாக ஒருவரும் இல்லை.

200. ஒரு உடன்படிக்கையானது, எப்பொழுது ஒரு ஆணையால் உறுதிப்படுத்துப்படும் எனவே அங்கே அவரிலும் மேலானவர் ஒருவருமில்லை. உங்களிலும் மேலான ஒருவரின் பேரில் தான் நீங்கள் ஆணையிடுதலையும் செய்வீர்கள். ஒரு வேளை உங்கள் தாயின் பேரில் செய்வீர்கள், அல்லது உங்கள் தேசத்தின் பேரில் ஆணை யிட்டுக்கொடுக்கலாம். ஏதோ ஒன்றின் பேரில் ஆணையிட்டுக் கொடுப்பீர்கள், தேவனின் பேரில் ஆணையிட்டு கொடுப்பீர்கள். உங்களிலும் மேலாக ஒருவர் உங்களுக்கு இல்லாவிடில் நீங்கள் ஆணையிட்டுக் கொடுக்க முடியாது.



எழுந்த ஒருவனைப் போல் அவனை பெற்றுக் கொண்டேன். இதையெல்லாம் நீர் செய் திருப்பதை நான் கண்ட பிறகு, இப்பொழுது அவனை பலியிடு என்று கூறும் பொழுது, நான் அவனை அவ்வாறு பலியிட்டு விட்டாலும் நீர் அவனை மரித்தோரிலிருந்து மீண்டும் உயிரோடு எழுப்பிட வல்லவராயிருக்கிறீர் என்பதை நான் அறிவேன்'' என்று கூறினான். ஓ, என்னே ! அவ்வாறு தான் நடக்கும். அவர் அதைச் செய்தார்.

47. அவன் முழுமையாக தேவனுக்கு கீழ்ப்படிந்த போது, அவன் தனது ஒரே மகனாகிய ஈசாக்கின் தலைமுடியை ஒன்று சேரப் பிடித்துக் கொண்டு, அவனைக் கொலை செய்வதற்காக ஈட்டியை எடுத்தான்; தேவன் தாமே இந்நிகழ்ச்சியின் மூலமாக நமக்கு ஒரு மாதிரியைக் காண்பிக்கிறார். எதற்காக அதை அவர் செய்தார்? அவர் அதைச் செய்ய வேண்டுவதில்லை. ஆனால் உங்களுக்காகவும் எனக்காகவும் அவ்வாறு செய்தார், ஏனெனில், மனிதருடைய இருதயங்கள் பொல்லாததாய் இருக்கும் இந்தப் பயங்கரமான நாட்களில், நாம் இந்தக் காரியங்களை உற்று நோக்கி, அவருடைய வாக்குத்தத்தத்தை அவர் காத்துக் கொள்கிறார் என்பதை அறிந்து கொள்ளும்படிதான் அவ்வாறு செய்தார். அவருடைய வாக்குத்தத்தத்தங்கள் எவ்வளவு தான் போதுமானதாகவும், சாத்தியமான தாகவும் இல்லாதது போல் தோன்றினாலும், தேவன் தேவனாகவே நிலைத்திருந்து, தான் செய்த ஒவ்வொரு வாக்குத்தத்தத்தையும் காத்துக் கொள்கிறார்.

48. அதைத் தான் நான், இந்த சுகமளித்தலின் ஆராதனையில் நாம் உட்கார்ந்து எழுந்து நிற்கையில், உங்களுக்குக் கூற முயன்று கொண்டிருக்கிறேன். நீங்கள் எழுந்து நின்று, "நான் சுகவீனமா யிருக்கிறேன்'' என்று கூறுகிறீர்கள். நீங்கள் வியாதியஸ்தராயிருக் கிறீர்கள் என்பதில் ஒரு சந்தேகமுமில்லை. ஆனால் தேவனோ தம்முடைய வாக்குத்தத்தத்தை காத்துக் கொள்ளுகிறவராயிருக்கிறார். அப்பொழுது அவர் இறங்கி வருவார். இப்பொழுது, பாருங்கள், அவர் உங்களை சுகமாக்கத்தக்கதாக, அவர் பலியாகி, பிராயச்சித்தத்தை உங்களுக்காக செய்தார். அதையே அவர் செய்திருக்கிறார். உங்களை அவர் கேட்பதெல்லாம், அப்பிராயச் சித்தத்தை நீங்கள் விசுவாசிக்க வேண்டுமென்பதே, ஆபிரகாமைப் போல் அதைப் பற்றி கண்டுகொள்ள வேண்டுமென்பதே, ஆபிரகாமைப் போல் அதைப் பற்றி கொள்ள வேண்டுமென்பதே.

49. ''நல்லது, இன்னும் ஒரு நாள் தான் நான் ஜீவிப்பேன் என்று மருத்துவர் கூறினார்'' என்கிறீர்கள்.

50. நான் அதைப்பற்றி கவலைப்படவில்லை. அது அருமையாகத் தான் இருக்கிறது. அவ்வளவு தான் மனிதன் அறிந்துள்ளவையாகும்; அதிகபட்சம் அவன் அறிந்ததெல்லாம் அவ்வளவுதான். ஆபிரகாம் தன் மகனை அங்கே பலிபீடத்தில் கிடத்தி விட்ட பிறகு, அவனை திரும்ப எவ்வாறு தனக்கு பெற்றுக் கொள்ளப் போகிறான், ஏற்கனவே தேவனுடைய வார்த்தையோ "நீ போய் உன் மகனை பலியிடு'' என்று கூறிவிட்டதே? அவன் எவ்வாறு அதைச் செய்யப் போகிறான்? அந்தக் கேள்விக்கே அங்கே இடமில்லை. அவ்வாறு செய்யும்படி தேவன் கூறிவிட்டார், அதுவே அதன் முடிவு. "டாக்டர்கள் நான் குணமடைய மாட்டேன்? என்று கூறியிருக் கையில், நான் குணமடைவது எப்படி?'' என்று கேட்கலாம். அவ்வாறு நான் கேள்வி கேட்க எனக்கு தேவையில்லை. தேவ னுடைய வார்த்தையை அப்படியே ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். நீங்கள் சுகமாகப் போகிறீர்கள் என்பது உங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டவிட்ட உடனேயே, நீங்கள் குணமடையப் போகிறீர்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அதைப் பெறுவதிலிருந்து உங்களை ஒன்றும் தடுத்துவிட முடி யாது. அது உண்மை. பாருங்கள்?

51. ஆகவே ஆபிரகாம் பரிபூரணமாக கீழ்ப்ப டிந்த போது..... அவர் எவ்வாறு அதைச் செய்யப் போகிறார்? கடைசி வேளையானது வருவதற்கு இன்னும் ஐந்து நிமிடங்களே உள்ளன, இன்னும் மூன்று நிமிடங்களே உள்ளன; கடைசி இரண்டு நிமிடங்கள் வந்து விட்டது, கடைசி ஒரு நிமிடம், கடைசி முப்பது வினாடிகள், கடைசி வினாடியும் வந்துவிட்டது, மகனின் ஜீவனை எடுக்க தந்தையின் கையானது ஏற்கனவே ஓங்கியாகிவிட்டது, அந்த க்ஷணத்தில் தேவன், "நிறுத்து, நிறுத்து, அங்கேயே. நீ உண்மையிலேயே என்னை நம்புகிறதை நான் காண்கிறேன்; இப்பொழுது ஆபிரகாமே, நான் இதைச் செய்ததற்குக் காரணம் என்னவெனில்; எதிர்காலத்தில் பிரன்ஹாம் கூடாரத்தின் மக்கள் என்னை நம்பவேண்டும் என்பதற்காகத்தான். அவர்கள் என்னை சந்தேகப்படவே கூடாது. என்னை நம்ப வேண்டும் என்பதற்காகத் தான்'' என்றார்.

52. சரியாக அந்த வேளையிலே, அங்கே ஒரு பலியானது ஆயத்த மாக இருந்தது. அவர் அதை வீணாக உண்டாக்கவில்லை. இல்லை, அவர் அதை வீணாக உண்டாக்கவில்லை; சரியாக அந்த வேளையிலே தானே, ஒரு ஆட்டுக்கடா கத்தியது; ஒருசிறு ஆட்டுக்குட்டி ஒன்று, வனாந்திரத்திலே புதரிலே தன் கொம்புகள் சிக்கிக் கொண் டிருந்த நிலையிலே இருந்தது. இதைக் குறித்து எத்தனை தடவைகள் நாம் படித்திருக்கிறோம்! அவ்வாட்டுக்கடா எவ்வாறு அங்கே வந்தது? எல்லா



"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.

ஏசா.53:5

194. அப்பரிபூரண மனிதனுக்கு தேவன் என்ன செய்தார்? அத்தகையதான மனிதர் ஒரேயொருவர்தான் இவ்வுலகில் இருந் திருக்கிறார். அது அவராகத்தான் இருந்தது. தேவன் அவரை இங்கே செதுக்கி, செம்மையான வடிவமைப்பை ஏற்படுத்தினார். ''நம் முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டார்." ஏனெனில் நான் ஒரு பாவியாக இருந்தபடியால், அவர் தமது ஏழு சபைக் காலங்களின் வானவில் ஒளியை என் மேல் பிரகாசிக்கச் செய்து, அவர் என்னுடைய மீறுதல்களினிமித்தம் காயப்பட்டார் என்பதை நான் அறியும்படி செய்தார்.

195. அங்கே உங்களுடைய ஏழு நிற வானவில்லானது இருக் கிறது. 'அவர் நமது மீறுதல்களினிமித்தம் காயப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் நாம் குணமானோம்." தேவன் அவரை நொறுக்கினார், அவரைக் காயபப்டுத்தினார், அவரை அடித்து நொறுக்கினார். அதின் மூலமாக, மரித்துக்கொண்டிருக்கும் அவரது காயங்களின் மூலமாக, பாவ மன்னிப்பு , சந்தோஷம், சாந்தம் தயவு ஆகியவைகள் நம்மேல் பிரகாசிக்கும்படி செய்தார். தேவனுடைய ஏழு ஆவிகளும், ஆவியின் ஏழு கனிகளைக் குறிக்கும், அவை அவருடைய ஜனங்கள் மேல் திரும்பி பிரதிபலிக்கும். அவர் காயப்பட்டு, உருவகப்படுத்தப்பட்டு, உருவாக்கப்பட்டார் அதினால் தேவனுடைய ஒளியானது அந்த மனிதனின் சரீரத்தின் மூலமாக பிரதிபலித்து, முழு உலகையும் மீட்கத்தக்கதாக ஆயிற்று. ''நான் பூமியிலிருந்து உயர்த்தப் பட்டருக்கும் போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்வேன்''. அந்த வானவில்லானது தனது நிறங்களை பிரதிபலிக்கச் செய்திடுகையில், அதைக் கவனித்துப் பாருங்கள்.

196. ஆனால் யோவான் இங்கே அவரைக் காண்கையில், அது என்னவாயிருந்தது? மீட்பின் நாளானது முடிவடைந்திருந்தது. அது யாவும் முற்றுப்பெற்றுவிட்டது. எனவே யோவான் அவரை இங்கே அவரது மூலநிலையில், சொகுசாவின் நிறத்தில் காண் கிறான். உலகின் பாதி வரையில் மட்டுமல்ல... சூரியனானது சுற்றி வருகையில்,

சகோதரனே, நீங்கள் அந்த இரத்தினத்தை, அந்த மகத்தான வைரத்தை. ஒரு மனிதன் கண்டுகொள்ளும்போது, அப்பொழுது அவன் தன்னுடைய ஆஸ்தியையெல்லாம் விற்று அதைக்கொள்ளுகிறான். எல்லாவற்றையும் அதற்கென கொடுத்து விடுகிறான்.

191. உறங்கும் கன்னியரைப்பாருங்கள். ஓ, அவள் என்ன செய்தாள்? அவள் தனது எண்ணெயை வாங்குவதற்காக, ஒன்றை விற்க வேண்டியவளாய் இருந்தாள். அவள் எதை விற்க வேண்டி யிருந்தது? அவளது பழைய மதக்கோட்பாடுகளையும், ஸ்தாபனங் களையும் மற்றும் அவற்றின் காரியங்களையுமே. கிறிஸ்துவாகிய அந்த மகத்தான இரத்தினக் கல்லைக் கண்டு கொள்ள அவள் தனக்குள்ளதெல்லாவற்றையும் விற்றுவிட்டாள். இயேசுவாகிய அந்த சரீரம்... (ஒலிநாடாவில் காலியிடம் -ஆசி) இந்த இருண்ட விடியற்காலைகளில் ஒன்றில் பரலோகத்திற்குக் கொண்டு போவ தற்கான வண்டியானதும் வரும் வேளையில், பரலோகத்திற்குப் போவதற்காக டிக்கெட் என்னிடம் இருக்குமானால், ஓ, அது எத்தகைய ஒரு ஆசீர்வாதமாயிருக்கும்.

மெய்யாம் ஜீவ நதி

பாவம் போக்கும் நதி,

வேறேந்தியை அறியேன்,

இயேசுவின் இரத்தந்தானே.

192. கீர்த்தியோ, அல்லது பெரிய பகட்டான காரியங்களோ அல்ல, ஐசுவரியங்கள் அல்ல, இல்லை, இல்லை, அவையொன்று மில்லை, அந்த விலையேறப்பெற்ற ஜீவ நதியை எனக்கு தாருங்கள். அவ்வளவுதான்!

நான் ஒன்றும் கொண்டு வரவில்லை

சிலுவையை மட்டும் பற்றிக் கொள்வேன்.

193. அந்த மகத்தான இரத்தினக்கல்! அது என்னவாயிருந்தது? அது பூரணமானதாக இருந்தது. அது முப்பத்து மூன்றரை வயது டையதாக இருந்தபோது, தேவன் அந்த விலையேறப்பெற்ற வைரக் கல்லை அந்த பெரிய நொறுக்கும் இயந்திரத்தில் வைத்தபோது, அது அங்கிருந்து எடுக்கப்பட்டபோது, அவர் அதை எடுத்து பட்டை தீட்டி நொறுக்கி, காயப்படுத்தி அதை உருவாக்கினார்.



காட்டு விலங்குகளைக் கடந்து எவ்வாறு அது அங்கே வந்தது? மக்கள் வாழும் பகுதிகளை விட்டு நூற்றுக்கணக் கான மைல்கள் தூரத்தில், சிங்கங்களும் ஓநாய்களும், நரிகளும் மற்றும் எல்லாவிதமான காட்டு விலங்குகளின் மத்தியில், தண்ணீரோ புற்களோ காணக்கிடையாத அந்த வறண்ட மலையின் மேல், அவ்வாட்டுக்கடா அங்கே என்ன செய்து கொண்டிருந்தது? தேவன் அதை சிருஷ்டித்து, அதை அங்கே வைத்தார்.

53. நாம் வாழும் நமது நாட்களில் அவரைக் காண்பதற்கு இயன்றி ருக்கிறது. இப்பொழுது இன்று காலையில், நான் என்ன கூற விரும்புகிறேனோ, அதைக் குறித்து கூற, அதற்காக நான் ஏராளமான தனிப்பட்ட காரியங்களைக் கூறியாக வேண்டியதிருக்கிறது. எனவேதானே, இதை ஆரம்பிப்பதற்கு முன்னர், நான் செய் கிறபடி, அதை இவ்வாறு ஆதாரப்படுத்துகிறேன். தனிப்பட்ட விஷயமாகத் தோன்றுகிற இவைகளை நீங்கள், அவைகள் தனிப்பட்ட காரியங்கள் என்பதாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்று நான் விரும்கிறேன். அவைகள் இங்கு எடுத்து இயம்பப்படுவதற்கு காரணம் என்னவெனில், அவைகள் உங்களுக்கு முன்னுதாரண மாக அமைந்து, அதைக் கொண்டு, உங்கள் விசுவாசமானது கிறிஸ்துவிலே உள்ள விசுவாசத்திலே பயபக்தியோடு அமைந்திருக்க வேண்டும் என்பதற்காகத்தான்; நீங்கள் அவரது வாக்குத் தத்தத்தின் மேல் இளைப்பாறுவதற்காகத்தான். ஏனெனில், தேவன் தனது வாக்குத்தத்தத்தை, அது எவ்வளவு பரிபூரணமாக இருக்க முடியுமோ, அந்த அளவுக்கு அதைக் காத்துக் கொள்கிறார், இப்பொழுது நமக்கு காண்பித்துக் கொண்டிருக்கிறார்.

54. யேகோவாயீரே என்று ஆபிரகாமால் அழைக்கப்பட்ட அவரை நோக்கிடுங்கள். எபிரெய பாஷையில் அதற்கு, "தேவன் தமக்கென ஒரு பலியை அளித்திடுவார்'' என்பதே அர்த்தமாகும். தேவனால் அதைச் செய்ய முடியும். அதற்கான அவருடைய வழியை அவர் உண்டாக்கினார். அவர் ஒன்றைக் கூறினாரெனில் ... நோவாவைக் குறித்து அவர் கூறினார்....

55. ''நல்லது, அது ஆபிரகாமுக்குத் தான் கூறப்பட்டது'' என்று நீங்கள் கூறலாம். இல்லை. அவர் காலங்கள் தோறும் கூறிக் கொண்டிருக்கிறார். இன்னமும் அவர் சொல்லிக் கொண்டேதான் இருக்கிறார்.

56. தேவன் நோவாவிடம், "மழை பெய்யப் போகிறது'' என்று கூறினார். அங்கே ஆகாயத்தில் ஒரு மேகம்கூட இல்லை. எங்கோ ஒரு சிறு நீரோடை, அல்லது சிறு ஊற்றைக் கொண்டு தான் அதற்கு முன் தேவன் தேசத்திற்கு நீர்ப்பாய்ச்சினார். அது தான் அன்றைக்கு இருந்த பெரிய நீரோடையாயிருந்தது. அன்றைக்கு அங்கே இருந்த பெரிய நீரோடையே அது தான்.

57. "எவ்வாறு ஆகாயத்தில் இருந்த மழையானது, தண்ணீரானது கீழே வரப்போகிறது?" என்று மக்கள் நோவாவை கேட்கின்றனர். ''உஷ்ணமான சூரியன் இருக்கும் வானத்தில் தண்ணீரானது ஏதாவது இருக்கிறதா என்பதை எனக்கு காண்பியுங்கள் பார்க்க லாம்'' என்றார்கள்.

58. "ஒரு பேழையை கட்டி உண்டாக்கு'' என்று தேவன் கூறினா ரெனில், மழை வருகிறது என்று சொன்னாரென்றால், பேழையைக் கட்டி உண்டாக்கி அதற்காக ஆயத்தமாகக் காத்து இருக்க வேண்டியது என் வேலை, ஏனெனில் அது நிச்சயமாக வருகிறது. அவர் யேகோவாயீரேயாக இருக்கிறார். அவரால் தண்ணீரை மேலே யிருந்து அளிக்க முடியும்'' என்று நோவா கூறினான்.

59. அவர் செய்திருக்கிற ஒரே காரியம் என்னவெனில், என்ன சம்பவிக்க போகிறது என்று அவர் அறிந்திருக்கிறாரோ, அது வந்து சம்பவிக்கத்தக்கதாக, மதியீனமும் அற்பத்தனமும் உள்ள மனி தனை, தன்னுடைய விஞ்ஞான அறிவைக் கொண்டு, அதே காரி யத்தை (அழிவுக்கேதுவாக) செய்து கொள்ள அவனை அனுமதித்து விட்டார். தேவன் ஒருபோதும் உலகை அழிக்கவில்லை. மனிதனே உலகை அழிக்கிறான். தேவன் ஒன்றையும் அழிக்கிறதில்லை. தேவன் எல்லாவற்றையும் அழியாமல் காக்கவே முயலு கிறார். அந்த மரத்தைக் கொண்டு, மனிதன் ஏதேன் தோட்டத்தில் செய்தது போலவே, மனிதன் தன் அறிவைக் கொண்டு தன்னையே அழித்துக் கொள்ளுகிறான். ஆகவே, ஏதோ ஒரு பைத்தியக்காரன் கையில் அணுசக்தியானது அகப்பட்டுக் கொள்கிறது.

60. அவர்கள் அதைக் கொண்டு கிரியை செய்யக் கூடியதாக இருந்தது. ஏனெனில், இக்காலத்தில் நாம் கற்றுக் கொண்டிராத அளவுக்கு மிகவும் அறிவார்ந்த காரியங்களை அக்காலத்து மக்கள் உடையவர்களாயிருந்து, அவர்கள் பெரிய காரியங்களைச் செய் தார்கள். இக்காலத்தில் அந்த அளவுக்கு செய்வதற்கு இன்னும் மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் அதற்கு கூடுதலான ஆண்டு கள்



187. அந்த பெரிய கிம்மர்லி வைரச் சுரங்கத்தின் மேலாளர் (Manager) என்னுடைய கூட்டங்களில் வரிசைகளை ஒழுங்க படுத்துபவராக இருந்தார். அவர் உண்மையான தாழ்மையுள்ளவர், இனிய சகோதரர் அவர்.

188. அதன்பிறகு, தண்ணீர் ஓடிக்கொண்டிருக்க அதற்கு சுமார் மூன்று அடிக்கு மேலாக தூள் தூளாக நொறுக்கப்பட்ட பாறைத் துகள்களும் அதனுள் கிடக்கும் வைரக் கற்களும் ஓடும். அதில் காஸ்மோலின் என்ற ஒரு பொருளை தடவியிருப்பார்கள். அது என்ன? மேடா! நமது கேபினெட்டில் அந்த ஜாடியில் நாம் வைத்திருக்கும் அந்தப் பொருள் என்ன? அது வாஸலைன். அங்கே பக்கத்தில் ஒரு அங்குல கனத்திற்கு அந்த வாஸலின் பூசப்பட்டிருக்கும். வைரச் சுரங்கத்தில் வெட்டியெடுக்கப்பட்டு இயந்திரத்தால் இடித்து நொறுக்கப்பட்ட பாறைகள் அந்த வாஸலின் மேல் ஓடி வரும் போது அது அதில் ஒட்டிக் கொள்ளாமல் நழுவிச் சென்று விடும். ஆனால் அப்பாறைக்குள் வைரக்கற்கள் கடந்து வரும்போது அவை அந்த வாஸலின் மேல் ஒட்டிக்கொள்ளும். வைரக் கல்லானது ஈரப்பசையற்று இருக்கும், எனவே அது அப்படியே ஒட்டிக்கொள்ளும். நான் அந்த வைரக்கற்களை பொறுக்கியெடுப்பதைக் கண்டிருக்கிறேன்; மிகச் சிறிய வைரக்கற்களை கூட அவர்கள் லென்ஸ்கள் மூலம் கண்டுபிடித்து பிரித்தெடுப்பார்கள். அவர்கள் அவைகளை என்ன உபயோகத்திற்காக பயன்படுத்துகிறார்கள் என்று நான் அவர்களைக் கேட்டபொழுது, அவர்கள் அதை அமெரிக்கா வுக்கு விக்ட்ரோ லோ ஊசிகள் தயாரிப்பதற்கு அனுப்பி விடுகிறார்கள் என்று கூறினார்கள். அவைகள் தேய்ந்து போவதேயில்லை.

189. ஆனால் இந்தப் பெரிய வைரக்கற்கள் பெரிய பந்து போல் இருக்கின்றன. அவர்கள் அவ்வைரக்கற்களை மின் இயந்திரங்களைக் கொண்டு பட்டை தீட்டி, பட்டை தீட்டப்பட்ட வைரமாக ஆக்கு கிறார்கள். அவர்கள் அவைகளை பட்டை தீட்டும் போது, அக்கினி மயமான நிறங்கள் அவைகளிலிருந்து பளிச்சிடும், அது ஏழு நிறங்களையும் கூட பிரதிபலிக்கும்.

ஓ, எவ்வாறு இயேசுவும்...

190. உங்களிடத்தில் ஏராளமான பணம் இருக்கலாம். உங்களுக்கு நிறைய கடிலாக் மோட்டார் கார்கள் சொந்தமாக இருக்கலாம். நீங்கள் ஒரு பெரிய கதீட்ரலுக்கு மேய்ப்பராக இருக்கக்கூடும். நீங்கள் ஒரு பேராயராக, அல்ல ஒரு ஆர்ச்பிஷப்பாக இருக்கலாம். ஆனால் ஓ,

வட்டத்தின் ஒரு பாகமாக மட்டுமே, அதாவது ஒரு வில்லாக அமைந்தது. வட்டத் தின் ஒரு பாதிதான் அது; சபைக்காலங்களைக் குறிக்கிறது.

184. ஆனால் யோவான் அவரை சொகுசாவின் நிறத்தில் கண்ட போது, அவர் ஒரு முழு வட்ட, வளையமான பிரபையாக (Halo) சுற்றி சூழ்ந்திருந்தார். ஒரு வளையமும்! (சகோ. பிரான்ஹாம் பேச்சை இடையில் நிறுத்தி, விளக்குவதற்காக ஏதோ ஒன்றைத் தட்டுகிறார் - ஆசி) அவரைச் சுற்றிலும் சொகுசாவின் நிறமான ஒரு வட்டவளையம் சூழ்ந்திருந்தது. பார்த்தீர்களா? ஒரே நிறம் எல்லோர் மேலும், எல்லோருக்குள்ளும், எல்லோர் மூலமும் ஒரே தேவன் தான் இருக்கிறார், ஆனால் ஏழு சபைக்காலங்கள் உள்ளன.

185. ஒரு பெரிய வைரத்தைக் கவனியுங்கள். நீங்கள் அவைகளை ஆப்பிரிக்கா தேசத்தில் வீதிகளில் கிடக்கக் கணலாம். அதில் ஒன்றைக்கூட எடுத்து வைத்துக்கொள்ள நீங்கள் துணியமாட்டீர் கள்; ஏனெனில் அது பட்டை தீட்டப்படாத ஒன்றாகும். பட்டை தீட்டப்படாத வைரம் ஒன்றை நீங்கள் வைத்திருப்பீர்களானால், அதை வைத்திருந்ததற்காக, உங்களை சிறைப்படுத்தி உங்களுக்கு ஆயுட்காலம் சிறை வாசம் கொடுத்துவிடுவார்கள். அதைக் கண்ட வுடன் நீங்கள் அதை ஒப்படைத்துவிடவேண்டும்.

186. வைரமானது கடினமான ஒரு பொருளாகும். அவர்கள் அதை எடுத்து .... நான் நாற்பது டன் திறன் உள்ள, கற்களை அறைத்து பொடி செய்யும் இயந்திரத்தை உயரத்திலே நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்துள்ளேன். அதில் நீல நிற கற்களைப் போட்டு விடுவார்கள். அது சாம்பலைப்போல் தூள்தூளாக அக்கற்களை அறைத்து தள்ளவிடும். ஆனால் அதினால் வைரக்கல்லை அறைத்து விட முடியாது. இந்த நாற்பதுடன் அறவை இயந்திரம் உயரே ஒரு சுழலச் செய்கிறதான பொறியில் இணைக்கப்பட்டு தொங்கிக் கொண்டு இருக்கும். அவ்வாறாக அது பெரிய தடைக்கட்டைகள் கட்டி தொங்க விடப்பட்டு, உருண்டு கொண்டே அப்பாறைகளை தூள் தூளாக ஆக்கிவிடும். ஆனால் அதில் அகப்படும் வைரக் கல்லோ நொறுங்காது, அறைபடாது, அப்படியே முழுமையாக மீண்டு செல்லும். அது அந்த நாற்பது டன் எடையுள்ள உடைக்கும் இயந்திரத்தை அசைத்திடும். ஓ! அவ்வாறு அந்த நொறுக்கும் இயந்திரத்தால் இடிக்கப்பட்டும், கொஞ்சமும் நொறுங்காமல் அது புடையல் இயந்திரத்தால் தனியே புடைத்து சலித்து எடுக்கப்பட்டு, கழுவப்பட்டு, தொழிற் சாலைகளில் பொருட்களை எடுத்துச் செல்லும் நீண்ட கன்வேயர் பெல்ட் வழியாக எடுத்துச் செல்லப் படும்.



ஆகக்கூடும். அவர்கள் பிரமிடுகளையும் ஸ்பிங்க்ஸ் என்னப் படும் எகிப்திய கல்லறைக் கோபுரங்களுக்கு அருகிலுள்ள சிறகு டைப் பெண்முகச் சிங்க உருவச் சிலைகளையும் அக்காலத்தில் கட்டினார்கள். அதைப் போல் நாம் இக்காலத்தில் செய்ய முடியவில்லை. நம்மால் அம்மாதிரியானவைகளைப் போல் திரும்பச் செய்ய முடியாது. அவைகளைச் செய்ய நமக்கு வழியே இல்லை, அணுசக்தி வல்லமை இருந்தாலொழிய இயலாது. பெட்ரோலிய சக்தி, மின்சார சக்தி ஆகியவைகளால் அவைகளிலுள்ள ஒரு கற்பாளங்களைக் கூட தூக்க முடியாது, அதை தரையை விட்டு மேலே தூக்கிட முடியாது. அக்கற்பாளங்களில் சில, ஒரு நகரத்தின் நான்கு தெருக்களுக்குட்பட்ட வட்டகையின் நீளம் எவ்வளவு இருக்கு மோ அந்த அளவுக்கு ஆகாயத்தில் உயரமாக இருக்கக் கூடியதாக இருக்கும். ஒரு கற்பாளமானது ஒரு பில்லியன் டன் அளவுக்கு எடையுள்ளதாக இருக்கும். எவ்வாறு அவர்கள் அதை நகர்த்திக் கொண்டு வந்து அதில் பொருத்தினார்கள்? அவர்களுக்கு இருந்த அறிவைப் பாருங்கள். (ஒரு பில்லியன் என்பது நூறு கோடியாகும்).

61. அக்காலத்தில் அவர்கள், அணுகுண்டுகளை ஒருவர் இன்னொரு வருடைய பாதுகாப்பு வளையத்தினுள் பறந்து சென்று தாக்கும்படி விட்டனர். ஏனெனில், 'நோவாவின் நாட்களில் நடந்தது போல, அந்நாட்களில் இருந்தது போல உள்ள நாகரிகமும், அந்த விதமான புத்தி சாதுர்யமான மக்களும், நோவாவின் நாட்களில் இருந்தது போலவே, மனுஷகுமாரனுடைய வருகையின் நாட்களிலும் நடக்கும்''. அந்நாட்களில் இருந்தது அப்படியே திரும்ப நடக்கும். பார்த்தீர்களா?

62. இங்கே மெக்ஸிகோவில் சமீபத்தில், புதைபொருள் ஆராய்ச் சிக்காக அவர்கள் தோண்டிய பொழுது, நோவா காலத்து ஜலப் பிரளயத்திற்கு முந்தைய காலத்தைய நவீனமாக நீர் வழங்கும் அமைப்பு இருப்பதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அதைக் குறித்து பத்திரிக்கையில் நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். அதுதானே நவீனமாக நீர் வழங்கும் அமைப்பாகும். (நீர் வழங்கும் அமைப்பு (Water works) என்பது, நீர் சேமித்து வைத்து, குழாய்கள் வழியாக அதை விநியோகம் செய்வதாகும் - மொழி பெயர்ப் பாளர்). இக்காலத்தில் நமக்கு இருப்பதைப் போல் நவீனமானதாகும் அது. அது பூமியில் மிகவும் ஆழத்தில் புதைந்து போய் விட்டிருக்கிறது. அணுகுண்டு போன்ற ஒன்று அதை மூடிவிட்டது. அது வெடித்து, அவ்வாறு அது பூமியில் புதைந்து போய்விட்டது.

63. "நோவாவின் நாட்களில் நடந்தது போல்,'' புத்தி கூர்மையுடைய மனிதன், அணுசக்தி வல்லமையை உடைய புத்திசாலியான மனிதன், அன்றைக்கு இருந்தான். அவனால் பிரமிடுகளையும், ஸ்ஃபிங்கஸ்களையும் கட்டியெழுப்ப முடிந்தது. 'அந்த நாட்களில் நடந்தது போலவே இந்நாட்களிலும் இருக்கும்'' ஆனால் இந்நாளில் அவருடைய கிரியை உரிய வேளைக்கு முன்பாகவே விரைந்து முடிக்கப்படும். ஏனெனில் எடுத்துக் கொள்ளப்படுதலில் வெளியே எடுக்கப்பட வேண்டியவர்கள் அங்கே இருக்கிறார்கள். ஏனோக்கைப் போல் தீங்கு நாட்களுக்கு முன்பாகவே எடுக்கப்பட வேண்டிய மக்கள் உள்ளனர். இக்காலையில் நாமே அந்த வகுப்பாராக இருக்கிறோம். ஜலப்பிரளயத்தினூடே நோவா மேலே கொண்டு செல்லப்பட்டது போலவே, நாமும் மேலே கொண்டு செல்லப்படுவோம்.

64. இதை நீங்கள் மறந்துவிட வேண்டாம். ஒரு துளி மழை விழும் முன்னர், ஆகாயத்தில் ஒரு துளி இருப்பதற்கு முன்பு, நோவா பேழையை செய்து முடிப்பதற்கு முன்னர், ஏனோக்கு பரம வீட்டுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டான். ஏனோக்கு மரணத்தை ருசிபாராமல் மேலே எடுத்துக் கொள்ளப்பட்டான். ஒருநாள் அவன் நடக்க ஆரம்பித்து, இறுதியில், பூமியின் புவி ஈர்ப்பு விசையானது அவன் மேல் உள்ள பிடியை நழுவவிட்டு விட்டது. அவன் ஒரு அடி சற்று உயரமாக எடுத்து வைக்கையில், அடுத்த அடி சிறிது உயரமாக எடுத்து வைக்கையில், மற்றொரு அடி சிறிது உயரமாக எடுத்து வைக்கையில், முதல் காரியம் என்னவெனில், ''உலகமே, உன்னிடமிருந்து விடை பெறுகிறேன்'' என்று கூறினான். அவன் மேலே மேலே நடந்து சென்று மகிமைக்குள் பிரவேசித்து விட்டான்.

65. நோவா சுற்றுமுற்றும் பார்த்து, ஏனோக்கை எங்கும் காண முடியாத பொழுது, ஏனோக்கு எங்கே சென்றான் என்பதை அவன் அறியவில்லை. அப்பொழுது அவன், "இப்பொழுது பேழையைக் கட்டுவதற்கான வேளையானது வந்துவிட்டது'' என்று கூறினான். பாருங்கள்? மீதியாயிருப்பவர்களை ஜலப்பிரளயத்தினின்று காக்கும்படி பேழையைச் செய்வதற்குப் போய் விட்டான்.

66. இங்கும் அதே காரியம்தான் நடக்கிறது. சபையானது பரலோகத்தினுள் எடுத்துக் கொள்ளப்பட்டுவிட்டது. உயிர்த்தெழுந்தவர்களுக்கு முன்னடையாளமாக யோவான் சபையோடு மேலே கொண்டு வரப்பட்டிருக்கிறான். அதைக் குறித்து நேற்றிரவில் நாம்



(இண்டிகோ), செங்கருப்பு நீலம் (வாயலட்) மஞ்சள் ஆகிய நிறங்கள் தான் வானவில்லின் நிறங்கள். இப்பொழுது இங்கே நமக்கு ஆழமான காரியம் இருக்கிறது; நான் இப்பொழுது அதிலுள்ள உச்சமான காரியங்களைத் தொடப்போகிறேன், ஏனெனில், நேரமாகிக் கொண்டிருக்கிறது; இப்பொழுது ஞாபகத் தில் கொள்ளுங்கள். சிவப்பு ஆரஞ்சு நிறம் (செம்மஞ்சள் நிறம்) மஞ்சள், பச்சை, நீலம் இண்டிகோ (செங்கருப்பு நீலமும், நீலமும் கலந்த நிறம் வயலட் (செங்கருப்பு நீல நிறம்).... 12. ஏழு என்ற எண், அதை நீங்கள் கவனித்தால்... வானவில்லின் ஏழு நிறங்கள். அதாவது ஏழு வில் உள்ள வானவில். ஏழு வில்கள், ஏழு சபைகள், ஏழு ஒளிகளை பிரதிபலிக்கின்றன. ஒவ்வொரு ஒளியும் அடுத்ததில் சேர்ந்து இருக்கிறது. அது சிவப்பு நிறத்தில் ஆரம்பிக்கிறது. சிவப்பு. சிவப்புக்குப் பிறகு செம்மஞ்சள் நிறம் (ஆரஞ்சு நிறம்) வருகிறது. அது சிவப்பின் பிரதிபலிப்பாக இருக்கிறது. ஆரஞ்சு நிறத்திற்குப் பிறகு, மஞ்சள் நிறம் வருகிறது, அது தானே சிவப்பும் ஆரஞ்சு நிறங்களும் கலந்ததினால் வருவதாகும். அதன் பிறகு பச்சை, பச்சையும், நீலமும் கலந்தால் கருப்பு நிறம் ஏற்படுகிறது. பிறகு இண்டிகோ நிறம் (செங்கருப்பு நீலமும், நீலமும் கலந்த நிறம்) அதற்கடுத்த நிறம் வயலட் ( செங்கருப்பு, நீல நிறம்), அதுவும் நீல நிறத்தின் பாகமாக இருக்கிறது. ஓ, ஓ, ஓ, ஓ! அல்லேலூயா! அதை நீங்கள் காணவில்லையா? தேவன் தமது ஏழு வண்ண வானவில்லில் இருக்கிறார். அவர் செய்த உடன்படிக்கையானது, ஏழு சபைக்காலங்களை நிரூபிக்கிற உடன்படிக்கையாக இருக்கிறது. அதில் ஏழு நிறங்கள்.... அவர் பூமியைக் காப்பதாக கூறுகிறது.

183. அவர் என்ன செய்யப்போகிறார்? நினைவில் கொள்ளுங்கள். அவர்தன் உடன்படிக்கையை பூமியோடு செய்தார், அவருடைய வண்ணம். ஆனால் இப்பொழுது கவனியுங்கள். இந்த வான வில்லானது, அடிவானம் சார்ந்த நிலையாக கிடைக்கோட்டில் மட்டுமே இருக்கிறது: பூமியின் ஒரு பகுதியை மட்டுமே உள்ளடக் கியதாக இருக்கிறது. (ஒரு வில் வடிவத்தில் இருக்கிறது) அந்த மட்டில் மாத்திரமே நோவாவின் வானவில் வண்ணமிட்டது. பூமியின் பாதியளவு மட்டுமே அது நிறைந்து இருந்தது. ஒரு வளைவு எவ்வாறு ஒரு அரை வட்ட அளவே இருக்குமோ, அதே போல் தான் அது இருந்தது. ஆகவே பாதியளவு தான் நீங்கள் அதனைக் காணமுடியும். ஆனால் யோவான் அவரை அவரது மரகத வண்ணத்தில் கண்டபோது, அவர் தேவனுடைய முழு சிங்காசனத்தையும் முழுவட்டமாக சூழ்ந்து இருந்தார். பாதியளவு இன்னும் சொல்லப்படவில்லை. அவரது வண்ண வானவில், பூமியில்

ஐயா, அவருக்கு சத்துருவாயிருக்க வேண்டாம், அவரோடு இருங்கள். ஆனால் அவருக்கு எதிராக இருப்பது...)

அவர் மீண்டும் வருகிறார் (ஊ)

அக்காட்சியைக் காண கறையின்றி விழித்து காத்திருப்பீர்.

178. இப்பொழுது ஒரு உடன்படிக்கையானது, எதற்கு அடையாளமாயிருக்கிறது? எதற்கு அடையாளம்? ஒரு பலியானது ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதற்கு. இப்பொழுது ஆதியாகமம் 8:20,22 ஆகிய வசனங்கள். இப்பக்கத்திற்கு எதிரில் ஆதியாகமம் 8:20,22 ஆகிய வசனங்கள்.

"அப்பொழுது நோவா கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டி, சுத்தமான சகல மிருகங்களிலும், சுத்தமான சகல பறவைகளிலும் சிலவற்றைத் தெரிந்து கொண்டு, அவை களைப் பலிபீடத்தின் மேல் தகனபலியாகப் பலியிட்டான்.

சுகந்த வாசனையைக் கர்த்தர் முகர்ந்தார். அப்பொழுது கர்த்தர்: இனி நான் மனுஷன் நிமித்தம் பூமியைச் சபிப்பதில்லை (பூமியை சபிப்பது) மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயது தொடங்கிப் பொல்லாததா யிருக்கிறது; நான் இப்பொழுது போல இனி சகல ஜீவன்களையும் சங்கரிப்பதில்லை."

179. கடைசி வசனத்தை படியுங்கள்:

பூமியுள்ள நாளளவும் விதைப்பும் அறுப்பும் சீதளமும் உஷ்ணமும், கோடை காலமும் மாரிக்காலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை என்று தம்முடைய உள்ளத்தில் சொன்னார்." (ஒரு உடன்படிக்கை).

ஆதி.8:22

180. யோவான் ஒன்றை கண்டான். தேவனால் ஏற்றுக் கொள்ளப் பட்ட உடன்படிக்கையாகிய இயேசுவானவர் வானங்களை சூழ்ந்து இருக்கிறார். அவரைச் சுற்றி ஒரு வானவில் இருந்தது. சிங்காசனத்தைச் சுற்றி .... அது பார்வைக்கு மரகதம் போல் இருந்தது, சொகுசா நிறமாயிருந்தது, சிங்காசனத்தைச் சுற்றி, பச்சை நிற ஒளியிருந்தது தேவனுடைய ஸ்தோத்திரம் உண்டாவதாக.

181. கவனியுங்கள். நோவாவின் வானவில் பிரதானமாக ஏழு நிறங்கள் கொண்டதாக இருந்தது அந்நிறங்கள் எவை? சிவப்பு, செம்மஞ்சள் நிறம், பச்சை நீலம், செங்கருப்பு நீலமும், நீலமும் கலந்த நிறம்



பார்த்தோம். அவனைத் திரும்பிப் பார்க்கும்படி பூமியில் கூறிய அதே சத்தம் தான் மேலே ஏறிவரும்படி கூறினது.

67. ஓ, ஒவ்வொரு கிறிஸ்தவர்க்கும் அதுதான்! சார்லி, அதே சத்தம்தான். உம்மை கெண்டக்கியில் வைத்து, "திரும்பு'' என்று ஒரு நாளிலே அழைத்த அதே சத்தம் தான், ஒரு நாளிலே உம்மை "இங்கே ஏறிவா'' என்றும் அழைக்கிறதாய் இருக்கிறது. அதைப் பற்றி, சகோதரன் ஈவான்ஸ் அவர்களே, நீங்கள் மகிழ்ச்சியாயிருக்கவில்லையா? "திரும்பு' என்று சொன்ன அதே சத்தம் தான் "இங்கே ஏறிவா'' என்று அழைக்கிற சத்தமாக இருக்கிறது. ஓ, என்னே ஒரு உண்மையானதாக இருக்கிறது! தெளிவாக விளங்கும், எக்காளத்தைப் போன்றதொரு சத்தம் இது. "திரும்பிடு வாயாக, என்னை சேவி, நான் இருக்கும் இடத்திற்கு நீயும் மேலே ஏறி வா'' என்கிறது அச்சத்தம்.

68. அங்கே அவன் மரித்த பரிசுத்தர்க்கு முன்னடையாளமாக நிற்கிறதைக் கண்டோம். மரித்து, உயிர்த்தெழப்போகும் பரிசுத்தவான்களுக்கு மோசே அடையாளமாய் இருக்கிறான். எலியாவோ, எடுத்துக் கொள்ளப்படும் தன் குழுவோடு கடைசி நாளிலே அங்கே நின்று கொண்டு இருக்கிறான் . யாவரும் கர்த்தராகிய இயேசுவுக்கு முன்பாக நிற்கிறார்கள். யோவான் அதை வெளிப்படுத்தினான். அவன் மரிப்பதில்லையென்றும், அவருடைய வருகையை காணும் நாள் வரையிலும் அவன் உயிரோடிருந்தால் அவர்களுக்கென்ன என்றும் இயேசுவானவர் சீஷர்களிடத்தில் கேட்டார். அதைப் பற்றி ஒரு அபிப்பிராயத்தை அவர்கள் எழுப்பி விட்டார்கள்.

69. சபைக்கென சில நிமிட நேரம், இப்பொழுது, மிகவும் ஆழமாகப் போக வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஒவ்வொரு வரும் அறிவர்... ஒவ்வொருவரும் தேவனோடு தனிப்பட்டதொரு ஜீவியத்தைச் செய்கின்றனர். அதுதானே அவரவர் தனிப்பட்ட முறையில் கொண்டுள்ள விஷயமாக இருக்கிறது; ஆவிக்குரிய காரியங்கள் உங்களை மகத்தான இடங்களுக்கு கொண்டு செல் கிறது, அங்கே உள்ள காரியங்களைப் பற்றி உங்களால் பேசக்கூட துணிவிருக்காது.

70. இக்காரியத்தை நான் என்னுடைய சிறிய தாழ்மையான ஊழியத்தில் அநேக வேளையில் கண்டிருக்கிறேன். அவ்வேளை களில் நான் ஏதாவது ஒரு காரியத்தைக் கூறியிருப்பேன். ஆனால் அதை ஏன் கூறினேன் என்பதை நானே அறியமாட்டேன். எனக்கே தெரியாது, அது சரியானதாகவும் பார்வைக்கு தோன்றாது, அப்படி யிருந்தும், யாராவது ஏதாவது சொல்வார்கள்; ஆனால் நானோ அதைக் கவனித்துக்

கொண்டேயிருந்து அது எவ்வளவு பரிபூரணமாக இருக்க முடியுமோ அந்த அளவுக்கு சரியாக அப்படியே வந்து சம்பவிப்பதை காண்பேன். தேவன் அதை சம்பவிக்கப் பண்ணுவார். நான் எதையாவது கூற விரும்பினால், நான் கூறுவதுண்டு, "நல்லது, இப்பொழுது, ஒரு நிமிடம் தாமதியுங்கள், அந்த நபர், இன்னார் இன்ன காரியம் அவருக்கு வந்து சம்ப விக்கும், அது அந்த விதமாகத்தான் இருக்கும்'' என்று. அதை நான் ஏன் கூறினேன் என்பது எனக்கே கூட தெரியாது. பிரதானமான காரியம் என்னவெனில், அது அந்த விதமாகத்தான் இருக்கும், தேவன் அதைச் செய்கிறார்.

71. இந்த சீஷர்கள் "ஓ இயேசு கூறினார், அந்த சீஷன் மரிப்ப தில்லை என்று'' என்று கூறினார்கள். ஆனால் இயேசு அவ்வாறு ஒரு போதும் கூறவில்லை.

இயேசு கூறினார், "நான் வரும் வரையில் இவனிருக்கச் சித்தமானால் உனக்கென்ன?'' என்று.

72. ஆனால் சீஷர்களுக்குள்ளே இப்படி ஒரு பேச்சு அடிபட்டது. பிறகு இயேசு யோவானை கீழிருந்து மேலே எடுத்துக் கொண்டு வந்து, முழு சம்பவங்களின் முன்காணலைக் காண அனுமதித்தார், அவன் கர்த்தருடைய வருகையின் ஒத்திகையையும், சபையையும், மற்றும் அனைத்து சம்பவங்களின் நியமத்தையும் முன் கூட்டியே கண்டான்.

73. தேவன் என்ன செய்ய வேண்டியிருந்தது என்பதைப் பாருங்கள், அவன் தெய்வீகமானவன் என்பதை அவர்கள் காணத் தக்கதாக, இருபத்து நான்கு மணி நேரம் அவனை அவர்கள் கொதிக்கும் எண்ணெயில் போடும்படி செய்வித்தார்; ஆத்து மாவை தெய்வீக ஆவியானது நிறைத்திருக்கிறது. புறம்பேயுள்ள மண்ணான மானிட சரீரமானது, அதுவும் தெய்வீக ஆவியால் மிகவும் தெய்வீகமாக நிறையப்பெற்று, அதினால் இருபத்து நான்கு மணி நேரம் எண்ணெய் கொதித்தலானது அவனை பொசுக்க வேயில்லை. ஒரு மனிதனில் இருக்கும் பரிசுத்த ஆவியை சுட்டுப் பொசுக்கி அவனைவிட்டு அகற்ற முயன்றால் அது நடக்காது. பிறகு, யோவானை பத்மு தீவில் போட்டுவிட்டார்கள், அங்கிருந்து கொண்டு அவன் வெளிப்படுத்தின விசேஷப் புத்தகத்தை எழுதினான்; பின்பு, அங்கிருந்து திரும்பி வந்து அநேகம் ஆண்டுகள் பிரசங்கித்தான்.

74. நிச்சயமாக, அவன் ஒரு கெட்ட பெயரைப் பெற்றுக் கொள்ள வேண்டியதாயிருந்தது. அவன் ஒரு குறி சொல்லுகிறவன், அவன் ஒரு பில்லி சூனியக்காரன்'' என்று அவனை அழைத்தார்கள். யோவான் ஒரு



வானவில்லாக இருந்தது, அதினால் அவர், ... இப்பொழுது இன்னும் ஒரு நிமிடத்தில், நான் உங்களுக்கு, நோவா தேவனுடனே செய்த உடன்படிக்கையானது என்ன என்பதை காண்பிப்பேன். ஆனால் இதுவோ தேவன் தன்னோடுதானே செய்து கொண்ட உடன்படிக்கையாயிருக்கிறது. ஆமென் ஒரு வானவில்.

175. ஒரு உடன்படிக்கையானது ஒரு அடையாளமாயிருக்கிறது என்பதை நாம் இப்பொழுது காண்கிறோம். தேவன் அது ஒரு அடையாளம் என்று கூறினார் அல்லவா? ''நான் என்னுடைய..... வைப்பேன்....''

நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன் (இது உலகமானது தண்ணீரினால் அழிக்கப்பட்ட பிறகு உள்ளதாகும். மாம்சமான யாவும் ..... நோவாவைத் தவிர, யாவும் அழிக்கப்பட்டன) .... அது எனக்கும் பூமிக்கும் உண்டான உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும். ("எனக்கும் உலகத்திற்கு'' என்றல்ல, உலகம் என்றால், பிரபஞ்சத்தைக் குறிக்கும். பாருங்கள்? ஆனால் அது "எனக்கும் பூமிக்கும் நடுவே'' என்பதாகும்)

ஆதி.9:13

176. "நான் அந்த பூமியை உண்டாக்கினேன்; நான் அதை மிகவும் அழிவுக்கேதுவாக நடத்தினேன். நான் அதை தலை கீழாக கவிழ்த்துப்போட்டு, அதைக் தூளாக ஆக்கினேன். ஒரு வேளை நான் இதற்கு இவ்வாறு செய்திருக்கக்கூடாது. நான் அதற்காக வருந்துகிறேன். அது எவ்வளவு பயங்கரமான காரியமாயிருக்கிறது'' என்று கூறினார்.

177. இப்பொழுது அவர் தமது கோபத்தில் வரும்பொழுது, அது எவ்வாறிருக்கும் என்று நினைக்கிறீர்கள் பாவியான நண்பரே, சீர் பொருந்துவீர்.

அவர் மீண்டும் வருகிறார்

(நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா?) அவர் மீண்டும் வருகிறார் (நான் அதை நேசிக்கிறேன். நீங்கள் நேசிக்கிறீர்களா? எனவே அக்காட்சியைக் காண விழித்திரு . காத்திரு

ஓ அவரது எதிரிகளில் ஒருவராக நீர் எண்ணப்படுவீரா? ( நான் அவ்வாறிருக்க விரும்பவில்லை. நீங்கள் அப்படி செய்வீர்களா? இல்லை

ஒளியாயிருக்கிறார் என்பதை அவன் அறிவான். ஒளி, நித்திய ஒளி; பிரபஞ்ச ஒளியல்ல, விளக்கொளியல்ல, மின்சார ஒளியல்ல, சூரிய ஒளியல்ல, ஆனால் நித்திய ஒளி அவர். ஓ, நான் அவரை எவ்வளவாய் நேசிக்கிறேன். "தேவன் ஒளியாயிருக்கிறார்.''

172. கவனியுங்கள், நாம் எங்கேயிருந்தோமோ அதே அடத்திற்கு நாம் திரும்பிச் செல்லப்போகிறோம். இன்னும் நாம் வெளி.4:3இல் தானே இருக்கிறோம்? அதை நாம் பெற்றுக்கொள்ளப் போகிறோமா? நான் நம்புகிறேன்.

"வீற்றிருந்தவர், பார்வைக்கு வச்சிரக்கல்லுக்கும் பதுமராகத்துக்கும் ஒப்பாயிருந்தார்; அந்தச் சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வானவில்லிருந்தது; அது பார்வைக்கு மரகதம் போல் தோன்றிற்று.” (அது மஞ்சள் நிற பச்சையாகும்.)

வெளி.4:3

173. இப்பொழுது "வானவில்.' அது ஒரு வானவில் என்பதைக் கவனியுங்கள். நாம் ஆதியாகமம் 9ம் அதிகாரத்திற்கு திரும்பிச் செல்லுவோம். ஆதியாகமம் 9:13 அங்கே நாம் எப்பொழுது முதன் முதலாக வானவில்லானது தோன்றியது என்பதை பற்றி பார்ப்போம். ஆதியாகமம் 9ம் அதிகாரம் 13ம் வசனத்தில் நாம் துவங்குவோம். ஆதியாகமம் 9:13. நீங்கள் யாவரும் இதை விரும்புகிறீர்களா? ஓ, நான் அதை நேசிக்கிறேன். நான் வெறுமனே அதை விரும்பவில்லை. நான் அதை நேசிக்கிறேன்.

“நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன். அது எனக்கும் பூமிக்கும் உண்டான உடன்படிக்கைக்கு அடையாளமா யிருக்கும் ( எனக்கும் நோவாவுக்கும்" என்றா சொல்லப்பட்டிருக்கிறது? இல்லை. "எனக்கும் பூமிக்கும்' என்றே சொல்லப்பட்டிருக்கிறது).

நான் பூமிக்கு மேலாய் மேகத்தை வருவிக்கும் போது, அந்த வில் மேகத்தில் தோன்றும்.

''... எனக்கும் உங்களுக்கும் .... உண்டான என் உடன்படிக்கையை நினைவுகூருங்கள்.

ஆதி.9:13-15

174. பாருங்கள், அந்த உடன்படிக்கையானது நோவாவுக்கு ஜீவனாயிருந்தார். அவர் அவனை உயிரோடு காத்தார். ஆனால் தேவன் தன்னோடு தானே செய்து கொண்ட உடன்படிக்கையானது, ஒரு



சூனியக்காரன் என்று அழைக்கப்பட்டான் என்பதை எத்தனை பேர் அறிவீர்கள்? நிச்சயமாக அப்படித்தான் அவன் அழைக்கப்பட்டான். இயேசுவுங்கூட அவ்விதமான தொரு பெயர் சூட்டித்தான் அழைக்கப்பட்டார். பாருங்கள்? இவைகளைப் பற்றி உலகம் ஒன்றுமே அறியாது என்பதைப் பாருங்கள். 'அவர் சிந்தையை மனோவசியத்தால் படித்து அறிபவர்'' என்று அழைக் கப்பட்டார். பாருங்கள்? 'அவன் கொதிக்கும் அந்த எண்ணெ யையே பில்லி சூனியத்திற்குட்படுத்தி, அதினால் அது அவனை சுட்டுப் பொசுக்க முடியாதபடி செய்து விட்டான், அப்படிப் பட்டதொரு சூனியக்காரன் அவன். அந்த எண்ணெய்க்கே அவன் பில்லி சூனியம் செய்துவிட்டான்'' என்று அவர்கள் கூறினார்கள். அவர்களுடைய கத்தோலிக்க மதக் கோட்பாடுகளை அவன் ஏற்றுக் கொள்ளாததினால் அவனை இவ்வாறு அழைத்தார்கள். அவ்வளவுதான்.

75. அவன் ஒரு தேவ ஊழியக்காரனாக இருந்தான், அவன் தாழ்மை யுள்ளவனும், அவன் காத்துக் கொண்டதான எளிய ஒரு ஊழி யத்தை உடையவனாயிருந்தான். அவர்களுடைய பெரிய காரியங் களை அவனால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை, ஆகவே தேவன் அவனை காத்து வந்தார். அவனை பாதுகாத்துக் கொண்டார். பரிசுத்த மார்ட்டினிலும் தேவன் அவ்வாறே செய்தார். ஐரேனியஸையும் அப்படித்தான். அவ்வாறு காலங்கள் தோறும் அப்படி செய்து வந்தார்.

76. இந்தக் காலத்திற்குள்ளும் வந்து, அவர் இன்றைக்கும் அதே காரியத்தைத்தான் செய்கிறார். இப்பொழுது, இதை நீங்கள் மறந்துவிட வேண்டாம், என்னவெனில், தேவன் மகத்தான அசை வைக் குறித்து வாக்குத்தத்தம் செய்திருக்கிறார், மகத்தானதும், வல்லமை பொருந்தியதுமான கிரியைகளை வாக்குப் பண்ணி யிருக்கிறார். நீங்கள் எழுதிக் கொண்டு வருகிற குறிப்பில் இதையும் எழுதிக் கொள்ளுங்கள். மனிதன் எவைகளை "வல்லமையும் மகத்துவமும் உடையது'' என்று அழைக்கிறானோ, அதை தேவன் "மதியீனமானது'' என்று அழைக்கிறார். மனிதன் எதை "பைத் தியக்காரத்தனமானது'' என்று அழைக்கிறோனோ, அதையே தேவன் "மகத்தானது'' என்று அழைக்கிறார். அதை மறந்துவிடா தீர்கள். பாருங்கள், அதை மறக்க வேண்டாம். வரும் ஆண்டுகளில் அது உங்களுக்கு உதவி புரிந்திடும்; ஏனெனில் நாம் எப்பொழு தும் மகத்தானதொன்றையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். மகத்தானதையே நாம் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளுகிறோம். ஆனால் உலகத்து மக்கள் அதை அறியமாட்டார்கள். நோவாவின் நாட்களில் இருந்தவர்களும் கூட அதை அறியவில்லை; யோவா னின் நாட்களில் இருந்தவர்களும் கூட அதை அறியவில்லை;

இயேசுவின் நாட்களிலும், அப்போஸ்தலரின் நாட்களிலும், மற்றும் வேறு எந்த நாட்களிலும் கூட அவர்கள் ஒரு போதும் அறியவேயில்லை.

77. ஜோன் ஆஃப் ஆர்க் என்பவளும் (Joan of Arc) கூட ஒரு எளிய பரிசுத்தவாட்டியான பெண்மணியாயிருந்தாள். அவள் ஒரு சிறு பெண்ணாக இருக்கையில், தேவன் அவளோடு தரிசனங்களில் பேசினார், ஒரு தூதன் அவளோடு பேசினான். கத்தோலிக்க சபை என்ன கூறியது தெரியுமா? 'அவள் ஒரு சூனியக்காரி'' என்று. அவளை கழு மரத்தில் கட்டி, சுட்டெரித்துக் கொன்று விட்டனர்; கத்தோலிக்க மதகுருமார்கள் அதைச் செய்தனர். அவளைக் கொன்றனர், அவள் "சூனியக்காரி'' என்றழைக்கப்பட்டு கொல்லப் பட்டாள். அதற்கு இருநூறு ஆண்டுகளுக்குப் பின்னர், அவள் ஒரு சூனியக்காரி அல்ல என்றும், அவள் கிறிஸ்துவின் ஒரு சிஷி என்றும் கண்டுபிடித்தனர்.

78. அதே காரியத்தைத் தான் அவர்கள் அனைத்து பரிசுத்தவான்களுக்கும் செய்தனர். ''உங்கள் பிதாக்களில் யார் அவர்களை உபத்திரவப்படுத்தாதிருந்தார்கள்? உங்கள் தீர்க்கதரிசிகள் யாரையாவது ஏற்றுக் கொண்டதுண்டா? நீங்கள் வெள்ளையடிக்கப்பட்ட சுவர்கள். தீர்க்கதரிசிகளின் கல்லறையை வெளியே அலங்கரித்து, அழகுபடுத்துகிறீர்கள். ஆனால் நீங்கள்தான் அவர்களை அதற்குள் போடுவித்தது'' என்று இயேசு கூறினார். ஊ! என்னே ! என்னே ! அவர்கள் மேல் குறை கூற வேண்டும் என்ற நோக்கோடு அவர் அவ்வாறு கூறவில்லை, அவர்களுக்கு உள்ளதைச் சொன்னார்.

79. ''விரியன் பாம்புக்குட்டிகளே, வரும் கோபத்திற்குத் தப்பித் துக் கொள்ள உங்களுக்கு வகை காட்டினவன் யார்'' என்று யோவான் கேட்டான். ''ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லத் தொடங்காதிருங்கள்'' என்றான். ''நாங்கள் இன்ன பெரிய ஸ்தாபனத்தை சேர்ந்த வர்கள்'' என்று கூறிக் கொள்ளாதிருங்கள்.

"நீர் ஒரு கிறிஸ்தவரா?'' என்று கேட்டால்,

80. "ஓ, நான் ஒரு மெதோடிஸ்டு, நான் ப்ரெஸ்பிடேரியன், நான் பெந்தெகொஸ்தேயினன்'' என்கிறார்கள். அந்தவிதமான காரியம் அதில் இல்லை. பனிக்கட்டிக்கும் சூரிய வெளிச்சத்திற்கும் என்ன தொடர்போ, அதே அளவு தொடர்புதான் இந்த விதமாகக் கூறு வதற்கும் கிறிஸ்தவத்திற்கும் உள்ள சம்மந்தமும். நீங்கள் ஒரு கிறிஸ்தவர் என்றால், நீங்கள் மறுபடியம் பிறந்த தேவனுடைய ஊழியக்காரனாவீர்.



இப்பொழுது கவனியுங்கள். இங்கே சரியாக ஏழு நிறங்கள் உள்ளன: வானவில்லுக்கு ஏழு நிறங்கள் உண்டு.

"... அக்கினிமயமாகவும், அதைச் சுற்றிலும் பிரகாசமாகவும் இருக்கக் கண்டேன்." "மழை பெய்யும் நாளில் மேகத்தில் வானவில் எப்படிக் காணப்படுகிறதோ, அப்படியே (தேவனுடைய சிங்காசனத்தை. பாருங்கள்? சுற்றிலுமுள்ள அந்த பிரகாசம் காணப்பட்டது. இதுவே கர்த்தருடைய மகிமையின் (கர்த்தருடைய அல்ல, இங்கே' கர்த்தருடைய மகிமை'') சாயலுக்குரிய தரிசனமயிருந்தது...."

எசே.1:27-28

168. கர்த்தருடைய மகிமை அவருடைய சபைக்கு மேலே சூழ்ந்து கொண்டிருக்கிறதாய் காணப்படுகிறது; ஏனெனில் அவர் தமது சபையில் இருக்கிறார்! ஆமென் மதியீனருக்கு அது பைத்தியமாகக் காணப்படுகிறது. ஆனால் அதை விசுவாசிப்பவர்களுக்கு அது எவ்வளவு மகத்துவமுள்ளதாகக் காணப்படுகிறது!

'....இதுவே கர்த்தருடைய மகிமையின் சாயலுக்குரிய தரிசனமாயிருந்தது; அதை நான் கண்டபோது முகங்குப் விழுந்தேன்; அப்பொழுது பேசுகிற.. சத்தத்தைக் கேட்டேன்.

எசே.1:28

169. இப்பொழுது அவன் மேற்கொண்டும் உரைத்து, அத்தரிசனத்திற்கு என்ன அர்த்தம் என்பதை கூறுகிறான், அதைப் பற்றிப் பார்ப்பதற்கு இக்காலையில் நமக்கு நேரமில்லை.

170. இப்பொழுது, கர்த்தர் தமது மகத்தான இரக்கத்தினால் நமக்கு இக்காரியங்களைத் தருகிறார் என்பதைக் கவனியுங்கள்.

171. இப்பொழுது நாம் இன்னொன்றை எடுத்துக் கொள்வோம். எசேக்கியேல் யோவான் ஆகிய இருவருமே, அவரை அவருடைய நிறங்கள், ஒளி ஆகியவற்றின் இரகசியத்தில் கண்டார்கள். அதை சொகுசாவின் நிறம்'' என்று அழைத்தனர். யோவான் பின்னால்... வேத வாக்கியங்களை குறித்துக்கொள்ளுகிற நீங்கள் யோவான் 1:5 முதல் 7 வசனங்கள் யோவான் பத்மு தீவில் மூன்று ஆண்டுகள் இருந்தபொழுது இப்புத்தகத்தை எழுதினான். அத்தீவிலிருந்து அவன் திரும்பி வந்த பிறகு, தொண்ணூறு வயது நிரம்பியவனான அம்மனிதன், 1 யோவான் 1:5-7 இல் தேவன் ஒளியயிருக்கிறார்'' என்று கூறுகிறான். யோவானுக்கு அவரைக் கண்டிருக்கிற ஒரு அனுபவம் உண்டு. அவர்

164. அந்நாட்களில் அவர்களால் அதை ஒரு படம் எடுக்க இயவில்லை. இப்பொழுது அவர்களுக்கு இயலும், ஏனெனில் இப்பொழுது அவர்களுக்கு இயந்திர உபகரணங்கள், கருவிகள் உள்ளன. தேவன் ஒருவர் இல்லை என்று மறுதலிப்பதற்காக இயந்திர நுட்பவியலை எவர்கள் உபயோகிக்க முயற்சிக்கிறார்களோ, அவர்களே திரும்பி வந்து, தேவன் இருக்கிறார் என்பதை அதன் மூலமே நிரூபிக்கிறார்கள். அது சரிதான். ''மரகதம்'' நான் இதை உருவாக்கவில்லை. நான் வேதத்தில் இருந்தே உங்களுக்கு அதை வாசித்துக் காண்பிக்கிறேன். நான் வாசிக்கையில், கவனித் துப் பார்த்து, அது அதே தேவனாகிய கர்த்தர் தான் என்றும், எந்தவித வித்தியாசமும் இல்லை என்பதை கவனியுங்கள். 27ம் வசனத்தைக் கவனியுங்கள்.

"... அக்கினிமயமான சொகுசாவின் நிறமாயிருக்க கண்டேன்"

(அக்கினி நாவுகள் போல்).

165. பாருங்கள், அக்கினியிலிருந்து சொகுசாவின் நிறம் வெளிப் படுகிறது. அதை இப்பொழுது நீங்கள் காண்கிறீர்களா? சொகுசாவின் நிறம், அந்த சொகுசாவின் நிறங்கள் ஒரு அக்கினியிலிருந்து வெளிப்படுகிறது. கீழே இவ்வாறு அது கூறுகிறது:

“மழை பெய்யும் நாளில் மேகத்தில் வானவில் எப்படிக் காணப்படுகிறதோ, அப்படியே.....

166. அங்கே ஒரு ஜீவன் இருந்தது. யோவான் முழு சபைக்கும் முன்னடையாளமாயிருந்து, மேலே எடுக்கப்பட்டான் அதைப் பற்றி நான் உங்களுக்கு கூறினேன். ஒரு நபர், இங்கே ஒரு தரிசனத்தில் கிறிஸ்துவின் சரீரமாகிய முழு சபைக்கும் முன்னடையாளமாக, எடுத்துக்காட்டாக இருக்க முடியும். இப்பொழுது கவனியுங்கள்.

"அவருடைய இடுப்பாகக் காணப்பட்டது முதல் மேலெல் லாம் உட்புறம் சுற்றிலும் அக்கினிமயமான சொகுசாவின் நிறமாயிருக்கக் கண்டேன். அவருடைய இடுப்பாகக் காணப்பட்டது முதல் கீழெல்லாம் அக்கினிமயமாகவும், அதைச் சுற்றிலும் பிரகாசமாகவும் இருக்கக் கண்டேன்.

எசே. 1:27

167. அக்கினி எங்கும் பரவியிருப்பதைப் பாருங்கள். கவனியுங்கள். எதிலிருந்து? வானவில்லிலிருந்து, அது ஏழு நிறங்களைக் கொண்டது.



81. இப்பொழுது, யோவான் வந்த பொழுது, அதைப் பற்றி நேற்றிரவில் பார்த்தோம். இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள், நீங்கள் இதற்கு வரும்பொழுது .... காரியத்தின் இணைத்துப் பின்னும் வகையை அல்லது முறையைக் குறித்து நான் உங்களுக்குக் கூறினேன். உலகத்திற்கு இதுவரை கிடைத்திராத கடுமையான அசைவு கிடைக்கிறது, இப்பொழுது அது நடக்கிறது. சபை உலகைக் குறித்தே நான் கூறுகிறேன்.

82. சந்தேகத்துக்கிடமின்றி, யோவானின் நாட்களில், இயேசுவின் நாட்களில், பெரிய பண்டிகைகளும், அவர்கள் நாட்களில் பெரிய பேச்சாளர்களும் இருந்திருப்பார்கள் என்பதை நினைவில் வைத் திருங்கள். அவர்கள் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூட்டத்தை கவர்ந்திழுக்கக் கூடியவர்கள். காய்பா ஒரு கூட்டத்தைக் கூட்டி யிருந்தால் என்ன செய்திருப்பான்? எருசலேமியர் அனைவரையும் இஸ்ரவேலரையும், மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் வரவழைத் திருப்பான். 'ஓ, காய்பா இன்னின்ன காரியத்தைச் சொன்னால், அது மகத்தானதாக இருக்கும்'' என்று ஒருவன் சொல்லி யிருப் பான். 'ஓ ரபீ, சங்கைக்குரிய இன்னாரே, டாக்டர் அவர்களே, பிஷப் அவர்களே, வேத வாக்கியங்களை விசுவாசிக்கிறீரா? வேத வாக்கியங்களை விசுவாசிக்கிறீரா?'' ''நிச்சயமாக நான் வேதவாக்கி யங்களை விசுவாசிக்கிறேன் நான் ஒரு பிரசித்தி பெற்ற பண்டிதர்'' என்று கூறலாம்.

83. "நல்லது, இப்பொழுது வேதம் கூறுகிறது, ஒரு காலம் வரும், அப்பொழுது, 'சகல பர்வதங்களும் ஆட்டுக்குட்டிகளைப் போல் துள்ளும், விருட்சங்களெல்லாம் கைகொட்டும், பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு, சகல மலையும் குன்றும் தாழ்த்தப்படும். வனாந் திரத்திலிருந்து கூப்பிடுகிறவனுடைய சத்தத்தால் அது நடக்கும். ரபீ அவர்களே, சங்கைக்குரிய கலாநிதி , போதகர் அவர்களே, நீர் இதை விசுவாசிக்கிறீரா?''

"நிச்சயமாக, நான் அதை விசுவாசிக்கிறேன்''

''அது எவ்வாறு சம்பவிக்கும்?”

84. ''ஓ, தேவன் ஒரு நாளிலே, ஒரு வல்லமையான மனிதனை பூமியின் மேல் அனுப்பவார். ஓ, அவன் பெரியவனாயிருப்பான். அவன் வனாந்தரத்திலிருந்து கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருப்பான், அல்லது அவன் மேசிவாயின் வருகைக்கு முன்னோடுகிற வனாக இருப்பான். அவன் வரும் பொழுது... என் சிந்தையில் அதைப் பற்றி

சந்தேகமேயில்லை. அவன் எதற்காக பரலோகத்தி லிருந்து வருவான், அவன் எதற்காக தேவாலயத்திற்கு வருவான் எனில், அவன் வந்து, 'நாம் இந்த ரோமர்களையெல்லாம் அகற்றி விட்டு, அவர்களை கொன்று போடுவோம். அனைத்து ரோமர்களையும் முறியடித்துவிடப் போகிறோம்' என்று கூறுவான். அதன்பிறகு அவன் 'மேசியாவே இறங்கி வாரும்' என்பான். அதன்படி மேசியாவும் கீழே இறங்கி வருவார், அப்பொழுது, நாம் நமது பட்டயங்களையெல்லாம் மண்வெட்டிகளாகவும், அரிவாள்களாகவும் இடிப்போம், இனிமேல் யுத்தங்களே இருக்காது.'' ஊ, ஊ, மேற்கண்டவாறுதான் அவர்கள் வியாக்கியானம் செய்தார்கள்.

85. ஆனால், அது வந்தபொழுது, என்ன சம்பவித்தது? என்ன நடைபெற்றது? அங்கே பரலோகத்தின் வெளிப்படையான காட்சி ஒன்றும் ஏற்படவில்லை. அவர்கள் அவ்விதமான காட்சி ஒன்றையும் காணவில்லை. அவர்கள் எதிர்பார்த்த அந்த ஒருவன் வந்தான், ஆனால் அவர்கள் அதைக் காணவில்லை. பாருங்கள்? எப்பொழுது மலைகளெல்லாம் ஆட்டைப் போல் துள்ளியது? எப்பொழுது உயர்ந்த ஸ்தலங்களெல்லாம் தாழ்த்தப்பட்டன, பள்ளத்தாக்குகளெல்லாம் உயர்த்தப்பட்டன? விகார முகத்தையுடைய ஒரு பிரசங்கி வனாந்திரத்திலிருந்து புறப்பட்டு வந்தான், அவனுக்கு எழுத்துக்களின் அகரவரிசை கூட தெரியாது. வரலாற்றின்படி, அவன் ஒன்பது வயதுள்ளவனாயிருக்கையில், வனாந்திரத்திற்குள் சென்று, முப்பது வயதாகும் வரையிலும், வெளியுலகுக்கு தோன்றவே இல்லையாம். அவன் வெட்டுக்களிகளையும், காட்டுத் தேனையும் புசித்து உயிர் வாழ்ந்தான். அந்த வகை வெட்டுக் கிளிகள் நீளமானவைகள் ஆகும்.

86. அவர்கள் எல்லாக் காலங்களிலும் அதை சாப்பிடுவார்கள். நீங்கள் அதை இங்கே சூப்பர் மார்க்கெட்டுகளில் வாங்கலாம். அது கெடுதல் என்று நீங்கள் நினைக்க வேண்டாம். இங்கே இந்த சூப்பர் மார்க்கெட்டுகளில், பம்பிள்பீ என்னப்படும் ஒரு வகை ஈக்களும், தேனீக்களும், வெட்டுக்கிளிகளும், வாலில் கலகல வென்று ஒலி செய்யும் முள் வளையங்களுடன் கூடிய ரேட்டில் ஸ்நேக் என்னப்படும் பாம்புகள், மற்றும் உங்களுக்குத் தேவை யான இன்னபிறவும் விற்கப்படுகின்றன.

87. ஆகவே, அவன் வெட்டுக்கிளிகளையும், காட்டுத் தேனையும் புசித்து உயிர் வாழ்ந்தான். நல்ல ஒரு ஆகராம் தான் இது! ஆனால் அவனோ தேவனுடைய வல்லமையால் காக்கப்பட்டான். கழுத்துப்பட்டை திரும்பியிருக்கிற நிலையில் அவன் உடை உடுத்தியிருக்கவில்லை.



இன்னமும் இக்கடைசி நாட்களில் தமது சபையில் இருக்கிறார். நான் அல்ல, நான் அங்கே நின்று கொண்டிருந்தேன். அவ்வளவுதான், ஆனால் அதைப்பற்றிய படம் எடுக்கப்பட்டது. எசேக்கியல் கண்ட வண்ணமாகவே அது இருப்பதை நீங்கள் நோக்கிப் பார்க்க நான் விரும்புகிறேன். அதே நிறங்கள், அதே விதம், அதேவிதமாக செயல்பட்டது. அந்த ஜீவன்களின் சாயலும் அதேவிதமாக இருந்தது. அது என்ன? அந்த ஜீவ சிருஷ்டிகள் ஜீவனுள்ள சபைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது. அச்சபையானது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினாலும், வல்லமையினாலும் ஜீவிக்கிற ஒன்றாக இருக்கிறது. அதே அந்த சொகுசாவின் நிறங்கள், இடுப்பு முதல் மேலெல்லாம், இடுப்பு முதல் கீழெல்லாம் காணப்பட்டது.

162. அதைப்பற்றி இனிமேலும் எந்த வித அனுமானமும் இல்லை. விஞ்ஞானமானது அவைகளுடைய படத்தை எடுத்திருக்கிறது. அவைகளின் நிறங்களைப் பாருங்கள், அக்கினியின் நிறங்களை அங்கே பாருங்கள். வானவில்லைப் பாருங்கள். மஞ்சள் நிற மரகதம் போன்ற நிறத்தைப் பாருங்கள். இப்பொழுது இந்த காமரா, வண்ணப்படம் எடுக்கக்கூடியது கோடாக்ரோம் பிலிமினால் வண்ணப்படம் விழக்கூடிய அங்கேயுள்ள மரகதம் போன்ற நிறத்தைப் பாருங்கள். ஒரு வெளிச்சத்தைக் கொண்டு அதை உங்களை நான் பார்க்கச் செய்தால், அதன் பின்னால் உள்ளதை நீங்கள் காணமுடியும். இப்பொழுது உங்களால் பார்க்க முடிகிறதா? "வானவில்லைப் போல்.'' வானவில்லைப் போல் அதிலிருந்து ஒளிக் கீற்றுகள் முன்னும் பின்னும் வருவதைப் பாருங்கள். ஒவ்வொன்றும் வெவ்வேறு நிறங்களாகும். இன்னும் சில நிமிடங்களுக்குள் நாம் அதற்குள் போகப் போகிறோம். அவைகள் என்ன நிறங்கள், அவைகள் எதைச் சுட்டிக்காட்டுகின்றன என்பதைப் பற்றியெல்லாம் அப்பொழுது பார்போம்.

163. ஓ அது எனது எளிய இருதயத்தை சந்தோஷத்தால் துள்ளிக் குதிக்கச் செய்கிறது. நாம் வாழ்கிற இந்த நாளில் கிறிஸ்து வானவர். அறிவதற்கு..... என்னை ஆதாரங்களெல்லாம் அமிழ்ந்து போகும் மணல் ஆக இருக்கும் பொழுது, மற்றெல்லா ஆதாரங்களெல்லாம் அவ்வாறு இருக்கும் பொது, 'இதை ஏன் நாம் சொல்லக் கூடாது" என்று நான் எண்ணினேன். இவ்வவுலகம் அதைக் காண்பதற்காக வைக்கப்படவில்லை. உலகமானது அதைக் காணமாட்டாது. அவர்கள் ஒருபோழுதும் அதை காணமாட்டார் கள். ஆனால் சபையானது, தன் இதுவரை பெற்றிராத மிகுந்த வல்லமையான அசைவைப் பெற்றுக் கொண்டிருக்கிறது.

158. கவனியுங்கள்! நீங்கள் ஆயத்தமா? கவனியுங்கள். இப்பொழுது இதை நினைவில் காத்துக்கொள்ளுங்கள்; நீங்கள் அறிந் திருப்பதற்காக. (ஜீன் இவ்வொலி நாடாவை நிறுத்தி வைத்துக் கொள்ளலாம்) கவனியுங்கள்! (நான் ஒலி நாடாவை நிறுத்தி வைக்கத் தேவையில்லை, பரவாயில்லை) இவ்வொலி நாடாவை வைத்துக்கொண்டு, சபைக்கு மட்டும் இதை அனுமதியுங்கள். இதைக் கவனியுங்கள்! கர்த்தரோடு இருக்கிற ஒளியின் நிறமானது, கர்த்தரைப் பின்பற்றுகிற கர்த்தருடைய ஒளியானது, கர்த்தர் கூறுவதின்படி, அது சொகுசாவின் நிறமாயிருக்கிறது; அதாவது மஞ்சள் கலந்த பச்சையாகும். அதே நிறமுள்ள ஒளிதான் இன்றைக்கு நம்மோடு இருக்கிறது, அதன் படத்தை விஞ்ஞானிகள் எடுத்திருக்கின்றனர். அது சொகுசாவின் நிறம், அதாவது மஞ்சள் கலந்த பச்சை.

159. நான் சிறுவனாயிருந்தபோது, என் வாழ்வில் முதல் தடவை யாக அதை நான் பார்த்தபோது, அவ்வாறே இருந்தது; இங்குள்ள அந்தக் காலத்தவர்களே, உங்களுக்கு ஞாபகமிருக்கும், நான் உங்களுக்கு எப்பொழுதும் அதைப்பற்றி கூறியிருக்கிறேன், ''அது மஞ்சள் கலந்த பச்சையாகிய சொகுசாவின் நிறம்'' என்று. அது அந்த நிழற்படம் எடுப்பதற்கு முன் கூறியதாகும். கர்த்தருடைய ஆவியானவர்.... என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக இப்பொழுது...

160. அவருடைய சமூகத்தில் நின்றுகொண்டிருந்த ஜீவசிருஷ்டிகளின் இடுப்பாகக் காணப்பட்டது முதல்,.... ''அவருடைய இடுப்பாகக் காணப்பட்டது முதல் மேலெல்லாம் உட்புறம் சுற்றிலும் அக்கினிமயமாகவும், அவருடைய இடுப்பாகக் காணப்பட்டது முதல் கீழெல்லாம் ஒளியால் நிறைந்திருந்தது. சுற்றிலும் வானவில்லைப்போல் அநேக நிறங்களைக் கொண்டதாகக் காணப்பட்டது". அது சரிதானே?

161. தேவன் இன்னமும் அதே நிறங்களில்தான் நிலைத்திருக்கிறார் என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். "இடுப்பாகக் காணப்பட்டது முதல் மேலெல்லாம் அக்கினிமயமாக சொகுசாவின் நிறம்.'' திரைப்பட காமராவைக் கொண்டு அல்லது வண்ண காமராவைக் கொண்டோ படமெடுத்தபோது, "இடுப்பிலிருந்து மேலே சொகுசாவின் நிறம், இடுப்பிலிருந்து கீழெல்லாம், சுற்றிலும், வானத்தின் மழை நாளில் காணப்படும் வானவில்லின் அநேக நிறங்கள் உண்டாயிருந்தது'' இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் இன்னும் தம்முடைய வல்லமையில் இருக்கிறார்



நேற்றிரவில் ஒருவர் கூறியது போல் சகோதரன் பார்னெலொ அல்லது வேறு யாரோ கூறினார்களோ அதைப் போல், அவன் மதகுருமார்கள் அணியும் நீண்ட, வாலுள்ள அங்கியை அணிந்திருக்கவில்லை. நான் கூறியபடி, ஒருவேளை அவன் மூன்று அல்லது நான்கு மாதத்திற்கு ஒருமுறைதான் வனாந்தரத்தில் குளித்திருப்பான், அது பற்றி எனக்குத் தெரியாது. நாம் தினந்தோறும் குளிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். அவன் பார்ப்பதற்கு அவ்வளவு நன்றாக தோற்றமளிக்கவில்லை. அவனுக்கு பிரசங்க பீடமே இல்லை அவன் பெரிய நகரங்களுக்குச் சென்று பெரிய கூட்டங்களை நடத்திடவில்லை. அவன் யோர்தான் நதிக்கரையில் முழங்கால் வரையிலும் சேறு படிந்திருந்தவனாய் அங்கே நின்று கொண்டு , "விரியன் பாம்புக் குட்டிகளே, வருங் கோபத்திற்குத் தப்பித்துக் கொள்ள உங்களுக்கு வகை காட்டினவன் யார்?" என்று கூறினான். ஆம், அப்பொழுதுதான், உயர்ந்த ஸ்தலங்களெல்லாம் தாழ்த்தப்பட்டன, பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டன. ஊ, ஊ. ஆம், ஐயா.

88. பின்பு, முதலாவதாக, மேசியா தன் தூதர்களோடு இறங்கி வந்து ஆலயத்தின் மேல் விதானத்தின் மீது இறங்கியிருந்திடுவார் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். அவர் இறங்கி வருவதற்காகவே அவ்விதானத்தை அவர்கள் கட்டி வைத்திருந்தார்கள். இன்றைக்கு தேசங்கள் தோறும், பெரிய ஸ்தலங்களையெல்லாம் நாம் கட்டி வைக்கிறோமே அதைப் போலத்தான். அவர் எப்பொழுது வந்தார்? அவர் அந்த ஒவ்வொரு ஜெப ஆலயங்களை யும், ஸ்தாபனங்களையும் தாண்டிச் சென்று, அவர்களை கடந்து சென்று, ஒரு எளிய முன்னணைக்குப் போய்விட்டார். அவர்கள் அவரை அங்கே போகும்படி செய்துவிட்டார்கள்.

89. இன்றைக்கும் அவ்வாறுதான் உள்ளது. அவர்கள் அவர் அவ்வாறு செய்யும்படி கட்டாயப்படுத்தி விட்டார்கள். அவர் ஸ்தாபனத்திற்கு புறம்பானவராக இருக்கும்படி அவரை கட்டாயப் படுத்தி விட்டார்கள். ஏனெனில் அவருடைய செய்தியானது ஸ்தாபனங்களோடு ஒத்துப் போகவில்லை. இன்றைக்கு அவருடைய ஊழியக்காரர்களால் பிரசங்கிக்கப்படும் அவருடைய செய்தியானது ஸ்தாபனங்களுக்கு ஏற்படையதாக இராமல் அதற்கு புறம்பானதாக இருக்கிறது, ஏனெனில், ஸ்தாபனங்கள் அவரை வெளியே தள்ளிவிட்டன. அவர் வாசலில் நின்று, உள்ளே வரு வதற்காக கதவைத் தட்டிக்கொண்டிருக்கிறார் என்று வேதம் கூறுகிறது. பாருங்கள்? தன்னுடைய சொந்த சபையிலேயே அவர் இந்த நிலைக்குட்படுத்தப்பட்டிருக்கிறார். அந்த நிலையில் தான்

அது உள்ளது. இன்றைக்கும் அதேவிதமாகத்தான் உள்ளது என்பதைப் பாருங்கள்.

90. எனவே, மனிதனுக்கு பெரிதாகத் தோன்றும் எதுவும் தேவனுக்கு முன்பாக சிறியதாக இருக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். எனவே தான் உங்களுக்கு அதிகமான மலர்கள் தேவையில்லை. தேவன் திரும்பி வரும்பொழுது, இயேசு திரும்பி வரும்பொழுது, நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். அந்த தோட்டப் பாதையில் இருந்த சுத்தம் செய்கிற பெண் இருந்தாளே, அவளுக்கு நேர்ந்ததைப்போல், ஊ, ஊ, நீங்கள் ஆச்சரியப்பட போகிறீர்கள். ஒன்றும் வெளியே சொல்லாமல், தன் இரகசியங்களை தனக்குள் அடக்கி வைத்துக்கொண்டு, தேவனுக்கு முன்பாக தாழ்மையான நடக்கிற அந்த மனிதன். நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். அது ....

91. சமீபத்தில், நியாயத்தீர்ப்பை குறித்து பிரசங்கித்தேன். "நியாயத்தீர்ப்பில் காத்திருக்கும் ஆச்சரியங்கள்'' என்று தலைப்பில் பிரசங்கித்தேன். அங்கே ஒரு மது காய்ச்சுபவனைப் பார்க்க ஆச்சரியமாயிருக்காது, அவன் தான் போகப் போவதை அறிந்தேயிருக்கிறான். நிச்சயமாக, பொய்யனும், விபச்சாரக்காரனும் அங்கே போவதைப் பற்றி எள்ளளவும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. ஆனால் காணப்போகும் ஆச்சரியம் என்னவெனில், ஏமாற்றம் என்னவெனில், தாங்கள் பரலோகத்திற்கு போகப் போவதாக நினைத்துக் கொண்டிருக்கிறவர்கள், நியாயத்தீர்ப்பில் நிற்கப் போவதுதான் ஆச்சரியமாயிருக்கப் போகிறது. நல்லது, கொஞ்சம் பொறுங்கள், என் தாயார் இந்த சபையைச் சேர்ந்தவர், என் தந்தையும் இந்த சபையைச் சேர்ந்தவர் தான், எனது தாத்தா, எனது பாட்டி ஆகியோரும் அப்படித்தான். என் வாழ்நாள் முழுவதும் நான் அதின் உறுப்பினராக இருக்கிறேன்'' என்று கூறும் நபர்கள் அவர்கள்.

92. ''நான் உங்களை அறியேன், அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள்.''

93. அந்நாட்களில், இருந்த எளிய வயோதிப சிமியோன் வந்த பொழுது, அவனைப்பற்றி யாருக்கும் தெரியாது, கீர்த்தியில்லாதவன், வேதத்தில் அவனைக் குறித்து நமக்கு ஒன்றும் தெரியவில்லை. ஆனால், அவனுக்கு பரிசுத்த ஆவியால் வெளிப்படுத்தப்பட்டிருந்தது'' என்று வேதம் கூறுகிறது. ''கர்த்தருடைய கிறிஸ்துவைக் காணுமுன் அவன் மரணத்தைக் காணமாட்டான்' என்று அவனுக் குச் சொல்லப்பட்டிருந்தது. எனவே அவன் அங்கே இருக்கிறான்.



இருந்தது. (அதுதான் மனுஷ குமாரனாகிய கிறிஸ்து என்பதைப் பாருங்கள்).

எசே. 1:26

155. இப்பொழுது, அவர் எவ்வாறு இருந்தார், எவ்வாறு உடுத்தியிருந்தார் என்பதைப் பாருங்கள்.

"அவருடைய இடுப்பாகக் காணப்பட்டது முதல் மேலெல்லாம் உட்புறம் சுற்றிலும் (கவனியுங்கள், இந்த மனுஷகுமாரனைச் சுற்றிலும்) அக்கினிமயமான சொகு சாவின் நிறமாயிருக்கக் கண்டேன்; அவருடைய இடுப்பாகக் காணப்பட்டது முதல் கீழெல்லாம் அக்கினிமயமாகவும், அதைச் சுற்றிலும் பிரகாசமாகவும் இருக்கக்கண்டேன். (சொகுசாவின் நிறத்தைச் சுற்றிலும் அக்கினிமயமாயிருக் கிறது).

எசே. 1:27.

156. கவனியுங்கள்! உங்கள் இருதயங்களில் ஆவிக்குரியவர்களாகவும், புரிந்து கொள்ளுகிறவர்களாகவும் இருங்கள். இதை உங்களுக்குள் வைத்துக்கொள்ளுங்கள் என்று நான் உங்களுக்கு இயேசுவின் நாமத்திலே கட்டளையிடுகிறேன். ஆனால் எத்தனை பரம சந்தோஷமானதாய் இருக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

157. நாம் மீண்டும் 27ம் வசனத்தில் ஆரம்பிப்போம். ஒவ்வொரு வரும் கேளுங்கள். ஒவ்வொருவரும் புரிந்துகொள்வதற்கு புத்தியுள்ளவர்களாயிருங்கள்.

"அவருடைய இடுப்பாகக் காணப்பட்டது முதல் மேலெல்லாம் உட்புறம் சுற்றிலும் அக்கினிமயமான சொகுசாவின் நிறமாயிருக்கக் கண்டேன்: (அது மஞ்சள் கலந்த பச்சையாகும்) அவருடயை இடுப்பாகக் காணப்பட்டது முதல் கீழெல்லாம் அக்கினிமயமாகவும், அதைச் சுற்றிலும் பிரகாசமாகவும் இருக்கக்கண்டேன்.

மழை பெய்யும் நாளில் மேகத்தில் வானவில் எப்படிக் காணப்படுகிறதோ, அப்படியே சுற்றிலுமுள்ள அந்தச் பிரகாசம் காணப்பட்டது; இதுவே கர்த்தருடைய மகிமையின் சாயலுக்குரிய தரிசனமாயிருந்தது; அதை நான் கண்டபோது முகங்குப்புற விழுந்தேன்; அப்பொழுது பேசுகிற ஒருவருடைய சத்தத்தைக் கேட்டேன்.

எசே. 1:27-28

152. கிறிஸ்துவின் வருகைக்கு ஐநூற்று தொண்ணூற்று ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக இத்தீர்க்கதரிசி இங்கே கூறியுள்ளதைக் கவனியுங்கள். எவ்விதமாக அவனது தரிசனம் யோவானுடைய தோடே ஒப்பிடத்தக்கதாக உள்ளது என்பதை பாருங்கள்.

"இதோ, வடக்கேயிருந்து புசல்காற்றும் பெரிய மேகமும், அத்தோடே கலந்த அக்கினியும் வரக்கண்டேன்; அதைச் சுற்றிலும் பிரகாசமும் அதின் நடுவில் அக்கினிக்குள்ளிருந்து விளங்கிய சொகுசாவின் நிறமும் உண்டாயிருந்தது.

அதின் நடுவிலிருந்து நாலு ஜீவன்கள் தோன்றின; அவைகளின் சாயல் மனுஷ சாயலாயிருந்தது."

எசே. 1:4-5

153. இந்த நான்கு ஜீவன்களின் சாயலுக்கு மேலாக தேவ ஆவியானவருக்குரிய நிறம் அக்கினிமயமான சொகுசாவின் நிறமாயிருந்தது. சொகுசாவின் நிறமென்றால் (amber) மஞ்சள் கலந்த பச்சையாகும் (yellowish green). இப்பொழுது கவனியுங்கள் (சகோ. பிரன்ஹாம் பேச்சின் இடையே சற்று நிறுத்தி, விளக்குவதற்காக ஒன்றின் மேல் தட்டுகிறார் - ஆசி.). மஞ்சள் கலந்த பச்சை நிறமே சொகுசாவின் நிறமாகும். ஓ, அவர் நேற்றும் ... மாறாதவராயிருக்கிறார். எசேக்கியேலின் தரிசனத்தின் நடுவிலே அவர் தன்னை எசேக்கியேலுக்கு வெளிப்படுத்தினார். நான்கு ஜீவன்களுக்கு மேலாக வருவதாக எசேக்கியேல் கண்ட இந்த ஒளி, மஞ்சள் கலந்த பச்சையாகும். அவர் யோவானிடத்தில் வந்தபோது, அவர் மரகத நிறத்தில் தோன்றினார். அதுவும், ''மஞ்சள் கலந்த பச்சையாகும். அவர் இப்பொழுது வெளிப்படுத்துகிறவனிடத்தில் மஞ்சள் கலந்த பச்சை நிறத்தில்தான் வருகிறார். ஒளியானவர் நம்மிடத்திலும் மஞ்சள் கலந்த பச்சை நிறத்தில் வருகிறார். ஒளியில் நடவுங்கள். அவரே அந்த ஒளி.

154. இப்பொழுது நாம் 26ம் வசனத்தை எடுத்துக்கொண்டு, 28ம் வசனம் முடிய வாசிப்போம். 26ம் வசனம். அவைகளின் தலைகளுக்கு மேலுள்ள...''. நீங்கள் இதைக் குறித்துக்கொண்டு, உங்கள் வீடுகளுக்குத் திரும்பும் போது, அவை முழுவதையும் வாசியுங்கள். நேரத்தை மிச்சப்படுத்திக்கொள்ளுங்கள்.

"அவைகளின் தலைகளுக்கு மேலுள்ள மண்டலத்தின் மீதில் நீலரத்தினம் போல விளங்கும் ஒரு சிங்காசனத்தின் சாயலும், அந்தச் சிங்காசனத்தின் சாயலின்மேல் மனுஷ சாயலுக்கு ஒத்த ஒரு சாயலும்



94. பிறகு, யோவான் ஸ்நானனை, அவன் யாரென்று பாருங்கள். அவன் ஒரு வினோதமானவனாகக் காணப்பட்டான், காட்டிலே வாழ்கிற ஒரு காட்டு மனிதனைப் போல் காணப்பட்டான். அவனுக்கு வெளிப்படுத்தப்பட்டது. அவன் செய்தியைப் பிரசங் கித்துக் கொண்டு வந்தான். அதைப் பாருங்கள்.

அந்த எளிய அன்னாள் யார்?

95. மட்டமான ஜெபர்சன்வில்லைப் போலவேயிருந்த நாசரேத் தூரிலிருந்த கன்னி மரியாளைப் பாருங்கள். அப்பட்டணத்தில் பாவம் பெருகியிருந்தது, ஆனால் அவளோ, தன்னை பரிசுத்தமாக காத்துக் கொண்டாள், ஒரு நாளில் மேசியாவானவர் வரப் போகிறார் என்று அவள் அறிந்திருந்தாள். பாருங்கள்?

96. தச்சனாகிய யோசேப்பு தன் மனைவியை இழந்திருந்தான், எனவே அவன் இந்தப் பெண்ணை விவாகம் செய்ய அவளை நாடிக் கொண்டிருந்தான். அந்த சந்தர்ப்பத்தில் தான் பரிசுத்த ஆவி யானவர் அங்கே வருகிறார். பின்பு, உலகமானது அங்கே வந்து, இழிவான பெயர்களை அதற்கு சூட்டியது, "ஊருளும் பரிசுத்தர்'' என்றும் "பெந்தெகொஸ்தே' என்றும், முறைகேடாக அவளுக்கு அக்குழந்தை பிறந்திருக்கிறது என்றும் இழிவான பெயர்களை சூட்டினார்கள். அவர்கள் எவ்வாறு விசுவாசித்தார்கள், அது அவ்விதமாகத்தான் இருக்குமோ என்று தோற்றத்தில் இருந்தது. ஆனால் தேவனோ, ஞானிகள், கல்விமான்கள் ஆகியோரின் கண்களை குருடாக்கும்படியும், கற்றுக் கொள்ள விரும்பும் பாலகருக்கு வெளிப்படுத்தவுமே அவ்வாறு செய்தார்.

97. சற்று நேரத்தில் நான் ஒரு விஷயத்தை எடுத்து இயம்புவதற்கு போதுமான பின்னணி ஏற்படுத்தப்பட்டு விட்டது என்று நான் நம்புகிறேன். நான் உங்களுக்கு காண்பிக்கப் போகிறேன். இந்த எண்ணெயைப் பார்க்கிறீர்களா? நான் உங்களுக்கு உரைத்த பின்னணி, அது மனிதன் அல்ல, அது தேவனாயிருக்கிறது, என்பதைக் காணச் செய்யும். நான் இதற்கு அதை சுட்டிக் காட்டுவேன்.

98. "இங்கே ஏறிவா'' என்று அழைத்தது அந்த சத்தம் தான். அவன் திறந்த வாசலைக் கண்டபொழுது, அவன் எக்காளம் போன்ற சத்தத்தைக் கேட்டான். உடனே யோவான் ஆவிக்குள் ளானான். அவன் ஆவிக்குள்ளான உடனேயே, காரியங்கள் நடைபெறு வதைக் காண ஆரம்பித்தான். நீங்கள் ஆவிக்குள்ளான உடனே, மேலான

காரியங்களைக் காண ஆரம்பிக்கிறீர்கள். முதலாவதாக நீங்கள் ஆவிக்குள்ளாகுங்கள். அது சரிதானே?

99. நீங்கள் ஒரு பந்து விளையாட்டுக்கு சென்றால், எனக்கு தளக் கட்டுப்பந்து விளையாட்டு (Baseball). நிச்சயமாக ரொம்ப பிடிக்கும்'' என்று கூறுவீர்கள். நீங்கள் முன்வரிசை இருக்கை ஒனறைப் பெற்றுக்கொண்டு , யாங்கீஸ் அல்லது புல்டாக் ஆகிய ஏதாவது ஒரு குழுவினர் விளையாடுவதை பார்த்துக் கொண்டிருக் கிறீர்கள். அங்கே அவர்கள் பெரிய விளையாட்டு ஒன்றை விளையாடுகிறார்கள்.

100. உங்களுடைய குழு தோற்கப் போகிற வேளையில் திடீரென அதற்கு வெற்றி வருகிறது என்றால், அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறவர்கள் யாவரும் குதிக்கிறார்கள், கத்துகிறார்கள், ஆதரவான மகிழ்ச்சியொலி எழுப்புகிறார்கள்.

101. நானே இவ்விளையாட்டு ஒன்றுக்குச் சென்று அவர்கள் செய்வதையெல்லாம் பார்த்திருக்கிறேன். நான் ஒரு நாள் இந்த பேஸ் பால் என்ற பந்து விளையாட்டு ஒன்றுக்கு சென்றேன். அந்த விளையாட்டில் மட்டை பிடிப்பவர் ஒரு ஓட்டம் எடுக்கும்படி எல்லாத் தளத்தையும் தொடும்படி அடிக்கும் ஒரு அடியை (home run) அடித்தார். அப்பொழுது எனக்கு முன்பாக நாரினால் ஆன தொப்பியை அணிந்திருந்த ஒரு மனிதன் பரவசமடைந்தார், அவர் தன் தொப்பியை கையில் எடுத்துக் கொண்டு, தன் கழுத்துப் பட்டையை உயர்த்தி விட்டுக் கொண்டு, அவருக்கு மிகவும் குதூகலமான வேளை உண்டாயிருந்தது. அவர்தான் என்ன செய்கி றோம் என்பதையே அறியாமல், தன்னையே மறந்து பரவச நிலையை எய்தினார். தன் காலால் உதைத்துக் கொண்டு, வெற்றியைக் குறித்து ஆரவாரத்தைச் செய்து கொண்டு, கத்திக் கொண்டும் குதித்துக் கொண்டும் இருந்தார். அவர் அப்பந்து விளையாட்டை மிகவும் நேசித்தார் என்று நான் கருதினேன். அதனால்தான் அப்படி யெல்லாம் செய்தார். அவர் ஒரு பேஸ் பால் விளையாட்டு ரசிகர். எப்படி ஒரு சிகரெட் ரசிகர் அல்லது விஸ்கி ரசிகர் இருக்கிறாரோ, அதைப் போலத்தான்.

102. நான் இயேசுவின் மேல் மிகுந்த நேசம் கொண்டுள்ளவன். அவருடைய ரசிகன், நான் அதை நேசிக்கிறேன். இயேசுவின் மேல் பிரியங்கொண்டுள்ள ரசிகராக இருந்தால், நீங்கள் அதை அறிவீர்கள். எதன் பேரிலாவது ரசிகனாக இருப்பது.

103. எனவே, அப்பொழுது அந்த ஆள் "நான் ஒரு பேஸ் பால் விளையாட்டு ரசிகன்'' என்று கூறுகிறதை உங்களால் கற்பனை செய்து



150. தாழ்மையுள்ளதாயிருக்கும் எதையும் கவனியுங்கள். ஏனெனில் அதுதான் சரியானது. எதுவும் பெரிதாகத் தோன்றினால், அது பெருமையும் பகட்டுமானதாகவும் இருக்கும். எனவே அதின்மேல் எந்த கவனமும் செலுத்தவேண்டாம். அது காற்றடைத்ததாக இருக்கும், அதில் ஒன்றுமே இல்லை.

151. 'அவர் பார்வைக்கு வச்சிரக்கல்லுக்கும் பதுமராகத்துக்கும் ஒப்பாயிருந்தார்.'' நாம் திருப்பு வோம். பாருங்கள், நமக்கு சிறிதளவே நேரம் உள்ளது. அப்படித்தானே? நமக்கு இன்னும் நாற்பது நிமிடங்களே உள்ளன. நாம் கவனிக்கக்கடவோம். எசேக்கியேல் 1ம் அதிகாரத்திற்குத் திருப்புவோம். வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டில் எசேக்கியேலின் புத்தகத்திற்குத் திரும்பிப் போவோம். அவரை எசேக்கியேலும் கண்டதைக் குறித்து இங்கே படிப்போமாக. மேலும் இப்பொழுது இவ்வேத வாக்கியங்களைக் கொண்டு ஒப்பிட்டுப் பார்த்து நாம் எங்கே இருக்கிறோம் என்பதைப் பார்த்திடுவீர். எசேக்கியேல் முதலாம் அதிகாரம் - சற்று நேரம் வாசிப்போம். நான் முதல் ஐந்து வசனங்களை விவரிக்கப்போகிறேன், அதன்பிறகு நாம் வாசிப்போம். இங்கே நான் 26 முதல் 28 முடிய உள்ள வசனங்களை குறித்து வைத் திருக்கிறேன். எசேக்கியேல் தீர்க்கதரிசியின் புத்தகம் முதலாம் அதிகாரத்தின் முதல் வசனங்களைப் படிப்போமாக.

“முப்பதாம் வருஷம் நாலாம் மாதம் ஐந்தாந் தேதியிலே, நான் கேபார் (கேபார், அது சரிதானே? கே-பா-ர்- கேபார்) நதியண்டையிலே சிறைப்பட்டவர்கள் நடுவில் இருக்கும் போது, சம்பவித்தது என்னவென்றால், வானங்கள் திறக்கப்பட நான் தேவதரிசனங்களைக் கண்டேன்.

அது யோயாக்கீன் (இப்பொழுது கவனியுங்கள்) ராஜாவுடைய சிறையிருப்பின் ஐந்தாம் வருஷமாயிருந்தது.

அந்த ஐந்தாந் தேதியிலே, கல்தேயர் தேசத்திலுள்ள கேபார் நதி யண்டையிலே பூசியென்னும் ஆசாரியனுடைய குமாரனாகிய எசேக்கியேலுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அங்கே கர்த்தருடைய கரம் அவன்மேல் அமர்ந்தது.

இதோ, வடக்கிலிருந்து புசல் காற்றும் பெரிய மேகமும், அத்தோடே கலந்த அக்கினியும் வரக்கண்டேன்; அதைச் சுற்றிலும் பிரகாசமும், அதின் நடுவில் அக்கினிக்குள்ளிருந்து விளங்கிய சொகுசாவின் நிறமும் உண்டாயிருந்தது.” எசே. 1:1-4

147. அவர் தமது மகிமையில் வீற்றிருப்பதை நீங்கள் எல்லாம் காண விரும்புகிறீர்களா? நாம் விரைவாக வெளிப்படுத்தின விசேஷம் 21:10-ஐ எடுத்துக்கொள்வோம். இங்கே அவரை நோக்கிப் பாருங்கள்: வெளி. 21:10 முதல் 11 முடிய.

"பெரிதும் உயரமுமான ஒரு பர்வதத்தின் மேல் என்னை ஆவியில் கொண்டுபோய், தேவனுடைய மகிமையை அடைந்த எருசலேமாகிய பரிசுத்த நகரம் பரலோகத்தை விட்டு தேவனிடத்திலிருந்து இறங்கி வருகிறதை எனக்குக் காண்பித்தான்.

அதின் பிரகாசம் மிகவும் விலையுயர்ந்த இரத்தினக் கல்லைப் போலவும் பளிங்கினொளியுள்ள வச்சிரக்கல்லைப் போலவும் இருந்தது."

வெளி. 21:10-11

148. "அதன் ஒளி'' ''ஒளி'. யார் அந்த ஒளி? அந்நகரத்திற்கு சூரியனுடைய வெளிச்சம் தேவையில்லை. ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு.

149. ''வச்சிரக்கல்லும், பதுமராகமும்' ஆகிய இரத்தினக் கற்கள். தேவனுடைய மகிமை இயேசு கிறிஸ்துவாகும். இயேசு கிறிஸ்து வினுடைய மகிமை அவருடைய சபையாகும். அவரே முதன்மையானவராக இருக்கிறார். அவர் என்னவாயிருந்தார்? அவரே காலத்தின் துவக்கமும், முடிவுமாயிருக்கிறார். அவரே கோத்திரப் பிதாக்களில் முதலாமவராக இருக்கிறார். அவரே கடைசியான கோத்திரப் பிதாவாக இருக்கிறார். அவரே சபையாயிருக்கிறார். எபேசு சபையில் இருந்த ஆவியானவர் அவரே. அவரே லவோதிக்கேயா சபையிலும் இருக்கிற ஆவியானவராக இருக்கிறார். அவரே ஆதியும் அந்தமுமாயிருக்கிறார். எழுத்துக்களின் அகர வரிசையில் முதல் எழுத்து முதல் கடைசி எழுத்துவரை அவரே. முதலும், கடைசியும் அவரே. இருந்தவரும் இருப்பவரும் வருகிறவரு மாகியவர். தாவீதின் வேரும் சந்ததியுமானவர். விடிவெள்ளி நட்சத்திரம் அவரே, பள்ளத்தாக்கின் லீலி அவரே, சாரோனின் ரோஜா அவரே. அவருக்கே உரிய நானூறும் சொச்சமும் உள்ள பெயர்கள் அவருக்கு வேதத்தின் கொடுக்கப்பட்டுள்ளது. அதைப் பற்றி எண்ணிப்பாருங்கள். அவர் என்னவாயிருக்கிறார் என்று. இப்படியெல்லாம் இருந்தும் கூட, தாழ்மையுள்ள கர்த்தராகிய இயேசுவானவர், தேவனுக்கு துதிகள் உண்டாகும்படி, முன்னணை யில் பிறந்தார்.



பார்க்க முடியும். அவனது குழு தோற்கப் போகிற கட்டத்தில் மறுபடியும் தலை நிமிர்ந்து, அது ஆட்டத்தை ஜெயித்து விட்ட தென்றால், அந்த மனிதனுக்கு இருக்கிற பெருமிதம் மிக அதிகம்.

''அவர் பேஸ்பால் விளையாட்டை நேசிக்கிறார். அவர் ஏதோ ஆகிவிட்டார்'' என்று கூறுவர்.

104. "நீங்கள் அதை விரும்பவில்லை? ஏன்? உங்களிடத்தில் ஏதோ கோளாறு உள்ளது. ஒவ்வொரு நல்ல பேஸ்பால் ....'' என்று நீங்கள் கூறுவீர்கள்.

105. 'அந்த ஆளுக்கு என்ன நேரிட்டு விட்டது? அவரிடத்தில் ஏதோ தவறு உள்ளது. பாருங்கள், அங்கேயே அந்த ஆள் உணர்ச்சி வசப்படாமல் உட்கார்ந்திருக்கிறார்'' என்று கூறுவீர்கள்.

106. இப்பொழுது இரண்டையும் இரண்டையும் ஒன்று சேருங் கள். இப்பொழுது பாருங்கள். ஓ, நீங்கள் இயேசுவின் மேல் பிரிக்க முடியாத அளவுக்கு நேசம் கொண்டுள்ளவராக இருப்பின், அப்பொழுது, தேவனுடைய வார்த்தைகளில் பரிசுத்த ஆவியானது தோய்ந்திருக்கிறது என்பதை நீங்கள் உணர்ந்து, அப்பொழுது, ஏதோ உள்ளிலிருந்து சத்தமிடுகிறது. ஓ, நீங்கள் மெய்மறந்த நிலையில் ஆகிவிடுகிறீர்கள்.

107. இதை கூறுவதனால் இங்கே அருகாமையில் அமர்ந்திருக்கிற இம்மனிதர் என்னை மன்னிப்பார் என்று நான் நம்புகிறேன். உயரமாக கட்டுமஸ்தான கறுப்பு நிற தலை முடியையுடைய அவர் இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறார். ஓர் இரவில் ஹாலில் நின்று கொண்டிருந்தார், ஒரு உதவியை நாடி, அவருக்கு ஆசீர்வாதம் வேண்டி. அந்த இளைஞர் நிலை பரிதாபமாக இருந்தது, அவருக்கு மோசமான வேளை உண்டாயிருந்தது. அவருடைய மனைவி அவரை விட்டு பிரிந்து சென்று விட்டாள். அவரோடு விவாகரத்து கோரி வழக்கும் தொடர்ந்திருக்கிறாள். ஏனெனில் அவர் கர்த்தராகிய இயேசுவை மிகவும் நேசித்தார். யாரோ அவரிடம் இயேசுவைப் பற்றி சில காரியங்கள் கூறியிருந்திருக்கிறார். அதினால் அவர் இயேசுவின் மேல் பிரியராகிவிட்டார். அவர் யுத்தத்தில் கலந்து கொண்டு, மேலெல்லாம் துப்பாக்கி சூடுபட்டவர்; திரும்பி வீட்டுக்கு வந்து மனைவி பிள்ளைகளோடு இருந்தார். அப்பொழுது, அவர் கர்த்தரிடம், தான் அவரை இனிமேல் சேவிப்பதாக வாக்குக் கொடுத்தார், அதிலிருந்து கர்த்தர் அவரை ஆசீர்வதிக்க ஆரம் பித்தார்; அவர் தேவனோடு தன் ஜீவியத்தை நேர்ப்படுத்திக் கொண்டார்; அதினால் அவரது மனைவி

அவரை விட்டு விலகி, விவா கரத்து கோரி அவர் மேல் வழக்கு தொடர்ந்து, பெற்று, அவரை விட்டு விலகினாள். அவரை தனிமையாக விட்டுவிட்டு அவள் விலகிவிட்டாள். ஆனால் இத்தனைக்கும் பிறகு அவர் பிரியராகவே தான் இருந்தார்.

108. ஓர் இரவில் அவர் அங்கே நின்று கொண்டிருக்கும் பொழுது, யாரோ ஒருவர் இயேசுவைப் பற்றி சில காரியங்களை அவரிடம் கூறி, அவர் எவ்வளவு பெரியவர் என்று கூறியிருக்கிறார். அதற்கு அவர் 'ஓ மகிமை'' என்று கூறிக் கொண்டே தன் கரங்களை திடீ ரென்று உற்சாக மேலீட்டால் பெலத்தோடு சுவற்றைக் குத்தினார். அப்பொழுது அவரது கைமுஷ்டி சுவற்றில் பதிந்து கொண்டு விட்டது. தான் என்ன செய்தோம் என்பதையே அவர் அறிய வில்லை. அவரது கைமுஷ்டி சுவற்றில் பதிந்து கொண்டு விட்டது. ''சகோதரன் பில் அவர்களே, நான் இதற்கான கிரயத்தை செலுத்தி விடுகிறேன்'' என்று கூறினார். அந்நேரத்தில் சகோதரன் வுட்ஸ் அவர்கள் வந்து, உடைந்து போன சுவற்றை பழுது பார்த்தார். சகோதரன் பென் அவர்களே, நாங்கள் அதைப்பற்றி வருத்தப்படவில்லை, நீங்கள் இயேசுவின்மேல் பிரியராயிருப்பதின் நிமித்தமாக நாங்கள் மகிழ்ச்சியாயிருக்கிறோம். பாருங்கள்?

109. பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு ஒரு காரியத்தைச் செய்யும் பொழுது, உங்களால் அமைதியாக உட்கார்ந்து இருக்க முடியாது, உங்களிலிருந்து ஏதோ பொங்கி பொங்கி வழிகிறது. ஆமென். வ்யூ! கிறிஸ்துவின் பிரியரை நிச்சயமாக ஒன்று பிடித்துக் கொள்கிறது. நீங்கள் கர்த்தரை நேசிக்கும் பொழுது, உங்களிலி ருந்து ஏதோ ஒன்று புறப்பட்டு பற்றிக்கொள்ளுகிறது, கர்த்தருக் கென பசிதாகமுள்ளவராக ஆகிறீர்கள். "நீதியின் மேல் பசி தாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் நிரப்பப்படு வார்கள்'' என்று இயேசு கூறினார். நீங்கள் அதைப் பெற்றிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, நீங்கள் தாகமுடையவராக இருந்தால் கூட அதுவே போதுமானது. எத்தனை பேர் இன்னும் அதிகமாக தேவனுடைய காரியங்களைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறீர்களா? நல்லது, தேவனுடையவற்றிலிருந்து இன்னும் அதிகமாக நீங்கள் வேண்டுமென்று விரும்புவதின் காரணம் என்னவெனில், அவ்வாறு இருப்பதற்காக நீங்கள் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறீர்கள். நீங்கள் இன்னும் அதைப் பெற்றிராத போதிலுங் கூட, நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டே இருக்கிறீர்கள். பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள். பசிதாகமுடையவராக இருப்பதற்கே நீங்கள் பாக்கியம் பெற்றிருக்கிறீர்கள். ஏனெனில் நீங்கள் அது வேண்டும்



சரியாக அங்கே கொண்டு வந்து பொருத்துகிறது. பழைய ஏற்பாட்டு ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள ஒவ்வொரு பொருளும் பரலோகத்தில் காணப்பட்டவைகளுக்கு நிழலாக, மாதிரியாக உள்ளது. மானிட இனத்துக்கும் மாதிரியாக உள்ளது.

145. இங்கே ஆரோனின் மார்ப்பதக்கம் உள்ளது. அவன் பிரதான ஆசாரியனாய் இருந்தான். ஒவ்வொரு கோத்திரத்தின் பிறப்பிற்குரிய ஆபரணக் கல்லும் அந்த மார்ப்பதக்கத்தில் அவர்களுக்கு எடுத்துக்காட்டாக பிரதிநிதித்துவமாக, அங்கே பதிக்கப்பட்டிருந்தது; எப்பீராயீம் கோத்திரம், மனாசே கோத்திரம், காத் கோத்திரம், பென்யமீன் கோத்திரம் மற்றும் கோத்திரங்களும் தங்கள் தங்களுக் குரிய கல்லை அதில் உடையவர்களாக இருந்தார்கள். எல்லாக் கோத் திரங்களும், அந்த மார்ப்பதக்கத்தில் உள்ள கற்களின் மூலம் பிரதி நிதித்துவப்படுத்தப்பட்டிருந்தார்கள். அவ்வாறுதான் .... பிறகு அவர்கள் அந்த பிறப்பின் கற்களை உடைய மார்ப்பதக்கத்தை எடுத்து, அந்த அழகான முத்துக்களையுடைய அதை எடுத்து, ஒரு கம்பத்தில் தொங்கவிடுவார்கள். ஒரு தீர்க்கதரிசி தீர்க்கதரிசனம் உரைக்கும் பொழுது, அவனை இந்த ஊரிம் தும்மீமிடம் அழைத்துச் செல்வார்கள், அதன் முன்னிலையில் அவன் தன் தீர்க்கதரிசனத்தைக் கூறச் செய்வார்கள், அப்பொழுது பரிசுத்த ஒளி அந்த மார்ப்பதக்கத் தின்மேல் பட்டு , ஒளிர்ந்து, பிரகாசமான எல்லா கற்களும் சேர்ந்தாற்போல் ஜொலித்து பிரதிபலிக்கும் என்றால், தேவன் அவன் பேசியதை உறுதிப்படுத்துகிறார் என்று அர்த்தமாகும். அது அந்த அனைத்து கோத்திரங்களுக்கும் உரியது. அவைகள் ஒவ்வொரு கோத்திரத்திற்கும் உரியது.

146. இவைகளில், முதல் கல்லானது .... யார் முதல் பிள்ளை? அவனது பெயர் என்ன? ரூபன். சரி. கடைசி பிள்ளை யார்? பென்ய மீன், சரி. ரூபனின் பிறப்பின் கல் வச்சிரக்கல் ஆகும். பென்ய மீனின் பிறப்பின் கல் பதுமராகம் ஆகும். அவர் ''ரூபனைப் போலவும், பென்யமீனைப்போலவும்' காணப்பட்டார். முந்தின வரும், பிந்தினவரும், இருந்தவரும், இருப்பவரும் வருகிறவரு மானவர், அல்பா அவரே. கிரேக்க மொழி அகர வரிசையில் முதல் எழுத்து அவரே, ஓமெகா - இது கிரேக்க மொழி அகர வரிசையில் கடைசி எழுத்து. அவரே முதலாமவர், அவரே கடைசியுமானவர். அவர் பென்யமீன் முதல் ரூபன் முடிய; ரூபன் முதற்கொண்டு பென்யமீன் முடிய உள்ளவர். அங்கே அவர் வீற்றிருக்கிறார், அவர் பார்வைக்கு வச்சிரக்கல்லுக்கும், பதுமராகத்துக்கும் ஒப்பாயிருந் தார். அவர் இந்த சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தார்.

வெறுக்கப்பட்டபொழுது, பத்தாயிரம் ஆயிரமான அவர்கள் இரத்த நாளங்கள் வெடித்து, இரத்தம் கொப்புளிக்க அவர்கள் மரித்தனர், அவர்களது சரீரங்கள் வேலிகளில் தங்கள் குழந்தைகளோடு தொங்கிக்கொண்டு இருந்தன. எலும்புகளும்... அவைகளை எடுத்து, எலும்புகளிலிருந்து உரம் செய்தார்கள். அவர்களுக்கு ஒரு ஊசியைப் போட்டு, வண்டிகளில் அவர்களைப் போட்டு விட்டார்கள். பிறகு அவர்கள் வெளியேறி, அவர்கள் மரிப்பதற்கு கொஞ்சம் நேரம் இருக்கையில், அவர்கள் "மேசியா வருவார், நாங்கள் மீண்டும் திராட்சை இரசம் குடிப்போம்'' என்று பாடினார்கள். அவர்கள் அவ்வாறு மரித்துக்கொண்டிருக்கையில், அந்த யூதர்கள், அங்கே சுற்றிலும் நடந்து, இன்னும் இருதயத் துடிப்புகளுக்குப் பிறகு, தங்கள் இருதயம் மாண்டு போகும் என்றறிந்தபோதும், அவர்கள் அங்கே, ''நாங்கள் சீக்கிரம் மேசியாவைக் காண்போம்'' என்று பாடிக்கொண்டேயிருந்தார்கள். ஓ, அவர்களுடைய எலும்புகளிலிருந்து உரம் செய்வித்தார்கள்.

141. இங்கிருக்கிற அநேக இராணுவ வீரர்கள் அதை அறிவீர்கள், அதைக் கண்டும் இருக்கிறீர்கள். அவர்களை சுட்டெரித்த அந்த இடத்தில் நான் நின்றேன். ஹிட்லரும் மற்றோரும் அவர்களைக் கொன்ற இடத்தில். ஸ்டாலின் ருஷியாவில் அதே காரியத்தைத் தான் செய்தான் என்பதைப் பாருங்கள். ஆனால் அந்த யூதன், அவனைப் பற்றி என்ன? அவன் தன் சுய தேசத்திற்கு திரும்பிப்போக அவனுக்கு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அங்கேதான் அவர்கள் நின்றுகொண்டிருக்கின்றனர்.

142. 'நள்ளிரவுக்கு முன்பு மூன்று நிமிடங்கள்'' என்ற அந்த பெரிய திரைப்படம் என்னிடம் உள்ளது. அந்த யூதர்கள் தேசத்தினுள் வந்தபோது, அவர்களிடம், 'நீங்கள் ஏன் இங்கே திரும்பி வருகிறீர்கள்? உங்கள் சுய தேசத்தில் மரிக்கவா?'' என்ற கேள்வி கேட்கப்பட்டது.

143. "நாங்கள் மேசியாவைக் காணவே வந்திருக்கிறோம்' என்றார்கள். ஆமென். ஊ! நாம் முடிவுக்காலத்தில் உள்ளோம்.

144. அவர்கள் ஒவ்வொருவரும் பிறந்த போது, அவர்களுக்கு பிறப்பின் கல் ஒன்று உண்டாயிருந்தது. பிரதான ஆசாரியனாகிய ஆரோன், அவர்கள் ஒவ்வொருவருக்கும் உரிய கற்களை உடைய மார்ப்பதக்கத்தை, தன் மார்பில், தன் உடையின் மேல் அணிந்திருந்தான். எனவே நான் 6ம் வசனத்தைப் பார்ப்பதற்காகவே, இன்னும் கொஞ்சம் நேரம் இதில் கவனம் செலுத்திக்கொண்டிருக் கிறேன். பழைய ஏற்பாட்டின் ஒவ்வொரு அடையாளச் சின்னத்தையும்



என்று விரும்புகிறீர்கள், அதினால் நீங்கள் பாக்கியவான்கள். ஏனெனில், அநேகர் அந்தப் பரமகாரியம் வேண்டும் என்றே விரும்புவதில்லை.

110. அன்று இரவிலே நான் கொடுத்த என்னுடைய பிரசங்கத்தை நீங்கள் ஞாபகத்தில் வைத்திருக்கிறீர்களா? மனவளர்ச்சி மூளை வளர்ச்சி குன்றி ஒரு மனிதன் பரிசுப் பொருளையுடைய பெட்டியை வைத்துக்கொண்டு, அதினுள் இருந்த பரிசுப்பொருளை வீசி எறிந் தானே! பார்த்தீர்களா? பரிசு வைக்கப்பட்ட பெட்டி வேண்டாம், பரிசை எடுத்துக்கொள்ளுங்கள். சரி.

''உடனே ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது இதோ, வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது. அந்தச் சிங்காசனத்தின் மேல் ஒருவர் வீற்றிருந்தார்.''

வெளி. 4:2

111. நேற்று இரவில் நாம் பார்த்தோம் என்று நம்புகிறேன்; முதலில் சிங்காசனத்தின்மேல் ஒருவரும் இல்லை, இப்பொழுது ஒருவர் அந்த சிங்காசனத்தின் மேல் உட்கார்ந்திருக்கிறதானது, இயேசு வானவர் தனது சபையோடுகூட மகிமைக்குள் வந்துவிட்டார் என்பதைக் காண்பிக்கிறது. அவர் தன்னுடைய சொந்த சிங்காசனத் தின்மேல் உட்கார்ந்தார். ''ஒருவர் சிங்காசனத்தின்மேல் வீற்றிருந் தார்.'' அது சபைக்காலத்திற்கு பிறகு நடைபெறும் ஒரு காரிய மாகும். அதைப்பற்றி சற்று நேரம் கழித்துப்பார்ப்போம்.

112. "இன்றைக்கு அவரது சிங்காசனம் எங்கேயிருக்கிறது?'' என்று நீங்கள் கேட்கலாம். சகோதரர் நெவில் அவர்களே, நான் அதைக் கடந்து சென்றுவிட்டால்கூட, சற்று நேரம் கழித்து, இன்றைக்கு அவரது சிங்காசமானது எங்கேயிருக்கிறது என்கிற கேள்வியை என்னிடம் கேளுங்கள். அது வரையில் நான் எடுத்துக்கொள்வேன் என்று நான் நினைக்கிறேன். அவர் இப்பொழுது தன் சிங்காசனத்தில் வீற்றிருக்கவில்லையெனில், அவரது சிங்காசனமானது இப் பொழுது எங்கேயிருக்கிறது? அவர் இப்பொழுது தனது சிங்கா சனத்தின் மேல் வீற்றிருக்கவில்லை, இல்லை, ஐயா.

113. சரி, இப்பொழுது :

''வீற்றிருந்தவர், பார்வைக்கு வச்சிக்கல்லுக்கும் பதுமராகத் துக்கும் ஒப்பாயிருந்தார்; அந்தச் சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வான வில்லிருந்தது; அது பார்வைக்கு மரகதம் போல் தோன்றிற்று."

வெளி. 4:3

114. இப்பொழுது நாம் மூன்றாம் வசனத்தை எடுத்துக் கொள்வோம். சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர் பார்வைக்கு வச்சிரக் கல்லுக்கு ஒப்பாயிருந்தார். அதாவது, அவரை நோக்கிப் பார்க்கும் பொழுது, அவர் அத்தகைய பிரகாசமாயும், சௌந்தர்யமாயும் இருந்தார் என்பதே. ஓ, நான் அவரைக் காண விரும்புகிறேன், நீங்கள் விரும்புகிறீர்களா?

115. ஒரு நாளில் ... சகோதரி கேடில், சகோதரி ஹோவர்ட் கேடில் அவர்களை உங்களில் அநேகருக்கு ஞாபகமிருக்கும். அந்த தெருவுக்கப்பால் நான் வசித்து வந்தேன். என் மனைவி அங்கே ஒரு அறையில் உட்கார்ந்திருந்தாள். அவள் அப்பொழுது குளிரால் வாடினாள் என்பது எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. நான் எழுந்தேன்; என்னிடம் மங்க்கீஸ்டவ் என்னப்படும் ஒருவகை அடுப்பு இருந்தது; அடுப்பில் ரொட்டி சுட்டுக்கொண்டிருந்தேன். அப்பொழுது மிகவும் அதிகமாகக் குளிர் அடித்துக்கொண்டி ருந்தது, காற்றும் வீசியது. அது குளிர் காலமாயிருந்தது. தரையின் மேல் பனி படிந்திருந்தது, புகைக்கூண்டையும் அந்த பனிக்காற்று விட்டுவைக்கவில்லை. எனவே, என் ஜீவனை காப்பாற்றிட என்னால் அவ்வடுப்பை எரிய வைக்க முடியவில்லை. நான் ஏறத்தாழ நிலைகுலைந்து போகும் நிலைக்கு ஆளாகிவிட்டேன். நான் பற்ற வைக்க முயன்றால், அது மீண்டும் காற்று வீசி அணைத்துவிடும். என் மகன் பில்லியும், என் மனைவியும் குளிரினால் வாடினார்கள். நான் ஒரு கணப்பை மூட்ட முயன்றுகொண்டிருந்தேன். அப் பொழுது நான் வானொலியைத் திருப்ப நேர்ந்தது, அப்பொழுது நான் சில நிமிடங்களில் உடல் உஷ்ணமடைந்தேன், சகோதரி கேடில் அவர்கள் வானொலியில் தூரத்தில் அத்தேசத்தை, அக்கரை யிலுள்ள அத்தேசத்தை, நான் அடையும் பொழுது, நான் இயேசுவைக் காண விரும்புகிறேன். நீங்கள் விரும்பவில்லையா?-'' என்ற பாட்டை பாடிக்கொண்டிருந்தார்கள்.

116. நான் தரையில் நடுவில் உட்கார்ந்து, அழ ஆரம்பித்தேன். அச்சகோதரி மிக இனிமையான குரலில், பாடும் பறவையின் இனிய குரலில் (Mocking bird என்னப்படும் அமெரிக்கப் பறவை மற்ற பறவைகளின் குரலைப் பாவனை செய்து பாடக் கூடியது- மொழிபெயர்ப்பாளர்) பாடிக்கொண்டிருந்தார்கள். நான் அக்கரைத் தேசத்தில் செல்லும்பொழுது, அச்சகோதரியின் இனிய பாடலைக் கேட்க விரும்புகிறேன். "நான் இயேசுவைக் காண விரும்புகிறேன், நீர் விரும்புகிறீரா?" என்பதே அப்பாடல்.



தெய்வீக வார்த்தை ஒன்றைக் காண்பிக்கட்டும். எபிரெய தாய்மார்கள் தாங்கள் பிள்ளையைப் பெற்றெடுக்கும் ஒவ்வொரு சமயமும், அவர்கள் பிரசவ வேதனைப்படுகையில், பிரசவத்தின் போது, அவள் என்ன வார்த்தைகளை உதிர்த்தாளோ, அதுவே பிறக்கும் குழந்தையின் பெயராகியது. பாலஸ்தீனாவில் சரியாக அவனுக்குரிய இடத்தில் அவன் கர்த்தருடைய வருகைக்காக வைக்கப்பட்டான். அவனுடைய தாயில் உள்ள பிரசவவேதனை எப்பிராயீம் என்றால் "கடலின் அருகில்'' என்று அர்த்தமாம். பாருங்கள்? எப்பிராயீமுக்கு கடலுக்கருகில் உள்ள இடத்தில் சுதந்திரம் கொடுக்கப்பட்டது. யூதா என்றால் .... அவ்வார்த்தைக்கு என்ன அர்த்தம் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அதை என்னால் எடுத்துவிட முடியும். இந்த சிறு காரியங்களைப்பற்றி எடுப்பதற்கு எனக்கு நேரம் இல்லை. யூதா என்றால், அவனுடைய ஸ்தானம் அப்பொழுது இஸ்ரவேலர் மத்தியில் வைக்கப்பட்டிருந்தது.

138. ஆதியாகமம் 48, 49 அதிகாரங்களை எடுத்துக்கொண்டால், அங்கே யாக்கோபு மரித்துக்கொண்டிருக்கையில், தன் கோலின் மேல் சாய்ந்து கொண்டு, உலகத்தின் கடைசி நாட்களில் அவனது புத்திரர் சரியாக எந்தெந்த இடத்தில் வைக்கப்பட்டிருப்பார்கள் என்பதைப் பற்றி முன்னுரைத்தான். இப்பொழுது அவர்கள் தங்கள் சொந்த தேசம் போனதிலிருந்து, அவர்கள் சரியாக அவரவர்களுக்குரிய இடத்தில் வைக்கப்பட்டுள்ளனர். யோசேப்பைக் குறித்து, "நீ பலன் தரும் திராட்சைச் செடி'' என்றான். நீரூற்றண்டையில் உள்ள கனி தரும் செடி, அதின் கொடிகள் சுவரின் மேல் படரும். அவன் மேலும் கூறினான்: "நீ தேவனாகிய கர்த்தரில் நம்பிக்கை கொண்டிருந்தாய்; உன்னுடைய வில்லை நீ பெலப்படுத்தினாய். (அமெரிக்க ஐக்கிய நாடுகள் அது). ஆனால் ஒரு நாளில் அக்கொடி திரும்பி வந்து, சுவரில் படரும்'' என்று. சரியாக அவள் இப் பொழுது அங்கே இருக்கிறாள். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக அவன் என்ன கூறினானோ, அது சரியாக அப்படியே நிகழ்ந்திருக்கிறது. எப்பிராயீம் தன் காலை எண்ணெயில் தோய்ப்பான் என்று சொல்லப்பட்டது. அப்படியே எப்பிராயீம் பெரிய எண்ணெய் வயல்கள் இருக்கிற இடத்தில்தான் குடியேறினான். அப்படியே நடந்தது.

139. அந்த மக்கள் உரைத்தவை, அந்த சாவுக்கேதுவானவர்கள் மேல் என்ன இருந்தது. தேவன் அவர்களது திசுக்களை எடுத்து, அவைகளில் அசைவாடினார்.

140. ரோம சாம்ராஜ்யம் அவர்களை சிதறடித்தபொழுது, ஏனை யோர்கள் அவர்களை சிதறடித்தபொழுது, ஹிட்லரால் அவர்கள்

132. "என்னிடம் வெகுமதிகளைக் குறித்துப் பேச வேண்டாம். நான் ஆயிரம் ஆண்டுகளாய் நின்று அவரை நோக்கிக் கொண்டே யிருக்கட்டும். அதுவே என்னுடைய பலனாக இருக்கும்'' என்று பதலளித்தார்.

133. நாம் யாவருமே அந்த விதமாகத்தான் கருதுவோம் என்று நான் நினைக்கிறேன். ''நான் நின்று அவரைப் பார்த்துக்கொண்டேயிருக்கட்டும்" இப்பொழுது எனக்கு இருக்கிற சரீரத்திலிருந்து வித்தியாசமான சரீரம் இருக்க வேண்டும்; உங்கள் அங்கத்தின் சர்வ நாடி நரம்புகளும் அவரைப் பார்த்துக்கொண்டேயிருக்க வேண்டும்.

134. யோவான் அங்கே நின்றிருந்து, அவர் சிங்காசனத்தில் வீற்றிருந்ததைக் கண்டான். அவர் பார்வைக்கு வச்சிரக்கல்லுக்கும் பதுமராகத்துக்கும் ஒப்பாயிருந்தார். வேதாகமத்தில் எல்லாப் பொருட்களுக்கும், ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒரு அர்த்தம் உண்டு. இப்பொழுது, "வச்சிரக்கல், பதுமராகம்.'

135. இப்பொழுது நீங்கள் கவனிப்பீர்களானால், அது வேத வாக்கியங்களின் ஏனைய பகுதிகளோடு ஒப்பிடுகிறது. வேத வாக்கியங்கள் முந்தின பகுதிகளில், அவர் அல்பாவும், ஓமெகாவு மாயிருக்கிறார். அவரே ஆதியும் அந்தமுமாயிருக்கிறார். அவரே முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறார். அவரே பிதா, அவரே குமாரன், அவரே பரிசுத்த ஆவியாயிருக்கிறார். அவரே சர்வமு மாயிருக்கிறார், சர்வமும் அவரில்தான் பொதிந்து கிடக்கிறது. மத்தேயு 17ம் அதிகாரத்தில் மறுரூப மலையில் மேல் யாவும் அவரில் தான் ஒரு சேர இருக்கிறது என்பதைக் காண்பிக்கிறது.

136. ''வச்சிரக்கல்'' என்பது ஒருகல்; பதுமராகமும் ஒரு கல்தான். அவற்றின் நிறங்களைப்பற்றி பின்னால் பார்ப்போம். கோத்திரப் பிதாக்கள், அவர்கள் ஒவ்வொருவரும் பிறந்தபொழுது, அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு பிறப்புக்கல் உண்டாயிருந்தது. நான் ஏப்ரலில் பிறந்தேன்; என்னுடையது வைரக்கல் ஆகும். வெவ் வேறு மாதங்கள் வெவ்வேறு கற்களை உடையதாயிருக்கிறது. கோத்திரப் பிதாக்களும் இப்படித்தான். ஒவ்வொரு கோத்திரப் பிதாவும் பிறக்கையில், அவருக்கு ஒரு பிறப்புக்கல் இருந்திருக்கிறது.

137. இந்த இடத்தில் ஒரு கணம் நாம் நிறுத்திடுவோம். அந்த எபிரெய தாய்மார்கள் ... நண்பரே, உங்களுடைய விசுவாசமானது தேவ வார்த்தையில் உறுதியாகக் கட்டப்படும்படி, நான் உங் களுக்கு



117. "ஓ தேவனே, நான் ஒரு நாளில் அவரைக்காண விரும்பு கிறேன், மலர்களெல்லாம் அருகில் மிதந்து வருகையில் நான் இயேசுவைக் காண விரும்புகிறேன்'' என்று நான் எண்ணினேன். அழகாக, பட்டொளி வீசிப்பறந்திடும் அவரை அவரது சிங்கா சனத்தின்மேல் பார்ப்பது எப்படியாயிருக்கும் யோவான் நின்ற அதே இடத்தில் நானும் நிற்க விரும்புகிறேன், எனவே, நானும் அவரை நின்று நோக்கிப் பார்த்திட முடியும்.

118. இக்காலையில் இங்கு இருக்கிற கறுப்பு நிறத்தவரான நண்பர்கள் சார்பில் நான் இதைச் சொல்லப்போகிறேன். சில காலத்திற்கு முன்பு, அடிமைப்படுத்தும் பழக்கம் இருந்த சமயமது; அங்கே ஒரு வயதான கறுப்பின மனிதர் இருந்தார், அவர்கள் வழக்கமாக போகக்கூடிய ஒரு சிறிய இடத்திற்கு அவர் சென்றார்.

119. கெண்டக்கியில், அவர்கள் வீடுகளுக்குப்போய், இளைஞர் உட்பட ஆர்கன் போன்ற கருவிகளை வாசித்து பாடல்கள் பாடுவ துண்டு. மம்மா காக்ஸ் மற்றும் உள்ளவர்களுக்கு இது ஞாபகமிருக்கும். அவ்வாறு போவது, அது அவர்களுக்கு ஞாபகமிருக்கும். யுடிக்காவிலும், மற்றும் சுற்றிலும் உள்ள கிராமப் புறங்களிலும் அவர்கள் அவ்வாறு செய்வதுண்டு. இப்பொழுதோ ஒரு க்வார்ட் (ஒரு க்வார்ட் என்றால் கால் காலன் - மொழிபெயர்ப்பாளர்) விஸ்கிக்காக ராக் அண்டு ரோல் பார்ட்டிகளுக்கு அவர்கள் சென்றுவிடுகிறார்கள்.

120. ஆனால் அக்காலத்திலோ அவர்கள் ஞானப்பாட்டுக்களை பாடினார்கள். இவ்வாறு, மிகப்பழைய ஞானப்பாட்டு அவர்கள் பாடிக்கொண்டிருக்கையில், வயதான கறுப்பு நிறத்தவர் ஒருவர் இரட்சிக்கப்பட்டார். கர்த்தர் அவரைப் பிரசங்கிக்க அழைத்தார். அடுத்த நாளே அவர் தோட்டப்பகுதிக்குச் சென்று, அங்கிருந்த அடிமைகளிடம், ''கர்த்தர் நேற்றிரவு என்னை இரட்சித்தார், என் சகோதரர்களுக்குப் பிரசங்கிக்க என்னை அழைத்துள்ளார்'' என்று சொல்லிக்கொண்டிருந்தார்.

121. இறுதியாக அந்த தோட்டப்பகுதிக்கு உரிமையாளரின் காதுக்கு இவ்விஷயம் எட்டியது. அவன் அவரை அழைத்து, ''சாம்போ , நீ என்னுடைய அலுவலகத்திற்கு இங்கே வா'' என்றான்.

“சரி, ஐயா'' என்று கூறி அவர் அலுவலகத்திற்கு நடந்து சென்றார்.

122. முதலாளியானவன், "என்ன இது நான் கேள்விப்படுகிற விஷயம்? நீ என்னுடைய அடிமைகளின் மத்தியில் போய் கர்த்தர் என்னை

விடுவித்தார்' என்று பரப்புரை செய்துகொண்டிருக்கிறாயாமே, அது என்ன?" என்று வினவினான்.

123. "ஆம், ஐயா'' என்று கூறினார். ''முதலாளி, நான் உங்களுடைய அடிமைதான். உங்களுடைய பணத்தால் நான் கிரயத்திற்கு வாங்கப்பட்டவன். ஆனால் தேவன் என்னை நேற்றிரவில் விடுதலையாக்கிய விதம் எப்படியெனில், இயேசுவானவர் என்னை பாவம், நிந்தை, மரணம் ஆகியவற்றின் வாழ்க்கையிலிருந்து என்னை விடுதலையாக்கினார். அவர் என்னை விடுதலையாக்கினார்'' என்று கூறினார்.

''சாம்போ, உண்மையாகவே நீ அந்தக் கருத்தில்தான் கூறுகிறாயா?'' என்று கேட்டான்.

"அப்படித்தான் கூறினேன்'' என்றார்.

124. "நீ தோட்டங்களிலுள்ள உமது ஜனங்களின் மத்தியில் இங்கே எங்கிலும் பிரசங்கிக்கப்போவதாக அவர்கள் கூறக் கேட்டேனே'' என்றான் முதலாளி.

125. "ஆம், ஐயா. நான் என் ஜனங்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கம், அதைத்தான் செய்ய தீர்மானிக்கிறேன்'' என்றார்.

''உண்மையாகவே, நீ அந்தக் கருத்தில்தான் கூறுகிறாயா?'' என்று முதலாளி கேட்டான்.

அப்படிச் செய்வதற்குத்தான் நான் கூறினேன்'' என்று பதிலளித்தார்.

126. 'என்னோடு நீ நீதிமன்றத்திற்கு வா, நான் உனக்கு உன்னுடைய விடுதலையையும் கொடுக்கப்போகிறேன்; நீ என்னிடத்திலிருந்து விடுதலையாகியிருக்கிறாய்; நீ இனிமேல் அடிமை என்பதிலிருந்தே விடுதலையாகி இருக்கிறாய். நான் உன்னை விலைக்கு வாங்கினேன். நீ என்னுடையவன், நீ உன்னுடைய ஜனங்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி நான் உன்னை விடுதலையாக்குகிறேன்'' என்று முதலாளி கூறினான். அவன் நீதிமன்றம் சென்று, அடிமையை விடுதலையாக்கும் சாசனத்தில் கையொப்பம் செய்தான், அதினால் சாம்போ விடுதலையானார். இனிமேல் அவர் ஒரு அடிமையாக யாருக்கும் விற்கப்பட முடியாது. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டி அவர் சுதந்திர மனிதனாக ஆகிவிட்டார்.



127. அநேகமாண்டுகளாக அவர் தன் சகோதரர்கள் மத்தியில் பிரசங்கித்தார். அவருடைய ஊழியத்தில் அநேக வெள்ளையரும் கூட மனந்திரும்பினர். ஒருநாள் இந்த வயோதிப மனிதர் மரிக்கும் வேளை வந்தது. முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக அவர் பிரசங்கித்திருக்கிறார். அவர் மரிக்கவேண்டிய வேளை வந்தபோது, அவருடைய அநேகமான வெள்ளைச் சகோதரர்களும் அவருடைய அறையில் குழுமிவிட்டனர். இரண்டு அல்லது மூன்று மணி நேரத்திற்கு அவர் மரித்துப் போய்விட்டார் என்றே அவர்கள் நினைத்தனர். பிறகு கடைசியாக அவர் விழித்து அறையில் சுற்று முற்றும் பார்த்தார். அவர் கூறினார். "சாம்போ , எங்கே போயிருந்தீர்''

அவர் கூறினார்: "ஓ, நான் மீண்டும் இங்கே வந்துவிட்டேனா, நான் மீண்டும் இங்கே வந்து விட்டேனா" என்று.

"என்ன விஷயம், சாம்போ " என்று கேட்டனர். "அக்கரையிலுள்ள அத்தேசத்திற்கு நான் சென்றிருந்தேன்'' என்று கூறினார்.

''அதைக் குறித்து எங்களுக்குச் சொல்லும்'' என்றார்கள்.

128. 'நான் அவருடைய பிரசன்னத்தில் இப்பொழுதுதான் இருந்தேன். நான் அங்கே நின்றிருந்தபோது, ஒரு தூதன் என்னிடம் நடந்துவந்து, ''உன்னுடைய பெயர்தான் சாம்போவா என்று கேட்டான்.

"ஆம், ஐயா. அதுதான் என்னுடைய பெயர்'' என்றேன். "உள்ளே வா'' என்றான் தூதன்.

"நான் உள்ளே நுழைந்து, அங்கே அவர் வீற்றிருந்ததைக் கண்டேன்.''

129. தூதன் கூறினான், "சாம்போ, இப்பொழுது இங்கே வா, நீ அவரைப் பார்த்தபிறகு, நீ இங்கே வெளியே வரவேண்டும். நாங்கள் உனக்கு ஒரு வெண்ணங்கி கொடுக்க விரும்புகிறோம், நாங்கள் உனக்கு கின்னரம் கொடுக்கவிரும்புகிறோம், நாங்கள் உனக்கு ஒரு கிரீடம் கொடுக்க விரும்புகிறோம்'' என்றான்.

130. "என்னிடம் கின்னரங்களைப் பற்றியும், கிரீடங்களைப் பற்றியும், வெண்ணங்கிகளைப் பற்றியும் பேசவேண்டாம்' என்றார் சாம்போ.

131. ''ஆனால் நீ ஒரு பரிசை வென்றிருக்கிறாய், நாங்கள் உனக்கு உன்னுடைய பரிசை கொடுக்க விரும்புகிறோம்'' என்று தூதன் கூறினானாம்.